# இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்
# பத்தாவது பாராளுமன்றம்
# (முதலாவது அமர்வு)




## கணக்காய்வாளர் தலைமை அதிபதி
## வருடாந்த அறிக்கை

# 2023

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின்
# ஆண்டறிக்கை
# 2023

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

## எமது தூர நோக்கு

இலங்கை பிரசைகளின் நலனுக்காக பொதுக் கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகையை நோக்காகக் கொண்டு பொதுத் துறையின் வழிகாட்டியாக இருத்தல்.

## எமது செயற்பணி

நிலைபேறான அபிவிருத்தியை பேணுவதற்காக சிறந்த நிதி முகாமைத்துவத்தினையும் உத்தம பொது வளப் பயன்பாட்டினையும் உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்வில் ஈடுபடுவதன் மூலம் நல்லாளுகையையும் பொதுக் கணக்களிப் பொறுப்பையும் மேம்படுத்தல்

## எமது குறிக்கோள்கள்

1. வளங்களை தம்வசம் வைத்துள்ள நிறுவனங்களின் முகாமைத்துவங்கள் அவர்களுக்குள்ள பொதுக கணக்களிப்பொறுப்பினை உறுதிப்படுத்தி பாராளுமன்றத்திற்கு அறிவிக்கின்றனவா என்பது தொடர்பில சுயாதீன பரிசோதனையொன்றை மேற்கொள்தல்

2. பொதுத்துறை நிறுவனங்களின் செயலாற்றலை பரிசோதிப்பதற்காக பொதுக் கணக்குகள் குழு (COPA) மற்றும் பொது முயற்சிகள் குழு (COPE) ஆகிய இரண்டு பாராளுமன்ற கண்காணிப்புக குழுக்களிற்கும் உதவுதல

3. முகாமைத்துவ அறிக்கைளினூடாக பரிந்துரைகளை வழங்குவதன் மூலம் அவர்களது கணக்களிப்பொறுப்பினை முன்னேற்றிக் கொள்வதற்கு கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனங்களிற்கு உதவுதல்

## எமது விழுமியங்கள்

மேன்மை
புத்தாக்கம்
தலைமைத்துவம்

# தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இலட்சினை

## இந்த உத்தியோகபூர்வ இலட்சினைக்கு பயன்படுதத்ப்படும் சின்னங்கள் பின்வரும் அர்த்தங்களை பிரதிபலிக்கின்றன.

- இலட்சினையின் உச்சியில் காண்பிக்கப்பட்டுள்ள சிங்கம் இலங்கையை குறிப்பிடுகின்றது.
- அதன் மத்தியில் உள்ள தராசு சுயாதீன மற்றும் பாரபட்சமற்ற தன்மையை பிரதிபலிக்கின்றது.
- அதைச் சுற்றியுள்ள இரட்டை ஒலிவ் மூலம் சமாதனம் மற்றும் செழிப்பை பிரதிபலிக்கின்றது.
- அதைச் சுற்றியுள்ள இலை அமைப்பு தேசிய கலாசாரத்தை பிரதிபலிக்கின்றது

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் குறிப்பு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 148 ஆவது உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குள்ள பொது நிதிக் கட்டுப்பாட்டை பயனுள்ளவகையிலும் வினைத்திறனாகவும் பராமரிப்பதற்காக சுயாதீன ஆய்வுகளை மேற்கொண்டு அது தொடர்பில் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவது குறித்து அரசியலமைப்பின் 154 ஆவது உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதான பணிப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அப் பணியை நிறைவேற்றுவது தொடர்பில் 2023 ஆம் நிதியாண்டிற்கான எனது அறிக்கையை மகிழ்வுடன் சமர்ப்பிக்கின்றேன். பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் இவ் ஆண்டறிக்கை, 7 ஆவது தொகுதியாக சமர்ப்பிக்கப்படுவதுடன், ஏனைய அறிக்கைகள் பின்வரும் தொகுதிகளின் கீழ் தனித்தனியாக சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 ஆவது தொகுதி | - | அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் |
| 2 ஆவது தொகுதி | - | அரச கூட்டுத்தாபனங்கள், அதிகாரசபைகள், சபைகள் மற்றும் நியதிச்சட்ட நிதியங்கள் |
| 3 ஆவது தொகுதி | - | நியதிச்சட்டமல்லாத நிதியங்கள் |
| 4 ஆவது தொகுதி | - | வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள் |
| 5 ஆவது தொகுதி | - | மாகாண சபைகள் |
| 6 ஆவது தொகுதி | - | உள்ளூராட்சி நிறுவனங்கள் |
| 8 ஆவது தொகுதி | - | செயலாற்றல் மற்றும் சுற்றாடல் கணக்காய்வு ஒப்படைகள் |
| 9 ஆவது தொகுதி | - | அரச கம்பனிகள் |
| 10 ஆவது தொகுதி | - | விசேட கணக்காய்வு ஒப்படைகள் |
| 11 ஆவது தொகுதி | - | மூவாண்டு அறிக்கைகள் |

கடந்த ஆண்டு நாம் எதிர்கொண்ட குறிப்பிடத்தக்க சாதனைகள் மற்றும் சவால்களைப் பற்றி நான் நினைவுகூறும் போது, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் ஆண்டறிக்கையை நான் மிகுந்த கௌரவத்துடன் சமர்ப்பிக்கின்றேன். இந்த அறிக்கையானது எமது செயற்பாடுகளின் விரிவான பதிவாக மட்டுமன்றி, அரச நிதி முகாமைத்துவத்தில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் ஆகியவற்றில் சிறப்புமிக்க நமது உறுதிப்பாட்டிற்கும் சான்றாக விளங்குகிறது.

எமது அர்ப்பணிப்புள்ள குழு வருடம் முழுவதும் சுகாதாரம், கல்வி மற்றும் உட்கட்டமைப்பு உள்ளடங்களான பல்வேறு துறைகளில் விரிவான கணக்காய்வுகளை மேற்கொண்டுள்ளது. எங்கள் முதன்மை நோக்கம் தெளிவாக உள்ளது: பொது வளங்கள் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்படுவதை உறுதி செய்தல். நாம் அரச துறையின் அனைத்து நிறுவனங்களையும் உள்ளடக்கும் வகையில் பல்வேறு வகையான கணக்காய்வுகளை முன்னெடுத்துள்ளதுடன், அரசாங்க நடவடிக்கைகள் ஊடாக மேம்படுத்தப்பட வேண்டிய பலம் மற்றும் பகுதிகள் ஆகிய இரண்டையும் முன்னிலைப்படுத்தும் பெறுமதிவாய்ந்த நுட்பநோக்கினை வழங்குகிறோம்.

இந்த ஆண்டிற்கான அறிக்கையின் முக்கிய கருப்பொருள் கணக்களிதகைமையின் முக்கியத்துவம் என்பதாகும். அரச நிறுவனங்கள், பாராளுமன்றம் மற்றும் பல்வேறு பங்குதாரர்களுடனான எமது கூட்டிணைப்பை வலுப்படுத்த நாங்கள் விடாமுயற்சியுடன் பணியாற்றியுள்ளோம். பரஸ்பர தொடர்புகளை வளர்ப்பதன் மூலம், பொது நிர்வாகத்தின் அனைத்து மட்டங்களிலும் கணக்களிதகைமையை ஊக்குவிக்கும் வலுவான கட்டமைப்பொன்றை நிறுவுதல் எமது நோக்கமாகும். இந்த அணுகுமுறை எங்கள் கண்டுபிடிப்புகளின் நம்பகத்தன்மையை அதிகரிப்பது மட்டுமல்லாமல், அரச சேவையில் சிறந்து விளங்குவதற்கான பகிரப்பட்ட அர்ப்பணிப்பை மேம்படுத்துகிறது.

எங்கள் பாரம்பரிய கணக்காய்வு நடைமுறைகளுக்கு மேலதிகமாக, எமது பணிகளுக்கு சிறந்த வழிமுறைகள் மற்றும் தொழில்நுட்பக் கருவிகளை ஒருங்கிணைப்பதன் மூலம் புத்தாக்கத்தில் ஈடுபட நாங்கள் தயாராக உள்ளோம். இலங்கையின் அரச நிதி முகாமைத்துவத்தை வலுப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் உலக வங்கியின் நிதி உதவியால் இந்த முயற்சி ஆதரிக்கப்படுகிறது. இந்த மேம்படுத்தல்கள் மூலம் எமக்கு விரிவான மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கும், முன்னர் கவனிக்கப்படாதிருந்த சிக்கல்களைக் கண்டறியவும் உதவும். தரவுப் பகுப்பாய்வு மற்றும் இடர் மதிப்பீடு தொடர்பில் நாம் கவனம் செலுத்துவதன் மூலம், பொது மக்களுக்கும் கொள்கை வகுப்பவர்களுக்கும் எமது கணக்காய்வுகள் அதிகபட்ச மதிப்பை வழங்குவதை உறுதி செய்யவும், தரவு பகுப்பாய்வு மற்றும் அபாய மதிப்பீடு தொடர்பில் நாங்கள் கவனம் செலுத்துவதன் மூலம் கவனம் செலுத்தப்பட வேண்டிய பகுதிகளுக்கு முன்னுரிமை அளிக்கவும் எங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது

என்னால் பாராளுமன்றம் மற்றும் தொடர்புடைய கணக்காய்வு நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் கண்டுபிடிப்புகள் மூலம், பொது நிர்வாகத்தில் தொடர்ச்சியான முன்னேற்றத்தின் அவசியத்தை சுட்டிக் காண்பிக்கின்றது. நிர்வாகத்தை மேம்படுத்துதல், தொழிற்பாட்டு செயற்திறனை அதிகரித்தல் மற்றும் அரச நிதிகள் விவேகத்துடன் நிர்வகிக்கப்படுவதை உறுதிசெய்வதை நோக்கமாகக் கொண்ட பரிந்துரைகளை நான் முன்வைத்துள்ளேன். இந்த பரிந்துரைகள் தீவிரமாக கருத்திற்கொண்டு, பொதுமக்களின்

நம்பிக்கையின் அத்திவாரத்தினை வலுப்படுத்தும் வகையில் செயல்படும் என்பது எனது நம்பிக்கையாகும்.

நாம் முன்னோக்கி செல்லும் போது, எமது பரிந்துரைகளை ஆக்கபூர்வமாக அமுல்படுத்தப்படுவதற்காக அரசாங்கத்திற்கு உதவும் எமது அர்ப்பணிப்பில் நாம் உறுதி கொண்டுள்ளோம். எமது பணிப்பொறுப்பு கணக்காய்வுக்கு அப்பாற்பட்டது. அனைத்து பிரசைகளினதும் நலனுக்கும் உதவும் வகையில் மேலும் பொறுப்புவாய்ந்த வெளிப்படைத் தன்மையுடனான பொதுத்துறையொன்றை உருவாக்குவதற்கு நாம் உதவ விரும்புகின்றோம்.

தொழிற்தகைமை மற்றும் கடின உழைப்புடன் செயற்பட்டு இந்த அறிக்கையை சாத்தியமாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட எமது பதவியணிக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். எமது பங்குதாரர்களின் தொடர்ச்சியான ஆதரவு மற்றும் ஒத்துழைப்புக்காக எனது பாராட்டுகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். அரச வளங்களை ஒருமைப்பாடு மற்றும் நோக்கத்துடன் நிர்வகிக்கப்படும் எதிர்காலத்தை நோக்கி நாம் ஒன்றாக பயணிப்போம்.

ஒப்பம்./டபிள்யூ. பீ. சீ. விக்ரமரத்ன.
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

2024 ஒக்தோபர் 30 ஆந் திகதி

# உள்ளடக்கம்


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| **பகுதி I - எமது நிறுவனம்** | | | |
| **அறிமுகம்** | 1 | | |
| அறிக்கையின் தொகுப்பு | 1 | பாராளுமன்றத்திற்கு உதவுதல் | 12 |
| அமைவிடம் | 1 | அரசாங்க நிறுவனங்களின் நிதிக்கட்டுப்பாட்டையும் செயலாற்றலையும் மதிப்பீடு செய்வதற்கான வினாக் கொத்து | 13 |
| கணக்காய்வு அதிகாரப் பொறுப்பு | 2 | வேறு குழுக்களில் கலந்துகொள்ளல் | 14 |
| அரச கணக்காய்வின் வரலாறு | 2 | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மிகைக் கட்டணம் விதிக்கப்படுதல் | 14 |
| கணக்காய்வு மற்றும் தற்போதைய அதிகாரப்பொறுப்பு | 2 | உள்ளூராட்சி அதிகாரசபைகளில் மிகைக் கட்டணங்களை அறவீடு செய்தல் | 15 |
| 1978 இன் அரசியலமைப்பு மற்றும் திருத்தம் | 2 | பொது மக்கள் முறைப்பாடுகளைப் பரிசீலித்தல் | 16 |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் | 3 | தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல்கள் வழங்கல் | 17 |
| ஏனைய விசேட சட்டங்கள் | 3 | எமது நிறுவனக் கட்டமைப்பு | 17 |
| கணக்காய்வின் சுயாதீனத்தன்மை | 4 | அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி | 21 |
| சுயாதீனத்தன்மை குறித்த சர்வதேச தேவைப்பாடு | 4 | 2023 சனவரி 01 ஆம் திகதி முதல் 2024 யூன் 30 வரையான காலப்பகுதியின் போது நிலவிய வெற்றிடத்தை நிரப்புவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான விபரம் | 22 |
| எமது சுயாதீனத்தன்மை | 7 | பதவியணியினர் பயிற்சி | 24 |
| கணக்காய்வு சேவை ஆணைக்குழு | 7 | உள்நாட்டுப் பயிற்சி வழங்குதல் | 25 |
| எமது செயற்பணி | 9 | வெளிநாட்டுப் பயிற்சிச் சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக் கொடுத்தல் | 25 |
| அரசியலமைப்பு மற்றும் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் | 9 | வெளி நிறுவனங்களுக்கு வளவாளர்களை வழங்குதல் | 26 |
| கணக்காய்வு நடைமுறை | 9 | பயிற்சிச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்ளல் | 27 |
| வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கும் கணக்காய்விற்கு உட்படுத்தப்படும் நிறுவனத்திற்கும் சமர்ப்பித்தல். | 10 | தகைமைபெற்ற கணக்காய்வாளர்களை சேவையில் ஈடுபடுத்திக்கொள்ளல் | 27 |
| வருடாந்த நிதிக்கூற்றுக்கள் அல்லாத கணக்காய்வு | 11 | இலங்கை அரச நிதி முகாமைத்துவ திறன் விருத்திச் செயற்திட்டம் | 27 |
| | | வருடாந்த நிதிக்கூற்று 2023 | 29 |

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| **II ஆம் பகுதி – கணக்காய்வு அவதானிப்பு** | | | |
| புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் | 35 | தொழிற்கல்வி | 357 |
| திறைசேரி மற்றும் அரச கடன் | 43 | பொது நிர்வாகம் | 367 |
| அரச வருமானம் | 63 | பெருந்தோட்டக் கைத்தொழில் | 395 |
| அரச வங்கி நடவடிக்கைகள் | 83 | கைத்தொழில் மற்றும் உற்பத்தி | 407 |
| காப்புறுதி அலுவல்கள் | 99 | கடற்தொழில் அலுவல்கள் | 419 |
| தேசிய பாதுகாப்பு | 103 | கால் நடை வளங்கள் | 427 |
| இடர் முகாமைத்துவம் | 117 | சுற்றாடல் | 433 |
| வெகுசன மற்றும் தொடர்பாடல் | 127 | காடுகள் மற்றும் வன சீவராசிகள் | 441 |
| நீதிமன்ற மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் | 137 | நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு | 449 |
| சுகாதாரம் | 147 | மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் | 461 |
| சுதேச மருத்துவம் | 175 | துறைமுகங்கள் மற்றும் கடற்படை | 473 |
| வெளிநாட்டு அலுவல்கள் | 183 | விமான சேவைகள் | 489 |
| வியாபார மற்றும் வர்த்தகம் | 187 | முதலீட்டு ஊக்குவிப்பு | 497 |
| நெடுஞ்சாலைகள் | 193 | பொது மக்கள் பாதுகாப்பு அலுவல்கள் | 503 |
| மக்கள் போக்குவரத்து | 215 | வெளிநாட்டு வேலைகள் | 511 |
| விவசாயம் | 231 | தொழில் | 519 |
| மின்சக்தி மற்றும் வலுசக்தி | 249 | விளையாட்டு | 527 |
| சுற்றுலா அலுவல்கள் | 283 | நீர்ப்பாசனம் | 541 |
| காணி | 293 | சுரங்க மற்றும் அகழ்வு | 563 |
| நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு | 297 | வெளிநாட்டுச் செயற்திட்டம் | 573 |
| பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் | 315 | மாகாண சபைகள் | 617 |
| நிர்மாணிப்பு மற்றும் பொறியியல் | 319 | உள்ளுராட்சி | 649 |
| உயர் கல்வி | 333 | நிதிக்கூற்றுக் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிராத பொது முயற்சிகள் | 675 |
| கல்வி | 345 | | |
| | | | |
| **III ஆம் பகுதி – நிதிசாரா கணக்காய்வு** | | | |
| செயலாற்றல் கணக்காய்வு | 679 | | |
| விசேட அறிக்கை | 699 | | |
| விசேட புலனாய்வு | 725 | | |




# 01

# எமது நிறுவனம்

## அறிமுகம்

### அறிக்கையின் தொகுப்பு

அறிக்கையின் முதற் பகுதி, நிறுவன அறிமுகம், அதிகாரப் பொறுப்பு, சுதந்திரத்தன்மை, கணக்காய்வுப் பொறுப்புகள், பாராளுமன்றத்திற்கு உதவி வழங்குதல், செயலாற்றல் விளைவு மதிப்பீடு, நிதிக்கூற்றுக்கள், மனிதவள முகாமைத்துவம், பயிற்சியளிப்பு என நிறுவனத் தகவல்களைக் கொண்டமைந்துள்ளது.

அறிக்கையின் இரண்டாம் பகுதியின் மூலம், முக்கியமான நியதிச்சட்டச் செயற்பாடுகளான அமைச்சுக்கள், திணைக்களங்கள், விசேட செலவினப் பிரிவு, நியதிச்சட்ட நிறுவனங்கள், அரச கம்பனிகள், நியதிச்சட்ட மற்றும் நியதிச்சட்டமல்லாத நிதியங்கள், வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் ஆகிய அரசாங்க நிறுவனங்களின் வருடாந்தக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முக்கிய அவதானிப்புகள் மத்திய அரச நிறுவனங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களாக வகைப்படுத்தப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

அறிக்கையின் மூன்றாம் பகுதியின் மூலம், வருடாந்த கணக்காய்வல்லாத செயலாற்றல் கணக்காய்வு, விசேட கணக்காய்வு, சுற்றாடல் கணக்காய்வு, விசேட புலனாய்வு ஆகிய ஏனைய விசேட கணக்காய்வு தொடர்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், அக் கணக்காய்வுகளின் மூலம் வெளிப்பட்ட முக்கிய அவதானிப்புகள் பகுதி II இல் குறித்த கணக்காய்வுப் பந்தியின் கீழ் அவதானிப்பாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

### அமைவிடம்

தேசிய கணக்காய்வு அலுவலகம் பத்தரமுல்லை, பொல்துவ வீதி, இல. 306/72 பகுதியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் தலைமைக் கிளை அலுவலகம் பொரளை, கொட்டா டெரஸ், இல. 07 இல் அமைந்துள்ளது. மேலும் மேல் மாகாணத்தில் அரச நிறுவன வளாகத்தில் மாத்திரம் சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர்களின் அலுவலகங்கள் …… கிளைக் காரியாலயங்கள் மூலமாக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கு மேலதிகமாக எஞ்சிய 08 மாகாணங்களிலும் உள்ளூராட்சி மன்றங்கள் கணக்காய்விற்காகவும் மாகாணங்களில் இயங்கும் மத்திய அரச நிறுவனங்களின் கணக்காய்வு நடவடிக்கைகளிற்காக சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர்களின் அலுவலகங்களும் …… கணக்காய்வுக் கிளைகளும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

எமது இணையதள பக்கம் : http://www.auditorgeneral.gov.lk

மின்னஞ்சல் முகவரி : ag@auditorgeneral.gov.lk

தொலை நகல் : 011 2887223

தொலைபேசி எண் : 011-2887028 – 34

## கணக்காய்வு அதிகாரப் பொறுப்பு

### அரச கணக்காய்வின் வரலாறு

இலங்கையில் அரசாங்கக் கணக்காய்வின் ஆரம்பம் 1799 ஆம் ஆண்டு காலம் தொன்மைவாய்ந்ததாகும். பிரித்தானியர்களால் 1796 ஆம் ஆண்டில் நாட்டின் கரையோரப்பகுதிகளைக் கைப்பற்றியதை அடுத்து 1799 ஆம் ஆண்டின் போது சிசில் ஸ்மித் என்ற பெயருடைய ஒருவர் கணக்காளராகவும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியாகவும் நியமிக்கப்பட்டதாக ஆவணங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனை அடுத்து 1931 வரை இப் பதவி கணக்காய்வாளர் தலைமை அதிபதியாகவும் காலநித்துவக் கணக்காய்வாளராகவும் மாற்றத்திற்குட்பட்டிருந்ததுடன் 1931 இன் டொனமூர் அரசியலமைப்பின் கீழ் கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத் தலைவர் அறிமுகமானார். இதனை அடுத்து கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பதவிப் பெயர் மாற்றமடைந்திராததுடன் அது வரை நிலவிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் 2018 ஆம் ஆண்டின் போது தேசிய கணக்காய்வு அலுவலகமாக மாற்றப்பட்டது.

1931 இன் டொனமூர் அரசியலமைப்பிலும் 1947 இன் சோல்பரி அரசியலமைப்பிலும் கணக்காய்வாளர் தலைலைமை அதிபதியின் செயற்பணிகள் தொடர்பாக உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் 1972 ஆம் ஆண்டின் போது குடியரசின் அரசியலமைப்பின் மூலம் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் அரசா கூட்டுத்தாபனங்களின் கணக்காய்வு தொடர்பாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

### கணக்காய்வு மற்றும் தற்போதைய அதிகாரப்பொறுப்பு

➤ **1978 இன் அரசியலமைப்பு**

- கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அரசாங்கத்தின் அனைத்து திணைக்களங்கள், சனாதிபதி செயலகம், பிரதம மந்திரியின் செயலகம், அமைச்சரவைச் செயலாளரது அலுவலகம் மற்றும் அமைச்சர்களின் அலுவலகம், நீதிச் சேவைகள் ஆணைக்குழு உள்ளடங்கலாக சுயாதீன ஆணைக்குழுக்கள், மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு, நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர், பாராளுமன்றச் சபைகள் மற்றும் பாராளுமன்ற பிரதம செயலாளர், உள்ளூராட்சி மன்றங்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள், ஏனைய பொது முயற்சிகள் மற்றும் பங்குகளின் உரித்து ஐம்பது சதவீதத்திற்கு மேற்பட்ட அரசாங்க, கூட்டுத்தாபனம் அல்லது கட்டுப்பாட்டு நிர்வாகத்தைக் கொண்ட கம்பனிகளும் அவற்றின் கணக்குகளும் உள்ளடங்கலாக கணக்காய்வு செய்யப்பட வேண்டும்.

- அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையின் மூலம் பாராளுமன்றத்தினால் ஒரு தேவைப்பாடாக அங்கீகரிக்கப்பட்ட ஏதேனுமோர் சட்டத்தில் குறிப்பிட்ட ஏதாவது ஏனைய கடமைகளை நிறைவேற்றுதல் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் காட்டப்பட்டுள்ளது. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் செயற்பாடுகளையும் நடவடிக்கைகளையும் நிறைவேற்றும் போதும் ஒப்படைக்கும் போதும் அவரின் கடமைக்கு உதவியளிப்பதற்காக தகமைபெற்ற கணக்காய்வாளர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அரசியலமைப்பின் மூலம் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. மேலும், கணக்காய்வு

தொடர்பான தொழில்நுட்ப, தொழில்சார் மற்றும் விஞ்ஞாபன ரீதியான சிக்கல்களைத் தீர்த்துவைப்பதற்காக நிபுணர்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான ஒழுங்குவிதிகளும் அதன் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

- அரசியலமைப்பின் 154(5) ஆம் உறுப்புரையின் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவரது கடமைகளை மேற்கொள்ளும் போதும் ஒப்படைக்கும் போதும் அனைத்து பதிவேடுகளையும், அறிக்கைகளையும் பரீட்சித்தல் கணக்காய்வு செய்யப்படும் நிறுவனங்களின் அல்லது அரசாங்க நிறுவனங்களின் களஞ்சியங்களுக்கும் ஏனைய ஆதனங்களுக்கும் அணுகி கணக்காய்வை மேற்கொள்ளல் மற்றும் தேவைப்படுகின்ற தகவல்களையும் விளக்கங்களையும் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் கீழ் அதிகாரப் பொறுப்பு

அரசியலமைப்பின் மூலம் வழங்கப்பட்டுள்ள அரச நிதிக் கட்டுப்பாடு தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்படுதல் உள்ளடங்கலான விடயங்கள் தொடர்பான ஏற்பாடுகளை திட்டமிடுவதற்காக தேசியக் கணக்காய்வு அதிகாரச்சட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதன் படி 3(1) ஆம் பிரிவின் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் கணக்காய்வு செய்யப்படும் நிறுவனங்களுக்கு உரிய நோக்கெல்லை குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் படி, திரண்ட நிதியத்திற்கு கிடைக்கின்ற அனைத்து வருமானங்களும் திரண்ட நிதியத்திலிருந்தான அனைத்து செலவுகளும் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

அக் கணக்காய்வை மேற்கொள்கையில் குறித்த எழுத்து மூல அல்லது இலத்திரனியல் அறிக்கை, தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக மற்றும் கோருவதற்கு, தகவல்களின் பிரதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு, ஏதேனும் தகவலைக் கொண்டுள்ள சேவையில் ஈடுபடுதம் அல்லது அவ்வாறல்லாத ஒருவரை அழைத்து குறித்த ஆவணத்தைப் பெற்றுக்கொள்ளல், நீதவான் நீதிமன்றத்தின் அனுமதி பெறப்பட்டதை அடுத்து தவறான அல்லது மோசடியான கொடுப்பனவுகளை மேற்கொண்ட நிறுவனங்களின் கணக்குகள், கொடுக்கல்வாங்கல்கள் முதலியவற்றைப் பரிசோதிக்க முடியும்.

## ஏனைய விசேட கட்டளைச் சட்டங்களின் மூலம் பெறப்பட்டுள்ள அதிகாரப் பொறுப்பு

- அரச கூட்டுத்தாபனங்களுக்கான கணக்காய்வு ஏற்பாடுகளை வழங்குகின்ற 1971 இன் 38 ஆம் இலக்க தேசிய நிதி அதிகாரச் சட்டத்தின் II ஆம் பகுதி,

- மாகாண சபைகளுக்கான கணக்காய்வு ஏற்பாடுகளை வழங்குகின்ற 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23 ஆம் பிரிவு

- மாநகர சபைகளுக்கான கணக்காய்வு ஏற்பாடுகளை வழங்குகின்ற மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் பிரிவு

- நகர சபைக்கான கணக்காய்வு ஏற்பாடுகளை வழங்குகின்ற நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 181 ஆம் பிரிவு

- பிரதேச சபைகளுக்கான கணக்காய்வு ஏற்பாடுகளை வழங்குகின்ற 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172 ஆம் பிரிவு

- கமநல அபிவிருத்திச் சபைகளுக்கான கணக்காய்வு ஏற்பாடுகளை வழங்குகின்ற 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சபைகள் அதிகாரச் சட்டத்தின் 58 ஆம் பிரிவு

- விளையாட்டு சங்கங்களுக்கான கணக்காய்வு ஏற்பாடுகளை வழங்குகின்ற 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டுச் சங்கங்கள் அதிகாரச் சட்டத்தின் 9 ஆம் பிரிவு

## கணக்காய்வின் சுயாதீனத்தன்மை

### சுயாதீனத்தன்மை குறித்த சர்வதேச தேவைப்பாடு

ஐக்கிய நாடுகளின் அதியுயர் கணக்காய்வு நிறுவனங்கள் தொடர்பான சர்வதேச அமைப்பு (INTOSAI) 1977 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்ட "லீமா வெளியீட்டின்" மூலம் தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் ரீதியாக அரசாங்க கணக்காய்வின் சுதந்திரம் தொடர்பான தத்துவங்களின் மீது கவனம் செலுத்தியுள்ளது. 30 ஆண்டுகளின் பின்னர் அதியுயர் கணக்காய்வு நிறுவனங்கள் தொடர்பான சர்வதேச அமைப்பின் XIX ஆவது சம்மேளனத்தில் (2007 மெக்சிகோ) "மெக்சிகோ வெளியீடு" இன் மூலம் அரசாங்கத் துறையின் சிறந்த கணக்காய்விற்காக அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வருமாறு 8 பிரதான அத்தியவசியமான தேவைப்பாடுகள் இனங்காணப்பட்டுள்ளன.

**கொள்கை 1** - பொருத்தமானதும் வினைத்திறனானதுமான அரசியலமைப்பு சார்ந்த/ நியதிச்சட்ட ரீதியான/ சட்டரீதியான செயற்பாட்டு கட்டமைப்பும் அச்செயற்பாட்டு கட்டமைப்பிற்குள் உண்மையாக செயற்படும் ஏற்பாடுகள் காணப்படுதல்.

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சுதந்திரத்தின் அளவினை விபரமாக வெளிப்படுத்திக் காண்பிக்கும் சட்டங்களை உருவாக்குதல் அத்தியவசியமானதாகும்.

**கொள்கை 2** - அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் (கல்விசார் நிறுவனங்கள்) அங்கத்தவர்கள் சொந்த கடமைகளை நியாயமாக நிறைவேற்றும் போது அவர்களின் பதவியில் பாதுகாப்பு மற்றும் சட்டரீதியான சுற்றாடலில் சுதந்திரம்.

**கொள்கை 3** - அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களின் செயற்பாடுகளை நிறைவேற்றும் போது போதியளவு விரிவான சட்ட அதிகாரம் (Mendate) மற்றும் முழுமையான தற்றுணிவு

பின்வரும் செயற்பாடுகளை கணக்காய்வு செய்யும் அதிகாரம் அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

- அரசாங்கத்தின் நிதி, வளங்கள் அல்லது சொத்துக்களைப் பெற்றுக்கொண்ட நபர் அல்லது நலன்பெறுனரினால் அவற்றை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வது தொடர்பாக அதன் சட்டரீதியான தன்மையை கருத்தில் கொள்ளாது கணக்காய்வு செய்தல்

- அரசாங்கத்திற்கு அல்லது அரசாங்க நிறுவனங்களுக்கு கிடைக்க வேண்டிய வருமானங்களைச் சேகரித்தல்

- அரசாங்கத்தின் அல்லது அரசாங்க நிறுவனங்களின் கணக்குகள் தொடர்பான சட்டரீதியான தன்மையும் ஒழுங்குமுறையும்

- நிதி முகாமைத்துவத்தினதும் அறிக்கையிடுதலினதும் தரம், மற்றும்

- அரசாங்கத்தின் அல்லது அரசாங்க நிறுவனங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான சிக்கனம், செயற்திறன் மற்றும் பயனுறுதி

சட்டத்தின் மூலம் அவ்வாறு செய்யுமாறு உறுதியாக கட்டாயப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களைத் தவிர்த்து அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களினால் அரசாங்கத்தின் அல்லது அரசாங்க நிறுவனங்களின் கொள்கைகளை கணக்காய்வு செய்யாதிருக்க வேண்டும் என்பதனால் அவர்களின் கணக்காய்வானது கொள்கைகளை அமுல்ப்படுத்தும் செயற்பாடுகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தல் வேண்டும்.

அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு தொடர்புபடும் வகையில் சட்ட சபைகள் விதிக்கின்ற சட்டங்களுக்கு அந் நிறுவனங்கள் மதிப்பளிக்க வேண்டியதுடன் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக சட்ட சபைகள் அல்லது நிறைவேற்றுனர்கள் மேற்கொள்கின்ற பணிப்புரைகளிலிருந்து அல்லது தலையீட்டிலிருந்து அக் கணக்காய்வு நிறுவனங்கள் விடுவிக்கப்படுகின்றன.

- கணக்காய்வு பிரச்சினைகளை தெரிவு செய்தல்

- அவர்களது கணக்காய்வைத் திட்டமிடல், வேலைக் குறிப்புக்கள் தயாரித்தல், நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல், அறிக்கையிடுதல் மற்றும் பின்தொடர் நடவடிக்கை எடுத்தல்,

- தமது அலுவலகத்தை ஒழுங்கமைத்தலும் முகாமைத்துவம் செய்தலும்

- அங்கீகரிக்கப்பட்டவற்றை அமுல்ப்படுத்தல் தமது சட்ட அதிகாரத்தின் (Mandate) ஒரு பகுதியாகும் சந்தர்ப்பங்களின் போது சொந்த தீர்மானத்தை நிறைவேற்றுதல்.

அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களினால் தாம் கணக்காய்வு செய்யும் அமைப்புக்களின் முகாமைத்துவத்தினுள் எந்த வகையிலும் தலையீடோ அல்லது தலையீடு செய்வதாக காட்டிக்கொள்ளும் வகையில் செயற்படாதிருத்தல் வேண்டும்.

அரசியலமைப்பின் மூலம் கட்டளைச் சட்டங்களின் மூலம் அல்லது சட்டவாக்கங்களின் மூலம் பணிப்புரை செய்யப்பட்டுள்ள வகையில் வருடாந்த செயலாற்றல் அறிக்கையினை அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களினால் சட்ட சபைக்கும் ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கும் சமர்ப்பித்தல் வேண்டும். அந்த நிறுவனங்களினால் மேற்கூறிய அறிக்கையை பொதுமக்கள் தெரிந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

**கொள்கை 4 -** கட்டுப்பாடின்றி தகவல்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருத்தல்.

அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களின் நியதிச் சட்ட பொறுப்புக்களை முறைப்படியாக நிறைவேற்றுவதற்காக தேவையான அனைத்து ஆவணங்களையும் தகவல்களையும் உரிய

வேளைக்கு சரியாக, நேரடியாக, சுதந்திரமாக பெற்றுக்கொள்வதற்கு போதிய அதிகாரம் அந் நிறுவனங்களிடம் இருத்தல் வேண்டும்.

**கொள்கை 5 -** தமது வேலைகள் தொடர்பாக அறிக்கையிடுவதற்கு உள்ள உரிமை மற்றும் கடப்பாடு

தமது கணக்காய்வுச் செயற்பாட்டின் பெறுபேறுகளை அறிக்கையிடுதல் சம்பந்தமாக அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு வரையறைகள் விதிக்காதிருத்தல் வேண்டும். தமது கணக்காய்வுச் செயற்பாட்டின் பெறுபேறுகளை ஆகக் குறைந்தது ஒரு ஆண்டிற்கு ஒரு தடவையேனும் அறிக்கையிடுவதற்கு அவர்களுக்கு சட்டரீதியாக பணித்தல் வேண்டும்.

**கொள்கை 6** - கணக்காய்வு அறிக்கைகளின் உள்ளடக்கம் மற்றும் காலத்தை தீர்மானிக்கும் சுதந்திரம் மற்றும் அவற்றை வெளியிட்டு பகிர்ந்தளித்தல்.

- தமது கணக்காய்வு அறிக்கைகளின் உள்ளடக்கத்தை தீர்மானிக்கும் சுதந்திரம், அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களிற்கு உள்ளது.

- கணக்காய்வு செய்யும் நிறுவனத்தின் கருத்துரைகள் பொருத்தமான வகையில் கருத்திற்கொண்டு தமது கணக்காய்வு அறிக்கைகளில் அவதானிப்புக்களையும் பரிந்துரைகளையும் உள்ளடக்கும் சுதந்திரம் அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு இருத்தல் வேண்டும்.

- கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட வேண்டிய ஆகக் குறைந்த தேவைப்பாட்டை உறுதியாகக் காட்டி பொருத்தமான சந்தர்ப்பங்களில் முறையான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அல்லது சான்றுபடுத்துவதற்கு உறுதியான விடயங்களைக் காண்பிப்பதற்கு சட்டத்தின் மூலம் செயற்பட வேண்டும்.

- ஒட்டுமொத்தமாக சட்ட சபை, அதன் ஆணைக்குழு அல்லது அரசாங்கத்தினால் புலனாய்விற்கு அல்லது கணக்காய்விற்காக விசேட கோரிக்கை விடுக்கப்படுகையில் அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களினால் அவை நிறைவேற்றப்பட வேண்டும்.

**கொள்கை 7 -** அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களின் பரிந்துரைகள் தொடர்பாக வினைதிறனான பின்தொடர் நடவடிக்கைப் பொறிமுறை காணப்படுதல்

- அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்கள் தமது அறிக்கைகளில் குறிப்பிடுகின்ற உறுதியான பரிந்துரைகளை மீளாய்வு செய்து பின்தொடர் நடவடிக்கை எடுத்து திருத்த நடவடிக்கைகள் எடுப்பதற்காக உரிய வகையில் சட்டவாக்க சபைக்கு அல்லது அதன் ஆணைக்குழுவிற்கு அல்லது கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்தின் நிருவாக சபைக்கு சமர்ப்பிக்கும்.

- அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களைப் போன்று உரியவாறு சட்டவாக்க சபை அதன் ஆணைக்குழு அல்லது கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்தின் நிருவாக சபை என இவற்றின் அவதானிப்புக்களும் பரிந்துரைகளும் முறைப்படியாக அமுற்படுத்தப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கு அக் கணக்காய்வு நிறுவனங்களுக்குச் சொந்தமாக உள்ளக பின்தொடர் நடவடிக்கை முறைமை காணப்படல்.

- பின்தொடர் நடவடிக்கை மற்றும் அங்கீகரித்தல்களுக்காக தமக்கான நியதிச் சட்ட ரீதியான அதிகாரம் அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களிடம் இருக்கையில் அக் கணக்காய்வு நிறுவனங்கள் தமது பின்தொடர் நடவடிக்கை அறிக்கைகளை உரிய

வகையில் சட்டவாக்க சபைக்கு அல்லது அதன் ஆணைக்குழுவிற்கு அல்லது கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்தின் நிருவாக சபைக்கு கருத்திற்கொண்டு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக சமர்ப்பிக்கும்.

**கொள்கை 8 -** நிதி மற்றும் முகாமைத்துவ/ நிருவாக சுதந்திரம் மற்றும் பொருத்தமான மனித, பௌதீக மற்றும் நிதி வளங்கள் காணப்படல்.

- அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களுக்குத் தேவையான மற்றும் நியாயமான மனித, பௌதீக மற்றும் நிதி வளங்கள் இருத்தல் வேண்டும். இவ் வளங்களைப் பெற்றுக்கொள்வதைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது செயற்படுத்துவதற்கு நிறைவேற்றுனர் முன்வராதிருத்தல் வேண்டும். அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்கள் தமது பாதீட்டினை அவர்களாலேயே முகாமைத்துவம் செய்து பொருத்தமான வகையில் ஒதுக்கீடு செய்தல்.

- சட்டவாக்க சபை அல்லது அதன் ஒரு ஆணைக்குழு அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு தமது சட்டரீதியான அதிகாரங்களுக்கு இணங்க செயற்பாடுகளை (Mandate) நிறைவேற்றுவதற்குத் தேவைப்படுகின்ற உரிய வளங்களை அத்தியவசியமாக வழங்கப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்தும் பொறுப்பினை வகித்தல் வேண்டும்.

- அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வளங்கள் அவர்களின் சட்டரீதியான அதிகாரங்களுக்கு இணங்க செயற்பாடுகளை (Mandate) நிறைவேற்றிக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கக் கூடிய அளவிற்கு போதாவிடின் இது தொடர்பாக நேரடியாக சட்டவாக்க சபைக்கு மேன்முறையீடு செய்யும் உரிமை அந்த கணக்காய்வு நிறுவனங்களுக்கு உள்ளது.

## எமது சுயாதீனத்தன்மை

அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரைக்கு இணங்க, கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவி அமைக்கப்பட்டுள்ளதுடன் தகைமை பெற்ற ஒரு கணக்காய்வாளர் தலைமை அதிபதி 41 (அ) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு உட்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக சனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட வேண்டும் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கணக்காய்வாளர் தலைமை அதிபதி சிறந்த மனநிலை இருக்கும் வரை தனது பதவியை வகிப்பார்.

மேலும் அரசியலமைப்பின் 170 ஆவது உறுப்புரையின் பிரகாரம், கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்கள் ‘‘அரசாங்க உத்தியோகத்தர் அல்லாத விசேட பட்டியலுக்கு’’ உள்ளடக்கப்பட்டுள்ளார். இது மேலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் நிருவாகச் சுதந்திரத் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக விதிக்கப்பட்ட ஏற்பாடாகும்.

## கணக்காய்வு சேவை ஆணைக்குழு

2022 நவம்பர் 04 ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 21 ஆம் அரசியலமைப்புத் திருத்தத்திற்கு அமைவாக அரசியலமைப்பின் 153 (அ) முதல் (ஏ) வரையான பிரிவுகளின் மூலம் கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் அரச கணக்காய்வு சேவை ஸ்தாபிக்கப்பட்டதுடன் 2023 ……… ஆம் திகதி முதல் கணக்காய்வு சேவை ஆணைக்குழு அதிகாரவலுப் பெற்றது. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தலைமைத்துவத்துடன் தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் இருந்து ஓய்வு பெற்ற பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அல்லது அதற்கு மேலான நிலையில் உள்ள இரு உத்தியோகத்தர்களையும் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற, மேன்முறையீட்டு நீதிமன்ற அல்லது

மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவரையும், ஓய்வு பெற்ற 1 ஆம் தரத்தில் உள்ள நிர்வாக உத்தியோகத்தரையும் உள்ளடக்கியதாகும். இதன் மூலம் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் நிதி மற்றும் நிர்வாக சுயாதீனத் தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

153 ஆவது அரசியலமைப்பின் பிரகாரம், அரச கணக்காய்விற்கு உரிய அங்கத்தவர்களின் நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம், ஒழுக்கமுறை நிர்வாகம் ஆணைக்குழுவிற்கு உரித்தாவதுடன் 153 (இ) 2(ஆ) பிரிவின் பிரகாரம் தேசிய கணக்காய்வு அலுவலக மதிப்பீடு தயாரிக்கப்படுவது ஆணைக்குழுவின் செயற்பாடாகும்.

இதன் படி, 21 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்துடன் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் முற்றாக வலுப்பெற்றதன் மூலம் அதிஉயர் கணக்காய்வு நிறுவனத்தின் சுயாதீனத்திற்காக அடிப்படையான அதிஉயர் கணக்காய்வு நிறுவனம் தொடர்பான சர்வதேச அமைப்பின் அடிப்படை கோட்பாடுகளுடன் இணங்கும் வகையில் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

2018 ஆம் ஆண்டு வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அவரது செலவினங்களுக்கான போதிய ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்வதற்காக திறைசேரியைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்ததுடன் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏனைய பொது நலவாய நாடுகளைப் போன்று இலங்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதி, அவரது பதவியணி உள்ளடங்கலாக தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கான வரவு செலவுத் திட்டம், பாராளுமன்ற நிதி தொடர்பான செயற்பாட்டுக் குழுவால் சகல ஆய்வுகளுக்கும் உட்பட்டு பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டதுடன் அவரது வரவு செலவுத் திட்டம் தொடர்பாக நிறைவேற்றுக் கட்டுப்பாட்டிற்கு அப்பால் தீர்மானிக்கப்படும். இதன் படி, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் செயற்பணியை மேற்கொள்கையில் நிதிசார் சுயாதீனத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அரசியலமைப்பில் குறிப்பிடப்படுவதாவது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பதவியணி அல்லாத, கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் வேறு நாடுகளைப் போன்று தேசிய கணக்காய்வு அலுவலக பதவியணியின் நடவடிக்கைகளும் அதிகாரங்களும் விபரமாகக் குறிப்பிடப்பட வேண்டிய தேவைப்பாடு 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மூலம் 2018 ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் முழுமைப்படுத்தப்பட்டுள்ளது.

நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் நிச்சயமாகக்குறிடப்பட்ட கால எல்லைக்குள் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் வருடாந்த வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன் சபாநாயகர் அவர்களால் தீர்மானிக்கப்படும் தினத்தில் அதனை அவரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். இவ் வரவு செலவுத் திட்டம் 10 நாட்களுக்குள் நிதி அமைச்சரின் அவதானிப்புகளை சபாநாயகர் பெற்றுக்கொண்டு பாராளுமன்ற அவையில் சமர்ப்பித்தல் வேண்டும். பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்படும் மதிப்பீடு தேசிய வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படுவதற்காக சபாநாயகர் அவர்களால் நிதி அமைச்சருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

## எமது செயற்பணி

### அரசியலமைப்பு மற்றும் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம்

தேசிய கணக்காய்வு அலுவலகத்தையும் இலங்கை அரசாங்க கணக்காய்வு சேவையையும் தோற்றுவிப்பதற்காகவும் அரசாங்க நிதி தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கடமைகளை உறுதியாகக் காட்டுவதற்காகவும் அதனுடன் சம்பந்தப்பட்ட அல்லது அதன் விளைவான விடயங்களுக்கான ஏற்பாடுகள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் விதந்துரைக்கப்பட்டுள்ளது. இதன் படி,

கணக்காய்வாளர் தலைமை அதிபதியால்,

- திரண்ட நிதியத்திற்கு கிடைக்கின்ற அனைத்து வருமானங்களும் திரண்ட நிதியத்திலிருந்தான அனைத்து செலவுகளும் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

- கணக்காய்வு செய்யப்படும் நிறுவனங்களின் கணக்குகளில் செலவு செய்யப்பட்டதாகச் சுட்டிக்காட்டப்படும் பணம், அவை தொடர்புபடுத்தப்பட்டுள்ள அல்லது அறவிடப்பட்டுள்ள சேவைகள் அல்லது செயற்பாடுகளுக்காக சட்ட ரீதியாகப் பெற்று தொடர்புபடுத்தப்பட்டுள்ளனவா என்பது தொடர்பாக விசாரித்து தெரிந்துகொள்ளுதல் வேண்டும்.

- செலவுகள் அவை கட்டுப்படுத்தப்படுகின்ற அதிகாரச் சட்டத்திற்கு இணங்கியுள்ளனவா என்பது தொடர்பாக தீர்மானித்தல் வேண்டும். மற்றும்

- ஒவ்வொரு கணக்காய்வின் போதும் வருமானங்கள், செலவுகள், கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் தொடர்பாக பரீட்சித்தல் வேண்டும்.

- கணக்குகள், நிதி, நிதி நிலைமை, அரசாங்க நிதிகளின் நிதிக்கட்டுப்பாடு, கணக்காய்வு நிறுவனங்களின் ஆதனங்களின் ஆய்வு மற்றும் செயலாற்றல் கணக்காய்வு, சுற்றாடல் கணக்காய்வு, தொழில்நுட்பக் கணக்காய்வு மற்றும் ஏனைய விசேட கணக்காய்வை மேற்கொள்ள வேண்டும்.

### கணக்காய்வு நடைமுறை

1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் அதிகாரச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட கணக்காய்வு நியமங்கள் குழுவால் தயாரிக்கப்பட்டுள்ள இலங்கை கணக்காய்வு நியமங்கள் தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அந் நியமங்களின் படி, நிதிக் கணக்காய்வு திட்டமிடப்படுகையில் இடரை அடிப்படையாகக் கொண்ட தெரிவுகள் இனங்காணப்படுவதுடன் இடரை இனங்காண்பதற்காக நியமங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களின் படி நிர்ணயங்களாக கொடுக்கல்வாங்கல்கள், சம்பவங்கள் அல்லது மீதிகளின் தற்போதைய அளவு மற்றும் தரத்தின் முக்கியத்துவத் தன்மை கருத்திற்கொள்ளப்படும்.

வருடாந்தக் கணக்காய்வின் போது நிதிசார் கொடுக்கல்வாங்கல்களுடன் மாத்திரம் மட்டுப்படுத்தாது நிறுவனத்தின் செயற்பாடு தொடர்பாக நிலவும் வளங்கள் உள்ளடங்கலான வரையறைகளில் கணக்காய்வு மேற்கொள்ளப்படும். இதன் படி, நிறுவனத்தின் செயலாற்றல்

தொடர்பாக மேற்கொள்ளப்படும் அவதானிப்புகள் ஏற்ற வகையில் நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

**வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கும் கணக்காய்விற்கு உட்படுத்தப்படும் நிறுவனத்திற்கும் சமர்ப்பித்தல்.**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் படி, வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு செய்யப்பட்டதைத் தொடர்ந்து பின்வருமாறு கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

- அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் படி, ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த பின்னர், குறித்துரைக்கப்பட்ட காலவரையறைகளினுள், ஒவ்வொரு கணக்காய்வுகளினதும் பெறுபேறுகள் குறித்து பாராளுமன்றத்திற்கு ஓர் அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

- அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின் படி, அரச கூட்டுத்தாபனங்கள், அரச கம்பனிகள் தவிர்ந்த ஏதேனும் ஒரு கணக்காய்விற்கு உட்படுத்தப்படும் உருவகத்தால் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் நிதிக்கூற்று அல்லது ஏதேனும் ஓர் கணக்குத் தொடர்பில், கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்கு ஒவ்வொரு நிதியாண்டு முடிவுற்றதன் பின்னர் ஐந்து மாதங்களுக்குள் விரிவான அறிக்கை ஒன்று சமர்ப்பித்தல் வேண்டும்.

- அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் படி, அரச கூட்டுத்தாபனமான அல்லது அரசாங்கத்தால் அல்லது அரசாங்கக் கூட்டுத்தாபனத்தால் பங்குகளின் நூற்றுக்கு ஐம்பது அல்லது இதற்கு மேற்பட்ட பங்குகளைக் கொண்டுள்ள கம்பனி ஒன்றின் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த நிதிக் கூற்றுக்களும் வேறு இயைபான ஆவணங்களும் தகவல்களும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குக் கிடைக்கப்பெற்று மூன்று மாதங்களுக்குள், தனது வருடாந்த அறிக்கையை பகிரங்கப்படுத்துவதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் ஓர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

- அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் படி, குறித்த கணக்காய்வு செய்யப்படும் உருவகத்திற்கு உரித்தான அமைச்சருக்கும் நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்குப் பிரதியுடன் ஒவ்வொரு நிதி ஆண்டும் முடிவுற்று ஐந்து மாதங்களுக்குள் ஒவ்வொரு கணக்காய்விற்கும் உட்பட்ட உருவகங்களின் கட்டுப்பாட்டு சபைக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் வருடாந்த விபரமான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

- அதிகாரச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் படி, ஒவ்வொரு 3 நிதியாண்டு முடிவுற்ற காலப்பகுதியின் பின்னர் 9 மாதங்களிற்குள் கணக்காய்வு செய்யப்படும் உருவகம் தொடர்பான ஓர் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இதன் படி, 2023 ஆம் ஆண்டின் போது மேற்குறித்த வகையில் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு நிறுவனங்களின் எண்ணிக்கை பின்வருமாறாகும்.

| சேவை பெறுனர் | நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|
| அமைச்சுக்கள் | 29 |
| திணைக்களங்கள் | 110 |
| மாவட்ட செயலகங்கள் | 25 |
| பிரதேச செயலகங்கள் | 331 |
| அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள், அதிகாரசபைகள் மற்றும் அரசாங்கத்திற்குப் பொறுப்பேற்கப்பட்ட தொழில் முயற்சிகள் | 222 |
| அரசாங்கக் கம்பனிகள் | 117 |
| அரச வங்கிகள் | 09 |
| நியதிச்சட்ட மற்றும் ஏனைய நிதியங்கள் | 67 |
| வெளிநாட்டு முதலீட்டுச் செயற்திட்டங்கள் | 113 |
| ஏனைய சுயாதீன நிறுவனங்கள் | 11 |
| **மாகாண சபைகள்** | 09 |
| **உள்ளூராட்சி மன்றங்கள்** | 341 |
| கமநல சேவை நிலையங்கள் | 565 |
| விளையாட்டுக் கழகங்கள் | 66 |
| மாகாண சபைகளின் அமைச்சு, திணைக்களங்கள் மற்றும் விசேட செலவினப் பிரிவு | 273 |
| மாகாண சபை கட்டளைச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனங்கள் | 70 |
| கூட்டுத்தொகை | **2398** |

### வருடாந்த நிதிக்கூற்றுக்கள் அல்லாத கணக்காய்வு

செயலாற்றல் கணக்காய்வு, விசேட கணக்காய்வு, சுற்றாடல் கணக்காய்வு மற்றும் விசேட புலனாய்வு மற்றும் தடயவியல் கணக்காய்வு ஆகிய கணக்காய்வுகளின் மூலம் நிதிக்கூற்றுக்களைச் சாராத ஏதேனும் விசேட விடயத் துறையில் செயலாற்றல் தொடர்பான அல்லது சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டு ஆழமாக பரீட்சித்து அறிக்கையிடல் இக் கணக்காய்வுகளின் போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. அறிக்கையின் மூன்றாம் பிரிவின் மூலம் இது தொடர்பான விபரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## பாராளுமன்றத்திற்கு உதவுதல்

அரசாங்க கணக்குகள் மற்றும் பொது முயற்சிகள் தொடர்பான குழுக்களில் பங்குகொள்வது பாராளுமன்றத்தின் நிலையியல் கட்டளை 119 மற்றும் 120 இன் கீழ் உருவான அரசாங்க கணக்குகள் தொடர்பான குழு (COPA) பொது முயற்சிகள் தொடர்பான குழு (COPE) என அறிமுகப்படுத்தப்பட்ட பாராளுமன்றத்தின் குழுக்களின் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் ஒவ்வொரு நிறுவனம் தொடர்பாகவும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் அறிக்கைகள் ஆய்வுசெய்யப்படும்.

நிலையியல் கட்டளை 119 இன் கீழ் உருவான அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுவின் மூலம் பொது மக்கள் செலவினத்திற்காக பாராளுமன்றத்தால் அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் வழங்கப்படும் பணத்தைப் பயன்படுத்திய விதம் குறித்து காண்பிக்கப்படும் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் உதவியுடன் பரீட்சிக்கப்படுகின்றது. பொதுவாக ஏதேனுமோர் திணைக்களம் அல்லது உள்ளூராட்சி மன்றத்தின் கணக்குகள், நிதியியல் ஆய்வுகள், நிதி நடைமுறைகள், செயலாற்றல் மற்றும் முகாமைத்துவ ஆய்வுகள் மற்றும் இதன் மூலம் எழும் ஏதேனும் விடயம் தொடர்பாக அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுவால் பாராளுமன்றத்தில் காலத்திற்குக் காலம் அறிக்கையிடப்படும்.

நிலையியல் கட்டளை 120 இன் கீழ் உருவான பொது முயற்சிகள் தொடர்பான குழுவின் (COPE) செயற்பணியாக, அரசாங்க கூட்டுத்தாபனங்கள் முழுமையாக அல்லது பகுதியளவில் அரசாங்கத்தினால் நிதி வழங்கப்பட்டுள்ள நிறுவனங்களின் கணக்குகளும் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் மூலம் அரசாங்கத்தினால் கையேற்கப்பட்ட ஏதேனும் வியாபாரம் அல்லது ஏனைய ஒப்படை சம்பந்தமாக பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட கணக்குகள், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் உதவியுடன் பரீட்சிக்கப்படும். ஏதேனும் அரசாங்க கூட்டுத்தாபனம் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் மூலம் அரசாங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்ட வியாபாரம் அல்லது வேறு ஒப்படையொன்றின் பரீட்சிக்கப்பட்ட கணக்குகள் தொடர்பான பாதீடும் வருடாந்த மதிப்பீடும் நிதி, நிதி நடைமுறைகள், செயலாற்றல் மற்றும் வழமையான முகாமைத்துவம் மற்றும் அதன்படி உருவாகும் ஏதேனுமோர் விடயம் குறித்து பொது முயற்சிகள் தொடர்பான குழுவினால் காலத்துக்குக் காலம் பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

அவசியமாகக் கருதுகையில் குழு அங்கத்தவர்களை உள்ளடக்கிய ஒரு துணைக் குழுவை நியமிப்பதற்காக அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுவைப் போன்று பொது முயற்சிகள் தொடர்பான குழுவிற்கும் இயலுமை உள்ளதுடன் குழுவைப் போன்று அதன் துணைக் குழுக்களுக்கும் அவற்றிற்குரிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக எந்த ஒரு நபரையும் அழைத்து கேள்வி கேட்கும் அதிகாரம், ஏதேனுமோர் கடிதம், புத்தகம், பதிவேடு அல்லது வேறு ஏதேனும் ஆவணத்தைப் பெற்று பரீட்சிக்கும் அதிகாரம், களஞ்சியங்களுக்கும் வேறு இடங்களுக்கு செல்வதற்கும் அதிகாரம் உள்ளது.

பாராளுமன்றத்தின் ஆளும் கட்சியும் எதிர்கட்சியும் முறைப்படியாக பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தெரிவுக் குழுவினால் பெயரிடப்படும் 16 உறுப்பினர்கள் வீதமான வகையில் அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுவும் பொது முயற்சிகள் தொடர்பான குழுவும் உள்ளடங்கியிருக்கும். அரசாங்கத்தின் கணக்குகள் தொடர்பான குழு மற்றும் பொது முயற்சிகள் தொடர்பான குழு ஆகிய இரண்டு குழுக்களினதும் பரீட்சிப்பை அடுத்து அவற்றின் பரிந்துரைகளை நிறைவேற்றுனர்கள் ஏற்றுக்கொண்டமை என்பது மாத்திரமின்றி அப் பரிந்துரைகள் ஆக்கபூர்வமாகவும் முழுமையாகவும் அமுற்படுத்தப்பட்டனவா, மிகவும் முக்கியமான வகையில் நிதி செயற்திறனாகவும் சேவைத் தரம் குறித்து சாதகமான மாற்றம் நிகழ்ந்துள்ளதா என்பதனை ஆய்வு செய்து அமுற்படுத்தும் நடைமுறை தொடர்பாக

குழுவிற்கு மீள அறிக்கை சமர்ப்பித்தலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கடமையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் / அல்லது அவரது பிரதிநிதிகள் நேரடியாக அக்குழுவிற்கு உதவியளிப்பார்கள். அங்கு கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்படும் நிறுவனத்திற்கு உரிய கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட முக்கிய அவதானிப்புகளின் தற்போதைய நிலைமையை பரீட்சிக்கப்பட்டு நாளதுவரையாக்கப்பட்ட அவதானிப்புக்களுடன் தற்போதைய செயலாற்றல் தொடர்பாக குழுவில கலந்துரையாடப்படுவதற்குப் பொருத்தமான அவதானிப்புகளை உள்ளடக்கிய கலந்துரையாடல் குறிப்பொன்று தயாரிக்கப்பட்டு குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படுவதுடன் அதனை அடிப்படையாகக் கொண்டு குழுவின் தலைவர் கலந்துரையாடலை நடாத்துவார்.

கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்படுவதற்குள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட விடயங்களுக்குரிய தற்போதைய நிலைமை மற்றும் செயற்பாட்டு செயலாற்றல் தொடர்பான எழுத்துமூல தகவல்களை உள்ளடக்கிய ஒரு அறிக்கையை வழங்குவதற்காக உரிய அரசாங்க நிறுவனத்திற்கு வழமையாக ஒரு மாத காலம் குழுவால் வழங்கப்படுகின்றது. கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஓர் பிரதியுடன் சமர்ப்பிக்கப்படும் இவ் அறிக்கையை அடிப்படையாக் கொண்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் மேற்குறித்த கலந்துரையாடல் குறிப்பு தயாரிக்கப்படுவதுடன் முன்னர் நடாத்தப்பட்ட கூட்டங்களின் போது வழங்கப்பட்ட கட்டளைகள் நடைமுறைப்படுத்தப்பட்டமைக்கான செயல்முன்னேற்றம் பரீட்சிக்கப்பட்டு அது தொடர்பாக மேலும் கலந்துரையாடப்பட வேண்டிய விடயங்களும் அந்தக் கலந்துரையாடல் குறிப்பில் வேறாக உள்ளடக்கப்படும். கலந்துரையாடலை ஆரம்பிப்பதற்கு முன்னர் அதன் பிரதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்படுவதனால் அதனை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடலை நடாத்துதல் குழுவிற்கு வசதியாக இருக்கும்.

குழுக்கூட்டச் சந்தர்ப்பத்தின் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கடமையாக, கலந்துரையாடலுக்கு உட்படுகின்ற விடயங்கள் தொடர்பான பின்னணித் தகவல்களை வழங்கி கருத்திற்கொள்ளப்படும் விடயம் தொடர்பான கருத்துகளைத் தெரிவிப்பதன் மூலம் குழுவிற்கு உதவியளிப்பதாகும். அதன் போது, உரிய விடயங்கள் தொடர்பாகவும் அதே போன்று குழு அங்கத்தவர்களால் வினவப்படும் வினாக்களுக்கும் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்ட நிறுவன உத்தியோகத்தர்கள் சமர்ப்பிக்கும் விடயங்கள் தொடர்பாக கருத்துத் தெரிவிப்பதும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் பெரும்பாலும் மேற்கொள்ளப்படும்.

இதன் படி, 2023 ஆம் ஆண்டின் போது அரசாங்க கணக்குக் குழுவினால் 64 நிறுவனங்களும் பொது முயற்சிகள் தொடர்பான குழுவால் 61 நிறுவனங்களும் பரீட்சிப்பதற்காக கோரப்பட்டிருந்ததுடன் அதன் போது 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகள், விசேட கணக்காய்வு அறிக்கைகள் அல்லது செயலாற்றல் அறிக்கைகள் கலந்துரையாடப்பட்டதுடன் அக் குழுக்களின கூட்டத்தொடர்களுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதி கலந்து கெண்டிருந்தார்.

## அரசாங்க நிறுவனங்களின் நிதிக்கட்டுப்பாட்டையும் செயலாற்றலையும் மதிப்பீடு செய்வதற்கான வினாக் கொத்து

இதற்கு மேலதிகமாக குறிப்பாக அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்கள் என்பவற்றின் நிதிக்கட்டுப்பாட்டையும் செயலாற்றலினையும் மதிப்பீடு செய்வதற்கான தகவல் தொழில்நுட்பத்தைச் சார்ந்த வினாக்கொத்துக்களைத் தயாரிப்பதற்காக 2023 ஆம் ஆண்டின் போது தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள் அரசாங்க கணக்குகள்

தொடர்பான குழுவிற்கு உதவியளித்திருந்தனர். மேலும் குறித்த ஒவ்வொரு நிறுவனத்தினாலும் அவ் வினாக்களுக்காக வழங்கப்பட்டிருந்த பதில்களின் துல்லியத்தன்மை குறித்துப் பரீட்சித்து அது பற்றி அறிக்கையிடுவதன் மூலம் உரிய மதிப்பீட்டு நடவடிக்கையை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதி மேலும் அக்குழுவிற்கு உதவியளித்திருந்தார்.

## வேறு குழுக்களில் கலந்துகொள்ளல்

இவ்வாறே, நிதி தொடர்பான குழு, பாதீடு தொடர்பான குழு முதலிய பல்வேறு பாராளுமன்றக் குழுக்களுக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களை பிரதிநிதித்துவம் செய்யும் உத்தியோகத்தர்களை பங்குபற்றச் செய்வதன் மூலமும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் நியதிச்சட்ட கடமைகளுக்கு மேலதிகமாக பல்வேறு வழிகளிலும் பாராளுமன்ற நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டின் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதி உதவியளித்துள்ளார்.

8 வாரங்களுக்குள் தனது அவதானிப்புக்களையும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் அறிக்கையிடுவதற்காக நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும் நிறுவனத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும் அனுப்பிவைக்கப்பட்ட பாராளுமன்ற நிலையியல் கட்டளை இலக்கம் 119(4) இன் பிரகாரம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட அரசாங்கத்தின் கணக்குகள் தொடர்பான குழுவின் அறிக்கை தொடர்பான பாராளுமன்ற வெளியீட்டுத் தொகுப்பு இல 114 இற்கு உரித்தாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பதில் அறிக்கையை பரீட்சித்து மீண்டும் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் ஆண்டின் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் நிறைவேற்றப்பட்ட மற்றுமொரு விசேட செயற்பாடாகும்.

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மிகைக் கட்டணம் விதிக்கப்படுதல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம், 2018 ஆகஸ்ட் 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருவதுடன் அதன் 19 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு சேவை ஆணைக்குழுவால் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களால் கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்தின் ஏதேனும் கொடுக்கல்வாங்கல், ஏதேனும் எழுத்திலான சட்டத்திற்கு முரணாக இடம்பெற்றுள்ளது எனவும் அக்கொடுக்கல் வாங்கலின் மூலம் அதனுடன் தொடர்புபட்ட நபர்களின் மோசடி, கவனயீனம், பிழையான நடத்தை அல்லது ஊழலின் காரணமாக ஏதேனும் குறைகள் அல்லது நட்டங்கள் ஏற்பட்டுள்ளது என நம்புவதற்கு கணக்காய்வு சேவை ஆணைக்குழுவிற்கு நியாயமான காரணம் காணப்படும் சந்தர்ப்பத்தில் ஏதேனும் கொடுக்கல் வாங்கலின் காரணமாக இடம்பெற்ற அனைத்துக் குறைபாட்டிற்கும் நட்டத்திற்கும் உரிய பெறுமதி, கணக்காய்வு சேவை ஆணைக்குழுவால் மிகைக்கட்டணம் விதிப்பதற்காக அக்கொடுக்கல் வாங்கல் காரணமாக ஏற்பட்ட அனைத்துப் பற்றாக்குறைகள் அல்லது நட்டங்களுக்குரிய பெறுமதி, அக்கணக்காய்விற்கு உட்படுத்தப்படும் நிறுவனத்தின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிக்கையிடப்பட வேண்டும்.

அவ்வாறு அறிக்கையிடப்படுகின்ற பெறுமதியை அப்பற்றாக்குறைக்கு அல்லது நட்டத்திற்கு பொறுப்புக் கூறக்கூடிய நபர்களிடமிருந்து கூட்டாகவோ அல்லது வெவ்வேறாகவோ அறவீடு செய்யும் பொறுப்பு குறித்த பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தமது செயற்பாட்டை நிறைவேற்றுகையில், தனக்குக் கிடைக்கப்பெற்ற தகவல்களை ஏனைய நபர்களுக்கு வெளிப்படுத்துவதற்கு தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 09 ஆம் பிரிவின் பிரகாரம் வரையறைகள் விதிக்கப்பட்டிருந்தமை மற்றும் கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 19 ஆம்

பிரிவை அமுற்படுத்துவதற்குத் தேவையான கணக்காய்வு தகவல்களை கணக்காய்வு தலைமை அதிபதியிடமிருந்து கணக்காய்வு சேவை ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற வேண்டிய முறை தொடர்பாக சட்டரீதியான ஏற்பாடு இன்மையால் மிகைக் கட்டண நடைமுறையை அமுற்படுத்துவதற்காக அவ்வாறான சட்டரீதியான ஏற்பாட்டை உள்ளடக்கும் வகையில் கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினை திருத்தம் செய்ய வேண்டுமென சட்டமா அதிபரால் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந் நிலைமையில் கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மிகைக் கட்டண நடைமுறையை ஆக்கபூர்வமான வகையில் அமுற்படுத்துவதற்கு தடைகள் ஏற்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் அமுற்படுத்தப்பட முன்பிருந்தே பல்கலைக்கழகங்களுக்கும் உள்ளுராட்சி நிறுவனங்களுக்கும் உரித்தான மிகைக் கட்டணம் விதிப்பதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வேறு எழுத்து மூலச் சட்டங்களின் மூலம் ஒப்படைக்கப்பட்டிருந்த அதிகாரத்தின் அடிப்படையில் அந்த மிகைக் கட்டண நடைமுறை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பங்கேற்பில் முன்னிருந்தவாறே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதற்கிணங்க இந்த மிகைக்கட்டண நடைமுறையை மேலும் செயலூக்கப்படுத்தும் தேவைப்பாட்டை வலியுறுத்துவதுடன் இதற்காக மிகைக் கட்டணம் விதிப்பனவு நடவடிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் முடிவிற்குக் கொண்டுவரப்படுவதற்கும் இது தொடர்பான மேன்முறையீடுகளைக் கருத்திற்கொள்வதற்கு கணக்காய்வு சேவை ஆணைக்குழுவிற்கும் ஒப்படைக்கப்படுவதற்காக தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகள் திருத்தப்படுவது ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்படுவது மிக உகந்ததென பரிந்துரைக்கப்படுகின்றது. இதற்காக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 19 ஆம் பந்திக்காக ஏற்ற திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

### உள்ளுராட்சி மன்றங்களில் மிகைக் கட்டணங்களை அறவீடு செய்தல்

இலங்கையில் 341 உள்ளுராட்சி மன்றங்கள் உள்ளதுடன் 28 மாநகர சபைகள், 37 நகர சபைகள் மற்றும் 276 பிரதேச சபைகள் அவற்றிற்கு உரியவைகளாகும். இந்த உள்ளுராட்சி மன்றங்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரை, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் தொடர்புடைய கட்டளைச் சட்டங்கள் மற்றும் அதிகாரச்சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் கணக்காய்வு செய்யப்படும்.

அக் கட்டளைச் சட்டங்கள் மற்றும் அதிகாரச் சட்டங்களிலிருந்து சட்டத்திற்கு முரணான கொடுப்பனவு விடயங்கள், கவனயீனம் அல்லது தவறான நடத்தைகளால் ஏற்பட்ட நட்டங்களும் கணக்குகளில் காண்பிக்கப்பட வேண்டிய எனினும், காண்பிக்கப்பட்டிராத விடயங்களை மிகைக்கட்டணம் விதிப்பதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த அதிகாரத்தின் பிரகாரம் மாநகர சபைக் கட்டளைச்சட்டத்தின் 226 ஆம் பிரிவு மற்றும் பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 172 ஆம் பிரிவுகளின் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி, 2023 ஆம் ஆண்டின் போது 130 தரப்பினர்களுக்கு ரூபா 79.24 மில்லியன் தொகையான மிகைக் கட்டண அறிவித்தல்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அம் மிகைக்கட்டண அறிவித்தல்களில் 10 தரப்பினருக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 50.26 மில்லியன் தொகையான மிகைக்கட்ட அறிவித்தல்களுக்கான பணத்தொகை குறித்த சபை நிதியத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. மேற்குறித்தவாறு வழங்கப்பட்டிருந்த மிகைக்கட்டண அறிவித்தல்களில் 62 தரப்பினர்களுக்காக ரூபா 2.15 மில்லியன் பெறுமதியான மிகைக்கட்டணச் சான்றிதழ்களும் 2023 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்தன.

## பொது மக்களின் முறைப்பாடுகளை பரிசீலித்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனங்கள் தொடர்பான எந்தவொரு விடயம் குறித்தும் உறுதிப்படுத்துவதற்கு போதியளவு சாட்சிகளுடன் பொதுமக்களிடம் இருந்து எவரேனும் ஒருவரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்துகையில் அது குறித்து பரீட்சிக்க இயலும் என்பதுடன் அது குறித்து பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு பொது மக்கள் தனிப்பட்ட ரீதியில் அல்லது பொது மக்கள் பிரதிநிதிகளும் பல்வேறு அமைப்புகளினூடாக கிடைக்கும் எழுத்துமூல முறைப்பாடுகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்காக அலுவலகத்தில் தனியான ஒரு பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அப்பிரிவின் மூலம் நிறுவனத்திற்கு கிடைக்கும் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு பரிசீலிப்பதற்காக முறைப்பாட்டின் தன்மை மற்றும் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு விசேட புலனாய்வு மற்றும் தடயவியல் கணக்காய்வுப் பிரிவிற்கு அல்லது விடயத்திற்குப் பொறுப்பான கணக்காய்வுக் கிளைக்கு அல்லது பிராந்திய ரீதியாக அமைந்துள்ள விசேட கணக்காய்வுப் பிரிவுகளுக்கு பொது மக்கள் முறைப்பாடு முகாமைத்துவ தகவல் முறைமையினூடாக சமர்ப்பிக்கப்படும். ஆப் பிரிவால் முறைப்பாடுகளின் உள்ளடங்கியுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்படும் கணக்காய்வின் மூலம் மேற்கொள்ளப்படும் அவதானிப்புக்களை அவற்றின் பொருண்மை மற்றும் தரத்தினை கவனத்திற்கொண்டதை அடுத்து குறித்த கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட நிறுவனம் தொடர்பாக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்குவதற்கு அல்லது விசேட அறிக்கையின் மூலம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு தேசிய கணக்காய்வு அலுவலகம் நடவடிக்கை எடுக்கும்.

எவ்வாறாயினும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 09 ஆம் பிரிவில் காணப்படுகின்ற வரையறுக்கப்பட்ட ஏற்பாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தி அக்கணக்காய்வின் பெறுபேறுகள் நேரடியாக உரிய முறைப்பாட்டைச் சமர்ப்பித்த தரப்பினருக்கு தெரிவிக்கப்படுவதில்லை. எனினும், அநாமதேய முறைப்பாடுகளை தவிர்த்து ஏனைய முறைப்பாடுகள் சம்பந்தமாக அவை பெற்றுக்கொள்ளப்பட்டமை பற்றியும் அவை பரிசீலிக்கப்பட்டு பொருத்தமான வகையில் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவற்றை அனுப்பிய தரப்பினர்களுக்கு தெரிவிக்கப்படும்.

2023 ஆம் ஆண்டின் போது தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு 2,601 பொது மக்கள் முறைப்பாடுகள் கிடைத்திருந்ததுடன் அந்த முறைப்பாடுகளில் 1,492 முறைபாடுகள் அரசாங்கத்தின் அல்லது அரசாங்க நிறுவனங்களின் நிருவாக ரீதியான விடயங்கள் சம்பந்தமானதுடன் 99 முறைப்பாடுகள் பல்வேறு தரப்பினரின் துயரங்கள் சம்பந்தமானவைகளாகும். மேலும், 989 முறைப்பாடுகள் நிறுவன ரீதியான மோசடிகள் மற்றும் ஊழல்கள் சம்பந்தப்பட்டவைகளாக இருந்ததுடன் 21 முறைப்பாடுகள் பல்வேறு தரப்பினர்களின் தனிப்பட்ட விடயங்கள் சம்பந்தப்பட்டவையாகவும் இருந்தன. அவ்வாறே இம் முறைப்பாடுகளுக்கிடையே 915 முறைப்பாடுகள் அனுப்பியவர்களின் அடையாளத்துடன் அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் 1,686 முறைப்பாடுகள் பெயர் குறிப்பிடப்படாது சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இவற்றில் அதிகளவானவை போதிய அளவில் அல்லது குறித்த அளவான சாட்சிகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இவற்றில் பெருமளவானவை போதிய அல்லது ஓரளவேனும் சான்றுகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. சான்றுகள் எதுவும் இல்லாத போதிலும் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் ஆய்விற்கு உட்படுத்தப்படும். மேலதிக விசாரணை நடவடிக்கைகளுக்காக அனுப்பிவைக்கப்படும் எழுத்து மூல முறைப்பாடுகள் தொடர்பாக துறைரீதியான வகைப்படுத்தல் மேற்கொள்ளப்படுகையில் முக்கியமாக கல்வித் துறைக்காக 450 உம், உள்ளூராட்சித் துறைக்காக 288 உம், சுகாதாரத் துறைக்காக 279 முறைப்பாடுகளும், பிரதேச செயலகங்கள் தொடர்பாக 120 முறைப்பாடுகளும், விவசாய,

சுற்றாடல், போக்குவரத்து, கலாச்சார, பெருந்தெருக்கள், உயர் கல்வி போன்ற துறைகளுக்காக முறையே 187உம், 61 உம், 58 உம், 60 உம், 71 உம் 85 உமாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்ததுடன் அரசாங்கத்தின் பல்வேறு நிறுவனங்களுக்காக மேலும் 285 முறைப்பாடுகள் கணக்காய்வு அலுவலகத்திற்குக் கிடைக்கப்பெற்றிருந்தன.

## தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல்கள் வழங்கல்

2016 இன் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரகாரம் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்காக ஓர் தகவல் உத்தியோகத்தரும் பெயரிடப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர். அத் தகவல் கோரல்கள் தபால் மூலமும் மின்னஞ்சல் மூலமாகவும் தகவல் உத்தியோகத்தருக்குச் சமர்ப்பிக்கப்படும். 2023 ஆம் ஆண்டின் போது தகவல் அதிகாரச்சட்டத்தின் கீழ் 105 தகவலுக்கான கோரல்கள் கிடைக்கப்பெற்றிருந்ததுடன் இவற்றில் 90 இற்கான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. கிடைக்கப்பெற்ற 15 கோரல்கள் அதிகாரச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் நிராகரிக்கப்பட்டிருந்தன. நிராகரிக்கப்பட்ட தகவல் கோரிக்கைகளில் பல கணக்காய்வு ஐயவினாக்களின் பிரதிகள் கோரப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 9 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்விற்கு உரிய தகவல்கள் மற்றும் ஆவணங்களை வழங்க இயலாதமையால் கணக்காய்வு ஐயவினாக்களின் பிரதிகள் வழங்கப்படுவது நிராகரிக்கப்பட்டுள்ளது.

# மனித வள முகாமைத்துவம்

## எமது நிறுவனக் கட்டமைப்பு

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் தலைவர் கணக்காய்வாளர் தலைமை அதிபதியாவதுடன் அலுவலகத்தின் நிதிசார் நடவடிக்கை சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 124(2) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராகவும் செயற்படுகின்றார். தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் நிகழ்கால தாபன கட்டமைப்பு நிதி அமைச்சின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவியணியினருக்கு இணங்கும் வகையில் ஒவ்வொரு மட்டத்திற்கும் உள்ளடக்கப்பட்டுள்ள நிர்ணயிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையைக் கொண்ட 5 பதவிகளை உள்ளடக்கியதாகும்.

முதலாவது மட்டமானது 03 சிரேஷ்ட பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளை உள்ளடக்கியுள்ளது. இரண்டாவது மட்டமானது 15 பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளை உள்ளடக்கியுள்ளதுடன் அவர்களால் அரசாங்க கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்பான கொள்ளை ரீதியான மற்றும் ஒட்டுமொத்த அரசாங்க கணக்காய்வும் மேற்பார்வை செய்யப்படுகின்றது. பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளின் கீழ் 74 பிரிவுகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் அந்த ஒவ்வொரு பிரிவிற்கும் பொறுப்பாக இருக்கின்ற சிரேஷ்ட உதவி கணக்காய்வாளர் தலைமை அதிபதியினர் மூன்றாம் மட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்றனர். அந்த சிரேஷ்ட உதவி கணக்காய்வாளர் தலைமை அதிபதியினரின் மேற்பார்வையின் கீழ் அரசாங்க மற்றும் மாகாண சபைகளின் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பிரிவுத் தலைவர்களுக்கு ஒப்படைக்கப்படும் பிரிவில் உள்ள கணக்காய்வு ‘‘கிளைகளின்’’ தலைமைத்துவம் ‘‘கிளைத்தலைவராக’’ உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அல்லது கணக்காய்வு அத்தியட்சகரால்

நிறைவேற்றப்படுவதுடன் அவருக்கு நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையான கணக்காய்வு நிறுவனங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவர்கள் நான்காம் மட்டத்தை சேர்ந்தவர்களாவர். அதற்கிணங்க உறுதியாக தமது மேற்பார்வைக்கு கொண்டுவரப்படும் கணக்காய்வுக் கிளையை செயற்படுத்த வேண்டிய முறைமையை முகாமைத்துவம் செய்து மேற்பார்வை செய்வது தொடர்பான முழுமையான பொறுப்பு பிரிவுத் தலைவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. கிளைத் தலைவர்களுக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட உதவி கணக்காய்வு அத்தியட்சகர்கள் மற்றும் கணக்காய்வு உத்தியோகத்தர்கள் ஆக்கபூர்வமாகவும், வினைதிறனாகவும், சேவையில் ஈடுபடுத்தப்பட்டு அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அரசாங்க நிறுவனங்களின் கணக்காய்வுகளை அமுற்படுத்துதல் கிளைத்தலைவர்களால் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கிணங்க கிளைத் தலைவர்களுக்கு உதவியளிக்கும் இவ் உத்தியோகத்தர்கள் ஐந்தாம் மட்டத்தை சேர்ந்தவர்களாவார்கள்.

இலங்கை கணக்காய்வு நியமம், நியதிச் சட்ட மற்றும் ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகளுக்கும் நடைமுறைகளுக்கும் இணங்கும் வகையில் பரீட்சிப்பு, அவதானிப்புக்கள், மற்றும் வெளிக்கள கடமைகள் தமது அங்கீகரித்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணங்கும் வகையில் நிறைவேற்றுவதன் மூலம் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அரசாங்க நிறுவனங்களின் கணக்காய்வை மேற்கொண்டு தமது கிளைத் தலைவருக்கு உதவியளித்தல் கணக்காய்வு உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படுகின்றது. மேலே குறிப்பிட்ட மூன்றாம் மட்டத்திற்குரிய 74 பிரிவுகளின் பிரிவுத் தலைவர்களில் ஒன்பது பிரிவுகளின் 24 பிரிவுத் தலைவர்கள் மாவட்ட மட்டத்தில் பிராந்திய கணக்காய்விற்கு பொறுப்பாக செயற்படுவதுடன் அவர்களின் மேற்பார்வை இரண்டு பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளால் நிறைவேற்றப்படுகின்றன.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் ஒட்டுமொத்த நிதி மற்றும் நிருவாக நடவடிக்கைகள் சிரேஷ்ட பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளின் மேற்பார்வையின் கீழ் நிருவாக நடவடிக்கைகள் பணிப்பாளர் (நிருவாகம்) இனால் தாபன கிளையின் மூலமும் நிதி நடவடிக்கைகள் பிரதம கணக்காளரால் கணக்குப் பிரிவின் மூலமும் மேற்கொள்ளப்படுகின்றன.

நிதிப்பிரமாணம் 133 இல் குறிப்பிட்ட குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக பிரதான உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தரின் கீழ் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு இயங்குவதுடன் அவர் நேரடியாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் செயற்பாடு மற்றும் மேற்பார்வையின் கீழ் நடவடிக்கை எடுப்பார்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாட்டின் பிரகாரம், அரசாங்க கணக்காய்வு சேவையை ஸ்தாபிப்பதற்கு தேவையான சேவை பிரமாணக் குறிப்பை அங்கீகரித்துக் கொள்வதற்காக அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் கணக்காய்வுச் செயற்பாட்டினை தடையின்றி செயற்படுத்துவதற்காக அமைச்சரவையால் அரசாங்க கணக்காய்வு சேவைக்காக தேசிய சம்பளங்கள் ஆணைக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட சம்பள அளவுத்திட்டத்தையும், சேவை பெயர்களையும் ஊழியர் எண்ணிக்கையையும் இலங்கை கணக்காய்வு சேவையின் மற்றும் இலங்கை பரீட்சகர் சேவையின் சம்பள அளவுத் திட்டத்திங்களுக்கு சேவைப் பெயருக்கும் ஊழியர் எண்ணிக்கைக்கும் பதிலீடு செய்து சேவைமூப்பின் அடிப்படையில் உத்தியோகத்தர்களைச் சேர்த்துக்கொள்வதற்கும், பதவியுயர்த்துவதற்கும் 2021 செப்தெம்ர் 13 ஆந் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தமையால் அந்த நடவடிக்கைகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின்

ஆலோசனையின் பிரகாரம் நிறைவேற்றப்பட்டிருந்தது. கணக்காய்வுச் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் நீண்ட காலமாகக் காணப்படுகின்ற பதவியுயர்வைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் இந்த இடைக்கால ஒழுங்குவிதிகளின் மூலம் குறித்த அளவிற்காவது தீர்த்துவைக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க 2021 ஒக்டோபர் 01 ஆந் திகதியிலிருந்து அமுலாகும் வகையில் தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் கணக்காய்வை மேற்கொள்வதற்கு உரிய தாபன கட்டமைப்பானது திருத்தத்திற்கு உட்படுத்தப்பட்டு புதிய தாபனக் கட்டமைப்பு கீழே தரப்பட்டுள்ளது

| Senior Deputy Auditors General | Deputy Auditors General | Senior Assistant Auditors General | | | Assistant Auditors General | Superintendents of Audit | Audit Officers |
|---|---|---|---|---|---|---|---|
| | | **Sector** | **Name of the Divisional Head** | **Code** | | | |
| **Central Government Audit & Assurance (CGAA-1) Mr. Mr. G.H.D. Dharmapala** | Defence, Judicial, Law and Order **(DJL)** **Room No. 102** **Mr. S.T.B. Rathnayaka** | Defence | Mr. H.P.D. Gunasekara | **(DEF)** | | | |
| | | Judicial, Law & Order | Mrs. A.G.A. Helmimi | **(JLO)** | | | |
| | Transpotation, Avaiation, Ports and Shipping **(TAP)** **Room No. 214** **Vacant** | Community Transpotation | Mr. R.A.B. Indrajith | **(COT)** | | | |
| | | Port & Shipping | Mrs. M.R.R.K. Mallawa | **(PAS)** | | | |
| | | Aviation | Mrs. N.D.N.C. Kumari | **(AAV)** | | | |
| | Power and Energy **(POE)** **Room No. 202** **Mrs. M.I.P.Hemamali** | Power | Mr. K.A.A. Kulathunga | **(PWR)** | | | |
| | | Energy | Mr. N.H.A.R.K. Gunarathne | **(ENR)** | | | |
| | Foreign Funded Projects, Sports and Youth Affairs **(PSY)** **Room No. 302** **Mr. S.M.N.. Thilakarathna** | Sports and Youth Affairs | Mr. M.P.I.M. Rashmi | **(SYA)** | | | |
| | | Water & Sanitation | Mrs. M.A.S. Pushparani | **(WAS)** | | | |
| | Parliamentary Affairs, Other Independent Institutions, Media and Disaster Management **(PMD)** **Room No. 201** **Mr. K.H.U.D. Sarath Kumara** | Disaster Management | Mrs. W.G.R.N. Weerakkody | **(DMG)** | | | |
| | | Communication and Media | Mrs. G.H.I.Vindiya | **(CAM)** | | | |
| | | Parliamentary Affairs and Independent Commissions | Mr. K.N.M. Kumarasinghe | **(PIC)** | | | |
| | Special Audit Assignments & Public Representations **(SPA)** **Room No. 306** **Mrs. T.G.I. Padmini** | Performance, Environmental & Citizen Participatory Audits | Mrs. K.T.W.Gamage | **(PEC)** | | | |
| | | Special Investigation and Forensic Audits | Mr. B.O.D. Fernando | **(SIF)** | | | |
| | Health, Wellfare and Social Security **(HWS)** **Room No. 402** **Mr. H.M.U.S.A. Wijekoon** | Medical Supplies | Mr. K.K.S. Jayakody | **(MSU)** | | | |
| | | Teaching Hospitals | Mr. W. Ananda | **(THO)** | | | |
| | | Medical Administration | Mr. P. Masakorala | **(MED)** | | | |
| | | Labour and Social Welfare | Mrs. H.M.de Soyza | **(LSW)** | | | |
| | | Quality Assurance | Vacant | **(QUA)** | | | |
| | | Parliament Reporting & Coordination | Miss. W.V.S.P. Rathnaseeli | **(PRC)** | | | |
| | | Legal and Surcharge | Mr.K. M.N. Kumarasinghe | **(LEG)** | | | |
| | | IT Audits | Vacant | **(ITA)** | | | |
| **Central Government Audit & Assurance (CGAA-2) Mrs. Mrs. L.S.I. Jayarathna** | | Taxation & Procurement Audits | Mr. B.W.D. Lasantha | **(TAX)** | | | |
| | | Banking | Mrs. R.M.D.S. Rathnayaka | **(BAN)** | | | |
| | | Treasury & Public Debt | Mr. D.G.A.S. Anulasiri | **(TPD)** | | | |
| | | Public Revenue | Mr. E.M.K.M. Padmalal | **(PUR)** | | | |
| | | Insurance & Finance | Mr. S. Sanjeewa | **(INF)** | | | |
| | Industries, Trade & Commerce, Public Administration and Foreign Affairs **(ITP)** **Mr. R.G. Hettiarachchi** | Industries and Manufacruring | Mrs. U.N. Aluthge | **(IMT)** | | | |
| | | Public Administration & Foreign Afffairs | Mrs. K.R.T. Menike | **(PAF)** | | | |
| | | Trade and Commerce | Mrs. S.M.C. Indika | **(TAC)** | | | |
| | Agriculture, Plantation, Fisharies and Irrigation **(APF)** **Room No. 203** **Mrs. H.N. Ranathunga** | Fisheries & Liverstock | Mrs. S. N. Welikala | **(FLS)** | | | |
| | | Irrigation, Water Resources & Mining | Mrs. M.D.S. Amarathunga | **(IWR)** | | | |
| | | Agriculture & Related Industries | Mr. P.K.M.P. Nonis | **(ARI)** | | | |
| | | Plantation & Land | Mrs. V.D. Seetha | **(PAL)** | | | |
| | Tourism, Investment Promotion, Wild Life, Forest, Culture and Arts **(TWC)** **Room No. 205** **Mrs. B.G.I. Niranja** | Cultural Affairs and Arts | Mrs. R.S. Katugampola | **(CAA)** | | | |
| | | Forest, Wild Life and Environment | Mrs. H.S.S. Perera | **(FWL)** | | | |
| | | Tourism & Investment Promotion | Mrs. M.S. Gunathilaka | **(TIP)** | | | |
| | Education and Vocational Training **(EVT)** **Room No. 317** **Mrs. W.M.P.A. Fonseka** | Education | Mrs. I.D.I. Priyadarshani | **(EDU)** | | | |
| | | Vocational Training | Mrs. N.N.K. Divakara | **(VOT)** | | | |
| | | Higher Education | Mrs. W.V.A.S. Pushpakumari | **(HED)** | | | |
| | Road Construction, Housing and Urban Development **(RCH)** **Room No. 505** **Mr. J. Sunil Shantha** | Road & Highways | Mr. E.A.D.P.P. Pushpakumara | **(RAH)** | | | |
| | | Construction & Engineering | Mrs. H.A.D. Chandani | **(CAE)** | | | |
| | | Housing & Urban Development | Mr. E.K.K.S. Edirisinghe | **(HUD)** | | | |
| **Zonal Audit & Assurance (ZOAA) Mrs. W.G.N. Menike** | Local Government Authorities and Provincial Councils **(LPS)** **Room No. 315** **Mr. M. Somathilaka** | Local Authorities of Central Province | Mr. H.A. Ananda | **(CPLG)** | | | |
| | | Local Authorities of Western Province | Mrs. M.U.M.N. Perera | **(WPLG)** | | | |
| | | Local Authorities of Sabaragamuwa Province | Mr. M.G. Madarasinghe | **(SGLG)** | | | |
| | | Local Authorities of North Central Province | Mrs. K.M.L. Ariyarathne | **(NCLG)** | | | |
| | | Local Authorities of Northern Province | Mr. B. A. Jeros | **(NPLG)** | | | |
| | | Local Authorities of Southern Province | Mrs. U.P.P. Perera | **(SPLG)** | | | |
| | | Local Authorities of Estern Province | Mr. P. Patkunan | **(EPLG)** | | | |
| | | Local Authorities of North Western Province | Mr. P.M.R. Pathiraja | **(NWLG)** | | | |
| | | Local Authorities of Uva Province | Mr. H.M.W. Pathmasiri | **(UPLG)** | | | |
| | | Institutions of the Central Province | Mr. S.P. Weerasinghe | **(CPPC)** | | | |
| | | Institutions of the Western Province | Mrs. S.A.D.C. priyadarshani (Act.) | **(WPPC)** | | | |
| | | Institutions of the Sabaragamuwa Province | Mrs. S. Rathnaweera | **(SGPC)** | | | |
| | | Institutions of the North Central Province | Mrs. J.A.S. Anesteen | **(NCPC)** | | | |
| | | Institutions of the Northern Province | Mr. V. Maniwadanan | **(NPPC)** | | | |
| | | Institutions of the Southern Province | Mr. K.W.S.A.K. Kariyawasam | **(SPPC)** | | | |
| | | Institutions of the Estern Province | Mr. K. Pratheepan | **(EPPC)** | | | |
| | | Institutions of the North Western Province | Mrs. M.A.S.R.S. Gunasekara | **(NWPC)** | | | |
| | | Institutions of the Uva Province | Mr. P. Liyanage | **(UPPC)** | | | |
| | Utilization of Central Government Allocation in Provincial Level **(CGW)** **Room No. 206** **Mr. M.S. Nayanakumara** | Central Govt. Allocation and institutions in Central Province | Ms. M.K.D.N. Mayakaduwa | **(CPCG)** | | | |
| | | Central Govt. Allocation and institutions in Western Province | Mrs. S.A.D.C. priyadarshani | **(WPCG)** | | | |
| | | Central Govt. Allocation and institutions in Sabaragamuwa Province | Mr. M.G. Madarasingha (Act.) | **(SGCG)** | | | |
| | | Central Govt. Allocation and institutions in North Central Province | Mrs. I.D.K. Pallegama | **(NCCG)** | | | |
| | | Central Govt. Allocation and institutions in Northern Province | Mr. M.H.M. Arfath | **(NPCG)** | | | |
| | | Central Govt. Allocation and institutions in Southern Province | Mr. K.M. Jayasinghe | **(SPCG)** | | | |
| | | Central Govt. Allocation and institutions in Estern Province | Mr. W.C.V. Kuruppu | **(EPCG)** | | | |
| | | Central Govt. Allocation and institutions in North Western Province | Mrs. R.P.T.D. Rajapaksha | **(NWCG)** | | | |
| | | Central Govt. Allocation and institutions in Uva Province | Mr. B.G Asela Indunil | **(UPCG)** | | | |
| | Administration **(ADM)** | | | | | | |
| | | Training, Research and Development | Mr. L.K.I. Samantha | **(TRD)** | | | |
| | | Secretariat of the Auditor General & International Relations | | **(AGS)** | | | |

## அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி

**பதவியணியினர் நிலைமை 2023 சனவரி 01 இல் உள்ளவாறும் 2023 யூன் 30 இல் உள்ளவாறும் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி தொடர்பான விபரம்**

| | பதவி | 2023.01.01 இல் உள்ளவாறு பதவியணியினர் எண்ணிக்கை | | | 2024.06.30 இல் உள்ளவாறு பதவியணியினர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளபடியான | வெற்றிடங்கள் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளபடியான | வெற்றிடங்கள் |
| **1.** | கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 1 | 1 | 0 | 1 | 1 | 0 |
| **2.** | சிரேஷ்ட பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 3 | 0 | 3 | 3 | 2 | 1 |
| **3.** | பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 15 | 14 | 1 | 15 | 13 | 2 |
| **4.** | பணிப்பாளர் (நிர்வாகம்) | 1 | 1 | 0 | 1 | 1 | 0 |
| **5.** | பிரதான கணக்காளர் | 1 | 1 | 0 | 1 | 1 | 0 |
| **6.** | பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் | 1 | 1 | 0 | 1 | 1 | 0 |
| **7.** | சிரேஷ்ட உதவி கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 72 | 49 | 23 | 72 | 69 | 3 |
| **8.** | உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 455 | 15 | 324 | 455 | 18 | 259 |
| **9.** | கணக்காய்வு அத்தியட்சகர் | | 116 | | | 178 | |
| **10.** | உதவி பணிப்பாளர் (நிர்வாகம்) | 1 | 1 | 0 | 1 | 1 | 0 |
| **11.** | கணக்காளர் | 1 | 1 | 0 | 1 | 1 | 0 |
| **12.** | உதவிப் பணிப்பாளர் (தகவல் தொழிநுட்பம்) | 1 | 0 | 1 | 1 | 0 | 1 |
| **13.** | சட்ட உத்தியோகத்தர் | 1 | 0 | 1 | 1 | 1 | 0 |
| **14.** | நிர்வாக உத்தியோகத்தர் {கா.சே.உ.(மேலதிகம்} | 3 | 1 | 2 | 3 | 3 | 0 |
| **15.** | தொழிநுட்ப உத்தியோகத்தர் விசேட | 1 | 0 | 1 | 1 | 0 | 1 |
| **16.** | உதவி கணக்காய்வு அத்தியட்சகர் | 360 | 332 | 28 | 360 | 340 | 20 |
| **17.** | கணக்காய்வு உத்தியோகத்தர் | 1090 | 776 | 314 | 1090 | 568 | 522 |
| **18.** | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 3 | 1 | 2 | 3 | 1 | 2 |
| **19.** | மொழிபெயர்ப்பாளர் | 10 | 8 | 2 | 10 | 7 | 3 |
| **20.** | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 55 | 56 | -1 | 73 | 67 | 6 |
| **21.** | நூலகர் | 1 | 1 | 0 | 1 | 1 | 0 |
| **22.** | தொழில்நுட்ப உத்தியோகத்தர் -I | 1 | 0 | 1 | 1 | 0 | 1 |
| **23.** | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் | 6 | 1 | 5 | 6 | 2 | 4 |
| **24.** | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் | 121 | 113 | 8 | 121 | 110 | 11 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 25. | அறிக்கை தயாரிப்பாளர்* | 41 | 41 | ** | 41 | 37 | ** |
| 26. | ஓப்செட் லிதோ அச்சு இயந்திர இயக்குனர் | 1 | 0 | 1 | 1 | 0 | 1 |
| 27. | சாரதி | 48 | 46 | 2 | 48 | 47 | 1 |
| 28. | சுற்றுலா விடுதி பொறுப்பாளர | 13 | 7 | 6 | 13 | 6 | 7 |
| 29. | மின்சார தொழில்நுட்பவியளாளர் | 1 | 1 | 0 | 1 | 1 | 0 |
| 30. | நீர் குழாய் தொழில்நுட்பவியளாளர் | 1 | 1 | 0 | 1 | 1 | 0 |
| 31. | அலுவலக செயற்பாட்டு உதவியாளர் | 148 | 134 | 14 | 148 | 146 | 2 |
| 32. | திணைக்கள வேலையாள் ** | 2 | 1 | 1 | 2 | 1 | ** |
| | . | 2459 | 1720 | 740 | 2477 | 1625 | 847 |

| | |
|---|---|
| * | இப் பதவி தற்போதுள்ள திணைக்களம் சார் உத்தியோகத்தர்களுக்கு தனிப்பட்ட ரீதியாக பேணப்பட்டதை அடுத்து செல்லுபடியற்றதாகிவிடும். |
| ** | இப் பதவி தற்போதுள்ள திணைக்களம் சார் உத்தியோகத்தர்களுக்கு தனிப்பட்ட ரீதியாக பேணப்பட்டதை அடுத்து செல்லுபடியற்றதாகிவிடும். |

**2023 சனவரி 01 ஆம் திகதி முதல் 2024 யூன் 30 வரையான காலப்பகுதியின் போது நிலவிய வெற்றிடத்தை நிரப்புவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான விபரம்**

21/1274/301/017 ஆம் இலக்க மற்றும் 2021 செப்தெம்பர் 13 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால், இலங்கை கணக்காய்வுப் பரீட்சகர் சேவையின் உதவிக் கணக்காய்வு அத்தியட்சகர் உத்தியோகத்தர்களின் மூப்பு நிலை மற்றும் திறன் நிலையில் 125 உத்தியோகத்தர்களும் தொழிற்துறை தகைமை அடிப்படையில் 01 உத்தியோகத்தருமாக இலங்கை கணக்காய்வு சேவையின் II ஆம் வகுப்பு II ஆம் தரத்தின் கணக்காய்வு அத்தியட்சகர் பதவிக்கு 126 பேர் 2023.03.27 ஆம் திகதி முதல் பதவி உயர் பெற்றிருந்தனர். பின்னர் எம்மால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளைக் கருத்திற்கொண்டு அந் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய போதிலும் நியமனம் வழங்கப்பட்ட திகதி வரையில் ஓய்வுபெற்றிருந்த மேலும் 20 உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் ஓய்வடைந்த நாளுக்கு முன்னைய நாளில் இருந்து அமுலாகும் வகையில் மூப்பு நிலை மற்றும் திறன் நிலையில் இலங்கை கணக்காய்வு சேவையின II ஆம் வகுப்பு II ஆம் தரத்தின கணக்காய்வு அத்தியட்சகர் பதவி வழங்கப்பட்டது. இதன் படி 146 உத்தியோகத்தர்கள் கணக்காய்வு அத்தியட்சகர்களாக பதவி உயர்வு பெற்றிருந்தனர்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 21 ஆம் அரசியலமைப்புத் திருத்தத்திற்கு அமைவாக மீள கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு உருவாக்கப்பட்டதுடன் வலுப்பெற்றது. தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் இருந்த இலங்கை கணக்காய்வு பரீட்சகர் சேவை மற்றும் இலங்கை கணக்காய்வு சேவை ஒருங்கிணைத்து இலங்கை அரச கணக்காய்வு சேவை உருவாக்கப்படுவதற்காக தயாரிக்கப்பட்ட புதிய சேவைப் பிரமாணக் குறிப்பு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டதை அடுத்து இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் சேவைப் பிரமாணக் கோவையாக இல: 2366.`.31 மற்றும் 2024.01.12 ஆம் திகதிய அதிவிசேட

வர்த்தமானி அறிவிப்பின் மூலம் வெளியிடப்பட்டது. இதன் பிரகாரம், 2024.01.16 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் இலங்கை அரச கணக்காய்வு சேவை ஸ்தாபிக்கப்பட்டது.

ஸ்ரீ லங்கா அரச கணக்காய்வு சேவையின் சேவைப் பிரமாணக் கோவையின் இடைக்கால ஏற்பாடுகளின் பிரகாரம் முன்னர் காணப்பட்ட பதவிகளிற்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் விசேட தரத்தில் சிரேஷ்ட பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவியில் நிலவிய 03 வெற்றிடங்கள் 2024.03.05 ஆம் திகதி நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் விசேட தரத்தில் பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவியில் நிலவிய 07 வெற்றிடங்கள் (2024.04.01 ஆம் திகதி 6 உம் 2024.05.15 ஆம் திகதி 01 உமாக) நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் II ஆம் வகுப்பின் II ஆம் தரத்தில் இருந்து II ஆம் வகுப்பின் I ஆம் தரத்திற்கு 39 உத்தியோகத்தர்கள் (உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி) பதவிக்கு 2024.03.20 ஆம் திகதி பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

- இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் I ஆம் வகுப்பிற்கு 36 உத்தியோகத்தர்கள் (சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி) பதவிக்கு 2024.05.31 ஆம் திகதி பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்..

- இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்தில் இருந்து 07 உத்தியோகத்தர்கள் 2024.01.17 ஆம் திகதி I ஆம் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

- இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் III ஆம் வகுப்பின் I ஆம் தரத்தின் 156 உத்தியோகத்தர்கள் 2024.05.16 ஆம் திகதி முதல் இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் III ஆம் வகுப்பின் மேலதிக வகுப்பிற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இதன் படி மேற்குறித்தவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டதன் மூலம் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் வெற்றிடங்களில் பெருமளவை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறே 21/1274/301/017 ஆம் இலக்க மற்றும் 2021 செப்தெம்பர் 13 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி பிரதம மந்திரியின் செயலாளர் உட்பட அரச சேவைகளின் ஆட்சேர்ப்பு மீளாய்வுக் குழுவின், அரசாங்க சேவைகள் ஆணைக்குழு மற்றும் கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டு அதற்கிணங்க இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் கணக்காய்வு

உத்தியோகத்தர்கள் 469 பேர் ஆட்சேர்க்கப்படுவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை 2024 யூன் மற்றும் யூலை மாதங்களில் நடைபெற்றது.

அந்த அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் II ஆம் வகுப்பின் II ஆம் தரத்திற்கு 165 கணக்காய்வு அத்தியட்சகர்கள் ஆட்சேர்க்கப்படுவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை நடாத்தப்படுவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தால் 2024 ஆகஸ்ட் மாதம் பரீட்சைத் திகதி அட்டவணையில் அப் பரீட்சை நடாத்தப்படுவதற்காக உள்ளடக்கப்பட்டுள்ளது.

**பதவியணியினர் பயிற்சி**

அரசாங்க வளங்களை சிக்கனமாகவும் ஆக்கபூர்வமாகவும் விளைதிறனாகவும் பயன்படுத்துவதை வலுப்படுத்துவதற்குத் தேவையான பங்களிப்பையும் வழிகாட்டல்களையும் வழங்குவதன் மூலம் இலங்கை மக்களுக்கு சிறந்த, நம்பகரமான அரச சேவையை வழங்குவதை உறுதிப்படுத்தும் வகையில் தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் அரசாங்க நிறுவனங்களின் நிதி மற்றும் செயலாற்றல் கடமைகள் நிறைவேற்றப்படுவது குறித்து கணக்களிப்புப் பொறுப்பு சரியான முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளனவா என்பது பரீட்சிக்கப்பட்டு பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்படும்.

இந் நியதிச்சட்ட ரீதியான கடமைகளை செயற்திறனானவும் பயனுறுதியுடனும் நிறைவேற்றுவதற்காக சே 1318 கணக்காய்வு உத்தியோகத்தர்களும் துணைச் சேவைகளிற்கு உரிய 356 உத்தியோகத்தர்களும் அடங்கிய பதவியணியினரின் பங்களிப்பு தற்போது தேசிய கணக்காய்வு அலுவகத்தால் பெறப்பட்டுள்ளது.

அந்த நியதிச்சட்ட ரீதியான கடமைகளை ஆக்கபூர்வமாகவும், விளைதிறனாகவும் நிறைவேற்றும் வகையில் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பதவியணியினர் பின்வரும் துறைகளினூடாக நிகழ்கால மற்றும் எதிர்காலத் தேவைப்பாட்டிற்கு நிகரான வகையில் அறிவாலும் திறமையாலும் வலுப்படுத்தும் தேவைப்பாடு இனங்காணப்பட்டுள்ளது.

- அறிவினையும் தொழில்நுட்ப திறனையும் அபிவிருத்தி செய்தல்
- விளைதிறனையும் செயலாற்றலினையும் அதிகரித்தல்
- முகாமைத்துவ ஆற்றலினை முன்னேற்றுதல்
- கடமையை நிறைவேற்றுவதற்கு தேவைப்படுகின்ற அறிவு, கருவிகள் மற்றும் தொழில்நுட்ப ஞானத்தை வழங்குதல்
- நிதிசார்ந்த மற்றும் சேவை சார்ந்த சட்டங்கள் சம்பந்தமான அறிவை வழங்குதல்
- குழு உணர்வை அபிவிருத்தி செய்தல்
- நன்னடத்தையை முன்னேற்றுதல்

அந்த குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் எதிர்பார்ப்புடன் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் அனைத்து உத்தியோகத்தராலும் தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்திக்காக (Continuous Professional Development - CPD) ஆண்டொன்றிற்கு 100 மணித்தியாலத்திற்கு குறையாத கொள்கை ரீதியான, செயன்முறை ரீதியான உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பயிற்சி கற்கை நெறிகளை பூர்த்தி செய்யும் தேவைப்பாடு தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பயிற்சித் தேவைப்பாட்டு ஆய்வின் (Training Need Assessment) பிரகாரம் உத்தியோகத்தர்களின் தொழில்சார் அபிவிருத்திக்காக வழங்கப்பட வேண்டியவை என இனங்காணப்பட்ட பின்வரும் துறைகளை உள்ளடக்கும் வகையில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்கும் செயற்பணியை தேசிய கணக்காய்வு அலுவலகம் மேற்கொண்டு வருகின்றது.

- நிதிக் கணக்காய்வு
- புலனாய்வுக் கணக்காய்வு
- செயலாற்றல் கணக்காய்வு
- சுற்றாடல் கணக்காய்வு
- தடயவியல் கணக்காய்வு
- பெறுகைகள் மற்றும் நிர்மாணங்கள் கணக்காய்வு
- செயற்திட்ட கணக்காய்வு
- இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் கணக்காய்வு நியமங்கள்
- வரிவிதிப்பு
- ஒதுக்கீட்டுக் கணக்குகள் கணக்காய்வு
- உள்ளூராட்சி மன்றங்களின் கணக்குகளும் கணக்காய்வும்
- மிகைக்கட்டண செயற்பாடுகள்
- கணக்காய்வு அறிக்கையிடல்
- கணனி இயலுமையை விருத்தி செய்தல்
- மொழித்திறன் இயலுமையை விருத்தி செய்தல்
-

அதற்கிணங்க உத்தியோகத்தர்களுக்கு அவர்களது கடமைகளை தொழில்சார் மட்டத்தில் மேற்கொள்வதற்கு தேவையான திறமைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பயிற்சி பிரிவினால் ஒழுங்குபடுத்தி அதற்காக அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கி அவர்களை ஊக்குவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். அதன் போது வளப்பகிர்வாளர்களாக தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கும் தகமையுள்ள திறமையான உத்தியோகத்தர்களது உதவியை போன்று தேவைக்கேற்ற வகையில் வெளி விரிவுரையாளர்களின் உதவியியையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான விரிவுரை, கலந்துரையாடல், செயன்முறைப் பயிற்சி மற்றும் வெளிக்கள சுற்றுப் பயணம் போன்றவற்றைக் கொண்டு உரிய பயிற்சித் தேவைப்பாடுகள் அடைந்து கொள்ளப்படுகின்றன.

2023 ஆம் ஆண்டின் போது ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியுடன் உலக வங்கியால் வழங்கப்படும் உதவியின் கீழ் 2024 ஆம் ஆண்டின் போது பெரும்பாலான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிக்கான சந்தர்ப்பங்களை ஏற்பாடு செய்யக் கூடியதாக இருந்தது.

### உள்நாட்டுப் பயிற்சி வழங்குதல்

மேற்கூறிய குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் வகையில் 2023 ஆம் ஆண்டில் தேசிய கணக்காய்வு அலுவலகப் பயிற்சிப் பிரிவால் கணக்காய்வு உத்தியோகத்தர்களுக்காக மேற்குறித்த துறைகள் உள்ளடங்கும் வகையில் 5 தலைப்புகளின் கீழ் 27 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. கணக்காய்வு அல்லாத பதவியணி உத்தியோகத்தர்களுக்காகவும் பயிற்சி வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

### வெளிநாட்டுப் பயிற்சிச் சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக் கொடுத்தல்

2023 ஆம் ஆண்டின் போது செலவினக் கட்டுப்பாடு தொடர்பாக நிலவும் அரச கொள்கையால் 4 உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பல்வேறு செயலமர்வுகளில் கலந்து கொள்வதற்கு இயலுமாக இருந்தது.

2023 ஆம் ஆண்டின் போது தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் உத்தியோகத்தர்களுக்காக மேலே குறிப்பிட்ட துறைகளை உள்ளடக்கும் வகையில் நடாத்தப்பட்ட உள்நாட்டு மற்றும்

வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் தொடர்பான விபரம் பின்வரும் அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

| | நிகழ்ச்சித்திட்ட விபரம் | நிகழ்ச்சித்திட்ட எண்ணிக்கை | பங்கேற்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | பயிற்சி மணித்தியாலம் |
|---|---|---|---|---|
| | **உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்** | | | |
| **1** | நிதிக் கணக்காய்வு பயிற்சி | 23 | 1220 | 26789 |
| **2** | பதவி உயர்வு பெற்ற கணக்காய்வு அத்தியட்சர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 1 | 115 | 4168 |
| **3** | வெளிநாட்டு செயற்திட்ட கணக்காய்வுப் பயிற்சி | 1 | 88 | 638 |
| **4** | நிர்மாணிக் கணக்காய்வுப் பயிற்சி | 1 | 100 | 3625 |
| **5** | பெறுகைக் கணக்காய்வுப் பயிற்சி | 1 | 275 | 1993 |
| | கூட்டுத்தொகை | **27** | **1798** | **7,409** |
| | **வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்** | | | |
| **1** | (Regional Workshop on Enhancing the collaboration between supreme Audit Institutions & Anti-corruption Bodies – Thailand) | 1 | 1 | **22** |
| **2** | - JICA – [g;ghd; (JIKA Knowledge co creation Programme -Japan) | 1 | 1 | **181** |
| **3** | (Asian Development Bank-2023 Asian Evaluation Week – Thailand) | 1 | 1 | **29** |
| **4** | ADB PEFA ආසියානු ප්‍රමුඛ පුහුණුව - පිලිපීනය (ADB PEFA Flagship Training in Asia: - Philipeine) Request for country Nomination | 1 | 1 | **22** |

## வெளி நிறுவனங்களுக்கு வளவாளர்களை வழங்குதல்

தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள 6 உத்தியோகத்தர்கள் 2023 ஆம் ஆண்டின் போது தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் கணக்காய்விற்கு இணங்கலான துறைகள் தொடர்பாக அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள ஏனைய உத்தியோகத்தர்களின் அறிவையும் திறனையும் வளர்ப்பதற்காக தமது வளப்பகிர்வை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## பயிற்சிச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்ளல்

தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் தொழிற்துறைத் திறனை விருத்தி செய்வதற்காக இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தில் பதிவு செய்துகொண்டுள்ள மாணவ உத்தியோகத்தர்களுக்காக தேவையான தொழிற்துறைப் பயிற்சித் தேவைப்பாட்டை ஏற்படுத்திக் கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## தகைமைபெற்ற கணக்காய்வாளர்களை சேவையில் ஈடுபடுத்திக்கொள்ளல்

கணக்காய்வுப் பதவியணியில் நிலவும் வெற்றிடங்கள் காரணமாக ஏற்படும் வள இடைவெளியை ஈடுசெய்து கொள்வதற்காகவும் அரச கம்பனிகள், அரச வங்கிக் கணக்காய்வு போன்ற விசேட சந்தர்ப்பங்களின் போன்று தேவையான விசேட சேவைகளுக்காக தகைமை பெற்ற கணக்காய்வாளர்களைச் சேவையில் ஈடுபடுத்திக் கொள்வது அவசியமாகும். இதற்காக இலங்கை சனநாயகக சோசலிசக் குடியரசின் 154(4)(அ) அரசியலமைப்பின் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

இதன் படி, சேவையில் ஈடுபடுத்தப்படும் கணக்காய்வுக் கம்பனிகளுக்கு அவர்கள் வழங்கும் கணக்காய்வுச் சேவைக்காக 2023 ஆம் 2022 ஆம் ஆண்டுகளிற்காக முறையே ரூபா 68.12 மில்லியனும் ரூபா 31.2 மில்லியனும் செலுத்தப்பட்டிருந்தது. தகைமைபெற்ற கணக்காய்வாளர்களிடமிருந்து சேவையைப் பெற்றுக்கொள்கையில் அவர்களால் முன்னர் வழங்கப்பட்ட சேவைத் தரம், கம்பனியில் உள்ள பங்குதாரர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களுடன் சேவையில் ஈடுபட்டுள்ள கணக்காய்வுப் பயிலுனர்களின் எண்ணிக்கை முதலிய காரணிகளைக் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக கணக்காய்வுக் கம்பனிக்கு உள்ள சர்வதேச தொடர்பாடல்கள் மற்றும் அவர்கள் வழங்கும் தொழிற்துறைச் சேவைகளின் சுயாதீனத் தன்மை போன்ற விடயங்கள் அவர்களைத் தேர்ந்தெடுக்கும் நிர்ணயங்களுக்கு உள்ளடக்கப்பட்டிருந்தன. இதன் படி, கணக்காய்வாளர்களைத் தேர்ந்தெடுக்கும் பெறுகை முறைமைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பொதுவாக உரு கணக்காய்வுக் கம்பனிக்கு ஆகக் கூடுதலாக 05 வருட காலத்திற்காக தொடர்ந்து ஒவ்வொரு செயற்பணிகளும் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

பத்தொன்பதாவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் நோக்கெல்லைக்கு உள்ளடக்கப்பட்ட 50 சதவீதமான அல்லது இதற்குக் கூடுதலான அரச உரிமையுள்ள 125 கம்பனிகளில் 15 கம்பனிகள் கணக்காய்வு செய்யப்படுவதற்காக மாத்திரம் பிரசித்தி பெற்ற தொழிற்துறையில் ஈடுபட்டுள்ள 02 கணக்காய்வு கம்பனிகள் எனக்கு உதவி வழங்குகின்றன. இதற்கு மேலதிகமாக இலங்கையின் 27 விளையாட்டுக் கழகங்கள் கணக்காய்வு செய்யப்படுவதற்காகவும் தகைமை பெற்ற 13 கணக்காய்வாளர்களது உதவி பெறப்பட்டுள்ளது.

அரச வங்கிக் கணக்காய்விற்காக தேவையான தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக்கொள்வதற்காக பிரசித்திபெற்ற தொழிற்துறையில் ஈடுபட்டுள்ள பட்டயக் கணக்காய்வாளர்களின் உதவி பெறப்பட்டுள்ளது.

## இலங்கை அரச நிதி முகாமைத்துவ திறன் விருத்திச் செயற்திட்டம்

உலக வங்கியால் ஐரோப்பிய ஒன்றிணைப்புடன் செயற்படும் வெளிநாட்டு உதவிச் செயற்திட்டம் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு பேருதவியாகும். ஆதி உயர் கணக்காய்வு நிறுவனங்களின் செயற்திறனை மதிப்பீடு செய்வதற்காக நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டின் படி தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் விருத்தி

செய்யப்பட வேண்டிய துறைகள் சில தொடர்பாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இதற்கு இணையாக கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் கீழான நியதிச் சட்டச் செயற்பாடுகளை மேலும் செயற்திறனான முறையில் மேற்கொள்வதற்காக தேவையான திறன் விருத்தி இச் செயற்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதன் படி, தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு அரச பிரிவின் நிறுவனங்களுக்கு உரித்தான தரத்தில் கூடிய கணக்காய்வு அறிக்கை குறித்த காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு இயலுமாக இருந்தது. தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் தற்போதைய திறனை விருத்தி செய்யக் கூடியதாக இருப்பதுடன் சர்வதேச தரத்திலும் சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ற வகையில் மேம்படுத்திக் கொள்வதற்கான சந்தர்ப்பமும் கிடைக்கப்பெறும். இச் செயற்திட்டத்தின் மூலம் இறுதியாக அரச நிறுவனங்கள் தொடர்பான செயற்பாடுகளின் பொறுப்பும் வெளிப்படைத் தன்மையையும் விருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

கைச்சாத்திடப்பட்ட உதவி உடன்படிக்கையின் படி, 3.5 மில்லியன் அ.டொ. கள் கிடைக்கப்பெற உள்ளதுடன் செயற்திட்ட நடவடிக்கைகள் 2026 ஆம் ஆண்டின் நவம்பர் 30 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட உள்ளது. செயற்திட்டத்திற்காகத் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்தின் படி, ரூபா 1,050 மில்லியன் மதிப்பிடப்பட்ட செலவினம் செயற்திட்டக் காலப்பகுதியின் போது ஏற்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. செயற்திட்டத்தால் இது வரையிலும் 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள விசேட கணக்காய்வுத் துறைகளுக்கு உரித்தான ஆலோசகர்களை ஆட்சேர்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பெறுகை, காணிக் கையேற்பு, செயற்திட்ட ஆரம்பம் மற்றும் செயற்படுத்தல் தொடர்பான பயிற்சி நிகழ்வுகள் மேல் மாகாணம், தெற்கு மற்றும் வட மேல் மாகாணங்களில் இது வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன் எஞ்சிய மாகாணங்களில் நடைபெற்று வருகின்றன. இலங்கை கணக்காய்வு நியமங்கள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் சில நடாத்தப்பட்டுள்ளன. தற்போது நிலவும் 40 சதவீத வெற்றிட நிலை காரணமாக செயற்திட்ட நடவடிக்கைகளின் இயக்கம் மிகவும் சவாலாகக் காணப்படுவதுடன் 2024 திசெம்பர் இறுதியளவில் பதவி உயர்வுகளும் ஆட்சேர்ப்புகளும் மேற்கொள்ளப்பட்டதை அடுத்து இந் நிலை தவிர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

| | உள்ளவாறான 2023 ரூபா | உள்ளவாறான 2022 ரூபா |
|---|---|---|
| **நிதியல்லாத சொத்துக்கள்** | | |
| **ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்** | 1,499,559,208 | 1,481,951,627 |
| | | |
| **நிதி சொத்துக்கள்** | | |
| **முற்பணக் கணக்குகள்** | 149,680,375 | 194,108,547 |
| **காசு மற்றும் காசுக்குச் சமனானவை** | - | - |
| | | |
| **மொத்த சொத்துக்கள்** | **1,649,239,583** | **1,676,060,174** |
| | | |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | |
| **திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்** | 148,755,223 | (67,047,400) |
| **ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்** | 1,499,559,208 | 1,481,951,627 |
| **வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்** | - | |
| | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | |
| **வைப்புக் கணக்குகள்** | 925,152 | 261,155,947 |
| **கட்டுநிதி மீதி** | - | - |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **1,649,239,583** | **1,676,060,174** |

இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

ஒப்பம்./டபிள்யூ. பீ. சீ. விக்ரமரத்ன.
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

2024 பெப்ரவரி ௨௮ ஆந் திகதி

K. Nilanthi Fernando
Chief Accountant
National Audit Office
306/72, Polduwa Road
Battaramulla

கே.நிலந்தி பிரனாந்து

பிரதான கணக்காளர்

2024 பெப்ரவரி ௨௮ ஆந் திகதி

**அறிக்கையிடலின் அடிப்படை**

1) **அறிக்கையிடல் காலப்பகுதி**

இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2023 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

2) **கணக்கீட்டிற்கான அடிப்படை**

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

3) **வருமானத்தை அடையாளங்காணுதல்**

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

4) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு**

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

5) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்**

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

6) **<u>காசு மற்றும் காசுக்கு சமமானவை</u>**

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2023 டிசம்பர் 31 இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

* ஏதேனும் அறிக்கையிடல் நிறுவனத்திற்கு விசேடமான கொடுக்கல் வாங்கங்கள் உள்ள சந்தர்ப்பங்களில் அப்படிவங்களில் தேவையான திருத்தங்களை மேற்கொள்ளலாம். அவ்வாறே ”அறிக்கையிடல் அடிப்படை” இன் கீழ் அவ்விசேட கொடுக்கல் வாங்கல்களுக்காக தேவையான வெளிப்படுத்த உள்ளடக்கப்பட வேண்டும்

* தமது அறிக்கையிடல் நிறுவனத்திற்குரிய கணக்கீட்டுக் கொள்கைகள் மாத்திரம் .அறிக்கையிடலின் கீழ் வெளிப்படுத்தப்பட வேண்டும்

**2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

| பாதீடு 2023 ரூபா | திருத்தப்பட்ட பாதீட்டு நிதிஏற்பாடு | உள்ளபடியான 2023 ரூபா | உள்ளபடியான 2022 ரூபா |
|---|---|---|---|
| - | **வருமானப் பெறுகைகள்** | 415,611,400 | 489,581,029 |
| - | வருமான வரி | - | - |
| - | உள்ளுர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | - | - |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | - | - |
| 300,000,000 | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 415,611,400 | 489,581,029 |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | **415,611,400** | **489,581,029** |
| - | **வருமானமற்ற பெறுகைகள்** | - | - |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | 1,769,796,000 | 1,532,936,000 |
| - | வைப்புகள் | 172,584,544 | 190,875,670 |
| - | முற்பணக் கணக்குகள் | 83,389,954 | 80,667,273 |
| | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | 53,828,162 | 5,509,635 |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | **2,079,598,660** | **1,809,988,578** |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)** | **2,495,210,060** | **2,299,569,607** |
| | **திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)** | 50,251,023 | 103,715,921 |
| | **தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)** | **2,444,959,037** | **2,195,853,686** |
| | **கழி : செலவினம்** | | |
| | **மீண்டுவரும் செலவினம்** | | |
| 2,038,510,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 1,795,785,797 | 1,740,721,144 |
| 452,400,000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 414,843,197 | 319,461,981 |
| 16,090,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 14,186,831 | 14,499,269 |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | - | - |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | - | - |
| 2,507,000,000 | மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ) | **2,224,815,825** | **2,074,682,394** |
| | **மூலதனம் செலவினம்** | | |
| 16,000,000 | மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | 10,418,737 | 6,724,786 |
| 28,800,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 20,669,581 | 6,730,671 |
| - | மூலதன மாற்றல்கள் | - | - |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | - | - |
| 3,000,000 | திறன் விருத்தி | 2,900,130 | 1,602,007 |
| 5,000,000 | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 1,087,688 | - |
| 52,800,000 | மொத்த மூலதனம் செலவினம் (எ) | **35,076,136** | **15,057,464** |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | 432,815,339 | 104,543,186 |
| | **முற்பணக் கொடுப்பனவுகள்** | 38,961,782 | 50,533,345 |
| | **ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்** | 53,828,162 | 5,509,635 |
| | மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ) | **525,605,283** | **160,586,166** |
| 2,559,800,000 | மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ) | **2,785,497,244** | **2,250,326,024** |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)** | (340,538,207) | (54,472,338) |
| - | **பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி** | (340,538,207) | (54,472,338) |
| | **டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி** | | |

# 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

| | உள்ளவாறான | |
|---|---|---|
| | **2023** ரூபா | **2022** திருத்தப்பட்ட ரூபா |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் | - | - |
| மொத்த வரிப் பெறுகைகள் | 415,611,400 | 489,581,029 |
| கட்டணங்கள், மிகை அறவீடு , தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | - | - |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 331,911,553 | 78,011,355 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 1,769,796,000 | 1,532,936,000 |
| முற்பணங்களை அறவிடல் | 83,799,160 | 81,525,178 |
| வைப்புக்களின் பெறுகை | 172,584,544 | 190,875,670 |
| மொத்தபிரதான பேரேட்டுச் பெறுவனவு | 53,828,162 | 5,509,635 |
| செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ) | **2,827,530,819** | **2,378,438,867** |
| கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள் | 2,202,032,094 | 2,056,322,607 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 14,186,831 | 14,499,269 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 5,645,156 | 28,578,887 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 50,251,023 | 103,715,921 |
| முற்பணக் கொடுப்பனவு | 35,950,225 | 50,211,898 |
| வைப்புக் கொடுப்பனவு | 432,815,339 | 104,543,186 |
| ஏனைய பிரதான பேரேட்டுக் கொடுப்பனவு | 53,828,162 | 5,509,635 |
| தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ) | **2,794,708,830** | **2,363,381,403** |
| தொழிற்பாடடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ) | **32,821,989** | **15,057,464** |
| முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல் | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ) | **-** | **-** |
| கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு: | | |
| மூலதனச் செலவினம் | 32,821,989 | 15,057,464 |
| முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ) | **32,821,989** | **15,057,464** |
| முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ) | **(32,821,989)** | **(15,057,464)** |
| தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ) | **0.00** | **-** |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ) | **-** | **-** |
| *கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:* | | |
| உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ) | **-** | **-** |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ) | **-** | **-** |
| காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ) | **0.00** | **-** |
| ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி | **-** | **-** |
| டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி | **-** | **-** |




# 02

# கணக்காய்வு அவதானிப்புக்கள்

# புத்தசாசன மற்றும் சமய அலுவல்கள்

2023 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவலக அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள அமைச்சுக்கள், 09 திணைக்களங்கள் மற்றும் 10 நியதிச் சட்ட சபைகள் / நிறுவனங்கள் புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவலக அமைச்சின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அமைச்சால் பின்வரும் செயற்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தன.

**செயற்பணி**

பௌத்த மதம் உட்பட சகல மதங்களையும் பின்பற்றுவதற்கும் மதத் தீவிரவாதத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு சகல உரிமைகளுக்கும் உத்தரவாதமளித்து பாதுகாத்தல்.

அறநெறிக் கல்விக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து, புண்ணிய ஸ்தலங்களைப் பாதுகாத்து விருத்தி செய்து கஷ்டப் பிரதேசங்களில் அமைந்துள்ள வணக்க ஸ்தலங்களை மேம்படுத்துதல்.

அனைத்து சமயங்களுக்கும் உரிய டிஜிட்டல் தொல்லியல் கலைக்களஞ்சியத்தை உருவாக்குதல்.

அரச ஆவணங்களை முறைப்படி நிர்வகித்துப் பாதுகாத்தல், சர்வதேச மரபுகளின் படி பதிப்புரிமை செலுத்தும் முறையை அறிமுகப்படுத்துதல்.

மத்திய கலாசார நிதியத்தை நிர்வகித்து முறையான ஆய்வொன்றை மேற்கொண்டு மீளமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

இலங்கையின் தேசிய கலாச்சாரத்தின் அனைத்து அம்சங்களையும் மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து, வரலாற்று, தொல்பொருள், கலாச்சார பாரம்பரிய, நவீன மற்றும் பாரம்பரியக் காலாச்சாரப் படைப்புகளைப் பாதுகாத்து மேம்படுத்தி கலைஞர்களை ஊக்குவித்தல்.

பாரம்பரிய மற்றும் தொல்பொருள் பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் அதே வேளை கலாச்சார மற்றும் தேசிய பாரம்பரியத்தின் பெருமையை ஊக்குவிக்கும் வகையிலான சுற்றுலாத் திட்டங்களுக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குதல்.

வெளிநாடுகளுடன் கலாச்சார உறவைப் பேணி, நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பை உருவாக்குவதற்காக கலாச்சார பங்களிப்பைப் பயன்படுத்தும் போக்குகளைக் கண்டறிந்து அவற்றைச் செயற்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கை எடுத்தல்.

## கணக்காய்வு அவதானிப்புகள்

### தொல்பொருளியல் திணைக்களம்

**கண்டி அரண்மனை மற்றும் அருங்காட்சியகம் மறுசீரமைக்கப்படுவதற்கான நிதியத்தின் குறை பயன்பாடு**

கண்டி அரண்மனை மற்றும் அருங்காட்சியகம் மறுசீரமைக்கப்படுவதற்காக அமெரிக்க ஐக்கிய மக்கள் குடியரசினால் 265,000 ஐ.அ. டொலர்கள் அளவிலான ரூபா 53 மில்லியன் வழங்கப்படுவதற்கு உடன்படிக்கை யிடப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்டத்தின் பௌதீகச் செயலாற்றலைக் கருத்திற்கொண்டு அமெரிக்கா ஐக்கிய மக்கள் குடியரசினால் 156,750 ஐ.அ. டொலர்கள் அளவிலான ரூபா 45.9 மில்லியன் வரையாகக் குறைக்கப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டின் இறுதியில் இச் செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 57 சதவீதமாகவும், நிதி முன்னேற்றம் 21 சதவீதமாகவும் மாத்திரம் காணப்பட்டதுடன் உடன்படிக்கைக் காலம் 2024 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. இதற்கிடையில் 2023 ஆம் ஆண்டிற்காக திறைசேரியில் இருந்து கிடைக்கப்பெற்றிருந்த கட்டுநிதித் தொகையான ரூபா 41.9 மில்லியனில் 63 சதவீமான அதாவது ரூபா 26.8 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**இனங்காணப்பட்ட தொல்பொருளியல் இடங்கள் பதிவேட்டில் பதியப்பட்டிராமை**

தொல்பொருளியல் திணைக்களத்தால் 2023 ஆம் ஆண்டு வரை இனங்காணப்பட்ட தொல்பொருளியல் இடங்களின் எண்ணிக்கை 5,664 ஆகக் காணப்பட்டது. இவற்றில் 2023 திசெம்பா 31 இல் உள்ளவாறு தேசிய தொல்பொருளியல் இடங்கள் அடங்கிய பெயர்ப்பதிவேட்டில் வர்த்தமானியின் மூலம் பிரசுரிக்கப்பட்டிராத தொல்பொருளியல் இடங்களின் எண்ணிக்கை 2,706 ஆகக் காணப்பட்டன. இவை இனங்காணப்பட்ட எண்ணிக்கையின் 48 சதவீதமாகும். திணைக்கள இணையதளத்தில் உள்ளடக்கப்பட்ட புவியியல் தரவுக் கோப்பில் தொல்பொருள் தளங்களின் எண்ணிக்கை 1,758 மாத்திரமேயாகக் காணப்பட்டதுடன் இதன் படி, 2023 திசெம்பா 31 இல் உள்ளவாறு இனங்காணப்பட்டிருந்த 69 சதவீதமான புவியியல் அளவுத் திருத்தத் தரவுகள் பெறப்பட்டு புவியியல் தளத் தரவுக் கோப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**தொல்பொருள் சட்ட மீறல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை**

தொல்பொருள் சட்ட மீறலின் கீழ் 2023 ஆம் ஆண்டில் தொல்பொருள் திருடப்படுதல் தொல்பொருள் சேதப்படுத்தல், மற்றும் 179 அத்துமீறிய அகழ்வுகளில் குறித்த சந்தேக நபர்களை இனங்கண்டிராத 12 சந்தர்ப்பங்களும், சந்தேக நபர்கள் இனங்காணப்பட்ட போதிலுமம் வழக்குகள் தொடரப்பட்டிராத 64 சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. மேலும், 1998 இன் 24 ஆம் இலக்க தொல்பொருள் (திருத்தச்) சட்டத்தின் மூலம்

திருத்தப்பட்ட 1940 இன் 09 ஆம் இலக்க தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் 46 (1) ஆம் பிரிவின் படி சட்ட வரைவு மற்றும் அமுலாக்கலில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, 2023 ஆம் ஆண்டின் போது அறவிடப்பட்டிருந்த ரூபா 130.5 மில்லியன் தொகையான நீதிமன்றத் தண்டப்பணத்தில் அரைவாசி தொல்பொருள் பரிசூதிய நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டு சட்ட விரோதமான முறையில் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட தொல்பொருட்களை மீளப் பெற்றுக்கொள்ளல் அல்லது இடங்கள் மற்றும் தொல்பொருட்களைப் பாதுகாத்துக்கொள்ளல் அல்லது பங்களிப்புச் செய்யும் தகவல் வழங்குனர்களுக்கும் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கும் பரிசு வழங்குதல் போன்ற குறித்த செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாதிருந்தது.

**தொல்பொருளியல் பரிந்துரை வழங்குகையில் அறவிடப்படும் கட்டணம் திருத்தப்பட்டிராமை**

கனிம மற்றும் பாறைகளை அகற்றுகையில் தொல்பொருளியல் பரிந்துரைகளை வழங்குகையில் அறவிடப்படும் கட்டணம் 2019 பெப்ரவரி 25 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் ரூபா 10,000 ஆக திருத்தப்பட்டு அக் கட்டணம் எதிர்வரும் காலத்தில் 03 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருத்தப்பட வேண்டும் என அரச நிதிப் பணிப்பாளரின் 2019 பெப்ரவரி 28 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அறிவுறுத்தப்பட்டிருந்தது. இதன் படி, 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இல் 01/2020 (II) பிரிவின் 05 ஆம் இலக்கப் பந்தியின் படி 03 ஆண்டுகளுக்கு ஒரு முறை 15 சதவீதம் உச்ச அளவிற்கு உட்பட்டு கட்டணம் திருத்தப்பட வேண்டும். எவ்வாறெனினும், தொல்பொருளியல் திணைக்களத்தால் அவ்வாறு கட்டணத் திருத்தம் மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராததன் காரணமாக அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய வருமானம் கிடைக்கப்பெறாதிருந்தது. திணைக்களத்தால் தற்காலிகமாக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த மாத்தறை மாநகர எல்லைக்குட்பட்ட ‘‘நூபே’’ பழைய ஒல்லாந்துச் சந்தைக் கட்டிடத் தொகுதிக்காகவும் அவ்வாறு கட்டணம் திருத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது ரூபா 5,000 தொகையான கட்டணத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

## தேசிய சுவடிகள் காப்பக திணைக்களம்

**குறியீடுகளின் கணனிமயமாக்கல் செயற்திட்டம் பூர்த்தியடைந்திராமை**

தேசிய சுவடிகள் காப்பக திணைக்களத்தினால் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 25.3 மில்லியன் மதிப்பீட்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த குறியீடுகளின் கணனிமயமாக்கல் செயற்திட்டம் 2019 ஆம் ஆண்டில் நிறைவேற்றப் படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் போதாமையாலும் சரியான திட்டத்தின் படி செயற்திட்டத்தைச் செயற்படுத்தியிராமையாலும் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் ரூபா 13.5 மில்லியன் செலவில் 850,000 குறியீடுகள் மாத்திரம் கணனிமயமாக்கப்பட்டிருந்ததுடன் மேலும் 400,000 குறியீடுகள் கணனிமயப்படுத்த இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**தலைமைக் காரியாலயக் கட்டிட நவீனமயமாக்கல் பணிகள் பூர்த்தியடைந்திராமை**

ரூபா 992.2 மில்லியன் மதிப்பீட்டுத் தொகையான தேசிய சுவடிகள் காப்பக திணைக்களத்தின் தலைமைக் காரியாலயக் கட்டிட நவீனமயமாக்கல் பணிகள் 2021 மே 18 ஆம் திகதி பூர்த்தியடைந்திருக்க வேண்டிய போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 02 வருடங்கள் பூர்த்தியடைந்திருந்த போதிலும் நவீனமயமாக்கல் பணிகள் பூர்த்தியடைந்திருக்க வில்லை. அன்றைய தினத்தில் ரூபா 470.8 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் நிதி முன்னேற்றம் 47 சதவீதமாகவும், பௌதீக முன்னேற்றம் 53 சதவீதமாகவும் காணப்பட்ட போதிலும் நவீனமயமாக்கல் பணிகள் 2021 ஆம் ஆண்டு முதல் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன.

**டெராபயிட் 500 டிஜிடல் களஞ்சியமொன்றை ஸ்தாபிப் பதற்கு செயற்பட்டிராமை**

தேசிய சுவடிகள் காப்பக திணைக்களத்திற்கு டெராபயிட் 500 டிஜிடல் களஞ்சியம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கு 2021 ஏப்ரல் 05 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருந்தது. இதன் படி, 05 ஆண்டுகளுக்குள் ரூபா 120.2 மில்லியன் மதிப்பீட்டுத் தொகையில் வருடாந்த ஒதுக்கீடு பெறப்பட்டு செயற்திட்டத்தை மேற்கொண்டிருக்க வேண்டும். முன்னைய ஆண்டிற்கான ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றிராததுடன் 2023 ஆம் ஆண்டிக்கு உரித்தான ரூபா 78.3 மில்லியன் தொகையான ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை.

## தேசிய நூதனசாலை திணைக்களம்

| | |
|---|---|
| **அரும்பொருட் சேகரிப்பு நிர்வாகக் கொள்கை ஒன்றை வெளியிட்டிராமை** | தேசிய நூதனசாலை திணைக்களத்தால் அரும்பொருட் சேகரிப்பு நிர்வாகக் கொள்கை ஒன்று 2023 திசெம்பர் மாதம் வரையிலும் வெளியிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே, இலங்கையில் உள்ள சகல நூதனசாலை முறைமையையும் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரப் பொறுப்பு திணைக்களத்திற்குக் கிடைக்கப் பெறக்கூடிய வகையில் தற்போதைய சட்டத்திற்கு உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| **அரும்பொருட்களை மதிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை.** | தேசிய நூதனசாலை திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் 10 பிராந்திய நூதனசாலைகளிலும் திணைக்களக் களஞ்சியங்களிலும் உள்ள சகல அரும்பொருட்களையும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சரியான முறை ஒன்றைத் தயாரித்து மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **திருட்டு வேலைகளுக்குப் பொறுப்பானவர்களை இனங்கண்டிராமை** | கொழும்பு தேசிய நூதனசாலையின் 2012 மார்ச் 16 ஆம் திகதி ரூபா 4.4 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதியான 221 அரும்பொருட்கள் களவாடப்பட்டிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 11 ஆண்டுகளிற்கு மேற்பட்டிருந்த போதிலும் உரிய சட்ட ரீதியான நடவடிக்கைகளும் இழப்பு தொடர்பான நிதிப் பிரமாணம் 104(3) மற்றும் 104(4) பிரகாரமும் நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |

## கலாச்சார அலுவல்கள் திணைக்களம்

| | |
|---|---|
| **தேசிய கலைவிழா நிகழ்வுகள் திட்டமிடப்பட்ட படி நடாத்தப்பட்டிராமை** | தேசிய கலைவிழா நிகழ்வுகளின் கீழ் 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 66 மில்லியனால் 10 பணிகளை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 10.5 மில்லியன் ஒதுக்கப்பட்ட அரச நடன விழாவும் பிரதேச கலாச்சார சங்கங்கள் மற்றும் கலைக்கல்லூரிகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. முன்னைய இரு ஆண்டுகளின் போது நடாத்தப்பட்டிராத அரச இசை விருது வழங்கல் விழாக்களுக்காக 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 6 மில்லியனும் தொலைக்காட்சி அரச விருது வழங்கல் விழாவிற்காக ரூபா 6 மில்லியனுமாக ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 1.4 மில்லியன் செலவில் நடுவர் பணி மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| **காணி உரித்து உறுதிப்படுத்தப்பட்டிராமை** | கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் 03 நிறுவனங்கள் அமைந்துள்ள 1.245 |

ஹெக்டேயர் விஸ்தீரணமான 03 காணிகளின் உரிமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**முறையான அங்கீகாரம் இன்றி ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்ட பணத்திற்காக தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிராமை**

ஜோன் டீ சில்வா ஞாபகார்த்த அரங்கின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தியின் முதற்கட்டத்திற்கு உரித்தான ஒப்பந்தக்காரரால் 03 வருட காலதாமதத்துடன் அதாவது 2018 நவம்பர் 24 ஆம் திகதி நிர்மாணிப்பு நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்டு கட்டிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப் படுகையில் தாமதக் கட்டணமாக ரூபா 38.6 மில்லியன் அறவிடப்பட்டிருந்ததுடன் முறையான அங்கீகாரமும் நியாயமான விடயங்கள் உறுதிப்படுத்தப்படாது மீள ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. மீள அத்தொகையைச் செலுத்துமாறு 2021 மே 10 ஆம் திகதி ஒப்பந்தக்காரருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு வரையிலும் அத் தொகை அறவிடப்பட்டிராததுடன் திணைக்களம் இது தொடர்பாக போதுமான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## பௌத்த அலுவல்கள் திணைக்களம்

**பெறுகை வழிகாட்டல்களிற்கு மாறாக அச்சீட்டுச் செலவினங் களை ஏற்றிருத்தல்**

2006 அரசாங்க பெறுகை வழிகாட்டல்களிற்கு மாறாக போட்டி விலைமனுக்கள் கோரப்படாது மாணவர் திறன் மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் சுற்றறிக்கை, மாதிரிப் படிவம், அனுமதிப்பத்திரம், நேர அட்டவணை, அழைப்பிதழ் மற்றும் அச்சிடல் நடவடிக்கைகளிற்காக ரூபா 4.7 மில்லியன் கூட்டுத்தொகையான அச்சீட்டுச் செலவினங்கள் ஏற்கப்பட்டிருந்தன. மேலும், விருந்தினர்களை அழைப்பதற்காக கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும் விழாவிற்கு 02 நாட்களிற்கு முன்னர் 1500 அழைப்பிதழ்கள் அச்சிடப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டமை விளைவற்ற செலவினமாகக் காணப்பட்டது.

அரசாங்க பெறுகை வழிகாட்டல்களிற்கு அமைய, போட்டி விலைமனுக்கள் கோரப்படாது 2021 ஆம் 2022 ஆம் ஆண்டுகளிற்கு உரித்தான அறநெறிப் பாடசாலை வகுப்புப் பரீட்சைகளிற்கான வினாத்தாள்களும் சான்றிதழ்களும் அச்சிடப்படுவதற்காக ரூபா 40.2 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. மேலும் 2022 ஆம் ஆண்டின் போது வகுப்புப் பரீட்சைகளிற்காக 832,875 மாணவர்கள் விண்ணப்பித்திருந்த போதிலும் இதனை விட 165,609 வினாத்தாள்களும் அப் பரீட்சைக்குத் தோற்றிய 645,042 மாணவர்களின் எண்ணிக்கையைப் பார்க்கிலும் 4,958 சான்றிதழ்கள் மேலதிகமாகவும் அச்சிடப்பட்டிருந்தமையும் 2021 ஆம் ஆண்டின் போது பரீட்சைகளிற்காக

விண்ணப்பித்திருந்த மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்களைக் கொண்டிராது அச்சிடப்பட்டிருந்த 1,067,946 வினாத்தாள்களில் 428,578 வினாத்தாள்களும் பரீட்சைக்குத் தோற்றிய 639,368 மாணவர்களைப் பார்க்கிலும் 35,632 சான்றிதழ்கள் மேலதிகமாக அச்சிடப்பட்டிருந்த காரணத்தாலும் ரூபா 6.2 மில்லியன் தொகையான விளைவற்ற செலவினம் ஏற்பட்டிருந்தது.

## இந்து சமய கலாச்சார திணைக்களம்

**அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்காக சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்பட்டிராமை**

திணைக்களத்தால் நடாத்தப்பட்டிருந்த 2022 (2023) ஆம் ஆண்டிற்கான தேசிய வடிவமைப்புப் போட்டியில் அறநெறிப் பாடசாலைகள் மட்ட, பிரதேச மட்ட, மாவட்ட மட்ட மற்றும் தேசிய மட்டத்திற்கு உரித்தான போட்டிகள் ரூபா 4 மில்லியனிற்கும் மேலான அளவு செலவில் 2023 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்டு முடிவுகள் வெளியாகியிருந்த போதிலும் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு இதற்கு உரிய சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கப்பட்டிருக்க வில்லை.

## பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம்

**மரண உடைமை முகாமைத்துவத்தால் நட்டமீட்டப்படல்**

மரண உடைமை கொண்டவர்களது நோக்கை நிறைவேற்றுவதற்காக திணைக்களத்திற்கு ஒப்படைக்கப் பட்டிருந்த மரண உடைமை முகாமைத்துவத்தின் போது அவற்றிலிருந்தான வருமானத்தைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய போதிலும் 2023 ஆம் ஆண்டின் போது திணைக்களத்தால் முகாமைத்துவம் செய்யப்பட்டிருந்த 07 மரண உடைமைகளிற்கு உரித்தான 11 தோட்டங்களிற்காக ரூபா 5.01 மில்லியன் தொகையான நட்டம் ஏற்கப்பட்டிருந்தது. இது எதிர்பார்க்கப் பட்ட இலாபத் தொகையான ரூபா 19.58 மில்லியன் ஆன 26 சதவீத மறையான நிலையாகக் காணப்பட்டது.

அரசின் நிதி நிர்வாகத்திற்கு உரித்தாக, இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் XVII அத்தியாயத்தின் 148 உறுப்புரையின் பிரகாரம், இலங்கை நிதி தொடர்பான முழுமையான கட்டுப்பாட்டையும் பாராளுமன்றம் கொண்டுள்ளது. அரசியலமைப்பின் 149 ஆம் உறுப்புரையின் பிரகாரம், அரசினால் சேகரிக்கப்படும் வருமானமும் பெறுவனவுகளும் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியதுடன், அரசியலமைப்பின் 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகளின் பிரகாரம் திரண்ட நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய முறை குறிப்பிடப்பட்டுள்ளது. இச்செயற்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்கின்ற பிரதான பொறிமுறை திறைசேரியாகும். அரச வருமானம் தொடர்பில் வேறான பந்தியில் அவதானிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையால் இப் பந்தியில் அரச செலவினம் மற்றும் அரச கடன் மற்றும் அரச தொழில் முயற்சிகள் தொடர்பான தகவல்கள் மற்றும் அவதானிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

## அரசாங்க செலவு

2023 நிதியாண்டிற்காக அரச செலவுகளுக்குத் தேவையான சட்ட ஏற்பாடுகள் 2022 இன் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அதன்படி, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் ஒதுக்கீடுகள் மற்றும் தற்போதுள்ள சட்டங்களின் மூலம் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ள திரண்ட நிதியத்தில் செலவிற்கு உட்படும் விசேட சட்ட சேவைக்களுக்கான ஒதுக்கீடுகள் உள்ளடங்கலாக அரசாங்க வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக ரூபா 7,879,499 மில்லியனான ஒதுக்கீடுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக, 2023 ஆம் ஆண்டிற்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 268,000 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அரசியலமைப்பின் 150 ஆம் உறுப்புரை பிரகாரம் விசேட சட்ட சேவை ஆணைச்சீட்டு அனுமதிப்பத்திரத்தின் மூலம் ரூபா 9,565,000 மில்லியனான ஒதுக்கீடு விசேட சட்ட சேவை செலவுகளுக்காக பெறப்பட்டிருந்தன. அதன்படி, 2023 ஆம் ஆண்டின் போதான வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக ரூபா 17,675,999 மில்லியனிற்கான தேறிய ஒதுக்கீடொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விபரங்கள் அட்டவணை 2.1 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

| | மூலதன ஒதுக்கீடு | மீண்டெழும் ஒதுக்கீடு | மொத்தம் |
|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த ஒதுக்கீடு (ஒதுக்கீட்டுச் சட்டத்தின் I ஆம் அட்டவணை) | 1,225,266 | 2,432,000 | 3,657,266 |
| தற்போதுள்ள சட்டத்தின் மூலம் அங்கீகாரம் கிடைத்துள்ள, திரண்ட நிதியத்திற்கு செலவிற்குட்பட்ட விசேட சட்ட சேவைக்களுக்கான ஒதுக்கீடு (ஒதுக்கீட்டுச் சட்டத்தின் II ஆம் அட்டவணை) | 2,019,970 | 2,202,263 | 4,222,233 |
| வழங்கல்கள் மற்றும் சேவைச் செலவுகளுக்காக மேலதிகமாக வழங்கப்படும் ஒதுக்கீடு (குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம்) | 231,500 | 36,500 | 268,000 |
| குறைநிரப்பு ஒதுக்கீட்டைத் ஏற்பாடு செய்வதற்காக குறைக்கப்பட்ட ஒதுக்கீடு | (11,000) | (25,500) | (36,500) |
| விசேட சட்ட சேவைச் செலவுகளுக்காக மேலதிகமாக வழங்கப்பட்டிருந்த ஒதுக்கீடு | 9,000,000 | 565,000 | 9,565,000 |
| நி.பி. இன் பிரகாரம் மீண்டெழுபவற்றில் இருந்து மூலதனத்திற்கு மாற்றப்பட்ட ஒதுக்கீடு | 9,446 | (9,446) | - |
| மொத்தம் | 12,475,182 | 5,200,817 | 17,675,999 |

அட்டவணை – 2.1 அரச வழங்கல் மற்றும் சேவைகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒதுக்கீடு

ஆதாரம் - 2022 இன் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டு சட்டம் மற்றும் குறைநிரப்பு மதிப்பீடு, வருடாந்த அறிக்கை 2023 - நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

2022 இன் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் தலைப்பு 240 தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குறைநிரப்பு உதவிச் சேவைகளும் அவசர தேவைப்பாட்டு பொறுப்புச் செயற்திட்டத்தின் கீழ் வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பணிகளுக்காக மாத்திரம் பயன்படுத்தப்படுவதற்காக ரூபா 356,099 மில்லியனான மேலதிக ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது. அம் மொத்த ஒதுக்கீட்டில் ரூபா 301,767 மில்லியனான ஒதுக்கீடு வேறு செலவினத் தலைப்புகளுக்கு மாற்றப்பட்டிருந்தன. அதன்படி, ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒதுக்கீடுகளில் ரூபா 54,332 மில்லியனிற்கான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. விபரங்கள் அட்டவணை 2.2 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

| செலவின் தன்மை | ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் | குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் | நி.பி.66/69 மாற்றல்கள் | தேறிய ஏற்பாடு | செலவுத் தலைப்புக்களுக்கு ஏற்பாடுகள் மாற்றப்பட்டமை | ஏற்பாட்டின் சேமிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| மீண்டெழும் | 167,788 | 20,000 | - | 187,788 | 181,016 | 6,772 |
| மூலதன | 168,311 | - | - | 168,311 | 120,751 | 47,560 |
| மொத்தம் | 336,099 | 20,000 | - | 356,099 | 301,767 | 54,332 |

அட்டவணை 2.2 – குறைநிரப்பு உதவிச் சேவைகள் மற்றும் அவசர தேவைப்பாட்டுப் பொறுப்புக்கள் செயற்திட்டத்தின் கீழான ஒதுக்கீடுகள் மற்றும் அந்த ஒதுக்கீடுகள் ஏனைய செலவுத் தலைப்புகளுக்கு மாற்றுதல்.
ஆதாரம் - தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் நிதிக்கூற்று 2023

## கணக்காய்வு அவதானிப்புகள்

**மொத்த ஒதுக்கமும் சேமிக்கப்படுதல்**

2023 ஆம் ஆண்டின் போது அரசாங்க வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக ரூபா 17,675,999 மில்லியனான ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், முன்னைய ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஒதுக்கீடு ரூபா 6,482,350 மில்லியன் தொகையாக இருந்தது. அதன்படி, முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 2023 ஆம் ஆண்டின் போதான ஒதுக்கீடு ரூபா 11,193,649 மில்லியன் தொகையாக அதாவது 172.68 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. 2023 ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த ஏற்பாடுகளில் ரூபா 10,674,332 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் ரூபா 7,001,667 மில்லியன் அதாவது மொத்த ஏற்பாடுகளில் 40 சதவீதம் பின்வருமாறு சேமிக்கப்பட்டிருந்தது.

**மீண்டெழும் ஒதுக்கீடுகளிலிருந்தான சேமிப்பு**

மீண்டெழும் செலவுகளுக்கான மொத்த தேறிய ஒதுக்கீடுகள் ரூபா 5,200,817 மில்லியனானதுடன், மீளாய்வாண்டின் போது அவற்றில் ரூபா 4,729,386 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தமையால் ரூபா 471,431 மில்லியன் தொகைக்கான ஒதுக்கீடுகள்

சேமிக்கப்பட்டிருந்தன. அந்த சேமிப்பு ஒட்டுமொத்த மீண்டெழும் ஒதுக்கீடுகளில் 9.06 சதவீதமாக இருந்தன.

**முதலீட்டு ஒதுக்கீடு சேமிப்பு**


அரச முதலீடுகளுக்காக ரூபா 1,449,742 மில்லியனிற்கான தேறிய ஒதுக்கீடுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், 2023 ஆம் ஆண்டின் போது அவற்றில் ரூபா 932,745 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் படி, ரூபா 516,997 மில்லியனிற்கான ஒதுக்கீடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. அந்த சேமிப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேறிய ஒதுக்கீடுகளில் 36 சதவீதமாக இருந்தன.

**கடன் தவணைக் கொடுப்பனவுகளிற்கான ஒதுக்கீடுகளின் சேமிப்புகள்**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் தவணை கொடுப்பனவிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 11,025,440 மில்லியன் தொகைக்கான தேறிய ஏற்பாடுகளில் கடனை திருப்பி செலுத்துவதற்காக ரூபா 5,012,201 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன்படி, ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேறிய ஒதுக்கீடுகளில் ரூபா 6,013,239 மில்லியனான அதாவது 55 சதவீத ஒதுக்கீடு சேமிக்கப்பட்டிருந்தது.

**வட்டிச் செலவு அதிகரித்தல்**

2023 ஆம் ஆண்டின் போது வட்டிக்காக ரூபா 2,455,599 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அது முன்னைய ஆண்டில் ரூபா 1,565,190 மில்லியனாகக் காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 890,409 மில்லியன் தொகையால் அதாவது 56.89 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. விபரங்கள் வரைபடம் 2.1 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.




வரைபடம் 2.1 மொத்த மீண்டெழும் செலவு மற்றும் வட்டிச் செலவு ஆதாரம் - அரச நிதிக்கூற்று

**வருமானப் பற்றாக்குறை**

2023 ஆம் ஆண்டிற்காக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களில் வரவு செலவுத் திட்டச் செயலாற்றல் மற்றும் பற்றாக்குறை நிதியீட்டல் அறிக்கையின் படி, வருமானப் பற்றாக்குறை ரூபா 1,650 பில்லியனாகக் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டின் போது இது ரூபா 1,540 பில்லியனாகக் காணப்பட்டது. வருமானத்தின் பற்றாக்குறையின் ஆகக் குறைந்த மீதி 2007 ஆம் ஆண்டின் போது பதிவாகியிருந்ததுடன் இது ரூபா 43 பில்லியனாகியிருந்தது. சேகரிக்கப்பட்ட அரச வருமானத்தில் 7.52 சதவீத்தை இது பிரதிநிதித்துவப் படுத்தியது. அந்தக் கால வீச்சில் ஒட்டுமொத்த வருமானத்தின் பற்றாக்குறை ரூபா 7,969 பில்லியன் தொகையாக காணப்பட்டது. அப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடனும் வெளிநாட்டு மானியமும் பெறப்பட்டிருந்தன.

**வருமானப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்காக கடன் பெறுதல்**

2006 முதல் 2023 வரையான கால வீச்சில் உள்நாட்டுக் கடன் ரூபா 28,025 பில்லியன் தொகையும், வெளிநாட்டுக் கடன் ரூபா 8,318 பில்லியன் தொகையும் வெளிநாட்டு மானியம் ரூபா 271 பில்லியனுமாக மொத்தம் ரூபா 36,614 பில்லியன் பெறப்பட்டிருந்தது. ஒவ்வொரு ஆண்டின் போதும் அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கடன் மற்றும் மானியங்களில் 4.44 சதவீதம் முதல் 45.59 சதவீதம் வரையான வீச்சளவிலான சதவீதத்தால் வருமானப் பற்றாக்குறைக்கு நிதி அளிப்புச் செய்யப்பட்டது. பெறப்பட்ட கடன்கள் மற்றும் மானியங்களிலிருந்து முதலீடுகள் மேற்கொள்ளப்படாது மீண்டெழும் செலவினங்கள் தீர்க்கப்படுவதற்காக 2019 ஆம் ஆண்டின் போது 20.25 சதவீதமும், 2020 ஆம் ஆண்டின் போது 45.59 சதவீதமும், 2021 ஆம் ஆண்டின் போது 42.39 சதவீதமும் 2022 ஆம் ஆண்டின் போது 30.59 சதவீதமும் 2023 ஆம் ஆண்டின் போது 19.65 சதவீதமுமாக பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் அட்டவணை 2.3 இல் காட்டப்பட்டுள்ளது.

| வருட | உள்ளபடியான வருமானம் (வரி மற்றும் வரியல்லாத) | உள்ளபடியான மீண்டெழும் செலவுகள் | வருமானப் பற்றாக்குறை | வருமானப் பற்றாக்குறை சேகரிக்கப்பட்ட வருமானத்தின் சதவீதமாக | வெளிநாட்டு கடன், மானியம் மற்றும் உள்நாட்டு கடன் | வருமானப் பற்றாக்குறை கடன் மற்றும் மானியங்களின் சதவீதமாக் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன | சதவீதம் | ரூபா மில்லியன் | சதவீதம் |
| 2006 | 477 | 579 | 102 | 21.38 | 514 | 19.84 |
| 2007 | 572 | 615 | 43 | 7.52 | 587 | 7.33 |
| 2008 | 664 | 736 | 72 | 10.84 | 678 | 10.62 |
| 2009 | 708 | 882 | 174 | 24.58 | 1,019 | 17.08 |
| 2010 | 826 | 951 | 125 | 15.13 | 918 | 13.62 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2011 | 943 | 1,020 | 77 | 8.17 | 998 | 7.72 |
| 2012 | 997 | 1,118 | 121 | 12.14 | 1,108 | 10.92 |
| 2013 | 1,066 | 1,254 | 188 | 17.64 | 1,289 | 14.58 |
| 2014 | 1,128 | 1,370 | 242 | 21.45 | 1,397 | 17.32 |
| 2015 | 1,394 | 1,673 | 279 | 20.01 | 1,750 | 15.94 |
| 2016 | 1,699 | 1,771 | 72 | 4.24 | 1,623 | 4.44 |
| 2017 | 1,845 | 1,946 | 101 | 5.47 | 1,466 | 6.89 |
| 2018 | 1,935 | 2,109 | 174 | 8.99 | 1,883 | 9.24 |
| 2019 | 1,907 | 2,322 | 415 | 21.76 | 2,049 | 20.25 |
| 2020 | 1,379 | 2,683 | 1,304 | 94.56 | 2,860 | 45.59 |
| 2021 | 1,467 | 2,757 | 1,290 | 87.93 | 3,043 | 42.39 |
| 2022 | 1,999 | 3,539 | 1,540 | 77.04 | 5,035 | 30.59 |
| 2023 | 3,078 | 4,729 | 1,651 | 53.64 | 8,396 | 19.66 |
| **மொத்தம்** | **24,084** | **32,054** | **7,970** | | **36,613** | |

அட்டவணை 2.3 – மீண்டெழும் செலவை தீர்த்துக்கொள்ள முடியாதிருந்த வருமானப் பற்றாக்குறைக்கு கடன்கள் மற்றும் மானியங்களைப் பயன்படுத்துதல்
ஆதாரம் - 2006 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான அரச நிதிக் கூற்றுக்கள்

**வட்டிக் கொடுப்பனவு அதிகரிப்பு**

2023 ஆம் ஆண்டின் போது ரூபா 2,455 பில்லியன் தொகையான வட்டி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் இது மொத்த மீண்டெழும் செலவுகளில் 51.91 சதவீத பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருந்தது. முன்னைய ஆண்டின் வட்டி வருமானம் ரூபா 1,565 பில்லியன் தொகையாக அதாவது மொத்த மீண்டெழும் செலவுகளில் 44.22 சதவீதமாகக் காணப்பட்டது. வட்டிக் கொடுப்பனவை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 890 பில்லியனால் அதிகரித்திருந்தது. மேலும், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் மூலம் 2022 ஏப்ரல் 12 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டிருந்த இடைக்கால வெளிநாட்டுக் கடன் கொடுப்பனவு இடைநிறுத்தப்படும் கொள்கைத் தீர்மானத்தின் படி 2022 ஏப்ரல் 13 ஆம் திகதி முதல் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரை சில கடன் தவணைப்பணமும் வட்டிக் கொடுப்பனவுகளும் இடைநிறுத்தப்பட்டிருந்த போதிலும் இதற்கு உரித்தான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அப் பற்றாக்குறை மேலும் அதிகரித்து வருகின்றமை அவதானிக்கப்பட்டது.

2006 ஆம் ஆண்டின் போது ரூபா 151 பில்லியன் தொகையான வட்டிக் கொடுப்பனவு 2023 ஆம் ஆண்டு வரையில் இது ரூபா 2,455 பில்லியன் வரை 1,526 பில்லியனால் அதிகரித்திருந்தது. வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை நிதியளிப்புச் செய்வதற்காக கடனைப் பெற்றுக்கொள்வதற்கு நேர்ந்திருந்ததுடன் இதற்கான

வட்டிக் கொடுப்பனவு வருடாந்தம் அதிகரித்திருந்தது. வரவு செலவுத் திட்டச் செயலாற்றல் மற்றும் பற்றாக்குறையை நிதியளிப்புச் செய்யும் கூற்றின் படி 2023 ஆம் ஆண்டு வரையில் சேகரிக்கப்பட்ட ரூபா 3,079 பில்லியன் தொகையான அரச வருமானத்தில் ரூபா 2,455 பில்லியனான அதாவது 79.76 சதவீதமான வட்டி செலுத்தப்பட வேண்டியதாகக் காணப்பட்டது. இந் நிலை குறித்த காலப்பகுதியின் போது வருடாந்தம் தொடர்ந்து அதிகரித்துச் சென்றிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டு முதல் இது விரைவாக அதிகரித்திருந்தது.

.

| வருடம் | உள்ளபடியான மீண்டெழும் செலவுகள் | வட்டி செலவுகள் | வட்டி செலவுகள் மொத்த மீண்டெழும் செலவுகளின் சதவீதமாக | உள்ளபடியான வருமானம் | வட்டி செலவுகள் உள்ளபடியான வருமானத்தின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | சதவீதமாக | ரூபா பில்லியன் | சதவீதமாக |
| 2006 | 579 | 151 | 26.08 | 477 | 31.66 |
| 2007 | 615 | 181 | 29.43 | 572 | 31.64 |
| 2008 | 736 | 212 | 28.80 | 664 | 31.93 |
| 2009 | 882 | 303 | 34.35 | 708 | 42.80 |
| 2010 | 951 | 348 | 36.59 | 826 | 42.13 |
| 2011 | 1,020 | 353 | 34.61 | 943 | 37.43 |
| 2012 | 1,118 | 409 | 36.58 | 997 | 41.02 |
| 2013 | 1,254 | 465 | 37.08 | 1,066 | 43.62 |
| 2014 | 1,370 | 446 | 32.55 | 1,128 | 39.54 |
| 2015 | 1,673 | 527 | 31.50 | 1,394 | 37.80 |
| 2016 | 1,771 | 611 | 34.50 | 1,699 | 35.96 |
| 2017 | 1,946 | 736 | 37.82 | 1,845 | 39.89 |
| 2018 | 2,109 | 852 | 40.40 | 1,935 | 44.03 |
| 2019 | 2,322 | 889 | 38.29 | 1,907 | 46.62 |
| 2020 | 2,683 | 975 | 36.34 | 1,379 | 70.70 |
| 2021 | 2,757 | 1,048 | 38.01 | 1,467 | 71.44 |
| 2022 | 3,539 | 1,565 | 44.22 | 1,999 | 78.29 |
| 2023 | 4,729 | 2,455 | 51.91 | 3,078 | 79.76 |
| மொத்தம் | **32,054** | **12,526** | | **24,084** | |

அட்டவணை 2.4 கடனுக்கான வட்டி செலுத்துவதற்காக சேகரிக்கப்பட்ட வருமானத்தில் கூடிய சதவீதம் செலவிடல்
ஆதாரம் - 2006 ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை அரச நிதிக் கூற்றுக்கள்

வருமானம் சேகரிக்கும் பிரதான நிறுவனங்களான உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கைச் சுங்கம், மதுவரித் திணைக்களம் மற்றும் மோட்டார் வாகனப் போக்குவதத்து திணைக்களங்களுக்கான 2023 ஆம் ஆண்டின் இறுதித் திகதியில் சேகரிக்கப்பட வேண்டியிருந்த நிலுவை வருமான மீதியில் மொத்தம் ரூபா 1,127 பில்லியன் ஆகும்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் 2023 ஆம் ஆண்டிற்கு உரித்தாக சேகரிக்கப்பட வேண்டியிருந்த ரூபா 1,066 பில்லியன் வருமானம் சேகரிக்கப்படாது நிலுவையாகக் காணப்பட்டது. திருந்தது. அவ் வருமானம் 2023 ஆம் ஆண்டின் போது சேகரிக்கப்படுவதற்கு முனைந்திருந்தால் அவ் ஆண்டின் பற்றாக்குறை ரூபா 584 பில்லியன் தொகையால் அதாவது 41.29 சதவீதம் வரை குறைத்துக்கொண்டிருக்கக் கூடியதாக இருந்தது. இந் நிலுவை வருமானம் 2021 ஆம் 2022 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 620 பில்லியனாகவும் ரூபா 904 பில்லியனாகவும் இருந்தது. அவ் ஆண்டுகளின் போது அந் நிலுவையான வருமானத்தைச் சேகரிக்க முனைந்திருப்பின் 2021 ஆம் ஆண்டின் போது வருமானப் பற்றாக்குறையை ரூபா 670 பில்லியன் வரை 48.06 சதவீதத்தாலும் 2022 ஆம் ஆண்டின் போது வருமானப் பற்றாக்குறையை ரூபா 636 பில்லியன் தொகை வரை 58.70 சதவீதத்தாலும் குறைத்திருக்க முடியும்.


| **வருடம்** | **நிலுவை வருமானம்** | **வருமானப் பற்றாக்குறை** | **நிலுவை வருமானத்தில் சேகரிக்கப்பட்டிருப்பின் வருமானத்தின் மிகை / (பற்றாக்குறை)** | **வருமானப் பற்றாக்குறை குறைக்கப்படதன சதவீதம்** |
|---|---|---|---|---|
| | **ரூபா பில்லியன்** | **ரூபா பில்லியன்** | **ரூபா பில்லியன்** | **நூற்றுக்கு** |
| **2019** | 579 | 414 | 165 | 139.86 |
| **2020** | 698 | 1,304 | (606) | 53.53 |
| **2021** | 620 | 1,290 | (670) | 48.06 |
| **2022** | 904 | 1,540 | (636) | 58.70 |
| **2023** | 1,066 | 1,650 | (584) | 41.29 |

அட்டவணை 2.5 – உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் நிலுவை வருமானம் மற்றும் அது வருமானப் பற்றாக்குறைக்கு ஏற்படுத்திய தாக்கம்

ஆதாரம் - 2019 ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அரச நிதிக் கூற்றுக்கள்

**அரச கடன் பெற்றுக்கொள்ளல்**


வருமான மதிப்பீட்டைச் சரியான விதத்தில் தயாரித்திராமை அல்லது தயாரிக்கப்பட்ட வருமான மதிப்பீட்டின் படி வருமானத்தை சேகரித்திராமையும், சிக்கனமான முறையில் செலவினத்தை முகாமைத்துவம் செய்திராமையாலும் அரச கடனைப் பெற்றுக்கொள்வதற்கு நேர்ந்திருந்தது. அரச கடன் அளவு படிப்படியாக அதிகரித்ததன் காரணமாக கடன் வட்டிக் கிரயமும் வருடாந்தம் அதிகரித்து இதனோடொத்த மீண்டெழும் செலவினமும் அதிகரித்திருந்தது. இதன் படி, மதிப்பிடப்பட்ட வருமானத்தை எதிர்பார்த்தவாறு சேகரித்துக் கொள்வதற்கு இயலாதிருந்தமையும், மீண்டெழும் செலவினம் படிப்படியாக அதிகரித்திருந்தமையாலும் வருடாந்த செலவினத்தைத் தீர்த்துவைப்பதற்கு கூடியவகையில் வருமானம் போதாதிருந்தமையால் வருமானப் பற்றாக்குறை வருடாந்தம் அதிகரித்திருந்தது.




வரைபடம் 2.2 - வருமானப் பற்றாக்குறை உள்ளபடியான வருமானத்தின் சதவீதமாக
ஆதாரம் - அரச நிதிக்கூற்றுக்கள் 2006-2023

**வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையிலான அதிகரிப்பு**

அரச நிதிக் கூற்றுக்களின் படி 2023 ஆண்டின் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை ரூபா 2,584 பில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், அது மொத்த தேசிய உற்பத்தியின் 9.35 சதவீதமாக காணப்பட்டது. 2022 ஆண்டின் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை ரூபா 2,555 பில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன், அது மொத்த தேசிய உற்பத்தியில் 10.62 சதவீதமாக காணப்பட்டது. 2006 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான ஒட்டுமொத்த கால வீச்சு முழுவதும் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன், அது 2006 ஆண்டில் காணப்பட்ட ரூபா 300 பில்லியன் தொகைக்கான வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை 2023 ஆம் ஆண்டளவில் ரூபா 2,584 பில்லியன் தொகையாக அதிகரித்திருந்தது. அந்தக் கால வீச்சில் ஆகக் கூடிய வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை 2023 ஆம் ஆண்டில் பதியப்பட்டிருந்தது. 2006 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதப்படி கணித்த போது அது 5.55 சதவீதம் முதல் 14.08 தொகை வரையான வீச்சில் காணப்பட்டது. 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) சட்டத்தின் பிரிவு 3(அ) இன் பிரகாரம் உள்ளபடியான வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை உள்ளபடியான மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக 5 சதவீத எல்லையில் இருக்க வேண்டிய போதிலும் அந்தக் காலப் பகுதியின் போது எந்த ஒரு ஆண்டின் போதும் அந் நிலை பேணப்பட்டிருக்கவில்லை.




வரைபடம் 2.3- வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை மொ.தே.உ. சதவீதமாக
ஆதாரம் - நிதியமைச்சின் வருடாந்த அறிக்கைகள் மற்றும் அரச நிதிக்கூற்று 2006 – 2023

**இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை**

அரச நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை மற்றும் இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதீட்டு பற்றாக்குறை இடையே வேறுபட்ட பெறுமதிகள் பதிவிடப்பட்டிருந்தன. இது தொடர்பாக அரச நிதிக் கொள்கைகள் திணைக்களத்தினால் அரச நிதிக் கூற்று கணக்கீட்டு வகைப்படுத்தலின் படி தயாரிக்கப்பட்டிருந்தன எனவும், பொருளாதார வகைப்படுத்தலின் படி, இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை கணக்கிடப்பட்டிருந்தன எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. 2023 ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கி அறிக்கையின் படி, வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை ரூபா 2,282,267 மில்லியன் தொகையாக காணப்பட்டது. எனினும், அரச நிதிக்கூற்றுக்களின் படி, அப் பற்றாக்குறை ரூபா 2,583,601 மில்லியன் தொகையாக காணப்பட்டது. அதன் படி, ரூபா 301,334 மில்லியன் தொகையான வேறுபாடு வேறுபாடு ஒன்று காணப்பட்டது.


**வரவு செலவுத் திட்ட நிதியளிப்பு**

அரச நிதிக்கூற்றுக்களுக்கு உரிய முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 2023 ஆம் ஆண்டின் போது பாதீட்டுப் பற்றாக்குறை ரூபா 28,860 மில்லியன் தொகையால் அதாவது 1.12 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 2023 ஆம் ஆண்டின் போது வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையை தீர்த்துக்கொள்வதற்காக தேறிய வெளிநாட்டுக் கடன் ரூபா 494,655 மில்லியன் தொகையும் தேறிய உள்நாட்டுக் கடன்

ரூபா 2,866,377 மில்லியன் தொகையும் பெற்றுக்கொள்வதற்கு நேரிட்டிருந்தது.

**கடன்மீதி அதிகரிப்பு**

வருடாந்த வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை அதிகரிப்பின் முன்னிலையில் கடன் பெற்றுக்கொள்ளும் தொகையும் அதிகரித்திருந்தது. அரச நிதிக் கூற்றுக்களின் படி, 2023 ஆண்டு இறுதியளவில் அரசால் செலுத்த வேண்டிய கடன்மீதியாக ரூபா 29,150 பில்லியன் தொகை காணப்பட்டது. இந்த மீதி உள்நாட்டுக் கடனாக ரூபா 17,073 பில்லியன் தொகையும், வெளிநாட்டுக் கடன்களாக ரூபா 12,077 பில்லியன் தொகையுமாக காணப்பட்டது. 2022 ஆண்டின் போது அரச கடன்மீதி ரூபா 27,379 பில்லியன் தொகையாக இருந்தது. அதன்படி, 2022 ஆண்டிற்கு ஒப்பாக 2023 ஆண்டின் போது கடன்மீதி ரூபா 1,771 பில்லியன் தொகையால் அதாவது 6.47 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. 2006 ஆண்டில் காணப்பட்ட ரூபா 2,431 பில்லியன் கடன்மீதி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 82.72 சதவீதமாக காணப்பட்டது. அது 2023 ஆண்டிறுதியளவில் கடன் மீதி ரூபா 29,150 பில்லியன் தொகையாக இருந்ததுடன், அது மொத்த தேசிய உற்பத்தியில் 105.5 சதவீதமாக காணப்பட்டது. மேலும், 2013 இன் 15 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) சட்டத்தின் பிரிவு 3(ஈ) இன் பிரகாரம் அரசாங்க பொறுப்புகள் மொத்த தேசிய உற்பத்தியில் 80 சதவீதத்தைப் பார்க்கிலும் குறைவாக இருக்க வேண்டிய போதிலும், 2023 ஆம் ஆண்டின் இறுதியில் ஏனைய பொறுப்புகள் தவிர்ந்த அரசாங்கக் கடன் பொறுப்புகள் மாத்திரம் மொத்த தேசிய உற்பத்தியில் 105.5 சதவீதமாகக் காணப்பட்டது. இந்த எல்லை விஞ்சும் நிலை 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போதும் நிலவியன.




வரைபடம் 2.4 – அரச கடன்மீதி மொ.தே.உ. சதவீதமாக.

ஆதாரம் - அரச நிதிக்கூற்றுக்கள் 2007-2023 மற்றும் இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை

**அரச கடன்**

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உடன்படிக்கையிடப்பட்ட எனினும், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் மூலம் 2022 ஏப்ரல் 12 ஆம் திகதி வெளியிடப்பட்ட தற்காலிகமாக வெளிநாட்டுக்கடன் கொடுப்பனவுகளை நிறுத்தி வைப்பதற்கான கொள்கைத் தீர்மானத்தின் அடிப்படையில் 2022 ஏப்ரல் 13 ஆம் திகதி முதல் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 401 கடன் உடன்படிக்கைகளுக்கு உரிய ஆரம்பக் கடன் தொகைக் கொடுப்பனவாக ரூபா 1,439,066 மில்லியன் தொகையும் வட்டியாக ரூபா 673,964 மில்லியன் தொகையுமான ரூபா 2,113,030 மில்லியன் கடன் தவணைப் பணக்கொடுப்பனவு நிறுத்தப்பட்டிருந்தது.

2023ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் திட்டத்தின் படி மீட்கப்பட்ட மதிப்பீட்டு மற்றும் உள்ளபடியான மீட்கப்பட்ட பெறுமதி பின்வருமாறாகும்.

| | மீட்கப்பட்ட மதிப்பீட்டு மானியம் உள்ளடங்கலாக 2023 (அ.டொ) மில். | உள்ளபடியான மீட்கப்பட்ட பெறுமதி மானியம் உள்ளடங்கலாக 2023 (அ.டொ) மில். | வேறுபாடு (அ.டொ) மில். | வேறுபாடு மீட்கப்பட்ட மதிப்பீட்டின் நூற்று வீதமாக (சதவீதம்) |
|---|---|---|---|---|
| உலக வங்கி | 806 | 753.2 | (52.8) | (7) |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 1,011 | 856.9 | (154.1) | (15) |
| சீன மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு வசதிகள் முதலீட்டு (AIIB) வங்கி | 21 | 24.2 | 3.2 | 15 |
| ஜப்பான் | 31 | 39.6 | 8.6 | 28 |
| கொரியா | 10 | 0 | (10) | (100) |
| மத்திய கிழக்கு நாடுகள் | 47 | 28.9 | (18.1) | (38) |
| தெற்காசிய நாடுகள் | 90 | 142.5 | 52.5 | 58 |
| ரஷ்யா,அவுஸ்திரேலியா மற்றும் மேற்கத்தேய நாடுகள் | 30 | 32.2 | 2.2 | 7 |
| IFAD உட்பட ஐக்கிய நாடுகளின் பிரதிநிதித்துவ நிறுவனங்கள் | 15 | 9.7 | (5.3) | (35) |
| சர்வதேச நிதியீட்டல் நிதியம் | 682 | 681.5 | (0.5) | 0.07 |
| | --------- | --------- | --------- | |
| கூட்டுத்தொகை | 2,743<br>===== | 2,568.7<br>====== | (174.3)<br>====== | |

அட்டவணை 2.6 : 2023 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் திட்டத்தின் படி மீட்கப்பட்ட மதிப்பீட்டு மற்றும் உள்ளபடியான மீட்கப்பட்ட பெறுமதி

ஆதாரம் -இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை

**மீட்கப்பட்ட பெறுமதி**

2023 ஆம் ஆண்டின் மீட்கப்பட்ட மதிப்பீட்டின் மொத்தப் பெறுமதி 2,743 மில்லியன் ஐ.அ.டொலர்களான போதிலும், உள்ளபடியான மீட்கப்பட்ட பெறுமதி 2,568.7 மில்லியன் ஐ.அ.டொலர்களான காரணத்தால் உள்ளபடியான மீட்கப்பட்ட பெறுமதி 2,568.7 மில்லியன் ஐ.அ.டொலர்களானமையால் உள்ளபடியான மீட்கப்பட்ட பெறுமதி, மீட்கப்பட்ட மதிப்பீட்டைப் பார்க்கிலும் 174.3 ஐ.அ.டொலர்களான மில்லியனால் அதாவது 6 சதவீதமான அளவால் குறைவடைந்திருந்தது.

தெற்காசிய நாடுகள், ஜப்பான், சீனா மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு வசதிகள் முதலீட்டு வங்கி மற்றும் ரஷ்யா, அவுஸ்திரேலியா மற்றும் மேற்கத்தேய நாடுகள் போன்ற நாடுகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களின் உள்ளபடியான மீட்கப்பட்ட பெறுமதி மீட்கப்பட்ட மதிப்பீட்டுடன் ஒப்பிடப்பட்டு நோக்குகையில் முறையே 58, 28, 15 மற்றும் 7 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் IFAD உட்பட ஐக்கிய நாடுகளின் பிரதிநிதித்துவ நிறுவனங்களிடம் இருந்து பெறப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் கடன் முறையே 7, 15, 38 மற்றும் 35 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

2023 ஆம் ஆண்டின் போது கொரியாவில் இருந்து கடனைப் பெற்றுக்கொள்வதற்காக மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் இறுதி வரையிலும் கடன் பெறப்பட்டிருக்கவில்லை.

**உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்**

அரசாங்க நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் போது வெளிநாட்டுக் கடன் ரூபா 831,951 மில்லியனும், உள்நாட்டு வங்கியல்லாத கடன் (திறைசேரி உண்டியல்களின் மூலம் தேறிய கடன் கொடுப்பனவு உள்ளடங்கலாக) ரூபா 7,541,282 மில்லியனுமாக ரூபா 8,373,233 மில்லியன் கடன் பெறப்பட்டிருந்தது. இது முன்னைய ஆண்டுகளின் போது பெறப்பட்டிருந்த ரூபா 5,001,854 மில்லியன் கடன் தொகையுடன் (திறைசேரி உண்டியல்களின் மூலம் தேறிய கடன் கொடுப்பனவு உள்ளடங்கலாக) ஒப்பிடுகையில் ரூபா 3,371,379 ஆல் அதாவது 67.40 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

2023 ஆம் ஆண்டின் போது அரசு உள்நாட்டுக் கடன் தொடர்பில் கூடிய கவனத்தைச் செலுத்தியிருந்தது. இதன் படி, 2023 ஆம் ஆண்டின் போது பெறப்பட்டிருந்த உள்நாட்டுக் கடன் தொகை முன்னைய ஆண்டின் போது பெறப்பட்டிருந்த (திறைசேரி உண்டியல்களின் மூலம் தேறிய கடன் பெறுவனவு உள்ளடங்கலாக) ரூபா 4,218,528 மில்லியன் உள்நாட்டுக் கடன் அளவுடன் ஒப்பிடுகையில்

ரூபா 3,322,753 மில்லியன் தொகையால் அதாவது 78.77 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 2023 ஆம் ஆண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் கடன் பெறப்பட்ட விபரம் அட்டவணை 2.7 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

| விபரம் | 2023 ரூபா மில்லியன் | 2022 ரூபா மில்லியன் |
|---|---|---|
| வெளிநாட்டுக் கடன் பெறுவனவு | 831,951 | 783,326 |
| **உள்நாட்டுக் கடன் பெறுவனவு** | | |
| திறைசேரி உண்டியல் (தேறிய) | (33,929) | 1,855,672 |
| **திறைசேரி பிணைமுறி** | **7,614,523** | **2,373,044** |
| வெளிநாட்டு பிரயோக பண வங்கி அலகு (செயற்திட்டமல்லாத) | (39,656) | (77,701) |
| **அபிவிருத்தி பிணைமுறி** | **344** | **67,441** |
| வெளிநாட்டு பிரயோக பண வங்கி அலகு (செயற்திட்டமல்லாத) | - | 72 |
| **உள்நாட்டுக் காலரீதியான கடன் வசதிகள்** | **-** | **-** |
| மொத்த உள்நாட்டுக் கடன் பெறல் | **7,541,282** | **4,218,528** |
| **ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்த கடன்தொகை** | **8,373,233** | **5,001,854** |

அட்டவணை 2.7 - அரசால் பெற்றுக்கொள்ளப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்

ஆதாரம் - அரச நிதிக்கூற்றுக்கள் 2021 மற்றும் 2023

**செலுத்த வேண்டிய மொத்த அரச கடன் மீதி**

அரச நிதிக்கூற்றுக்களின் படி, 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய மொத்த அரச கடன் மீதி (வங்கி மேலதிக பற்று தவிர) ரூபா 29,150,389 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், அது 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 27,379,287 மில்லியன் தொகைக்கான மொத்த அரச கடன்மீதி (வங்கி மேலதிக பற்று தவிர) ஒப்பிடுகையில் ரூபா 1,771,102 மில்லியன் தொகையால் அதாவது 6.47 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டு மற்றும் 2023 ஆம் ஆண்டு இறுதியளவில் காணப்பட்ட மொத்த அரச கடன் தொடர்பான விபரம் ஒன்று கீழே அட்டவணை 2.8 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

| **விபரம்** | **திசெம்பர் 31 இல் மீதி** | |
|---|---|---|
| | **2023** | **2022** |
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| திறைசேரி உண்டியல் | 4,092,454 | 4,126,384 |
| திறைசேரி பிணைமுறி | 12,021,359 | 8,692,135 |
| ரூபாக் கடன் | - | 24,088 |
| இலங்கை அபிவிருத்தி பிணைமுறி | - | 391,737 |
| வெளிநாட்டு பிரயோகப் பணத்தில் உள்நாட்டுக் கடன் | 77,742 | 131,372 |

| | | |
|---|---|---|
| வெளிநாட்டு பிரயோகப் பணத்தின் வங்கி அலகு (செயற்திட்டம்) | 20,269 | 24,500 |
| சுஹுருபாய கட்டிட நிர்மாண வேலைக்காக பெறப்பட்ட கடன் | 3,982 | 4,551 |
| திறைசேரி பிணைமுறி (சுழல் பொறுப்புக்கள் (முகாமைத்துவச் சட்டம்) | 23,000 | 30,000 |
| ஓய்வூதிய பணிக்கொடைக் கடன் | 44,854 | 48,924 |
| குத்தகை கடன் கொடுத்தோர் | 1,313 | 1,865 |
| உள்நாட்டு கால ரீதியான கடன் வசதிகள் | - | - |
| அரசு பிணை வழங்கிய இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | 788,682 | 884,093 |
| மொத்த உள்நாட்டுக் கடன் | **17,073,655** | **14,359,649** |
| வெளிநாட்டு (செயற்திட்டங்கள்) | 7,301,756 | 7,665,019 |
| வெளிநாட்டு பணத்திலிருந்து காலரீதியான கடன் வசதிகள் | 709,741 | 797,589 |
| சர்வதேச இறையான்மை பிணைமுறி | 4,065,237 | 4,557,030 |
| மொத்த வெளிநாட்டுக் கடன் | 12,076,734 | 13,019,638 |
| மொத்த அரச கடன்மீதி | **29,150,389** | **27,379,287** |
| மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த தேசிய உற்பத்தி | **28,103,000** | **23,843,000** |
| மொத்த அரச கடன்மீதி மதிப்பீட்டு மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக | 103.73 | 114.83 |

அட்டவணை 2.8 - வகைப்படுத்தப்பட்ட வருட இறுதியில் காணப்பட்ட கடன்மீதி
ஆதாரம் - அரச நிதிக் கூற்றுக்கள் 2021 மற்றும் 2023

**ஆகக் கூடுதலான பொறுப்பு எல்லையை மிகைத்தல்**

2021 இன் 12 ஆம் இலக்க மற்றும் 2013 இன் 15 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்திய) சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) சட்டத்தின் பிரகாரம், ஏதேனும், ஒரு வருட இறுதியில் காணப்படக்கூடிய உச்ச பொறுப்புக்களின் பெறுமதி அவ்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 80 சதவீதத்தை மிகைத்தலாகாத போதிலும் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டுக் கடனையும் கருத்திற்கொள்கையில் 2023 ஆம் ஆண்டின் போது அந்த எல்லையை மிகைத்து பொறுப்புக்களுக்கு உட்பட்டிருந்தது. விபரம் அட்டவணை 2.9 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.


| பொறுப்புக்கள் | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொறுப்புக்கள் பெறுமதி ரூபா பில்லியன் |
|---|---|
| **வங்கி மேலதிக பற்று** | 80 |
| **அரச கடன்கள் (அரச நிதிக் கூற்றுக்களின் படி)** | 29,150 |

| | |
|---|---|
| **மத்திய வங்கி முற்பணம்** | - |
| **நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்படாத பொறுப்புக்கள்** | |
| • **கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டுக் கடன்** | 15 |
| **மொத்தப் பொறுப்புகள்** | 29,245 |
| **மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி** | 28,103 |
| **மொத்த பொறுப்புக்கள் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக** | 104.06 |

அட்டவணை 2.9 – உச்ச பொறுப்புக்கள் எல்லையை மிகைத்தல்
ஆதாரம் - அரச நிதிக்கூற்றுக்கள்

**அரச தொழில் முயற்சிக் கடனுக்காக வங்கிகளுக்கு வழங்கப்பட்டிருந்த பிணை மற்றும் சலுகை கடிதப் பெறுமதி**

திறைசேரியின் பிணை மீது அரச தொழில் முயற்சிகளால் பெற்றிருந்த கடனுக்காக வங்கிகளுக்கு வழங்கப்பட்டிருந்த பிணை மற்றும் சலுகை கடிதங்களின் பெறுமதி ரூபா 2,034 பில்லியன் தொகையும் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் வெளிநாட்டு செலவு அலகுகளின் வருடாந்த நிதிக் கூற்றுக்களில் பொறுப்புக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 117 பில்லியன் பெறுமதியும் மேற்கூறிய பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை.





வரைபடம் 2.5 - தனிநபர் கடன் தொகை
ஆதாரம் - அரச நிதிக்கூற்றுக்கள் 2007-2023 மற்றும் மத்திய வங்கி வருடாந்த அறிக்கை

மேற்கூறிய தகவல்களின் படி, மொத்த அரச கடன் மத்திய வருடாந்த சனத்தொகையுடன் ஒப்பீடு செய்யும் போது 2012 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 264,811 தொகையான தனிநபர் கடன் பெறுமதி 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,322,793 தொகை வரை அதிகரித்திருந்தது. அதேபோல் அது 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,234,358 தொகைக்கான

தனிநபர் கடன்தொகையுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 88,435 தொகையால் அதாவது சுமார் 7.16 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

**அரச வருமானம் குறைவடைந்து கடன் தவணை மற்றும் வட்டி கொடுப்பனவு அதிகரித்தல்**

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 2023 ஆம் ஆண்டின் போது தேறிய கடன் கொடுப்பனவு (உள்நாடு மற்றும் வெளிநாடு) ரூபா 208,368 மில்லியன் தொகையால் அதிகரித்திருந்ததுடன் கடனுக்கான வட்டிக் கொடுப்பனவும் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 890,410 மில்லியன் தொகையால் அதாவது 56.89 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டுகளைப் போன்று 2023 ஆம் ஆண்டின் போதும் கடன் தவணைகள் மற்றும் வட்டி செலுத்தப்படுவதற்காக சேகரிக்கப்பட்ட வருமானம் போதியளவானதாக காணப்படவில்லை. விபரங்கள் வரைபடம் 2.6 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.




வரைபடம் 2.6 - கடன் தவணை மற்றும் வட்டி செலுத்துவதற்காக சேகரிக்கப்பட்ட வருமானம் போதாமை

ஆதாரம் - அரச நிதிக்கூற்றுக்கள் 2013-2023

**அரச தொழில் முயற்சிகளுக்காக அரசாங்க மூலதனப் பங்களிப்பு**

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரச நிதிக்கூற்றுக்களின் படி, அரச தொழில் முயற்சிகளுக்காக மூலதனப் பங்களிப்பின் பெறுமதி ரூபா 2,407,633 மில்லியன் தொகையானதுடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அப் பெறுமதி ரூபா 2,165,982 மில்லியனாகக் காணப்பட்டது. இதன் படி, 2023 ஆம் ஆண்டிற்கு உரித்தாக அரச தொழில் முயற்சிகளுக்காக மூலதனப் பங்களிப்பின் பெறுமதி ரூபா 241,651 மில்லியனால் அதாவது 11.16 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. தொழில் முயற்சித் திணைக்களத்

தினூடாக கண்காணிக்கப்படும் 305 அரச தொழில் முயற்சியாளர்களுக்கிடையே 2022 ஆம் ஆண்டிற்கு உரித்தாக தொழில் முயற்சித் திணைக்களத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படும் 101 அரச தொழில் முயற்சியாளர்களுக்கு உரிய நிதிக்கூற்றுப் பகுப்பாய்வு செய்யப்படுகையில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**தொடர்ச்சியாக நட்டத்தை ஈட்டும் அரச தொழில்முயற்சியாளர்கள்**

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்கத்தால் ரூபா 1,124,665 மில்லியன் தொகையான மூலதனப் பங்களிப்பை வழங்கியிருந்த 13 அரச தொழில் முயற்சியாளர்களின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அப் பெறுமதி ரூபா 1,047,967 ஆகக் காணப்பட்டதுடன், அந் நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களின் படி, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவற்றின் தேறிய சொத்துக்கள் (மொத்த சொத்துக்கள் - மொத்த வெளவாரிப் பொறுப்புகள்) மறைப் பெறுமதியான ரூபா 630,632 ஆகக் காணப்பட்டது. இதன் படி, அரச நிதிக் கூற்றுக்களில் நிதிசார் சொத்துக்களின் கீழ் மூலதனப் பங்களிப்புக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பெறுமதி முழுப்பெறுமதியும் காலக்கழிவிடப்பட்டு (impairment), குறித்த நிறுவனம் முற்றாக வெளிவாரிப் பொறுப்பின் கீழ் இயங்கும் நிலைக்கு உட்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. குறித்த நிறுவனம் தொடர்ந்து நட்டமடைந்திருந்த காரணத்தால் பிடித்து வைக்கப்பட்ட நட்டம் மறைப் பெறுமதியைக் கொண்டிருந்தமை இதற்கான மூல காரணமாகியிருந்தது.

**மூலதனப் பங்களிப்பு தரக்குறைவான நிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ள அரச தொழில் முயற்சிகள்**

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் முறையே ரூபா 1,019,628 மில்லியனும் ரூபா 892,035 மில்லியனுமான அரசாங்க மூலதனப் பெறுமதியுடனான 05 தொழில் முயற்சிகளின் குறித்த நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்களின் படி, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 371,771 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. இதன் படி, இவ் அரச தொழில் முயற்சிகளின் முதலீடு செய்யப்பட்ட மூலதனப் பங்களிப்புப் பெறுமதி காலக்கழிவிடப்பட்டிருந்தமை (impairment) அவதானிக்கப் பட்டது.

**தேறிய சொத்துக்கள் தரக்குறைவான நிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ள அரச தொழில் முயற்சிகள்**

அரச நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரச தொழில் முயற்சிகளுக்கான மூலதனப் பங்களிப்பு ரூபா 2,165,982 மில்லியன் தொகையானதுடன் இதில் ரூபா 2,121,654 மில்லியனான அரச கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபைகள் மற்றும் அரச சார் கம்பனிகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், இத் தொகுதிக்கு உரித்தான அரச தொழில் முயற்சிகளின் நிதிக்கூற்றின் படி அன்றைய தினத்திற்கு தேறிய சொத்துக்கள் ரூபா 1,669,676 மில்லியன் தொகையாகியிருந்தது. இதன் படி, அந் நிறுவனங்களின் அரச மூலதனப் பங்களிப்பு அந் நிறுவனங்களின் தேறிய

சொத்துக்களுடன் ஒப்பிடுகையில் 21 சதவீதத்தால் அதாவது ரூபா 451,977 மில்லியனால் தரக்குறைவாகப் பயன்படுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**மொத்த தேறிய நட்டம்**

2022 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்தால் முதலீடு செய்யப்பட்ட 32 நியதிச்சட்ட சபைகளுக்கு உரித்தாக ரூபா 117,719 மில்லியனான தேறிய இலாபம் ஏற்பட்டிருந்த போதிலும் 36 அரச கூட்டுத்தாபனங்களுக்கும் 30 அரச கம்பனிகளுக்கும் உரித்தாக முறையே ரூபா 804,795 மில்லியன் தொகையும் ரூபா 133,722 மில்லியன் தொகையுமாக தேறிய நட்டம் ஏற்பட்டிருந்தமையால் இந்த 98 நிறுவனங்களுக்கு உரித்தான மொத்த ரூபா 820,799 தேறிய நட்டம் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இலங்கை மத்திய வங்கி அறிக்கையின் படி, 2022 ஆம் ஆண்டின் மத்திய வருடாந்த மக்கள் தொகை 22,181,000 ஆகக் காணப்பட்டதுடன் இதன் படி, அரச சார்பான 98 வியாபார நிறுவனங்களுக்காக 2022 ஆம் ஆண்டிற்காக ஏற்கப்பட்ட தனி நபர் தேறிய நட்டம் ரூபா 37,000 அளவிலாகும் என்பதுவும் மேலும் அவதானிக்கப்பட்டது.

**திரவத்தன்மைச் சிரமங்களை எதிர்கொள்ளும் ஆபத்து**

2022 ஆம் ஆண்டின் இறுதியில் 17 அரச தொழில் முயற்சிகளுக்கு உரித்தான நடைமுறை விகிதம் வலிவான நிலையில் காணப்பட்டது. குறிப்பாக இலங்கை விமானக் கம்பனியின் நடைமுறை விகிதம் 0.15 ஆன மிகவும் குறைவான அளவில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. இதன் படி, இவ் அரச தொழில் முயற்சியாளர்கள் திரவத்தன்மைச் சிரமங்களை எதிர்கொள்ளும் உயரிய ஆபத்து உள்ளமை மேலும் அவதானிக்கப்பட்டது.

**மிகை மூலதன மாற்று நிலை**

2022 ஆம் ஆண்டின் இறுதியில் 16 அரச தொழில் முயற்சிகள் தொடர்பாக மிகை மூலதன மாற்று நிலை ஒன்று அவதானிக்கப்பட்டது. இதில் சில நிறுவனங்களின் அரசாங்க மூலதனப் பங்களிப்பைப் பார்க்கிலும் செலுத்தப்பட வேண்டிய நீண்ட காலக்கடன் கூடுதலான மீதியைக் கொண்டிருந்தது. மேலும், அரச மூலதனப் பங்களிப்பு மறைான பெறுமதியைக் கொண்ட அரசாங்க தொழில் முயற்சிகளும் அவதானிக்கப்பட்டதுடன் அந் நிறுவனங்கள் முற்றாக நீண்டகாலக் கடன் மூலம் நிதியீட்டம் செய்யப்பட்டிருந்தன. இதன் படி, இச் சகல நிறுவகங்களும் உயரிய நிதி இடர்ப்பாட்டைப் (Financial Risk) போன்று தொடர் இயக்கம் குறித்தும் பாரிய ஆபத்தை எதிர்கொண்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

**ஆண்டின் போது அரசாங்கத்திற்கு உரித்தான முயற்சிகளின் மூலதனப் பங்களிப்பிலான அதிகரிப்பு**

அரச நிதிக்கூற்றுக்களின் படி, 2023 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்திற்கு உரித்தான முயற்சிகளின் மூலதனப் பங்களிப்பிலான அதிகரிப்பு ரூபா 269,386 ஆகக் காணப்பட்டதுடன் இதில், ரூபா 34,090 மில்லியனான அதாவது 13 சதவீதமான ஒவ்வொரு நிறுவனங்களின் மீண்டெழும் தன்மையிலான அதாவது கடன் மற்றும் கடன்

வட்டிக் கொடுப்பனவுகளும் சம்பளங்கள் மற்றும் ஊதியக் கொடுப்பனவிற்காக திறைசேரியால் விடுவிக்கப்பட்டிருந்த பணத்தில் உள்ளடங்கியிருந்தது.

**மிஹின் லங்கா தனியார்) கம்பனியின் கடன் தவணைப்பணக் கொடுப்பனவு**

மிஹின் லங்கா (தனியார்) கம்பனி கலைக்கப்படுவது தொடர்பாக MOF/DG/LAD/CO/142/2017 ஆம் இலக்க 2017 ஒக்டோபர் 30 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனப் பரிந்துரைப்பின் (அ), (ஆ) மற்றும் (இ) இற்காக அமப/17/2383/733/026-1 ஆம் இலக்க 2017 நவம்பர் 08 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இதன் படி, கம்பனி யைக் கலைப்பதற்காக விசேட பரிந்துரை அங்கீகரிக்கப்பட்டதை அடுத்து திறைசேரிச் செயலாளரால் வர்த்தக மேல் நீதிமன்றத்தால் மேற்கொள்ளப்பட்ட கோரலின் படி, 2018 மார்ச் 18 நீதிமன்றத்தால் கலைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். அவ்வாறிருக்கையில் அக் கம்பனிக்கு உரிய கடன் தவணைப்பணம் மற்றும் வட்டிக் கொடுப்பனவிற்காக 2021 ஆம் 2022 ஆம் ஆண்டுகளுக்காக முறையே ரூபா 272 மில்லியன் தொகையும் ரூபா 441 மில்லியன் தொகையுமாக மொத்தம் ரூபா 713 மில்லியன் திறைசேரியால் வழங்கப்பட்டிருந்தது.

## அரச வருமானம்

2023 ஆம் ஆண்டிற்காக பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த வரவு செலவுத்திட்டத்தின் ஆரம்ப மதிப்பீட்டின் படி, அரச வருமானம் ரூபா 3,408 பில்லியனாக இருந்ததுடன், முன்னைய ஆண்டில் இது 2,084 பில்லியனாக இருந்தது. இதன்படி, முன்னைய ஆண்டைப் பார்க்கிலும் அரச வருமானம் ரூபா 1,324 பில்லியனால் அதாவது 64 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டு அரச வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

## மொத்த தேசிய உற்பத்தி

2023 ஆம் ஆண்டின் மொத்த தேசிய உற்பத்தி ரூபா 27,630 பில்லியனானதுடன் 2022 ஆம் ஆண்டின் மொத்த தேசிய உற்பத்தி ரூபா 24,063 பில்லியனாகக் காணப்பட்டது. இதன்படி, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த தேசிய உற்பத்தி ரூபா 3,567 பில்லியனால் அதாவது 14.82 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருந்தது.

## வருமான மதிப்பீடு

வருமான மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் ஆரம்ப வருமான மதிப்பீடு வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரால் ரூபா 2,880 பில்லியனாகக் காண்பிக்கப்பட்டு ரூபா 528 பில்லியனால் குறைக்கப்பட்டு திருத்தப்பட்டிருந்தது. அத் திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டின் படி அரச வருமானம் மொத்த தேசிய உற்பத்தியின் 10.4 சதவீதமாகக் காணப்பட்டது. வருமான மதிப்பீட்டைத் தயாரிக்கையில் மொத்த தேசிய உற்பத்தியின் அதிகரிப்பு தொடர்பாக கருத்தில் கொள்ளப்பட வேண்டியதாக இருந்த போதிலும் அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படாது வருமானம் மிகை மதிப்பீடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## சேகரிக்கப்பட்ட அரச வருமானம்

2023 ஆம் ஆண்டின் சேகரிக்கப்பட்ட அரச வருமானம் அரச நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட செயலாற்றல் மற்றும் பற்றாக்குறை நிதியீட்டக் கூற்றின் படி ரூபா 3,079 பில்லியனாக இருந்ததுடன் இது திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டைப் பார்க்கிலும் ரூபா 199 பில்லியனால் அதிகரித்திருந்தது. இதன் படி, பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் படி, வருடாந்த வருமான ஆரம்ப மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 329 பில்லியனால் குறைவடைந்திருந்தது. 2012 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான கால வீச்சிற்குள் ஒவ்வொரு ஆண்டின் போதும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருமான மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட வருமானத்தைப் பார்க்கிலும் சேகரிக்கப்பட்ட வருமானத்தில் குறைவு 4.08 சதவீதத்தில் இருந்து 26.06 சதவீதமான வீச்சைக் கொண்டிருந்ததுடன் அக் காலப்பகுதியின் போது அதிகளவான சதவீதம் 2021 ஆம் ஆண்டின் போது பதிவாகியிருந்தது.

## வட்டிக் கொடுப்பனவுகள்

2023 ஆம் ஆண்டின் போது வரவு செலவுத் திட்டச் செயலாற்றல் மற்றும் பற்றாக்குறை நிதியீட்டக் கூற்றின் படி சேகரிக்கப்பட்ட ரூபா 3,079 பில்லியனான அரச வருமானத்தில் ரூபா 2,455 பில்லியன் அதாவது 79.73 சதவீதம் வட்டி செலுத்தப்படுவதற்காக செலவிடப்பட்டிருந்தது.

அரச வருமானம்

## நிலுவை வருமான மீதி

வருமானத்தைச் சேகரிக்கும் முக்கிய நிறுவனமான உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை சுங்கம், மதுவரித் திணைக்களம் மற்றும் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு உரித்தாக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த நிலுவை வருமான மீதியின் கூட்டுத்தொகை ரூபா 1,132 பில்லியனாக இருந்தது.

## வருமானப் பற்றாக்குறை

சரியான விதத்தில் வருமான மதிப்பீட்டைத் தயாரித்திராமை அல்லது தயாரிக்கப்பட்ட வருமான மதிப்பீட்டின் படி வருமானத்தை சேகரித்திராமையும், சிக்கனமான முறையில் செலவினத்தை முகாமைத்துவம் செய்திராமையாலும் அரச கடனைப் பெற்றுக்கொள்வதற்கு நேர்ந்திருந்தது. அக் கடன் பெறுவனவு வருடாந்தம் அதிகரித்திருந்தமையால் கடன் வட்டிக் கிரயம் வருடாந்தம் அதிகரித்திருந்ததன் காரணமாக மீண்டெழும் செலவினம் அதிகரித்திருந்தது. மதிப்பிடப்பட்ட வருமானத்தை எதிர்பார்த்தவாறு சேகரித்துக் கொள்வதற்கு இயலாதிருந்தமையும், மீண்டெழும் செலவினம் அதிகரித்திருந்தமையாலும் வருடாந்த செலவினத்தைத் தீர்த்துவைப்பதற்கு வருமானம் போதாதிருந்தமையால் வருமானப் பற்றாக்குறை வருடாந்தம் அதிகரித்திருந்தது.


## அரச முதலீடு

மீண்டெழும் செலவினத்தை ஈடுசெய்வதற்காக போதிய வருமானத்தைச் சேகரித்துக்கொள்வதற்கு 2006 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது தவறியிருந்த போதிலும் அக் காலப்பகுதியில் அரச முதலீடாக ரூபா 10,145 பில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அப் பயன்பாட்டிற்குத் தேவையான நிதியம் முழுதுமாக அரச கடன் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நிதிக்கூற்றுக்களின் பகுப்பாய்வின் மூலம் தெளிவாகியுள்ளது.

| | | 2019 | | 2020 | | 2021 | | 2022 | | 2023 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | திருத்தப் பட்ட மதிப்பீட்டப் பட்டவை | சேகரிக்கப்பட் ட உள்ளபடியா னவை ரூபா | திருத்தப் பட்ட மதிப்பீட்டப் பட்டவை ரூபா மில் | சேகரிக்கப்பட் ட உள்ளபடியா னவை ரூபா | திருத்தப் பட்ட மதிப்பீட்டப் பட்டவை | சேகரிக்கப்பட் ட உள்ளபடியா னவை ரூபா | திருத்தப் பட்ட மதிப்பீட்டப் பட்டவை | சேகரிக்கப்பட் ட உள்ளபடியா னவை ரூபா | திருத்தப் பட்ட மதிப்பீட்டப் பட்டவை ரூபா மில் | சேகரிக்கப்பட் ட உள்ளபடியா னவை ரூபா |
| 1. | உள்நாட்டு இறைவரி | 1,038,129 | 975,942 | 575,403 | 511,189 | 612,615 | 619,715 | 1,132,012 | 1,045,188 | 1,761,984 | 1,832,274 |
| 2. | இலங்கை சுங்கம | 862,815 | 619,458 | 634,560 | 566,463 | 553,053 | 522,419 | 513,341 | 523,346 | 628,054 | 694,082 |
| 3. | மோட்டார் வாகனப் போக்குவரத்து | 10,580 | 13,902 | 8,445 | 9,027 | 7,002 | 7,709 | 6,130 | 7,928 | 13,150 | 15,262 |
| 4. | மதுவரி | 135,045 | 115,417 | 130,035 | 121,028 | 140,035 | 138,674 | 185,036 | 165,227 | 182,000 | 171,273 |

அட்டவணை இல. 2.9 2023 உள்ளடங்கலாக 5 ஆண்டுகளுக்கான உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை சுங்கம், மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம், மற்றும் மதுவரித் திணைக்களம் போன்ற நிறுவனங்களின் திருத்தப்பட்ட மதிப்பீட்டு மற்றும் உள்ளபடியான சேகரிப்புகள்


2023 உள்ளடங்கலாக 5 ஆண்டுகளுக்கான உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை சுங்கம், மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம், மற்றும் மதுவரித் திணைக்களம் போன்ற நிறுவனங்களின் திருத்தப்பட்ட மதிப்பீட்டு மற்றும் சேகரிப்புகள் பின்வருமாறாகும்.




வரைபடம் இல. 2.7 திருத்தப்பட்ட மதிப்பீடிடப்பட்ட மற்றும் சேகரிக்கப்பட்ட உள்ளபடியான வருமானம்
ஆதாரம் : 2019 – 2023 நிதிக் கூற்றுக்கள்

## உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

2023 உள்ளடங்கலாக 5 ஆண்டுகளில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் சேகரிக்கப்பட்ட உள்ளபடியான வருமானம் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.




வரைபடம் இல. 2.8: 2019 – 2023 உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் மதிப்பீடிடப்பட்ட மற்றும் சேகரிக்கப்பட்ட உள்ளபடியான வருமானம்
ஆதாரம் : உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 2019 – 2023 நிதிக் கூற்றுக்கள்


**மதிப்பிடப்பட்ட மற்றும் சேகரிக்கப்பட்ட வருமானம்**

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 2023 ஆம் ஆண்டின் மதிப்பிடப்பட்ட மொத்த வருமானம் ரூபா 2,090,013 மில்லியனானதுடன் இது மீள ரூபா 1,761,984 மில்லியனாக திருத்தப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது ரூபா 1,832,274 மில்லியன் வருமானத்தைச் சேகரிக்கக் கூடியதாக இருந்தது.

**நிலுவை வருமானம்**

| ஆண்டு | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா மில் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை வருமானம் ரூபா மில் |
|---|---|---|
| 2019 | 975,942 | 116,783 |
| 2020 | 511,189 | 56,721 |
| 2021 | 619,715 | 619,726 |
| 2022 | 1,045,188 | 904,342 |
| 2023 | 1,832,274 | 1,066,789 |

அட்டவணை இல. 2.10 : உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கடந்த 05 வருடங்களின் நிலுவை வரி வருமானம்
ஆதாரம் : உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்கள்




வரைபடம் இல. 2.9: உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கடந்த 05 வருடங்களின் நிலுவை வரி வருமானம்
ஆதாரம் : உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்கள்

அறவிடப்பட வேண்டிய மொத்த நிலுவை வரித் தொகை ரூபா 1,066 பில்லியனாகக் காணப்பட்டது. அவ் வருமானம் 2023 ஆம் ஆண்டின் போது அறவிடப்படுவதற்கு முயன்றிருப்பின் அவ் ஆண்டிற்கான வருமானப் பற்றாக்குறை ரூபா 584 பில்லியனாக அதாவது 35.39 ஆல் குறைத்துக் கொள்ள இயலுமாக இருந்தது.

வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமையில் நிலவும் குறைபாடுகள், நிலுவை வரி மேன்முறையீட்டுச் செயற்பாட்டின் நீண்ட காலம், நிலுவை வரி அறவீடு தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு விசேடமான நீதிமன்ற முறைமை ஒன்றை ஸ்தாபித்திராமை போன்ற காரணங்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் நிலுவை வரியை அறவிடுவதிலான தாமதத்திற்குத் தாக்கமளித்திருந்தன.

**மூன்றாம் தரப்பினரால் சேகரிக்கப்படும் வரி வருமானம் தொடர்ந்து அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை**

2023 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 454,927 மில்லியனான மொத்த நிலுவையின் பெறுமதி சேர் வரியில் ரூபா 347,372 மில்லியன் பல்வேறு காரணங்களால் அறவிடுவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் எஞ்சிய ரூபா 107,555 மில்லியன் தொகையை அறவிட்டுக்கொள்ளக் கூடிய பெறுமதி சேர் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் திணைக்களத்தால் அறவிடப்பட வேண்டிய வரி குறித்த காலப்பகுதிக்குள் அறவிட்டுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராததன் காரணத்தால் இது வரையில் மக்களால் அர்ப்பணிப்புடன் அரசாங்கத்திற்கு வருமானமாகச் செலுத்தப்பட்டிருந்த வருமானத்தில் பாரிய தொகை முறைகேடாகப் பயன்படுத்தப்படுவதற்கும் அரசாங்கத்திற்குக் கிடைக்கப்பெறாது போவதற்குமான அபாயம் ஏற்பட்டிருந்தது.

2008 இன் 15 ஆம் இலக்க திருத்தப்பட்ட பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டத்தின் படி, “37 ஆம் பிரிவின் கீழ் 5 ஆண்டுகள் கடந்துள்ள சந்தர்ப்பத்தில் செலுத்தத் தவறிய வரியை அறவிட்டுக்கொள்வதற்காக அதிகாரச்சட்டத்தின் 42 ஆம், 43 ஆம், 44 ஆம் அல்லது 48 ஆம் பிரிவுகளின் கீழ் ஆணையாளரால் எவ்வித சட்ட நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்படலாகாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளமையால் அறவிடப்படக் கூடியதாக இருந்த இந் நிலுவை வரியும் தண்டப்பணமும் அரசாங்கத்திற்கு அறவிடப்படக் கூடியதாக இருந்த இயலுமை இடரிற்கு உட்பட்டிருந்தது.

**வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் ஒழுங்கமைப்பின் பராமரிப்பு நடவடிக்கைகள்**


திணைக்களத்தால் வரி வருமானம் சேகரித்தலின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமையை (RAMIS) நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த

துடன், அதற்காக 2023 திசெம்பர் வரையில் ஏறத்தாழ ரூபா 14,428 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இருப்பினும் RAMIS முறைமையின் செயற்திறனுக்குத் தேவையான நடவடிக்கைகளை ஒழுங்காக மேற்கொள்ளப்பட்டிராததன் காரணமாக 2024 சனவரி வரையிலும் முறைமையை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கையேற்பதற்குத் தேவையான பதவியணி ஆட்சேர்க்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக 2024 பெப்ரவரி 01 ஆம் திகதி முதல் 2027 சனவரி 31 ஆம் திகதி வரை மேலும் 03 வருட காலத்திற்கான RAMIS முறைமையின் பராமரிப்பு சேவை உடன்படிக்கையை நீடிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் 2024 ஏப்ரல் 30 ஆம் திகதி கிடைக்கப்பெற்றிருந்ததுடன் இதற்காக 31 சிங்கப்பூர் டொலர் மில்லியன் (ரூபா 6,844) (மேற்குறித்த தினத்தில் உள்ளவாறான தீர்வையற்ற) மேற்படாத தொகையைச் செலவிடுவதற்கு நேர்வதும் அவதானிக்கப்பட்டது.

## இலங்கை சுங்கம்

### மதிப்பிடப்பட்ட மற்றும் சேகரிக்கப்பட்ட உள்ளபடியான வருமானம்

2023 ஆம் ஆண்டு உள்ளடங்கலாக முன்னைய 5 ஆண்டுகளிற்காக இலங்கை சுங்கத் திணைக்களத்தின் மதிப்பிடப்பட்ட மற்றும் சேகரிக்கப்பட்ட உள்ளபடியான வருமானம் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.




வரைபடம் இல. 2.10: 2019 – 2023 இலங்கை சுங்கத்தின் மதிப்பீடப்பட்ட மற்றும் சேகரிக்கப்பட்ட உள்ளபடியான வருமானம்
ஆதாரம் : இலங்கை சுங்கத்தின் நிதிக் கூற்றுக்கள்


இலங்கை சுங்கத்தின் 2023 ஆம் ஆண்டின் மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 800,949 மில்லியனானதுடன் இது மீள ரூபா 628,054 ஆக திருத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 694,082 ஆன வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

**நிலுவை வரி வருமானம்**

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 58,479 மில்லியன் தொகையான மொத்த நிலுவை வருமானத்தில் ரூபா 57,709 மில்லியன் அதாவது 99 சதவீதமானவை 2020 ஆம் ஆண்டு முதல் நிலவி வரும் நிலுவை வருமானமாவதுடன் பழைய நிலுவை வரி வருமானங்களுக்கு உரித்தான தகவல்கள் திணைக்களத்தில் இருந்து தேடிக்கொள்வதில் சிரமம் ஏற்பட்டிருந்தது.

| ஆண்டு | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா மில் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை வருமானம் ரூபா மில் |
|---|---|---|
| 2019 | 619,458 | 22,934 |
| 2020 | 566,468 | 63,459 |
| 2021 | 522,419 | 60,885 |
| 2022 | 523,346 | 61,254 |
| 2023 | 694,082 | 58,479 |

அட்டவணை இல. 2.10 : இலங்கை சுங்கத்தின் கடந்த 05 வருடங்களின் நிலுவை வரி வருமானம்
ஆதாரம் : இலங்கை சுங்கத்தின் நிதிக் கூற்றுக்கள




வரைபடம் இல. 2.11: இலங்கை சுங்கத்தின் கடந்த 05 வருடங்களின் நிலுவை வரி வருமானம்
ஆதாரம் : இலங்கை சுங்கத்தின் நிதிக் கூற்றுக்கள்

**விரலடையாள இயந்திர அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிராமை**

2023 ஆம் ஆண்டின் போது இலங்கை சுங்க உத்தியோகத்தர்களில் 2,204 பேர் கடமைக்குச் சமூகமளித்தமை குறித்து உறுதிப்படுத்தும் சான்றுபடுத்தலுக்கான ஆதாரமான விரலடையாள இயந்திர அறிக்கை கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. இதன் பிரகாரம், ரூபா 996 மில்லியனான மேலதிக நேரக் கொடுப்பனவுகளின் துல்லிய நிலையை உறுதிப்படுத்து வதற்கு கணக்காய்விற்கு இயலாதிருந்தது.


| | |
|---|---|
| **நீண்ட காலம் கஜான்களில் (yard) நிறுத்தி வைக்கட்டிருத்தல்** | வருடாந்தம் ரூபா 41.8 மில்லியன் வாடகை செலுத்தப்பட்டு சுங்கத்திணைக்களத்தால் மட்டக்குளி பிரதேச தனியார் கம்பனி ஒன்றிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஓர் காணியில் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி கைப்பற்றப்பட்ட 435 வாகனங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 152 வாகனங்கள் 5 வருடங்களுக்கு முன்னர் கைப்பற்றப்பட்டிருந்தவையாகும். ருஹுனுபுர துறைமுக வளாகத்திலும் மேலும் 202 வாகனங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 5 வருடங்களுக்கு முன்னர் கைப்பற்றப்பட்டிருந்த 36 வாகனங்கள் இருந்தன. நீண்டகாலமாக கஜான்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததன் காரணமாக வாகனங்கள் உக்கலடைந்து பயன்பாட்டிற்கு தகுதியற்ற நிலைக்கு உட்பட்டிருந்தமையால் ஏலவிற்பனையின் மூலம் நியாயமான பணத்தொகையை உழைத்துக்கொள்ள இயலாத நிலை ஏற்பட்டிருந்தது. |
| **மோசடி செய்வதற்கு எத்தனித்து தீர்வை வரி பெறுமதிச் சலுகையை வழங்குதல்** | தனியார் கம்பனி ஒன்றால் போலி விலைப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டு 2023 ஆம் ஆண்டின் போது இறக்குமதி செய்யப்பட்டிருந்த விலங்கு உணவு இருப்பிற்கு உரித்தாக அக் கம்பனியால் வரி செலுத்துவதில் இருந்து தவிர்த்துக்கொண்ட வரிப் பெறுமதி ரூபா 15 மில்லியன் தொகையானதுடன் குறைவாகக் காண்பிக்கப்பட்ட பொருட்களின் பெறுமதி (Under Value) ரூபா 64 மில்லியனாகும். எவ்வாறெனினும், விசாரணையின் முடிவில் மோசடி செய்யப்படுவதற்கு முனைந்த தீர்வை வரிப் பெறுமதிக்காக ரூபா 0.5 மில்லியனான தளர்த்தப்பட்ட இழப்பும் குறைத்துக் காண்பிக்கப்பட்ட பொருட்களின் பெறுமதிக்காக ரூபா 19 மில்லியனான இழப்பை மாத்திரம் விதிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அது மேற்கொள்ளப்பட்ட தவறுடன் ஒப்பிடுகையில் பாரிய தளர்வாகும் என்பது அவதானிக்கப்பட்டது. |
| **சுங்கத் தவறுகள்** | 2023 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட விசாரணைகளுக்கு அடிப்படையாக இருந்த 1902 சுங்கத் தவறுகளில் மிகையான பொருள் இறக்குமதி செய்யப்பட்ட 224 சந்தர்ப்பங்களும், வெளிப்படுத்தப்படாத 498 பொருள் இறக்குமதிகளும், பெறுமதி குறைவாக வெளிப்படுத்தப்பட்ட 207 இறக்குமதிகளும், தடைசெய்யப்பட்ட அல்லது மட்டுப்படுத்தப்பட்ட பொருட்களின் 188 இறக்குமதிகளும் சுங்கக் கட்டளைச் சட்டத்தை மீறிய வேறு 211 சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. |
| **விசாரணை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாது காலாவதியாகிய கொள்கலன்கள்** | 1968 இன் 17 ஆம் இலக்க சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 162 ஆம் பிரிவின் படி, கைப்பற்றப்பட்டதை அடுத்து சட்ட விரோதமானவை எனக் குறிப்பிடப்பட்ட வரி தொடர்பாக போதியளவு விரைவாக ஏற்ற வகையில் செயற்பட வேண்டிய |

போதிலும், பெறுமதி குறிப்பிடப்படாத 02 வருடங்கள் முதல் 12 வருடங்கள் வரை பழைமை வாய்ந்த பல்வேறு உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்கள் மற்றும் உர வகை முதலியவற்றுடனான 39 கொள்கலன்களும், 01 வருடம் முதல் 05 வருட காலம் வரை பழைமை வாய்ந்த பல்வேறு பொருட்கள் அடங்கிய 448 கொள்கலன்களும், உள்ளீட்டுப் பொருட்கள் உள்ளனவா/ இல்லையா எனக் குறிப்பிடப்படாது 05 முதல் 10 வருடங்கள் வரை பழைமை வாய்ந்த 116 கொள்கலன்களும், 10 வருடங்களுக்கு மேற்பட்ட 38 கொள்கலன்களும், 01 முதல் 06 வருட காலம் வரை பழைமை வாய்ந்த ரூபா 186 மில்லியன் பெறுமதியான அரிசியுடனான 53 கொள்கலன்களுமாக 694 கொள்கலன்கள் ஆய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாது 2023 ஆம் ஆண்டின் இறுதித் தினம் வரையிலும் சுங்கத்திடம் உள்ள பல்வேறு கஜான்களில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தன.

## மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்

**மதிப்பிடப்பட்ட மற்றும் சேகரிக்கப்பட்ட வருமானம்**

2023 ஆம் ஆண்டு உள்ளடங்கலாக கடந்த 5 ஆண்டுகளிற்காக மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் மதிப்பிடப்பட்ட மற்றும் சேகரிக்கப்பட்ட வருமானம் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.




வரைபடம் இல. 2.12: 2023 ஆம் ஆண்டு உள்ளடங்கலாக கடந்த 05 வருடங்களின் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் மதிப்பீடப்பட்ட மற்றும் சேகரிக்கப்பட்ட உள்ளபடியான வருமானம்
ஆதாரம் : மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்கள்

மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் 2023 ஆம் ஆண்டின் மதிப்பிடப்பட்ட வரி மற்றும் வரியல்லாத வருமானம் முறையே ரூபா 630 மில்லியனாகவும் ரூபா 5,500

மில்லியனாகவும் இருந்ததுடன் இது மீள முறையே ரூபா 1,650 மில்லியன் மற்றும் ரூபா 11,500 மில்லியன் வரை திருத்தப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது முறையே ரூபா 3,064 மில்லியனும் ரூபா 12,198 மில்லியனும் சேகரிக்கப்பட்டதன் காரணமாக வரவு செலவுத் திட்ட மதிப்பீடு முறையாக எதிர்வு கூறப்பட்டு பாராளுமன்ற அங்கீகாரம் இன்றி மாற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2023.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட ஆடம்பர வரி வருமானம் ரூபா 137 மில்லியனாகக் காணப்பட்டது.

**சட்டரீதியான சுங்கச் செயற்பாடுகள் இன்றி இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் பதிவுசெய்யப்படுதல்**

2016 செப்தெம்பர் 07 ஆம் திகதிய அமப/16/1307/709/061 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் படி சட்டரீதியான சுங்கச் செயற்பாடுகள் இன்றி இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் எரிபொருள் இயலளவை அடிப்படையாகக் கொண்டு மிகை அறவீட்டை அறவிடுவதற்குட்பட்டு மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு பதிவு செய்யப்படுகையில் இயந்திர இயலளவு 201சீசீ முதல் 450 சீசீ வரை தொகுதியின் 296 இயந்திரங்களுக்காக அறவிடப்பட வேண்டிய குறித்த கட்டணத்தை அறவிட்டிராத காரணத்தால் அரசாங்கத்திற்குக் கிடைக்கப்பெற வேண்டிய ரூபா 78 மில்லியன் தொகையான வருமானம் கிடைக்கப்பெறாது போயிருந்தமை அவதானிக்கப்பட்டது. அமைச்சரவைத் தீர்மானத்தின் படி மோட்டார் சைக்கிள்களைப் பதிவு செய்ய வேண்டிய சலுகைக் காலம் 2016 ஆகஸ்ட் 30 ஆம் திகதி முதல் 04 மாதங்களில் பூர்த்தியடைந்திருந்த போதிலும் அமைச்சரவை அங்கீகாரமும் பதிவு செய்யப்படுவதற்குத் தேவையான சட்ட ரீதியான பதிவேடுகளும் இன்றி 3,088 மோட்டார் வாகனங்கள் குறித்த சலுகைக் காலத்தின் பின்னர் 2017 மே 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியின் போது பதிவுசெய்யப்பட்டிருந்தன.

**ஈ - மோட்டரின் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிராமை**

மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் மின்னியல் கோவை முகாமைத்துவ முறைமையைத் தயாரித்தல், வாகனப் பதிவு தரவு முறைமையை மேம்படுத்தல், திணைக்களத்தின் செயற்பணியை மேற்கொள்கையில் இது தொடர்பான சகல நிறுவனங்களினது தரவு முறைமைகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தப்பட்டு சேவைகள் பரவலாக்கப்பட்டு தொடர்பாடல் வரையமைப்பொன்றை ஸ்தாபிக்கும் நோக்குடன் 2004 ஆம் ஆண்டு முதல் ஈ - மோட்டரின் செயற்திட்டம் செயற்படுத்தப்படுவதற்கு திட்டமிடப் பட்டிருந்தது. எனினும், 2016 ஆம் ஆண்டு வரை அத் திட்டமிடப்பட்ட ஈ - மோட்டரின் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிராததுடன் 2016 யூலை 13 ஆம் திகதிய அமப/16/1231/709/011-1 ஆம் இலக்க

அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, குறித்த செயற்திட்டம் செயற்படுத்தப்படுவதற்காக வழங்குனர் ஒருவருடன் 2018 யூலை 19 ஆம் திகதி ஓர் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் படி, 5 ஆண்டுகளுக்குள் ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அச் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. 2018 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டின் போதும் 2020 ஆம் ஆண்டைத் தவிர ஈ - மோட்டரின் செயற்திட்டத்திற்காக வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் மூலம் மொத்தம் ரூபா 441 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ஈ - மோட்டரின் செயற்திட்டத்திற்காக 2023 திசெம்பர் 31 வரையிலும் ரூபா 0.18 மில்லியன் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது.

**பிரதிகளை வழங்கப்படுதல்**

மோட்டார் வாகன அதிகாரச்சட்டம் அல்லது அதன் ஏதேனும் கட்டளையின் கீழ் வழங்கப்படும் சான்றிதழ், அனுமதிப்பத்திரம் காணாமற் போனால் அல்லது சேதமடைந்தால் வழங்கிய அதிகாரி திருப்தியடையும் தகவல்களை உறுதிப்படுத்துவாராயின் அதன் பிரதியை வழங்க முடியும். எனினும், இதற்கு முரணான வகையில் 2023 ஆம் ஆண்டின் போது 19 சந்தர்ப்பங்களில் மோட்டார் வாகனப் பதிவுச் சான்றிதழின் இரண்டாம் பிரதி வழங்கப்பட்டு 5 முதல் 25 ஆண்டுகள் வரையான காலம் கடந்த சான்றிதழ்களுக்காக சத்தியக் கடதாசி மூலம் மேற்கொள்ளப்படும் கோரிக்கைக்குப் பதிலாக பதிவுச் சான்றிதழின் இரண்டாம் பிரதிக்குப் பதிலாக முதற் பிரதி வழங்கப்பட்டிருந்தது.

**L போர்ட் வழங்குதல்**

மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் 203 ஆம் பிரிவின் படி, மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் சாரதிப் பயிலுனர்கள் இன்றி பயிலுனர் ஒருவருக்கு மோட்டார் வாகனம் ஒன்றைத் தனியாகச் செலுத்துவதற்கு சட்டத்தால் தடைவிதிக்கப்பட்டுள்ளது. அத்தகைய நிலையில் மோட்டார் வாகனம் செலுத்தப்படுவதற்கான பயிற்சிக்காக L போர்ட் வழங்கப்பட்ட போதிலும் இதனை நடைமுறையில் பயன்படுத்த இயலாது. எனினும், இது தொடர்பான மதிப்பீடு இன்றி எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் நடைமுறைப் பரீட்சைக்குத் தோற்ற உள்ள சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பதாரிகளுக்கு L போர்ட் வழங்கப்படுவதற்காக ரூபா 162.5 மில்லியன் அரசாங்க நிதி பயன்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**நிலுவை வருமானத்தை அறவிடாமை மற்றும் கணக்கீடு செய்யப்படாமை**

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடந்த ஐந்தாண்டு காலத்தின் போது வேரஹரர சிற்றுண்டிச் சாலை குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த பெறுனரால் ரூபா 4.1 மில்லியன் வருமானமும் தலைமைக் காரியாலயம் மற்றும் வேரஹர வளாகத்தில் குத்தகை அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஏனைய நிறுவனங்களால் ரூபா 2.5 மில்லியன் வருமானமும் நிலுவையாக இருந்த போதிலும் அவ் வருமானத்தை அறவிடப்படுவதற்கோ அல்லது நிலுவை வருமானமாக கணக்கீடு செய்யப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## மோட்டார் வாகனப் பதிவு தரவு அமைப்பில் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட அல்லது அசெம்பிள் செய்யப்பட்ட வாகனங்களின் சஸி எண்கள் மற்றும் என்ஜின் எண்களை மோசடியாக உள்ளிடுவது மற்றும் போலி மோட்டார் வாகனப் பதிவுச் சான்றிதழ்களை வழங்குவது பற்றிய விசேட கணக்காய்வு அறிக்கை - 2022

**வட மேல் மாகாண பயனாளிகளால் "ஈஆர்எல்" அமைப்பில் உள்ள தரவுகள் மாற்றப்பட்டுள்ளமை**

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்றின் மூலப் பதிவுத் திகதியில் இருந்து வருமானத்தைப் பெற வேண்டியதுடன் மூலப் பதிவுத் திகதியில் இருந்து வருமான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்ட வருடக் கணக்குகள் மற்றும் வருமான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்டிராத வருடக் கணக்குகளின் படி வருமான அனுமதிப்பத்திரக் கட்டணம் "ஈஆர்எல்" முறைமையில் வெளிப்படுத்தப்படும். எந்தவித சட்ட ரீதியான அதிகாரமுடைய நிறுவனத்தினதும் அங்கீகாரமின்றி "ஈஆர்எல்" முறைமையில் உள்ளடக்கப்பட்டுள்ள மூலப் பதிவுத் திகதியை மாற்றுவதற்கு அதாவது பின்திகதியிடப்பட்டு மேலே கணக்கிடப்பட்ட நிலுவை வருமானக் கட்டணங்கள் அறவிடப்படாது வருமான அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதற்கு வட மேல் மாகாண வருமான அனுமதிப்பத்திர வழங்கல் தரவு முறைமை பயனாளிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**திணைக்கள பயனாளிகளால் முறைமையில் உள்ளடக்கப்பட்ட தரவுகள் மாற்றப்பட்டிருந்தமை**

நீண்ட காலமாக வருமான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட 99 பதிவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் தொடர்பான செஸி எண்கள் மற்றும் என்ஜின் எண்கள் முறைமையில் இருந்து அகற்றப்பட்டு, மோசடியான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட வேறு மோட்டார் சைக்கிள்களின் என்ஜின் இலக்கங்களும் செஸி இலக்கங்களும் முறைமையில் உள்ளடக்கப்பட்டு பழைய பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்குப் பதிலாக புதிய மேம்படுத்தப்பட்ட மோட்டார் வாகன பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் தரவு முறைமையில் பழைய தரவுகள் அழிக்கப்பட்டு தரவு முறைமை நாளதுவரையாக்கப்படுவதற்கு மோட்டார் வாகனப்

போக்குவரத்துத் திணைக்கள உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

**இழந்த சுங்க வரி வருமானம்**

தரவுகள் மாற்றப்பட்டு, சட்ட விரோதமான முறையில் செஸி இலக்கங்களும் என்ஜின் இலக்கங்களும் உள்ளிடப்பட்டு முறைமையின் மூலம் புதிய (போலி) பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்களின் என்ஜின் இயலளவைக் கருத்திற்கொள்கையில் பதிவு இல. 91 இற்கு உரிய மோட்டார் சைக்கிள்களின் செல்லுபடியான சுங்கப் பதிவுகளுடன் இறக்குமதி செய்யப்பட்டிராததன் காரணமாக அரசாங்கத்திற்கு ரூபா 55.21 மில்லியன் சுங்க வரி வருமானம் இழக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**இழந்த வருமானம்**

மிகைக் கட்டணத் தொகை அறவிடப்படாது மோசடியாக பழைய இலக்கத்தில் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தமையால், 91 வாகனங்களுக்கு உரிய ரூபா 21.48 மில்லியன் மிகை அறவீட்டுக் கட்டணமும் புதிய பதிவுக் கட்டணமும் அரசாங்கத்திற்குக் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை.

**செஸி இலக்கங்களும் என்ஜின் இலக்கங்களும் மாற்றப்பட்டிருந்தமை**

ஏற்கனவே வருமான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள வேறு வாகன வகைக்கு உரித்தான பதிவில் உள்ள 29 வாகனங்களுக்கு உரிய செஸி இலக்கங்களும் என்ஜின் இலக்கங்களும் முறைமையில் இருந்து அகற்றப்பட்டு வேறு சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களின் செஸி இலக்கங்களும் என்ஜின் இலக்கங்களும் முறைமையில் உட்புகுத்தப்பட்டு பழைய பதிவு இலக்கங்களுக்காக மோட்டார் வாகனப் பதிவுச் சான்றிதழ் வழங்கப்படுவதற்கு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் தரவுகள் அமைப்பில் உள்ள பழைய பதிவு தொடர்பான விவரங்களை நீக்குவதற்கு மோட்டார் வாகனப் போக்குவரத்துத் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுததிருந்தனர்.

**வருமான அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்தப்பட்டிராமை**

நீண்ட காலமாக வருமான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிராத நிலுவை வருமான அனுமதிப்பத்திரக் கட்டணத்துடன் 04 பதிவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் என்சின் இலக்கங்களும் செஸி இலக்கங்களும் மாற்றப்பட்டு, வேறு சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 04 மோட்டார் சைக்கிள்களின் என்சின் இலக்கங்களும் செஸ் இலக்கங்களும் உள்ளிட்டு மோசடியான முறையில் 2022 ஆம் ஆண்டின் போது மோட்டார் வாகனப் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன.

**மீள் ஏற்றுமதி செய்யப்பட்ட வாகன இலக்கங்கள்**

வெளிநாட்டு இராஜதந்திரிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் சார்பாக இறக்குமதி செய்யப்பட்ட அரசாங்க

**மோசடியான முறையில் பயன்படுத்தப்பட்டமை**

அனுசரணையில் தீர்வை வரி இன்றி வெளியேற்றப்பட்டு மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு பின்னர் அவ் வாகனம் மீள மீள் ஏற்றுமதி செய்யப்படும் சந்தர்ப்பத்தில் பதிவு இரத்துச் செய்யப்பட்ட 06 வாகனங்களின் பதிவு இலக்கங்களுக்குப் மோசடியான முறையில் வேறு சொகுசு வாகனங்களின் செஸி இலக்கம் முறைமையிலும் என்ஜின் இலக்கம் உள்ளிடப்பட்டு வேறு நபர் ஒருவரின் பெயருக்கு பதிவுச் சான்றிதழை வழங்குவதற்கு மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உத்தியோகத்தர்கள் செயற்பட்டிருந்தனர்.


**கிடைக்கத் தவறிய வரி வருமானம்**

சட்டவிரோதமான முறையில் மோட்டார் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டு அல்லது அசெம்பிள் செய்யப்பட்ட வாகனங்களை மோசடியான முறையில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்வதற்கு செயற்பட்டதன் மூலம், ஏறத்தாழ சொகுசு வரி மற்றும் ஏனைய அறவீடுகள் தவிர்த்து இலங்கை சுங்கத்தினால் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 122.28 மில்லியன் வரி வருமானம் மோசடியான நிலையில் அரசாங்கத்திற்குக் கிடைக்கப் பெற்றிராமை அவதானிக்கப்பட்டது.

## மது வரித் திணைக்களம்

**மதிப்பிடப்பட்ட மற்றும் சேகரிக்கப்பட்ட வருமானம்**

2023 ஆம் ஆண்டு உள்ளடங்கலாக கடந்த 5 ஆண்டுகளிற்காக மது வரித் திணைக்களத்தின் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் சேகரிக்கப்பட்ட வருமானம் பின்வருமாறாகும்.




வரைபடம் இல. 2.13: 2019 – 2023 மதுவரித் திணைக்களத்தின் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் சேகரிக்கப்பட்ட உள்ளபடியான வருமானம்

ஆதாரம் : மது வரித் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்கள்

2023 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட மது வரி மற்றும் புகையிலை வரி வருமானம் ரூபா 217,035 மில்லியனானதுடன் இது ரூபா 182,000 மில்லியன் வரை 16 சதவீதத்தால் குறைக்கப்பட்டு திருத்தப்பட்டு ரூபா 171,273 மில்லியனான வரி வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. சேகரிக்கப்பட்ட வருமானம் திருத்தப்பட்ட மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் 94 சதவீதமான போதிலும் ஆரம்ப வரவு செலவு மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் 79 சதவீதமாகக் காணப்பட்டது. 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டின் போது தூய மதுசாரம் 8.39 லீற்றர்களால் அதாவது 19 சதவீதத்தால் மதுபான உற்பத்தி குறைவடைந்து மதுவரி வருமானம் அதிகரிப்பதற்காக மதுவரி வீதம் 20 சதவீதத்தால் அதிகரித்திருந்தமை மதுவரி வருமானம் அதிகரிப்பதற்குத் தாக்கமளித்திருந்தது.

மது வரி மற்றும் புகையிலை வரி வருமானம்

2023 ஆம் ஆண்டிற்காக முன்னைய 04 ஆண்டுகளின் நிலுவை வருமானம் படிப்படியாக உயர்வடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| ஆண்டு | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை வருமானம் ரூபா மில் |
|---|---|
| 2019 | 3,799 |
| 2020 | 3,969 |
| 2021 | 4,550 |
| 2022 | 5,569 |
| 2023 | 7,271 |

அட்டவணை இல. 2.10.3 : 2019 – 2023 ஆம் ஆண்டுகளில் நிலுவையான வருமானம்
ஆதாரம் : மதுவரித் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்கள்

2023 திசெம்பர் 31 உள்ளவாறான நிலுவை வருமான அறிக்கையின் படி மதுபான உற்பத்தி நிறுவனங்கள் 13 இல் இருந்து ரூபா 7,159 மில்லியனும் 13 கள்ளு உற்பத்தி நிறுவனங்களில் இருந்து ரூபா 6.21 மில்லியனும் 03 மதுபான ஆலைகளில் இருந்து ரூபா 31.48 மில்லியனுமாக நிலுவை மதுவரி மற்றும் 04 மதுபான உற்பத்தி நிலையங்களில் இருந்து கழிவுகளுக்காக நிலுவை வரி ரூபா 68.39 மில்லியனும் உள்ளடங்கலாக மொத்த நிலுவை மதுவரி வருமானம் மற்றும் அதற்கு உரித்தான தாமதக் கட்டணங்களின் கூட்டுத்தொகை ரூபா 7,265 மில்லியனாகவும் இருந்தது. மேலும், பதிவுச் சான்றிதழ் பெறப்படாது புகையிலை இறக்குமதி செய்யப்படுவதற்கு

நடவடிக்கை எடுத்ததன் காரணமாக 02 நிறுவனங்களில் இருந்து 2023 திசெம்பர் 31 உள்ளவாறு ரூபா 6.68 மில்லியன் புகையிலை வரி நிலுவை வருமானம் அறவிட வேண்டியிருந்தது. 2023 ஆம் ஆண்டின் போது பீட வரி அறவிடப்படாத 316 நிறுவனங்கள் பரீட்சிக்கப்படுகையில் இவற்றில் பதிவுகளை புதுப்பித்திராத மற்றும் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராத 212 நிறுவனங்களும், பதிவு செய்யப்பட்டு வரி செலுத்தபட்டிராத 104 நிறுவனங்களும் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**ஏற்றுமதி மீதான மதுவரி குறைக்கப்படுதல்**

2155/19 ஆம் இலக்க 2019 திசெம்பர் 27 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட 10/2019 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் படி, மதுபான ஏற்றுமதியின் மீது 2023 ஆம் ஆண்டிற்கு உரித்தான 04 உற்பத்தி நிலையங்களுக்காக 32 சந்தர்ப்பங்களின் போது மதுபான ஏற்றுமதிக்கு உரித்தாக ரூபா 7,301 மில்லியன் மது வரித் தொகை குறைக்கப்பட்டிருந்தது. குறித்த குறைப்புத் தொடர்பாக கணக்குப் பதிவில் குறைபாடுகளும் செயற்பாடுகளில் குறைபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

**ஸ்டிக்கர் முகாமைத்துவ செயற்திட்டம்**

மதுபானப் போத்தல்களுக்கு டிஜிட்டல் குறியீடுகள் அச்சிடும் தானிய மதுபான உற்பத்திப் பிரதான கம்பனி ஒன்றின் கணக்காய்வுக் கள ஆய்வின் போது மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களின் ஆய்வுக் குறிப்புகளின் படி, 2023 சனவரி 12 முதல் 2023 செப்தெம்பர் 19 ஆம் திகதி வரையான காலப்பகுதியின் போது 54 சந்தர்ப்பங்களில் 1.33 மில்லியன் பியர் போத்தல்களும் 3.36 மில்லியன் பல்வேறு அளவுகளிலான பியர் கலன்களும் டிஜிடல் குறியீடு அச்சிடப்படாதிருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்தமை சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. மேலும் அப் போத்தல்களும் கொள்கலன்களும் இனங்காணப்பட்ட பகுதிகளுக்கு வழங்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுவதற்காக மதுவரித் திணைக்களத்தால் எழுத்து மூல அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதன் அடிப்படையில் 7/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் படி இனங்காட்டிய நுகர்வாளரைச் சென்றடைவதற்கு முன்னர், ஒவ்வொரு போத்தல் மீதும் அல்லது கொள்கலன் மீதும் அங்கீகரிக்கப்பட்ட டிஜிடல் குறியீடு அச்சிடப்படுவதற்கு தொடர்ந்து செயற்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

விற்பனைக்காக பகிர்ந்தளிக்கப்படும் போத்தல்களில் போலி ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டிருந்த அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட 78 நிலையங்கள் தொடர்பாக மதுவரி அறிவித்தல் இல. 7/2021 இன் 25 ஆம் பிரிவு மற்றும் மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 27, 47 மற்றும் 56 ஆம் பிரிவுகளின்

ஏற்பாடுகளுக்கு இணங்க அனுமதிப்பத்திரம் பெற்ற 78 நிலையங்களுக்காக, குறித்த 03 உற்பத்தி ஆலைகளால் பொறுப்பு ஏற்றுக்கொள்ளப ்பட்டிருந்தது. இதன் படி 2023 செப்தெம்பர் மாதம் தொழிற்துறைக் குற்ற அறிக்கைகளின் கீழ் தீர்விற்கு உட்பட்டு தீர்வுக் கட்டணமாக ரூபா 0.5 மில்லியன் படி ரூபா 40.5 மில்லியனும் குறித்த மது வரித் தொகையும் 3 சதவீதமான தாமதக் கட்டணமுமாக ரூபா 17.94 மில்லியன் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட 3 உற்பத்தி நிறுவனங்களிடம் இருந்து அறவிடப்பட்டிருந்தது. இது தொடர்பான தொடர் நடவடிக்கைகளின் முன்னேற்றம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**வருமான நிர்வாக முறைமை**

மதுவரித் திணைக்களத்திற்காக செயற்திறனான வருமான நிர்வாகம், தொழில் தருனருக்கான உயர் தரத்திலான சேவையை வழங்குதல், அரச நிறுவனங்கள் மற்றும் தகவல் பரிமாற்றங்களைச் சீராக்குதல் மற்றும் மனிதவள முகாமைத்துவத்திற்காக முறையான விநியோகச் சங்கிலியை செயற்படுத்தல் ஆகிய நோக்கங்களை எய்துவதற்காக அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் நடைமுறை, தொழிற்சாலை கண்காணிப்பு, பகிர்ந்தளிப்பு மற்றும் வழங்கல் சங்கிலி, குற்றத் தகவல்கள் மற்றும் சட்ட முகாமைத்துவம், மதுவரி மற்றும் வரி நிர்வாகம் முதலிய துறைகள் உள்ளடங்கும் வகையில் வருமான நிர்வாக தகவல் முறையை ஒன்று (RASED) அறிமுகப்படுத்தப்படுவதற்கு தீமானிக்கப்பட்டிருந்தது. 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 100 மில்லியனும் ரூபா 94 மில்லியனும் குறித்த முறைமைக்கான மென்பொருள் அபிவிருத்திக்கு ஓதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் அச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிராததன் காரணமாக அந்த ஆண்டுகளின் போது எந்தவித செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

**தீர்மானிக்கப்பட்ட மது வரி ஆய்வுகூடம்**

தரமான மதுபானங்களை சந்தைக்கு வழங்குதல் மற்றும் சட்ட விரோத மதுபானங்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகளை விரைவுபடுத்தும் இயலுமை கிடைக்கப்பெறத்தக்க வகையில் ஓர் ஆய்வுகூடத்தை ஸ்தாபிப்பதற்கு 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 100 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 1.48 மில்லியன் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது.

**மதுபானத்திற்காக நியமங்களை அறிமுகப்படுத்துதல்**

மதுபானத்திற்காக முறையான நியமங்களை அறிமுகப்படுத்துதலின் கீழ் 11 வகையான மதுபானங்களுக்காக 16 நிர்ணயங்களின் கீழ் நியமங்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் நியமங்களின் படி உற்பத்திக்காக ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படக் கூடிய

வகையில் நியமங்கள் தொடர்பில் வர்த்தமானி அறிவித்தல்கள் விநியோகிக்கப்பட்டு கள்ளு தொடர்பாக நியமங்களை ஸ்தாபிப்பது 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## தேசிய லொத்தர் சபை

தற்போதைய வருமான நிலை மற்றும் இலாபப் பங்களிப்பை அதிகரிப்பதன் மூலம் அரசாங்கத்திற்கான பங்களிப்பை அதிகரிக்கும் நோக்குடன் 1963 இன் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் தேசிய லொத்தர் சபை 1963 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது.

**திரண்ட நிதியத்திற்கு வழங்கப்பட வேண்டிய நிதியத்தை தக்கவைத்துக்கொள்ளுதல்**

தேசிய லொத்தர் சபையால் லொத்தர் சீட்டு வருமானத்திலிருந்து சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செலவினங்களைக் கழித்த பின்னர், மிகுதி திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 3,603.1 மில்லியன் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படாது 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபை நிதியத்தில் தக்கவைக்கப்பட்டிருந்தது. இவ்வாறே, 2023 ஆம் ஆண்டின் போது சபையால் பேணப்பட்டுவந்த மஹஜன சம்பத விசேட சீட்டியுழுப்பு உள்ளடங்கலாக 11 லொத்தர்களில் இருந்து குறித்த சதவீதத்தைப் பார்க்கிலும் குறைவாக அனுப்பிவைக்கப்பட்டிருந்ததன் காரணமாக திரண்ட நிதியத்திற்கு வழங்கப்பட வேண்டிய தொகை ரூபா 517.84 மில்லியன் குறைவாக வழங்கப்பட்டிருந்தது.

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமை**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 71 மற்றும் 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ள வழிகாட்டல் கைநூலின் (Operational Manual) 3.2 (i) ஆம் ஏற்பாடுகளுக்கு மாறாக, சபையால் திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரம் பெறப்படாது பணிப்பாளர் அங்கீகாரத்துடன் மாத்திரம் கடமையில் ஈடுபட்டுள்ள 341 உத்தியோகத்தர்களுக்கு 2023 ஒக்டோபர் மாதம் முதல் 06 சம்பள உயர்வுகளின் படி வழங்கப்பட்டிருந்ததுடன் 2023 நிதியாண்டிற்கு உரித்தாக மாத்திரம் அவ்வாறு அதிகரிக்கப்பட்ட சம்பளத்திற்காக ஏற்கப்பட்ட செலவினம் ரூபா 3.1 மில்லியனாக இருந்தது.

2022 ஆகஸ்ட் 08 ஆம் திகதிய PED 04/2022 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.8 ஆம் பிரிவின் படி. அரச நிறுவனங்களின் ஆண்டுச் செயற்பாடுகளுக்கு உரிய சகல செலவினங்களும் கைவிடப்பட வேண்டிய போதிலும்

மீளாய்வாண்டின் போது தேசிய லொத்தர் சபையால் 60 ஆவது ஆண்டு விழாவிற்காக சபை உத்தியோகத்தர்களுக்கு ஒருவருக்கு ரூபா 63,000 படி பொருட்கள் கொள்வனவு செய்யப்படுவதற்கான உறுதிச்சீட்டுக்கள் வழங்கப்படுவதற்கும் இசை நிகழ்ச்சி ஒன்றை நடாத்துவதற்காக ரூபா 34.6 மில்லியன் கூட்டுத்தொகையான பணம் செலவிடப்பட்டிருந்தது.

## அபிவிருத்தி லொத்தர் சபை

**உத்தியோகபூர்வ வாகனம் வழங்கப்படுதல்**

2015 மே 25 ஆம் திகதிய PED/1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் உத்தியோகபூர்வ வாகனத்திற்கு உரித்தற்ற ஐந்து உத்தியோகத்தர்களுக்காக உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் இதற்காக எரிபொருள் செலவினமாக 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 2.9 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. மேலும் 2016 மே 30 ஆம் திகதிய 04/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோகபூர்வ வாகனத்திற்கு உரித்தற்ற உத்தியோகத்தர் ஒருவருக்கு செயற்பாட்டுக் குத்தகை அடிப்படையின் கீழ் சபையால் பெற்றுக்கொள்ளப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்று வழங்கப்பட்டிருந்ததுடன் அம் மோட்டார் வாகனத்திற்காக 2023 ஆம் ஆண்டின் போது செயற்பாட்டுக் குத்தகை வாடகையாக ரூபா 2.02 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

**மீளளிப்பிற்கு இடமளிக்கப்பட்டிருந்த சதவீதம்**

விற்பனை விநியோக முகவர்களுக்கு வழங்கப்படும் லொத்தர்களில் மீளளிப்பதற்காக இடமளிக்கப்பட்டுள்ள சதவீதம் 2023 பெப்ரவரி முதல் 05 முதல் 10 சதவீதம் வரை அதிகரிக்கப்படுவதற்கு முகாமைத்துவ அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது வெலம்புரி, லக்கி பிரீடம் மற்றும் சுப்பிரி தன சம்பத எனும் 03 வகையான லொத்தர் வகைகளில் மீளச் செலுத்தப்பட்ட லொத்தர்களின் அளவு ரூபா 5.16 மில்லியனானதுடன் இவை விற்பனை செய்யப்பட விநியோகிக்கப்பட்ட லொத்தர்களில் முறையே 28, 17 மற்றும் 21 சதவீதமாகக் காணப்பட்டன. அத்தகைய விற்பனை செய்யப்படாது மீளளிக்கப்படும் லொத்தர்களின் அச்சீட்டுக் கிரயம் ரூபா 14.7 மில்லியனாகக் காணப்பட்டது.

# வங்கி அலுவல்கள்

நிதித் துறையின் முக்கிய பிரிவான வங்கித் துறை, 2023 ஆம் ஆண்டு இறுதியளவில் நிதித் துறையின் மொத்த சொத்துக்களில் 61.5 சதவீத உரிமையை கொண்டும், ஆகக் குறைந்த ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகளை விட அதிகமாக பேணப்படும் மூலதன மற்றும் திரவத் தன்மை மட்டத்தின் துணையுடன், பொருளாதார நெருக்கடிகள் மற்றும் பாதகமான உலகளாவிய நிலைமையில் இருந்து எழும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துத் தாங்கியுள்ளது. 2023 ஆம் ஆண்டு இறுதி அளவில், வங்கித் துறையானது, 30 வங்கிகளினால், அதாவது 11 வெளிநாட்டு வங்கிக் கிளைகள் உள்ளிட்ட 24 அனுமதி பெற்ற வணிக வங்கிகள் மற்றும் 6 அனுமதி பெற்ற விசேட வங்கிகளைக் கொண்டுள்ளது.

**வங்கி துறையின் சொத்துக்கள்**

வங்கித் துறையில் மொத்த சொத்துக்களின் அளவு வருடத்தினுள் ரூபா. 989.4 பில்லியனால் அதிகரித்திருந்ததுடன் 2023 திசெம்பர் வரையில் அது ரூபா. 20.0 ட்ரில்லியனைக் கடந்திருந்தது. 2022 ஆம் ஆண்டு இறுதியில் அறிக்கையிடப்பட்ட 15.4 சதவீத வருடாந்த அதிகரிப்புடன் ஒப்பிடும்போது, 2023 ஆம் ஆண்டு இறுதியில் 5.1 சதவீத வருடாந்த அதிகரிப்பு, வங்கித் துறை சொத்துக்களில் அறிக்கையிடப்பட்டிருந்தது. அந்நிய செலாவணி விகிதம் அதிகரித்ததுடன் வெளிநாட்டு நாணயங்களில் பரிந்துரைக்கப்பட்ட கடன்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியவை மற்றும் முதலீடுகள் என்பன இலங்கை நாணயத்திற்கு மாற்றப்பட்டமை இந்த அதிகரிப்பின் பின்புலத்தில் முக்கிய ரீதியில் காரணமாக இருந்தது. கடன் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியவை, 2022 ஆம் ஆண்டு இறுதியில் காணப்பட்ட 5.5 சதவீத வருடாந்த அதிகரிப்புடன் ஒப்பிடும்போது, 2023 ஆம் ஆண்டு இறுதியில் 2.6 சதவீதத்தினால் வருடாந்த ஒடுக்கத்திற்கு உட்பட்டிருந்ததுடன், 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியினுள் காணப்பட்ட கடுமையான நிதிக் கொள்கை நிலைப்பாடு இதற்குக் காரணமாக இருந்தது.

**வங்கித் துறையின் பொ**

**றுப்புக்கள**

வங்கித் துறையில் நிதி வழங்குதலில் முக்கிய மூலமாக தொடர்ச்சியாகக் காணப்பட்ட வைப்புக்கள், 2023 ஆம் ஆண்டு இறுதி வரையிலும் மொத்த இருப்பு நிலை குறிப்பு பொறுப்புகளில் 81.5 சதவீதமாக இருந்ததுடன், கடன் பெற்றுக் கொள்ளலின் பங்களிப்பு 6.8 சதவீதம் ஆகும்.

| வகை | 2022 (அ) | | 2023 (ஆ) | | மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.பில். | பங்கு (%) | ரூ.பில். | பங்கு (%) | 2022 | 2023 |
| **சொத்துக்கள்** | | | | | | |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 11.312.5 | 58.3 | 11,017.6 | 54.0 | 5.5 | -2.6 |
| முதலீடுகள் | 5.931.7 | 30.5 | 7.314.0 | 35.8 | 19.4 | 23.3 |
| ஏனையவை (இ) | 2.172.4 | 11.2 | 2.074.4 | 10.2 | 92.1 | -4.5 |
| **பொறுப்புக்கள்** | | | | | | |
| வைப்புக்கள் | 15.298.7 | 78.8 | 16.623.6 | 81.5 | 18.8 | 8.7 |
| கடன் பெறுகைகள் | 1.871.6 | 9.6 | 1.389.0 | 6.8 | -13.9 | -25.8 |
| முதலீட்டு நிதிகள் | 1.598.1 | 8.2 | 1.766.9 | 8.7 | 18.5 | 10.6 |
| ஏனையவை | 648.2 | 3.3 | 626.5 | 3.1 | 52.2 | -3.4 |
| மொத்த சொத்துக்கள்/ பொறுப்புக்கள் | 19,416.6 | 100.0 | 20,406.0 | 100.0 | 15.4 | 5.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) காசு மற்றும் வங்கி மீதிகள், வைப்புகள், நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் மற்றும் நிலையான சொத்துக்கள் உள்ளடங்கலாக

உரு இல. 2.14: வங்கித் துறையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்பகளின் உள்ளமைப்பு
மூலம்: இலங்கை மத்திய வங்கி அறிக்கை - 2023

**வங்கி துறையில் 3 ஆவது கட்டத்தின் கீழ் காணப்படும் கடன்கள்**

3 ஆவது கட்டத்தின் கீழ் காணப்படும் கடன் விகிதத்தின் மூலம் வெளிப்படுத்தப்படும் வகையில், 2023 ஆம் ஆண்டு இறுதியில் வங்கித் துறையில் கடன் ஆபத்து உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டது. முக்கியமாக 3 ஆவது கட்டத்தின் கீழ் காணப்படும் கடன்கள் அதிகரித்தமை மற்றும் கடன் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியவைகளின் ஒடுக்கம் காரணமாக, வங்கி துறையில் 3 ஆவது கட்டத்தின் கீழ் காணப்படும் கடன் விகிதமானது, 2022 ஆம் ஆண்டு இறுதியில் காணப்பட்ட 11.3 சதவீதத்துடன் ஒப்பிடும்போது 2023 ஆம் ஆண்டு இறுதியில் 12.8 சதவீதம் வரையில் அதிகரித்திருந்ததுடன், அதன் மூலம் வங்கித் துறையில் கடன்களின் தரம் தொடர்பில் சிக்கலான நிலைமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறு இருப்பினும், 3 ஆவது கட்டத்தின் கீழ் காணப்படும் கடனுக்கான ஒதுக்கீடு (பயன்படுத்தப்படாத கடன் எல்லை உள்ளிட்ட) 18.4 சதவீதத்தினால் (வருடாந்தம்) அதிகரிப்பதன் மூலம், 2022 ஆம் ஆண்டு இறுதியில் காணப்பட்ட 3 ஆவது கட்டத்தின் கீழ் காணப்படும் கடன்இழப்புக் காப்பீட்டு விகிதமான 44.9 சதவீதத்துடன் ஒப்பிடும்போது, 2023 ஆம் ஆண்டு இறுதியில் அது 49.3 சதவீதம் வரையிலான அதிகரிப்பைக் காட்டியுள்ளது.

**வங்கி துறையின் திரவத்தன்மை**

ரூபாயில் பரிந்துரைக்கப்பட்ட அரச பிணைப் பொறுப்புகளில் பிரதிநிதித்துவப்படுத்தும் திரவத்தன்மை சொத்துக்களின் உயர் அதிகரிப்பு காரணமாக, நியதிச்சட்ட திரவ சொத்து விகிதம் (SLAR) மற்றும் திரவத்தன்மை காப்பீட்டு விகிதம் (டுஊசுள) என்பன மூலம் சுட்டிக்காட்டப்படும் வங்கித் துறையின் திரவத்தன்மை 2023 ஆம் ஆண்டில் அதிகரித்திருந்தது.

**வங்கித் துறையில் இலாபத் தன்மை**

பிரதான ரீதியில் புதிய பெறுமதியிழப்புக் கட்டணம் குறைவடைந்த காரணத்தால் ஆண்டினுள் இலாபத் தன்மை அதிகரிப்பு காட்டப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டினுள் வங்கித் துறையில் வட்டி வருமானம் 25.5 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன், வட்டி செலவு 42.7 சதவீதத்தினால் அதிகரித்திருந்தமை, தேறிய வட்டி வருமானம் 4.9 சதவீதத்தினால் குறைவடைந்ததற்கு காரணமாகும். அதன் பெறுபேறாக, வருட இறுதியில் 4.0 சதவீதமாகக் காணப்பட்ட தேறிய வட்டி வரம்பு, 2023 ஆம் ஆண்டு இறுதியில் 3.6 சதவீதம் வரையில் குறைவடைந்திருந்தது.

| விடயம் | 2022 (அ) | | 2023 (ஆ) | |
|---|---|---|---|---|
| | தொகை (ரூ.பில்) | சராசரி சொத்தின் % ஆக | தொகை (ரூ.பில்) | சராசரி சொத்தின் % ஆக |
| தேறிய வட்டி வருமானம் | 750.8 | 4.0 | 713.8 | 3.6 |
| வட்டி வருமானம் | 2,079.4 | 11.0 | 2,609.0 | 13.0 |
| வட்டிச் செலவினம் | 1,328.6 | 7.0 | 1,895.2 | 9.4 |
| வட்டியல்லா வருமானம் | 280.6 | 1.5 | 206.8 | 1.0 |
| தேறிய கட்டண மற்றும் தரகு வருமானம் | 127.0 | 0.7 | 132.1 | 0.7 |
| வட்டியல்லா செலவினம் | 324.0 | 1.7 | 373.2 | 1.9 |
| ஊழியர் செலவுகள் | 173.2 | 0.9 | 190.0 | 0.9 |
| கடன்களுக்கும் ஏனைய இழப்புக்களுக்குமான பெறுமதியிழப்பு | 468.8 | 2.5 | 163.8 | 0.8 |
| வரிக்கு முன்னரான இலாபம் (பெறுமதி சேர் வரிக்குப் பின்னரான) | 177.8 | 0.9 | 294.4 | 1.5 |
| வரிக்கு பின்னரான இலாபம் | 153.8 | 0.8 | 188.9 | 0.9 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

*உரு இல. 2.15: வங்கித் துறையின் இலாபத்தன்மை*
*மூலம்: இலங்கை மத்திய வங்கி அறிக்கை – 2023*

**வங்கித் துறையில் ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடுகளுக்கான இணக்கப்பாடு**

மொத்தத்தில், 2023 ஆம் ஆண்டினுள், ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடுகளுக்கு இணங்குவதற்கு வங்கித் துறைக்கு முடிந்துள்ளது. முக்கியமாக, மொத்த கடன்களின் ஒடுக்கம், அரச பிணைப் பத்திரங்களில் முதலீடு அதிகரித்துச் சென்றமை, மற்றும் இலங்கை ரூபாயின் பெறுமதி மிகைப்படுத்தப்பட்டமை போன்ற காரணங்களினால், 2023 ஆம் ஆண்டினுள் ஆபத்துக்களின் அடிப்படையில் வைக்கப்பட்ட சொத்துக்களின் தொகை வீழ்ச்சி அடைந்ததனால் 2022 ஆம் ஆண்டு இறுதியுடன் ஒப்பிடும்போது, 2023 ஆம் ஆண்டு இறுதியில் வங்கித் துறையில் மூலதனம் தரப்படுத்தலில் முன்னேற்றம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**வங்கித் துறையில் கடன்களின் செறிவு**

முக்கிய ஆறு பிரிவுகளில் கடன் செறிவடைந்துள்ளது என்பதனால் வங்கித் துறையில் செறிவு ஆபத்து உயர் மட்டத்தில் காணப்பட்டதுடன், இந்த ஒரு சில பிரிவுகளில் ஒப்பிட்டு ரீதியில் கூடியளவு 3 ஆவது கட்ட கடன் விகிதம் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், அதனைப் புறக்கணித்தல் அதிக ஆபத்தினைச் சுட்டிக்காட்டுகின்றது. பிரிவின் கடன் பிரதான ரீதியில் செறிவடைந்திருந்தது நுகர்வு, நிர்மாணம், வர்த்தகம், உற்பத்தி, உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் விவசாயம் ஆகிய பிரிவுகளிலாகும்.

**வங்கிகளின் இறையாண்மை வெளிப்படுத்தல்**


அரச பிணைப் பத்திரங்களில் முதலீடு மற்றும் அரச தொழில் முயற்சியாளர்களுக்கு (SOEs) கடன் வழங்குதல் உயர் மட்டத்தில் காணப்பட்ட காரணத்தால், அரச வங்கிகளின் இறையாண்மை அநேகமாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

வங்கித் துறையின் இறையாண்மை வெளிப்படுத்தல் பெறுமதி 2022 ஆம் ஆண்டு மூன்றாவது காலாண்டு இறுதி தொடக்கம் 2023 ஆம் ஆண்டு மூன்றாவது காலாண்டு இறுதி வரையில் ரூபா. 895 பில்லியனால் அதிகரித்திருந்ததுடன் அது ரூபா. 8,612.3 பில்லியன் வரையில் எட்டியிருந்தது. அதற்கமைய, இறையாண்மை வெளிப்படுத்தல் வங்கித் துறையின் மொத்த சொத்துக்களில் 43.4 சதவீதம் ஆகும்.

அரச வங்கிகளின் மொத்த இறையாண்மை வெளிப்படுத்தல் 61.1 சதவீதமாக இருந்ததுடன் பிரதானமாக அரசுக்குச் சொந்தமான அனுமதிப் பத்திரம்

பெற்ற இரண்டு வணிக வங்கிகளின் ( LCBs) இறையாண்மை வெளிப்படுத்தல் இதற்கு முக்கியமான ரீதியில் காரணமாக இருந்தது. உள்நாட்டு தனியார் வங்கியும் மொத்த இறையாண்மை வெளிப்படுத்தலில் கவனத்தில் கொள்ளத்தக்க அளவிலான பகுதிக்கு உரித்து உடையதாக இருந்ததுடன் வெளிநாட்டு வங்கிகளின் இறையாண்மை வெளிப்படுத்தல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் ரூபாயில் பரிந்துரைக்கப்பட்ட பிணைப் பத்திரங்களின் முதலீடுகளை மட்டும் அது கொண்டுள்ளது.

இந்த காலத்தினுள் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி ஒப்பந்த முறி முதலீடுகள் ரூபா. 1,500.9 பில்லியனால் அதிகரித்திருந்ததுடன் பெட்ரோலியம் கூட்டுத்தாபனத்திற்கு (CPC) சொந்தமாக இருந்த வெளிநாட்டு நாணயங்களில் பரிந்துரைக்கப்பட்ட கடன், மத்திய அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட காரணத்தால், மத்திய அரசாங்கத்தின் வெளிநாட்டு நாணயத்தில் பரிந்துரைக்கப்பட்ட கடன் ரூபா. 371.2 பில்லியனால் அதிகரித்திருந்தது. இந்த காலத்தினுள் அரச தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்பட்டிருந்த வெளிநாட்டு நாணயத்தில் பரிந்துரைக்கப்பட்ட கடன் வீழ்ச்சி அடைவதற்கு இது காரணமாக இருந்தது. மேலும், இந்தக் கால எல்லைக்குள் உள்நாட்டு கடன் மேம்படுத்தல் வேலைத்திட்டத்தின் (DDO) கீழ் இலங்கை அபிவிருத்தி ஒப்பந்த முறி (SLDBs) மீளமைப்பு செய்தல் இந்த பிரிவினால் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.





உரு 2.16 : 2023 மூன்றாம் காலாண்டு இறுதியில் வங்கி தொகுதிக்கு அமைய இறையாண்மை வெளிப்படுத்தல்

**பிரதான அரச தொழில் முயற்சிகளுக்கு (SOEs) வங்கித் துறையின் வெளிப்படுத்தல்**

IMF - EFF ஒழுங்கு விதிகளின் கீழ் தெரிவு செய்யப்பட்ட அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளின் (SOEs) இருப்பு நிலை குறிப்பை மறுசீரமைப்பு செய்வதற்கு இணங்கியிருந்த வழிமுறைகளுக்கு அமைய இலங்கை பெட்ரோலியம் கூட்டுத்தாபனத்திற்கு (CPC) சொந்தமாக இருந்த வெளிநாட்டு நாணயத்தில் பரிந்துரைக்கப்பட்ட கடன் இந்த கால எல்லைக்குள் மத்திய அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட காரணத்தால் அந்த நிறுவனத்திற்கு வங்கித் துறையின் வெளிப்படுத்தல் 55.1 சதவீதத்தினால் குறைவடைந்து இருந்தது. இலங்கை பெட்ரோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முற்றிலும் உதவி வழங்கி இருந்தது இரண்டு பிரதான அரச வங்கிகளாக உள்ளதுடன், 2022 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு இறுதி வரையில் வெளிநாட்டு நாணயத்தில் பரிந்துரைக்கப்பட்ட கடன் 2,4 பில்லியன் அமெரிக்க டொலர் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்தக் கடன் பின்னர் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டதன் பெறுபேறாக 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு இறுதியில் 524.4 மில்லியன் அமெரிக்க டொலர் வரையில் குறைவடைந்து இருந்தது. அரசுக்கு சொந்தமான அனுமதி பெற்ற இரண்டு வணிக வங்கிகள் (LBCs) அண்மைய மாதங்களில் இலங்கை மின்சார சபைக்கு (CEB) மேலும் கடன் வழங்கி இருக்க வில்லை என்பது அவதானிக்கப்பட்டதுடன், இலங்கை மின்சார சபையின் (CEB) காசுப்பாய்ச்சல் அபிவிருத்தி அடைந்ததைத் தொடர்ந்து 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு இறுதியில் CEB இற்கு வங்கித் துறையின் வெளிப்படுத்தல் 5.3 சதவீதத்தினால் குறைவடைந்து இருந்தது.

.




உரு 2.17 : CPC மற்றும் CEB இற்கு வங்கி துறையில் வெளிப்படுத்தல் - வெளிநாட்டு நாணயம்

| | |
|---|---|
| **அரச வங்கிகளில் எதிர்பார்க்கப்பட்ட சீர்திருத்தம்** | அரச வங்கிகளும் பெரும்பாலும் பொதுமக்கள் நிதியிலிருந்து மூலதனமிடப்படுவதை எதிர்பார்க்கின்றது. அதற்கு அமைய 2024 ஆம் ஆண்டு பாதீட்டின் கீழ் வங்கித் துறையில் மூலதன அதிகரிப்பு செயற்பாட்டிற்கு உதவி செய்வதற்கு ரூபா. 450 பில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக, அரசாங்கத்திடமிருந்து அனுமதி பெற்ற இரண்டு வணிக வங்கிகளில் (LCB) 20 சதவீதத்தினை மூலோபாய முதலீட்டாளர்களுக்கு அல்லது பொது மக்களுக்கு ஒதுக்குவதற்கும் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. |

## இலங்கை மத்திய வங்கி

### சட்ட ஆளுமை கொண்ட ஒருங்கிணைந்த நிறுவனமாகத் தாபித்தல்

இலங்கை மத்திய வங்கியானது இலங்கையின் நிதி ஒழுங்கமைப்பு மையத்தினைத் தாங்கும் ஒரு நிறுவனமாகும். 2023 செப்டம்பர் மாதத்தில் அங்கீகரிக்கப்பட்ட 2023 இன் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கி சட்டத்தின் (2023 செப்டம்பர் 15 ஆம் திகதி தொடக்கம் அமுல்படுத்தப்படும்) மூலம் 1950 ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கி அரை சுயாதீன நிறுவனமாகத் தாபிக்கப்பட்ட 1949 இன் 58 ஆம் இலக்க நிதிச் சட்ட அதிகார சட்டம் இரத்து செய்யப்பட்டுள்ளது. இந்தப் புதிய சட்டத்தின் கீழ், இலங்கை மத்திய வங்கி சட்ட ஆளுமை கொண்ட ஒருங்கிணைந்த நிறுவனமாகத் தாபிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய அதிகாரச் சட்டத்தின் கீழ், இலங்கை மத்திய வங்கி சுயாதீனமாகவும் மற்றும் பொறுப்புக் கூற வேண்டியதாகவும் இருத்தல் வேண்டும். சட்ட ஆளுமை கொண்ட நிறுவனமாக, இலங்கை மத்திய வங்கி இலங்கையின் நாணயம், நிதி மற்றும் கொடுப்பனவு ஒழுங்கமைப்பு நிர்வாகம் என்பவற்றிற்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

புதிய நிர்வாக அமைப்பு இரண்டு சமாந்தர தீர்மானத்தினை மேற்கொள்ளும் சபைகளினால் அதாவது, மத்திய வங்கி ஆளுநரின் தலைமையில், நிர்வாக சபை மற்றும் நிதி கொள்கை சபை என்பவற்றைக் கொண்டிருக்கும். நிர்வாக சபையின் மூலம் இலங்கை மத்திய வங்கி நடவடிக்கைகளின் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் என்பவற்றை கண்காணிக்கும் பொறுப்பு மற்றும் நிதிக் கொள்கை தவிர இலங்கை மத்திய வங்கியின் பொதுக் கொள்கைகள் தீர்மானிக்கப்படும். நிதிக் கொள்கை சபையினால் இலங்கை மத்திய வங்கியின் நிதிக் கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் உள்நாட்டு விலை ஸ்திரத் தன்மையை சாதிப்பதற்கு மற்றும் பேணிச் செல்லுவதற்கு நெகிழ்வான பண வீக்கத்தினை இலக்காகக் கொண்ட கட்டமைப்பு மற்றும் இணக்கமான நெகிழ்வான அந்நிய செலாவணி விகிதக் கட்டுப்பாட்டினை நடைமுறைப்படுத்துதல் என்பன மேற்கொள்ளப்படுகின்றது.

ஒட்டுமொத்தமாக இலங்கை மத்திய வங்கியானது அதன் முதன்மை நோக்கத்திற்கு மேலதிகமாக, உற்பத்தி திறனான வளப் பயன்பாட்டினை அதிகப்படுத்துவதனிடையே, அனுகூலமான மற்றும் நிலையான பொருளாதார மற்றும் நிதி ஒழுங்கமைப்பினைப் பேணிச் செல்வதற்கு முன்னோடியாக நடவடிக்கை மேற்கொள்ளுகின்றது. எனவே, மத்திய வங்கியின் புதிய முதன்மை மற்றும் ஏனைய நோக்கங்கள் கீழே கட்டப்பட்டுள்ளன.

**முதன்மை நோக்கம்** - உள்நாட்டு விலை ஸ்திரத் தன்மையை சாதித்தல் மற்றும் பேணிச் செல்லுதல் - முதன்மை நோக்கத்தினை நோக்கிச் செல்லுகையில், இலங்கை மத்திய வங்கி அதன் செல்வ மட்டத்தினை நிலைப்படுத்தல் தொடர்பில் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

**ஏனைய நோக்கங்கள்** - நிதி ஒழுங்கமைப்பின் நிலைத்தன்மையை பேணிச் செல்லுதல் - ஏனைய நோக்கங்களை நோக்கிச் செல்லுகையில், இலங்கை மத்திய வங்கி நிதி ஒழுங்கமைப்பின் அபிவிருத்தி மற்றும் வினைத்திறன் என்பவற்றைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

இலங்கை மத்திய வங்கியின் பிரதான நிறைவேற்று அதிகாரியான அதன் ஆளுநரினல் மேலும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, அரச பொருளாதார நடவடிக்கை ஆலோசகரைப் போன்றும் அரசு வங்கியாளராகவும் மத்திய வங்கி நடவடிக்கை மேற்கொள்ளுகின்றது.

## கணக்காய்வு அவதானிப்புகள்

| | |
|---|---|
| **நிதிச் சபையின் ஒழுங்குறுத்தல்களுக்கு மற்றும் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்படாத நிறுவனங்கள்** | நுண்பாக நிதி வணிகத்தினை நடாத்திச் செல்லும் நிறுவனங்களுக்கு அனுமதிப் பத்திரத்தினை வழங்குதல், ஒழுங்குறுத்துதல் மற்றும் கண்காணிப்பு, 2016 ஜுலை 15 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் 2016 இன் 06 ஆம் இலக்க நுண்பாக நிதி அதிகாரச் சட்டத்தின் கீழ் மத்திய வங்கியின் நிதிச் சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. வைப்புகளை ஏற்றுக்கொள்ளும் மற்றும் முக்கியமாகக் குறைந்த வருமானம் பெறுவோருக்கு மற்றும் நுண் தொழில் முயற்சிகளுக்கு நிதிச் சேவையினை வழங்கும் நிறுவனங்கள் (நுண்பாக நிதி வணிகம்) இந்த சட்டத்தின் கீழ் அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனினும் வைப்புக்களை கையேற்காத எனினும் குறைந்த வருமானம் பெறுவோருக்கு மற்றும் நுண் தொழில் முயற்சிகளுக்கு நிதிச் சேவையினை வழங்கும் நிறுவனங்கள் இந்த அதிகார சட்டத்தின் கீழ் அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றுக் கொள்ளத் தேவையில்லை. இந்த காரணத்தினால் இவ்வாறான நிறுவனங்கள் மத்திய வங்கியின் நிதி சபையினால் / கட்டுப்பாட்டுச் சபையினால் ஒழுங்குறுத்தல் மற்றும் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| **உள்நாட்டுக் கடன் உகப்பாக்கம்** | உள்நாட்டுக் கடன் உகப்பாக்கத்தில் (Domestic Debt Optimization ) ஒரு பகுதியாக வங்கியினால் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்படும் தீர்க்கப்படாத தற்காலிக முற்பணம் மற்றும் அரசாங்கத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்கள் முறையே ரூபா. 344.7 பில்லியன் மற்றும் ரூபா.2,368 பில்லியன் தொகை, படிப்படியாக குறையும் நிலையான கூப்பன் வட்டி கிடைக்கும் புதிய திறைசேரி ஒப்பந்த முறி மற்றும் திறைசேரி உண்டியல்களாக மீளமைப்பு செய்யப்பட்டு மாற்றப்படுதல் 2023 திசெம்பர் 21 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாற்றப்படும் போது, 2024 பெப்ரவரி தொடக்கம் செப்டெம்பர் வரையான காலப் பகுதியில் முதிர்ச்சி அடையும் திறைசேரி |

உண்டியல்கள் மற்றும் 6 வருடம் தொடக்கம் 15 வருடம் வரையில் முதிர்ச்சி அடைவதற்கு உள்ள, 2024 ஆம் ஆண்டு வரையில் 12.4 சதவீத வட்டியும் (2024 ஆம் ஆண்டும் உள்ளிட்ட) , 2026 ஆம் ஆண்டு வரையில் 7.5 சதவீதம் வட்டியும் (2026 ஆம் ஆண்டும் உள்ளிட்ட) மற்றும் அதன் பின்னர் முதிர்ச்சி அடையும் தினம் வரையில் 5 சதவீத வட்டியும் எனப் படிப்படியாக குறைவடையும் நிலையான கூப்பன் வட்டி கிடைக்கும் திறைசேரி ஒப்பந்த முறிகள் கிடைத்திருந்தன. புதிய திறைசேரி ஒப்பந்த முறி மற்றும் திறைசேரி உண்டியல்கள் நியாயமான பெறுமதி மற்றும் கொடுக்கல் வாங்கல் பெறுமதி என்பவற்றுக்கிடையே உள்ள வித்தியாசம் காரணமாக மேலே கூறப்பட்ட மீளமைப்பின் போது ரூபா. 766.4 பில்லியன் ஒரு நாள் நட்டம் ( Day one Loss ) ஏற்பட்டிருந்தது.

## இலங்கை வங்கி

**2023 ஆம் ஆண்டில் நிதி பெறுபேறுகளில் பின்னடைவு**

2023 ஆம் ஆண்டில் செயல்பாட்டு பெறுபேறு ரூபா. 26,694 மில்லியன் இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய வருடத்தின் இலாபம் ரூபா. 31,972 மில்லியன் ஆகும். அதற்கு அமைய நிதி பெறுபேற்றில் ரூபா. 5,278 மில்லியன் பின்னடைவு அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவுக்கு பிரதானமாக முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது வருமான வரி செலவு 1471 சதவீதத்தினால் அதிகரித்திருந்தமை காரணமாக இருந்தது.

**ஆகக் கூடிய 10 செயலற்ற கடன் மீதிகள்**

2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் ஆகக் கூடிய 10 செயலற்ற கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா. 37,393.42 மில்லியனாக இருந்ததுடன் அது அத்தினத்தின் மொத்த கடன் மற்றும் முற்பண மீதிகளின் 1.52 சதவீதம் ஆகும். அதே போன்று முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது அது ரூபா 300.45 மில்லியன் அதாவது 0.81 சதவீத அதிகரிப்பாக இருந்ததுடன் அது அத் தினத்திலான வங்கியின் III ஆம் கட்ட மொத்தக் கடன் மற்றும் முற்பண மீதியின் 11.99 சதவீதமாகும்.

**2006 இன் 6 ஆம் இலக்க நிதிக் கொடுக்கல் வாங்கல் பதிவு சட்டத்தின் ஒழுங்கு விதிகளுடன் இணங்காமை**

சட்டத்தின் ஒழுங்கு விதிகளுடன் இணங்காததன் அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியினால் இலங்கை வங்கிக்கு 2023 நவம்பர் 07 ஆம் திகதி ரூபா. 6 மில்லியன் தண்டம் விதிக்கப்பட்டிருந்தது.

**இலங்கை இராணுவத்திடம் தற்காலிகமாக**

வங்கியினால் கையகப்படுத்தப்பட்ட 06 சொத்துக்கள் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் இலங்கை இராணுவத்திற்கு புனர்வாழ்வு மத்திய நிலையத்தினை நடாத்திச் செல்வதற்காக

| | |
|---|---|
| **ஒப்படைக்கப்பட்டிருந்த வங்கியினால் கையகப்படுத்தப்பட்ட சொத்துக்கள்** | பணிப்பாளர் சபையின் தழுவு அங்கீகாரத்துடன் தற்காலிகமாக ஒப்படைக்கப்பட்டிருந்தது. எவ்வாறு இருப்பினும் வங்கியினால் அந்த சொத்துக்களை மீள கையகப்படுத்துவதற்கு அல்லது அந்த சொத்துக்களுக்கான நியாயமான பெறுமதியினை மீளப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தால் நிலுவை மீதியினைத் தீர்ப்பதற்கு முடியாது இருந்தது. |
| **கடன்களைத் தள்ளுபடி செய்தல்** | வங்கி 2023 ஆம் ஆண்டுக்கு ரூபா. 17.17 மில்லியன் கடன்களைத் தள்ளுபடி செய்து இருந்ததுடன் கடந்த ஆறு வருடங்களுக்கான அதன் திரண்ட பெறுமதி ரூபா. 855.94 மில்லியன் ஆகப் பதிவிடப்பட்டிருந்தது. அதில் 2019 ஆம் ஆண்டினுள் தனியார் நிறுவனத்திற்கு உரியதான ரூபா. 616.46 மில்லியன் கடன் தள்ளுபடி செய்த மீதியும் உள்ளடங்கும். |

## மக்கள் வங்கி

| | |
|---|---|
| **அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் மற்றும் முற்பணம்** | 2023 ஆம் ஆண்டு இறுதி வரையில் அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் மற்றும் முற்பணம் என்பன ரூபா. 781,402 மில்லியனாக உள்ளதுடன் அது 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் வங்கியின் மொத்தக் கடன் மற்றும் முற்பணங்களில் 42.32 சதவீதமாகும். 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முதலீடு மற்றும் அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஏனைய பெறுகைகள் ரூபா 1,041,466 மில்லியனாக உள்ளதுடன், அதற்கு அமைய அரசாங்கத்திற்கு சொந்தமான தொழில் முயற்சிளுக்கான மொத்த வெளிப்படுத்தல் ரூபா. 1,822,868 மில்லியன் அதாவது வங்கியின் மொத்த சொத்துக்களில் 60 சதவீதமாக இருந்தது. |
| **Swap கொடுக்கல் வாங்கலில் நட்டம்** | முன்கூட்டிய எழுத்து மூல இணக்கப்பாடின்றி இலங்கை மத்திய வங்கியிடம் இருந்து கிடைக்க வேண்டிய 29.6 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை மத்திய வங்கியுடன் 43 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கான swap கொடுக்கல் வாங்கலைத் தீர்த்த காரணத்தினால் வங்கிக்கு ரூபா. 1,613.36 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. |
| **நிகழ்நிலை முற் கொடுப்பனவு அட்டையினை அறிமுகப்படுத்தும் செயற்திட்டம்** | இலங்கையில் பொதுப் போக்குவரத்து சேவைக்காக நிகழ்நிலை முற் கொடுப்பனவு அட்டையினை அறிமுகப்படுத்தும் செயற்திட்டத்திற்கு வங்கியினால் ரூபா. 93 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டம் தோல்வியடைந்த காரணத்தினால் 2023 செப்டம்பர் 11 ஆம் திகதி அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அந்த செயற்திட்டம் முழுமையாக இரத்துச் செய்யப்பட்டு புதிய செயற்திட்டமாக ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. |

## தேசிய சேமிப்பு வங்கி

**செயற்பாட்டுப் பெறுபேறுகள்**

2023 ஆம் ஆண்டில் வங்கியானது ரூபா. 4.29 பில்லியன் வரிக்கு முன்னரான இலாபத்தினையும் மற்றும் ரூபா. 7.22 பில்லியன் வரிக்குப் பின்னரான இலாபத்தினையும் பதிவு செய்திருந்தது. இந்த இலாபங்கள் முறையே கடந்த வருடத்தில் வரிக்கு முன்னரான இலாபம் மற்றும் வரிக்குப் பின்னரான இலாபமான ரூபா. 4.51 பில்லியன் மற்றும் ரூபா. 2.52 பில்லியனுடன் ஒப்பிடும் போது முறையே 4.9 சதவீத குறைவு மற்றும் 186 சதவீத அதிகரிப்பும் அவதானிக்கப்பட்டது. வட்டி வருமானத்துடன் ஒப்பிடும் போது வட்டி செலவு கவனத்தில் கொள்ளத்தக்களவு அதிகரித்திருந்தமை இதற்கு முக்கிய காரணமாக சுட்டிக் காட்டப்பட முடியும். வரிக்குப் பின்னரான இலாபம் கூடிய வீதத்தினால் அதிகரித்தமைக்கு ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் அதிகரித்துச் சென்றதன் மூலம் உருவாகிய வரிச் செலவு எதிர்மறைப் பெறுமதியினைக் கொண்டமை காரணம் ஆகும். இதன் பெறுபேறாக 2022 ஆம் ஆண்டு இறுதியில் 0.28 சதவீதமாகப் பதிவு செய்யப்பட்ட சொத்துக்கள் மீதான நலன்கள் (ROA), 2023 ஆம் ஆண்டில் 0.26 வரையில் குறைவடைந்திருந்தது. அதே போன்று கடந்த வருடத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த 3.40 சதவீதமான பங்குகள் மீதான நலன்கள் (ROE) 2023 ஆம் ஆண்டில் 9.36 சதவீதம் வரையில் வீழ்ச்சி அடைந்திருந்தது.

**கடன் மற்றும் முற்பணம்**

வங்கியின் மொத்தக் கடன் மற்றும் முற்பணங்களின் பெறுமதி 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா. 548,898 மில்லியனாக இருந்ததுடன் இது கடந்த வருடத்தின் ரூபா. 570,256 மில்லியனுடன் ஒப்பிடும்போது 3.9 சதவீதம் அளவிலான வீழ்ச்சியாகும். முழுமையான மொத்தக் கடன் மற்றும் முற்பணங்களில் ரூபா. 429,044 மில்லியனைப் பெற்றுக் கொண்டிருந்தது தனிநபர் கடன், வீட்டுக் கடன் மற்றும் ஆதன கடன் போன்ற ரீதியில் ஆகும். மேலும், ரூபா. 94,935 மில்லியன் அதாவது 17.3 சதவீதம் மற்றும் ரூபா. 15,220 மில்லியன் அதாவது 2.8 சதவீதத்தினைப் பெற்றுக் கொண்டிருந்தது முறையே ஈட்டு கடன் மற்றும் ஊழியர் கடன் எனும் ரீதியில் ஆகும்.

**மாலைத்தீவு தனியார் கம்பனி ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்த வெளிநாட்டுக் கடன்**

மொத்தக் கடன் மற்றும் முற்பணங்களில் ரூபா. 3,800 மில்லியனாக வெளிநாட்டுக் கடனாக உள்ளதுடன் அந்த மொத்த பெறுமதியானது, 2018 ஆம் ஆண்டில் மாலைத்தீவில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டிருந்த 9 மில்லியன் அமெரிக்க டொலர் மற்றும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் அதன் மீதான கணக்கீடு செய்யப்பட்ட நிலுவை வட்டியும் ஆகும். வெளிநாடு ஒன்றில் சுற்றுலாக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள தனியார் நிறுவனம் ஒன்றிற்கு நிர்மாண நடவடிக்கைகளுக்காக கடன் வழங்கியிருந்தமை, தேசிய சேமிப்பு வங்கி அதிகார சட்டத்தில் உள்ளடக்கப்படாத துறையாக உள்ளதுடன் அந்தக் கடன் தொகையினை

வழங்குவதற்கு முன்னர் விரிவான கடன் மதிப்பீடு அல்லது ஆபத்து மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது என்பதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. கடன் தொகை வழங்கப்பட்டதன் பின்னர் மூலதனத்தினை மீளச் செலுத்துவதற்கு வங்கியினால் வழங்கப்பட்டிருந்த ஒரு வருட ஆரம்ப நிவாரண காலம் 2022 வரையில் அவ்வப்போது நீடிக்கப்பட்டிருந்தது. இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்டிருந்த 2020 இன் 5 ஆம் இலக்க சுற்றறிக்கையில் உள்ளடக்கப்படாத வெளிநாட்டு நிறுவனமான போதிலும், வங்கியினால் அந்த சுற்றறிக்கையின் கீழ் கடன் நிவாரணம் வழங்கப்பட்டிருந்த போதிலும், கடன் பட்ட நிறுவனத்தினால் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் எதுவிதமான மூலதன மீளச் செலுத்துதலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்தக் கடன் தொகை வருட இறுதியில் செயலற்ற கடன் தொகை என வகைப்படுத்தப்பட்டிருந்ததுடன் இதுவரையில் இது தொடர்பில் தொழில்நுட்பத் திறன் மற்றும் நிபுணத்துவம் கொண்ட சுயாதீன தரப்பினரால் களப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி

**செயற்படாத கடன் அபாய விகிதம்**

2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் கடன் மற்றும் முற்பணங்களின் மொத்த மூலதன நிலுவை மமீதி ரூபா. 23,875 மில்லியனாக உள்ளதுடன், அத்தினத்தில் செயற்படாத கடன் மற்றும் முற்பணங்களின் பெறுமதி ரூபா. 5,532 மில்லியன் ஆகும். செயற்படாத கடன் விகிதம் மொத்த மூலதன நிலுவை மீதியில் 23 சதவீதமாக உள்ளதுடன் அது வங்கியின் செயற்படாத கடன் ஆபத்து / இயலுமையான கொள்ளளவான 20 சதவீதத்தினை விஞ்சி உள்ளது.

**செயற்பாடற்ற கடன்**

2023 ஆம் ஆண்டினுள் ரூபா. 7,864 மில்லியன் பெறுமதியான 16,558 எண்ணிக்கையான கடன் தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் 12 சதவீதம் அதாவது 1,624 கடன்கள் செயலற்ற கடன் தொகுதிக்கு மாற்றப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் அந்த கடன் தொகைகளுக்கு உரிய மொத்த நிலுவை மூலதன மீதி ரூபா. 959 மில்லியன் ஆகும்.

2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் 18 வியாபாரக் கடனுக்கு உரிய மொத்த மூலதன நிலுவை மீதி ரூபா. 939 ஆக உள்ளதுடன் அதில் ரூபா. 776 மில்லியன் அதாவது 83 சதவீதம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் செயலற்ற கடன் தொகுதிக்கு மாற்றப்பட்டிருந்தது.

**இனம் காணப்பட்ட நட்டம்**

2018 ஆம் ஆண்டில் அம்பாறை கிளையின் மூலம் தனியார் ஆடைத் தொழிற்சாலைக்கு மொத்தம் ரூபா. 8 மில்லியனான 07 மோசடியான கடன்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் பின்னர் அவை செயல்படாத தொகுதிக்கு மாற்றப்பட்டுள்ளன. 2023 திசெம்பர் 31 ஆம் திகதி அந்தக் கடன்களின் நிலுவை மீதி ரூபா. 14.96 மில்லியனாக இருந்தது.

| | |
|---|---|
| **ஊழியர் சேமலாப நிதிக் கடன** | ஊழியர் சேமலாப நிதி இல்லாத போதல் / கடன் ஒழுங்கமைப்பில் பதிவுகள் அழிக்கப்பட்டதன் காரணமாக 70 EPF வாடிக்கையாளர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 3.45 மில்லியன் நிலுவைத் தொகையை 2022 காலப் பகுதிக்கு செலுத்துவதற்கு மத்திய வங்கி நிராகரித்து இருந்தது. அதன் மூலம் வங்கிக்கு ரூபா. 12.49 மில்லியன் நட்டம் ஏற்படக்கூடும் என்பதுடன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அதனைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **சொத்து அடமான கடன் பெறுமதி** | வங்கியின் கடன் செயற்பாட்டு கையேட்டின் 4.2.1.1 ஆம் பிரிவிற்கு அமைய வியாபார நோக்கத்திற்காகச் சொத்துக்களை அடமானம் வைக்கும் போது, விற்பனைக்கான பெறுமதியில் (force sale value) 60 சதவீதமான தொகையே கடனாகக் கருதப்பட வேண்டும். அதற்கு முரணாக குளியாப்பட்டிய கிளையினால் ரூபா. 49.60 மில்லியன் பெறுமதியான 03 வியாபாரக் கடன்கள் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. அவை அடமானம் வைக்கப்பட்டிருந்த சொத்துக்களின் விற்பனைப் பெறுமதியில் 124 சதவீதமாகும். எவ்வாறு இருப்பினும், வங்கியினால் மேலே குறிப்பிடப்பட்ட சொத்துக்கள் 2019 ஓகஸ்ட் 01 ஆம் திகதி கையகப்படுத்தப்பட்டிருந்ததுடன் அவை 2021 ஒக்டோபர் 08 ஆம் திகதி ரூபா. 31 மில்லியனுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. மேலும் ரூபா 39.81 மில்லியன் தொகை மீள அறவிடப்பட முடியாது காணப்படுவதுடன் அதற்காக எதுவித அடமானம் / பிணை இல்லாத காரணத்தால் வங்கிக்கு நட்டம் ஏற்படக் கூடும் என்பது அவதானிக்கப்பட்டது. |
| **வங்கியினால் கையகப்படுத்தப்பட்ட சொத்துக்கள்** | ரூபா. 393.72 மில்லியன் பெறுமதியான (நிலுவை கடன் வட்டி மற்றும் மூலதனம்) கடன் தொகை, 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் கையகப்படுத்தப்பட்ட சொத்துக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா. 29.58 மில்லியன் கடன் தொகைக்கு உரிய கையகப்படுத்தப்பட்ட சொத்துக்கள் ஐந்து வருடங்களாக விற்பனை செய்து நிலுவை கடன் தொகை அறவிடப்பட்டுக் கொள்ளாது காணப்படுகின்றது. |

## பிரதேச அபிவிருத்தி வங்கி

**நிதி பெறுபேறு**

2023 ஆம் ஆண்டுக்கு வங்கி ரூபா. 1.1 பில்லியனான வரிக்கு முன்னரான இலாபம் மற்றும் வருடத்தின் தேறிய வட்டி வருமானம் ரூபா. 16 பில்லியனைப் பதிவு செய்திருந்தது. 2023 ஆம் ஆண்டு இறுதியில் வங்கியின் மொத்த சொத்துக்கள் ரூபா. 299.7 பில்லியன் வரையில் அதிகரித்திருந்ததுடன் அது 2022 ஆம் ஆண்டின் மொத்த சொத்துப் பெறுமதியான ரூபா. 285 பில்லியனுடன் ஒப்பிடும் போது 5 சதவீத அதிகரிப்பாகும். 2023 ஆம் ஆண்டு இறுதியில் வாடிக்கையாளர்களின் வைப்பு ரூபா. 226 பில்லியனாக இருந்ததுடன் அது 2022 ஆம் ஆண்டு இறுதியுடன் ஒப்பிடும்போது ரூபா. 15 பில்லியன் அல்லது 8 சதவீத அதிகரிப்பாகும். 2023 நிதியாண்டு இறுதியில் முதலாம் தர மூலதன அளவு விகிதம் 10.09 சதவீதமாக உள்ளதுடன் மொத்தமாக பொருண்மைத்தன்மை விகிதம் 17.28 சதவீதம் ஆகும். மேலும், கட்டம் 3 இன் கீழான கடன பெறுமதியிழப்பு விகிதம் (கட்டம் 3 இன் கீழ் கடன் பெறுமதியிழப்பு கழிக்கப்பட்ட பின்னர்) 2023 ஆம் ஆண்டின் 8.8 சததவீதமாக காணப்பட்டதுடன், ஒட்டுமொத்தமாக அனுமதிப் பத்திரம் பெற்ற விசேட வங்கிகளுக்கு இந்த விகிதம் 10.6 ஆகும். பங்குகள் மீதான ஈட்டப்பட்ட விகிதம் 2023 ஆம் ஆண்டு 1.54 ஆக உள்ளதுடன் உரிமை மீதான நலன்கள் 4.83 ஆகும்.

**பொது முகாமையாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டமை**

2008 இன் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி அதிகாரச் சட்டத்தின் 26 ஆம் பிரிவிற்கு அமைய பணிப்பாளர் சபையினால் வங்கியின் பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் நியமிக்கப்படுதல் வேண்டும். 26(4) ஆம் பிரிவிற்கு அமைய ஆகக் குறைந்தது 3 வருட காலம் பதவி வகிக்கக்கூடிய பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் ஒருவர் நிரந்தர அடிப்படையில் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், 2019 பெப்ரவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2024 ஜுன் 06 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியினுள் 5 நபர்கள் நிலையான அல்லது பதிற்கடமை அடிப்படையில் 8 தடவைகளில் குறுகிய கால பொதுமுகாமையாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தனர் என்பது அவதானிக்கப்பட்டது. மேலும் 2024 ஜுன் 06 ஆம் திகதி வரையில் நியமிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களும் பதிற்கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தனர். நீண்ட கால அடிப்படையில் பொது முகாமையாளர் பதவி வெற்றிடமாக காணப்படுகின்றமை அன்றாட வங்கி நடவடிக்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது அவதானிக்கப்பட்டது.

## அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி

**செயற்பாட்டு பெறுபேறு**

2023 ஆம் ஆண்டின் போது தேறிய செயற்பாட்டு வருமானம் ரூபா. 306 மில்லியனாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய வருடத்தில் வருமானம் ரூபா. 1,688 மில்லியன் ஆகும். அதற்கமைய தேறிய பெறுபேற்றில் ரூபா. 1,382

மில்லியன் பின்னடைவு அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவுக்கு முக்கியமாக தேறிய வட்டி வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா.1,347 மில்லியன் வீழ்ச்சி அடைந்திருந்தமை காரணமாக இருந்தது.

**செயலற்ற கடன் விகிதம**

வங்கியின் மொத்த செயலற்ற கடன் விகிதம் 2022 ஆம் ஆண்டில் 22.02 சதவீதத்தில் இருந்து 2023 ஆம் ஆண்டில் 25.99 சதவீதம் வரையில் அதிகரித்திருந்ததுடன் ஊழியர் சேமலாப நிதியக் கடன் அகற்றப்பட்ட செயலற்ற கடன் விகிதம் 2022 ஆம் ஆண்டில் 10.31 சதவீதத்தில் இருந்து 2023 ஆம் ஆண்டில் 12.32 சதவீதம் வரையில் அதிகரித்திருந்தது.

மேலும், சேதக் கட்டணம் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 195 மில்லியனால் அதாவது 53 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## அனுமதிப்பத்திரம் பெற்ற நிதி நிறுவனப் பிரிவு

அனுமதிப்பத்திரம் பெற்ற நிதி நிறுவனப் பிரிவில் கடன் மற்றும் முற்பணம், மொத்த சொத்துக்களில் 68.6 சதவீதம் ஆகும். 2022 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 7.7 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடும்போது, இந்தப் பிரிவில் கடன் மற்றும் முற்பண தொகுப்பு 2023 ஆம் ஆண்டினுள் ரூபா. 1,160.4 பில்லியன் வரையில் 3.2 சதவீதத்தினால் (ரூபா.38.0 பில்லியன்) ஒடுக்கமடைந்திருந்தது .

2022 ஆம் ஆண்டு இறுதியில் சுட்டிக் காட்டப்பட்ட 17.4 சதவீதத்துடன் ஒப்பிடும்போது, மொத்தமாக 3 ஆவது கட்டத்தில் கடன் விகிதம் 17.8 சதவீதம் வரையில் அதிகரித்துச் சென்றதனைப் பிரதிபலிக்கும் வகையில், அனுமதி பெற்ற நிதி நிறுவனப் பிரிவில் சொத்துக்களில் தரம் வீழ்ச்சி அடைந்திருந்தது.

தேறிய வட்டி வருமானம் மற்றும் வட்டி அல்லாத வருமானம் அதிகரித்துச் சென்ற காரணத்தால் அனுமதி பெற்ற நிதி நிறுவனப் பிரிவில் வரிக்குப் பின்னரான இலாபம் 2022 ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூபா. 42.8 பில்லியனில் இருந்து 2023 ஆம் ஆண்டில் ரூபா. 47.7 பில்லியன் வரையில் 11.3 சதவீதத்தினால் அதிகரித்துச் சென்றுள்ளது.

அனுமதி பெற்ற நிதி நிறுவனப் பிரிவின் பொறுப்புக்களில் முக்கிய பகுதி இன்னமும் வாடிக்கையாளர்களின் வைப்புக்களின் மூலம் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் அது 55.3 சதவீதம் ஆகும். 2023 ஆம் ஆண்டின் வைப்புக்கள் ரூபா. 935.3 பில்லியன் வரையில் 8.2 சதவீதத்தினால் (ரூபா. 70.8 பில்லியன்) அதிகரித்திருந்ததுடன், கடன் பெறுகை ரூபா. 264.4 பில்லியன் வரையில் 17.9 சதவீதத்தினால் (ரூபா. 57.8 பில்லியன்) வீழ்ச்சி அடைந்திருந்தது.

## மெர்ச்சன்ட் பேங்க் ஒப் ஸ்ரீலங்கா அண்ட் பினான்ஸ் பிஎல்சி

**செயற்பாட்டு பெறுபேறு**

2023 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா. 20.8 மில்லியன் இலாபமாக உள்ளதுடன் அதற்கு நேரொத்த முன்னைய வருடத்தில் நட்டம் ரூபா. 495.6 மில்லியன் ஆகும். அதற்கமைய, முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது நிதி பெறுபேற்றில் ரூபா. 516.4 வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டினுள் மொத்த செயற்பாட்டு வருமானம் ரூபா. 714.9 மில்லியனால் அதிகரித்திருந்தமை இந்த நிதி பெறுபேற்றின் அதிகரிப்பிற்குப் பிரதான ரீதியில் காரணமாக இருந்தது. வருட இறுதியில் நிறுவனத்தின் சொத்துக்கள் 7.9 சதவீத அதிகரிப்பை காட்டியிருந்ததுடன், நிறுவனத்தின் ஐந்தொகையானது 2023 திசெம்பர் இறுதியில் ரூபா. 33.7 பில்லியன் வரையில் அதிகரித்திருந்தது. வங்கி மற்றும் நிதி நிறுவனங்களில் தாபிக்கப்பட்டிருந்த வைப்புக்கள் ரூபா. 470.9 மில்லியனாலும் மற்றும் அரசு பிணையங்கள் மற்றும் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி முதலீடுகள் ரூபா. 7,873.8 மில்லியனாலும் அதிகரித்திருந்ததுடன், கடன் மற்றும் பெறுகைகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 21.98 சதவீதத்தினால் குறைந்திருந்தமை அவ்வாறு சொத்துக்கள் அதிகரிப்பதில் பிரதானமான தாக்கத்தினை ஏற்படுத்தி இருந்தது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது வங்கியின் வைப்புத் தொகை 8.2 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

**மூலதன விகிதம்**

2023 ஆம் ஆண்டு இறுதியில் நிறுவனத்தின் அடுக்கு I மூலதனம் மற்றும் மொத்த மூலதன விகிதம் முறையே 13.60 சதவீதம் மற்றும் 16.75 சதவீதமாக இருந்ததுடன், அதற்கு அமைய 2022 ஆம் ஆண்டு இறுதியில் 12.01 சதவீதமாக காணப்பட்டது. இலங்கை மத்திய வங்கியின் ஆகக் குறைந்த ஒழுங்குறுத்தல் தேவைப்பாட்டினை விடக் குறைந்த பெறுமதியைக் கொண்ட மொத்த மூலதன விகிதம் நிறுவனத்தினால் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கடன் பத்திரங்கள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா. 622.83 மில்லியன் காரணமாக அந்த மூலதனத் தேவைப்பாட்டினைத் திருத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**செயற்பாடற்ற கடன் கடன்**

2023 ஆம் ஆண்டில் அறவிடப்பட முடியாத 127 செயலற்ற கடன்களுக்கு உரிய மொத்தம் ரூபா. 64 மில்லியன் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது.

# காப்புறுதி அலுவல்கள்

இலங்கையின் காப்புறுதித் தொழில்துறை காப்புறுதிக் கம்பனிகளையும் 29 நிறுவனங்களையும், 80 காப்புறுதி தரகர்களையும், 29 நட்டஈடு செய்பவர்களையும் ஏறத்தாழ 45,000 அளவிலான காப்புறுதி முகவர்களையும் உள்ளடக்கியதாகும். இந்தத் தொழிலுக்குரிய ஒழுங்குபடுத்தல் நிறுவனமாக 2000 இன் 43 ஆம் இலக்க காப்புறுதி தொழில்துறையை ஒழுங்கமைக்கும் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட காப்புறுதி ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழு செயற்படுகின்றது.

## கணக்காய்வு அவதானிப்புகள்

### இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழு

| | |
|---|---|
| **மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான பங்களிப்பு** | காப்புறுதிக் தொழிலின் மொத்தப் பெறுமதி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.1 சதவீதமாக இருந்தது. அது பிராந்திய மற்றும் சர்வதேச ரீதியில் நோக்குகையில் மிகவும் குறைந்த பெறுமதியாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த நிலைமைக்கான காரணங்களை இனங்காண்பதற்கும், தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **அங்கீகரிக்கப்படாத செயலாற்றல் படிப்பணத்தைச் செலுத்துதல்** | ஆணைக்குழுவால் பொதுத்துத் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் 2010 ஆம் ஆண்டு முதல் ஒரு வருடத்திற்கு ஓர் அடிப்படைச் சம்பளத்தை செயலாற்றல் ஊக்குவிப்புப் படியாக செலுத்தியிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டு முதல் அது மொத்த சம்ளத்தில் ஒன்றரை மாதமாக மாற்றப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது. மேலும், இச் செயலாற்றல் படியைச் செலுத்துவதற்கு உரிய பொருத்தமான செயலாற்றல் மதிப்பீடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2012 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை செலுத்தப்பட்ட மொத்த செயலாற்றல் படிகளின் கூட்டுமொத்தம் ரூபா 60.5 மில்லியன் ஆகும். |

### தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதிய சபை

| | |
|---|---|
| **பதிவு செய்யப்படாத காப்புறுதி தரகர்களுக்கு மீள்காப்புறுதி நடவடிக்கைகளுக்காக செலுத்தப்பட்டமை.** | காப்புறுதியை முறைமைப்படுத்தும் சட்ட விதிகளின் பிரகாரம் எந்தவொரு நபருக்கும் காப்றுதி சபையினால் கையளிக்கப்பட்ட தரகர்களாக பதிவுசெய்யும் சான்றிதழைக் கொண்டவராயின், சபையால் அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதி தரகர் சங்கத்தின் அங்கத்தவராக இருந்தாலேயன்றி காப்புறுதி தரகர்களாக செயற்படுதல் அல்லது அவ்வாறு முன்வரலாகாது எனக் குறிப்பிட்டிருக்கையில் அந்த சட்டங்களின் பிரகாரம் பதிவு செய்யப்படாத காப்புறுதி தரகர் ஒருவருக்கு 2017 ஆம் |

ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மீள்காப்புறுதி செயற்பாடுகளுக்காக ரூபா 1,204 மில்லியன செலுத்தப்பட்டிருந்தது.

**மீள்காப்புறுதி மேவுகை இன்றி நிறுவனம் இயங்கியிருந்தமை.**

ரூபா 516 மில்லியன் செலுத்தப்பட்டு 2023 யூலை 31 ஆம் திகதி வரையான 18 மாத காலத்திற்கு மீள்காப்புறுதி செய்வதற்காக தெரிவு செய்யப்பட்ட தரகர் கம்பனியால் ஒரு தரப்பாக 2022 ஏப்ரல் 21 ஆம் திகதி உடன்படிக்கையிலிருந்து விலகிக்கொண்டமையால் அத்திகதி முதல் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை மீள்காப்புறுதி மேவுகையின்றி நிறுவனம் இயங்கியிருந்தமையால் நிதியம் பாரிய ஆபத்தான நிலைமைக்கு உட்பட்டிருந்தது.

**தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய மீள்காப்புறுதி தவணைப் பணம் செலுத்தப்பட்டிராமை.**

தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தால் சாதாரண காப்புறுதிக் கம்பனிக்குச் செலுத்த வேண்டியதாக இனங்காணப்பட்ட கோவை வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 30 மில்லின் தொகை, உரிய நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிராததன் காரணமாக அக் கம்பனியால் நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மீள்காப்புறுதி தவணைப் பணம் ரூபா 2,390 மில்லியன் தொகை 2022 சனவரி முதல் 2023 திசெம்பர் 31 வரையான 24 மாத காலம் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. இதனால் நிதியத்திற்கு ரூபா 901 மில்லியன் வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

**மீள்காப்புறுதி முகாமைத்துவ தகவல் முறைமையொன்று இன்மை.**

பெறவேண்டிய மீள்காப்புறுதி மீதி ரூபா 2,415 மில்லியன் மற்றும் செலுத்த வேண்டிய மீள்காப்புறுதி நட்டங்களைப் பதிவு செய்வதற்காக சரியான முகாமைத்துவ தகவல்கள் முறைமையொன்று இன்மையால் மீள்காப்புறுதி தவணைப்பணத்தை உரிய காலத்தில் சேகரித்து மீள்காப்புறுதி நட்டக் கொடுப்பனவுகள் சிக்கலான நிலையில் காணப்பட்டது.

**முதன்மை காப்புறுதிக் கம்பனிகளிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய தவணைப் பணம் அறவிடப்பட்டிராமை**

1989 செப்தெம்பர் 27 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் 2008 மார்ச் 25 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்திலின் படி, வேலை நிறுத்தம், ஒன்று திரள்வு, மக்கள் போராட்டம் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளால் நேரும் பாதிப்புக் காப்புறுக்காக முதன்மைக் காப்புறுதிக் கம்பனியால் வழங்கப்படும் சகல காப்புறுதிக் காப்பீட்டின் மூலமும் பெற்றுக்கொள்ளப்படும் தவணைப்பணத்தில் 95 சதவீதம் தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு அறவிட்டுக்கொள்ள வேண்டும். எனினும், தேசிய நம்பிக்கை பொறுப்பு நிதியம் இதன் படி நடவடிக்கை எடுக்காது மோட்டார் வாகனக் காப்புறுதியில் 12 சதவீதத்தையும் மோட்டார் வாகன மல்லாத காப்புறுதியில் இருந்து 80 சதவீதமும் மாத்திரம்

நிதியத்திற்கு அறவிடப்பட்டிருந்தமையால் கடந்த 15 ஆண்டு காலப்பகுதியின் போது நிதியத்திற்கு் நட்டம் ஏற்பட்டிருந்தது.

**மீள்காப்புறுதியிடுகையில் நேர்ந்த சட்ட விரோத செயற்பாடுகளால் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டிருந்தமை.**

2016 ஆம் ஆண்டின் போது இயற்கை அனர்த்தக் காப்புறுதிகளை மேவுகை செய்வதற்காக அரசாங்கத்தின் நிதியத்தின் கீழ் காப்புறுதி நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும், நிதியத்தைப் பயன்படுத்தி மீள்காப்புறுதி நடவடிக்கைகளை மேற்கொள்கையில் நேர்ந்திருந்த சட்டவிரோத செயற்பாடுகளால் அரசாங்கத்திற்கு ரூபா 4,400 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. அதன் காரணமாக, பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர், உதவி பொது முகாமையாளர் நிதி போன்றவர்கள் சேவையிலிருந்து நீக்கப்பட்டிருந்த போதிலும் நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்காக பொறுப்பானவர்களை நிர்ணயிப்பதற்கு முறையான ஆய்வொன்றை நடாத்துவதற்கு முகாமைத்துவத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**மிகைக் கட்டண வரிக்கு உட்படாத போதிலும் மிகைக் கட்டண வரி செலுத்தப்பட்டிருந்தமை.**

சபையால் மிகைக் கட்டண வரியாக ரூபா 1,196 மில்லியன் 2023 ஆம் ஆண்டின் போது வேலை நிறுத்த போராட்டம் மற்றும் பயங்கரவாத நிதியத்திலிருந்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. எனினும், சபை 2022 இன் 14 ஆம் இலக்க மிகைக் கட்டண வரிச் சட்டத்தின் பிரகாரம், மிகைக் கட்டண வரிக்கு உட்படாத போதிலும் அவ் வரி விலக்கைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம்

**கூட்டுத்தாபனத்தின் பொதுக் காப்புறுதி துறையினதும் ஆயுள் காப்புறுதி துறையினதும் சந்தைப் பங்கு**


2022 ஆம் ஆண்டின் போது பொதுக் காப்புறுதி பிரிவின் சந்தைப் பங்கு 15.9 சதவீதமாக இருந்ததுடன் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது அது 15 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. 2022 ஆம் ஆண்டிற்காக ஆயுட் காப்புறுதி பிரிவின் சந்தைப் பங்கு 15.4 சதவீதமாக இருந்ததுடன் இது 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 12.5 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

# தேசிய பாதுகாப்பு

பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படுகின்ற 06 திணைக்களங்கள் மற்றும் 16 நிதிச் சட்ட சபைகள் அல்லது நிறுவனங்களால் தேசிய பாதுகாப்புத் தொடர்பாக பின்வரும் பணிகள் மற்றும் இலக்குகள் நிறைவேற்ற வேண்டி இருந்தது.

| | |
|---|---|
| **பணிப்பொறுப்புக்கள்** | தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் அரச மற்றும் உள்ளக உள்நாட்டு பாதுகாப்பை தொடர்புபடுத்துகின்ற புலனாய்வு சேவைகளை நடாத்திச் செல்லுதல். |
| | வெடி பொருட்கள் மற்றும் துப்பாக்கிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல். |
| | பாதுகாப்பு சேவையில் நபர்களுக்காக பாதுகாப்பு கல்வி மற்றும் பட்டத்தின் சேவைக் கல்வியினை வழங்குதல். |
| | கழற்றும் செயற்பாடுகள் மற்றும் கரையோர பாதுகாப்பு சேவையினை நிர்வகித்தல் |
| | செயற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் அபாயகரமான ஔடதங்களைப் பாவிப்பதைத் தவிர்த்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் |
| | காலநிலை மற்றும் வானிலை தொடர்பாக சேவையினை வழங்குதல். மண்சரிவு இடர் முகாமைத்துவ மற்றும் அதற்குரிய ஆராச்சிகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். |

2023 ஆம் ஆண்டில் மீள் திருத்தப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் மேலே குறிப்பிடப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக அமைச்சு மற்றம் பாதுகாப்பு பிரிவிற்குரிய 05 திணைக்களங்களுக்கு கூட்டுமொத்தமாக ரூபா 402,948 மில்லியன் நிதியேற்பாடு பாராளுமன்றத்தால் வழங்கப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அதில் ரூபா 381,598 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.




வரைபட இலக்கம் 2.18 : வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் அளவு மற்றும் செலவினம் மூலம் - 2023 இன் வருடாந்த நிதிக்கூற்றுக்கள்

## கணக்காய்வு அவதானிப்பு

### பாதுகாப்பு அமைச்சு

**பாதுகாப்பு இராணுவ தலைமையகம் நிர்மாணிக்கும் செயற்திட்டம்**

பாதுகாப்பு இராணுவத் தலைமையகத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் நிர்மாணங்கள் தாமதமடைந்தமை, நாணயக் கடிதம் துறத்தலின் தாமதம் போன்றவற்றின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட காலத்தில் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. அதன் பிரகாரம் ஒப்பந்தக் கால எல்லையை நீடிக்க வேண்டி ஏற்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அவ்வாறான வளங்கள் ஒப்பந்தகாரர் இருவரினால் ரூபா 837.5 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 3.68 மில்லியன் ஆன கால நீடிக்கும் கோரிக்கை (Claims for EOT) 19 கோரிக்கைகளின் அடிப்படையில் நிகழத்தக்க பொறுப்புக்கள் ஏற்பட்டிருந்தது.

மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 876.84 மில்லியன் ஆன பாதுகாப்பு தலையக நிர்மாண செயற்திட்த்தில் 03 கட்டிடங்கள் அமைத்தல் மற்றும் பேன்றி கிரனைட் டைல் வழங்கி பொருத்தும் பணிகள், 03 பெறுகைப் பணிகளாக வழங்கப்பட்டு கேள்வி கோரப்பட்டிருந்த போதும் ஒப்பந்தம் மூன்று ஒப்பந்தகாரரில் ஒருவருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.12 இன் பிரகாரம் கேள்விதாரரின் நிதி மற்றும் தொழில் நுட்ப, உற்பத்தி, செயலாற்றல், நியமங்கள் தொடர்பாக முழுமையான

தகைமை மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் ரூபா 927.66 மில்லியன் ஆன ஒப்பந்தப் பணிகள் மூன்று ஒரே தடவையில் கையளிக்கும் போது மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாக முறையான மதிப்பீடு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்த காலத்தில் இவ்வாறு மூன்று மடங்கு மேலதிக கால நீடிப்பு வழங்கும் 04 சந்தர்பங்களில் வழங்கப்பட்டிருந்த போதும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**முப்படைகளுக்கும் உணவு வழங்குவது தொடர்பான பெறுகை**

2023 வழங்கல்களுக்காக முப்படை அங்கத்தவர்கள் 151,429 பேர்களுக்காக பச்சை மற்றும் உலர் உணவுகளை வழங்குவதற்காக ரூபா 96 பில்லியன் செலவின மதிப்பீட்டின் அடிப்படையில் கேள்வி கையளிக்கப்பட்டிருந்தது. இராணுவத்தால் இந்த உணவு மதிப்பீடு தயாரிக்கும் போது குறித்துரைத்த திட்டமுறை ஒன்று பின்பற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இலங்கை இராணுவத்தின் நபர்களை நாளாந்த அரிசித் தேவை ஒரு அரிசி வகையில் 190 கிராம் ஆக ஏற்றுக்கொள்ளப்பட்டு பேணிச்செல்லப்பட்ட போதிலும் 633 கிராம் ஆக கணிப்பிடப்பட்டிருந்ததுடன் ஒரு கடற்படை அங்கத்தவரின் நாள் ஒன்றின் உணவுத் தேவை அரிசி மற்றும் தானியம், மரக்கறி, இறைச்சி, மீன் மற்றும் கருவாடு உள்ளடக்கிய 140 வகைகளில் 27 கிலோகிராம் 590 கிராம் ஆக முறையற்ற மற்றும் மிகை மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. இந்த மூன்று மதிப்பீடுகளினதும் கிரயம் மற்றும் உள்ளபடியான கிரயத்தை ஒப்பீடு செய்யும் போது 192 சதவீதத்திற்கும் 231 சதவீதத்திற்கும் இடையிலான அளவில் மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுகளில் உள்ளபடியான நுகர்வு தொடர்பாக கவனத்தில் கொண்டு உணவு நுகர்வு தொடர்பாக சரியான மதிப்பீடு தயாரிக்கும் இயலுமை காணப்பட்ட போதும் பெறுகை நிறுவனம், பெறுகைக் குழு அல்லது தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மதிப்பீட்டில் காணப்பட்ட இந்த நலிவுகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

வருடாந்த உணவுத் தேவை மிகை மதிப்பீட்டினால் மொத்தக் கிரயம் மிகை மதிப்பீட செய்யப்பட்டமை, அதன் அடிப்படையில் பிணை முறிகளின் பெறுமதி உயர்வடைந்து சென்றமை போன்றவற்றின் காரணமாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு இந்தப் பெறுகைகளுக்காக பங்குபற்றுதலுக்கான இயலுமை குறைவடைந்திருந்தது. இதன் காரணமாக பெறுகையின் ஆரம்ப நோக்கமான போட்டியாளர் நிலைமையை உச்சப்படுத்துதல் மற்றும் சமமான சந்தர்ப்பங்களை வழங்கும் அடிப்படையில் நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பிலும் மற்றும் மிகை மதிப்பீட்டின் அடிப்படையில் நிதியேற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டதனால் அரச நிதி முகாமைத்துவம்

தொடர்பிலும் பாதகமானதாக தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

**இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள்**

இடர் உதவி செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட மண் சரிவினால் வீடுகளை இழந்த மற்றும் மண் சரிவு அதிக ஆபத்துள்ள வலயங்களில் வாழ்கின்ற குடும்பங்களை பாதுகாப்பான இடங்களில் மீளக் குடியமர்த்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 03 மாவட்டங்களில் 205 வீடுகள் ரூபா 344.4 மில்லியன் அரச நிதி உதவியின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. எனினும் நீர்த்தேக்கங்கள் காணப்படாமை மற்றும் 82 வீடுகளுக்காக மின்சார வசதிகள் கிடைக்காமையின் காரணமாக அந்த வீடுகளில் குடியிருக்கவில்லை. மேலும் கூட்டுமொத்தமாக ரூபா 15.9 மில்லியன் நலன் உரித்து பெற்றிருந்த 17 நலனாளிகளால் அந்த வீடுகள் மற்றும் காணிகளின் உரித்து கைவிடப்பட்டிருந்தது.

மேற்கூறப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 200.6 மில்லியன் நலன்களைப் பெற்ற 05 மாவட்டங்களில் 258 நலனாளிகளால் நலன்கள் பெறப்பட்ட கட்டத்திற்குரிய பணிகள் நிறைவேற்றப்படாமல் நிர்மாண நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்தது. கூட்டுமொத்தமாக ரூபா 82.7 மில்லியன் நலன் பெற்ற 90 நலனாளிகளுக்கு நலன்கள் பெற்ற கட்டத்திற்குரிய பணிகள் மாத்திரம் நிறைவேற்றி நிர்மாண நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்தது. மேலும் வீடொன்றுடன் காணியொன்றைக் கொள்வனவு செய்வதற்காக கூட்டுமொத்தமாக ரூபா 9.6 மில்லியன் நலன்கள் செலுத்தப்பட்டிருந்த 06 நபர்களினால் அந்தப் பணம் பயன்படுத்தி காணி கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

## இலங்கை விமானப் படை

இலங்கை விமானப் படை “வான் சக்தியை திறம்பட பயன்படுத்தி தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தல்” என்ற தூரநோக்குடன் ஆரம்பமாக “விமான செயற்பாடுகளை அமுல்படுத்தி எங்களின் தனித்துவமான திறன்களின் அடிப்படையில் ஆன தொழில்சார் திறமையுடனான விமானப் படை மூலம் தேசிய பாதுகாப்பு செயற்பாடுகளை அடைந்து கொள்ளல்” என்ற செயற்பணியை நோக்காகக் கொண்டு 05 பிரதான பணிகள் நிறைவேற்றப்படுகின்றது. இந்த பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக இலங்கை விமானப்படை நிறுவாகக் கட்டமைப்பு கொழும்பு விமானப் படை தலைமையகத்தை உள்ளடக்கிய 05 அடிப்படை முகாம்களை உள்ளடக்கி அமுல்படுத்தப்படுகின்றது.

**நிலுவை விமான வாடகை வருமானம்**

2023 ஆம் ஆண்டின் இறுதி வரையில் 10 அரசாங்க நிறுவனங்களில் இருந்தும், 02 தனியார் நிறுவனங்களிலிருந்தும் விமான வாடகை வருமானம் கூட்டுமொத்தமாக ரூபா 12.7 மில்லியன் தொகை 05 இற்கும்

20 வருடங்களுக்கும் இடையிலான கால வீச்சில் நிலுவையாகக் காணப்பட்டது.

**அரசாங்கத்தின் வருமானம் மற்றும் பெறுவனவுகள் ஒன்றிணைந்த நிதியத்தில் செலவு வைக்காமை**

நிதிப்பிரமாணம் 2(1)(இ) இன் பிரகாரம் அரசாங்கத்திற்கு சொந்தமான சகல வருமானங்களும், பெறுவனவுகளும் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்படல் வேண்டும். எனினும் மோட்டார் வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள் ஓடும் போட்டிக்காக பயிற்ச்சி அளிப்பதற்கு கட்டுக்குரும்ப விமானப் படை முகாமில் விமானப் பரப்பை வழங்குவதற்காக 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டில் உழைக்கப்பட்ட ரூபா 1.4 மில்லியன் தொகை விமானப்படையினால் திரண்ட நிதியத்தில் செலவு வைப்பதற்குப் பதிலாக நீதிச்சட்டம் அல்லாத நிதியம் ஒன்றான சேவை நிறுவன நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

நிதிப்பிரமாணம் 128(2)(ஐ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையினால் ஏக்கல விமானப்படை முகாமில் 05 கட்டிடங்களின் வாடகை வருமானம் அரசாங்கத்தின் வருமானத்திற்கு எடுப்பதற்கு ஒரு உடன்படிக்கை மற்றும் நீதிச் சட்டம் அல்லாத நிதியத்திற்கு வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு மேலும் உடன்படிக்கை ஒன்றாக ஒரே கட்டிடத்திற்கு இரண்டு உடன்படிக்கைகளாக 05 கட்டிடங்களுக்காக 10 உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்தது. இதன் காரணமாக கூட்டுமொத்தமாக ரூபா 2.04 மில்லியன் ஆன கட்டிட வாடகை வருமானம் அரசாங்கத்திற்கு இழக்கப்பட்டிருந்தது.

**விமானங்களை பழுது பார்க்கும் நடவடிக்கைகள்**

2004 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை பழுது பார்த்தலுக்காக வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்ட பழுதுபார்த்தல் பெறுமதி ரூபா 191,289.22 மில்லியன் ஆன விமாங்களுக்கான 27 உதிரிப்பாகங்கள் மற்றும் பெறுமதி அறிக்கையிடப்படாத அதன் பாகங்களின் பெறுமதிகளின் கூட்டுமொத்தம் ஐ.அ.டொலர் 63,000 ஆன 32 விமான உதிரிப்பாகங்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டு 2024 பெப்ரவரி 09 ஆந் திகதி வரையில் 09 முதல் 19 வருடங்களுக்கு இடையிலான கால வீச்சினைக் கடந்திருந்த போதிலும் அந்த விமானப் படைக்கு மீளக் கிடைத்திருக்கவில்லை.

## பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் பதவி நிலை கல்லூரி

**காணி கையேற்கப்படாமை**

ஹெய்யன்துடுவையில் அமைந்துள்ள இளைஞர் சேவை சம்மேளனத்திற்குரிய 11 ஏக்கர் காணி பயன்படுத்தப்படுவதுடன் காணியில் முறையான உரித்து கல்லூரியினால் 2023 ஆம்

ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கையேற்கப்பட்டிருக்கவில்லை.

## ரணவவிறு சேவை அதிகார சபை

**முறையற்ற படிகள் செலுத்துதல்**

கணவிரு மாப்பிய ரெக்கவரண படி திட்டத்தின் கீழ் 2016 யூன் முதல் 2017 நவம்பர் வரை 18 மாத காலத்தில் முறையற்ற வகையில் செலுத்தப்பட்ட ரூபா 4.9 மில்லியன் தொகை 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## இலங்கை இராணுவம்

நாட்டின் ஒருமைப்பாடு, இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பாதுகாப்பதன் மூலம் முக்கிய பணியுடன் தொழில், நம்பகத்தன்மை மற்றும் மரியாதை, நாட்டில் அமைதியான சூழலை ஏற்படுத்துதல் மற்றும் தேசத்தின் பாதுகாப்பிற்கு ஒப்பற்ற பங்களிப்பை வழங்குதல், தேசிய பேரழிவுகள் மற்றும் அவசரகால சூழ்நிலைகளில் ஆதரவை வழங்குதல் இராணுவம் ஆகும்.

**சமாதான கடமைகள்**

சமாதான கடமைகளுக்காக மாலி அரசாங்கத்தில் 685 பேர்களை ஸ்தாபிப்பதற்காக புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் அதற்கான பொருட்கள் ஆயுதங்கள் மற்றும் ஆயுதங்கள் அல்லாத வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டது. எனினும் இணங்கப்பட்ட வாகனம் / உபகரணங்கள் மற்றும் மேலதிக பாகங்களைப் போக்குவரத்துச் செய்வதற்கு தாமதம் ஏற்பட்டமை மற்றும் அவற்றின் பொருத்தமான நிலைமையில் காணப்படாதிருந்தமையால் அந்த கடமைகளுக்காக ஒரு குழுவொன்று மாத்திரம் பங்குபற்றியதன் காரணமாக கொள்வனவு செய்யப்பட்ட போக்குவரத்து மற்றும் ஏனைய உபகரணங்களுக்கு இடையே கூட்டுமொத்தமாக ஐ.அ.டொலர் 4.57 மில்லியன் பெறுமதியான போக்குவரத்து மற்றும் உபகரணப் பொருட்கள் இராணுவத்திற்குரிய களஞ்சியங்களில் வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஐக்கிய நாடுகளின் சமாதான கடமைகளுக்காக 2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை பெறக்கூடியதாக இருந்த ஐ.அ.டொலர் 3.33 மில்லியன் வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

**சிக்கனமற்ற செலவினம்**

2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் தேசத்தை கட்டியெழுப்பும் செயற்திட்டம் மற்றும் இராணுவத்தின் எதிர்கால உபாய வழிகளை கட்டியெழுப்புவதற்காக 11,307 பயிலுனர் படையணிகளைச் சேர்ப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும் உரிய பயிலுனர்களைச் சேர்க்காமையினால் ரூபா 271 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்ட துணிகள் மற்றும் ஆடைகளில் 47 வகைகள் விளைவற்று களஞ்சியத்தில் காணப்பட்டது.

**வழங்கல்களை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தமை**

ரூபா 872 மில்லியன் ஆன நிர்மாணப் பொருட்கள் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்காமை, கட்டுநிதி பெற்றுக்கொள்வதற்கு பொதுத் திறைசேரிக்கு அறிவிக்காமை மற்றும் உடன்படிக்கை செய்தலில் குறைபாடுகளினால் இந்தப் பெறுகை இரத்துச் செய்யப்பட்டிருந்தது. முன்னர் கூறப்பட்ட வழங்கல்களைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாமையினால் இராணுவ நிர்மாண மற்றும் நவீனமயப்படுத்தல்களுக்கு இடையூறு ஏற்பட்டிருந்தது.

**மருந்துகள் மற்றும் பொருட்களை கொள்வனவு செய்வதில் தாமதம்**

2023 ஆம் ஆண்டின் இராணுவத்தின் தேவைகளுக்காக ரூபா 202 மில்லியன் செலவில் மருந்துகள் மற்றும் பொருட்களள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. நுகர்வுத் தன்மையில் உள்ள அந்த பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் மற்றும் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் (NMRA) நியதிகளின் பிரகாரம் மாதிரிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் மேற்கூறப்பட்ட வழங்கல் மற்றும் சேவைகள் உரிய காலத்தில் மேற்கொள்வதற்கு முடியாமையினால் நோயாளர்களுக்கு அந்த மருந்துகள் வெளியிலிருந்து கொள்வனவு செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது.

**இராணுவத்தின் சம்பளம் மற்றும் படிகள் செலுத்தும் தரவு முறைமை**

2019 ஆம் ஆண்டில் மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் மூலம் இராணுவத்தின் சம்பளம் மற்றும் படிகள் செலுத்தும் தரவு முறைமை அபிவிருத்தி செய்ய வேண்டிய பிரிவுகள் தொடர்பான ஒழுங்குகள் மற்றும் 18 பரிந்துரைகள் வழங்கப்பட்டிருந்த போதும் 2004 ஆம் ஆண்டு முதல் இராணுவத்தால் பேணிச்செல்லப்பட்ட முறைமையில் 72 வழுக்கள் இனங்காணப்பட்டிருந்தது. எனினும் அந்த பரிந்துரை அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் வழுக்களை சரிசெய்வதற்கும் நடவடிக்கை எடுக்கபப்பட்டிருக்கவில்லை. அதனால் சம்பளம் மற்றும் படிகள் குறைவாகவும் செலுத்ததல் பல்வேறு முறையற்ற கொடுப்பனவுகளும் இடம்பெற்றிருந்ததுடன் வருடாந்தம் ரூபா 140 மில்லியனை விஞ்சி மேற்கொள்ளப்படுகின்ற சம்பளம் மற்றும் படிகள் கொடுப்பனவுகளின் சரியான தன்மை தொடர்பாக அதிக ஆபத்துக் காணப்பட்டது. மேலும் தற்போது இராணுவத்தின் அங்கத்தவர்களுக்கு வழங்கப்படுகின்ற நிதி மற்றும் நிதியல்லா நலன்களை ஒழுங்குபடுத்துவதற்கு முடியுமான வகையில் முறைமையை அபிவிருத்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## இலங்கை கடற்படை

இலங்கைக்கு உரிய கடல் எல்லையில் மற்றும் அதற்கு இணையான கடற்பிரதேசங்களைச் சுற்றி நாட்டில் இயற்கை மற்றும் புராதன பொருட்களைப் பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல், ஆயத விற்பனை மற்றும் போதைப்பொருள் விற்பனைகள் சட்ட விரோத செயற்பாடுகள் மற்றும் அனுமதியற்ற மீன்பிடிகளைத் தடுத்தல், சகல துறைமுகங்களுக்காவும் பாதுகாப்பினை வழங்குவதை உள்ளடக்கிய நாட்டின் ஏனைய பாதுகாப்பு சேவையுடன் ஒன்றிணைந்து கட்டியெழுப்பும் செயற்பாடுகள் நிரந்தரமாக நாட்டில் சட்டம் மற்றும் சமாதானத்தை பாதுகாப்பது போன்ற பணிகள் ஆகும். இலங்கை கடற்படை நாடுமுழுவதும் 07 நிறைவேற்று கடற்படை நிருவாக நடவடிக்கைகள் ஆக திருத்தி செயற்பாடுகளை மேற்கொள்கின்றது.

**நிதியத்தின் வருமான செலவினக் கணக்கு அறிக்கை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்காமை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 3 மற்றும் 6 ஆம் பிரிவுகளின் பிரகாரம் திறந்த நிதியத்திற்குக் கிடைக்கின்ற சகல வருமானங்களும் ஒன்றிணைந்த நிதியத்தில் இருந்தான சகல செலவினங்கள் மற்றும் கணக்குகள் பரீட்சிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கடற்படையின் மாளிமா அவசர சேவை, திசைகாட்டி என்டபிறைசஸ், எரிபொருள் நிரப்பும் நிலையம், விவசாய செயற்திட்டம், திமிங்கலம் பார்வையிடும் செயற்திட்டம், விடுமுறை விடுதிகள் போன்ற நிதியத்துக்குரிய வருமான செலவினம் தொடர்பான கணக்கு அறிக்கைகள் மற்றும் ஆவணங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் அந்த வருமானங்களில் ஒன்றிணைந்த நிதியத்திற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய செலவு வைத்தலின் அளவு தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டமையும் திறைசேரியின் அங்கீகாரம் பெற்று நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**பெறுமதி சேர் வரிகளில் இருந்து விடுவிக்கப்பட்ட பொருட்களுக்காக வரி செலுத்துதல்**

வெளிநாட்டு கொள்வனவுகளின் போது பெறுமதி சேர் வரிகளில் விடுவிக்கப்பட்ட பொருட்களுக்காக வழங்குனருக்கு பெறுமதி சேர் வரியாக ரூபா 2.33 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நட்டம் அல்லது இழப்பு ஏற்படுமாயின் உடனடியாக பரிசோதனை ஒன்று மேற்கொள்ள வேண்டிய போதிலும் அது தொடர்பாக நடாத்தப்பட்ட பரிசோதனை நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்து தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**வருமானம், நலன்புரி நிதியத்திற்கு செலவு வைத்தல்**

நிதிப்பிரமாணம் 177(1) இன் பிரகாரம் சேகரிக்கப்பட்ட அரசாங்கத்தின் வருமானம் திறைசேரிக்கு அனுப்ப வேண்டியிருந்த போதிலும் கடற்படை உத்தியோகத்தர்களினதும் கடற்படையின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட அதி சொகுசு பேருந்து வண்டிகள் 04 இல் இருந்தும் 02 வான் வண்டியிலிருந்தும் கடற்படை 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது உழைத்திருந்த ரூபா 19.88 மில்லியன் வருமானம் கடற்படையின் நலன்புரி நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அந்த காலப்பகுதிக்குரிய எரிபொருளுக்காக ரூபா 17.11 மில்லியனும் பழுதுபார்த்தல் செலவினத்துக்காக ரூபா 4.49 மில்லியனுமாக ரூபா 21.6 மில்லியன் செலவினம் ஒன்று அந்த வாகனங்களுக்காக கடற்படையினால் செலவிடப்பட்டிருந்தது.

**வருமானம், திரண்ட நிதியத்தில் செலவு வைக்காமை**

அரசாங்கக் கணக்குக் குழுவின் அவதானிப்பு மற்றும் கட்டளைகளை அமுல்படுத்துவதின் கீழ் வெளித் தரப்பினருக்கு வழங்கல் சேவைகளுக்காக உழைக்கப்பட்ட வருமானத்தில் 40 சதவீதம் திரண்ட நிதியத்தில் செலவு வைப்பதற்கு இணங்கப்பட்டிருந்தது. எனினும் உழைக்கப்பட்ட மொத்த வருமானமான ரூபா 337.5 மில்லியன் தொகையை திரண்ட நிதியத்தில் செலவு வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட ரூபா 135 மில்லியன் தொகை 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

**செயலிழந்த கப்பல்களை பழுதுபார்த்தல் தாமதமைடைந்தமை**

இலங்கை கடற்படைக்குச் சொந்தமான கப்பல், படகுகளை உள்ளடக்கிய கப்பல்களில் 06 கரையோர கண்காணிப்பு கப்பல்கள், 03 வேகத் தாக்குதல் கப்பல்கள், 31 கரையோரப் பாதுகாப்பு வேகக் கப்பல்கள், 11 வேக ரோந்து கப்பல்கள், 08 கரையோர கண்காணிப்பு ரோந்து கப்பல்கள், 04 பிரயாணிகள் போக்குவரத்து மற்றும் பொருள் போக்குவரத்து கப்பல்கள் ஆக 63 கப்பல்கள் மற்றும் படகுகள் 2023 ஆம் ஆண்டில் இறுதியில் உள்ளவாறு செயலிழந்து காணப்பட்டது. 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை கப்பல்கள், படகுகள், இயந்திரப் படகுகள் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா 38.14 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் நிதியேற்பாடு ரூபா 17.85 மில்லியன் மாத்திரம் கிடைத்திருந்தமையால் கிடைத்த

நிதியேற்பாடுகளில் ரூபா 12.73 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டமை இதற்கு பிரதான காரணமாக இருந்தது.

## இலங்கை கரையோர பாதுகாப்புத் திணைக்களம்

கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு, பாதுகாப்பு தன்மை சுத்திகரித்தலை உறுதிப்படுத்துதல் மற்றும் அமுலில் உள்ள கடல் சார் சட்டங்களை அமுல் படுத்துதல், உயிரியல் பல் வகைப்படுத்தல் முகாமைத்துவம், இயற்கை மற்றும் மனிதர்களால் மேற்கொள்ளப்படுகின்ற நடமாட்டங்களை முகாமைத்துவம் செய்தல், உயிர் மற்றும் ஆதனங்களைப் பாதுகாத்தல், கடல் சார் சுற்றாடலைப் பாதுகாப்பதன் மூலம் சுற்றாடலின் சமநிலையைப் பேணிச் செல்லல் மற்றும் கடல் மாசுறுதலைத் தடுத்தல் போன்ற பணிகளாகக் கொண்ட 12 பணிப்பொறுப்புக்களைத் திணைக்களம் கொண்டிருந்தது.

**புதிய சட்ட வழங்கல் மேற்கொள்ளப்படாமை**

கரையோரப் பாதுகாப்புத் திணைக்கள சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட புதிய சட்டம் ஒன்றை வழங்குவதற்காக 2016 ஆம் ஆண்டின் போது அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டு வரையிலும் புதிய சட்ட வழங்கல் மேற்கொள்வதற்கு தவறியிருந்தது.

இலங்கையைச் சுற்றியுள்ள கடல் மைல் 148,721 தூர அளவில் மேவுகை செய்வதற்காக திணைக்களத்திற்குச் சொந்தமான 04 கப்பல்கள் மற்றும் 27 படகுகள் அணி ஒன்று காணப்பட்டதுடன் அதில் 2023 ஆம் ஆண்டின் போது செயற்படு நிலையில் காணப்பட்ட கப்பல்கள் மற்றும் படகுகளின் எண்ணிக்கை 22 ஆகும். செயலிழந்த நிலையில் காணப்படுகின்ற 09 படகுகளில் 06 படகுகளை பழுதுபார்ப்பதற்கு நிதியேற்பாடு வழங்கப்படாமை மற்றும் தேவையான உதிரிப்பாகங்கள் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தமையால் மூன்று வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் பயன்பாட்டுக்கு எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

1988 இன் 27 ஆம் இலக்க மற்றும் 2007 இன் 50 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1981 இன் 68 ஆம் இலக்க ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல அரச பாதுகாப்பு பயிற்சி நிறுவன சட்டத்தின் பிரகாரம் கடற் உத்தியோகத்தர்கள் மற்றும் பதவி நிலை மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்காக அரச பாதுகாப்பு மற்றும் இராணுவ முகாமைத்துவத்திற்காக உரித்தான பயிற்சி பிரிவு ஒன்று தொடர்பாக கல்விசார் பாடநெறி நடாத்துதல் மற்றும் ஆலோசனை வழங்குவதற்காக ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

**அச்சக வருமானம் மற்றும் செலவினங்கள் கணக்கீடு செய்யப்படாமை**

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 99 ஆம் பிரிவின் பிரகாரம் காலப்பகுதியில் இனங்காணப்பட்ட சகல வருமானங்கள் மற்றும் செலவின விடயங்கள் இலாபம் அல்லது நட்டங்களில் உள்ளடக்கப்பட வேண்டியிருந்த போதிலும் பல்கலைக்கழக அச்சிடலில் 2023 மார்ச் முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 18.5 மில்லியன்

அச்சக வருமானம் மற்றும் ரூபா 8.43 மில்லியன் அச்சிடல் செலவினம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**அச்சகத்தை சுயாதீன தொழில் முயற்சிப் பிரிவாக்குதல்**

பணிப்பாளர் சபை தீர்மானத்தின் அடிப்படையில் 2023 மார்ச் 09 ஆந் திகதி முதல் அச்சிடல் பல்கலைக்கழகத்திலிருந்து எடுக்கப்பட்ட சுயாதீன தொழில் முயற்சிப் பிரிவாக ஏற்படுத்துவதாக 2023 மார்ச் 27 ஆந் திகதிய இலக்கம் 652 என்ற பாதுகாப்பு சபைக் கூட்ட அறிக்கையின் மூலம் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் 2023 ஆம் ஆண்டுக்காக பொதுத்திறைசேரியில் மீண்டெழும் மானியத்தின் மூலம் அச்சிடல் கூடத்தின் பதவியணியினரில் 14 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 7.37 மில்லியன் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் பல்கலைக்கழகத்தால் ரூபா 2.96 மில்லியன் செலவில் அச்சிடல் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் பல்கலைக்கழக வளவில் அமைக்கப்பட்டுள்ள கட்டிடம் ஒன்றில் வியாபர நடவடிக்கைகள் பேணிச்செல்லப்பட்டிருந்தது. இந்த விடயங்களின் பிரகாரம் அச்சிடல் பிரிவை தனியான வியாபர அலகொன்றாக இனங்காணல் கணக்காய்வின் போது சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது.

**வளி குழாய் முறைமையின் குறைவான பயன்பாடு**

2018 ஆம் ஆண்டின் போது பல்கலைக்கழக வைத்தியசாலையில் ஆய்வுகூடப் பரிசோதனைப் பொருட்கள் மற்றும் அறிக்கைகளைப் போக்குவரத்துச் செய்யும் நோக்கில் ஐக்கிய அமெரிக்க டொலர் 530,000 செலவில் வளி குழாய் முறைமை ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இந்த முறைமைப் பிரிவு (Stations) 56 இனை தொடர்புபடுத்தி ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 52 பிரிவுகளுக்கு இடையில் மாத்திரம் 2023 ஆம் ஆண்டில் பிரயாணத் தடவைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதில் 100 பிரயாணத் தடவைகளை விட குறைவாக மேற்கொள்ளப்பட்ட 25 பிரிவுகள் காணப்பட்டதுடன் அதன் பிரகாரம் குறைவாக பயன்படுத்தப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை 44 சதவீதமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. வைத்தியசாலையில் முழுமையான இயளவில் அமுல்படுத்தாமையினால் சில பிரிவுகளை பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தமையும் இந்த வளி குழாய் முறைமை குறைவாக பயன்படுத்துவதற்கு காரணமாக இருந்தது.

**விளைவற்ற மருத்துவ உபகரணங்கள்**

பல்கலைக்கழகத்திற்குரிய வைத்தியசாலையில் 2024 மே 31 ஆந் திகதி வரையில் உத்தரவாதக் காலத்தை விஞ்சிய ரூபா 15.03 மில்லியன் பெறுமதியான மருத்து உபகரண விடயங்கள் 17 இற்கு உரிய 183 அலகுகள் களஞ்சியத்தில் விளைவற்றுக்

காணப்பட்டதுடன் அந்த விடயங்கள் 2018, 2019, 2021 ஆம் ஆண்டுகளின் போது களஞ்சியத்திற்கு கிடைத்திருந்தது.

மேலும் இருதயப் பிரிவு ஒன்றை பல்கலைக்கழகத்திற்குரிய வைத்தியசாலை ஸ்தாபிப்பதற்காக 2018, 2021, 2022 மற்றும் 2023 என்ற ஆண்டுகளின் போது ரூபா 197.12 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 06 விடயங்களுக்குரிய 18 அலகுகள் கணக்காய்வுத் திகதி வரையிலும் விளைவற்று களஞ்சியத்தில் காணப்பட்டதுடன் அதன் பெறுமதி ரூபா 61.8 மில்லியன் ஆன 14 அலகுகள் உத்தரவாதக் காலத்தையும் விஞ்சி இருந்தது.

**முகாமைத்துவ தகவல் முறைமை**

ஐக்கிய அமெரிக்க டொலர் 1.3 மில்லியன் செலவில் வைத்தியசாலையில் ஸ்தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த முகாமைத்துவ தகவல் முறைமையைப் பூர்த்தி செய்தல் 02 சந்தர்ப்பங்களின் போது காலம் நீடிக்கப்பட்ட பின்னர் 2024 மே 28 ஆம் திகதி வரையில் பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. எனினும் 2024 யூன் 11 ஆந் திகதி வரையிலும் இந்த செயற்திட்டத்தின் செயல் முன்னேற்றம் 68.5 சதவீதம் மாத்திரமாக இருந்தது.

**பட்டியல்கள் தீர்ப்பதில் தாமத்தின் அடிப்படையில் தண்டப்பணம் செலுத்துதல்**

2023 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்திற்குரிய வைத்தியசாலையில் மின்சார செலவினம் ரூபா 540.71 மில்லியனாக இருந்ததுடன் சில மாதங்களின் பட்டியல்கள் தீர்ப்பதில் தாமதத்தின் காரணமாக ரூபா 12.13 மில்லியன் தண்டப்பணமாக செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. இது நிதி முகாமைத்துவத்தின் நலிவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**வைத்தியசாலை வாட்டுகள் பயன்படுத்தப்படாமல் காணப்படுகின்றமை**

2023 ஆம் ஆண்டில் இறுதி வரையிலும் பல்கலைக்கழகத்திற்குரிய வைத்தியசாலை வாட்டு இலக்கம் 5A, 7A மற்றும் 7B மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகள் 02, 03 மற்றும் 04 பிரிவுகள் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதுடன் அதில் காணப்பட்ட ரூபா 210.19 மில்லியன் பெறுமதியான மருத்துவ உபகரணங்களும் விளைவற்றுக் காணப்பட்டது.

## சிவில் பாதுகாப்புத் திணைக்களம்

வெற்றியீட்டியதன் பின்னர் நாட்டில் தேசிய அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு பங்களிக்கும் பணியின் கீழ் பிரதான 07 நோக்கங்களை உடையதாக திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

**அரசாங்கத்திற்கு தீர்க்கப்பட வேண்டிய பணம் தீர்த்து வைக்கப்படாமை.**

வெலிசற உப படையணியின் மூலம் நடாத்திச் செல்லப்படுகின்ற விசேட அரிசி செயற்திட்டத்தின் மூலம் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது 07 படையணிகளால் பெறப்பட்டிருந்த நெல், தானிய வகைகள் மற்றும் ஏனைய படையணியின் உற்பத்திகளுக்குரிய ரூபா 62.76 மில்லியன் தொகை இலங்கை அரசாங்கத்திற்கு தீர்க்க வேண்டியிருந்த போதிலும் 2024 பெப்ரவரி 13 ஆந் திகதி வரையிலும் அந்தப் பணம் தீர்த்து வைக்கப்படாதிருந்ததுடன் அப் பெறுமதிகளை தீர்த்து வைப்பதற்கு போதியளவான பணம் அல்லது அரிசி இருப்பும் வெலிசற அரிசி செயற்திட்டத்தில் காணப்படவில்லை.

**மரமுந்திரிகை மரங்களின் பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை எடுக்காமை**

பொலன்னறுவை படையணிக்குரிய மார்கேனி மரமுந்திரிகை செயற்திட்டத்தில் 187 ஏக்கர்களை உடையதாக இருந்ததுடன் இதில் 155 ஏக்கர் நிலப்பிரதேசத்தில் மரமுந்திரிகை மரம் நடப்பட்டிருந்தை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்த நிலப் பிரதேசம் சரியாக அளவீட்டு வரைபடம் பெறப்படாதிருந்தமையால் பயிர் செய்யப்பட்டுள்ள நிலப் பிரதேசம் மற்றும் வருமானம் செலவினங்களை கணிப்பிடுதலை சரியாக உறுதிப்படுத்த முடியாமையால் இந்த செயற்திட்டத்தில் 8,787 மரமுந்திரிகை மரங்கள் உள்ளதாக குறிப்பிடப்பட்ட போதிலும் தற்போது வரையில் அதில் 3,682 மரமுந்திரிகை மரங்களே காணப்பட்டதன் காரணமாக 5,105 மரமுந்திரிகை மரங்கள் பற்றாக்குறையாகக் காணப்பட்டதுடன் பற்றாக்குறை தொடர்பாக திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**கிருமிநாசினிகள் காலாவதியாகி இருந்தமை**

மரமுந்திரிகை பயிர்ச் செய்கைக்காக பயன்படுத்தப்படுகின்ற மொஸ்பிலான் எசிடம்பிறைட் (Mospilan Acetamiprid) என்ற பெயரில் 100 கிராம் ஆன 2,930 பக்கற்றுக்கள் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்டு தற்காலிகமாக களஞ்சியத்தில் பாதுகாப்பின்றி களஞ்சியப்படுத்தப்பட்டதுடன் அந்த பக்கற்றுக்கள் யாவும் 2023 யூலை வரையில் காலாவதியாகியதன் காரணமாக

அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டம் 3.12 மில்லியனுக்கு அண்ணளவாக இருந்தது.

**நிலுவைக் கடன் மீதி**

102 உத்தியோகத்தர்களிடமிருந்து 2023 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அறவிடுவதற்குக் காணப்பட்ட ரூபா 14.9 மில்லியன் ஆன கடன் மீதி ஆண்டின் போது அறவிடுவதற்கு தவறியதன் காரணமாக அந்த ஆரம்ப கடன் மீதி அவ்வாறே பல ஆண்டின் இறுதியின் போதும் முற்பண மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

# அனர்த்த முகாமைத்துவப் பிரிவு

ஒரு நாட்டின் வானிலை மற்றும் காலநிலை நிலைமைகள் அந்நாட்டு மக்களின் சுகாதார நிலை மற்றும் அந்நாட்டின் உற்பத்தியில் ஏற்படும் மாறுபாடுகள் தொடர்பிலும் வலுவாக தாக்கம் செலுத்துகிறது. அதுபோல், வானிலை மற்றும் காலநிலை நிலைமைகள் உள்ள மாறுபாடுகளை முன்கூட்டியே கண்டறிவதன் ஊடாக அதற்கான தெளிவான திட்டங்களைத் தயாரிப்பதன் மூலம், எதிர்கால பேரழிவுகளில் இருந்து நாட்டையும் அதன் குடிமக்களையும் காப்பாற்ற முடியும்.

**செயற்பணி**

நாட்டில் ஏற்படும் இயற்கை அனர்த்த அபாயங்களை முன்கூட்டியே கண்டறிதல், அனர்த்தங்களைத் தடுத்தல், சேதங்களைக் குறைத்தல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களை மேம்படுத்துதல் ஆகியவற்றைச் செயல்திறனாக்க அனர்த்த அபாய முகாமைத்துவ நிலையத்தை ஒருங்கிணைப்பதன் மூலம் நிறுவன கட்டமைப்பை வலுப்படுத்துதல்,

அனர்த்த நிலைமைகள் பற்றி துல்லியமாக எதிர்வுகூறக்கூடிய வகையில் நவீன தொழில்நுட்பம் மற்றும் அறிவாற்றலுடன் வளிமண்டலவியல் திணைக்களத்தை வலுப்படுத்துதல்.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள், அடிக்கடி அனர்த்தங்கள் ஏற்படக்கூடிய பகுதிகள், பாதிப்புக்குள்ளான நபர்கள், சொத்துக்கள், வணிகங்கள் மற்றும் விவசாய நிலங்கள் போன்ற அனைத்து தகவல்களையும் கொண்ட “தேசிய அனர்த்த தரவுத்தளத்தை” நிறுவுதல்.

அனர்த்த முகாமைத்துவ பிரிவின் கீழ் ஒரு திணைக்களமும் 02 சட்டப்பூர்வ நிறுவனங்களும் இயங்கி வந்தன. அந்த நிறுவனங்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்றுவதில் வெளிப்படுத்திய கணக்காய்வு அவதானிப்புகள் கீழே தொகுக்கப்பட்டுள்ளன.

## கணக்காய்வு அவதானிப்புகள்

### வளிமண்டலவியல் திணைக்களம்

**வெளிநாட்டு நிதியுதவியில் கிடைத்த தானியங்கி வானிலை ஆய்வு கட்டமைப்புகள் 02 பொருத்தப்படாமை**

ஜப்பானிய உதவியின் (துஜஊயு) கீழ் 2008 ஆம் ஆண்டு பெறப்பட்ட 570 ரூபாய் மில்லியன் பெறுமதியான வெப்பநிலை, ஈரப்பதம், மழைவீழ்ச்சி, காற்றின் வேகம் மற்றும் திசை, அழுத்தம், சூரிய கதிர்வீச்சின் அளவு ஆகிய அளவுருக்களை அளவிடும் 38 தானியங்கி வானிலை அமைப்புகளுள் 02 அமைப்புகள் மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட ஆண்டு இறுதியில் பொருத்துவதற்கு முன்மொழியப்பட்ட திருகோணமலை மற்றும் மாலிபொடவில் ஆகிய இடங்களிலும் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்த உபகரணங்கள் குறைவாகப் பயன்படுத்தப்பட்டதால், தொடர்புடைய சேவைகளைப் பெறுவதற்கான வாய்ப்புகள் தவறவிடப்பட்டன.

**தானியங்கி வானிலை ஆய்வு கட்டமைப்பு பயன்பாடு மற்றும் பராமரிப்பு**

வளிமண்டலவியல் திணைக்களம் பொருத்தியுள்ள 35 தானியங்கி வானிலை அமைப்புகளில் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியளவில், 21 அமைப்புகள் மூலம் பீசுளு தொழில்நுட்பத்தின் கீழ் திட்டமிடப்பட்ட தரவுகளைப் பெறவில்லை மற்றும் 10 அமைப்புகளில் பெற்றறிகளின் ஆயுட்காலம் முடிவடைந்ததால் செயலற்ற நிலையில் இருந்தன. மேலும், தீவு முழுவதும் பொருத்தப்பட்டுள்ள 453 பாரம்பரிய மழை மானிகளில் 44 முறையாக பராமரிக்கப்படாததால், தொடர்ந்து தரவுகள் பெறப்படாத நிலை ஏற்பட்டது. மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டு இறுதியாகும் போது, திணைக்களத்தினால் பொருத்தப்பட்ட 122 தானியங்கி மழைமானிகளில், 52 மழை மானிகள் செயலிழந்து, 36 மழை மானிகளில் மட்டுமே பராமரிப்பு பணிகள் செய்யப்பட்டுள்ளன. திடீர் வானிலை மாற்றங்கள் ஏற்பட்டால், தானியங்கி மற்றும் வழக்கமான முறையில் தரவுகளைப் பெறுவதற்கான திறன் மிகவும் முக்கியமானது என்பதுடன் இதன் காரணமாக, அமைப்புகளை நிறுவுவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**டொப்ளர் ரேடார் கட்டமைப்புகள் நிறுவப்படாமை**

புத்தளம் மற்றும் பொத்துவில் காலநிலை நிலையங்களில் ஜப்பானிய உதவியுடன் வழங்கப்படவுள்ள 2 டொப்ளர் ரேடார் அமைப்புகளை நிறுவுவதற்கு 2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்குள் ரூபா மில்லியன் 563.58 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், 2023 ஆம் ஆண்டு இறுதியாகும் போது, குறித்த வேலைகளுக்காக ரூபாய் மில்லியன் 0.462 மட்டும் செலவு செய்யப்பட்டு இருந்தது. 2020 ஆம் ஆண்டு இறுதியில் இறுதிக் கட்டத்திற்கு எட்ட வேண்டி இருந்த போதிலும், தற்காலத்தில் விலைகள் அதிகரித்திருந்த காரணத்தால் ஒதுக்கீடு போதாததால் இயந்திரத்தை நிறுவும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவில்லை. வானிலை எதிர்வுகூறலில் டொப்ளர் ரேடார் அமைப்புக்கான வலுவான தேவை காணப்பட்ட போதிலும் கிட்டத்தட்ட 15 ஆண்டுகளாக அந்த அமைப்பு இல்லாமல் வானிலை எதிர்வுகூறல்கள் மற்றும் கணிப்புகள் வழங்கப்படுவது அவதானிக்கப்பட்டது, மேலும் அந்த கணிப்புகளின் துல்லியத்தன்மையில் சிக்கல்கள் இருப்பதையும் அவதானிக்க முடிந்தது.

**வளிமண்டலவியல் ஆராய்ச்சிகளின் போது பாதுகாப்பான முறைகளை பின்பற்றாமை.**

ரேடியோசோன்ட்கள் மற்றும் பைலட் பலூன்களை நிரப்ப ஹைட்ரஜன் வாயு பயன்படுத்தப்படுவதுடன் கொழும்பில் ஹைட்ரஜன் வாயுவை உற்பத்தி செய்ய ஹைட்ரஜன் ஜெனரேட்டர்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஹைட்ரஜன் உற்பத்தி செயல்முறை மிகவும் ஆபத்தானது என்றாலும், ஹைட்ரஜன் உற்பத்தி மற்றும் பலூன் அனுப்பும் போது அந்த அதிகாரிகள் பாதுகாப்பு ஆடைகளை அணியாதது, ஹைட்ரஜன் உற்பத்திசாலைக்கு அருகில் வாகனங்களை நிறுத்துவது மற்றும் அடிக்கடி வாகனங்களை செயற்படுத்துவது ஆகியவை போன்ற பாதுகாப்பற்ற செயற்பாடுகள் கொழும்பு வளிமண்டலவியல் நிலையத்தில் நடத்தப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

**இரத்மலானை விமான நிலையம் வளிமண்டலவியல் நிலையத்தில் பராமரிப்பின் குறைபாடுகள**

விமானப்பயணங்களுக்கு தேவையான காலநிலை தரவுகளை வழங்கும் நோக்கில், ரத்மலானை விமான நிலையத்திற்கு அருகாமையில் நிறுவப்பட்டுள்ள வளிமண்டலவியல் நிலையத்தில் காலநிலை தரவுகள் பெற்றுக்கொள்ளல் மற்றும் தரவு தொடர்பாடல்களைப்

பெறுவதற்கான உபகரணங்களின் பராமரிப்புப் பரிசோதனையின் போது, உலக வளிமண்டலவியல் சங்கத்தின் வழிகாட்டல்களின்படி உபகரணப்பெட்டி தயாரிக்கப்படாமை, திடீர் காற்று தாக்குதல், அதன் வேகம் மற்றும் திசையை பரிசோதிப்பதற்கு இருக்க வேண்டிய புரளவ சுநஉழசனநச இயந்திரம் பல ஆண்டுகளாக செயலிழந்து இருத்தல், வளிமண்டலவியல் பிராந்திய நிலையத்திற்கு அனுப்பும் கணினி தொகுதி 2019ஆம் முதல் செயலிழந்து காணப்படல், உபகரணப்பெட்டிக்குள் வெப்பமானி களஞ்சியப்படுத்தப்பட்டு இருந்த பெட்டிகளுள் கம்பங்கள் உக்கலடைந்து இருப்பதை அவதானிக்க முடிந்தது.

## தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்

**சட்டப்பூர்வ அந்தஸ்தை வழங்கும் பொருட்டு சட்மூலமொன்றை அங்கீகரிக்காமை**

அமைப்புக்கு சட்டப்பூர்வ அந்தஸ்தை வழங்கும் பொருட்டு சட்டமூலமொன்றை தயாரிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு 2021 ஒக்டோபர் 12 ஆம் திகதி அங்கீகாரம் கிடைத்தது. அதன்படி தயாரிக்கப்பட்ட சட்டமூலம் 2022 செப்டெம்பர் 26 ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட போதிலும், அந்த சட்டமூலத்தை தயாரித்து பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் நிறுவப்பட்டு 31 வருடங்கள் கடந்துள்ள நிலையில், சட்டப்பூர்வ அந்தஸ்தை வழங்குவதற்கான சட்டமூலத்தை அங்கீகரித்துக் கொள்ள முடியாதுப் போகியுள்ளது.

**போலியான பதவிமுத்திரையை தயாரித்து மருத்துவ பட்டியல்களை மீளளிப்பு செய்தல்.**

2022 பெப்ரவரி முதல் 2023 மார்ச் வரையிலான காலப்பகுதிக்குள் 23 உத்தியோகத்தர்களினால் 29 சந்தர்ப்பங்களில் போலி பில்கள் மற்றும் போலி பதவி முத்திரைகள் தயாரித்து ரூபாய் மில்லியன் 1.820 மருத்துவ கட்டணங்களை மீளளிப்பு செய்துள்ளனர். இவ்வாறு போலி ஆவணம் தயாரித்து காப்பீடு இழப்பீடு பெற்ற ஆறு அதிகாரிகளிடம் இருந்து ரூபாய் 0.44 மில்லியன் தொகை மீளப் பெறப்பட்ட போதிலும், எந்தவொரு உத்தியோகத்தர் தொடர்பிலும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு

அமைய ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

**அடிப்படை ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அப்பால் ஆட்சேர்ப்புக்களை செய்தல்.**

சிரேஸ்ட விஞ்ஞானி - யுசு 2 பதவிக்கு தயாரிக்கப்பட்ட அடிப்படை ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அப்பால், மற்றொரு நடைமுறை தயாரிக்கப்பட்டு, 02 நேர்முகப்பரீட்சைகள் நடத்தப்பட்டு, ஆட்சேர்ப்பு நடைமுறையின் விதிகளை மீறி அந்த பதவிக்கு 06 அதிகாரிகள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். இதன் காரணமாக முதற்கட்ட நேர்முகப்பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்ற மூன்று அதிகாரிகள் அந்தந்த பதவிகளுக்கு பதவி உயர்வு பெறும் வாய்ப்பை இழந்துள்ளனர்.

**தானியங்கி மழைமானி செயலிழந்து காணப்படுதல்**

மண்சரிவு அபாயம் உள்ள 14 மாவட்டங்களில் மண்சரிவு முன்னெச்சரிக்கைகளை வழங்குவதற்காக நிறுவப்பட்ட 330 தானியங்கி மழை அளவீட்டு மானிகளுள் 251 மட்டுமே மண்சரிவு முன்னெச்சரிக்கைகளை வழங்குவதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அவசர செயற்பாட்டு மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. தற்போது 198 மழைமானிகளில் இருந்து மட்டுமே தகவல் கிடைத்து வருவதால், மீதமுள்ள மழை மானிகள் செயலிழந்த நிலையில் அல்லது தகவல் கிடைக்காத மட்டத்தில் இருப்பதை அவதானிக்க முடிந்தது.

**மண்சரிவு கணிப்பீடு அறிக்கை வழங்குவதில் தாமதம்**

மீளாய்வாண்டின் இறுதியில், மண்சரிவு அபாயம் உள்ள 11 மாவட்டங்களில் இருந்து மண்சரிவு ஆய்வு அறிக்கைகளைப் பெறுவதற்காக 5,388 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அவற்றில் மேலதிக பரிந்துரைகள் வழங்கப்பட வேண்டிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை 1,545 ஆகும். கடந்த ஆண்டு பெறப்பட்ட விண்ணப்பங்களையும் சேர்த்து, 2023 டிசம்பர் 31 திகதிக்கு மேலும் பரிந்துரைகள் வழங்க்கப்பட வேண்டிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை 2,889 ஆகும், இது அந்த ஆண்டில் பரிந்துரைகள் வழங்கப்பட வேண்டிய விண்ணப்பங்களின் எண்ணிக்கையில் 43 சதவீதமாகும

**அங்கீகாரமின்றி ஒதுக்கீடுகளை முதலீடு**

பல்வேறு செயற்பாடுகளுக்காக பொது திறைசேரி மற்றும் ஏனைய நிறுவனங்களிடமிருந்து 2017 ஆம் ஆண்டு முதல்

| | |
|---|---|
| **செய்தல்** | மீளாய்வாண்டின் இறுதி வரை பெறப்பட்ட ரூபாய் மில்லியன் 309.85 தொகையானது, தொடர்புடைய பணிகளுக்கு பயன்படுத்தப்படாமல் திறைசேரியின் அனுமதியின்றி நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. |
| **நடமாடும் காற்றின் தர கண்காணிப்பு அலகு** | நிறுவனத்திற்கு கழிவுப்புகை பரிசோதனை நிதியம் மூலம் நன்கொடையாக கிடைத்த ரூபா மில்லியன் 41.37 பெறுமதியான நடமாடும் காற்றின் தர கண்காணிப்பு அலகு பொருத்தப்பட்ட லொறியானது 4 வருடங்களாக நடமாடும் கண்காணிப்பு சேவையை வழங்காமல் கொழும்பு மாநகர சபை வளாகத்திற்கு மாத்திரம் சேவை வழங்கியிருந்தது. |
| **ஒப்பந்த நிருவாக குறைபாடுகள்** | நிறுவனத்தின் புதிய கட்டிடத்தில் பகுதிகளாக வேறுபடுத்தும் பணிகள் மற்றும் மின், தண்ணீர் குழாய் பொருத்தும் வேலைகளுக்காக ரூபா மில்லியன் 179.94 பெறுமதிக்கு ஒப்பந்தக்காரர்கள் மூவருக்கு 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ஒப்பந்தங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. 08 சந்தர்ப்பங்களில் அந்த ஒப்பந்தங்களின் காலம் நீட்டிக்கப்பட்டிருந்தாலும், அந்தக் காலப்பகுதியிலும் அந்த ஒப்பந்தங்களை முடிக்க ஒப்பந்ததாரர்கள் தவறிவிட்டனர். இந்த ஒப்பந்தங்களுக்கான செய்த வேலைப் பெறுமதியான ரூபாய் மில்லியன் 164.07 பணம் செலுத்தப்பட்ட போதிலும், வேலை தாமதக் காலத்திற்கு தாமதக் கட்டணம் அறவிடுவது தொடர்பில் ஒப்பந்தத்தில் நிபந்தனையொன்று இல்லாத காரணத்தினால் தாமதக் கட்டணம் அறவிடுவதற்கான வாய்ப்பு இழக்கப்பட்டுள்ளது.<br><br>மேற்கூறிய கட்டிடத்திற்கான தீ பாதுகாப்பு மற்றும் கண்டறிதல் அமைப்பை வழங்குதல் மற்றும் நிறுவுதல் தொடர்பான கொள்முதல் செயல்முறை வெட் வரி தவிர்த்து ரூபாய் மில்லியன் 8.281 பெறுமதிக்கு ஒப்பந்ததாரருடன் ஒப்பந்தம் செய்யப்பட்டது. 2023 ஜூலை 24, முதல் ஆரம்பித்து 30 நாட்களுக்குள் பணிகள் முடிக்கப்பட வேண்டும், ஆனால் 2023 நவம்பர் 24 ஆம் திகதி கணக்காய்வு திகதியாகும் போது 120 நாட்கள் |

கடந்துவிட்ட போதிலும் பணிகள் முடிக்கப்படவில்லை. செய்யப்பட்ட பணியின் பெறுமதி ரூபாய் மில்லியன் 6.81 செலுத்தப்பட்டிருந்த போதிலும், வேலை தாமதமான காலக்கட்டத்திற்கான தாமதக் கட்டணம் தொடர்பான நிபந்தனை ஒப்பந்தத்தில் இல்லாத காரணத்தினால் தாமதக் கட்டணம் அறவிடுவதற்கான வாய்ப்பு இழக்கப்பட்டுள்ளது.

**நிறுவனத்தின் பணிகளுக்கு முரணாணன பணிகளை மேற்கொள்ளல்**

மழை மானி உபகரணங்களை தயாரித்தல், விற்பனை செய்தல், அல்லது இலவசமாக விநியோகித்தல் நிறுவனத்தின் செயல்பாடு இல்லை என்றாலும் ரூபாய் மில்லியன் 1.502 பெறுமதியான மூலப்பொருட்கள் வாங்கப்பட்டு 480 பாரம்பரிய மழைமானி அளவீடுகள் தயாரிக்கப்பட்டன. கணக்காய்வு செய்யப்பட்ட திகதியான 2023 நவம்பர் 13 ஆம் திகதியின் பின்னர், இதில் 370 மழைமானிகள் இலவசமாகவும் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் 110 மழைமானிகள் ரூபாய் மில்லியன் 0.615 தொகைக்கு விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும், பதுளை, கேகாலை மற்றும் நுவரெலியா ஆகிய 03 மாவட்டங்களை உள்ளடக்கிய நிறுவனத்தினால் பொருத்தப்பட்ட 145 பாரம்பரிய மழை மானிகள் சுமார் 02 வருடங்களாக தரவுகளைப் பெறுவதற்குப் பயன்படுத்தப்படவில்லை.

## அனர்த்த முகாமைத்துவ நிலையம்

**பயனற்ற செலவுகள்**

2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் பந்தி 8(இ) இன் கீழ், நிலையத்தின் பணிகளில் ஒன்றாக, அனர்த்த அபாயங்களை குறைப்பதற்காக ரூபாய் மில்லியன் 4.2 செலவில் ஆராய்ச்சி அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது. ஆராய்ச்சி அறிக்கையின் 100 பிரதிகள் பெறப்பட்டாலும், அது அபிவிருத்திற்காகவோ அல்லது திட்டமிடல்களுக்காகவோ பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**சட்டமூலத்திற்கு தேவையான திருத்தங்கள் செய்யப்படாமை**

2012 ஆம் ஆண்டு ஜுலை 05 ஆம் திகதி அமைச்சரவையினால் இடைக்கால முகாமைத்துவக் குழு

நிறுவுவதற்காக அங்கீகாரம் கொடுக்கப்பட்டிருந்தாலும் அதற்கு 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டமூலத்திற்கு தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை.

**அவசர நிலைமைகளில் செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்தல்**

2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் 04 ஆவது பிரிவின்படி, நிலையத்தின் பிரதான பணிகளில் ஒன்றான தேசிய அவசர செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்து அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக 2005 ஆம் ஆண்டு முதல் மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டு வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**பதவி வெற்றிடங்கள்**

மீளாய்வாண்டின் இறுதியில், நிலையத்தில் 22 பதவிகளைச் சேர்ந்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 169 ஆக இருந்ததுடன், இவற்றில் 05 அத்தியாவசிய பதவிகளுக்கான வெற்றிடங்கள், பல ஆண்டுகளாக வெற்றிடங்களாக இருப்பது, நிலையத்தின் பணிகளை செயல்திறனாகவும் விளைத்திறனாகவும் முன்னெடுப்பதற்கு இடையூறாக இருந்தது.

**திடிர் அனர்த்தங்களின் போது பதிலளிக்கும் உபகரணங்கள்**

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவுகளுக்கு தற்காலிகமாக வழங்கப்பட்ட ரூபாய் மில்லியன் 4.317 பெறுமதியான 153 திடிர் அனர்த்தங்களின் போது பதிலளிக்கும் உபகரணங்கள் பயன்படுத்தக்கூடிய வகையில் மீளக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**திட்டமிட்டபடி செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தாமை.**

பேரிடர் முகாமைத்துவச் சட்டத்தின் 8 (d) மற்றும் (e) இன் கீழ், பேரிடர் தடுப்புத் செயற்றிட்டங்களை செயல்படுத்துவதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் நிலையத்தின் பொறுப்பாக இருந்த போதிலும், மதிப்பாய்வின் கீழ் உள்ள ஆண்டில், ரூபாய் மில்லியன் 162 ஒதுக்கீட்டில் அனர்த்தங்களை குறைக்கும் செயற்றிட்டங்கள் 88 நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் அதில் ரூபாய் மில்லியன் 44 பெறுமதியான செயற்றிட்டங்கள் 29

நடைமுறைப்படுத்தப்படவில்லை.

**அனர்த்தத்தை குறைப்பதற்காக நடைமுறைப்படுத்தப்படும் செயற்றிட்டங்கள்**

அனர்த்தத்தை குறைக்கும் பிரிவினால் மாவட்டங்களில் ரூபாய் மில்லியன் 233.9 செலவில் அமுல்படுத்தப்பட்ட பின்வரும் 8 நிர்மாணத் திட்டங்கள் தோல்வியடைந்துள்ளன அல்லது பயன்படுத்தப்படாமல் உள்ளன.

| செயற்றிட்டத்தின் பெயர் | செலவு (ரூபாய் மில்லியன் | குவைாக பயன்படுத்தல்/ இடைநடுவில் கைவிடப்பட்டது. |
|---|---|---|
| பயிர்ச்செய்கை கிணறுகள்- மொனராகலை | 12 | குறைவாகப் பயன்படுத்தப்படடது |
| தேவஹுவ செயற்றிட்டம்- வெள்ளப்பாதிப்பை பழுதுபார்த்தல் | 5 | குறைவாகப் பயன்படுத்தப்படடது |
| நாவலப்பிட்டி நகர வெள்ள அனர்த்தத்தை குறைக்கும் செயற்றிட்டம் | 20 | குறைவாகப் பயன்படுத்தப்படடது |
| தம்புள்ளை நகர வெள்ள அனர்த்தத்தைத் குறைக்கும் செயற்றிட்டம் | 87 | இடையில் நிறுத்தப்பட்டுள்ளது. |
| அக்குரணை நகர வெள்ள அனர்த்தத் குறைக்கும் செயற்றிட்டம் | 33 | இடையில் நிறுத்தப்பட்டுள்ளது. |
| கம்பஹா மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்கள் | 54 | குறைவாகப் பயன்படுத்தப்படடது |
| பன்னலயில் 5 குடிநீர் குழாய் கிணறுகள் அமைத்தல் | 4 | குறைவாகப் பயன்படுத்தப்படடது |
| கங்காரகொல்ல கிராமத்தில் மண்சரிவு அபாயத்தைக் குறைத்தல் | 18.9 | இடையில் நிறுத்தப்பட்டுள்ளது. |

சிலாபம் பகுதியில் மயிக்குளம் மற்றும் சவரான கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வெள்ள அனர்த்தத் தணிப்புத் திட்டத்தின் கீழ் மூடப்பட்ட வடிகால், திம்பிளை கால்வாய் மற்றும் ஆவரங்குளிய கால்வாய் ஆகியவற்றின் குறுக்கே தடுப்பணைகள் அமைக்கப்படாமையால் திட்டத்தின் நோக்கம் நிறைவேறவில்லை என்பதால் செயற்றிட்டத்திற்காக செலவு செய்த ரூபாய் 1.4 மில்லியன் தொகையும் பயனற்ற செலவாக காணப்பட்டது.

# தொலைத்தொடர்பு மற்றும் ஊடகம்

பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்து சுதந்திரம் உள்ளிட்ட சரியான தகவல்களை அறிந்து கொள்ளும் மக்கள் உரிமையை உறுதிப்படுத்தும் தகவல் அறிவு மற்றும் கருத்தியல்களின் சம நிலையான தகவல் தொடர்புக்குப் பொருத்தமான ஊடகத்துறை கலாசாரத்தினை உருவாக்குதல் போன்றே அரசாங்கத்தின் மூலம் செயல்படுத்தப்படும் தேசிய கொள்கைகளின் மீது அமைந்துள்ள வெளிப்படை தன்மையைக் கொண்ட ஊடக கலாச்சாரத்தினை அறிமுகப்படுத்துவதற்கு குறிக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களுக்கு இணங்கி ஊடக விடயத்திற்கு உரிய கொள்கைகளை உருவாக்குதல், தேசிய வரவு செலவு, அரச முதலீடு மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் கீழ் உள்ள செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் அதற்குரிய கொள்கைகள், வேலைச் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை உருவாக்குதல், நடைமுறைப்படுத்துதல், தொடர் நடவடிக்கை எடுத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் போன்ற விடயப் பரப்பினைக் கொண்டுள்ள ஊடக அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள பதினைந்து நிறுவனங்களினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடமைப் பொறுப்புக்கள் மற்றும் விசேட முன்னுரிமைகள் நிறைவேற்றப்பட வேண்டி உள்ளன.

**கடமைப் பொறுப்புகள்**

ஊடகப் பாவனைக்காக நவீன தொழில்நுட்பத்தினை ஈடுபடுத்துவதை அதிகரித்தல், வெகுஜன ஊடகக் கொள்கையினை அறிமுகப்படுத்துதல், அரச உத்தியோகபூர்வ அறிவிப்புகள் மற்றும் செய்திகள் தொடர்பில் பொதுமக்களைத் தெளிவுபடுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல்.

இலங்கை தொடர்பில் உரிய தகவல்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வெகுஜன ஊடக நிறுவனங்களுக்கு வழங்குதல், வெளிநாடுகளில் அமைந்துள்ள இலங்கை தூதரகங்களுக்கு தேவையான தகவல்கள் மற்றும் விளம்பர சேவையினை வழங்குதல்.

செய்திகள், திரைப்படங்கள் மற்றும் ஆவண நிகழ்ச்சிகளைத் தயாரித்தல் மற்றும் காட்சிப்படுத்துதல் நோக்கில் பொருத்தமான நடவடிக்கை எடுத்தல், வர்த்தகத் தொலைக்காட்சி மற்றும் வானொலி விளம்பரம் மற்றும் வெளிநாட்டு ஒளிபரப்பு உள்ளிட்ட விளம்பர நடவடிக்கைகள்.

புதிய தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவ முறைமைகளைப் பயன்படுத்தி பல்வகைத் தன்மைகளின் மூலம் வணிகத்தினை நோக்கமாகக் கொண்ட நவீன தபால் சேவையினை வழங்குதல் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தபால் சேவை நடவடிக்கைகளை வினைத்திறனாகப் பேணிச் செல்லுதல் மற்றும் இலங்கை முத்திரைப் பணியகத்தினை நிர்வாகம் செய்தல்.

இலங்கை பத்திரிகை சபையை மீள்கட்டமைப்பு செய்தல்.

சமூக ஊடகம் உள்ளிட்ட புதிய ஊடக பயன்பாடு மற்றும் கையாளுதல் தொடர்பில் தொழில் ரீதியான அறிவு மற்றும் புரிந்துணர்வை வழங்குவதற்கான முறைமையொன்றினை அறிமுகப்படுத்துதல் மற்றும் சர்வதேச தரத்திற்கு இணங்கும் வெகுஜன ஊடக உயர் கல்வி தொழில் திறன் அபிவிருத்தி சந்தர்ப்பங்களை உருவாக்குதல்.

மேற்படி பணிகளை நிறைவேற்றுவதற்கு அமைச்சு மற்றும் மூன்று திணைக்களங்களுக்கு மொத்தமாக ரூபா. 28,140 மில்லியன் நிதி பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதி வரையில் அதில் ரூபா. 24,024 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## கணக்காய்வு அவதானிப்புகள்

### வெகுஜன ஊடக அமைச்சு

| | |
|---|---|
| **புவிசார் தொலைக்காட்சி ஒளிபரப்பு எண்ணிம மயப்படுத்தல் செயற்திட்டத்திற்கான ஒதுக்கீடு பயன்படுத்தப்பட்டிருக்காமை** | இலங்கையில் புவிசார் தொலைக்காட்சி ஒளிபரப்பினை எண்ணிம மயப்படுத்தல் செயற்திட்டம் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் நடைமுறைப்படுத்தப்படாததனால் மீண்டும் 2021 ஆம் ஆண்டில் அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் தொழில்நுட்பத்துடன் நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டு இருந்தது. அதன் மூலம் நாடு முழுவதிலும் பரந்து காணப்படும் 16 ஒளிபரப்பு நிலையங்களை தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், 2024 மே 31 ஆம் திகதி வரையிலும் ஒரு ஒளிபரப்பு நிலையத்தையேனும் தாபிப்பதற்கு முடியாதிருந்தது. செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு 2023 ஆம் ஆண்டுக்கு ரூபா. 330 மில்லியன் கிடைத்திருந்த போதிலும் பயன்படுத்தப்பட்டிருந்தது ரூபா. 8 மில்லியன் மட்டுமேயாக இருந்ததுடன் ரூபா. 322 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| **மதிப்பிடப்பட்ட வருமானத்தினை பெற்றுக்கொள்ளாமை** | 2023 ஆம் ஆண்டில் நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் வர்த்தக வேலைத் திட்டங்களைக் குத்தகை மூலம் பெற்றுக் கொள்வதற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த வருமானம் ரூபா. 300 மில்லியனாக இருந்த போதிலும் அமைச்சு பெற்றுக் கொண்டிருந்த தேறிய வருமானம் ரூபா. 150 மில்லியனாக இருந்ததனால் அண்ணளவாக 50 சதவீத வருமானம் குறைவாக ஈட்டப்பட்டிருந்தது. |
| **வருமானம் இழக்கப்பட்டமை** | கல்வி அமைச்சின் மூலம் நிர்மாணிக்கப்பட்டிருந்த பிரபல நாடக நிர்வாக சபை தாபிக்கப்பட்டு இருந்த கட்டடத்தில் உள்ள திரையரங்கு 2024 ஜனவரி 23 ஆம் திகதி வரையிலும் செயல்படும் நிலைமையில் காணப்படவில்லை. இதனால் திரைப்படம் ஒன்றினைக் காட்சிப்படுத்துவதற்காக சிறிய திரையரங்கிற்கு ரூபா. 25,000 கட்டணம் குறித்த நபர்களினால் செலுத்தப்பட வேண்டி இருந்ததுடன் 2023 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2023 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையில் சுமார் 146 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் திரைப்படங்கள் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததனால் ரூபா. 3.6 மில்லியன் வருமானம் இழக்கப்பட்டிருந்தது. |

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

| | |
|---|---|
| **தலைமை அலுவலகத்தில் விற்பனை செய்யப்பட்ட சொத்துக்கள் கணக்கு வைக்கப்பட்டிராமை** | ஏக்கல கரகஹதன்ன ஒலிபரப்பு நிலையங்களில் 2023 ஆம் ஆண்டில் ரூபா. 44 மில்லியன் பெறுமதிக்கு நிலையான சொத்துக்களை விற்பனை செய்திருந்த போதிலும் சொத்துக்களை விற்பனை செய்ததற்கு உரிய சீராக்கல்கள் நிதிக்கூற்றுகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| **கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான கட்டிடம் சேதமடைய இடமளித்தமை** | கூட்டுத்தாபனம் ஆரம்பத்திலிருந்து ஏக்கல கரகஹதன்ன ஒலிபரப்பு நிலையம் தாபிக்கப்பட்டிருந்த 15 ஏக்கரான பாரிய காணியினுள் இருந்த 06 கட்டடங்கள் அதிக அளவில் |

சேதமடைவதற்கு இடமளிக்கப்பட்டிருந்ததுடன் கட்டடங்களை சேதப்படுத்தி இரும்புகள் களவாடப்பட்டிருந்தது. இந்த கட்டடங்களில் இருந்த இரும்பு மற்றும் அஸ்பெஸ்டோஸ் தகடுகளுக்கு ஏற்பட்டிருந்த சேதம் ரூபா. 13.6 மில்லியனாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் கட்டடங்களுக்கு ஏற்பட்டிருந்த சேதம் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**கட்டிடங்களைக் குத்தகைக்கு வழங்கும் போது ஏற்பட்ட நலிவுகள்**

20,000 சதுர அடியிலான 10 பேர்ச் கொண்ட கட்டடத்தினைக் குத்தகைக்கு வழங்குவதற்கு பத்திரிகை விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு இருந்த போதிலும் கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பின் போது 123.6 பேர்ச் கொண்ட காணியும் அதனுள் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. இந்தக் கட்டடம் மட்டும் மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் ரூபா. 2 மில்லியனுக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய தனியார் நிறுவனத்திற்கு மாதாந்த குத்தகை ரூபா. 3 மில்லியனுக்கு 02 வருடங்களுக்கு 7.5 சதவீதம் வீதம் வாடகை அதிகரிக்கப்பட்டு 2042 இல் மாதாந்த வாடகை ரூபா. 5.75 மில்லியன் ஆகுமாறு 20 வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் போது ரூபா. 72 மில்லியன் முற்பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் இதன் உடன்படிக்கை தனியார் நிறுவனத்தினால் ஒருதலைப்பட்சமாக தயாரிக்கப்பட்டிருந்ததுடன் வரி சேர்க்கப்பட்ட பெறுமானத்தினை கூட்டுத்தாபனம் ஏற்பதற்கு நேரிட்டிருந்ததனால் 2023 ஆம் ஆண்டினுள் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா. 3.75 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது.

**குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

தரமான நிலைமைக் கொண்ட திரைப்படங்களை உருவாக்கும் நோக்கில் 1999 திசெம்பர் 10 ஆம் திகதி வரையில் தனியார் நிறுவனமொன்று மற்றும் செய்தித் திணைக்களத்துடன் ஏற்படுத்திக் கொண்டிருந்த உடன்படிக்கைக்கு அமைய பிரான்ஸ் அரசாங்கத்திடம் இருந்து கிடைத்த 9,150,000 பிரான்ஸ் பிராங்க்கிற்கு சமனான ரூபா. 102.2 மில்லியன் கடனுதவி வழங்கப்பட்டிருந்தது. இந்த கடனுதவி மூலம் 2023 ஆம் ஆண்டில் ஆய்வு கூட இயந்திர உபகரணத் தொகுதியினை தருவிக்கும் போது முறையான சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்காத காரணத்தால் 2024 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் செயல்பாடின்றி காணப்பட்டது. இந்த இயந்திராதி தொகுதியினைத் தாபித்து வைப்பதற்காகத் திணைக்களத்தில் பாரிய நிலப்பரப்புடன் கூடிய கட்டடத்தினை பயன்படுத்தியதால் அந்த கட்டடமும் குறை பயன்பாட்டு சொத்தாகி இருந்தது.

## இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்

**கூட்டுத்தாபனத்தின் நிதிநிலைமை**

கூட்டுத்தாபனத்தின் 2023 ஆம் ஆண்டின் மற்றும் முன்னைய 05 ஆண்டுகளின் நிதி பெறுபேறு தொடர்பில் கருத்தில்

**வீழ்ச்சியடைந்தமை**

கொள்ளும்போது 2018 ஆம் ஆண்டில் ரூபா. 188 மில்லியன் இலாபத்தினைப் பெற்றிருந்த போதிலும் அதன் பின்னர் தொடர்ச்சியாக நட்டமடைந்திருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் நட்டம் ரூபா. 343 மில்லியனாக இருந்தது. 2022 ஆம் ஆண்டில் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் ரூபா. 29 மில்லியன் வருமானத்தை ஈட்டி இருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டினுள் கல்வி வேலைத் திட்டங்களுக்காக ரூபா. 12 மில்லியன் செலவு கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த வேலைத் திட்டங்களை ஒளிபரப்புவதன் மூலம் எதுவித ஒளிபரப்பு நேர வருமானம் ஈட்டப்பட்டிருக்கவில்லை.

**கடன் அறவிடப்பட்டிருக்காமைக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமை**

2023 ஆம் ஆண்டின் இறுதி திகதியில் ஊழியர் கடன்பட்டோர் மீதி ரூபா. 432 மில்லியனாக இருந்ததுடன் அதில் 5 வருடங்களை விஞ்சிய மீதி ரூபா. 130 மில்லியன் அதாவது மொத்தக் கடன்பட்டோர் மீதியில் 30 சதவீதமாக இருந்தது.

## இன்டிபென்டன் டெலிவிஷன் நெட்வொர்க் பிரைவேட் லிமிடெட்

**கம்பனியின் நிதி நிலைமை வீழ்ச்சியடைந்தமை**

கம்பனியின் உரித்து மூலதனம் 2015 ஆம் ஆண்டில் ரூபா. 3,198 மில்லியனாக இருந்தத்துடன் தொடர்ச்சியாக நட்டமடைந்த காரணத்தினால் அது 2023 ஆம் ஆண்டில் ரூபா. 489 மில்லியன் வரையில் குறைவடைந்து இருந்தது.

**கடன்களை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காமை**

2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த வியாபார பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய மீதி ரூபா. 905 மில்லியனாக இருந்ததுடன் அதில் சுயாதீன தொலைக்காட்சி சேவையில் ஐந்து வருடங்களை விஞ்திய மீதி ரூபா. 222 மில்லியன் ஆகும். வசந்தம் தொலைக்காட்சி ஒளியலை வரிசையில், லக்ஹண்ட ஒலிபரப்பு ஒலியலை வரிசையில் மற்றும் வசந்தம் ஒலிபரப்பு ஒலியலை வரிசையில் ஒரு வருடத்தினை விஞ்சிய மீதிகள் முறையே ரூபா. 46 மில்லியன், ரூபா 8.9 மில்லியன் மற்றும் ரூபா. 1.50 மில்லியன் ஆகும். ரூபா. 1.35 மில்லியன் பெறுமதியினைக் கொண்ட கடன்பட்டோர் மீதிக்கு மட்டும் சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது எனினும் எஞ்சிய மீதிகளை அறவிடுவதற்கு நிறுவனத்தினால் 2023 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## செலசினே தொலைக்காட்சி நிறுவனம் / செலசினே மீடியா சொலுஷன்ஸ் தனியார் கம்பனி

**கம்பனியின் நிதி நிலைமை வீழ்ச்சியடைந்தமை**

செலசினே தொலைக்காட்சி நிறுவனம் எனும் பெயரில் காணப்பட்ட இந்த நிறுவனம் 2023 ஜூன் 20 ஆம் திகதி தொடக்கம் செலசினே மீடியா சொலுஷன்ஸ் தனியார் நிறுவனம் எனப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

2023 ஆம் ஆண்டின் மற்றும் முன்னைய 05 ஆண்டுகளின் நிதிப் பெறுபேறு தொடர்பில் கருத்தில் கொள்ளும்போது நிறுவனமானது 2019 ஆம் ஆண்டில் ரூபா. 8 மில்லியன்

| | |
|---|---|
| | இலாபத்தினைப் பெற்றிருந்ததுடன் அதன் பின்னர் தொடர்ச்சியாக நட்டமடைந்து உள்ளதுடன் 2023 ஆம் ஆண்டில் மொத்த நட்டம் ரூபா. 23.4 மில்லியனாக இருந்தது. |
| **மூலோபாயங்களை நிறைவேற்றி இருக்காமை** | 2022 - 2026 இணைந்த திட்டத்திற்கு அமைய 2023 ஆம் ஆண்டில் ரூபா. 903 மில்லியன் வருமானத்தினை இலக்காகக் கொண்ட போதிலும் ஈட்டப்பட்டிருந்த வருமானம் ரூபா. 233 மில்லியன் மட்டுமாகவே இருந்தது. |

## அரச அச்சகக் கூட்டுத்தாபனம்

| | |
|---|---|
| **உரிய முறையில் வரி செலுத்தாததனால் அபராதம் செலுத்த நேரிட்டமை** | 2022 இன் 25 ஆம் இலக்க சமூக பாதுகாப்பு வரி சட்டத்தின் 09 ஆம் பிரிவிற்கு அமைய ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளாது தாமதமாக வரி செலுத்தியதால் ரூபா. 8.83 மில்லியன் மேலதிக அபராதத் தொகை கூட்டுத்தாபனத்தினால் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. |
| **கடன்பட்டோர் மீதியினை அறவிட்டிருக்காமை** | 2023 ஆம் ஆண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் கடன்பட்டோர் மீதி ரூபா. 1,008 மில்லியனாக இருந்ததுடன் அதில் 4 - 11 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலவீச்சில் முன்கொண்டுவரப்படும் கடன்பட்டோர் மீதி ரூபா. 177 மில்லியனை 2023 ஆம் ஆண்டு இறுதி வரையிலும் அறவிடுவதற்குக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| **தீர்மானிக்கப்பட்ட வகையில் கட்டளைகள் ஒப்படைக்கப்படாததால் தாமத கட்டணம் மற்றும் அபராதம் செலுத்துவதற்கு நேரிட்டமை.** | 2023 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனம் குறிப்பிட்ட திகதியில் அச்சுக் கட்டளைகளை ஒப்படைக்காததால் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்கு உரியதான ரூபா. 22 மில்லியனும், தேசிய லொத்தர் சபையில் லொத்தர் சீட்டுகளை அச்சிடுவதற்கு உரியதான ரூபா. 5.6 மில்லியன் மற்றும் ரூபா. 27.6 மில்லியனும் தாமத கட்டணம் மற்றும் அபராதமாக அறவிடப்பட்டிருந்தது. |

## அரச அச்சகத் திணைக்களம்

| | |
|---|---|
| **உரிய அங்கீகாரமின்றி கொடுப்பனவு மேற்கொள்ளல்** | திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு துண்டு அடிப்படையில் கொடுப்பனவு வழங்குவதற்கு அனுமதியினைப் பெற்றுக் கொண்டிருக்காத போதிலும் திணைக்களத்தின் பல்வேறு வழங்கல் விடயத் தலைப்பின் கீழ் ரூபா. 298 மில்லியன் துண்டு அடிப்படையில் கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. |
| **நிலுவை மீதி அறவிடப்பட்டிருக்காமை** | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் 2009 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுக்கான அச்சு நடவடிக்கைகளை நிறைவேற்றியமைக்காக 10 நிறுவனங்களிடம் இருந்து |

அறவிடப்பட வேண்டிய ரூபா. 81 மில்லியனான நிலுவை வருமானம் மற்றும் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான அறவிடப்பட வேண்டிய ரூபா. 162 மில்லியனான நிலுவை வருமானம் அந்த மீதியில் 2023 ஆம் ஆண்டின் போது அறவிடப்பட்டிருக்கவில்லை.

## இலங்கை மன்றம்

**வெளிவாரி விரிவுரையாளர்களின் வளப் பங்களிப்பினைப் பெற்றுக் கொள்ளல்**

இலங்கை மன்றத்தினால் பாடநெறிகளை நடத்துவதற்கு அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள நிலையான விரிவுரையாளர் பதவிகள் 13 ஆக உள்ளதுடன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த உண்மையான விரிவுரையாளர்களின் எண்ணிக்கை 09 ஆகும். மாதிரி பரீட்சிப்பின் போது 2023 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 21 பாடநெறிகளில் 04 பாடநெறிகளுக்கு வெளிவாரி விரிவுரையாளர்களின் வளப் பங்களிப்பினை பெற்றுக் கொண்டிருந்ததுடன் மன்றத்தின் நிலையான விரிவுரையாளர்கள் இந்த பாடநெறிகளில் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மட்டும் மேற்கொண்டு இருந்தனர். மேலும் 12 பாடநெறிகளில் வெளிவாரி விரிவுரையாளர்களின் வளப் பங்களிப்பு 75 சதவீதத்தினை விஞ்சி சென்றுள்ளது.

**நிறுவனத்திற்கு அனுகூலமற்ற வகையில் தீர்மானங்களை மேற்கொண்டமை**

இலங்கை மன்றத்தின் பணிப்பாளர் (கல்வி) பதவியில் சேவையாற்றிய உத்தியோகத்தர் 2022 ஆகஸ்ட் 28 ஆம் திகதி தொடக்கம் நிரந்தர ஓய்வூதியம் வழங்கப்பட்ட காரணத்தினால், இலங்கை மன்றத்திற்கு எதிராக அந்த உத்தியோகத்தரினால் வழக்கு தொடுக்கப்பட்டிருந்தது. வழக்கில் 2023 ஜூலை 07 ஆம் திகதியிடப்பட்ட அந்த வழக்கின் தீர்ப்பின் மூலம் அவருக்கு உரித்துடைய அனைத்து நிலுவை சம்பளத்தினையும் செலுத்துவதற்கு மற்றும் பணிப்பாளர் (கற்கைகள்) பதவியில் மீண்டும் சேவையில் அமர்த்துவதற்கும் கட்டளை இடப்பட்டிருந்தது. அதற்கு அமைய மன்றத்தில் சேவையாற்றாத 2019 ஏப்ரல் தொடக்கம் 2023 நவம்பர் மாதம் வரையான காலத்திற்கு உரிய நிலுவை சம்பளம், ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்புத் தொகை, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்புத் தொகை மற்றும் சட்டத்தரணிக் கட்டணமாக மொத்தம் ரூபா. 5.7 மில்லியன் மேலதிக செலவினை ஏற்பதற்கு மன்றத்திற்கு நேரிட்டிருந்தது.

## வரையறுக்கப்பட்ட ஐக்கிய செய்தி பத்திரிகைகள் நிறுவனம்

**இணங்கி இருந்த நிபந்தனைகளை நிறைவேற்றி இருக்காத போதிலும் ஊழியர்களை ஓய்வூதியம் பெறச் செய்தமை**

நிறுவனத்தின் ஊழியர்கள் சுயேட்சையாக ஓய்வு பெற்றமைக்கு உரியதான ரூபா. 300 மில்லியன் அரச மானியத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக 2023 ஜூன் மாதம் 23 ஆம் திகதி அமைச்சுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. நிறுவனத்தின் இணைந்த திட்டம், மூலோபாய திட்டம், செயற்பாட்டுத் திட்டம், நிறுவன கட்டமைப்பு, தணைக்களக் கட்டமைப்பு, தடுத்து வைக்கப்பட்ட பதவிகள் மற்றும் ஊழியர் எண்ணிக்கை தொடர்பான திட்டம் என்பன நிறுவனத்தினால் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் வெகுஜன ஊடக அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அந்த தேவைப்பாட்டினைப பூர்த்தி செய்திருக்கவில்லை. எவ்வாறு இருப்பினும் அரசு மானியத்தினைப் பெற்றுக் கொண்டு ஊழியர்களை ஓய்வு பெறச் செய்தமைக்கு உரிய செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**எதிர் வர்த்தக உடன்படிக்கைகள் இல்லாமல் விளம்பரங்களைப் பிரசுரித்தமை**

2023 ஆம் ஆண்டினுள் நிறுவனத்தினால் 03 நிறுவனங்களுடன் செல்லுபடியாகும் எதிர் வர்த்தக உடன்படிக்கையின்றி ரூபா. 21 மில்லியன் பெறுமதியான விளம்பரங்களைப் பிரசுரித்திருந்ததுடன் உடன்படிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒரு தனியார் ஊடக நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொண்டிருந்த எதிர் வர்த்தக உடன்படிக்கையில் இணங்கி இருந்த பெறுமதியினை விஞ்சி ரூபா. 1.8 மில்லியனான விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டிருந்தன.

## இலங்கை பத்திரிகைப் பேரவை

**பத்திரிகைகளைப் பதிவு செய்தல் தொடர்பான சட்டத்தின் ஒழுங்கு விதிகள் திருத்தப்பட்டிருக்காமை**

1973 இன் 5 ஆம் இலக்க இலங்கை பத்திரிகைகள் பேரவைச் சட்டத்தின் 25 ஆவது பிரிவின் பிரகாரம் பத்திரிகைகளைப் பதிவு செய்தல் மற்றும் அவ்வாறு பதிவு செய்வதற்கான கட்டணத்தினை அறவிடுவதற்கும் கட்டளை உருவாக்குதல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், தொழில்நுட்ப வளர்ச்சியுடன் e - பத்திரிகைகளின் பிரசுரம் படிப்படியாக வளர்ச்சி அடைந்துள்ள போதிலும், அந்த பத்திரிகைகளைப் பதிவு செய்தல் தொடர்பில் சட்டத்தின் ஒழுங்கு விதிகளைத் திருத்திக் கொள்ளுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## தபால் திணைக்களம்

**சொத்துக்களின் நிர்வாகத்தின் குறைபாடுகள்**

திணைக்களத்தினால் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் முறையாக கையகப்படுத்தப்படாத 449 தபால் அலுவலகங்கள் உள்ளதுடன் அத்தினத்தில் திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ள எனினும் மதிப்பீடு செய்யப்பட்டிருக்காத 68 காணிகள் மற்றும் 63 கட்டடங்கள் காணப்படுகின்றன.

**மேலதிக நேரம் செலுத்தும் போது முறையான உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்படாமை**

சேவைக்கு வருகை தருதல் மற்றும் வெளியேறுதலை பதிவு செய்வதற்கு விரல் அடையாள இயந்திரம் பொருத்தப்பட்டுள்ள போதிலும் விரல் அடையாள இயந்திரத்தின் வருகை மற்றும் வெளியேறும் நேரங்களை கவனத்தில் கொள்ளாது ரூபா. 57 மில்லியன் மேலதிக நேரக் கொடுப்பனவு தபால் தலைமையகத்தில் ஊழியர்களுக்கு திணைக்களத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் தபால் போக்குவரத்துப் பிரிவில் மற்றும் கட்டுப்பாட்டு (விசாரணை ) பிரிவில் ஊழியர்களின் வருகை மற்றும் வெளியேற்றம் பதிவு செய்வதற்கு விரல் அடையாள இயந்திரம் பொருத்தப்பட்டு இருக்காதுடன் அதன் காரணமாக மேலதிக நேரக் கொடுப்பனவின் உண்மைத் தன்மையினைப் பரீட்சிப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளக் கூடிய முக்கியமான சான்றுகள் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக இந்த பிரிவுகளில் ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா. 4.3 மில்லியனான மேலதிக நேரக் கொடுப்பனவின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்த முடியாது இருந்தது.

## இலங்கை தொலை தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

**பயனற்ற செலவினை மேற்கொள்ளல்**

அம்பாந்தோட்டை தகவல் தொழில்நுட்ப பூங்காவில் தொலைத் தொடர்பு ஊடக மத்திய நிலையத்தில் நிர்மாணித்தல் ஆணைக் குழு, ஒப்பந்தக்காரருடன் ஏற்படுத்தி இருந்த உடன்படிக்கைக்கு அமைய குறித்த ஒப்பந்தம் 2016 ஓகஸ்ட் 10 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கையை முடிவுறுத்தும் போதும் ஒப்பந்தத்தில் 33 சதவீதம் மட்டுமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதற்கு அமைய இந்த ஒப்பந்தம் இடை நடுவில் நிறுத்தப்பட்டு இருந்ததுடன் செலவிடப்பட்டிருந்த ரூபா. 711 மில்லியன் பயனற்ற செலவாகி இருந்தது. எவ்வாறு இருப்பினும் அது நிதி நிலைமைக் கூற்றில் முடிவடையாத வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

## கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம்

**கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம் Citrus Leisure PLC நிறுவனத்துடன் தொழில் ஒன்றினை மேற்கொள்வதற்கு முறையான வகையில் உடன்படிக்கையிடல்**

கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம் மற்றும் Citrus Leisure PLC நிறுவனம் கோபுரத்தின் 25, 26, 27, மற்றும் 28 ஆம் மாடிகள் மற்றும் சமையலறையை Hospitality Industry முறைமையில் தொழில் ஒன்றினை மேற்கொள்ளுவதற்காக உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த உடன்படிக்கையின் 8.1 பிரிவின் பிரகாரம் மொத்த வருமானத்தில் 3.5 சதவீத முகாமைத்துவக் கட்டணமும், 8.2 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு மாதமும் மொத்த ஊழியர் செலவுக்கு மேலதிகமாக அந்த செலவில் மேலும் 10 சதவீத தொகையையும் தாமரைக் கோபுர நிறுவனத்தினால் செலுத்தப்பட வேண்டி இருந்தது. இதற்கு மேலதிகமாக மொத்த செயற்பாட்டு இலாபத்தில் 20 சதவீதம் செலுத்தப்பட வேண்டும். Citrus Leisure பி.எல்.சி. நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட 2023 ஒக்டோபர் தொடக்கம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் ரூபா. 20.3 மில்லியனான தேறிய நட்டத்தினைப் பெற்றிருந்த போதிலும் அந்த காலத்திற்காக ரூபா. 1.4 மில்லியன் முகமைத்துவக் கட்டணமும் ரூபா. 1.06 மில்லியன் ஊழியர் சம்பள செலவும் கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறு இருப்பினும் மேலே கூறப்பட்ட வகையில் மொத்த செயற்பாட்டு நட்டத்தினைப் பெறும் சந்தர்ப்பத்தில் செயல்படும் முறைமை தொடர்பில் உடன்படிக்கையில் நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

மேலும் நிறுவனத்தினால் Citrus Leisure பி.எல்.சி. நிறுவனத்திற்கு மாதாந்த இலக்கு வழங்கப்பட்டிருக்காதுடன் அதன் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்குப் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மேலே கூறப்பட்ட உடன்படிக்கையில் 3.1 (a) பிரிவின் பிரகாரம் ஊழியர்களைத் தெரிவு செய்தல், நியமித்தல், சேவையை முடிவுறுத்தல் மற்றும் சம்பளத்தினை நிர்ணயித்தல் என்பன நிறுவனத்துடன் கலந்துரையாடி தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும் Citrus Leisure பி.எல்.சி. நிறுவனத்தின் ஊழியர்களைத் தெரிவு செய்தல், நியமித்தல், சேவையை முடிவுறுத்தல் மற்றும் சம்பளத்தினை நிர்ணயித்தல் போன்ற எதுவித செயல்பாடுகளிலும் நிறுவனம் தொடர்பு பட்டிருக்கவில்லை. இந்த நிலைமையின் காரணமாக ஊவைசரள டுநளைரசந பி.எல்.சி. நிறுவனத்திற்குத் தேவையான வகையில் ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்தல், சம்பளத்தினை நிர்ணயித்தல் என்பவற்றை மேற்கொள்ளக் கூடியதாக இருந்ததுடன் அந்த நிறுவனம் சமர்ப்பிக்கும் எந்த ஒரு சம்பளம் மற்றும் கொடுப்பனவும் நிறுவனத்தினால் செலுத்துவதற்கு கட்டுப்பட்டு இருந்தது. அதே போன்று கையடக்கத் தொலைபேசிகளை வழங்குவதற்காக ரூபா. 1.01 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும்

அதற்கான உடன்படிக்கையில் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**கொழும்பு தாமரைக் கோபுரம் தொடர்பான பௌதீக பரீட்சிப்பு**

கோபுரத்தின் பார்வையிடல் தளத்தில் சுவர் பூச்சுக்களுக்கு சேதமடையும் வகையில் பெயர்கள் மற்றும் பல்வேறு உருவங்கள் வரையப்பட்டுள்ளன. அந்த சேதத்தினை குறைப்பதற்காக ரூபா. 1.08 மில்லியன் செலவிடப்பட்டு பார்வையிடல் தளத்தில் மின் வெளிச்சத்தில் எரியும் பிளாஸ்டிக் பலகைகள் பொருத்தப்பட்ட போதிலும் அவையும் பார்வையாளர்களினால் சேதப்படுத்தப்பட்டிருந்தன. கோபுரத்தினுள் பாதுகாப்பு கெமரா ஒழுங்கமைப்பு பொருத்தப்பட்டு அதன் செயல்பாடுகளுக்கு ஊழியர்களை ஈடுபடுத்தி இருந்த போதிலும் சேதப்படுத்திய நபர்களை இனம் கண்டு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தேவையான ஆகக் குறைந்த எண்ணிக்கையான பாதுகாப்பு உத்தியோகத்தர்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

# நீதிமன்ற மற்றும் சிறைச்சாலை அலுவல்கள்

நாட்டில் மக்கள் நம்பும் சட்ட ஒழுங்கமைப்பு மற்றும் நியாயமான இலங்கை எனும் நோக்கின் கீழ், செயற்படும் நீதி அமைச்சு, அதன் கீழான 08 திணைக்களங்களையும் 11 நியதிச்சட்ட சபைகள்/நிறுவனங்களையும் கொண்டுள்ளதுடன் சட்டக் கல்லூரி இவ் அமைச்சின் கீழ் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

**செயற்பணி**

சமூகத் தேவைகள் மற்றும் உலகளாவிய போக்குகளைக் கவனத்திற்கொண்டு சட்ட முறைமைக்குத் தேவையான மறுசீரமைப்புகளைச் செய்தல், சட்டத்தை மீள் ஆவணப்படுத்தலும், கோவைப்படுத்தலும். நீதிமன்றங்களின் நிர்வாகம் தொடர்பான நடவடிக்கைகள்

அரசாங்கம் சார்பாக குற்றவியல் வழக்குத் தாக்கல் செய்தலும் சிவில் சட்ட நடவடிக்கைகளும், அரசிற்கும் சகல அரச திணைக்களங்களுக்கும் சட்ட மதியுரை வழங்குதல், சட்ட வரைவுகளைத் தயாரித்தல்.

ஒட்டுமொத்த குவாசி முறைமையின் உற்பத்தித் திறன் மற்றும் வினைத்திறமையையும் உயர்த்துவதற்காக தகுந்த வேலைத்திட்டமொன்றை வகுத்தமைத்தலும் நடைமுறைப்படுத்தலும்

தொழில் நியாய சபைகளின் நிர்வாகமும் அது தொடர்பான ஏனைய பணிகளும், சிவில் முரண்பாடுகள் நீதிமன்றம் வரை செல்லாமல் தீர்ப்பதற்கு மத்தியஸ்த சபைச் செயற்பாட்டை நடைமுறைப்படுத்தல், குற்றமொன்றினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியாளர்களுக்கு உதவுவது மற்றும் பாதுகாப்பது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

காணாமல் போனவர்களைத் தேடுதல் மற்றும் காணாமல் போனோர் உட்பட அவர்களின் உறவினர்களது உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான நடவடிக்கை எடுத்தல், மோதல்கள் மற்றும் நெருக்கடிகள் காரணமாக பாதிக்கப்பட்ட நபர்களுக்கு இழப்பீடுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள்

நாட்டினுள் தேசிய ஒருமைப்பாடு மற்றும் மீளிணக்கத்தையும் நீண்டகால சமாதானத்தையும் மேம்படுத்தம் அதற்காக தேசிய கொள்கை ரீதியான சட்டகமொன்றைத் தயாரித்தலும், இனங்களுக்கிடையில் ஒருமைப்பாடு மற்றும் சகவாழ்வை மீள் உருவாக்குவதற்கான கலந்துரையாடல் நிகழ்ச்சிகளை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்தல்.

புதிய அரசியலமைப்பொன்றைத் தயாரிப்பது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், மக்களின் இறைமை மற்றும் தேசியப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுவதை உறுதிப்படுத்த நடப்புத் தேவைகளுக்குப் பொருத்தமான


வகையில் அரசியல் யாப்பை மறுசீரமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பிற்குரிய கொள்கைகளையும் திட்டங்களையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்தலும், சிறைச்சாலை நிர்வாகமும் மறுசீரமைப்பும், சிறைச்சாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தலும் நெரிசல்களை குறைப்பதும், சிறைக்கைதிகளுக்கு புனர்வாழ்வளித்தல்

சமூக அடிப்படையிலான சீர்திருத்தக் கருத்திட்டங்கள் தொடர்பான செயற்பாடுகள், மோதல்கள் காரணமாக சரீர மற்றும் உடல் ரீதியான உபாதைகளுக்குட்பட்ட ஆட்களை புனர்வாழ்வளிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களைச் செயற்படுத்தல்.

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஆட்களை மீண்டும் சமூகமயமாக்குவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தல்.

2023 ஆம் ஆண்டில் மேலே குறிப்பிடப்பட்ட செயற்பணிகளை மேற்கொள்வதற்காக நீதி அமைச்சிற்கும் 09 திணைக்களங்களுக்கும் மொத்தமாக ரூபா. 35,179 மில்லியன் ஒதுக்கீடு பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையில் அதில் மொத்தமாக ரூபா. 31,383 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.




| | நீதி அமைச்சு | நீதிமன்ற நிர்வாகம் | கடன் நிவாரண சபை திணைக்களம் | சிறைச்சாலைகள் திணைக்களம் | சட்டமா அதிபர் திணைக்களம் | சட்ட வரைஞர் திணைக்களம் | உயர் நீதிமன்ற பதிவாளர் அலுவலகம் | நீதி ஆணைக்குழு சபை திணைக்களம் | அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களம் | சமூக அடிப்படையிலான சீர்திருத்தத் திணைக்களம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேறிய நிதியளிப்பு | 7042 | 11241 | 77 | 12571 | 2086 | 155 | 375 | 22 | 1030 | 580 | 35179 |
| உள்ளபடியான செலவினம் | 5182 | 11005 | 61 | 11471 | 1795 | 138 | 342 | 16 | 842 | 531 | 31383 |
| நிதியளிப்பு சேமிப்பு | 1860 | 236 | 16 | 1100 | 291 | 17 | 33 | 6 | 188 | 49 | 3796 |

வரைபட இல. : 2.19 : 2023 ஆம் ஆண்டின் போது நீதி அமைச்சு மற்றும் ஏனைய 09 திணைக்களங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ஒதுக்கீடும் செலவினமும்

ஆதாரம் : 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள்

மேற்குறித்த செயற்பணிகளை மேற்கொள்கையில் கண்டறியப்பட்ட முக்கிய கணக்காய்வு அவதானிப்புகள் தொகுக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

## கணக்காய்வு அவதானிப்புகள்

### நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு

| | |
|---|---|
| **முகாமைத்துவ நலிவுகள்** | மஹாவ மாவட்ட நீதவான் நீதிமன்ற ஆவணக் காப்பகங்கள் மற்றும் வழக்கு அறை நிர்மாணத்திட்டம் 2022 ஆம் ஆண்டு செப்தெம்பர் 30 ஆம் திகதிக்குள் நிறைவேற்றப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்குள் ரூபா 24.1 மில்லியன் செலவிடப்பட்டு 60 சதவீதம் பௌதீக முன்னேற்றம் அடைந்திருக்கையில் செயற்திட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக செலவிடப்பட்ட பணத்தொகை மூலம் எதிர்பார்க்கப்பட்ட முடிவைப் பெற இயலாதிருந்தது. மேலும், குளியாப்பிட்டிய மாவட்ட நீதிமன்ற அலுவலகம் மற்றும் ஆவணக் காப்பக நீதிமன்ற மண்டபத்திற்கான உத்தேசக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காகவும், கற்பிட்டி நீதிமன்ற அலுவலகக் கட்டிடம் மற்றும் ஆவணக் காப்பகத்தை நிர்மாணிப்பதற்காக முறையே 2021 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் தனியார் நிறுவனம் ஒன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ரூபா 11.1 மில்லியனும் ரூபா 9.9 மில்லியனுமான முற்பணத் தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் செயற்திட்டம் முறையே 2022 ஆம் 2023 ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. குளியாப்பிட்டிய மாவட்ட நீதிமன்ற நிர்மாணிப்புகள் 2022 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்க இயலாது போனமையாலும் கற்பிட்டி நீதிமன்றத்தின் திட்டம் மாற்றப்பட்டமையாலும் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்டிருந்த முற்பணம் தனியார் நிறுவனத்தால் 15 மாதங்களும் 18 மாதங்களும் விளைவற்று வைத்துக்கொள்ளப்பட்டு முறையே 2023 மார்ச் மாதமும் ஆகஸ்ட் மாதமும் அமைச்சிற்குச் செலுத்தப்பட்டிருந்தன. |

### சிறைச்சாலைகள் திணைக்களம்

| | |
|---|---|
| **எதிர்பார்க்கப்பட்ட நலன் பெறப்பட்டிராமை** | நாட்டில் பாடசாலை மாணவர்களுக்கு கல்வி வழங்கப்படுவதற்குத் தேவையான மனித மற்றும் பௌதீக வளங்கள் மிகவும் குறைவான நிலையில் உள்ள சந்தர்ப்பத்தில் வட்டரெக்க இளம் குற்றவாளிகளின் பயிற்சிப் பாடசாலையை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் தேசிய பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ள மனித மற்றும் பௌதீக வளங்களுக்கு ஒப்பாக போதிய மாணவர்கள் இன்மை மற்றும் கல்விகற்கும் மாணவர்களுக்காக மிகவும் பொருத்தமான முறை ஒன்று |

இன்மையால் இச் செயற்திட்டத்தின் மூலம் வெற்றிகரமான முடிவுகளை அடைய முடியாதிருந்தது.


**சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்பட்டதன் படி 2023 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதத்தில் 31 நாட்கள் வெலிகட சிறைச்சாலையில் சிறைக்கைதிகள் 233 சந்தர்ப்பங்களின் போது உத்தியோகத்தர்களின் விடுதி வளாகச் சுத்திகரிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் சிறைச்சாலை காவலர்கள் 234 மனித நாட்களும் இதற்காகச் செலவிட்டிருந்தது. இக் காலப்பகுதியின் போது வீட்டுச் சுற்றாடலில் இக் காலப்பகுதியின் போது சிறைக்கைதிகளைக் கொண்டுசெல்வதற்காக 62 சந்தர்ப்பங்களின் போது சிறைச்சாலைகள் தலைமையகத்தின் குழாமில் உள்ள 09 வாகனங்கள் 372 மீட்டர்கள் பயணித்திருந்தன. மேலும், 2023 சனவரி 27 ஆம் திகதிய 01/2023 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கையின் மூலம் மேலதிக நேரக் கொடுப்பனவும் கடுமையாகக் கட்டுப்படுத்துவது அவசியமானதெனச் வலியுறுத்தப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் மேலதிக மற்றும் விடுமுறை நாள் கொடுப்பனவாக திணைக்களத்தால் ரூபா 982 மில்லயன் செலவிடப்பட்டிருந்ததுடன் இது 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 106 மில்லியனாலான அதிகரிப்பாக இருந்தது.

**சிறைச்சாலை இடவசதி**

ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச தரங்கள் மற்றும் சிறைச்சாலைகள் கட்டளை சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்கவும் உள்ளக சுற்றறிக்கைகளுக்கு அமைய கைதிகளின் உள மற்றும் உடல் தகுதிகளுக்குப் பொருத்தமான வகையில் போதியளவு இட வசதிகள் இருக்க வேண்டிய போதிலும், 2023 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் படி, 05 சிறைச்சாலைகளில் 62 சிறைக் கூடங்களில் வைத்துக்கொள்ளக்கூடிய சிறைக்கைதிகளின் எண்ணிக்கையைப் பார்க்கிலும் கூடுதலாக 2,601 பேரை வைத்திருந்ததுடன் அங்குனகொலபலெஸ்ஸவில் 12 சிறைக் கூடங்களில் வைத்துக்கொள்ளக்கூடிய எண்ணிக்கையைப் பார்க்கிலும் 127 பேர் குறைவாகவும் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.

2014 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது சிறைச்சாலைகளின் இயலளவைப் பார்க்கிலும் வைத்துக்கொள்ளப்பட்டிருந்த கைதிகளின் எண்ணிக்கை பின்வருமாறாகும்.




வரைபடம் இல. 2.20 : 2014 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது சிறைச்சாலையின் இலளவைப் பார்க்கிலும் அதிகளவில் இருந்த சிறைக் கைதிகளின் எண்ணிக்கை
ஆதாரம் - 2024 ஆம் ஆண்டின் புள்ளிவிபர அறிக்கை சிறைச்சாலைகள் திணைக்களம்

**சிறைச்சாலை நெருக்கடிக்கான காரணம்**

சிறைச்சாலைகளில் நிலவும் வழமைக்கு மாறான நெருக்கடிக்கு போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக சிறையிலிடப்படுவது முக்கிய காரணமாகியிருந்ததுடன் இது தொடர்பாக கைதிகள் பெரும்பாலானோர் போதைப்பொருள் பயன்பாட்டிற்கு அடிமைப்பட்டிருந்தமையால் ஏதோ ஒரு வகையில் தேவையான போதைப்பொருளைப் பெற்றுக்கொள்வதற்கு அவர்கள் முயற்சிப்பதுடன் அத்தகைய நிலையைத் தவிர்ப்பதற்காக சிறைச்சாலை அதிகாரிகள் கூடிய கவனத்தைச் செலுத்துவதற்கு நேர்ந்துள்ளமையால் சிறைச்சாலையின் முக்கிய நோக்கை அடைவதற்கும் உள்ளகப் பாதுகாப்பிற்கும் செயற்பணிக்கும் தடையாக உள்ளது. இது தொடர்பாக நீர்கொழும்பு மற்றும் களுத்துறை சிறைச்சாலைகளில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக ஆய்வின் போது நீர்கொழும்பு சிறைச்சாலையில் 2023 ஆகஸ்ட் 27 ஆம் திகதியில் இருந்த மொத்தக் கைதிகளின் எண்ணிக்கையான 2,225 இல் 65 சதவீதமான அதாவது 1,442 பேரும் களுத்துறைச் சிறைச்சாலையில் 2023 செப்தெம்பர் 19 ஆம் திகதியில் இருந்த மொத்தக் கைதிகளின் எண்ணிக்கையான 1,275 இல் 69 சதவீதமான அதாவது 885 பேரும் போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பான கைதிகளாவர்.

## சிறை ச்சாலைகளில் காணப்படுகின்ற இட நெருக்கடியை முகாமைத்துவம் செய்வது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செயலாற்றல் கணக்காய்வு அறிக்கை அவதானிப்புகள்

**போதைப் பொருள் குற்றங்களுடன் தொடர்புடையதான கைதிகள**

போதைப் பொருள் குற்றங்களின் அதிகரிப்பு நாட்டின் ஏனைய குற்றச் செயற்பாடுகள் அதிகரிப்பிற்கு நேரடியாகத் தாக்கமளிக்கின்றது. இலங்கையில் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு சிறைச்சாலைகளில் கைதிகளின் எண்ணிக்கை 26,176 ஆக இருந்ததுடன் அதில் 53 சதவீதத்திற்கு மேற்பட்ட தரப்பினர் அதாவது 13,794 பேர் போதைப் பொருள் குற்றம் தொடர்பான கைதிகளாவர். போதைப் பொருள் குற்றங்கள் தொடர்பாக 4,406 கைதிகள் சிறைக் கைதிகளாக இருந்ததுடன், 9,388 பேர் சந்தேகத்திற்குரியவர்களாவர்.

**வெலிக்கடை சிறைச்சாலை வாளகத்தை ஹொரணை வளாகம் பகுதியை மீண்டும் நிறுவுதல்**

வெலிக்கடை சிறைச்சாலை தொகுதி கொறனை பிரதேசத்தில் மீண்டும் ஸ்தாபிக்கும் செயற்திட்டம் நகர அபிவிருத்தி அதிகார சபை, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு மற்றும் சிறைச்சாலைகள் திணைக்களம் ஒன்றிணைந்து மேற்கொள்கின்றது. இந்த செயற்திட்டத்திற்குரிய திட்டமிடல் நிர்மாண நடவடிக்கைகள், உள்ளக வழி நீர் மற்றும் மின்சாரத்தை உள்ளடக்கிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவருத்தி செய்யும் நடவடிக்கைகளில் 30 சதவீதம் அளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. எனினும், நிதியமைச்சினால் விநியோகிக்கப்பட்ட 2022.04.26 ஆந் திகதிய இலக்கம் 03/2022 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி இந்த செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

**சுகாதார வசதிகள்**

சிறைச்சாலை இயலளவை விஞ்சி கைதிகளின் அளவு அதிகரித்தமையால் கைதிகளுக்கு போதியளவு சுகாதார வசதிகளை வழங்குவது சிரமமாக இருந்தது. 2023 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையில் 27 சிறைச்சாலைகளில் 187 மலசல கூடங்களின் பற்றாக்குறை காணப்பட்டதுடன் தற்போதுள்ள மலசல கூடங்களிலும் 287 பழுதுபார்க்கப்பட வேண்டிய நிலைமையில் காணப்பட்டது.

**இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கைகள் சமர்ப்பிப்பதிலான தாமதங்கள்**

நீதிமன்றத்தின் மூலம் சிறையில் இடப்பட்டுள்ள சந்தேக நபர்களுக்குரிய பொலிஸாரால் இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதைப்பொருள் மாதிரிகளுக்கு உரிய பகுப்பாய்வு அறிக்கை 12 மாதங்கள் விஞ்சாத காலத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் இந்த இரசாயன பகுப்பாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிராமையால் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு சிறைகச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களின் எண்ணிக்கை 5,676 ஆகும்.

**மேன்முறையீடுகளை சமர்ப்பித்து இறுதித் தீர்ப்பிற்கு காத்திருக்கும் கைதிகள்**

கைதிகளால் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக நீதிமன்ற செயற்பாடுகளின் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் விசாரனை நடாத்தப்படாமை, தாமதமாக விசாரனைக்கு எடுத்தல் மற்றும் பூர்த்தி செய்யப்படாமை போன்ற விடயங்கள் காரணமாக அது வழமையான நிருவாகத்திற்கு புறம்பான விடயமாக இருந்தது. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கப்பட்டு இறுதித் தீர்மானம் பெறப்படுவதற்காக இருந்த சிறைச்சாலைகளில் இருந்த கைதிகளின் எண்ணிக்கை 301 ஆகும்.

**சிறைக்கைதிகளின் ஊழியத்தை தனியார் துறை செயற்திட்டங்களுக்கு ஈடுபடுத்தல்**

சிறைச்சாலைகளின் நெரிசல் அதிகரித்ததுடன் கைதிகளின் அளவு அதிகரித்துள்ளமையால் கைதிகளை புனர்வாழ்வளிப்பற்காக உள்ள பௌதீக மற்றும் மனிதவளங்கள் பற்றாக்குறையின் அடிப்படையில் சிறைக்கைதிகளின் ஊழியத்தை தனியார் துறையின் செயற்திட்டங்களில் ஈடுபடுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் 2020 மே 14 ஆம் திகதிய இல. 20/.0792/.207/.025 இன் கீழ் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருந்தது. எனினும், தனியார் கம்பனிகளில் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட சிறைக்கைதிகளுக்கு இதற்காக குறித்த துறைகளில் 03 மாதப் பயிற்சி, தொழில் ரீதியான மட்டத்தில் சான்றிதழ் (NVQ) வழங்கப்படுவதற்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக வெளிநாட்டு மொழிப்பயிற்சி வழங்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**சிறைக் கைதிகளின் சீர்திருத்தம்**

காலத்தின் தேவைப்பாட்டிற்கு ஏற்ற வகையில் சிறைக் கைதிகளைச் சீர்திருத்தி சிறந்த குடிமக்களாக சமூகமயப்படுத்துவதற்குத் தேவையான சமூகப் பின்னணியை அமைத்துக்கொடுப்பது சிறைச்சாலையின் முக்கியப் செயற்பணிகளில் ஒன்றாகும். எனினும், சிறைச்சாலைகளில் நெரிசல் அதிகமாக உள்ளதால், கைதிகளின் சீர்திருத்தமளிப்பதில் சிக்கல்கள் எழுந்துள்ளன.

## சட்டமா அதிபர் திணைக்களம்

**நிலுவை வருமான அறவீட்டிலான தாமதம்**

நிதிப் பிரமாணம் 128 (2) (உ) இன் பிரகாரம், அரசாங்க வருமானம் கணக்களிப்பு உத்தியோகத்தரால் அரசாங்கத்திற்குக் கிடைக்கப்பெற வேண்டிய நிலுவை வருமானம் தாமதமின்றி அறவிடப்பட வேண்டியமை தொடர்பில் விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை வருமானம் ரூபா 324 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அந் நிலுவை மீதியில் 10

வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 105 மில்லியன் ெ தாகையான மீதியும் காணப்பட்டது.

## அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம்

| | |
|---|---|
| **எதிர்பார்க்கபட்ட பூர்த்தி நிலையைப் பெற்றிராமை** | 2023 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் திணைக்களத்தின் 12 பிரிவுகளுக்காக 12,189 வழக்குகள் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டு பகுப்பாய்வு அறிக்கைகள் வழங்கப்படுவதற்காக எஞ்சியிருந்தது. 2023 ஆம் ஆண்டில் மேலும் 58,886 வழக்குகள் கிடைக்கப்பெற்றிருந்தன. இவற்றில் 2023 ஆம் ஆண்டில் 53,253 வழக்குகள் நிறைவேறியிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் பகுப்பாய்வு செய்யப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்காக 17,822 வழக்குகள் எஞ்சி இருந்தன. இது பகுப்பாய்வு செய்யப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்காக இருந்த மொத்த வழக்குகளின் எண்ணிக்கையில் 25 சதவீதம் என அவதானிக்கப்பட்டது. |
| **முகாமைத்துவ நலிவுகள்** | சம்பளமற்ற லீவைப் பெற்று வெளிநாட்டிற்குச் சென்றிருந்த திணைக்கள உத்தியோகத்தர்கள் இருவர் மீள பணிக்கு வந்திராததன் காரணமாக அவ் உத்தியோகத்தர்கள் இருவரிடம் இருந்தும் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 2.3 மில்லியன் மொத்தத் தண்டப்பணத்தையும் அறவிடுவதற்கு இது வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## நீதி அமைச்சுடன் தொடர்பான ஏனைய நிறுவனங்கள்

## மீயுயர் நீதிமன்ற நீதிபதிகள்

| | |
|---|---|
| **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி இன்மை** | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 (1) இன் பிரகாரமும் 2019 சனவரி 12 ஆம் திகதிய DMA/01-2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் படி, உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இலங்கை கணக்காளர் சேவையின் I ஆம் தர உத்தியோகத்தரின் தலைமையில் அத் திணைக்களத்தின் நிர்வாக சபையால் நியமிக்கப்பட்ட தமக்கேயான உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் இருக்க வேண்டிய போதிலும் இந் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

## இழப்பீட்டு அலுவலகம்

**இழப்பீட்டுக் கோவை விபரம் உள்ளடங்கிய ஓர் பதிவேடு இன்மை**

இழப்பீட்டைச் செலுத்துவதற்காக உள்ள கோவைகளின் எண்ணிக்கையை சரியாக உறுதிப்படுத்துவதற்காக இழப்பீட்டைக் கோரும் கோவை விபரம் உள்ளடங்கிய ஓர் பதிவேடு ஒன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்குமாறு கோரியிருந்த போதிலும் அத்தகைய ஓர் பதிவேடொன்று சமர்ப்பிக்கப்படுவதற்கு இழப்பீட்டு அலுவலகம் தவறியிருந்தது. 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மேலும் இழப்பீட்டைச் செலுத்துவதற்காக 8,626 கோவைகள் உள்ளதாக அலுவலகத்தால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் கோவைகள் எந்தக் காலப்பகுதியில் இருந்து இழப்பீடுகளைக் கோரிய விண்ணப்பதாரர்களைக் கொண்டுள்ளது என்பது குறித்து வயதுப்பகுப்பாய்வொன்றைச் சமர்ப்பிப்பதற்கு அலுவலகம் தவறியிருந்ததுடன் இதில் 4,917 கோவைகளிற்கு உரிய ரூபா 1,802 மில்லியன் தொகையான இழப்பீட்டைச் செலுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் எஞ்சிய 3,709 மில்லியன் அளவிற்கு உரிய இழப்பீட்டைச் செலுத்துவதற்குள்ள தொகையை மதிப்பீடு செய்திருக்கவில்லை.

நாட்டின் பொருளாதார, சமூக, உள ரீதியான மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்கு பங்களிக்கும் ஆரோக்கியமான தேசத்தை உருவாக்கும் தொலைநோக்குப் பார்வையுடன் செயற்படும் சுகாதார அமைச்சால் பின்வரும் செயற்பணிகளும் செயற்பாடுகளும் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்தது.

| | |
|---|---|
| **செயற்பணி** | பொதுமக்கள் சுகாதார சேவைகள் தொடர்பான கொள்கைகள் மற்றும் நியமங்களை உருவாக்குதல் |
| | பொது சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்தை மேம்படுத்தவதற்கான வேலைத்திட்டங்களை தொகுத்து செயற்படுத்துதல் |
| | சர்வதேச தனிமைப்படுத்தல் மற்றும் சுகாதாரத்திற்குரிய விதிமுறைகளை செயல்படுத்துதல் |
| | தனியார் மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ மையங்களின் தரம், நியமங்கள் மற்றும் விலைகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் கண்காணித்தல். |
| | இலாபமீட்டாத சமூக மருத்துவ பராமரிப்பு நிறுவனங்களின் பணியை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல். |
| | ஆட்கொல்லி, தொற்று மற்றும் தொற்றா நோய்களின் தரக் கட்டுப்பாடு, தடுப்பு மற்றும் சிகிச்சைக்கான நடவடிக்கைகளை ஆரம்பித்தல். |
| | பாடசாலை சுகாதார நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புடைய மருத்துவ மற்றும் வாய்வழி சுகாதார சேவைகளை செயல்படுத்துதல். |
| | தோட்டத் துறைக்கான சுகாதார சேவைகள் தொடர்பான பணிகள் |
| | பொது சுகாதாரம் |
| | திரிபோஷா விநியோக வேலைத்திட்டங்களை செயற்படுத்துதல் |
| | அனைத்து மருத்துவமனைகள் மற்றும் மருத்துவமனை ஊழியர்களின் நிர்வாகம் (மாகாண சபைகளின் கீழ் உள்ள மருத்துவமனைகள் தவிர) |
| | பயிற்சி நடவடிக்கைகளை செயற்படுத்தும் அனைத்து திணைக்களங்கள் மற்றும் அச்சேவைகளின் நிர்வாகம் மற்றும் அமைப்புகள் மற்றும் ஏனைய உயர் மருத்துவக் கல்வி நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்தல் |
| | தேசிய இரத்த மாற்று சேவைகள் தொடர்பான பணிகள் |

மருந்து உற்பத்தி, இறக்குமதி மற்றும் விநியோக நடவடிக்கைகள்

இலங்கை மருத்துவ சேவை தொடர்பான நிர்வாகம் மற்றும் ஆளணி முகாமைத்துவம்

மருத்துவ மற்றும் குறைநிரப்பு மருத்துவ சேவைகளின் தரம் மற்றும் திறன்களை மேம்படுததுவதற்கு தேவையான பயிற்சி வாய்ப்புகளை உருவாக்குதல்.

சுகாதாரத் துறையுடன் தொடர்பான ஆராய்ச்சிகளை விரிவுபடுத்த புதிய உத்திகளை அறிமுகப்படுத்துதல

தேசிய சுகாதார காப்புறுதி வேலைத்திட்டங்கள் தொடர்பான நடவடிக்கைகள்

2023 ஆம் ஆண்டில், மேற்குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக சுகாதார அமைச்சிற்கு ரூபா 377,029 மில்லியன் நிதி ஒதுக்கீடு பாராளுமன்றத்தால் வழங்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 319,318 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

| அமைச்சின் செலவு | | வருடம் | | |
|---|---|---|---|---|
| | | 2021 | 2022 | 2023 |
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| தேறிய நிதி ஒதுக்கீடு | - மீண்டெழும் | 134,490 | 211,148 | 312,526 |
| | - மூலதனம் | 42,371 | 45,438 | 64,503 |
| | - மொத்த தேறிய ஒதுக்கீடு | 176,861 | 256,586 | 377,029 |
| ஒதுக்கீட்டுப் பயன்பாடு | - மீண்டெழும் | 121,632 | 207,456 | 293,254 |
| | - மூலதனச் செலவினம் | 33,144 | 33,396 | 26,064 |
| | - மொத்த ஒதுக்கீட்டுப் பயன்பாடு | 154,776 | 240,852 | 319,318 |
| சேமிப்பு | - மீண்டெழும் | 12,858 | 3,692 | 19,272 |
| | - மூலதனம் | 9,227 | 12,042 | 38,439 |
| | - மொத்த சேமிப்பு | 22,085 | 15,734 | 57,711 |

அட்டவணை இல 2.12: சுகாதார அமைச்சின் 2021, 2022, 2023 ஆம் ஆண்டுகளுக்கான ஒதுக்கீடும் பயன்பாடும்

ஆதாரம் - சுகாதார அமைச்சின் நிதிக் கூற்றுக்கள்

மேற்குறிப்பிடப்பட்டுள்ள செயற்பணிகளையும் செயற்பாடுகளையும் நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது வெளிப்பட்ட முக்கியமான மற்றும் பொருண்மையான கணக்காய்வு அவதானிப்புகள் தொகுக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

# கணக்காய்வு அவதானிப்புகள்

## சுகாதார அமைச்சு

**தேசிய சுகாதார உபாய வழி கூட்டிணைந்த திட்டம்**

தேசிய சுகாதார உபாய வழி கூட்டிணைந்த திட்டம் 2016-2025 இன் படி, சுகாதார நிர்வாக மற்றும் மனிதவள சுகாதாரம் தொடர்பான தலைப்பில் 02 அடிப்படைப் பிரிவுகளில் இனங்காணப்பட்ட சுகாதார மனிதவள பிரச்சனைகளாக ஆகக்குறைந்த ஊழியர்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளல் நியதிகளின் (Norms), தரப்படுத்தப்பட்ட அளவீடுகளின் படி, (சேவைத் தேவைப்பாடு/ பணிச் சுமை/ மக்கள் தொகை/ புவியியல் மற்றும் பிராந்தியக் காரணிகள்/ வெளிநாட்டுத் தரங்கள் போன்றவை) திருத்தப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இப் பிரச்சனைகளுக்காக பரிந்துரைக்கப்பட்ட மூலோபாயங்களாக சுகாதார மனிதவள கொள்கை விருத்தி செய்யப்பட வேண்டும் ((திட்டமிடல் / ஆட்சேர்ப்பு/ பயிற்சியில் ஈடுபடுத்தல்/ தொழிற்துறை விருத்தி குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் படி, மனிதவள மூலோபாய திட்டத்தை விருத்தி செய்வதற்கு 2023 ஆம் ஆண்டின் போது திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மூன்றாவது வரைவு அறிக்கை தயாரிக்கப்பட்டு நிபுணத்துவ கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காக உரிய தரப்பினருக்கும் உலக சுகாதார அமைப்பின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காகவும் அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதி வரையிலும் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**இலத்திரணியல் பட பாதுகாப்பு, தொலைத்தொடர்பு ஒளிக்கதிர் தகவல் முறைமை ஒன்று ஸ்தாபிக்கப்படுதல்**

கோரப்படாத செயற்திட்ட முன்மொழிவின் பிரகாரம், சுகாதார அமைச்சின் செயலாளர், சீன கம்பனி மற்றும் மலேசிய கம்பனிகளுக்கிடையே 2019 ஒக்டோபர் 02 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் இலத்திரனியல் பட பாதுகாப்பு, தொலைத்தொடர்பு ஒளிக்கதிர் தகவல் முறைமை ஒன்று (PACS/RIS) 20 வைத்தியசாலைகளுக்குள் ஸ்தாபிக்கும் செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. இச் செயற்திட்டம் தொடர்பாக அமைச்சு மட்டத்தில் எந்தவொரு சாத்தியவள ஆய்வும், கிரய மதிப்பீடும் தயாரிக்கப்படவோ அல்லது நலன் பகுப்பாய்வோ மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அவ் வைத்தியசாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

உத்தேசிக்கப்பட்ட 20 வைத்தியசாலைகளில் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கான கிரயம் ஐ.அ. டொலர் 33.25 மில்லியன் ஆக இருந்ததுடன் அத்

தொகை ஐ.அ. டொலர் 1.31 மில்லியனான வட்டியுடன் 11 வருடங்களில் செலுத்த வேண்டியிருந்தது. இச் செயற்திட்டத்தின் முதலாம் கட்டமாக 05 வைத்தியசாலைகளில் முறைமைகளை ஸ்தாபிக்கப்படுவது 03 மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்படுவதற்கும் எஞ்சிய 15 வைத்தியசாலைகளில் முறைமைகளை ஸ்தாபிக்கப்படுவது 02 வருடங்களுக்குள் பூர்த்தி செய்யப்படுவதற்கும் இணங்கியிருந்த போதிலும் செயற்திட்டம் குறித்த கால வரையறைக்குள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வில்லை. எவ்வாறெனினும் உத்தேசிக்கப்பட்ட காலவரையறைக்குள் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிராமையால் கடன் தவணைப்பணத்தைச் செலுத்துவதற்காக உடன்பட்ட காலவரையறை, தவணைப்பணம் மற்றும் வட்டி உள்ளடங்கலான பட்டோலை திருத்தப்பட்டு உடன்படிக்கை திருத்தப்பட வேண்டியதாகக் காணப்பட்ட போதிலும் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர் இது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2022 யூலை மாதம் 05 பேரை உள்ளடக்கிய குழு ஒன்றின் மூலம் 05 வைத்தியசாலைகளுக்குரிய இச் செயற்திட்டத்தின் முதலாவது தவணைப் பணம் செலுத்தப்பட முன்னர் செயற்திட்டத்தின் செயற்பாட்டு நிலை தொடர்பாக மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இதன் பிரகாரம் 4 மதிப்பீட்டுக் குறிகாட்டிகள் திருப்தியற்ற நிலையில் உள்ளதாகவும் (Not Satisfactory), 38 குறிகாட்டிகள் பகுதியளவில் மாத்திரம் திருப்தியற்ற நிலையில் உள்ளதாகவும் (Partially Satisfactory), குறிப்பிடப்பட்டிருந்தது. இவ் அறிக்கையின் பிரகாரம், 16 குறிகாட்டிகள் மாத்திரமே திருப்திகரமான நிலையில் உள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. ஒட்டுமொத்தமாக இச் செயற்திட்டம் 05 வைத்தியசாலைகளில் அமுல்படுத்தப்படுதல் திருப்பதிகரமான நிலையில் இல்லாமையை இம் மதிப்பீட்டின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. இக் குழுவின் பரிந்துரையின் படியும் செயற்திட்ட நோக்கெல்லை மற்றும் அமுல்படுத்தும் கால வரையறை முற்றாக மாற்றப்பட்டதன் அடிப்படையில் உடன்படிக்கையிடப்பட்ட கொடுப்பனவுப் பட்டோலையை அடிப்படையாகக் கொண்டு தவணைப்பணம் செலுத்துவதற்கு எந்தவித இயலுமையும் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. 2023 மார்ச் 20 ஆம் திகதி நடாத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தில் செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்ட 05 வைத்தியசாலைகளுக்கு உரித்தான பகுதிக் கொடுப்பனவொன்று வழங்கப்படுவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அமைச்சால் நியமிக்கப்பட்ட 05 பேர் கொண்ட குழுவின் பரிந்துரைக்கமைய, அமைச்சரவை அங்கீகாரமோ அல்லது தேசிய வரவு செலவுத் திட்டத்

திணைக்களத்தால் முன்வைக்கப்பட்ட கருத்துத் தெரிவிப்புகளோ கருத்திற்கொள்ளப்படாது 20 வைத்தியசாலைகளிலும் செயற்திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்தியதை அடுத்து வரும் ஆண்டின் போது செலுத்தப்பட வேண்டிய தவணைப்பணமான ஐ.அ. டொலர் மில்லியன் 3.02 ஆன முழுமையான தவணைப்பணமும் இச் செயற்திட்டத்தில் செலுத்தப்பட்டிருந்தது.

**விரலடையாள இயந்திரங்களின் பயன்படுத்தப்படாமை**

அமைச்சால் அமைச்சிற்கு, அதற்கு உரித்தான வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்காக ரூபா 31.08 மில்லியன் செலவில் ஸ்தாபிக்கப்பட்ட 213 விரலடையாள இயந்திரங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டதுடன் திறைசேரிச் செயலாளரால் 2017 யூலை 01 ஆம் திகதி முதல் அமுலாக்கப்படாவிடின் தற்போதைய சம்பளத்திற்கு அமைய மேலதிகப் படிப்பணத்தைச் செலுத்தாது விடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தது. எனினும், இதற்கு மாறாக தற்போதைய சம்பளத்தின் அடிப்படையில் 2023 ஆம் ஆண்டின் போதும் மேலதிக நேர மற்றும் விடுமுறை தினக் கொடுப்பனவாக ரூபா 38,236.83 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், மேலதிக நேர மற்றும் விடுமுறை தினக் கொடுப்பனவாக செலவிடப்பட்ட மொத்தத் தொகை சம்பளத்தின் கிரயத்தில் 72 சதவீதமாகும்.

**நிலைபேறான அபிவிருத்திக் குறிகாட்டிகள்**

சுகாதார அமைச்சிற்குரிய 31 நிலைபேறான அபிவிருத்திக் குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருந்ததுடன் அதில் 13 குறிகாட்டிகளுக்காக 2023 ஆம் ஆண்டுக்குரிய முன்னேற்றம் அறிக்கையிடப்படவில்லை. முன்னேற்ற அறிக்கையிடப்பட்ட 12 குறிகாட்டிகளுக்கு உரிய குறிகாட்டிகளின் தேவையான செயலாற்றல் மட்டத்தை அடைந்திருக்கவில்லை.

**பதவி வெற்றிடங்கள்**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கமைய, அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள வைத்தியசாலைகள், நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளுக்குரிய 2023 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட ஒட்டுமொத்த பதவியணியினர் 95,948 உம் அத்திகதியில் உள்ளபடியான பதவியணியினர் 81,915 உமாகக் இருந்தது. இதன் படி, ஒட்டுமொத்த பதவியணியின் 14,033 வெற்றிடங்கள் காணப்பட்டன. டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக 2017 ஆம் ஆண்டின் போது ஒப்பந்த அடிப்படையின் கீழ் முறையற்ற விதத்தில் சேர்க்கப்பட்டிருந்த 1,103 கள நுளம்பு ஒழிப்பு உதவியாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் பதவியணியினர்கள் தகவல்களில் 05 பதவிகள் மாத்திரமே உள்ளடக்கப்பட்டிருந்தன. மாதாந்தம் ரூபா 27,000 அளவிலான படியொன்றின் கீழ் சேவையில்

ஈடுபடுத்தப்பட்டிருந்த இப் பதவியணியினர்களின் எண்ணிக்கைக்காக முறையான அங்கீகாரம் 2024 மார்ச் வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**நிபுணத்துவ மருத்துவ சேவை**

அமைச்சரவை அங்கீகாரத்திற்கமைய 58 விசேட துறைகளுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட வைத்திய நிபுணர்களின் எண்ணிக்கை 2837 ஆக இருந்த போதிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 50 விசேட துறைகளுக்குரிய அவ் எண்ணிக்கை 2740 ஆக இருந்தது. 08 விசேட வைத்திய நிபுணத்துவத் துறைகளுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட 66 பதவிகளுக்காக எந்தவொரு வைத்தியரும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறு அமைச்சரவை அங்கீகரித்த பதவிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டின் நவம்பர் வரையில் 35 நிபுணத்துவத் துறைகளுக்குரிய 972 வைத்திய நிபுணர்களது பற்றாக்குறை நிலவுவதாகவும் 12 விசேட துறைகளுக்காக 113 நிபுணத்துவ வைத்தியர்கள் மிகையாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமையும், அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்ட சந்தர்ப்பத்தின் போது இனங்காணப்படாதிருந்த மற்றும் பின்னர் அந்த விசேட துறைகளுக்காக நிபுணத்துவ வைத்தியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுவதற்காக முறையான அங்கீகாரமேனும் பெறப்படாது 12 விசேட துறைகளுக்காக 141 நிபுணத்துவ வைத்தியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டது. மேலும், அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படுவதற்கான அடிப்படையான நோக்காக வைத்தியர்களின் விருப்பின்றி தேவைப்பாட்டின் அடிப்படையில் விசேட துறைகளின் தேர்வு தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அமைச்சால் இதற்கு இணங்காது வைத்தியர்களின் விருப்பிற்கமைய விசேட துறைகளைத் தேர்ந்தெடுப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

## நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் செயற்படுத்துதலைக் கணக்காய்வு செய்தல் - இலங்கையில் வலுவான மற்றும் மீளத்தக்க தேசிய பொது சுகாதார முறைமை (நிஅஇ 3.ஈ தொடர்பானது) தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செயலாற்றல் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகள்

**தேசிய சுகாதார பேரவை**

தேசிய சுகாதார சபையின் சுகாதாரச் சிக்கல்களை உயரிய அளவில் கலந்துரையாடுவதற்காக முக்கிய தளமாக இருந்த போதிலும், அது 2004 முதல் கூட்டப்பட்டிருக்கவில்லை. இது தேசிய மட்டத்திலும் உப தேசிய மட்டத்திலும் பிரிவுகளுக் கிடையே ஒத்துழைப்பிற்கான அரசியல் அர்ப்பணிப்பை உறுதிப்படுத்துவதற்காக போதிய பொறிமுறை ஒன்று இன்மைக்கு இது காரணமாகியிருந்தது.

தேசிய சுகாதார சபை போன்ற உயர் நிலையிலான சுகாதார அபிவிருத்தி நிறுவனம் ஒன்று இன்மையால் பல்வேறு தேசியச் செயற்பாட்டுக் குழு மற்றும் மேசிய செயலாற்றல் அணிகள் காலத்திற்குக் காலம் உருவாக்கப்பட்டன.

**சுகாதார பாதுகாப்பிற்கான தேசிய செயல்நடவடிக்கைத் திட்டம்**

சுகாதாரப் பாதுகாப்பிற்கான தேசிய செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக தமக்குத் தெரியாது எனவும் இதற்காகப் பொறுப்பு அல்ல எனவும் எட்டு நிறுவனங்கள் குறிப்பிட்டிருந்தன. மேற்குறித்த நிலை சர்வதேச சுகாதார பிரமாணங்கள் (IHR) மூலம் நிர்ணயிக்கப்படும் நிலையை அடைந்துகொள்வதற்காகச் செயற்படுகையில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கிடையே ஒருங்கிணைப்பு இன்மை அவதானிக்கப்பட்டது.

தேசிய சுகாதார அபிவிருத்திக் குழு என்பது 1980 இல் பாராளுமன்றத்தால் அடையாளம் காணப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட சுகாதார அபிவிருத்தி வலையமைப்பின் இடைநிலை மட்டத்தினதாகும். இது சுகாதாரத் துறைக்கு உரித்தான கொள்கை ரீதியான விடயங்களைக் கலந்துரையாடுவதற்காக முக்கியமான தளமாகும். சுகாதாரச் செயலாளரின் பங்கேற்பின் கீழ் ஒரு வருடத்திற்கு (NHDC) இரு குழுக் கூட்டங்கள் நடாத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில், வருடத்திற்கு ஒரு கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**நிறுவன இடர் முகாமைத்துவ திட்டம்**

தேசிய இடர் முகாமைத்துத் திட்டம் IDMP (2013-2017) அடிப்படையில் அனைத்து அமைச்சுக்கள், அரச நிறுவனங்கள், திணைக்களங்கள் மற்றும் முகவராண்மைகளுக்கு நிறுவன ரீதியான இடர் முகாமைத்துவ திட்டம் (IDMP 2021) தயாரிப்பதற்கான வழிகாட்டல்களை இடர் முகாமைத்துவ நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், இடர் முகாமைத்துவத்திற்காக குறித்த நிறுவனங்களை ஒருங்கிணைப்பது போதுமானதாக இருக்கவில்லை. ஐடிஎம்பி 2021 ஐ தயாரிப்பதற்கான வழிகாட்டல்கள் பழைய தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தின் அடிப்படையில் அமைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. நிறுவன ரீதியான இடர் முகாமைத்துவ திட்டம் (IDMP 2021) தயாரிக்கப்படுவது தொடர்பான வழிகாட்டல் பழைய தேசிய இடர் முகாமைத்துவத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டதென அவதானிக்கப்பட்டது.

**தடுப்பு பராமரிப்பு மற்றும் புலம்பெயர் சுகாதார அலகுகள்**

சர்வதேச சுகாதார ஒழுங்குமுறைகளுக்கு (IHR 2005) இணங்க சர்வதேச மட்டத்தில் பரவும் நோய் நாட்டிற்குள் வருவதற்கான இயலுமை தொடர்பாக தடுப்பு பராமரிப்பு மற்றும் புலம்பெயர் சுகாதார அலகுகளில் விழிப்புணர்வு

தொடர்பாக தேசிய சுகாதாரக் கொள்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. காலநிலை மாற்றம் மற்றும் காலநிலை முரண்பாடுகள் காரணமாக சுகாதாரத்திற்கு ஏற்படும் பாதிப்பைக் குறைப்பதற்கான பொறிமுறை ஒன்றை உருவாக்குவது அவசியமாகும்.

**அவசர விபத்துகள் மற்றும் அவசர சந்தர்ப்பங்கள்**

அவசர விபத்துக்கள் மற்றும் அவசரநிலைகள் தொடர்பாகத் தடுக்கக்கூடிய இறப்பு மற்றும் நோயுற்ற தன்மையைக் குறைப்பதற்காக சுகாதார துணைச் சேவைகளின் அனைத்துத் தராதரங்ககளிலும் வியாபித்த அவசர விபத்து, அவசர சந்தர்ப்பங்கள் மற்றும் திடீர் சிகிச்சை சேவை வழங்கலை உறுதிப்படுத்துவது அவசியமானதாகும்.

**சுகாதார பாதுகாப்பிற்கான தேசிய செயல்நடவடிக்கைத் திட்டம்**

சுகாதார பாதுகாப்பிற்கான தேசிய செயல்நடவடிக்கைத் திட்டம் (NAPHS) இன் பிரகாரம், சுகாதார அமைச்சு, கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் (DAPH) மற்றும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு (Mo FAR) ஆகியவற்றால் மனித மற்றும் விலங்குத் துறைகளுக்கு இடையே பல்துறை ஒருங்கிணைப்பிற்கான முறைமையொன்றை உருவாக்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. AMR தொடர்பான தேசிய ஆலோசனைக் குழுவின் மூலம் ஒரு பொறிமுறை உருவாக்கப்பட்டிருந்த போதிலும் முக்கியமாக நிதி கிடைக்காமையால் AMR மூலோபாய செயல்நடவடிக்கைத் திட்டத்தை எதிர்பார்த்த அளவில் அமுல்ப்படுத்தப்பட முடியாதிருந்தது.

**நுண்ணுயிர் பாதுகாப்பு அவதானிப்பு மற்றும் கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்**

2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை விலங்கின உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் (DAPH) மூலம் பண்ணைகளில் தொற்றுக் கட்டுப்பாட்டு கண்காணிப்பை வலுப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. விலங்கின உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் (DAPH) ஆல் கோழி வளர்ப்பு பண்ணைகளில் உயிர் பாதுகாப்பு அவதானிப்பும் கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், வணிக கால்நடைகள் மற்றும் கோழி பண்ணைகளில் இது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**பிரமாணங்கள் விதிக்கப்படல்**

மாதிரி போக்குவரத்து முறைமையை மேம்படுத்துவதற்கும், படிப்படியாக தேசிய நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரிப்பதற்காகவும் ஒவ்வொரு முக்கிய சோதனைகளுக்காக மாதிரி அனுப்பிவைக்கப்படும் வலையமைப்பொன்று தொடர்பாக பிரமாணங்களை விதிப்பதற்காக 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை திட்டமிடப்பட்டிருந்த போதிலும், இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**இடர் ஆயத்தம் மற்றும் பதில் திட்டத்தை நாளதுவரையாக்குதல்**

2021 ஆம் ஆண்டின் இறுதிக்குள் தற்போதைய இடர் ஆயத்தம் மற்றும் பதிலளிப்புத் திட்டத்தை நாளதுவரையாக்குவதற்கு மருத்துவ வழங்கல் பிரிவால் திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும், குறிப்பிட்ட காலத்திற்குள் அந்தப் பணியை பூர்த்திசெய்வதற்கு மருந்து வழங்கல் பிரிவிற்கு (MSD) இயலாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**பயன்பாட்டு பயிற்சிகள் வருடாந்த கலந்துரையாடல**

பயன்பாட்டு பயிற்சிகள் வருடாந்த கலந்துரையாடல் (Annual Desktop Simulation Exercise) மூலம் தயார்நிலை மற்றும் பதிலளிப்பைத் தெரிவிக்கும் இயலுமையை மதிப்பிடுவது ஆரம்பிக்கப்படுவதற்கு மருந்து வழங்கல் பிரிவின் மூலம் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், இச் செயற்பாடு 2023 மார்ச் 21 வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிராமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 1990 – சுவசரிய மன்றம்

**விதிகளின் தயாரிப்பு**

2018 இன் 18 ஆம் இலக்க 1990 சுவசரிய மன்ற அதிகாரச்சட்டத்தின் 18 (5) மற்றும் 25(1) ஆம் பிரிவின் கீழ் மன்றத்தால் நிதியத்தில் இருந்து பணம் செலுத்தப்படுவது தொடர்பாகவும் விதிகளைத் தயாரிக்கக் கூடிய முக்கிய 05 விடயங்களில் எந்தவித விடயம் தொடர்பாகவும் விதி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்கமைப்பு சபை

**தனியார் மருத்துவ நிலையங்களைத் தரப்படுத்தும் நடவடிக்கைகள்**

2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிலைய (பதிவு) சட்டத்தின் படி, குறித்த தனியார் மருத்துவ நிறுவகங்களால் வழங்கப்படும் வசதிகளுக்கமைய அவற்றை வகைப்படுத்தும் முறையும் தரப்படுத்தும் உத்தேச முறையைச் செயற்படுத்துவது குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், 2023 திசெம்பர் 31 வரையிலும் தனியார் மருத்துவ நிலையங்களைத் தரப்படுத்தும் நடவடிக்கைகள் பூர்த்தியடைந்திராததுடன் இதன் காரணமாக கட்டணங்களை ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கைகள் தடைப்பட்டிருந்தன.

**கட்டளைகள் தயாரித்தல்**

2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிலைய (பதிவு) சட்டத்தின் 18 (2) (எ) மற்றும் 18(2)(1) ஆம் பிரிவின் படி, “தொடர்புடைய அல்லது அதிருப்திக்கு உட்படும் நபர் ஒருவரால் ஏதேனும் தனியார் மருத்துவ நிறுவனத்திற்கு அல்லது அதனுடன் தொடர்புபட்ட நபரொருவருக்கு எதிராக சமர்ப்பிக்கப்படும் ஏதேனுமோர் முறைப்பாட்டை

ஏற்கையிலும் அம் முறைப்பாட்டை இறுதியாக தீர்க்கையிலும் அம் முறைப்பாட்டை இறுதியாக தீர்க்கையில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை அல்லது செயல்முறை தொடர்பாக அமைச்சரால் கட்டளை தயாரிக்கப்படக் கூடிய போதிலும் அமைச்சரால் அவ் விடயங்கள் தொடர்பில் கட்டளைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## இலங்கை திரிபோஷ கம்பனி

**பணம் வழங்கப்பட்ட நோக்கத்திற்கு பயன்படுத்தியிராமை**

உத்தேசிக்கப்பட்ட "சயிலோ" அமைப்பை நிர்மாணிப்பதற்காக ரூபா 192.09 மில்லியன் உலக உணவுத் திட்டத்தால் (WFP) 2021 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்ததுடன், அத் தொகை வழங்கப்பட்ட நோக்கம் எய்தப்படாது நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

**1/20 படிப்பணம் பெற்றுக்கொள்ளல்**

அரச விடுமுறை தினத்தில் பணியாற்றியமைக்காக ஒன்றிணைந்த மாதாந்தச் சம்பளத்தில் 1/20 இற்கு சமமான தொகையைப் பெற்றுக்கொள்வதற்காக நாளொன்றுக்கு 08 மணித்தியாலங்களுக்குக் குறையாத காலப்பகுதி பணியாற்றப்பட வேண்டிய போதிலும் இக் கொடுப்பனவைப் பெற்றிருந்த கம்பனியின் சகல உத்தியோகத்தர்களும் 08 மணித்தியால சேவைக் காலத்திற்கு பணியில் ஈடுபட்டிருக்கவில்லை. இதன் படி, 2023 ஆம் ஆண்டிற்காக ரூபா 1.62 மில்லியன் தொகை விடுமுறைத் தினப் படிப்பணமாகப் பெறப்பட்டிருந்தது. சில உத்தியோகத்தர்கள் குறித்த விடுமுறை தினத்தில் வேலைக்கு சமூகமளித்திருக்காத போதிலும் அந் நாட்களுக்காகவும் இப் படிப்பணத்தைப் பெற்றிருந்தனர். மேலும், ஒவ்வொரு பணிக்காகவும் ஒரு கொடுப்பனவை/ சலுகையை மாத்திரமே உரித்தாக்க வேண்டிய போதிலும் இக் கொடுப்பனவிற்கு மேலதிகமாக பணிபுரியும் ஒவ்வொரு விடுமுறை தினத்திற்காகவும் பதில் விடுமுறை அல்லது பதில் விடுமுறைத் தினக் கொடுப்பனவு கம்பனியால் வழங்கப்பட்டிருந்தது.

## போதனா வைத்தியசாலைப் பிரிவு – ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை

**குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்**

இது வரையில் சுகாதார அமைச்சின் கீழ் இயங்கிய வைத்தியசாலை முறைமைக்குள் நோயாளிகளின் நுரையீரல் மற்றும் இதயம் தற்காலிகமாகவும் பாரியளவிலும் செயலிழக்கும் சந்தர்ப்பத்தின் போது நோயாளிக்கு பொருத்தப்பட்டு பயன்படுத்தப்படும் Extra- Corporeal Membrane Oxygenation (ECMO) பெயர் கொண்ட இரு இயந்திரங்கள் காணப்பட்டன. இவற்றில் ஒரு இயந்திரம் ரூபா 13.5 மில்லியன் செலவில் ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் இதயம் மற்றும் நுரையீரல் பிரிவிற்கு 2015 பெப்ரவரி 05 ஆம் திகதி வைத்தியசாலையால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இவ் இயந்திரம் 2023 மே

31 ஆம் திகதி வரை 05 வைத்தியசாலைகளுக்கிடையே பரிமாற்றப்பட்டு 04 நோயாளிகளுக்காக மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையும் 2021 செப்தெம்பர் 28 ஆம் திகதி முதல் இவ் இயந்திரத்தைப் பொறுப்பேற்ற கொழும்பு தேசிய வைத்தியசாலையால் எந்த நோயாளிக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், 2022 ஆம் ஆண்டின் போது இயந்திரத்திற்காக முறையே ரூபா 13.3 மில்லியன் கிரயமான 61 நுகர் பொருட்களும், ரூபா 12.2 மில்லியன் கிரயமான 08 மேலதிக உதிரிப்பாக அலகுகளும் வைத்தியசாலையால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

## மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம்

**மரண சாசனத்தின் மூலம் அன்பளிப்புச் செய்யப்பட்ட காணி**

கொடக்கம – மாலம்பே பிரதான வீதி மற்றும் வல்கம – அத்துருகிரிய வீதியின் எல்லையில் அமைந்துள்ள 02 ஏக்கர் 02 றூட் 29.70 பேர்ச் பரப்பளவை உடைய காணி 1998 ஏப்ரல் 01 ஆம் திகதிய 4205 ஆம் இலக்க உயிலின் மூலம் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் அதன் பெறுமதி அண்ணளவாக ரூபா 1,074 மில்லியன் ஆகும். இக் காணியின் சட்டரீதியான உரிமையாளர் 2022 பெப்ரவரி 17 ஆம் திகதி மரணமடைந்திருந்ததுடன் அது தொடர்பாக 2022 பெப்ரவரி 21 ஆம் திகதி எழுத்து மூலம் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. சிவில் வழக்கு ஏற்பாடுகள் கோவையின் 516 ஆம் பிரிவின் பிரகாரம், இறுதி உயிலுக்குரியவர் மரணமடைந்த பகுதிக்குரிய மாவட்ட நீதிமன்றத்திற்கு மூன்று மாதங்களுக்குள் (03) அவ் உயிலின் மூலப்பிரதியைச் சமர்ப்பித்து அதனை மரணமடைந்தவரின் இறுதி உயிலாக சிவில் வழக்கு ஏற்பாட்டுக் கோவையின் 524 ஆம் பிரிவின் பிரகாரம் எதிர்ப்புகள் எதுவும் இன்றி உறுதியை மாற்றிக்கொள்ள வேண்டும். எனினும், காணியின் சட்டரீதியான உரிமையாளர் மரணமடைந்து 2024 மார்ச் 31 ஆந் திகதி வரையில் 25 மாத காலம் கடந்திருந்த போதிலும் இலக்கம் 4205 ஆம் இலக்க இறுதி உயில் மரணமடைந்தவரின் இறுதி உயிலாக எதிர்ப்பு இன்றி ஏற்றுக்கொள்ளப்படுவதற்காக மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

## மஹரகம அபெக்ஷா வைத்தியசாலை

**விளைவற்ற சொத்துக்கள்**

மஹரகம அபெக்ஷா வைத்தியசாலையால் மருந்துகளை களஞ்சியப்படுத்துவதற்காக குளிரூட்டி கொள்கலன் ஒன்று ரூபா 5.4 மில்லியன் செலவில் 2018 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வைத்தியசாலை வளவில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த குளிரூட்டல் கொள்கலன் வைத்தியசாலையின்

தேவைப்பாடுகளுக்கு இணங்கும் வகையில் தயாரிக்கப்பட்டிராமை குறிப்பிடப்பட்டு மருந்தாளர்களால் தொடரச்சியாக அந்த மருந்துகளைக் களஞ்சியப்படுத்துவது நிராகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், மருந்தாளர்களின் தேவைப்பாட்டைக் கருத்திற் கொண்டு மேலும் ரூபா 2.7 மில்லியன் செலவிடப்பட்டு 2022 நவம்பர் 28 ஆந் திகதி அதன் நவீனமயமாக்கல் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பான தொழில்நுட்ப அறிக்கையொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு 16 மாதம் அளவில் தாமதிக்கப்பட்டு 2024 மார்ச் 25 ஆந் திகதி பெறப்பட்டிருந்தது. எனினும் 2024 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் வைத்தியசாலையால் அதனை மருந்துக் களஞ்சியப்படுத்தலுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆகையால் ரூபா 8.1 மில்லியன் செலவில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த இக் குளிரூட்டல் கொள்கலன் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது.

## போதனா மற்றும் தேசிய வைத்தியசாலை – கொழும்பு தேசிய வைத்தியசாலை

**உணவு வழங்கல் கேள்வி வழங்கல்**

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் 2022 ஆம் ஆண்டில் வருடாந்த 05 சமைக்காத உணவுத் தொகுதிகளின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் தேசிய போட்டி மனுக் கோரல் முறையின் கீழ் தனித்தனியாக கேள்வி கோரப்பட்டிருந்தது. அப்போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஆகக் குறைந்த கேள்விப் பெறுமதியைப் பார்க்கிலும் ரூபா 51 மில்லியனால் அதிகமான கேள்வி பெறுமதிக்கு மேற்குறித்த ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கான காரணமாக ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்திருந்த கேள்விதாரரால் திருப்திகரமான சேவை ஒன்றை பெற்றுக்கொள்ளாமை மற்றும் அந் நிறுவனத்தின் நிதி ஸ்திரத்தன்மை தொடர்பாக ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தமை போன்ற விடயங்கள் அமைச்சின் பெறுகை ‘பீ’ குழுவினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்தத்தின் காலம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் பூர்த்தி செய்யப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் இவ் ஒப்பந்த காலம் 2023 மார்ச் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பான கணக்காய்வின் போது வெளிப்பட்டவாறு 2022 ஆம் ஆண்டில் வைத்தியசாலையின் உள்ளபடியான சமைக்காத உணவுப் பொருட்கள் பயன்பாடு அதன் மதிப்பீட்டில் 32 சதவீதமாக இருந்தது. இதன் படி மதிப்பீடு 68 சதவீதத்தால் அதாவது ரூபா 250 மில்லியனால் மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இவ்வாறே, ரூபா 1.2 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதியான 12 விடயப்பொருட்கள் எந்தவொரு சந்தர்ப்பத்தின் போதும் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், சமைக்காத ஐந்து உணவுப் பொருட்களின் மிகை

மதிப்பீட்டின் மூலம் மாத்திரம் மொத்த கிரய மதிப்பீட்டிற்கு மேற்கொள்ளப்பட்டிருந்த தாக்கம் 40 சதவீதத்தை விட அதிகமாக இருந்தமையும் அவதானிக்கப்பட்டது. இவ்வாறு தேவைகள் 68 சதவீதத்தால் மிகையாகக் கணிப்பிடப்பட்டிருந்தமையால் கேள்விதாரரால் வழங்கப்பட வேண்டிய செயலாற்றல் பிணைமுறியின் பெறுமதி உள்ளபடியான சமைக்காத உணவுப்பொருட்களின் தேவைப்பாட்டுடன் ஒப்பிடுகையில் 25 சதவீதம் முதல் 152 சதவீதம் வரையிலான உயர்ந்த வீச்சில் காணப்பட்டதாகவும் இதன் மூலம் இயலுமான வரை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு பெறுகைகளுக்காக நியாயமாக பங்குபற்றும் சந்தர்ப்பம் அதைரியமளிக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

## கண்டி தேசிய வைத்தியசாலை

**இருதய கதிடரைசேஷன் இயந்திரமொன்று செயலிழந்தமை**

கண்டி தேசிய வைத்தியசாலையில் இருதய நோய் பிரிவில் பயன்படுத்தப்படுகின்ற இருதய சிகிச்சைக்கான 02 கதிடரைசேஷன் இயந்திரங்கள் மூலம் நாளாந்தம் 30 நோயாளர்களுக்கு அண்ணளவானவர்களின் இருதய நோய் பரீட்சிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்ட 17 வருடங்கள் பழைமைவாய்ந்த Siemens Axiom Artis DFC Cath Lab (Machine – SN3542602626) இயந்திரம் 2023 மே 01 ஆந் திகதி முதல் செயலிழந்திருந்தது. அதனை திருத்துவது ஆக்கபூர்வமற்றதாக இருந்தமையால் இதற்குப் பதிலாக புதிய இயந்திரம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிராததன் காரணமாக நாளாந்தம் இருதய நோய்ப் பரிசோதனை 50 சதவீத அளவால் குறைவடைந்திருந்தது. 2019 ஆம் ஆண்டு முதல் 2023 மே 29 ஆம் திகதி வரை சிகிச்சைகளுக்காக 8024 நோயாளர்கள் பதிவு செய்யப்பட்டு காத்திருப்போர் பட்டியலில் இருப்பதுடன் இயந்திரம் செயலிழந்ததன் காரணமாக காத்திருப்போர் பட்டியல் மேலும் நீடிக்கின்றமை அவதானிக்கப்பட்டது.

## மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை

**டயோட் லேசர் இயந்திரம் பயன்படுத்தப்பட்டிராமை**

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பிரசவ மற்றும் நரம்பியல் நிபுணரின் கோரிக்கையில் 2019 திசெம்பர் மாதத்தின் போது ரூபா 63.9 மில்லியன் செலவில் இரட்டை 200W டயோட லேசர் இயந்திரம் (200W Dual Diode Laser Machine) கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், இயந்திரத்தின் உத்தரவாத காலம் அது பயன்படுத்தப்படுவதற்கு முன்னர் காலாவதியாகி இருந்ததுடன் மேலதிக பாகங்களை பெற்றுக்கொள்ளம் உறுதிப்பாடும் வழங்கப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக, இயந்திரம் ஸ்தாபிக்கப்படாமல்

வைத்தியசாலை பதவியணியினருக்காக உரிய விரிவான பயிற்சியும் வழங்கப்படாதிருக்கும் போது கேள்வி நிபந்தனைகளுக்கு முரணாக முழுமையான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பல்வேறு மருத்துவ நிலைமைகளுக்கு சிகிச்சை அளிக்கும் இயலுமை உள்ள பாரிய முதலீட்டுடனான இவ் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டதை அடுத்து நான்கு வருடங்கள் கடந்திருந்த போதிலும் 2024 மார்ச் வரையிலும் வைத்தியர்களால் குறித்துரைக்கப்பட்ட சிகிச்சை முறைக்காக பயன்படுத்தப்படாதிருந்தமையால் நோயாளிகளின் நலனுக்காக குறித்த இயந்திரம் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு தவறியிருந்தது.

**பயன்படுத்தப்படாத சொத்துக்கள்**

கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் இரத்தக்கசிவு வடிகட்டும் அலகு பிரிவு மற்றும் சிறுநீரக வஸ்கியூலர் மாற்றுச் சிகிச்சைப் பிரிவு ஸ்தாபிக்கப்படுவதற்காக ரூபா 790.1 மில்லியன் பெறுமதியான 08 மாடிகளைக் கொண்ட கட்டிடம் ஒன்று நிர்மாணிப்பதற்காக 2014 ஆகஸ்ட் 13 ஆந் திகதி வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2016 பெப்ரவரி 13 ஆம் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் குறித்த வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்தக் காலம் நீடிக்கப்படுவதற்கு அங்கீகாரம் வழங்கப்படும் எழுத்து மூலச் சான்றுகள் அல்லது காலம் நீடிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் வேலைகள் பூர்த்தி செய்யப்படும் திட்டம் தொடர்பாக எதுவும் கோவையில் இருக்கவில்லை. கட்டிட நிர்மாண வேலைகள் பூர்த்தியடைய முன்னர் இரத்தக்கசிவு வடிகட்டும் அலகு பிரிவிற்கும் சிறுநீரக வஸ்கியூலர் மாற்றுச் சிகிச்சைப் பிரிவிற்கும் தேவையான ரூபா 198.86 மில்லியன் மொத்தப் பெறுமதியான சத்திரசிகிச்சை மருத்துவ உபகரணங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2023 யூன் 02 கணக்காய்வுத் திகதி வரையிலும் அவை கட்டிடத்தில் ஆங்காங்கே குவித்து விளைவற்றுக் காணப்பட்டன. இரத்தக்கசிவு வடிகட்டும் அலகு பிரிவிற்கும் சிறுநீரக வஸ்கியூலர் மாற்றுச் சிகிச்சைப் பிரிவிற்கும் 2018 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 83.57 மில்லியன் பெறுமதியான 20 பொருட் தொகுதிகளுக்கு உரிய 114 வகையான சத்திரசிகிச்சை மற்றும் மருத்துவ உபகரணங்கள் 2023 யூன் 02 கணக்காய்வுத் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டதுடன் அவ் உபகரணங்கள் அனைத்தினதும் உத்தரவாதக் காலம் பயன்பாட்டிற்கு முன்பே முடிவுற்றிருந்தது.

இவ்வாறே, இவ் வைத்தியசாலையின் மருத்துவ ஆய்வுகூடப் பரிசோதனைக்காக 2017 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 16.9 மில்லியன் கூட்டுத்தொகைப் பெறுமதியான மருத்துவ

ஆய்வுகூடப் பரிசோதனைக்கான 03 உபகரணங்கள் 07 வருட காலமாக எந்தவித ஆய்வுகூடப் பரிசோதனைக்காகவும் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது.

**பயன்படுத்தப்படாத சொத்துக்கள்**

சீன உதவியின் கீழ் வைத்தியசாலைகளின் சுகாதார முறைமையை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் மூலம் நாவலப்பிட்டி மாவட்ட வைத்தியசாலைக்கு ரூபா 20.9 மில்லியன் பெறுமதியான GE Health Care/ Model/Optima XR 646 கொண்ட Digital Static X – Ray இயந்திரம் 2022 மார்ச் 29 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. அவ் இயந்திரம் ஸ்தாபிக்கப்படுவதற்காக நாவலப்பிட்டி வைத்தியசாலையால் வளாகத்தைத் தயார்படுத்துதல், வயரிங் செய்தல், மூன்று கட்ட மின் இணைப்பு மற்றும் மின் வயர் இணைத்தல் போன்றவற்றிற்காக ரூபா 19.9 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் இயந்திரம் நோயாளிகளின் சிகிச்சைக்காக 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பயன்படுத்த முடியாதிருந்தது.

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபை

**தொழிற்துறைக் கட்டணம்**

1999 ஆம் ஆண்டு முதல் அமுலில் உள்ள தொழிற்துறைக் கட்டணங்களில் 0.15 சதவீதமான சேவைக் கட்டணத்தை மாத்திரம் அறவிடும் முறையின் படி, 2023 பதவியணியினருக்கு செலுத்தப்பட்டிருந்த மொத்த தொழிற்துறைக் கட்டணமான ரூபா 601.74 மில்லியனில் சபையின் வருமானத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருந்த மொத்த சேவைக் கட்டணம் ரூபா 0.94 மில்லியனாக மாத்திரம் இருந்தது. இதற்காக பணிப்பாளர் சபைத் தீர்மானம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இதன் மூலம் திறைசேரியிடம் இருந்தோ அல்லது அமைச்சரவையிடம் இருந்தோ அங்கீகாரம் இன்றி பணிப்பாளர் சபையின் தீர்மானத்தில் மாத்திரம் உதவி வைத்தியர்கள் மற்றும் ஏனைய பதவியணியினருக்காகச் செலுத்தப்பட்ட ரூபா 60.73 மில்லியனும் உள்ளடங்கியிருந்தது.

**தொழிற்துறைக் கட்டணத்தின் மீது உழைக்கும் போதே செலுத்தும் வரி செலுத்தப்பட்டிராமை**

வைத்தியசாலையால் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடு தொடர்பாக வரி மேல்முறையீட்டு ஆணைக்குழுவால் 2024 ஏப்ரல் 10 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த அறிக்கையின் படி தொழிற்துறைக் கட்டணத்தின் மீது உழைக்கும் போதே செலுத்தும் வரி செலுத்தப்பட வேண்டியதாக வைத்தியசாலைகளுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இதன் படி, 2013/2014 ஆம் ஆண்டு முதல் 2023 திசெம்பர் வரையான காலப்பகுதிக்காக வைத்தியசாலையின் மருத்துவ மற்றும் ஏனைய பதவியணியினருக்கு செலுத்தப்பட்ட தொழிற்துறைக்

கட்டணத்தின் மீது உழைக்கும் போதே செலுத்தும் வரி கணிப்பிடப்பட்டு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு விரைவாக அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**அங்கீகாரமற்ற கொடுப்பனவுகள்**

1996 ஆம் ஆண்டின் போது அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் வெவ்வேறு தரங்கள் மற்றும் சுகாதார அமைச்சின் சமமான தரங்கள் அல்லது ஏனைய திணைக்களங்களில் சமமான பதவிகளுக்கு இடையே சம்பள விலகல் 35 சதவீதமான அளவில் பேணி செல்வதற்கு பொதுக் கொள்கை ஒன்றாக தீர்மானிக்கப்பட்டிருந்தது. இத்தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு சுகாதார அமைச்சு பொதுச் சுற்றறிக்கையின் மூலம் வைத்தியர், தாதி மற்றும் குறைநிரப்பு வைத்திய சேவையின் உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படும் மேலதிகக்கடமைப் படிகள் மற்றும் மேலதிகநேர படிகள் என்பவற்றிக்காக 2018 ஆம் ஆண்டின் போது எடுக்கப்பட்ட பணிப்பாளர் சபை தீர்மானத்தில் 2018 சனவரி 01 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையயில் மேலதிக பணிக் கொடுப்பனவாகவும் 35 சதவீதம் சேர்த்துக் கொடுப்பனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதன் படி, 2021,2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 168.43 மில்லியன், ரூபா 162.47 மில்லியன் மற்றும் ரூபா 158.07 மில்லியன் என அமைச்சரவையினதோ அல்லது பொதுத் திறைசேரியினதோ அங்கீகாரம் இன்றி செலுத்தப்பட்டிருந்தது.

## விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபை

**மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களின் கொள்வனவு**

2007 மருந்துகள் மற்றும் உபகரணங்களின் பெறுகை வழிகாட்டலின் 2.1 ஆம் 2.2 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் மருந்துகளையும் மருத்துவ உபகரணங்களையும் கொள்வனவு செய்கையில் சகல ஏலதாரர்களும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் பதிவுசெய்யப்படுவது கட்டாயமானதாகும். எனினும், இதற்கு இணங்காத வகையில் ஏல ஆவணங்களுடன் பதிவைச் சமர்ப்பித்திராத மற்றும் பதிவு காலாவதியான ஏலதாரர்களுக்கு 09 சந்தர்ப்பங்களின் போது ரூபா 5.92 மில்லியன் பெறுமதியான ஏலங்களை வழங்கியிருந்ததுடன் இது தொடர்பாக தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவின் கவனம் கோரப்பட்டிருக்கவில்லை.

## தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியம்

**அன்பளிப்புப் பணம்**

1998 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை நிதியத்திற்கு பல்வேறுபட்ட 04 செயற்திட்டங்களுக்கு

உரித்தாகக் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 13.75 மில்லியன் தொகையான அன்பளிப்புப் பணம் நோக்கத்திற்குட்பட்ட பணிகளை மேற்கொள்வதற்காக பயன்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**அன்பளிப்புகளின் குறைபயன்பாடு**

“லிட்டில் ஹாட்” செயற்திட்டம் ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலைக்காக பத்து மாடிகளைக் கொண்ட கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படுவதற்காக செயற்படும் “லிட்டில் ஹாட்” செயற்திட்டத்தின் கீழ் 2023 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 624.435 மில்லியன் தொகையான மக்கள் நிதி சேகரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், அந்நிதியத்தில் இருந்து ஆண்டின் போது ரூபா 81.39 மில்லியன் அளவில் செலவிடப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக அவ் வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைக் கட்டிடத் தொகுதியை மேம்படுத்துவதற்காக 2020 யூலை 20 ஆம் திகதி ஓர் கொடையாளி ஒருவரால் உயிலின் மூலம் வழங்கப்பட்டிருந்த ரூபா 42.03 மில்லியன் தொகையும் சத்திரசிகிச்சைக்குத் தேவையான பயன்பாட்டுப் பொருட்களின் கொள்வனவிற்காக 2023 ஆம் ஆண்டின் போது கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 11.25 மில்லியன் குறித்த பணிகளைப்புரிவதற்குப் பயன்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அபெக்ஷா வைத்தியசாலைக்காக அன்பளிப்புக் கணக்கில் ரூபா 406.24 மில்லியன் நிலவியதுடன் 2022 ஆம் 2023 ஆம் ஆண்டுகளின் போது இந் நிதியம் எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கைக்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**யாழ்பாண போதனா வைத்தியசாலையில் புற்றுநோய் அலகுகை அபிவிருத்தி செய்தல்**

2012 மே 04 ஆம் திகதிய அமப/12/0489/509/022 இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் படி, வட மாகாணத்தின் புற்றுநோயாளர்களுக்காக ஆய்வுச் செயற்திட்டம் ஒன்றை செயற்படுத்துவதற்காக தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதற்காக சுகாதார அமைச்சு, மாகாண சுகாதார அமைச்சு, தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியம் மற்றும் உதவி வழங்கும் நிறுவனமாகிய தனியார் கம்பனி ஒன்றிற்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப் பட்டிருந்தது. அதற்கமைவாக இச் செயற்திட்டத்தின் கீழ் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் கதிர்வீச்சு சிகிச்சைப் பிரிவை நிர்மாணிப்பதற்காகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் சிறுவர் சிகிச்சைப் பிரிவிற்கான மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்குகாகவும் திட்டமிடப்பட்டிருந்தது. இதன் படி, தெல்லிப்பளை வைத்தியசாலையின் நிர்மாணிப்பிற்காக குறித்த கம்பனி ரூபா 218.6 மில்லியன் உதவுதொகையாக வழங்கியிருந்தது. எவ்வாறெனினும், யாழ்ப்பாணச்

செயற்திட்டம் எனும் பெயரில் 2023 மார்ச் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியின் போது மேற்கூறிய நம்பிக்கை பொறுப்பு கம்பனியால் (யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் பிரிவை மேம்படுத்துவதற்காக) சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 72.35 தொகை உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு பயன்படுத்தப்படாது அக் கம்பனியின் பொறுப்பில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

**பொது நிதியத்தின் பயன்பாடு**

இலங்கை சுகாதார சேவையைக் கட்டியெழுப்புவதற்காக தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்திடம் பொது நிதியப் பயன்பாடு குறைவான நிலையில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது நிதிய மீதி ரூபா 729.41 ஆகக் காணப்பட்டதுடன் சட்டத்தின் நோக்கை அடைவதற்காக 2023 ஆம் ஆண்டின் போது பொது நிதியத்தில் இருந்து செலவிடப்பட்ட தொகை ரூபா 60.61 மில்லியன் அளவாகக் காணப்பட்டது. இதன் படி, நிதியத்தின் நிதிப் பயன்பாடு 8.3 சதவீதமான குறைவான நிலையில் இருந்தது.

## தேசிய அபாயகர அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை

**பொருட்களை இறக்குமதி, ஏற்றுமதி செய்வதை பதிவுசெய்தல் மற்றும் கண்காணித்தல்**

2008 இன் 1 ஆம் இலக்க போதைப்பொருள் மற்றும் உளநிலை மாற்று மருந்துகளை சட்டவிரோதமாக விற்பனை செய்யும் தரச் சட்டத்தின் 18 ஆம் பிரிவு, 31 ஆம் பிரிவு மற்றும் அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் படி ஆக்கப்பட்ட கட்டளை இலக்கம் 1653/7 – 2010 மே 10 திகதிய அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் IV ஆம் பிரிவு வளாகப் பதிவுசெய்தல் கட்டளை 9 இன் படி, பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அல்லது ஏற்றுமதி செய்வதற்கு உரிய செயற்பாடுகளை மேற்கொள்ளும் வளாகங்கள் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட நாள்முதல் ஒரு மாத காலத்திற்குள் ஒவ்வொரு அனுமதிப்பத்திரப் பெறுனராலும் அதிகாரசபையுடன் பதிவு செய்திருக்க வேண்டியதுடன் நடப்பாண்டின் போது 16 வளாகங்கள் பதிவு செய்யப்பட்டு 10 இற்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. மேலும், அதிகாரசபை உறுப்பினர்கள் ஆகக் குறைந்தது 3 மாதங்களுக்கு ஒரு முறையேனும் அனுமதிப்பத்திரப் பெறுனரின் பதிவுசெய்யப்பட்ட வளாகத்திற்குச் சென்று செயற்பாடுகள் குறித்து மேற்பார்வை செய்யவேண்டியதுடன் பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள முறை, உபகரணங்களின் பயன்பாடு, பேணப்படும் புத்தக ஆவணப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளைப் பரீட்சித்தல் வேண்டும். எவ்வாறெனினும், 2023 ஆம் ஆண்டின் போது அனுமதிப்பத்திரம் பெற்ற இறக்குமதியாளர்கள் 91 பேரின் 51 பேரின் வளாகங்கள் மாத்திரமே பரீட்சிக்கப்பட்டிருந்தன.

**அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்காது தனியார் புனர்வாழ்வு நிலையங்கள்**

2007 இன் 54 ஆம் இலக்க ஔடதங்களுக்கு அடிமையாகிய நபர்களை (சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு) சட்டத்திற்கு இணையாக வெளியிடப்பட்ட 2010 மே 12 ஆம் திகதிய 1653/19-2010 இலக்க வர்த்தமானியின் கட்டளை இல. 2 இன் படி ஔடதங்களுக்கு அடிமையாகிய நபர்களைக் கவனித்துக்கொள்வதற்கும் புனர்வாழ்வழிப்பதற்கான செயற்பாட்டிற்கான கட்டளையின் படி, அனுமதிப்பத்திரமொன்று பெறப்படாது நடாத்த இயலாது. எவ்வாறெனினும், 2023 ஆம் ஆண்டின் இறுதியில் நாட்டில் நிலவிய 26 தனியார் சிகிச்சை நிலையங்களில் 13 நிலையங்கள் மாத்திரம் அனுமதிப்பத்திரப் பதிவுகளை புதுப்பித்திருந்தனர். கணக்காய்வுத் தினமாகிய 2024 மே 10 ஆம் திகதி வரையிலும் 2023 ஆம் ஆண்டிற்காக 13 தனியார் புனர்வாழ்வழிப்பு நிலையங்கள் அனுமதிப்பத்திரப் பதிவுகளை புதுப்பிப்பதற்காக கோரியிருந்த போதிலும் அந் நிலையங்களிற்காக பாதுகாப்பு அனுமதி கிடைக்கப்பெற்றிராததன் காரணமாக 2022 ஆம் ஆண்டு முதல் இப் 13 நிலையங்களின் அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிப்பதற்கு இயலாத நிலை காணப்பட்டது.

## மருத்துவ வழங்கல்

சுகாதார துறையின் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பணி ஒன்றாக நிறைவேற்றப்படுகின்றது. சுகாதார அமைச்சின் மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் பிரிவு, மருத்துவ வழங்கல் பிரிவு, தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகாரசபை, அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் மற்றும் அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனம் இது தொடர்பாக செயற்படுகின்ற பிரதான நிறுவனங்கள் ஆகும்.

மருத்துவ வழங்கல் பிரிவினால் கடந்த 05 வருடக் காலப்பகுதியில் மருத்துவ வழங்கல்களை கொள்வனவு செய்வதற்கான செலவிடல்கள் தொடர்பான விபரங்கள் கீழே பின்வருமாறு.

| ஆண்டு, | செலவிடப்பட்ட தொகை (ரூபா. மில்லியன்) |
|---|---|
| 2019 | 54,068 |
| 2020 | 83,545 |
| 2021 | 73,638 |
| 2022 | 73,050 |
| 2023 | 143,551 |

அட்டவணை இலக்கம் 2.13 : கடந்த 05 வருடங்களின் போது மருத்துவ வழங்கல்களுக்கான செலவினம்

## தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை

**மருந்துகளைப் பதிவு செய்தல் மற்றும் பதிவுகளைப் புதுப்பிக்கும் செயற்பாடுகளின் பின்னடைவு**

2015 இன் 05 ஆம் இலக்க தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபைச் சட்டத்தின் 3(அ) பிரிவின் பிரகாரம் பொது மக்களுக்கு வழங்கப்படுகின்ற மருந்துகளின் தரம், பாதுகாப்பு மற்றும் புலனுணர்வு தொடர்பாக தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் 58 ஆம் பிரிவின் பிரகாரம் சகல மருந்துகளினதும் இறக்குமதி, உற்பத்தி, விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்வதற்காக ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவினைப் பெற்றுக் கொள்ளல் கட்டாயமாகும். எனினும் அதிகாரச சபையின் மருந்துகளைப் பதிவு செய்தல் மற்றும் பதிவினைப் புதுப்பிக்கும் செயற்பாடுகள் பின்னடைவிற்கு உட்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையில் பதிவு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாத காத்திருத்தல் கோவைகள் 1,500 இற்கு அதிகமான எண்ணிக்கையில் காணப்பட்டது. இந்த பின்னடைவுக்கு தீர்வாக அதிகாரசபை சட்டம் மற்றும் மருந்துகளை பதிவுசெய்தல் மற்றும் அனுமதிப்பத்திரத்தை வழங்கும் கட்டளைகளுக்கு முரணாக மருந்துகளில் காணப்பட்ட பதிவினை நீடித்தல் மற்றும் இருப்புக்களை விடுவிக்கும் அங்கீகாரத்தை வழங்கும் முறைமை ஒன்று பின்பற்றப்பட்டிருந்ததுடன் மருந்துகளின் தரம், பாதுகாப்பு மற்றும் புலனுணர்வு தொடர்பாக முன்னரே மேற்கொண்டு பெறவேண்டி இருந்த மீளாய்வொன்று குறித்துரைத்த பிரகாரம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**தரப் பரிசோதனைக்காக மாதிரிகள் சமர்ப்பிக்காமை**

சட்டத்தின் 59(4)(ஆ) உப பிரிவின் பிரகாரம் மருந்துகளை பதிவு செய்யும் போது அதன் தரத்தை பரீட்சிப்பதற்காக தேசிய ஔடதங்கள் தரப் பாதுகாப்பு ஆராய்ச்சிக் கூடத்திற்கு மாதிரி ஒன்று சமர்ப்பிக்க வேண்டி இருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டில் பதிவு செய்வதற்கு சமர்ப்பிக்கப்பட்ட மருந்துகளுக்கு இடையே 95 சதவீதமான மாதிரிகள் பரிசோதனைக் கூடங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மாதிரிகளின் பரிசோதனை இன்றி மருந்துகள் பதிவு செய்யப்பட்டதன் காரணமாக தரம், பாதுகாப்பு மற்றும் புலனுணர்வு தொடர்பாக உறுதிப்படுத்தபடாத மருந்துகள் நாட்டிற்குள் இறக்குமதி செய்யும் ஆபத்து காணப்பட்டமை மற்றும் தரம் தொடர்பாக பிரச்சனைகள் ஏற்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் அந்த மருந்துகளில் கவனத்தில் கொள்ளக் கூடிய அளவில் நோயாளர்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**முறையாக பதிவிலிருந்து விடுவிக்கும் நடைமுறை பின்பற்றப்படாமை**

சட்டத்தின் 109 ஆம் பிரிவிற்கு முரணாக பதிவில் இருந்து விடுவிக்கும் நடைமுறைகளைப் பயன்படுத்தி ஏற்படுகின்ற பிரச்சனைகள் தொடர்பாக பல வருட காலம் முதல் கணக்காய்வினால் அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்ட

போதும் அது தொடர்பாக கவனம் செலுத்தப்படாதிருந்ததுடன் முறையான குழுவின் அங்கீகாரத்தின் கிழ் பதிவினை விடுவிக்கும் சான்றிதழ் விநியோகிக்கும் திட்ட முறைமை ஒன்றுக்கு புறம்பாக 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது விரைவான பொறிமுறை ஒன்றின் ஓடாக (Special Pathway) உரிய குழுவிற்கு சமர்ப்பித்தல் மற்றும் மருந்துகளின் தரம், பாதுகாப்பு மற்றும் புலனுணர்வு உறுதிப்படுத்துகின்ற ஆவணங்களின் மதிப்பீடு அல்லது ஏனைய திட்ட முறைமை ஒன்று இன்றி பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மருந்துகளை விடுவிக்கும் 287 சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்டிருந்தது.

**பதிவுசெய்தலில் இருந்த விடுவிக்கும் சான்றிதழின் அடிப்படையில்**

பதிவில் இருந்து விடுவிக்கும் சான்றிதழின் அடிப்படையில் இறக்குமதி செய்யப்படுகின்ற மருந்துகளின் தரம், பதுகாப்பு மற்றும் புலனுணர்வு தொடர்பான உத்தரவாதம் அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் பெறுகை / தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கும் மற்றும் மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பாளருக்கும் கையளித்தல் அதிகாரசபையினால் தமது ஆரம்ப ஒழுங்குபடுத்தல் பொறுப்புக்களுக்கு முரணாக இருந்ததுடன் உரிய தரப்பினராலும் இந்த பொறுப்புக்கள் நிராகரிக்கப்பட்டிருந்தது. பதவியில் இருந்து விடுவிக்கும் கடிதம் விநியோகித்தல் தொடர்பாக போதியளவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதனால் சட்டத்தின் 3(அ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபை ஸ்தாபித்ததன் அடிப்படை நோக்கமான உறுதியான, பாதுகாப்பான மற்றும் சரியான தரத்தை உடைய மருந்துகளை மக்களுக்கு வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும் நோக்கம் அதிகாரசபையினால் வினைத்திறனாக அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளின் தரம் தொடர்பான உத்தரவாதம் தேசிய மருந்துகள் தரப்பாதுகாப்பு ஆராய்ச்சிக் கூடம்**

தேசிய மருந்துகள் தர பாதுகாப்பு ஆராய்ச்சிக் கூடத்தால் தமது நியமங்கள் தொடர்பான தர மதிப்பீட்டு சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்கும், இலங்கை தரப்படுத்தல் சபை மற்றும் உலக சுகாதார அமைப்பினால் முன்மொழியப்பட்ட பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கும் பகுப்பாய்வு நடவடிக்கைகளை சுமூகமாக நடாத்திச் செல்வதற்காக அத்தியவசியமான உபகரணங்களை பெற்றுக் கொள்வதற்கும் தகைமை உடைய பதவியணியினரை சேர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக குறித்துரைத்த கால எல்லையில் நியமத்தினை உடைய பரிசோதனை அறிக்கை விநியோகிப்பதற்கு தவறியிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டு இறுதி வரையும் பரிசோதனைகள் பூர்த்தி செய்யப்படாத 337 மாதிரிகள் காணப்பட்டது.

| | |
|---|---|
| **மருந்துகளின் விலையினை ஒழுங்கு படுத்துவதற்கான அதிகாரம் நியாயமான முறையில் பயன்படுத்தப்படாமை** | நிரற்படுத்தப்பட்ட மருந்துகளில் ஆகக் கூடிய சில்லறை விலை உயர்வடைகின்ற சந்தர்ப்பத்தின் போது ஏனைய மருந்துகளின் விலைகளும் உயர்வடைந்து செல்வற்காக அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும் 2023 இன் போது மேற்கொள்ளப்பட்ட அண்மைய விலை வீழ்ச்சி அடைவுடன் ஒப்பிடும் போது ஏனைய மருந்துகளின் விலையைக் குறைக்குமாறு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்தமையால் பொது மக்களுக்கு உரித்தாக வேண்டியிருந்த விலை நலன்கள் மருந்து கம்பனிகளில் நிறுத்தி வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. |
| **மருந்துகளைப் களஞ்சியப்படுத்தல், விநியோகித்தல் மற்றும் போக்குவரத்துச் செய்வதை ஒழுங்குபடுத்துதல்** | சட்டத்தின் 14(உ) பிரிவின் பிரகாரம் மருந்துகளைக் களஞ்சியப்படுத்தல், விநியோகப்படுத்தல், போக்குவரத்துச் செய்வதற்காக அனுமதிப் பத்திரத்தை விநியோகிக்கும் பணிகள் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைக்கு உரியதாக இருந்த போதும் மருந்துவ வழங்கல் பிரிவு, பிரதேச மருந்து வழங்கல் பிரிவு மற்றும் அரசாங்கத்தின் வைத்தியசாலைகளில் பேணிச் செல்லப்படுகின்ற மருந்து களஞ்சியங்கள் மற்றும் மருந்து போக்குவரத்து வாகனங்களை ஒழுங்குபடுத்துதல் மற்றும் அதிகார முறைமை ஒன்று அதிகார சபையினால் பின்னபற்றப்படாது இருந்ததுடன் சுகந்திரமான சுகாதார முறைமையில் பகிர்ந்தளிக்கப்படுகின்ற மருந்துகளின் தரம், புலனுணர்வு மற்றும் பாதுகாப்பை முறையாக ஒழுங்குபடுத்தும் செயற்பாடுகளின் மூலம் தொடர்ச்சியாக உறுதிப்படுத்தும் தேவை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |

## சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவு மற்றும் மருந்து உற்பத்தி பிரிவு, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் பிரிவு

| | |
|---|---|
| **பெறுகை நடவடிக்கைகளின் நலிவான தன்மையினால் மருந்துகளில் பற்றாக்குறை ஏற்பட்டமை** | மருத்துவ வழங்கல் பிரிவினால் 2022 ஆம் ஆண்டுக்கான சராசரி வருடாந்த கட்டளை தயாரித்து அமுல்படுத்தாமை, பெறுகையின் நடவடிக்கைகள் ஆரம்பிப்பதில் தாமதம், பெறுகை தாமதத்தின் காரணமாக கேள்வி தாரரால் வழங்கல்கள் கையேற்கப்படாமை, மருத்துவ வழங்கல் பிரிவு மற்றும் அரச மருந்தக கூட்டுத்தாபனத்துக்கு இடையே காணப்பட்ட நலிவான தொடர்பாடலினால் கேள்விதாரர்களை தொடர்புபடுத்தி மருத்துவ வழங்கல் பிரிவின் அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு நீண்ட காலம் எடுத்தமை, பெறுகை நடவடிக்கைகளுக்காக தேவையற்ற வகையில் நீண்ட காலம் எடுக்கப்பட்ட சில கட்டளைகள் இரத்துச் செய்தல் மற்றும் தற்காலிக கைவிடல், வழங்குனர்கள் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு செய்யாதிருந்தமை போன்ற காரணங்களின் அடிப்படையில் 2020 திசெம்பர் முதல் 2023 நவம்பர் வரையான காலத்தில் 18 மருந்துகள் 04 மாதங்கள் முதல் |

35½ மாதங்கள் வரையான கால வீச்சில் நிலுவையாகக் காணப்பட்டது.

**அவசர கொள்வனவுகளை மேற்கொள்ளல்**

2022 ஆம் ஆண்டின் போது இந்திய கடன் உத்தேசத் திட்டத்தின் கீழ் ஐ.அ.டொலர் 200 மில்லியன் நிதியேற்பாடு சுகாதார அமைச்சிற்கு கிடைத்திருந்ததுடன் நிதி அமைச்சினால் அவசர கொள்வனவுகளுக்காக அங்கீகரித்துக் கொள்வதற்கு இலகு நிபந்தனைகளுடன் பெறுகை வழிகாட்டிக் கோவையும் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு இருக்கும் போது சுகாதார அமைச்சின் மருந்துகள் உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தல் பிரிவினால் விருப்பத்துடன் கேள்வி கோரும் முறையின் கீழ் மற்றும் உத்தேச திட்டத்தின் கீழ் வழங்குனர்கள் தெரிவு செய்து அவசர கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த கொள்வனவின் போது மருந்துகளை மதிப்பிடுவதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு ஒன்றுக்குப் பதிலாக மதிப்பீட்டுக் குழு மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் நியமம் தொடர்பாக முறையான உறுதிப்படுத்தல் இன்றி கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகளின் தரத்தன்மை தொடர்பாக ஆபத்து காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

மேலும் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் கூட்டுமொத்தமாக ரூபா 22,000 மில்லியன் தொகையினை விட அதிக பெறுமதியுடன் 663 பெறுகைகளுக்கு உரிய அவசர பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பான மாதாந்த அறிக்கை சுகாதார அமைச்சரால் அமைச்சரவையின் மேவுகை அங்கீகாரத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**பதிவில் இருந்து விடுவித்தலின் கீழ் குறைந்த தரத்தை உடைய மருந்துகளை வழங்கும் ஆபத்து**

2007 இன் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் தொடர்பான பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.1 இன் பிரகாரம் மருந்து பெறுகைகளின் போது தரமான மருந்தா என உறுதிப்படுத்துகின்ற பதிவுச் சான்றிதழ் கட்டாயமாக இருக்க வேண்டிய போதிலும் அது தொடர்பாக கவனத்தில் கொள்ளாது விருப்பத்தின் பேரில் கோரும் முறையின் போது பதிவில் இருந்து விடுவித்தலின் கீழ் பெறுகைகளுக்காக சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக அநேகமான வழங்குனர்களின் செல்லுபடியான பதிவுச் சான்றிதழ் இன்றி கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருந்து. இவ்வாறே நிபந்தனைகள் இலகுபடுத்துதல் ஊடாக தரத்தன்மை உடைய மருந்துகள் வழங்கப்படுகின்றமையை உறுதிப்படுத்துகின்ற திட்ட முறைமை ஒன்று நீக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**அவசர கொள்வனவுகளின் கீழ்**

விருப்பத்தின் அடிப்படையில் கேள்வி கோருதல் ஊடாக அவசர கொள்வனவின் கீழ் ரூபா 144 மில்லியன் செலுத்தி

**நியமத்தில் இல்லாத மருந்துகளைக் கொள்வனவு செய்தல்**

கொள்வனவு செய்யப்பட்ட Human Immunoglobulin IV 5-6g மற்றும் Rituximab inj. 500mg என்ற மருந்து பாவனையால் நோயாளர்களுக்கு கடுமையான பாதிப்புக்கள் ஏற்பட்டிருந்தது. இது போலியான மருந்தாக இருந்தமையும் உரிய கம்பனியால் அந்த மருந்து இறக்குமதி செய்யப்படாது இருந்தமையும் உரிய இந்திய உற்பத்திக் கம்பனியும் இந்த மருந்தை வழங்காமல் இருந்தமையும் அவதானிக்கப்பட்டது. எனினும் வழங்குனரால் இந்த மருந்தின் உள்நாட்டு முகவர் ஆக செயற்பட்டிருந்ததாக காண்பித்திருந்ததுடன் உரிய மருந்து உறைகளில் மற்றும் ஏனைய லேபல்களில் மருத்தின் உற்பத்தியாக இந்தியக் கம்பனியின் பெயர் இடப்பட்டு இருந்தது. மேலும் தமது கம்பனி மருந்துகளை இறக்குமதி செய்து வழங்கியிருந்தமையும் போலியான உறுதிப்படுத்தலாக காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே உரிய இந்திய உற்பத்திக் கம்பனியின் பெயர் பதிவில் இருந்து விடுவிக்கும் சான்றிதழும் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் இந்திய கம்பனியின் தரக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திலும் குறிப்பிடப்பட்டு போலிப் பகுப்பாய்வு சான்றிதழும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட பரஸ்பர வேறுபாடான விடயங்கள் தொடர்பாகவும் மற்றும் அதற்கு முன்னர் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் மருந்து விடயங்கள் வழங்காதிருந்த மற்றும் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு செய்யாத இந்த வழங்குனர் உரிய இந்திய உற்பத்தியாளரின் அதிகாரம் பெற்ற உள்நாட்டு முகவராக இருந்தாரா என்பது தொடர்பாக உறுதிப்படுத்துவதற்கு மதிப்பீட்டுக் குழு கவனம் செலுத்தி இருக்கவில்லை.

**ஆராய்ச்சிக்காக கம்பனிக்கு இரத்த பிளஸ்மா விநியோகம்**

முறையான அங்கீகாரம் கிடைத்த ஆராய்ச்சியா எனவும் அல்லது ஆராய்ச்சி மேற்கொள்ள வேண்டிய மூல தர்மங்களுக்கு இணங்குகின்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததா என உறுதிப்படுத்தப்படாமலும், பாவனையின் பின்னர் பக்க விளைவுகள் இன்றிய ஆய்வு கூடப்பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தப்படாத இரத்த பிளஸ்மா கொள்வனவு செய்யும் கேள்வி மேற்கூறப்பட்ட வழங்குனர் கம்பனிக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் இரத்த மாதிரிகள் நிறுவனத்தால் நியமிக்கப்பட்ட குழு ஒன்றினால் மூல தத்துவங்களுக்கு இணங்க ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் பெற்றுக் கொள்ளப்படாமல் இந்த கம்பனிக்கு இரத்த பிளஸ்மா விநியோகிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. இந்தக் குழுவினால் ஆராய்ச்சிக்குரிய தன்மையினைப் பரீட்சிப்பதற்கு முன்மொழியப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்படாமல் இரத்த

பிளஸ்மா விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

நிறுவனம் மேற்கூறப்பட்ட வழங்குனரின் உற்பத்தி நிறுவனம் GMP தரப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்ததுடன் அது தோல்வியடைந்திருந்தது. அவ்வாறு இவ்வாறான உற்பத்தி நிறுவனங்கள் கடந்த காலத்தில் தொடர்ச்சியாக மருந்து உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தாதிருந்தமையை பின்தொடர் ஆய்வு பொறிமுறை ஒன்று அறிமுகப்படுத்தபடாதருந்ததுடன் அதிகாரசபையின் அவசர சுற்றி வளைப்புப் பிரிவின் மருந்து பரிசோதகர்களுக்கு இவ்வாவறான உற்பத்திக் கூடங்களை தொடர்ச்சியாக பரிசோதனை செய்வதற்கும், பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. மாகாணம் மற்றும் பிரதேச அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பில் இவ்வாறான பொறிமுறை ஒன்றை அமுல்படுத்தாமையின் காரணமாக இவ்வாறான மோசடியான கம்பனிகளுக்கு போலியான மருந்து உற்பத்தி செய்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**தரமில்லாத மருந்துகள் கொள்வனவு செய்தல்**

சத்திர சிகிச்சையின் போது மயக்க மருந்துக்காக பயன்படுத்தப்படுகின்ற Bupivacaine 0.5% + Glucose 8% inj.4 ml Amp. மருந்து தனியார் கம்பனியில் இருந்து ரூபா 40.74 மில்லியன் பெறுமதியில் அவசர கொள்வனவின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டதுடன் விருப்பம் கோரலின் கீழ் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு செய்த வழங்குனர் அல்லாத கம்பனிக்கு மருந்துகள் தொடர்பான மதிப்பீட இன்றி விசேட முறையின் கீழ் பதிவில் இருந்து விடுவிக்கும் சான்றிதழ் பெற்றுக் கொள்வதன் கீழ் இந்த கட்டளை கையளிக்கப்பட்டிருந்தது. இந்த மருந்துகள் பயன்படுத்தப்பட்ட பின் ஒரு கர்ப்பிணித் தாய் மரணத்திற்கு உட்பட்டிருந்தமையும் மேலும் பெண்ணுக்கு உயிராபத்து ஏற்பட்டிருந்ததன் காரணமாக உடனடியாக அமுல்படும் வகையில் மருந்து பாவனையில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. மருத்துவ வழங்கல் பிரிவினால் வைத்தியசாலைக்கு இந்த மருந்துகளை விநியோகிப்பதற்கு முன் தேசிய ஔடதங்கள் தரப் பாதுகாப்பு ஆய்வுகூடத்தின் மூலம் மருந்துகளின் தரம் தொடர்பாக பரீட்சிப்பதற்கு போதியளவான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் இருப்பின் தரமில்லாதது என இனங்காணும் போது மொத்த இருப்பில் 50 சதவீதமும் நோயாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தது.

கண் நோயாளர்களுக்காக மேற்கொள்ளப்படுகின்ற சத்திர சிகிச்சைகளின் பின்னர் பயன்படுத்தப்படுகின்ற Prednisolone Acetate Eye Drop மருந்தில் 50,000 போத்தல் இருப்பு ஒன்று மருத்துவ வழங்கல் பிரிவினால்

கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இந்த மருந்து பயன்படுத்தப்பட்ட பின்னர் உரிய நோயாளிக்கு ஏற்படுகின்ற கண் நோய்கள் மற்றும் கடுமையான பாதிப்புகளின் விளைவுகள் காரணமாக மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பாளரால் மருந்து பாவனையில் இருந்து அகற்றப்பட்டது. எனினும் இந்த மருந்து பாவனையில் இருந்து அகற்றப்படும் போது மொத்த இருப்பில் 43 சதவீதம் நோயளார்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் இந்த மருந்தை பயன்படுத்தியதன் காரணமாக தேசிய கண் வைத்தியசாலையில் இரண்டு நோயாளர்கள் முழுமையாக கண்பார்வை தெரியாமைக்கு உட்பட்டதுடன் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் 16 நோயாளர்கள் பாதிப்பு உட்பட்டிருந்தனர். மருத்துவ வழங்கல் பிரிவு அல்லது தேசிய மருந்து தரப் பாதுகாப்பு ஆய்வுகூடத்தால் வைத்தியசாலைக்கு இந்த மருந்துகள் விநியோகிப்பதற்கு முன் மருந்துகளின் தரத்தன்மை தொடர்பாக பரிசோதனை செய்வதற்கு போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**தரமான மருந்துகளை நோயாளர்களுக்கு வழங்குவதன் தேவை**

2019 முதல் 2022 வரையான காலப்பகுதியில் மருத்துவ வழங்கல் பிரிவு தொடர்பாக விநியோகிக்கப்பட்டிருந்த சுற்றறிக்கையின் பிரகாரம் தரம் கெட்டிருந்த நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகள், ஒவ்வாமை, ஆஸ்த்துமா, புற்றுநோய், இதய நோய், கண் தொற்றுநோய், சிறுநீரக நோய்களுக்காக பயன்படுத்துகின்ற மருந்துகளை உள்ளடக்கிய சில மருந்துக் குப்பிகளில் கண்ணாடித் துண்டுகள் காணப்பட்டமை, துகள்கள் காணப்பட்டமை, இறந்த கரப்பான் பூச்சிகள் காணப்பட்டமை, மாத்திரைகள் உடைந்து சென்றமை, நிறம் மறுபட்டமை, பிரித்தானிய மருந்து மாதிரிகளுக்கு இணங்காதிருந்தமை, பாதகமான எதிர் விளைவுகளின் காரணமாக மரணம் ஏற்பட்டமை, நுண்ணுயிர் தொற்று போன்ற விடயங்கள் இனங்காணப்பட்டிருந்தது. அதன் காரணமாக பாவனையில் இருந்து அகற்றுதல் அல்லது பாவனையில் இருந்து கைவிடப்பட்டிருந்தது. இவ்வாறான நிலைமையில் வெற்றி அடையாதிருந்தமை வெளிப்படுகின்ற போது அந்த மருந்துகளை நோயளர்களால் பயன்படுத்தப்பட்டிருந்தது. கணக்காய்வினால் பல காலமாக இந்த நிலைமை வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் இது வரை இந்த நிலைமையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டுக்குரிய ரூபா 2,482.12 மில்லியன் பெறுமதியான மருந்துகள், சத்திர சிகிச்சை மற்றும் ஆய்வு கூடப் பொருட்கள் தரம் கெட்டமையினால் பாவனையில் இருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் மேலும் ரூபா 515.7 மில்லியன் பெறுமதியான மருந்து வழங்கல் தரம் கெட்டதன் அடிப்படையில் தற்காலிகமாக பாவனையில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. அதனிடையே கண் நோய், புற்றுநோய், மயக்க மருந்து மற்றும் நோய்த்தடுப்பிற்காக

பயன்படுத்தப்படுகின்ற மருந்துகளை உள்ளடக்கிய மருந்து வழங்கல் தரத்தில் கெட்டமையால் பாவனையில் இருந்து அகற்றப்பட்ட போதும் மருந்து பயன்படுத்திய பின்னர் நோயாளர்களுக்கு பாதகமான விளைவுகள் ஏற்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக தரத்தினை உடைய மருந்துகளை நோயாளர்களுக்கு வழங்குவதற்கு எதிர்பார்ப்பு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**விநியோகிப்பதற்கு முன்னர் மருந்துகளின் தரத்தை பரீட்சிக்கும் பொறிமுறை ஒன்று காணப்படாமை**

மருந்துகளை நோயாளர்களுக்கு விநியோகிப்பதற்கு முன்னர் மருந்துகளின் தரத்தை பரீட்சிக்கும் பொறிமுறை ஒன்று அமுல்படுத்துமாறு 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கணக்காய்வினால் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்ட போதும் இது வரை அதற்காக போதியளவான நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக தரமில்லாத மருந்துகள் நோயாளர்களுக்கு விநியோகிப்பதைக் குறைப்பதற்கு இதுவரை முடியாதிருந்தது.

# சுதேச மருத்துவத் துறை

சிங்கள மருத்துவத்தினால் அனைவருக்கும் ஆரோக்கியத்தினை வழங்குவதே சுதேச மருத்துவத் துறையின் நோக்கமாகும். இலங்கையின் அடையாளத்தை காக்கும் வகையில் ஆராய்ச்சிகளையும் நவீன தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி ஒட்டுமொத்த சமூகத்திற்கும் ஆரோக்கியத்தை வழங்கி மனித பலத்தை அதிகரிப்பதன் மூலம் அவர்களுடைய தேசிய பொருளாதாரம் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைவதற்கு பங்களிப்பு செய்வித்தல் நோக்காகும். இதன் படி, சுகாதார அமைச்சின் தேசிய சுகாதாரப் பிரிவின் செயற்பணி பின்வருமாறாகும்.

**செயற்பணி**

சுதேச வைத்திய முறைமையைக் கட்டி எழுப்புவதற்கான கொள்கையை உருவாக்குதல்.

ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டி எழுப்புவதற்காக சுதேச வைத்திய முறைமையை பிரசித்தப்படுத்துதல்

சுதேச வைத்திய முறைமையைப் பாதுகாத்து விருத்தி செய்தல்

உள்நாட்டு மூலிகைப் பயிர் செய்கையை விரிவுபடுத்தி மருந்து உற்பத்தியை அதிகரித்தல்

பாதுகாப்பான ஆயுர்வேத வைத்திய முறையை உருவாக்குவதன் மூலம் சுற்றுலா கைத்தொழிலை முன்னேற்றி அதனை நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்வித்தல்.

ஹோமியோபதி மருத்துவ முறையை மேம்படுத்துதல்

இப் பணிகளை மேற்கொள்வதற்காக அமைச்சின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் ஆயுர்வேத திணைக்களம், இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம், ஹோமியோபதி மருத்துவ சபை மற்றும் ஹோமியோபதி வைத்தியசாலைகள் என்பன செயற்பாட்டில் உள்ளதுடன் ஆயுர்வேத திணைக்களத்தின் கீழ் 10 ஆயுர்வேத போதனா மற்றும் ஆராய்ச்சி வைத்தியசாலைகளும் 7 மூலிகைப் பூங்காக்களும் பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனம், சுதேச மருத்துவ முறை தொடர்பான தேசிய நிறுவகம் மற்றும் ஆயுர்வேத மருத்துவ சபை எனும் 3 நிறுவனங்களும் செயற்படுகின்றன.

## கணக்காய்வு அவதானிப்புகள்

### சுகாதார அமைச்சு – சுதேச மருத்துவப் பிரிவு

**நிதி ஒதுக்கீடும் பயன்பாடும்**

மீளாய்வாண்டில் மேலே குறிப்பிடப்பட்ட செயற்பணியை மேற்கொள்வதற்காக சுகாதார அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழ் சுதேச மருத்துவ பிரிவின் மூலதன செலவுகளுக்காக

ரூபா 14.40 மில்லியனும் மீண்டெழும் செலவுகளுக்காக ரூபா 359.60 மில்லியனும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் மூலதன ஏற்பாடுகளில் 77.63 சதவீதம் அதாவது ரூபா. 11.18 மில்லியனும் மீண்டெழும் ஏற்பாடுகளில் 98.93 சதவீதம் அதாவது ரூபா 355.76 மில்லியனும் செலவிடப்பட்டிருந்தன.

**விரல் அடையாள இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தப்படாது கொடுப்பனவு செலுத்துதல்.**

2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 2 (iv) ஆம் பந்தியின் படி, விரல் அடையாள இயந்திரத்தின் மூலம் வருகையும் வெளியேறலும் உறுதிப்படுத்தப்படாது வரவுப் பதிவேட்டை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டில் அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் சம்பளம் என ரூபா. 5.23 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

## ஆயுர் வேத திணைக்களம்

மீளாய்வாண்டில் ஆயுர் வேத திணைக்களத்தால் ரூபா 63.88 மில்லியன் மூலதன ஏற்பாடும் ரூபா. 1,975.46 மில்லியன் மீண்டெழும் ஏற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், ஆண்டின் இறுதியில் இதில் ரூபா 50.73 மில்லியன் மூலதன செலவினமும் ரூபா. 1,942.90 மில்லியன் மீண்டெழும் செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**பஞ்சகர்ம நிலையங்கள் ஒழுங்குபடுத்தல்**

1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் ஆயுர்வேத மருத்துவமனை, ஆயுர்வேத மூலிகை உற்பத்தி நிலையம், ஆயுர்வேத மூலிகை நிலையம் அல்லது ஆயுர்வேத மருந்து களஞ்சியசாலையை நடாத்துவதற்கு ஆயுர்வேத ஆணையாளரால் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும், உடல்சார் (பஞ்சகர்ம) மற்றும் மசாஜ் நிலையங்களைப் பதிவு செய்வது தொடர்பான ஏற்பாடுகள் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிராமையால் உடல்சார் மருத்துவ முறைகள் பயன்பாட்டை ஒழுங்குபடுத்த இயலாதிருந்தது.

**மேலதிக நேரக் கொடுப்பனவு கட்டுப்பாடு**

2009 ஏப்ரல் 16 ஆம் திகதி இடப்பட்ட 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 2(iv) பந்தியின் பிரகாரம் நேரத்தை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நேரக் கொடுப்பனவும் விடுமுறை நாள் சம்பளக் கொடுப்பனவும் மேற்கொள்ளப்படுகையில் குறித்த காலம் விரல் அடையாள இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், விரல் அடையாள இயந்திரப் பயன்பாடின்றி வரவுப் பதிவேட்டை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போது

ஆயுர்வேத திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் விடுமுறை நாள் சம்பளமாக ரூபா. 53.32 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

**விளைவற்ற செலவினம்**

ஆயுர் வேத சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் 2001 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரை முன்னோடிச் செயற்திட்டமாக அநுராதபுர மாவட்டத்தில் செயற்படுத்தப்பட்டு அதன் வெற்றிநிலைப் படி 2005 ஆம் ஆண்டு முதல் ஏனைய மாவட்டங்களில் சேவையை வியாபிக்க வேண்டிய போதிலும், 2005 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை ரூபா 1,171.86 மில்லியன் செலவிடப்பட்டு அநுராதபுர மாவட்டத்தில் மாத்திரம் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது. ஏனைய மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் வியாபிப்பதற்கு ஏற்ற வகையில் வெற்றிகரமாகச் செயற்பட்டிராத இச் செயற்திட்டத்திற்கு உரிய மீண்டெழும் செலவினம் திணைக்களத்தின் செலவின விடயத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு மேலும் கொண்டு நடாத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுப்பது விளைவற்றதென அவதானிக்கப்பட்டது.

**தேவைப்பாட்டை சரியாக இனங்காணாது இயந்திரத்தைக் கொள்வனவு செய்தல்**

தேவைப்பாட்டை சரியாக இனங்காணாது சாத்தியக்கூறு ஆய்வின்றி 2015 மார்ச் 16 ஆம் திகதி ரூபா 28 மில்லியன் செலவில் பண்டாரநாயக்க ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனத்திற்கு 14 இயந்திர உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 21 மில்லியன் பெறுமதியான 8 இயந்திரங்கள் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பொருத்தப்பட்டிருக்கவில்லை. ரூபா 14.59 மில்லியன் கிரயமான 06 இயந்திரங்கள் உற்பத்தித் தொழிற்சாலைக்கு தேவையற்றதாக 2020 ஒக்டோபர் 05 ஆம் திகதி நியமிக்கப்பட்ட ஓர் குழுவால் இனங்காணப்பட்டிருந்தது. முறையான ஒப்பந்த உடன்படிக்கைக்கும் சேவைகள் மற்றும் திருத்தவேலைகளிற்காக உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்படாது இவ் ஒப்பந்தத்தைச் செயற்படுத்தியிருந்தமையால் பொருத்தப்பட்ட இயந்திர உபகரணங்களும் மீளாய்வாண்டு வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்க இயலாத நிலையில் காணப்பட்டது. இதன் படி இச் செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்த மொத்தத் தொகையும் சிக்கனமற்ற செலவினமாகியிருந்தது.

**முன்மொழியப்பட்ட முகாமைத்துவத் தரவு முறைமையைத் தயாரித்திராமை.**

திணைக்களத்திற்காக முகாமைத்துவத் தரவு முறையொன்றைத் தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2024 மே மாத இறுதி வரையிலும் குறித்த தரவு முறைமை ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு அமைய

திணைக்களம் மற்றும் அதனோடிணைந்த நிறுவனங்கள், வைத்தியசாலைகள், வைத்திய நிலையங்கள் உள்ளிட்ட மொத்த நிறுவன முறைமைக்கு உரித்தான நாளதுவரையாக்கப்பட்ட முகாமைத்துவத் தரவுகளை வினைத்திறனுடன் பெற்றுக்கொள்வதற்கு சிரமமாக இருந்ததுடன் திணைக்களத்தின் பதவியணியினரின் வரவு மற்றும் வெளிச் செல்கையைப் பதிவுசெய்யும் நிர்வாக, செயலாற்றுகை கட்டுப்பாடு, சம்பள நிர்வாகம், மேலதிக நேரக் கொடுப்பனவுக் கட்டுப்பாடு, தனியாள் கோவை நிர்வாகம் போன்ற கட்டுப்பாடுகள் பலவீனமான நிலையில் காணப்பட்டன.

**சொத்துக்களின் உரிமை கையேற்கப்பட்டிராமை**

திணைக்களத்தின் தலைமை அலுவலக வளாகம், பொரளை போதனா வைத்தியசாலை உட்பட 19 வைத்தியசாலை, மூலிகைப் பூங்கா, சமூக சுகாதார பிராந்திய காரியாலயங்கள் மற்றும் சுற்றுலா விடுதிக் காணிகளிற்காக 2013 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் திணைக்களத்திற்கு உரித்துறுதி பெறப்பட்டிருக்கவில்லை.

**குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்**

பொரளை ஆயுர்வேத தேசிய வைத்தியசாலையின் புதிய எட்டுமாடிக் கட்டிடத்தின் 288 சாதாரண வாட் கட்டில்களில் 120 உம் அதாவது 42 சதவீதமானவையும் வைத்தியசாலையின் பழைய சாதாரண வாட்களின் 274 கட்டில்களில் 76 உம் அதாவது 28 சதவீதமானவையும் குறைவான பயன்பாட்டில் காணப்பட்டன. இவ்வாறே, புதிய கட்டிடத்தில் நவீன அறை வசதிகளுடனான 88 கட்டில்களைக் கொண்ட கட்டணம் செலுத்தும் வாட்கள் அனைத்தும் பழைய கட்டணம் செலுத்தும் 32 வாட்களில் 08 உம் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## ஆயுர்வேத மருத்துவ சபை

**ஆயுர்வேத வைத்தியர்கள் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்காமை**

2014 ஒக்டோபர் 15 ஆம் திகதி இடப்பட்ட 1884/36 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஆயுர்வேத மருத்துவ சபை விதிகளின் பிரகாரம் சபையில் பதிவு செய்யப்பட்ட அனைத்து வைத்தியர்களும் 05 வருடங்களுக்கு ஒரு முறை பதிவை நாளதுவரையாக்கிக்கொள்ள வேண்டிய போதிலும் பதிவை நாளதுவரையாக்குவதற்காக சபையால் முறையான நடைமுறை ஒன்று இனங்காணப்பட்டு நடைமுறைப்படுத்தியிராத காரணத்தால் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் பதிவுசெய்யப்பட்டு 05 வருடங்கள் கடந்திருந்த 13,016 வைத்தியர்கள் தமது பதிவைப் புதுப்பித்திருக்கவில்லை.

| | |
|---|---|
| **வைத்தியர்கள் தொடர்பான சரியான தகவல்களை நாளதுவரையாக பேணியிருக்காமை.** | 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் மருத்துவ சபையில் பதிவு செய்திருந்த வைத்தியர்களின் எண்ணிக்கை 27,205 எனவும், மரணித்தவர்களின் எண்ணிக்கை 4,024 எனவும் அறிக்கையிடப்பட்டிருந்தது. எனினும் மரணித்த பாரம்பரிய வைத்தியர்கள் தொடர்பான சரியான தகவல்கள் நாளதுவரையாக்கப பெற்றுக்கொள்ளும் வழிமுறை ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் மரணித்த வைத்தியர்களின் பதிவை இரத்துச் செய்து அது பற்றி பொது மக்களுக்கு அறிவிப்பதற்கான வழிமுறையும் நடைமுறைப்படுத்தப்பட்டிராமையால் குறித்த பதிவு பத்திரத்தைத் துஷ்பிரயோகம் செய்வதற்கான சந்தர்ப்பம் காணப்பட்டது. |
| **ஆயுர்வேத வைத்தியர்களின் செயலாற்றுகை ஒழுங்குபடுத்தப்பட்டிராமை** | ஆயுர்வேத வைத்தியர்கள், பாரம்பரிய ஆயுர்வேத வைத்தியர்கள், ஆயுர்வேத தாதி உத்தியோகத்தர்கள் மற்றும் மருந்தாளர்களை பதிவு செய்தல், அவர்களுக்கான பரீட்சைகளை நடாத்துதல், பரீட்சை பெறுபேறுகளை வெளியிடல் போன்ற செயல்பாட்டுப் பணிகளை மதிப்பீடு செய்வதற்காக செயலாற்றுகை சுட்டியை அமைத்து செயலாற்றுகை மீளாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## இலங்கை ஆயுர்வேத மருந்து கூட்டுத்தாபனம்

| | |
|---|---|
| **தனியார் துறையில் விற்பனை வருமானம் குறைவடைதல்** | மீளாய்வாண்டின் கூட்டுத்தாபனத்தின் மொத்த விற்பனை மதிப்பீடு ரூபா 1,700 மில்லியனானதுடன் உள்ளபடியான வருமானம் ரூபா 1,215.28 மில்லியனாகக் காணப்பட்டது. இதில் ரூபா 770.88 மில்லியனான அதாவது 63 சதவீதம் அரசாங்கத் துறையில் இருந்து கிடைக்கப்பெற்றிருந்ததுடன் தனியார் துறையில் இருந்து பெறப்பட்ட வருமானம் ரூபா 444.40 மில்லியனான அதாவது 37 சதவீதமாகும். இதன் படி தன்னிச்சையாகக் கிடைக்கப்பெறும் அரச துறைக் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக மாத்திரம் கூடுதல் கவனம் எடுக்கப்பட்டமையும், சந்தைத் தேவைப்பாட்டை முறையாக இனங்கண்டிராமையும், புதிய பிரசார மற்றும் விற்பனை மேம்பாட்டு முறை உக்திகளைப் பயன்படுத்தியிராததன் காரணமாக தனியார் துறையின் விற்பனை வருமானம் ஒப்பீட்டு ரீதியாகக் குறைவாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. |
| **மூலதன மானியம் பயன்படுத்தப்பட்டிராமை** | 2017, 2018 ஆம் 2021 ஆம் ஆண்டுகளின் போது மூலதன மானியமாக திறைசேரியில் இருந்து கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 97.00 மில்லியன் தொகையில் ரூபா 26.15 மில்லியன் தொகையான அதாவது 27 சதவீதம் 2024 ஏப்ரல் 30 ஆம் |

திகதி வரையிலும் பயன்படுத்தப்படாது வங்கிக் கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

**சுவையூட்டும் மருந்து உற்பத்தித் தொழிற்சாலை ஒன்று நிர்மாணித்தல்**

நோயாளர்களின் சுவையூட்டும் மருந்து தேவைப்பாட்டினைப் பூர்த்தி செய்தல் மற்றும் ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டி எழுப்புதல் ஆகிய நோக்கங்களுடன் ரூபா. 45.73 மில்லியன் மதிப்பீட்டு செலவுடன் சுவையூட்டும் மருந்து உற்பத்தித் தொழிற்சாலை நிர்மாணிப்பு, ரூபா 37.00 மில்லியன் திறைசேரி ஏற்பாட்டில் 2018 ஆகஸ்ட் 25 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2020 ஜனவரி 02 ஆம் திகதி வரை ரூபா 12.14 மில்லியன் செலவிடப்பட்டு நிர்மாணிப்பில் 30 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பலவீனம் காரணமாக அந்நாள் முதல் நிர்மாண வேலைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன. 2024 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் 05 வருடங்கள் கடந்திருந்த போதிலும் குறித்த நிர்மாணிப்புகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிராததுடன் அச் செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்த தொகை சிக்கனமற்றதாகக் காணப்பட்டது.

**அங்கீகாரம் இன்றி படிப்பணம் செலுத்தப்பட்டமை**

1994 யூன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை விதிமுறைகளிற்கு முரணாக 2023 ஆம் ஆண்டின் போது உற்பத்திப் படிப்பணமாக ரூபா 28.51 மில்லியன், வருகைப் படிப்பணமாக ரூபா 10.46 மில்லியன், வினைத்திறன் படிப்பணமாக ரூபா 43.48 மில்லியன் தொகையுமாக மொத்தம் ரூபா 82.45 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இதன் படி, முன்னைய 09 ஆண்டுகளின் போது ரூபா 676 மில்லியன் பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் இன்றி படிப்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**இருப்புப் பற்றாக்குறையும் மிகை தொடர்பான நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை**

மீளாய்வாண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி, 15 விற்பனை நிலையங்களினதும் 02 முடிவுப்பொருள் களஞ்சியங்களிற்கும் உரித்தான ரூபா 10.92 மில்லியன் பெறுமதியான முடிவுப்பொருட்களின் இருப்பு 33,053 பற்றாக்குறையாகவும் 11 விற்பனை நிலையங்களினதும் முடிவுப் பொருள் களஞ்சியம் ஒன்றிற்கும் உரித்தான ரூபா 4.30 மில்லியன் பெறுமதியான முடிவுப்பொருட்களின் இருப்பு 8,841 மிகையாகவும் காணப்பட்ட போதிலும் இது தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் படி தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**அன்பளிப்பாக மருந்துப்பொருட்கள் இலவசமாக வழங்கப்பட்டிருந்தமை**

கூட்டுத்தாபனத்தால் 160 சந்தர்ப்பங்களின் போது ரூபா 2.13 மில்லியன் பெறுமதியான மருந்துப் பொருட்களை இலவசமாக வழங்கி அவற்றின் கிரயமான ரூபா 1.54 வை அன்பளிப்பாக விற்பனை மற்றும் விநியோகச்

செலவினத்தின் கீழ் காண்பித்திருந்தது. மேலும் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் படி, அன்பளிப்பு வழங்கப்படுவது தொடர்பான வழிகாட்டல் கைநூல் ஒன்றைத் தயாரித்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு 2019 யூலை 08 ஆம் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபை தீர்மானித்து 05 ஆண்டுகளை அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் இதுவரையில் அவ் வழிகாட்டல் கைநூல் தயாரிக்கப்படுவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

# வெளிநாட்டு அலுவல்கள்

இலங்கையில் வெளிநாட்டு கொள்கையின் முன்னோடியாக உலகின் அனைத்து நாடுகளுடனும் நட்புறவைப் பேணிக் கொண்டு சர்வதேச சமூகத்தில் பொறுப்பு வகிக்கும் நாடாக மாறுவதற்கு இலங்கை அரசாங்கம் வெளிநாட்டு கொள்கைக்கு இணங்க இலங்கையின் தேசிய அபிலாசைகளை சர்வதேச ரீதியில் மேம்படுத்துதல், நிரூபித்தல், மற்றும் இலங்கையின் தேசிய அபிலாசைகளுக்கு இணங்க சர்வதேச உறவுகளை முகாமைத்துவப்படுத்தல் தொடர்பாக அரசாங்கத்திற்கு ஆலோசனைகளை வழங்குதல் என்பன வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயற்பாடுகள் ஆகும்.

மேலே கூறப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு வெளிநாட்டு ரீதியில் 12 உயர் ஆணையாளர் அலுவலகங்கள், 35 தூதரகங்கள், 2 ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர தூதரகங்கள், ஒரு பிரதி ஆணையாளர் அலுவலகம், 10 கொன்சியூலர் ஜெனரல் அலுவலகங்கள் மற்றும் முகவர் அலுவலகங்கள் எனும் ரீதியில் உலகளாவிய ரீதியில் பரந்துள்ள 61 தூதரகங்களைக் கொண்ட வலயமைப்பு ஒன்று பேணிச் செல்லப்படுகின்றது. லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச உறவு மற்றும் மூலோபாய ஆய்வு நிறுவனமும் இந்த அமைச்சின் மூலம் கண்காணிப்பு செய்யப்படுகின்றது.

மேலே குறிப்பிடப்பட்ட கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக 2023 ஆம் ஆண்டில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு ரூபா 19,000 மில்லியன் ஒதுக்கீடு பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ளதுடன், 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையில் அதில் ரூபா. 16,977 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## கணக்காய்வு அவதானிப்புகள்

**வெளிநாடுகளில் மரணமடைந்த / விபத்துக்களுக்கு உட்பட்ட இலங்கையர்களுக்கு உரிய நட்ட ஈட்டுத் தொகையினை செலுத்துதல்**

2010 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளில் கட்டார் இராச்சியத்தில் வேலை வாய்ப்புக்காகச் சென்று, விபத்து காரணமாக மரணமடைந்த 06 இலங்கையர்களுக்கு நட்ட ஈட்டினைப் பெற்றுக் கொள்வதற்கான கோரிக்கை கோவைகள் கால தாமதம் அடைந்த காரணத்தால் முடிவுறுத்துவதற்குத் தொழில் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது என கட்டார் வெளிநாட்டு தூதரகத்தின் உயர் ஸ்தானிகர் 2022 ஆம் ஆண்டில் தெரிவித்திருந்தார். இங்கு கோரிக்கையாளர்களினால் ஒழுங்கான முறையில் ஆவணங்கள் நடப்புக் காலத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் கட்டார் உயர் ஸ்தானிகர் அலுவலக உத்தியோகத்தர்கள் குறித்த காலப் பகுதியினுள் நட்ட ஈட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு பொறுப்புக் கூற வேண்டிய முறையில் செயல்படாததன் அடிப்படையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்ட ஈடு மற்றும் கொடுப்பனவினைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

கட்டார் இராச்சியத்தில் வேலை வாய்ப்புக்காக வெளிநாடு சென்ற நபர் ஒருவர் விபத்தில் 2012 செப்டம்பர் 10 ஆம் திகதி மரணமடைந்திருந்ததுடன் கட்டார் முதன்மை

நீதிமன்றம் நட்ட ஈடாக (டீடழழன ஆழநெல) 200,000 கட்டார் ரியால்களை நெருங்கிய உறவினருக்கு (மேழுமு) செலுத்துமாறு கட்டளையிட்டிருந்தது. அவ்வாறு இருந்த போதிலும், அந்தத் தொகை செலுத்தப்படாத காரணத்தால் வழக்கினை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான அதிகாரத்தினை வழங்கி சட்டரீதியான கடிதங்கள் 2013 நவம்பர் 25 ஆம் திகதி உயர் ஸ்தானிதர் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது எனினும் கணக்காய்வு தினம் வரையில் நட்ட ஈடு அறவிடப்பட்டிருக்கவில்லை.

வெளிநாடுகளுக்கு சென்ற இலங்கையர்கள் மரணமடைதல், வேலை வாய்ப்பினை இழத்தல், பகுதியளவு அல்லது முழுமையான ரீதியில் ஊனமடைதல் காரணமாக குறித்த தரப்பினருக்கு செலுத்துவதற்காக நட்ட ஈடு, காப்புறுதி, சேவையை முடிவுறுத்தும் சம்பளம் போன்ற ரீதியில் வெளிநாட்டவர்களிடமிருந்து கிடைத்த ரூபா. 56.92 மில்லியன் தொகை 01 வருடம் தொடக்கம் 03 வருடங்கள் வரையான காலம் தொட்டு குறித்த நபர்களுக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது அமைச்சின் பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள நட்ட ஈட்டுக் கோரிக்கை தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- சவுதி அரேபியாவில் தொழிலுக்காக சென்றிருந்த நபர் ஒருவர் 2012 ஒக்டோபர் 24 ஆம் திகதி விபத்துக்குள்ளாகி முழுமையாக ஊனமுற்ற நிலைமைக்கு உட்பட்டமை.


- குவைத் இராஜ்ஜியத்தில் வீட்டுப் பணிப் பெண்ணாக தொழிலுக்கு 2009 திசெம்பர் 19 ஆம் திகதி வெளிநாட்டுக்குச் சென்ற பெண் ஒருவர் 2012 ஜனவரி 29 ஆம் திகதி மரணமடைந்தமை.

- சுமார் 17 வருட காலங்கள் குவைத் இராஜ்ஜியத்தில் வீட்டுப் பணிப் பெண்ணாக இருந்த பெண் ஒருவர் சுகயீனமுற்று வைத்தியசாலைக்கு சென்றமை மற்றும் அதனிடையே மரணம் அடைந்தமை.

- ஜெத்தாவில் 2011 ஆம் ஆண்டில் மரணமடைந்த நபர் தற்கொலையா அல்லது மரணமா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் மற்றும் நட்ட ஈட்டினைப் பெற்றுக் கொள்ளுதல்.

**கட்டு நிதி தீர்க்கப்படாமை**


அமைச்சில் கட்டு நிதி கணக்குகள் இரண்டு காணப்பட்டதுடன் அவற்றில் முறையே ரூபா. 50.97 மில்லியன் மற்றும் ரூபா. 959.52 மில்லியன் எனும் ரீதியில் மொத்தமாக ரூபா. 1010,49 மில்லியன் மீதி காணப்பட்டது. அதில் ரூபா. 50.97 மில்லியனான கட்டு நிதி 2013 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்கு உரிய தீர்க்கப்படாத முற்பணங்களைக் கொண்டிருந்தது. அந்த மீதிகளில் ரூபா. 32.47 மில்லியன் வெளிநாட்டு தூதரகங்களில் சேவைக்காக வெளிநாடுகளுக்கு சென்ற பதவியணியினருக்கு வழங்கப்படும் பயன்பாட்டிற்கு பெற்றுக் கொள்ளாத இல்லங்களுக்காக வைக்கப்பட்ட 103 பாதுகாப்பு வைப்புகளை உள்ளடக்கி இருந்தது. மூடப்பட்ட பிராங்க்பர்ட் தூதரகத்திற்கு உரிய இல்லத்திற்காக வைக்கப்பட்ட ரூபா. 2.23 மில்லியன் பாதுகாப்பு வைப்பும் அதனுள் காணப்படுவதுடன் மீதி ரூபா. 18.5 மில்லியன் தீர்க்கப்படாத இடைக்கால கட்டு நிதிகளை உள்ளடக்கி இருந்தது.




உரு இல.: 2.21: : 7002-0-0-35-13-கட்டுநிதி கணக்கு உள்ளடக்கம்

ரூபா. 959.52 மில்லியன் மீதி காணப்படும் மற்றைய கட்டு நிதிக் கணக்கில் வெளிநாட்டு தூதரகத்தில் சேவைக்காக வெளிநாட்டு செல்லும் பதவியணியினருக்கு வழங்கப்படும் இல்லங்களுக்காக வைக்கப்பட்ட பாதுகாப்புவைப்பு ரூபா. 379.89 மில்லியன் ஆகும். அதில் ரூபா. 56.63 மில்லியன் தூதரகப் பதவியணியினர் வசிக்காத இல்லங்களுக்காக

வைக்கப்பட்ட பாதுகாப்பு வைப்புக்களாக உள்ளதுடன் ரூபா. 9.2 மில்லியன் மூடப்பட்ட மூன்று தூதரகங்களுக்குரிய இல்லங்களுக்காக வைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு வைப்பாக இருந்தது. மேலும் இந்த கட்டு நிதிக்கணக்கில் ரூபா. 7.1 மில்லியன் தீர்க்கப்படாத இடைக்கால கட்டு நிதியும் காணப்பட்டது.




உரு இல.: 2.21: : 7002-0-0-35-23-கட்டுநிதி கணக்கு உள்ளடக்கம்

**சொத்து முகாமைத்துவம்**

அவுஸ்திரேலியாவில் கன்பராவில் அமைந்துள்ள இலங்கை உயர் ஆணையாளர் அலுவலகத்திற்கு சொந்தமான இரண்டு கட்டடங்கள் முறையே 2007 ஆம் ஆண்டு மற்றும் 2012 ஆம் ஆண்டு தொடக்கமும், 1972 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ஸ்வீடன் உயர் ஸ்தானிகர் உத்தியோகபூர்வ இல்ல கட்டிடம் 2011 ஆம் ஆண்டு தொடக்கமும், 1976 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த இலங்கை உயர் ஆணையாளர் உத்தியோகபூர்வ இல்லம் 2014 ஆம் ஆண்டு தொடக்கமும் பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் அந்த கட்டடங்கள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதத காரணத்தால் 2023 ஆம் ஆண்டின் போது உத்தியோகபூர்வ இல்ல வாடகை ரீதியில் ரூபா. 173.54 மில்லியன் செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது.

"நிலைபேறான இலங்கை" எனும் நோக்கின் கீழ், நுகர்வோரின் உரிமைகளைப் பாதுகாத்து போட்டித் தன்மை வாய்ந்த உள்ளூர் வர்த்தக வலையமைப்பின் மூலம் மக்களுக்குத் தேவையான நுகர்வோர் பொருட்களை வழங்குவதற்காகச் செயற்படுவதற்காக நிறுவப்பட்ட வர்த்தகம், வணிகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சும் அதன் கீழ் உள்ள 04 திணைக்களங்களும் 08 நியதிச்சட்ட சபைகள்/ நிறுவனங்களால் பின்வரும் செயற்பணிகள் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

| | |
|---|---|
| **செயற்பணிகள்** | தேசிய வர்த்தகக் கொள்கையைத் தயாரித்து அக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய நிறுவனங்களைத் தொடர்புபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| | நுகர்வோரைப் பாதுகாப்பதற்காக சந்தை போட்டி நிலைமை ஏற்படுத்தி, சந்தைக் கண்காணிப்பு, சுற்றிவளைப்பு மற்றும் விற்பனையாளர்களுக்கும் நுகர்வோருக்கும் அறிவூட்டல். |
| | உள்ளூர் சந்தையில் ஏற்படும் விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதற்காக நடுவராக செயற்படுதல். |
| | உலக சந்தையில் புதிய ஏற்றுமதிக்கான சந்தர்ப்பங்களை இனங்காண்பதற்காகவும் புதிய இரு தரப்பு, வலய ரீதியான மற்றும் பல்தரப்பு வர்த்தக உடன்படிக்கைகளை ஏற்படுத்தும் சந்தர்ப்பம் தொடர்பாக ஆராய்வதற்கு நிறுவனத்தை ஊக்குவித்து தேவையான வசதிகளை ஒழுங்கமைத்தல். |

இச் செயற்பணிகளை மேற்கொள்வதற்காக பாராளுமன்றத்தால் 2023 ஆம் ஆண்டின் போது பின்வரும் நிறுவனங்களுக்கு ரூபா 6,881 மில்லியன் தொகையான ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் இறுதிவரையில் இதில் ரூபா 6,147 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## கணக்காய்வு அவதானிப்புகள்

### வியாபார, வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

| | |
|---|---|
| **முக்கிய நோக்கு நிறைவேற்றப்பட்டிராமை** | அமைச்சின் நேக்கங்களிற்கிடையே தேசிய வியாபாரக் கொள்கையைத் தயாரித்து நிறைவேற்றப்படுதல், அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களிற்கு உரித்தான தரவு முறைமையைப் பேணுதல், அத் தரவு முறைமையை நாளதுவரையாக்குதல், மற்றும் தரவு வெளித் தகவல்களை வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்புபடும் பொறிமுறையைத் தயாரித்து தேசிய புலமைச் சொத்துரிமையைப் பாதுகாப்பதற்கான பாதுகாப்பு பொறிமுறையை செயற்படுத்துவதற்கான வழிகாட்டுதல் |

போன்ற முக்கிய நோக்கங்களை அடைவதற்குத் தவறியிருந்தது.

**சட்ட திட்டங்களை நாளதுவரையாக்காமை**

நுகர்வோரை மேலும் பாதுகாப்பதற்காக அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் சட்டதிட்டங்களை நாளதுவரையாக்கி திருத்த நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ள வேண்டிய போதிலும் 2023 இன் 09 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டம், 2003 இன் 36 ஆம் இலக்க தேசிய புலமைச் சொத்து சட்டம் மற்றும் 1995 இன் 35 ஆம் இலக்க அளக்கும் அலகுகள், தரங்கள் மற்றும் சேவைகள் அதிகாரச்சட்டம் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் திருத்தப்பட்டிருக்கவில்லை.

**கடைவாடகை, மின்சாரம் மற்றும் நீர்ப் பட்டியல்கள் அறவிடப்பட்டிராமை**

அமைச்சால் வாடகை அடிப்படையில் பெறப்பட்டுள்ள கட்டிடத்தின் கீழ் தளத்தில் 2,178 சதுர அடி நிலப்பரப்பில் நிறுவப்பட்டுள்ள கடையில் 2022 ஒக்டோபர் முதல் 2023 ஆகஸ்ட் வரை கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தினாலும் 2023 ஆகஸ்ட் முதல் கணக்காய்வுத் தினம் வரை உமந்தாவ கிரீன் ஹட் பெயரிலான நிறுவனத்தாலும் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்திருந்ததுடன் அத் தளத்தின் வாடகைத் தொகை, மின்சாரம் மற்றும் நீர்ப் பட்டியல்களுக்காக 2022 ஒக்டோபர் முதல் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அமைச்சின் தலைப்பின் மூலம் ஏற்கப்பட்டிருந்த ரூபா 5.41 மில்லியன் தொகை, முறையான உடன்படிக்கை மூலம் குறித்த நிறுவனங்களிடம் இருந்து அறவிடப்படுவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## அளக்கும் அலகுகள், தரங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம்

**அளவீட்டு உபகரணங்கள் மற்றும் அளவீட்டுத் தரத்தை மெய்மையாய்வு செய்திராமை**

விற்பனைக்காகப் பயன்படுத்தப்படும் சகல அளவீட்டு உபகரணங்களும் வருடாந்தம் மெய்மையாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு சகல உபகரணமும் மெய்மையாய்வு செய்யப்படுவதை உறுதிப்படுத்தி சரியான நடைமுறை ஒன்று திணைக்களத்தில் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், 2023 ஆம் ஆண்டின் போது 12 மாவட்டங்களில் அளவீட்டுத் தரங்கள் மீள மெய்மையாய்வு செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 05 மாவட்டங்களில் மாத்திரம் அச் செயற்பணி மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**விளைவற்றுக் காணப்பட்ட ஆய்வுகூடம்**

2015 ஆம் ஆண்டின் போது 66 ஆய்வுகூட அறைகளுடனான தேசிய அளவீட்டு ஆய்வுகூடம்

அமைந்திருந்த போதிலும் தற்போது 12 அளவீட்டுத் துறைகளுக்காக 33 ஆய்வுகூட அறைகள் மாத்திரம் இயங்கி வருவதுடன் மிகுதியான 33 அறைகளும் (140,060 சதுர அடியிலானவை) விளைவற்றுக் காணப்பட்டன.

## வரையறுக்கப்பட்ட இலங்கை அரச (பொது) வர்த்தக கூட்டுத்தாபனம்

| | |
|---|---|
| **நட்டம் அடைந்த செயற்திட்டம்** | கம்பனியால் 2015 ஆம் ஆண்டின் போது இருப்பைச் சேகரிப்பதற்காக 50 நடைமுறைக் களஞ்சியங்கள் (Cocoon) ரூபா 96.25 மில்லியன் கிரயத்தில் பிலிப்பீன் அரசாங்கத்திடமிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருந்ததுடன் அவ் இருப்பில் 15 அலகுகள் விற்பனை செய்யப்பட்டிருந்தன. 7 வருடங்களுக்கும் மேலான காலமாக விற்பனை செய்யப்படாதிருந்த ரூபா 25.02 மில்லியன் கிரயத்திலான 13 அலகுகள் 2022 ஆம் ஆண்டின் போதும் ரூபா 42.35 கிரயமான 22 அலகுகள் 2023 ஆம் ஆண்டின் போதும் அரசாங்க நிறுவனங்களுக்காக இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததன் காரணத்தால் மொத்த செயற்திட்டத்தின் நட்டம் ரூபா 67.38 மில்லியனாகக் காணப்பட்டது. |

## பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

| | |
|---|---|
| **பற்றாக்குறையான பொருட்கள் தொடர்பாக சுற்றிவளைப்புகள் போதாமை** | 2023 ஆம் ஆண்டின் போது உள்நாட்டு கீரிசம்பா அரிசி சந்தையில் பாரிய பற்றாக்குறையாக இருந்ததுடன் ஆகக் கூடுதலான சில்லறை விலையும் விதிக்கப்பட்டிருந்தது. எனினும், கீரி சம்பா அரிசி தொடர்பாக 596 சுற்றி வளைப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அது அதிகாரசபையால் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த ஒட்டுமொத்த சுற்றிவளைப்பு எண்ணிக்கையான 24,848 இன் 2 சதவீதம் மாத்திரமேயாகும். மேலும் சந்தையில் அவ்வப்போது விலைத் திருத்தங்களுக்கு உட்பட்ட மற்றும் பற்றாக்குறையாக அறிக்கையிடப்பட்ட வீட்டு எரிவாயு தொடர்பாக 2023 ஆம் ஆண்டின் போது 32 சுற்றிவளைப்புகள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இது மீளாய்வாண்டில் அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்ட ஒட்டுமொத்த சுற்றிவளைப்பு எண்ணிக்கையின் 0.1 சதவீதம் மாத்திரமேயாகும். |

| | |
|---|---|
| **உடன்படிக்கை மீறப்பட்டதன் காரணமாக நட்டஈட்டுத்தொகை செலுத்த நேர்ந்தமை** | பாதுகாப்பற்ற தரத்தில் குறைந்த உற்பத்தியால் பாவனையாளர்களின் பாதுகாப்பிற்காக குடிபானங்கள், போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர், சமைப்பதற்கான எண்ணெய், பற்பசை, சவற்காரம், சம்பு, சுவர்ப் பூச்சு மற்றும் மின்சார உதிரிப் பாகங்கள் முதலிய இனங்காணப்பட்ட உற்பத்திப் பொருட்கள் சில தொடர்பாக பாதுகாப்பான ஓர் முறைமையைத் தயாரிப்பதற்காக சுவீட்சர்லாந்து கம்பனி ஒன்றுடன் 2014 சனவரி 24 ஆம் திகதி ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக விநியோகிக்கப்பட்டிருந்த விதிமுறை இல. 49 வலுவிழக்கச் செய்வதற்காக பொருள் உற்பத்திக் கம்பனிகள் சிலவற்றால் அதிகாரசபைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மனுவிற்கு உயர் நீதிமன்ற உத்தரவைத் தடுக்கும் இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தமையால் அச் சுவிட்சர்லாந்து கம்பனியுடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் படி செயற்திட்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ள இயலாதிருந்தது. இதன் காரணமாக கம்பனியால் அதிகாரசபைக்கு எதிராக 2018 ஆம் ஆண்டின் போது சர்வதேச நீதிமன்றத் தீர்ப்பாணயகத்தில் ஓர் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் அதிகாரசபையால் கம்பனிக்கு மொத்த முதலீட்டுத் தொகையான ரூபா 2.17 பில்லியன் தொகையும், தீர்ப்பனவுக் கட்டணமாக 325,000 ஐ. அ. டொலர்களும் செலுத்தப்பட வேண்டும் என கட்டளையிடப்பட்டிருந்தது. அத் தொகைக்கு எதிராக அதிகாரசபையால் கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தில் முறைப்பாடொன்று பதிவுசெய்யப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக அதிகாரசபையால் உள்ளக விசாரணை ஒன்று நடாத்தப்பட்டு கவனக்குறைவு மற்றும் செயற்திறனின்மை ஆகியவை தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர் இனங்காணப்பட்டிருக்கவில்லை. |


## இலங்கையின் தேசிய புலமைச் சொத்து அலுவலகம்

| | |
|---|---|
| **வர்த்தகக் குறியீடு தொடர்பான நடவடிக்கைக்காக கூடுதல் காலம் கடத்தப்படுவதல்** | 2021 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது கிடைக்கப்பெற்றிருந்த வர்த்தகக் குறியீட்டு விண்ணப்பங்களில் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 12,898 விண்ணப்பங்களுக்கான வர்த்தகக் குறியீட்டு பதிவிடலுக்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிராததுடன் 2023 ஆம் ஆண்டின் போது பதிவு செய்யப்பட்ட வர்த்தகக் குறியீட்டு விண்ணப்பங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது, பதிவிற்காக 2 முதல் 28 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த 27 |

சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. மேலும் கட்டணம் உரிய காலப்பகுதியில் செலுத்தப்பட்டிருப்பின் வர்த்தகக் குறியீடு வர்த்தமானியில் 04 வாரங்களுக்குள் பிரசுரிக்கப்பட வேண்டிய போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் கட்டணம் செலுத்தப்பட்டிருந்த எனினும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிராத வர்த்தகக் குறியீடுகளின் எண்ணிக்கை 690 ஆகும். இவ்வாறே, 2023 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நிராகரிக்கப்பட்ட 1,923 வர்த்தகக் குறியீட்டு விண்ணப்பங்களில் ஒரு வருட காலத்திற்குள் 62 விண்ணப்பங்கள் அளவில் நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் 37 விண்ணப்பங்கள் 5 வருடங்களும், 104 விண்ணப்பங்கள் 3 முதல் 4 வருடங்களும், 1,720 விண்ணப்பங்கள் 01 முதல் 02 வருட காலம் கடந்தும் நிராகரிக்கப்பட்டிருந்தன.

# நெடுஞ்சாலைகள்

நெடுஞ்சாலை வலையமைப்பானது ஒரு நாட்டின் பெறுமதிவாய்ந்த மற்றும் மிகவும் பரந்த சமூக சொத்தாகக் கருதப்படுவதுடன் அது பொருளாதார, சமூக, கலாச்சார ரீதியில் போன்றே சுற்றாடல் ரீதியிலும் சமூக நலனோம்பல் நோக்கிலும் மிகவும் முக்கியமான பிரிவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பொருளாதார பிரிவுகளுக்கு ஈடாக சேவை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதில் நகர மற்றும் கிராம அபிவிருத்தியில் ஏற்றத்தாழ்வுக்கு தீர்வாக வினைத்திறனாக மற்றும் சூழல் நேயமிக்க பொது போக்குவரத்து ஒழுங்கமைப்பிற்காக போக்குவரத்து வலையமைப்பினை அபிவிருத்தி செய்தல் அடிப்படை தேவைப்பாடாக அரசாங்கத்தின் முக்கிய கொள்கைகள் மூலம் இனம் காணப்பட்டுள்ளது. நாட்டினுள் வாழும் மக்களின் வாழ்க்கை நிலைமையைக் கட்டி எழுப்பும் நோக்கில் அரசாங்கத்தினால் தொடர்ச்சியாக முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், போக்குவரத்து தேவைப்பாடுகளுக்காக அதிகரித்து வரும் கேள்வியினைப் பூர்த்தி செய்யும் நோக்கில் நெடுஞ்சாலைகள் பிரிவுக்கு மொத்தமாக மிக உயர்ந்த முதலீடு மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கு அமைய தேசிய, மாகாண மற்றும் கிராமிய வீதிகளும் உள்ளடக்கப்பட்டு நாட்டின் வீதி வலையமைப்பை முன்னேற்றுவதன் மூலம் பிரயாணிகளுக்கு தமது இலக்கினை அடைவதற்கு இலகுவாக பிரவேசிக்க கூடியதாக இருத்தல், எரிபொருள் சிக்கனம், போக்குவரத்து செலவினைக் குறைத்தல், வீதி நெருக்கடியை குறைத்தல் போன்ற சாதகமான காரணங்களினால் இந்த பிரிவுக்கு மேற்கொள்ளப்படும் முதலீடுகள் மிகவும் உயர்ந்த பொருளாதார பெறுமதியினை உருவாக்குகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. இலங்கை தேசிய நெடுஞ்சாலைகள் வலையமைப்பு 2023 ஆம் ஆண்டு இறுதி வரையில் அண்ணளவாக 12,568 கிலோ மீட்டரை கொண்டதாக உள்ளதுடன் அது “ஏ’’ தரத்திலான நெடுஞ்சாலை தூரம் 4,217.42 கிலோ மீட்டரையும், “பி’’ தரத்திலான நெடுஞ்சாலையின் தூரம் அண்ணளவாக 8,037.98 கிலோ மீட்டரையும், அதிவேக நெடுஞ்சாலைகளின் தூரம் அண்ணளவாக 312 கிலோ மீட்டரையும், 4,254 பாலங்களையும் கொண்டுள்ளது.





உரு. இல.: 2.23 இலங்கையின் தேசிய நெடுஞ்சாலைகள் வலையமைப்பு

2023 ஆம் ஆண்டில் ஒவ்வொரு பிரிவினதும் வருடாந்த மதிப்பீட்டிற்கு அமைய கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் நிறைவேற்றப்பட வேண்டி இருந்தன.

| | |
|---|---|
| **கடமைப் பொறுப்புகள்** | வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் விடயத்திற்கு மற்றும் இணைக்கப்பட்ட நிறுவனங்களுக்கு உரிய கொள்கைகள், வேலைத் திட்டங்கள் மற்றும் செயற் திட்டங்களைத் தயாரித்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் செயல்படுத்துதல. |
| | கிராமப்புறம் மற்றும் நகர்ப்புற இடங்களைத் தொடர்பு படுத்தி மக்களை மையமாகக் கொண்டு பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி ஏற்படும் வகையில் உயர் தரத்தினை கொண்ட வகையில் தேசிய நெடுஞ்சாலைகள் ஒழுங்கமைப்பினை அபிவிருத்தி செய்தல் மற்றும் சிறந்த தரத்தில் பேணிச் செல்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல். |
| | அதிவேக நெடுஞ்சாலைக் கட்டணத்தைத் தீர்மானித்தல், சேகரித்தல் மற்றும் ஒழுங்குறுத்தல். |
| | அரச முன்னுரிமை மற்றும் தேசிய கொள்கையை அடிப்படையாகக் கொண்டு பிரதேச மற்றும் மாகாண நிர்வாக நிறுவனங்களுக்கு சொந்தமான வீதிகள் தொடர்பில் வேலைத் திட்டங்கள் மற்றும் செயல் திட்டங்களைத் தயாரித்து அவற்றை இணைத்தல் மற்றும் கண்காணித்தல். |

## நிதியேற்பாடு பயன்படுத்தப்படல்

2023 ஆம் ஆண்டில் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செலவுத் தலைப்பிற்கு ரூபா. 377,837 மில்லியன் ஒதுக்கீடு பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன், 2023 ஆம் ஆண்டு இறுதி வரையில் அதில் ரூபா.250,575 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு 2023 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முந்தைய 05 ஆண்டுகளுக்காகக் கிடைத்திருந்த ஒதுக்கீட்டுத் தொகை, செலவிடப்பட்ட தொகை மற்றும் எஞ்சிய தொகை என்பன பின்வருமாறு ஆகும்.




| | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|---|---|---|
| ஒதுக்கீடு(ரூபா.மில்லியன்) | 218,534 | 284,665 | 298,027 | 410,118 | 272,062 | 377,837 |
| செலவு(ரூபா.மில்லியன்) | 185,920 | 177,644 | 258,646 | 230,297 | 214,962 | 250,575 |
| மீதி (ரூபா. மில்லியன்) | 32,614 | 107,021 | 39,382 | 179,821 | 57,099 | 127,262 |

**உரு இல. 2.24: கடந்த 6 வருட காலப்பகுதியில் அமைச்சுக்கு வழங்கியிருந்த நிதியேற்பாடு, பயன்பாடு மற்றும் சேமிப்பு**

மூலம் - வருடாந்த நிதிக்கூற்றுக்கள்

2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரையிலான கடந்த 06 வருட காலத்தினுள் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்த மொ்த ஒதுக்கீடு ரூபா. 1,861,243 மில்லியனாக இருந்ததுடன் மொத்த செலவு ரூபா. 1,308,044 மில்லியனாக இருந்ததனால் மொத்த ஒதுக்கீட்டில் ரூபா. 553,199 மில்லியன் அதாவது 30 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**கணக்காய்வு அவதானிப்பு**

**வீதி அபிவிருத்தி அதிகார சபை**

**வீதி ஒழுக்கமைப்பு அபிவிருத்தி ஆலோசனை சபையினை செயல்படு நிலைமையில் வைத்திருக்காமை**

உயர் வீதி ஒழுங்கமைப்புக் கொள்கையினைத் தயாரிப்பதற்கு, முறையாக அபிவிருத்தி செய்வதற்கு, வீதிகள் தொடர்பில் ஆராய்ச்சிகள் மற்றும் வீதிப் பாதுகாப்பு தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு, அதிகார சபையினால் அனுப்பப்படும் வீதித் திட்டம் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு விடயப் பொறுப்பு அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவதற்காக 2008 இன் 40 ஆம் இலக்க தேசிய நெடுஞ்சாலைகள் அதிகார சட்டத்தின் 6 (1) பிரிவின் கீழ் தாபிக்கப்பட வேண்டிய “வீதி ஒழுங்கமைப்பு அபிவிருத்தி ஆலோசனைச் சபை” தாபிக்கபட்டிருந்த போதிலும், அந்த சபை செயல்படும் நிலைமையில் இருக்கவில்லை.

**ஒன்றிணைந்த வீதி ஒழுங்கமைப்பு**

அதிகாரச்சட்டத்தின் 7(1) பிரிவின் பிரகாரம்

| | |
|---|---|
| **அபிவிருத்தி மற்றும் பராமரிப்புக்கான செயல்நடவடிக்கைத் திட்டம்** | அனைத்து மாவட்டங்களுக்கும் மாவட்ட வீதி ஒழுங்கமைப்பு அபிவிருத்தி ஒருங்கமைப்புக் குழு ஒன்று நியமிக்கப்பட்டு அந்த சட்டத்தின் 7(3) பிரிவின் பிரகாரம் வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தினை தீர்மானமாக குறிப்பிடும் ஒன்றிணைந்த வீதி ஒழுங்கமைப்பு அபிவிருத்தி மற்றும் பராமரிப்புக்கான செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **வீதிகளின் பெறுமதி மூலதனம் ஆக்கப்படாமை** | வீதி அபிவிருத்தி அதிகார சபையின் விடயப் பரப்பிற்கு சொந்தமான A மற்றும் B தரங்களுக்கு உரிய நெடுஞ்சாலைகளின் மொத்த தூரம் 12,225 கிலோ மீட்டராக இருந்த போதிலும் தேசிய நெடுஞ்சாலைகள் மூலதனமாக்கல் ஆரம்பிக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 285 வீதிகளுக்கு உரிய 3,267 கிலோ மீட்டர் மட்டுமே மூலதனமாக்கப்பட்டிருந்தது. அதற்கு அமைய மொத்த வீதி ஒழுங்கமைப்புத் தூரத்தில் 73 சதவீதமான 8,958 கிலோ மீட்டர் வீதிகளுக்கான பெறுமதி நிதி நிலைமைக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. |
| **அதிகாரசபையின் விடயப்பரப்பிற்கு உரித்தல்லாத வீதிப் புனர்புநிர்மாணம்** | மகநெகும கிராமிய வீதி அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் 6,426 கிலோ மீட்டர் வீதிகளை புனர்நிர்மாணம், திருத்த வேலைகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு செலவிடப்பட்ட ரூபா. 3,810 மில்லியன் உள்ளிட்ட, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் விடயப் பரப்பிற்கு உரித்தல்லாத வீதி புனர்நிர்மாணம் செய்தலுக்காக 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா. 147,153 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. |
| **நிலுவை பற்றுக்களைத் தீர்ப்பதற்கு திறைசேரி பிணையங்கள் வழங்கியமை** | உள்நாட்டு வங்கி மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் தொகைக்கான கடன் வட்டி மற்றும் தவணையாக 2023 திசெம்பர் 31 ஆம் திகதி நிலுவையாக இருந்த பற்றுக்களைத் தீர்ப்பதற்காகத் திறைசேரியிடமிருந்து நிதி கோரப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா. 39,956 மில்லியன் திறைசேரி பிணையங்கள் (Treasury Bonds) வழங்கப்பட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக 100,000 வீதி வேலைத் |

திட்டத்திற்கு உரியதான 34 ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்தப்பட வேண்டி இருந்த ரூபா. 9,298 மில்லியனுக்கும் மத்திய அதிவேக வீதி நிர்மாணம் II ஆம் கட்ட விலைப் பட்டியலைத் தீர்ப்பதற்கான ரூபா. 11,582 மில்லியனுக்கும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் திறைசேரி பிணையங்கள் வழங்கப்பட்டிருந்தன.

**2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் அதிகார சபையின் கடன் மீதி**

அதிகார சபையினால் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் உள்நாட்டு வங்கிகள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்களில் மீளச் செலுத்துவதற்கு இருந்த கடன் மீதி ரூபா. 408,541 மில்லியனாக இருந்ததுடன், கடன் பெற்றுக் கொண்டதனால் 06 வருட காலப் பகுதியினுள் உள்நாட்டு வணிக வங்கிகளுக்கு செலுத்துவதற்கு நேரிட்டிருந்த வட்டித் தொகை ரூபா. 178,028 மில்லியனாக இருந்தது. மேலும், 2023 ஆம் ஆண்டின் இறுதியில் செலுத்தப்பட வேண்டி இருந்த கடன் வட்டி ரூபா. 36,086 மில்லியனும், செலுத்தப்பட வேண்டிய கடன் தவணைகளின் பெறுமதி ரூபா. 342,070 மில்லியனும் ஆகும்.

**ஒப்பந்தக்காரர்களுக்கான கொடுப்பனவு**

2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஓகஸ்ட் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் ஒப்பந்தக்காரர்களுக்கான கொடுப்பினவிற்கு நிர்மாண பாதுகாப்பு நிதியத்திற்கு ரூபா. 32,553.12 மில்லியன் விடுவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு விடுவிக்கப்பட்ட தொகையில் ரூபா. 2,242 .2 மில்லியன் 2023 ஆம் ஆண்டு இறுதி வரையில் குறித்த நிதியத்தினால் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. 212 ஒப்பந்தங்களுக்கு உரிய ரூபா. 1,492.82 மில்லியன் பெறுமதியினைக் கொண்ட திறைசேரி பிணையாங்கள் மற்றும் ரூபா. 29.94 மில்லியன் பெறுமதியான விலைப் பட்டியல்கள் மேலே கூறப்பட்ட முறைமைக்குப் புறம்பாக நேரடியாக ஒப்பந்தக்காரர்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா. 29.94 இற்கான விலைப்பட்டியல்கள் போலியானவை என்பது அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

**அதிவேக வீதி கட்டண வருமானத்தில் மோசடி செய்தல்**

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் நெடுஞ்சாலை கட்டண வருமானத்திலிருந்து ரூபா 2.07 மில்லியன் 2021 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 30 ஆம் திகதி வரை தங்கள் பணிகளைச் செய்த 16 அதிகாரிகளால் மோசடி செய்யப்பட்டுள்ளது தெரியவந்தது. தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் 2011 ஆம் ஆண்டு தற்காலிகமாக நிறுவப்பட்ட சிறாப்பர் முறையானது இதுவரை முறையான கட்டுப்பாட்டின்றி நடைமுறைப்படுத்தப்பட்டமை மற்றும் நவீன தொழில்நுட்பத்தின் படி பணம் செலுத்தக்கூடிய மென்பொருள் கட்டமைப்பை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தால் தெற்கு அதிவேக பாதையில் பயணிக்கும் வாகனங்களின் தினசரி வருமானத்தில் கணிசமான சதவீதத்தை ஏமாற்றுவதற்கு சந்தர்ப்பம் காணப்பட்டது.

**அதிவேக வீதிகளில் அமைக்கப்பட்டுள்ள சொத்துக்களை பாதுகாத்தல்**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியங்களைப் பயன்படுத்தி சுமார் ரூபா. 767.630 பெறுமதியினைக் கொண்ட 312.6 கிலோ மீட்டர் நீளமான அதிவேக வீதி நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் இந்த அனைத்து வீதிகளினதும் நிர்வாகம் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. இலங்கை பொலிசுக்கு வசதிகளை வழங்குதல் உள்ளிட்ட செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக ரூபா. 2,000 மில்லியனுக்கும் அதிகமான செலவு வருடாந்தம் செலவிடப்பட்டு வந்துள்ள போதிலும், அதிவேக வீதியில் அமைக்கப்பட்டுள்ள சொத்துக்களைப் பாதுகாப்பதற்குப் போதுமான அளவு பாதுகாப்பு வேலைத் திட்டங்களைத் தயாரிப்பதற்கு அதிகார சபை தவறி இருந்தது. அனைத்து நட்டங்களையும் பதிவிடும் வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு இருக்காதுடன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் அதிவேக வீதிகளுக்கு உரிய பதிவிடப்பட்டிருந்த அனைத்து சொத்துக்களினதும் களவாடப்பட்ட மற்றும் சேதமடைந்த பெறுமதி மட்டும் ரூபா. 913.17 மில்லியன் என மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

**வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் நிர்வகிக்கப்படும் நிறுவனங்கள்**

**வ/ப அதிவேக வீதிப் போக்குவரத்து (தனியார்) கம்பனி**

| | |
|---|---|
| **கம்பனியை கூட்டிணைத்தல்** | அமைச்சரவையின் முன் அனுமதியின்றி வீதி அபிவிருத்தி அதிகார சபையின் முழுமையான உரிமைத்துவத்தின் கீழ் இணைந்த நிறுவனமாக ''எக்ஸ்பிரஸ்வே ட்ரான்ஸ்போர்ட் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்'' இனைத் தாபிப்பதற்கு உரியதான இலக்கம் 1551/2014 கொண்ட பணிப்பாளர் சபைப் பத்திரம் 2014 ஏப்ரல் 07 ஆம் திகதி பணிப்பாளர் சபை அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலே கூறப்பட்ட பணிப்பாளர் சபைப் பத்திரத்துடன் முன்மொழியப்பட்ட நிறுவனத்தின் கூட்டமைப்பு விதிகள் வரையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை எனினும் அது தொடர்பில் கவனத்தில் கொள்ளாது பணிப்பாளர் சபையினால் முறையற்ற ரீதியில் அனுமதி வழங்கியிருந்த காரணத்தினால் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு முழுமையான உரிமைத்துவத்தினைக் கொண்ட நிறுவனமாக 2007 இன் 07 ஆம் இலக்க நிறுவன சட்டத்திற்கு அமைய 2014 மே 06 ஆம் திகதி இலக்கம் PV 98435 இன் கீழ் கம்பனி கூட்டிணைக்கப்பட்டிருந்தது. |
| **கூட்டிணைத்தல் தொடர்பான அமைச்சரவைத் தீர்மானம்** | வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் நிறுவனம் ஒன்றினைத் தாபிப்பதற்கு ஒதுக்கீடு இல்லை என நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அவதானிப்பினை அடிப்படையாகக் கொண்டு ''எக்ஸ்பிரஸ்வே ட்ரான்ஸ்போர்ட் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்'' நிறுவனம் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சின் கீழ் செயல்படும், முழுமையான ரீதியில் அரசாங்கத்திற்கு (பொதுத் திறைசேரி) சொந்தமான நிறுவனமாக 2007 இன் 07 ஆம் இலக்க நிறுவனச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட வேண்டும் எனவும் புதிய நிறுவனம் பொதுத் திறைசேரியின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இருக்க வேண்டியதுடன் நிறுவனத்தின் உரிமைத்துவம் மற்றும் பணிப்பாளர் சபையினை நியமிப்பதற்குத் தேவையான ஒழுங்கு விதிகள் உள்ளடக்கப்பட்டு கூட்டமைப்பிற்கான பொதுத் திறைசேரியின் முன் அனுமதியினை பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் 2014 மே 08 |

ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு இணங்கியிருக்கவில்லை.

**நிதிக்கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை**

2021 நவம்பர் 16 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 01/2021 கொண்ட அரச வணிக சுற்றறிக்கையின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்று மற்றும் வருடாந்த அறிக்கை வரைவு என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரையில் தொடர்ச்சியாக 08 நிதியாண்டுகளுக்கு நிதிக்கூற்று மற்றும் வருடாந்த அறிக்கை வரைபு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

இந்த கம்பனி தோல்வியடைந்த காரணத்தினால் அதன் பணிப்பாளர் சபை கலைக்கப்படுதல் மற்றும் முடிவுறுத்தல்காரர் ஒருவரினின் ஊடாக நிறுவனத்தின் நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு 2023 ஜூன் 26 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளருக்கு கட்டளையிடப்பட்டிருந்தது. அதற்கமைய ரூபா. 216 மில்லியன் பெறுமதியினைக் கொண்ட 20 சொகுசு பேருந்துகள் மற்றும் அதிவேக வீதியில் பேருந்துகளை செலுத்தும் தடவைகளில் 15 சதவீதம் இலங்கை போக்குவரத்து சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் நிறுவனத்தினைக் கலைக்கும் நடவடிக்கைகள் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் நிறைவு செய்யப்பட்டு இருக்கவில்லை.

## மகநெகும இமல்ஷன் உற்பத்தித் தனியார் கம்பனி

**கம்பனியை கூட்டிணைத்தல்**

அமைச்சரவையின், திறைசேரியின் மற்றும் நிரல் அமைச்சின் அனுமதியின்றி மகநெகும இமல்ஷன் உற்பத்தி தனியார் கம்பனியை தாபிப்பதற்கு இலக்கம் 795/2004 கொண்ட 2004 ஜூன் 09 ஆம் திகதி இடப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் தீர்மானத்திற்கு அமைய மேலே கூறப்பட்ட நிறுவனம் 2004 ஜூன் 10 ஆம் திகதி PV 37809 எனும்

இலக்கத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டிருந்தது.

**கம்பனியின் வெளியிடப்பட்ட மூலதனம்**

அமைப்பு அகவிதிகளுக்கு அமைய நிறுவனத்தின் கூறப்பட்ட மூலதனம் ரூபா.100 வீதமான ஒரு மில்லியன் பங்குகள் அதாவது ரூபா. 100 மில்லியன் பங்கு மூலதனத்தினை கொண்டிருக்க வேண்டிய போதிலும் நிறுவனத்தின் முன்னேற்றங்களாக ரூபா. 100 பங்கு வீதம் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கும் மற்றும் தனியார் தரப்பினருக்கும் 02 பங்குகள் வழங்கப்பட்டிருந்தன. 2013 பெப்ரவரி 14 ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்தில் திருத்தப்பட்ட இலக்கம் 13/0134/505/004 கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்துக்கு அமைய நிறுவனத்தின் உரிமையில் அதிக பங்கினைத் திறைசேரிக்கு உரிமையாகும் வகையிலும் மற்றும் மீதிப் பங்கு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கும் கிடைக்கும் வகையில் கம்பனியின் கூட்டமைப்பு விதிகளைத் திருத்துவதற்குக் கொண்டுவரப்பட்டிருந்த கொள்கை தீர்மானம் இதுவரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**அதிகார சபைக்கு எதுவிதமான நிதி நலன்களும் கிடைத்திருக்காமை**

கம்பனியின் முக்கிய வாடிக்கையாளர் வீதி அபிவிருத்தி அதிகார சபையாக உள்ளதுடன் நிறுவனத்தின் செயல்பாடுகளுக்கு பயன்படுத்தப்படும் நிலையான சொத்துக்களில் அதிக சதவீதம் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்பட்டிருந்தது. இறுதியாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கு அமைய, நிறுவனத்தின் வருடாந்த விற்பனை வருமானம் ரூபா. 238 மில்லியனாக இருந்ததுடன் அதில் 94 சதவீதம் அதாவது ரூபா.223 மில்லியன் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு செய்யப்பட்ட விற்பனைகள் ஆகும். எனினும் அதற்கு முந்தைய 17 வருட காலத்தினுள் அதிகார சபைக்கு எதுவித நிதி நலன்களும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## மகநெகும நிர்மாணிப்பு இயந்திராதிகள் தனியார் கம்பனி

**கம்பனியைக் கூட்டிணைத்தல்**

அமைச்சரவையின் கொள்கைத் தீர்மானமின்றி, திறைசேரியின் மற்றும் நிரல் அமைச்சின் அனுமதியின்றி மகநெகும நிர்மாணிப்பு இயந்திராதிகள் தனியார் நிறுவனத்தினைத்

| | |
|---|---|
| | தாபிப்பதற்கு இலக்கம் 795/2004 கொண்ட 2004 ஜூன் 09 ஆம் திகதி இடப்பட்ட பணிப்பாளர் சபைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் தீர்மானத்திற்கு அமைய மேலே கூறப்பட்ட கம்பனி 2004 ஜூன் 11 ஆம் திகதி PV 37844 எனும் இலக்கத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டிருந்தது.<br><br>2013 பெப்ரவரி 18 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 13/0134/505/2004 கொண்ட அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய நிறுவனத்தின் உரிமையில் அதிக பங்கினைத் திறைசேரிக்கு உரிமையாகும் வகையிலும் மற்றும் மீதிப் பங்கு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கும் கிடைக்கும் வகையில் நிறுவனத்தின் கூட்டமைப்பு விதிகளைத் திருத்துவதற்குக் கொண்டுவரப்பட்டிருந்த கொள்கை இதுவரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| **100,000 கிலோ மீட்டர் நீளமான வீதி செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்** | 100,000 கிலோ மீட்டர் நீளமான வீதி செயற்திட்டத்தின் நிர்மாணிப்புக்காக ரூபா. 193,518 மில்லியனான 2,481 வேலைக் கட்டளைகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் வரையறுக்கப்பட்ட மகநெகும நிர்மாணிப்பு இயந்திராதிகள் தனியார் நிறுவனத்திற்கு 2020, 2021, 2022 ஆம் ஆண்டுகளில் வழங்கி இருந்தது. 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அதில் ரூபா. 131,650 மில்லியனான 1824 வேலைக் கட்டளைகளின் ஒப்பந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா.32,736 மில்லியனான 351 வேலைக் கட்டளைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. மேலும் ரூபா. 29,130 மில்லியனான 306 வேலைக் கட்டளைகளின் ஒப்பந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| **சேவை வழங்குனர்களின் ஊடாக ஒப்பந்த வேலைகளை மேற்கொள்ளுதல்** | ஒப்பந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த 1,824 வேலைக் கட்டளைகளில் ரூபா. 5,920 மில்லியனுக்கான 71 வேலை கட்டளைகளின் ஒப்பந்த வேலைகள் மட்டும் நிறுவனத்தினால் நேரடியாக மேற்கொள்வதற்கு கையேற்றப்பட்டிருந்ததுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் இலக்கம் 2008/1109 கொண்டதும் மற்றும் 2008 ஓகஸ்ட் 01 ஆம் திகதி இடப்பட்டதுமான பணிப்பாளர் சபைத் |

தீர்மானத்திற்கு இணங்காது ரூபா. 125,730 மில்லியனான 1,753 வேலைக் கட்டளைகளின் ஒப்பந்த வேலைகளை சேவை வழங்குனர்களின் ஊடாக மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. வீதி அபிவிருத்தி அதிகார சபை 25 சதவீத இலாபத்துடன் நிறுவனத்திற்கு வழங்கியிருந்த வேலைக் கட்டளைகள் நிறுவனத்தினால் 20 சதவீத இலாபத்துடன் உப ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. நிறுவனமானது, வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் சேவை வழங்குனர்கள் இடையே, இடைத்தரகராக இந்த முறையில் செயல்பட்டு 05 சதவீத இலாபமாக 2021 ஆம் ஆண்டினுள் ரூபா. 652 மில்லியனை ஈட்டியிருந்தது.

100,000 கிலோ மீட்டர் நீள வீதி செயற்திட்டத்தில் நிர்மாணிப்பிற்காக இந்த சேவை வழங்குனரைத் தெரிவு செய்யும்போது பெறுகை முறைமை பின்பற்றப்பட்டு இருக்காதுடன் வெளிப்படைத் தன்மை இல்லாது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**வலய ஒருங்கிணைப்பாளர்களை ஆட்சேர்ப்பு செய்தல்**

100,000 கிலோ மீட்டர் நீள வீதி செயல்திட்டத்தில் நிர்மாணம் மற்றும் முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்வதற்காக மாகாணம், மாவட்டம் மற்றும் வலய ஒருங்கிணைப்பாளர்களை ஆட்சேர்ப்பு செய்திருந்ததுடன், 2021 ஆம் ஆண்டினுள் அவர்களுக்காக ரூபா. 39 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. முறையான மற்றும் வெளிப்படைத் தன்மையில் இந்த ஒருங்கிணைப்பாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனரா எனவும் மற்றும் அவர்களது நிர்மாண முன்னேற்ற மதிப்பீடு உண்மையான ரீதியில் மேற்கொள்ளப்பட்டதா எனவும் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை.

**அதிகார சபைக்கு எதுவித நிதி நலன்களும் கிடைத்திருக்காமை**

கம்பனியின் முழுமையான உரிமை வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் காணப்பட்ட போதிலும் கடந்த 17 வருட காலத்தினுள் வீதி அதிகார சபைக்கு எதுவித நிதி நலன்களும் கிடைத்திருக்கவில்லை.

## மகநெகும ஆலோசனை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ சேவைகள் தனியார் கம்பனி

**உற்பத்தி நடவடிக்கைகள்**

சாத்தியக்கூறு ஆய்வுகள் மற்றும் நிர்மாண செயற்திட்டத்திற்கான ஆலோசனை சேவைகளை வழங்குவதும், வீதி நிர்மாண நடவடிக்கைகள் மற்றும் புனர் நிர்மாண பிரிவுக்கான செயற்திட்ட முகாமைத்துவ நடவடிக்கைகளை வழங்குவதும் நிறுவனத்தினைத் தாபித்ததன் பிரதான நோக்கமான போதிலும் 2023 மார்ச் 20 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் CP/23/0394/608/033 கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய நிறுவனம் கலைக்கப்பட்டு செயற்பாட்டு நடவடிக்கைகள் முடிவுறுத்தும் வரையில் ஊழடன அ஌ை உற்பத்தியின் சந்தைப்படுத்தல் மற்றும் நிர்மாண நடவடிக்கைகள் மட்டும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

நிர்மாணத்துறை நிதி நெருக்கடிக்கு உட்பட்ட காரணத்தால் போதியளவில் வியாபார சந்தர்ப்பங்கள் இல்லாததால் இந்த நிறுவனம் உள்ளிட்ட மேலே குறிப்பிடப்பட்ட மகநெகும நிறுவனங்கள் மூன்றையும் கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளருக்குக் கட்டளையிடுவதற்கு அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் இணக்கப்பாடின்றி நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினால் தீர்ப்பனவு செய்பவர் ஒருவர் நியமிக்கப்பட்டு இருந்தார். விருப்பு ஓய்வூதிய முறைமையின் (VRS) கீழ் இந்த நிறுவனத்தின் அனைத்து ஊழியர்களையும் சேவையிலிருந்து அகற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ள பின்புலத்தில் விருப்பத்தின் பேரில் ஓய்வு பெற்ற பதவியணியினரில் 25 பேர் நிறுவனத்தின் கலைத்தல் நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காக மீளவும் ஆட்சேர்ப்பு செய்வதற்கு 2023 ஓகஸ்ட் 11 ஆம் திகதி பணிப்பாளர் சபை மீண்டும் தீர்மானித்திருந்தது. 2023 மே மாதம் வரையில் நிறுவனத்தின் கலைத்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்காதுடன், 2023 செப்டம்பர்

தொடக்கம் திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் அவர்களுக்கு சம்பளம் மற்றும் படிகளாக ரூபா. 7.79 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## அரசு நிதியின் மூலம் செயல்படுத்தப்பட்ட செயல்திட்டங்களின் தற்போதைய முன்னேற்றம்

### 100,000 கிலோமீட்டர் மாற்று வீதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டம்

**செயற்திட்ட நடவடிக்கைகள் இடை நடுவில் நிறுத்தப்பட்டமை**

100,000 கிலோ மீட்டர் நீளமான வீதி செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2020 - 2023 காலப் பகுதியினுள் ரூபா. 167,306 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட 17,847 கிலோமீட்டர் வீதியில் 11,549 கிலோ மீட்டர் அதாவது 65 சதவீதம் இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்தது.

செயற்திட்டத்தின் இடை நடுவில் வேலைகள் நிறுத்தப்பட்ட வீதிகளை மீண்டும் பயணிக்கும் நிலைமைக்கு மாற்றுவதற்கு அமைச்சரவையினால் வழங்கப்பட்டிருந்த அனுமதியினைக் கவனத்தில் கொள்ளாது ரூபா. 2,891.24 மில்லியனான மதிப்பீட்டு செலவினைக் கொண்ட 212.3 கிலோ மீட்டர் நீளமான புதிய வீதியினை அபிவிருத்தி செய்வதற்கு தெரிவு செய்யப்பட்டிருந்தது.

**ஒப்பந்தக்காரர்களுக்கு கூடுதலான கொடுப்பனவு**

செயற்திட்டத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த சேவைகளுக்காக ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய பிணை தொடர்பில் சரியான கணக்கீடு செய்யப்படாது இரண்டு சந்தர்ப்பங்களில் திறைசேரியினால் ரூபா. 40,651.55 மில்லியனான பிணையங்கள் விடுவிக்கப்பட்டிருந்தன. அதில் 9 ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா. 121.24 மில்லியன் பெறுமதிக்குரிய சேவைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பது பின்னர் அடையாளம் காணப்பட்டிருந்தது. அதில் கூடுதலாக செலுத்தப்பட்ட பெறுமானத்திற்குச் சமனான தொகை ஒப்பந்தக்காரர்களினால் மீளவும் செலுத்தப்பட்டிருந்தது எனினும் அந்தத் தொகை பொதுத் திறைசேரிக்கு மாற்றப்படாது முறையான அதிகார பலமின்றி வேறு செலவுகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அது

| | |
|---|---|
| | தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களை இனம் கண்டு ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு அல்லது அதன் அடிப்படையில் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **செயலாற்றல் பிணைமுறிகள் அறவிடப்பட்டிருக்காமை** | இந்த செயற்திட்டத்திற்கு உரியதான நிர்மாண பாதுகாப்பு நிதியத்தினால் 313 ஒப்பந்தக்காரர்களுக்காக ரூபா. 1,800 மில்லியன் செயலாற்றுகைப் பிணையங்கள் மற்றும் ரூபா. 452.2 மில்லியன் வேலை ஆரம்பித்தல் முற்பணப் பிணையங்கள் வழங்கப்பட்டிருந்தன. 2023 ஆம் ஆண்டு இறுதி வரையிலான 2 வருடத்திற்கும் அதிக காலம் தொட்டு எதுவித செயல்பாடுகளும் ஆரம்பிக்கப்படாது 09 ஒப்பந்த பொதிகளுக்குரிய ரூபா. 52.73 மில்லியனும் உள்ளடங்களாக 22 ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா. 259.26 மில்லியன் வேலை ஆரம்பித்தல் முற்பணத்தினை அந்த நிதியத்தில் இருந்து அறவிடுவதற்கு அதிகார சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## மத்திய அதிவேக வீதி செயற்திட்டம்

கடவத்தை தொடக்கம் தம்புள்ள வரையிலான 170 கிலோ மீட்டர் நீளமான மத்திய அதிவேக வீதி செயற்திட்டம் I மற்றும் II, ஆம் பகுதிகள் முறையே 2020 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், III ஆம் பகுதியின் நிர்மாண ஒப்பந்த வழங்குதல் 2021 ஆம் ஆண்டில் மற்றும் IV ஆம் பகுதியின் காணியினை கையகப்படுத்துதல் மற்றும் பெறுகை நடவடிக்கைகள் 2016 ஆம் ஆண்டில் எனும் ரீதியில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்கு உரியதான ரூபா. 638,072 மில்லியனான மதிப்பீட்டு பெறுமதியில் 42 சதவீதம் அதாவது ரூபா. 268,363 மில்லியன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிர்மாணம், காணி கையகப்படுத்துதல் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ அலகிற்காக செலவிடப்பட்டிருந்தது.

| கட்டம் | தூர அளவு கிலோ மீட்டர் | மதிப்பீடு செய்யப்பட்ட செயல்திட்ட பெறுமதி (ரூபா. மில்லியன்) | 2023.12.31 ஆம் திகதியில் செலவு (ரூபா. மில்லியன்) | பௌதிக முன்னேற்றம் மற்றும் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| **மத்திய அதிவேக வீதி செயற்திட்டம் I (கடவத்தை தொடக்கம் மீரிகமை** | 36.59 | 177,220 | 94,917 | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் பௌதிக முன்னேற்றம் 35.95 சதவீதமாக இருந்ததுடன் 2024 ஜூலை 31 ஆம் |

| | | | | |
|---|---|---|---|---|
| **வரையில் )** | | | | திகதியில் பௌதிக முன்னேற்றம் 36.02 சதவீதம் ஆகும் |
| **மத்திய அதிவேக வீதி செயற்திட்டம் II (மீரிகமை தொடக்கம் குருணாகல் வரையில்)** | 40.91 | 149,021 | 151,510 | 2022 ஜனவரி 15 ஆம் திகதியில் வேலை நிறைவு செய்யப்பட்டுப் பொதுமக்களுக்கு பாவனைக்கு திறக்கப்பட்டிருந்தது. |
| **மத்திய அதிவேக வீதி செயற்திட்டம் III (பொத்துகர தொடக்கம் கலகெ தர வரையில்)** | 34.12 | 132,000 | 19,597 | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் செயற்திட்டத்தின் முதலாவது பகுதியில் நிர்மாணிப்புகளின் பௌதீக முன்னேற்றம் 17 ஒப்பந்த பொதிகளில் 16 இல் 12 சதவீதம் - 43 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டதுடன் மீதி பொதிகளில் 75 சதவீதம் ஆகும். இரண்டாவது பகுதியில் காணி கையகப்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் முதலீட்டாளர் இல்லாத காரணத்தால் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| **மத்திய அதிவேக வீதி செயற்திட்டம் IV (குருணாகல் தொடக்கம் தம்புள்ள வரையில்)** | 59.30 | 179,831 | 2,339 | 2016 ஆம் ஆண்டில் காணி கையகப்படுத்தல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டு இறுதி வரையில் 350 தனியார் காணித் துண்டுகள் கையகப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. 03 சந்தர்ப்பங்களில் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவை தோல்வி அடைந்திருந்தன. 2022 திசெம்பர் 13 ஆம் திகதி தொடக்கம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. |
| **மொத்தம்** | **170.92** | **638,072** | **268,363** | |

**அட்டவணை இல. 2.14 : 2023-12-31 ஆந் திகதியிலி உள்ளபடியாக மத்திய அதிவேக வீதிச் செயற்திட்டத்தின் நிர்மாண முன்னேற்றம்**

**முதலாவது 500 மீட்டர் பகுதியினை நிறைவு செய்திருக்காமை**

வெளிச்சுற்று வட்ட அதிவேக வீதி செயற்திட்டத்தின் கீழ் கடவத்தை தொடக்கம் மீரிகம வீதியில் முதலாவது 500 மீட்டர் பகுதியை நிறைவு செய்யாது 2015 ஆம் ஆண்டில் முடிவுறுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பில் கவனத்தில் கொள்ளாது கடவத்தை தொடக்கம் மீரிகம வரையிலான 36.59 கிலோ மீட்டர் கொண்ட மத்திய அதிவேக வீதி செயற்திட்டத்தின் ஐ ஆவது பகுதி ரூபா. 177,220 மில்லியனுக்கு 2015 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்தது. முதலாவது 500 மீட்டர் பகுதிக்குரிய பெறுகை நடவடிக்கைகள் இதுவரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் மேலே கூறப்பட்ட 500 மீட்டரை நிறைவு செய்யாது கடவத்தை தொடக்கம் மீரிகம வரையிலான பகுதியினை வாகனப் போக்குவரத்துக்கு பொருத்தமான வகையில் பூர்த்தி செய்ய முடியாது என்பது அவதானிக்கப்பட்டது.

**பொத்துஹர தொடக்கம் கலகெதர வரையான மூன்றாவது கட்டம்**

பொத்துஹர தொடக்கம் கலகெதர வரையில் செல்லும் அதிவேக வீதியின் மூன்றாவது கட்டத்திற்காக வழங்கப்பட்ட 2021 ஜனவரி 11 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் அமப/20/2072/319/021 கொண்ட அமைச்சரவை அனுமதிக்கு அமைய மொத்த நீளத்தில் முதலாவது 12 கிலோ மீட்டர் நிர்மாண நடவடிக்கைகள் 2021 ஜனவரி மாதத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் நேரடியாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. கொவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் பொருளாதார நெருக்கடியின் பின்னர் 2023 ஜூலை மாதம் தொடக்கம் செயற்திட்ட நிர்மாண நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

**தாமதக் கட்டணம் செலுத்தும் ஆபத்து**

மத்திய அதிவேக வீதி செயற்திட்டத்தின் 1 ஆவது பகுதியில் பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளுக்காக ஒப்பந்தக்காரருக்கு 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா. 40,348 மில்லியன் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, ஒப்பந்த உடன்படிக்கையின் பொது நிபந்தனைகளுக்கு அமைய தாமதக்

கட்டணம் செலுத்தும் ஆபத்து காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

மத்திய அதிவேக வீதி செயற்திட்டத்தின் 1 ஆவது கட்டத்தில் ஒப்பந்தக்காரரின் விலைப்பட்டியல் மீள் நிரப்பு செய்யப்படாததனால் ஒப்பந்தக்காரர் நிர்மாண நடவடிக்கைகளை நிறுத்தி இருந்தார். 2023 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் விநியோகிக்கப்பட்டிருந்த 1284 beams தாபிக்கப்பட்டிருந்ததுடன், இன்னமும் 554 beams தாபிக்கப்படாது 09 வேலைத் தள வளாகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. 2024 மே 04 ஆம் திகதி VD 10 P1 - P2Girder இடத்தில் ஒன்று (வளை) உடைந்து விழுந்தமை மற்றும் இரண்டு Girders சாய்ந்து உள்ளமை இடம்பெற்றுள்ளது. அதே போன்று களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள மற்றும் தாபிக்கப்பட்டுள்ள டிநயஅள நீண்ட காலமாக சுற்றாடலுக்கு மறைக்கப்பட்டிருக்காததால் நிர்மாணிப்புகளின் தரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

## வெளிநாட்டு நிதியங்களின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்களின் தற்போதைய முன்னேற்றம்

### கொஹுவல மற்றும் கெட்டம்பே மேம்பாலத் திட்டம் மற்றும் நிர்மாண செயற்திட்டம்

**விலைப்பட்டியல் மீளளிப்பதில் உள்ள் தாமதம்**

அடிப்படை மதிப்பீட்டுக்கு அமைய கொஹுவல மற்றும் கெட்டமிபே மேம்பால நிர்மாணிப்பில் ஒரு நாளைக்கு ரூபா. 4.26 மில்லியன் தொகை உள்நாட்டு பொருளாதாரத்திற்கு மீதப்படுத்த முடியும் என்பது இனம் காணப்பட்ட போதிலும், நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாத காரணத்தால் செயற்திட்டத்தின் பெறுபேற்றினை எட்டுவதற்கு இன்னமும் தாமதம் ஏற்பட்டிருந்தது.

2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் மொத்தமாக 20.15 மில்லியன் யூரோ பெறுமதியான 19 இடைக்காலக் கொடுப்பனவு விலைப் பட்டியல்கள் (IPC) வெளிநாட்டுக் கடன் முகவர் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அதில் 13 விலைப் பட்டியல்களுக்கு உரிய 6.3 மில்லியன் யூரோவுக்கான கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, ஒப்பந்த உடன்படிக்கையின்

| | |
|---|---|
| | பொது நிபந்தனைகளுக்கு அமைய தாமதக் கட்டணம் செலுத்தும் ஆபத்து காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. |

**கண்டி பல்லினப் போக்குவரத்து முனைய அபிவிருத்தி செயற்திட்டம்**

| | |
|---|---|
| **நிர்மாண நடவடிக்கைகள் தாமதமடைதல் மற்றும் நட்ட ஈட்டுத் தொகை செலுத்துதல்** | செயற்திட்டத்தினை 2021 மே 06 ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் சிவில் மற்றும் ஆலோசனை வேலைகளுக்கான பெறுகை செயல்முறை தாமதமடைந்த காரணத்தினால் செயற்திட்டத்தின் சிவில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. நிர்மாண நடவடிக்கைகள் தாமதமடைந்ததால் 2021 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் வியாபார நட்டமாக 825 நபர்களுக்கு ரூபா. 712 மில்லியன் நட்ட ஈடாக செலுத்தப்பட்டிருந்தது. நிர்மாண நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்யும் வரையில் இந்த நட்ட ஈட்டுத் தொகையினை தொடர்ச்சியாகச் செலுத்துவதற்கு நேரிட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டதுடன் மேலே கூறப்பட்ட நட்ட ஈடு செலுத்தப்பட்ட நபர்களிடையே 17 பேருக்கு 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்காக முறையே ரூபா. 11.49 மில்லியன் மற்றும் ரூபா. 11.69 மில்லியன் மீளவும் செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது. |

**துறைமுக நுழைவு வான்வழி செயற்திட்டம்**

| | |
|---|---|
| **தாமதக் கட்டணம் அறவிடப்படாமை** | நிர்மாணிப்பிற்குரிய ஆலோசனையாளரின் முன்னேற்ற அறிக்கைக்கு அமைய, ஒப்பந்தக்காரரினால் பொறுப்பு கூற வேண்டிய தாமதம் காணப்பட்டதுடன், எதிர்பார்க்கப்பட்ட முடிவுத் தினமான 2024 செப்டம்பர் 08 ஆம் திகதியில் நடவடிக்கைகளை நிறைவு செய்தல் நிச்சயமற்றது என்பது அவதானிக்கப்பட்டது. எவ்வாறு இருப்பினும், 2024 மே மாதம் அளவில், தாமதக் கட்டணம் அறவிடுவதற்கு செயற்திட்டத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காதுடன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் கால நீடிப்பு செலவுக்காக ரூபா. 493.03 மில்லியன் தொகை |

செலுத்தப்பட்டிருந்தது.

**பதவியணியினரின் நடமாட்ட செலவுகள் செலுத்தப்பட்டமை**

கடல்சார் வசதிகள் மத்திய நிலையக் கட்டடத்தினைப் பூர்த்தி செய்து இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையிடம் ஒப்படைத்தல் தாமதமடைந்த காரணத்தினால், இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையில் தற்போது இருக்கும் பதவியணியினரின் நடமாட்டத்திற்காக 03 மாறுபாட்டு கட்டளைகளின் கீழ் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா. 221.53 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளினுள் தொடர் வெப்ப அதிகரிப்பு, ABC உயர் தரத்தில் மாறுபட்டமை, உயர் மற்றும் பக்க வெளிப்புறத்தில் வெடிப்புகள், தூண்களின் குறைந்த சக்தி, இறக்கல் பாதுகாப்புக்கு கொண்டுவரப்பட்டுள்ள பொருத்தமற்ற வழிமுறைகள், bottom ducts பொருந்தாமை போன்ற குறைபாடுகளுக்காக வழங்கப்பட்ட 21 இணங்காத அறிக்கை (non - conformance reports) 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் திருத்தப்பட்டிருக்கவில்லை.

## செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டிருந்தமை

**சிக்கனமற்ற செலவுகள்**

2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் கொழும்பு - இரத்தினபுரி - பெல்மதுல்ல அதிவேக வீதி செயற்திட்டத்திற்காக ரூபா. 10,258.71 மில்லியனும், புதிய களனி பாலம் தொடக்கம் அத்துருகிரிய வரையிலான தூண்களின் மேல் நிர்மாணிக்கப்படும் அதிவேக வீதி செயற்திட்டத்திற்கு ரூபா. 1,230.6 மில்லியனும் தேசிய நிதியத்தின் மூலம் செலவிடப்பட்டிருந்ததுடன் அதில் எதுவிதமான நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்காத போதிலும், குருணாகல் தொடக்கம் தம்புள்ள வரையான மத்திய அதிவேக வீதி செயற்திட்டம் - 04 பகுதி ரூபா. 2,339 மில்லியன் செலவு செய்யப்பட்டதன் பின்னர் நிர்மாணம் கைவிடப்பட்டிருந்தது.

**கண்டி சுரங்க வீதி நிர்மாண செயற்திட்டம்**

**சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக் கொள்ளுதல்**

பல வருடங்கள் தொட்டு கண்டி நகரில் காணப்படும் பாரிய வாகனம் நெருக்கடிக்குத் தீர்வாக தென்னகும்புர மற்றும் சுதுஹும்பொல இடையே 4.36 கிலோ மீட்டர் நீளத்தினைக் கொண்ட 04 சுரங்கப் பாதைகள், 03 பாலங்கள் மற்றும் 04 இடை மாற்றங்களைக் கொண்ட 5.56 கிலோ மீட்டர் நீளத்தினைக் கொண்ட 04 வழிப் பாதையை 58 மாதங்களில் நிர்மாணிப்பதற்காக EDCF - கொரியா நிதி முகவர் நிறுவனத்துடன் இணைந்து 252.3 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் அதாவது இலங்கை ரூபா. 50,461 மில்லியன் செலவில் 2021 செப்டம்பர் மாதம் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் இந்த செயற்திட்டத்தினை இரத்துச் செய்து வேறு கூடிய முன்னுரிமை செயற்திட்டத்திற்கு நிதி ஒதுக்குமாறு 2017 ஓகஸ்ட் 21 ஆம் திகதி பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவைக் குழுவினால் கோரப்பட்டிருந்தது என்பதனால், அப்போது செயற்திட்டம் செயலற்று காணப்பட்டது. பின்னர், செயற்திட்டம் மற்றும் அதன் பணிகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் கண்டி சுரங்கப்பாதை நிர்மாணித்தல் செயற்திட்டத்தில் சுற்றாடல் தாக்கத்தினை மதிப்பீடு செய்வதற்கு (Environmental Impact Assessment) 2021 மார்ச் 25 ஆம் திகதி வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் பேராதனை பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்தம் ஒன்று கைசாத்திடப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டு தொடக்கம் செயற்திட்டம் நடைமுறைப்படுத்துவதற்காக பின்புல வேலை நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் சுற்றாடல் தாக்க மதிப்பீடு மட்டும் நிறைவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா. 78.36 மில்லியன் தொகை பேராதனை பல்கலைக்கழகத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரித்தல், மீள்குடியேற்றத்திற்கான செயற்பாட்டுத் திட்டத்தினை தயாரித்தல் மற்றும் செயற்திட்ட நிர்வாக நடவடிக்கைகளுக்காக மொத்தமாக ரூபா. 90.75 மில்லியன் தேசிய நிதியத்தின் மூலம் செலவிடப்பட்டிருந்ததுடன் 2.9 சதவீத

பௌதிக முன்னேற்றம் மட்டுமே எட்டப்பட்டிருந்தது.

**கிராமிய வீதிகள் எச்ச உட்கட்டமைப்பு வசதிகள் பிரிவு**

**செயற்திட்டத்தின் செயலாற்றல்**

2021 ஆம் ஆண்டில் 466 கிராமிய பாலங்களை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் 2023 ஜூன் 30 ஆம் திகதி வரையில் முழுமையாக வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட கிராமிய பாலங்களின் எண்ணிக்கை 84 மாத்திரமாக இருந்தது. ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த 271 கிராமிய பாலங்களின் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் அது மொத்த பாலங்களின் எண்ணிக்கையில் 58 சதவீதமான உயர்ந்த சதவீதத்தினைக் கொண்டிருந்தது. இவ்வாறு உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டிருந்த 97 பாலங்களின் நிர்மாண ஒப்பந்தக்காரர்களுக்கு 2023 ஜூன் 30 ஆம் திகதியில் ரூபா. 333 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. தற்போது செயல்படும் மட்டத்தில் காணப்படும் கிராமிய நிர்மாண செயற்திட்டங்களின் எண்ணிக்கை 111 ஆக உள்ளதுடன் அவற்றில் 60 பாலங்களின் முன்னேற்றம் 50 சதவீதத்திலும் குறைவான மட்டத்திலும், 51 பாலங்களின் முன்னேற்றம் 51 - 100 சதவீதத்திற்கு இடைப்பட்ட மட்டத்திலும் காணப்படுகின்றன.

# மக்கள் போக்குவரத்து

மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தும் பொருட்டு புதிய தொழில்நுட்ப முறைமைகளைப் பயன்படுத்தி மிகவும் உயர்தரமான போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகளை அமுற்படுத்தி, அபிவிருத்தி செய்து நிலைபேறாகப் பேணுவது போக்குவரத்துப் பிரிவின் செயற்பணிகாக இருந்தது. அச் செயற்பணியை நிறைவேற்றுவதற்காக பின்வரும் செயற்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது.

**செயற்பணிகள்**

சுற்றாடலுக்குச் சாதகமான போக்குவரத்து முறைமையை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான கொள்கைகளையும் சட்ட விதிகளையும் தயாரித்தல்.

பொதுப் போக்குவரத்து முறைமை தொடர்பாக மக்கள் நம்பிக்கையையும் வீதி வசதிகளை உருவாக்குவதற்கான உயந்த தரத்தை ஏற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல்.

வீதி நெரிசல், பயணிகள் நெரிசல் மற்றும் வீதி விபத்துக்களைக் குறைப்பதற்காக பின்பற்ற வேண்டிய வழிகாட்டல்கள் மற்றும் சட்ட விதிகளை அறிமுகப்படுத்துதல்.

அரசாங்க மற்றும் தனியார் போக்குவரத்து சேவைகளையும் புகையிரத சேவைகளையும் பொதுவான நேர அட்டவணைப்படி ஒருங்கிணைந்த படிவத்தின் கீழ் செயற்படும் போக்குவரத்துச் சேவையாக செயற்படுத்தப்படுவதற்குத் தேவையான நவீன தொழில்நுட்ப “ஈ- டிக்கட்” முறைமையை அறிமுகப்படுத்துதல்.

புகையிரத மற்றும் பேரூந்து தரிப்பிடங்கள் தொடர்பாக பொது வசதிகளையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் வகையில் உரிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

புகையிரத மற்றும் பேரூந்து சேவைகளுக்குத் தேவையான புகையிரதங்களையும் பேரூந்துகளையும் பராமரித்தல்.

புகையிரதப் பெட்டிகள், பேரூந்துகள், மோட்டார் வாகனங்களை உள்நாட்டில் தயாரித்து, திருத்தி, மேம்படுத்துவதற்கு முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் போக்குவரத்துச் சேவையை உருவாக்குதல்.

கொழும்பு ஹம்பாந்தோட்டை, காங்கேசன்துறை மற்றும் திருகோணமலை துறைமுகங்களுக்கு புகையிரத்தின் மூலம் பொருட்களைக் கொண்டு செல்வதற்குத் தேவையான வசதிகளை ஸ்தாபித்தலும் விரிவுபடுத்தலும்.

தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்தலை மக்களுக்குச்

சாதகமான, வினைத்திறனான, மோசடிகள் அற்ற நடைமுறையாக மாற்றுதல்.

இலங்கை போக்குவரத்துச் சபையை இலாபம் ஈட்டும் ஒரு நிறுவனமாக நவீனமயப்படுத்தி பிரதான பேரூந்துத் தரிப்பிடங்களில் பொது வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

தற்போதைய பேரூந்துத் தொகுதியை மீளமைத்து கொழும்பு மற்றும் பிரதான நகர எல்லைக்குள் பயணிப்பதற்காக சுற்றாடலுக்குச் சாதகமான புதிய பேரூந்துகளை அறிமுகப்படுத்தி தனியார் பயணிகள் போக்குவரத்தையும் பசுமையான போக்குவரத்திற்கு இணங்கும் வகையிலான வேலைத்திட்டத்தைத் தயாரித்தலும் அமுற்படுத்தலும்.

பாடசாலை பேரூந்துச் சேவைகள் மற்றும் மாணவர்களின் பாதுகாப்பை வழங்கும் நியமங்களின் கீழ் வலுப்படுத்துதல்.

கிராமிய பிரதேசங்களுக்கு பொதுப் போக்குவரத்து வசதிகளை வழங்கி நெறிப்படுத்துவதற்காக இலங்கை போக்குவரத்துச் சபையை பயணிகள் மற்றும் பொருட் போக்குவரத்தில் ஈடுபடுத்துதல்.

## கணக்காய்வு அவதானிப்புகள்

### இலங்கை போக்குவரத்துச் சபை

**தரத்தில் குறைவான உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்து கொடுப்பனவில் ஏற்பட்ட தாமதம் காரணமாக தண்டப்பணம் செலுத்தப்பட்டமை.**

2011 ஆம் ஆண்டின் போது இரு கம்பனிகளில் இருந்து தருவிக்கப்பட்ட உதிரிப்பாகங்கள் தரத்தில் குறைவான உதிரிப்பாகங்களாக இருந்ததன் காரணமாக அவ் உதிரிப்பாக இருப்புகள் நிராகரிக்கப்பட்டு கேள்வி இரத்துச் செய்யப்பட்டு மீள கேள்வு நடைமுறைகளைப் பின்பற்றுமாறு ஓர் குழுவின் மூலம் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. எனினும் அது குறித்து கருத்திற்கொள்ளாது 2012 ஆம் ஆண்டு முதல் மீள 04 ஆண்டுகளாக தொடர்ந்து ரூபா 1,942 மில்லியன் பெறுமதியான அத்தியாவசியமற்ற உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் பெரும்பாலானவை களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறெனினும், அவ் உதிரிப்பாகங்களுக்கான கொடுப்பனவுகள் தாமதமான காரணத்தால் வழங்கல் நிறுவனத்தால் தொடரப்பட்ட நடுவர் மன்ற வழக்கின் நடுநிலைத் தீர்வாக செலுத்தப்பட வேண்டிய ரூபா 664 மில்லியன் தொகை வழங்குனருக்கு செலுத்தப்பட்டிராததன் காரணமாக வழங்குனரால் மீள நடுவர் மன்ற வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது. அதன் நடுநிலைத் தீர்வாக 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 1,126 மில்லியன் தொகை

செலுத்தப்பட்டதன் காரணமாக ரூபா 462 மில்லியன் தொகையான செலவாணி நட்டம் சபைக்கு நேர்ந்திருந்தது.

**125 பேருந்துகளுக்கு ஜீபீஎஸ் அலகுகளும் சீசீரீவீ கமராக்களும் பொருத்தும் செயற்திட்டம் தோல்வியடைந்தமை**

சபைக்குரிய 125 அதிசொகுசு பேருந்துகளுக்கு ஜீபீஎஸ் அலகுகளும் சீசீரீவீ கமராக்களும் பொருத்துவதற்காக ஓர் தனியார் கம்பனி ஒன்றுடன் 2018 ஆம் ஆண்டின் போது ஓர் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் இதற்காக 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை ரூபா 33 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இம் முறைமையைப் பொருத்துவதற்காக அதிசொகுசு பேருந்துகளை வழங்காமை, கணனிச் செயற்பாட்டு முறைமை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிராமை இணையதள வசதிகள் வழங்கப்படாமை போன்ற காரணங்களால் செயற்திட்டம் இது வரையில் முற்றாக தோல்வியடைந்து சபையால் செலுத்தப்பட்ட முழுத் தொகையும் நட்டமாகியிருந்ததுடன் இக் கருவிகளும் காணாமற்போயுள்ளன.

**மீள் நிரப்பப்பட்டு முன்சோதனையிடப்பட்ட டயர்கள் கொள்வனவு செய்யப்படுவதற்கு புதிய கேள்வி வழங்கப்பட்டிராமை**

8,840 மீள் நிரப்பப்பட்ட டயர்களும் 34,856 முன்கூட்டிணைக்கப்பட்ட (பிரி அசம்பிள்ட்) டயர்களும் கொள்வனவு செய்யப்படுகையில் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரை அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுவால் விலைமனுக் கோரப்பட முன் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய விடயங்களும் காரணிகளும் கருத்திற்கொள்ளப்படுவதன் பேரில் அங்கீகாரம் இன்றி கேள்விக்கான அங்கீகாரம் வழங்கப்படுவது ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

2017 ஆம் ஆண்டு முதல் மீள கேள்வி கோரப்படாது கொள்வனவு செய்யப்பட்டிருந்த வழங்குனர்களிடம் இருந்து சந்தை நிலவரத்தை அடிப்படையாகக் கொண்டு விலைகளை உயர்த்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டின் போது விலை மனு கோரப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட விலைமனுதாரர்களின் விலைகள், கொள்வனவு செய்யப்பட்ட வழங்குனர்களின் விலைகளைப் பார்க்கிலும் குறைவாகக் காணப்பட்ட போதிலும், பெறுகையை கருத்திற்கொள்ளாது டயர் வழங்கியிருந்த வழங்குனரிடமிருந்தே கூடுதலான விலைக்குக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு ரூபா 356 மில்லியன் கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**கூடுதல் விலைக்கு ஜீபீஆர்எஸ் டிகட் இயந்திரத்திற்கான தேர்மல் கடதாசி டிகட் சுருள் கொள்வனவு**

விலைமனுதாரர்களிடம் இருந்து விலை கோரப்படாது 161,110 டிகட் சுருள்கள் ரூபா 75 ஆன டிகட் சுருளின் சந்தை விலையைப் பார்க்கிலும் ரூபா 108.84 ஆன விலைக்குக் கொள்வனவு செய்யப்பட்டு ஒரு டிகட் சுருளில் ரூபா 19.64 படி 24 டிப்போக்களில் இருந்து 364,400 டிகட் சுருள்கள் கொள்வனவு செய்யப்படுவதற்காக ரூபா 7.16 மில்லியன் தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், விலைமனுக் கோரப்பட்டு கொள்வனவு

செய்யப்படுகையில் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட ரூபா 49.65 விலைக்குப் பதிலாக முன்னைய விலைமனுதாரர்களிடம் இருந்து ரூபா 108.84 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் ஒரு டிகட் சுருளிற்காக ரூபா 59.19 கூடுதலான விலைக்கு 603,180 டிகட் சுருள்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 35.7 மில்லியன் கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே வழங்கப்பட்ட டிகட் சுருள் கடதாசிகளின் அகலம், சுருளின் விட்டம் மற்றும் சுருளில் இருக்க வேண்டிய நியம நிறையில் வேறுபாடு காணப்பட்டதுடன் அனுமதிச்சீட்டின் கடதாசியில் கார்பன் பூச்சின் அளவு போதாமையால் அனுமதிப்பத்திரங்கள் தெளிவாக அச்சிடப்பட்டிருக்கவில்லை.

**32 ஆசனங்களைக் கொண்ட 500 பேரூந்துகள் கொள்வனவு**

இந்தியக் கடன் விதிமுறை உடன்படிக்கையின் கீழ் இலங்கை அரசாங்கத்திற்குக் கிடைக்கப்பெற்றிருந்த கடன் தொகையில் எஞ்சியிருந்த 20 மில்லியன் ஐ.அ. டொலர்களைப் பயன்படுத்தி புதிய 50 – 54 (2X2) உயர் பின் ஆசனங்களைக் கொண்ட 400 பேரூந்துகளும், 32 – 35 (2X2) உயர் பின் ஆசனங்களைக் கொண்ட 100 பேரூந்துகளுமாக 500 பேரூந்துகளைக் கொள்வனவு செய்வதற்காக அமைச்சரவையால் 2018 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட கொள்கைத் தீர்மானத்திற்கமைவாக பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. எனினும், எந்தவித அறிவியல் அடிப்படையும், தேவைப் பகுப்பாய்வும் இன்றி, 2020 ஆம் ஆண்டின் போது புதிய கொள்கைத் தீர்மானத்தின் மூலம் 32 – 35 புதிய 500 சிறிய பேரூந்துகளும் 42 – 45 உயர் பின் இருக்கை கொண்ட புதிய 100 பேரூந்துகளுமாக 600 பேரூந்துகள் கொள்வனவு செய்வதற்காக பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், 2023 ஆம் ஆண்டின் போதைய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி 32 ஆசனங்களைக் கொண்ட 500 புதிய பேரூந்துகள் ஒரு பேரூந்து 26,662.50 ஐ.அ. டொலர் படி 13,311,250 அமெரிக்க டொலர்களுக்கு அதாவது ரூபா 5,513 மில்லியனிற்கு ஓர் இந்திய கம்பனியிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதன் படி, ஒரு பேரூந்தின் பெறுமதி ரூபா 11.02 மில்லியனானதுடன் 32 – 35 பேரூந்தொன்றின் 2018 ஆம் ஆண்டின் போதைய மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 5 மில்லியனின் படி அவ் ஆண்டின் போது பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பேரூந்துகள் கொள்வனவு செய்யப்படாது 2023 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டதன் காரணமாக 2018 ஆம் ஆண்டின் போது மதிப்பிடப்பட்ட பெறுமதியைப் பார்க்கிலும் ஒரு பேரூந்திற்காக ரூபா 6.02 மில்லியன் படி ரூபா 3,010 மில்லியன் கூடுதலாகச் செலுத்தப்பட நேர்ந்திருந்தது.

**நாளாந்தம் திட்டமிட்ட பயண எண்ணிக்கையில் பேரூந்து ஈடுபடுத்தப்பட்டிராமை**

கட்டுபெத்தை அதிசொகுசு சுற்றுலாப் போக்குவரத்து சேவையின் நாளாந்த திட்டமிடப்பட்ட பயண எண்ணிக்கைக்காக குறித்த வகையில் பேரூந்துகள் ஈடுபடுத்தப்பட்டிராததன் காரணமாக ரூபா 2,342 மில்லியன் வருமானமும், ருஹுணு பிராந்திய அலுவலகத்தால் நிர்வகிக்கப்படும் டிப்போவால் பயணிக்கப்பட வேண்டிய 41 தொலைதூரப் பயண சேவைகளும் 124 குறுந் தூரப் பயண சேவைகளும் நீண்ட காலமாக பயணித்திராததன் காரணமாக ரூபா 2,431 வருமானமும், ருஹுணு பிராந்தியத்திற்கு உரித்தான டிப்போவின் மூலம் தெற்கு அதிவேகப் பாதையில் நேர அட்டவணைத் தேவைப்பாட்டின் படி பேரூந்துகள் ஈடுபடுத்தப்பட்டிராததன் காரணமாக ரூபா 803 மில்லியனுமாக 2023 ஆம் ஆண்டின் போது உழைக்கப்படக் கூடியதாக இருந்த ரூபா 5,576 மில்லியன் கூட்டுத்தொகை சபைக்குக் கிடைக்கத் தவறியிருந்தது.

**புதிய டயர்களின் கொள்வனவு**

2023 ஆம் ஆண்டின் போது பேரூந்துகளிற்காக புதிய டயர்கள் கொள்வனவிற்காக சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்கள் தொழிநுட்ப மாதிரிகளுக்கு இணங்காததாக தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவால் தீர்மானிக்கப்பட்ட வழங்குனருக்கு தலைவரின் அறிவுறுத்தலில் கேள்வி வழங்கப்பட முன்னர் புதிய 2,660 டயர்களுக்கான கோரல் வழங்கப்பட்டிருந்தது. இதன் படி, தருவிக்கப்பட்ட டயர்கள் தொழிநுட்ப மாதிரிகளுக்கு இணங்காதிருக்கையில் குறித்த வழங்குனருக்கே மேற்குறித்த கேள்வியும் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**எரிபொருள் குறைவான பயன்பாடு**

2023 ஆம் ஆண்டின் போது பேரூந்துகளிற்காக செலவிடப்பட்ட எரிபொருள் செலவினம் ரூபா 40,415 மில்லியன் தொகையாகும். ஸ்ரீலங்கம வாகன அணியில் சேர்க்கப்பட்ட 500 பேரூந்துகள் தவிர ஏனைய சகல பேரூந்துகள் 05 ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்ததுடன் அப் பேரூந்துகளில் எரிபொருள் பம்ப்களில் உள்ள குறைபாட்டின் காரணமாக எரிபொருள் பயன்பாடு ஒரு லீற்றருக்கு கி.மீ. 2.5 – 3.1 இடையிலான வீச்சில் காணப்பட்டது. கணக்காய்வின் பௌதீக ரீதியான இயந்திர ஆய்வின் படி திருத்தப்பட்ட எரிபொருள் பம்ப் ஒன்றினால் இயங்கக்கூடிய கிலோமீற்றர் அளவு 2.5 கிலோ மீற்றர்களாகும். ஆகையால் எரிபொருள் பம்ப்களைத் திருத்தி பேரூந்துகளை இயக்குகையில் எரிபொருள் பயன்பாடு ஒரு லீற்றருக்கு 3.8 – 4 கிலோ மீற்றர் வரையான வீச்சில் பேணக்கூடியதாக இருந்தது. இதன் படி எரிபொருள் சமப்படுத்துகையில் 3.8 கி.மீ. ஆகக் கருதப்படுகையில் ஒரு லீற்றரில் ஓடக்கூடிய கி.மீ. அளவு 0.7 கி.மீ ஆல் அதிகரிக்கின்றமை அவதானிக்கப்பட்டது.

| | |
|---|---|
| **பதவியணி போக்குவரத்துக் கட்டணம் அறவிட்டுக்கொள்ளல்** | கோவிட் காலப்பகுதியின் போது 09 பிராந்தியங்களில் வைத்தியசாலைப் பதவியணியைக் கொண்டுசெல்வதற்காக 2020 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை சபையின் பேருந்தைப் பயன்படுத்தியதன் காரணமாக சுகாதார அமைச்சிடம் இருந்து அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 151 மில்லியனை அறவிட்டுக்கொள்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| **நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்** | ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான வளர்ச்சிக்கான 2030 நிகழ்ச்சி நிரலிற்கமைய அந் நிகழ்ச்சி நிரலைச் செயற்படுத்துவதற்கு உரிய இலக்குகளை இனங்காண்பதற்கும் நிலைபேறான வளர்ச்சிக்கான இலக்குகளை அமைவதற்கு ஆய்வு செய்வதற்காக செயற்திறன் குறிகாட்டிகளை (KPI) இனங்காண்பதற்கும் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துத் தொகுதியை உச்ச இயலளவில் பயன்படுத்துவது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட செயலாற்றல் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கியமான அவதானிப்புகள்

| | |
|---|---|
| **தேசிய போக்குவரத்துக் கொள்கை** | 1991 நவம்பர் 27 ஆந் திகதி அமைச்சரவையினால் அங்கீகரித்த போக்குவரத்து கொள்கை 2009 ஒக்டோபர் 14 ஆந் திகதி திருத்தம் செய்யப்பட்டிருந்தது. 2023 மார்ச் 01 ஆந் திகதி வரை 15 ஆண்டுகள் கடந்திருந்தும் தேசிய போக்குவரத்து கொள்கை நாளதுவரையாக்கப்படாது தொடர்ந்து வரைபு நிலையில் காணப்படுவது அவதானிக்கப்பட்டது. |
| **இலாபமீட்டாத போக்குவரத்து சேவைகள் மற்றும் போக்குவரத்து தடவைகள** | அதிகாரச் சட்டத்தின் முகவுரையின் (இ) பிரிவின் பிரகாரம் சமூக ரீதியாக அத்தியவசியமான எனினும் இலாபம் கிடைக்காத பயண வழிச் சேவை மற்றும் பயணத் தவணை பேருந்துகள் மூலம் பயணிகள் போக்குவரத்து தொடர்பாக போதியளவான பேருந்து சேவைகளை செயற்படுத்துவதற்கான ஏற்பாடுகளை வழங்குவதற்கும் அச்சேவைகளை வழங்குபவர்களுக்கிடையே சிறந்த போட்டியை உருவாக்கி நியாயமற்ற மற்றும் இலாபம் கிடைக்காத போட்டித் தன்மையை தவிர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கை மற்றும் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் ஆணைக்குழுவினால் அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **பேருந்து தொகுதி** | இலங்கை போக்குவரத்துச் சபையின் தொழில்நுட்ப பிரிவின் மூலம் பிராந்தியங்களினூடாக 5,918 பேருந்துகளும் மத்திய பேருந்து அலுவலகத்தினதும் அதி சொகுசு சுற்றுலா போக்குவரத்து சேவையின் 85 பேருந்துகளுமாக மொத்தமாக 6,003 பேருந்துகளை நாளாந்தம் சேவைக்கு வழங்குவதற்கு திட்டமிட்டிருந்தும் |

தொழில்நுட்ப பிரிவின் மூலம் செயற்படுத்துவதற்கு வழங்குவதற்கு முடியுமாக உள்ள பேரூந்துகளின் அளவு 5,118 அதாவது 85.26 சதவீதம் என அவதானிக்கப்பட்டது.

**போதிய எண்ணிக்கையிலான சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் இல்லாதிருந்தமை**

பேரூந்து தொகுதியை முழுமையாக செயற்பாட்டில் ஈடுபடுத்துவதற்காக முக்கிய தடையாக 7,786 சாரதிகளும் 7,768 நடத்துனர்களும் மாத்திரமே இருந்தமை தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. என்பது அவதானிக்கப்பட்டது. நீண்டகாலமாக சாரதிகளும் நடத்துனர்களும் புதிதாக சேர்த்துக்கொள்ளப்பட்டிராமை இந்நிலைமைக்கு காரணமாக இருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

தற்போதுள்ள பேரூந்து தொகுதியின் ஆயுட்காலம் 15 ஆண்டுகளுக்கு மேலாக செயற்படாதுள்ள டாடா வகையிலான 630 பேரூந்துகள், லேலன்ட் வகையிலான 425 பேரூந்துகள், ஏனைய வகையிலான 50 பேரூந்துகள் என்பனவாக 1,105 பேரூந்துகள் காணப்படுவதுடன் இந்த பேரூந்துகள் எவ்வித பாதுகாப்பு நடைமுறையுமின்றி டிப்போக்களில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

**2022 ஆம் ஆண்டின் பேரூந்துகளின் பழுதுபார்ப்பு**

பேரூந்துகளை பழுதுபார்ப்பதற்காக 2022 ஆம் ஆண்டில் பொதுத்திறைசேரியினால் ரூபா 750 மில்லியன் வழங்கப்பட்டிருந்ததுடன் இப்பணத்தைப் பயன்படுத்தி புனரமைப்புச் செய்து செயற்பாட்டிற்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட பேரூந்துகள் தொடர்பான எந்த அறிக்கையும் சபையிடம இல்லாததுடன் அப்பணத்தில் ரூபா 606.31 மில்லியன் போக்குவரத்துச் சபையினால் மற்றும் ரூபா 143 மில்லியன் லக்திவ பொறியியலாளர் நிறுவனத்தின் மூலமும் செலவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**2023 ஆம் ஆண்டின் போது பேரூந்து பழுதுபார்ப்பு**

2023 ஆம் ஆண்டிற்காக பொதுத் திறைசேரியால் ரூபா 2020 மில்லியன் தொகை பேரூந்து பழுதுபார்ப்பிற்காக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் போது ஓட்டத்திற்கு சேர்க்கப்பட்டிருந்த பேரூந்து அணி தொடர்பான உள்ளபடியான தகவல்கள் பெற இயலாதிருந்தது.

**எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெய் கழிவினை அகற்றுதல்**

போக்குவரத்து சபையின் அனைத்து டிப்போ வளவுகளில் மற்றும் பிராந்திய வேலைத்தளங்களில் உள்ள நிலையங்களின் எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணைக் கழிவுகளை வெளியேற்றுவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகரித்த நடைமுறை பின்பற்றப்பட வேண்டியதுடன் அதற்காக 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் மற்றும் 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் ச்ட்டத்திற்கு இணங்க மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடமிருந்து அதிகாரப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. எவ்வாறெனினும்,

தற்போது இப் பணத்தை பேரூந்து பழுதுபார்க்கப்படுவதற்காக அன்றி மீண்டெழும் செலவினத்திற்காகப் பயன்படுத்தப்படுவது அவதானிக்கப்பட்டது.

**எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் கழிவுகளை அகற்றுதல்**

போக்குவரத்து சபைக்குச் சொந்தமான அனைத்து டிப்போ வளாகங்களிலும் பிராந்திய வேலைத் தளங்களிலும் உள்ள யாட்களின் எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் கழிவுகளை அகற்றுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முறையொன்றைப் பயன்படுத்த வேண்டியதுடன் இதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். எனினும். அதிகாரசபைக்கு உரிய 12 பிராந்தியத் தரவுகளின்படி, அப் பிராந்தியங்களைச் சேர்ந்த 111 டிப்போக்களில் இருந்தும் வேலைத்தளங்களில் இருந்தும் 51 அளவிலானவை சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்டிராததுடன் கழிவுகள் சுற்றாடலுக்கு பாதிக்காத வகையில் அகற்றப்படுவதற்காகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**புகைப் பரிசோதனை சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட்டிராமை**

போக்குவரத்து சபையின் பேரூந்து தொகுதியில் அதிக எண்ணிக்கையானவை வருமான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்கையில் சமர்ப்பிக்க வேண்டிய புகை வெளியேற்றல் சான்றிதழை (புகைப் பரிசோதனைச் சான்றிதழ்) பெற்றுக்கொண்டிராததுடன் பரீட்சிப்பிற்கு உட்பட்ட கண்டி பிராந்தியத்திலுள்ள 07 டிப்போக்களிற்கு உரித்தான 566 பேரூந்துகளில் 226 பேரூந்துகளுக்காக புகை வெளியேற்றல் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. உரிய முறைப்படி புகைப்பரிசோதனைச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட்ராததன் காரணமாக பேரூந்துகளில் இருந்து வெளியேற்றப்படும் எரிபொருள் மூலம் வெளியாகின்ற பாதகமான புகை அதாவது Co, S போன்ற ஈயத்தாது சுற்றாடலில் கலப்பதன் மூலம் பாதகமான வாயு வெளியேற்றத்தால் சுற்றாடல் மாசடையும் என அவதானிக்கப்பட்டது.

## இலங்கை புகையிரதத் திணைக்களம்

இலங்கை புகையிரதத் திணைக்களத்திற்காக 2023 ஆம் ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 29,600 மில்லியனும் மூலதனச் செலவினத்திற்காக ரூபா 22,593 மில்லியனுமாக ரூபா 52,193 மில்லியன் மொத்த ஏற்பாடாக ஒதுக்கப்பட்டிருந்தது. இதில் மூலதன ஏற்பாடுகளில் ரூபா 11,897 மில்லியன் தொகையான அதாவது 53 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் மீண்டெழும் ஏற்பாடுகளில் ரூபா 27,842 மில்லியன் தொகையான 94 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது. மூலதன ஏற்பாடுகளின் கீழ் கிழக்கு மாவட்ட பொறியியலாளருக்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 6.7 மில்லியன் பெறுமதியான 06 செயற்திட்டங்கள் ஆண்டின் போது ஆரம்பிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**பொதுப் போக்குவரத்திற்கான பங்களிப்பு**

நீண்டகாலமாக இலங்கையின் மொத்தப் பயணிகள் போக்குவரத்தில் 6 சதவீதத்தையும் பொருட்கள் போக்குவரத்தில் 6.5 வீதத்தையும் வழங்கியிருந்த புகையிரத சேவை அதன் பங்களிப்பை மேம்படுத்துவதற்குத் தவறியிருந்தது. 1934 ஆம் ஆண்டின் போது புகையிரத மார்க்கம் 1,521 கிலோமீட்டர்களாக இருந்த போதிலும் தற்போது (பெலி அத்த வரையிலான 32 கிலோமீட்டரையும் உள்ளடக்கி) இது 1,465 கிலோ மீட்டர் வரை 56 கிலோ மீட்டர்களால் குறைவடைந்திருந்தது.

**நேர அட்டவணைப்படி புகையிரதம் பயணிக்காமை**

நேர அட்டவணையின் படி, புகையிரதப் போக்குவரத்து 1865 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டின் போது திட்டமிடப்பட்ட மொத்த புகையிரதப் போக்குவரத்து தவணைகளின் எண்ணிக்கை 122,426 ஆனதுடன் இதில் இரத்துச் செய்யப்பட்டிருந்த புகையிரதப் போக்குவரத்து தவணைகளின் எண்ணிக்கை 10,531 ஆகக் காணப்பட்டது. குறித்த நேரத்தில் பயணித்திருந்த புகையிரதத் தவணைகளின் எண்ணிக்கை 36,771 ஆகக் காணப்பட்டதுடன் இதன் படி திட்டமிடப்பட்டிருந்த புகையிரதப் பயணிப்பின் தவணை எண்ணிக்கையில் 70 சதவீதமானவை குறித்த முறையில் பயணித்திருக்கவில்லை.

**மஹவ – அனுராதபுரம் - ஓமந்தை வரையான புகையிரதப் பாதை மேம்பாட்டுச் செயற்திட்டம்**

இந்திய கடன் உடன்படிக்கை (Indian Credit Line) யின் கீழான கடன் உதவியின் படி மஹவ – அனுராதபுரம் - ஓமந்தை வரையான புகையிரதப் பாதை மேம்படுத்தும் செயற்திட்டத்திற்காக இந்திய என்ஸிம் (Exim) வங்கியுடன் ஏற்படுத்தப்பட்ட கடன் உடன்படிக்கையின் நிபந்தனைகளிற்கமைவாக இப் புகையிரதப் பாதை நான்கு கட்டங்களாக தயாரிப்பதற்காக இந்திய அரசாங்கத்தின் கம்பனிகளில் இருந்து விலை மனுக்கள் கோரப்பட்டு ஐ.அ.டொலர் 91.27 மில்லியனிற்கு 2019 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 வரையில் செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 69 சதவீதமாக மாத்திரமே இருந்தது.

**பூ ஓய புதிய புகையிரத நிலையமும் மேடை நிர்மாணிப்பும்**

மஹவ – ஓமந்தை புகையிரதப் பாதை அபிவிருத்திச் செயற்திட்டத்திற்கு இணையாக பூ ஓய புதிய புகையிரத நிலையமும் இரு மேடைகளும் நிர்மாணிக்கப்படுவதற்காக ரூபா 47.18 மில்லியன் மதிப்பீட்டில் 2022 ஏப்ரல் முதல் புகையிரதத் திணைக்களத்தினால் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இப் புகையிரத நிலையத்தை அமைப்பதற்கான முக்கிய நோக்காக இரு புகையிரதங்கள் மாறுவதற்காக மதவாச்சி மற்றும் வவுனியா புகையிரத நிலையங்களுக்கிடையே வேறு இடங்கள் இன்மையால் அப் புகையிரத நிலையங்களுக்கிடையே உள்ள 23 கி.மீ தூரத்தைக் குறைத்து பூ ஓய புகையிரத நிலையத்தில்

இரு புகையிரதங்களும் மாறுவதற்கான வசதிகளை ஏற்படுத்தி புகையிரதங்களின் தாமதத்தைக் குறைப்பதாகும். அநுராதபுரம் - ஓமந்தை புகையிரதப் பாதை அபிவிருத்தி நடவடிக்கைகள் பூர்த்தியடைந்து 2023 யூலை 15 ஆம் திகதி முதல் புகையிரப் பயண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் திட்டமிடப்பட்டவாறு புகையிரத நிலைய மற்றும் மேடை நிர்மாணிப்பு 2023 யூலை 01 ஆம் திகதி வரையில் நிறைவேற்றப்பட வேண்டிய போதிலும் 2023 திசெம்பர் வரையிலும் நிறைவேற்றப்பட்டிராமையால் அந் நாள் வரை செயற்திட்டத்தில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கை அடைய முடியாதிருந்தது.

**நீண்ட காலமாக தீர்த்து வைக்கப்படாத நாணயக் கடிதங்கள்**

2023 ஆம் ஆண்டின் இறுதியில் தீர்த்துவைக்கப்படாத நாணயக் கடிதங்களின் பெறுமதி ரூபா 412 மில்லியனாக இருந்ததுடன் இதில் 29 சதவீதமான ரூபா 119 மில்லியன் 02 ஆண்டுகளுக்கும் 25 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட பழைய மீதியாகக் காணப்பட்டன. பணம் செலுத்தி 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த இம்மீதிகள் பொருட் பெறுவனவுக் குறிப்பின் மூலம் தீர்த்து வைக்கப்படாமைக்கும் இது வரையில் பொருட்கள் வழங்கப்பட்டிராத பொருட்கள் தொடர்பான விபரமும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**புகையிரதத்தில் மரக்கறி கொண்டுசெல்லும் செயற்திட்டத்தைச் செயற்படுத்தியிராமை**

2022 ஆம் ஆண்டின் துணைப்பாதீட்டின் ஏற்பாட்டின் மூலம் "புகையிரதத்தில் மரக்கறி கொண்டுசெல்வதற்காக" ரூபா 200 மில்லியன் திறைசேரியால் வழங்கப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 198.8 மில்லியன் செலவிடப்பட்டு 05 புகையிரதப் பெட்டிகள் புதுப்பிக்கப்பட்டிருந்தன. எனினும் இச் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிராத காரணத்தால் அந்த முழுச் செலவினமும் விளைவற்றுள்ளது.

**அசையாத இருப்புகள்**

மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 7,978 மில்லியன் மசகு எண்ணெய் இருப்பும் புகையிரத இயந்திர உதிரிப்பாக இருப்புகளில் ரூபா 330 மில்லியன் பெறுமதியான இருப்புகள் கடந்த 04 ஆண்டுகளாக எந்தவித பயன்பாட்டிற்கும் எடுத்திருக்கவில்லை.

**"பிபிதெமு பொலொன்னறுவை" அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

"பிபிதெமு பொலொன்னறுவை" அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கந்துருவெல நகரில் உள்ள காணி இல. 3868 ஏ இல் புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான 03 ஏக்கர் 17.9 பேர்ச் காணியைக் கையளிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் 2017 ஆம் ஆண்டின் போது கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி, 442 சதுர அடியைக் கொண்ட கேட்போர் கூடமொன்று நகர அபிவிருத்தி அதிகாரசபையால் நிர்மாணிக்கப்பட்டு 2020 பெப்ரவரி 22 ஆம் திகதிக்கு முன்னர் புகையிரத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டியிருந்தது. எவ்வாறெனினும், 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அக் கட்டிட

நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிராததுடன் உடன்படிக்கையின் படி குறித்த காணி மீளப் பெறப்படுவதற்காக புகையிரத் திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே, திணைக்களத்திற்கு உரித்தான நிலையான வீதி ஆய்வு அலுவலகம், ஓய்வு நிலையம், உபகரணக் களஞ்சியம், எண்ணெய் களஞ்சியம் மற்றும் மாவட்ட பொறியியல் ஓய்வு நிலையம் நடாத்தப்படுவதற்காக கமநல திணைக்களத்திற்கு உரித்தான காணியும் கட்டிடமும் நகர அபிவிருத்தி அதிகாரசபையால் விடுவிக்கப்பட்டு புகையிரத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டிய போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அக் கட்டிடமும் காணியும் புகையிரத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

## கொழும்பு நகரை அண்மித்த புகையிர செயற்திட்டம் (CSRP)

எதிர்வரும் இருபது ஆண்டுகளுக்காக இந் நாட்டின் புகையிரத சேவையால் தேசிய போக்குவரத்து முறைமைக்கு வழங்கப்பட வேண்டிய பங்களிப்பை இனங்கண்டு இதற்காக கொழும்பு நகரை அண்மித்த பகுதியில் உள்ள புகையிரதப் பாதையை அபிவிருத்தி செய்வது கொழும்பு நகரை அண்மித்த புகையிர செயற்திட்டத்தின் அடிப்படை நோக்காகும்.

**சாத்தியக்கூறு ஆய்வு மற்றும் விபரமான திட்டம்**

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆசிய அபிவிருத்தி வங்கியால் ரூபா 1,551.35 மில்லியனிற்குச் சமனான 8.52 மில்லியன் அமெரிக்க டொலர் செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்ததுடன் அத் தொகையில் 95 சதவீதமான ரூபா 1,469.05 மில்லியன் சாத்தியக்கூறு ஆய்விற்காகவும் விபரமான திட்டத்திற்காகவுமான உசாவுகைச் சேவைக்காக செலவிடப்பட்டிருந்தது. அவ் அறிக்கை 2021 ஆம் ஆண்டின் போது வரிசை அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் புகையிரத முறைமையை விருத்தி செய்வது குறித்த எதிர்வரும் நடவடிக்கையால் அவ் அறிக்கையின் பயன்பாடு மிகக் குறைவான நிலையில் காணப்பட்டது.

**களனிவலி புகையிரதப் பாதை அபிவிருத்தி நடவடிக்கைகள்**

களனிவலி புகையிரதப் பாதை அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக அப் பாதையின் இரு மருங்கிலும் புகையிரத நுழைவுரிமைப் பகுதியில் வாழும் குடும்பங்களை மீளக் குடியமர்த்துவதற்காக 07 வீடமைப்புத் தொகுதிகளால் தேவையான 1244 வீட்டு அலகுகள் ரூபா 5,412 மில்லியன் தொகைக்குக் கொள்வனவு செய்வதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் 2017, 2018 ஆம் ஆண்டுகளின் போது புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. உடன்படிக்கையிடப்பட்ட தினத்தில் இருந்து 02 ஆண்டுகளுக்குள் வீடுகளை நிர்மாணித்து செயற்திட்டத்தைக் கையளிப்பதற்கு அவ் அதிகாரசபை உடன்பட்டிருந்த போதிலும் நிர்மாணிப்பில் ஏற்பட்ட

தாமதம் காரணமான மீள காலம் நீடிக்கப்பட்டிருந்ததுடன் இது வரையில் 06 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் 550 வீட்டு அலகுகள் செயற்திட்டத்திற்குக் கையளிக்கப்பட்டிருக்க வில்லை. இதன் காரணமாக மீள் குடியேற்ற நடவடிக்கைகள் மேலும் தாமதமாவதாகவும் இதன் படி செயற்திட்ட நடவடிக்கைகள் மேலும் தாமதமடையும் எனவும் அவதானிக்கப்பட்டது. இவ்வாறே, நிர்மாணிப்பில் உள்ள வீடுகளின் விலைகளை மீளக் கருத்திற்கொள்வதற்கு அதிகாரசபையால் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்ததுடன் இதன் படி வீடுகளின் உடன்படிக்கையிடப்பட்ட விலை ரூபா 5 மில்லியனில் இருந்து ரூபா 10 மில்லியன் வரை அதிகரிக்கும் அபாயம் உள்ளமையும் அவதானிக்கப்பட்டது.

## கொழும்பு நகரை அண்மித்த புகையிரத வினைத்திறன் விருத்தி செயற்திட்டம் (CSREIP)

**கண்டி நகரை அண்மித்த புகையிரத சேவையை மேம்படுத்துவதற்காக சாத்தியக்கூறு ஆய்வும் பொறியியல் திட்டமும் தயாரித்தலும் உசாவுகைச் சேவையும்**

ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் திட்டத்தின் கீழ் கண்டி நகரை அண்மித்த புகையிரத சேவையை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறு ஆய்வும் விபரமான பொறியியல் திட்டமும் தயாரித்து உசாவுகைச் சேவையும் வழங்கப்படுவதற்கான ஒப்பந்தம் அமைச்சரவை அங்கீகாரத்தில் 18 மாதங்களுக்குள் நிறைவேற்றப்படுவதற்காக தனியார் கம்பனி ஒன்றிற்கு 2.64 மில்லியன் ஐ.அ.டொலர் டொலர்களுக்கும் 1.38 மில்லியன் யூரோவிற்கும் ரூபா 194.12 மில்லியன் பெறுமதியில் 2019 ஆம் ஆண்டின் போது ஒப்படைக்கப்பட்டிருந்தன. செயற்திட்டத்தால் ரூபா 719.2 மில்லியன் 2023 திசெம்பர் 31 வரை குறித்த கம்பனிக்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் உசாவுகைக் கம்பனியால் ஒப்பந்தம் செயற்படுத்தப்படுவது இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் இதற்கான காரணம் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக செயற்திட்டத்திற்காக ஏற்கப்பட்ட செலவினம் விளைவற்றிருந்ததுடன் சாத்தியக் கூறு ஆய்வை அடுத்துள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளிற்கான நிதி மூலத்தை இனங்காண்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையும் அவதானிக்கப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் திட்டத்தின் கீழ் நாடளாவிய புகையிரத தொடர்பாடல் முறைமை ஒன்றை ஸ்தாபித்து செயற்படுத்துவதற்காக 7.49 மில்லியன் ஐ.அ.டொலர் பெறுமதிக்கு உள்நாட்டு தனியார் கம்பனிக்கு போக்குவரத்து அமைச்சின் செயலாளர் உடன்படிக்கையிட்டிருந்தார். செயற்திட்டத்தின் கீழ் புதிய தொடர்பாடல் முறைமையைப் பயன்படுத்தி மக்களுக்கு மேலும் ஆக்கபூர்வமான பாதுகாப்பான புகையிரத சேவை ஒன்றை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. ரூபா 1,901.27 மில்லியன் தொகையான செலவில் 2022 செப்தெம்பர் மாதம் செயற்திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்த

போதிலும் அம் முறைமை நடைமுறையில் பயன்படுத்தப்பட்டிராததன் காரணமாக செயற்திட்டத்தின் நோக்கம் நிறைவேறியிராததுடன் ஏற்கப்பட்ட செலவினம் விளைவற்றுக் காணப்பட்டது.

## லக்திவ பொறியியல் (தனியார்) கம்பனி

**சேவை நிலையமும் உபகரண குறை பயன்பாட்டில் நிலவியமை**

கம்பனியின் சேவை நிலையம் 2021 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்டிருந்த போதிலும் இதற்குத் தேவையான தகைமையுள்ள பதவியணி இல்லாத காரணத்தால் வாகனங்கள் வெளி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படுவது அவதானிக்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டின் போது வாகன திருத்த வேலைகளுக்காக வெளி நிறுவனங்களுக்கு ரூபா 15 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. சேவை நிலையத்தின் கிரயம் ரூபா 20.8 மில்லியனாக இருக்கையில் வருமானம் ரூபா 17.9 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதன் காரணமாக சேவை நிலையம் இயங்குவதன் மூலம் 2023 ஆம் ஆண்டில் கம்பனிக்கு ரூபா 2.9 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது.

சேவை நிலைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகக் கொள்வனவு செய்யயப்பட்டிருந்த ரூபா 11.4 மில்லியன் பெறுமதியான உபகரணங்களும் குறைவான பயன்பாட்டில் காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 1.7 மில்லியன் பெறுமதியான 3 டீ வீல் எலைன்மன்ட் (3D Wheel Alignment) உபகரணமும் செயற்படுத்தப்பட முடியாது இருந்தது.

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

**பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் முறைமை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டிராமை**

1991 இன் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் படி, பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதற்கும் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படுவதற்கும் ஆணைக்குழுவிற்கு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆணைக்குழு பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தை விநியோகிக்கும் முறையான நடைமுறையொன்று அறிமுகப்படுத்தியிராததுடன் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரக் கேள்வுப் பெறுமதி, ஆகக் குறைந்த தொழிநுட்ப மதிப்பீட்டில் ரூபா 3,000, ரூபா 10,000 இற்கும் ரூபா 15,000 பெறுமதிக்கு வழங்கப்பட்டிருந்தது.

## இலங்கையில் புகையிரதக் கடவைகளுக்கான பாதுகாப்புக் கட்டமைப்பைத் ஸ்தாபித்தல் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை

| | |
|---|---|
| **புகையிரதக் கடவை விபத்துக்கள்** | புகையிரதத் திணைக்களத்தினால் புகையிரத கடவைகளுக்கான பாதுகாப்புக் கட்டமைப்பு ஒழுங்காக தாபிக்கப்படாமலும் பராமரிக்கப்படாமலும் இருந்ததன் காரணமாக 2000 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையில் 1,501 விபத்துக்கள் இடம் பெற்று இருந்ததுடன் அந்த காலப் பகுதியினுள் 298 உயிரிழப்புகள் இடம்பெற்றிருந்ததுடன் 1,054 நபர்கள் காயமடைந்து இருந்தமையும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. |
| **மரணமடையும் நபர்களுக்கு நட்ட ஈட்டினை வழங்கும் வேலைத் திட்டமொன்று இன்மை** | மரணம் அடைந்த நபர்களுக்கான நட்ட ஈட்டை வழங்கும் வேலைத் திட்டம் ஒன்று புகையிரதத் திணைக்களம் அல்லது அரசாங்கத்திடம் இல்லாததுடன், மரணமடையும் நபர்களின் குடும்ப அங்கத்தவர்களின் வாழ்க்கை நிலைமையும் நபர்கள் மரணமடைவதனால் அவர்களது குடும்ப அங்கத்தவர்களுக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பில் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கும் வழிமுறை ஒன்று திணைக்களத்திடம் இல்லை எனவும் அவர்களுக்காக சட்டத்தின் 32 ஆம் பிரிவின் திருத்தத்திற்கு அமைய புகையிரதப் பொது முகாமையாளர் பொறுப்பளிக்கப்பட்டிருக்கவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது. |
| **புகையிரதக் கட்டளைச் சட்டம் 120 வருடங்கள் பழமையானது** | தற்போது செயற்படுத்தப்படும் புகையிரதக் கட்டளைச் சட்டம் 120 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாக உள்ளதுடன் அதில் காணப்படும் தண்டனைகளை விதித்தல் தற்போதைய ரூபாய் பெறுமதியுடன் ஒப்பிடும் போது போதியதாக இல்லாத காரணத்தால் குறித்த நபர்களுக்குத் தவறுகளில் ஈடுபடாதிருக்க அதன் மூலம் உந்துதல் ஏற்படாது எனவும் குறித்த தண்டனைக் கட்டணத்தைப் பரீட்சிக்கும் போது அவதானிக்கப்பட்டதுடன் பயன்படுத்தப்பட்டுள்ள ஒரு சில பதவிப் பெயர்களும் (ஆளுநர்) தற்போது பொருத்தமற்றது என அவதானிக்கப்பட்டது. |
| **சிறிய கடவைகளில் கடவை படலைகள் நிர்மாணிக்கப்பட்டு இருக்காமை** | சிறிய கடவைகளின் பாதுகாப்பிற்கான கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி கடவை படலைகள் நிர்மாணிக்கப்பட்டிராததுடன் அவற்றின் நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் படி செயற்பட்டிராததுடன் வதிவிடங்களுக்கான கடவைகள் முறையாக இனம் காணப்பட்டு அவற்றின் பாதுகாப்பிற்குத் தேவையான ஒழுங்கு விதிகளை ஏற்படுத்துவதும், அவற்றை தாபிப்பதற்காக செலவிடப்பட்ட ஆரம்பக் கிரயமும் பராமரிப்பிற்கான வருடாந்த வாடகையும் குறித்த வீதியைப் பயன்படுத்துபவர்களிடம் இருந்து |

அறவிடப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

**விஞ்ஞான ரீதியிலான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்காமை**

புகையிரதக் கடவைகள் முழுமையாக உள்ளடங்கும் வகையில் வீதிப் பாதுகாப்பு கட்டமைப்பை நிர்மாணிப்பதற்கு விஞ்ஞான ரீதியான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிராததுடன் பிரதேச செயலகங்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளுடன் புகையிரத கடவை நிர்மாணிப்பு மற்றும் இதற்கான வீதிப் பாதுகாப்பு முறைமையை ஸ்தாபிப்பதற்காக ஒன்றிணைந்த திட்டமும் விதிமுறைகளும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**புகையிரத வீதிகளின் ஊடாக புதிதாகக் குறுக்கு வீதிகளை நிர்மாணித்தல்**

புகையிரத வீதிகளினூடாக புதிதாக விதிகள் நிர்மாணிக்கப்படுகையில் அந்த வீதியை அமைக்கும் நிறுவனங்களிடம் இருந்தும் நபர்களிடம் இருந்தும் கட்டணம் அறவிடப்பட்டு வீதிப் பாதுகாப்பு கட்டமைப்பைத் ஸ்தாபிக்க வேண்டிய போதிலும் அவ்வாறு புதிதாக அமைக்கப்படும் வீதிகள் தொடர்பில் முறையான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு கட்டணம் அறவிடப்பட்டு வீதி பாதுகாப்புக் கட்டமைப்பு ஸ்தாபிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**மணி மற்றும் மின் ஒழுங்கமைப்பின் செயல்பாடு**

திணைக்களத்தின் மூலம் இந்த அறிக்கையின் திகதி வரையிலும் தாபிக்கப்பட்டிருந்த மணி மற்றும் விளக்கு (Bell & Light) கட்டமைப்புகள் பலவற்றின் செயல்பாடுகள் சரியான முறையில் இடம்பெறாததுடன், அந்த கட்டமைப்பு செயல்படுகின்றதா இல்லையா என்பது தொடர்பில் புகையிரதத் திணைக்களத்தின் சமிக்ஞைத் திணைக்களத்திற்கு அல்லது புகையிரத ஓட்டுனருக்கு தெரிவிக்கக் கூடிய திறன் இந்த ஒழுங்கமைப்பில் இன்மை அவதானிக்கப்பட்டது. மேலும் மணி மற்றும் விளக்குச் சமைக்ஞைக் கட்டமைப்பின் இலத்திரனியல் கட்டமைப்பின் குறைபாடு காரணமாக அல்லது மின் வழங்கல் கட்டமைப்பின் குறைபாட்டின் காரணமாக கட்டமைப்பு ஒழுங்கான முறையில் இயங்காதவிடில் அது தொடர்பில் குறித்த புகையிரத ஓட்டுனருக்கு அல்லது சமைக்ஞைத் திணைக்களத்திற்கு உடனடியாக அறிந்து கொள்ளக்கூடிய திறன் குறித்த ஒழுங்கமைப்பில் இருக்கவில்லை.

# விவசாயம்

உணவுப் பாதுகாப்பு மற்றும் தேசிய செழிப்பிற்காக வினைத்திறனான, பயனுள்ள மற்றும் உறுதியான விவசாயத் துறையொன்றை உருவாக்குவதை தமது நோக்காகவும், இயற்கை வளங்களை நிலைபேறான முகாமைத்துவத்தின் மூலம் சமூக ரீதியான ஏற்றுக்கொள்ளப்பட்ட புதிய மற்றும் வணிக ரீதியான போக்கைக் கொண்ட, உலகளாவிய போட்டி உற்பத்திப்பொருளை உருவாக்கும் தொழில்முனைவான விவசாயத்துறையை மேற்கொள்வதை தமது நோக்காகக் கொண்டு இனங்காணப்பட்ட விவசாய அமைச்சின் விவசாயப் பிரிவு, உரங்கள் பிரிவு, கிராமிய பொருளாதார பயிற்செய்கை மற்றும் மேம்பாட்டுப் பிரிவவின் கீழ் 02 திணைக்களங்களும் 08 நியதிச்சட்ட நிறுவனங்களும் பின்வரும் செயற்பாடுகளையும் செயற்பணிகளையும் மேற்கொள்வதற்காக செயற்பட்டு வருகின்றன.

**செயற்பணி**

உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் உணவை உற்பத்தியை மேம்படுத்துதல்.

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இருப்புகளைப் பேணி வழங்கல் நடவடிக்கைகளை செயற்படுத்துதல்.

பயிர்களைப் பல்வகைப்படுத்தல் மற்றும் சாகுபடி தேவைக்கேற்ப நீர் முகாமைத்துவம்

பாரம்பரிய விவசாயிகள், இளைஞர் சமூகம் மற்றும் மாணவ மாணவிகளை நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய விவசாயக் கல்வி வாய்ப்புக்களுக்கு வழிநடாத்துதல்

பயிர்க் காப்பீட்டுத் திட்டங்களையும் விவசாயிகளின் ஓய்வூதியத் திட்டங்களையும் விரிவுபடுத்தி இளைய விவசாய தொழில் முயற்சியாளர்களின் உருவாக்கத்தை ஊக்குவித்தல்.

இரசாயன பூச்சிக்கொல்லிகளை ஒழுங்குமுறைப்படுத்தி தரமான தரமான விதைகள் மற்றும் தாவரங்களை வழங்கி சர்வதேச தரத்திலான விதைகளை உற்பத்தி செய்தல்.

காலநிலை மற்றும் வானிலை மாற்றங்களை விவசாயிகளுக்கு நாளாந்தம் தகவல்களை வழங்குதல்.

விவசாய அபிவிருத்தி வலயங்கள், விவசாயக் கிராமங்கள் மற்றும் நிலையேறான வீட்டுத்தோட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல்.

இலங்கை கமநல சேவையை நிர்வகித்து பதவியணியை முகாமைத்துவம் செய்தல்.

தரமான இரசாயனப் பசளை மற்றும் சுற்றாடலிற்கு ஏற்ற சேதனப் பசளையை இறக்குமதி செய்து, பகிர்ந்தளித்து அரசாங்க மானியக் கொள்கையை நடைமுறைப்படுத்தி சேதனப் பசளை உற்பத்தியையும் பயன்பாட்டையும் ஊக்குவித்தல்.

உள்நாட்டு விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் நியாயமான விலைக் கொள்கை ஒன்றை நடைமுறைப்படுத்துதல்.

உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் உணவு இருப்பின் இறக்குமதியைக் குறைத்து விவசாய உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான நடைமுறையை தயாரித்தல்.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உற்பத்தியாளர்களை ஊக்குவித்து உள்நாட்டு உற்பத்தியையும் நுகர்விற்கான சந்தர்ப்பங்களையும் விரிவுபடுத்துதல்.

## கணக்காய்வு அவதானிப்புகள்

### விவசாய அமைச்சு

**ஒதுக்கீடுகளின் பயன்பாடு**

2023 ஆம் ஆண்டின் போது விவசாய அமைச்சிற்கு ரூபா 93,938.63 மில்லியன் தொகையான ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 85,577.16 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டு ரூபா 8,361.47 மில்லியன் தொகையான ஏற்பாடு எஞ்சியிருந்தது.

**பொருளாதார மத்திய நிலையம்**

அமைச்சின் கிராமிய பொருளாதாரப் பிரிவால் 2017 ஆம் ஆண்டின் போது மட்டக்களப்பு மாவட்டத்திலும் 2018 ஆம் ஆண்டின் போது வவுனியாவிலும் யாழ்ப்பாண மாவட்டங்களிலும் விசேட பொருளாதார மத்திய நிலைய நிர்மாணிப்புகள் ஆரம்பிக்கப்பட்டு ரூபா 774.91 மில்லியன் கூட்டுத்தொகையான அளவு செலவில் 2023 ஆம் ஆண்டின் போது வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் 2024 யூலை 31 ஆம் திகதி வரையிலும் அம் மத்திய நிலையங்கள் திறந்துவைக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், அம் மத்திய நிலையங்களுக்காக மின்சாரக் கட்டணங்கள், நீர்க் கட்டணங்கள் மற்றும் பாதுகாப்புச் சேவைக்கான கட்டணங்களாக ரூபா 10.54 மில்லியன் விளைவற்ற விதத்தில் செலவிடப்பட்டிருந்தது.

**சிக்கனமற்ற கடன் வட்டி**

விவசாய அமைச்சின் உரங்கள் செயலகத்தின் கண்காணிப்பிலான நலிவுகள் காரணமாக 2023 ஆம் ஆண்டில் உர மானிய இறக்குமதியில் வரையறுக்கப்பட்ட உரக் கம்பனியாலும் வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனியாலும் வழங்குனர்களுக்குக் கொடுப்பனவு செய்வதற்காக குறுங்கால வங்கிக் கடனின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட கடனிற்காக ரூபா 16,279.65 வட்டித் தொகையாகச் செலவிடப்பட்டிருந்தது. அக் கடன் தொகை நீண்ட காலக் கடனாக மாறுகையில் ரூபா 3,723.07 மில்லியன் கூட்டுத்தொகையான திரண்ட வட்டிப் பெறுமதி உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் இதன் காரணமாக வட்டிக்கு மேல் வட்டியைச் செலுத்த நேரிட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

**பிணை வைப்பு**

விவசாய அமைச்சிற்காக வாடகை அடிப்படையில் கட்டிடம் ஒன்றைப் பெறுவதற்காக தனியார் கம்பனி ஒன்றுடன் ஐந்தாண்டு கால எல்லைக்காக ஏற்படுத்தப்பட்ட 2178 ஆம் இலக்க குத்தகை உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் கட்டிட வளாகம் குத்தகைதாரருக்கு 2020 சனவரி 31 ஆம் திகதி

ஒப்படைக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், குத்தகைதாரருக்குச் செலுத்தப்பட்ட ரூபா 63 மில்லியன் தொகையான மீளச் செலுத் த வேண்டிய பிணை வைப்பு 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**வாகனத் திருத்தவேலைகள்**

2021 யூன் 21 ஆம் திகதி கிராமிய பொருளாதாரப் பிரிவின் CAV-5064 ஆம் இலக்க ரேன்ஜ் ரோவர் ஜீப் வண்டியை இயக்க முடியாத நிலைக்குப் உட்பட்டமைக்கு தாக்கமளித்த நிச்சயமான காரணிகள் மற்றும் இதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டிராததுடன் அவ் வாகனத் திருத்த வேலைகளுக்காக 5 சந்தர்ப்பங்களின் போது மதிப்பீடுகள் பெறப்பட்டிருந்தன. இதன் படி, 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 3.08 மில்லியனிற்கு விலை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள் 03 ஆண்டுகளின் பின்னர் இதற்காக ரூபா 9.04 மில்லியனில் மேற்கொள்ளப்படுவதற்கு உள்நாட்டு முகவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் 2024 யூலை 31 ஆம் திகதி வரையிலும் குறித்த திருத்த வேலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## விவசாயத் திணைக்களம்

**எதிர்பார்க்கப்பட்ட மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பணிகள்**

புதிய மேம்பட்ட விவசாய தொழில்நுட்பத்தை உருவாக்கி, விஸ்தரித்து உரிய சேவைகளை விவசாயிகளுக்கு அதிக முக்கியத்துவத்துடன் அனைத்துத் தரப்பினருக்கும் வழங்கி நாட்டின் உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக உகந்த நிலைபேறான விவசாய அபிவிருத்தியை அடைவதற்காக மீளாய்வாண்டின் போது 10 அலகுகளின் மூலம் அடைவதற்காக எதிர்பார்க்கப்பட்ட செயற்பணிகள் 158 ஆகும். அச் செயற்பணிகளில் 110 செயற்பணிகள் 90 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடையிலும் 25 செயற்பணிகள் 75 சதவீதத்திற்கும் 89 சதவீதத்திற்கும் இடையிலும் 17 செயற்பணிகள் 50 சதவீதத்திற்கும் 74 சதவீதத்திற்கும் இடையிலும் 06 செயற்பணிகள் 50 சதவீதத்தைப் பார்க்கிலும் குறைவான முன்னேற்றத்தையும் அடைந்திருந்தன.

**விளைவற்ற செலவினம்**

2012 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது முறையான தொழில்நுட்ப மதிப்பீடின்றி ரூபா 93.05 மில்லியன் செலவில் 5 நுவரெலியா விதை உருளைக்கிழங்கு உற்பத்தி விவசாயப் பண்ணைகளில் 05 மின் வேலிகள் அமைக்கப்பட்டிருந்தன. இவற்றில் ரூபா 67.2 மில்லியன் பெறுமதியான 03 மின் வேலிகள் 01 முதல் 07 ஆண்டுகாலமாக இயங்கு நிலையில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**பெரிய வெங்காய முளைப்**

கடந்த 08 வருட காலத்திற்குள் ரூபா 337.2 மில்லியன் செலவில் 10 பெரிய வெங்காய முளைப் பயிர்ச்செய்கைச்

**பயிர்ச்செய்கை வீழ்ச்சியடைந்திருத்தல்**

செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தரவுகளின் படி 2014 ஆம் ஆண்டின் போது 98,900 மெ.தொ. உள்நாட்டு பெரிய வெங்காய முளை உற்பத்தி 2022 ஆம் ஆண்டின் போது 15,840 மெற்றிக்தொன்களாக 83,060 மெற்றிக் தொன்களால் அதாவது 84 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றிருந்தது.

**மரக்கறி விதை விளையும் சதவீதம் நலிவடைதல்**

கன்னொருவை மரக்கறி விதை மத்தியநிலையத்தில் 2013 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான 10 ஆண்டு காலப்பகுதியின் போது விளையும் சதவீதம் நலிவடைந்த காரணத்தால் விளைவற்ற ரூபா 44.3 மில்லியன் பெறுமதியான 5699 கி.கி. மரக்கறி விதைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 (4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு முழுமையான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## விவசாய அபிவிருத்தி திணைக்களம்

2023 ஆம் ஆண்டிற்காக விவசாய அபிவிருத்தி திணைக்களத்திற்குக் திறைசேரியில் இருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 14,179.8 மில்லியன் ஏற்பாட்டில் ரூபா 12,023.2 மில்லியன் தொகையும் விவசாய பெருந்தோட்ட அமைச்சு, சுற்றாடல் அமைச்சு மற்றும் சனாதிபதி அலுவலகத்தால் பல்வேறு செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 3,042.2 மில்லியன் தொகையான ஏற்பாட்டுத் தொகையில் ரூபா 2,591.4 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**காலநிலைக்கு உகந்த நீர்ப்பாசன விவசாய செயற்திட்டம்**

விவசாய அமைச்சின் காலநிலைக்கு உகந்த நீர்ப்பாசன விவசாய செயற்திட்டத்தின் கீழ் பொலொன்னறுவை விவசாய அபிவிருத்தி மாவட்டக் காரியாலயத்தால் ரூபா 45.7 மில்லியன் செலவில் மறுசீரமைக்கப்பட்ட 09 குளங்களில் 2024 மார்ச் 28 ஆம் திகதி வரையில் 05 குளங்கள் வேலை பூர்த்திசெய்யப்பட்டிருந்த போதிலும் அக் குளங்களில் மண் மற்றும் கருங்கற்களிடப்பட்டு தயாரிக்கப்பட்ட குளக் கட்டுக்கள் கழுவப்பட்டுச் சென்றிருந்தது. இவ்வாறே, ரூபா 37.5 மில்லியன் மதிப்பிடப்பட்ட கலிந்த சிறிய குளத்தின் மறுசீரமைப்பு 2023 யூலை 28 ஆம் திகதி ஆரம்பிக்கப்படுவதற்காகத் திட்டமிடப்பட்ருந்த போதிலும் அது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**உர மானிய உறுதிச்சீட்டுக்கள் அச்சீடும் விநியோகிப்பும்**

2023 ஆம் ஆண்டின் சிறு போக நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு உரத்தை வழங்குவதற்காக ரூபா 11,147 மில்லியன் பெறுமதியான 1,626,000 உறுதிச்சீட்டுக்கள் அச்சிடப்பட்டிருந்ததுடன் இவற்றில் 1,466,214 உறுதிச் சீட்டக்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்தன. விநியோகிக்கப்பட்டிராத ரூபா 907 மில்லியன் பெறுமதியான 159,786 உறுதிச்சீட்டுக்கள் தலைமை அலுவலகத்திற்கு மீள அனுப்பிவைக்கப்பட்டிருந்தன. 16 மாவட்டக் காரியாலயங்களால் அனுப்பிவைக்கப்பட்டிருந்த தகவல்களின்

படி விவசாயிகளுக்கு ரூபா 6,555.5 மில்லியன் பெறுமதியான 855,859 உறுதிச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிருந்தன. வழங்கப்பட்ட உறுதிச்சீட்டுக்களில் ரூபா 222.6 மில்லியன் பெறுமதியான 46,470 உறுதிச்சீட்டுக்களிற்காக உரம் வழங்கப்பட்டிராததுடன் சிறு போக விவசாயிகள் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிராததன் காரணமாக ரூபா 33 மில்லியன் பெறுமதியான 5327 உறுதிச்சீட்டுக்கள் இரத்தாகியிருந்தன. மேலும், உரத் தேவைப்பாடுடைய விவசாயிகள் குறிப் பாக இனங்காணப்பட இயலாதிருந்ததன் காரணமாக ரூபா 1,162 மில்லியன் பெறுமதியான 211,583 உறுதிச்சீட்டுக்கள் இரத்தாகியிருந்தன.

**நிதி உதவியை தேவையான நேரத்தில் வழங்கியிராமை**

2023∴2024 பெரும் போகத்திற்கான நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு நிதி உதவியை வழங்குவதற்கு 2023 யூலை 17 ஆம் திகதி நடாத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், மட்டக்களப்பு மாவட்டத்தின் 16 கமநல சேவைகள் நிலையத்தின் 32,563 விவசாயிகளுக்கு ரூபா 534.4 மில்லியன் பெரும் போகத்தின் தொடக்க மாதமான ஒக்டோபர் மாதத்தின் போது வழங்கப்பட்டிராததன் காரணமாக நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் உரத்தைப் பெற்றுக்கொள்ள இயலாதிருந்தது.

**பசுமை வீடுகளை நிர்மாணித்தல்**

சிறிய நீர்ப்பாசன மற்றும் தரிசு வயற்காணிகளில் பயிரிடும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 25 மாவட்டங்களை உள்ளடக்கிய சுஹுரு கிராம நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பசுமை வீடுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 375 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 151.3 மில்லியன் ஒதுக்கீட்டில் 16 மாவட்டங்களில் 291 வீடுகளை நிர்மாணிப்பதற்காக உத்தேசிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது 145 பசுமை வீடுகளை நிர்மாணிப்பதற்கு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன் கட்டுமானப் பணிகளின் முன்னேற்றம் 49 சதவீதமாகக் காணப்பட்டது.

**களஞ்சியம் விளைவற்றுக் காணப்பட்டமை**

உலக வங்கிக் கடன் உதவியின் கீழ் கோவிட் 19 அவசரகால நிலையின் கீழ் களஞ்சிய வசதிகளை உருவாக்குவதற்காக 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 113.8 மில்லியன் ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி மாவட்ட அலுவலகங்களில் 11 களஞ்சியங்கள் 2023 மே 31 ஆம் திகதி வேலை பூர்த்தியடைந்திருந்த போதிலும் அவை 2024 பெப்ரவரி 29 ஆம் திகதி வரையிலும் விளைவற்ற சொத்தாகக் காணப்பட்டது.

**தரிசு வயற்காணிகளில் பயிரிடுதல்**

மீளாய்வாண்டின் போது திருத்தப்பட்ட செயற்பாட்டுத்திட்டத்தின் படி 3,809 ஏக்கர் தரிசு வயற்காணிகளில் பயிரிடுவதற்காக ரூபா 162.8 மில்லியன் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டு 2,986 ஏக்கர்கள் மாத்திரம் அறுவடை செய்யப்படுவதற்காக அதில் ரூபா 137.6 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

**3,265,800 பரசூட்**

நிலைபேறான தேசிய உணவுப் பாதுகாப்பை முன்னிட்டு

**டிஸ்கள் விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டமை**

விவசாயக் காணிகளை வினைத்திறனாகப் பயன்படுத்தி உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதன் மூலம் செயற்திறனை மேம்படுத்தும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பரசூட் முறைமையைப் பயன்படுத்தி 6,682 ஏக்கர் வயற்காணிகளில் நெற்பயிர்ச்செய்கைக்காக செயற்பாட்டுத்திட்டத்தின் படி ரூபா 200 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அரசாங்கப் பங்களிப்பாக ரூபா 144.4 மில்லியன் செலவில் 3,265,800 பரசூட் டிஸ்கள் விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 447,985 டிஸ்கள் மாவட்டக் காரியங்களில் காணப்பட்டன. வழங்கப்பட்ட பரசூட் டிஸ்களுக்காக 2023 திசெம்பர் 31 ஆம் திகதி விவசாயிகளிடம் இருந்து ரூபா 20.8 மில்லியன் அறவிடப்பட வேண்டியிருந்தது.

**விளைவற்ற வாகனம்**

உலக உணவு செயற்திட்டத்தின் 2015 ஆம் ஆண்டில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த CR-0098 ஆம் இலக்க ஜீப் வண்டி பதிவு செய்யப்பட்டு பயன்பாட்டிற்காக எடுத்துக்கொள்ளப்படாது அவ் ஆண்டு முதல் மாலம்பே வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

**களஞ்சியப் பொறுப்பாளரால் 58 டயர்கள் மோசடியாக அகற்றப்பட்டிருந்தமை**

நாரஹென்பிட்டியில் உள்ள உதிரிப்பாகக் களஞ்சியசாலையின் களஞ்சியப் பொறுப்பாளரால் களஞ்சியப் பெறுவனவுப் புத்தகங்களில் உள்ளடக்கப்படாது விநியோகக் கட்டளை மூலம் டயர்கள் வழங்கப்பட்டிருந்ததாகக் காண்பிக்கப்பட்டு டயர் இருப்புகள் தவறாகச் சமப்படுத்தப்பட்டு 2021 ஆம் ஆண்டில் இருந்து 2023 யூன் 12 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2.1 மில்லியன் பெறுமதியான 58 டயர்கள் மோசடியான முறையில் அகற்றப்பட்டிருந்தன. எவ்வாறெனினும் அந் நட்டத்தை அறவிட்டுக்கொள்வதற்காக முறையான ஒழுக்காற்று விசாரணை நடாத்தப்படுவதற்கு 2024 ஏப்ரல் 31 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**மானிய உரத்திலான பற்றாக்குறை**

2005/2006 பெரும்போகத்தில் அநுராதபுர மாவட்டத்தின் மடாடுகம கமநல சேவைகள் நிலையத்தின் 03 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய மானிய உரப் பற்றாக்குறைத் தொகை ரூபா 32.5 மில்லியனான போதிலும் ஒரு உத்தியோகத்தரிடம் இருந்து அறிடப்பட வேண்டிய ரூபா 77,912 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 32.4 மில்லியன் தொகை 2024 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. இந்த நட்டத் தொகையில் இருந்து ரூபா 16.2 மில்லியன் தொகையான நட்டத்திற்குப் பொறுப்புக்கூற வேண்டிய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் வழமையான முறையில் 60 வயது பூர்த்தியடைந்ததை அடுத்து ஓய்வுபெற்றிருந்த போதிலும் அந்த நட்டத்தை ஓய்வூதிய விதிக் கோவையின் 43(அ) இன் கீழ் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா

அதிபதி திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், 2024 மார்ச் 31 ஆம் திகதி வரை தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**நட்ட இழப்புகள் அறவீடுன்றி ஓய்வு பெற்றிருந்தமை**

இலங்கை அரச வலையமைப்புச் செயற்திட்டத்தால், திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த கம்பியல்லா இணைய அமைப்பிற்கு உரித்தான ரூபா 0.9 மில்லியன் பெறுமதியான checkpoint 3200 வகையிலான firewall உபகரணம் 2020 மார்ச் 15 ஆம் திகதி காணாமற் போனமை தொடர்பாக 2022 ஏப்ரல் 22 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த ஆரம்ப கட்ட விசாரணையின் மூலம் அந் நட்டத்தை நீர் முகாமைத்துவப் பிரிவின் பிரதான பொறியியலாளரிடம் இருந்து அறவிட்டுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், ஆரம்ப கட்ட விசாணை நடாத்தப்படுகையில் ஓய்வூதிய விதிக் கோவையின் 2/17 இன் மூலம் 2020 நவம்பர் 10 ஆம் திகதி அந்த உத்தியோகத்தர் ஓய்வுபெற்றிருந்தார். மேலும் அவரது பதவி உயர்விற்கு உரித்தான நிலுவைச் சம்பளம் மற்றும் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களை மீள பணியில் ஈடுபடுத்துகையில் செலுத்தப்பட வேண்டிய படிப்பணமாக ரூபா 1.4 மில்லியன் தொகை 2022 திசெம்பர் மாதம் செலுத்துகையில் மேற்குறித்த நட்டத்தை அறவிட்டிராமை மற்றும் குறித்த உத்தியோகத்தர் சிக்கலான சந்தர்ப்பத்தில் ஓய்வூதிய விதிக் கோவையின் 2/17 இன் மூலம் ஓய்வடைந்திருந்தமை கணக்காய்விற்குப் பிரச்சனையாக இருந்தது.

## வரையறுக்கப்பட்ட கொமர்ஷல் உரக் கம்பனி

**அறவிடப்பட வேண்டிய பணம்**

வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி தனியார்மயமாக்கப்பட்டு 1994 யூலை 29 ஆம் திகதி முதல் மீள கம்பனி அரசாங்கத்தால் 1997 சனவரி 20 காலப்பகுதியின் போது கையேற்கப்பட்டிருந்தது. அக் காலப்பகுதியின் போது கடன் அடிப்படையில் பல்வேறு 15 தனியார் கம்பனிகளுக்கு உரம் விநியோகிக்கப்பட்டமைக்காக கம்பனிக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 22.05 மில்லியன் தொகையான கடன் மீதியை உறுதிப்படுத்துவதற்காக ஆவணங்கள் கிடைக்கப்பெற்றிராமையால் கடனை அறவிட்டுக்கொள்வதற்கோ அல்லது அதற்கான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் கம்பனி தவறியிருந்தது.

## வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி

**அறவிடப்பட வேண்டிய தொகை**

2023 திசெம்பர் 31 ஆம் திகதி நிலவிய கடன்பட்டோர் மீதி ரூபா 1,066.77 மில்லியன் தொகையானதுடன் அந்த மீதியில் 10 வருடங்களுக்கு மேலான ரூபா 86.5 மில்லியன் தொகை

காணப்பட்டதுடன் இதில் ரூபா 86.31 மில்லியன் அரசாங்க நிறுவனங்களில் இருந்து பெறவேண்டியவையாகும்.

## விவசாய அபிவிருத்தி நிதியம்

**அறவிடப்பட வேண்டிய தொகை**

ஜப்பான் யென் மானியச் செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த 02 சக்கர உழவு இயந்திரத்திற்காக அறவிடப்பட வேண்டிய தொகை 2015 ஆம் திகதி வரையில் அறவிடப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 105.1 மில்லியன் தொகை விவசாயிகளிடம் இருந்து அறவிட்டுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**தகவல் முறைமை**

2022 ஒக்டோபர் மாதம் ரூபா 30.9 மில்லியன் செலவில் கமநல சேவைகள் செயற்பாட்டுக் குழு மற்றும் விவசாயி வங்கிகளுக்காக முகாமைத்துவ தகவல் முறைமை ஒன்று தயாரிக்கப்படுவதற்கான ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்தது. மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் படி 05 கட்டங்களின் கீழ் 07 மாதங்களுக்குள் பணி நிறைவேற்றப்பட வேண்டிய போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் குறித்த பணி நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய நடவடிக்கைகள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம்

**நிதிப் பயன்பாடு**

2023 ஆம் ஆண்டிற்காக ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய நடவடிக்கைகள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்திற்கு திறைசேரியால் ரூபா 178.2 மில்லியன் தொகையும் வேறு வருமானமாக ரூபா 108.3 மில்லியன் தொகையும் கிடைக்கப்பெற்றிருந்ததுடன் இதில் ரூபா 271.2 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**உயிர் வாயு செயற்திட்டம்**

2011 ஆம் ஆண்டின் போது ரூபா 1.1 மில்லியன் செலவில் ஆரம்பிக்கப்பட்ட உயிர் வாயு செயற்திட்டம் 2016 ஆம் ஆண்டு முதல் செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் 2022 யூன் 23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சி அறிக்கையின் படி முன்னாள் பணிப்பாளரால் கேள்வி நடைமுறை மீறப்பட்டு அச் செயற்திட்டத்திற்குத் தேவையான உதிரிப் பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்படுவதற்கும் ஏனைய உத்தியோகத்தர்களைத் தொடர்புபடுத்தி அதன் செயற்பாட்டிற்கு இடையூறு ஏற்படும் வகையில் செயற்பட்டதாக முடிவிற்கு வந்திருந்த போதிலும் ஏற்பட்ட அவ் இழப்பை அறவிட்டுக்கொள்வதற்கான நடவடிக்கை

எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**சம்பளங்கள் மற்றும் படிப்பண மீள்நிரப்பல்**

2020 பெப்ரவரி 07 ஆம் திகதி முதல் 2022 நவம்பர் வரை நெற் சந்தைப்படுத்தும் சபையின் துணைத் தலைவர் பதவிக்காக நியமிக்கப்பட்டிருந்த நிறுவனத்தின் சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தருக்காக மேற்குறித்த காலப்பகுதிக்காகச் செலுத்தப்பட்ட ரூபா 4.2 மில்லியன் சம்பளமும் படிப்பணமும் நெற் சந்தைப்படுத்தும் சபையில் இருந்து அறவிடப்பட்டிராத போதிலும் பெறவேண்டிய தொகையாகவேனும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை

**நிதியப் பயன்பாடு**

2023 ஆம் ஆண்டிற்காக இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபைக்கு திறைசேரியால் ரூபா 29 மில்லியனும் ஏனைய வருமானமாக ரூபா 103 மில்லியனும் கிடைக்கப்பெற்றிருந்ததுடன் இதில் ரூபா 72 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**முறையற்ற செயற்பாடுகள்**

சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கத்தில் இல்லாத குளங்களில் இருந்து மண் அகற்றப்பட்டு அதிவேக பாதைகளுக்கு மண் விற்பனை செய்ததன் மூலம் ரூபா 81.1 மில்லியன் தொகையான வருமானம் ஈட்டப்பட்டிருந்தது. குளச் செயற்திட்ட அறிக்கையின் படி, வழங்கப்பட்ட மண்ணிற்காக குறித்த கமநல அமைப்புகளில் இருந்து சபை பணத்தைப் பெற்றுக்கொண்டு அத் தொகை அரசாங்க ஒதுக்கீட்டுடன் பயன்படுத்தப்பட்டு சிறிய குளங்கள் முறையான தரத்தில் விவசாய அபிவிருத்தித் திணைக்களப் பொறியியலாளர்களின் ஆலோசனைக்கமைய அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்படாது கிடைக்கப்பெற்ற தொகையில் ரூபா 76.1 மில்லியன் நிலையான வைப்பில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

**சோள இறக்குமதி**

2023 ஆம் ஆண்டின் போது சபைக்குக் கிடைக்கப்பெற்றிருந்த இறக்குமதி அனுமதிப்பத்திரத்தின் கீழ் இரு தனியார் கம்பனிகளால் தருவிக்கப்பட்ட 8,484,036 கி.கிராம் சோளம் சபையின் ஈடுபாடின்றி விற்பனை செய்யப்பட்டிருந்தது.

## விவசாய மற்றும் கமநலக் காப்புறுதி சபை

**தகவல் முறைமை**

பயிர் இழப்பிற்கான காப்புறுதி இழப்பீட்டைச் செலுத்தும் செயன்முறைக்காகத் தயாரிக்கப்பட்ட முகாமைத்துவ தகவல் முறைமை, பெறுமதி மதிப்பிடப்பட்டு இலங்கை கணக்கீட்டு நியமம் 38 இன் 4 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் அருவகச் சொத்தாக இனங்காணப்பட்டிருந்தது.

மேலும், பயிர் இழப்பிற்கான விண்ணப்பங்களை கமநல சேவைகள் மத்திய நிலையத்தில் விவசாயிகளால் நிகழ்நிலை முறையில் விண்ணப்பங்கள் பெறப்படுவதற்கும் அவற்றின் இழப்பை ஆய்வு செய்வதற்காகவும் மாவட்டக் காரியாலயங்களில் உள்ள கள உத்தியோகத்தர்களுக்கு இயலுமான வகையில் சபையால் பேணப்பட்டு வரும் விவசாயத் தகவல் முகாமைத்துவ முறைகள், கமநல அபிவிருத்தி திணைக்களத்தால் பேணப்பட்டுவரும் Geo Goviya தகவல் முறைமையுடன் தொடர்புபடுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக நட்டஈட்டைக் கணிப்பிடுவதிலும் அதன் துல்லியத்தன்மை குறித்து பரீட்சிப்பதற்கும் அதன் மூலம் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

**60 வயதிற்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களை பணியில் ஈடுபடுத்துதல்**

2022 ஒக்டோபர் 06 ஆம் திகதிய 06/2022 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு முரணாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முழு அங்கீகாரத்தைப் பெறாது ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட 2022 திசெம்பர் 31 ஆம் திகதி 60 வயதைப் பூர்த்தி செய்யும் மற்றும் 60 வயதிற்கு மேற்பட்ட 25 உத்தியோகத்தர்களில் 5 உத்தியோகத்தர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டு அங்கீகாரம் இன்றி சம்பளமும் படிப்பணமுமாக ரூபா 4 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

**இழப்பீட்டுத் தொகை செலுத்தப்படாமை**

8,185 விவசாயிகளுக்கு கொடுப்பனவு செய்வதற்காக 2017 ஆம் 2018 ஆம் ஆண்டுகளின் போதும் வங்கிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த ரூபா 70.8 மில்லியன் தொகையான இழப்பீட்டுத் தொகை, கணக்கு இலக்கம், விவசாயிகளின் பெயர் மற்றும் அடையாள அட்டை இலக்கம் பொருந்தாததன் காரணமாக வர்த்தக வங்கிகளால் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த விவசாயிகளை இனங்கண்டு அம் மீதிகளைச் செலுத்துவதற்கோ அல்லது திறைசேரிக்கு மீள அனுப்பிவைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் கீழ் செயற்படும் நிதியம் மீனவர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன் திட்டம்

**ஓய்வூதிய நலன் வழங்குதல்**

நலன் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்துள்ள மீனவர்களின் எண்ணிக்கை 64,117 ஆனதுடன் 2018 ஆம் ஆண்டின் பின்னர் எந்த அங்கத்தவரும் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. மீனவர்களிடம் இருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 60 வயதைக் கடந்து ஓய்வூதிய வயதை அடைந்திருந்த 31,146 மீனவ அங்கத்தவர்களில் 24,187 அங்கத்தவர்களுக்கு (ஒரே தடவையில் அங்கத்துவப் பணம்

செலுத்தி அங்கத்துவத்தைப் பெற்ற 5,549 அங்கத்தவர்கள் உட்பட) ஓய்வூதிய நலன் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன் திட்டம்

| | |
|---|---|
| தொடர் இயக்கம் | திட்டத்தின் மொத்தச் சொத்துக்கள் ரூபா 2,202.7 மில்லியனாகவும், மொத்தப் பொறுப்புகள் ரூபா 89,457.3 ஆகவும் காணப்பட்டமையால் சொத்துக்களை விஞ்சிய பொறுப்புகள் ரூபா 87,254.5 மில் லியனாகவும் மொத்த நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 1,092.5 மில்லியனாகவும் மொத்த நடைமுறைப் பொறுப்புகள் ரூபா 2,527.3 மில்லியனாகவும் இருந்தமையால் நடைமுறைச் சொத்துக்களை விஞ்சிய நடைமுறைப் பொறுப்புகள் ரூபா 1,434.8 மில்லியனாகவும் இருந்ததுடன் திறைசேரியின் பங்களிப்பு இன்றி திட்டத்தைக் கொண்டு நடாத்த இயலாத நிலை காணப்பட்டமையால் திட்டத்தைத் தொடர்ச்சியாக இயக்குவதில் சிக்கல் ஏற்பட்டிருந்தது. |
| **ஓய்வூதிய நலன்கள் வழங்கப்படல்** | திட்டத்தில் பதிவு செய்திருந்த 871,425 விவசாயிகளிடம் இருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 61 வயது முதல் 93 வயது வரையான வயதை அடைந்த 474,803 விவசாயிகள் இருந்த போதிலும் இவர்களில் 264,227 பேருக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டிருக்கவில்லை. 2022 ஆம் ஆண்டின் போது 60 வயது பூர்த்தியடைந்த ஓய்வூதியத்திற்கு உரித்துடைய விண்ணப்பப்பத்திரங்களை அனுப்பிவைத்திராத, அங்கத்தவர்களை நாடி ஓய்வூதியத்தை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு சகல மாவட்டப் பிரதி. உதவி பணிப்பாளர்களுக்கு 2023 யூன் 23 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்ட 6/FPS/பா/2 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 12 மாவட்டக் காரியாலயங்களின் தெரிவுப் பரிசோதனையின் போது அதில் 6 காரியாலயங்கள் குறித்த வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. |
| **தகவல் முறைமை** | தகவல் முறைமைக்காக தகவல் சேகரிக்கப்படுவதற்கு 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 5.6 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்ட தகவல் சேகரிக்கப்பட்டிராததன் காரணமாக தகவல் முறைமை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## விவசாயிகளின் பொறுப்பு நிதியம்

| | |
|---|---|
| **அறவிடப்படாத கடன்** | 2002 ஆம் ஆண்டின் போது சுழற்சி நிதியத்தையும் விவசாய பொறுப்பு நிதியத்தையும் ஒன்றிணைத்து விவசாயிகளின் பொறுப்பு நிதியம் ஸ்தாபிக்கப்படுகையில் நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட சுழற்சி நிதியத்தின் ரூபா 44.2 மில்லியன் தொகையான குறுங்கால கடன் மீதியை |

| | |
|---|---|
| | அறவிடுவதற்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 1.4 மில்லியன் தொகையான படிப்பணம் செலுத்தப்பட்டு 10 ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் மேலும் அறவிடப்படாத கடன் தொகையாக ரூபா 39.9 மில்லியன் நிலவியது. |
| **மேலதிகமாகச் செலுத்தப்பட்ட வாழ்வாதாரப் பணக் கொடுப்பனவு** | 2017 ஆம் ஆண்டு முதல் கோவிட் தொற்று நிலை வரையான காலப்பகுதியின் போது பின் பட்டப்படிப்பிற்காக வெளிநாட்டிற்குச் சென்றிருந்த தேசிய விவசாய ஆராய்சி முறைமையின் 26 ஆய்வாளர்கள் கோவிட் தொற்றின் காரணமாக கொள்கைச் சபைக்கு அறிவிக்காது இந் நாட்டிற்கு வந்திருந்த காலப்பகுதிக்காக செலுத்தப்பட்டிருந்த வாழ்வாதாரப் பணக் கொடுப்பனவுத் தொகையான ரூபா 21 மில்லியன் தொகையில் இது வரையிலும் அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 8.4 மில்லியனாகும். |
| **விளைவற்ற நிதியம்** | கென்யா ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி உதவியில் இருந்து இலங்கை வங்கி டொரிங்டன் கிளையின் 2323246 ஆம் இலக்க செயற்திட்ட வங்கிக் கணக்கு மீதியில் நிலவிய ரூபா 1.2 மில்லியன் தொகை சபைக்குக் கிடைக்கப்பெற்றிருக்கவோ அல்லது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவோ இல்லை. |

## தேசிய விவசாய பல்வகைப்படுத்தல் மற்றும் குடியேற்ற அதிகாரசபை (ஹதபிம)

| | |
|---|---|
| நலன்பெறுனருக்கு வழங்கப்பட்ட காசோலைகள் | 2016 முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது மண் பாதுகாப்புச் செயற்திட்டத்திற்காக நலனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,623,686 கூட்டுத்தொகையான 341 காசோலைகள் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிராததன் காரணமாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படாது நீண்ட காலப் பொறுப்பாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன. |
| அதிகாரசபைக்கு கையேற்கப்பட்ரொத காணி | கொத்மலை 05 ஏக்கர் விவசாயக் காணி அதிகாரசபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. |

## தேசிய அறுவடைக்குப் பிந்திய முகாமைத்துவ நிறுவகம்

| | |
|---|---|
| **கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டிராமை** | இலங்கை விவசாயப் பயிர்களின் வழங்கல் மற்றும் பெறுமதியிடல் முகாமைத்துவச் செயற்திட்டத்திற்காக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 7.293 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 100 Gps Trackers unit உம் 130 Tempered Data Lorggers ஐ உம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக அந்த முழுச் |

செலவினமும் நிறுவனத்திற்கு சிக்கனமற்ற செலவினமாக இருந்த போதிலும் அவ் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காகப் பரிந்துரை செய்த, அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பொறுப்புக் கூறப்பட வேண்டிய ஏனைய தரப்பினர் தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**குறைவான பயன்பாடுடைய ஆராய்ச்சி உபகரணங்கள்**

2015 ஆம் ஆண்டின் போது ஆய்வுகூட ஆராய்ச்சி நடவடிக்கைக்காக ரூபா 15.216 மில்லியன் தொகைக்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த Gas Chromatograph Mass Spectrometer (GCMS)இயந்திரம் முற்றாக குளிரூட்டப்பட்ட நிலையில் பேணப்பட வேண்டியதுடன் வருடாந்த பராமரிப்பு நடவடிக்கைகளிற்காக ரூபா 0.275 மில்லியன் செலவிடப்பட வேண்டியிருந்தது. எனினும், இவ் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டு 09 ஆண்டுகளை அண்மித்திருந்த போதிலும் கணக்காய்வுத் தினமான 2023 மார்ச் 20 ஆம் திகதி வரை பல சந்தர்ப்பங்கள் தவிர பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிராததுடன் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டன.

**புத்தாக்க இயந்திரம் சமூகமயமாக்கல்**

தேசிய அறுவடைக்குப் பிந்திய முகாமைத்துவ நிறுவகத்தின் செயற்பாட்டு ஆராய்ச்சிப் பிரிவின் மூலமான ஆராய்ச்சிச் செயற்பாட்டின் பின்னர் புத்தாக்க உற்பத்தி ஒன்றைத் தயாரித்து சமூகமயமாக்குவது முக்கிய நோக்கமாகும். எனினும், மேற்காள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையில் 2000 ஆம் ஆண்டு முதல் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான 24 ஆண்டு காலமாக இயந்திர வேலைத்தளத்தில் இயங்கும் உற்பத்தி இயந்திரமும் உபகரணப் பதிவேட்டின் படி வெளியிடப்பட்டுள்ள 19 புத்தாக்க இயந்திர வகைகளில் ஒரு இயந்திர வகை மாத்திரம் சமூகமயமாக்கப்பட்டிருந்ததுடன் 09 இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களுக்காக மாத்திரம் காப்புரிமைப் பத்திரம் பெறப்பட்டிருந்தது.

**தரவுத் தளமொன்று பேணப்பட்டிராமை**

விவசாயப் பயிர்களின் அறுவடைக்குப் பிந்திய சேதத்தைக் குறைப்பது நிறுவனத்தின் முக்கிய நோக்கானதுடன் இதற்காக 2009 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த முதற்கட்ட ஆய்வின் படி, நீண்ட காலத்திற்கு வைத்திருக்க இயலாத விவசாயப் பயிர்களின் அறுவடைக்குப் பிந்திய சேதம் நூற்றுக்கு 30 முதல் நூற்றுக்கு 40 வரையாக நிலவியமை இனங்காணப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் அவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு 14 ஆண்டுகள் கடந்திருந்ததுடன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் தேசிய அறுவடைக்குப் பிந்திய முகாமைத்துவ நிறுவகத்தால் அறுவடைக்குப் பிந்திய சேதத்தைக் குறைப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள முறைகளின் மூலம் இனங்காணப்பட்டிருந்த அறுவடைக்குப் பிந்திய சேதத்தைக் குறைத்திருந்த அளவு சதவீதமாக எவ்வளவு என்பது குறித்து

| | |
|---|---|
| | இனங்காணப்படக்கூடிய வகையிலான தரவுகள் நிறுவகத்தில் இருக்கவில்லை. |
| **ஆய்வுகூட இயந்திரச் செயலிழப்பு** | ஆய்வுகூடத்தில் காணப்பட்ட ரூபா 8.336 மில்லியன் மொத்தப் பெறுமதியான Atomic Absorption Spectrophotometer மற்றும் Handel Wheel Vertical Autoclave 02 இயந்திரங்கள் செயலிழந்த காரணத்தால் அவ் இயந்திரங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் முறையே 2018 ஆம் 2019 ஆம் ஆண்டுகளின் போது இடைநிறுத்தப்பட்டிருந்தன. இவ் இயந்திரங்களைத் திருத்தி பயன்பாட்டிற்காக எடுத்துக்கொள்ளப்படுவதற்கு 2020 ஆம் ஆண்டு முதல் திட்டமிடப்பட்ட ஓர் செயற்பாடொன்று நிறுவகத்தால் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| **பழங்களைப் பழுக்க வைக்கும் சேதன முறை அறிமுகப்படுத்துவதற்கான ஆராய்ச்சி** | 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆகஸ்ட் மாதம் வரையான காலத்தின் போது செயற்படுத்தப்பட்டிருந்த பழங்களைப் பழுக்க வைக்கும் சேதன முறை அறிமுகப்படுத்துவதற்கான ஆராய்ச்சியின் (Induction Of Fruit Ripening By Organic method) கண்டுபிடிப்புகளுக்காக காப்புரிமையைப் பெற்றுக்கொள்ளவதற்கும் ஆய்வின் முடிவை வர்த்தக ரீதியாகப் பிரபல்யப்படுத்துவதற்கும் ரூபா 9.572 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் தினமான 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் செயற்திட்டம் செயற்பாட்டு நிலையில் இருக்கவில்லை. |
| **இறக்குமதி செய்யப்பட்ட 07 வகையான உணவுப் பொருட்களிலான உலோகக் கலவை ஆய்வு** | 2017 ஆம் ஆண்டின் போது விவசாய அமைச்சின் ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட 07 வகையான உணவுப் பொருட்களிலான 04 வகை உலோகக் கலவை உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து ஆய்வு செய்யப்படுவதற்கான செயற்திட்டத்திற்காக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 1.956,120 செலவிடப்பட்டு 500 தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதற்கு உரித்தான செயற்திட்ட அறிக்கையின் படி சில உணவுப் பொருட்களில் ஆகக் கூடுதலான பாதுகாப்பு நிலையைப் பார்க்கிலும் அதிகமான அளவில் Cadmium, Arsenic And Leaf போன்ற உலோகக் கலவை உள்ளடங்கியிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது. எவ்வாறெனினும், அவ் அறிக்கையின் பரிந்துரை மற்றும் முடிவுகளின் படி உலோகக் கலவை உள்ளடங்கியிருந்த உணவுப் பொருட்கள் தொடர்பாக மேலதிகப் பரிசோதனை நிறுவகத்தால் மேற்கொள்ளப்பட்டு இது தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டிய சகல தரப்பினருக்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக தகவல்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

## ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் உற்பத்தி மற்றும் மேம்படுத்தல் தொடர்பில் அரச நிறுவனங்களின் பணிப்பொறுப்பினை மதிப்பீடு

**அதிகாரச்சட்டத்திற்கு உரிய திருத்தங்களை மேற்கொள்ளல்**

வாசனைத் திரவிய பொருட்கள் மற்றும் அவை சார்ந்த பயிர்ச் செய்கைகளில் இருந்து தேசிய வருமானத்துக்கு கிடைக்கும் பங்களிப்பு படிப்படியாக அதிகரித்துச் செல்லுவதற்கு அந்தத் துறையில் மேலதிக அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் மிகவும் வினைத்திறனாகவும் மற்றும் விரிவாகவும் மேற்கொள்ளப்படுவதற்கான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு போதிய அளவு நிதி 1992 இன் 46 ஆம் இலக்க சட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை என்பதைக் காணக்கூடியதாக உள்ளதுடன் 2009 ஆம் ஆண்டில் இந்தச் சட்டத்ததினைத் திருத்தம் செய்வதற்கு அப்போதைய கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் பணிப்பாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட 2009 செப்டம்பர் 29ஆம் திகதி இடப்பட்ட பத்திரத்திற்கு 2009 ஒக்டோபர் 28 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தேவையான திருத்தங்களுக்கான சட்டத்தினை உருவாக்குவதற்கு சட்ட வரைவாளருக்கு ஆலோசனை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டது என்பதும் அதற்கமைய திருத்தங்கள் உள்ளடக்கப்பட்ட வரைவு சட்ட வரைவாக்கல் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டு இணக்கப்பாட்டினை பெற்றுக் கொண்டுள்ள போதிலும், 2022 செப்டம்பர் 2 ஆம் திகதி கணக்காய்வு சந்தர்ப்பம் வரையிலும் சட்டத்தினை திருத்தம் செய்வதற்கு உரிய மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

**பாக்கு கன்றுகளின் உற்பத்தி குறைவடைதல்**

2018 ஆம் ஆண்டில் 283,953 ஆக இருந்த பாக்கு கன்று உற்பத்தி 2021 ஆம் ஆண்டில் 88,958 வரையிலும் குறைவடைந்து இருந்தது. அந்தக் காலப் பகுதியினுள் பாக்கு கன்று உற்பத்தி 29 சதவீதத்தில் இருந்து 4.37 சதவீதம் வரையிலும் குறைவடைந்து இருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

**கோப்பி கன்றுகளின் உற்பத்தி அதிகரித்தல்**

2018 ஆம் ஆண்டு 56,509 ஆக இருந்து கோப்பிக்கன்று உற்பத்தி 2021 ஆம் ஆண்டில் 203,258 வரையில் அதிகரித்திருந்தது. 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் 11 நாற்று மேடைகளின் மொத்த நாற்றுக்களின் உற்பத்தியில் கோப்பிக் கன்று உற்பத்தி 05 சதவீதம் தொடக்கம் 10 சதவீதம் வரையில் அதிகரித்திருந்தமை சிறந்த போக்காகும் என்பது அவதானிக்கப்பட்டது.

**விவசாய பயிர்கள் தொடர்பான நியமங்கள**

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் விவசாயப் பயிர்கள் தொடர்பான தரங்கள் தயாரிக்கப்பட்டு விதை உறுதிப்படுத்தும் சேவைக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது.

2003 இன் 22 ஆம் இலக்க விதை சட்டம் நிறைவேற்றப்பட்டு சுமார் 20 வருட காலம் கடந்துவிட்டிருந்த போதிலும் அந்த தரங்களை வெளியீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

## நனோ நைட்ரஜன் திரவ உரம் இறக்குமதி செய்தல் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை

**உர இறக்குமதிக்கான கொடுப்பனவு**

நனோ திரவ உரத்தினை இலங்கைக்கு இறக்குமதி செய்த காலப்பகுதியில் இந்திய உற்பத்தியாளரான IFFCO கம்பனியின் வலைதளத்தில் நனோ திரவ உரம் 500 மில்லி லீட்டர் போத்தலொன்றின் விலை 240 இந்திய டொலர்களுக்கு சமனான ஐ.அ.டொலர் 3.185 ஆன காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், சுங்கப் பதிவுகளுக்கமைய அந்த போத்தலொன்று ஐ.அ.டொலர் 5 இற்கு இலங்கைக்கு கொண்டுவரப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும், இந்த வலைதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விலைக்கு இலங்கைக்கு இறக்குமதி செய்யக்கூடியதாக இருக்கும் என்பது கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படாத போதிலும் அமைச்சரவைக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திரவ உரம் 500 மில்லி லீட்டர் ஆன போத்தலொன்றின் விலை ஐ.அ.டொலர் 5.25 (FCA) என்பது 2021 நவம்பர் 10 ஆந் திகதி இடம்பெற்ற கூட்டத்தில் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான குறைந்த விலைக்கு கொள்வனவு செய்யாது நனோ நைட்ரஜன் திரவ உர போத்தல்கள் 100,224 இற்கு ஐ.அ.டொலர் 12.45 மற்றும் 206,232 போத்தல்களுக்கு ஐ.அ.டொலர் 10 எனும் உயர்வான விலையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த காரணத்தால் அரசாங்கத்திற்கு இலாபகரமான விலைக்கு வழங்குநருடன் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு CCFL கம்பனி / அல்லது விவசாய இராஜாங்க அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது மற்றும் சராசரி இலாப வீதத்தினை விஞ்சிய இலாபமொன்று வழங்குநர் / அவரின் பிரதிநிதி / உற்பத்தியாளர் பெற்றுக்கொண்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

**இரு அரசாங்கங்களுக்கு இடையில் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்படக்கூடிய இயலுமை தொடர்பில் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்காமை**

இந்திய கடன் வசதிகள் வழங்கப்பட்டவாறு காணப்பட்ட போது மற்றும் குறித்த வழங்குநர் இந்திய அரசாங்கத்திற்கு உரிய நிறுவனமொன்றாக பல்வேறு சந்தர்ப்பங்களில் இனங்காணப்பட்டுள்ள போது அந்த கடன் வசதிகளின் கீழ் வழங்கும் இயலுமை காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள போது இந்த கொடுக்கல் வாங்கல் இரு அரசாங்கங்களுக்கிடையிலான கொடுக்கல் வாங்கலாக மேற்கொள்ளும் இயலுமை தொடர்பில் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததாக

அவதானிக்கப்படவில்லை.

**சுய விருப்பின் பேரில் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து முன்மொழிவுகளையும் மதிப்பீடு செய்திருக்காமை**

விவசாய அமைச்சர் மற்றும் விவசாய இராஜாங்க அமைச்சரின் தலைமையில் 2021 செப்தம்பர் 21 ஆந் திகதிய விவசாய அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது மிகவும் அவசரமான பணியொன்றாக கருதி சுய விருப்பின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்டப்ட முன்மொழிவுகள் (Unsolicited Proposal) மதிப்பீடு செய்யப்பட்டு உரம் இறக்குமதி செய்வதற்கு வரையறுக்கப்பட்ட CCFL கம்பனிக்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்ததாக 2021 செப்தம்பர் 28 ஆந் திகதிய பணிப்பாளர் சபை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறான போதிலும், Muller International கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கேள்வி ஆவணங்கள் அல்லது கூறுவிலைகள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மதிப்பீடு செய்யப்படவில்லை என தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் செயலாளரினால் 2023 ஓகஸ்ட் 14 ஆந் திகதி கணக்காய்வுக்கு அறிவிக்கப்பட்டிருந்த காரணத்தால் அமைச்சின் அறிவுரைகளை கருத்திற்கொள்ளாது தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு செயற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

**உற்பத்திக் கொள்ளளவினை உறுதிப்படுத்தியிருக்காமை**

IFFCO கம்பனிக்காக UFT இனால் வழங்கப்பட்டதாக கருதப்படும் முன்மொழிவினுள் 500 மில்லி லீட்டர் திரவ உரம் அடங்கிய 4,250,000 போத்தல்களை உரிய காலப்பகுதியில் உற்பத்தி செய்ய தேவையான இயலளவு, களஞ்சிய வசதிகள், ஏற்றுமதிக்கான அனுமதி மற்றும் இயலுமை காணப்படுவதாக குறிப்பிடப்பட்டிருக்காத போதிலும், குறித்த மதிப்பீட்டினை மேற்கொள்ளும் போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அது குறித்து கவனம் செலுத்தப்பட்டது என்பது அவதானிக்கப்படவில்லை.

**அமைச்சரவைக்குத் தகவல்களை மறைத்தமை**

இலங்கை பொருளாதாரத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானமொன்றை எடுப்பதற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட இரு முன்மொழிவுகளில் ஒன்றான Muller International கம்பனியின் முன்மொழிவினை மதிப்பீடு செய்வதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு சமர்ப்பிகாதிருப்பதற்கு, Muller International. கம்பனியின் முன்மொழிவில் உள்ளடக்கப்பட்டுள்ள உர வகையானது சேதனப் பசளையொன்றாக அவதானிக்கப்பட்டமை மற்றும் அதன்போது சேதனப் பசளை இறக்குமதிக்கு பொது மக்கள் மத்தியில் நிலவிய எதிர்ப்பின் காரணமாக அந்த முன்மொழிவு தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை என்பதும், 2023 செப்தம்பர் 01 ஆந் திகதிய முன்னாள் விவசாய இராஜாங்க அமைச்சின் முன்னாள் செயலாளர் மற்றும் மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) ஆகியோரால்

கணக்காய்வுக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறான போதிலும், இந்த விடயங்களின் அடிப்படையில் எடுக்கப்பட்ட அந்த தீர்மானம் விவேகமான முறையில் எடுக்கப்பட்டதா என்பது கணக்காய்வுக்கு உறுதிப்படுத்தப்படவில்லை. இது தொடர்பில் அமைச்சரவைக்கு அறிவிக்காமை மூலம் அமைச்சரவைக்கு குறித்த தகவல் மறைக்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்படுகின்றது.

**முன்னைய கொடுக்கல் வாங்கல்கள் உறுதிப்படுத்தப்படாமை**

IFFCO நிறுவனம் நானோ நைட்ரஜன் திரவ உர இறக்குமதிக்காக தெரிவு செய்யப்பட்டிருந்ததாக 2021 நவம்பர் 15 ஆம் திகதி இடப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த கம்பனியுடன் விவசாரய இராஜாங்க அமைச்சு அல்லது வரையறுக்கப்பட்ட கொழும்பு கமர்ஷியல் உரக் கம்பனி எந்தவொரு கொடுக்கல் வாங்கலினையும் மேற்கொண்டிருந்ததாக அவதானிக்கப்படவில்லை.

**சேதன உற்பத்தியாக ஏற்றுக் கொள்ளப்படாமை**

நனோ நைட்ரஜன் திரவ உரம் சேதனப் பசளையொன்றாக பதிவு செய்வதற்கு UFT கம்பனி 2021 ஓகஸ்ட் 24 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் நனோ தொழில்நுட்ப உற்பத்தி (Nano technology Product) சேதன உற்பத்தியொன்றாக ஏற்றுக்கொள்ள முடியாது என்பதால் நனோ நைட்ரஜன திரவ உரம் சேதனப் பசளையொன்றாக பதிவு செய்வதற்கு ஏற்றுமதி அபிவிருத்தி சபை நிராகரித்துள்ள போது சேதனப் பசளை இறக்குமதி செய்வதற்கு எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் UFT கம்பனியிடமிருந்து இந்த திரவ உரம் இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்ப

# மின்சக்தி மற்றும் வலுச்சக்தி

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள 12 நியதிச்சட்ட சபைகள்/ நிறுவனங்களினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் மற்றும் கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன.

**கடமைப் பொறுப்புகள்**

சூரிய வலு, நீர்மின், அனல், நிலக்கரி, கழிவு மற்றும் காற்று போன்ற மூலங்களிலிருந்து புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தியை ஆய்வு செய்தல், திட்டமிடுதல், அபிவிருத்தி செய்தல் மற்றும் கண்காணித்தல்.

இலங்கையின் மின்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் எரிசக்தி பாதுகாப்பு மற்றும் வலுச்சக்தி செயற்திறன் ஏற்படும் வகையில் கேள்வியை முகாமை செய்தல்.

நீண்ட கால தேவை அடிப்படையிலான மின் உற்பத்தி திட்டத்தை செயல்படுத்துதல்.

மின்சாரம் பரிமாற்றம் மற்றும் விநியோக செயல்முறையை நெறிப்படுத்துதல்.

உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் அதிகபட்ச செயல்திறனுடன் பயன்படுத்தப்படுவதை உறுதிசெய்ய சிறந்த வலையமைப்பொன்றை உருவாக்குதல்.

மின் உற்பத்திக்கான செலவைக் குறைத்தல் மற்றும் உற்பத்தியில் உள்ள நிச்சயமற்ற தன்மைகளை நீக்குதல்.

பச்சைவீட்டு வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துதல், கிராமப்புற மின்மயமாக்கல்.

பெட்ரோலியம் உற்பத்தி மற்றும் சுத்திகரிப்பு தொடர்பான நடவடிக்கைகள், பெட்ரோலியம் தொடர்பான உற்பத்திகள் மற்றும் இயற்கை எரிவாயு இறக்குமதி, சுத்திகரிப்பு, சேமிப்பு, விநியோகம் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு மற்றும் செயல்படுத்தல்.

பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஆய்வு மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகள்.

பெற்றோலியம் உற்பத்தி மூலங்களில் எரிவாயு மற்றும் உப உற்பத்தி பணிகள், இருப்பு பேணுதல் மற்றும் உற்பத்தி மற்றும் விநியோகம்.

எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம் தொடர்பான உள்கட்டமைப்பு அபிவிருத்தி, வலுச்சக்தி வளங்களின் கட்டுப்பாடு, ஒழுங்குறுத்துகை மற்றும் பயன்பாட்டிற்கு பொருத்தமான வலுச்சக்தி கொள்கையை உருவாக்குதல்.

வீடுகள், அலுவலகங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு குறைந்த செலவில் மின்சாரத்தை பெற்றுக்கொள்வதை உறுதி

செய்வதற்காக சூரிய வலுச்சக்தி கட்டமைப்பு மற்றும் சூரியத் தகடு கட்டமைப்புகளை பயன்படுத்துவதை ஊக்குவித்தல்.

மீளுருவாக்கத்தக்க வலுச்சக்தி திட்டங்களைத் தொடங்க தனியார் துறை மற்றும் முயற்சியாளர்களை ஊக்குவித்தல்.

தொழிற்சாலை கழிவுகளை பயன்படுத்தி வலுச்சக்தி உற்பத்தியை அதிகரித்தல்.

2023 ஆம் ஆண்டில் மேலே குறிப்பிடப்பட்ட கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சுக்கு ரூபா. 40,417 மில்லியன் நிதி பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன், 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையில் அதில் ரூபா. 13,293 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் மாதிரிக் கணக்காய்வு பரீட்சிப்புகளில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் தொகுக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

## கணக்காய்வு அவதானிப்புகள்

### மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு


**செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

மேல், மத்திய மற்றும் வடமத்திய மாகாணங்களில் புதிய பரிமாற்ற மார்க்கங்கள் மற்றும் புதிய வலையமைப்புத் துணைத் தளங்களை நிர்மாணிப்பதன் மூலம் பரிமாற்ற வலையமைப்பினை அபிவிருத்தி செய்தல் மற்றும் பரிமாற்ற சேதங்களைக் குறைக்கும் நோக்கில் 4 பொதிகளின் கீழ் செயல்படும் தேசிய பரிமாற்ற மற்றும் விநியோக வலையமைப்பின் அபிவிருத்தி மற்றும் செயற்திறன் அபிவிருத்தி செயல் திட்டமானது 2015 ஜனவரி ஆரம்பிக்கப்பட்டு 2018 ஜனவரி நிறைவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறு இருப்பினும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ரூபா 39,942 மில்லியன் செலவிடப்பட்டிருந்த இந்த செயல் திட்டத்தில் 1 மற்றும் 2 ஆம் பொதிகளின் பௌதிக முன்னேற்றமானது அறிக்கைக்கமைய முறையே 60 சதவீதம் மற்றும் 70 சதவீதம் ஆகும். நடைமுறைப்படுத்தப்படாது ஒப்பந்த உடன்படிக்கை (Termination) முடிவுறுத்தப்பட்டிருந்த ஒப்பந்தங்களுக்கு அமைய 3 மற்றும் 4 ஆம் பொதிகளின் விடயங்களை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### இலங்கை மின்சார சபை

2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு இறுதி வரையில் நிர்மாணிக்கப்பட்ட மின் நிலையங்களின் கொள்ளளவு கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.





உரு இல. 2.25.1 : 2020 முதல் 2023 வரையான ஆண்டுகளில் ஆண்டு இறுதியிலான மின்சார உற்பத்தி நிலையங்களின் இயலளவு

ஆதாரம் : இலங்கை மின்சார சபையின் புள்ளிவிபர அறிக்கை 2020 – 2023

மேலே உள்ள வரைபிற்கு அமைய 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு இறுதி வரையில் ஒவ்வொரு வலுசக்தி மூலாதாரத்தின் கீழ் தாபிக்கப்பட்ட வலுசக்தி கொள்ளளவினைக் கவனத்தில் கொள்ளும் போது 2020 ஆம் ஆண்டில் 1,383 மெகா வோட்டாக இருந்த சபையின் பிரதான நீர் மின் நிலையங்களின் கொள்ளளவானது 2023 ஆம் ஆண்டில் 1.413 மெகா வோட் வரையில் 2 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் சபையின் எரிபொருள் நிலையக் கொள்ளளவானது 654 மெகாவோட் தொடக்கம் 801 மெகாவோட் வரையில் 22 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. 2020 ஆம் ஆண்டில் 31 மெகா வோட்டாகக் காணப்பட்ட சபையின் காற்றாலை நிலைய கொள்ளளவானது 2021 ஆம் ஆண்டின் 104 மெகா வோட் வரையில் 235 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் அதிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரையில் 104 மெகா வோட்டாகவே மாறுதலின்றி காணப்பட்டது. அதே போன்று சபையின் நிலக்கரி நிலைய கொள்ளளவானது 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரையில் 900 மெகா வோட்டாகும். மேலும், சிறிய நீர்மின் நிலையங்கள், காற்றாலை, வேறு மீளருவாக்கத்தக்க வலுசக்தி மற்றும் கிரிட் இணைக்கப்பட்ட சூரிய சக்தி போன்றவை ரீதியிலான இயற்கை வலுசக்தி உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்படுகின்ற வலுசக்தி கொள்ளளவானது 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரையில் 683 மெகாவோட் தொடக்கம் 775 மெகாவோட் வரையில் 13 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரையில் மின்சக்தி உற்பத்தி செய்யப்படும் மூலாதாரங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.





உரு இல. 2.25.2 : 2020 முதல் 2023 வரையான மின்சார உற்பத்தி மூலங்கள்
ஆதாரம் : இலங்கை மின்சார சபையின் புள்ளிவிபர அறிக்கை 2020 – 2023

வலுசக்தி கொள்ளளவு அவ்வாறு இருந்த போதிலும் உண்மையாக உருவாக்கப்பட்ட மின்சார கொள்ளளவினைக் கவனத்தில் கொள்ளும்போது சபையின் முக்கிய நீர்மின் நிலையங்களில் 2023 ஆம் ஆண்டில் 4,573 மெகா வோட்டும், சபையின் நிலக்கரி நிலையங்களில் இருந்து உருவாக்கப்பட்ட மின்சார அலகுகளின் எண்ணிக்கை 4,646 அலகுகளும், சபையின் எரிபொருள் நிலையங்களில் இருந்து 1,972 மெகா வோட் அலகுகளும் ஆகும்.
இதற்கு மேலதிகமாக, சிறிய நீர்மின் நிலையங்கள், காற்றாலைகள் , வேறு மீளுருவாக்கத்தக்க வலுசக்தி, கிரிட் இணைக்கப்பட்ட சூரிய வலுசக்தி மற்றும் கூரையின் மீதான சூரிய தகடுகள் போன்றவை ரீதியிலான இயற்கை வலுக்தி உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட வலுசக்தி அலகுகளின் எண்ணிக்கை 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரையில் 1,858 மெகாவோட் தொடக்கம் 2,831 மெகாவோட் வரையில் 52 சதவீதத்தினால் தெளிவாகத் தெரியக்கூடிய வகையில் அதிகரித்திருந்ததுடன் அதனிடையே கூரைகளின் மீதான சூரிய தகடுகள் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சார அலகுகளின் எண்ணிக்கை 269 தொடக்கம் 632 வரையில் 135 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. எவ்வாறு இருப்பினும் அது 2023 ஆம் ஆண்டின் மொத்த வலுசக்தி உற்பத்தியில் 4 சதவீதம் மட்டுமாகவே காணப்பட்டது.

**சபையின் நிதி பெறுபேறு**

2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரையில் இலங்கை மின்சார சபையில் ஈட்டப்பட்ட செயற்பாட்டு இலாபம் / ( நட்டம் ) மற்றும் காலப்பகுதிக்கான நிகர இலாபம் (நட்டம் ) கீழே உள்ள வரைபில் காட்டப்பட்டுள்ளது.




உரு இல. 2.26 : 2013 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையிலும் இலங்கை மின்சார சபையினால் ஈட்டப்பட்ட செயற்பாட்டு இலாபம்/(நட்டம்)
ஆதாரம் : இலங்கை மின்சார சபையின் நிதிக் கூற்று 2013 – 2023


மேலே உள்ள வரைபடத்திற்கு அமைய 2015 ஆம் ஆண்டு தவிர 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் இலங்கை மின்சார சபை அடைந்திருந்த மொத்த நட்டம் ரூபா. 558,048 மில்லியனாக இருந்தது. 2023 ஆம் ஆண்டுக்காக எதிர்வு கூறப்பட்டிருந்த ரூபா. 18.7 பில்லியன் நிதி நட்டத்தினை அறவிடுவதற்காக 2023 ஒக்டோபர் 20 ஆம் திகதி தொடக்கம் அமுல்படுத்தப்படும் வகையில் மின்சார கட்டணம் சுமார் 18 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டு இருந்தது. இந்த அதிகரிக்கப்பட்ட மின்சாரக் கட்டணம் மற்றும் 2023 ஆம் ஆண்டில் இலங்கை மின்சார சபை நீர்மின் நிலையங்களில் இருந்து மதிப்பீடு செய்யப்பட்ட நீர் மின்னினை விட 790 மணிநேர கிகா வோட் அளவில் நீர்மின் உற்பத்தி செய்யப்பட்ட காரணத்தினால் ரூபா. 118.94 பில்லியனான கவனத்தில் கொள்ளத்தக்களவிலான செயற்பாட்டு இலாபம் (நிதி செலவிற்கு முன்னர்) மற்றும் ரூபா. 61.24 பில்லியன் அளவிலான கவனத்தில் கொள்ளத்தக்க நிகர இலாபத்தினை 2023 ஆம் ஆண்டில் ஈட்டியிருந்தது.

**மின் கட்டணத் திருத்தம்**


2013 ஏப்ரல் 20 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் வீட்டுபயோகத் தொகுதிக்கு 2014 செப்டம்பர் 16 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையிலும் மற்றும் வீட்டுபயோகம் அல்லாத தொகுதிக்கு 2014 நவம்பர் 15 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் மின் கட்டணம் குறைக்கப்பட்டு இருந்தது. அதன் பின்னர், 2022 ஓகஸ்ட் 09 ஆம் திகதி வரையில் எதுவித மின் கட்டண திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2022 மார்ச் 07 ஆம் திகதி தொடக்கம் ரூபாயின் பெறுமதி கடுமையாக வீழ்ச்சி அடைந்தமை மற்றும் 2022 மார்ச் 11 ஆம் திகதி எரிபொருள் விலை பாரிய அளவில் அதிகரித்ததை கவனத்தில் கொண்டு 79 சதவீதம் அளவில் சபையின் வருமானத்தினை அதிகரிப்பதற்காக 2022 ஆகஸ்ட் 10 ஆம் திகதி தொடக்கம்

அமுலுக்கு வரும் வகையில் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டுக்கு ரூபா. 288 பில்லியன் எதிர்வு கூறப்பட்ட மொத்த நட்டத்தினை அறவிடுவதற்காக 66.2 சதவீத அளவில் வருமானத்தினை அதிகரிப்பதற்கு 2023 பெப்ரவரி 15 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் மீண்டும் கட்டணம் அதிகரிக்கப்பட்டு இருந்தது.

ஐக்கிய அமெரிக்க டொலரின் செலாவணி விகிதம் 12 சதவீதத்தினால் குறைவடைந்தமை, எரிபொருள் விலை குறைவடைந்தமை மற்றும் மின்சாரத்திற்கான கேள்வி 18 சதவீதத்தினால் குறைவடைந்தமை என்பவற்றை கருத்தில் கொண்டு 2023 ஜுலை 01 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் மின் கட்டணம் 14.2 சதவீதம் அளவில் குறைக்கப்பட்டு இருந்ததுடன் மீண்டும், 2023 நிதி நட்டத்தினை அறவிடுவதற்காக 2023 ஒக்டோபர் 20 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் மின் கட்டணம் 18 சதவீத அளவினால் அதிகரிக்கப்பட்டு இருந்தது. இந்த அதிகரிக்கப்பட்ட மின் கட்டணம் 2024 மார்ச் 04 ஆம் திகதி வரையில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.
அதற்கமைய, 2022 ஓகஸ்ட் 10 ஆம் திகதி தொடக்கம் 2023 ஒக்டோபர் 20 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் மின் கட்டணங்களில் வலுசக்தி சதவீதம் மற்றும் 300 கிலோ வோட்டை விட குறைந்த கைத்தொழில் சிறு தொகுதி தவிர மாதாந்த நிலையான கட்டணம் அதிகரிக்கப்பட்ட சதவீதங்கள் பின்வரும் உருக்களில் காட்டப்பட்டுள்ளன.




உரு இல. 2.27: 2022 ஓகஸ்ட் 10 ஆம் திகதிக்கு முன்னர் காணப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட மின் கட்டணம் மற்றும் 2023 ஒக்டோபர் 20 ஆம் திகதி தொடக்கம் அங்கீகரிக்கப்பட்ட மின் கட்டணம்
ஆதாரம்: இலங்கை மின்சார சபையின் புள்ளிவிபர அறிக்கை 2020-2023




உரு இல. 2.28: மின்சாரக் கட்டணங்களின் நிலையான கட்டணங்களின் அதிகரிப்பு சதவீதம்
ஆதாரம்: இலங்கை மின்சார சபையின் புள்ளிவிபர அறிக்கை 2020-2023

**குறைந்த கிரயத்திலான நீண்டகால மின் உற்பத்தியினை விரிவுபடுத்தும் செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் தாமதம்**

சபையினால் தயாரிக்கப்பட்டிருந்த 2018 - 2037 குறைந்த செலவில் நீண்ட கால மின்சார உற்பத்தியினை விரிவுபடுத்தும் திட்டத்திற்கு அமைய, 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையில் முறையே மொத்தம் 500 மெகா வோட், 657 மெகா வோட், 430 மெகா வோட் மற்றும் 445 மெகா வோட் கொள்ளளவினைக் கொண்ட புதிய மின் உற்பத்தி நிலையங்களை செயல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறு இருப்பினும், அந்த வருடம் திட்டமிடப்பட்ட மொத்தம் 2,032 மெகா வோட கொள்ளளவில் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்தம் 661.6 கொள்ளளவினைக் கொண்ட மின் உற்பத்தி நிலையம் மட்டுமே செயல்படுத்தப்பட்டிருந்தது.

அதே போன்று, அந்த திருத்தம் செய்யப்பட்ட 2022 - 2041 திட்டத்திற்கு அமைய, 2022 ஆம் ஆண்டில் மொத்தம் 544 மெகா வோட் கொள்ளளவினைக் கொண்ட மீளுருவாக்கத்தக்க வலுசக்தி நிலையத்தினை செயல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறு இருப்பினும், 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்தம் 211 மெகா வோட் கொள்ளளவினைக் கொண்ட புதிய மீளுருவாக்கத்தக்க வலுசக்தி நிலையம் மட்டுமே செயல்படுத்தப்பட்டிருந்தது.

மேலும், 2023 - 2042 திருத்தப்பட்ட திட்டத்திற்கு அமைய மொத்தம் 607 மெகா வோட் கொள்ளளவினைக் கொண்ட நிலையங்களை 2023 ஆம் ஆண்டில் செயல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்தம் 185.6 மெகா வோட் கொள்ளளவினைக்

கொண்ட புதிய மின் உற்பத்தி நிலையம் மட்டுமே செயல்படுத்தப்பட்டிருந்தது.

**அனுமதிப் பத்திரம் இல்லாத உற்பத்தியாளர்களிடம் இருந்து வலுசக்தியினைக் கொள்வனவு செய்திருந்தமை**

இலங்கை மின்சக்தி அதிகார சட்டத்தின் பிரிவுகளுக்கு முரணாக கட்டுப்பாட்டளரிடம் இருந்து அதிகாரத்தினைப் பெற்றுக் கொள்ளாது மற்றும் உற்பத்தி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளப்படாதிருந்த ஓய்வு பெற்ற சுயேட்சை வலுசக்தி உற்பத்தியாளர்கள் இருவரிடமிருந்து (ஐ. பி. பி.) 2023 ஆம் ஆண்டினுள் ரூபா. 2.96 பில்லியனான 27.31 கிகா வோட் வலுசக்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

**சம்பிரதாயபூர்வமற்ற மீளுருவாக்கத்தக்க வலுசக்தி செயற்திட்டத்தினைச் செயல்படுத்துவதில் தாமதம்**

திருத்தப்பட்ட 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சக்தி அதிகார சட்டத்துக்கு அமைய, பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டிய வழமைக்கு மாறாக மீளுருவாக்கத்தக்க வலுசக்தி (NCRE) செயற்திட்டத்திற்கு மொத்தம் 390 மெகா வோட் கொள்ளளவினை கொண்ட 7 பெறுகை செயல்பாடுகள் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்தம் 102 மெகா வோட் கொள்ளளவினைக் கொண்ட மின் நிலையங்கள் மட்டும் செயல்படுத்தப்பட்டிருந்தன. மேலும், 2022 இன் 16 ஆம் இலக்க மின்சக்தி (திருத்தப்பட்ட) அதிகார சட்டத்திற்கு அமைய இலங்கை சூரிய வலுசக்தி அதிகார சபையினால் (SLSEA) வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தின் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டிருந்த மொத்தம் 598 மெகா வோட் கொள்ளளவினைக் கொண்ட NCRE செயற்திட்டங்களிடையே, 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்தம் 4 மெகா வோட் கொள்ளளவைக் கொண்ட நிலையம் மட்டுமே செயல்படுத்தப்பட்டிருந்தது.

**நிதி நட்டத்தின் காரணமாக கவனத்தில் கொள்ளத்தக்களவிலான வட்டி செலவினை ஏற்க நேரிட்டிருந்தமை**

மின்சாரத்தினை கொள்வனவு செய்வதற்காக மற்றும் எரிபொருள் கொள்வனவு செய்வதற்காக குறித்த நேரத்தில் கொடுப்பனவு தாமதமடைந்த காரணத்தினால் தாமத வட்டியாக 2023 ஆம் ஆண்டில் மட்டும் ரூபா. 21,940 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. மேலும், சபையின் தொடர்ச்சியான நிதி நட்டம் காரணமாக முக்கியமாக எரிபொருள், நிலக்கரி மற்றும் உதிரிப் பாகங்கள் பெறுகை, மின்சாரத்தினைக் கொள்வனவு செய்வதற்கான கொடுப்பனவு மற்றும் மூலதன செலவிற்கான நிதி பாய்ச்சல் தேவைப்பாட்டிற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட வங்கி

மேலதிகப் பற்று, குறுகிய காலக் கடன் மற்றும் நீண்ட காலக் கடனுக்கான வட்டி என 2023 ஆம் ஆண்டில் மட்டும் ரூபா. 36,873.4 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

**அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளாது ஊழியர்களுக்கு பல்வேறு கொடுப்பனவுகளை வழங்கியமை**

மாதிரிக் கணக்காய்வு பரீட்சிப்புக்கு அமைய 2008 ஏப்ரல் 09 ஆம் திகதி அமைச்சரவையினால் அனுமதி வழங்கப்பட்ட கொடுப்பனவுப் பட்டியலில் உள்ளடக்கப்படாத மற்றும் சம்பளம் மற்றும் ஊழியர் எண்ணிக்கை ஆணைக்குழுவின் பரிந்துரை மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளாத கொடுப்பனவுகளுக்காக 2023 ஆம் ஆண்டின் முதல் 09 மாதங்களில் மட்டும் ரூபா. 507.47 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

**மின்சார பாதைகளின் பழுதுபார்த்தல் பணிகள் தாமதமடைந்தமை**

தென் மாகாண மின்சக்தி ஒழுங்கமைப்பில் காணப்படும் மின்சக்தி உற்பத்தி எல்லைகள் மற்றும் பரிமாற்ற வலையமைப்பில் காணப்படும் எல்லைகளை முன்னிலைப்படுத்தி 2016 ஆம் ஆண்டு தொடக்கம் அவசர மின்சாரத்தினைக் கொள்வனவு செய்வதற்காக பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழுவிடம் அனுமதியினை இலங்கை மின்சார சபை கோரியிருந்தது. எவ்வாறு இருப்பினும், கவனத்தில் கொள்ளத்தக்க தாமதத்தின் பின்னர் தென் மாகாண மின்சக்தி ஒழுங்கமைப்பினை உறுதிப்படுத்துவதற்காக முன்மொழியப்பட்ட பொல்பிட்டிய - அம்பாந்தோட்டை 220 கிலோ வோட் கொள்ளளவினைக் கொண்ட 150 கிலோ மீட்டர் பரிமாற்ற மார்க்கத்தினை 2023 ஓகஸ்ட் 22 ஆம் திகதி தேசிய மின்சக்தி ஒழுங்கமைப்பு இணைத்திருந்தது. அதே போன்று, தென் மாகாணத்தில் மின்சக்தி ஒழுங்கமைப்பினை உறுதிப்படுத்துவதற்கான முன்மொழியப்பட்ட 2022 ஏப்ரல் 20 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட ஹொரணை - பாதுக்க 132 கிலோ வோட் கொள்ளளவினைக் கொண்ட 25 கிலோ மீட்டர் பரிமாற்ற மார்க்கம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட்டு இருக்காதுடன் அதன் பௌதிக முன்னேற்றம் 51.15 சதவீதமாக இருந்தது. 2021 ஜனவரி 23 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட 220 கிலோ வோட் கொள்ளளவினைக கொண்ட கொத்மலை - நவ பொல்பிட்டிய பரிமாற்ற மார்க்க செயற்திட்டம் நிதி சிக்கல்களின் அடிப்படையில் உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டு (Terminate) இருந்ததுடன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் அதன் பௌதிக முன்னேற்றம் 59 சதவீதமாக இருந்தது.

**அறவிடப்பட வேண்டிய வியாபாரக் கடன்**

2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் சபையில் வியாபார கடன்பட்டோர் மீதி ரூபா. 70.02 பில்லியன் ஆகும். அதில்

ரூபா. 6.18 பில்லியன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் 6 மாதங்களுக்கும் அதிக காலம் தொட்டும் ரூபா. 2.25 பில்லியன் அதாவது மொத்த வியாபாரகி கடன்பட்டோரில் 3.22 சதவீதம் 5 வருடங்களுக்கும் அதிக காலம் தொட்டும் அறவிடப்படாது காணப்பட்டன.

**கொள்வனவு செய்யப்பட்ட காணி எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாமை**

செயற்திட்ட நடவடிக்கைகள், பிரதேச பொறியியலாளர் அலுவலகம், வாடிக்கையாளர் சேவை மத்திய நிலையம் மற்றும் கிரிட் துணைத் தளத்தினை நிர்மாணிப்பதற்காக ரூபா. 188.38 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 18 காணிகள் 2000 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அந்தக் காணிகளிடையே ரூபா. 36.48 மில்லியன் பெறுமதியான 4 காணிகள் விநியோகப் பிரிவுகளில் நிலையான சொத்து பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டு இருக்காதுடன் மாதிரிக் கணக்காய்வு பரீட்சிப்பிற்கு அமைய பிரோட்லேண்ட் நீர்மின் நிலைய செயற்திட்டம், மீளுருவாக்கத்தக்க வலு சக்தியினைப் பெற்றுக் கொள்வதற்கான பரிமாற்ற அபிவிருத்தி செயற்திட்டம் மற்றும் தேசிய பரிமாற்றம் மற்றும் விநியோகம், வலையமைப்பு அபிவிருத்தி மற்றும் செயல்திறன் முன்னேற்ற செயற்திட்டம் ஆகிய செயற்திட்டங்களின் பல்வேறு நிர்மாண நடவடிக்கைகளுக்காகக் கையகப்படுத்தப்பட்டிருந்த 10 காணிகளின் கையகப்படுத்தல் நடவடிக்கைகள் குறித்த வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 6 வருடங்களைக் கடந்திருந்த போதிலும் பூர்த்தி செய்வதற்கு சபை தவறியிருந்தது.

**மின்சக்தி துறையில் நிறுவன மறுசீரமைப்பு**

2002 இன் 28 ஆம் இலக்க மின்சக்தி மறுசீரமைப்பு சட்டத்தின் எé ஆம் அத்தியாயத்தில் “ விடயப் பரப்பு “ மற்றும் “ நிறுவன பணிக் கட்டமைப்பு “ என்பவற்றை ஆய்வு செய்வதற்கு மற்றும் மீளாய்வு செய்வதற்கு மற்றும் பொதுமக்களின் தற்போதைய மற்றும் எதிர்கால அபிலாசைகளை பூர்த்தி செய்வதற்கு மிகவும் துடிப்பான, ஆற்றல் மிக்க, உற்பத்தித் திறனான மற்றும் செயல் திறனான நிறுவன கட்டமைப்பினைப் பரிந்துரை செய்வதற்கு மற்றும் முக்கியமாக இலங்கை மின்சார சபைக்கு மற்றும் இலங்கை மின்சார நிறுவனமும் உள்ளடக்கப்பட்டு பொதுவாக “ மின்சக்தி கைத்தொழில்”க்கு “ வணிகத் தரப்படுத்தல் சுட்டி” மூலம் இலங்கையை உயர்த்துவதற்காகக் குழு ஒன்றினை நியமிப்பதற்கு 2022 ஜூலை 29 ஆம் திகதி அமைச்சரவைப் பத்திர இலக்கம் 22.ᐟ.1089.ᐟ.621.ᐟ.008 கொண்ட “ மின்சக்தி துறைக்கான நிறுவன மறுசீரமைப்பு “ எனும் தலைப்பில் சமர்ப்பிக்கப்பட்ட பத்திரத்தின் மூலம் செய்யப்பட்ட

முன்மொழிவிற்கு 2022 ஓகஸ்ட் 01 ஆம் திகதி அமைச்சரவையினால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

மேலும், தற்போது இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான நீர்மின் உற்பத்தி, அனல்மின் உற்பத்தி மற்றும் மீளுருவாக்கத்தக்க வலுசக்தி உற்பத்தி போன்ற நடவடிக்கைகள் 2007 இன் 07 ஆம் இலக்க நிறுவன அதிகார சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட 12 நிறுவனங்களுக்கு சொந்தமாக்குவதற்கான ஒழுங்கு விதிகள் உள்ளடக்கப்பட்ட 2024 இன் 36 ஆம் இலக்க இலங்கை மின்சக்தி அதிகார சட்டம் 2024 ஜூன் மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

**மின்சார விநியோகத்தின் நம்பகத் தன்மையை மேம்படுத்துவதற்கான உதவிச் செயற்திட்டம்**

மின்சார வழங்குதலின் மற்றும் விநியோகத்தின் ஒழுங்கமைப்புகளின் செயல் திறன் மற்றும் நம்பகத் தன்மையை மேம்படுத்துவதற்கான இந்த செயற்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த செலவு ரூபா. 24,228 ஆக உள்ளதுடன் இந்த செயற்திட்டம் 2017 ஜூன் 29 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2021 செப்டம்பர் 30 ஆம் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டி இருந்த போதிலும் பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி 2025 மார்ச் 31 ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் 4 ஆவது பொதியில் 285 கிலோ மீட்டர், 33 கிலோ வோட் கோபுர மார்க்கம், 13 2 எஸ்எஸ்பிபி கிரன்ட்ரி நிர்மாணிப்பதற்கு உரியதான (285 km, 33 kV tower lines 13 Nos of 2 SSBB gantries) ஒப்பந்தம் 2019 மே 30 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்ததுடன் அது 2021 ஒக்டோபர் 28 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் நிர்மாணிப்புகளில் கவனத்தில் கொள்ளத்தக்க தாமதம் ஏற்பட்டமையால் 2024 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் பௌதிக முன்னேற்றம் 65 சதவீதமாகவும் நிதி முன்னேற்றம் 69 சதவீதமாகவும் இருந்தது. அதே போன்று 7 ஆவது பொதியில் A1 லொட்டிற்கு உரியதாக 100 MVAr Breaker Switched Capacitor தாபிக்கும் நடவடிக்கை 2019 ஓகஸ்ட் 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அது 2021 ஜனவரி 21 ஆம் திகதியில் பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், 2024 மார்ச் 31 ஆம் திகதியில் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே 79 சதவீதம் மற்றும் 88 சதவீதமாக இருந்தது.

**பசுமையான வலுசக்தி அபிவிருத்தி மற்றும் வலுசக்தி செயல்திறன் மேம்பாட்டு முதலீட்டு வேலைத் திட்டம் (கட்டம் II)**

தூய்மையான மின்சக்தி உற்பத்தி, ஒழுங்கமைப்பு செயல்திறன் மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்கான இந்த

வேலைத் திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த செலவு ரூபா. 39,808 மில்லியனாக உள்ளதுடன் இந்த செயல் திட்டத்தின் நடவடிக்கைகள் 2017 ஜூலை 10 ஆம் திகதியில் ஆரம்பிக்கப்பட்டு 2021 திசெம்பர் 31 ஆம் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியதாக இருந்த போதிலும் பூர்த்தி செய்யப்படும் திகதி 2024 ஜூன் 30 ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டிருந்தது. அதே போன்று இந்த செயல் திட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்படும் இறுதிக் கடன் நீடிப்பு 2024 ஜூன் 30 ஆம் திகதி வரையில் ஆகும். அவ்வாறு இருக்கையில், 2024 மார்ச் 31 ஆம் திகதி அளவில் 8 ஆவது பொதி (லொட் B) அம்பலாங்கொடை 132/33 kV கொடுமா துணைத் தளத்தினை மேம்படுத்துதல், பன்னல 132/33 kV கொடுமா துணைத் தளத்தினை மேம்படுத்துதல் மற்றும் 132/33 kV 31.5 MVA மேலதிக டிரான்ஸ்போர்மர் 2 வழங்குதல் மற்றும் 9 ஆவது பொதி 220 கிலோ வோட் கெரவலப்பிட்டியவில் ஸ்விட்சின் ஸ்டேஷன் நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் என்பவற்றின் நிதி முன்னேற்றம் முறையே 76 சதவீதம் மற்றும் 96 சதவீதமாக இருந்தது.

## LTL டிரான்ஸ்போர்மர்ஸ் கம்பனி

**LTL டிரான்ஸ்போர்மர்ஸ் கம்பனியின் கணக்காய்வு தொடர்பான வரையறைகள்**

19 ஆம் அரசியலமைப்புச் சட்டத் திருத்தங்களுடன் அரச நிறுவனங்களின் கணக்காய்வு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விடயப் பரப்பிற்கு உட்பட்டு உள்ளதுடன் LTL ஹோல்டிங்ஸ் தனியார் நிறுவனம் மற்றும் அதன் கட்டுப்பாட்டு நிறுவனங்களது கணக்காய்வு தொடர்பில் LTL டிரான்ஸ்போர்மர்ஸ் நிறுவனத்தின் ஊழியர் சபையுடன் மேலும் இருவர் கௌரவ மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடுத்துள்ள வழக்கு மற்றும் எச். டி. சமிந்த மற்றும் மேலும் 15 பேர்களினால் கௌரவ மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடுத்திருந்த வழக்கின் மூலம் LTL ஹோல்டிங்ஸ் தனியார் நிறுவனத்தின் சட்டபூர்வ கணக்காய்வினைக் கணக்காய்வு தலைமை அதிபதியினால் மேற்கொள்ளுவதற்கு எதிராக இடைக்கால உத்தரவு ஒன்று 2020 ஜூலை 10 ஆம் திகதி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறு இருக்கையில் 2022 ஒக்டோபர் 10 ஆம் திகதி நீதிமன்ற உத்தரவின் மூலம் அந்தத் தடையினை நீக்கி அரசியலமைப்புச் சட்டத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் அந்த நிறுவனத்தின் கணக்காய்வினை எனது தலைமைக்கு அமைய மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது. அவ்வாறு இருக்கையில் அப்போது அந்த நிறுவனத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் நியமிக்கப்பட்ட கணக்காய்வினை அகற்றுவதற்காக நடாத்தப் பிரேரிக்கப்பட்டிருந்த விசேட பொதுக் குழுவினை நடாத்துவதற்கு எதிராக வணிக உயர் நீதிமன்றத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த இடைக்கால உத்தரவினை மேற்கோள் காட்டி எனது பதவியணியினருக்கு LTL ஹோல்டிங்ஸ்

தனியார் நிறுவனத்தில் கணக்காய்விற்கு தடை ஏற்படுத்தப்பட்டிருந்தது. மேலே கூறப்பட்ட விடயங்களின் காரணமாக 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரையில் அந்த நிறுவனத்தில் கணக்காய்வு நடவடிக்கைகள் எனது தலைமைக்கமைய மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. எவ்வாறான போதிலும், 2024 ஜனவரி 01 ஆம் திகதி எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் மின்சார சபையிடம் இருந்த LTL ஹோல்டிங்ஸ் தனியார் நிறுவனத்தின் 63 சதவீத பங்கு மூலதனத்தில் 28 சதவீதம் மின்சார சபையினால் வெஸ்ட்கோஸ்ட் தனியார் நிறுவனத்திற்கு தீர்ப்பதற்காக இருந்த நிலுவை மீதியில் ஒரு பகுதியினைத் தீர்ப்பதற்காக அந்த நிறுவனத்திடம் ஒப்படைப்பதற்கு 2024 பெப்ரவரி 01 ஆம் திகதி இடம் பெற்ற மின்சார சபை பணிப்பாளர் சபை கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கமைய அதற்குரிய 919,517,200 பங்குகளை ரூபா. 26.08 பில்லியனுக்கு 2024 பெப்ரவரி 07 ஆம் திகதி LTL ஹோல்டிங்ஸ் தனியார் நிறுவனத்தினால் வெஸ்ட்கோஸ்ட் தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

## இலங்கை நிலக்கரி கம்பனி

**நிலக்கரி குறைவாக விநியோகிக்கப்படல்**

வெளிநாட்டு நிலக்கரி நிறுவனத்திடம் இருந்து ஒன்பது வருட காலம் தொட்டு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா. 590 மில்லியன் தொகை இலங்கை நிலக்கரி நிறுவனத்தினால் இணங்கி இருந்த நடுவர் மன்ற முறைமையின் கீழ் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## இலங்கை மின்சார சபையின் ஓய்வூதிய நிதியம்

**திறைசேரி பிணை முதலீடுகளில் இடம்பெற்றிருந்த முறைகேடுகள்**

2014 ஆம் ஆண்டில் என்ட்ரஸ்ட் செக்யூரிட்டிஸ் பிஎல்சி ஊடாக ரூபா. 400.4 மில்லியன் தொகை திறைசேரி பிணைகளில் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மத்திய வைப்பு ஒழுங்கமைப்பினுள் நிதியத்தின் பெயரில் இந்த முதலீட்டுக்குரிய பிணைப்பத்திரங்கள் இல்லை என்பது 2015 ஆம் ஆண்டில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறு இருப்பினும், 2018 ஆம் ஆண்டில் காலாவதியாகும் திகதி வரையிலுமான திரட்டப்பட்ட வட்டியுடன் முதலீட்டுத் தொகையினை அறவிடுவதற்கு இலங்கை மின்சார சபையினால் என்ட்ரஸ்ட் செக்யூரிட்டிஸ் பிஎல்சி நிறுவனத்திற்கு எதிராக 2 வருடத்திற்கும் அதிக காலதாமதத்தின் பின்னர் சிவில் வழக்கொன்று தொடுக்கப்பட்டிருந்தது. எனினும், அப்போது நிதியத்தில் சேவையாற்றிய பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக அவர்களது கவனயீனத்திற்கு எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் அவர்களுக்கு இலங்கை மின்சார சபையில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

**இலங்கை மின்சார சபையின் சேமலாப நிதியம்**

**முறையான அனுமதியின்றி நிதியத்தின் சட்ட விதிகளை மாற்றப்படுதல்**

தொழில் ஆணையாளரின் மற்றும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் அனுமதியின்றி பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் மூலம் அதன் பின்னர் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் காலத்துக்கு காலம் அல்லது இலங்கை மின்சார சபையினால் சபையின் சேமலாப நிதியத்திற்கு உரியதான சட்ட விதிகள் அல்லது அவற்றில் ஏதேனும் ஒன்றை விளக்குதல், மாற்றுதல், திருத்துதல், மீளமைத்தல் அல்லது திருத்தி அமைத்தல் செய்ய முடியும். எவ்வாறு இருப்பினும், பணிப்பாளர் சபையின், தொழில் ஆணையாளரின் மற்றும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் அனுமதிகள் இன்றி மற்றும் திருத்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக பிரசுரிக்கப்படாது, முகாமைத்துவக் குழு அதிகாரம் மற்றும் கடமைகளுக்குரிய சட்ட விதிகள், முதலீட்டு அதிகாரம், அங்கத்தவர்களுக்குக் கடன் பெற்றுக் கொடுத்தல் போன்ற விடயங்கள் நிதியத்தினால் திருத்தப்பட்டு அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**திறைசேரி பிணை முதலீடுகளில் இடம்பெற்றிருந்த முறைகேடுகள்**

2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் என்ட்ரஸ்ட் செக்யூரிட்டிஸ் பிஎல்சி மூலம் மூன்று திறைசேரி பிணைகளில் சேமலாப நிதியத்தில் ரூபா. 2.3 பில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் மத்திய வைப்பு ஒழுங்கமைப்பினுள் நிதியத்தின் பெயரில் இந்த முதலீட்டுக்குரிய பிணைப்பத்திரங்கள் இல்லை என்பது 2015 ஆம் ஆண்டில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறு இருப்பினும், அப்போது நிதியத்தில் சேவையாற்றிய பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக அவர்களது கவனயீனத்திற்கு உரிய நடவடிக்கை குறித்த காலத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் அவர்களுக்கு இலங்கை மின்சார சபை சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்வதற்கு இடமளிக்கப்பட்டு இருந்தது.

**பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு**

**வருமான வரி சட்டத்தின் பிரகாரம் வருமான வரி செலுத்தாமை**

2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் முதலாம் பகுதியின் (ii) ஆம் அத்தியாயத்தில் 7 ஆவது பந்தியின் பிரகாரம் ஆணைக்குழுவானது வரிக்கு உட்பட்ட முதலீட்டு வருமானத்தினை ஈட்டியிருந்த போதிலும், அந்த சட்டத்தின் 126(i) ஆம் பந்தியின் பிரகாரம் வரி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு அந்த சட்டத்தின் 145 ஆவது பந்தியின் பிரகாரம் வரி செலுத்துதல் மேற்கொள்ளப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. கணக்காய்வின் கணக்கீட்டிற்கு அமைய 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரையில் ஈட்டப்பட்ட முதலீட்டு வருமானத்தின் அடிப்படையில் செலுத்தப்பட வேண்டிய மொத்த வரித் தொகை

அண்ணளவாக ரூபா. 95.61 மில்லியன் என்பது அவதானிக்கப்பட்டதுடன் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் இதற்கான எந்தவொரு ஒதுக்கீடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**பெற்றோலியம் மற்றும் நீர் ஆகிய கைத்தொழில்கள் ஆணைக்குழுவின் ஒழுங்குறுத்தல்களுக்கு உட்பட்டிருக்காமை**

2002 இன் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் இலங்கையில் உட்கட்டமைப்பு வசதிகள் துறையானது அதாவது மின்சாரம், பெட்ரோலியம், எரிபொருள் மற்றும் நீர் தொடர்பான துறைகள் ஒழுங்குறுத்தப்பட வேண்டிய போதிலும் பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினைக் கண்காணிப்பு செய்வதற்கு குறித்த சட்டம் திருத்தப்படாத காரணத்தால் 21 வருடங்களுக்கும் அதிக காலம் முழுவதும் பெட்ரோலியம் மற்றும் நீர் ஆகிய துறைகளை ஆணைக்குழுவின் ஒழுங்குறுத்தலுக்கு உட்படுத்த முடியாது இருந்தன. எனினும் பெட்ரோலியம், மசகு எண்ணெய் மற்றும் நீர் துறைகளை ஒழுங்குறுத்தாத போதிலும், அதற்காக நியமிக்கப்பட்ட ஆலோசகர்களுக்கு 2021 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரையில் ரூபா. 20.13 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

**சபையின் அனுமதிப்பத்திரமின்றி நிறுவனங்களில் இருந்து மின்சாரத்தினைக் கொள்வனவு செய்வதற்கு இடமளித்தமை**

மின்சாரத்தினைக் கொள்வனவு செய்யும் உடன்படிக்கை காலாவதியாகி இருந்த ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய (தனியார்) கம்பனி, ஏஸ் பவர் ஜெனரேஷன் மாத்தறை (தனியார்) நிறுவனம் மற்றும் ஏசியா பவர் (தனியார்) கம்பனியிடமிருந்து 2009 இன் 30 ஆம் இலக்க இலங்கை மின்சக்தி சட்டத்தின் 13 ஆவது பிரிவின் பிரகாரம் இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழுவின் அனுமதிப்பத்திரம் இன்றி 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையில் அடிப்படை மின்சாரத்தினைக் கொள்வனவு செய்யும் உடன்படிக்கை நீடிக்கப்பட்டு குறுகிய கால அடிப்படையில் இலங்கை மின்சார சபையினால் மின்சாரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறு இருப்பினும், இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவினால் மேலே கூறப்பட்ட சட்டத்தின் 7 ஆவது பிரிவுக்கு அமைய இந்த நிறுவனங்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**உள்நாட்டு பெற்றோலிய சந்தை**


2023 ஆம் ஆண்டு உள்நாட்டு பெட்ரோலிய சந்தை வழங்கல் 3,950 மில்லியன் லீட்டராக இருந்ததுடன் அதில் 91 சதவீதத்திற்கும் அதிகமான வழங்கல் இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் (CPC) மூலம்

மேற்கொள்ளப்பட்டிருந்தது. மொத்த பெற்றோலிய இறக்குமதிக்காக ரூபா. 940,840 மில்லியன் தொகை கூட்டுத்தாபனத்தினால் செலவிடப்பட்டிருந்தது.

**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் நிதி பெறுபேறு மற்றும் தேறிய சொத்துக்களின் நிலைமை**

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்கு அமைய 2023 ஆம் ஆண்டு கூட்டுத்தாபனம் ரூபா. 162,114 மில்லியன் மொத்த இலாபத்தினைப் பதிவு செய்திருந்ததுடன் அது 2022 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மொத்த இலாபமான ரூபா. 39,849 மில்லியனுடன் ஒப்பிடும்போது ரூபா. 122,265 மில்லியன் அதிகரிப்பாகும். அதே போன்று, 2023 ஆம் ஆண்டில் ரூபா. 120,310 மில்லியன் தேறிய இலாபம் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டில் ரூபா. 617,589 மில்லியனான தேறிய நட்டத்துடன் ஒப்பிடும்போது கூட்டுத்தாபனத்தின் தேறிய இலாபம் ரூபா. 737,899 மில்லியனாக அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டில் ரூபா. 529,477 மில்லியனாகக் காணப்பட்ட அந்நிய செலாவணி விகிதத் தளம்பலின் அனுகூலமற்ற தன்மை மீளாய்வாண்டில் ரூபா. 20,340 மில்லியன் அந்நிய செலாவணி தளம்பலின் அனுகூலம் வரையில் ரூபா. 549,817 மில்லியனால் அதிகரித்தமை மற்றும் 2022 ஆம் ஆண்டில் அரச நிதியத்தின் மூலம் ரூபா. 884,093 மில்லியன் வெளிநாட்டு வங்கிக் கடன் தீர்க்கப்பட்டதால் மீளாய்வாண்டில் வெளிநாட்டுக் கடன் மீதான வட்டிச் செலவு ரூபா. 97,144 மில்லியனால் குறைவடைந்தமை இதில் அடிப்படையான தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது.

2023 ஆம ஆண்டின் மற்றும் முன்னைய 4 வருடங்களில் கூட்டுத்தாபனத்தின் வருமானம், விற்பனை செலவு, நிதிச் செலவு மற்றும் வரிக்குப் பின்னரான இலாபம் என்பன கீழே உள்ள வரைபடத்தின் மூலம் காட்டப்பட்டுள்ளது.




உரு இல. 2.29: 2019-2023 வரையிலும் கூட்டுத்தாபனத்தின் இலாபம் / நட்டம்
ஆதாரம் - கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுகள்

**எதிர்கால பிணைய பரிவர்த்தனைகளினால் (ஹெட்ஜிங்) நாட்டுக்கு ஏற்பட்டிருந்த இழப்புகள்**

2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் கூட்டுத்தாபனத்தினால் எண்ணெய் பெறுகை தொடர்பில் மேற்கொண்டிருந்த ஹெட்ஜிங் பரிவர்த்தனைகளுக்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரீட்சிப்புக்கு அமைய, அந்தப் பரிவர்த்தனைகளில் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் நாட்டிற்கு ஏற்பட்டிருந்த மொத்த இழப்பு ரூபா. 14,028 மில்லியனாக இருந்தது. மேலும், கூட்டுத்தாபனத்திற்கு எதிராக 8.6 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் உரிமைக்காக தனியார் வணிக வங்கி ஒன்றினால் கொழும்பு வணிக மேல் நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடுக்கப்பட்டிருந்ததுடன் அந்த வழக்கு 2023 ஆம் ஆண்டு இறுதி வரையிலும் விசாரிக்கப்பட்டு வந்துள்ளது.

**மாதாந்த பயன்பாட்டுக் கட்டணம்**

பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கு அமைய, கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான அனைத்து விற்பனை முகவர் (CODO) நிரப்பு நிலையங்களில் மற்றும் திறைசேரிக்குச் சொந்தமான விற்பனையாளர்களினால் பேணப்பட்டு வருகின்ற (TODO) நிரப்பு நிலையங்களில் இருந்து மாதாந்த பயன்பாட்டுக் கட்டணமொன்றை 2014 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் அறவிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறு இருப்பினும் இந்தத் தீர்மானம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்காதுடன், 200 CODO மற்றும் TODO நிரப்பு நிலையங்களிடையே 11 விற்பனையாளர்களிடமிருந்து மட்டும் மாதாந்த பயன்பாட்டுக் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட வேண்டி இருந்த ரூபா. 4,848 மில்லியனான தொகையை அறவிடுவதற்கு இதுவரையிலும் கூட்டுத்தாபனம் தவறி இருந்தது.

**பணிப்பாளர் சபை தீர்மானங்களுக்கு முரணாக விற்பனை முகவர்களுக்குத் தரகு செலுத்துதல்**

2019 ஜூலை 30 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 05/1231 கொண்ட பணிப்பாளர் சபை தீர்மானத்திற்கு அமைய பெட்ரோலியப் பொருட்களின் உள்நாட்டு சந்தை விலைத் தளம்பல் தாக்கத்தின் அடிப்படையில் விநியோகத்தர்களுக்கு வழங்கப்படும் தரகுத் தொகை தளம்படைவதன் அடிப்படையில் கூட்டுத்தாபனத்திற்கு மற்றும் விநியோதர்களுக்கு ஏற்படும் அனுகூலமற்ற தாக்கத்தினைத் தவிர்த்துக் கொள்வதற்காகக் கீழே கட்டப்பட்டுள்ள வகையில் உச்ச மற்றும் குறைந்த எல்லைகளுக்கு உட்பட்டு தரகு சதவீதம் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

| | பெற்றோல் | | டீசல் | |
|---|---|---|---|---|
| | 92 Oct | 95 Oct | LAD | LSD |
| **Upper Cap** | Rs.162 | Rs.170 | Rs.121 | Rs.145 |
| **Lower Cap** | Rs.117 | Rs.128 | Rs.95 | Rs.110 |

அட்டவணை இல. 2.15: மேல் மற்றும் கீழ் எல்லைகளுக்கு இணங்க தரகு வீதத்தினை தீர்மானித்தல்

எவ்வாறான போதிலும், இந்த பணிப்பாளர் சபை தீர்மானத்திற்கு முரணாக, மேலே கூறப்பட்ட எல்லைகளைக் கவனத்தில் கொள்ளாது விநியோகத்தர்களுக்கு விற்பனை முகவர் தரகு தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதற்கு அமைய மீளாய்வாண்டினுள் கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா. 14,874 மில்லியனான விற்பனை முகவர் தரகானது விற்பனை மற்றும் விநியோக செலவுகளின் கீழ் காட்டப்பட்டிருந்ததுடன் 2024 ஏப்ரல் 30 ஆம் திகதியில் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்த மொத்த விற்பனை முகவர் தரகுத் தொகை ரூபா. 31,021 மில்லியனாக இருந்தது.

**பொதுப் பயனர் வசதிகள் தொடர்பில் லங்கா இந்தியன் எண்ணெய் நிறுவனத்துடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காமை**

இலங்கை அரசாங்கம், கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் எண்ணெய் நிறுவனம் (LIOC) என்பவற்றுக்கிடையே ஏற்படுத்தப்பட்டிருந்த 2023 திசெம்பர் 30 ஆம் திகதி இடப்பட்ட பொதுப் பயனர் வசதிகள் பங்கு உரிமையாளர் உடன்படிக்கை 2008 திசெம்பர் 31 ஆம் திகதியில் காலாவதியாகி இருந்ததுடன் அதனுடன் தொடர்புடைய அனைத்து தரப்பினர்களின் இணக்கப்பாட்டுடன் அந்த உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டு அல்லது திருத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு இருக்கையில் கூட்டுத்தாபனத்தினால் 2019 மே மாதம் 13 ஆம் திகதி LIOC ஐத் தரப்பினராகக் கொள்ளாது இலங்கை பெட்ரோலிய இருப்புக் களஞ்சிய முடிவிட நிறுவனத்துடன் (CPSTL ) உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கு அமைய கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை பெட்ரோலிய இருப்பு களஞ்சிய முடிவிட நிறுவனம் (CPSTL) என்பவற்றுக்கிடையே ஏற்படுத்தப்பட்டிருந்த ஒழுங்குறுத்தல்கள் மற்றும் நிபந்தனைகள் டுஐழுஊ இனால் நிராகரிக்கப்படுமாயின், ஏற்படக்கூடிய அனுகூலமற்ற நிலைமைகள் தொடர்பிலான ஆபத்துக்களைக் கணக்காய்வினால் தவிர்க்க முடியாது.

**SAP ஒழுங்கமைப்பு இற்றைப்படுத்தப்பட்டிருக்காமை.**

கூட்டுத்தாபனத்தினால் SAP ERP ஒழுங்கமைப்பு தொடர்பில் 2005 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியிருந்த ஆரம்ப பதிப்பு (Initial Version) (SAP ECC 6.0) 2010 ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் இதுவரையில் எதுவித இற்றைப்படுத்தலும் இன்றி பயன்படுத்தப்பட்டு வருவதுடன் SAP ஒழுங்கமைப்பினை இற்றைப்படுத்துவதற்குத் தேவையான உடனடி நடவடிக்கைகள் தற்போது வரையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த ஒழுங்கமைப்பில் ஏற்படும் ஏதேனும் செயலிழப்புகள் காரணமாக நாடு முழுவதிலும் எண்ணெய் விநியோகம் சீர்குலைவதற்கான ஆபத்து காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

## ட்ரின்கோ பெற்றோலியம் டர்மினல் தனியார் கம்பனி (TPTL)

**திருகோணமலை எண்ணெய் தாங்கி தொகுதி அபிவிருத்தி செய்தல்**

2022 ஜனவரி 06 ஆம் திகதி இடப்பட்ட இலங்கை அரசாங்கம், CPC, LIOC மற்றும் TPTL என்பவற்றுக்கிடையே எதிர்வரும் ஐம்பது வருட (50) செல்லுபடியாகும் காலத்துக்கு திருகோணமலை எண்ணெய் தாங்கி தொகுதியை உரித்துடையதாக வைத்திருத்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் பயன்படுத்தல் என்பவற்றுக்காக கையொப்பமிடப்பட்ட ஐந்து தரப்பினரைக் கொண்ட உடன்படிக்கைக்கு அமைய TPTL இற்கு பெட்ரோலியம் மற்றும் பெட்ரோலியம் சார்ந்த உற்பத்திகள் அல்லது வேறு உற்பத்திகளைக் களஞ்சியப்படுத்துதல், களஞ்சியப்படுத்தப்பட்ட உற்பத்திகளை ஏற்றுமதி செய்தல் போன்ற CPC மற்றும் LIOC என்பவற்றுக்கு இடையே மிக முழுமையான இணக்கப்பாட்டுடன் வியாபாரத்தினை மேற்கொண்டு செல்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கு அமைய இந்த வியாபாரத்தினை நடத்திச் செல்வதற்குப் பொருத்தமான வகையில் திருவோணமலை எண்ணெய் தாங்கி தொகுதியினை அபிவிருத்தி செய்வதற்கான உத்தி முறைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு நிதி அளிப்பதற்குப் பாதுகாப்பான தோற்றுவாய் அல்ல என்பதால் திட்டமிடப்பட்டிருந்த வகையில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதே போன்று எண்ணெய்த் தாங்கி தொகுதியில் காணப்படும் ஜெடி , குழாய் பாதை மற்றும் ஏனைய இணைந்த சேவைகளின் பயன்பாடு உள்ளிட்ட பொது பயனர் வசதிகளைப் பயன்படுத்துதல் தொடர்பில் CPC, LIOC மற்றும் ஏனைய தேவையான தரப்பினருடன் முறையான உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## இலங்கை சூரிய வலுசக்தி அதிகாரசபை

**மீளுருவாக்கத்தக்க வலுசக்தி செயற்திட்ட அபிவிருத்திக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்காமை**

2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை சூரிய வலுசக்தி அதிகார சபைச் சட்டத்தின் 47 ஆம் பிரிவின் பிரகாரம் வலுசக்தி செயல் திறனுக்கான செயற்திட்டத்திற்குக் கடன் கோரும் முதலீட்டாளர்களுக்குத் தேவையான பிணையினை வழங்கும் நோக்கில் தாபிக்கப்பட்டிருந்த சூரிய வலுசக்தி பிணை நிதியத்தினை செயல்படுத்துவதற்காக சட்டத்தின் 67 ஆம் பிரிவின் பிரகாரம் உத்தரவு தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்தின் அனுமதியினை பெற்றுக் கொண்டிருக்கவில்லை. இதன் காரணமாக 2023 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா. 152.5 மில்லியனான நிதியம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் சட்டத்தின் 46(3) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை சூரிய வலுசக்தி நிதியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளான தெரிவு செய்யப்பட்ட மீள அதிகாரம் அளிக்கக்கூடிய வலு சக்தியினை அடிப்படையாகக் கொண்ட வலுசக்தி பரிமாற்ற கருவிகளுக்கான மானியம் வழங்குதல் , வலுசக்தி செயற்திறன் கருவிகள் மற்றும் தொழில்நுட்பப் பயன்பாட்டினை அபிவிருத்தி செய்வதற்கான மானியம் வழங்குதல், கைத்தொழில் வெப்ப அதிகரிப்பை ஈடுபடுத்துதல் உள்ளிட்ட எரிபொருளாக மாற்றுவதற்கான மூலதன மானியம் வழங்குதல் மற்றும் வலுசக்தி பாதுகாப்பு நடவடிக்கைப் பயன்பாட்டினை ஊக்குவிப்பதற்கு மற்றும் நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் கிராமிய வலுசக்தி சேவையினை முன்னேற்றுவதற்காக ஏதேனும் சங்கத்திற்கு அல்லது சமூக அமைப்புகளுக்கு ஊக்குவிப்பு அல்லது வேறு சமனான நிதி உதவியினை வழங்குதல் போன்ற செயற்பாடுகள் எதுவும் 2023 ஆம் ஆண்டு இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**மீளுருவாக்கத்தக்க வலுசக்தி வளங்கள் அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காமை**

சட்டத்தின் 8 ஆம் பிரிவிற்கு அமைய ஒவ்வொரு பிரதேசங்களிலும் மீளுருவாக்கத்தக்க வலுசக்தி வளங்களின் திறனுக்கு அமைய மீளுருவாக்கத்தக்க வலுசக்தி வளங்கள் அபிவிருத்தித் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு அமைச்சரவை அனுமதியின் அடிப்படையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபை தாபிக்கப்பட்டு 16 வருடங்கள் கடந்து இருந்த போதிலும் 2024 ஜூலை வரையிலும் அவ்வாறான திட்டம் ஒன்று வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு இருக்கவில்லை. அதே போன்று சட்டத்தின் 19 (1) ஆம் பிரிவின் கீழ் மத்திய வலையமைப்பினுள் மீளுருவாக்கத்தக்க வலுசக்தி செயற்திட்டத்திற்காக வருடாந்தம் அரச பாதியை அறவிட முடியும் எனினும் அதற்குத் தேவையான பிரமாணங்கள் தயாரிக்கப்பட்டு குறித்த

கட்டணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**மீளுருவாக்கத்தக்க வலுசக்தி செயற்திட்ட அபிவிருத்திக்குத் தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்காமை**

அதிகாரசபையினால் மேலே குறிப்பிடப்பட்ட செயல்திறன் வாகனம் மற்றும் மின்சார வாகன மேம்பாட்டுக்காக 90 மின்சார வாகன பற்றரி சார்ஜிங் நிலையங்களை அபிவிருத்தி செய்தல் உள்ளிட்ட மீளுருவாக்கத்தக்க வலுசக்தி செயற்திட்ட அபிவிருத்திக்கு உரிய 3 செயல்பாடுகளில் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் மேலும் 24 செயற்திட்ட பணிகளின் முன்னேற்றம் 10 சதவீதம் தொடக்கம் 54 சதவீதம் வரையான குறைந்த பெறுமதியில் காணப்பட்டன.

**மத்திய வலையமைப்பில் இருந்து விலகிய மீளுருவாக்கத்தக்க வலுசக்தி செயற்திட்டம் மேம்படுத்தப்பட்டிருக்காமை.**

இலங்கை மின்சார சபையின் மத்திய வலையமைப்பில் காணப்படும் கொள்ளளவு (Available Grid Capacity) போதியளவில் இல்லாத சிக்கலுக்குத் தீர்வாக அதிகார சபைச் சட்டத்தின் 5 (இ) பிரிவின் பிரகாரம் மத்திய வலையமைப்பிலிருந்து விலகிய (Off Grid) மீளுருவாக்கத்தக்க வலுசக்தி செயற்திட்டத்தினை ஊக்குவித்தல் மற்றும் முன்னேற்றுதல் மேற்கொள்ளப்பட்டு இருக்க வேண்டிய போதிலும் அதிகாரசபையினால் அதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக அதிகார சட்டத்தின் 25(அ) பிரிவின் பிரகாரம் 2024 ஜுலை வரையில் மத்திய வலையமைப்பிலிருந்து விலகிய எந்த ஒரு மீளுருவாக்கத்தக்க வலுசக்தி செயற்திட்டத்திற்கும் வலுசக்தி அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு இயலாதிருந்தது.

**இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை.**

**இறக்குமதி நுகர்வுப் பொருட்களில் கதிரியக்கப் பொருட்களை இனம்காண்பதற்கான சோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமை.**

2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி அதிகார சட்டத்தின் 12 (ங) பிரிவின் பிரகாரம் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் மற்றும் இந்நாட்டில் பெற்றுக் கொள்ளக் கூடிய ஒரு சில பொருட்கள் அல்லது சந்தைப் பொருட்களை சோதனையிடுதல் (inspect) , கதிரியக்கத் தன்மையை சரி பார்ப்பதற்காக மாதிரிகளைப் பெற்றுக்

கொள்ளுதல் மற்றும் பேரவை தேவையானது அல்லது பொருத்தமானது எனக் கருதும் சந்தர்ப்பத்தில் அந்த சரிபார்த்தல் பெறுபேறுகளை பொதுமக்கள் மற்றும் உரிய அனைத்து உத்தியோகத்தர்களும் அறிந்து கொள்ளும் நோக்கில் பிரசுரித்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் சபையினால் இறக்குமதி செய்யப்பட்ட பால்மா தவிர ஏனைய கதிரியக்கப் பொருட்கள் காணப்படக் கூடிய இறக்குமதி நுகர்வுப் பொருட்களை இனம் காண்பதற்கான மாதிரிப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**இலங்கை அணுசக்தி சபை**

**பல்துறை கெமா கதிர்வீச்சு இயந்திர அறையுடனான கெமா மத்திய நிலையத்தினை நிர்மாணித்தல்**

ரூபா. 670 மில்லியன் அளவிலான செலவில் 2014 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டிருந்த பல்துறை கெமா கதிர்வீச்சு இயந்திர அறையினைக் கொண்ட கெமா மத்திய நிலையத்தினை நிர்மாணிக்கும் போது உள்நாட்டு மீன்கள், கருவாடு, மரக்கறி மற்றும் பழங்கள் சர்வதேச தரத்துக்கு ஏற்ற வகையில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் எதிர்காலத்தில் இலங்கையை உலகளாவிய உணவு மையமாக மாற்றுவதன் மூலம் பாரியளவு அந்நிய செலாவணியை ஈட்டுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அதற்குத் தேவையான எதுவித உத்தி முறையுடனான வேலைத் திட்டம் சபையினால் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக இந்த தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி மேலே கூறப்பட்ட உணவுப் பொருட்களில் கிருமி நீக்கம் செய்வதற்கு உள்நாட்டு உணவு உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் முன் வந்திருக்கவில்லை.

**இலங்கை பெட்ரோலிய இருப்பு களஞ்சிய முனைய நிறுவனம்**

கம்பனியால் 2018 ஆம் ஆண்டில் கொலன்னாவை எண்ணெய் முனையத்தில் 06 வலயங்களில் புதிய பம்பி நிலையங்களின் நிர்மாணிப்பு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த பம்பி நிலையங்களைத் தனி நிர்மாணப் பொதியாக நிர்மாணிப்பதற்குப் பதிலாக நிறுவனம் இந்த செயலை வேறான 05 நிர்மாணிப்பாக பிரித்திருந்தது. கட்டடம், குழாய் ஆதார நிர்மாணிப்பு, மின்சாரப் பொருத்துதல், பாகங்கள் அபிவிருத்தி மற்றும் சிம்ப்ளெக்ஸ் பாஸ்கட் வடிகட்டியினை அமைத்தல் என நிறுவனத்தினால் இந்த 05 நிர்மாணிப்புகளும் வெவ்வேறான ரீதியில் 05 ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் பம்பி நிலையக் கட்டடம், மின்சாரப் பொருத்துதல் மற்றும் பாகங்கள் அபிவிருத்தி ஆகிய நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. எவ்வாறு இருப்பினும், மீளாய்வாண்டு இறுதி வரையிலும் குழாய் ஆதாரத்தினை நிர்மாணித்தல் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அதன் பெறுபேறாக பம்பி நிலையங்கள்

எதிர்பார்க்கப்பட்ட பயன்பாட்டிற்கு உகந்த நிலைமையில் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. இதற்கான மீளாய்வாண்டு இறுதி வரையிலான செலவு ரூபா. 97 மில்லியனாகக் காணப்பட்டது.

**பாதுகாப்பற்ற வகையில் களஞ்சியப்படுத்தப்பட்ட காரணத்தால் மூரிங் ஹோஸர் ஒன்று சேதமடைந்தமை**

கம்பனியால் 44,911 யூரோ செலவில் திம்பல் கொண்ட 02 மூரிங் ஹோஸர் (Mooring Hawser) இறக்குமதி செய்யப்பட்டிருந்ததுடன் அது 2022 ஒக்டோபர் 27 ஆம் திகதி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2023 நவம்பர் 16 அல்லது 17 ஆம் திகதி, நிறுவனத்தின் எண்ணெய் வசதிகள் பிரிவில் வெளிப்புற களஞ்சிய சாலையில் பாதுகாப்பற்ற வகையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த காரணத்தால் பயன்படுத்தப்படாத ரூபா. 13 மில்லியன் பெறுமதியான ஒரு மூரிங் ஹோஸர் (Mooring Hawser) மீண்டும் பயன்படுத்த முடியாத வகையில் சேதமடைந்திருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

**காணிக் குத்தகை உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டிருக்காமை**

கம்பனியின் 09 உப டிப்போக்களின் காணி உரிமை இலங்கை புகையிரதத் திணைக்களத்திடம் உள்ளதுடன், கம்பனி இந்தக் காணியினைக் குத்தகை அடிப்படையின் கீழ் பயன்படுத்தி வருகின்றது. இந்த காணியினைப் பயன்படுத்துவதற்காக இலங்கை புகையிதத் திணைக்களத்துடன் ஏற்படுத்திக் கொண்டிருந்த குத்தகை உடன்படிக்கை 2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைந்திருந்ததுடன் நிறுவனம் இந்தக் குத்தகை உடன்படிக்கை காலாவதியானதன் பின்னர் புதிய உடன்படிக்கையினை ஏற்படுத்தவோ அல்லது இருக்கின்ற உடன்படிக்கையினைப் புதுப்பிக்கவோ இன்றி தொடர்ந்தும் அந்த இடத்தினைப் பயன்படுத்தி வருகின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

## இலங்கை பெட்ரோலிய அபிவிருத்தி அதிகார சபை

**செயல்முறை கையேடு தயாரிக்கப்பட்டிருக்காமை**

2021 நவம்பர் 16 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 01/2021 கொண்ட அரச வணிக சுற்றறிக்கை - செயற்பாட்டு கையேட்டின் 2.3 பிரிவிற்கு அமைய தமது நிறுவனத்திற்குரிய முக்கிய செயல்பாட்டு நடவடிக்கைகளுக்கு அவை இடம்பெறும் முறை தொடர்பிலான செயல்முறை கையேடும் நிர்வாகம் மற்றும் நிதி செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான செயல்முறை கையேடும் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அனுமதியினைப் பெற்றுக் கொண்டு காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்து இற்றைப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**லிட்ரோ கேஸ் லங்கா நிறுவனம்**

**இலங்கையில் திரவ பெட்ரோலியம் கேஸ் தேவைப்பாடு மற்றும் இறக்குமதி செய்தல்**

இலங்கையில் LPG நுகர்வு தேவைப்பாடு அண்ணளவாக நாளாந்தம் 1,000 மெட்ரிக் டொன்னாக உள்ளதுடன், மாதாந்த தேவைப்பாடு 25,000 - 30,000 மெட்ரிக் டொன்களுக்கு இடைப்பட்ட அளவிலாகும். மேலும் வருடாந்த தேவைப்பாடு சுமார் 330,000 மெட்ரிக் டொன் என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அந்த தொகையில் இருப்பு மற்றும் கைத்தொழில் தேவைப்பாடுகளுக்காக 12 சதவீதமும், 6 சதவீதம் வியாபார தேவைப்பாடுகளுக்காகவும் , மீதி 82 சதவீத அளவு வீட்டு உபயோக எரிவாயு தேவைப்பாட்டுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றது எனவும் லிட்ரோ கேஸ் நிறுவனத்தின் 2023 ஆம் ஆண்டு வருடாந்த அறிக்கைக்கு அமைய வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய இந்த தேவைப்பாட்டினைப் பூர்த்தி செய்வதற்காக லிட்ரோ கேஸ் லங்கா நிறுவனமானது இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தில் (CPC) தமது எரிவாயு தேவைப்பாட்டில் 5 சதவீதத்திலும் குறைவான அளவினைப் பெற்றுக் கொள்வதுடன் மீதி 95 சதவீத அளவான தேவைப்பாட்டினை ஒவ்வொரு மாதமும் நிலவும் உலகளாவிய சந்தை விலைக்கு (சவுதி ஒப்பந்த விலையின் அடிப்படையில்) கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்த விலை சேர்க்கப்பட்டதன் பின்னரான விலைக்கு இறக்குமதி செய்திருந்தது. இங்கு தவணை பெறுகையின் (Term Contract) கீழ் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரையில் இறக்குமதி தொடர்பிலான கூறு விலை கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதுடன் இதற்கு மேலதிகமாகக் குறுகிய கால உடனடி பெறுகைகளும் (Spot Contract) மேற்கொள்ளப்பட்டிருந்தன .

**திரவ பெட்ரோலியம் கேஸ் (LPG) இறக்குமதி விலை 2010 தொடக்கம் 2023 வரை**

| ஆண்டு | விநியோகத்தர் | 1 மெட்ரிக் டொன்னுக்கான ஒப்பந்த விலை (அமெரிக்க டொலர்) | விலை வேறுபாட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 2010 | ஓமான் டிரேடின் இன்டர்நஷனல் லிமிடட் | 82.00 | |
| 2011 | ஓமான் டிரேடின் இன்டர்நஷனல் லிமிடட் | 86.50 | 5 |
| 2012 | ஓமான் டிரேடின் இன்டர்நஷனல் லிமிடட் | 126.00 | 46 |
| 2013 | ஓமான் டிரேடின் இன்டர்நஷனல் லிமிடட் | 135.00 | 7 |
| 2014 | ஓமான் டிரேடின் இன்டர்நஷனல் | 140.00 | 4 |

| | | | |
|---|---|---|---|
| | லிமிடட் | | |
| 2015 | ஓமான் டிரேடின் இன்டர்நஷனல் லிமிடட் | 105.75 | -24 |
| 2016 | ஷெல் இன்டர்நஷனல் டிரேடின் கம்பனி | 58.01 | -45 |
| 2017 | ஷெல் இன்டர்நஷனல் டிரேடின் கம்பனி | 47.50 | -18 |
| 2018 | ஷெல் இன்டர்நஷனல் டிரேடின் கம்பனி | 47.50 | 0 |
| 2019 | ஓமான் டிரேடின் இன்டர்நஷனல் லிமிடட் | 68.00 | 43 |
| 2020/2022 | ஓமான் டிரேடின் இன்டர்நஷனல் லிமிடட் | 105.40 | 55 |
| 2022 | ஓமான் டிரேடின் இன்டர்நஷனல் லிமிடட் | 118.16 | 12 |
| 2023 | ஓமான் டிரேடின் இன்டர்நஷனல் லிமிடட் | 118.68 | 0.4 |

அட்டவணை இல. 2.16 : திரவ பெற்றோலிய வாயு (LPG) இறக்குமதி விலை 2010 முதல் 2023 வரை

அதற்கு அமைய இந்த காலப்பகுதியினுள் தவணை பெறுகையின் கீழ் இரண்டு நிறுவனங்களிடமிருந்து மட்டும் எரிவாயு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் கடந்த பதின்மூன்று வருட காலப் பகுதியில் பத்து வருடங்களும் ஒரு விநியோகத்தருக்கு எரிவாயு வழங்குவதற்கான தவணை பெறுகை வழங்கப்பட்டிருந்தது. அந்த இரண்டு நிறுவனங்களும் வழங்கிய கூறு விலை மற்றும் கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது அந்த விலையில் ஏற்பட்டிருந்த மாற்றம் என்பன மேலே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.
லிட்ரோ கேஸ் கம்பனியால் தமது தேவைப்பாட்டில் சுமார் 90 சதவீத தொகையினை மேலே கூறப்பட்ட வகையில் இறக்குமதி சந்தையில் பெற்றுக் கொண்டுள்ளதுடன் மேலே உள்ள பந்தியில் காட்டப்பட்டுள்ள வகையில் மீதித் தேவைப்பாட்டினை பெட்ரோலிய கூட்டுத்தாபனத்திடமிருந்து கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பெட்ரோலிய கூட்டுத்தாபனத்தில் மசகு எண்ணெய் சுத்திகரித்தல் மூலம் உற்பத்தி செய்யப்படும் எரிவாயு , மொத்தமாக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் உலக சந்தையில் நிலவும் எரிவாயு விலைக்கு 100 டொலர் போக்குவரத்து கட்டணம் (ஒரு மெட்ரிக் டொன்னுக்கு) சேர்க்கப்பட்ட விலைக்கு அந்த இருப்பினை நிறுவனம் பெற்றுக் கொண்டிருந்தது. கடந்த 12 வருட காலப் பகுதியினுள் லிட்ரோ கேஸ் நிறுவனத்தினால் பெட்ரோலிய கூட்டுத்தாபனத்திடமிருந்து எரிவாயு கொள்வனவு செய்தல் தொடர்பான விபரம் கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

இலங்கை பெட்ரோலியக்
கூட்டுத்தாபனத்தில் இருந்து எரிவாயு
கொள்வனவு 2011 – 2023

| ஆண்டு | தொகை (மெடரிக் டொன்) |
|---|---|
| 2011 | 14,479.72 |
| 2012 | 11,766.27 |
| 2013 | 16,264.53 |
| 2014 | 20,281.79 |
| 2015 | 6,498.35 |
| 2016 | 6,503.99 |
| 2017 | 16,704.44 |
| 2018 | 15,943.81 |
| 2019 | 18,866.32 |
| 2020 | 20,042.49 |
| 2021 | 10,845.05 |
| 2022 | 3,551.05 |
| 2023 | 19,421.21 |

அட்டவணை இல. 2.17 : இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திலிருந்து எரிவாயு கொள்வனவு செய்தல் 2011-2023

**திரவ பெற்றோலிய எரிவாயுக்காக மட்டுப்படுத்தப்பட்ட களஞ்சியசாலை வசதிகள்.**

லிட்ரோ கேஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான 8,000 மெட்ரிக் டொன் எரிவாயுவை களஞ்சியப்படுத்தும் வசதிகள் கெரவலப்பிட்டிய களஞ்சியசாலைத் தொகுதியில் காணப்படுவதுடன் மாபிம களஞ்சியசாலை தொகுதியில் 400 மெட்ரிக் டொன்னை மட்டுமே களஞ்சியப்படுத்தும் வசதிகள் உள்ளது. இலங்கை பெட்ரோலியம் கூட்டுத்தாபனத்திடம் இருந்து கொள்வனவு செய்யப்படும் திரவ பெட்ரோலியம் கேஸ் (LPG) மாபிம தொகுதியில் களஞ்சியப்படுத்தப்படுவதுடன் அந்த எரிவாயு கைத்தொழில் பிரிவுகளுக்காக விநியோகிக்கப்படுகின்றது. அதற்கமைய இருக்கும் 8,400 மெட்ரிக் டொன் களஞ்சியசாலைக் கொள்ளளவுக்கு அமைய இலங்கையின் நுகர்வுக்கு அண்ணளவாக 8.4 நாட்களுக்கு மட்டும் போதுமான எரிவாயுவையே களஞ்சியப்படுத்தக் கூடியதாக உள்ளது.

நிறுவனத்திற்குச் சொந்தமான கெரவலப்பிட்டியவில் அமைந்துள்ள போயா வசதிகள் (CBM Facility) 3,500 - 5,000 மெட்ரிக் டொன்னுக்கு இடைப்பட்ட சிறிய அளவிலான களஞ்சிய சாலை வசதிகள் காணப்படும் கப்பல்களைக் கொண்டு வருவதற்கு மட்டுமே போதுமானதாக உள்ளது. எனினும் தற்போது உலக எரிவாயு போக்குவரத்தினுள் 20,000 - 100,000 மெட்ரிக் டொன்னுக்கு இடைப்பட்ட அளவில் மிகப் பெரிய கப்பல்களைப் பயன்படுத்தி கொண்டு வரப்படுகின்றது. நிறுவனத்திற்கு சொந்தமான போயா வசதிகள்

மட்டுப்படுத்தப்பட்டதன் அடிப்படையில் நிறுவனத்திற்கு எரிவாயுவை மிகவும் குறைந்த விலைக்கு கொள்வனவு செய்வதற்கு காணப்படும் இயலுமை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்த போயா வசதிகளுக்குப் பொருத்தமான சிறிய கப்பல்கள் தற்போது எரிவாயு போக்குவரத்தில் பயன்படுத்துதல் குறைவடைந்துள்ளது என்பதனால் அதற்காகப் பாரிய செலவினை ஏற்க நிறுவனத்திற்கு நேரிடுகின்றது. மேலும் எரிவாயுவைக் கரை இறக்கும் வசதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள காரணத்தால் இலங்கைக்கு எரிவாயுவை இறக்குமதி செய்யும் போது ஒரு தடைவையில் கொண்டு வரக்கூடிய கப்பலின் உச்ச கொள்ளளவு 4,000 மெட்ரிக் டொன் எரிவாயு மட்டுமே ஆகும்.

**கொள்கலனுடைய நடமாடும் டீசல் மின்பிறப்பாக்கிகளின் கொள்வனவு மீதான செயலாற்றல் கணக்காய்வு**

இலங்கை மின்சார சபை தேசிய முறைமையை கட்டுப்படுத்தும் நிலையத்தின் தரவுகள் மற்றும் களனிதிஸ்ஸ மின்சார வலுக்கூடத்தில் பேணிச் செல்லப்படுகின்ற 50 மின் உற்பத்தி இயந்திரங்களுக்கு உரிய மின்சாரம் செயலிழந்தமை, அறிக்கையின் பிரகாரம் ஒப்பந்தகாரரால் நிறைவேற்றப்படாத தவறுகள், குறைபாடுகள், திட்டமிடலில் குறைபாடுகளின் காரணமாக ஏற்பட்ட இயந்திரங்களின் வீழ்ச்சி மற்றும் நிறுத்துவதற்கான தாக்கங்களினால் 2022 சனவரி முதல் ஏப்ரல் மாதம் வரையான காலத்தில் இலங்கை மின்சார சபைக்கு ரூபா 1,263 மில்லியன் மதிப்பிடப்பட்ட நிதி நட்டம் ஏற்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

**மின்பிறப்பாக்கி இயந்திரங்கள் தொடர்ச்சியாக தொழில்நுட்ப கோளாறுகளுக்கு உட்படல்**

மின் பிறப்பாக்கிகள் தொடர்ச்சியாக தொழில்நுட்ப கோளாறுகளுக்கு உள்ளாகின்ற காரணத்தால் அவற்றை உச்ச தொழிற்பாட்டு மட்டத்தில் பயன்படுத்துவதற்கு உரிய சந்தர்ப்பத்தை சபை இழந்திருந்தது என்பதும், குறைபாடு நிலவிய காலப்பகுதியில் ஒப்பந்ததாரரால் அந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்க வழங்கிய பங்களிப்பு ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

**மொத்தக் கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிராமை**

கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.3.1 இன் பிரகாரம் கொள்வனவுப் நிறுவனத்தினால் சகல தொடர்புடைய கிரயங்களையும் உள்ளடக்கி மொத்தி கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், இந்த செயற்திட்டத்திற்குரியதாக அவ்வாறான பொறியியல் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவினனால் பரிந்துரை செய்யப்பட்ட கேள்விதாரரின் விலை மற்றும்

தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரின் விலை என்பவற்றை ஒப்பீடு செய்யும் போது தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரரின் விலை ரூபா 1,313.49 (3,432.6 – 2,119.11) இனால் குறைவடைந்திருந்தது. அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.9.11 இன் பிரகாரம் தீர்மானரீதியான அல்லது மிகவும் முக்கியமான விடயம் தொடர்பாக கேள்விதாரரினால் பொருத்தமற்ற குறைந்த அளவேனும் குறிப்பிடப்பட்டிருக்குமாயின், சமர்ப்பிக்கப்பட்ட குறைந்த அளவின் பிரகாரம் அந்த விடயம் எவ்வாறு பெறப்பட்டது எனவும், அந்த வேலை எவ்வாறு நிறைவேற்றப்பட்டது எனவும், அந்த சேவை எவ்வாறு வழங்கப்பட்டது என்பது தொடர்பாகவும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் கேள்விதாரரின் தகவல்கள் கோரப்பட வேண்டிய போதிலும் இந்த கூறுவிலைகளுக்கு இடையே காணப்படுகின்ற கவனத்தில் கொள்ளக்கூடிய வேறுபாடுகள் தொடர்பாக அதன் பிரகாரம் கொள்வனவு குழு நடவடிக்கை எடுத்திருந்தமை அவதானிக்கப்படவில்லை.

**ஆகக் குறைந்த விலை தொடர்பான தீர்மானம்**

தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு பரிந்துரை செய்த கேள்விதாரர் மற்றும் ஆகக் குறைந்த நிதி ரீதியான கேள்வி சமர்ப்பித்த கேள்விகளுக்கு இடையே ஏற்பட்ட கணிசமான நிதி வேறுபாடுகள் மற்றும் கொள்வனவுகளை கையளிக்கும் போது தேசிய நலனைக் கவனத்தில் கொண்டு குறைந்த வர்த்தக ரீதியான ஆர்வத்தைக் காண்பிக்கின்ற கேள்விதாரருக்கு (Lowest Commercial Responsive Bidder) Sterling and Wilson Private Ltd இற்கு கேள்வி கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் கொள்வனவுகள் கையளிக்கும் ஆரம்ப நோக்கமாக, ஆகக் குறைந்த கிரயத்துடன் கேள்வி தெரிவு செய்யப்படாமை, உயர் தரத்துடன் ஆகக் குறைந்த கிரயத்தையுடைய ஆகக் கூடிய பொருளாதார நலன்களைக் கொண்ட கேள்வி தெரிவு செய்தல் வேண்டும். எனினும், பல கட்டங்களில் மதிப்பாய்விற்கு உட்படுத்தி பொருத்தமான கேள்விதாரரை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும், இவ்வாறான தொழில்நுட்ப ரீதியான முக்கியத்துவமான இயந்திர உபகரணங்களில் அதற்குரித்தான வகையில் விடயங்களை கவனத்தில் கொண்டு கொள்வனவுகள் குழுவின் தீர்மானம் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் ஆகக் குறைந்த விலை தொடர்பான தீர்மானம் மேற்கூறப்பட்ட செயற்பாடுகளில் ஏற்பட்டிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது.

**திட்டமிடப்பட்ட முறையில் நடைமுறைப்படுத்தாமை**

தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு பரிந்துரை செய்த கேள்விதாரர் மற்றும் ஆகக் குறைந்த நிதி ரீதியான கேள்வி சமர்ப்பித்த கேள்விகளுக்கு இடையே ஏற்பட்ட கணிசமான நிதி வேறுபாடுகள் மற்றும் கொள்வனவுகளை கையளிக்கும் போது தேசிய நலனைக் கவனத்தில் கொண்டு குறைந்த

வர்த்தக ரீதியான ஆர்வத்தைக் காண்பிக்கின்ற கேள்விதாரருக்கு (Lowest Commercial Responsive Bidder) Sterling and Wilson Private Ltd இற்கு கேள்வி கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் கொள்வனவுகள் கையளிக்கும் ஆரம்ப நோக்கமாக, ஆகக் குறைந்த கிரயத்துடன் கேள்வி தெரிவு செய்யப்படாமை, உயர் தரத்துடன் ஆகக் குறைந்த கிரயத்தையுடைய ஆகக் கூடிய பொருளாதார நலன்களைக் கொண்ட கேள்வி தெரிவு செய்தல் வேண்டும். எனினும், பல கட்டங்களில் மதிப்பாய்விற்கு உட்படுத்தி பொருத்தமான கேள்விதாரரை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும், இவ்வாறான தொழில்நுட்ப ரீதியான முக்கியத்துவமான இயந்திர உபகரணங்களில் அதற்குரித்தான வகையில் விடயங்களை கவனத்தில் கொண்டு கொள்வனவுகள் குழுவின் தீர்மானம் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் ஆகக் குறைந்த விலை தொடர்பான தீர்மானம் மேற்கூறப்பட்ட செயற்பாடுகளில் ஏற்பட்டிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது.

## இலங்கை மின்சார சபையினால் ஏஸ் பவர் எம்பிலிப்பிட்டிய தனியார் கம்பனியிடமிருந்து மின்சாரம் கொள்வனவு செய்தல் தொடர்பான விஷேட கணக்காய்வு அறிக்கை

**கம்பனியை கொள்வனவு செய்யும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டமை**

இலங்கை மின்சார சபைக்கு நீண்ட கால உற்பத்தி திட்டங்களை அடைந்துகொள்ள முடியாமையும், உற்பத்தி செய்யப்படும் மின்சார அலகுகளின் அளவானது உள்நாட்டு கேள்வியை பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லாதிருந்தமையால், ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய (தனியார்) கம்பனியிலிருந்து மின்சாரத்தினை கொள்வனவு செய்வதற்காக 10 வருட உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. உடன்படிக்கை காலம் நிறைவடைந்ததும், இந்த மின்வலு நிலையம் இலங்கை மின்சார சபையினால் கொள்வனவு செய்வதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு செயற்படாது 2016 ஏப்ரல் 06 ஆந் திகதி முதல் 2022 செப்தம்பர் 08 ஆந் திகதி வரையிலும் 4 சந்தர்ப்பங்களில் 05 வருடங்கள் 06 மாத காலத்தினால் ஆரம்ப உடன்படிக்கையை நீடிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இலங்கை மின்சார சபைக்கு சொந்தமாக்கி அரசாங்கத்தை விட இலாபகரமான முறையில் பணிகளை மேற்கொள்வதற்கு காணப்பட்ட சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. அரச மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டு பெறுமதி கம்பனியின் உரிமையாளர்களினால் கம்பனியை விற்பனை செய்வதற்கு விருப்பினை தெரிவித்த விலையை விட குறைவாக மதிப்பிட்டிருந்தமை என்பதால் இந்த கொள்வனவு சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

**அடிப்படை உடன்படிக்**

**கையின் குறைபாடு**

2003 ஆம் ஆண்டின் போது ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஆரம்ப உடன்படிக்கை 10 வருடங்களில் நிறைவடைந்த போதிலும், ஆரம்ப உடன்படிக்கையின 11 ஆம் உறுப்புரையின் பிரகாரம், Buy out Event தொடர்பில் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய அந்த உடன்படிக்கையின் பிரகாரம் Buy out Event அடிப்படையில் இந்த மின்வலு நிலையத்தினை கொள்வனவு செய்யும் உரித்து பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. மேலும், 20 வருட பயன்படு ஆயுட் காலத்துடனான சொத்தொன்றுக்காக இந்த சொத்தின் முழுமையான பெறுமதியும் 10 வருட காலப்பகுதியினுள் இலங்கை மின்சார சபையினால் ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது.

**தாமத வட்டி கொடுப்பனவு**

முதல் உடன்படிக்கையின் காலப்பகுதியுள் தாமத வட்டி என ரூபா 580 மில்லியன் தொகை இலங்கை மின்னார சபையினால் செலுத்தப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டதுடன், உடன்படிக்கையை நீடித்த பின்னர் ஐந்து வருட காலப்பகுதிக்காக ரூபா 1,364 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி, இலங்கை மின்னார சபையின் தற்போதைய நிதி நிலைமையின் கீழ் கடன் மூலதனம் ஈடுபடுத்துவதன் மூலம் அல்லது மின்வலு நிலையத்தை கொள்வனவு செய்வதற்காக நடவடிக்கை எடுப்பதன் மூலம் இ.மி.ச. இற்கு மிகவும் அநுகூலமாக நிலமை ஒன்றை நெருங்குவதற்கு இயலுமை ஒன்று காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

**பல்வேறு வரி செலவு கொடுப்பனவு**

ஆரம்ப உடன்படிக்கை காலப்பகுதியுள் கம்பனியினால் பல்வேறு வரிச் செலவுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 4,784 மில்லியன் தொகை இ.மி.ச இருந்து மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக TEC மற்றும் SCANC குழுவினால் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என அவதானிக்கப்படாததுடன் உடன்படிக்கை நீடிக்கப்பட்ட பின்னர் வரி மீளளிப்புக்காக, ரூபா 1,499 மில்லியன தொகை செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே, இவ்வாறான நிபந்தனைகள் உள்ளடங்கிய உடன்படிக்கையொன்றை மீண்டும் நீடிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் தனியார் கம்பனியொன்றின மூலம் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய வரி அரச நிறுவனமொன்றினால் செலுத்தியமையால் அரசாங்கத்திற்கு உரித்தாக வேண்டிய உள்ளபடியான வரி வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் பிரிவு 09 இற்கு இணங்க மற்றும் 2013 இன் 31 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை (திருத்திய) சட்டத்தின விதிமுறைகளுக்கு இணங்க இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவில் இருந்து மின் உற்பத்திக்காக அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் படி மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 43(1) இற்கு இணங்க அவ்வாறு உற்பத்திக்கான அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொண்டிருந்த

கம்பனிகளிடமிருந்து மாத்திரம் மின்சார உற்பத்தி மற்றும் விநியோகம் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு உற்பத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிராத ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய கம்பனியில் இருந்து 2016 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை மின்சாரம் கொள்வனவு செய்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

## லிட்ரோ கேஸ் லங்கா லிமிடெட் (LGLL) கம்பனியால் 2022/2023 ஆம் ஆண்டுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட திரவ பெற்றோலிய வாயு (LPG) பெறுகைகள் தொடர்பான விஷேட அறிக்கை

**அங்கீகரிக்கப்பட்ட விநியோகத்தருக்கு பெறுகையினை வழங்காமை**

ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த Siam Gas Trading Pvt Ltd கம்பனி 2022 – 2023 ஆம் ஆண்டுகளுக்காக தகைமை பெற்ற கேள்விதாரராக இருந்தமைக்கு 2022 ஏப்ரல் 26 ஆம் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு பரிந்துரை செய்து பெறுகைக் குழுவினால் 2022 ஏப்ரல் 28 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மேலும் இந்த கம்பனி வழங்குனராக தெரிவு செய்வதற்காக 2022 மே 04 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரமும் கிடைத்திருந்தது. அதன் பின்னர் OQ Trading Ltd இனால் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாட்டை கவனத்தில் கொண்டு முறைப்பாட்டு சபையும் உரிய பெறுகைகள் இந்த கம்பனிக்கு கையளிப்பதற்காக 2022 மே 28 ஆம் திகதி அங்கீகாரம் வழங்கியிருந்தது. அவ்வாறு அங்கீகாரம் பெறப்பட்டிருக்கும் போது மற்றும் 2022 மார்ச் மாதம் முதல் இலங்கைக்கு கேஸ் கொள்வனவு செய்வதற்காக குறித்துரைத்த திட்ட முறைமையொன்றும் காணப்படாத சந்தர்ப்பத்தில் Siam Gas Trading Pvt Ltd கம்பனியால் வழங்குவதற்கு இணங்கிய விலையான CP+96 USD விலையினை விஞ்சி OQ Trading கம்பனியில் இருந்து கேஸ் கொள்வனவு செய்திருக்கும் போது 2022 யூன் 13 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானத்தின் படி புதிய பெறுகையொன்றை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

**மேலதிக செலவு சுமையினை அரசாங்கத்திற்கு ஏற்க நேரிட்டமை**

Siam Gas Trading Pvt Ltd கம்பனி தெரிவு செய்யப்பட்டிருக்கும் போது அந்த தவணை பெறுகை இரத்துச் செய்யப்பட்ட அந்த விலையினை விட உயர்ந்த விலையின் OQ Trading கம்பனியில் இருந்து கேஸ் கொள்வனவு செய்யப்பட்டதன் காரணமாக ஐ.அ.டொலர் 3.14 மில்லியன் அதாவது ரூபா 1,138.84 மில்லியன் மேலதிக செலவின பொறுப்பொன்று காணப்பட்ட பொருளாதார நெருக்கடிகளுக்கு இடையே இலங்கை அரசாங்கத்திற்கு செலவிட வேண்டியிருந்தது.

**அமைச்சரவைப் பத்திரத்தில் விடயங்களைக்**

**குறிப்பிட்டமை**

2022 யூன் 08 ஆம் திகதி பிரதமரால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை குறிப்பின் பின்புலத்தில் 3.2(ii) இல் காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் ஆகக் குறைந்தது மெற்றிக்தொன் 100,000 உறுதிப்படுத்தப்பட்ட SBLC அல்லது அ.டொலர் 20 மில்லியன் முற்செலுத்தும் நிபந்தனையின் அடிப்படையில் செலுத்தி தயாரிக்க வேண்டியிருந்தமை OQ Trading கம்பனியால் அறிவிக்கப்பட்டிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும், அங்கீகாரம் கோரும் போது (குறிப்பின் 3.3(a) பந்தியில்) அவ்வாறே OQ Trading கம்பனியால் செலுத்துதல் தொடர்பான நிபந்தனை சமர்ப்பிக்கப்பட்டிருந்தாக காண்பிக்கப்படாதிருந்தமை பிரச்சினையுடனாக இருந்தது. மேலும், வங்கி பிணையொன்று இன்றி கொடுப்பனவு செய்தல் லிட்ரோ கம்பனியில் காணப்பட்ட முறைமையாக குறிப்பிடப்பட்டு வங்கி பிணை முறியொன்று இன்றி பொருட்களுக்காக கொடுப்பனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கோரப்பட்ட போதிலும், அவ்வாறு வங்கி பிணை முறியின்றி கொடுப்பனவு முறையொன்றை கம்பனி பின்பற்றுகின்றமை (பொருளாதார நெருக்கடிகளுக்கு இடையே ஒரே தடவையில் மாத்திரம் அவ்வாறு வங்கி பிணைமுறி இன்றி செலுத்தப்பட்டிருந்தது.) அவதானிக்கப்படாதிருந்ததுடன், அமைச்சரவை குறிப்பில் அவ்வாறு விடயங்கள் காண்பிக்கப்பட்டிருந்தமையும் கணக்காய்வின் போது கேள்விக்குரியதாக அவதானிக்கப்பட்டது.

**முன் கொடுப்பனவு நிபந்தனைகள்**

காத்திருத்தல் நாணயக் கடிதம் (SBLC) பெறுமதி மாதம் ஒன்றில் வழங்குவதற்கு சமமான பெறுமதி வரை குறைக்கும் நிபந்தனையின் கீழ் பெறுகைக் குழுவினால் உரிய பெறுகைகள் அங்கீகரிக்கப்பட்ட போதிலும், உரிய காத்திருத்தல் நாணயக் கடிதம் வழங்குவதற்கு முடியாதிருந்தமை பிரதான காரணமாக கொண்டு புதிய பெறுகைகளுக்கு செல்வதற்கு தீர்மானிக்கப்பட்ட போதிலும், அதன் பின்னர் OQ Trading கம்பனியில் இருந்து உடன் கொள்வனவுகள் (Spot Contract) இன் கீழ் மெற்றிக் டொன் 100,000 காத்திருத்தல் நாணயக் கடிதம் (SBLC) அல்லது அ.டொலர் 20 மில்லியன் முற்செலுத்துதல் என்ற நிபந்தனையின் கீழ் பெற்றுக் கொள்ளுதல் என்ற நிபந்தனையின் கீழ் பெற்றுக் கொள்வதற்கு இணங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**பெறுகையின் வெளிப்படைத் தன்மை மற்றும் நம்பிக்கைத் தன்மை சிக்கலுக்குரியதாக இருந்தமை**

குறைந்த விலையில் கேஸ் பெற்றுக் கொள்வதற்கு இணங்கிய Siam Gas Trading Pte Ltd கம்பனியில் இருந்தும் உடனடி கொள்வனவுகளை செய்வதற்காக SBLC வழங்குவதற்கு முடியாதிருக்குமாயின் முற்கொடுப்பனவு அடிப்படையில் கேஸ் வழங்குவதற்க இணங்கியிருக்கும்

போதும் தீர்மானம் எடுக்கும் போதும் அந்த கோரிக்கை இடமளிக்காமல் / சமர்ப்பித்தலை கவனத்தில் கொள்ளாமல் அந்த நிபந்தனையின் கீழ் அதிக விலையின் கீழ் ஒரு கம்பனிக்கு மாத்திரம் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தமை பெறுகைகள் மேற்கொள்ளும் வெளிப்படையான நம்பிக்கை தன்மை தொடரபாக கணக்காய்வில் ஏற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

**நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாமை**

Siam Gas Trading Pte Ltd கம்பனி 2022 மே மற்றும் யூன் மாதங்களுக்காக CP+102 USD விலையில் கேஸ் வழங்குவதற்கு விருப்பம் தெரிவித்திருந்ததுடன், அந்த கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இரண்டு நிபந்தனைகளையும் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தமையினால் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மேலே குறிப்பிடப்பட்ட அந்த விலை மே மாத கேஸ் தேவையினை பூர்த்தி செய்வதற்கு வழங்கப்பட்டிருந்த இரண்டு நாள் செல்லுபடி காலம் போதியளவில் இல்லாமையின் அடிப்படையில் தேவையான மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு லிட்ரோ கேஸ் கம்பனி நடவடிக்கை எடுக்காதிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும், இந்த பெறுகைகளுக்குரிய சில தீர்மானம் ஒரு நாளில் எடுக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டது. மேலும், Siam Gas Trading Pte Ltd கம்பனியில் இருந்து மீண்டும் ஒரு தடவை 2022 மே மாதத்திற்காக கேஸ் கொள்வனவு செய்வதற்காக கூறுவிலை கோரப்பட்டிருந்ததுடன், அதன் போது அந்த கம்பனியால் CP+105 USD ஆன விலை வழங்கப்பட்டிருந்தது.

# சுற்றுலா அலுவல்கள்

பெரும்பாலான ஆசிய நாடுகள் அந்நிய செலாவணியை ஈட்டும் முக்கிய வழிமுறையாக சுற்றுலாத் துறையில் ஈடுபடுவதுடன் சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளைத் தாபித்தல், முன்னேற்றுதல் மற்றும் சுற்றுலா மேம்பாடு என்பன தொடர்பில் முன்னுரிமை வழங்குகின்றது. இலங்கையானது வலயத்தில் உள்ள பெரும்பாலான நாடுகளை விட சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில் வெற்றி பெற்ற நாடாக உள்ள போதிலும் சுற்றுலாத் துறையினை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யாமை மற்றும் சுற்றுலா பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை முன்னேற்றாமை போன்றவற்றால் சுற்றுலாத்துறை பாரிய பின்னடைவுக்கு உட்பட்டு உள்ளது.

நாட்டில் சுற்றுலாத் துறையின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடமைப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டி உள்ளன.

1. சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் சுற்றுலாப் பிரிவு
2. தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களம்
3. இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம்
4. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
5. இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம்
6. இலங்கை மாநாட்டுப் பணியகம்

**கடமைப் பொறுப்புகள்**

இலங்கையின் பிம்பத்தை வெளிப்படுத்தி தேசிய கொள்கைக்கு இணங்க சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்தல் மற்றும் உயர் தரத்தில் மேம்படுத்துதல்.

சுற்றுலா முகவர் நிறுவனங்கள் மற்றும் சுற்றுலாத் துறையில் ஈடுபடுபவர்களைப் பதிவு செய்தல் மற்றும் ஒழுக்குறுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

இலங்கையின் உயிரியல் பல்வகைத் தன்மை, பெருமைமிக்க வரலாற்றுப் பாரம்பரியங்கள், சுற்றுலா, காலநிலை பல்வகைத் தன்மை, கடற்கரை வளங்கள் என்பவற்றை வெளிப்படுத்தி இலங்கையை விசேட சுற்றுலாத் தீவாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடையே பிரசித்தப்படுத்தல்.


சுற்றுலாப் பயணிகளுக்கு விடுமுறை விடுதிகள் மற்றும் மாநாட்டு, கண்காட்சி மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை வழங்குவதற்கு உரிய சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மத்திய நிலையங்கள், ஹோட்டல் வசதிகள், வான் மற்றும் கடல் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துதல்.

சுற்றுலா வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் மற்றும் அது தொடர்பான தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.

சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

சுற்றுலாத்துறை மற்றும் தாவரவியல் பூங்கா திணைக்களத்திடம் வழங்கப்பட்ட நிதியைப் பயன்படுத்துதல்.

மேலே கூறப்பட்ட கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் சுற்றுலாப் பிரிவு மற்றும் தாவரவியல் பூங்கா திணைக்களத்திற்கு மொத்தமாக ரூபா. 1,148 மில்லியன் நிதி 2023 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன், 2023 இறுதி வரையில் அதில் ரூபா. 991 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய ரூபா. 157 மில்லியன் நிதி பயன்படுத்தப்பட முடியாது இருந்தது. விபரங்கள் உரு 2.30 இல் காட்டப்பட்டுள்ளது.




உரு 2.30 - பாராளுமன்றம் ஏற்பாடு செய்திருந்த நிதியேற்பாடு, செலவினம் மற்றும் சேமிப்பு

ஆதாரம் - வருடாந்த நிதிக்கூற்றுக்கள்

**நியதிச்சட்ட நிறுவனங்களில் வருமானம் ஈட்டுதல், பயன்படுத்துதல் மற்றும் அரசாங்கத்திற்கு வழங்கிய பங்களிப்பு**

2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா நடவடிக்கைகள் அதிகார சட்டத்தின் III ஆம் அத்தியாயத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தில் சேகரிக்கப்பட்ட விலகல் வரி (Embarkation Levy) மற்றும் சுற்றுலா அபிவிருத்தி வரி (Tourism Development Levy) தொகை பின்வரும் நிறுவனங்களுக்கு இலங்கையை சுற்றுலா மற்றும் சுற்றுப்பயண இறுதியென மேம்படுத்த மற்றும் அதற்குரிய பணிகளுக்குப் பயன்படுத்துவதற்கு விநியோகிக்கப்படுவதுடன் அவ்வாறு விநியோகிக்கப்பட்ட வருமானம் உள்ளிட்ட மொத்த வருமானம், வருடத்தின் செலவு மற்றும் 2023 ஆம் ஆண்டில் அரசாங்கத்திற்கு வழங்கிய பங்களிப்பாகத் திறைசேரிக்கு வழங்கப்பட்ட மாற்றல் போன்றவை தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| நிறுவனம் / நிதியம் | ஈட்டப்பட்ட வருமானம் (ரூபா. மில்லியன்) | ஈட்டப்பட்ட வருமானம் (ரூபா. மில்லியன்) | ஈட்டப்பட்ட வருமானம் (ரூபா. மில்லியன்) |
|---|---|---|---|
| இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை | 1,519 | 75 | 768 |
| இலங்கை மேம்படுத்தல் பணியகம் | 5,956 | 500 | 1,964 |
| இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம் | 1,032 | 100 | 615 |
| இலங்கை மாநாட்டுப் பணியகம் | 326 | 20 | 270 |
| இலங்கை சுற்றுலா அபிவிருத்தி நிதியம் | 5,923 | 19 | 5,904 |
| மொத்தம் | 14,756 | 714 | 9,540 |


அட்டவணை இல. 2.18: வருமான ஈட்டம், பயன்பாடு மற்றும் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட பங்களிப்பு

## சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் வருமானம் மாற்றமடைதல்

2022 ஆம் ஆண்டில் இலங்கைக்கு 719,978 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்திருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் அந்தத் தொகை 107 சதவீதத்தினால் அதிகரித்து 1,487,303 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்திருந்தனர். கொவிட் தொற்றுநோய் காரணமாக அவ்வப்போது மூடப்பட்டிருந்த நாடு படிப்படியாக மீட்பு நிலைக்கு வந்தமை மற்றும் நாட்டில் நிலவிய அரசியல் மற்றும் பொருளாதார நிலையற்ற தன்மை ஓரளவு நிலைமைக்கு வந்தமை இதற்குக் காரணமாக உள்ளது. சுற்றுலா அமைச்சு மற்றும் அதன் கீழ் செயல்படும் ஏனைய நிறுவனங்களின் பணிகள் மற்றும் கடமைகளில் இருந்த வரையறைகள் விலக்கப்பட்டமை இந்த சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்ததினால் இடம்பெற்றுள்ளது. மீளாய்வாண்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகையை முன்னைய ஐந்து வருடங்களுடன் ஒப்பிட்டு உரு 2.31 இல் காட்டப்பட்டுள்ளது.


உரு 2 - மீளாய்வாண்டில் மற்றும் முன்னைய ஐந்து வருடங்களில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை

ஆதாரம் - இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை




உரு 2.31 - 2023 ஆம் ஆண்டில் மற்றும் முன்னைய ஐந்து வருடங்களில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை

ஆதாரம் - இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை




உரு 2.32 - 2023 ஆம் ஆண்டில் மற்றும் முன்னைய ஐந்து வருடங்களில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை

ஆதாரம் - இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

2018 ஆம் ஆண்டில் சுற்றுலா வியாபாரத்தில் 4,380.6 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு சமமான ரூபா. 711,961 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டில் 506.9 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு சமமான ரூபா. 100,620 மில்லியன் வரையில் குறைவடைந்திருந்தது. 2023 ஆம் ஆண்டில் அந்த வருமானம் மீண்டும் 2,068 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு சமமான ரூபா. 677,360 மில்லியன் வரையில் அதிகரித்திருந்தது.

## கணக்காய்வு அவதானிப்புகள்

### சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் சுற்றுலா பிரிவு

**லேண்ட் ரொவன் டிஸ்கவரி வகையில் 02 வாகனங்களைக் கொள்வனவு செய்தல்**

அரச நிறுவனங்களுக்கு வாகனங்களைக் கொள்வனவு செய்தலுக்கான பொதுக் கொள்கையினை மீறி மற்றும் பெறுகை செயல்முறைகளுக்கு முரணாக இரண்டு ஜீப் வண்டிகளைக் கொள்வனவு செய்தல் தொடர்பில் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் அல்லது சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்கு இலக்கம் அமப/230927/615/035 கொண்டதும் மற்றும் 2023 ஜூன் 13 ஆம் திகதி இடப்பட்டதுமான அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த வாகனங்கள் சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய நடவடிக்கைகள் அமைச்சு இரண்டாம் உரிமையாளராக பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் முதலாவது உரிமை இரு நபர்களிடம் இருந்தது என்பதும் அரசாங்க சுங்கத் தீர்வை நிவாரணத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது என்பதும் அவதானிக்கப்பட்டது.

**நானு ஓயா புகையிரத நிலையத்தினை அபிவிருத்தி செய்தல்**

சுற்றுலா அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில், இலங்கை புகையிரத திணைக்களத்தின் கண்காணிப்பில், பொறியியல் ரீதியான பணிகள் தொடர்பில் மத்திய ஆலோசனைப் பணியகத்தின் (CECB) மூலம் நிர்மாணத்தினை மேற்கொள்ளுவதற்கு மொத்த செலவு மதிப்பீடு ரூபா. 74.63 மில்லியன் பெறுமதிக்கு தொல்பொருளியல் அடையாளத்தினைப் பாதுகாக்கும் வகையில் புகையிரத மரபாக நானுஓயா புகையிரத நிலையத்தினைப் புதுப்பிப்பதற்கு அந்தத் தரப்பினரிடையே முத்தரப்பு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய 2021 ஒக்டோபர் 27 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 9 மாத காலத்தில் புதுப்பித்தல் நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு செயல்திட்டம் செயல்பட்டிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டில் பாதீட்டு ஒதுக்கத்தினை பயன்படுத்த முடியாதிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டில் இந்த செயற்திட்டத்திற்குத் தேவையான நிதி ஒதுக்கப்பட்டு இருக்கவில்லை. 2024 மார்ச் 20 ஆம் திகதி வரையில் செயற்திட்டத்தின் வேலைகள் நிறைவு செய்யப்பட வேண்டிய தினத்தினையும் விஞ்சி ஒரு வருடமும் 8 மாதங்களும் கடந்திருந்த போதிலும் செயற்திட்டத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை. 2023 மே 16 ஆம் திகதி இலங்கை சுற்றாடல்

அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை சுற்றாடல் மேம்பாட்டு பணியகம் மற்றும் அமைச்சு என்பவற்றுக்கிடையே இடம்பெற்ற கலந்துரையாடலில், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மொத்த மதிப்பீட்டுத் தொகையில் 16 சதவீதத்தினையும், இலங்கை சுற்றாடல் மேம்பாட்டுப் பணியகம் மொத்த மதிப்பீட்டுத் தொகையில் 84 சதவீதத்தினையும் செலவிடுவதற்கு இணங்கி இருந்த போதிலும் செயற்திட்ட வேலைகளை நிறைவு செய்வதற்கு அமைச்சு தவறி இருந்தது.

## இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம்

### வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு அந்நிய செலாவணி முற்பணம் வழங்குதல்

இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகத்தினால் வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு அனுப்பப்பட்ட அன்னிய செலாவணி முற்பணங்களில் 2023 இறுதித் திகதியில் மீதியாக இருந்த ரூபா. 46 மில்லியனுக்கு உரிய மீதி உறுதிப்படுத்தல் கிடைத்திருக்கவில்லை.

## இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

### குத்தகைக்கு வழங்கிய காணிகளில் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்காமை

2014 ஆம் ஆண்டில் 5 நிறுவனங்களுக்கு 35 ஏக்கர்களும், 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் மேலும் 2 நிறுவனங்களுக்கு 16.8 ஏக்கர்களுமாக யால பலட்டுபான சுற்றுலா அபிவிருத்தி வலயத்தில் உள்ள காணிகள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், 2 நிறுவனங்கள் மட்டும் 2023 ஆம் ஆண்டின் இறுதி திகதி வரையில் செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தது. சுற்றுலா அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக குச்சவெளியில் 2011 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் கையகப்படுத்திக் கொண்ட 510.086 ஏக்கர் அளவினைக் கொண்ட காணியில் 49 ஏக்கர் காணியை மட்டும் 3 நிறுவனங்களுக்கு குத்தகைக்கு வழங்கி இருந்த போதிலும் அந்த 3 நிறுவனங்களில் ஒரு நிறுவனம் மட்டும் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது. சுற்றுலா நடவடிக்கைகளுக்காக இலவச மானியங்களாக கல்பிட்டியவில் 2.55.87 ஏக்கர் நிலப்பரப்பினைக் கொண்ட 12 தீவுக் காணிகள் 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் அதிகார சபைக்கு கிடைத்திருந்த போதிலும், அந்த 12 தீவுகளில் 05 தீவுகளுக்கு உரிய 206.58 ஏக்கர் அளவினைக் கொண்ட காணிகள் மட்டும் 2010, 2011 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் 03 நிறுவனங்களுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறு இருப்பினும், அதில் எந்த ஒரு நிறுவனமும் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கவில்லை. மேலும், 2024 ஏப்ரல் 29 ஆம் திகதி வரையிலும் கல்பிட்டியவில் குத்தகைக்கு வழங்கியிருந்த 10 தீவுகளுக்கு உரிய குத்தகைதாரர் ஏழு பேரிடமிருந்து அதிகார சபைக்கு ரூபா. 92.96 மில்லியன் குத்தகைப் பணம் நிலுவையாகக் காணப்பட்டது.

**வாடி வீடுகளைக் குத்தகைக்கு வழங்குதல்**

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான 37 வாடி வீடுகளில் 9 வாடி வீடுகள் இரண்டு வருடம் தொடக்கம் எட்டு வருடங்கள் வரையான காலமாகக் குத்தகைக்கு வழங்கப்பட்டு இருக்காத காரணத்தால் அந்தச் சொத்து செயற்பாடின்றி காணப்பட்டது. 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் 34 வாடி வீடுகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை வாடகை வருமானம் ரூபா. 30 மில்லியனாக இருந்ததுடன் 4 வருடங்களுக்கும் அதிகம் பழமையான நிலுவை வாடகை வருமானம் ரூபா. 10 மில்லியன் அல்லது 34 சதவீதம் ஆகும்.

பிபிலை வாடி வீடு 17 வருடங்களுக்கும் அதிக காலம் தொட்டு வளாகத்தின் ஆக்கிரமிப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பில் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாத காரணத்தால் கைவிடப்பட்டிருந்தது. பெறுகை நடவடிக்கைகளின் பின்னர் 2016 நவம்பர் 02 ஆம் திகதி தெரிவு செய்யப்பட்ட குத்தகைதாரருடன் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு இருந்த போதிலும் போதியளவு பாதுகாப்பு இல்லாத காரணத்தால் 2016 நவம்பர் 02 ஆம் திகதி தொடக்கம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் குத்தகைதாரிடம் இருந்து அறவிடப்படக் கூடியதாக இருந்த மொத்த வாடகை வருமானம் ரூபா. 10 மில்லியனை அதிகாரசபை இழந்திருந்தது.

**தேசிய ஓய்வு இல்லங்கள் தொடர்ச்சியாக நட்டமடைதல்**

அதிகார சபைக்குச் சொந்தமான 05 தேசிய ஓய்வு இல்லங்களில் 2023 மற்றும் அதற்கு முந்தைய ஆண்டில் முறையை ரூபா. 50.1 மில்லியன் மற்றும் ரூபா. 51.3 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. எவ்வாறு இருப்பினும், அந்த ஓய்வு இல்லங்களில் நட்டத்தினைக் குறைத்துக் கொள்வதற்கு போதிய அளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**சுற்றுலா அபிவிருத்தி வலயத்திற்கான பிரதான திட்டத்தினைத் தயாரித்தல் தாமதமடைந்தமை**

2018 ஜூன் 06 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் அமப/18/1073/806/002 கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய 18 மாதங்களுக்குள் 07 சுற்றுலா அபிவிருத்தி வலயங்களின் பிரதான திட்டத்தினை ரூபா. 39 மில்லியன் மொத்த செலவில் தயாரிப்பதற்குச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை (UDA) என்பன 2019 பெப்ரவரி 13 ஆம் திகதி புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று (MOU) கைச்சாத்திட்டிருந்தது. எவ்வாறு இருப்பினும், 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் முறையே 2020 - 2030 மற்றும் 2021 - 2030 கால எல்லைகளுக்கான எல்ல மற்றும் அருகம்பே என்பவற்றுக்கான பிரதான இரு திட்டங்கள் மட்டும் தயாரிக்கப்பட்டிருந்தன. நகர அபிவிருத்தி அதிகார சபை 05 திட்டங்களைத் தயாரிப்பதற்கு ரூபா. 18.4 மில்லியன் தொகையினைச் செலுத்தி இருந்தது. மேலும், மேலே கூறப்பட்ட திட்டங்களில் செயல்பாடுகள் மற்றும் இலக்குகளுக்கு உரிய தீர்மானிக்கப்பட்ட கால எல்லைகள் அமைக்கப்பட்டிருக்காததுடன் இதற்கான இடைக்கால அமைச்சு குழுவும் இதுவரையில் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த சுற்றுலா பிரதேசங்களில் நீண்ட காலம் தொட்டு உட்கட்டமைப்பு

வசதிகள் அபிவிருத்தி செய்தல் மற்றும் இருக்கும் வசதிகளை முறையாகப் பராமரித்தல் என்பன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**காணிகளை கையகப்படுத்தல் விளைதிறனற்றிருத்தல்**

தெத்துவ பிரதேசத்தில் சுற்றுலா அபிவிருத்தி செயற்திட்டத்திற்கான காணியைக் கையகப்படுத்துவதற்கு ரூபா. 173 மில்லியன் தொகை செலுத்தப்பட்டு 2017 ஆம் ஆண்டளவில் அந்த நடவடிக்கை நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அதில் சுற்றுலா அபிவிருத்தி செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2019 ஆம் ஆண்டில் ரூபா. 61 மில்லியன் தொகை அதிகார சபையினால் செலுத்தப்பட்டிருந்த போதிலும், மன்னார் காணி உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு இன்று வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம்

**ஹோட்டல் பாடசாலைக்கான ஆகக்கூடிய கேள்வியினை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை**

2023 ஆம் ஆண்டு ஹோட்டல் பாடசாலையின் கீழ் பல்வேறு பாடநெறிகளுக்கு கிடைத்திருந்த விண்ணப்பப் பத்திரங்களின் எண்ணிக்கை 11,788 ஆக இருந்த போதிலும், பாடநெறிகளுக்கான விண்ணப்பதாரிகள் 5,912 அதாவது 50 சதவீத விண்ணப்பதாரர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தனர். இந்த நிலைமை முக்கியமாக வகுப்பறைக்கான இடவசதி இல்லாமையால் ஏற்பட்டிருந்தது என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. எவ்வாறு இருப்பினும், ஆகக் கூடிய கேள்வியினைப் பூர்த்தி செய்வதற்கான தீர்வினை அடையாளம் கண்டு நடைமுறைப்படுத்துவதற்கு நிறுவனத்தின் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், கிராமப் பிரதேசங்களில் நடாத்தப்பட்டு வரும் ஹோட்டல் பாடசாலைக் கிளைகளுக்கு தங்குமிட வசதிகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**சமுத்திர ஹோட்டல் மற்றும் உணவகங்களை உற்பத்தித் திறனாகப் பேணிச் செல்லாமை**

சமுத்திரப் பயிற்சி ஹோட்டல், கொழும்பு ஹோட்டல் பாடசாலையுடன் இணைந்து அமைக்கப்பட்டுள்ளதுடன் அது மாணவர்களின் நடைமுறைப் பயிற்சிகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. அதே போன்று, சமுத்திர உணவகம், அறைகள், கேட்போர்கூடம் என்பவற்றின் ஊடாக வியாபார நிறுவனமாக செயல்படுகின்றது. சமுத்திரப் பயிற்சி ஹோட்டலின் செயற்பாடு தொடர்பில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

சமுத்திர ஹோட்டலுக்கு விற்பனைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்காதடன் அறைகளில் வசதிகள் மற்றும் சௌகரியங்கள் திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை.

2023 ஆம் ஆண்டுக்கான அறை இரவுகளின் (Room Nights) எண்ணிக்கை 494 ஆக அதாவது, மொத்த அறை இரவுகளில் (Room Nights) 11 சதவீதம் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் சமுத்திர ஹோட்டல் கடன் பட்டோர் மீதி ரூபா. 26 மில்லியனாக இருந்ததுடன் அந்தக் கடன் மீதி 24 மாதங்களையும் விட அதிக காலம் தொட்டு அறவிடப்பட்டிருக்கவில்லை.

முறையான செலவுப் பலன் பகுப்பாய்வின்றி மீளாய்வாண்டினுள் சமுத்திர உணவகத்தினைப் புனரமைப்பு செய்வதற்காக ரூபா. 6 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் சமுத்திர உணவாகம் திட்டமிடப்பட்டிருந்த வகையில் 2024 ஜூலை 31 ஆம் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களம்

**காணி உரிமைச் சான்றிதழ் பெற்றுக் கொண்டிருக்காமை**

1947 இன் 08 ஆம் இலக்க அரச காணி கட்டளைச் சட்டத்தின் 224 ஆம் பிரிவின் பிரகாரம் 05 பூங்காக்களுக்குச் சொந்தமான 362.3744 ஹெக்டயர் பரப்பளவினைக் கொண்ட காணிக்கான உரிமைச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கை 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை.

**செயலற்ற சொத்துக்கள்**

ஹக்கல தாவரவியல் பூங்காவிற்கு உள் நுழையும் மற்றும் வெளியேறும் வாசல்களுக்கு அண்மையில் 02 LED பலகைகளைப் பொருத்துவதற்கு விநியோகத்தர் ஒருவருக்கு ரூபா. 6.5 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த 02 LED பலகைகளும் பொருத்திய தினம் தொடக்கம் செயல்படாது காணப்பட்டது.

**வேலை நிறைவேற்றப்பட்டிருக்காத போதிலும் விலைப் பட்டியலுக்கான கொடுப்பனவு மேற்கொண்டமை**

பேராதனை அரச தாவரவியல் பூங்காவில் நீர் தேவைப்பாட்டுக்காக பெரோ சீமெந்து தாங்கி ஒன்றினை நிர்மாணிப்பதற்காக ரூபா. 5.61 மில்லியனுக்கு 2021 ஓகஸ்ட் 19 ஆம் திகதி உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு ஒப்பந்த நிறுவனம் ஒன்றிடம் நிர்மாணிப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2021 நவம்பர் 15 ஆம் திகதி வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும். மேலே கூறப்பட்ட ஒப்பந்தம் 2023 ஆம் ஆண்டு இறுதி தினம் வரையிலும் அதன் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காத போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் 05 சந்தர்ப்பங்களில் மொத்தமாக ரூபா. 5.86 மில்லியன் தொகை

ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. இந்த கொடுப்பனவுகள் விலைப் பட்டியல்களில் குறிப்பிடப்பட்டிருந்த 27 மற்றும் 29 தொடக்கம் 41 வரையான வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு இருக்காத போதிலும் பூர்த்தி செய்யப்பட்டது என விலைப் பட்டியல்கள் தவறாகத் தயாரிக்கப்பட்டு, பரிந்துரை செய்யப்பட்டு அதற்காக ரூபா. 2.15 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**செயற்பாடற்ற விற்பனைக் கூடங்கள்**

மிரிஜ்ஜவில உலர் வலய தாவரவியல் பூங்காவில் 2013 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பெறுமதி இனம் காணப்பட்டிருக்காத 09 விற்பனைக் கூடங்கள் 10 வருட காலம் தொட்டு செயலற்றுக் காணப்படுகின்றன.

# காணி

நிலைபேறான அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு காணி வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தும் நோக்கில் சகல தரப்பினர்களுக்காகவும் கொள்கை வழங்கல் மற்றும் தொடர்பினை ஏற்படுத்துதல் காணி அமைச்சின் எதிர்பார்க்கப்பட்ட விளைவாக இருந்தது. அதன் பிரகாரம் அரசாங்கத்தின் காணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல், அபிவிருத்தி செயற்திட்டம் மற்றும் அத்தியாவசிய பணிகளுக்காக பணிகளுக்காக காணிகளை வழங்குதல், நாட்டில் சகல காணிகளினதும் உரித்துறுதிகளை உறுதிப்படுத்துதல் நோக்கமாக இருந்தது.

## கணக்காய்வு அவதானிப்புக்கள்

### சுற்றுலா மற்றும் காணி அமைச்சு

**இழப்பீடு செலுத்துதல் தாமதமடைந்த அடிப்படையில் மேலதிக வட்டி செலவினம்**

2023 ஆம் ஆண்டின் இறுதி வரையில் காணி கைப்பற்றல் தொடரபாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் பரீட்சிக்கப்பட்ட 11 கோவைகளில் 06 கோவைகளுக்காக கைப்பற்றலின் இழப்பீடாக ரூபா 147,91 மில்லியன் மற்றும் செலுத்துதல் தாமதமடைந்ததன் அடிப்படையில் மேலதிக வட்டியாக ரூபா 67.30 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. அரச காணி கைப்பற்றல் செயற்பாடுகளுக்காக 10 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்தமை மற்றும் அந்த செயற்பாடுகளுக்கு எடுக்கப்படுகின்ற காலத்தின் காரணமாக இழப்பீட்டிற்கு மேலதிகமாக கணிசமான வட்டி செலவினப் பொறுப்பு ஒன்று ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கைப்பற்றப்பட்ட காணியின் விபரம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | பூர்த்தி செய்யப்பட்ட திகதி | செலுத்தப்பட்ட இழப்பீட்டுப் பெறுமதி ரூபா | மேலதிக வட்டி பெறுமதி ரூபா |
|---|---|---|---|---|---|
| (i) | கிராமங்களை விரிவுபடுத்தலின் கீழ் அப்பெருக்கவத்த மற்றும் மகமோட்டுவத்த கைப்பற்றல் | | | | |
| (ii) | நக்கிள்ஸ் வலயத்திற்காக காணிகளை கைப்பற்றுதல் | | | | |
| (iii) | வீரம்புகெதர பொலிஸ் நிலையத்துக்கான காணி கைப்பற்றல் | | – | | ගණනය කර නොමැත |
| (iv) | கல்வி அமைச்சுக்குரிய காணியைக் கைப்பற்றுதல் | | | | |
| (v) | புதியத்தலாவ புதிய பொலிஸ் நிலையத்துக்கு காணி கைப்பற்றல் | | | | |
| (vi) | நிவித்திகல பிரதேச செயலகத்திற்காக A, C, F மற்றும் J காணிக்கூறுகளைக் | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கைப்பற்றுதல் | | | | |
| | மொத்தம் | | | 147,914,150 | 67,300,848 |

அட்டவணை இலக்கம் 2.19 : காணி கைப்பற்றலில் தாமதம்

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

**சரியான மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகைப்பணம் அறவிடப்படாமை**

2021 பெப்ரவரி 01 ஆம் திகதிய இலக்கம் 2020/06(1) என்ற காணி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை மற்றும் அதற்குரிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நீண்டகால வாடகையாளர்களுக்காக வாடகை சலுகை வழங்குவதன் கீழ் வாடகை கணிப்பிடும் போது இரண்டாவது வாடகைக் காலம் ஆரம்பிக்கின்ற திகதியிலிருந்து அமைச்சரவை அங்கீகாரம் வழங்கிய 2020 நவம்பர் 16 ஆம் திகதி வரை இரண்டாவது வாடகைக் காலத்திற்குரியதாக கிடைக்கப்பெற்ற மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகைப் பணம் சரியாக கணிப்பீடு செய்யப்படல் வேண்டும். எனினும் அதற்கு முரணாக அநுராதபுதரம் கிழக்கு நுவரகம்பலாத்த பிரதேச செயலகத்திற்கு முகவரியிடப்பட்ட 2022 நவம்பர் 10 ஆம் திகதிய இலக்கம் 4/10/பொது/வாடகை சலுகை (L2) என்ற காணி ஆணையாளர் நாயத்தின் கடிதத்தின் பிரகாரம் அநுராதபுர மாவட்டத்தின் கிழக்கு நுவரகம்பலாத்த பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் 08 வாடகைக் கோவைகள் தொடர்பாக வாடகை அறவிட வேண்டிய முறை அறிவிக்கப்பட்டமையால் அரசாங்கத்திற்கு ரூபா 70.52 மில்லியன் வாடகைப்பணம் இழக்கப்பட்டிருந்நது. அவ்வாறே இதன் காரணமாக உரிய பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் எஞ்சியிருந்த 74 வாடகையாளர்களுக்கு வாடகை செலுத்தல் மனச்சோர்வு ஏற்படும் ஆபத்து ஏற்படக்கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு

காணி மறுசீரமைப்பு சட்டத்தின் கீழ் கையளிக்கப்பட்ட காணி மற்றும் பௌதீக வளங்கள், மக்களினதும் தேசத்தினதும் சமுர்த்தி நோக்காகக் கொண்ட செயற்பாடுகள், எதிர்கால பரம்பரையினரின் அபிலாசைகளை நோக்காகக் கொண்டு காணி ஒதுக்கங்களை பேணி செல்லுதல் தேசிய அபிவிருத்திக்கு உதவுதல் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் பணியாகும்.

**சிக்கலான விளக்கத்தின் அடிப்படையில் நில ஒதுக்கீடு**

1972 இன் 01 ஆம் இலக்க காணி மறுசீரமைப்புச் சட்டத்தின் 44(ஓ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவினால் சேவையில்

ஈடுபடுத்தப்பட்டிருக்கின்ற நபர்களுக்காக சேமலாப நிதியம் ஒன்றை ஸ்தாபித்தல் மற்றும் நலன்புரி பொழுபோக்கு விளையாட்டு வசதிகள் மற்றும் வீடமைப்பு மற்றும் விடுதி வசதிகள், ஏனைய வசதிகளை வழங்க வேண்டியிருந்தது என குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் ஆணைக்குழுவில் 05 வருடங்கள் தொடர்ச்சியாக சேவையில் உரித்தாகியிருந்த ஊழியர்களுக்கு ஒரு பேர்ச் ரூபா 1,000 பெறுமதியில் 20 பேர்ச் வீதம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2009 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை 396 உத்தியோகத்தர்கள் 49 காணி 49 ஏக்கர் 35.64 பேர்ச் வழங்கப்பட்டிருந்தது.

## நில அளவையாளர் திணைக்களம்

**நவீன தொழில்நுட்ப அபிவிருத்தியுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாற்றம் ஒன்று மேற்கொள்ளப்படர்மை**

நில அளவையாளர்களினால் பல்வேறு அளவிடல் வகைகள் மேற்கொண்டு அதில் எல்லைக் கல் பதித்தல் நியதிச் சட்டத்தின் காரணத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட அளவிடைகளுக்காக மாதாந்த இலக்கு 20 காணிக் கூறுகளாக இருந்ததுடன் காணிக் கூறுகள் 30 ஆக இருந்தது. அவ்வாறே 16 வருடங்களுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்ட விதிகள் (Norms), அளவிடல் மாதிரிகள் மற்றும் உபகரணங்கள் தொழில்நுட்ப அபிவிருத்தியுடன் தற்போது ஈடுகொடுக்கின்ற வகையில் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. திணைக்களத்தின் தூர நோக்கு மற்றும் செயற்பணிகளின் பிரகாரம் தரமான நில தகவல்களை வழங்குதல் மற்றும் சேவைகளை வழங்குதல் நாளதுவரையாக்கப்படாதிருந்த போதும் 2018 முதல் 2021 ஆம் ஆண்டு வரை நிதிக்கூற்றுக்களில் இயந்திர உபகரணங்களின் கொள்வனவுகளின் கீழ் நவீன அளவிடல் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக திணைக்களத்தால் ரூபா 207 மில்லியனை விஞ்சிய தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்தது.

**நிறைவேற்றப்படாத அளவிடல் கோரிக்கைகள்**

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அளவிடல் 08 வகைகளின் கீழ் கிடைக்கப்பெற்ற மொத்த அளவிடல் கோரிக்கைகளின் எண்ணிக்கை 129,270 இல் பூர்த்தி செய்யப்படாத எண்ணிக்கை 33,337 அதாவது 26 சதவீதம் ஆகும். அந்த அளவிடல் கோரிக்கைகளுக்கிடையே 04 வருடங்களுக்கு மேற்பட்ட அளவிடல் கோரிக்கைகள் 8,688 உம், 03 இற்கும் 04 வருடங்களுக்கும் இடையிலான அளவிடல் கோரிக்கைகள் 3,834 உம், 02 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையிலான அளவிடல் கோரிக்கைகள்

காணி

4,712 உம், 1 இற்கும் 2 வருடங்களுக்கும் இடையிலான அளவிடல் கோரிக்கைகள் 6,276 உம் ஆகும்.

**குறைவாகப் பயன்படுத்தப்பட்ட பயிற்சி நிறுவனம்**

அளவிடல் மற்றும் வரைபடமாக்கல் தொடர்பான பல்வேறு பாடநெறிகளை நடாத்துவதற்காக ஸ்தாபிக்கப்பட்ட பயிற்சி நிறுவனம் பல்வேறு கட்டிடங்களில் 121 பிரிவுகளை உடைய 61 ஏக்கர் நில அளவில் மிகக் கணிசமான பௌதீக வளங்களுடன் ஸ்தாபிக்கப்பட்டது. 2022 முதல் 2026 வரையான 04 வருட பாடநெறிகளுக்காக 22 மாணவர்களை உடைய சிறிய பட்டக்குழு ஒன்று மாத்திரம் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றமை அவதானிக்கப்பட்டது. பயிற்சி நில அளவையாளர்களை ஆட்சேர்க்காத சந்தர்ப்பங்களின் போது பட்டப் பாடநெறிகளுக்காகவும் மாணவர்கள் சேர்க்கப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

## காணி பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களம்

**தேசிய காணி பயன்பாட்டு கொள்கை தயாரித்தல்**

அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய காணி பயன்பாட்டுக் கொள்கைத் திருத்தத்திற்கு 2018 ஆகஸ்ட் மாதத்தின் போது அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பிரதான பணியான இலங்கைக்கான தேசிய காணி பயன்பாட்டு கொள்கை தயாரித்தல் மற்றும் காலரீதியில் தேவையான பிரகாரம் அதன் திருத்தங்களை மேற்கொண்டு தயாரித்து பூர்த்தி செய்யப்பட்ட வரைவு காணி மற்றும் சுற்றாடல் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் காணி பயன்பாட்டுக் கொள்கை தயாரிக்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## காணி அளவிடல் சபை

**பொது மக்கள் முறைப்பாடுகளை விசாரணை செய்தல்**

2002 இன் 17 ஆம் இலக்க காணி அளவிடல் சட்டத்தின் பிரகாரம் அளவிடல் தொழில் மற்றும் அதின் நடைமுறைகளை ஒழுங்காக பேணிச் செல்வதற்கும், தொழில் ஈடுபடுகின்றமையால் தொழிலின் இருப்பை உயர்ந்த நியமத்தில் பேணிச் செல்வதையும் உறுதிப்படுத்தும் நோக்காகக் கொண்டு காணி அளவிடல் சபை ஸ்தாபிக்ககப்பட்டிருந்தது. நில அளவையாளர்களின் தொழில் ரீதியான பிணக்குகள் தொடர்பாக பொதுமக்களினால் சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாடுகளை விசாரணை செய்ய வேண்டியிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டுக்கு முன்னர் கிடைக்கப்பெற்ற 134 முறைப்பாடுகள் மற்றும் 2023 ஆம் ஆண்டின் போது கிடைக்கப்பெற்ற 78 முறைப்பாடுகளையும் உள்ளடக்கி 212 முறைப்பாடுகளுக்கிடையே 149 முறைப்பாடுகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்வு வழங்கப்பட்டிருக்கவில்லை.

# நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு மற்றும் இதன் கீழ் உள்ள இராஜாங்க அமைச்சு, திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகள்/ நிறுவனங்களால் பின்வரும் பணிகளும் செயற்பணிகளும் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தன.

**செயற்பணிகள்**

நகரங்கள், புறநகர் மற்றும் புறநகரை அண்மித்த பகுதிகளின் திட்டமிடல் மற்றும் மேம்பாடு

நகரப் புறங்களின் பொருளாதார, சமூக மற்றும் பௌதீக வளர்ச்சியை ஒருங்கிணைந்த வகையில் முறையாக மேம்படுத் தி ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள்.

குடிசைகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுநர்களுக்காக வீடமைப்புத் கட்டிடத் தொகுதிகளை நிர்மாணித்தல் மற்றும் அவிருத்தி செய்தல், நடுத்தர வகுப்பினரின் வீட்டுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் புதிய வீட்டுத் திட்டங்கள் செயல்படுத்துதல் மற்றும் கடன் வசதிகளை வழங்குதல்

வாடகை அடிப்படையில் தற்காலிக இருப்பிடங்களை எதிர்பார்ப்போருக்கு நியாயமான வாடகை அடிப்படையில் தொடர்மாடி வீட்டுத் திட்டமொன்றை அறிமுகம் செய்தல்

வீடமைப்பு நிர்மாண நிறுவனங்களுக்கு நிவாரண விலையின் கீழ் காணிகளை வழங்குவதன் மூலம் புதிய வீட்டுச் செயற்திட்டங்களுக்கு முதலீட்டாளர்களை ஊக்குவித்தல், வீடமைப்புத் தொகுதிகளை நிர்மாணித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல், வீட்டுச் செயற்திட்டங்களுக்கு காணி வழங்குதல், வீட்டு நிதியுதவி வழங்குதல், நகர்ப்புற திண்ம கழிவு முகாமைத்துவம்.

பொறுப்பற்ற கழிவகற்றலைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்

சகல நகர்ப்புற நிர்மாணிப்புகளிலும் வாகனத் தரிப்பிடங்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்காக அணுகுவதற்கான வசதிகளை ஏற்படுத்துவதை உறுதிப்படுத்தல்.

இணைந்த நகர அபிவிருத்தியினை உறுதிப்படுத்துமுகமாக தேசிய பௌதீகத் திட்டங்களின் அடிப்படையில் அனைத்து நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளலும் ஒழுங்குபடுத்தலும், தேசிய பௌதீக திட்டங்கள் மற்றும் பிராந்திய பௌதீகத் திட்டங்களைத் தயாரித்து ஒழுங்கமைத்தல்.

கூட்டாட்சி ஆதன முகாமைத்துவம் மற்றும் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள், பொதுமக்கள் கூட்டாதன சீர்திருத்தமும் வினைத்திறமை மற்றும் துரிதமான முறையில் வீடுகளின் உரிமைகளைக் கையளித்தல்.

தாழ் நிலங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பான நடவடிக்கைகள், நகரப் பிரதேசங்களில் அமைந்துள்ள சேவைகள் மற்றும் வசதிகள குறைந்த பிரதேசங்கள் மற்றும் சதுப்புநிலைங்களைப் பொதுத் திட்டமொன்றுக்கமைய அபிவிருத்தி செய்வதற்கு தேவையான வழிகாட்டல்

அரசாங்க உத்தியோகபூர்வ குடியிருப்புகள் மற்றும் ஏனைய கட்டிடங்களுக்கான நியமம் மற்றும் பரிமாணங்களை ஒழுங்கமைத்தல்.

சுற்றுச் சூழலுக்கு உகந்த வகையில் செலவுச் சுருக்கமான வீடுகளை நிர்மாணிக்கும் தொழில்நுட்ப முறை குறித்து கிராமிய மக்களுக்கு வழிகாட்டுதல்.

அரச நிறுவனங்களுக்கு இயந்திரவியல் பொறியியலாளர் சேவைகளை வழங்குதல், தொடர்புடைய சட்டதிட்டங்கள் மற் றும் தரவுகளுக்கமைய நிர்மாணக் கைத்தொழில்துறையின் பணிகளை ஒழங்குறுத்துதலும் பதிவுசெய்தலும் விதிமுறைப்படுத்தலும் தரப்படுத்துதலும்.

நிர்மாணக் கைத்தொழிலுக்குரிய ஆலோசனை மற்றும் ஒழுங்குறுத்தல் சேவைகளை வழங்குதல், உள்நாட்டு நிர்மாணக் கலைஞர்களை வலுவூட்டல், கட்டிடப் பொருட்கள் கைத்தொழிலை மேம்படுத்துதல்

கனரக கட்டுமான உபகரணங்களில் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு பயிற்சி

உள்நாட்டு சிறிய மற்றும் நடுத்தர துணை ஒப்பந்தக்காரர்களை வலுவூட்டுதலும் பாதுகாப்பு வழங்குதலும்

சமுத்திர மாசுபடல் நிவாரண நடவடிக்கைகள், சமுத்திர மற்றும் சமுத்திரம் சார்ந்த மாசுபடலைத் தடுப்பதற்குச் செயலாக்கத் திட்டமொன்றைத் தயாரித்தலும் செயற்படுத்துதலும். கரையோரப் பேணல் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்

கழிவுப்பொருட்கள் அகற்றுவதன் காரணமாக கடற்பரப்பு மற்றும் கடற்படுக்கைக்கு ஏற்பட்டுள்ள சேதங்களைத் தவிர்ப்பதற்காக சமுத்திர துப்புரவேற்பாட்டு வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துதல்


அரச மற்றும் தனியார் பெருந்தோட்ட கம்பனிகளில் கடமையாற்றும் காணி உரித்தற்ற மக்களுக்காக வீடுகளையும் உட்கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்தும் நோக்குடன் புதிய கிராமங்களையும் நகரங்களையும் உருவாக்குதல்.

தோட்டத்துறை சமூகத்தின் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார ரீதியாக வலுவூட்டுவதற்காக அடிப்படை வசதிகளையும், வாழ்வாதாரங்கள் மற்றும் சமூக விருத்தி செயற்திட்டங்கள் உள்ளடங்கலாக ஏனைய தேவைப்பாடுகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல், கிராமப்புற தோட்டத் துறைகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.

சமூகத்தை அண்மித்த சமூக தலைமைத்துவம் மற்றும் சமூகப் பங்கேற்பிற்கு முன்னுரிமையான "மக்கள் சார் சபைகளையும் மக்கள் சார் மத்தியநிலையங்களையும்" ஸ்தாபித்தல்

தோட்டத் தொழிலாளிகளின் பிள்ளைகளுக்காக அடிப்படைக் கல்வி மற்றும் சுகாதார வசதிகளை உறுதிப்படுத்துவதற்காக விசேட வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

2023 ஆம் ஆண்டின் போது மேற்குறித்த செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சிற்கும் 03 திணைக்களங்களுக்கும் ரூபா 27,147.75 மில்லியன் தொகையான ஒதுக்கீடு பாராளுமன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு இதில ரூபா 24,205.05 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 2,942.7 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. விபரங்கள் கீழே உள்ள வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளன.




| | ரூ.மில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு | ரூ.மில் கட்டிடத் திணைக்களம் | ரூ.மில் அரசாங்க தொழிற்சாலை | ரூ.மில் பௌதீக் திட்டமிடல் திணைக்களம் | ரூ.மில் கூட்டுத்தொகை |
|---|---|---|---|---|---|
| தேறிய ஒதுக்கீடு | 26இ175.77 | 557.91 | 200.43 | 213.64 | 27இ147.75 |
| செலவினம் | 23இ308.28 | 537.27 | 175.28 | 184.22 | 24இ205.05 |
| சேமிப்பு | 2இ867.49 | 20.64 | 25.15 | 29.42 | 2இ942.70 |

வரைபட இல. 2.33 : வழங்கப்பட்ட ஒதுக்கட்டு அளவு மற்றும் உள்ளபடியன செலவினம்
ஆதாரம் : 2023 வருடாந்த நிதி அறிக்கை

மேற்குறித்த செயற்பாடுகள் மற்றும் செயற்பணிகளை மேற்கொள்வது குறித்து நடாத்தப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள் தொகுக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

## கணக்காய்வு அவதானிப்புகள்

### நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

| | |
|---|---|
| **ஹோறலுவாகொட விவசாய சுற்றாடல் பூங்கா செயற்திட்டம்** | 2022 ஆம் ஆண்டின் போது அமைச்சரவைத் தீர்மானத்தில் தோட்டக் கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி விவசாய அமைச்சின் விடயப் பரப்பிற்கு உரித்தான செயற்பணியும் சேர்க்கப்பட்டு ரூபா 341.96 மில்லியன் பெறுமதிக்கு ஹோறலுவாகொட விவசாய சுற்றாடல் பூங்கா செயற்திட்டமாகப் பெயரிடப்பட்டு அபிவிருத்தி செய்யப்படுவதற்கு அமைச்சின் காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்துடன் ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் செயற்திட்டத்திற்காக ரூபா 450.56 மில்லியன் அதாவது உடன்படிக்கையிடப்பட்ட தொகையில் 131 சதவீதம் செலவிடப்பட்டிருந்ததுடன் இவ்வாறு அமைச்சின் விடயப்பரப்பிற்கு உரித்தற்ற செயற்பாட்டிற்காக பணத்தைச் செலவிடும் தேவைப்பாடு கணக்காய்விற்குச் சர்ச்சைக்குரிய விடயமாகியது. |
| **அருவக்காலு சுகாதார கழிவு சேமிப்புச் செயற்திட்டம்** | மதிப்பிடப்பட்ட நிதி ரூபா 19,127 மில்லியன் தொகையான அருவக்காலு சுகாதார கழிவு சேமிப்புச் செயற்திட்டம் 2018 சனவரி 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 04 தொகுதிகளின் கீழ் செயற்படுத்தப்பட்டு 2019 யூன் 30 ஆம் திகதி வரையில் பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அச் செயற்திட்டத்தின் குப்பைகள் பரிமாற்றல் மையம், சுகாதாரமான குப்பை நிரப்பிகளை நிர்மாணித்தல் மற்றும் புகையிரதப் பாதைகளை நீடித்தல் போன்ற 03 தொகுதிகளின் நிர்மாணப் பணிகள் சீனக் கம்பனி ஒன்றிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அந் நிர்மாணப் பணிகள் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. தேவையான இயந்திரங்களைக் கொள்வனவு செய்யும் தொகுதியின் கீழ், 04 புகையிரத இயந்திரத் தொகுதிகள் ரூபா 8.27 மில்லியன் செலவில் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் இறக்குமதி செய்யப்பட்டு 03 வருடங்கள் கடந்திருந்ததுடன் 94 கொள்கலன்கள் 0.8 மில். ஐ.அ.டொ. செலவில் 2022 ஏப்ரல் 22 ஆம் திகதி இறக்குமதி செய்யப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. 34 புகையிரத வெகன்கள் 2.3 மில்லியன் ஐ.அ.டொ. பெறுமதியில் இந்திய கம்பனி ஒன்றிடம் இருந்து இறக்குமதி செய்யப்படுவதற்காக 2019 ஒக்டோபர் 21 ஆம் திகதி உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் குறித்த நிறுவனத்தால் உடன்படிக்கையின் பிரகாரம் கட்டமைப்பு ரீதியான கருத்தளவிலான திட்டம் |

சமர்ப்பிக்கப்பட்டிராமையால் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டிருந்தமையால் 2023 ஆம் ஆண்டின் போதும் புகையிரத வகன்களை பெற்றுக்கொள்ள இயலாதிருந்தது. இச் செயற்திட்டத்திற்காக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 24,016 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் முன்னேற்ற அறிக்கையின் படி பௌதீக முன்னேற்றம் 92 சதவீதமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டின் இறுதியில் இதன் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டு அரச – தனியார் கூட்டாண்மையுடன் இச் செயற்திட்டத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2024 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரை அதனைச் செயற்படுத்த இயலாதிருந்தது.

**யாழ்ப்பாண நகர சபைக் கட்டிடத்தை மீளக் கட்டியெழுப்புதல்**

2019 ஆம் ஆண்டின் போது அமைச்சரவையின் அங்கீகாரத்தில் யாழ்ப்பாண நகரசபைக் கட்டிடம் மீளமைக்கப்படுவதற்காக ரூபா 2,142.48 மில்லியன் தொகையான ஒப்பந்தப் பெறுமதிக்கு தனியார் நிர்மாணிப்பு நிறுவனம் ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் 2019 ஒக்டோபர் 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2024 ஒக்டோபர் 09 ஆம் திகதி வரை 1125 நாட்களுக்கு 04 கால நீடிப்புகள் வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அதன் பௌதீக முன்னேற்றம் 66 சதவீதமாக மாத்திரமாகக் காணப்பட்டதுடன் நிதிச் செயலாற்றல் ரூபா 1,636.15 மில்லியன் என அமைச்சின் முன்னேற்ற அறிக்கையின் படி அவதானிக்கப்பட்டது. மேலும், ஒப்பந்தப் பெறுமதி ரூபா 3,769 மில்லியன் வரை ரூபா 1,627 ஆல் அதிகரிக்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**பாணந்துறை பொதுச் சந்தைத் தொகுதி நிர்மாணிப்பு**

258 கடைகளைக் கொண்ட பாணந்துறை பொதுச் சந்தைத் தொகுதிக்காக இரண்டு மாடிக் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்படுவதற்கான ஒப்பந்தம், ஆரம்ப விலைமனு ஆய்வின் போது நிராகரிக்கப்பட்ட ஒப்பந்த நிறுவனமொன்றிற்கு ரூபா 385 மில்லியன் (பெறுமதி சேர் வரி இன்றி) பெறுமதிக்கு 2021 செப்தெம்பர் 23 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்ததுடன் இது 2023 மார்ச் 24 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியதாக இருந்தது. எனினும், அன்றைய தினம் வேலை பூர்த்தி செய்யப்பட்டிராததன் காரணமாக மீள 2024 சனவரி 15 ஆம் திகதி வரை 297 நாட்களுக்காக கால நீடிப்பு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் இக் காலப்பகுதிக்குள்ளும் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்ய இயலாதிருந்தது.

**உங்களுக்கு வீடும் நாட்டிற்கு நாளையும்" செயற்திட்டம்**

வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினூடாக ரூபா 8,413 தொகையான திறைசேரி ஒதுக்கீட்டின் மூலம் உங்களுக்கு வீடும் நாட்டிற்கு நாளையும்" செயற்திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக 14,022 வீடுகள் நிர்மாணிக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்தின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் 2022

திசெ ம்பர் வரையில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 7,704.95 மில்லியன் செலவிடப்பட்டு 79 சதவீதமான முன்னேற்றம் அதாவது 7,744 அலகுகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் 75 வீடுகளின் நிர்மாணிப்புகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

**சியபத வீடமைப்பு மற்றும் கட்டான பொலிஸ் பயிற்சி நிறுவனத்தின் விடுதி நிர்மாணிப்பு**

அமைச்சின் வீடமைப்பு மற்றும் நிர்மாணப் பிரிவால் செயற்படுத்தப்பட்டிருந்த மரந்தகஹமுலவில் 40 வீடுகளை நிர்மாணிக்கும் செயற்திட்டம் (சியபத) மற்றும் கட்டான பொலிஸ் பயிற்சி நிறுவனத்தின் விடுதி நிர்மாணிப்புச் செயற்திட்டத்திற்காக முறையே ரூபா 110.66 மில்லியனும் ரூபா 132.8 மில்லியனும் செலவிடப்பட்டிருந்தது. அச் செயற்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் முறையே 35 சதவீதமாகவும் 31 சதவீதமாகவும் மாத்திரமாக இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் போது இச் செயற்திட்ட நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்ததன் காரணமாக அமைச்சால் செலவிடப்பட்ட ரூபா 243.46 மில்லியன் தொகையான செலவினம் விளைவற்றுக் காணப்பட்டது.

**நடுத்தர வருமான வீடமைப்புச் செயற்திட்டம்**

நடுத்தர வருமான வீடமைப்புச் செயற்திட்டத்தின் கீழ் இலங்கையில் நடுத்தர வருமானம் பெறுவோரின் பங்களிப்புடன் 12 வீடமைப்புச் செயற்திட்டங்களின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் 2020 ஆம் 2021 ஆம் ஆண்டுகளின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இவற்றில் 2939 வீடுகளைக் கொண்ட 09 செயற்திட்டங்களுக்காக 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 11,353.15 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியின் பின்னர் இச் செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**கொலம்பகே மாவத்தை 615 வீடுகள் நிர்மாணிக்கும் செயற்திட்டம்**

நகர மறுமலர்ச்சிச் செயற்திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறுவோருக்காக கொலம்பகே மாவத்தை 615 வீடுகள் நிர்மாணிக்கும் செயற்திட்டம் ரூபா 2,546.10 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதியில் 2014 ஒக்டோபர் 30 ஆம் திகதி நிர்மாணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. எனினும், 2020 நவம்பர் 20 ஆம் திகதி வரையில் அந் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் அது வரையில் ரூபா 1,255.30 மில்லியன் செலவிடப்பட்டு 39 சதவீதமான பௌதீக முன்னேற்றம் பெறப்பட்டிருந்தது. இதன் படி, மேற்குறித்த செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 1,255.30 மில்லியன் தொகையும் விளைவற்றிருந்தது.

**மஹர நிர்வாக மற்றும் வணிகக் கட்டிடத் தொகுதி**

கொழும்பு கண்டி பிரதான வீதிக்கு அருகாமையில் உள்ள ரூபா 370 மில்லியனான மஹர நிர்வாக மற்றும் வணிகக் கட்டிடத் தொகுதியின் முன்பாக கடைகளும் சகல வசதிகளுடனான 428 ஆசனங்களைக் கொண்ட கேட்போர் கூடங்களும் நிர்மாணிக்கப்பட்டு 05 வருடங்கள் அளவின்

பின்னர் விளைவற்றுக் காணப்பட்டன. இரண்டு மின்தூக்கி இயந்திரங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் அவ் இயந்திரங்கள் ஸ்தாபிக்கப்பட்ட நாள் முதல் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது சேவையாற்றப்பட்டிராததன் காரணமாக செயற்பாடற்றுக் காணப்பட்டன. இதன் நிர்மாணப் பணிகள் 2019 செப்தெம்பர் 30 ஆம் திகதி பூர்த்தியடைந்திருந்த போதிலும் 2024 சனவரி 30 ஆம் திகதி வரையிலும் 8,032.9 சதுர மீற்றர்கள் நில அளவில் 1,164.9 சதுர மீற்றர்கள் மாத்திரம் 07 அலுவலகங்கள் இயங்குவதற்காக வழங்கப்பட்டிருந்ததுடன் எஞ்சிய 6,868 சதுர மீற்றர்கள் விளைவற்றுக் காணப்பட்டன. சட்டரீதியான உடன்படிக்கையின் மூலம் ஒப்படைக்கப்பட்டிராததன் காரணமாக எந்தவித வாடகை வருமானமும் கிடைக்கப்பெறவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது.

## நகர அபிவிருத்தி அதிகாரசபை

**நகர மறுமலர்ச்சித் திட்டம்**

நகர அபிவிருத்தி அதிகாரசபையால் 2015 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட நகர மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் நிர்மாணிப்பதற்காகத் திட்டமிடப்பட்டிருந்த 68,000 வீடுகளில் 2024 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் 13,602 வீடுகள் பூர்த்தி செய்யப்பட்டு 13,536 நலன்பெறுனர்கள் குடியமர்த்தப்பட்டிருந்தனர். நிர்மாணிக்கப்பட்ட மேலும் 66 வீடுகள் பயன்பாட்டிற்காக எடுத்துக்கொள்ளப்படாது வெறுமையாகக் காணப்பட்டன. நிர்மாணப் பணிகள் பூர்த்தியாகியிருந்த 22 வீடமைப்புச் செயற்திட்டங்களில் ஒரு வீடமைப்புச் செயற்திட்டத்திற்காக மாத்திரம் கூட்டாட்சி முகாமைத்துவச் சான்றிதழ் பெறப்பட்டிருந்தது. இதனால் வீடமைப்புச் செயற்திட்டங்களின் நிர்வாக முகாமைத்துவக் குழுக்களிடம் ஒப்படைக்க இயலாதிருந்தமையால் வீட்டுப்பாராமரிப்பு நடவடிக்கைகளிற்காக 2023 ஆம் 2024 ஆம் ஆண்டுகளின் போது மாத்திரம் அதிகாரசபைக்கு ரூபா 668 மில்லியன் செலவிடப்பட வேண்டியிருந்தது. மேலும், இவ் வீட்டுக் குடியிருப்பாளர்களிடம் இருந்து அதிகாரசபைக்கு அறவிடப்படுவதற்குள்ள மொத்தத் தொகை 2024 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் உள்ளவாறு ரூபா 1,037 மில்லியனாகக் காணப்பட்டது.

**காணி உரித்தைக் கையேற்பதிலான தாமதம்**

வீடமைப்புத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக குறைந்த வருமானம் பெறுவோர் குடியிருக்கும் 18 தோட்டக் காணிகளில் 47 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் இதில் 09 ஏக்கர்கள், 03 ரூட் மாத்திரமேயான காணிகளின் உரிமை அதிகாரசபைக்கு உரித்தாக்கப்படும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிராதமையால் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்த இயலாதிருந்தன.

| | |
|---|---|
| **பன்னிபிட்டிய வீரமாவத்தை வீட்டுத் திட்டம்** | பன்னிபிட்டிய வீரமாவத்தையில் அமைந்துள்ள 500 வீடுகளைக் கொண்ட வீட்டுத் திட்டம் ஏ, பீ, சீ, டீ மற்றும் ஈ என 05 தொகுதிகளைக் கொண்டிருந்ததுடன் கால நீடிப்புடன் 2022 செப்தெம்பர் 29 இல் செயற்திட்டப் பணிகள் பூர்த்தியடைய வேண்டியிருந்தது. இதில் ஏ மற்றும் ஈ தொகுதி நிர்மாணிப்புள் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் பூர்த்தியாகாதிருந்தமையால் 197 வீடுகள் குறித்த தரப்பினர்களுக்குக் ஒப்படைக்க இயலாதிருந்தன. மேலும் இச் செயற்திட்டத்தின் பீ தொகுதியில் உள்ள 71 வீடுகளின் வாடகை திறைசேரியில் இருந்து அறவிடப்படும் அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக வழங்கப்பட்டிருந்தன. இவ் வீடுகளுக்காக 2024 யூன் 30 ஆம் திகதியில் உள்ளவாறு அதிகாரசபைக்கு அறவிடப்பட வேண்டியத ாக இருந்த நிலுவையான நீர், மின்சாரம் மற்றும் முகாமைத்துவக் கட்டணங்களின் கூட்டுத்தொகை ரூபா 11.86 மில்லியனாகக் காணப்பட்டது. |
| **“மாகம் ருஹுனுபுர” மாநாட்டு மண்டபம்** | ஹம்பாந்தோட்டை அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ், மாகம் ருஹுனுபுர சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் பிரதான கேட்போர்கூடம் நிர்மாணிக்கப்படுவதற்காக கொரியா சர்வதேச ஒத்துழைப்பு நிறுவகத்தால் (KOICA) 6.4 மில்லியன் ஐ.அமெரிக்க டொலர் (ரூபா 851.2 மில்லியன்) செலவிடப்பட்டிருந்ததுடன் கேட்போர் கூடத்தின் ஏனைய கட்டுமானப் பணிகளுக்காக அரச நிதியத்தில் இருந்து ரூபா 3.83 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. மேலும், மாநாட்டு மண்டபத்தைப் பேணுவதற்காக செலவினத் தொகையாக 2017 முதல் 2023 வரையான 7 ஆண்டுகளுக்காக மாத்திரம் ரூபா 110.53 மில்லியன் தொகை அதிகாரசபையால் செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், அந்த மாநாட்டு மண்டபத்தால் குறித்த காலப்பகுதிக்கு உரித்தாக உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 20.63 மில்லியன்களாக மாத்திரமாகும். இந் நிலையத்தைப் பயன்படுத்துவதற்காக அதிகாரசபையும் தனியார் பிரிவும் ஒன்றிணைந்து மேற்கொள்ளப்பட இருந்த நடவடிக்கைகள் இதுவரையிலும் வெற்றியளிக்கவில்லை. |
| **நகர காணிக் கொள்கைத் தயாரிப்பு** | 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் II ஆம் பிரிவின் 8 ஆம் பந்தியின் (அ) பிரிவின் பிரகாரம், நகர அபிவிருத்தி அதிகாரசபையால் நகர காணிக் கொள்கைத் தயாரிக்கப்பட்டு உரிய உள்ளூராட்சி நிறுவகத்தால் செயற்படுத்தப்பட வேண்டிய போதிலும் 2023 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறும் அச் செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், இது வரையில் 273 நகர அபிவிருத்தி பிரதேசங்கள் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த போதிலும் இதுவரையில் அபிவிருத்தி பிரதேசங்களிடையே 175 உள்ளடக்கத்திற்காக அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் அத்தகைய பகுதிகளுக்காக சட்டத்தின் 8(ஏ) பிரிவின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய மூலதன |

மேம்பாட்டுச் செயற்பாடுகளும் சட்டத்தின் 89 (ஓ) இன் படி அப் பகுதிகளின் சுற்றாடல் நிலையை விருத்தி செய்வதற்கான திட்டங்களும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**ஓடர்ஸ் அக்வடிக் மற்றும் 80 சமூக கேளிக்கை விடுதிகள்**

நாட்டின் முக்கிய நகரைக் கேந்திரமாகக் கொண்டு முன்மொழியப்பட்ட நகர அபிருத்திச் செயற்திட்டத்திற்காக அரச மற்றும் தனியார் காணிகள், அதிகாரசபையால் கையேற்கப்படுவதற்கு 2020 ஒக்டோபர் 12 ஆம் திகதிய MUD/H/2020/CP/37 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக 2020 ஒக்டோபர் 27 ஆம் திகதி அங்கீகாரும் கிடைக்கப்பெற்றிருந்தது. அவ் விஞ்ஞாபனத்தில் இணைக்கப்பட்டிருந்த 45 காணிகளில் கேளிக்கை விடுதிகளாக இயங்கிய ஓடர்ஸ் அக்வடிக் மற்றும் 80 சமூக கேளிக்கை விடுதிகள் எனும் இரு நிறுவனங்கள் உள்ள கட்டிடத்துடனான 1.8274 ஹெக்டேயர் அளவுடனான 03 காணிகள் அதிகாரசபையால் கையேற்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டு பொது மக்களுக்குத் திறந்து வைக்கப்பட வேண்டியதாக அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருந்தது. மேலும், அவ் அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு உரித்தான 2020 ஒக்டோபர் 16 ஆம் திகதிய நிதி அமைச்சின் அவதானிப்பின் படி இவ் விஞ்ஞாபனத்தில் இணைக்கப்பட்டிருந்த காணிகள் வணிக நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுவதாயின், அதன் மூலம் உழைக்கப்படும் வருமானத்தில் நகர அபிவிருத்தி அதிகாரசபையால் குறித்த காணி அபிவிருத்தி செய்யப்படுகையிலும் கையேற்கப்படும் போதும் ஏற்கப்பட்ட செலவினத்தைக் குறைத்துக் கொண்டதை அடுத்துள்ள பெறுமதி திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் அதிகாரசபை இதுவரையில் ஏற்ற வணிக நடவடிக்கைக்காகப் பயன்படுத்திக்கொள்ள இயலாதிருந்தது.

**டிரான்ஸ்வர்க் சதுக்கக் காணி**

கொழும்பு கோட்டை டிரான்ஸ்வர்க் சதுக்கக் காணி ரூபா 4,999.71 மில்லியனிற்கு உள்நாட்டில் நிறுவப்பட்ட வெளிநாட்டுக் கம்பனி ஒன்றிற்கு கலப்பு அபிவிருத்திச் செயற்திட்டமொன்றைச் செயற்படுத்துவதற்காக 04 குத்தகை உடன்படிக்கைகளின் மூலம் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 2024 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரை இச் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிராததுடன் செயற்திட்டத்தின் முதற் கட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட முழுமையான 81 மாடிகளைக் கொண்ட கட்டிடத்தில் 60 மாடிகளுக்காக மாத்திரம் கட்டிட வார்ப்புரு மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இத் தாமதம் காரணமாக மீள உடன்படிக்கையிடப்பட்ட 2018 யூலை 04 ஆம் திகதிய சந்தைப் பெறுமதியும் முன்னைய குத்தகைப் பெறுமதிக்கும் இடையேயான வேறுபாடு ரூபா 1,290.04 மில்லியன் இச் செயற்திட்டம்

பூர்த்திசெய்யப்பட்டிராததன் காரணமாக இது வரையிலும் அறவிடப்படுவதற்கு முடியாதிருந்தது.

**காணி நட்டஈட்டுக் கொடுப்பனவு மற்றும் பயன்பாட்டிற்கு எடுத்தல்**

அதிகாரசபை 1981 ஆம் ஆண்டு முதல் கையேற்கப்பட்டிருந்த சில காணிகளிற்காக இதுவரையிலும் நட்டஈட்டை செலுத்தியிராததுடன் 2024 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் செலுத்தப்பட வேண்டிய நட்டஈட்டுத் தொகையின் கூட்டுமொத்தம் ரூபா 26,106 மில்லியனாகக் காணப்பட்டது. மேலும், அதிகாரசபையால் நிதி அமைச்சின் கொம்ரோலர் ஜெனரல் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த அதிகாரசபைக் காணி தொடர்பான தகவல்களின் படி, அதிகாரசபையால் 1981 முதல் 2021 வரையான காலப்பகுதியின் போது கையேற்கப்பட்டிருந்த 1,908 ஏக்கர் அளவிலான காணி இது வரையில் எந்தவித செயற்பாட்டிற்கும் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

## தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை

**மாதிரிக் கிராமச் செயற்திட்டம்**

2015 – 2019 ஆம் ஆண்டுகளின் போது அதிகாரசபையால் நிர்மாணிப்புகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த மாதிரிக் கிராமச் செயற்திட்டங்களில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட 2150 கிராமங்களின் கீழ் 39815 வீடுகள் நிர்மாணிக்கப்பட வேண்டிய நிலையில் இருந்தது. இவ் வீடுகளின் பணிகள் பூர்த்தி செய்யப்படுவதற்காக திறைசேரியிடம் இருந்து ரூபா 220 மில்லியன் தொகை 2023 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்ததுடன் இதில் 681 வீடுகள் அளவிலான நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. 2017 – 2019 ஆம் ஆண்டுகளின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த இந்திய வீட்டு உதவித் திட்டத்தின கீழ் 04 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் நாடெங்கிலும் 25 கிராமங்களில் 600 வீடுகள் நிர்மாணிக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தன. 2023 ஆம் ஆண்டின் போது இந் நிர்மாணிப்புகள் பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் இறுதியில் இதில் 81 சதவீதமான அதாவது 486 வீடுகள் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. மேலும், இச் செயற்திட்டத்தின் கீழ் 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 103 மில்லியன் செலவில் 143 புதிய வீடுகள் நிர்மாணிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 6.38 மில்லியன் செலவில் 29 வீடுகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த கிராம சக்தி தென்மாகாண கட்டம் I செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 2023 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய செயற்திட்டமான போதிலும் ஆண்டின் இறுதி வரையிலும் அதன் முன்னேற்றம் 20 சதவீதத்தில் மாத்திரம் காணப்பட்டது. இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2023 ஆம் ஆண்டில் 499 வீடுகள் நிர்மாணிக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்ததுடன்

ஆண்டின் போது ரூபா 9.63 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் 02 வீடுகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. இவ்வாறே, கிராம சக்தி தென்மாகாண கட்டம் II செயற்திட்டத்தின் கீழ் 2023 ஆம் ஆண்டில் 595 வீடுகள் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 23 சதவீதம் மாத்திரமே பூர்த் தி செய்யப்பட்டிருந்தன. மேலும் கிராம சக்தி வட மாகாண செயற்திட்டத்தின் கீழ் 2023 ஆம் ஆண்டில் 511 வீடுகள் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 32 வீடுகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

**அரச தனியார் முதலீட்டுச் செயற்திட்டம்**

அதிகாரசபை தனியார் முதலீட்டாளர்களுடன் இணைந்து 2013 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த கவிரத்ன ரெஸிடன்ஸ், ஹன்தான துனுமடலாவ விலாஸ், குண்டசாலை ஹயிடஸ் பார்க், யக்கல சியனே நேசர் பார்க், ஹன்தான ரெஸிடன்ஸிஸ், மவுன்ட் கிளிபர்ட் எனும் வீடமைப்புச் செயற்திட்டங்களின் நிர்மாண வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. பத்து வருடங்கள் கடந்திருந்த போதிலும் அச் செயற்திட்டங்கள் மீள செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**கடைகள் உப குத்தகைக்கு வழங்கப்படுதல்**

சொயிசாபுர காரியாலயத்திற்கு உரித்தான குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த 22 கடைகள் இருந்த போதிலும் இவற்றில் 13 குத்தகையாட்கள் அல்லாத வேறு தரப்பினருக்கு குத்தகையாளரால் உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக அதிகாரசபை அறிந்திருந்த போதிலும் எந்தவித நடவடிக்கைகளும் அதிகாரசபையால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 02 கடைகள் (இல. 1,2,3) மொறட்டுவை கூட்டுறவிற்கு 1999 மார்ச் 01 ஆம் திகதி முதல் ரூபா 195 படியான குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் வாடகைப் பெறுமதி மதிப்பிடப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டு வாடகைப் பெறுமதி ஒன்றை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பால் சபை ஒன்றை நடாத்துவதற்காக 1998 சனவரி 01 முதல் மாதாந்த வாடகை ரூபா 65 படி வழங்கப்பட்டிருந்த ஓர் கடைக்கு 2023 நவம்பர் 10 ஆம் திகதி வரை 11 வருடங்களும் 07 மாதங்களான காலப்பகுதிக்காக வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம்

**தேசிய பௌதீக திட்டத்தைத் தயாரித்தல்**

திணைக்களத்தால் தேசிய பௌதீக திட்டத்தைத் தயாரித்து இதற்குத் தேவையான திருத்தங்களை நாளதுவரையாக மேற்கொள்வதற்கும் வலய மற்றும் நகர பௌதீகத் திட்டமும் தயாரிக்கப்பட வேண்டும். இதற்காக நாட்டின் பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிபுணர்களாலான ஓர் குழுவும் போதியளவான அளவு

வடிவமைப்பாளர்களைக் கொண்ட ஓர் பதவியணியும் இருத்தல் வேண்டும். எனினும், திணைக்களத்தில் அப் பதவிக்காக நிபுணத்துவ அறிவைக் கொண்ட உத்தியோகத்தர்கள் போதியளவு இன்மை அவதானிக்கப்பட்டது. தேசிய பௌதீக திட்டமிடத்தை ஸ்தாபிப்பதற்கும் செயற்படுத்துவதற்கும் ஏனைய அரச நிறுவனங்களில் நிபுணத்துவப் பங்களிப்பைப் பெறத்தக்க வகையில் 1946 இன் 13 ஆம் இலக்க நகர மற்றும் கிராமிய உற்பத்திக் கட்டளைச் சட்டம் 2000 இன் 49 ஆம் இலக்க நகர ஆக்க திருத்தத்தினூடாக தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டு 11 வருடங்களுக்கு மேலான காலம் கடந்திருந்த போதிலும் தேசிய பௌதீக திட்டத்தைத் தயாரித்து ஏனைய வலய மற்றும் நகர திட்டங்கள் நாளதுவரையாகத் தயாரித்து செயற்படுத்தப்படுவதற்கு இயலாதிருந்தது.

**பிரதேச பௌதீகத் திட்டங்கள்**

2023 ஆம் ஆண்டின் போது மத்திய, ஊவா, கிழக்கு எனும் 3 மாகாணங்களுக்காக பிரதேச பௌதீகத் திட்டங்கள் தயாரிக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் இதில் எந்தத் திட்டத்தினதும் பணிகள் பூர்த்தியடைந்திராததுடன் மத்திய மாகாணத்தின் உணர்திறனான சூழலிற்காக அறிவுறுத்தல் தொகுப்பைத் தயாரிப்பதற்காகத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இதனையும் மேற்கொள்ள இயலாது போயிற்று. இதன் காரணத்தால் திட்டம் எதுவும் இன்றி பொருத்தமற்ற நிர்மாணிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை மற்றும் பொது வசதிகளை முறையான வகையில் வழங்கியிராமை போன்ற காரணங்களால் சுற்றாடல் பிரச்சனைகள் ஏற்பட்டிருந்தன.

## கூட்டாட்சி ஆதன முகாமைத்துவ அதிகாரசபை

**கூட்டாட்சி முகாமைத்துவச் சான்றிதழைப் பெற்றிராமை**

1973 இன் 11 ஆம் இலக்க பிணைக்கப்பட்ட வீட்டு உரிமைச் சட்டத்தின் 5(2) ஆம் பிரிவின் பிரகாரம் சான்றிதழைப்பெற்றிராத ஆதனங்களில் நபர் ஒருவர் குடியமர்த்தப்படலாகாது. எனினும், 2023 ஆம் ஆண்டின் இறுதியில் நகர அபிவிருத்தி அதிகாரசபையால் நிர்மாணிக்கப்பட்டிருந்த 21 கூட்டாட்சி ஆதனங்களுக்காக இறுதிச் சான்றிதழ் பெறப்பட்டிராததுடன் 12,734 குடும்பங்கள் அவ் அடுக்குமாடிகளில் குடியமர்த்தப்பட்டிருந்தனர். கூட்டாட்சி முகாமைத்துவச் சான்றிதழ் பெறப்பட்டிராததன் காரணமாக வீடமைப்புத் தொகுதிகளின் முகாமைத்துவ சபை ஸ்தாபிக்கப்பட இயலாதிருந்ததுடன் பராமரிப்பு நடவடிக்கைகள் முறைப்படி மேற்கொள்ள இயலாதிருந்ததுடன் வீட்டு உரிமையாளர்களுக்கு உறுதியை வழங்கவும் இயலாதிருந்தது. மேலும் இக் கூட்டாட்சி முகாமைத்துவ ஆதனங்களில் பேணப்பட வேண்டிய பொது வசதிகள்

மற்றும் பிணைப்பு வீட்டு உரிமைகள், சட்டத்தின் படி ஆதன உரிமையாளர்களால் நடவடிக்கை எடுக்கப்படாமை தொடர்பாக அதிகாரசபை எந்தவித நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை. இதன் படி, அதிகாரசபை தனது பொறுப்பில் இருந்து தவறியிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

**முகாமைத்துவ கூட்டமைப்பு**

முகாமைத்துவ கூட்டமைப்பால் வருடாந்தம் பொதுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டியதுடன் முகாமைத்துவ கூட்டமைப்பின் கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த கணக்குகளின் பிரதிகள் அதிகாரசபைக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறெனினும், அதிகாரசபையின் பதிவுசெய்யப்பட்ட 1014 முகாமைத்துவ கூட்டமைப்புகளில் 586 பதிவு செய்யப்பட்ட நாள் முதல் வருடாந்தக் கணக்குகளைச் சமர்ப்பித்திராததுடன் எஞ்சிய 428 கூட்டமைப்புகளில் 403 நடைமுறையாண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த கணக்குகளை அதிகாரசபைக்குச் சமர்ப்பித்திருக்கவில்லை. மேலும், கூட்டாட்சி வரைபடத்தை பதிவு செய்து 3 மாதங்களுக்குள் முகாமைத்துவக் கூட்டமைப்பை அமைக்க வேண்டிய போதிலும் 2022 – 2023 காலப்பகுதியின் போது பதிவு செய்யப்பட்ட 39 ஆதனங்கள் தொடர்பாக முகாமைத்துவக் கூட்டமைப்புகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## நகர்ப்புறக் குடியிருப்பு மேம்பாட்டு அதிகாரசபை

**வீடமைப்புத் திட்டங்கள் அமைந்துள்ள காணிகளைக் கையேற்காமை**

அதிகாரசபையால் 512 வீடுகளுடனான நிர்மாணிப்புகள் பூர்த்திசெய்யப்பட்ட 03 வீடமைப்புத் திட்டங்களும் நிர்மாணிக்கப்பட்டு வரும் வீடமைப்புத் திட்டம் ஒன்று அமைந்துள்ள 2.32 ஹெக்டேயர் காணிகள் உரிய நிறுவனங்களிடம் இருந்து கையேற்கப்படுவதற்கு 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் தவறியிருந்தது. இதன் காரணத்தால் நிர்மாணிக்கப்பட்டு உரிமை ஒப்படைக்கப்பட்டுள்ள வீட்டு உரிமையாளர்களுக்கு உறுதிகளை வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக வீடமைப்புத் திட்டங்களின் முகாமைத்துவக் கூட்டமைப்பு ஸ்தாபித்து வீடுகளின் பொறுப்பை ஒப்படைக்க இயலாதிருந்தது.

**அதிகாரசபை உத்தியோகத்தர்களுக்கு வீடுகளை வழங்குதல்**

அதிகாரசபையால் அமைச்சரவைத் தீர்மான இல. MUDRH/2020/CP/55 இற்கு முரணாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தில் அதிகாரசபை உத்தியோகத்தர்களுக்கு வீடுகளை வழங்கும் சந்தர்ப்பத்தில் வீடுகளின் விற்பனை விலை தீர்மானிக்கப்படுகையில், அறவிடப்படும் 20 சதவீத சேவைக் கட்டணம் அறவிடப்படாது விடுவதற்கும் வீட்டின் விற்பனை விலையாக அரசாங்கத்தின் மதிப்பீட்டை மாத்திரம் அறவிட்டு அக் கிரயத்தை 25 ஆண்டு காலத்திற்கு 2 சதவீத

இலகு தவணை வட்டி வீதத்தின் அடிப்படையில் செலுத்தப்படுவதற்காக இலகுக் கொடுப்பனவு முறை ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதன் படி, மீளாய்வாண்டின் இறுதியில் அதிகாரசபை உத்தியோகத்தர்களுக்கு 22 வீடுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அமைச்சரவைத் தீர்மானத்திற்கு முரணான வகையில் செயற்பட்டமையால் அரசாங்கத்திற்குக் கிடைக்கப்பெற்றிராத ரூபா 18.96 மில்லியனாகி இருந்தது.

**மீனவர்களுக்கு அடுக்குமாடி வீடுகள் வேறு தரப்பினருக்கு வழங்கப்படுதல்**

அதிகாரசபையால் மீன்பிடி மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட அங்குலான அடுக்குமாடி வீடமைப்பின் 288 வீடுகளில் ரூபா 62.87 பெறுமதியான 53 வீடுகள் நிதி அறவிடப்படாது இலவசக் கொடுப்பனவுப் பத்திரத்தின் மூலம் 2016 செப்தெம்பர் 26 ஆம் திகதி முதல் 2019 பெப்ரவரி 12 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் சினிமாக் கலைஞர்களுக்கும் விளையாட்டு வீரர்களுக்கும் உரித்து வழங்கப்பட்டிருந்தது. பின்னர் அதாவது 2019 செப்தெம்பர் 18 ஆம் திகதிய அமப/அங்க/19/2761/122/085 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் படி அவ் வீடுகளுக்காக நியாயமான விலையை நலன்பெறுனர்களிடம் இருந்து அறவிட்டுக்கொள்வதற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதிகாரசபையால் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் எவ்வித தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே, சட்டமா அதிபரின் 2022 திசெம்பர் 04 ஆம் திகதிய கடித அறிவுறுத்தல்களின் படி 32 வீடுகளின் இலவசக் கொடுப்பனவு இரத்துச் செய்யப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**நட்டத்தை அறவிடுவதற்காக உரிய நபர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிராமை**

வரையறுக்கப்பட்ட ரியல் எஸ்டேட் எக்ஸ்சேன்ஜ் (தனியார்) கம்பனி அதிகாரசபைக்கு கையேற்கப்படுகையில் நேர்ந்திருந்த ரூபா 47.75 மில்லியன் நிதி மோசடிக்கு உரித்தாக சட்டமா அதிபரால் 2021 ஒக்டோபர் 28 ஆம் திகதி நட்டத்தை அறவிடுவதற்காக உரிய நபர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கான ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. வரிசை அமைச்சால் நிதிப் பிரமாணம் 103 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டு பொறுப்பான நபர்கள் மற்றும் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தைச் சரியாகக் கணிப்பிட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் வரிசை அமைச்சால் 2023 யூன் வரையிலும் இது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்

**விற்பனைப் பெறுமதி திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிராமை**

கூட்டுத்தாபனத்திற்கு இறையிலாதன அடிப்படையில் (Free Hold Basis) அரசாங்கத்தால் வழங்கப்பட்டிருந்த முத்துராஜவெலவில் உள்ள சுமார் 02 ஏக்கர் காணிக்காக அமப/19/2832/16/11 ஆம் இலக்க 2019 ஒக்டோபர் 29 ஆம்

திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, இதற்காக ஏற்கப்பட்ட அபிவிருத்திச் செலவினங்கள் அறவிடப்பட்டு எஞ்சிய தொகை அரச திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. அக் காணி 2019 திசெம்பர் 17 ஆம் திகதி விற்பனை செய்யப்பட்டு ரூபா 272.62 மில்லியன் பெறப்பட்டிருந்த போதிலும் ஏற்கப்பட்ட அபிவிருத்திச் செலவினமான ரூபா 21.02 மில்லியன் கழிக்கப்பட்டு அரச திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 251.60 தொகை 2023 நவம்பர் வரையிலும் செலவு வைக்கப்பட்டிராததுடன் அப் பொறுப்புகள் இனங்காணப்பட்டு அதற்காக நிதிக்கூற்றுக்களில் ஒதுக்கங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**முறையான அங்கீகாரமும் ஒதுக்கீடும் இன்றி செயற்திட்டத்தைச் செயற்படுத்தல்**

அத்துருகிரிய கொத்தலாவல அதிவேக வீதி பரிமாற்றத்திற்கு அருகாமையில் வரிசைப் பூங்கா ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வடிகால்களை மேம்படுத்துவதற்கான செயற்திட்டம், 2020 திசெம்பர் 15 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும், இதற்காக தேவையான ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டு வரிசை அமைச்சால் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருக்கவில்லை. அப்போதைய கூட்டுத்தாபன தலைவருக்கும் சனாதிபதி அவர்களுக்கும் இடையே நடைபெற்ற கலந்துரையாடலின் போது சனாதிபதி அவர்களால் வாய்மொழி மூலமாக வழங்கப்பட்ட ஆலோசனைகளுக்கு அமைவாக இவ் ஒப்பந்தம் கூட்டுத்தாபனத்தால் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் செயற்திட்டத் தீர்மானத்திற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றிருக்கவில்லை. இவ்வாறே திறைசேரியிலிருந்து ஒதுக்கீட்டு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக கூட்டுத்தாபனம் முன்வைத்திருந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான அமைச்சரவைத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டவாறு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பரிந்துரைக்கமைவாக செயற்திட்டத் தீர்மானத்திற்காக விரிவான சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2023 ஆம் ஆண்டின் இறுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்த வேலைகளின் பெறுமதி ரூபா 193.3 மில்லியனானதுடன் உரிய பொறுப்புவாய்ந்தவர்களிடம் இருந்து அத் தொகையை அறவிட்டிராது நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைக் கணக்கில் சமூகப் பொறுப்பிற்கான செயற்பாட்டுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறே நிர்மாணிக்கப்பட்ட செயற்திட்டத்தை நடாத்திச்செல்வதற்காக கடுவெல மாநகர சபையிடம் ஒப்படைப்பதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்த காரணத்தால் கூட்டுத்தாபனத்திற்கு 2023 நவம்பர் வரை

ரூபா 3.81 மில்லியனளவில் பராமரிப்புச் செலவை ஏற்க நேர்ந்தது.

**முறையான உடன்படிக்கை ஏற்படுத்தப்படாது குத்தகைக்கு வழங்கப்படுதல்**

கூட்டுத்தாபனத்திற்குரித்தான முத்துராஜவெலவில் அமைந்துள்ள 22 ஏக்கர் 02 ரூட் காணியும் 37.14 பேர்ச் காணிப் பகுதியும் 55900 சதுர அடியிலான கட்டிடமும் ரூபா 2,195.79 மில்லியனுக்கு குத்தகைக்கு தனியார் கம்பனி ஒன்றிற்கு 50 வருட நீண்ட காலக் குத்தகைக்காக வழங்கப்படுவதற்காக 2021 யூன் 02 ஆம் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் இதற்காக முற்பணமாக ரூபா 500 மில்லியன் பெறப்பட்டிருந்த போதிலும் எஞ்சிய தொகையான ரூபா 1,695.79 மில்லியன் தொகையைப் பெறுவதற்கும் முறையான குத்தகை உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்துவதற்கும் 2023 திசெம்பர் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**அத்துமீறிய காணி மீட்பு கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு**

1968 இன் 15 ஆம் இலக்க இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 2(ஆ) 1 ஆம் பிரிவின் படி நாடெங்கிலும் மாகாண மட்டத்தில் அமைந்துள்ள தாள் நிலக் காணிகள், தரிசு அல்லது சேற்றுக் காணிகளை இனங்கண்டு அத்துமீறிய காணி மீட்புக் கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பிற்கு இயலுமானவகையில் அவை வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு அதிகாரமளிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கூட்டுத்தாபனத்தால் அவ்வாறு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மாகாண எண்ணிக்கை 07 இற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. எல்லைகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பகுதிகளில் நேரும் அத்துமீறிய மீட்பு மற்றும் அத்துமீறிய குடியேற்றங்களைத் தடுப்பதற்கும் கூட்டுத்தாபனம் தவறியிருந்தது. இவ்வாறே, மேற்குறித்த 8 (அ) ஆம் பிரிவின் படி மீட்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் கையேற்கப்பட்ட காணிகள், கூட்டுத்தாபனத்தால் கட்டிட நிர்மாணிப்பிற்காகவும், கைத்தொழில், வணிக மற்றும் விவசாய நடவடிக்கைகளிற்காக மேம்படுத்தப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தால் அவ்வாறு 1995 ஆம் ஆண்டின் போது அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காகக் கையேற்கப்பட்ட முத்துராஜவெல மற்றும் முதுன் அல பகுதியின் 800 ஏக்கர்கள் அளவிலான காணி 2023 ஆம் ஆண்டின் இறுதியில் 25 வருட காலம் கடந்திருந்த போதிலும் இதில் 400 ஏக்கர்களான அதாவது 50 சதவீதமானவை மாத்திரமே மேம்படுத்தப்பட்டிருந்தன.

**நியாயமான காரணமின்றி செயற்திட்டம் இடைநிறுத்தப்படல்**

கடலிற்கு அப்பாலுள்ள கடல் மண் கியூபிக் மீட்டர் 04 மில்லியன் அகழ்வு, பாய்ச்சப்படுதல் மற் றும் கட்டுமானக் கைத்தொழிலுக்காக மண் வழங்கப்படுவதற்காக கூட்டுத்தாபனம் 2018 ஆம் ஆண்டின் போது வெளிநாட்டு தனியார் கம்பனி ஒன்றுடன் ஒப்பந்த உடன்படிக்கையில்

கைச்சாத்திட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கை பூர்த்தி செய்யப்படாத நிலையில் நியாயமான காரணமின்றியும் கூட்டுத்தாபனத்தினால் ஏற்கப்பட வேண்டிய நிதி இழப்புத் தொடர்பான மதிப்பீடும் கணிப்பிடப்படாது உயர் முகாமைத்துவத்தால் தமது விருப்பிற்கேற்ப 2020 ஏப்ரல் 10 ஆம் திகதி இச் செயற்திட்டம் இடைநிறுத்தப்பட்டிருந்தது. இவ் உடன்படிக்கை ஏற்படுத்தப்படுகையில் சட்டத் தேவைப்பாடுகள் குறித்து புரிந்துணர்வு உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்டிராததுடன் செயற்திட்டம் தொடர்பாகச் செலவிடப்படும் மேலதிக கிரயம், மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பணிகள் தொடர்பாக ஒப்பந்ததாரருக்கு முறையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிராமை, ஒப்பந்ததாரருடன் மேற்கொள்ளப்பட்ட எழுத்து மூல உடன்படிக்கை முடிவுற முன்னர் ஒப்பந்ததாரர் வேறொரு செயற்திட்டத்திற்கு விடுவிக்கப்படுவது போன்ற விடயங்கள் தொடர்பாக கூட்டுத்தாபனத்தால் கவனம் செலுத்தியிராமை கணக்காய்வின் போது சர்ச்சைக்குள்ளாகியது. இது தொடர்பாக பாதிப்புற்ற தரப்பினரால் தீர்விற்கு உட்பட்டிருந்ததுடன் அத் தீர்விற்கு உரியவகையில் வெளிநாட்டு தனியார் கம்பனிக்கு ரூபா 753.08 மில்லியன் தொகையும் இறுதிப் பற்றுச்சீட்டிற்கு உரித்தாக ரூபா 585.79 மில்லியன் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு பாரிய இழப்பீட்டுத் தொகை ஒன்றைச் செலுத்த நேர்ந்தமை கூட்டுத்தாபனத்தின் திரவத் தன்மைக்கு பாதகமான வகையில் தாக்கம் செலுத்தியமை அவதானிக்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர்களுக்கு எதிராக முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதற்கும் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**மதமுல்ல ஞாபகார்த்த நிலைய நிர்மாணிப்பு**

மதமுல்ல ஞாபகார்த்த நிலையத்தை நிர்மாணித்தமைக்காக அறவிடப்பட வேண்டியதாக நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் கணக்குகளில் காண்பிக்கப்பட்ட பெறுமதிக்கும் இடையேயான வேறுபாடு ரூபா 47.37 ஆகக் காணப்பட்டது. அச் செலவினம் செயற்திட்டத்திற்காக செலவிடப்படாத தொகையாக இனங்காணப்பட்டதன் காரணமாக இவ்வாறு மேலதிகமாகச் செலவிடப்பட்ட செலவினம் தொடர்பாக மேலதிக ஆய்விற்கு உட்படுத்தி இதற்காக பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிட்டுக்கொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் இதற்கு மாறாக நி.பி.113 இன் பிரகாரம் திறைசேரி அங்கீகாரம் பெறப்படாது 2021 யூன் 28 ஆம் திகதிய MRW/5404 ஆம் இலக்க பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி புத்தகங்களில் இருந்து பதிவழிக்கப்படுவதற்காக கூட்டுத்தாபனத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

# தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள்

மலையக சமூகத்தின் நிலையான அபிவிருத்தியை ஊக்குவிப்பதன் மூலம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தல், சமூக-பொருளாதார முன்னேற்றத்தை துரிதப்படுத்துதல் மற்றும் இலங்கை சமூகத்திற்கு தன்னிறைவான பெருமைமிக்க பங்களிப்பாளர்களாவதற்கு சமூக உறுப்பினர்களை வலுப்படுத்துதல் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள தோட்ட உட்கட்டமைப்பு பிரிவின் நோக்கானதுடன் இதற்காக பின்வரும் செயற்பணிகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

| | |
|---|---|
| **செயற்பணி** | அரச மற்றும் தனியார் பெருந்தோட்ட கம்னிகளில் பணிபுரியும் காணிகளற்ற மக்களுக்கு வீடுகளையும் உட்கட்டமைப்பையும் மேம்படுத்தும் நோக்கில் புதிய கிராமங்களையும் நகரங்களையும் உருவாக்குதல். |
| | தோட்டத் துறையில் அடிப்படை வசதிகள், வாழ்வாதார உருவாக்கம் மற்றும் சமூக அபிவிருத்திச் செயற்திட்டங்கள் உட்பட தேவைப்பாடுகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |
| | கிராமப்புற தோட்டத் துறைகளில் அடிப்படைக் கட்டமைப்புகளை மேம்படுத்துதல். |

## கணக்காய்வு அவதானிப்புகள்

### நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு – கிராமியத் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் பிரிவு

| | |
|---|---|
| **வாகன விபத்து நட்டங்கள்** | 2015 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை அமைச்சிற்கு சொந்தமான 08 வாகனங்களுக்கு 10 தடவைகள் நேர்ந்திருந்த விபத்துக்கள் தொடர்பான மதிப்பிடப்பட்ட நட்டத் தொகையான ரூபா 4.63 மில்லியனை அறவிடுவதற்காக கணக்காய்வுத் தினமான 2024 மார்ச் 05 ஆம் திகதி வரையிலும் அமைச்சிற்கு இயலாதிருந்தது. |
| **இந்திய வீட்டுத் திட்டம்** | இந்திய வீட்டுத்திட்டத்தின் (கட்டம் 01) கீழ் ரூ.100 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2023ஆம் ஆண்டில் 154 வீட்டுத் தொகுதிகளைப் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையில் பௌதீக இலக்கு 16 வீடுகள் மாத்திரமேயான அதாவது 10 சதவீத அளவிலான மிகக் குறைவான நிலையில் அடையப்பட்டிருந்தது. |
| **பாடசாலை வசதிகள் வழங்குதல்** | தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் துறைக்கு உரித்தாக தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளில் 2023 ஆம் ஆண்டில் 60 ஸ்மார்ட் வகுப்பறைகளை அமைப்பதற்காகவும், தற்போதுள்ள வகுப்பறைகளை ஸ்மார்ட் வகுப்பறைகளாகப் புதுப்பிப்பதற்குமாக ரூபா 155 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், குறித்த காலப்பகுதியின் போது எவ்வித பணமும் செலவிடப்பட்டிருக்கவில்லை. |

இதற்காக தேவையான பாடசாலைகளைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படவில்லை.

**தோட்ட மனிதவள அபிவிருத்தி அறக்கட்டளை மூலம் மேற்கொள்ளப்படும் செலவினம்**

அமைச்சின் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பிரிவினால் 2017, 2018 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் செயற்படுத்தப்பட்ட ரூபா 435.76 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதியான 19 வீடமைப்புத் திட்டங்களின் ஒப்பந்தக்காரர்களுக்குச் செலுத்தப்படுவதற்காக ரூபா 82.12 மில்லியன் தொகை முற்பணமாகவும் ரூபா 3.61 மில்லியன் தொகை முகாமைத்துவக் கட்டணமாகவும் தோட்ட மனித வள அபிவிருத்தி அறக்கட்டளைக்குச் செலுத்தப் பட்டிருந்தது. எவ்வாறாயினும், குறித்த செயற்திட்டங்கள் கைவிடப்பட்டு, இரத்து செய்யப்பட்டு, நிறுத்தப்பட்டிருந்தமையால் மீள அத் தொகை அமைச்சிற்குத் திருப்பி அனுப்பப்படாது தோட்ட மனிதவள அபிவிருத்தி அறக்கட்டளையின் வேறு செயற்திட்டச் செலவுகளுக்காக ரூபா 72.66 மில்லியன் தீர்க்கப் பட்டிருந்தது. இச் செயற்திட்டத்திற்காக செயலாற்றல் முறியின் மூலம் குறித்த ஒப்பந்ததாரர்களிடம் இருந்து பெறப்பட்டிராமையால் மேற்குறித்த நிலையில் அரசாங்கத்திற்கு நேர்ந்த நட்டத்தைத் தீர்த்துவைக்க இயலாதிருந்தது.

**நிர்மாணத்தில் ஏற்பட்ட தாமதம்**

பசுமைத் தங்க வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கண்டியில் உள்ள ரோத்ஸ்சைல்ட் தோட்டத்தில் 15 வீட்டுத் தொகுதிகளுக்கு ரூபா 3.36 மில்லியன் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் மொத்தத் தொகையும் செலவிடப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டம் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நுவரெலியா, ஹட்டன், கண்டி, காலி மற்றும் இரத்தினபுரி ஆகிய பகுதிகளில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த 211 வீட்டுத் தொகுதிகளிற்காக ரூபா 48.14 மில்லியன் செலவிடப் பட்டிருந்த போதிலும் 05 வருடங்கள் கடந்திருந்த போதிலும், முதல் கட்டப் பணிகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் மேலும் 298 வீடுகள் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 05 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் இதற்காக 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ரூபா 117.18 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், கட்டுமானப் பணிகள் நிறைவடைந்திருக்க வில்லை.

**புதிய வாழ்வு வீடமைப்புத் திட்டம்**

2021 ஆம் ஆண்டுகளின் போது புதிய வாழ்வு வீடமைப்புத் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட நுவரெலியா, ஹட்டன், கண்டி மற்றும் கேகாலை பகுதிகளில் 08 தோட்டங்களில் 157 வீட்டுத் தொகுதிகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 112.53 மில்லியன் மதிப்பீட்டுத் தொகையில் ரூபா 92.34 மில்லியன் அதாவது 82 சதவீதம் செலவிடப்பட்டு முதல் கட்டம் மாத்திரம் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. இவ்வாறே, 2020

ஆம் 2021 ஆம் ஆண்டுகளில் நிர்மாணிப்புகள் ஆரம்பிக்கப்பட்ட நுவரெலியா, ஹட்டன், கண்டி பகுதிகளில் 104 வீட்டுத் தொகுதிகள் 06 மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் இதற்காக ரூபா 45.58 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை 03 ஆண்டுகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் நிர்மாணப் பணிகள் நிறைவேற்றப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கவில்லை. 2020 ஆம் 2021 ஆம் ஆண்டுகளில் நிர்மாணிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த கேகாலை மற்றும் ஹட்டன் பகுதிகளில் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 173.24 மில்லியனான 56 வீட்டுத் தொகுதிகளின் நிர்மாணப் பணிகள் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**தோட்ட மனித வள அபிவிருத்தி அறக்கட்டளைக்கான கொடுப்பனவுகள்**

தோட்ட மனித அபிவிருத்தி அறக்கட்டளை மற்றும் சம்பந்தப்பட்ட சமூக அமைப்புடன் இணைந்து பணம் செலுத்தும் வீட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பான ஒப்பந்தத்தின் படி, வீட்டுத் திட்டம் 06 மாத காலத்திற்குள் பூர்த்திசெய்யப்பட்டு கையளிக்கப்பட வேண்டிய போதிலும் 2016 முதல் 2021 ரையான ஆண்டுகளின் போது ஆரம்பிக்கப்பட்ட 62 வீட்டுத் திட்டங்கள் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நிறைவடைந்திராததுடன் அச் செயற்திட்டங்களின் நிர்மாணிப்புக் கால எல்லை 19 மாதங்கள் முதல் 85 மாதங்கள் வரையான வீச்சில் காணப்பட்டது. அந்தச் செயற்திட்டங்களின் ஒப்பந்ததாரர்களுக்கான கொடுப்பன விற்காக ரூபா 846.84 மில்லியன் தொகையும் கண்காணிப்பு மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள் வதற்காக ரூபா 51.36 மில்லியன் தொகையும் தோட்ட மனித வள அபிவிருத்தி அறக்கட்டளைக்கு அமைச்சால் செலுத்தப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக பொருத்தமான ஒப்பந்ததாரர்களை தெரிவு செய்யாமை மற்றும் அமைச்சின் முறையான மேற்பார்வையின்மை இந்தத் தாமதத்திற்கு வழிவகுத்தன.

# நிர்மாணம் மற்றும் பொறியியல்

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு நிர்மாணக் கைத்தொழில் கணிசமான பணி ஒன்றை நிறைவேற்றுவதுடன் தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரங்களின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் போது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 7 சதவீதத்திற்கு அண்ணளவான பங்களிப்பைக் காண்பிக்கின்றது. நிர்மாணம் மற்றும் பொறியியல் துறைகளின் பிரதான மூலதன சொத்துக்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளைக் கட்டியொழுப்புவதாயின் ஏனைய பிரிவுகளையும் அபிவிருத்தியில் வலுவின் அடிப்படையில் ஆகும். எனினும் 2022 ஆம் ஆண்டின் போது இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையின் பிரகாரம் நிர்மாணத் துறையில் சேர்க்கப்பட்ட பெறுமதி 20.9 சதவீத மறைப் பெறுமதியாகக் காண்பித்து வீழ்ச்சியடைந்திருந்தது. இந்த திருப்திகரமற்ற நிலை தொற்றுநோய் நிலைமை, நிதி நெருக்கடி, பயிற்சி பெற்ற தொழில் வல்லுனர்களின் பற்றாக்குறை, பெறுகைகள் வழிகாட்டிகள் பின்பற்றப்படாமை, கட்டிடப் பொருட்கள் இறக்குமதி நிறுத்தப்பட்டமை, ஒப்பந்தகாரர்களுக்கு பணம் செலுத்துதல் தாமதமடைந்தமை மற்றும் நிர்மாண செயற்திட்டத்தின் கைவிடல்கள் பிரதானமாக இதற்குத் தாக்கமளித்திருந்தது. அதனால் நிர்மாணம் மற்றும் பொறியியல் துறையில் ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட நேரடி மற்றும் மறைமுக தொழில் வாய்ப்புக்கள் இழக்கப்பட்டிருந்தது.

நிர்மாணம் மற்றும் பொறியியல் துறைகள் தொடர்புடைய நிறுவனங்களான இலங்கை பொறியியல் கூட்டுத்தாபனம், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் கீழும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை, கட்டிடத் திணைக்களம், அரசாங்க தொழிலற்சாலைகள் திணைக்களம், வ/ப லங்கா இலங்கை கட்டிட பொருட்கள் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை நிர்மாண கைத்தொழில் சபை என்ற 05 நிறுவனங்கள் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழும் மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம் மற்றும் மத்திய பொறியியல் சேவை (தனியார் கம்பனி), நீர்ப்பாசன அமைச்சின் கீழும் அரச நிர்மாணம் மற்றும் நிர்மாண கூட்டுத்தாபனம் போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் கீழும் நிர்மாண பாதுகாப்பு நிதியம் திறைசேரி பிரதி செயலாளரின் கீழும் 2023 ஆம் ஆண்டின் போது செயற்பாட்டில் காணப்பட்டது.

## நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை

**பணிப்பொறுப்புக்கள்**

இலங்கையில் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திக்காக பல்வேறு திட்டங்களை நிர்மாணித்தல் தொடர்பாக தேசிய ஆலோசனை சபையை ஸ்தாபித்தல், நிர்மாணக் கைத்தொழில் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல், பதிவு செய்தல், முறைமைப்படுத்தல் மற்றும் நியமம் இடல்.

நிர்மாண ஒப்பந்தகாரர்களை பதிவு செய்தல் மற்றும் தரம் இடல்

**நிர்மாணத் துறையில் ஈடுபட்டிருக்கின்ற கலைஞர்களுக்காக கலைஞர் அடையாள அட்டை வழங்குதல்.**

நிர்மாணத் துறையில் ஈடுபட்டிருக்கின்ற கலைஞர்களுக்காக கலைஞர் அடையாள அட்டை வழங்குவதற்காக 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது பொதுத் திறைசேரியிலிருந்து அதிகார சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 35.7 மில்லியன் தொகையில் ரூபா 13.82 மில்லியன் தொகை 2024 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் இலக்கிடப்பட்ட பணிகளுக்காக ஈடுபடுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்து. அதற்குரிய தகவல்கள்

தொழில்நுட்ப முறைமை ஒன்றை ஸ்தாபிப்பதற்காக 2022 மார்ச் 11 ஆம் திகதி இலங்கை டெலிக்கொம் நிறுவனம் ரூபா 3.35 மில்லியன் ஒப்பந்தம் ஒன்று வழங்கப்பட்டிருந்ததுடன் அதை 21 நாட்களில் பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும் 2024 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் திறன் தொழில்நுட்பவியலாளர்களுக்கான அடையாள அட்டையை விநியோகிப்பதற்கு முன் அதற்குரிய விதிகள் மற்றும் கட்டணங்கள் வர்த்தமாணியில் பிரசுரிக்க வேண்டியிருந்த போதிலும் அதிகார சபையால் அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் கட்டணம் அறவிடப்பட்டு 2023 யூலை 31 ஆம் திகதி வரையில் 228 அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டிருந்தது.

**சட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படாமை**

2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தின் 33 ஆம் பிரிவின் பிரகாரம் வெளிநாட்டு ஆலோசனையாளர்களைப் பதிவு செய்வதற்காக அதிகார சபையால் செயல் நடைமுறை ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் சட்டத்தின் 43 மற்றும் 44 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நிர்மாணப் பொருட்கள் இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்கள், துணைப் பாகங்கள் வழங்குபவர்களின் பெயர் வழிக்கோவையொன்று மற்றம் தற்போது காணப்படுகின்ற கனரக நிர்மாண இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் பெயர் வழிக்கோவை ஒன்றை பேணிச் செல்ல வேண்டியிருந்த போதிலும் அதிகார சபையால் இதுவரை அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வி ஆவணங்கள் கால ரீதியில் திருத்தாமை**

சட்டத்தின் 46 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வி ஆவணங்களில் அதாவது பெறுகை வேலைகள் (SBD-01) மற்றும் பெறுகை வேலைகளின் சிறு (SBD-03) கால ரீதியில் திருத்தப்பட்டிருக்கவில்லை.

**பிணக்குகளைத் தீர்த்தல்**

சட்டத்தின் 51(2) ஆம் பிரிவின் படி தொழில் நுட்ப ரீதியான பிரச்சனைகளைத் தீர்க்கும் செயற்பாட்டு நடைமுறை ஒன்று ஒழுங்குபடுத்த வேண்டியிருந்த போதிலும் அதிகார சபையால் உரிய செயல் நடைமுறை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் சட்டத்தின் 53 ஆம் பிரிவின் படி முறைப்பாட்டு சபையும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

**மனிதவள முகாமைத்துவம்**

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் அதிகார சபையின் மனிதவள முகாமைத்துவத்தில் குறிப்பாக தென்படுகின்ற பிரச்சனைகளான நிலைமைகள் காணப்பட்டதன் காரணமாக உத்தியோகத்தர்கள் சேவையிலிருந்து அகற்றுதல், கட்டாய விடுமுறையில் அனுப்புதல், கேட்டு விலகுதல், அதிகார

ஸ்வீக்கு எதிராக வழக்குத் தொடருதல், இழப்பீடு செலுத்துதலின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதி வரையில் சட்டச் செலவினம் ரூபா 7.79 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. மேலும் தனியார் வழக்கு நடவடிக்கைகளுக்காக பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் ரூபா 0.34 மில்லியன் சட்டத்தரணி கட்டணமும் செலுத்தப்பட்டிருந்தது.

## கட்டிடங்கள் திணைக்களம்

**பணிப் பொறுப்புக்கள்**

அரசாங்கம் திணைக்களம் மற்றும் அரச நிறுவனங்களின் செலவின தலைப்பில் வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டின் பிரகாரம் கட்டிடங்களைத் திட்டமிடல், மதிப்பீடுகளைத் தயாரித்தல்.

கட்டிட கட்டண பட்டோலை தயாரித்து நாளது வரையாகப் பேணிச் செல்லல்.

நிர்மாணம் மற்றும் உரிய வசதிகளை வழங்குதல், கட்டிடத்திற்காக ஆலோசனை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ சேவையினை வழங்குதல், அரசாங்கத்தின் கட்டிடங்களின் பராமரிப்பு, புதிதாக சேர்த்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல், நகர அபிவிருத்தி அதிகார சபையின் பொதுவான பிரமாணங்களின் பிரகாரம் கட்டிட தர அறிக்கையை சான்றுறுதிப்படுத்துதல்.

**ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு**

நிதிப்பிரமாணம் 208 இன் பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் அவற்றின் நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் கட்டிடத் திணைக்களத்திற்கு 2023 ஆம் ஆண்டின் போது கையளிக்கப்பட்ட ரூபா 1,335.89 மில்லியன் ஆன நிதி ஏற்பாட்டில் ரூபா 691.79 மில்லியன் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அது மொத்த நிதியேற்பாட்டில் 52 சதவீதமாகும். இதில் நிதியேற்பாடு முழுமையாகப் பயன்படுத்தப்படாத 08 செயற்திட்டங்கள் காணப்படுவதுடன் அப்பெறுமதி ரூபா 310.93 மில்லியன் ஆகும்.

**ஆதனங்களை பதிவு செய்வதற்காக பதுகாப்பு சான்றிதழ் விநியோகித்தல்**

இணைந்த வீட்டு உரித்து (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரகாரம் கூட்டு ஆதனங்களைப் பதிவு செய்வதற்காக பாதுகாப்பு சான்றிதழ்களை உறுதிப்படுத்தி கட்டிடத்

திணைக்களத்தின் பணிப்பாளர் நாயத்தின் சான்றிதழ் ஒன்று அந்த கூட்டு ஆதனங்களைப் பதிவு செய்கின்ற சந்தர்ப்பத்தின் போது விநியோகிக்கப்படல் வேண்டும். திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி 2024 யூலை 02 ஆம் திகதி வரை இவ்வாறு 2,352 வீட்டு ஆதனங்களுக்குரிய கோரிக்கைகள் கட்டிடத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் இதுவரை 1,017 சான்றிதழ் மட்டுமே வழங்கப்பட்டிருந்தது. இந்த சட்டம் 2018 ஆகஸ்ட் 18 ஆம் திகதி முதல் ஐந்து வருட கால எல்லைக்கா மாத்திரம் அமுல்படுத்தப்பட்டமையால் 2023 ஆகஸ்ட் 18 ஆம் திகதி வரையில் அந்தக் கால எல்லை முடிவடைந்திருந்த போதிலும் பாதுகாப்பு சான்றிதழ் விநியோகிக்காமையின் காரணமாக உரித்துறுதியை வழங்குவதற்கு முடியாதிருந்தது.

**செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

பாதீட்டில் ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடு கட்டிடங்கள் திணைக்களத்திற்குக் கையளிக்கப்பட்டு நீண்ட காலம் கடந்திருந்த போதிலும் ஒப்பந்தத்தின் கீழான பணிகள் பூர்த்தி செய்யாமையின் காரணமாக தற்போதைய பொருளாதார நெருக்கடியின் இடையே திறைசேரியிலிருந்து பணம் வழங்கப்படாமையின் அடிப்படையில் குருந்துவத்த பொலிஸ் நிலையத்தில் தனித்தனியாக வீடுகளை நிர்மாணித்தல் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் மட்டக்களப்பு அலுவலகத்தின் மின் பிறப்பாக்கி இயந்திரம் மற்றும் வளிப்பதனாக்கி இயந்திரங்களை வழங்கிப் பொருத்துதல், வெல்பொத்துவெவ கொபைகனே மத்திய மருந்தகங்களை நிர்மாணித்தல், வரக்காப்பொல தொழில் அலுவலகம், மகா ஓயா சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலக கட்டிட நிர்மாணம் - 04 கட்டங்களின் செயற்திட்டங்கள் கைவிடப்பட்டிருந்தது.

**இடைநடுவில் நிறுத்தப்பட்ட செயற்திட்டங்கள்**

அரச மற்றும் பகுதி அரச நிறுவனங்களினால் கட்டிடத் திணைக்களத்திற்கு கடந்த 06 வருட காலத்தில் கையளிக்கப்பட்ட ரூபா 659 மில்லியனை விஞ்சிய 23 நிர்மாண ஒப்பந்தங்கள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது.

**தொழில்நுட்ப உபகரணங்களின் பயன்பாட்டின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாற்றங்கள் மேற்கொள்ளப்படாமை**

கட்டிட கட்டண பட்டோலை (BSR) 2023 ஆம் ஆண்டின் கட்டிட கட்டண பட்டோலை நாளது வரையாகத் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் பிரிவுகளுக்குரிய மற்றும் பல்வேறு வகை அளவுகளுக்குத் தேவையான ஊழியர்கள், மூலப்பொருட்கள் போன்ற ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட

(Norms) 1988 ஆம் ஆண்டின் பின்னர் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் நிர்மாண செயற்திட்டத்திற்காக அளவிடல் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டிருக்கும் போது தற்போது அபிவிருத்தி செய்யப்பட்ட தொழில்நுட்ப உபகரணங்கள், இயந்திர பொறிமுறைகள் ஈடுபடுத்துவதால் ஊழியத்தில் ஏற்படுகின்ற மாற்றங்கள் மற்றும் சம்பிரதாய சீமெந்து, செங்கல் மண்ணிற்குப் பதிலாக பயன்படுத்தப்படுகின்ற மாற்று மூலப்பொருட்களின் காரணமாக ஏற்படுகின்ற ஏற்பாடுகளுடனும் இந்த ஏற்றுக்கொள்ளல்கள் மாற்றப்படாமையின் காரணமாக அவை தற்போது ஈடுபடுத்துதல் பொருத்தமற்றதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களம்

**பணிப்பொறுப்புக்கள்**

திறைசேரி மேற்கொள்ளப்பட்ட வேலை முற்பணக் கணக்கின் கீழ் மற்றும் களஞ்சிய முற்பணக் கணக்கின் கீழ் இயந்திரப் பொறியியலாளர் துளைகளின் உற்பத்தி, நிர்மாணம், பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு, இயந்திர பொறியியளார் ஆலோசனை சேவை வழங்குதல்.

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிநிலைமைக் கூற்று தொடர்பான நிலைமைக் கூற்றின் பிரகாரம் 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 36.94 மில்லியன் ஆக இருந்த போதிலும் பதிவளிப்பதற்காக அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன் குழு அறிக்கையின் பிரகாரம் ரூபா 4.05 மில்லியன் மாத்திரம் ஆகும். அவ்வாறு இருக்கும் போது நிதிக்கூற்றுக்களில் 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளுக்குரிய மேற்குறிப்பிட்ட ரூபா 36.94 மில்லியன் ஆன மொத்த மீதியும் பதிவழிக்கப்பட்டிருந்தது.

**செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்**

தபால் திணைக்களத்தின் போக்குவரத்துப் பிரிவிற்காக தற்காலிகமாக கட்டிடம் ஒன்றைத் தயாரிப்பதற்கு 2020 மார்ச் 06 ஆம் திகதி வரையில் கூட்டுமொத்தமாக ரூபா 22.20 மில்லியன் தபால் திணைக்களத்திலிருந்து அறவிடப்பட்டிருந்தது. எனினும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் செயற்திட்டத்தின் செயல் முன்னேற்றம் 10 சதவீதம் மாத்திரம் ஆகும். 05 வருடங்கள் கடந்திருந்த போதிலும் செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கோ அல்லது பெறப்பட்ட பணத்தை மீள செலுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள்**

கட்டிட நிர்மாண செயற்திட்டத்தை நிறைவேற்றுதல் திணைக்களத்தின் பணிப்பொறுப்பாக இல்லாதிருந்த போதிலும்

வெகுசன ஊடகத் துறை அமைச்சின் பழைய மேடைத் தொகுதியை நவீன மயப்படுத்தும் செயற்திட்டத்தை நிறைவேற்றும் ஒப்பந்தம் கையேற்கப்பட்டு ரூபா 16.51 மில்லியன் (வட் இன்றி) ஒப்பந்தப் பெறுமதியில் வெளி ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

ஒப்பந்தகாரக் கம்பனியின் விலை வீதம் மற்றும் பொறியிலாளர் மதிப்பீட்டுக்கு இடையே 08 சதவீதம் முதல் 409 சதவீதம் வரையிலான முரண்கள் காணப்பட்ட போதிலும் இது தொடர்பாக பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.9.11 இன் பிரகாரம் அதற்காக ஒப்பந்தகாரரிடமிருந்து காரண விளக்கம் பெற்றுக்கொள்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. எனினும் இவ்வாறு நவீன மயப்படுத்தப்பட்ட வெகுசன ஊடாக அமைச்சின் கட்டடம் மழை நாட்களில் நீரினால் இருந்தமையால் தற்போது பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டது.

## வ/ப இலங்கை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம்

1970 இன் 33 ஆம் இலக்க “இலங்கை அரச கூட்டுத்தாபன சட்டம்” இன் கீழ் 1971 ஆம் ஆண்டின் போது கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. 1987 இன் 23 ஆம் இலக்க “அரச கூட்டுத்தாபனம் அல்லது அரசுக்குச் சொந்தமாக பொது முயற்சிகளை கம்பனிகளாக உட்டுத்துதல்” தொடர்பான சட்டத்தின் கீழ் மற்றும் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 1992 ஆம் ஆண்டின் போது 100 சதவீதம் அரசுக்குச் சொந்தமான வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றாக பதிவு செய்யப்பட்டிருந்தது.

**பணிப்பொறுப்புக்கள்**

நியத்திற்கு இணங்க உயர் தரத்தை உடைய கட்டிடப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் போட்டி விலையில் நாடு முழுவதும் வழங்குதல்.

**வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை**

2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் 2022 இன் கொடுக்கல் வாங்கல் அறிக்கையின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**பிரதமர் / ஐந்தாவது நிறைவேற்று சனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தின் திருத்தங்கள் மற்றும் நவீன மயப்படுத்தும்**

**நடவடிக்கைகள்**

2021 ஒக்தோபர் 26 ஆம் திகதிய அமப 21/1779/302/002-1 அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் பிரதமர் / ஐந்தாவது நிறைவேற்று சனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தின் திருத்தங்கள் மற்றும் நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

இந்த நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக பெறுகை நடைமுறைகள் மற்றும் உடன்படிக்கைகள் இன்றி ரூபா 13.07 மில்லியன் தொகை ஒன்று செலுத்தி தெரிவு செய்யப்பட்ட வீட்டு நிர்மாண கலைஞர்களின் வாய் மூல ஆலோசனையின் அடிப்படையில் செயற்திட்டத்திற்குத் தேவையான பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு அவர்களால் பெயர் குறிப்பிடப்பட்ட 16 வழங்குனர்களிடமிருந்து போட்டி விலை கோரப்படாமல் கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் கொள்வனவுக் கட்டளையின் அடிப்படையில் இந்த உத்தியோகபூர்வ இல்ல செயற்திட்டத்திற்கு பொருட்கள் விநியோகிகப்பட்டு பட்டியல் இடப்பட்டிருந்தது.

கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட பொருட்களுக்காக பணம் அறவிடுவதற்காக ரூபா 639.22 மில்லியன் ஆன 590 பட்டியல்கள், பிரதமரின் செயலாளருக்கு விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 554.58 மில்லியன் பிரதமர் அலுவலகத்தின் நிதியேற்பாட்டின் அடிப்படையில் திரண்ட நிதியத்திலிருந்து மீளளிப்புச் செய்யப்பட்டதுடன் ரூபா 84.63 மில்லியன் அத்திகதி வரையில் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

**மாதிரிக் கிராம நிகழ்ச்சித் திட்டத்திற்காக பொருட்கள் விநியோகித்தல்**

2015 முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற சூரிய பொகுண தெபொக்காவ வீடமைப்பு திட்டத்தின் கீழ் வீட்டு உரிமையாளர்களுக்கு கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்குரிய அம்பலாந்தொட்ட, தங்காலை, லுணுகம்வெஹர, திஸ்ஸ, வீரகெட்டி, எம்பிலிபிட்டி, சூரியவெவ என்ற கிளைக் களஞ்சியத்திலிருந்து ரூபா 34.70 மில்லியன் பெறுமதியான கட்டிடப் பொருட்கள் எந்த ஒரு வரையறையும் இன்றி விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையும் இநடத கடன் மீதி தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

**சொத்துக்கள் முகாமைத்துவம்**

கம்பனிக்கு கையளிக்கப்பட்ட கொழும்பு 10, சங்கராஜ மாவத்தை, இலக்கம் 541 இல் அமைந்துள்ள காணியில் 01

ஏக்கர் 31.4 பேர்ச் அளவொன்று சட்டத்தின் நிபந்தனைகளைக் கவனத்தில் கொள்ளாமல் 2005 யூலை 19 மற்றும் 2006 ஒக்தோபர் 03 ஆந் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் கம்பனியால் HDFC றியல் எஸ்டேட் டெவலப்மென்ட் லிமிடட் நிறுவனத்திற்கு ரூபா 222.50 மில்லியனுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது.

மேற்கூறப்பட்ட ஆதனங்களை தீர்த்து உரித்தைப் பெற்றுக்கொள்வதற்காக கம்பனிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு தீர்ப்பின் படி 2012 சனவரி 10 ஆம் திகதி கம்பனியால் ரூபா 359.32 மில்லியன் தொகை மேற்கூறப்பட்ட நிறுவனத்திற்கு 2012 சனவரி 31 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தி காணியின் உரித்தை கையேற்பதற்கு இணங்கியதன் அடிப்படையில் வழக்கு சமரசத்திற்கு கொண்டுவரப்பட்டது. எனினும் இறங்கப்பட்ட பிரகாரம் உரிய பணம் கம்பனியால் செலுத்தாமையினால் காணியின் உரித்தை பெற்றுக்கொள்வதற்கு HDFC வங்கி இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

**வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கப்படாமை**

2022 ஆம் ஆண்டுக்காக ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளைக் குறிப்பிட்டு காசேடு பேணிச் செல்லப்படாதிருந்ததுடன் செயலிழந்த 10 வங்கிக் கணக்குகளுக்காக வங்கி இணக்கக்கூற்றுக்களும் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.

**மனிதவன முகாமைத்துவம்**

உரிய அங்கீகாரத்துடன் ஆட்சேர்த்தல் நடைமுறை ஒன்று கம்பனியிடம் காணப்படவில்லை.

## இலங்கை நிர்மாண கைத்தொழில் சபை

**நிரந்தர பதவியணியினர் சேர்க்கப்படாமை**

சேவையில் ஈடுபடுத்த வேண்டிய ஊழியர் எண்ணிக்கையைத் தீர்மானத்தல், ஊழியர்களை நியமித்தல், பதவி உயர்வு வழங்குதல் சேவையில் இருந்து நீக்குதல் மற்றும் ஒழுக்காற்று நடைமுறைகள், சம்பளம், படிகள் மற்றும் பணிக்கொடைகள் வழங்குதல் சபையின் பொறுப்பாக இருந்த போதிலும் சபையில் செயற்பாட்டுக்காக திறன் மற்றும் நிரந்தர பதவியணியினரைச் சேர்ப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் அல்லது ஆட்சேர்த்தல் மற்றும் பதவி ஒன்று முன்மொழிவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக சகல உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்ததுடன் அதில் 16 உத்தியோகத்தர்களுக்கு 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடம் முதல் 18 வருடங்கள் வரையிலான கால எல்லைக்காக ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அதற்கு மேலதிகமாக தற்போது சேவையில் ஈடுபட்டிருக்கின்ற இரண்டு உத்தியோகத்தர்களின் ஒப்பந்த காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை

எடுக்காதிருந்தமையும் ஆளணிக் கோவை பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

## மத்திய பொறியியல் உசாத்துணை பணியகம்

**நட்டம் அறிக்கையிடல்**

பொறியியல் பெறுகை நிர்மாணம் (EPC) பிரிவில் உள்ள 14 பிரிவுகளில் 07 பிரிவுகள் மீளாய்வாண்டின் போது ரூபா 54.86 மில்லியன் ஒட்டுமொத்த செயற்பாட்டு நட்டம் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் ஆலோசனைப் பிரிவின் செலவினம் 22 நிலையங்களில் 14 நிலையங்கள் ரூபா 305.49 மில்லியன் செயற்பாட்டு நட்டம் அறிக்கையிடப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பணியகத்தின் மொத்த செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து ரூபா 145.57 மில்லியன் நட்டம் அறிக்கையிடப்பட்டிருந்தது.

**கடன்பட்டோர் மீதி அறவிடப்படாமை**

2023 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த கடன் ஷபட்டோர் மீதி ரூபா 4,549.28 மில்லியன் ஆக இருந்ததுடன் பொறியியல் பெறுகை நிர்மாணம் (EPC) பிரிவின் 3-5 வருடங்களுக்கு இடையிலான கடன்பட்டோர் மீதி மற்றும் 05 வருடங்களை விஞ்சிய கடன்பட்டோர் மீதி முறையே ரூபா 246.91 மில்லியன் மற்றும் ரூபா 1,280.47 மில்லியன் ஆக இருந்ததுடன் ஆலோசனைப் பிரிவில் 3-5 வருடங்களுக்கு அடையில் மற்றும் 05 வருடங்களை விஞ்சிய கடன்பட்டோர் மீதி முறையே ரூபா 270.49 மில்லியன் மற்றும் ரூபா 356.55 மில்லியன் ஆக இருந்தது. அதன் பிரகாரம் பணியகத்திற்கு கிடைக்க வேண்டிய கடன்பட்டோர் பணத்தை கால ரீதியில் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**கடன்கொடுத்தோர் மீதி செலுத்தப்படாமை**

2023 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த கடன் கொடுத்தோர் மீதி ரூபா 1,874.15 மில்லியன் ஆக இருந்ததுடன் பொறியியல் பெறுகை நிர்மாணம் (EPC) பிரிவின் 3-5 வருடங்களுக்கு இடையிலான கடன் கொடுத்தோர் மீதி மற்றும் 05 வருடங்களை விஞ்சிய கடன்கொடுத்தோர் மீதி முறையே ரூபா 219.18 மில்லியன் மற்றும் ரூபா 767.84 மில்லியன் ஆக இருந்ததுடன் ஆலோசனைப் பிரிவில் 3-5 வருடங்களுக்கு இடையிலான கடன்கொடுத்தோர் மீதி மற்றும் 05 வருடங்களை விஞ்சிய கொடுத்தோர் மீதி முறையே ரூபா 2.92 மில்லியன் மற்றும் ரூபா 39.04 மில்லியன் ஆக இருந்தது. அதன் பிரகாரம் பணியகத்தால் செலுத்த வேண்டிய கடன்பட்டோர் மீதி காலரீதியில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**கலப்பு விவசாய ரீதியான செயற்திட்டம்**

இலங்கை மகாவலி அதிகார சபைக்குரிய அம்பாறை மாவட்டத்தின் றம்புக்கன் ஓயா மகாவலி வலயத்தில்

அமைந்துள்ள பொல்லேபெவத்த மகாவலிப் பிரிவில் 150 ஏக்கர் காணியில் பல்லின விவசாயம் சார்ந்த செயற்திட்டத்திற்காக பணியத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் பணியத்தால் இதுவரை அந்தக் காணி நீண்ட கால வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக முறையான வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த விவசாய செயற்திட்டம் 2023 ஆம் ஆண்டு முதல் மத்திய பொறியில் சேவை தனியார் கம்பனியால் நடாத்திச் செல்லப்படுவதுடன் இதுவரை பொருத்தமான பிரகாரம் கம்பனிக்கு கையளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## மத்திய பொறியியல் சேவை (தனியார்) கம்பனி

**அதிக நட்டம் பெறுகின்றமை**

கம்பனி அதில் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்ட நிர்மாண செயற்திட்டங்களில் முறையே 2023, 2022 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 942.90 மில்லியன் தொகை, ரூபா 667.42 மில்லியன் மற்றும் ரூபா 888.15 மில்லியன் செயற்பாட்டு நட்டம் ஒன்றை பெற்றிருந்ததுடன் மீளாய்வாண்டின் செயற்படு நிலையில் காணப்படுகின்ற 40 நிர்மாண செயற்திட்டங்களில் இருந்து ரூபா 528.57 மில்லியன் நட்டம் பெற்றிருந்தது. இந்த நட்டம் கம்பனியின் தொடர்ச்சியான இருப்பிற்காக நேரடியாக தாக்கமளித்தமையால் அதற்காக நேரடியாக அல்லது மறைமுகமாக பொறுப்புடைய நபர்கள் மற்றும் காரணங்களை இனங்கண்டு இவ்வாறான அதிக நட்டத்தை குறைப்பதற்காக முகாமைத்துவம் வினைத்திறனான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**தாமத இழப்பீடு அறவிடல்**

செயற்திட்டம் முகாமைத்துவத்தின் நலிவு போன்ற விடயங்களின் காரணமாக 62 செயற்திட்டங்களுக்குரிய ரூபா 105.75 மில்லியன் தாமத இழப்பீடு (Liquidated Damages) ஆக சேவைப் பங்களிப்பாளர்களினால் பட்டியல்களிலிருந்து குறைக்கப்பட்டிருந்தது. இதனால் 09 செயற்திட்டங்களுக்காக கழிக்கப்பட்ட ரூபா 36.81 மில்லியன் தொகையை அறவிடுவதற்கு முடியுமாக இருந்த போதிலும் 18 செயற்திட்டங்களுக்காக 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கோரப்பட்ட காலத்தை நீடிப்பதற்காக அங்கீகாரம் கிடைக்காதிருந்ததுடன் 35 செயற்திட்டங்களுக்குரிய கழிக்கப்பட்ட தாமத இழப்பீட்டுத் தொகையான ரூபா 49.01 மில்லியனை மீண்டும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

## நிர்மாண பாதுகாப்பு நிதியம்

**பணிப்பொறுப்புக்கள்**

தேசிய பதிவு ஒன்று உள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஒப்பந்தகாரர்களுக்கு நிர்மாண நடவடிக்கைகளுக்காக தேவையான பிணை முறி, பிணை மற்றும் அது தொடர்பாக ஏனைய பாதுகாப்பினை வழங்குதல்

**பிணை முறியின் அடிப்படையில் பணம் செலுத்துதல்**

ஒப்பந்தகாரர்களின் செயலாற்றல் குறைகின்ற சந்தர்ப்பத்தின் போது பிணைப் பணமாக சேவை பங்களிப்பாளர்களுக்கு நிதியத்தால் செலுத்தப்பட்டிருந்த கூட்டுமொத்தமான ரூபா 139.80 மில்லியன் தொகை 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மீண்டும் நிதியத்திற்கு அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

**கிலோ மீற்றர் 100,000 கிராமிய வீதி செயற்திட்டம்**

கிலோ மீற்றர் 100,000 கிராமிய வீதி செயற்திட்டத்தின் கீழ் வருகின்ற நிர்மாண கைத்தொழில்களை மேற்கொள்கின்ற 314 ஒப்பந்தகாரர்களின் உறுதிப்படுத்தப்பட்ட பட்டியல்களை செலுத்துவதற்காக வீதி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சினால் 2020 முதல் 2023 ஆம் ஆண்டு வரை நிதியத்திற்கு ரூபா 33,389 மில்லியன் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 32,782 ஒப்பந்தகாரர்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

மேலும் அந்தத் தொகையில் உரிய ஒப்பந்தகாரர்களுக்கு விடுவிக்கப்படாத ரூபா 220.62 மில்லியன் தொகை 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தால் வழியில் நின்ற பணக்கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இதனால் ரூபா 88.10 மில்லியன் தொகை 01-03 வருட காலத்தில் இருந்தும், ரூபா 3.43 மில்லியன் தொகை 03–05 வருடங்களுக்கு இடையிலான காலத்தில் இருந்தும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே கட்டிடத் தொகுதி சிக்கல் மற்றும் ஆபத்து அதிகமாக இனங்காணப்பட்ட வீதி அபிவிருத்தி செயல்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக வீதி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சுடன் நிதியம் முறையான உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. இவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்ட தொகையில் முழுமையாக வேலை பூர்த்தி செய்யப்பட்ட 123 செயற்திட்டங்களுக்குரிய ரூபா 60.55 மில்லியன் தொகை ஒப்பந்தகாரர்களுக்கு விடுவிக்கப்படாமல் நிதியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் பணத்தை விடுவிப்பதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**பட்டியல்கள் தள்ளுபடி செய்து ஒப்பந்தகாரர்களுக்கு செலுத்துதல்**

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தால் தள்ளுபடி செய்யப்பட்டு ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்ட தொகையில் சேவை பங்களிப்பாளர்களினால் பட்டியல்களுக்காக பணம் செலுத்தாமையினால் தீர்க்க முடியாதிருந்த காசு மீதி ரூபா 10.30 மில்லியன் ஆகும். ஆதில் ரூபா 10.21 மில்லியன்

| | |
|---|---|
| | அதாவது 98 சதவீதம் ஒரு தனியார் ஒப்பந்த நிறுவனத்திலிருந்து 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து அறவிடுவதற்கு தவறியிருந்தது. |
| **செயற்பாடற்ற பணம்** | நிதியம் 1999 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2000 முதல் 2005 வரையான காலத்தில் நான்கு சந்தர்பங்களின் போது பொது திறைசேரியில் இருந்து ரூபா 55 மில்லியன் மூலதன மானியம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் வருடாந்த இலாபம் பொதுத் திறைசேரிக்கு அனுப்பும் திட்ட முறைமை ஒன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதனிடையே 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 949.79 மில்லியன் ஆன திரண்ட உழைப்புக்களில் ரூபா 500 மில்லியன் “உட்கட்டமைப்பு வசதிகளுக்கான நிதி ஏற்பாடு” என்ற பெயருடன் ஒதுக்கக் கணக்கில் மாற்றப்பட்டு விளைவற்றுக் காணப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது. |

## அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண கூட்டுத்தாபனம்

| | |
|---|---|
| **பணிப்பொறுப்புக்கள்** | பாலங்கள் பெருந்தெருக்கள், நீர்த்தேக்கங்கள், நீர்ப் பாசன முறைமைகள், நீர்மின் உற்பத்திக் கூடங்கள், சுரங்கம் மற்றும் வாய்க்கால்கள், நீர் வழங்கும் செயற்திட்டம், கட்டிடம் மற்றும் நிர்மாணம் போன்ற பொறியியல் ரீதியான செயற்திட்டங்களில் ஈடுபடுதல். |
| **நிலுவைக் கடன்** | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தால் கூட்டுத்தாபனத்தின் ஆவணங்கள் மற்றும் திறைசேரி பிணையின் அடிப்படையில் வங்கியில் இருந்து பெறப்பட்டிருந்த ரூபா 1,808 மில்லியன் கடன் தொகையும் செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி ரூபா 1,352.86 மில்லியன் மற்றும் அதனை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பாமையின் அடிப்படையில் விதிக்கப்பட்டிருந்த மிகைக் கட்டணம் ரூபா 1,087.21 மில்லியனும் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் செலுத்தப்படாமல் காணப்பட்டது. |

## இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம்

| | |
|---|---|
| **பணிப்பொறுப்புக்கள்** | கட்டிடங்களை நிர்மாணிக்கும் செயற்திட்ட நடவடிக்கைகள், கட்டிடத் துணைப்பாகங்களின் உற்பத்தி, இயந்திரம் மற்றும் மின்சார நடவடிக்கைகள், பொறியியல் ரீதியான பணிகள் மற்றும் ஆலோசனை நடவடிக்கைகள் |
| **நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல்** | 2020 இன் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |
| **ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்புப்** | |

**பணம் செலுத்தாமை**

2022 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதம் முதல் 2023 யூன் மாதம் வரை சேவை பங்களிப்பாளர் பணமாக ரூபா 73.52 மில்லியனும் அதன் அடிப்படையில் மிகைக் கட்டணமாக ரூபா 36.76 மில்லியனும் 2006 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டின் யூலை மாதம் வரை வாழ்க்கைச் செலவுப் படியின் அடிப்படையில் சேவை ஊழியர் பங்களிப்புப் பணமாக ரூபா 307.82 மில்லியனும் அதன் அடிப்படையில் மிகைக் கட்டணமாக ரூபா 153.91 மில்லியனும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**நிலுவை வரி**

கூட்டுத்தாபனத்தால் 2010 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி ரூபா 1,381.67 மில்லியன் மற்றும் அந்த பணம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பாமையின் அடிப்படையில் விதிக்கப்பட்ட மிகைக் கட்டணம் ரூபா 883.37 மில்லியன் ஆன நியதிச்சட்ட கொடுப்பனவுகள் கூட்டுத்தாபனத்தால் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**அரசாங்க வங்கிகளிலிருந்து பெறப்பட்டிருந்த கடன்**

கூட்டுத்தாபனத்தின் ஆதனங்கள் மற்றும் திறைசேரி பிணையின் அடிப்படையில் அரச வங்கிகளில் இருந்து பெறப்பட்ட கடன் தொகையான ரூபா 2,737 மில்லியன் மற்றும் அதற்குரியதாக செலுத்த வேண்டிய வட்டி ரூபா 1,891.49 மில்லியனும் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

# உயர் கல்வி

இலங்கையில் கல்வி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பான நீண்டகால வரலாற்றைக் கொண்டதுடன் இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் கல்வி அடிப்படை உரிமையாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 17 பல்கலைக்கழகங்கள் மற்றும் 19 உயர்கல்வி நிறுவனங்களால் கீழே காட்டப்பட்டுள்ள செயற்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியதாக உள்ளது..

**செயற்பணி**


தேசிய கொள்கைக்கு இணங்க பல்கலைக்கழக கல்வியை திட்டமிடல் மற்றும் ஒன்றிணைப்பு செய்தல்.

பல்கலைக்கழக கல்விக்காக பாராளுமன்றத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதியை உயர் கல்வி நிறுவனங்களிடையே பகிர்ந்தளித்து அவ்வாறான ஒவ்வொரு உயர் கல்வி நிறுவனத்தின் மூலமும் மேற்கொள்ளப்படுகின்ற செலவினத்தைக் கட்டுப்படுத்துதல்

உயர் கல்வி நிறுவனங்களின் கல்வித் தரத்தைப் பேணுதல்.

உயர்கல்வி நிறுவனங்களின் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்துதல்.

மேலே குறிப்பிடப்பட்ட செயற்பணிகளை அல்லது கடமைகளை நிறைவேற்றுவதற்காக உயர் கல்வித்துறை மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு முறையே ரூபா 26,061 மில்லியனும் ரூபா 66,571 மில்லியனுமான ஒதுக்கீடு 2023 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தால் வழங்கப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் இறுதியில் அதில் முறையே ரூபா 21,853 மில்லியனும் ரூபா 64,803 மில்லியனும் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.




வரைபடம் இல : 2.34 ஒதுக்கீட்டுப் பயன்பாடு

மேற்குறித்த ஒதுக்கீட்டுப் பயன்பாடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்பட்ட அவதானிப்புகள் தொகுக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

## கணக்காய்வு அவதானிப்புகள்

### பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

| | |
|---|---|
| **பிணை மீறப்பட்டதன் காரணமாக அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிட்டிராமை** | பல்கலைக்கழகங்கள் உட்பட 22 உயர் கல்வி நிறுவகங்களின் 551 கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினரிடம் இருந்து பிணை மீறல் காரணமாக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,262 மில்லியன் அறவிடப்பட வேண்டி இருந்த போதிலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அத்தொகையை அறவிடுவது தொடர்பில் போதிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| **ஆரம்ப குத்தகை உடன்படிக்கை இரத்துச்செய்யப்படாது புதிய கட்டிடத்தைப் பெற்றுக்கொண்டிருத்தல்** | ஆணைக்குழுவால் மாதாந்த வாடகை ரூபா 0.35 மில்லியனிற்குப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த 3,337 சதுர அடி கொண்ட கட்டிடத்தின் இடப்பற்றாக்குறையாலும் போக்குவரத்து வசதியின்மையாலும் அக் குத்தகை உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டு 7,000 சதுர அடியுடனான கட்டிடம் ரூபா 0.95 மில்லியன் மாதாந்த வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்காக தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் 2020 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், ஆரம்ப குத்தகை உடன்படிக்கை இரத்துச்செய்யப்படாது புதிய கட்டிடத்தை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டதன் காரணமாக 2021 ஆம் ஆண்டு முதல் 2024 மார்ச் வரை மேலும் அக் கட்டிடத்திற்காக மொத்தம் ரூபா 12.6 மில்லியன் தொகையான கட்டிட வாடகை செலுத்தப்பட்டிருந்தது. |
| **பல்கலைக்கழக மாணவர்களுக்கான வெற்றிடங்களை நிரப்பாமை** | 2020/2021 ஆம் 2021/2022 இரு கல்வியாண்டுகளுக்காக மாணவர்களை அனுமதித்ததை அடுத்து மேலும் வெற்றிடங்கள் முறையே 1857 ஆகவும் 1084 ஆகவும் நிலவியதுடன் அவ் வெற்றிடங்களுக்காக மீள மாணவர்களை அனுமதிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராததன் காரணமாக அக் கல்வியாண்டுகள் இரண்டில் மாத்திரம் 2941 மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைக்கப்பெறாதிருந்தது. |
| **பட்டப்பின்படிப்பு மானியம் வழங்கப்பட்டவர்கள் பாடநெறியைப் பூர்த்திசெய்திராமை** | 2009 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை பட்டப் பின்படிப்பிற்கான மானியத்தைப் பெற்றுக்கொண்ட 22 பேர் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை பாடநெறியைப் பூர்த்திசெய்திராததுடன் அவர்களில் 11 பேருக்கு வழங்கப்பட்டிருந்த மானியத்தொகையில் ரூபா 17 மில்லியன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்டது. இவ்வாறே 2022 ஆம் 2023 ஆம் ஆண்டுகளின் போது எந்தவித விண்ணப்பதாரிக்கும் பட்டப்பின்படிப்பு மானியம் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

## உருஹுணு பல்கலைக்கழகம்

**பேராசிரியர் பிரிவொன்றை நிர்மாணிக்கும் செயற்திட்டம்**

2018 ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்ட தீர்மானத்திற்கமைவாக மருத்துவத்துறைப் பட்டதாரிகளின் எண்ணிக்கையை 300 ஆக அதிகரிப்பதற்கும், மருத்துவ மற்றும் தாதியர் தொழிலை மேம்படுத்துவதற்காகவும், மருத்துவப் பட்டபின்படிப்பு பயிலுனர்களின் ஆட்சேர்ப்பை மேம்படுத்துவதற்காகவும், மருத்துவ நடைமுறைப் பயிற்சி தொடர்பான கற்பித்தல் தரத்தை மேம்படுத்துவதற்காகவும் கராப்பிடிய வைத்தியசாலையில் பேராசிரியர் பிரிவொன்றை நிர்மாணிப்பதற்கான செயற்திட்டம் 2019 யூன் 24 ஆம் திகதி ரூபா 1,138.5 மில்லியன் பெறுமதிக்கு மத்திய பொறியியல் சேவைகள் தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் படி, 2022 யூன் 16 ஆம் திகதி வேலைகள் நிறைவேற்றப்பட வேண்டிய போதிலும் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையில் அதன் பௌதீக முன்னேற்றம் 64 சதவீமாக மாத்திரம் காணப்பட்டது.

**மருத்துவ பீடத்திற்காக புதிய கட்டிடம் ஒன்றை நிர்மாணித்தல்**

பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்காக 12 மாடிகளைக் கொண்ட ஓர் கட்டிடத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டம் ரூபா 1,092 மில்லியன் பெறுமதியில் 2020 யூன் 01 ஆம் திகதி மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் படி, 2021 செப்தெம்பர் 06 ஆம் திகதி வேலைகள் நிறைவேற்றப்பட வேண்டிய போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 10 மாடிகள் வரை கொங்கிரீட் தளம் (concret Slab) இடப்பட்டு 07 ஆம் மாடி வரை உள்ளக வடிவமைப்பு தயாரிப்பு நடவடிக்கைகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**சரும சுகாதார விஞ்ஞான பீடத்தை ஸ்தாபிக்கும் செயற்திட்டம்**

சுகாதார துறைக்கு உரிய 4 பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டு இதன் மூலம் வருடாந்தம் 350 பட்டதாரிகள் அளவில் உருவாக்கப்படுவதற்காக உருஹுணு பல்கலைக்கழகத்தின் சரும சுகாதார விஞ்ஞான பீடத்தை ஸ்தாபிக்கும் செயற்திட்டம் 2020 திசெம்பர் மாதம் தனியார் கம்பனி ஒன்றிற்கு ரூபா 1,501 மில்லியனிற்கு வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் படி, 2023 யூன் 02 ஆம் திகதி அவ் வேலைகளைப் பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் கால நீடிப்பு பெறப்பட்டிருந்த 2024 ஏப்ரல் 10 ஆம் திகதி வரையிலும் செயற்திட்டம் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

## பேராதனைப் பல்கலைக்கழகம்

**நீர் வழங்கல் செயற்திட்ட நிர்மாணிப்பு நடவடிக்கைகள்**

பல்கலைக்கழகத்தின் நீர் வழங்கல் செயற்திட்ட நிர்மாணிப்பு நடவடிக்கைகள் ரூபா 714 மில்லியன் பெறுமதிக்கு 2020 யூலை 10 ஆம் திகதி வரையில்

பூர்த்திசெய்யும் அடிப்படையில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு 2018 ஆம் ஆண்டின் போது ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 421 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் அன்றைய தினம் பௌதீக முன்னேற்றம் 52 சதவீதமாக மாத்திரம் இருக்கையில் நிர்மாணப் பணிகள் கைவிடப்பட்டிருந்தன. பின்னர் அந் நிர்மாணிப்பு நடவடிக்கைகளைப் பூர்த்திசெய்வதற்கு மூல மதிப்பீட்டைப் பார்க்கிலும் ரூபா 785 மில்லியனான மேலதிக மதிப்பீடொன்று 2023 யூலை 20 ஆம் திகதி சபையால் மீள வழங்கப்பட்டு செயற்திட்டத்தின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

**"அக்ஹார" காப்புறுதிப் பங்களிப்பு பல்கலைக்கழக நிதியத்தால் செலுத்தப்பட்டமை**

2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது ஊழியர் "அக்ரஹார" காப்புறுதிப் பங்களிப்பாக ரூபா 49.8 மில்லியன் பல்கலைக்கழக நிதியத்தால் செலுத்தப்பட்டிருந்தது.

## சபரகமுவ பல்கலைக்கழகம்

**தலைமை நூலகக் கட்டிட நிர்மாணிப்புச் செயற்திட்டம்**

சபரகமுவ பல்கலைக்கழகத்தின் தலைமை நூலகக் கட்டிட நிர்மாணிப் பணிகளை ஆரம்பிப்பதற்கான முற்பணமாக ரூபா 63.01மில்லியன் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருக்கையில் ஒப்பந்தக்காரர் இடைநடுவில் கைவிட்டிருந்தார். எனினும், ரூபா 72.46 மில்லியன் (பெறுமதிசேர் வரியுடன்) முற்பணப் பிணை காலாவதியாக முன்னர் பணமாக்கப்படாமையால் முற்பணத் தொகையில் ரூபா 28.81 மில்லியனைத் தீர்த்துக்கொள்ள இயலாது போயிற்று.

## மொறட்டுவ பல்கலைக்கழகம்

**உயிர் வாயு உற்பத்திச் செயற்திட்டம்**

பல்கலைக்கழக மாணவர்கள் சிற்றுண்டிச் சாலையின் மூலம் வெளியேற்றப்படும் உணவுக் கழிவுகளை முகாமைத்துவம் செய்வதன் மூலம் உயிர்வாயு உற்பத்தி செய்யப்பட்டு அவ் வாயுவை சிற்றுண்டிச் சாலை உணவுத் தயாரிப்பிற்காகப் பயன்படுத்தும் ஒழுக்கச் செயற்திட்டம் ஒன்றிற்காக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 1.4 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும், அதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் உயிர் வாயு சிற்றுண்டிச் சாலையின் அடுப்புகளை எரியூட்டுவதற்கு போதாமையால் வாயு உற்பத்தி முறைமையின் இயலளவை அதிகரிப்பதற்காகத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2024 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும்

முறைமையின் இயலளவை அதிகரித்துப் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

**குறைவாகப் பயன்படுத்தப்படும் நிதியம் இருந்தமை**

பல்கலைக்கழக அபிவிருத்தி நிதியத்தின் கீழ் குறித்த திணைக்களங்கள் மற்றும் பாடநெறிக் கட்டணங்களுக்காக நிதியத்தின் 91 கணக்குகளில் ரூபா 265 மில்லயன் மீதி பயன்படுத்தப்படாது காணப்பட்டது. இதில் 15 நிதியங்களில் காணப்பட்ட மொத்தம் ரூபா 5.60 மில்லியன் 7 ஆண்டுகள் முதல் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**27 புலமைப் பரிசில் நிதியங்களில் இருந்து எந்தவித புலமைப்பரிசில்களும் வழங்கப்பட்டிராமை**

2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு 03 ஆண்டுகள் முதல் 13 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக ரூபா 19.39 மில்லியன் கூட்டுத்தொகையான 27 புலமைப் பரிசில் நிதியங்களில் இருந்து எந்தவித புலமைப்பரிசில்களும் வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**ஆராய்ச்சி மானியங்கள் பெறப்பட்டிருந்த போதிலும் ஆராய்ச்சிகளைப் பூர்த்திசெய்திராமை**

2015 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை மொறட்டுவ பல்கலைக்கழகத்தால் 124 விரிவுரையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 155 நீண்ட கால ஆராய்ச்சி மானியங்களில் ரூபா 83.58 மில்லியன் செலவிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட 66 ஆராய்ச்சிகள் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

**மருத்துவ மாணவர்களுக்கு பேராசிரியர் பிரிவுகளுக்கு மருத்துவ நடைமுறைப் பயிற்சிக்கு தேவையான வசதிகளை வழங்கல்**

பல்கலைக்கழக மருத்துவ பீட இறுதியாண்டு மாணவர்களுக்குத் தேவையான பேராசிரியர் பிரிவுகளில் மருத்துவ நடைமுறைப் பயிற்சி 2025 சனவரி அளவில் ஆரம்பிக்கப்படுவதற்கு இருந்த போதிலும், தற்போது மருத்துவ நடைமுறைப் பயிற்சியை வழங்கும் நாகொட வைத்தியசாலையில் அத்தகைய வசதிகள் இன்மையால் 2023 நவம்பர் 15 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுக் கூட்டத்திலும் அதற்கு முன்னர் வழங்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் படியும் இம் மருத்துவ நடைமுறைப் பயிற்சிக்காக நெவில் பெர்னான்டோ மருத்துவமனையைப் பயன்படுத்துவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் அப் பரிந்துரைகள் 2024 ஏப்ரல் வரையிலும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் படி, 2025 சனவரி வரையில் நெவில் பெர்னான்டோ மருத்துவமனை இப் பேராசிரியர் அலகுகளைக் கொண்ட அரசாங்க வைத்தியசாலை ஒன்றாக இயங்கத் தவறுமாயின் மருத்துவ பீடத்தின் இறுதியாண்டு மாணவர்கள் குறித்த காலப்பகுதியின் போது மருத்துவப் பட்டத்தைப் பெற்றுக்கொள்வதில் பாரிய சிக்கல் நிலவுவது அவதானிக்கப்பட்டது.

| | |
|---|---|
| **செயற்திட்டம் குறித்த தரத்திற்கு இணங்கும் வகையில் பூர்த்திசெய்யப்பட்டிராமை** | முறையே 2016 ஆம் 2021 ஆம் ஆண்டுகளின் முதலாம் கட்டப் பணிகள் பூர்த்தியடைந்திருந்த பொறியியல் பீடத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட பல்நோக்குக் கட்டிடத்தினதும் வாஸ்து சாஸ்திர பீடக் கட்டிடத்தின் கூரைகளின் தகடுகள் அக் கட்டிடத்தின் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட முன்னர் துருப்பிடித்து நீர்க் கசிவு ஏற்பட்டிருந்ததன் காரணமாக அகற்றப்பட்டு மீள தகடு இடப்படுவதற்காக ரூபா 14 மில்லியன் மேலதிகக் கிரயம் ஏற்கப்பட்டிருந்தது. இத் தொகை உசாவுகைச் சேவையை வழங்கிய நிறுவனத்திடம் இருந்து அறவிட்டுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |

## இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகம்

| | |
|---|---|
| விடுதிக் கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் செயற்திட்டம் | இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்தில் வெளிநாட்டு மாணவர்கள் 200 பேருக்காக விடுதிக் கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் செயற்திட்டம் இரு சந்தர்ப்பங்களின் போது காலம் நீடிக்கப்பட்டதை அடுத்து 2022 ஆகஸ்ட் 30 ஆம் திகதியில் பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்தது. எனினும், அன்றைய நாள் வரையிலான பௌதீக முன்னேற்றம் 75 சதவீதமாக மாத்திரம் இருந்ததுடன் செயற்திட்டத்திற்காக ரூபா 148 மில்லியன் செலவிடப்பட்டிருக்கையில் 2022 மே மாதம் முதல் நிர்மாண வேலைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன. |
| **வெளிவாரிப் பரீட்சைப் பிரிவிற்காக ஐந்து மாடிகளைக் கொண்ட கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கும் செயற்திட்டம்** | பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பரீட்சைப் பிரிவிற்காக தீர்மானிக்கப்பட்ட ஐந்து மாடிகளைக் கொண்ட கட்டிடமொன்றின் நிர்மாணிப்பிற்கான ஒப்பந்தத்திற்காக ரூபா 14 மில்லின் தொகையான முற்பணம் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டிருக்கையில் ஒப்பந்தக்காரரால் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. பின்னர் நிர்வாக சபையால் நிர்மாண வேலைகள் நிறுத்தப்பட்டமைக்கு தீர்மானித்தமைக்காகவும் பிணையின் காலம் கடந்திருந்தமையாலும் முற்பணத் தொகையில் ரூபா 2.78 மில்லியன் தொகையை பெற்றுக்கொள்ள இயலாதிருந்தது. |

## களனி பல்கலைக்கழகம்

| | |
|---|---|
| **வணிக மற்றும் முகாமைத்துவ பீடக் கட்டிடமொன்றை நிர்மாணித்தல்** | பல்கலைக்கழகத்தின் வணிக மற்றும் முகாமைத்துவ பீடத்திற்காக 10 மாடிகளைக் கொண்ட பீடக் கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் செயற்பாட்டிற்காக ஆலோசனை வழங்கும் நிறுவனம் ஒன்றிற்காக 2020 ஆம் 2021 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 15 மில்லியன் ஆலோசனைச் சேவைக் கட்டணமாகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் கட்டிடத்தின் |

நிர்மாணப் பணிகள் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**விடுதிக் கட்டிடமொன்றை நிர்மாணித்தல்**

2020 ஆகஸ்ட் 10 ஆம் திகதி நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த 4 மாடிகளைக் கொண்ட விடுதிக் கட்டிட நிர்மாணிப்பு வேலைகள் பல்கலைக்கழகத்தினதும் ஒப்பந்தக்காரரினதும் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களால் முடிவுறுத்தப்படுவதற்கு கல்வி அமைச்சின் பணிப்பாளர் (உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி) யின் 2021 யூன் 21 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அறிவுறுத்தப்பட்டிருந்தது. இதன் படி, இரு தரப்பு இணக்கப்பாட்டில் ஒப்பந்தம் இடைநடுவில் நிறுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்ட காரணத்தால் ஒப்பந்ததாரருக்கு ரூபா 4.03 மில்லியன் மேலதிகமாகச் செலுத்த நேர்ந்திருந்தது. இவ்வாறே, 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் மாணவர்களுக்காக தேவையான விடுதிக் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் செலவிடப்பட்டிருந்த ரூபா 65.46 தொகை விளைவற்ற செலவினமாகியிருந்தது.

## சபரகமுவ பல்கலைக்கழகம்

செயற்திட்டத்தை உரிய தரத்திற்கு இணங்க பூர்த்திசெய்திராமை

பல்கலைக்கழக பதவியணிக்காக ஓர் வீடமைப்புத் திட்டத்தை நிர்மாணிக்கும் பணிக்காக Powder Coated Aluminium ஹ Cladding பயன்பாட்டுடன் பூர்த்திசெய்யப்பட வேண்டிய 370 கதவுகள் Plywood களால் செய்யப்பட்டிருந்ததுடன் 316 கதவுகளுக்கு Door Closers பொருத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறிருக்கையில் விலை மனுவில் ஒரு வீட்டிற்காக ஒரே தடவையில் செலுத்தப்பட வேண்டிய தொகையாக அனுமதிக்கப்பட்டிருந்த முழுப் பெறுமதியையும் செலுத்தியிருந்தமையால் ரூபா 13.94 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. அவ்வாறே, ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இறுதிப் பற்றுச்சீட்டின் படி 03 வேலைகளுக்காக ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்பட்டிராத அவரால் கோரப்படாத ரூபா 2.60 மில்லியன் தொகையும் வேலைப் பொறியியலாளரின் உறுதிப்படுத்தலின் படி செலுத்தப்பட்டிருந்தது.

**பெறுகை வழிகாட்டல் நடைமுறைகளுக்கு முரணாக செயற்பட்டிருந்தமை**

ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடனின் கீழ் இயங்கும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனித வள அபிவிருத்திச் செயற்திட்டத்தின் மூலம் 2021 ஆம் ஆண்டின் போது தொழில்நுட்பப் பீடத்திற்காக நூலகப் புத்தகங்கள் கொள்வனவு செய்யப்படுகையில், அரசாங்க பெறுகை வழிகாட்டல் நடைமுறைகளுக்கு இணங்காத வகையில் முன் அனுபவம் இல்லாத வழங்குனர்

தேர்ந்தெடுக்கப்பட்டு முழு பெறுகையின் 76 சதவீதமான அதாவது ரூபா 20.20 மில்லியன் பெறுமதியான 118 புத்தக வகைகளிற்கு உரித்தான 421 அலகுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இவற்றில் ரூபா 7.59 மில்லியன் பெறுமதியான 33 வகையிலான 114 அலகுகள் முன்னர் பயன்படுத்தப்பட்ட புத்தகங்களாகக் (used book) காணப்பட்டன. இவ்வாறே, ரூபா 6.92 மில்லியன் செலவில் பாடவிதானங்களுடன் தொடர்பற்ற 69 வகையான 179 புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இப் பெறுகையின் போது, சர்வதேச சந்தையில் பழைய மற்றும் புதிய புத்தகங்கள் விற்பனை செய்யப்படும் ஆகக் குறைவான விலைகளுடன் ஒப்பிடுகையில் 63 புத்தகங்களின் 227 அலகுகள் கூடுதலான விலைக்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 12.11 மில்லியன் நிதிசார் நட்டம் ஏற்பட்டிருந்தது.

## கொழும்பு பல்கலைக்கழகம்

**ஆராய்ச்சிகள் பூர்த்தி செய்யப்பட்டிராமை மற்றும் இரத்துச் செய்யப்பட்டிருந்தமை**

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கல்விசார் ஊழியர்களுக்கு 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டிருந்த ரூபா 8.19 மில்லியன் பெறுமதியான 13 ஆராய்ச்சிகள் பூர்த்தியடைய வேண்டியதாக இருக்கையில் காலம் கடந்து 1 ½ வருடங்கள் முதல் 4 ½ வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் அவை பூர்த்திசெய்யப்பட்டிருக்க வில்லை. மேலும் 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 8.82 மில்லியன் பெறுமதியான 17 ஆராய்ச்சிகள் பல்வேறு காரணங்களால் கைவிடப்பட்டும் இரத்துச் செய்யப்பட்டும் இருந்தன.

**வெளிநாட்டு மானியம் நேரடியாகப் பெற்றுக்கொள்ளல்**

வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அறிவோ அல்லது இணக்கப்பாடோ இன்றி ஸ்ரீ ஜயவர்தன பல்கலைக்கழகத்தாலும் கொழும்பு பல்கலைக் கழகத்தாலும் நேரடியாக வெளிநாட்டு மானியங்கள் முறையே ரூபா 144 மில்லியனும் ரூபா 340 மில்லியனும் 2023 ஆம் ஆண்டின் போது பெறப்பட்டிருந்தன.

**அங்கீகாரமற்ற மருத்துவக் காப்புறுதி தீர்மான முறைக்காகக் கொடுப்பனவு வழங்கப்படுதல்.**

அமைச்சால் அங்கீகரிக்கப்பட்டிராத எந்த ஒரு கொடுப்பனவும், நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களும், அபிவிருத்தி உதவிகள் அல்லது மானியங்கள் வழங்கப்படுவதை நிறுத்தும் படி வரவு செலவுத் திட்டச் சுற்றறிக்கையின் மூலம் அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் இதற்கு முரணாக 2022 மே மாதம் முதல் 2023 செப்தெம்பர் மாதம் வரை ஓர் உள்ளகக் காப்புறுதி முறைமைக்காக ஸ்ரீ ஜயவர்தன பல்கலைக்கழகத்தால் ரூபா 34.8 மில்லியன் தொகையும் கொழும்பு

பல்கலைக்கழகத்தால் 2023 ஆம் ஆண்டின் போது போது ரூபா 37 மில்லியன் தொகையும் செலுத்தப்பட்டிருந்தன.

## இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்

**வருகை மற்றும் வெளிச்செல்லல் நேரங்களைப் பதிவுசெய்யப்பட்டிராமை**

பல்கலைக்கழக தாபன விதிக் கோவையில் XX ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பந்தியின் படி, சகல உயர் கல்வி நிறுவகத்திலும் கடமையில் ஈடுபட்டுள்ள சகலரும் வருகை மற்றும் வெளிச்செல்லல் நேரத்தைப் பதிவுசெய்ய வேண்டிய போதிலும் கல்விசார் பதவியணி இது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**பல்கலைக்கழகங்களுக்கிடையிலான தொடர்பை நிர்வகிக்கும் மென்பொருள் முறைமை**

2020 திசெம்பர் 31 ஆம் திகதி பல்கலைக்கழகங்களுக்கிடையிலான தொடர்பை நிர்வகிக்கும் மென்பொருள் முறைமை ஒன்றை ஸ்தாபிப்பதற்காக ரூபா 17.5 மில்லியன் பெறுமதியான ஒப்பந்த உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. இதன் படி, 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் முறைமை ஸ்தாபிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட வேண்டிய போதிலும் 2024 ஏப்ரல் 01 ஆம் திகதி வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டு பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

**இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்த நிர்மாணிப்புகள்**

மிஹிந்தலை வளாகத்தில் 04 இரட்டை ஊழியர் உத்தியோக பூர்வக் குடியிருப்புகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 52.7 மில்லியன் பெறுமதியான ஒப்பந்த உடன்படிக்கை ஒன்று 2016 திசெம்பர் 23 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் இதற்காக வேலை ஆரம்பிப்பு முற்பணமாக ரூபா 15.86 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், ஒப்பந்ததாரரால் நிர்மாணப் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் நிர்மாணிப்புகள் நிறுத்தப்படும் சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த பணிப் பெறுமதி ரூபா 10.62 மில்லியனாகக் காணப்பட்டது, இதன் படி, பல்கலைக்கழகத்தால் 2019 பெப்ரவரி 20 ஆம் திகதி உடன்படிக்கை நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் அன்றைய தினத்தில் மேலும் 15.76 மில்லியன் ஒப்பந்ததாரரிடம் இருந்து பல்கலைக்கழகத்திற்கு அறவிடப்பட வேண்டியதாக இருந்தது. ஒப்பந்தத்திற்கு உரிய ரூபா 3.95 மில்லியன் முற்பணப் பிணை மற்றும் ரூபா 10.54 மில்லியன் செயற்பாட்டுப் பிணை காலாவதியாக முன்னர் பணமாக்கப்படுவதற்கான இயலுமை இருந்த போதிலும் இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கூடுதலாகச் செலுத்தப்பட்ட பணத்தை அறவிட்டு நட்டத்தைக் குறைத்துக்கொள்வதற்கு கணக்காய்வுத் தினமாகிய 2024 ஏப்ரல் 01 ஆம் திகதி வரையிலும் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | |
|---|---|
| **பிணையை மீள்பெறுமதியிடல்** | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 12 ஆம் திகதிய உள்ளகக் கணக்காய்வுச் சுற்றறிக்கை கடித இல. 03/2022 மற்றும் 2022 யூன் 22 ஆம் திகதிய உள்ளகக் கணக்காய்வுச் சுற்றறிக்கை கடித இல. 02/2022 இன் பிரகாரம், பிணையை மீள்பெறுமதியிட இயலாது. அவ் ஏற்பாட்டிற்கு மாறாக பிணையை மீறிய இரு விரிவுரையாளர்கள் தொடர்பாக 2023 யூன் 26 ஆம் திகதி இடம்பெற்ற 272 நிர்வாகச் சபையின் 05.10.27 தீர்மானத்தின் பிரகாரம் பிணையை மீள்பெறுமதியிட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதன் படி, 2023 சனவரி 01 ஆம் திகதி மேற்குறித்த விரிவுரையாளர்களிடம் இருந்து பெறவேண்டிய ரூபா 15.15 மில்லியன் தொகையான பிணை மீளல் பெறுமதி 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் பதிவழிக்கப்பட்டிருந்தது. |

## இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்

| | |
|---|---|
| **உத்தியோகபூர்வ விடுதிகளில் குடியிருப்பவர்களின் நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் பல்கலைக்கழக நிதியத்தினால் செலுத்தப்பட்டிருந்தமை** | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கையின் படி, உத்தியோகபூர்வ விடுதிகளில் குடியிருப்பவர்களால் நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் ஏற்கப்பட வேண்டிய போதிலும் 2023 ஆம் ஆண்டின் போது உத்தியோகபூர்வ விடுதிகளின் நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்களுக்காக ரூபா 15.48 மில்லியன் கூட்டுத்தொகையான பணம் பல்கலைக்கழக நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. |
| **விளைவற்ற சொத்துக்கள்** | சாத்தியவளக் கற்கை ஒன்று மேற்கொள்ளப்படாது 25 வெளிநாட்டுத் துறவறமுற்ற மாணவர்களுக்கு விடுதி வசதிகள் வழங்கப்படுவதற்காக இயலுமான வகையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த விடுதியின் பணிகள் 2020 சனவரி 14 ஆம் திகதி பூர்த்தியடைந்திருந்த போதிலும் பட்டப் படிப்புப் பாடநெறிக்காக வெளிநாட்டு மாணவப் பிக்குமார்களை அனுமதிப்பதற்காக முறையான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆகையால் ரூபா 84.25 மில்லியன் பெறுமதியான குறித்த கட்டிடமும் பொருத்திகளும் 04 வருடங்களுக்கும் மேலான காலமாக விளைவற்றுக் காணப்பட்டன. |
| **வள முகாமைத்துவ தகவல் தொழில்நுட்ப முறைமை** | ரூபா 8 மில்லியன் பெறுமதியான வள முகாமைத்துவம் தொடர்பான தகவல் தொழில்நுட்ப முறைமை (Enterprise Resource Planning) ஸ்தாபிக்கும் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாம் 2018 மே 31 ஆம் திகதியளவில் பூர்த்திசெய்திருக்க வேண்டிய போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2024 ஏப்ரல் 01 ஆம் திகதி |

வரையிலும் பூர்த்திசெய்திராததுடன் அன்றைய தினம் வரையில் ரூபா 4 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

## கிழக்குப் பல்கலைக்கழகம்

**சுகாதாரப் பாதுகாப்பு அறிவியல் பீடத்திற்கான காணிக் கையேற்பு**

பல்கலைக்கழகத்தின் சுகாதாரப் பாதுகாப்பு அறிவியல் பீடத்திற்கான காணிக் கையேற்பு நடைமுறைகள் 2009 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் போது பிரதேசச் செயலகத்தால் குறித்த காணிக்காக மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குச் செலுத்தப்படுவதற்காக ரூபா 65.8 மில்லியன் தொகையான ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் கையேற்பு அதிகாரச்சட்டத்தின் 17 ஆம் பிரிவின் பிரகாரம் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை மேற்குறித்த காணிகள் கையேற்கப்பட்டிருக்கவில்லை.

# கல்வி

எந்த ஒரு நாட்டின் எதிர்கால வளர்ச்சியையும் தீர்மானிக்கும் முக்கிய காரணி அந் நாட்டின் கல்விக்காக மேற்கொள்ளப்படும் முதலீடாகும். இலங்கையின் கல்வியறிவு, பல வளர்முக நாடுகளைப் பார்க்கிலும் விஞ்சியிருந்த போதிலும் பாரம்பரிய கல்வி முறைகளைத் தொடர்ந்தும் பின்பற்றப்படுவதனால் உலகின் ஊழியத் தேவைப்பாட்டிற்கு ஏற்ப தொழிநுட்ப அறிவைக் கொண்ட ஊழியர்களை தற்போது நிலவும் கல்வி முறையின் மூலம் உருவாக்க இயலாதுள்ளது. ஆகவே, நவீன கல்வி முறைமையின் மூலம் அறிவும் தொழிநுட்பத் திறனும் நிறைந்த சமுதாயத்தை உருவாக்குவது கல்வித் துறையின் பொறுப்பாகும். அப் பொறுப்பை நிறைவேற்றும் நோக்காகக் கொண்ட கல்வித் துறையின் முக்கிய பணிகளும் செயற்பணிகளும் பின்வருமாறாகும்.

**செயற்பணி**

குழந்தைப் பருவம், ஆரம்ப, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைத் துறைகளுக்கு இடையே போதிய தொடர்பை ஏற்படுத்தும் வகையில் கல்வி வளர்ச்சிக்கு உரித்தான துறைசார் கொள்கைகளை உருவாக்கி செயற்படுத்துதல்.

உலகளாவிய சவால்களை தன்னம்பிக்கையுடனும் வெற்றியுடன் கூடிய நம்பிக்கையுடனும் இலங்கைச் சிறுவர்கள் மற்றும் இளைஞர் சமூகத்தை அணுகச்செய்வதற்கான இயலுமையை ஏற்படுத்தும் வகையில் தேசியக் கல்வி முறையை உருவாக்குதல்.

முன்பள்ளிக் கல்வி முதல் உயர்கல்வியைப் பூர்த்தி செய்யும் வரையில் தெளிவான பாதைத் திட்டமொன்றை உருவாக்குவதற்காக கொள்கை வழிகாட்டலை வழங்குதல்.

ஒவ்வொரு குழந்தைக்கும் கல்விக்காக அணுகல் உரிமையை உறுதிசெய்தல், இணைப்பாடத்திட்டத்தையும் வெளிக்கள செயற்பாடுகளையும் பாடசாலைகளில் ஊக்குவித்தல்.

தேசிய பாடசாலைகளுக்குத் தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களை வழங்கி சகல பாடசாலைகளிலும் சுகாதார நடவடிக்கைகள், குழந்தை நட்பு வகுப்பறைகள், ஆசிரியர் தங்கும் விடுதி மற்றும் ஓய்வறை வசதிகள் உட்பட சகல பௌதீக வசதிகளையும் மேம்படுத்துதல்.

தேசிய கல்விக் கொள்கைகளிற்கு இணங்க, சர்வதேச மற்றும் தனியார் பாடசாலைகளை ஒழுங்கமைத்தல்.

கல்வியின் தரம், மாணவர் ஒழுக்கம் மற்றும் ஒழுக்கத்தைப் பாரிய அளவில் பேணுவதற்குத் தேவையான கொள்கை நடவடிக்கைகளை எடுத்தல்.

தேசிய மற்றும் கூட்டணி மொழிக் கல்வியை மேம்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல், விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கல்வி வாய்ப்புகளை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

பௌத்த மற்றும் பாலி கற்கை நடவடிக்கைகளை ஊக்குவித்து சமயக் கல்வியின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் பிரிவென கல்வியை மேம்படுத்தல்

இலங்கை கல்வி நிர்வாக சேவை, அதிபர் சேவை மற்றும் ஆசிரியர் சேவையின் நிர்வகிப்பு மற்றும் ஏனைய கல்விச் சேவைகளின் ஆளணி நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

பாடசாலை நூலகங்களை மேம்படுத்தி, விருத்திசெய்து, பாடசாலைப் பாடப் புத்தகங்கள், சீருடைகள், மாணவர்களின் ஏனைய தேவைகளையும் வசதிகளையும் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தை உருவாக்கிச் செயற்படுத்துதல்.

கற்றல் மற்றும் கற்பித்தல் செயன்முறைக்கான நவீன தொழிநுட் வசதிகளைப் பயன்படுத்துதல், மேம்படுத்துதல் மற்றும் விருத்தி செய்தல்.


உலகளாவிய தேவைப்பாடுகளுக்கு ஏற்ற வகையில் ஒட்டு மொத்த கல்வித்துறையும் உள்ளடங்கும் வகையில் கல்வி மீளமைப்பை அறிமுகப்படுத்துதல்.

கல்விச் சீர்திருத்தம் தொடர்பான சனாதிபதிச் செயலணி மற்றும் விசேட குழுக்களின் பரிந்துரைகளைப் பொது உரையாடலுக்குப் பரிந்துரைத்து, கல்வியின் முன்னேற்றத்திற்காக அவற்றை ஏற்ற முறையில் நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தைத் தயாரித்தல்.

தகவல் தொழில்நுட்பத்தைத் தொடர்புபடுத்தி தொலைக் கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்துதல்.

பயனுள்ள கற்றல் மற்றும் கற்பித்தல் செயன்முறையை அடைவதற்காக தேவையான ஆசிரியர்களை உருவாக்கி, ஆசிரியர்களைப் பயிற்றுவித்து அவர்களின் திறன்களை மேம்படுத்துதல்.

இச் செயற்பணியை மேற்கொள்வதற்காக அமைச்சின் கல்வித் துறையின் கீழ் 02 திணைக்களங்களும் 02 நியதிச்சட்ட நிறுவனங்களும் இயங்குகின்றன. இந் நிறுவனங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட பணமும் செலவினங்கள் தொடர்பான விபரங்களும் பின்வருமாறாகும்.




| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒதுக்கீடு | 154,951 | 10,813 | 173 | 78 | 166,015 |
| பயன்பாடு | 123,190 | 6,574 | 90 | 67 | 129,921 |
| சேமிப்பு | 31,761 | 4,239 | 83 | 11 | 36,094 |

வரைபடம் 2.30 : வழங்கப்பட்ட ஒதுக்கீட்டின் அளவும் உள்ளபடியான செலவினமும்

ஆதாரம் : 2023 நிதிக்கூற்று

**தேசிய பாடசாலைகளில் முதலாம் தர மாணவர்களைச் சேர்ப்பதற்கான சுற்றறிக்கை ஏற்பாடுகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய அத்தியாவசிய மாற்றங்கள்**

பிரபல பாடசாலைகளில் 1 ஆம் தரத்திற்காக மாணவர்களைச் சேர்க்கையில் குடியிருப்பை உறுதிப்படுத்துவதற்காக குத்தகை உறுதிப்பத்திரத்தைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதன் காரணமாகவும் அவ் விண்ணப்பதாரர்களால் பாடசாலைக்கு அண்மித்த நிலையை அடிப்படையில் வழங்கப்படும் 50 மதிப்பெண்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் பாடசாலைக்கு அருகாமையில் ஒரு முகவரிக்கு குத்தகை உடன்படிக்கையில் கைச்சாத்திடப் படுவதால் நிரந்தர குடியிருப்பாளர்களைப் பார்க்கிலும் அதிகமான புள்ளிகளைப் பெற்றுக்கொள்வதற்கு குத்தகை உறுதிகொண்டவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கப்

பெற்றிருந்தது. 06 மாதங்களை விடக் குறைவாக பதிவு செய்யப்பட்ட குத்தகை உறுதிகளுக்காகவும் 0.5 மதிப்பெண்களைப் பெற்று, குடியிருக்கும் இடத்தில் இருந்து பாடசாலைக்கு உள்ள அண்மித்த தூரத்திற்கான 50 மதிப்பெண்களைப பெற்று பாடசாலையில் சேர்ந்த சந்தர்ப்பங்கள் பாரியளவில் உள்ளன. இதன் காரணத்தால், நீண்ட காலமாக அப் பகுதியில் நிரந்தரக் குடியிருப்புடனான பிள்ளைகளுக்கு பாடசாலைக்குச் சேரும் சந்தர்ப்பம் கிடைக்கப்பெறாதிருந்தது.

குறித்த பாடசாலையில் பழைய மாணவ/ மாணவிகளான பெற்றோரின் பிள்ளைகள் எனும் வகைப்படுத்தலின் கீழ் விண்ணப்பதாரிகளால் பாடசாலைக் காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட கல்வித் திறன் அடிப்படையில் ஆகக் கூடுதலாக 25 மதிப்பெண்களும், பாடத்திற்கு இணையான நடவடிக்கைகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட திறமைகளுக்காக ஆகக் கூடுதலாக 25 மதிப்பெண்களும், பழைய மாணவர் சங்க அங்கத்துவம், பாடசாலைக் காலத்தின் பின்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட கல்வித் திறன்கள் மற்றும் பாடசாலை மேம்பாட்டிற்காக வழங்கப்பட்ட பல்வேறுபட்ட ஒத்துழைப்பிற்காக ஆகக் கூடுதலாக 24 மதிப்பெண்களுமாக 74 மதிப்பெண்களும் வழங்கப்பட வேண்டும். குறித்த 74 மதிப்பெண்களும் நேர்முகத் தேர்வுக் குழுவின் இணக்கப்பாட்டுடன் பகுதிகளாகப் பிரித்துக்கொள்வதற்கு சுற்றறிக்கையின் மூலம் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்ததுடன் இங்கு குறித்த விடயம் தொடர்பாக பாடசாலைகளால் பல்வேறு மாற்றங்களுடனான அடிப்படைகள் பிரயோகிக்கப்பட்டு இக் கணிப்பீட்டின் கீழ் மொத்த மதிப்பெண்களில் 74 சதவீதமானவையும் நேர்முகத் தேர்வுக்குழுவின் இணக்கப்பாட்டில் வழங்கப் பட்டிருந்தமையால் பல்வேறு முறைகேடுகள் ஏற்பட்டிருந்தன.

**மோசடியான கொடுக்கல்வாங்கல்கள்**

1961 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உதவிப் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரிகள் (மேலதிக ஏற்பாடு) அதிகாரச்சட்டத்தின் படி அரசாங்கத்தினால் கையேற்கப்பட்ட பாடசாலைகளின் ஆதனங்கள் கல்வி அமைச்சிற்கு உரித்தானதுடன் அமைச்சிற்கு உரித்தான ஆதனங்கள் வேறு ஓர் நபருக்கு குத்தகைக்கு வழங்குவகை அங்கீகரிப்பதற்கு மேல் மாகாண சபைக்கு சட்டரீதியான இயலுமை இல்லை. எவ்வாறெனினும், மேல் மாகாண அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, 40 பேர்ச் கொ/பிங்வத்தை உபநந்த பாடசாலை வளாகமும் கட்டிடமும் 2008 நவம்பர் 01 ஆம் திகதி முதல் இரண்டு வருட காலமாக தொற்கால பொம்மலாட்டக் கலை

நிறுவனத்தை நடாத்துவதற்காக ஒரு நபருக் கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் குத்தகைக் காலம் முடிவுற்றிருந்த போதிலும் ஆதனத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. பாடசாலை ஒன்று மூடப்படுவது பாடசாலை கட்டமைப்புக் குழுவின் அங்கீகாரத்தின் படி மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் இப் பாடசாலை மூடப்பட்டமை தொடர்பாக மாகாண பாடசாலை கட்டமைப்புக் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றிருக்கவில்லை.

**சொத்து முகாமைத்துவ நலிவுகள்**

உதவிப் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரிகள் அதிகாரச்சட்டத்தின் படி, வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பாடசாலைககள் மற்றும் ஆசிரியர் கல்லூரி தொடர்பாக, அவற்றின் பெயர், ஸ்தாபிப்பு, கட்டிட அளவு, காணியின் அளவு மற்றும் குறிப்பாக யாரிடம் இருந்து கையேற்கப்பட்டுள்ளன என்பது குறித்த விபரங்கள் தொடர்பாக கல்வி அமைச்சில் அல்லது மாகாண அலுவலகங்களில் தரவு முறை ஒன்று பேணப்பட்டிருக்க வில்லை.

மாத்தறை ராஹுல கல்லூாயில் தற்போதும் இதன் பின்னரும் கல்விகற்கும் மாணவர்களினதும் பயன்பாட்டிற்காக ஸ்தாபிக்கப்பட்ட அபேகுணசேகர பொறுப்பு நிதியத்தின் கணக்கு செயலிழந்த நிலையில் இருந்த போதிலும் ரூபா 4.94 மில்லியன் கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் அத் தொகை மாணவர்களின் பயன்பாட்டிற்காகப் பயன்படுத்தப்பட்டிராது 06 வருட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது.

அமைச்சின் வளாகத்தில் 25 – 320 இருக்கைகளைக் கொண்ட கேட்போர் கூடம் ஒன்றும் 06 கூட்ட மண்டபங்கள் இருக்கையில் கல்வி அமைச்சால் நடாத்தப்பட்ட செயலமர்வுகளில் பாரிய எண்ணிக்கையிலானவை அமைச்சின் வளாகத்திற்கு அப்பால் வெளி கேட்போர் கூடங்களின் பயன்பாட்டில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இதற்காக ரூபா 10.59 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

**செயற்திட்டம் நிறைவேற்றப்படாது கைவிடப்பட்டிருந்தமை**

2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை செயற்பட்ட அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை தேசிய நிகழ்ச்சித்திட்டத்தில் ரூபா 5,439.91 தொகையான பொறுப்பின் அளவு இருக்கையில் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி பூர்த்தியடையாது நிறைவேற்றப்பட்டிருந்தது. இவ்வாறே, 1000 தேசிய பாடசாலைகளை ஸ்தாபிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு அதுவும் 23 பாடசாலைகள் மாத்திரம்

தேசிய பாடசாலைகளாக்கப்பட்டு இடைநடுவில் நிறுத்தப் பட்டிருந்தன.

அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தேவையான இணக்கப்பாட்டில் பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 367 மில்லியன் பெறுமதியான 45 செயற்திட்டங்களும், ஒதுக்கீடுகள் மட்டுப்படுத்தப் பட்டதன் காரணமாக பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 352 மில்லியன் பெறுமதியான 32 செயற்திட்டங்களும் மத்திய மாகாணத்தில் 2023 ஆம் ஆண்டின் இறுதியின் போதும் காணப்பட்டன.

1000 மேல் நிலைப் பாடசாலைகள் அபிவிருத்தி செய்யும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாடசாலைகளில் தொழில்நுட்ப ஆய்வுகூடங்களை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்கு உரித்தான இடைநடுவில் வேலைகள் நிறுத்தப்பட்டிருந்த மூன்று ஆய்வுகூடங்கள் காணப்பட்ட துடன் இதற்காக ரூபா 24.69 மில்லியன் செலவிடப்பட்டிருந்தன.

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்கியிராமை**

2007 திசெம்பர் 13 ஆம் திகதிய 20/2007 ஆம் இலக்க கல்வி அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கையின் படி, மிகவும் வசதியான பாடசாலை வகைப்படுத்தலுக்கு உரித்தான பாடசாலை ஆசிரியர் ஒருவரின் சேவைக் காலம் ஆகக் கூடுதலாக 6 ஆண்டுகளாக நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் ஆய்விற்குட்படுத்தப்பட்ட மிகவும் வசதியான 4 பாடசாலைகளில் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவைக் காலத்தைக் கொண்ட 113 ஆசிரியர்கள் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

பொது மக்கள் தினத்தில் கூட்டங்கள், செயலமர்வுகள், விழாக்கள் போன்றவற்றை ஒழுங்குபடுத்தலாகாத போதிலும் தெரிவுக் கணக்காய்வின் போது அந் நாட்களில் கல்வி அமைச்சால் 102 செயலமர்வுகள் நடாத்தப் பட்டிருந்தன.

பாடத்துடன் இணைந்த கடமைகளிற்கு உரித்தான பல்வேறு கைநூல்களைத் தயாரிப்பது, வழிகாட்டல் கைநூல் தயாரிக்கப்படுவது, சுற்றறிக்கை தயாரிக்கப்படுவது, ஆசிரியர் பயிற்சித் தொகுதிகள் தயாரிப்பது போன்ற கற்பித்தல் வடிவில் இல்லாத செயற்பணிகளில் கலந்து கொண்ட உத்தியோகத்தர்களுக்காக 2023 ஆம் ஆண்டில் நிறுவகப் பணிப்பாளர் நாயகத்தின் 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய கடிதத்தின் அறிவுறுத்தல்களுக்கு மாறாக வளப் பங்களிப்புத் தொகையாக ரூபா 7.42 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**வழிகாட்டலை நாளதுவரையாக்கி இராமை**

தற்போதைய கட்டமைப்புக் குழு நடவடிக்கைகள் தொடர்பான தீர்மானத்தை எடுக்கையில் 1981 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்ட உசாவுகைக் கோவையில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இதனை தற்போதைய நிலைக்கு ஏற்ற வகையில் நாளதுவரையாக்கப்பட்டிராததுடன் இவ் உசாவுகைக் கோவைக்கு சட்டரீதியான அங்கீகாரமும் வழங்கப்பட்டிருக்கவில்லை. கல்வி அமைச்சு இவ் வழிகாட்டலின் படி நடவடிக்கை எடுத்துவருகின்றது.

**கட்டமைப்புக் குழு அங்கீகாரமின்றி இடைநடுவில் புதிய வகுப்புக்களை ஆரம்பித்திருந்தமை**

2023 ஏப்ரல் 25 ஆம் திகதிய 17/2023 ஆம் இலக்க கல்வி அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கையின் (இ) பந்தியின் படி தேசிய பாடசாலை எனில், கல்வி அமைச்சின் கட்டமைப்புக் குழுவிலும் மாகாண பாடசாலை எனில் மாகாணக் கட்டமைப்பிலும் அங்கீகாரம் இன்றி வகுப்பு/ இணை வகுப்புகளின் எண்ணிக்கை மாற்றப்படலாகாத போதிலும் கட்டமைப்புக் குழுவின் அங்கீகாரம் இன்றி இடைநிலை வகுப்பிற்காக புதிய வகுப்பு ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

**இடைநடுவே வேறு புதிய வகுப்புகள் ஆரம்பிக்கப் பட்டிருந்தமையால் புலமைப் பரிசில் தடைதாண்டற் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கு இருந்த சந்தர்ப்பம் கிடைக்கத் தவறியமை**

6 ஆம் ஆண்டிற்காக புலமைப் பரிசில் தடைதாண்டற் பரீட்சையின் மூலம் மாணவர்களைச் சேர்த்ததன் பின்னர் 7 ஆம் ஆண்டிற்கான வகுப்பிற்காக கருத்திற்கொள்ளத்தக்க வகையில் மாணவர்கள் சில பாடசாலைகளில் சேர்க்கப்பட்டிருந்ததுடன் இது புலமைப் பரிசில் தடைதாண்டலில் சித்தி பெற்ற மாணவர்கள் அப் பாடசாலையில் சேர்க்கப்படுவதற்குள்ள வாய்ப்பு இழக்கப்படும் நிலையாகக் காணப்பட்டது. இதன் படி, ஆய்விற்குட்பட்ட 70 பாடசாலைகளில் 2016 ஆம் ஆண்டின் போது 7 ஆம் வகுப்பில் புதிதாக 470 சேர்க்கைகளும், 2017 ஆம் ஆண்டின் போது 503 சேர்க்கைகளும், 2018 ஆம் ஆண்டின் போது 718 சேர்க்கைகளும், 2019 ஆம் ஆண்டின் போது 829 சேர்க்கைகளும், 2020 ஆம் ஆண்டின் போது 382 சேர்க்கைகளும், 2021 ஆம் ஆண்டின் போது 707 சேர்க்கைகளும், 2022 ஆம் ஆண்டின் போது 889 சேர்க்கைகளுமாக புதிய சேர்க்கைகள் நடாத்தப்பட்டிருந்தன.

2021 மே 28 ஆம் திகதிய 13/2021 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 22/1960/607/079 ஆம் இலக்க 2022 சனவரி 02 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, 1 முதல் 5 ஆம் ஆண்டு வரை வகுப்பொன்றில் 40 மாணவர்களும் 6 முதல் 11 ஆம் ஆண்டு வரை வகுப்பொன்றில் 45 மாணவர்களுமாகக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இதன் மூலம் ஒரு வகுப்பில்

புலமைப்பரிசில் மூலம் மேலும் 5 மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான இயலுமை இருந்த போதிலும் 5 ஆம் வகுப்பு வரையில் 40 எனும் வரையறைக்கு மேல் மாணவர்கள் வகுப்பில் சேர்க்கப்பட்டிருந்தனர். ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட 70 பாடசாலைகளில் 25 பாடசாலைகளில் 548 மாணவர்கள் இவ் எல்லையைப் பார்க்கிலும் கூடுதலாகச் சேர்க்கப்பட்டிருந்ததுடன் இதன் காரணமாக 5 ஆம் ஆண்டின் போது ஒரு வகுப்பில் 40 மாணவர்கள் எனும் ஆகக் கூடுதலான எண்ணிக்கை 6 ஆம் ஆண்டின் போது 45 வரை அதிகரித்திருந்த போதிலும் அது வரையில் அவ் வகுப்புகளில் வெற்றிடங்கள் குறைவாக நிலவுகின்றமையால் அவ் வகுப்புகளுக்கு புலமைப் பரிசில் தடைதாண்டல் மூலம் கூடுதலான மாணவர்களுக்கு சேரும் வாய்ப்பு கிடைக்கப்பெறாது போயிற்று.

**சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளை ஒழுங்குபடுத்துவதற்காக நடைமுறை ஒன்றை அமைக்காமை**

2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் படி, சர்வதேச பாடசாலைகளின் ஒழுங்குபடுத்தலுக்காக தலையிடுவதற்கு தற்போதுள்ள சட்ட ரீதியான தடைகளை இனங்கண்டு தற்போதைய பிரமாணங்களைத் திருத்தியமைப்பதற்காக சட்டமா அதிபதி திணைக்களத்தின் ஆலோசனைகள் பெறப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதன் படி, 2019 ஆம் ஆண்டளவில் பிரமாணங்கள் தயாரிக்கப்படுவதற்கும் அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலை களுக்காக சட்டங்களைத் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் வெளியிடப்பட்ட அரச சார்பற்ற பாடசாலைகள் தொடர்பாக ஒழுக்க நடைமுறை என மேற்கொள்ளப்பட்ட விசேட செயலாற்றல் அறிக்கையிலும் அதன் தேவைப்பாடு குறித்து குறிப்பிட்டிருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டின் பின்னர் இது தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**விசேட தேவைப்பாட்டைக் கொண்ட மாணவர்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட விசேட கல்வி நிலையத்தைப் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொண்டிராமை**

விசேட தேவைப்பாட்டைக் கொண்ட மாணவர்களுக்காக ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்விக்காக சமனான நுழைவைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் வெனிவெல்கொல விசேட கல்வி வள மற்றும் தகவல் நிலையம் ஒன்று ரூபா 247 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அந் நிலையம் 2019 செப்தெம்பர் 09 ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டிருந்த போதிலும் பிள்ளைகளுக்குத் தேவையான வகையிலும் குறித்த ஒப்பந்த வழங்கலின் படி நிர்மாணிக்கப்பட்டிராததன் காரணமாக இது வரையிலும் அந் நிலை தீர்த்துவைக்கப்பட்டிராததன் காரணமாக 04 கடந்திருந்த போதிலும் நிலையம் ஸ்தாபிக்கப்பட்ட நோக்கத்திற்கமைய

பிள்ளைகளின் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தப் பட்டிருக்க வில்லை.

**பிரிவெனக் கற்கைப் பிரிவின் செயலாற்றல்**

1979 இன் 64 ஆம் இலக்க பிரிவெனக் கல்வி அதிகாரச்சட்டத்திற்கு புதிய திருத்தத்தை ஏற்படுத்தி 2018 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்டிருந்த அதிகாரச்சட்டத் திருத்த வரைபு சட்டமா அதிபரின் அங்கீகாரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பிரிவெனக் கல்வி அதிகாரச்சட்டம் திருத்தப்பட்டிருக்கவில்லை. 2013 ஆம் ஆண்டின் போதான செயலாற்றல் அறிக்கையின் படி தேசிய பிரிவெனக் கல்வித் திட்டம் ஒன்று தயாரிக்கப்படுவது தொடர்பாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் திகதி வரையிலும் தேசிய பிரிவெனக் கல்வித் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

2011 வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் படி 45 பிரிவெனக்களில் மும்மொழிக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் தற்போது 822 பிரிவெனக்கள் செயற்பட்ட போதிலும் மும்மொழிக் கல்வி எந்த பிரிவினவிலும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**தேசிய கல்விச் சீர்திருத்தத்தை மேற்கொள்ள இயலாது போனமை**

கல்விச் சீர்திருத்தங்கள், திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக் கல்வி இராஜாங்க அமைச்சு 2020 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கபட்டு 2020 முதல் 2022 வரையான 03 ஆண்டுகளின் போது ரூபா 5,219 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் திட்டமிடப்பட்டவாறு தேசிய கல்விச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளத்தவறியிருந்தது. 2023 ஆம் ஆண்டிற்காக ரூபா 200 மில்லியன் தொகையான ஏற்பாடு இதற்காக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2023 மார்ச் மாதத்தில் கல்விச் சீர்திருத்த நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக திட்டமிடப்பட்டவாறு தேசிய கல்வி சீர்திருத்தத்தை மேற்கொள்ள இயலாது போயிருந்ததுடன் தேசிய கல்வி சீர்திருத்தக் கட்டமைப்பின் தயாரிப்பு மாத்திரம் 2023 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் படி, புதிய கல்விச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளவதில் மேலும் தாமதம் ஏற்பட்டிருந்தது.

**தேசிய கல்வி முகாமைத்துவத் தகவல் முறைமை**

பாடசாலை மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் தகவல்களை உள்ளடக்கிய 09 தொகுதிகளின் கீழ் செயற்படும் கணனி முறைமை (NEMIS) ரூபா 61 மில்லியன் அளவான செலவில் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் தரவு முறைமை முறையாக நாளதுவரையாக்கப்பட்டு தேவையான மேம்பாட்டிற்காக

மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளத் தவறியதன் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் நிலையை எய்த இயலாது போயிற்று.

**இரண்டாம் நிலைக் கல்விசார்ந்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றல்**

ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் ஏற்படுத்தப்பட்ட கடன் உடன்படிக்கையின் படி, இலங்கை அரசாங்கம் பெற்றுக்கொண்ட கடன் தொகையின் அளவில் மாறுபடும் வட்டி வீதத்தின் கீழ் வட்டித் தொகையும் விடுவிக்கப்படாத கடன் தொகை அளவில் 0.15 சதவீதப் படியான பொறுப்புக் கட்டணம் செலுத்தப்பட வேண்டியிருந்தது. இதன்படி, 2023 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக விடுவிக்கப்பட்ட 216 மில்லியன் ஐ.அ. டொலர்களுக்காக ரூபா 3,592 மில்லியன் வட்டித் தொகையும் விடுவிக்கப்படாத 184 மில்லியன் ஐ.அ. டொலர்களுக்காக 103 மில்லியன் பொறுப்புக் கட்டணமும் செலுத்தப்பட்டிருந்தது. அமைச்சால் ஒதுக்கீட்டுத் தொடர் காரணிகள் செயற்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டதை அடுத்து பொறுப்புக் கட்டணம் செலுத்தப்பட நேர்ந்ததுடன் நிகழ்ச்சித்திட்டம் தொடர்ந்து தோல்வி அடையுமாயின் விளைவற்ற செலவினம் மேலும் ஏற்படுவதுடன் செலுத்தப்பட்ட பொறுப்புக் கட்டணமும் விளைவற்ற செலவினமாகியிருந்தது.

**பராமரிப்பு நடவடிக்கைகளிற்கான உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்டிராமை**

2018 ஆம் ஆண்டின் போது ரூபா 28.5 மில்லியன் செலவில் 250 கிலோ வோட் சூரிய சக்தி முறைமை ஒன்று திணைக்களத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. சூரிய மின்னாற்றல் முறைமை ஸ்தாபிக்கப்பட்ட நாள் முதல் ஏழாண்டு காலம் அத்தியாவசிய பராமரிப்பு நடவடிக்கைகள் வழங்கப்பட வேண்டும் எனவும் பிடிமானப் பணத்தில் 10 சதவீதத்தை விடுவிக்க முன்னர் வழங்குனரால் பராமரிப்பு சேவை வழங்கப்படுவது குறித்து ஓர் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டியதாகவும் மனுப் பத்திரங்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், பரீட்சைகள் திணைக்களத்தால் 2018 யூலை 12 ஆம் திகதி வரையில் இச் செயற்திட்டத்திற்கு உரிய முழுத்தொகையும் செலுத்தப்பட்டு முடிவுற்றிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சேவையை வழங்கிய நிறுவகத்துடன் குறித்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் சூரிய மின்னாற்றல் முறைமையின் பராமரிப்பு நடவடிக்கைகள் முறையாக நடாத்தப்பட்டிருக்கவில்லை.

திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளமும் ஈ - சேவைகளுக்கு உரிய சேவை உடன்படிக்கையும் 2021 நவம்பர் 30 ஆம் திகதி முடிவுற்றிருந்த போதிலும் இணையதளம் நாளதுவரையாக்கப்படுவதற்கு இயலாதிருந்தமையால் இணையதள மற்றும் வலையமைப்பு சேவைகள் பாதுகாப்பின்றிக் காணப்பட்டன.

| | |
|---|---|
| **1990 ஆம் ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளில் பரீட்சைப் பெறுபேற்று ஆவணங்கள் கணனிமயமாக்கப்படுவதிலான தாமதம்** | 1990 ஆம் ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளின் போதான பரீட்சைப் பெறுபேற்று ஆவணங்களை பொது மக்களுக்குத் தேவைப்படும் சந்தர்ப்பத்தின் போது வழங்கப்படுவதற்கு எளிதான வகையில் அப் பெறுபேற்று ஆவணங்களை ஸ்கான் செய்யப்பட்டு வைக்கக் கூடிய வகையிலான மென்பொருள் ஒன்றை உருவாக்கும் செயற்திட்டம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நிறைவேற்றியிருக்கவில்லை. இதன் காரணமாக அதனால் எதிர்பார்க்கப்பட்ட பழைய பெறுபேற்று ஆவணங்களைப் பாதுகாத்தல், மூலப் பிரதியை ஸ்கான் செய்தல், பெறுபேற்று ஆவணத்தில் உள்ளடங்கியுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு சான்றிதழ் உறுதிப்படுத்தற் கடிதங்கள், அச்சீட்டுப் பிரதிகளாகப் பெற்றுக்கொள்ளல், பரீட்சை எண் மற்றும் ஆண்டை உள்ளீடு செய்து பரீட்சைப் பெறுபேற்றைச் சரியாகப் பெற்றுக்கொள்ள இயலுமானவகையில் தரவு முறை ஒன்றைத் தயாரித்தல், கணனித் தரவு முறையில் பரீட்சைச் சான்றிதழில் உள்ளடங்கும் சகல விபரங்களையும் உள்ளடக்கி அத் தகவல் தரவு முறையாகப் பேணப்படுதல் போன்ற நோக்கங்களை மேற்கொள்ள இயலாதிருந்தது. |
| **கொள்வனவு செய்யப்பட்ட நாள் முதல் பயன்படுத்தப்பட்டிராத சொத்துக்கள்** | பரீட்சை வினாத்தாள்களின் இரகசியத்தன்மையைப் பாதுகாப்பதற்காக 2018 ஆம் ஆண்டில் ரூபா 8 மில்லியன் பெறுமதியான இணைய டிஜிடல் அச்சு இயந்திரத்தின் wrapping solution பாகம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் தற்போது பயன்படுத்தப்படும் இரகசிய ஆவணப் பொதியிடல் செயற்பாட்டுடன் அப் பாகம் பொருந்தாததன் காரணமாக இது வரையில் அவ் இயந்திரப் பாகம் விளைவற்றுக் காணப்பட்டது.<br><br>2005 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட Stitch Master Gathering and wire Stitching இயந்திரம் இயக்கப்படுகையில் கடதாசிகள் வெளியே வீழ்ந்ததன் காரணமாக கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் இருந்து 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. |
| **பிரேல் பாடப்புத்தக நடவடிக்கைகளில் தாமதம்** | 2023 ஆம் ஆண்டிற்காக 10 விசேட பாடசாலை/ வலயங்களிற்கு வழங்கப்பட வேண்டிய 5,698 பிரேல் பாடப்புத்தகங்களில் 2023 ஆகஸ்ட் மாதம் வரையிலும் 1,659 புத்தகங்கள் மாத்திரமே வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. |

**ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு இணங்காத ஆட்சேர்ப்புகள்**

தேசிய கல்வி நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு முறைப்படி தகமைகளைக் கொண்டிராத பிரதிப் பணிப்பாளர் பதவியை வகிக்கும் இரு உத்தியோகத்தர்கள் தொடர்பாக கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகள் அனைத்தும் நிறுவன முகாமைத்துவத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒரு வருட காலம் கடந்திருந்த போதிலும் தகமைகளற்ற பதவி வகிக்கும் உத்தியோகத்தர்கள் இருவருக்கும் தொடர்ந்து குறித்த சம்பளமும் படிப்பணமும் செலுத்தப்பட்டிருந்தது.

# தொழிற் கல்வி

அறிவாற்றல், தொழிற்துறைத் திறன் மற்றும் திறன் மிக்க சமுதாயத்தை உருவாக்கி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களை மேம்படுத்துவதற்கு உகந்த பின்னணியை அமைப்பதன் மூலம் வலய ரீதியான புதிய கேந்திர நிலையத்திற்கான சூழலை அமைப்பது தற்போதைய அவசரத் தேவையாகும். இதற்காக தற்போதைய மற்றும் எதிர்கால ஊழியப் படையை மிகச் சிக்கலான பொருளாதார முறைக்கு ஏற்ற வகையில் நவீனமயமாக்குதல் அவசியமாகும். இதற்காக திறனிற்கும் அறிவிற்கும் இடையிலான இடைவெளியை நிரப்புவதற்கு பொருளாதாரத்தில் நிலவும் உயர் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி வாய்ப்புகளை அதிகரித்தல் வேண்டும். அவ் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில் கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவின் கீழ் ஒரு திணைக்களமும் 20 நியதிச்சட்ட நிறுவனங்களாலும் பின்வரும் பணி மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது.

| | |
|---|---|
| **செயற்பணிகள்** | தொழிற்கல்வி மீதான நாட்டத்தை அதிகரிக்க மூலோபாயங்களை வகுத்து செயற்படுத்துதல். |
| | கல்வித் தகுதியைப் பொருட்படுத்தாது தொழிற்கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளை உருவாக்குதல், பல்கலைக்கழக அனுமதிக்காக தகைமை பெறாத மாணவர்களுக்கு தொழிற்திறன் மற்றும் வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல். கல்விச் சந்தர்ப்பங்களை விரிவாக்குவதற்காக இயலுமானவகையில் கொள்கை வகுத்தல். |
| | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிற் சந்தைகளுக்கு ஏற்ற ஊழியப் படையை உருவாக்குவதற்காக கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப கல்வியை நவீனமயமாக்குதல். |
| | தொழில்துறைப் பாடத்திட்டங்களை புதுப்பித்து - One TVET எனும் எண்ணக்கருவின் கீழ் தொடர்புடைய நிறுவனங்களை வலையமைத்து அவற்றை தொழில்நுட்ப பட்டப்படிப்பு நிறுவனங்களாக்குதல். |
| | தொழிற்பயிற்சி வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல். |
| | தற்போதுள்ள தேசிய தொழிற்கல்வித் தகைமை (NVQ) நிலைகளை 7 இல் இருந்து 10 ஆம் மட்டம் வரை அதிகரித்து இதற்கமைவாக இலங்கை தகுதிக் கட்டமைப்பை (SLQF) திருத்தியமைத்தல். |
| | தொழிற்திறன் கல்விப் பாடநெறிகளுக்கு தொழில்முனைவு, தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலம் மற்றும் பிற மொழிகள் ஆகியவற்றை உள்ளடக்கி பாடத்திட்டத்தை திருத்துதல். |
| | நடமாடும் தொழில்நுட்ப கல்விச் சேவைகள் மூலம் தொழில் பயிற்சி வாய்ப்புகளை விரிவுபடுத்துதல். |


சர்வதேச ஆராய்ச்சி நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்காக ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு வசதிகளை வழங்குதல்.

சர்வதேச புத்தாக்குனர் நிறுவகத்தை ஸ்தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு புத்தாக்க மற்றும் ஆராய்ச்சி முடிவுகளை பயன்பாட்டிற்கு எடுக்கப்படுவதற்காக ஆக்கபூர்வமான பொறிமுறை ஒன்றைத் தயாரித்தல்.

அறிவியல் தொழிற்துறை மற்றும் சமூக, பொரளாதார ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

புதிய கண்டுபிடிப்புகளுக்கு சமூகத்தை வழிநடத்தி ஊக்குவித்தல்.

மேற்குறித்த செயற்பணியை மேற்கொள்வதற்காக பாராளுமன்றத்தால் 2023 ஆம் ஆண்டிற்காக ரூபா 15,690.10 மில்லியன் தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இதில், ரூபா 11,952.82 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் படி, அக் காலப்பகுதியின் போது பாராளுமன்றத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ஏற்பாட்டில் 24 சதவீதமான அதாவது ரூபா 3,737.28 மில்லியன் தொகையான ஒதுக்கீடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரம் வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது.




| | கல்வி அமைச்சு திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவு) | தொழிநுட்பக் கல்வி மற்றும் பயிற்றுவிப்புத் திணைக்களம் | கூட்டுத்தொகை |
|---|---|---|---|
| ஏற்பாடு (ரூ. மில்லியன்) | 13இ253.10 | 2இ437.00 | 15இ690.10 |
| செலவினம் (ரூ. மில்லியன்) | 9இ737.86 | 2இ214.96 | 11இ952.82 |
| மிகை (ரூ. மில்லியன்) | 3இ515.24 | 222.04 | 3இ737.28 |

வரைபடம் 2.35: பாராளுமன்றத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த ஒதுக்கீடும் பயன்பாடும்
ஆதாரம் - திறைசேரியின் இறுதிக் கணக்கறிக்கை

## கணக்காய்வு அவதானிப்புகள்

### கல்வி அமைச்சு - திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவு

**பயிற்றுவிக்கப்பட்ட பணியாட்களை வெளிநாட்டிற்கு அனுப்பிவைத்தல்**

2021 ஆம் ஆண்டின் போது 100,000 பயிற்றப்பட்ட பணியாட்கள் வெளிநாட்டிற்கு அனுப்பிவைக்கும் நோக்கில் திறன் அபிவிருத்தி மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சிற்கு இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், இதன் கீழ் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை 05 தவணைகளில் 1,606 பயிலுனர்களின் தகவல் மாத்திரம் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அனுப்பி வைக்கப்பட்ட பயிலுனர்களில் உண்மையில் வெளிநாட்டிற்குச் சென்றிருந்தவர்களின் எண்ணிக்கை, பணி மற்றும் சிக்கல்கள் தொடர்பான விபரமும் அமைச்சிடம் இருக்கவில்லை.

**பயிற்றுவிக்கப்பட்ட பணியாட்கள் பற்றாக்குறை**

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் 02 சந்தர்ப்பங்களில் அனுப்பிவைக்கப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்புத் தொடர்பான தகவல்களுடன் ஒப்பிடுகையில், வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையில் கூடுதலான தேவைப்பாடுள்ள 65,657 வேலைவாய்ப்புகள் கிடைக்கப்பெற்றிருந்ததுடன் அவ் வேலை வாய்ப்புகளில் மேலும் பயிலுனர்களை ஈடுபடுத்தக் கூடிய 33,596 வேலை வாய்ப்புகள் காணப்பட்ட போதிலும் இதற்காக பயிலுனர்களை ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்**

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு கைத்தொழில் மற்றும் சேவைத் துறைகளின் பங்களிப்பிற்காக திறன் வாய்ந்த பணியாட்களை உருவாக்குவதற்கான முக்கிய பங்களிப்பை திறன் அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர்களிடம் இருந்து பெறவேண்டியிருந்ததுடன் இதற்காக நாடளாவிய ரீதியில் உள்ள 474 பிரதேச செயலகங்களுக்கு 317 திறன் அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர்களும் மாவட்டச் செயலாளர் காரியாலயங்களுக்காக அவ் உத்தியோகத்தர்கள் 58 பேரும் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் அவ் உத்தியோகத்தர்களின் 2023 ஆம் ஆண்டிற்கான செயற்திறனை ஆய்வு செய்கையில் ஒப்படைக்கப்பட்ட 22 செயற்பாடுகளில் 18 இற்கு உரித்தான ஆண்டிற்கான முன்னேற்றம் 0 இல் இருந்து

35 சதவீதம் வரையான குறைவான அளவைச் சுட்டிக் காட்டியிருந்தது.

## மூன்றாம் நிலை மற்றும் தொழிற்துறைக் கல்வி ஆணைக்குழு

**தேசிய தொழிற் கல்வி அபிவிருத்தித் திட்டம்**

1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழிற்துறைக் கல்வி ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் முதன்மை நோக்கில் ஒன்றான தேசிய தொழிற்துறைக் கல்வி அபிவிருத்திட்டம் தயாரிக்கப்படுவது ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டு 32 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேல்மாகாணத்திற்கான தொழிற்துறைக் கல்விப் பயிற்சித் திட்டம் ஒன்று தயாரிக்கப்படுவதற்கு ஆணைக்குழுவால் 2013 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் திட்டம் தயாரிக்கப்பட்டு நிறைவேற்றப்படாதிருந்தது.

**பதிவு செய்யப்படாத நிறுவனங்கள்**

2023 ஆம் ஆண்டின் போது அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்துறைக் கல்வி ஆணைக்குழுவின் விதிமுறைகளுக்கு மாறாகச் செயற்படும் நிறுவனங்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கக் கூடிய வகையில் அதிகாரச்சட்டத்தைத் திருத்திக் கொள்ளுமாறு பரிந்துரை விடுக்கப்பட்டிருந்த போதிலும் அதிகாரச்சட்டத்தைத் திருத்தும் பணி மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், ஆணைக்குழுவால் பாடநெறிகளை நடாத்துவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட நிறுவனங்கள் தொடர்பாக 2023 செப்தெம்பர் 15 ஆம் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது 16 நிறுவனங்களில் 13 நிறுவனங்கள் அப் பாடநெறிகளுக்காக மாணவர்களை ஆட்சேர்த்து ஆணைக்குழுவின் கட்டளையைக் கருத்திற்கொள்ளாது வழமைபோல் தமது கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வது அவதானிக்கப்பட்டது.

**பதிவைப் புதுப்பித்திராமை**

2024 மார்ச் மாதமளவில் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டிருந்த நிறுவனங்களில் பதிவு காலாவதியாகி 20 ஆண்டுகளிற்கு மேற்பட்ட 16 நிறுவனங்களும் 05 ஆண்டுகள் முதல் 20 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த 486 நிறுவனங்களும் பதிவைப் புதுப்பிப்பதற்காக கோரியிருக்கவில்லை. மேலும், பதிவைப்

புதுப்பிக்காது தொழிற்துறை நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுவதனைப் பரீட்சிப்பதற்காக எந்தவித செயற்பாடும் ஆணைக்குழுவால் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே, 2016 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை 36 நிறுவனங்கள் பதிவுகளைப் புதுப்பிப்பதற்காகக் கோரியிருந்த போதிலும் அந் நிறுவனங்களின் பதிவுகள் புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## வாழ்க்கைத் தொழில்சார் தொழிநுட்பவியல் பல்கலைக்கழகம்

**பாடநெறிகளின் தரச் சான்றிதழ்**

பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேலான காலம் கடந்திருந்த போதிலும் வாழ்க்கைத் தொழில்சார் தொழிநுட்பவியல் பல்கலைக்கழகத்தின் மூலம் நடாத்தப்பட்டு வரும் பொறியியல் பட்டப் பாடநெறிக்காக 2023 திசெம்பர் 31 வரை, எதிர்பார்க்கப்பட்ட அளவில் பட்டப் பாடநெறிகளின் தரத்தை உறுதிப்படுத்திக்கொள்ள இயலாததன் காரணமாக அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள இயலாதிருந்தது.

**பூர்த்தியடையாத நிர்மாணப் பணிகள்**

பல்கலைக்கழகத்திற்கு பல்நோக்கு கேட்போர் கூட கட்டிடமும் விரிவுரைக்கூடத்துடன் கூடிய ஓர் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 2011 ஏப்ரல் 27 ஆம் திகதி அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் இதற்காக ரூபா 434.4 மில்லியன் தொகை திறைசேரியாலும் துறைசார் திறன் மேம்பாட்டுச் செயற்திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்தது. 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் இதில் ரூபா 304.5 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் இக் கட்டிடத்தில் இனங்காணப்பட்ட குறைபாடுகள் திருத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## தொழிற் பயிற்சி அதிகாரசபை

### தொழிற்பயிற்சி நிலையம்

**நிர்மாணிப்புகள் இடைநடுவே நிறுத்தப்பட்டமை**

இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபையின் ஹம்பாந்தோட்டை மிரிஜ்ஜவில தேசிய தொழிற்பயிற்சி நிலைய நிர்மாணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு வேலைத்தளக் கட்டிடத்திற்காக ரூபா 19.05 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் 2015 சனவரி மாதம் முதல் நிர்மாணிப்புகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

நிர்மாணிப்பு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு கட்டிடம் 2023 ஆம் ஆண்டின் இறுதியிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**விளைவற்ற சொத்துக்கள் - விடுதி**

அதிகாரசபைக்கு உரித்தான உருகொடவத்த இலங்கை தேசிய தொழிற்பயிற்சி நிறுவகத்திற்காக 2020 ஆம் ஆண்டின் போது கொரியா அரசாங்கத்தின் உதவியுடன் ஏறத்தாழ 100 மாணவர்களுக்காக தங்குமிட வசதிகளை வழங்கக்கூடிய வகையில் 48 அறைகளைக் கொண்ட சகல வசதிகளுடனான மாணவ விடுதி ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் முழு நேர பாடநெறிகளைப் பயிலும் மாணவர்களுக்கான விடுதி வசதிகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

மேலும், அதிகாரசபைக்கு உரித்தான குச்சவெளி ஹொட்டேல் பாடசாலையில் 52 பயிலுனர்களுக்கு தங்குமிடங்களை வழங்கக்கூடிய முழுமையான 12 அறைகளைக் கொண்ட இரு மாடி விடுதிக் கட்டிடம் திறன் துறை அபிவிருத்திச் செயற்திட்ட நிதியத்தில் ரூபா 140.21 மில்லியன் தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் நிலையான நீர் வழங்கல் பெற்றுக்கொள்ளப்பட இயலாது போனதன் காரணமாக அவ் விடுதி பயன்படுத்தப்படுவதற்கு இயலாதிருந்தது.

**விளைவற்ற சொத்துக்கள் - காணி**

அதிகாரசபையால் 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 5.82 மில்லியன் செலவின் கொள்வனவு செய்யப பட்டிருந்த ஹம்பாந்தோட்டை மாவட்ட ஹேனகடுவ வெலேவத்தவில் உள்ள 02 ரூட் 33.5 பேர்ச் காணி மற்றும் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 34.03 மில்லியன் செலவிடப்பட்டு நீண்ட காலக் குத்தகை அடிப்படையில் பெறப்பட்டிருந்த பாணந்துறை மோதரவிலவில் உள்ள 01 ஏக்கர் விஸ்தீரணமான காணி 2023 ஆம் ஆண்டு வரையிலும் தொழிற் பயிற்சி நடவடிக்கைகளிற்காகப் பயன்படுத்தப்படாது காணப்பட்டது.

## தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப தொழிற்துறைத் திறன் சபை

**தகவல் முறைமை**

சபையால் தொழிநுட்ப தொழிற்துறைக் கல்வி மற்றும் பயிற்சிப் (TVET) பிரிவின் பாடநெறியைப் பூர்த்தி செய்யும் மாணவர்கள் மற்றும் கைத்தொழிலாளர்களைப் பதிவு செய்யும் சேவையைப் பெற்றுக்கொள்ளும்

நோக்கில் ரூபா 11.23 மில்லியன் செலவில் மொபைல் அப்ளிகேஷன் ஒன்று உருவாக்கப்பட்டிருந்த போதிலும் அதனைச் செயற்படுத்துவதற்கான வசதிகள் வழங்கப்பட்டிராததன் காரணமாக குறித்த தரப்பினருக்கு நலனைப் பெற்றுக்கொள்ள இயலாதிருந்தது.

## சமுத்திர பல்கலைக்கழகம்

**''சிசு சவிய'' மாணவ உதவுதொகை வழங்கப்பட்டிராமை**

பொருளாதார நெருக்கடி மிக்க மாணவர்களுக்காக அமைச்சின் மூலம் ''நிபுணதா சிசு சவிய'' மாணவ உதவுதொகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2023 யூன் மாதம் 418 மாணவர்களுக்காக ரூபா 6.63 மில்லியன் சமுத்திர பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இதில் 178 மாணவர்களுக்கு 0.62 மில்லியன் தொகை மாத்திரம் வழங்கப்பட்டு எஞ்சிய ரூபா 6.01 மில்லியன் தொகை நடைமுறைக் கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டு 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை விளைவற்றுக் காணப்பட்டது.

## இலங்கை உயர் தொழிநுட்ப நிறுவனம்

**பூர்த்தியடையாத நிர்மாணப் பணிகள்**

நிறுவனத்தின் தலைமைக் காரியாலயத்தின் செயற்பாட்டு நோக்கிற்காக தெஹிவளை உயர் தொழிநுட்ப நிறுவன வளாகத்தில் ரூபா 20.49 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடத்தின் 3 மாடிகளின் வேலை பூர்த்தி செய்யப்பட்டு 2017 பெப்ரவரி 21 ஆம் திகதி நிறுவனத்திற்கு ஒப்படைத்திருந்த போதிலும் எஞ்சிய இரு மாடிகளின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிராததன் காரணமாக கட்டிடம் விளைவற்றுக் காணப்பட்டது. எதிர்பார்க்கப்பட்டவாறு கட்டிடம் பூர்த்தி செய்யப்பட்டிராததன் காரணமாக தலைமைக் காரியாலயத்தை இயக்குவதற்காக 2017 ஆம் ஆண்டு முதல 2023 திசெம்பர் வரையான காலப்பகுதிக்காக ரூபா 64.48 மில்லியன் தொகை குத்தகை வாடகையாகச் செலவிட நேர்ந்திருந்தது. கட்டிடத்தை நவீனமயமாக்குவதற்காக ரூபா 4.25 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் 2024 யூன் 30 வரை தலைமைக் காரியாலய நடவடிக்கைகள் அக் கட்டிடத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை

**பயிற்சி உபகரணங்கள் கிடைக்கப்பெற்றிராமை**

வரிசை அமைச்சின் தலைமையில் நடாத்தப்படும் ஒஸ்ரிய செயற்திட்டத்தின் கீழ் அதிகாரசபைக்கு உரித்தான கட்டுநாயக்க பொறியியல் தொழிநுட்ப நிறுவனத்திற்கு 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 1,936 மில்லியன் வெளிநாட்டு உதவிக் (கடன்) ஆக கிடைக்கப்பெற்றிருந்தது. இதன் கீழ் கிடைக்கப்பெற இருந்த ரூபா 13.7 மில்லியன் தொகையான பயிற்சி உபகரணங்கள் 2024 ஆம் ஆண்டு வரையிலும் நிறுவனத்திற்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. மேலும், ரூபா 87.6 மில்லியன் பெறுமதியான பயிற்சி உபகரணங்கள் பயன்படுத்தும் நிலைக்குக் கொண்டுவருவதற்காக ரூபா 68.5 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளக் கூடிய வகையில் ஸ்தாபிக்கப்பட்டிராததுடன் அவ் உபகரணத்தைப் பயன்படுத்துவதற்குத் தேவையான ஏனைய உபகரணங்கள் கிடைக்கப்பெற்றிராததன் காரணத்தால் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்டிருந்த போதிலும் ஆக்கபூர்வமான வகையில் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள இயலாதிருந்தது.

## தேசிய வியாபார முகாமைத்துவ பாடசாலை (NSBM)

**நிதி மற்றும் கணக்கீட்டு செயன்முறைக் கைநூல்**

நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த நிதி மற்றும் கணக்கீட்டு செயன்முறைக் கைநூலிற்காக குறித்த வழிகாட்டல்கள் மற்றும் பொது முயற்சிகள் சுற்றறிக்கைகளின் படி பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மேலும், நிறுவனம் பயன்படுத்தும் நிரந்தர பதவியணி மற்றும் தொழிற்துறை பதவியணியினரை ஆட்சேர்க்கும் மற்றும் பதவி உயர்த்தும் நடைமுறைக்காக உரிய சுற்றறிக்கையின் படி பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டிருக்க வில்லை.

**பாடநெறிக் கட்டண அதிகரிப்பு**

தேசிய வியாபார முகாமைத்துவ பாடசாலையின் II ஆம் கட்ட செயற்திட்டத்தின் பாடநெறிக் கட்டணம் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை மாத்திரம் அதிகரிக்கப்படுவதற்கு உட்பட்டு அங்கீகாரம்

பெறப்பட்டிருந்தது. எனினும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் உடைய பட்டப்படிப்புப் பாடநெறிகளினதும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் இணைந்த பட்டப்படிப்புப் பாடநெறிகளிற்காக இதற்கு முரணான வகையில் 2020 ஆம் 2021 ஆம் ஆண்டுகளின் போது 12 பாடநெறிகளிற்கு ஒரு வருடத்திற்கு ஒரு முறையும் 2022 ஆம் 2023 ஆம் ஆண்டுகளின் போது 17 பாடநெறிகளிற்கும் ஒரு வருடத்திற்கு இரு முறைகளுமாக 17 சதவீதம் முதல் 75 சதவீதத்திற்கு இடைப்பட்ட அளவில் பாடநெறிக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டிருந்தன.

## அனுராதபுர பல்கலைக்கழகக் கல்லூரி

2013 செப்தெம்பர் 04 ஆம் திகதிய 4.1/2/1/4/4/III ஆம் இலக்க கடிதத்தின் மூலம் இளைஞர் நடவடிக்கைகள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் செயலாளரால் கைத்தொழில் கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் உடன்பாட்டிற்கமைவாக அனுராதபுர பல்கலைக்கழகக் கல்லூரிக்கு வழங்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 02 ஏக்கர் 03 ரூட் 17 பேர்ச் விஸ்தீரணமான காணியில் 01 ஏக்கர் அளவிலான காணியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடத்தில் ஏறத்தாழ 600 மாணவர்கள் கல்விகற்கின்றனர். காணியின் எஞ்சிய இடப்பரப்பில் அனுராதபுர தொழிநுட்பக் கல்லூரிக்கு உரித்தான பழைய 04 வீடுகள் உள்ளதுடன் அவ் வீடுகள் 03 ஆண்டுகளின் பின்னர் தகர்த்து அகற்றப்படுவதற்கும் குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கு 2017 ஆம் ஆண்டின் போது திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், 2023 திசெம்பர் வரையிலும் அச் செயற்பாட்டை மேற்கொண்டு காணியின் உரித்தைப் பெற்றுக்கொள்வதற்கு நிர்வாக அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக பல்கலைக்கழகக் கல்லூரியின் அபிவிருத்திக்காக கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கும் சுதந்திரமான அழகான பௌதீக சுற்றுச்சூழலை மாணவர்களுக்காக நிர்மாணிப்பதற்கும் கிடைக்கப்பெற்ற குறைவான இடப்பகுதியில் இயலாதிருந்தது.

## நவீன தொழில்நுட்பத்திற்கான ஆர்தர் சீ கிளார்க் நிறுவகம்

| | |
|---|---|
| **விளைவற்ற சொத்துக்கள்** | நவீன தொழில்நுட்பத்திற்கான ஆர்தர் சீ கிளார்க் நிறுவகத்தால் தொல்பொருளியல் ஆராய்ச்சி மற்றும் அகழ்வு நடவடிக்கைகளிற்கான புகைப்படப்பிடிப்பைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 10.56 மில்லியன் பெறுமதியான ஓட்டுனர் அல்லாத விமானத்தைக் கொள்வனவு செய்து அதனை இயக்குவதற்காக 0.11 மில்லியன் செலவிடப்பட்டு தேவையான பயிற்சியும் பறப்பதற்குத் தேவையான அங்கீகாரமும் பெறப்பட்டிருந்த போதிலும் கொள்வனவு செய்யப்பட்ட நாள் முதல் குறித்த செயற்பாட்டிற்காகப் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது. |

## இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு

| | |
|---|---|
| **தகவல் முறைமை** | ஆணைக்குழுவால் புத்தாக்கங்களை விரைவாக்கும் பொறிமுறையின் மூலம் கடன் மற்றும் மானியங்களைப் பெற்றுக்கொள்வதற்காகக் கிடைக்கும் விண்ணப்பங்களைக் கையாள்வதற்காக முறையான சாத்தியவளக் கற்கையும் திட்டமும் இன்றி ரூபா 4.6 மில்லியன் தொகை செலவிடப்பட்டு 2018 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்ட முறைமை 2023 ஆம் ஆண்டின் போதும் செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் இது வரை கிடைக்கப்பெற்றிருந்த மொத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 39 ஆகும். |

# பொது நிர்வாக அலுவல்கள்

அரசாங்கத்தால் செயற்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் தேசியக் கொள ்கைகளின் அடிப்படையில் ‘‘நாட்டிற்கான வேலை கலாச்சாரத்தை’’ உருவாக்குவதற்காக பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்படுகின்றது.

**செயற்பணிகள்**

பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விடயத்திற்கு உரித்தான கொள்கைகளை வகுத்தல்.

தேசிய பாதீடு, அரச முதலீடு மற்றும் தேசிய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உள்ள செயற்திட்டங்களைச் செயற்படுத்தல்.

இலங்கை நிர்வாக சேவை, இலங்கை கணக்காளர் சேவை, இலங்கை திட்டமிடல் சேவை, இலங்கை பொறியியல் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கை வாஸ்து விஞ்ஞான சேவை, இலங்கை வாஸ்து சாஸ்திர சேவைகள், இலங்கை தொழில் நுட்ப சேவை மற்றும் ஒன்றிணைந்த சேவைகளின் நிறுவக, நிர்வாக மற்றும் மனித வள முகாமைத்துவம்,

பாராளுமன்றம் தொடர்பான பாராளுமன்ற உறுப்பினர்களின் நடவடிக்கைகளிற்கு உரித்தாக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளை மேற்கொள்வது

2023 ஆம் ஆண்டில் அச் செயற்பாட்டை மேற்கொள்வதற்காக அமைச்சிற்கு மொத்தம் ரூபா 51,285 மில்லியன் தொகையான ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இதில் வருட இறுதியில் ரூபா 39,447 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் படி, ரூபா 11,837 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. 25 மாவட்டச்செயலகங்கள், 341 பிரதேச செயலகங்கள், 341 உள்ளூராட்சி அதிகாரசபைகள், 03 திணைக்களங்கள், 05 கூட்டுத்தாபனங்கள்/ சபைகள் ஒரு ஆணைக்குழு மற்றும் ஒரு கம்பனி இவ் அமைச்சின் கீழுள்ள நோக்கங்களை அடைவதற்காக இயங்குகின்றன.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மேற்கூறிய செயற்பணிகளை மேற்கொள்வது குறித்து நடாத்தப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் கண்டறியப்பட்ட போதியளவானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள் தொகுக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

## கணக்காய்வு அவதானிப்புகள்

### பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

**நிலுவைக் கட்டிட வாடகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை**

2015 யூலை 20 ஆம் திகதிய 01/2015 ஆம் இலக்க அரச நிதிக் கொள்கைச் சுற்றறிக்கையின் 4 (ஆ) பந்தியின் பிரகாரம், வருமானம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் நிலுவை வருமானம் சேகரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அறவிடுவதற்கு உள்ள நிலுவை வருமானத்தை மேலும் சேர்வதனைத் தடுப்பதற்காக உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 32 நிறுவனங்களிடம் இருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய கட்டிட நிலுவை வாடகை வருமானத் தொகை ரூபா 332.7 மில்லியனாகக் காணப்பட்டது. இதில் ரூபா 198.7 மில்லியன் 2020 திசெம்பர் 31 இற்கு முன்னைய ஆண்டுகளிலிருந்து அதாவது 3 வருடங்களிற்கு மேலான காலமாக அறவிடப்பட வேண்டியிருந்தன. இந் நிலுவை வாடகைத் தொகையில் இருந்து 18 சதவீதமான அதாவது ரூபா 59 மில்லியன் தொகை இவ் அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் அரச விடுதிகள், சுற்றுலா விடுதிகள் மற்றும் உத்தியோகபூர்வ விடுதிகளில் இருந்து அறவிடப்பட வேண்டியவையாகக் காணப்பட்டன.

மேலும், அமைச்சிற்கு உரித்தான வருமானக் குறியீட்டிற்கு உரிய மொத்த கட்டிடங்கள் தொடர்பான தரவு முறைமை ஒன்றைத் தயாரிப்பதற்காக 2021 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2024 மே 30 ஆம் திகதி வரையிலும் அமைச்சால் அந் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**முறையற்ற விதத்தில் அரசாங்க விடுதிகள் பட்டியற்படுத்தப்பட்டமை**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 1.1 மற்றும் 1.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பதவிகளிற்காக விடுதிகள் நிர்மாணிக்கப்பட்டு பட்டிடலிடப்பட முடியும். இதன்படி, 2003 ஒக்டோபர் 17 ஆம் திகதிய 11/2003 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையினால் இவ் அமைச்சில் பட்டியற்படுத்தப்பட்ட வீடுகள் இல்லை எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், தாபனவிதிக் கோவைக்கும் இச் சுற்றறிக்கைக்கும் முரணாக அமைச்சின் அங்கீகாரத்தில் 06 பொது வீடுகளும் அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்துடன் 16 பொது வீடுகளும் பட்டியலிடப்பட்டு அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

**இடமாற்றக் கொள்கை செயற்படுத்தப்பட்டிராமை**

2022 திசெம்பர் 14 ஆம் திகதிய 2310/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் விதி XVIII ஆம் பிரிவின் 247 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நோக்கங்கள் எய்தப்படும் விதத்தில் ஒன்றிணைந்த மற்றும் நாடளாவிய சேவை உத்தியோகத்தர்களின் இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிராததுடன் கட்டாய இடமாற்றங்களிற்கு உரித்தான உத்தியோகத்தர்களுக்காக இடமாற்றக் கொள்கைகள் முறைப்படி செயற்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. இலங்கை நிர்வாக சேவையிலும் இலங்கை கணக்காளர் சேவையிலும் இலங்கை திட்டமிடல் சேவையிலும் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருந்த 602 உத்தியோகத்தர்களில் 197 பேருக்காக மாத்திரமும் ஒன்றிணைந்த சேவைகளுக்குரிய 07 சேவைகளுக்காகவும் விண்ணப்பங்களைச் சமர்பித்திருந்த 14,323 உத்தியோகத்தர்களில் 3,916 பேருக்காக மாத்திரம் இடமாற்றக் கட்டளை வழங்கப்பட்டிருந்தது.

மாவட்டச் செயலாளர்கள் நியமிக்கப்படுகையில் கருத்திற்கொள்ளப்படும் நிர்ணயங்கள் குறித்து 2022 நவம்பர் 29 ஆம் திகதி நடாத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தில் அரசாங்க அதிபர்களது பதவிக்காகத் தேர்ந்தெடுக்கும் நிர்ணயங்களை மீளத் தயாரித்து சமர்ப்பிக்குமாறு ஓர் குழு நியமிக்கப்பட வேண்டியதாக எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய 2022 திசெம்பர் 02 ஆம் திகதி மூன்று உத்தியோகத்தர்கள் அடங்கிய ஓர் குழு நியமிக்கப்பட்டிருந்த போதிலும் 2024 மே 30 ஆம் திகதி வரையிலும் குறித்த புதிய நிர்ணயங்கள் தயாரிக்கப்பட்டு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**ஈ - கிராம உத்தியோகத்தர் செயற்திட்ட ஒதுக்கீட்டின் குறைவான பயன்பாடு**

கிராம உத்தியோகத்தர்களால் மக்களுக்கு வழங்கப்படும் பணிகளுக்காக நாளாந்தம் தேவையான தகவல்களைச் சேகரித்து வைத்துக்கொள்ளப்படுவதற்காகவும் பரிசீலிப்பதற்கும் தேவையான தரவுகள் அடங்கிய ஈ - கிராம உத்தியோகத்தர் செயற்திட்டத்தின் முதலாம் கட்ட முன்னோடிச் செயற்திட்டமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 04 பிரதேச செயலகப் பிரிவுகளில், 133 கிராம உத்தியோகத்தர் களங்களில் ரூபா 56.94 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்தின் கீழ் செயற்படுத்தப்படுவதற்கும் அதன் வெற்றியின் அடிப்படையில் இரண்டாம் கட்ட 7,000 கிராம உத்தியோகத்தர் களங்கள் உள்ளடங்கும் வகையில் ரூபா 1,689.22 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்தின் கீழ் செயற்படுத்தப்படுவதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. இதற்காக 2023 ஆம் ஆண்டிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,500 மில்லியன் ஏற்பாட்டில் ரூபா 37 மில்லியன் அதாவது

2.5 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. 2017 முதல் 2019 வரையான ஆண்டுகளுக்கான வருடாந்த ஒதுக்கீடு வேறாகக் காண்பிக்கப்பட்டிராததுடன் 2020 ஆம் ஆண்டு முதல் 2023 திசெம்பர் 31 வரை செயற்திட்டத்திற்காக ரூபா 3,080 மில்லியன் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் ரூபா 368 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. திட்டமிடப்பட்டபடி செயற்திட்டத்தைச் செயற்படுத்தியிராமை இதற்குக் காரணமாகியிருந்தது.

**காலி மாவட்டத்தில் 2000 இருக்கை வசதிகளுடனான கேட்போர் கூட நிர்மாணிப்பு கைவிடப்பட்டமை.**

இச் செயற்திட்டத்திற்காக 2019 – 2020 ஆம் காலப்பகுதியின் போது ரூபா 2,700 மில்லியன் தொகையான ஒதுக்கங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2023 யூன் 14 ஆம் திகதி வரையிலும் ரூபா 718.6 மில்லியன் தொகை செலவிடப்பட்ட பின்னர் நிர்மாணிப்பு வேலைகள் கைவிடப்பட்டிருந்தன. 2022 பெப்ரவரி 15 ஆம் திகதி காலாவதியான ரூபா 133 மில்லியனான செயற்பாட்டு முறி ஒன்று காலம் நீடிக்கப்படுவதற்கோ அல்லது காசாக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. மேலும், ஒப்பந்ததாரரால் முற்பண முறி 2022 சனவரி 29 ஆம் திகதி நீடிக்கப்பட்டிராததுடன் தீக்கப்பட்டிராத முற்பணத் தொகை ரூபா 475 மில்லியனாகக் காணப்பட்டது. நிர்மாணிப்பு வேலைகள் கைவிடப்பட்ட கேட்போர் கூடத்தின் புகைப்படம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

.



புகைப்படம் இல :2.1

**வெளிநாட்டு உதவி செயற்திட்ட நிதியத்தின் குறைவான பயன்பாடு**

| செயற்திட்டம் | 2023 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு (ரூபா. மில்) | | 2023 ஆம் ஆண்டின் போதான செலவினங்கள் (ரூபா. மில்) |
|---|---|---|---|
| இன்கியூபேட்டரிற்காக வியாபார நிலையங்களின் நிர்மாணிப்பு – யாழ்ப்பாணம் | வெளிநாட்டு உதவி<br>இலங்கை அரசாங்கம் | 250<br>50 | 0.49 |
| கழிவுப் பொருட்களுக்கு பெறுமதி சேர்க்கும் செற்திட்டம் | சேர்மன் அரசாங்க மானியம் 260<br>இலங்கை அரசு 15 | | இல்லை |
| கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவத்தை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் | ஐரோப்பிய முதலீட்டு வங்கி<br>இலங்கை அரசு 380 | 947 | இல்லை |
| கிராமிய பாலம் நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி | ஐக்கிய இராச்சியக் கடன் | 200 | இல்லை |

அட்டவணை இல 2.20 : வெளிநாட்டு உதவி செயற்திட்ட நிதியப் பயன்பாடு

**எல்லை நிர்ணய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிராமை**

எல்லை நிர்ணயத்திற்காக முதலாவது அமைச்சரவைத் தீர்மானம் வழங்கப்பட்டு இரு ஆண்டுகளும் இரண்டாவது அமைச்சரவைத் தீர்மானம் வழங்கப்பட்டு ஒரு வருடமும் கடந்திருந்தது. 2021 ஆம் 2022 ஆம் ஆண்டுகளின் போது இதற்காக ரூபா 7.76 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் தொடர்பாடற் குழு அங்கீகாரத்துடன் விபரமான இறுதி அறிக்கை அமைச்சரவைக்கு 2024 மே 30 ஆம் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## மாவட்டச் செயலகங்கள்

மாவட்டச் செயலகங்களால் செயற்படுத்தப்பட்டிருந்த கிராம சக்தி மக்கள் வியாபாரம் தொடர்பான தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறாகும்.

**கிராம சக்தி மக்கள் வியாபாரம்**

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் 12 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 2018 ஆம் 2019 ஆண்டுகளின் போது சனாதிபதி செலவினத் தலைப்பு ஏற்பாட்டின் மூலம் செயற்பட்டிருந்த கிராம சக்தி மக்கள் செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த நிதியில் இருந்து கிராம சக்தி கழகங்கள் எனும் பெயருடன் இயங்கி வரும் 111 வங்கிக் கணக்குகளில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா33.62 மில்லியன் 03 வருடங்களுக்கும் அதிக காலமாக விளைவற்றுக் காணப்பட்டன. இதில் 06 பிரதேச

செயலகங்களில் 13 கிராம சக்தி கழகங்களால் சுழற்சிக் கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த ரூபா 5.14 மில் லியன் கடன் தொகையில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1.28 மில்லியன் கடன் தொகையும் ரூபா 52,824 நிலுவைக் வட்டித் தொகையாகவும் ரூபா 1.33 மில்லியன் கூட்டுத்தொகையான அளவை அறவிட்டிருக்கவில்லை.

களுத்துறை மாவட்டத்தின் 9 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 103 கிராம சக்தி கழகங்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இவற்றில் 80 கழகங்கள் அதாவது 78 சதவீதமானவை செயலிழந்து காணப்பட்டன. ஆகையால் அன்றைய தினத்தில் அக் கழகங்களின் வங்கிக் கணக்குகளில் மீதியாக நிலவிய ரூபா 28.32 மில்லியன் தொகை விளைவற்றுக் காணப்பட்டன. இதற்கு மேலதிகமாக 05 பிரதேச செயலகப் பிரிவுகளில் அதில் செயற்பாட்டில் உள்ள கழகங்களின் அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த சுயதொழில் கடன் இடையே ரூபா 2.28 தொகையும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்பாடின்றிக் காணப்பட்டது.

மாத்தறை மாவட்டத்தின் 12 பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட கிராம சக்தி முதல் கட்டம் மற்றும் இரண்டாம் கட்டத்தின் 99 கழகங்கள் செயற்பாடின்றிக் காணப்பட்டதுடன் 2023 மார்ச் 31 இல் உள்ளவாறு அக் கழகங்களின் கணக்குகளில் ரூபா 36.2 மில்லியன் தொகை செயற்பாடின்றிக் காணப்பட்டது.

குருநாகல் மாவட்டத்தின் மூலம் செயற்படுத்தப்பட்ட கிராமசக்தி மக்கள் செயற்திட்டத்தின் முதலாம் கட்டத்தின் கீழ் குருநாகல் மாவட்டத்தின் திறன் அபிவிருத்தி மற்றும் சுழற்சிக் கடன் நிகழ்ச்சித்திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 178.79 மில்லியன் தொகையில் 44 சதவீமான ரூபா 77.97 மில்லியன் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

நுவரெலியா மாவட்டத்தின் ஹங்குரன்கெத்த பிரதேச செயலகப் பிரிவின் கிராமசக்தி மக்கள் செயற்திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 6.9 மில்லியன் செலவிடப்பட்ட விதை போஞ்சி களஞ்சியப்படுத்தலுக்காக ஓர் கட்டிடமும் குளிரூட்டலறையும் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நோக்கிடப்பட்ட செயற்பாட்டிற்கு பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டன.

பொலொன்னறுவை மாவட்டத்தின் அலஹெர, தமன்கடுவ, மெதிரிகிய, லங்காபுர, ஹிங்குரக்கொட, வெலிகந்த மற்றும் திம்புலாகல போன்ற பிரதேச செயலக அதிகார

எல்லைக்குட்பட்ட 07 பிரதேசங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 85 கிராமசக்தி மக்கள் கழகங்களில் 61 கழகங்கள் செயலிழந்த நிலையில் காணப்பட்டதுடன் அக் கழகங்களுக்கு உரிய கணக்குகளில் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 16.37 மில்லியன் தொகை விளைவற்றுக் காணப்பட்டன.

புத்தளம் மாவட்டச் செயலகத்திற்கு உரித்தான 16 பிரதேச செயலகங்களுக்கு உரித்தான கிராமசக்தி முதலாம் மற்றும் இரண்டாம் கட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட 166 கிராமசக்தி கழகங்களில் 121 கழகங்கள் செயலிழந்த நிலையில் காணப்பட்டதுடன் இக் கழகங்களுக்கு உரிய வங்கிக் கணக்குகளில் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 102.39 மில்லியன் தொகையான காசு மீதி விளைவற்றுக் காணப்பட்டன.

## அம்பாறை மாவட்ட செயலகம்

**நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்திற்கான கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளல்**

22/2023 பெரும்போகத்தில் நெல் கொள்வனவிற்கான நிகழ்ச்சித்திட்டம் மற்றும் நெல்லை அகற்றும் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சால் விநியோகிக்கப்பட்ட 2023 பெப்ரவரி 09 ஆம் திகதிய மற்றும் DRD/2023-1 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4.2 ஆம் பிரிவின் படி, நெல் கொள்வனவின் போது ஏற்படும் செயற்பாட்டுச் செலவினங்கள் குறித்த நிதிப்பிரமாணங்கள், சுற்றறிக்கைகள் மற்றும் ஏனைய அரசாங்க அங்கீகாரங்களிற்கு உட்பட்டு மேற்கொள்ளப்படுவதற்கு மாவட்டச் செயலகங்களால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்தது. எனினும், அம்பாறை மாவட்டச் செயலங்களால் வழமையான செயற்திட்டங்களுக்கான நிர்வாகச் செலவினங்கள் ஒதுக்கப்படுவது போல் ஒட்டுமொத்த ஒதுக்கீடான ரூபா 3,089 மில்லியன் தொகையில் 1 சதவீத சதவீதமாக 17 மாவட்டச் செயலகத்திற்கும் பிரதேசச் செயலகங்களுக்குமாக ரூபா 30.890 மில்லியன் நிர்வாகச் செலவினங்களிற்காக ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன் படி, அம்பாறை மாவட்டச் செயலாளரின் தலைமையிலான ஓர் குழுவினூடாக எடுக்கப்பட்ட ஓர் தீர்மானத்தின் படி, தொடர்புகொண்ட உத்தியோகத்தர்களின் அடிப்படைச் சம்பளத்தில் இருந்து ¼ ஆன பெறுமதிக்கு சமனான ஓர் தொகை அவர்கள் செயற்திட்டத்தில் கலந்து கொண்ட மாத எண்ணிக்கைகளின் அடிப்படையில் ரூபா 15.58 மில்லியன் நிர்வாகச் செலவினமாக 2023 யூலை மாதமளவில் திறைசேரியின் அங்கீகாரமின்றி கொடுத்துத்

தீர்க்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக உஹன பிரதேச செயலகத்தின் 16 உத்தியோகத்தர்களுக்காக விடுமுறைநாள் சம்பள முற்பணம் மற்றும் பயணச் செலவினமாக இத் தொகையில் ரூபா 0.37 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

**மாவட்டச் செயலகங்களுக்குப் பணம் மீளக் கிடைக்கப்பெற்றிராமை**

2022/2023 பெரும்போகத்தில் நெல் கொள்வனவு மற்றும் நெல் இருப்பை அகற்றுவதற்கான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டச் செயலகத்தில் எஞ்சியிருந்த இருப்புத் தொடர்பாக 2023 செப்தெம்பர் மாதம் கேள்வி கோரப்பட்டு கொள்வனவாளர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். எவ்வாறெனினும் 07 பிரதேச செயலகப் பிரிவுகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 24 நெல் ஆலைகளால் பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட வேண்டிய ரூபா 170.12 மில்லியன் பெறுமதியான 1,226,373 கிலோ கிராம் நெல் 2024 மே 05 ஆம் திகதி வரையிலும் கொள்வனவாளர்களுக்கு வழங்கப்பட்டு பிரதேச செயலகத்திற்கு பணம் பெற்றுக்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## அநுராதபுரம் மாவட்டச் செயலகம்

**கால்நடை வள கடன் நிகழ்ச்சித்திட்டம்**

மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் கண்காணிப்பின் கீழ் இலங்கை மகளிர் காரியாலயத்தின் மூலம் 2010 ஆம் ஆண்டின் போது கடன் நிகழ்ச்சித்திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டிருந்தது. இதன் கீழ் 10 பிரதேச செயலகப் பிரிவுகளில் கால்நடைக் கடன் வழங்கப்படுவதற்காக ஆரம்பிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்குகளில் ரூபா 33 மிலலியன் தொகை குறித்த பணிக்காக பயன்படுத்துவதற்று போதாதெனக் குறிப்பிட்டு இரண்டு வருடங்களுக்கு மேலான காலமாக விளைவற்றுக் காணப்பட்டது.

**ஒலிபரப்புக் கோபுர நிர்மாணிப்பிற்காக காணியை விடுவித்தல்**

2020 பெப்ரவரி 06 ஆம் திகதிய 2020/02 ஆம் இலக்க காணி ஆணையாளர் நாயகத்தின் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட கொடுப்பனவுப் பத்திரங்களின் தொடர் நடவடிக்கைகள் இச் சுற்றறிக்கையின் பிரகாரம் விவசாய நடவடிக்கைகளுக்காகவும் குடியிருப்பு நடவடிக்கைகளுக்காகவும், காணி வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுப் பத்திர உரிமையாளர்களால் பல்வேறு கம்பனிகளுக்கு ஒலிபரப்புக் கோபுர நிர்மாணிப்பிற்கான வணிகச் செயற்பாடுகளுக்காக அக் காணிகளில் ஒரு பகுதி

விடுவிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில், குறித்த கொடுப்பனவுப் பத்திரம் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டு மேற்குறித்த சுற்றறிக்கையின் vi ஆம் பிரிவின் அறிவுறுத்தலின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எனினும், அநுராதபுர மாவட்டத்தின் 14 பிரதேச செயலகப் பிரிவுகளில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 139 ஒலிபரப்புக் கோபுரங்கள் தொடர்பாக மேற்குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

குருநாகல் மாவட்டத்தின் பொல்பித்திகம பிரதேசச் செயலக அதிகார எல்லைக்குள் கொடுப்பனவுப் பத்திரத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த 66.9 பேர்ச் இற்கு மேற்பட்ட காணி அளவு அரசாங்க அங்கீகாரம் இன்றி 04 ஒலிபரப்புக் கோபுரங்கள் அமைப்பதற்காக இடமளிக்கப்பட்டிருந்ததுடன் இக் கோபுரங்கள் மூலம் குறித்த கொடுப்பனவுப் பத்திர உரிமையாளர்கள் வருமானத்தை ஈட்டிக்கொண்டிருந்தனர். எனினும் உரிய அதிகாரிகளால் உரிய காணிப் பகுதிகள் முறையாக அரசாங்கத்திற்குக் கையேற்கப்பட்டு விடுவிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

.

## பதுளை மாவட்டச் செயலகம்

| | |
|---|---|
| **குழாம் வாகனத்தைப் பயன்படுத்தி எரிபொருள் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளல்** | அலுவலகத்தின் சகல உத்தியோகபூர்வ நடவடிக்கைகளுக்காகவும் குழாம் வாகனத்தைப் பயன்படுத்தி இதற்காக எரிபொருள் கட்டளை மூலமாக எரிபொருளைப் பெற்றுறிருக்கையில் 2022 பெப்ரவரி முதல் 2023 ஏப்ரல் வரையான காலப்பகுதியின் போது கந்தகெட்டிய பிரதேச செயலகப் பிரிவில் பணியாற்றும் இரு பிரதேச செயலாளர்களால் ரூபா 0.8 மில்லியன் எரிபொருள் படிப்பணம் பெறப்பட்டிருந்ததுடன் நிதிப் பிரமாணம் 119 இன் படி, மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த எரிபொருள் படிப்பணம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிட்டிருக்கவில்லை. |
| **மண்சரிவிற்கான கூடிய அபாயத்திற்கு உட்பட்ட குடும்பங்களை மீள் குடியமர்த்தியிராமை** | மண்சரிவிற்கான கூடிய அபாயத்திற்கு உட்பட்ட 03 பிரதேச செயலகப் பிரிவுகளுக்குரிய 236 குடும்பங்களை மீள் குடியமர்த்துவதற்காக 02 பிரதேச செயலகங்களுக்கு உரித்தாக ரூபா 46 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. செற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 03 முதல் 10 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் இவ் அபாயத்திற்கு உட்பட்ட குடும்பங்களை மீள் குடியமர்த்துவதற்காக சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்தமையால் ஆபத்திற்குட்பட்ட குடும்பங்கள் தங்கள் உயிர் ஆபத்தை பணயம் வைத்து |

| | |
|---|---|
| | முன்னைய பகுதிகளிலேயே குடியிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| **குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்** | கந்தகெட்டிய மற்றும் ஹல்தமுல்ல பிரதேசச் செயலகங்களால் வெள்ளை மிளகு உற்பத்திச் செயற்றிட்டத்திற்காக 2022 மே 20 ஆம் 21 ஆம் திகதிகளில் ஸ்தாபிக்கப்பட்ட ரூபா 4.5 மில்லியன் கிரயத்திலான மிளகு உலர்த்தும் 02 இயந்திரங்கள் 2024 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டன. |

## மட்டக்களப்பு மாவட்டச் செயலகம்

| | |
|---|---|
| **அதிகாரமில்லாது மணல், சரளை அகழ்வு மற்றும் போக்குவரத்திற்காக ஒரு நாள் அனுமதிப்பத்திரம் வழங்கப்படுதல்** | 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்க மற்றும் கனிப்பொருள் அதிகாரச்சட்டம் மற்றும் 2009 இன் 66 ஆம் இலக்க திருத்தச்சட்டத்தின் பிரகாரம் மணல், மண் மற்றும் சரளைகளுக்காக வணிக சார்பற்ற நோக்கிற்காக ஒரு நாள் அனுமதிப்பத்திரத்தை வழங்கும் அதிகாரம் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியக பணிப்பாளர் நாயகத்திற்கு உரித்தாவதுடன் சுரங்க அகழ்வு மற்றும் போக்குவரத்துச் செய்வதற்கான அனுமதிப்பத்திர வழங்கல் பிரதேச செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகத்தால் வழங்கப்பட்டிருந்த வழிகாட்டலின் படி, வணிகசார்பற்ற செயற்பாடுகளான சிறிய அளவிலான விற்பனை நோக்கற்ற சுய தேவைப்பாட்டிற்கான அகழ்வாகும். எவ்வாறெனினும், மன்முனை தென்மேற்குப் பிரதேச செயலகத்தால் வணிக நடவடிக்கைகளுக்காக ஒரு நாள் அனுமதிப்பத்திரத்தை வழங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதன் படி, 2022 சனவரி முதல் 2023 ஏப்ரல் 30 வரையான 16 மாதங்களில் 64 கியூப் மணல் மற்றும் 508 கியூப் மண் மற்றும் சரளை அகழ்விற்காகவும் போக்குவரத்திற்காகவும் 04 பேருக்காக ஒரு நாள் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. |
| **அனுமதியற்ற காணிச் சுவிகரிப்பு** | காணிக் கட்டளை இல. 180, காணி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை இல. 2008/04 மற்றும் 1995 யூன் 15 ஆம் திகதிய காணி அமைச்சின் சுற்றறிக்கை இல. 10 இன் பிரகாரம், அரச காணிகளைக் கைப்பற்றப்படுவதைத் தடுப்பது பிரதேச செயலகம் மற்றும் கிராம உத்தியோகத்தர்களது கடமையும் பொறுப்புமான போதிலும் கண்ணகிபுரம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் 04 ஏக்கர்களிலான அரச காணி கோரளைப் பற்று பிரதேசச் செயலகப் பிரிவிற்கு உரித்தான 02 கிராம உத்தியோகத்தர்களால் அத்துமீறிக் கைப்பற்றப்பட்டிருந்த |

போதிலும் பிரதேச செயலாளரால் இது தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**முறையற்ற விதத்தில் காணிகள் பெறப்பட்டிருந்தமை**

கோரளைப்பற்று பிரதேசச் செயலகப் பிரிவின் கும்புருமொளை கிராம உத்தியோகத்தர் பிரிவில் வீட்டுத் திட்டத்திற்கு அண்மையில் பொது நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த அரச காணி ஒன்று முறையான விதத்தில் காணிக் கச்சேரி நடாத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்டிராத 50 பேருக்கு வழங்கப்பட்டிருந்தன. மேற்குறித்த அரச காணியை புறம்போக்குச் செய்வதற்காக நில அளவைத் திணைக்களத்தின் தொகுதி வரைபடம் (BOD) தடுக்கப்பட்டு, மாவட்டக் காணிப் பயன்பட்டுக் குழுவின் அங்கீகாரத்தையும் மாகாண காணி ஆணையாளர்/ காணி ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரத்தையும் பெற்றிருக்கவில்லை. காணிக் கச்சேரிக்கு உள்ளடக்கும் நோக்கில் அந் நபர்களின் வாக்காளர் பட்டில்கள் வேண்டுமென்றே கோறளைப் பற்று பிரதேச செயலாளர் பிரிவின் கும்புறுமூலை கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கு மாற்றப்பட்டிருந்தன. இவர்களில் பெரும்பாலானோர் அக் காணிகளில் குடியிருக்காமை அவதானிக்கப்பட்டதுடன் 50 இற்கும் மேற்பட்ட பகுதிகள் வேலிகளால் பிரிக்கப்பட்டு காணிகளில் தற்காலிகக் குடிசைகள் அமைக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களை மீளக் குடியேற்றுதல்**

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களை மீளக் குடியேற்றுவதற்காக 2005 ஆம் ஆண்டின் போது மன்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவின் திரைமடு பிரதேச காணிச் சுவீகரிப்பு அதிகாரச்சட்டத்தின் கீழ் காணிகள் கையேற்கப்பட்டிருந்தன. அக் காணிகளில் சுனாமியால் பாதிப்பிற்குட்பட்டிராத அரச உத்தியோகத்தர்களுக்காக காணி 50 துண்டுகள் பிரதேச செயலாளரால் வழங்கப்பட்டிருந்தன. இதற்கு மேலாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் (NHDA) மூலம் வீடுகளை நிர்மாணிப்பதற்காக கடனும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. இதனால் கைப்பற்றப்பட்ட காணி முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## கம்பஹா மாவட்டச் செயலகம்

**செயற்திட்டங்கள் இடைநடுவில் நிறுத்தப்பட்டமை**

தோம்பே பிரதேச செயலகத்தால் செயற்படுத்தப்படும் 19 செயற்திட்டங்களுக்காக ரூபா 8.4 மில்லியன் செலவினமும் திவுலபிட்டிய பிரதேச செயலகத்தால் செயற்படுத்தப்படும் 02 அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக ரூபா 0.6 மில்லியனும் அத்தனகல பிரதேச செயலகத்தால்

செயற்படுத்தப்படும் 14 செயற்திட்டங்களுக்காக ரூபா 5.1 மில்லியனும் செலவிடப்பட்டதை அடுத்து செயற்திட்டங்கள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன.

**உத்தியோகபூர்வ சேவைக் கட்டிடங்களும் சேவைத் தள நிர்மாணிப்புகளும்**

மீரிகம பிரதேச செயலகத்தால் 07 உத்தியோகபூர்வ சேவைக் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 1.4 மில்லியனும் 10 சேவைத் தள நிர்மாணிப்புகள் மேற்கொள்ளப்படுவதற்காக ரூபா 8.2 மில்லியன் தொகையும் செலவிடப்பட்டிருந்த போதிலும் நிர்மாண வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிராமையால் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள இயலாதிருந்தன.

## களுத்துறை மாவட்டச் செயலகம்

**வீட்டு உரிமை உரிய பயனாளிகளின் பெயருக்கு மாற்றப்பட்டிராமை**

தெரிவுக் கணக்காய்வின் போது வெளியானதன் படி இடர் முகாமைத்துவ அமைச்சின் மூலம் களுத்துறை மாவட்டச் செயலகத்தினூடாக 04 பிரதேச செயலகங்களின் 16 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 24.07 மில்லியன் நலன் தொகையின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட காணிகளினதும் வீடுகளினதும் உரிமை உரிய பயனாளிகளின் பெயர்களுக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. மேலும் 03 ஏனைய பிரதேச செயலகங்களின் 03 பயனாளிகளுக்கு வீடுகள் கொள்வனவு செய்யப்படுவதற்காக ரூபா 4.6 மில்லியன் வழங்கப்பட்டிருந்ததுடன் அவர்களால் கொள்வனவு செய்யப்பட்ட வீட்டுடனான காணிகள் பின்னர் வேறு தரப்பினர்களுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மூன்று பிரதேச செயலகங்களின் 06 பயனாளிகளுக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 9.5 மில்லியன் நலன்தொகையின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட காணிகளும் வீடுகளினதும் உரிமை குறித்த பயனாளிகளின் பெயர்களில் இருக்கவில்லை.

**விளைவற்ற கட்டிடங்கள்**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி 2024 பெப்ரவரி 27 ஆம் திகதி களுத்துறையில் 09 மாவட்டச் செயலகங்களில் உள்ள 65 கட்டிடங்கள் விளைவற்று துரப்பிடித்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தன. அக் கட்டிடங்களில் 26 கட்டிடங்களின் உரிமை பிரதேச செயலகத்திடமும் எஞ்சிய 39 கட்டிடங்கள் வேறு வெளி அரசாங்க நிறுவனத்திடமும் காணப்பட்டதுடன் இக் கட்டிடங்களில் 48 கட்டிடங்கள் மீள திருத்தப்பட்டு பயன்படுத்தக்கூடிய நிலையில் காணப்பட்ட போதிலும் இதற்கான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**சுபீட்சமான உற்பத்திக் கிராமிய நிகழ்ச்சித்திட்டங்கள்**

களுத்துறை மாவட்டத்தின் மில்லனிய பிரதேச செயலகத்தில் சுபீட்சமான உற்பத்திக் கிராமிய நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் வல்லாரை சார்ந்த உற்பத்திகளுக்கு பெறுமதி சேர்க்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 8.72 மில்லியன் செலவிடப்பட்டிருந்தன. 2017 ஆம் ஆண்டின் போது தேசிய உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிரதேச செயலகத்திற்குக் கிடைக்கப்பெற்ற போதிலும் 05 வருட காலமாகப் பயன்படுத்தப்பட்டிராத பெறுமதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராத உணவு நீரகற்றல் இயந்திரத்திற்காகவும் பொருட்களை துகளாக்கும் இயந்திரத்திற்காகவும் வழங்கப்பட்டிருந்தன. உற்பத்திக்காக தரச் சான்றிதழ்கள் பெறப்படுவது செயற்திட்டத்தின் முக்கிய நோக்காகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய பௌதீகத் தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிராமையால் அத் தரச் சான்றிதழ் பெற்றுக்கொள்ள முடியாது போயிருந்தது. இதன் காரணமாக நோக்கத்தின் படி உற்பத்தி, வெளிநாட்டுச் சந்தைக்கும் உள்நாட்டுச் சந்தைக்கும் சமர்ப்பிக்க இயலாது போயிருந்தது. அச் சான்றிதழ்கள் எதிர்காலத்திலேனும் பெற்றுக்கொள்வதற்கான தேவைப்பாட்டை இனங்கண்டுகொண்டு ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பதற்குப் பதிலாக செயற்திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது.

மேலும், பண்டாரகம பிரதேச செயலகத்தால் இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சீமேந்து சார்ந்த உற்பத்திகளை மேம்படுத்துவதற்காக 72 பயனாளிகளுக்கு ரூபா 6 மில்லியன் பெறுமதியான பூச்சாடிகளின் அச்சுக்களும், கூரைத் தகடுகளும் ஜீஐ குழாய்களும் வழங்கப்பட்டிருந்தன. 20 பயனாளிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையில் 14 பேருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1.31 மில்லியன் பெறுமதியான அவ் உபகரணங்கள் கணக்காய்வுத் தினமாகிய 2024 சனவரி 19 ஆம் திகதியன்றும் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டன.

## கிளிநொச்சி மாவட்டச் செயலகம்

**அறவிடப்பட்டிராத குத்தகை**

கரச்சி பிரதேச செயலகத்தின் மூலம் 2005 முதல் 2023 ஆம் ஆண்டு வரை குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த காணிக்காக குத்தகையும் தண்டப்பணமுமாக ரூபா 3.13 மில்லியன் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**குறைவான பயன்பாட்டுடனான சொத்துக்கள்**

மாவட்டச் செயலகத்தின் மூலம் பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் செயற்திட்டங்களின் கீழ் பப்படம், சர்க்கரை, பொதியீடு, சேதனப் பசளை, முருங்கை இலைப் பொடி

போன்ற உற்பத்திகளுக்காகவும் பழங்கள் மற்றும் மரக்கறிகளைப் பதனிடுவதற்கான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காகவும், கட்டிட மறுசீரமைப்பு மற்றும் உற்பத்தி நிலையங்கள் நிர்மாணிக்கப்படுவதற்காக ரூபா 62.64 மில்லியன் செலவிடப்பட்டிருந்தன. இவை 2018 ஆம் 2019 ஆம் ஆண்டுகளின் போது 04 கூட்டுறவுச் சங்கங்களிற்கும் இரு கிராம அபிவிருத்திக் கழகங்களுக்கும் ஒப்படைக்கப்பட்டு அவ் இயந்திர உபகரணங்கள், யாட்கள் மற்றும் மத்திய நிலையங்கள் எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படாது ஐந்து வருட காலத்திற்கு மேலான காலமாக விளைவற்றுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

**பயன்படுத்தப்படாத சொத்துக்கள்**

பளை பிரதேச செயலகப் பிரிவின் ரூபா 4.6 மில்லியன் பெறுமதியான நான்கு சமூக மண்டபங்களும் கட்டிடங்களும் 1 முதல் 10 வருடகாலமாகப் பயன்படுத்தப்படாதிருந்தன.

## கண்டி மாவட்டச் செயலகம்

**எதிர்பார்க்கப்பட்ட நலன் பெறப்பட்டிராமை**

கண்டி மாவட்டச் செயலகத்தின் உத்தியோக பூர்வ விடுதி அரசாங்க வீடமைப்புத் தொகுதியில் கூரையில் 2021 ஆம் ஆண்டில் ரூபா 1 மில்லியன் செலவில் 4.08 கிலோவொட் சூரிய சக்தி முறைமை வழங்கப்பட்டு ஸ்தாபிக்கப்பட்டு 02 வருட காலம் கடந்திருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் சூரிய சக்தியின் மூலம் உற்பத்தியாகும் கி.வொ. 4.08 மின்சாரத்தை விற்பனை செய்து வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

வரவுசெலவுத் திட்டத்தில் கிராமிய மட்டத்தில் அபிவிருத்திச் செயற்திட்டங்கள் 2022 ஏப்ரல் மாதத்தின் பின்னர் செயற்படுத்தப்படாதிருக்கையில் 2022 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் 2023 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியின் போது மாவட்டச் செயலகங்களிலும் 17 பிரதேச செயலகங்களிலும் 20 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 2.1 மில்லியன் விசேட படிப்பணம் செலுத்தப்பட்டிருந்தன.

**சுபீட்சமான உற்பத்திக் கிராம நிகழ்ச்சித்திட்டம்**

2021 சுபீட்சமான உற்பத்திக் கிராம நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மினிபே பிரதேச செயலகத்தால் புலத்வெல்கந்துர கிராம உத்தியோகத்தர் பிரிவில் குறைந்த வருமானக் குடும்பங்களைக் கேந்திரமாகக் கொண்டு மா அரைக்கும் தொழில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதன் படி, மா உற்பத்தி நிலையங்களுக்காக ஓர் கட்டிடமொன்றை நிர்மாணித்தல், உலர் இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்தல், 33 பயனாளிகளுக்கு மா அரைக்கும் 33 இயந்திரங்களை

வழங்குதல் உள்ளடங்கலாக செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக ரூபா 4.65 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் 2024 பெப்ரவரி 27 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் படி, மா தயாரிப்பு நிலையத்தில் உரிய உலர் இயந்திர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராமை அவதானிக்கப் பட்டதுடன் இதற்காக ஏற்பட்ட ரூபா 2.9 மில்லியன் தொகை விளைவற்ற செலவினமாகக் காணப்பட்டது.

**காணிக் கையேற்பு மற்றும் ஒப்படைக்கும் நடவடிக்கைகள்**

பதினைந்து பிரதேச செயலகங்களில் காணிக் கையேற்பு மற்றும் ஒப்படைக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக 350 கடிதங்கள் தெரிவுப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்ட போது கோவைகள் ஆரம்பிக்கப்பட்டு 03 முதல் 40 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட கால இடைவெளி காணப்பட்ட போதிலும் காணிகள் கையேற்கப்படவோ அல்லது காணி ஒப்படைக்கும் நடவடிக்கைகளோ முடிவுக்கு வந்திராமை அவதானிக்கப்பட்டது.

**மண்சரிவு அதிக ஆபத்தான பிரதேசங்களில் இருந்து மக்களை அகற்றியிராமை**

கண்டி மாவட்டத்தின் மண்சரிவிற்கான அதிக ஆபத்தான பிரதேசங்களாக இனங்காணப்பட்டிருந்த 20 பிரதேச செயலகங்களின் 1845 குடும்பங்களில் 2023 திசெம்பர் 31 ஆம் திகதிய வரையிலும் 1386 குடும்பங்கள் அப் பகுதிகளிலேயே குடியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## மாத்தளை மாவட்டச் செயலகம்

**துப்பாக்கி அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டிராமை**

2023 செப்தெம்பர் 19 ஆம் திகதிய 2023/04 ஆம் இலக்க பாதுகாப்பு அமைச்சுச் சுற்றறிக்கையின் 1 ஆம் பந்தியில் 2024 ஆம் ஆண்டிற்காக மாவட்டத்தின் சகல துப்பாக்கி அனுமதிப்பத்திரங்களும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் புதுப்பிக்க வேண்டியதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கலேவல, தம்புல்ல மற்றும் அம்பன்கங்க கோரல பிரதேச செயலாளர் பிரிவுகளில் 60 பேர் 2024 பெப்ரவரி வரையிலும் துப்பாக்கி அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பித்திருக்கவில்லை.

**மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பிரிந்தவெல சமுர்தி சமூக சார்பான வங்கியில் 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 4.6 மில்லியன் தொகையான நிதி மோசடி தொடர்பாக 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் விசாரணை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**பெறுகைகள்**

உக்குவெல பிரதேச செயலகத்தின் புதிய கட்டிட நிர்மாணிப்பு ( பீ – பிரிவு 6 ஆம் கட்டம்) செயற்திட்டத்தின் 19 வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிராத போது

மேற்கொள்ளப்பட்டதாக பற்றுச்சீட்டுக்கள் உறுதிப்படுத்தப் பட்டு ரூபா 1.3 மில்லியன் செலுத்தப் பட்டிருந்தது. மேலும் புதிய கட்டிடத்தின் மேலதிக வேலை பூர்த்தி செய்யும் செயற்திட்டத்தின் 11 வேலைத் திட்டங்களிற்காக ரூபா 1.5 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவ் வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. செயற்பாட்டு பிணை 2024 சனவரி 15 ஆம் திகதி பூர்த்தியடைந்திருந்ததுடன் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய 2023 திசெம்பர் 11 ஆம் திகதியான போதிலும் 2024 பெப்ரவரி 05 ஆம் திகதி வரையிலும் வேலை பூர்த்தி செய்யப்பட்டிராததன் காரணமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 0.8 மில்லியன் தொகையான தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவும் இல்லை.

**நிலுவைக் கடன்**

மாத்தளை மாவட்ட சமுர்த்தி சமூக சார்பான 11 வங்கிகளில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது 2023 யூன் 30 ஆம் திகதியில் உள்ளவாறு 176 நலன் பெறுனர்களுக்கு ரூபா 19.3 மில்லியன் தொகையான கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 10.3 மில்லியன் நிலுவைத் தொகையாக் காணப்பட்டது.

**இழப்பீட்டுத் தொகை செலுத்துவதிலான தாமதம்**

1950 இன் 09 ஆம் இலக்க காணிக் கொள்ளல் சட்டத்தின் 38 (அ) பிரிவின் துணைக்கட்டளை பிரசுரிக்கப்பட்ட நாளில் கையேற்கப்படுவதற்குரிய இழப்பீட்டுத் தொகை செலுத்தப்பட வேண்டிய போதிலும் 3 – 10 வருடங்களுக்கு மேலாக இழப்பீட்டுத் தொகை செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக 02 பிரதேசச் சேவைகள் பிரிவில் 06 காணி உரிமையாளர்களுக்கு ரூபா 5 மில்லியனான வட்டித் தொகை செலுத்த நேர்ந்திருந்தது.

## மன்னார் மாவட்ட செயலகம்

**நிலக்கடலை பயிரீட்டுச் செயற்திட்டம்**

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் உதவியின் கீழ் இயந்திர உபகரணங்கள் மற்றும் விதைகளுக்காக ரூபா 17.5 மில்லியன் செலவில் விவசாயத் திணைக்களத்தால் செயற்படுத்தப்பட்ட நிலக்கடலைப் பயிர்ச்செய்கைச் செயற்திட்டத்தின் நிலக்கடலை முளைப்பதன் வேகம் 25 சதவீதத்தில் இருந்து 50 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டதுடன் இதன் படி, நலிவான விளைவு கிடைக்கப்பெற்றிருந்தது. இதன் காரணமாக மீள நிலக்கடலை கொள்வனவு செய்யப்பட்டு மீளப் பயிரிடுவதற்கு பயனாளிகளுக்கு நேர்ந்திருந்தது.

**பண முறைகேடு**

முசலி சமுர்த்தி வங்கி நிதிப்பிரமாணம் 136 – 140 மீறப்பட்டு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு ரூபா 3.39 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. இப் பணம் உத்தியோகத்தரால் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டி

ருந்ததுடன் இது நட்டமாக இனங்காணப்பட்டுள்ளது. இத் தொகையில் ரூபா 2.65 மில்லியன் அறவிடப்பட்டிருந்த போதிலும் எஞ்சிய ரூபா 0.94 மில்லியன் தொகை 2023 திசெம்பர் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**சமுர்தி நலன்தொகை செலுத்தப்பட்டிராமை**

223 சமுர்தி நலன்பெறுனர்களுக்குச் செலுத்தப்பட்ட மாதாந்தப் படிப்பணம் 10 முதல் 48 மாதங்கள் வரையான காலப் பகுதிக்காக அவர்களால் பெறப்பட்டிருக்கவில்லை. தகைமை பெற்றிராத சமுர்தி நலன்பெறுனர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 17.74 மில்லியன் தொகை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது எஞ்சியிருந்தது.

## மாத்தறை மாவட்டச் செயலகம்

**விளைவற்ற உத்தியோகபூர்வ விடுதி**

2007 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது மாத்தறை மாவட்டத்தின் வெலிபிட்டிய பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ விடுதி நிர்மாணிப்பிற்காகவும் திருத்த வேலைகளுக்காகவும் ரூபா 11.8 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் உத்தியோகபூர்வ விடுதி கடந்த 16 வருடங்களாக எந்தவித பயன்பாட்டிற்கும் எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

**விளைவற்ற சொத்துக்கள்**

மாத்தறை மாவட்ட கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு, உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சினூடாக செயற்படுத்தப்பட்ட கிராமிய விளையாட்டுத் திடல் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் திக்வெல்ல, அதுரெலிய மற்றும் வெலிபிடிய பிரதேச செயலகப் பிரிவுகளில் ரூபா 4.2 மில்லியன் கூட்டுத்தொகையான செலவில் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த 03 விளையாட்டுத் திடல்கள் இலக்கிடப்பட்ட செயற்பாட்டிற்காகப் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது. மேலும், அதுரெலிய, முலடியன மற்றும் திஹகொட பிரதேசச் செயலகங்கள் 03 இன் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் முறையே பட்ரிக் உற்பத்தி, கறுவா பட்டை உரிப்பு மற்றும் பிரம்பு சார்ந்த அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக 83 நலனாளிகளுக்கு ரூபா 5.5 மில்லியன் பெறுமதியான 611 உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவ் உபகரணங்கள் குறித்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டன.

## முல்லைத்தீவு மாவட்டச் செயலகம்

**அரசாங்கக் காணிகளுக்காக அறவிடப்பட வேண்டிய பணம்**

காணி ஆணையாளர் நாயத்தினால் 2022 ஒக்டோபர் 22 ஆம் திகதிய 2021/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் கீழ் நியமிப்பக்கப்பட்ட துணுக்காய் பிரதேச செயலகக் குழுவின் பெறுமதி மதிப்பீட்டின் படியும் 2019 ஆம் ஆண்டின் போது காலனித்துவ உத்தியோகத்தரின் அறிமுகப்படுத்தலின் அடிப்படையிலும் 19 அரச காணிகளுக்கு உரிய ரூபா 3.27 மில்லியன் அறவிடப்பட வேண்டியிருந்தது. எவ்வாறெனினும், கடந்த 1 முதல் 5 வருடங்கள் வரையான காலப்பகுதியின் போது இத் தொகை அறவிடப்படுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**நெல் கொள்வனவு மற்றும் விற்பனைக்காக வழங்கப்பட்ட தொகை தீர்க்கப்பட்டிராமை**

எந்தவித உடன்படிக்கையும் இன்றி பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டிற்கு விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்வனவு மற்றும் விற்பனைக்காக முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தால் 2015 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 20.73 மில்லியனான மொத்த முற்பணத் தொகையில் ரூபா 14.26 மில்லியன் அல்லது 69 சதவீமானவை இது வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## குருநாகல் மாவட்ட செயலகம்

**நீர்க் குழாய் நீடிப்பதற்கான செயற்திட்டம்**

2014 ஆம் ஆண்டின் போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஒதுக்கீட்டில் செயற்படுத்தப்பட்ட வாரியபொல களுகங்கை வீதியின் கொன்னவ பாலத்தில் இருந்து பமுனாகொட்டுவ சந்தி வரையிலும் பமுனாகொட்டுவ சந்தியில் இருந்து திம்மாகம வரையான நீர்க் குழாய் நீடிப்பதற்கான செயற்திட்டத்திற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு 2014 ஆம் ஆண்டின் போது முறையே ரூபா 9.62 மில்லியன் தொகையும் ரூபா 4.74 மில்லியன் தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. சபைக்குப் பணம் செலுத்தப்பட்டு 10 வருடங்களுக்குக் கிட்டிய காலம் கடந்திருந்த போதிலும் இச் செயற்திட்டங்களில் இருந்து மக்களுக்கு நீரைப் பெற்றுக்கொள்ள இயலாதிருந்தமையால் செலவிடப்பட்ட ரூபா 14.38 மில்லியன் தொகை விளைவற்றதாகி இருந்தது.

**விளைவற்ற கட்டிடங்கள்**

குருநாகல் மாவட்டத்திற்கு உரித்தான பிரதேசச்செயலகப் 19 பிரிவுகளுக்கும் அரசாங்கத்திற்கும் உரித்தான 60 கட்டிடங்கள் கொண்ட 80 ஏக்கர் காணி அளவில் பயனுள்ள செயற்பாட்டிற்காகப் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டன.

**காணிக் கையேற்பு**

குருநாகல் மாவட்டத்தில் உள்ள குளியாப்பிட்டிய (மேற்கு), கொபேகனே, பன்னல, மல்லவபிட்டிய மற்றும் ரிதீகம 05 பிரதேசச் செயலகங்களில் செயற்படுத்தப்படுவதற்கு

எதிர்பார்க்கப்பட்ட 45 அபிவிருத்தித் திட்டங்களுக்காக காணிக்கையேற்பு நடவடிக்கைகள் 02 வருடங்கள் முதல் 47 வருடங்கள் வரையான கால வீச்சில் தாமதமாகி இருந்த போதிலும் காணிக் கையேற்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**வள விபரம்**

30 பிரதேச செயலகங்களின் வள விபரங்களின் படி, குருநாகல் மாவட்டத்தில் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 4,744 தற்காலிக வீடுகள், 6,596 அத்துமீறிய குடியிருப்புகள், 3,908 மின் இணைப்பு அற்ற வீடுகள், 17,372 பாதுகாப்பற்ற கிணறுகள், 33,513 பகுதியளவில் நிரந்தர வீடுகள், 3,818 குளிக் கழிவறைகள், 7,654 கழிவறைகளற்ற வீடுகள், 4,505 குடியிருப்பிற்கு வீடுகள் அற்ற குடும்பங்கள் இருந்த போதிலும் மாவட்டத்தில் அபிவிருத்தி செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படுகையில் இப் பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கப்பெறும் வகையில் தீர்மானங்கள் தயாரிக்கப்பட்டு ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்படுவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என அவதானிக்கப்பட்டது.

**காணிக் கையேற்பு நடவடிக்கைகள்**

பமுனகொட்டுவ, மாகொ மற்றும் மாவத்தகமவின் 03 பிரதேச செயலகப் பிரிவுகளில் 08 கிராம சேவைப் பிரிவுகளில் உள்ள அரசாங்கத்திற்கு உரிய காணிகளும் கட்டிடங்களும் அந் நிறுவனங்களிற்கு கையேற்கப்படுவதற்கான கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்த போதிலும் 3 வருடங்கள் முதல் 13 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் அக் காணிக் கையளிப்பு நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

**பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்கள்**

2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நிலையான நியமனங்களைப் பெற்றிராத 324 பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்கள் குருநாகல் மாவட்ட பிரதேச செயலகங்களில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியில் நிலையாக கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## மொனறாகலை மாவட்டச் செயலகம்

**சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டிராமை**

2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மடுல்ல பிரதேச செயலகத்திற்கு உரித்தான ரூபா 106.87 மில்லியனான அலுவலகக் கட்டிடம், காணி, அரசாங்க வீடுகள், தொடர்பாடல் உபகரணங்கள், கணனி மற்றும் உதிரிப் பாகங்கள், தளபாடங்கள், கமநல உபகரணங்கள் மற்றும் மின் உபகரணங்கள் ரூபா 58.88 மில்லியன் கூட்டுத்தொகையான மக்கள் போக்குவரத்து வண்டிகளும் கமநல வாகனங்களும் நிதி நிலைமைக் கூற்றுக்களில்

ஆதன இயந்திர உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிராமையால் ஆதன, இயந்திர உபகரணங்களும் ஆதன, இயந்திர உபகரண தொகுதியும் அப் பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

**சொத்துக்கள் மதிப்பிடப்பட்டிராமை**

வெல்லவாய மற்றும் தனமல்வில பிரதேச செயலகங்களால் நிர்மாணிக்கப்பட்டிருந்த அரசாங்க வீடுகளும் மொனறாகலை பிரதேச செயலகத்திற்கு உரித்தான நிர்வாக உத்தியோகத்தரின் உத்தியோகபூர்வ விடுதியும் அது உள்ள காணியை மதிப்பிட்டு அப்பெறுமதி 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## நுவரெலியா மாவட்ட செயலகம்

**மண்சரிவிற்கான கூடிய அபாயத்தைக் கொண்ட வலயங்களில் குடியிருக்கும் குடும்பங்களை அகற்றும் செயற்திட்டம்**

மண்சரிவிற்கான கூடிய அபாய வலயமாக 2017 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்ட அம்பகமுவ பிரதேச செயலகப்பிரிவிற்கு உரித்தான ஹட்டன், சமனலகம பகுதியில் 12 குடும்பங்களை அப் பகுதியில் இருந்து அகற்றப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டு இவர்களில் 06 குடும்பங்களுக்காக ஓர் அரசாங்கக் காணியில் வீடுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 6.3 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 06 வருடங்கள் பூர்த்தியானதை அடுத்தும் போதிலும் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் இடைநடுவில் நிறுத்தப் பட்டிருந்தது.

மேலும் அப் பிரதேசச் செயலகப் பிரிவில் 2019 ஆம் ஆண்டின் போது அகற்றப்பட்டிருந்த 04 குடும்பங்களுக்கு களுகல மில்கஹ முல பிரதேசத்தில் அவர்களால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த காணிகளில் வீடுகளை நிர்மாணிப்பதற்கும் காணிக் கொள்வனவிற்காகவும் ரூபா 2.7 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நிர்மாண முன்னேற்றம் நூற்றுக்கு 30 அளவில் குறைவான நிலையில் காணப்பட்டது.

**செயற்திட்டம் செயற்படுத்துவதிலான தாமதம்**

அரசாங்கத்தால் வழங்கப்படும் ரூபா 4 இலட்சம் தொகையில் பயனாளியால் கொள்வனவு செய்யப்படும் காணியில் அரசாங்கத்தால் வழங்கப்படும் நிதி உதவியில் ஓர் வீட்டை நிர்மாணிப்பதற்கான தேவைப்பாட்டில், இடர் உதவி சேவைப் பிரிவால் 05 பிரதேசச் செயலகப் பிரிவுகளில் அபாயம் என இனங்காணப்பட்ட 159 குடும்பங்களுக்காக வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு மீள் குடியேற்றப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. இவர்களில்

115 குடும்பங்களை மீள்குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே, அரசாங்கத்தால் வீடுகளை நிர்மாணித்துக்கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், இடர் கடன் உதவி சேவைப் பிரிவால் நுவரெலியா மாவட்டத்தில் 970 குடும்பங்கள் தற்போதைய குடியிருப்புப் பகுதிகளில் இருந்து அகற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், இவர்களில் 798 குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கவில்லை.

**நீதிமன்றத் தீர்ப்பின் படி, காணி கையகப்படுத்தப்பட்டிராமை**

1981 இன் 58 ஆம் இலக்கம் மற்றும் 1983 இன் 29 ஆம் இலக்க சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட 1979 இன் 07 ஆம் இலக்க அரசாங்கக் காணிச் சுவீகரிப்புகளை மீளப் பெறும் சட்டத்தின் படி, பிளக்பூல் பகுதியில் அத்துமீறிய குடியிருப்பாளர்களை அகற்றி குறித்த காணியின் உரிமையைக் கையேற்பதற்கு நுவரெலிய நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்குட்படுத்தப்பட்ட 76818 ஆம் இலக்க வழக்கிற்கு உரித்ததாக 2006 நவம்பர் 28 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த தீர்ப்பும் 2010 ஒக்டோபர் 01 ஆம் திகதி நுவரெலியா மேல்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பின் படி, சுவீகரிப்பைக் கையேற்பதற்கு 2024 மே 31 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**எதிர்பார்க்கப்பட்ட நலனைப் பெற்றுக்கொண்டிராமை**

தலவாக்கலை மற்றும் நுவரெலியா மாவட்டச் செயலகங்களில் காத்திருப்போர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்த 881 முதியோர், ஊனமுற்றோர் மற்றும் சிறுநீரகப் படிப்பணக் கொடுப்பனவு விண்ணப்பதாரிகளுக்காக வழங்கப்பட வேண்டிய 2023 யூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களுக்கு உரித்தான ரூபா 8.8 மில்லியன் படிப்பணம் குறித்த பயனாளிகளுக்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## பொலொன்னறுவை மாவட்டச் செயலகம்

**சேதனப் பசளைப் பகிர்வு**

சுற்றாடலுக்கு உகந்த பசளைப் பகிர்வு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பொலொன்னறுவை மாவட்டத்தில் 2022 பெரும்போகத்தின் போது ரூபா 298.1 மில்லியனும் 2022/2023 பெரும் போகத்தின் போது ரூபா 681.4 மில்லியன் பெறுமதியான சேதனப் பசளை பரிந்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பரிந்துரைக்கப்பட்ட தரத்திற்கு இணங்க வழங்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. இதன் படி, புலஸ்திகம கமநல சேவை அதிகாரத்திற்குட்பட்ட பகுதியில் உள்ள 211 விவசாயக் குடும்பங்களுக்கு 2022 பெரும்

போகத்தின் போதும் 2022/2023 பெரும் போகத்தின் போதும் பகிர்ந்தளிக்கப்பட இருந்த ரூபா 9.5 மில்லியன் பெறுமதியான சேதன உரம் விவசாயிகளால் எடுத்துச் செல்வதற்கு மறுக்கப்பட்டதன் காரணமாக சேதத்திற்கு உட்பட்டிருந்தது.

**நெல் கொள்வனவு**

2021 பெரும் போகத்தில் பொலொன்னறுவை மாவட்டச் செயலகத்தின் மூலம் செயற்படுத்தப்படும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களினூடாக விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்வனவு செய்யப்பட்டு, கொள்வனவு செய்யப்பட்ட நெல் இருப்பு அரிசியாக்கப்பட்டு மீள அரசாங்கத்திற்கு வழங்கப்படும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் திம்புலாகல, தமன்கடுவ, லங்காபுர, எலஹர மற்றும் கிங்குரக்கொட பிரதேச செயலகத்தினூடாக நெல் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட நெல் தொகையில் திறைசேரிச் செயலாளரின் 2021 யூலை 22 ஆம் திகதிய DFD/Paddy/2021-3 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 7(1) ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 215 மில்லியன் பெறுமதியான 2.18 மில்லியன் கிலோ அரிசி அரசாங்கத்திற்கு வழங்கப்படுவதற்கு ஆலை உரிமையாளர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2021 பெரும் போகத்தின் போது 19 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஆலை உரிமையாளர்களினூடாக 294 விவசாயிகள் நெல்லைப் பெற்றுக்கொண்டதாக கண்காணிப்பு நடவடிக்கைகளிற்குப் பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தரின் மூலம் குறித்த படிவங்கள் தயாரிக்கப்பட்டு நெல்லிற்காக ரூபா 87.46 மில்லியனும் பொதியிடல் பைகள் மற்றும் உலர்த்தல் கூலியாக ரூபா 7.68 மில்லியன் தொகையும் 05 பிரதேச செயலகங்கள் மூலம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்த நெற் தொகையைப் பெற்றிராமை அவதானிக்கப்பட்டது.

**நிர்வாகக் கட்டிடத் தொகுதியை நிர்மாணித்தல்**

“பிபிதெமு பொலொன்னறுவை ரஜயட்ட நவோதய” அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 1,303.86 மில்லியன் தொகையான ஒப்பந்தப் பெறுமதிக்கு நிர்வாகக் கட்டிட நிர்மாணிப்பிற்கான ஒப்பந்தம் மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திற்கு 2016 திசெம்பர் 15 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. இச் செயற்திட்டம் 2018 திசெம்பர் 15 ஆம் திகதி பூர்த்தி செய்யப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நிர்மாணிப்பு வேலைகளைப் பூர்த்திசெய்து கையளிக்கப்பட்டிராததுடன் பௌதீக மற்றும் நிதி

முன்னேற்றம் முறையே 79 ஆகவும் 94 ஆகவும் காணப்பட்டது.

**ஹிங்குரக்கொட பஸ் தரிப்பிட மேல் தள நிர்மாணிப்பு**

ஹிங்குரக்கொட பஸ் தரிப்பிட மேல் தள நிர்மாணிப்புச் செயற்திட்ட நடவடிக்கைகள் "பிபிதெமு பொலொன்னறுவை ரஜயட்ட நவோதய" அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டின் போது செயற்படுத்தப்பட்டிருந்தது. அங்கு அரசாங்கப் பொறியியல் கூட்டுத்தாபனத்தின் ஆலோசனைகள் பின்பற்றப்படாது செயற்திட்டத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் செயற்பட்டதனால் தொழில்நுட்பக் குறைபாடுகள் எழுந்ததன் காரணமாக நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் படி, செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 11.17 மில்லியன் தொகை விளைவற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## புத்தளம் மாவட்ட செயலகம்

**சௌபாக்கியா சமுர்த்தி உற்பத்திக் கிராம நிகழ்ச்சித்திட்டம்**

கற்பிட்டி பிரதேச செயலகம், சௌபாக்கியா சமுர்த்தி உற்பத்திக் கிராம நிகழ்ச்சித்திட்டம் 2021 இன் கீழ் 2021 ஆம் 2022 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 6.84 மில்லியன் கூட்டுத்தொகையான செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கந்தகுலிய பெறுமதி சேர்க்கப்பட்ட கருவாட்டு உற்பத்திக் கிராமம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் கருவாடு உலர்த்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

**தாமத வட்டிக் கொடுப்பனவு**

நிர்மாணிக்கப்பட்டு வரும் மாவட்டச் செயலகத்தின் பிரதான கட்டிடத்தின் ரூபா 28.37 மில்லியனான 14 ஆவது பட்டியல் கொடுப்பனவுகள் நிராகரிக்கப்பட்டிருந்த போதிலும் தீர்ப்பனவு நடவடிக்கைகளின் பின்னர் அப் பட்டியல்களைச் செலுத்துவதற்கு நேர்ந்தமையால் தாமத வட்டித் தொகையாக ரூபா 10.35 மில்லியன் மேலதிகமாகச் செலுத்த நேரிட்டிருந்தது.

## இரத்தினபுரி மாவட்டச் செயலகம்

**வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பாதிப்பிற்குள்ளான வீடுகளுக்குப் பதிலாக இழப்பீடு வழங்கப்பட்டிராமை**

வெள்ளம் மற்றும் மண்சரிவினால் 2017 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது பாதிப்பிற்குள்ளான வீடுகளுக்குப் பதிலாக 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகை ரூபா 338.40 ஆகும். 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 312.44 மில்லியன் தொகையான மீதியும் இம் மீதியில் காணப்பட்டதுடன் இழப்பீடு செலுத்தப்படுவதற்காக

போதுமான ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றிராமை கொடுப்பனவின் தாமதத்திற்குக் காரணமாகியிருந்தது.

**அரசாங்க விடுதிகள் பயன்பாடற்றிருந்தமை**

மாவட்டச் செயலகங்களிற்கு உரித்தான 07 அரசாங் விடுதிகள் 05 வருடங்களுக்கு மேலான காலமாக பயன்பாடற்றுக் காணப்பட்டமையால் அவ் விடுதிகள் காடாக மூடப்பட்டிருந்ததுடன் கதவுகளும் யன்னல்களும் திருடர்களால் எடுத்துச் செல்லப்பட்டிருந்தன. அவ் விடுதிகள் போதைப் பொருட்கள் உள்ளடங்கலாக பல்வேறு ஒழுக்கக் கேடான செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படுவதுடன் அத்துமீறிக் குடியிருப்பவர்களின் அபாயமும் நிலவுகின்றது. வீடுகளுக்கான காத்திருப்போர் பட்டியலில் உள்ள 77 உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க வீடுகள் பெறப்படுவதில் தாமதம் நிலவியது.

**போட்டி மனு கோரப்பட்டிராமை**

குருவிட்ட நாலந்த எல்லாவல தொழிற்பேட்டையில் நீர்க்குழாய் ஸ்தாபிக்கும் செயற்திட்டத்திற்காக போட்டி மனுக் கோரப்படாது ரூபா 11.96 மில்லியனான ஒப்பந்தம் 04 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு சமூகசார் அமைப்புகளுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன. இவ்வாறே, குழாய்கள் ஸ்தாபிக்கப்பட்டு மீள நிரப்புகையில் இருக்கும் மண்ணைப் பயன்படுத்துவது தொடர்பாக ஆராய்வதற்குப் பதிலாக விலை உயர்ந்த மண்ணைப் பயன்படுத்தி வாய்க்கால்கள் நிரப்பப்பட்டதன் காரணமாக ஒப்பந்தப் பெறுமதியில் ரூபா 9.67 மில்லியன் அதாவது 87 சதவீதமான பாரிய கிரயம் இதற்காக ஏற்க நேரிட்டது.

**செயற்திட்டம் தோல்வியுறல்**

ஒன்பது பிரதேச அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் 973 குடும்பங்களுக்கு 10522 கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டிருந்தன. இவற்றில் ரூபா 1.49 மில்லியனிற்காக 3288 குஞ்சுகள் இறந்திருந்தமை குஞ்சுகளைக் கொள்வனவு செய்வதற்கு முன்னர் அரசாங்க கால்நடை வைத்தியரின் பரிந்துரை பெறப்பட்டிராமை, பின்தொடர் நடவடிக்கை இன்மை, தீனியின் விலை அதிகரிப்பின் காரணமாக வேறு உணவு வழங்கப்பட்டதன் காரணமாக முட்டையிட்டிராமை, பெறுகை மாதிரிகளின் படி, 09 கோழிக் குஞ்சுகளுக்கு ஒரு சேவல் என்ற விகிதாசாரம் பின்பற்றப்படாமை போன்ற காரணங்களால் இச் செயற்திட்டம் தோல்வியடைந்திருந்தது.

**தரமற்ற நிர்மாணிப்புகள்**

ஓபனாயக்க கலாச்சார நிலையத்தின் மேடை உரிய தரத்தில் நிர்மாணிக்கப்பட்டிராததுடன் மேடையின் மேற்பகுதியில் இடப்பட்டிருந்த பெரும்பாலான பலகைகள் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டன. இதனால் தரமான மேடை ஒன்று நிர்மாணிக்கப்படும் வரை இக் கலாச்சார நிலையத்தைப் பயன்படுத்த இயலாததுடன் கட்டிட

நிர்மாணிப்பிற்காகச் செலவிடப்பட்ட ரூபா 4.11 மில்லியன் தொகை விளைவற்றுக் காணப்பட்டது.

**முறையற்ற பணத்தை அறவிடுதலும் செலவிடுதலும்**

அம்பிலிபிட்டிய பிரதேச செயலகத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட “அமாதஹர பொசொன் வலயம் 2023 இற்காக முறையற்ற விதத்தில் நிதிக் குழு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு நிதிப் பிரமாணத்தின் 170(2) இற்கு முரணாக பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படாது பொது மக்களிடம் இருந்து ரூபா 1.3 மில்லியன் அறவிடப்பட்டிருந்தது. அத் தொகையில் ரூபா 1.29 மில்லியன் பெறுகை நடைமுறை மற்றும் உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்படாது செலவிடப்பட்டிருந்தன.

## வவுனியா மாவட்டச் செயலகம்

**பொருளாதார மத்திய நிலையம் பயன்பாடற்றுக் காணப்பட்டமை**

2018 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத் தீர்மானத்தின் படி, ரூபா 291.64 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த வவுனியா பொருளாதார மத்திய நிலையம் 2023 திசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பொதுப் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், அந் நிலையத்திற்கான பாதுகாப்பு சேவைகள் கட்டணம், சுத்திகரிப்பு சேவைகள் கட்டணம் மற்றும் நீர்க் கட்டணங்களாக ரூபா 7.85 மில்லியன் கூட்டுத்தொகையான தொகை கடந்த் 06 வருடகாலமாக செலுத்தப்பட்டிருந்தன.

**குத்தகை அறவிடப்பட்டிராமை**

நீண்ட காலக் குத்தகை அடிப்படையில் அரசாங்கக் காணிகள் 12 வருட காலமாக குத்தகைக்கிடப்பட்டமைக்காக குத்தகை மற்றும் தண்டப்பணக் கூட்டுத்தொகையான வவுனியா இலங்கை வங்கிக் கிளைக்குக் கிடைக்கப்பெற வேண்டிய ரூபா 45.39 மில்லியன் தொகையை அறவிட்டுக்கொள்வதற்கு வவுனியா பிரதேச செயலகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**இடைநடுவில் நிறுத்தப்பட்ட செயற்திட்டங்கள்**

வவுனியா பிரதேசச் செயலகத்தின் கீழ் முன்பள்ளிக் கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் நடவடிக்கை ரூபா 2 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தத்தின் மூலம் 2019 ஆம் ஆண்டின் போது பூர்த்திசெய்யப்படுவதற்கு இருந்த போதிலும் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இச் செயற்திட்டத்திற்காக ரூபா 1.55 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அது பலனற்ற செலவினமாகி இருந்தது.

## திருகோணமலை மாவட்டச் செயலகம்

**அரசாங்க நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டம் முறையாகச் செயற்படுத்தப்பட்டிராமை**

2022/ 2023 பெரும் போகத்தின் போது அரசாங்க நெல் கொள்வனவு தொடர்பாக நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் DFD/2023-1 ஆம் இலக்க 2023 பெப்ரவரி 09 ஆம் திகதிய சுற்றறிக்கையின் 2.3.2 ஆம் பந்தியின் படி, கையிருப்பில் உள்ள நெல் இருப்பு 2023 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்குள் பகிர்ந்தளிக்கப்படக் கூடிய வகையில் அரிசியாக்கப்பட்டு பூர்த்திசெய்யப்படுவதற்கு சிறிய மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்களின் இயலளவைக் கருத்திற்கொண்டு நெல் கொள்வனவிற்குத் தேவையான பணத்தை குறித்த நெல் ஆலை உரிமையாளருக்கு செலுத்தப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 2023 ஒக்டோபர் 12 ஆம் திகதிய கணக்காய்வுக் கள ஆய்வுப் பரிசோதனையின் போது பதவி ஸ்ரீ புர பிரதேசச் செயலகப் பிரிவில் உள்ள ஆலைக் களஞ்சியத்தில் ரூபா 42.74 மில்லியன் கூட்டுத்தொகையான 427.440 கிலோ கிராம் நெல் இருப்பு கடந்த ஆறு மாத காலத்திற்கு முன்பிருந்தே காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

2019/2020 பெரும் போகத்தின் போது கொள்வனவு செய்யும் உடனடி வேலைத் திட்டத்தின் கீழ் கந்தளாய் பிரதேச செயலகப் பிரிவில் 04 அரிசி ஆலை உரிமையாளர்களிடம் இருந்தும் இலங்கை சதொச நிறுவனத்திடம் இருந்தும் கிடைக்கப்பெற இருந்த ரூபா 6.5 மில்லியன் பெறுமதியான 77,146 கிலோகிராம் அரிசிக்கான தொகை 03 வருடங்களுக்கு மேலான காலம் கடந்திருந்த போதிலும் மாவட்டச் செயலகத்தால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## யாழ்ப்பாண மாவட்டச் செயலகம்

**மட்டுவில் பொருளாதார மத்தியநிலையம் பயன்பாடற்றுக் காணப்பட்டமை**

2018 ஆம் 2020 ஆம் ஆண்டுகளின் போது இரண்டு அமைச்சுக்களால் வழங்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டில் இருந்து 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 196.04 மில்லியன் செலவிடப்பட்டு யாழ்ப்பாணம், மட்டுவில் பொருளாதார மத்தியநிலையம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பொருளாதார மத்தியநிலையம் பொதுப் பயன்பாட்டிற்காக செயற்பட்டிருக்கவில்லை.

**கழிவு மீள்சுழற்சி செயற்திட்டம்**

மாவட்டச் செயலகத்தால் 2018 ஆம் ஆண்டின் போது அமைச்சால் வழங்கப்பட்டிருந்த ரூபா 75.32 மில்லியன் நிதியத்தின் மூலம் சுன்னாகம் பிரதேசத்தின் கழிவு மீள்சுழற்சிச் செயற்திட்டம் ஒன்றிற்காக ஒப்பந்தம் ஒன்று

வழங்கப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த செயற்திட்டம் ரூபா 65.95 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அச் செயற்திட்டம் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

விசேட சர்வதேச சந்தைப் பிரிவுகளை வெற்றிகொள்ளும் வகையில் நவீன தொழில்நுட்பத்துடன் போசிக்கப்பட்ட உயர் பெறுமதி சேர்த்தல்களுடன் பெருந்தோட்ட பயிர்களின் அபிவிருத்தி, நாட்டிற்கு உழைக்கப்படுகின்ற அந்நிய செலாவணியை அதிகரிக்கச் செய்தல், பயிர்ச் செய்கையாளர்களின் வருமானத்தை உயர்ந்த மட்டத்திற்கு கொண்டு வந்து அந்த நோக்கத்தை அடைந்து, பெருந்தோட்ட கைத்தொழில் அபிவிருத்தியின் மூலம் தேசிய சௌபாக்கியத்தை அடைதல் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் தூர நோக்காகும். இந்த அமைச்சிற்குரிய 02 திணைக்களங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனம் மற்றும் நியத்திச் சட்ட நிறுவனங்கள் 28 காணப்பட்டது. இந்த அமைச்சு மற்றும் நிறுவனங்களினால் பின்வரும் பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டி இருந்தன.

**பணிப் பொறுப்புக்கள்**

பெருந்தோட்ட கைத்தொழில் துறையின் வினைத்திறனுக்காக சர்வதேச போட்டி நிலைமையினைக் கட்டி எழுப்புதல், சர்வதேச சந்தையை இலக்காகக் கொண்ட பெருந்தோட்ட பயிர்ச்செய்கையினை அடிப்படையாகக் கொண்ட பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் தொடர்பான கைத்தொழில்களைக் கட்டி எழுப்புவதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்

தேயிலை, இறப்பர் கைத்தொழில் அபிவிருத்தி, மேம்படுத்துதல், ஆராய்சிகளுக்குரிய நடவடிக்கைகள்

தேயிலை, இறப்பர், தெங்கு தோட்டங்கள் கூறுகளாக்கப்பட்டு குடியிருப்புக்களை நிர்மாணித்தல் ஆகக் கூடிய ரீதியில் வரையறுத்தல், தேயிலை, இறப்பர் மற்றும் தென்னந் தோட்டங்களை கூறுகளாக்குதல் தொடர்பாக அனுமதிப் பத்திரங்களை விநியோகித்தல் மற்றும் கட்டுப்படுத்துதல்.

பெருந்தோட்ட பயிர் கைத்தொழிலுக்காக புதிய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவதை அதிகரித்தல்.

அரச மற்றும் தனியார் பெருந்தோட்ட கம்பனிகளுக்குச் சொந்தமான காணிகளையும் உள்ளடக்கி அது சார்ந்த போக பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளை இலக்காகக் கொண்டு இறப்பர் சார்ந்த உற்பத்திகளை ஊக்குவித்தல்.

தோட்டத் துறையின் காணிகளை முறையாக பயன்படுத்துவதற்கான திட்டம் ஒன்றை தயாரித்து அமுல்படுத்துதல்.

சிறு தோட்ட பயிர்ச்செய்கையாளர்களை ஊக்குவிப்பதற்கான வேலைத் திட்டம் ஒன்றை அமுல்படுத்துதல்.

பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளையும் உள்ளடக்கி நிலைபேறான வளங்களின் பயன்பாடு மற்றும் உயிரியல் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்காக தேவையான கொள்கைகளை அமுல்படுத்துதல்.

பல்லினப் பயிர்ச்செய்கைகள் மற்றும் கூட்டிணைந்த விவசாய முறையின் மூலம் தோட்டக் காணிகளை உச்ச அளவில் பயன்பாட்டுக்கு எடுத்தல் மற்றும் அதன் மூலம் உற்பத்தி மற்றும் வேலை வாய்ப்புக்களை அதிகரித்தல்.

## கணக்காய்வு அவதானிப்புக்கள்

### பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

**நிலுவை வரி வருமானம்**

1992 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்துக்குரிய கூட்டுமொத்தமான 249,843 ஹெக்ரேயர் அளவான காணிப் பிரதேசங்கள் 23 பெருந்தோட்ட கம்பனிகளுக்கு 53 வருட காலத்திற்காக வாடகை அடிப்படையில் கையளிக்கப்பட்டிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த 10 கம்பனிகளிலிருந்து அரசாங்கத்துக்கு அறவிட வேண்டிய ரூபா 587 மில்லியன் வாடகை வருமானம் நிலுவையாகக் காணப்பட்டது.

**குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி**

1995 நவம்பர் 27 ஆந் திகதி குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியுடன் ஏற்படுத்தப்பட்ட இலக்கம் 1558 என்ற குத்தகை வாடகை திருத்த உடன்படிக்கையின் படி அத்திகதியில் காணப்பட்ட தேறிய சொத்தின் அடிப்படையில் கணிப்பிடப்பட்ட வாடகை, 53 வருட காலத்தின் போது சமமான நான்கு தவணைகளில் செலுத்துதல் வேண்டும். தற்போது தேறிய பெறுமதி குறைவடைந்திருந்ததாக காண்பித்து கம்பனியால் வருடத்திற்கு செலுத்த வேண்டிய வாடகைத் தொகை குறைத்து செலுத்தியதன் காரணமாக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 326.5 மில்லியன் குருநாகல் பெருந்தோட்ட கம்பனியில் இருந்து அறவிட வேண்டி இருந்ததுடன் அதில் ரூபா 168 மில்லியன் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் நிலுவையாகக் காணப்பட்டது.

### இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபை

**பிணை முறிகள் அறவிடப்படாமை**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XV அத்தியாயத்தின் 4:7 பிரிவின் பிரகாரம் கல்வி சார் நடவடிக்கைகளுக்காக சம்பளத்துடனான விடுமுறை பெற்று வெளிநாடு சென்று பிணை முறி நிபந்தனைகளை மீறிய 05 உத்தியோகத்தர்களிடம் இருந்து 06 வருடங்கள் முதல் 33 வருடங்கள் வரையிலான கால வீச்சில் சபைக்கு அறவிட வேண்டி இருந்த கூட்டுமொத்தமான ரூபா 4.2 மில்லியன் தொகை 2024 யூலை 31 ஆந் திகதி வரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**உயிரியல் எரிபொருள் மர வகைகளை இனங்கண்டு தீர்மானிக்கும் செயற்திட்டம்**

சிறிய இறப்பர் காணி உரிமையாளர்களுக்காக உயிரியல் எரிபொருள் மரம் வகைகளை இனங்கண்டு தீர்மானிக்கும் செயற்திட்டம் ஒன்றை அமுல்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்புடன் 2017 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் போது செயற்திட்டம் முடிவடைய வேண்டி இருந்தது. எனினும் குறித்துரைத்த பணிகள் வெற்றிகரமாக பூர்த்தி

செய்யப்படாமையின் காரணமாக அதற்காகக் கிடைக்கப் பெற்ற ரூபா 10.4 மில்லியனில் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 4.2 மில்லியன் அதாவது 40 சதவீதம் பயனற்றதாக காணப்பட்டது.

**துகள்களை மட்டுப்படுத்தும் சேவை நிலையம்**

அரச தனியார் கூட்டு முயற்சி ஊடாக வியாபார மாதிரி ஒன்றாக இறப்பர் உற்பத்தியைத் திட்டம் இடல் மற்றும் செயலாற்றலை மதிப்பிடுவதற்காக ரூபா 49.7 மில்லியன் செலவில் ஆரம்பிக்கப்பட்டிருந்த துகழ்களை சேகரிக்கும் மத்திய நிலையத்தில் (FEAS CENTER) பணிகள் 2023 ஒக்ரோதபர் மாதம் முதல் முழுமையாக நிறுத்தப்பட்டிருந்தது. அதனால் உரிய கட்டிடம் மற்றும் ரூபா 38.9 மில்லியன் கிரயமான கணனிகள் மற்றும் மென்பொருள், இயந்திரம், தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்கள் யாவும் விளைவற்றுக் காணப்பட்டது. மேலும் அந்த நிலையத்தில் ஸ்தாபிக்கும் நோக்கமான உலகலாவிய சந்தையில் வினைத்திறனான போட்டியிடுவதற்கு இலங்கையின் இயற்கை மற்றும் இறப்பர் பிரிவுகளை சேகரிப்பதற்காக, இறப்பர் உற்பத்திகளின் வடிவமைப்பு மற்றும் கூறிடல்கள் (simulation) இற்காக கூறுகளை வரையறுத்தல் சேவைகளை பயன்படுத்துவதற்கு தேவையான திறன் அபிவிருத்தி மற்றும் வலயத்திற்கு துகழ் சேவையினை வழங்கும் நோக்கில் நிலையம் ஒன்றாக உட்படுத்துதல் என்ற நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

## தென்னை அபிவிருத்தி அதிகார சபை

**தரப் பரிசோதனை மேற்கொள்ளாமை**

1975 இன் 24 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1971 இன் 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி சட்டத்தின் 51 ஆம் பிரிவு மற்றும் 1979 திசெம்பர் 31 ஆந் திகதிய இலக்கம் 69/4 என்ற அதிவிசேட வர்த்தமானியின் முதலாவது பட்டோலையின் 3 ஆவது பந்தியின் பிரகாரம் ஏற்றுமதி செய்யப்படுகின்ற தெங்கு உற்பத்திகளின் தரத் தன்மை தொடர்பாக நியமத்தை நிர்ணயித்தல் மற்றும் நடத்தி செல்லல் அதிகார சபையினால் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் போது 277,510 ஐ.அ.டொலர் ஆன தெங்கு சார்ந்த உற்பத்திகள் (உலர்ந்த தேங்காய் தவிர) மெற்றிக் தொன் 172,685 ஏற்றுமதி செய்யப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பான தரப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**விசேட சந்தைகளுக்காக ஏற்றுமதிக்கான தரத்தை பரிசோதித்தல்**

1987 திசெம்பர் 10 ஆந் திகதிய இலக்கம் பொசங்அ/திபொ/மோ/87/15 உள்ளக சுற்றறிக்கையின் 3 மற்றும் 4 ஆம் பிரிவுகளின் பிரகாரம் ஐக்கிய அமெரிக்க குடியரசு, கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற விசேட சந்தைகளுக்காக ஏற்றுமதி செய்யப்படுகின்ற உலர்ந்த தேங்காய் உற்பத்திகளைப் பரீட்சித்தல்,

மாதிரிகளைப் பெறல், தரத்தை உறுதிப்படுத்துவதற்காக நாளாந்த உற்பத்தியில் 25 சதவீத மாதிரிகளை சேகரிப்பதற்கும் அவ்வாறு சேகரிக்கப்படுகின்ற மாதிரிகள் இலங்கை நியம மாதிரிகளுக்கு இணங்கி இருந்ததா என்பதை பரீட்சித்தலும் மேற்கொள்ளப்படல் வேண்டும். எனினும் 2023 ஆம் ஆண்டின் போது இயற்கை தேங்காய் மெற்றிக் தொன் 5,082 அந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருந்த போதிலும் பரிசோதனை செய்வதற்கான மாதிரிகள் சேகரித்தல் 10 சதவீத அளவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**துன்கண்ணாவ தும்பு அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையம்**

தும்புக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக பயிற்சி நிலையம் ஒன்றாக 2006 ஆம் ஆண்டின் போது துன்கண்ணாவ தும்பு அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும் 2023 ஆம் ஆண்டின் போது அதன் பயிற்சி பாடநெறிகள் நடாத்தப்படாதிருந்ததுடன் தொழிற்சாலையில் காணப்படுகின்ற 18 இயந்திரங்களில் 14 இயந்திரங்கள் செயழிந்திருந்தமையும் ஏனைய இயந்திரங்களை பழுது பார்க்க வேண்டிய நிலைமையில் காணப்பட்டதன் மூலம் பயிற்சி நிலையம் ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கத்தை நிறைவேற்றாது காணப்படுகின்றமை சொத்துக்கள் யாவும் பயனற்று துரப்பிடிக்கும் நிலைக்கு உட்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

## தென்னை ஆராய்ச்சி நிறுவனம்

**பிணைமுறிகள் அறவிடப்படாமை**

கற்கை விடுமுறை பெற்று வெளிநாடு சென்று மீண்டும் வருகை தராத 08 உத்தியோகத்தர்கள் மற்றும் கட்டாய சேவைக் காலத்திற்கு குறைவாக பூர்த்தி செய்த ஒரு உத்தியோகத்தரிடம் இருந்தும் அறவிட வேண்டிய ரூபா 45.7 மில்லியன் தொகை 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**கினியம செயற்திட்டம்**

ஆராய்ச்சி நிறுவனத்திற்குரிய கினியம செயற்திட்டம் அமுல்படுத்தப்படுகின்ற 141 ஏக்கர் ஒட்டுமொத்த நிலஅளவை மேவுகை செய்யும் வகையில் குழாய் நீர் முறைமை பொருத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக தனியால் கம்பனி ஒன்றுக்கு ரூபா 21 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் தேவையான இயலளவு காணப்படாமை மற்றும் குழாய் முறைமையில் ஒரு பகுதி செயலிழந்ததன் காரணமாக ஏற்பட்ட நட்டப்பட்ட மரங்களில் 400 மரங்களுக்கு அதாவது 5 சதவீதமான சிறிய அளவிற்கு மாத்திரம் இதன் மூலம் நீர் வழங்க முடியுமாக இருந்ததுடன் மிகுதி 95 சதவீதத்திற்காகவும் பௌசர் மூலம் தண்ணீர் வழங்க வேண்டி இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## இலங்கை தேயிலைச் சபை

**உலக தேயிலை சந்தை**

**பங்கு வீழ்ச்சியடைந்தமை**

இலங்கையின் மொத்த தேயிலை உற்பத்தி மற்றும் ஏற்றுமதிகள் படிப்படியாக அதிகரிக்காமையின் காரணமாக 2011 ஆம் ஆண்டின் போது 18 சதவீதமான இலங்கையின் தேயிலைக்கான உலக தேயிலைச் சந்தைப் பங்கு (World Prod Share) 2023 ஆம் ஆண்டு வரையில் 3.88 சதவீதம் வரை உயர்வடைந்து சென்றமை தேயிலைக் குழு வெளியீட்டின் மேலதிகம் (Supplement to Annual Bulletin of Statistics 2023) இன் பிரகாரம் அவதானிக்கப்பட்ட போதிலும் சந்தைப் பங்கை அதிகரித்துக் கொள்வதற்காக சபையினால் பொருத்தமான அளவில் நடவடிக்கை எடுக்கப்படாது இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**உலகளாவிய மேம்படுத்தல் மற்றும் சந்தைப் படுத்தல் நிகழ்ச்சித் திட்டம்**

“சிலோன் ரீ” இற்காக உலக மேம்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சம்பிரதாய ரீதியாக உயர்ந்த மட்டத்தில் பிரசாரம் செய்வதற்காக தொலைக்காட்சி ஈடுபடுத்துவதற்கு ஆங்கில மொழியில் தொலைக்காட்சி விளம்பர அறிவித்தல் வடிவமைப்பதற்கும் மற்றும் அதை சீன, ஜப்பான், அராபிய, யுக்ரேன், ஜேர்மன் மற்றும் துருக்கி பாசைகளில் மொழிமாற்றம் செய்வதற்கு 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை ரூபா 174.3 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும் அந்த சந்தைப்படுத்தல் அறிவித்தல் விளம்பரத்திற்காக ஊடக நிறுவனங்களுக்கு செலுத்துவதற்கு உரிய சான்றுகள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையினால் அந்த அறிவித்தல்கள் ஊடகத்தில் விளம்பரம் செய்யப்பட்டமை உறுதிப்படுத்தப்படவில்லை. மேலும் ரூபா 39.8 மில்லியன் செலவில் வடிவமைக்கப்பட்ட டிஜிட்டல் உற்பத்தி, டிஜிட்டல் வீடியோ இறுவெட்டுக்கள், போஸ்ர் வடிவமைத்தல் போன்ற வவமைப்பு ரீதியான 31 பணிகளும் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் பயன்படுத்தப்படடிருக்கவில்லை.

**ஊடக ஆய்வு மற்றும் ஊடக திட்டங்கள் தயாரித்தல்**

இலங்கைத் தேயிலை உலகலாவிய ரீதியில் மேம்படுத்துவதற்காக ஊடக ஆய்’வ மற்றும் ஊடக திட்டங்களைத் தயாரிப்பதற்காக 2019 முதல் 2023 வரையான காலப்பகுதியில் ரூபா 107 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் தயாரிக்கப்பட்டிருந்த ஊடகத் திட்டங்களுக்கு இடையே சிலு அரசாங்கத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஊடகத் திட்டம் தவிர ஏனைய 10 நாடுகளுக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஊடக திட்டங்களில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதி 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையில் பரந்திருந்த போதிலும் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**சுதந்திர வர்த்தக உடன்படிக்கை**

இந்தியா இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ISFTA) மற்றும் பாக்கிஸதான்இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (PSFTA) இன் கீழ் தேயிலைக்காக விதித்த கட்டண விகிதம் (Preferential Tariff Rate Quota) காணப்பட்ட போதும் அதில் கவனத்தில் கொள்ளக்கூடிய பயன்பாடு ஒன்று 2021 முதல் 2023 வரை

அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. மேலும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போதும் இந்தியாவுக்கும் பாக்கிஸ்தானுக்கும் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதிகளின் அளவு முறையே 10 சதவீதத்தினாலும், 100 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தது.

**தேயிலை கைத்தொழிலுக்கான தகவல் தொழில்நுட்ப முறைமை ஒன்று தயாரித்தல்**

தேயிலைக் கைத்தொழிலுக்கான தகவல் கைத்தொழில் முறைமையைத் தயாரிப்பதற்காக ரூபா 53.9 மில்லியன் பெறுமதியில் 2020 ஆம் ஆண்டின் போது தனியார் நிறுவனம் ஒன்றுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. சபையின் உதவிப் பணிப்பாளரின் (தகவல் தொழில்நுட்பம்) உறுதிப்படுத்தும் அடிப்படையில் கூட்டுமொத்தமாக ரூபா 15.7 மில்லியன் தொகை 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ஒப்பந்தத்திற்காக செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 18 மாதங்களின் போது பணிகள் பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும் 03 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் இந்த தகவல் தொழில் நுட்ப முறைமை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த தனியார் நிறுவனத்தால் வழங்கப்பட்ட ரூபா 26.9 மில்லியன் செயலாற்றல் பிணைமுறியின் செல்லுபடிக்காலம் 2022 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் முடிவடைந்திருந்தது.

**கொழும்பு தேயிலை விற்பனை நிலையத்தின் நட்டம்**

2014 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட “ரீ மோமன்ஸ்” என்ற பெயரிலான கொழும்பு தேயிலை நிலையத்தில் இருந்து சபைக்கு ரூபா 62.6 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் பெருந் தோட்ட கைத்தொழில் அமைச்சு செயலாளரின் 2016 திசெம்பர் 06 ஆந் திகதிய கடிதம் மூலம் பக்கச்சார்பு இன்றி நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தருக்கு எதிராக பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு வழங்கப்பட்ட கடன்**

2012 யூன் 19 ஆம் திகதி நடைபெற்ற இலங்கைத் தேயிலைச் சபையின் பொது முயற்சிகள் குழுவின் கட்டளை இலக்கம் 11 இன் பிரகாரம் சபையினால் 2003 ஆம் ஆண்டின் போது மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 25 மில்லியன் கடன் தொகைக்காக மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையில் இருந்து அறவிடுமாறு ஸ்தாபிக்கப்பட்ட “Ceylon Tea Museum” இன் உரித்து தேயிலைச் சபைக்கு கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையில் உரிய கட்டளை விநியோகிக்கப்பட்டு 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் சொத்தின் உரிமையைக் கையளிப்பதற்கோ அல்லது கடன் தொகையை மீள அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2020 ஆம் ஆண்டின் போது

பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் சபையினாலட மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 10 மில்லியன் கடன் தொகையில் ரூபா ஒரு மில்லியன் மாத்திரம் அறவிடப்பட்டிருந்நது.

## சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபை

**விளைவற்ற சொத்துக்கள்**

2020 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3.5 மில்லியன் செயற்திட்ட பொருட்கள் மற்றும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்குப் பெறப்பட்ட ரூபா 6 மில்லியன் ஆன கரைசல் விசிறும் இயந்திரம் மற்றும் தண்ணீர் பம்பிகள் விளைவற்று களஞ்சியத்தில் காணப்பட்டது.

2021 ஆம் ஆண்டின் போது “ பரவலாக்கல் பிரிவின் நடமாடும் விளம்பர வண்டியின் உள்ளக உபகரணங்கள் பொருத்தும் பெறுகைகள்” இற்காக தனியார் கம்பனிக்கு ரூபா 4.9 மில்லியன் ஒப்பந்தம் ஒன்று கையளிக்கப்பட்டிருந்ததுடன் அதன் உடன்படிக்கையின் பிரகாரம் விளம்பர வண்டியின் மின்சார வழங்கல்களைப் பெற்றுக் கொள்வதற்காக மின் பிறப்பாக்கி இயந்திரம் பொருத்த வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதி வரையிலும் மின்பிறப்பாக்கி இயந்திரம் பொருத்தப்படாது இருந்ததுடன் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1.8 மில்லியன் பெறுமதியான டிஜிட்டல் திரையும் (LG Panel 55 video wall) செயலிழந்து அதிகார சபையின் கேட்போர் கூடத்தில் வைக்கப்பட்டிருந்தது.

## இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம்

**ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு பங்களிப்பு செலுத்தாமை**

2000 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக ரூபா 689 மில்லியன் ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்புப் பணம் ரூபா 49.7 மில்லியன் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் அதற்கு மேலதிகமாக ரூபா 73 மில்லியன் ஆன தோட்ட பதவியணியினரின் சேமலாப நிதியம் மற்றும் 18 மில்லியன் ஆன இலங்கை பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சேமலாப சங்க பங்களிப்புப் பணமும் மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் 2023 ஆகஸ்ட் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஊழியர் சேமலாபம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியப் பொறுப்பு நிதியங்களுக்காக செலுத்த வேண்டிய தோட்டப் பிரிவின் மிகைக் கட்டணப் பெறுமதி ரூபா 78 மில்லியன் மற்றும் ரூபா 9 மில்லியன் ஆகக் காணப்பட்டது.

**நிலுவை பணிக்கொடை செலுத்துதல்**

1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் 02 ஆம் பகுதியின் 5(1) பிரிவிற்கு இணங்க

ஊழியர் ஒருவர் ஓய்வு பெற்ற அல்லது மரணத்திற்கு உட்பட்ட திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் பணிக்கொடைக் கொடுப்பனவு செலுத்துதல் வேண்டும். எனினும் கூட்டத்தாபனத்தால் கடந்த சில வருடங்கள் முதல் மற்றும் 2023 ஆம் ஆண்டின் போதும் பணிக்கொடை குறித்துரைத்த பிரகாரம் செலுத்தாமையின் காரணமாக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய பணிக்கொடைப் பெறுமதி ரூபா 629 மில்லியனும், அதற்கான மிகைக் கட்டணம் ரூபா 25.8 மில்லியனும் ஆகக் காணப்பட்டது. மேற்கூறப்பட்ட நிதியம் செலுத்தாமையினால் அது தொடர்பான வழக்கிற்காக 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக 1.9 மில்லியன் சட்டத்தரணி கட்டணம் செலுத்துவதற்கும் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டிருந்தது.

**எதிர்பார்க்கப்பட்ட தேயிலை விளைச்சல் பெறப்படாமை**

2023 ஆம் ஆண்டில் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தில் மொத்த தேயிலை விளைச்சல் கிலோகிராம் 5,089,282 ஆக இருந்ததுடன் அது 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 24 சதவீத வீழ்ச்சி ஆகும். அவ்வாறே 2023 ஆம் ஆண்டின் போது தேயிலை கிலோகிராம் 9,170,548 விளைச்சலைப் பெற்றுக்கொள்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 55 சதவீத இலக்கு மாத்திரமே அடையப்பட்டிருந்தது. வெளி பெருந்தோட்டங்களில் இருந்து கிடைக்கப்பெற்ற நில அளவில் தேயிலை கிலோகிராம் 940,151 விளைச்சல் எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியாக 364,597 கிலோகிராம் மாத்திரமே கிடைக்கப் பெற்றிருந்தது. அது எதிர்பார்க்கப்பட்ட தேயிலை விளைச்சலுடன் ஒப்பிடும் போது 61 சதவீதக் குறைவாகும். கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 14 தோட்டங்களில் 13 தோட்டங்களை 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2023 ஆம் ஆண்டில் தேயிலை கிலோகிராம் அலகு உற்பத்திக் கிரயம் 03 சதவீதம் முதல் 444 சதவீதம் வரை அதிகரித்துச் சென்றிருந்தது.

**16 தோட்டங்களில் 08 தோட்டங்களும் நட்டம் பெற்றமை**

கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 16 தோட்டங்களில் 08 உம் 2023 ஆம் ஆண்டின் போது நட்ட நிலைமையில் காணப்பட்டதுடன் கோமர மற்றும் கெலேபொக்க தோட்டங்களில் 2022 ஆம் ஆண்டில் முறையே ரூபா 8.9 மில்லியன் மற்றும் 31 மில்லியன் இலாபம் கிடைத்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 46.7 மில்லியன் மற்றும் ரூபா 16.8 மில்லியன் நட்டம் பெற்றிருந்தது. கூட்டுத்தாபனத்தின் ஊழியர் கிரயத்தை மொத்த கிரயத்துடன் ஒப்பிடும் போது 50 சதவீதத்திற்கு மேற்பட்ட பெறுமதியை கொண்டிருந்ததுடன் ஹெயாபார்க் தோட்டத்தின் ஊழியர் கிரயம் அதன் மொத்த கிரயத்தில் 98 சதவீதமும் அதன் விற்பனைக் கிரயத்துடன் ஒப்பிடும் போது 112 சதவீதத்தைக் கொண்டிருந்தது. குன்னஸ்கிரிய, ரங்கல, ஹாகல மற்றும் குட்சய்ட் என்ற தோட்டங்களில் ஊழியர் கிரயம் அந்த தோட்டங்களின் மொத்தக் கிரயத்தில் 80 சதவீதத்திற்கு மேற்பட்ட மட்டத்தில் காணப்பட்டமை தோட்டத்திறகு நேரடியாகத் தாக்கமளித்திருந்தது.

**விளைவற்ற தொழிற்சாலைகள்**

தற்போது வரையில் கூட்டுத்தாபனத்தின் 09 தேயிலைத் தொழிற்சாலைகள் காணப்பட்ட போதிலும் அதில் 03 தொழிற்சாலைகள் மாத்திரம் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் 05 தொழிற்சாலைகள் நீண்டகாலமாக மூடப்பட்டிருந்தது. ஒரு தேயிலை தொழிற்சாலையில் 2022 ஒக்தோபர் மாதம் முதல் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கான மூடப்பட்டிருந்ததுடன் பயன்பட்டிற்கு எடுக்கப்படாத ஹோமரந் தோட்டத்தில் நக்கிள்ஸ் பங்களா பார்வையிடும் நிலையம் சிலவற்றிற்கு அண்மையில் காணப்பட்ட போதிலும் அந்த பங்களாவை பழுதுபார்த்து பயன்பாட்டுக்கு எடுப்பதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி

**விளைவற்ற சொத்துக்கள்**

ஹிரியால மாகாண தோட்ட அலுவலகத்திற்குரிய 07 தோட்டங்களை இணைப்பதற்கு 2023 திசெம்பர் மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 0.97 மில்லியன் பெறுமதியான CCTV கமரா உபகரணம், இலக்கிடப்பட்ட பணிகளுக்காக ஈடுபடுத்தப்படாமல் கனேவத்த களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டது.

## சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி

**கடன் மற்றும் வட்டி பதிவழித்தல்**

சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியால் 2010 ஆம் ஆண்டின் போது மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு, எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனிக்கு, அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்திற்கு, இறப்பர் ஏற்றுமதி கூட்டுத்தாபனத்திற்கு மற்றும் அரச வளங்கல் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சிற்கு வழங்கப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 105 மில்லியன் கடன் பணம் மற்றும் அந்த கடன் வட்டி ரூபா 119.7 மில்லியன் 2014 ஆம் ஆண்டின் போது பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் மாத்திரம் முழு இழப்பீடாக கருதி பதிவளிக்கப்பட்டிருந்தது.

## மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை

**உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் வருடாந்தம் புள்ளிவிபரங்களுடன் மதிப்பீடு செய்யப்படாமை**

இலங்கை கணக்கீட்டு நியமம் 41 இன் 12 ஆம் பந்தியின் பிரகாரம் உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் ஆரம்பமாக இங்காணும் போது மற்றும் ஒவ்வொரு கலப்பகுதியின் இறுதியின் போதும் விற்பனைக்கான செலவினங்கள் கழிக்கப்பட்ட பின்னர் நியாயமான பெறுமதியில் அளவிட வேண்டியிருந்த போதிலும் சபையினால் ரூபா 33 மில்லியன் ஆன நுகர்வு உயிரியல் விஞ்ஞான சொத்துக்களின் பெறுமதி அவ்வாறு வருடாந்தம் மதிப்பீடு செய்யப்படாமல் நிலையான பெறுமதி ஒன்றாக முன்கொண்டு வரப்பட்டிருந்தது. அந்த பெறுமதியை சான்றுறுதிப்படுத்திக் கொள்வதற்காகவும் வருடாந்தம் நாளது வரையாக்கப்பட்ட மரங்களின் புள்ளி விபரம் , மதிப்பீட்டு அறிக்கையும்

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்குரிய சபையினால் நிர்வகிக்கப்படுகின்ற 18 தோட்டங்களுக்குரிய ஹெக்ரேயர் 11,585.44 காணிகளின் பெறுமதியும் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**நட்டம் மற்றும் நியதிச் சட்டப் பொறுப்புக்கள்**

தொடர்ச்சியாக நட்டம் பெற்றதன் அடிப்படையில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் தேறிய சொத்துக்கள் மற்றும் தொழிற்படு மூலதனம் முறையே ரூபா 607.02 மில்லியன் மற்றும் ரூபா 1,795.70 மில்லியன் ஆக மறைப் பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் அத்திகதியில் புறக்கணிக்கப்பட்ட நியதிச் சட்டக் கொடுப்பனவுகள் ரூபா 1,513.49 மில்லியனும் காணப்பட்டமையினால் சபையின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற நிலைமை ஒன்று காணப்பட்டது. அவ்வாறே பணிப்பாளர் சபையினால் இந்த சபை மீள்கட்டமைக்க வேண்டி இருந்தமையும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய நியதிச் சட்டப் பொறுப்புக்கள் ரூபா 2,883.43 மில்லியன் வரை அதிகரித்திருந்தது.

**வியாபாரத் திட்டம் தயாரித்தல்**

பெறுகைள் வழிகாட்டியினைப் பின்பற்றாமல் பணிப்பாளர் சபையினால் தீர்மாணிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றுக்காக 2022 – 2024 காலப்பகுதிக்காக வியாபார திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு ரூபா 02 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. அந்த நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட திட்டத்தில் நடைமுறை ரீதியில் அமுல்படுத்த முடியாதிருந்த நோக்கங்கள் மற்றும் பணிகள் உள்ளடக்கப்பட்டதன் காரணமாக அது வரிசை அமைச்சினால் அங்கீகரிக்கப்படவில்லை. இந்த திட்டம் அமுல்படுத்தப்படாது இருந்த போதும் வியாபாரத் திட்டத்தின் செயல் முன்னேற்றத்தை பகுப்பாய்வு செய்வதற்காக 2022 மே மாதம் முதல் ஒரு வருட காலம் வரை ரூபா 02 மில்லியன் தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

**நிலுவை வாடகை**

ஹந்தான தேயிலைத் தொழிற்சாலை தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2021 முதல் 2024 பெப்ரவரி வரையான காலத்திற்காக குறித்துரைத்த பிரகாரம் வாடகை செலுத்தப்படாதிருந்தமையால் நிலுவை வாடகை மற்றும் 5 சதவீத தாமதக் கட்டணம் என்பன ரூபா 18.8 மில்லியன் தொகை 2024 பெப்ரவரி 29 ஆம் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டி இருந்தது.

**உரித்து இன்றிய எரிபொருள் மற்றும் போக்குவரத்துப் படி செலுத்துதல்**

2015 மே 25 ஆந் திகதிய இலக்கம் 01/2015 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு இணங்காத வகையில் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது எரிபொருள் மற்றும்

போக்குவரத்துப் படி உரித்தற்ற 16 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 20.9 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் போது அந்த படிக்கான உரித்தின்றி 11 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 10.25 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம் உத்தியோகபூர்வ வானம் ஒன்று உரித்தான உத்தியோகத்தருக்கு நிறுவனத்தின் உத்தியோகபூர்வ வாகனத்தைப் பயன்படுத்துதல் அல்லது எரிபொருள் படிகளைப் பெற்றுக் கொள்ளல் அல்லது போக்குவரத்து மற்றும் எரிபொருள் படியைப் பெற்றுக் கொள்ளல் என்ற இரண்டு மாற்று வழிகளில் ஒன்றை மாத்திரம் தெரிவு செய்ய வேண்டியிருந்த போதிலும் சபையின் தலைவரால் போக்குவரத்துப் படி, எரிபொருள் படி பெறப்பட்டு சபையின் உத்தியோகபூர்வ வாகனமும் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்த வாகனத்திற்காக எரிபொருள் செலவினமும் நிறுவனத்தால் செலவிடப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டு முதல் 2023 திசெம்பர் 31 வரை எரிபொருள் மற்றும் வாகனப் படியாக ரூபா 4.4 மில்லியன் சபையினால் தலைவருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

**நிலுவை வாடகை வருமானம்**

நீண்ட கால வாடகை அடிப்படையில் கையளிக்கப்பட்ட மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்குரிய காணி மற்றும் கட்டடங்களில் இருந்து சபைக்கு 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 387.8 மில்லியன் வாடகை வருமானம் நிலுவையாக காணப்பட்டது.

**அங்கீகரிக்கப்படாத மற்றும் முறையற்ற நியமனம்**

தலைவர் பிரிவில் பிரத்தியேக செயலாளர் பதவியில் சேவையாற்றுகின்ற JM 1-1 சம்பளத் தொகுதியில் உத்தியோகத்தர் ஒருவர் 2021 ஒக்தோபர் 15 ஆம் திகதி முதல் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இல்லாத மற்றும் முகாமைத்துவ சேவை திணைக்களத்தால் நிராகரிக்கப்பட்ட பதவி ஒன்றான தலைவரின் பிரத்தியேக உதவியாளர் பதவியின் வேலை மேவுகை செய்வதற்காக தலைவரால் நியமனம் வழங்கப்பட்டு MM 1-1 சம்பளத் தொகுதிக்கு உரித்தான படி மற்றும் 2023 திசெம்பர் வரை எரிபொருள், போக்குவரத்து மற்றும் விசேட படிகளை உள்ளடக்கி ரூபா 4.5 மில்லியன் அந்த உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே 2023 நவம்பர் முதல் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்த உத்தியோகத்தருக்கு முகாமையாளர் (நுகர்வோர்) பதவி வழங்கப்பட்டிருந்தது.

# கைத்தொழில் மற்றும் உற்பத்தி அலுவல்கள்

தொழில்நுட்ப, அறிவு மற்றும் புத்தாக்க சிந்தனை என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட நேசம் மிக்க சூழலை உருவாக்குவதன் மூலம் பல்வகைப்பட்ட, உயர் பெறுமதி சேர்க்கப்பட்ட, புதிய கைத்தொழில் உற்பத்திகள், சூழல் நேசம் மிக்க முறைமைகள் பயன்பாடு அதிக சந்தை நுழைவு சந்தர்ப்பங்கள் மற்றும் அனைவருக்கும் பலன் கிடைக்கும் கைத்தொழில் அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்காக கைத்தொழில் அமைச்சு நடவடிக்கை எடுக்கின்றது. அமைச்சின் கீழ் 02 திணைக்களங்கள், 11 நியதிச் சபைகள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் மற்றும் 08 நிறுவனங்கள் செயல்படுகின்றன. அந்த நிறுவனங்களினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடமைப் பொறுப்புகள் நிறைவேற்றப்பட வேண்டியதாக காணப்பட்டன.

**கடமைப் பொறுப்புகள்**

2030 ஆம் ஆண்டளவில் மொத்த தேசிய உற்பத்திக்கு கைத்தொழில் பிரிவின் பங்களிப்பை 30 சதவீதம் வரையில் உயர்த்துதல்.


2030 ஆம் ஆண்டளவில் உற்பத்திக் கைத்தொழில் பிரிவின் பங்களிப்பை 20 சதவீதம் வரையில் உயர்த்துதல்.

2030 ஆம் ஆண்டில் தேசிய பொருளாதாரத்திற்கு தொழில் முயற்சிகளின் பங்களிப்பை 10 சதவீதம் வரையில் உயர்த்துதல்.

2030 ஆம் ஆண்டளவில் மொத்த தேசிய உற்பத்தியில் கைத்தொழில் ஏற்றுமதியாளர்களின் பங்களிப்பினை 20 சதவீதம் வரையில் உயர்த்துதல்.

2030 ஆம் ஆண்டில் கைத்தொழிலுக்காக ஒதுக்கப்பட்ட காணியின் அளவினை 1 சதவீதம் வரையில் உயர்த்துதல் (சர்வதேச அங்கீகாரம் 3 சதவீதம்) ஆகிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு கைத்தொழில் அமைச்சு எதிர்பார்க்கின்றது.

2023 ஆம் ஆண்டில் மேலே குறிப்பிடப்பட்ட கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக கைத்தொழில் அமைச்சுக்கு ரூபா. 8,489 மில்லியன் தேறிய நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டு இறுதியில் ரூபா. 6,920 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், அத்தினத்தில் ரூபா. 1,569 மில்லியன் ஒதுக்கீடு மீதமாக இருந்தது. பயன்படுத்தப்பட்டிருந்த தொகையில் ரூபா. 880 மில்லியன் கைத்தொழில் பேட்டை அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்காகவும், ஏறாவூரில் ஆடை உற்பத்தி மற்றும் அவை சார்ந்த கைத்தொழிலுக்கு விசேட வலயத்தினை அமைப்பதற்காக ரூபா. 268 மில்லியனும், ஆனையிறவு உப்பளத்தினை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா. 100 மில்லியனும், சிறிய மற்றும் எளிய கைத்தொழில் கட்டுப்பாட்டு மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு ரூபா. 2,594 மில்லியனும் மற்றும் சூழல் நேய தீர்வுகளுக்கான சுற்று நிதியத்திற்காக ரூபா. 211 மில்லியனும் பயன்படுத்தப்பட்டிருந்தது.




உரு இலக்கம் 2.36 : கைத்தொழில் அமைச்சு 2023 ஆம் ஆண்டின் செலவினம்

## கணக்காய்வு அவதானிப்புகள்

**கைத்தொழிலாளர்களுக்கு காணி ஒதுக்கப்பட்டு வழங்கியிருக்காமை**

2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 17 கைத்தொழில் பேட்டைகளுக்கு உரிய 109.5 ஏக்கரிலான 89 காணித் துண்டுகள் கைத்தொழிலாளர்களுக்கு ஒதுக்கப்பட்டு வழங்கி இருக்காத காரணத்தால் காணிகள் பயன்பாடின்றி காணப்பட்டன.

**கைத்தொழிலாளர்கள் காணியினை அபிவிருத்தி செய்யாமை**

புத்தளகைத்தொழில் பேட்டையில் 43 காணித் துண்டுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் 7 கைத்தொழிலாளர்களுக்கு ஒதுக்கப்பட்டு வழங்கி இருந்த 4 ஏக்கர் 20.13 பேர்ச்சஸ் மொத்த காணி அளவும் எதுவித அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாது செயலற்று காணப்பட்டது.

1993 ஜுன் 24 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 772/22 கொண்ட வர்த்தமானியில் அடங்கியுள்ள தேசிய சுற்றாடல் அதிகார சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளைக் கொண்டு சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்றுக் கொள்ளுதல் 10 ஹெக்டயருக்கு (24 ஏக்கர்) அதிக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மட்டும்

என்பதான பிரிவுக்கு அமைய றைகம் கைத்தொழில் பேட்டை செயற்திட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்கு 200 ஏக்கரான முழுக் காணியில் 24 ஏக்கர் நிலப்பாதியினுள் இந்த தொழில் பேட்டையினை நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டு சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்றுக் கொள்ளும் தேவைப்பாட்டினை விலக்கி செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

**றைகம் கைத்தொழில் பேட்டையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தாமதமடைந்தமை**

றைகம் கைத்தொழில் பேட்டை அபிவிருத்தி நடவடிக்கைகள் தாமதமடைந்த காரணத்தினால் பிரதேச கைத்தொழில் சேவைக் குழுவினால் தெரிவு செய்யப்பட்டிருந்த முதலீட்டாளர்களிடையே அமைச்சரவை அனுமதியினைப் பெற்றுக் கொண்டிருந்த 4 முதலீட்டாளர்கள் தமது முதலீடுகளை அகற்றிக் கொண்டிருந்தனர். அதன் காரணமாக ரூபா. 1,185.4 மில்லியன் முதலீடுகளின் மூலம் 715 தொழில் வாய்ப்புகளைக் கைத்தொழில் துறையில் இணைப்பதற்கு இருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

**நிர்வாகக் கட்டடங்கள் பயன்பாடின்றி காணப்பட்டமை**

படஅத்த கைத்தொழில் பேட்டையில் மற்றும் றைகம் கைத்தொழில் பேட்டையில் முறையே ரூபா. 31.66 மில்லியன் மற்றும் ரூபா. 87.96 மில்லியன் செலவில் 02 நிர்வாகக் கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் தற்போது வரையில் பயன்பாடின்றி மூடப்பட்டிருந்தன.

**அகற்றப்படும் கழிவுகளை கடலுக்கு அனுப்பும் யோசனைக்கு மக்கள் எதிர்ப்பு ஏற்பட்டமை**

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 105 ஏக்கர் காணியில் ரூபா. 343.41 மில்லியன் செலவில் தோல் பதனிடும் கைத்தொழிலை ஆரம்பிப்பதற்காக 1999 ஆகஸ்ட் 18 ஆம் திகதி இடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய கைத்தொழில் பேட்டையொன்று தாபிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்தக் கைத்தொழில் பேட்டையில் இருந்து அகற்றப்படும் கழிவுகளைக் கடலுக்கு அனுப்புவதற்கு பிரேரிக்கப்பட்டிருந்த காரணத்தினால் அண்மையில் உள்ள மீன்பிடி சமூகத்தின் எதிர்ப்பின் காரணமாக நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தது. அதன் காரணமாக செயற் திட்டத்தில் முதலீடு செய்திருந்த 06 முதலீட்டாளர்களுக்கு 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான காலத்தினுள் ரூபா. 17.55 மில்லியன் நட்ட ஈடாக செலுத்தப்பட்டிருந்தது.

**காணிகளின் குறை பயன்பாடு**

2006 பெப்ரவரி 15 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் கலப்பு அபிவிருத்தி வலயமாக மீண்டும் கைத்தொழில் பேட்டையினை அபிவிருத்தி செய்திருந்த போதிலும் 23 கைத்தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட 70 ஏக்கர் 1 ரூட் 2.3 பேர்ச்சஸ் காணியில் போதியளவு உற்பத்திகள் மேற்கொள்ளப்படுவது

34 ஏக்கர் 3 ரூட் காணியினைப் பெற்றுக் கொண்ட 10 கைத்தொழிலாளர்களினால் மட்டுமே என்பதும் அதற்கமைய கைத்தொழில் பேட்டைக்கு ஒதுக்கப்பட்ட மொத்த காணியான 105 ஏக்கரில் சுமார் 60 ஏக்கர் காணியளவு பயன்பாடின்றி செயலற்று காணப்படுகின்றது என்பதும் அவதானிக்கப்பட்டது. மேலும் அதற்கு அண்மையில் சூரியவெவ 20 ஏக்கர் காணியில் கைத்தொழில் பேட்டையினை நிர்மாணிப்பதற்காக ரூபா. 252.7 மில்லியன் செலவிட்டமை பயனற்ற செலவாகி இருந்தது.

**மன்னார் கைத்தொழில் பேட்டை**

மன்னார் மாவட்டத்தில் 24 ஏக்கர் காணியில் ரூபா. 356 மில்லியன் செலவில் கைத்தொழில் பேட்டை ஒன்று நிர்மாணிக்கப்பட்டு 13 வருடங்கள் கடந்திருந்தது. எனினும் 6 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு கைத்தொழிலாளர் மட்டும் ஆடை கைத்தொழிலைப் பேணிச்செல்லுவது அவதானிக்கப்பட்டதுடன் ஏனைய கைத்தொழில்களை ஆரம்பித்தல் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**எதிர்பார்க்கப்பட்ட தொழில்கள் உருவாகியிருக்காமை**

16 கைத்தொழில் பேட்டைகளுக்கு உரியதான 130 கைத்தொழிலாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயற்திட்ட அறிக்கைகளுக்கு அமைய உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கை 10,475 ஆக இருந்த போதிலும் தற்போதைய தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கை 1,504 ஆக இருப்பதனால் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை எட்டும் வீதம் 14 சதவீதமாக உள்ளது.

**நிலுவை வரி**

13 கைத்தொழில் பேட்டைகளுக்கு உரியதான 107 கைத்தொழிலாளர்களிடம் இருந்து 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் அறவிடப்பட வேண்டிய நிலுவை வரித் தொகை ரூபா. 205.230 மில்லியனாக இருந்தது.

**கைத்தொழிலாளர்களுடன் நீண்டகால வரி ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருக்காமை**

கைத்தொழிலாளர்களுக்கு காணிகளை ஒதுக்கும் போது வழங்கப்படும் காணி ஒதுக்கீட்டுக் கடிதத்திற்கு அமைய காணிகள் ஒதுக்கப்பட்டதன் பின்னர் 35 வருட நீண்ட கால வரி ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும் 25 கைத்தொழில் பேட்டைகளில் 322 கைத்தொழிலாளர்களுக்கான வரி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

**செயற்பாடுகளின் முன்னேற்றம்**

கைத்தொழில் பேட்டை அபிவிருத்தி செலவுக்காக 2023 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட ஒதுக்கீடு ரூபா. 1,000 மில்லியனாக இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் செலவு ரூபா. 880 மில்லியன் ஆகும். அதில் 9 கைத்தொழில் பேட்டைகளுக்கு உரிய 19 அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான மொத்த மதிப்பீட்டுச் செலவான ரூபா. 489.548 மில்லியன் ஒரே தடவையில் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்பாடுகளின் முன்னேற்றம் 0 சதவீதமாக

இருந்ததுடன் தம்புள்ளை கைத்தொழில் பேட்டையில் வேலி மற்றும் படலை அமைப்பதற்காக மொத்த மதிப்பீட்டு செலவான ரூபா. 14.96 மில்லியன் ஒரே தடவையில் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதன் முன்னேற்றம் 15 சதவீதமாக இருந்தது.

**செயற்திட்டங்களின் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தமை**

பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் வலயங்களை அமைப்பதற்கான செயற்திட்டத்தின் கீழ் கிராந்துருகோட்டை, திம்புலாகல, திக்வெல்ல மற்றும் திருவோணமலை கட்டம் III ஆகிய 4 கைத்தொழில் பேட்டைகளின் காணிகளை அளவீடு செய்தல், சுத்தப்படுத்துதல் மற்றும் காணிகளைப் பிரிக்கும் திட்டத்தினைத் தயாரித்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக ரூபா. 3,266.558 தொகை 2022 ஆம் ஆண்டில் செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அந்த செயற்திட்டங்களின் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்ட காரணத்தினால் அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் பயனற்ற செலவுகளாகி உள்ளன.

**புதிய உற்பத்திகளை வணிகமயமாக்களுக்கான மாநாடுகள்**

புதிய உற்பத்திகளை வணிகமயமாக்கலுக்கான 3 மாநாடுகள் (Symposium) ரூபா. 5.55 மில்லியன் செலவில் 2023 ஆம் ஆண்டில் தனியார் ஹோட்டல் ஒன்றில் நடாத்தப்பட்டு இருந்ததுடன் முன் வந்திருந்த 115 புதிய உற்பத்தியாளர்களிடையே 15 புதிய உற்பத்திகளை வணிகமயமாக்குவதற்கு அடையாளம் காணப்பட்டிருந்த போதிலும் அதில் 4 மட்டுமே வணிகமயமாக்கலுக்கான உடன்படிக்கையினை கைச்சாத்திடுவதற்கு இணக்கப்பாட்டினைத தெரிவித்திருந்ததுடன் வணிகமயமாக்கலுக்கான கலந்துரையாடல் மட்டத்தில் காணப்படும் புதிய உற்பத்திகளின் எண்ணிக்கை 11 ஆகும். அதற்கமைய முன்வந்துள்ள புதிய உற்பத்தியாளர்களில் 3 சதவீதத்திலும் குறைவான வீதத்தினரே வணிகமயமாக்கலுக்கு உடன்படிக்கையிடுவதற்கு இணங்கியுள்ளனர்.

**இலங்கை தரச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளுதல்**

உள்நாட்டு சிவப்பு மெட் ஓடுகள் உற்பத்திக்காக இலங்கை தரச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நிதி உதவியினை வழங்குவதற்கான செயற்திட்டத்திற்காக 2023 ஆம் ஆண்டில் ரூ. 4.5 மில்லியன் ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் 30 கைத்தொழிலாளர்களுக்கு இலங்கை தரச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான ஆரம்ப உறுதிப்படுத்தல் கட்டணத்தில் 50 சதவீதத்தினை ஒரு நிறுவனத்திற்கு உச்சபட்சம் ரூபா. 150,000 இற்கு உட்பட்டு அமைச்சினால் ஏற்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. 10 உற்பத்தியாளர்கள் இதற்காக விண்ணப்பித்திருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் ஒரு உற்பத்தியாளரேனும் தரச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளும் செயற்பாட்டினைப் பூரணப்படுத்தி இந்த நிதி உதவியினைப் பெற்றுக் கொண்டிருக்கவில்லை.

## இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனம்

**எதிர்பார்க்கப்பட்ட வருடாந்த உற்பத்தி இலக்கினை எட்டியிருக்காமை**

2023 ஆம் ஆண்டின் செயற்பாட்டு திட்டத்திற்கு அமைய உற்பத்தியினை அதிகரிப்பதற்காக மஹியங்கனை தொழிற்சாலை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு 2,875,000 அலகுகளும் எரகம தொழிற்சாலையில் 3,250,000 அலகுகளும் எனும் ரீதியில் 6,125,000 அலகுகளை வருடாந்தம் உற்பத்தி இலக்காக எட்டுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டு இரு தொழிற்சாலைகளினதும் உற்பத்தி தொடர்பில் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களுக்கு அமைய மஹியங்கனை மற்றும் எரகம தொழிற்சாலைகளின் உண்மையான உற்பத்தி முறையே 231,239 அலகுகளும் மற்றும் 887,205 அலகுகளும் எனும் ரீதியில் 1,118,444 அலகுகளாக இருந்தன. அதற்கமைய எதிர்பார்க்கப்பட்ட வருடாந்த உற்பத்தி இலக்கினை எட்டும் மட்டம் 18 சதவீதமாக காணப்பட்டது.

**எதிர்பார்க்கப்பட்ட விற்பனை வருமானம்**

முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது விற்பனையை 25 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டில் ரூபா. 90.774 மில்லியனாக இருந்த விற்பனை வருமானம் 2023 ஆம் ஆண்டில். ரூ 65.297 மில்லியன் வரையில் ரூபா. 25,476 மில்லியனால் அதாவது, 28 சதவீதத்தினால் வீழ்ச்சி அடைந்திருந்தது. விற்பனை முகவர்கள் மூலம் விற்பனை செய்யும் போது வழங்கப்பட்ட 3 சதவீத கழிவு விகிதம் 2023 ஆம் ஆண்டில் 20 சதவீதம் வரையில் அதிகரித்தமை இதற்குப் பிரதான காரணமாக இருந்தது.

**வேஉட தொழிற்சாலையை குத்தகைக்கு வழங்குதல்**

கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான வேஉட தொழிற்சாலை உள்ளிட்ட காணி 2019 ஜூலை மாதத்தில் ரூபா. 136.7 மில்லியனுக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் அது தொடர்பில் கவனத்தில் கொண்டு அல்லது 2023 ஆம் ஆண்டில் குத்தகை தொகையை மதிப்பீடு செய்யாது, நிரல் அமைச்சு மற்றும் பணிப்பாளர் சபையின் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளாது பெறுகை முறைமைக்கு அமைய விலை மனு கோரப்படாது தொழிற்சாலை உள்ளிட்ட காணியினை 5 வருட காலத்திற்கு ரூபா. 10 மில்லியனுக்கு தனிநபர் ஒருவருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

**காணியினைக் கைப்பற்றுதல்**

எரகம தொழிற்சாலை அமைந்துள்ள காணியில் 3.5 ஏக்கர் பகுதி தனி நபர் ஒருவரினால் கைப்பற்றப்பட்டிருந்தமை தொடர்பான சிக்கலும் மஹியங்கனை தொழிற்சாலை அமைந்துள்ள காணியில் 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த 125 குடும்பங்களும், அலயாபத்துவ காணியின் ஒரு பகுதி தனிநபர் ஒருவரினால் பயன்படுத்துதல் தொடர்பான சிக்கலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**பங்கதெனிய தொழிற்சாலை காணி பயன்பாடின்றி காணப்பட்டன**

பங்கதெனிய தொழிற்சாலை அமைந்துள்ள காணியில் கட்டடம் உடைத்து அகற்றப்பட்டிருந்ததுடன் 7 ஏக்கர் 1 ரூட் 28 பேர்ச் கொண்ட காணி பயன்பாடின்றிக் காணப்பட்டது. அதே போன்று மேலும் 5 தொழிற்சாலைகள் உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத காரணத்தினால் அந்த தொழிற்சாலை அமைந்துள்ள காணி மற்றும் கட்டடங்கள் உள்ளிட்ட சொத்துக்கள் நீண்ட காலம் தொட்டு பயன்பாடின்றி காணப்பட்டன.

## தேசிய வடிவமைப்பு மத்திய நிலையம்

**புதிய படைப்புக்களை அறிமுகப்படுத்துதல்**

புதிய படைப்புகள் மற்றும் புதிய தொழில்நுட்பம் தொடர்பான அறிவினை வழங்கும் செயற்திட்டத்தின் கீழ் கலைஞர்களின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக தரமான பயிற்சியினை நாடு முழுவதிலும் விரிவுபடுத்தும் நோக்கில் 29 வேலைத் திட்டங்களை நடத்துவதற்கு ரூபா. 8.5 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 17 பயிற்சி வேலைத் திட்டங்கள் மட்டுமே நடத்தப்பட்டிருந்தன. இதனால் வேலைத் திட்டத்தின் ஊடாக கலைஞர்களின் 450 புதிய படைப்புக்களை அறிமுகப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 216 புதிய படைப்புகள் மட்டும் அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன் 234 படைப்புக்களை அறிமுகப்படுத்துவதற்கு முடியாது இருந்தது.

**செயலற்ற இயந்திரங்கள்**

2020 ஆம் ஆண்டில் பத்திக் உற்பத்தியினைக் கற்பித்தல் மற்றும் அந்தக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள கலைஞர்களுக்கு பொதுவான வசதிகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு சுத்திகரிப்பு ஒழுங்கமைப்பொன்று ரூபா. 2.991 மில்லியன் செலவில் 2021 திசெம்பர் 16 ஆம் திகதி தாபிக்கப்பட்டு இருந்தபோதிலும் 2023 ஆம் ஆண்டில் அதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்காததுடன் இயந்திரம் செயலற்று காணப்பட்டது.

**இருப்பு விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை**

2023 ஆம் ஆண்டினுள் வெளி நிறுவனங்கள் மூலம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த 6 விற்பனைக் கண்காட்சிகளுக்கு மத்தியநிலையம் பங்குபற்றி இருந்ததுடன் ஒவ்வொரு கண்காட்சிக்கும் அனுப்பப்பட்ட இருப்பு, விற்பனை செய்யப்பட்ட தொகை, மீதியான தொகை, விற்பனை வருமானம் போன்ற விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## தேசிய அருங்கலை பேரவை

**காணாமல் போன இருப்பு கணக்கீடு செய்யப்பட்டிருக்காமை**

இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டுத் தரம் 9 இல் 44 மற்றும் 47 ஆம் பந்திகளின் பிரகாரம் இருப்பு தொடர்பான அனைத்து நட்டங்களும் காலத்துக்கு காலம் செலவாக இனம் காணப்பட வேண்டிய போதிலும் வராகொட மத்திய நிலையத்தில் மொத்த செலவு ரூபா. 1.320 மில்லியனாக இருந்த 2099.5 கிலோ கிராம் செப்பு கம்பி இருப்பு காணாமல் போயிருந்த போதிலும் அது தொடர்பில் நிதிக் கூற்றுகளில் கணக்கீடு செய்யப்பட்டோ அல்லது வெளிப்படுத்தப்பட்டோ இருக்கவில்லை.

**வங்கி மீதி வெளிப்படுத்தப்பட்டிருக்காமை**

தேசிய அருங்கலைப் பேரவைக்குச் சொந்தமான பயிற்சி மத்திய நிலையங்களில் பேணப்பட்டு வரும் 75 வங்கிக் கணக்குகளின் மொத்த மீதியான ரூபா. 4.217 மில்லியன் தொகை நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**கலைஞர் சமூகம் கண்காணிப்பு செய்யப்படாமை**

2023 ஒக்டோபர் 31 ஆம் திகதி வரையில் அனைத்து மாகாணம் மற்றும் மாவட்டங்கள் உள்ளடக்கப்படும் வகையில் 178 கலைஞர் சமூகம் அமைக்கப்பட்டிருந்த போதிலும் கலைஞர் சமூக பதிவுகள் மற்றும் கண்காணிப்பு தேசிய அருங்கலை பேரவையின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் பதிவு செய்தலைத் தவிர வேறு எதுவித கண்காணிப்பும் மற்றும் வழிகாட்டலும் இடம்பெற்றிருக்கவில்லை.

**செரமிக் பயிற்சி மத்திய நிலையத்தில் பயன்பாடற்ற சொத்துக்கள்**

வராகொட செராமிக் பயிற்சி மத்திய நிலையம் முதன்மையாக செரமிக் பயிற்சிப் பாடநெறியினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் கலைஞர்களுக்கு சேவையினை வழங்கும் நோக்கில் அமைக்கப்பட்டிருந்த போதிலும் 05 பிரிவுகளுக்குச் சொந்தமான மின்சார அடுப்புகள், விறகு அடுப்புகள், வாயு அடுப்புகள், போல்மில் இயந்திரங்கள், நிறுத்தல் தராசுகள், ப்ளெண்டர் எனும் ரீதியில் ரூபா. 19.415 மில்லியன் பெறுமதியான இயந்திராதிகள் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் செயல்பாடின்றி காணப்படுகின்றன. மேலும் ரூபா. 2.8 மில்லியன் பெறுமதியான 02 போல்மில் இயந்திரங்கள் மற்றும் 03 மின் அடுப்புகள் என்பன பல வருடங்களாக செயலற்று காணப்படுகின்றன.

மேலும், வராகொட, மொலகொட, பொல்கொல்ல மற்றும் புலத்சிங்கள பயிற்சி மத்திய நிலையங்களில் அமைப்பதற்கு முன்மொழியப்பட்டிருந்த மூலப்பொருள் வங்கிக்காக 2021 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா. 1.136 மில்லியன் பெறுமதியான கருவிகளும் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டன.

**பிரம்பு இயந்திர உற்பத்தி**

மூன்று பிரம்பு இயந்திரங்களை உற்பத்தி செய்வதற்காகக் கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு 2022 ஆம் ஆண்டில் ரூபா. 3.850 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் குறித்த இயந்திரங்கள் சபைக்கு கிடைத்திருக்கவில்லை.

**காவந்திஸ்ஸபுர கிராம நிர்மாணிப்பு**

திஸ்ஸமகராம பிரதேச செயலாளரிடமிருந்து 2013 ஆம் ஆண்டில் நீண்டகால குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த 1.6187 ஹெக்டயர் காணியில் காவந்திஸ்ஸபுர கிராமம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அதற்குக் குத்தகை ரீதியில் ரூபா. 3.36 மில்லியனும் மற்றும் இந்திய அரசாங்கத்தின் நிதி உதவி ரூபா. 18.432 மில்லியனும் மற்றும் சபையினால் ரூபா. 8.744 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் அத்தினம் வரையிலும் காணி மற்றும் கட்டடம் பயன்பாடு இன்றி காணப்பட்டது.

## இலங்கை கைப்பணிச் சபை

**பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் சொத்துக்களைப் பயன்படுத்தும் உரிமை மற்றும் உரிமைத்துவம் கிடைத்திருக்காமை**

காலி உனவட்டுன சலுசல நிறுவனத்திற்குச் சொந்தமாக இருந்த 01 ஏக்கர் 30.6 பேர்ச்சஸ் காணி மற்றும் கட்டிடங்கள் 2012 ஒக்டோபர் 11 ஆம் திகதியிடப்பட்ட மற்றும் இலக்கம் 12/1523/553/020 கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் கொள்வனவு மீளளிப்பாக சபையினால் 2012 திசெம்பர் 12 ஆம் திகதி ரூபா. 15.248 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் சொத்துக்களின் சட்ட ரீதியான உரிமைத்துவம் மற்றும் பயன்படுத்துவதற்கான உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு தவறியிருந்தது.

**நூதனசாலைத் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய நிதி**

நூதனசாலை விற்பனைக் கண்காட்சிக் கூடத்திற்கு 2023 ஆம் ஆண்டினுள் ரூபா. 2.009 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் 2023 நவம்பர் மாதத்தில் நூதனசாலைக் காணியிலிருந்து லக்சல கண்காட்சிக்கூடம் அகற்றப்பட்டதனால் அந்த செலவு பொருளாதாரமற்று இருந்தது. அதே போன்று அமைச்சரவை அனுமதியின் அடிப்படையில் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையில் ரூபா. 175.118 மில்லியன் செலவிடப்பட்டு கண்காட்சிக்கூடம் புதுப்பிக்கப்பட்டமைக்காக நூதனசாலை திணைக்களத்திடமிருந்து ரூபா. 91 மில்லியனுக்கு அண்மித்த தொகை கிடைக்க வேண்டி இருந்தது.

**சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி செலுத்தாமை**

2022 இன் 25 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி அதிகாரச் சட்டத்திற்கு அமைய சுய மதிப்பீட்டு அடிப்படையில் மாதாந்தம் வரித் தொகை உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்தப்பட வேண்டிய போதிலும் அதற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படாததனால் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா. 6.59 மில்லியன் இன்னமும் செலுத்தப்பட வேண்டி உள்ளது.

**கணக்காய்வுக் கட்டணம் செலுத்தப்படாமை**

2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையில் சபையில் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டமைக்காக தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு செலுத்தப்பட வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் ரூபா. 9.295 மில்லியன் தொகை 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் தீர்க்கப்படாது இருந்தது.

**கடன் மற்றும் வட்டி செலுத்துதல்**

சபையினால் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் கோட்டை லக்சல கட்டடத்தினை ஈடு வைத்து இலங்கை வங்கியில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் தொகையில் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா. 256.814 மில்லியன் இன்னமும் செலுத்தப்பட வேண்டியதாக காணப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டினுள் கடன் தவணை ரூபா.. 75.792 மில்லியன் மற்றும் வட்டியாக ரூபா. 51.230 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டுக்கு மொத்த கடன் மற்றும் வட்டியாக முறையே ரூபா. 103.282 மில்லியனும் மற்றும் ரூபா. 53.258 மில்லியனும் செலுத்தப்பட்டிருந்தது. அது ஈட்டப்பட்ட வருமானத்தின் 24 சதவீதமாக இருந்தது. கடனை மீளச் செலுத்துவதற்கு ஒழுங்கான திட்டம் தயாரிக்கப்பட்டு நிதிச் செலவை கட்டுப்படுத்துதல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

பாதுகாப்பு சேவைக்காக விலை கேள்வி கோரப்படும் போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் தர்க்க ரீதியான அடிப்படை இன்றி 06 ஆவது குறைந்த விலையினைச் சமர்ப்பித்திருந்த நிறுவனம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. அந்த விலைமனுதாரரை தெரிவு செய்ததினால் சபைக்கு வருடத்திற்கு ரூபா. 1,449 மில்லியன் நிதி நட்டம் ஏற்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

## இலங்கைக் கட்டளைகள் நிறுவனம்

**SLS இலச்சினையைக் கொண்ட பொருட்களின் விவரக் குறிப்புகளில் நிலைத்தன்மையை பசீட்சிப்பு செய்தல்**

SLS இலச்சினை பயன்பாட்டிற்கு அனுமதிப் பத்திரம் வழங்கும் போது தொடர்ந்து, உற்பத்திகள் குறித்த இலங்கைத் தரத்திற்கு இணங்குவதை உறுதிப்படுத்துவதற்காக நிலைமை ஒழுங்கமைப்பைத் திருப்திகரமாக செயல்படுத்துதல் மற்றும் அனுமதிப் பத்திர

நிபந்தனைகளுக்கு இணங்குதலை சரி பார்ப்பதற்கு திறந்த சந்தையில் உற்பத்தியிண் மாதிரிகளைப் பெற்றுக் கொண்டு விவரக் குறிப்புகளில் நிலைத்தன்மையை பரீட்சிப்பதற்கு பரிசோதனை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அவ்வாறு இருப்பினும், 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் தரச் சான்றிதழ் இலச்சினியைப் பெற்றுக் கொண்டிருந்த பொருட்களின் எண்ணிக்கை 924 ஆக இருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டில் சந்தை ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருந்த பொருட்கள் 183 வகைகள் அதாவது 20 சதவீதம் மட்டும் ஆகும்.

## கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்

**மருந்து ஆய்வு கூடம் செயலற்று காணப்பட்டமை**

அபிவிருத்தி அடைந்த நாடுகளின் உயர்தர மருந்து ஆய்வு கூடங்களுக்கு இணையான வசதிகளைக் கொண்ட ஜிஎல்பி (GLP) நிலைமை உள்ளிட்ட அங்கீகாரம் பெற்ற அதிநவீன மருந்து ஆய்வுகூடமொன்று திறைசேரி நிதியிலிருந்து ரூபா. 99.423 மில்லியன் செலவிடப்பட்டு நிறுவனத்தினுள் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் நடாத்தப்பட்டு வந்துள்ளது. எனினும் நாட்டில் உள்ள வைத்தியசாலை ஒழுங்கமைப்பினையும் உள்ளடக்கி அனைத்து மேலைநாட்டு மருந்துகளை வழங்குதல் மற்றும் விநியோகிக்கும் போது தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் மூலம் மேலே கூறப்பட்ட ஆய்வுகூடத்தில் இருந்து சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் ஆய்வுகூடத்தினைத் தாபித்ததன் முக்கிய நோக்கமான இலங்கையில் மருந்து பிரிவின் அபிவிருத்திக்கு சுயாதீன அங்கீகாரம் பெற்றுக் கொண்ட மூன்றாம் தரப்பு பரிசோதனை கூடமாக பயன்படுத்தும் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**பெட்ரோலியம் மற்றும் மசகு எண்ணெய் ஆய்வுக்கூடம் செயல்பாடு இன்றி காணப்பட்டமை**

2016 ஓகஸ்ட் 31 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் அமப.'.16.'.1576.'.19.'.96 கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய இலங்கையில் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் (ரூஊளுடு) ஒழுங்குகளுக்கு இணங்க மூன்றாம் தரப்பினர் பெட்ரோலிய உற்பத்தியில் பரீட்சிப்பினை மேற்கொள்ளும் நோக்கில் ரூபா. 117.7 மில்லியன் செலவிடப்பட்டு கருவிகளைப் பெற்றுக் கொண்டு பொருத்தி பெட்ரோலியம் மற்றும் மசகு எண்ணெய் ஆய்வுக்கூடம் தாபிக்கப்பட்டிருந்தது. எனினும் ஆய்வு கூடத்திற்கு பெட்ரோலியம் மாதிரிகள் கிடைக்கும் முறைமையொன்று உருவாக்கப்பட்டிருக்காததனால் தாபிக்கப்பட்டதன் அடிப்படைப் பணி நிறைவேற்றப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டதுடன் தற்போது நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் பெட்ரோலியத்தின் நிலைமை தொடர்பில் சிக்கல் காணப்படுகின்றது எனும் மக்கள் கருத்து நாட்டினுள் நிலவுகையில் இந்த நடவடிக்கைக்காகவே தாபிக்கப்பட்ட ஆய்வு கூடத்தில் இருந்து குறித்த நடவடிக்கை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டிருந்த புதிய தொழில்நுட்பங்கள் பயன்பாட்டில் ஈடுபடுத்தப்பட்டிருக்காமை**

பொருள் தொழில்நுட்ப ஆய்வுகூடத்தினால் கடந்த 05 வருட காலத்தினுள் ரூபா. 9.02 மில்லியன் திறைசேரி மானியத்தினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டிருந்த 05 ஆய்வு செயல்திட்டங்களின் ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டிருந்த புதிய தொழில்நுட்பங்கள் 03 வருடத்திற்கும் அதிக காலம் கடந்திருந்தது எனினும் 2023 ஆம் ஆண்டு இறுதி தினம் வரையிலும் ஒப்படைக்கப்படாது பயன்பாடின்றி காணப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இறப்பர் மற்றும் காரிய பயன்பாட்டில் நனோ இணைப்பில் வெப்ப கடத்து திறனை முன்னேற்றுதல், வாகனங்களில் இருந்து வெளிப்படும் வளி வெளியேற்றத்தை குறைப்பதற்கு நனோ துகள்களை பயன்படுத்துதல் தொடர்பான ஆய்வு, சுற்றாடலுக்கு கேடு விளைவிக்கும் பொலித்தீனுக்குப் பதிலாக பயன்படுத்தக்கூடிய சுற்றாடல் நேய பொலித்தீன் மற்றும் லன்ச் ஷீட் உற்பத்திகளுக்கு பொருத்தமான தொழில்நுட்பத்தினை கண்டறிதல் போன்ற ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் தொழில்நுட்பத்தினைப் பயன்பாட்டில் ஈடுபடுத்தும் தரப்பினரை அடையாளம் கண்டு இருக்காததனால் ஈடுபடுத்தப்பட்ட மொத்த செலவுடன் ஒப்பிடும்போது உற்பத்தித்திறனான பயன்பாடு இடம்பெற்றிருக்கவில்லை. உள்நாட்டு வளங்களுக்கு பெறுமதியினைச் சேர்க்கும் தொழில்நுட்பத்தின் மூலம் அவற்றின் வினைத்திறனான பயன்பாட்டினை அதிகரிக்கும் நலன்களும் உள்நாட்டு கைத்தொழில் துறைக்கு ஈடுபடுத்தும் சந்தர்ப்பங்களும் அதற்கமைய தவறவிடப்பட்டிருந்தன. அவ்வாறு இருந்த போதிலும் கண்டறியப்பட்ட தொழில்நுட்பம் சுற்றாடல் தேவைப்பாட்டுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

# கடற்றொழில்



இலங்கை பிரத்தியேக பொருளாதார வலயத்துக்கு உரிய 517,000 சதுர கிலோ மீட்டர் கடற்பிரதேசம், சர்வதேச கடல் மற்றும் 489,000 ஹெக்டயரிலான களப்பு மற்றும் உள்நாட்டு நீர்த் தேக்கங்களை சிறந்த முறையில் பொறுப்புடன் பயன்படுத்தி தேசிய பொருளாதாரத்திற்கு உயர்ந்த பங்களிப்பை வழங்கும் கடற்றொழில் கைத்தொழில் ஒன்றை உருவாக்குவதன் மூலம் இலங்கையில் தனியாள் மீன் நுகர்வு நாளொன்றிற்கு 43.28 கிராம் வரையான வளர்ச்சியை எய்தி பொது மக்களின் ஊட்டச்சத்து மட்டத்தைப் பேணிக் கொள்ளல், தேசிய பொருளாதார மற்றும் அந்நிய செலாவணி விருத்திக்காக மீன் ஏற்றுமதியின் மூலம் விசேட பங்களிப்பை வழங்கி மீனவ சமூகத்தின் வாழ்க்கை நிலையை உயர்த்துதல் என்பன எதிர்பார்க்கப்பட்ட நோக்காக இருந்தது. அந்த பெறுபேற்றை அடைவதற்காகக் கடற்றொழில் அமைச்சின் கீழ் உள்ள ஒரு திணைக்களமும் 06 நியதிச் சட்ட சபைகளாலும் பின்வரும் முக்கிய செயற்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது.

**செயற்பணி**

கரையோரப் பிரதேசங்களில் மீன்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக விஞ்ஞான ரீதியிலான முறையொன்றை அறிமுகப்படுத்துதல்.

கடற்றொழில் துறைமுகங்களை நவீனமயமாக்கி தேவைப்பாட்டிற்கமைய புதிய துறைமுகங்களை நிர்மாணித்தல், நவீன தொடர்பாடல் வசதிகள், குளிரூட்டிகள், எரிபொருள் வழங்கல் மற்றும் சுகாதார வசதிகளுடனான சகல கடற்றொழில் துறைமுகங்கள், நங்கூரமிடற் தளங்களை விரிவுபடுத்துதல்.

சர்வதேச கடல் பிரதேசங்களில் மீன்பிடி தொழிலை விரிவாக்குவதற்காக உள்நாட்டுக் கம்பனிகளுக்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.

ரின்மீன் கைத்தொழிலை விரிவாக்குவதற்காக தனியார் கம்பனிகள் மற்றும் முதலீட்டாளர்களை ஊக்குவித்தல்.

உற்பத்தியாளருக்கும், பாவனையாளருக்கும் நியாயமளிக்கும் விதத்தில் மீன் உற்பத்திக்காக விற்பனை அபிவிருத்தி நடவடிக்கைகளை விரிவுபடுத்தல்.

வடக்கு மற்றும் கிழக்குக் கடலில் அத்துமீறி மீன்பிடித்தலை இல்லாதொழித்து, கடற்படை மற்றும் கரையோரப் பாதுகாப்பு பிரிவுகளை வலுப்படுத்தி இந்தியாவுடனான சிக்கல்களைத் தீர்த்துவைத்தல்.

மீனவ சமூகத்திற்கான நலன்புரி செயற்பாடுகளை விரிவுபடுத்தி மீனவ சமூகத்திற்குப் பயனுறுதியான வங்கி மற்றும் காப்புறுதி முறையொன்றை அறிமுகப்படுத்தல்.

சமுத்திரப் பல்கலைக்கழகத்தை உபயோகப்படுத்தி இளைஞர் யுவதிகளுக்காக கடற்றொழில் செயற்பாடுகள் தொடர்பான தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவப்

பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தல்.

ஏற்றுமதி சந்தையை இலக்காகக் கொண்ட அலங்கார மீன்கள் கைத்தொழிலை உருவாக்குவதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்

குளங்கள், களப்பு மற்றும் கரை நிலங்களை அண்டி நன்னீர் மீன் வளர்ப்புச் செய்கையைப் பிரபல்யப்படுத்துவதற்குத் தேவையான வழிமுறைகளைத் தயார் செய்தல்.

பலநாள் கடற்றொழில் படகுகளுக்காகக் கடல் நீரைப் பிரயோகித்து குளிரூட்டித் தொகுதியை விருத்தி செய்தல் மற்றும் சூரிய மின்சக்திப் பாவனையை ஊக்குவித்தல்.

கடற்றொழிலாளர்களினதும் அத் தொழிற்துறையில் ஈடுபட்டுள்ளோரினதும் தொழில்துறைசார் பயிற்சி மற்றும் அறிவை விரிவுபடுத்துதல்.

**ஒதுக்கீட்டின் பயன்பாடு**

2023 ஆம் ஆண்டில் மேற்குறிப்பிடப்பட்ட செயற்பணிகளை நிறைவேற்றுவதற்காக கடற்றொழில் அமைச்சு, மற்றும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்திற்கு மொத்தமாக ரூபா 9,202 மில்லியன் ஏற்பாடு பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன், 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 8,210 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 922 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | **கடற்றொழில் அமைச்சு** | **கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்** | **மொத்தம்** |
|---|---|---|---|
| தேறிய ஏற்பாடு ரூபா. மில்லியன் | 7,511 | 1,691 | 9,202 |
| செலவினம் ரூபா. மில்லியன் | 6,612 | 1,598 | 8,210 |
| சேமிப்பு ரூபா. மில்லியன் | 899 | 93 | 992 |

அட்டவணை இல. 2.21 ஒதுக்கீட்டின் பயன்பாடு

கடற்றொழில் அமைச்சு, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களால் மேலே குறிப்பிடப்பட்ட கடமைப் பொறுப்புக்களை மேற்கொள்வது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் தொகுக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

## கடற்றொழில் அமைச்சு

| | |
|---|---|
| கடற்றொழில் துறைமுகங்கள் மற்றும் நங்கூரமிடும் பகுதிகளை நிர்மாணித்தலும் | அமைச்சரவை அங்கீகாரத்துடன் காலி மாவட்டத்திற்கு உரித்தான கைகாவல கரையோரப்பகுதியில் நங்கூரமிடும் பகுதியை நிர்மாணிப்பதற்காக 2 தொகுதிகளின் கீழ் |

| | |
|---|---|
| மேம்படுத்துதலும் | தேர்ந்தெடுக்கப்பட்ட மனுதாரருடன் ஒரு வருட காலத்திற்குள் நிர்மாணிப்பதற்காக ரூபா 245.8 மில்லியன் பெறுமதியான இரு ஒப்பந்த உடன்படிக்கைகள் 2014 செப்தெம்பர் 14 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்டிருந்தன. இதன் படி, ஒப்பந்த கம்பனியால் 02 தொகுதிகளுக்குமான நிர்மாணிப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அமைச்சால் 2014 செப்தெம்பர் 29 ஆம் திகதி ரூபா 49.16 மில்லியன் தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணத் தொகை 02 தொகுதிகளுக்குமாகச் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், இவ் ஒப்பந்தங்களுக்காக நிர்மாணிப்பிற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிராமையால் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் இடைநிறுத்தப்பட வேண்டியிருந்ததுடன் முற்பணத் தொகை செலுத்தப்பட்டு 09 வருட காலம் பூர்த்தியடைந்த நிலையிலும் குறித்த நிதி மீள அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| **தாமதத்திற்கான வட்டிக் கொடுப்பனவு** | 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் கடற்றொழில் அமைச்சால் துறைமுக நிர்மாணிப்பிற்கான 05 செயற்திட்டங்களுக்காக இரு நிர்மாண ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா 209.69 மில்லியன் தொகையான தாமத வட்டித் தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 20.49 மில்லியன் தொகையான தாமத வட்டித் தொகையை மேலும் செலுத்துவதற்காக உறுதியளிக்கப்பட்டிருந்தது. இதன் படி, செலுத்தப்பட்டிருந்த தாமத வட்டிக் கூட்டுத்தொகைப் பெறுமதி ரூபா 230.19 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. |
| **இலக்கிடப்பட்ட தனிநபர் மீன் நுகர்வு எய்தப்பட்டிராமை** | கடலோரம், கடற்கரை மற்றும் களப்பு, நன்னீர், நீர் வாழ் உயிரின வளர்ப்பு, இறால் ஆகிய 05 துறைகளைக் கொண்ட மீன் உற்பத்தி 2022 ஆம் ஆண்டில் 397,230 மெட்ரிக் தொன்னாக இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் அது 407,070 மெட்ரிக் தொன்னாகக் காணப்பட்டது. இதன் படி, 9,840 மெட்ரிக் தொன்னால் அதிகரிப்பு நேர்ந்திருந்ததுடன் இது 2.5 சதவீதமான ஒட்டுமொத்த உற்பத்தி அதிகரிப்பாகியிருந்தது. 2023 ஆம் ஆண்டில் இலக்கிடப்பட்ட தனிநபர் மீன் நுகர்வான நாளொன்றிற்கு 43.28 கிராமாக இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் உள்ளபடியான மீன் நுகர்வு நாளொன்றுக்கு 32.5 கிராமாகவும் 2023 ஆம் ஆண்டின் போது அவ் இலக்கை அடைவதற்கு இயலாது போயிற்று. |
| **அமைச்சுச் செயலாளரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு சேதம் ஏற்பட்டிருந்தமை** | நாராஹென்பிட்டி, முகந்திரம் ஈ.பீ. தாபரே மாவத்தை இல. 18/146 பீ இல் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சுச் செயலாளர் பதவிக்காக ஒதுக்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ இல்லத்திற்காக கடற்றொழில் அமைச்சால் வழங்கப்பட்டிருந்த சகல கணக்கெடுப்புப் பொருட்களும் காணாமற்போயுள்ளதாக 2023 ஆம் ஆண்டின் மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் மூலம் |

கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும், கட்டிடத்தில் பொருத்தப்பட்டிருந்த கதவு, யன்னல்களின் பூட்டுகளும் கட்டிடப் பொருத்திகளும் கழற்றப்பட்டிருந்தன. இதன் படி நேர்ந்துள்ள ரூபா 1.81 மில்லியன் பெறுமதியான இழப்பு தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு அரசாங்கத்திற்கு உரித்தான சொத்துக்களை பாதுகாப்பான முறையில் வைத்திருப்பதற்காக பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினரை இனங்கண்டு நட்டத்தை அறவிட்டுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம்

**தியவர திரிய கடன் திட்டம்**

இலங்கையில் உவர் நீர் மீன்பிடிப்பு நடவடிக்கைகள் மற்றும் நன்னீர் மீன்பிடிப்பு நடவடிக்கைகளிற்கு புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் மீன்பிடிக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்து உயர் தரத்திலான அதிக அளவிலான மீன் உற்பத்தியைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் மீன்பிடிப் படகுகளை மேம்படுத்தி மீனவ சமுதாயத்திற்கு நிவாரணம் வழங்குவதற்காக கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தினதும் இலங்கை வங்கியினதும் அனுசரணையுடன் 2011 ஆம் ஆண்டின் போது "தியவர திரிய கடன் திட்டம்" ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 776 மில்லியன் தொகையான கடனிற்கான வட்டி உதவுதொகையான ரூபா 12 மில்லியன் தொகை கடற்றொழில் திணைக்களத்தால் 2023 ஆம் ஆண்டின் போது இலங்கை வங்கிக்கு செலுத்தப்பட்டிருந்தது. மீனவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கடன் தொகை, கடன் தவணைப்பணத்தை மீளப் பெற்றுக்கொள்ளல், அறவிடப்பட்ட வட்டி, கடன் மீளறவிடப்படாத மீனவர்கள் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள், கடன்பெறுனர்களால் மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கு பங்களிப்புச் செய்தல் மற்றும் மீனவ சமுதாயத்திற்குக் கிடைக்கப்பெற்ற உதவி தொடர்பாக முழுக் காலப்பகுயின் போதும் பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் இது தொடர்பாக போதிய விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராததன் காரணமாக மேற்குறித்த கொடுக்கல்வாங்கல்களின் துல்லியத் தன்மை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த இயலாதிருந்தது.

**50 சதவீத அரசாங்க மானிய முறையின் கீழ் மீன்பிடிப் படகுகளைத் தயாரித்தல்.**

2016 ஆம் ஆண்டின் போது எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, அரசாங்க மானிய முறையின் கீழ் 55 அடிகளாலான நவீன தொழில்நுட்பத்திலான 10 மீன்பிடிப் படகுகளின் உற்பத்திக் கிரயத்தில் 50 சதவீதமான மானியப்

பங்களிப்பை வழங்குவதற்காக ரூபா 130 மில்லியன் 2016 ஆம் ஆண்டின் போது திணைக்களத்தால் வெளி நிறுவனம் ஒன்றிற்குச் செலுத்தப்பட்டிருந்தது. இந்த 50 சதவீதமான அரசாங்க மானிய முறைமையின் கீழ் உற்பத்திகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த 55 அடிகளாலான 2 மீன்பிடிப் படகுகள் கணக்காய்வுத் திகதி வரையிலும் 08 ஆண்டுகளுக்கு மேலான காலம் கடந்திருந்த போதிலும் உற்பத்தி நிறைவேற்றப்பட்டு அந்த மீன்பிடிப் படகுகள் பொறுப்பாளர்களிடம் ஒப்படைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**களப்பு எல்லைகள் குறியிடப்படும் செயற்திட்டம்**

களப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் களப்பு எல்லைகள் குறியிடப்படும் செயற்திட்டத்தின் கீழ் சிலாபம் களப்பு எல்லைகளைக் குறியிடுவதற்குத் தேவையான எல்லைக் கம்பங்களின் எண்ணிக்கை 1,784 ஆன போதிலும் கொள்வனவு நடைமுறையில் 4,060 கம்பங்களாகப் பதிவு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 3.83 மில்லியன் பெறுமதியான 2276 கம்பங்கள் மேலதிகமாகத் தயாரிக்கப்பட்டு பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் அக் கம்பங்கள் சிலாபக் களப்பில் 13 இடங்களில் தேக்கியிடப்பட்டிருந்தது. நிதிப் பிரமாணம் 128(1) (ஐ) இன் பிரகாரம் பொது மக்களின் பணத்தைச் செலவிடுகையில் சிக்கனத்தன்மை மற்றும் செயற்திறன், முறைப்படியான நிலை மற்றும் நேர்மைத்துவம் தொடர்பாக கணக்களிப்பு உத்தியோகத்தர் பொறுப்புக் கூற வேண்டிய போதிலும் இது தொடர்பாக கருத்திற்கொள்ளப்பட்டிராமை இதன் படி அவதானிக்கப்பட்டது. இவ்வாறு அதிக அளவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கொங்கிரீட் கம்பங்கள் புத்தளக் களப்பு எல்லையைக் குறியிடுவதற்குப் பயன்படுத்துவதாக பின்னர் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் இக் கொங்கிரீட் கம்பங்கள் புத்தளக் களப்பிற்கு கொண்டுசெல்லப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**பாலியகொட மத்திய மீன் சந்தைத் தொகுதி முகாமைத்துவப் பொறுப்பு**

பாலியகொட மத்திய மீன் சந்தைத் தொகுதி முகாமைத்துவப் பொறுப்பு ஆரம்பிக்கப்பட்டு 2023 ஆம் ஆண்டின் இறுதியில் 12 வருடங்கள் கடந்திருந்த போதிலும் முகாமைத்துவப் பொறுப்பு பாராளுமன்ற அதிகாரச்சட்டத்தின் மூலம் சட்டமயமாக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மீன் சந்தைத் தொகுதியில் மீன்களைக் கையாள்வது சுகாதார ரீதியாக மேற்கொள்ளப்படுவதற்கு விற்பனை செய்யப்படும் மீன் உணவுப்பொருட்கள் சுகாதார ரீதியாகவும் தரத்தைக் கொண்டதாகவும் குறித்த தரத்தில் பேணப்படுவது குறித்து உறுதிப்படுத்துவதற்கு தேவையான வழிகாட்டல்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## இலங்கை தேசிய நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபை

| | |
|---|---|
| **தர மேம்பாட்டு செயற்திட்டத்தால் ஒப்படைக்கப்பட்ட சொத்துக்களைக் கணக்கிடப்பட்டிராமை** | புதக்குடியிருப்பில் உள்ள ரூபா 75.88 மில்லியனான இறால் உற்பத்திப் பண்ணை, நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி மற்றும் தர மேம்பாட்டுச் செயற்திட்டத்தால் 2009 திசெம்பர் 30 ஆம் திகதி அதிகாரசபைக்கு ஒப்படைத்திருந்த போதிலும் அச் சொத்துக்களை இனங்கண்டு அதிகாரசபைப் புத்தகங்களில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. 2015 யூன் 22 ஆம் திகதிய மதிப்பீட்டு அறிக்கையின் படி, இவ் குஞ்சு உற்பத்தி செய்யப்படும் காணி ரூபா 3.72 மில்லியனிற்கும், கட்டிடம் ரூபா 44.23 மில்லியனிற்கும், தளபாடங்களும் பொருத்திகளும், மோட்டார் சைக்கிள். வாயு குளிரூட்டல் இயந்திரம், மின்னுற்பத்தி மற்றும் ஏனைய இருப்புகளின் பெறுமதி ரூபா 3.15 மில்லியனான போதிலும் அப் பெறுமதிகள் எதுவும் கணக்கீடு செய்யப்பட்டிராததுடன் பொருள் மெய்மையாயவு அறிக்கைகளிலும் இச் சொத்துக்களின் உள்ளமை குறித்து உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. |
| **விளைவற்ற செலவினங்கள்** | அதிகாரசபைக்கு உரித்தற்ற 1361.76 ஹெக்டேயர் அளவிலான 04 காணிகளதும் இடப்பரப்பை இனங்காண இயலாத காணிக்காகவும் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்காக 2017 ஆம் ஆண்டு முதல் ரூபா 107.6 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் 2024 மே 27 ஆம் திகதி வரையிலும் எந்தவித செயற்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டிராமையால் அச் செலவினம் விளைவற்ற செலவினமாகியிருந்தது. |

## தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகாமை

| | |
|---|---|
| **மீன் உணவு உற்பத்தி இயந்திரம் வாடகைக்கு வழங்குதல்** | 2018 ஆம் ஆண்டின் போது அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 16.87 மில்லியன் மீன் உணவு உற்பத்தி இயந்திரம் மீன் உணவு உற்பத்திற்காக தனியார் கம்பனி காணி ஒன்றில் ஸ்தாபிக்கப்பட்டு இயந்திரம் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. வாடகை உடன்படிக்கையின் 8 ஆம் நிபந்தனைக்கமைவாக 2020 யூன் 05 ஆம் திகதி முதல் மாதாந்த தவணைப்பணம் ரூபா 150,000 படி முகாமைக்குக் கிடைக்கப்பெற வேண்டியிருந்த போதிலும் இது வரையில் எந்தவித வாடகைத் தொகையும் கிடைக்கப்பெற்றிராமையால் 31 மாதங்களுக்காகப் பெறவேண்டியிருந்த ரூபா 4.65 மில்லியன் தொகை நிறுவனத்திற்குக் கிடைக்கப்பெறாது போயிருந்தது. |

**இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்.**

| | |
|---|---|
| **கடன்பட்டோர் மீதி அதிகரித்தல்** | இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தால் அவர்களது நோக்கமும் செயற்பணிகளும் மேற்கொள்ளப்படுவதற்காக செயற்படுகையில் முதன்மையாக எரிபொருள் விற்பனை, மின்சாரம் மற்றும் நீர், மீன்பிடிப் படகுகளுக்கான விற்பனை மூலம் வருமானம் ஈட்டப்படுவதுடன் துறைமுகக் காணி, ஐஸ் தொழிற்சாலை, களஞ்சியசாலை, கட்டிடங்கள் போன்ற ஆதனங்கள் தனியார் தரப்பினருக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டு நங்கூரமிடற் கட்டணங்கள் மூலமாகவும் வருமானம் சேகரிக்கப்படுகின்றது. எனினும், கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான இவ் வருமானத்தை வருடாந்தம் சரியான முறையில் அறவிடப்பட்டிராததன் காரணமாக இவ் கடன்பட்டோர் மீதி வருடாந்தம் உயர்வடைவதாகவும் இதன் படி 2021 கடன்பட்டோர் மீதி ரூபா 599.81 மில்லியன் தொகையாலும் 2022 ஆம் 2023 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 819.34 மில்லியன் வரையிலும் ரூபா 871.22 மில்லியன் வரையிலும் அதிகரித்திருந்தது. |

# கால்நடை வளம்

இலங்கை நகர்ப்புற மக்களை விடக் கிராமப்புற மக்கள் அதிகமாக வாழும் நாடாக இருப்பதுடன் கிராமப்புற மக்கள் பெரும்பாலும் முதன்மைக் கைத்தொழில்களில் ஈடுபடுவோராக உள்ளனர். அதற்கமைய இந்த கிராமப்புற மக்களின் முக்கிய வாழ்வாதாரமான விவசாயம் மற்றும் கால்நடை உற்பத்திகளைக் கொள்வனவு செய்தல் அவற்றிற்கு சிறந்த விலையைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் உற்பத்திக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் மற்றும் முதன்மை உற்பத்தியை இரண்டாம் நிலை உற்பத்தியாக மாற்றி அவற்றை வெளிநாட்டு சந்தைகளுக்கு வழங்கி அவற்றை வெளிநாட்டு சந்தைக்கு அனுப்பி இது தொடர்பான அரச நிறுவனங்களின் செயற்பணியாகும். அதற்கமைய இலங்கையில் கால்நடைகள் பிரிவுக்குரிய செயற்பணிகள் பின்வருமாறாகும்.

**செயற்பணி**

பல்வேறு புவியியல் பிரதேசங்களுக்குப் பொருத்தமான வகையில் கால்நடைகளை அறிமுகப்படுத்துவதற்காக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான விவசாயப் பண்ணை அபிவிருத்தியை ஊக்குவித்தல்.

கால்நடைகள் சார்ந்த உற்பத்தியை மேம்படுத்துதல் மற்றும் ஏற்றுமதிக்காக ஊக்குவித்தல்.

தேசிய கால்நடை அபிவிருத்தி சபையூடாக உயர் தரத்திலான புல் வகைகளை அறிமுகப்படுத்துதல்.

நடுத்தர மற்றும் பாரிய அளவிலான கால்நடை பண்ணைகளை நிர்மாணிப்பதற்கு உரிய நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து தேவையான காணி மற்றும் முதலீட்டு வசதிகளை வழங்குதல்.

அரசுக்கு சொந்தமான கால்நடை பண்ணைகளை அதிகபட்சமாக பயன்படுத்தும் வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

கோழி இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தியை விரிவுபடுத்துதல் மற்றும் ஏற்றுமதி செய்வதற்கு ஊக்குவித்தல்.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உற்பத்தியாளர்களை மேம்படுத்துவதன் மூலம் உள்நாட்டு உற்பத்தி மற்றும் நுகர்வு சந்தர்ப்பங்களை விரிவுபடுத்துதல்.

கால்நடை பண்ணைகள் மற்றும் உற்பத்தி வசதிகளுக்கு சர்வதேச தரங்கள் மற்றும் உற்பத்தி திறனான கண்காணிப்பு ஒழுங்கமைப்பினை அறிமுகப்படுத்துதல்.

கால்நடை வைத்திய வசதிகளை விரிவுபடுத்துவதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான விவசாயிகளுக்கு வசதிகளை வழங்குதல்.

மேலே குறிப்பிடப்பட்ட செயற்பணிகளை மேற்கொள்வதற்காக இந்தத் துறைக்குரிய தேசிய கால்நடை அபிவிருத்தி சபை, மில்கோ தனியார் கம்பனியின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட விடயங்களில் சில கீழே பொழிப்பாக்கம் செய்யப்பட்டுத் தரப்பட்டுள்ளன.

## கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்

**ஆடு வளர்ப்புத் திட்டம்**

ஒரு வருடத்திற்கு 50 படி 05 ஆண்டுகளில் 250 ஆடுகளை களமிறக்கும் நோக்குடன் 2019 ஆம் ஆண்டின் போது இம்புலன்தண்ட ஆடு வளர்ப்பு நிலையத்தில் பொயர் வகையிலான ஆடு வளர்ப்புச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்திற்காக 2023 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 91.97 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் அக் காலப்பகுதியின் போது ரூபா 2.36 மில்லியன் தொகையான வருமானம் மாத்திரம் பெறப்பட்டிருந்தது. இவ்வாறே, இக் காலப்பகுதியின் போது 23 ஆடுகள் மாத்திரம் களத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கை எய்தியிராதமை அவதானிக்கப்பட்டது.

**நிதிப் பொறுப்பாளரின் நிதி முறைகேடுகள்**

கன்னொருவை கால்நடை ஆராய்ச்சி நிறுவகத்தின் நிதிப் பொறுப்பாளரால் 2018 முதல் 2023 யூலை மாதம் வரையான காலப்பகுதியின் போது நாளாந்தம் சேகரிக்கப்பட்ட வருமானத்தில் ரூபா 14.75 மில்லியனான தொகை தலைமை அலுவலகத்தின் பிரதான நிதிப் பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப்படாது தனிப்பட்ட பயன்பாட்டிற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்டு முறைகேடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந் நிதி முறைகேடு தொடர்பான நி.பி. 104(4) ஆரம்ப விசாரணை அறிக்கைகள் 2023 ஆம் ஆண்டின் இறுதித் தினம் வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**விளைவற்ற சொத்துக்கள்**

பொல்கொல்லை விலங்கு அறிவியல் ஆய்வுகூடத்திற்காக 2022 ஆகஸ்ட் 15 ஆம் திகதி ரூபா 96.55 மில்லியனிற்கு தன்னியக்க உயிரியல் சிகிச்சை இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையிலும் பயன்பாட்டிற்காக எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

## தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்தி சபை

**இறந்த இறக்குமதி செய்யப்பட்ட கால்நடைகளுக்காகக்**

2013 ஆம் ஆண்டு முதல் இறக்குமதி செய்யப்பட்ட கால்நடைகளுக்காகக் கிடைக்கப்பெற வேண்டிய காப்புறுதி நட்டஈட்டுத் தொகையான ரூபா 19.25 மில்லியன் 2023

| | |
|---|---|
| **கிடைக்கப்பெற வேண்டிய காப்புறுதி நட்டஈடு** | திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடத் தவறியிருந்தது. |
| **நிலுவையான வாடகை மற்றும் தண்டப்பணம்** | தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் நடாத்தப்பட்ட தேங்காய் ஏலவிற்பனைகளின் போது இவ் அதிகாரசபையால் விநியோகிக்கப்பட்ட சட்ட விதிக் கோவைகளின் படி குறித்த காலப்பகுதிக்குள் தேங்காய்களை அகற்றப்பட்டிராமையால் தரகர்களிடம் இருந்து 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அறவிடப்பட வேண்டியிருந்த 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவை வாடகையும் தண்டப்பணமும் ரூபா 8.81 மில்லியன் தொகையானதுடன் அம் மீதியை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **விளைவற்றதும் குறைவான பயன்பாடுடைய ஆதன, இயந்திர உபகரணங்கள்** | கால்நடை வள அபிவிருத்தி சபையின் 4 பண்ணைகளில் நாளொன்றுக்கு ஒரே தடவையில் 3.75 கால்நடை உணவை உற்பத்தி செய்யக் கூடிய 4 இயந்திரங்கள் இருந்ததுடன் அவ் இயந்திரங்களால் மாதம் ஒன்றிற்கு 900 மெ.தொ. கால்நடை உணவை (3.75*30 நாட்கள் * 8 மணித்தியாலங்கள்) படி ஒரு வருடத்திற்கு 10,800 மெட்ரிக் தொன் உற்பத்தி செய்ய இயலுமான போதிலும் அவ் இயந்திரம் 15 வருடங்களாக விளைவற்று இருந்தமை கண்டறியப்பட்டது.<br><br>தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்தி சபையின் கீழான 4 பண்ணைகளில் கோழித் தீனி தயாரிக்கும் 04 இயந்திரங்களும் மஹாவலி விலங்கின வியாபார கம்பனிக்கு கோழித் தீனி தயாரிக்கும் அரைக்கும் இயந்திரமும் 1 கலப்பு இயந்திரமும் காணப்பட்டதுடன் இதில் கோழித் தீனி மாதம் ஒன்றிற்கு 2,580 மெ.தொ. (10.75*30 நாட்கள் * 8 மணித்தியாலங்கள்) படி ஒரு வருடத்திற்கு 30,960 மெட்ரிக் தொன் உற்பத்தி செய்ய இயலுமை இருந்தது. எனினும், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவ் இயந்திரம் முறையே 15 வருடங்களாகவும் ஒரு வருடமாகவும் விளைவற்று இருந்தமை கண்டறியப்பட்டது. |
| **எதிர்பார்க்கப்பட்ட பால் உற்பத்தி மற்றும் உள்ளபடியான பால் உற்பத்தி முரண்கள்** | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி, 2019 – 2023 வரை சபையின் எதிர்பார்க்கப்பட்ட பால் உற்பத்தி மற்றும் உள்ளபடியான பால் உற்பத்தி பின்வருமாறு குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. |

| ஆண்டு | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி எதிர்பார்க்கப்பட்ட பால் உற்பத்தி (லீற்றர் மில்லியன்) | உள்ளபடியான பால் உற்பத்தி (லீற்றர் மில்லியன்) | குறைவு (லீற்றர் மில்லியன்) | குறைவின் நூற்று வீதம்% |
|---|---|---|---|---|
| **2019** | **17.91** | 12.43 | 5.48 | 31 |
| **2020** | **15.11** | 12.03 | 3.08 | 20 |
| **2021** | **15.22** | 9.7 | 5.52 | 36 |
| **2022** | **12.54** | 6.43 | 6.11 | 49 |
| **2023** | **8.92** | 4.87 | 4.05 | 45 |

அட்டவணை இல. 2.22 முதலீடு மற்றும் உள்ளபடியான பால் உற்பத்தி

## மில்கோ தனியார் நிறுவனம்

**மனித பாவனைக்குப் பொருத்தமற்ற பால்மா உற்பத்தி**

தொழிற்சாலை நவீன மயப்படுத்தல் செயல்திட்டத்தின் கீழ் நவீன இயந்திராலை பொருத்தப்பட்டதன் பின்னர் 2017 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் உற்பத்தி செய்யப்பட்டிருந்த 771,652 கிலோ கிராம் பால்மா குறையற்றது என பரிசோதனை அறிக்கை வழங்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டிருந்தது. எனினும், நுகர்வோர் பயன்பாட்டிற்கு பொருத்தமற்றது என நுகர்வோரால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் காரணமாக அவ் இருப்புகள் மீண்டும் களஞ்சிய சாலைக்கு கொண்டுவரப்பட்டிருந்தது. இதில் ரூபா. 475.2 மில்லியன் பெறுமதியான 720,000 கிலோகிராம் பால்மா இருப்பில் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையில் கால்நடை உணவாக விற்பனை செய்யப்பட்டதன் பின்னர் மிகுதியான 17,938 கிலோகிராம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அம்பேவெல பால் தொழிற்சாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், மனித பாவனைக்குப் பொருத்தமற்ற பால்மா உற்பத்திக்குப் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக எதுவித விசாரணையும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**திரவப் பால் கொள்வனவு**

எதிர்பார்க்கப்பட்ட சந்தைப் பங்கை எட்டுவதற்காக இலக்கிடப்பட்ட உற்பத்தியை மேற்கொள்வதற்கு முக்கிய உள்ளீடான திரவப் பால், நாட்டில் மொத்த உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அளவு கொள்வனவு செய்யப்படுவது முக்கிய விடயமாகும். எனினும், கம்பனியால் தமது உற்பத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான பால் கொள்வனவு 2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் முறையே நாட்டின் மொத்த திரவப் பால் உற்பத்தியில் நூற்றுக்கு 14 ஆகவும் 13 ஆகவும் 9 ஆகவும் குறைவான நிலையில் நிலவியதுடன் 2023 ஆம் ஆண்டின் போது 2022 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக திரவப் பால் கொள்வனவு 7,762,535 ஆல் அதாவது 16 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

| | 2020 | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|---|
| திரவப்பால் சேகரிப்பு (லீற்றர்) (கம்பனி அறிக்கையின் படி) | 67,287,519 | 67,905,259 | 47,538,337 | 39,775,802 |
| மொத்த பால் உற்பத்தி (லீற்றர்) (தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்க அறிக்கையின் படி) | 491,538,618 | 513,305,478 | 506,449,602 | * |
| கையேற்பு முன்னேற்றம் | 13.68 | 13.22 | 9.38 | |

*பெற்றுக்கொள்ள இயலவில்லை

அட்டவணை இல. 2.23 : மொத்த திரவப் பால் உற்பத்தியும் கம்பனியின் கொள்வனவும்

**பயன்பாட்டைக் கருத்திற் கொள்ளாது தொழிற்சாலைகளை நிர்மாணித்தல்.**

படல்கம பால் பதனீட்டு தொழிற்சாலையை ஸ்தாபிப்பதற்காக ரூபா 9.93 பில்லியன் ஒப்பந்தப் பெறுமதிக்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 11.87 பில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகள் இது வரையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத் தொழிற்சாலை பூர்த்தியானதை அடுத்து குறித்த தொழிற்சாலையின் இயந்திர இயலளவின் படி நாளொன்றிற்கு கம்பனிக்கு 400,000 திரவப்பால் தேவைப்படும் என அறிக்கையிடப்பட்டிருந்தது. தற்போது இயங்கும் ஏனைய 04 தொழிற்சாலைகளுக்காக நிறுவனத்திற்கு சேகரிக்கக் கூடிய நாளாந்த திரவப் பால் அளவு 200,000 லீற்றர்கள் மாத்திரமே ஆனமையால் இவ் இயந்திரத்தை முழு இயலளவில் பயன்படுத்தும் இயலுமை தொடர்பாக நிலையற்ற நிலை அவதானிக்கப்பட்டது.

**விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்**

கம்பனிக்கு உரித்தான பொலொன்னறுவை பால் தொழிற்சாலையில் உள்ள 2011 சனவரி 20 ஆம் திகதிய குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 104.18 மில்லியன் பெறுமதியான யோகட் கலவையிடல் இயந்திர உற்பத்திக் குறைபாட்டால் 13 வருட காலமாக பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டதுடன் கம்பனிக்கு உரித்தான திரவப் பால் தொழிற்சாலையில் உள்ள ரூபா 15.445 மில்லியன் பெறுமதியான ஐஸ்கிரீம் கோப்பை உற்பத்தி இயந்திரம் 11 வருட காலமாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

# சுற்றாடல்

நிலைபேறான அபிவிருத்தியுடனான இலங்கை எனும் நோக்குடனும் நிலைபேறான இயற்கை வள முகாமைத்துவத்தின் மூலம் சுற்றாடல் பாதுகாப்பை உறுதிப்படுத்தி நிலைபேறான சுற்றாடல் முகாமைத்துவத்திற்கான தலைமைத்துவத்தை வழங்குவது சுற்றாடல் அமைச்சின் செயற்பணியாகும். அச் செயற்பணியை மேற்கொள்வதற்காக சுற்றாடல் அமைச்சும் 2023 ஆம் ஆண்டின் போது இதன் கீழ் இயங்கும் நியதிச் சட்ட சபைகள்/ 04 நிறுவனங்களான மத்திய சுற்றாடல் அதிகாரசபை, புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம், GSMB தொழில்நுட்ப சேவைகள் கம்பனி மற்றும் இலங்கை வானிலை நிதிய தனியார் கம்பனி எனும் நிறுவனங்களால் பின்வரும் செயற்பாடுகளும் செயற்பணிகளும் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தன.

| | |
|---|---|
| செயற்பணி | நிலையான வளர்ச்சிக் கொள்கைகளை வகுத்து அவற்றைப் பயன்படுத்துவதற்காக பங்குதாரர்களின் பங்கேற்புடன் சுற்றாடல் மற்றும் இயற்கை வளத் துறைகளில் உள்ள பிரச்சனைகளைக் கண்டறிந்து பகுப்பாய்வு செய்தல். |
| | சுற்றாடல் மற்றும் இயற்கை வள பாதுகாப்பு தொடர்பான கொள்கைகளை வகுப்பதற்காக தொடர்புபட்ட தரப்பினருக்கு அறிவித்து செயற்படுத்துவதை உறுதி செய்தல். |
| | சுற்றாடலுக்கும் இயற்கை வளங்களுக்கும் இணங்கக் கூடிய கொள்கைகளைச் செயற்படுத்துவதற்கு இயலுமான வகையில் உபாய மார்க்கங்களையும் செயற்பாட்டுத் திட்டங்களையும் தயாரித்து முன்னோடித் திட்டங்களைச் செயற்படுத்துதல் |
| | சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் தொடர்பான கொள்கை சீர்திருத்தி நிலையான சூழல் பற்றிய கருத்து போன்ற முக்கிய சுற்றாடல் செயன்முறைகள் குறித்து தேசிய அளவில் பொது மக்களுக்கு அறிவூட்டுதல். |
| | இலங்கையால் கையொப்பமிடப்பட்டுள்ள பலதரப்பு சுற்றாடல் தரங்களுக்கு இணங்க இலங்கையால் நிறைவேற்றப்பட வேண்டிய சர்வதேச கடப்பாடுகள் நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துதல். |
| | சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் துறை தொடர்பான பின்தொடர் முறைகளை அமைத்து பின்தொடர்வின் மூலம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் சுற்றாடல் முகாமைத்துவத்திற்கான பொருத்தமான உபாயமார்க்கங்களைப் பயன்படுத்துதல். |
| | கொள்கைகளை நடைமுறைப்படுத்துகையில் சுற்றாடலுக்கு நேரும் பாதிப்புகள் குறித்து ஆய்வுகளை நடாத்தி, அத் தகவல்களின் பகுப்பாய்வையும் அத் தகவல்களையும் |

பொதுமக்கள் உட்பட சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அனுப்பிவைத்தல்.

சிறந்த சுற்றாடல் முகாமைத்துவத்திற்காக அரச, அரச சார்பற்ற துறைகள் மற்றும் பொது மக்களின் அர்ப்பணிப்பிற்காக ஏற்ற சூழலை உருவாக்குதல்.

2023 ஆம் ஆண்டின் போது மேற்குறித்த செயற்பணிகளை மேற்கொள்வமற்காக சுற்றாடல் அமைச்சிற்கு ரூபா 2,233 மில்லியன் தேறிய ஒதுக்கீடு பாராளுமன்றத்தால் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் இதில் ரூபா 1,796 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் படி ஆண்டின் இறுதியில் சேமிக்கப்பட்டிருந்த தொகை ரூபா 437 மில்லியன் ஆகும்.

## கணக்காய்வு அவதானிப்புகள்

### சுற்றாடல் அமைச்சு

**காலநிலை மாற்றத்தைக் குறைத்தலுக்கான செயற்பாட்டு ஒத்துழைப்புச் செயற்திட்டம்**

காலநிலை மாற்றத்திற்காக தயார் நிலைக் கொள்கைகள், உபாயமார்க்கங்கள் மற்றும் திட்டங்களைச் செயற்படுத்துவற்கு பயனாளியின் திறன் மற்றும் அமைப்பை வலுப்படுத்தும் அடிப்படை நோக்குடன் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான சர்வதேச வங்கியின் மானியமாக கிடைக்கப்பெற்றிருந்த ஐ. அ. டொலர் 1.8 மில்லியன் வெளிநாட்டு மானியத்தில் காலநிலை மாற்றத்தைக் குறைக்கும் வகையிலான செயற்பாட்டு இணைச் செயற்திட்டம் 2019 ஏப்ரல் 11 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இச் செயற்திட்ட நோக்கை எய்துவதற்காக தேசிய காலநிலை மாற்றத்திற்கான தரவுப் பரிமாற்ற வலையமைப்பு முறையொன்றை ஸ்தாபிப்பதற்காக ஆலோசனைச் சேவை ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு தனியார் நிறுவனமொன்றுடன் ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்தது. முறைமைக்கு தரவுகளை வழங்குவதற்காக வளிமண்டலவியல் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் ஆகிய காலநிலை மாற்றங்கள் தொடர்பான தரவுகளை வழங்கக்கூடிய 55 பங்குதாரர் நிறுவகங்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் குறித்த நிறுவகங்களால் வழங்கப்பட வேண்டிய தரவுகள் முறையாக இனங்காணப்பட்டு இதற்கான இணக்கப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. மேலும் இனங்காணப்பட்ட 55 நிறுவகங்களில் 08 நிறுவகங்களுடன் மாத்திரம் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப் பட்டிருந்ததுடன் அமைச்சால் தரவுகள் வழங்கப்படும் நிறுவனங்களுக்கு தரவு வலையமைப்பிற்குள் நுழைவதற்கான அனுமதி வழங்கப்பட்டிராமையும் அவதானிக்கப்பட்டது.

ஆலோசனைச் சேவைகள் பெற்றுக்கொள்வதற்காக 2024 மார்ச் 31 ஆம் திகதி வரையில் ரூபா 29.76 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் அத்திகதி வரையிலும் இம் முறைமை இயங்கும் நிலையில் இருக்கவில்லை. இதற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 3.1 மில்லியன் செயற்பாட்டு பிணையும் 2024 ஏப்ரல் 12 ஆம் திகதி காலாவதியாகும் நிலையில் காணப்பட்டது. மேலும், இம் முறைமை இயங்கும் நிலையில் இல்லாதிருந்த போதிலும் இது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படாது 2022 ஆம் 2023 ஆம் ஆண்டுகளுக்கு உரித்தாக ரூபா 1.8 மில்லியன் தொகையான பராமரிப்புச் செலவினமும் செலுத்தப்பட்டிருந்தது.

இம் முறைமைக்காக ரூபா 12.4 மில்லியன் பெறுமதி சேர் வரி அல்லாத விலைக்கு 55 மடிக் கணனிகள் 2020 திசெம்பர் 30 ஆம் திகதி செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் கொள்வனவு செய்யப்பட்டு 14 மாதங்களின் பின்னர் 55 பங்காளி நிறுவனங்களுக்கு புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்படுத்தப்படாது அவை வழங்கப்பட்டிருந்தன. கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைக்குள்ளாக்கப்பட்ட 27 பங்காளி நிறுவனங்களில் 20 பங்காளி நிறுவனங்களும் இம் மடிக்கணனியை கணனி வலையமைப்பிற்கு தரவுகளை தரவேற்றம் செய்வதற்கோ அல்லது அதற்கான தரவுகளைத் தயாரிப்பதற்கோ பயன்படுத்தியிருக்கவில்லை.

2021 நவம்பர் 19 ஆம் திகதி இடம்பெற்ற அரசாங்க கணக்குக் குழுவில் இச் செயற்திட்டத்தின் முன்னேற்றம் திருப்தியற்ற நிலையில் இன்மையால் தரவு முறைமையை நாளதுவரையாக்கும் முறைமை ஒன்று இருக்க வேண்டியதாகவும் இம் முறைமை தொடர்ந்து பின்தொடர் நடவடிக்கை எடுக்கும் தேவைப்பாடும் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் அமைச்சு அதற்காக தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**ஆரோக்கியமான நிலப்பரப்புத் திட்டம்**

ஆரோக்கியமான நிலப்பரப்பு, உணவுப் பாதுகாப்பு ஊக்குவிப்பு, நல்வாழ்வு மற்றும் ஆரோக்கியமான சுற்றுச் சூழல் முறைமைக்காக சமூக பொருளாதார ரீதியான உணர்திறன் பகுதிகளில் உள்ள விவசாய நிலப்பரப்புகளை நிர்வகிப்பது இச் செயற்திட்டத்தின் நோக்கமாகும். ஐக்கிய நாடுகளின் உலகளாவிய சுற்றுச் சூழல் வசதித்திட்டம் (ஜீஈஎப்) 2 மில்லியன் ஐ. அ. டொலர்களும் 9.05 மில்லியன் ஐ. அ. டொலர்களும் மானியமாக 11.05 மில்லியன் ஐ. அ. டொலர்கள் மானிய உதவியின் கீழ் சுற்றாடல் அமைச்சு, பல்லுயிர் சர்வதேச நிறுவனம் (Institute of Biodiversity International), மற்றும் தெற்காசிய சுற்றுச்சூழல் ஒத்துழைப்புத் திட்டம் (SACEP) ஆகிய நிறைவேற்றதிகாரத் தரப்பு நிறுவனங்களின் மூலம் இச் செயற்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

இச் செயற்திட்டத்தை முன்னோடிச் செயற்திட்டத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டு கிராமிய எல்லாங்கா குள அமைப்பு புனரமைப்பின் கீழ் பலுகஸ்வெவ பிரதேச செயலகப் பிரிவின் பெல்லன்கடவில எல்லங்கா அமைப்பிற்கு உரித்தான தும்பிகுளம குளம் புனரமைக்கப்பட்டிருந்தது.

பயிர்ச்செய்கை நடவடிக்கைகளிற்காக நீரைப் பெறும் நோக்கில் ரூபா 51.56 மில்லியன் செலவில் தும்பிகுளம குளம் புனரமைக்கப்பட்டிருந்த போதிலும் குளத்தின் வான்கதவுகள் எல்லங்காவே இற்குக் கீழுள்ள குளத்தினூடாகப் பாய்ந்தோடும் வகையில் கால்வாய்கள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததன் காரணமாக குளத்தினூடாக பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக நீரை விடுவிக்க இயலாதிருந்தது.

இவ்வாறே தும்பிகுளம குளத்தின் புனரமைப்பிற்கு உரித்தான உடன்படிக்கையின் படி 200 ஏக்கர் வயற்காணிகளை மீட்டெடுத்தல் மற்றும் சுற்றாடல் முறைமையை புனரமைத்தலும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2013 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய 1821/34 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் தும்பிகுளம குளமும் அதனை அண்டித்த 2,744 ஹெக்டேயர் பகுதியும் தும்பிகுளம பாதுகாப்பு வனாந்திரப் பிரதேசத்திற்குரியதாக பெயரிடப்பட்டிருந்தமையால் மேற்குறித்த உடன்படிக்கையில் சட்டரீதியாக எய்தப்பட இயலாத பகுதிகளும் குறிப்பிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது,

செயற்திட்டத்தின் கீழ் தும்பிகுளம குளத்தின் புனரமைப்பிற்கு உரித்தாக 2022 சனவரி 26 ஆம் திகதி பலுகஸ்வெவ பிராந்திய ஒருங்கிணைப்புக் கூட்டத்தின் கூட்டக் குறிப்பின் படி வனப் பாதுகாப்பு மற்றும் வன சீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களால் வன சீவராசிகளின் பயன்பாட்டிற்காக இக் குளம் மதகு இன்றிக் அமைக்கப்படுவதற்கு உடன்பட்டிருந்தது. எவ்வாறெனினும், ரூபா 1.5 மில்லியன் செலவில் இக் குளத்தின் மதகு நிர்மாணிக்கப்பட்டுள்ளமை 2023 ஆகஸ்ட் 14 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

2009 இன் 65 ஆம் இலக்க வன திருத்த அதிகாரச்சட்டத்தின் 7.1 (க) பிரிவின் படி ஏதேனுமோர் வீதியை அமைத்தல், இதுவரையில் அமைக்கப்பட்ட ஏதேனுமோர் வீதியை மாற்றுதல், அவ்வாறு அமைக்கப்பட்ட வீதியைப் பயன்படுத்துதல் ஆகிய செயற்பாடுகள் சரணாலயத்தில் தடைசெய்யப்பட்ட செயற்பாடுகளாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஆரோக்கியமான நிலப்பரப்புச் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 2.1 மில்லியன் செலவில் நுழைவு வீதியொன்று

அமைக்கப்பட்டிருந்ததுடன் இச் செயற்திட்டப் பகுதி தும்பிகுளம சரணாலயத்திற்கு உரித்தானமையால் அது வன அதிகாரச்சட்டத்திற்கு முரணான செயற்பாடாக அவதானிக்கப்பட்டது.

**சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

அமைச்சிற்கு உரித்தானதும் 2013 ஆம் ஆண்டின் போது மூன்றாம் தரப்பு காப்புறுதிக் காப்பீட்டை மாத்திரம் பெற்றுக்கொண்டிருந்த ஓர் வாகனம் விபத்திற்குள்ளாகி 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக திருத்த வேலைச் செலவினங்களைத் தீர்க்க இயலாது தனியார் வாகனத் திருத்துமிடத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், இவ் 10 வருட காலமாக இவ் விபத்துக் குறித்து நிதிப் பிரமாணம் 104(4) இன் கீழ் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு திருத்த வேலைச் செலவினத்தை அறவிடப்பட வேண்டிய விதம் குறித்து சரியாக தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. 2023 ஆம் ஆண்டின் போது இவ் வாகனம் ரூபா 1.8 மில்லியனிற்கு கைதவிர்க்கப் பட்டிருந்ததுடன் கைதவிர்க்கப்பட்ட தொகையில் ரூபா 1.6 மில்லியன் திருத்த வேலைகளுக்கான செலவினமாகச் செலுத்தப்பட்டு எஞ்சிய தொகை திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. இதன் படி அரசாங்கத்திற்கு ரூபா 1.6 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது.

## மத்திய சுற்றாடல் அதிகாரசபை

**சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிராமை**

தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் படி, ஏதேனுமோர் வியாபார நடவடிக்கையை ஆரம்பிக்க முன்னர் குறித்த தரத்திற்கு இணங்க அதன் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். எனினும், வடமத்திய மற்றும் மேல் மாகாண அலுவலகங்களிலும் கண்டி மற்றும் மொனறாகலை மாவட்ட அலுவலகங்களிலும் கண்காணிப்பிற்குட்படுத்தப்பட்ட பிரதேசங்களில் அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்படாது வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவரும் 272 வியாபாரங்கள் காணப்பட்டதுடன் இவற்றில் வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 1 ½ வருடங்கள் முதல் 28 வருட காலம் கடந்திருந்த வியாபாரங்களும், வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட வருடத்தை அறிய இயலாத வியாபாரங்கள் இருந்த போதிலும் அதிகாரசபையால் அவ் வியாபாரங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் உரிய நேரத்தில் எடுத்திருக்காமை அவதானிக்கப்பட்டது.

**அனுமதிப்பத்திர நிபந்தனைகளுக்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை**

2024 மே 21 ஆம் திகதிய சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிராத மாத்தளை மற்றும் தம்புல்ல பிரதேச செயலகப் பிரிவுகள் இரண்டிற்கு உரித்தான கருங்கல், டொலமைட் 10 அகழ்வுக் கைத்தொழில்கள் இருந்தன. மேலும், கழிவு நீர் நீரியல் மூலங்களுக்கு விடுவிக்கப்பட்ட 03 கைத்தொழில்களும், கழிவுப் பொருட்கள் மீள்சுழற்சி இன்றி வெளிச் சுற்றாடலுக்கு விடுவிக்கப்பட்டிருந்த 02 கைத்தொழில்களும் குறித்த தரம் மற்றும் மாதிரிகளுக்கு இணங்கும் வகையில் செயற்பட்டிராத கொழும்பு மாவட்டத்தில் 07 கைத்தொழில்களும் காணப்பட்டன. மேலும் பகுப்பாய்வு அறிக்கை, அகழ்வு அனுமதிப்பத்திரம் போன்ற முன்னரே சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் குறித்த வகையில் சமர்ப்பித்திராத 25 கைத்தொழில்கள் தொடர்பாகவும் அதிகாரசபையால் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**செல்லுபடியான காலஎல்லை மீறப்பட்டு அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்பட்டிராமை**

சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் செல்லுபடியாகும் கால எல்லை மீறப்பட்டு 03 மாதங்களுக்குள் கோரப்பட்ட அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்க வேண்டிய போதிலும் அவ்வாறு அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்பட்டிராது வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த மாத்தளை, தம்புல்லை, கொழும்பு, கண்டி, மொனறாகலை மற்றும் அநுராதபுரம் பிரதேச செயலகப் பிரிவுகளில் 396 வியாபாரங்கள் 2024 மே 20 ஆம் திகதி வரையிலும் காணப்பட்டன.

**சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்கியிராத கொடுப்பனவுகள்**

அதிகாரசபையால் திறைசேரி ஏற்பாடுகள் பெறப்படாத 2022 ஆம் ஆண்டில் ஊழியர்களின் மிகுதி விடுமுறைகளுக்காக ரூபா 34.2 மில்லியன் 2022 திசெம்பர் 21 ஆம் திகதிய PED 08/2022 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு மாறாக செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வு ஐயவினாவில் சுட்டிக்காட்டியிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் மீதப்படுத்தப்பட்ட விடுமுறைகளுக்காகவும் ரூபா 31 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

## கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை

**விளைவற்ற காசு மீதி**

2011 ஆம் ஆண்டின் போது அனர்த்தத்திற்குள்ளான கப்பலின் மூலம் கிடைக்கப்பெற்ற ரூபா 10 மில்லியன் தொகையான நட்டஈட்டுத்தொகையும் 2022 ஆம் ஆண்டின் போது பிடித்துவைக்கப்பட்ட உழைப்புகளில் இருந்து ரூபா 100 மில்லியன் தொகையும் கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு நிதியத்தின் பெயரிலான கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டு இத் தொகை திறைசேரி உண்டியல்களில்

முதலீடு செய்யப்பட்டிருந்த துடன் முதலீட்டு வட்டி சேகரிக்கப்பட்டமையால் 2023 ஆம் ஆண்டின் இறுதியில் அந் நிதியத்தின் மீதி ரூபா 119.5 மில்லியனாகக் காணப்பட்டது. எவ்வாறெனினும், கடல்சார் சுற்றாடல் மாசடைதலைத் தடுப்பதற்காக தொடர்புபடுத்தக்கூடிய பணிகள் இனங்காணப்பட்டு மேற்கொள்ளப் பட்டிராமையால் இந் நிதியம் விளைவற்றுக் காணப்பட்டது.

**நிபுணத்துவக் குழுவிற்கான கொடுப்பனவு**

MV - X Press pearl கப்பல் அனர்த்தம் தொடர்பான இழப்பை மதிப்பிடுவதற்காக நியமிக்கப்பட்ட நிபுணத்துவக் குழுவிற்குச் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவின் அளவைத் தீர்மானிப்பதற்காக 2023 சனவரி 30 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி 5 பேர் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப் பட்டிருந்தது. இக் குழுவின் 04 உத்தியோகத்தர்களால் நாளொன்றிற்கு ஐ.அ.டொலர்கள் 350 படி 584,500 ஐ.அ.டொலர்கள் செலுத்தப்படுவதற்கு, அக்குழுவிற்கு பெயரிடப்பட்டிருந்த தேசிய சம்பள ஆணைக்குழு உத்தியோகத்தரின் பரிந்துரை பெறப்படாது தீர்மானிக்கப்பட்டிருந்தது. இவ்வாறே, நிபுணத்துவக் குழுவின் அங்கத்தவர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்ட காலத்தை அளவிடுவதற்காகவும், பரிந்துரைக்கப்பட்ட அக் கட்டணங்கள் சர்வதேசக் கட்டணமாக உறுதிப்படுத்துவதற்காகவும் எந்தவித சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2023 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியின் போது நிபுணத்துவக் குழுவிற்குச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 6.5 மில்லியன் தொகையான கொடுப்பனவு கணக்கிடப்பட்ட விதம் குறித்தும் கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை.

**கப்பலில் இருந்து சிந்திய துகள்களை சேகரிப்பதற்காக ஏற்கப்பட்ட செலவினம்**

சமூகப் பங்கேற்புடன் MV - X Press Pearl கப்பலில் இருந்து சிதறிய துகள்களைச் சேகரிப்பதற்காக 2021 ஒக்டோபர் மாதம் முதல் 2023 திசெம்பர் வரை கொடுப்பனவாக ரூபா 248.2 மில்லியன் தொகையும் உபகரணங்கள், போக்குவரத்து, உணவு மற்றும் ஏனைய செலவினமாக ரூபா 553.8 மில்லியன் தொகையுமாக செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. நாளாந்தம் சேகரிக்கப்படும் மொத்த துகள்களின் அளவின் சாதாரண அளவு 2022 உடன் ஒப்பிடுகையில் கி.கி.44 முதல் 2023 ஆம் ஆண்டளவில் கி.கி.20 இற்குக் கிட்டிய அளவாக 55 சதவீதத்தால் குறைவடைந்திருந்த போதிலும் சமூகப் பங்களிப்பிற்காக ஏற்கப்பட்ட கிரயத்தில் குறைவு ரூபா 124 மில்லியனில் இருந்து ரூபா 106 மில்லியன் வரையான ரூபா 18 மில்லியன் 15 சதவீதம் மாத்திரமாகக் காணப்பட்டது.

## கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களம்

2012 முதல் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியின் போது இனங்காணப்பட்ட 2,763 அனுமதியற்ற நிர்மாணிப்புகளில் 2,445 நிர்மாணிப்புகள் அகற்றப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. இவ்வாறே, 2015 முதல் 2023 வரை உடைத்து அகற்றுவதற்காக அனுமதியற்ற நிர்மாணிப்புகளிற்காக திணைக்களத்திற்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 3.9 மில்லியன் தொகையில் 85 சதவீதமான ரூபா 3.3 மில்லியன் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

| | |
|---|---|
| **கடல் அரிப்பைத் தடுப்பதற்காக செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்களால் எதிர்பார்க்கப்பட்ட நலன் கிடைக்கப்பெற்றிராமை** | 2017 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட வெள்ள நிலையைக் கட்டுப்படுத்துவதற்கான தீர்வாக களுகங்கை முகத்துவாரம் விரிவாக்கப்பட்டதை அடுத்து களுத்துறையைச் சூழ உள்ள கரையோர மண்ணரிப்பு பாரிய சிக்கலாகியது. அக் கடலரிப்பை தடுக்கும் தீர்வாக 2017 ஆம் ஆண்டு முதல் 2023 திசெம்பர் 31 வரை ரூபா மில்லியன் 189 செலவிடப்பட்டு 19 செயற்திட்டச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அப் பிரச்சனைக்கான நிரந்தரத் தீர்வு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| **கரையோரப் பாதுகாப்பு வெகுமதி நிதியம்** | 31 பொலிஸ் நிலையங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விபரங்களின் படி, 2014 முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக நீதிமன்றங்களில் இருந்து பெறவேண்டிய ரூபா 10.1 மில்லியனைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

# காடுகள் மற்றும் வனவிலங்குகள் பிரிவு

"வனவிலங்குகள் மற்றும் வன வளங்கங்களைப் பாதுகாக்கும் நிலைபேறான தேசமொன்று" என்று நோக்காகக் கொண்டு வனவிலங்குகள் மற்றும் வனங்களைப் பாதுகாப்பதன் மூலம் உயிரியல் பல்வகைமையைப் போசனைப் படுத்தும் நோக்காகக் கொண்டு இடங்கள் மற்றும் வெளியிலுள்ள கால்நடைகளை பாதுகாப்பதற்கும் நிலைபேறான மர கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான கொள்கையொன்றை வழங்குதல், குறித்துரைத்த நிறுவனங்களை தொடர்புபடுத்துதுல் செயற்படுத்துதல் மற்றும் செயற்பாடுகளைக் கட்டியெழுப்புவதற்கான பங்களிப்பினை வழங்குதல்" என்ற செயற்பணிகளை நிறைவேற்றுவதற்காக வன விலங்குகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள மூன்று திணைக்களங்கள், மூன்று நியதிச் சட்ட நிதியங்கள் மற்றும் வெளிநாட்டு உதவி செயற்திட்டம் 2023 ஆம் ஆண்டின் போது செயற்படு நிலையில் காணப்பட்டதுடன் அமைச்சினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்ற வேண்டியிருந்தன.

**பணிப்பொறுப்புக்கள்**

அரசாங்கத்தின் மூலம் அமுல்படுத்துவதற்கு எதிர்பாக்கப்பட்ட ஏனைய தேசிய கொள்கையின் அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்ட "வன சீவராசிகள் பாதுகாப்பு மற்றும் வன பாதுகாப்பு" ஏற்படுத்துவதற்காக குறித்துரைத்த சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களுக்கு இணங்க வன சீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு விடயத்திற்குரிய கொள்கைகளை வழங்குதல்.

தேசிய வரவு செலவுத் திட்டம், அரசாங்க முதலீடு மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் கீழ் உள்ள செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்.

அமைச்சின் விடயப்பரப்புக்கு உட்பட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகள், அதற்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை வழங்குதல், அமுல்படுத்துதல் பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீடு செய்தல்.

2023 ஆம் ஆண்டின் போது மேலே குறிப்பிடப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக வனசீவராசிகள் மற்றும் வளவளங்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் 03 திணைக்களங்களுக்கு ரூபா 8,671 மில்லியன் நிதியேற்பாடு பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் அதில் ரூபா 7,775 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 896 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

## கணக்காய்வு அவதானிப்புக்கள்

### வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

**யானை மனித பிரச்சனைகள்**

2023 ஆம் ஆண்டின் போது மின்சார வேலி நிர்மாணிப்பதற்காக ரூபா 58.6 மில்லியன் மற்றும் அதன் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 14.4 மில்லியனையும் உள்ளடக்கி 2021 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலத்தில் மாத்திரம் மின்சார வேலிகளுக்காக

செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 2,355.9 மில்லியன் ஆக இருந்தது. 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் மின்சார வேலிகளின் மொத்த நீள அளவு கிலோமீற்றர் 5,389.97 ஆகும். எனினும் கடந்த 05 ஆண்டுகளில் ஏற்பட்ட யானை மரணங்கள், மனித உயிரிழப்புக்கள் மற்றும் ஆதனங்களுக்கான இழப்பீடுகளைக் கவனத்தில் கொள்ளும் போது மின்சார வேலி நிர்மாணிக்கப்பட்ட போதும் யானை மனித பிரச்சனைகளைக் குறைத்தல் இடம்பெறாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| | 2023 | 2022 | 2021 | 2020 | 2019 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| காட்டு யானைகளின் மரணம் | 488 | 439 | 375 | 327 | 407 | 2,036 |
| மனித மரணம் | 184 | 145 | 142 | 113 | 122 | 706 |
| உடலியல் ரீதியான பாதிப்புக்கள் | 239 | 179 | 58 | 75 | 145 | 696 |
| ஆதனங்களின் பாதிப்புக்கள் | 3,429 | 2,668 | 1,326 | 850 | 2,148 | 10,421 |

அட்டவணை இலக்கம் 2.24 : கடந்த 05 ஆண்டுகளில் ஏற்பட்ட யானை மரணங்கள், மனித உயிரிழப்புக்கள் மற்றும் ஆதனங்களுக்கான இழப்பீடுகள்

**யானைகள் சரணாலயங்களை பாதுகாத்தல் அல்லது பராமரித்தல்**

2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை தம்போவ புனித பூமியில் ஹெக்ரேயர் 315 ஆன குடாப்பகுதி அகற்றப்பட்டு யானைகளைப் பராமரிப்பதற்காக ரூபா 57.4 மில்லியனும், அகற்றப்பட்ட பிரதேசங்களைப் பராமரிப்பதற்காக ரூபா 5.8 மில்லியனும் செலவிடப்பட்டிருந்தது. எனினும் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கணிசமான குடாப் பிரதேசங்கள் காடு வளர்ந்திருந்தது. இதன் காரணமாக யானைகளுக்கு பாதுகாப்பாக சுற்றித்திரிவதற்கு வசயீனம் ஏற்பட்டு அவைகள் 50 கிலோமீற்றர் அளவிலான தூரப்பிரதேசங்களில் உள்ள கிராமங்களுக்குச் செல்கின்றமை அவதானிக்கப்பட்டது.

## வனப்பாதுகாப்புத் திணைக்களம்

**நிலுவை வரி வருமானம்**

நுவரெலிய சிறிய அளவிலான நீர் மின்சார உற்பத்தி கூடத்தை நடாத்திச் செல்வதற்காக தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ள நில அளவினை விட 72 பேர்ச் அதிகமாக 2016 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் இந்தக் கம்பனியால் 2019 ஆம் ஆண்டு முதல் வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்துதல் நிறுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2016 ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை 72 பேர்ச் இற்காகவும், 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை 174 பேர்ச் இற்காகவும் அறவிட

வேண்டிய ரூபா 5.4 மில்லியன் வாடகைப் பணம் (வட் வரியுடன்) அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

**நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணம்**

நுவரெலியா மாவட்ட அலுவலக அதிகாரப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட 06 தொலைத்தொடர்பு சமிக்ஞை கோபுரங்களில் வருடாந்த அனுமதிப்பத்திரம் புதுப்பிக்காமையின் காரணமாக திணைக்களத்திற்கு 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 22.8 மில்லியன் வருமானம் இழக்கப்பட்டிருந்தது. தொலைத்தொடர்பு சமிக்ஞை கோபுரங்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் நலிவாக இருந்தமை இதற்கான காரணமாக இருந்தது.

**நிலுவைக் கல்குவாரி வருமானம்**

அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் புவியியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகத்தால் ஒவ்வொரு 06 மாதங்களுக்கும் ஒரு தடவை அகழ்வு நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் அளவு நில வரைவடங்களின் பிரகாரம் கணிப்பிடப்பட்டு உரிய அரசாங்கத்தின் காணி முகாமைத்துவம் உரித்தான நிறுவனம், வெடி பொருட்கள் கட்டுப்பாட்டு அதிகார சபை மற்றும் அகழ்வாளருக்கு அறிவிக்கப்படல் வேண்டும். அவ்வாறே வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் முகாமைத்துவத்தின் கீழ் உரியதாக அந்த அறிக்கை குறித்துரைத்த காலப்பகுதியில் திணைக்களத்தால் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக அந்த பிரதேசங்களில் கல்குவாரி உரிமையாளர்களினால் எல்லையினை மிஞ்சி மேற்கொள்ளப்பட்ட அகழ்விற்காக நிலுவைக் கட்டணம் காலரீதியிலும் உரிய முறையிலும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது. அதன் பிரகாரம் பதுளை, அம்பாறை மற்றும் மொனராகலை மாவட்டங்களின் கல்குவாரி உரிமையாளர்களிடமிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவை வருமானம் முறையே ரூபா 5.2 மில்லியன் தொகை, ரூபா 34.1 மில்லியன் மற்றும் ரூபா 7.6 மில்லியனாக இருந்தது.

**காடுகளை வர்த்தமானியில் பிரசுரிக்காமை**

பாதுகாப்பான வனங்களான மொனராகலை மாவட்டத்தில் 2021 ஆம் ஆண்டின் பின்னர் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படாதிருந்த ஹெக்ரேயர் 22,892 ஆன 147 காடுகளும், அம்பாறை மாவட்டத்தில் 2019 ஆம் ஆண்டின் பின்னர் வர்த்தமானியில் இடப்படாதிருந்த ஹெக்ரேயர் 22,657.78 அளவான 64 காடுகளும் காணப்பட்டது. வனப்பாதுகாப்புத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படுகின்ற காடுகள் ஒதுக்க வனாந்திரங்களாக வர்த்தமானியில் பகிரங்கப்படுத்துதலில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக ஒதுக்க வனாந்திர பிரதேசங்களில் அனுமதியற்ற

காணிகள் பிடித்தல் அநேகமாக ஏற்பட்டிருந்தது. அதனால் அந்த பாதுகாக்கப்பட்ட வனாந்திரங்களை விடுவிப்பதாயின் காணப்படுகின்ற இயற்கையான வனவளங்களின் சதவீதம் படிப்படியாகக் குறைவடைந்தமை மற்றும் அதன் மூலம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வது தொடர்பில் பாதகமாக தாக்கம் அளிக்கக்கூடியதாக இருந்தது.

**நாற்று மேடைகளில் இடப்பட்ட கன்றுகளுக்கு இழப்பு ஏற்படுதல்**

நாற்று மேடைகளில் நடப்பட்ட கன்றுகளை பகிர்தளிக்கும் பணிகளுக்காக திட்டமிடப்பட்ட வேலைத் திட்டம் ஒன்று காணப்படாமையின் காரணமாக பல்வேறு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டு முதல் பிரதான 49 நாற்று மேடைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பல்வேறு வகையான கன்றுகள் 861,921 பாதிப்புக்கு உட்பட்டிருந்தது. தியத்தலாவ இராணுவ முகாம் மற்றும் தொடர்புடைய 42 ஏக்கர் ஆன நரியாக்கந்த பைனஸ் வன பயிர்செய்கை நிலத்தில் 2021 ஆம் ஆண்டில் நட்டப்பட்ட 160,000 கன்றுகளில் அநேகமானவையும் பாதிப்புக்கு உட்பட்டிருந்ததுடன் வலஸ்முல்ல வன அலுவலகத்திற்குரி 04 நாற்று மேடைகளில் உற்பத்தி செய்யப்பட்ட 325,500 கன்றுகளில் 210,759 கன்றுகள் பாதிப்பிற்கு உட்பட்டிருந்தது.

**ஆகக் கூடிய விளைச்சல்களைப் பெற்றுக் கொள்ளாமை**

1998 முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்திக் காலத்தை பூர்த்தி செய்திருந்த அம்பாறை மாவட்ட வன அலுவலகத்துக்குரிய 03 வனப் பயிர்ச் செய்கைகள் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் வெட்டுவதற்காக அரச மரக் கூட்டுத்தாபனத்திற்கு விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் பயிர்ச் செய்கைகளுக்கு இயற்கையான காரணம் மற்றும் மனித செயற்பாடுகளின் காரணமாக ஏற்படுகின்ற பாதிப்புக்கள் மற்றும் வனக் குற்றங்களின் காரணமாக ஆகக் கூடிய மர விளைச்சளைப் பெற்றுக்கொள்வதற்கு காணப்பட்ட சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. அவ்வாறே வனப் பயிர்ச் செய்கை நிலத்தின் மூலம் உள்நாட்டு நுகர்வு மற்றும் ஏற்றுமதிக்காக தேவையான மர உற்பத்தியை அபிவிருத்தி செய்தல் பின்னடைவுக்கு உட்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

**கெபலித்த ஒதுக்கப் பிரதேசத்தில் அனுமதியற்ற பயிரிடல்**

நீண்ட காலம் முதல் கெபலித்த ஒதுக்கப் பிரதேசத்தில் காணிகளில் அனுமதியற்ற பயிரிடலின் காரணமாக ஏக்கர் 25,000 இற்கு அண்ணளவான அளவு திணைக்கள நிருவாகத்திற்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. எல்லைத் தூண் நட்டுதல் திணைக்களத்திற்குரிய

வனாந்திரங்களின் அளவு ஒதுக்கப்படாமை, உத்தியோகத்தர்களின் வெற்றிடம், உத்தியோகத்தர்களுக்காக காணப்படுகின்ற உட்கட்டமைப்பு வசதிகள் குறைவடைந்தமை போன்றவற்றின் காரணமாக கெபலித்த ஒதுக்கப் பிரதேசத்தைப் பாதுகாப்பதற்கு திணைக்களத்திற்கு முடியாத பணியாக இருந்ததுடன் அதன் காரணமாக சேனைப் பயிர்ச் செய்கைகளுக்காக காணிகளின் கோரிக்கைகளும் உயர்வடைந்திருந்தது.

## தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம்

**மிருகக்காட்சிசாலைகள் ஆரம்பித்ததன் நோக்கம் நிறைவேற்றப்படாமை**

இலங்கைக்கு உரித்தான மற்றும் அரித்துச் செல்லும் ஆபத்துக்கு உட்படுகின்ற கால்நடைகளைப் பாதுகாக்கும் நோக்கில் பின்னவல மிருக காட்சி சாலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதில் தற்போது காணப்படுகின்ற 26 விசேட விலங்குகளில் இலங்கைக்கே உரித்தான கால்நடைகள் 03 விசேட தன்மையுடைய 10 விலங்குகள் மாத்திரம் காணப்பட்டது. எனினும் அதில் இருந்த பெண் மற்றும் ஆண் கரடிகள் இரண்டுக்கும் இடையே காணப்படுகின்ற வயது வேறுபாடு மற்றும் 05 சிறுத்தைகளில் இணக்கமின்மையின் காரணமாக குட்டிகள் இனப்பெருக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

**சுற்றாடல் பாதுகாப்பு சட்டத்திற்கு முரணாக கழிவுப் பொருட்கள் அகற்றுதல்**

பின்னவல யானைகள் சரணாலயத்திற்காக 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23(அ) மற்றும் 23(ஆ) பிரிவுகளின் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. இதனிடையே யானை சரணாலயத்தில் யானை சுத்தப்படுத்தல் அகற்றப்படுகின்ற கழிவு நீர் இயந்திர கூடம் 2020 ஒக்தோபர் 31 ஆம் திகதி முதல் செயலிழந்து காணப்பட்டதன் காரணமாக கழிவு நீர் நாள்தோறும் மாஓயாவிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

## சுற்றாடல் முறைமையை பாதுகாத்தல் மற்றும் முகாமைத்து செயற்திட்டம்

**பயனற்ற உபகரணங்கள்**

இந்த செயற்திட்டத்தின் கீழ் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது அநுராதபுரம் மற்றும் குருநாகல் மாவட்டங்களில் கிராமங்களைச் சுற்றி மற்றும் வயல் வெளிகளைச் சுற்றி மின்சார வேலி நிர்மாணிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த உபகரணங்களில் ஒரு பகுதி உரிய சங்கங்களுக்கும், கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கும் அநுராதபுரம் மற்றும் குருநாகல் உதவி பணிப்பாளர் அலுவலகத்திற்கும் விநியோகிக்கப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 80.7 மில்லியன் ஆன உபகரணங்கள் மற்றும் எனஜய்சர் வலுப்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 0.5

மில்லியன் ஆன 12V (90Am) 16 பற்றரிகள் பயன்படுத்தப்படாமல் ரிட்டிகல, மொறகொட மற்றும் மகாதேவவ வனவிலங்குகள் உப அலுவலக வளவில் பாதுகாப்பின்றி களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் 2020 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட Tension Spring 3,183 அலகுகளில் 56 அலகுகள் மாத்திரம் மின்சார வேலிகளுக்காக விநியோகிகக்கப்பட்டமையால் ரூபா 7.8 மில்லியன் பெறுமதியான 3,127 அலகுகளும், ரூபா 1.4 மில்லியன் பெறுமதியான மின்சார வேலிக்கு பாதிப்பு ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது பயன்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில் ஒலிக்கின்ற Fence voltage alarm with siren and flashlight 09 அலகுகளும் பயன்படுத்தப்படாமல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விளைவற்று மொறகொட வனசீவராசிகள் உப அலுவலகத்தில் களஞ்சியத்தில் காணப்பட்டது.

**சொத்துக்களின் இழப்பு தொடர்பான நட்டம் அறவிடப்படாமை**

ரிட்டிகல வனவிலங்குகள் அலுவலகத்தில் தற்காலிகமாக நிர்மாணிக்கப்பட்ட குத்தகையில் பாதுகாப்பின்றி களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த மின்சார வேலி நிர்மாணிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த பெறுமதி ரூபா 2.8 மில்லியன் ஆன 154 கம்பி உருளைகள் மற்றும் பெறுமதி மதிப்பிடப்படாத nut & bolt 122 எண்ணிக்கையானது 2022 ஆம் ஆண்டின் போது கள்வர்களால் எடுத்துச் செல்லப்பட்டிருந்ததுடன் அதற்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரை இனங்கண்டு நட்டத்தை அறவிடுவதற்கு 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியம்

**குறித்துரைத்த நியமம் இன்றி பொருட்கள் கொள்வனவு செய்தல்.**

2021 மார்ச் 15 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் உடவலவைப் பிரதேசத்தில் மீற்றர் 500 இற்கு அமைப்பதற்காக காட்டுயானை நடமாடுவதால் அதைத் தடுப்பதற்கான 6,000 தூண்கள் மற்றும் கிலோமீற்றர் 1,500 நீள மின்சார வேலி நிர்மாணிப்பதற்குத் தேவையான வன உபகரணங்கள் ரூபா 87.3 மில்லியன் தொகையில் 90 நாட்களில் அரச கம்பனி ஒன்றிலிருந்து பெற்றுக்கொள்வதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 13.4 மில்லியன் பெறுமதியான விடயம் மாத்திரம் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்றதுடன் அவற்றின் தரத்தை பரீட்சிக்காமல் கையேற்கப்பட்டிருந்தமையம் அவதானிக்கப்பட்டது. மேலும் வழங்கப்பட்ட பொருட்களும் களஞ்சியப்படுத்தப்பட்ட நிலையங்களில்

உடைந்து அழிவடைந்து காணப்பட்டது. குறித்துரைத்த பிரகாரம் வழங்கல்கள் மேற்கொள்ளப்படாமையினால் 2022 திசெம்பர் 30 ஆம் திகதி ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் வழங்கப்பட்டிருந்த வேலை ஆரம்ப முற்பணமாக ரூபா 8 மில்லியன் தொகை அதற்குரிய முற்பண பிணை முறியேனும் தீர்த்துக் கொள்வதற்கு நிதியம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## மிருகக்காட்சிசாலைகள் அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியம்

**பறவைகளைக் கொள்வனவு செய்தல் செயற்திட்டம்**

அம்பாந்தோட்டை சபாரிப் பூங்காவில் காட்சிப்படுத்துவதற்காக 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 66 மில்லியன் செலுத்தி 136 வெளிநாட்டுப் பறவைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்தப் பறவைகளைக் காட்சிப்படுத்துவதற்காக நிர்மாணிக்கப்பட்ட பறவைகள் அரணை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்படாததுடன் அது வரையிலும் ரூபா 18.8 மில்லியன் செலவிடப்பட்டிருந்து. இதன் காரணமாக 57 பறவைகள் காட்சிப்படுத்தப்படாமல் சவாரிப் பூங்காவில் வேறு ஒரு கூட்டில் வைக்கப்பட்டிருந்தது.

## அரச மரக் கூட்டுத்தாபனம்

**வேலைத்தளங்களுக்காக வைப்புச் செய்யப்பட்டுள்ள பிணைப்பணம்**

வேலைத் தளங்களுக்காக வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பிணையாக வைக்கப்பட்டிருந்த ரூபா 15.9 மில்லியன் தொகையில் 02 வருடங்களை விஞ்சியிருந்த ரூபா 10.2 மில்லியன் பிணைப்பணம் மீளப் பெறுவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. கையளிக்கப்பட்ட சில வேலைத் தளங்களுக்காக வனப் பாதுகாப்புத் திணைக்களத்திலிருந்து விளக்கம் சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக வேலைகள் பூரத்தி செய்யப்பட்டுள்ள வேலைத்தளங்களின் பிணைப்பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் முடியாதிருந்தது.

**வனக் குற்ற மரங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்காமை**

2018 ஒக்தோபர் 10 ஆம் திகதிய இலக்கம் 422 என்ற நிதிச் சேவை ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கையின் வழிகாட்டலின் பிரகாரம் வன குற்ற மரங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எனினும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக வனக்

குற்ற மரங்கள் அழிவடைதல், மர முகாமைத்துவம் மற்றும் களஞ்சிய வசதிகள் முகாமைத்துவம் செய்து கொள்ளல் வசதியீனம் போன்ற சிக்கல்களுக்கு கூட்டுத்தாபனம் முகம் கொடுத்திருந்ததுடன் கண்டிப் பிரதேசத்திற்கு உரியதாக மாத்திரம் மரக்குற்றிகளின் கன டெசி மீற்றர் 159.90 மற்றும் கிழிக்கப்பட்ட மர கன டெசி மீற்றர் 30.93 உக்கியிருந்தமையும் களஞ்சிய இட வசதிகள் போதாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

**நன்கொடை மரங்களை அகற்றுதல்**

நன்கொடையாகக் கிடைக்கின்ற மரங்களை அகற்றுவதற்காக உரிய திட்ட முறைமையொன்று ஸ்தாபிக்காமையின் காரணமாக 2023 ஆம் ஆண்டின் போது அகற்றப்பட்ட 1,157 இற்காக ரூபா 41.9 மில்லியன் தனியார் ஒப்பந்தகாரருக்கு செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. மேலும் ஒப்பந்தக் கிரயம் ரூபா 100,000 தொகையை அதிக பணிகள் மற்றும் ரூபா 15,000 இற்கு மேற்பட்ட நடத்ததைப் பெறுகின்ற மரங்களை வெட்டுவதற்காக பிரதான அலுவலகத்திலிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு கணிசமாக காலம் எடுத்தமையால் மிகவும் ஆபத்துடன் இல்லாமல் அகற்ற வேண்டிய மரங்கள் அகற்றுதல் தாமதமடைந்திருந்தது.

**குறைவாகப் பயன்படுத்தப்பட்ட பொருட்கள்**

தேவையினை குறித்துரைத்தவாறு இனங்காணாமல் 2023 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனத்தால் கொள்வனவு செய்யப்பட்டு 13 பிரதேச அலுவலகங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த ரூபா 35.8 மில்லியன் பெறுமதியான வலைகள் (chain saw) 100 இல் 75 இற்கு மேற்பட்ட அளவு செயற்திறனாக பயன்படுத்துவதற்காக முறையான வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்காமையின் காரணமாக குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**கடனுக்கு விற்பனை செய்வதற்காக அறவிட வேண்டி பணம்**

கடன் விற்பனையின் அடிப்படையில் வழங்கப்பட்ட மரங்கள் மற்றும் மரம் சார்ந்த தளபாட பொருட்களுக்காக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 966 மில்லியன் ஆக இருந்ததுடன் அதில் 01 வருடம் முதல் 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தை மிஞ்சிய கடன் மீதி ரூபா 240 மில்லியன் ஆகும்.

# நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு


ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில் நீர் மற்றும் சுகாதாரம் தொடர்பான 06 நிலையான அபிவிருத்தி நோக்கங்களுக்கு அமைய அனைவருக்கும் நீர் மற்றும் சுகாதார சேவையினைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் நிலையான முகாமைத்துவத்தினை உறுதிப்படுத்துதல் என்பன எதிர்பார்க்கப்பட்டுள்ளது. மேலே கூறப்பட்ட நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு நாட்டில் மொத்த நீர் வழங்கல் தொடர்பிலான அரசாங்கத்தின் கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுதல், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட் கட்டமைப்பு வசதிகள் அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள சமூக நீர் வழங்கல் திணைக்களம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, நீர் வளங்கள் சபை, நீர் வழங்கல் மற்றும் சுகாதார சேவையினை மேம்படுத்தும் செயற்திட்டம் உள்ளிட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் உதவியின் அடிப்படையில் செயல்படுத்தப்படும் செயல்திட்டங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதார சேவை எனும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ள நீர் வழங்கல் அமைச்சினால் சகல மக்களுக்கும் பாதுகாப்பான மற்றும் போதுமானளவு குடிநீர் வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தேவையான நுழைவினை உறுதிப்படுத்துவதையும், அனைவருக்கும் போதியளவு மற்றும் நியாயமான சுகாதார சேவையினை உறுதிப்படுத்துவதையும் முக்கிய நோக்கமாக நிறைவேற்றிக் கொள்வதற்காகக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடமைப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டியதாக உள்ளது.

**கடமைப் பொறுப்புகள்**

குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார விடயத்துக்கு உரிய கொள்கையினைத் தயாரித்தல், தேசிய வரவு செலவு ஒதுக்கீட்டின் கீழ் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.


அமைச்சின் கீழ் காணப்படும் நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகள் தொடர்பான கொள்கை வேலைத் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களைத் தயாரித்தல், நடைமுறைப்படுத்துதல், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு.

நாட்டில் பாதுகாப்பான நீர் வழங்கல் அளவு தொடர்பான தீர்மானமான மற்றும் சரியான புள்ளி விபரவியல் தரவு அறிக்கை இல்லாததுடன் 2023 ஆம் ஆண்டு இறுதி வரையில் நாட்டில் குழாய் நீர் வழங்கல் மூலம் உள்ளடக்கப்படும் தொகை மொத்த சனத் தொகையில் 61.6 சதவீதமாக உள்ளது.



அட்டவணை இலக்கம் 2.37: நாட்டில் குழாய் குடிநீர் வழங்கல் (2016 தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரையில்)

ஆதாரம் - தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை




அட்டவணை இலக்கம் 2.38: குடிநீர் வழங்குவதற்குத் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு சபையின் மற்றும் சமூக அமைப்புக்கள், மாகாண நிர்வாக நிறுவனங்கள் மற்றும் வேறு பிரிவுகளின் பங்களிப்பு

ஆதாரம் - தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை நாட்டில் குடிநீரை வழங்குவதில் முன்னணியான கடமைப் பொறுப்பினை நிறைவேற்றுவதுடன் 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2023 ஆம் ஆண்டில் 1.5 சதவீத வளர்ச்சியுடன் நாட்டின் மொத்த குடிநீர் வழங்கலில் 48.1 சதவீதமளவு சபையினால் உள்ளடக்கப்பட்டுள்ளது. எவ்வாறு இருப்பினும், 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2023 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த குடிநீர் வழங்கல் 1.4 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் சமூக அமைப்புகள் மூலம் மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்களில் இருந்து கிடைத்துள்ள பங்களிப்பு 0.1 சதவீதமளவில் குறைவடைந்து உள்ளது.

## நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட் கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு - நீர் வழங்கல் பிரிவு

2023 ஆம் ஆண்டின் வருடாந்த ஒதுக்கீட்டின் கீழ் நீர் வழங்கல் அமைச்சுக்கு ரூபா. 74,520 மில்லியன் வருடாந்த ஒதுக்கீடு கிடைத்திருந்ததுடன் ரூபா. 47,109 மில்லியன் அமைச்சு செயல்படுத்தும் அபிவிருத்தி மற்றும் ஏனைய நிர்வாக நடவடிக்கைகளுக்குாகச் செலவிடப்பட்டிருந்தது.

## கணக்காய்வு அவதானிப்புகள்

**மணிக்கடவர மற்றும் மகபல்லேகம சமூக நீர் செயற்திட்டம்**

கிராமப்புற நீர் வழங்கல் மற்றும் சுகாதார சேவைகளை மேம்படுத்தும் வேலைத் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் மணிக்கடவர மற்றும் மகபல்லேகம சமூக நீர் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காணி மண் சரிவிற்கு உட்பட்டிருந்ததுடன் கணக்காய்வு தினமான 2024 மார்ச் வரையிலும் செயற்திட்டம் நிறுத்தப்பட்டிருந்தது. 2020 ஓகஸ்ட் மாதம் தேசிய கட்டட ஆய்வு அமைப்பின் நிலப் பகுப்பாய்வு அறிக்கைக்கு அமைய குறித்த நிலமானது நிர்மாண நடவடிக்கைகளுக்குப் பொருத்தமற்றது எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் வழங்கப்பட்டிருந்த 07 பரிந்துரைகளில் 02 ஆவது பரிந்துரையை நடைமுறைப்படுத்தாது செயற்திட்டத்தம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் நிறுத்தப்பட்ட சந்தர்ப்பம் வரையில் செயற்திட்டத்திற்காக அரச நிதி ரூபா. 32.86 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் அந்த மொத்தத் தொகையும் பயனற்ற மற்றும் பொருளாதாரமற்ற செலவாகி உள்ளது.

**துறைமுகத் தாமதக் கட்டணம் செலுத்துதல்**

அனைவருக்கும் குடிநீர் வழங்கும் நோக்கில் 2021 ஆம் ஆண்டில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் ஆரம்பிக்கப்பட்டிருந்த “அனைவருக்கும் நீர்” வேலைத் திட்டத்திற்காக 2022 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட குழாய்கள் மற்றும் உதிரிப் பாகங்களைக் கொண்ட 122 கொள்கலன்கள் துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்படாது ஒரு வருடத்திற்கும் அதிகமான காலம் கடந்திருந்ததனால் 117 கொள்கலன்களுக்காக Colombo International Container Terminal (CICT) இற்கும் மற்றும் 05 கொள்கலன்களுக்காக இலங்கை துறைமுகங்கள் அதிகார சபைக்கும் தாமதக் கட்டணமாக ரூபா. 945.08 மில்லியன் 2023 ஆம் ஆண்டினுள் பயனற்று செலுத்தப்பட்டிருந்தது.

## தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்

தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்திற்கு 2023 ஆம் ஆண்டில் வரவு செலவு ஒதுக்கீட்டின் கீழ் ரூபா. 1,959.6 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா. 896.38 மில்லியன் அதாவது 45.73 சதவீதம் இந்த்த துறைக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## கணக்காய்வு அவதானிப்புகள்

**ஒதுக்கீடுகள்**

**பயன்படுத்தப்பட்டிருக்காமை** வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு மற்றும் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட் கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சினால் கிராமப்புற நீர் செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக 2023 ஆம் ஆண்டினுள் வழங்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா. 389 மில்லியனான ஒதுக்கீடுகளில் இருந்து ரூபா. 216 மில்லியன் அதாவது 56 சதவீதம் திணைக்களத்தினால் ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்த பணிகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

ஐக்கிய நாடுகளின் சர்வதேச குழந்தைகள் அவசர நிதியம் (UNICEF) மூலம் நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காகக் கிடைத்திருந்த வெளிநாட்டு மானியங்களின் கீழ் 66 சதவீதம் அதாவது ரூபா. 6.56 மில்லியன் குறித்த செயல்களுக்காகப் பயன்படுத்தப்படாது மீதியாகக் காணப்பட்டது. மானியமாக வருடாந்தம் கிடைக்கும் இந்தத் தொகையினை உற்பத்தித் திறனாகப் பயன்படுத்தி பயன் பெறும் மக்களுக்கு நிவாரணம் வழங்குதல் தொடர்ந்தும் திணைக்களத்தினால் புறக்கணிக்கப்பட்டு இருந்ததுடன் அதற்குரியதாக முன்னைய ஆண்டில் மீதமாக இருந்த நிதி ரூபா. 2.32 மில்லியனாகக் காணப்பட்டது.

**மாத்தளை மாவட்டத்தின் நீர் செயற்திட்டம்**

மதிப்பீட்டு வருமானம் மொத்தமாக ரூபா.47.90 மில்லியனான மாத்தளை மாவட்டத்தின் 05 நீர் செயற்திட்டங்கள் மூலம் 970 குடும்பங்களுக்கு நீரை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் உண்மையாக நீர் வழங்கல் 377 குடும்பங்களுக்கு மட்டுமே பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் அந்த நீரும் சுத்தமான குடிநீர் என உறுதிப்படுத்தும் அறிக்கை காணப்படவில்லை.

**குருணாகல் மாவட்டத்தின் நீர் செயற்திட்டம்**

2021 ஆம் ஆண்டின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா. 77.68 மில்லியனான 09 சமூக நீர் செயற்திட்டங்களை குருணாகல் மாவட்டத்தில் நிர்மாணிப்பதற்கு தனியார் நிறுவனத்துடன் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அந்த 9 ஒப்பந்தங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிகள் மொத்தமாக ரூபா. 51.22 மில்லியனான 6 ஒப்பந்தங்களின் நிர்மாணிப்பு கைவிடப்பட்டிருந்ததுடன் பரஸ்பர இணக்கப்பாட்டின் அடிப்படையில் ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டிருந்தது. அந்த ஒப்பந்தங்களுக்காகச் செலவிடப்பட்டிருந்த மொத்தம் ரூபா. 38.31 மில்லியனான தொகை பயனற்று இருந்தது.

குருணாகல் மாவட்டத்தினுள் 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட 19 சமூக நீர் செயற்திட்டங்கள் பம்பி நிலையங்கள், கிணறுகள், நீர்த் தாங்கிகள், நீர்க் கோபுரங்கள் என்பவற்றின் நிர்மாணம் முடிவடையாமல் இருந்ததனால் மற்றும் நீர் செயற்திட்டத்திற்குத் தேவையான நீர் பம்பிகள் மற்றும் ஏனைய உதிரிப் பாகங்கள் பெற்றுக் கொடுக்கப்படாத காரணத்தினால் நிர்மாண நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டு பயனாளி மக்களுக்கு குடிநீரை வழங்குவதற்கு முடியாது இருந்ததுடன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அந்த செயற்திட்டங்களில் 14 செயற்திட்டங்களுக்காக ரூபா. 105.67 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதே போன்று புத்தளம், திருகோணமலை, மாத்தளை, மட்டக்களப்பு மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் 2021 ஆம் ஆண்டினுள் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்ட 11 சமூக நீர் செயற்திட்டங்கள் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் அதுவரையில் அந்த செயற்திட்டங்களுக்காகத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா. 18.64 மில்லியன் தொகையும் பயனற்று காணப்பட்டது .

**நிதி கிடைத்திருந்த போதிலும் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்காத செயற்திட்டங்கள்**

வவுனியா தெற்கு, அரவந்துலாவ நீர் வழங்கல் செயற்திட்டத்தின் முதலாவது கட்டத்திற்கு மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மகாஹீல்ல பெரக்கும் நீர் வழங்கல் யோசனை முறைமையை நிர்மாணிப்பதற்கு முறையே வவுனியா மாவட்ட செயலாளர் அலுவலகம் மற்றும் அம்பாந்தோட்டை மாகாண விவசாய அமைச்சு என்பவற்றினால் 2020 ஆம் ஆண்டில் ரூபா. 7.25 மில்லியன் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த நிதி கிடைத்து சுமார் 03 வருட காலம் கடந்திருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அந்த செயற்திட்டங்களின் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் செயற்திட்டத்திற்கு கிடைத்திருந்த தொகையில் ரூபா. 5.56 மில்லியன் தொகை பயன்படுத்தப்படாது பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

**நனோ சுத்திகரிப்பு இயந்திரங்களைத் தாபித்தல்**

அநுராதபுரம் மாவட்டத்தினுள் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டினுள் 08 சமூக நீர் செயற்திட்டங்களுக்கு ஒன்று ரூபா. 2.43 மில்லியன் வீதமான 08 நானோ சுத்திகரிப்பு இயந்திரங்கள் ரூபா. 19.44 பில்லியன் செலவில் தாபிப்பதற்கு திணைக்களத்தினால் திட்டமிடப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரர்களை தேர்வு செய்யும் போது நிதி மற்றும் செயல் சாத்தியக்கூறு தொடர்பில் கவனத்தில் கொள்ளாது அனைத்து ஒப்பந்தங்களும் ஒரு தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்க பட்டதனால் வேலைகளைப் பூர்த்தி செய்யாது இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. அதற்கு அமைய செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட மொத்தம் ரூபா. 6.56 மில்லியன் முழு செலவும் பயனற்றிருந்தது.

**நிறைவு செய்யப்படாத நிர்மாணிப்பு மற்றும் பொருத்துதல்களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டமை**

2021 ஆம் ஆண்டினுள் நிர்மாணிப்பு ஆரம்பிக்கப்பட்ட இரத்தினபுரி மாவட்டத்தின் 05 நீர் செயற்திட்டங்களுக்கு நிறைவு செய்யப்படாத வேலைகளுக்காக ரூபா. 1.36 மில்லியன் மற்றும் மாத்தளை மாவட்டத்தில் ஓப்பல்லகல மென்சித் செயற்திட்டத்தின் நிறைவு செய்யப்படாத நிர்மாணிப்பு மற்றும் பொருத்துதல்களுக்காக ரூபா. 1.15 மில்லியன் பரீட்சிப்பு செய்யப்படாது செலுத்தப்பட்டு அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

**நீர் பரீட்சிப்பு மேற்கொள்ளுதல்**

திணைக்களத்தினை ஆரம்பிப்பதற்கு உரிய 2014 மார்ச் 13 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 17/2024 கொண்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைய சுத்தமான குடிநீரை வழங்குதல் திணைக்களத்தின் அடிப்படைக் கடமை என்பதால் நீர் செயற்திட்டங்களில் ஒரு வருடத்திற்கு 2 நீர் பரீட்சிப்புகளை மேற்கொள்ள வேண்டும் என சமூக அமைப்புகளுக்கு திணைக்களத்தின் மூலம் அறிவுரை வழங்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நீர் பரீட்சிப்பு மேற்கொள்ளப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மேலும் நீர் நிலைமையை பரீட்சித்தல் மூலம் குடிப்பதற்கு தகுதியற்றது என

அறிக்கையிடப்பட்ட நீரை ஒழுங்கான தரத்திற்கு அமைய தயாரிப்பதற்கு முறையான வேலை திட்டம் திணைக்களத்திடம் காணப்படவில்லை.

## தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை

இலங்கையில் பாதுகாப்பான குடி நீரை வழங்குதல் மற்றும் சுகாதாரத்தினை வழங்குவதற்கான வசதிகளை வழங்கும் பிரதான நிறுவனமான தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு 2020 - 2025 ஆம் ஆண்டுகளுக்காக அனைவருக்கும் நீர் செயற்திட்டம் மற்றும் பின்னர் கொள்ளளவினை மேம்படுத்துதல் மற்றும் விரிவுபடுத்தல் செயற்திட்டத்தின் கீழ் வழங்குவதற்கு எதிர்பார்த்திருந்த புதிய நீர் இணைப்பு எண்ணிக்கையையும் உள்ளடக்கப்பட்டு தயாரிக்கப்பட்டிருந்த இணைந்த திட்டத்தில் இலக்குகளை எட்டுவது பின்வருமாறு ஆகும்.

| செயலாற்றுகை சுட்டி | அலகு | 2023 | |
|---|---|---|---|
| | | இலக்கு | எட்டப்பட்ட |
| பாதுகாப்பான குடிநீர் பாதுகாப்பு | சனத்தொகையின் % | - | 97.3 |
| பாதுகாப்பான குழாய் நீர் பாதுகாப்பு | சனத்தொகையின் % | 59.8 | 48.1 |
| புதிய நீர் வழங்கல் இணைப்பு | எண்ணிக்கை | 160,000 | 115,509 |
| பாதுகாப்பான குழாய் கழிவு நீர் வசதிகள் | சனத்தொகையின் % | 2.1 | 2.07 |
| வருமானம் கிடைக்காத நீர் வழங்கல் | | | |
| கொழும்பு நகரம் | சுத்திகரிக்கப்பட்ட நீரின் % | 19 | 19.25 |
| நாடு முழுவதும் | சுத்திகரிக்கப்பட்ட நீரின் % | 23.91 | 25.32 |

அட்டவணை இலக்கம் 2.25 : செயலாற்றல் குறிகாட்டிகள் அடைந்துகொள்ளப்படாமை

## கணக்காய்வு அவதானிப்புகள்

**சூரிய வலு ஒழுங்கமைப்புப் பெறுகை**

கணிசமான முறையில் பதில் அளித்த ஏலதாரர்கள் இல்லாமை பிரதான விலகலானதன் அடிப்படையில் மீளவும் விலைமனு கோருமாறு தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினால் அறிக்கை இடப்பட்ட இலக்கம் DGM/M&E/SOLAR/2021/01 கொண்ட பெறுகையை மீள் மதிப்பீட்டுக்கு உட்படுத்துமாறு பெறுகைக் குழுவினால் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவுக்கு (TEC) கட்டளை இடப்பட்டிருந்தது. எவ்வாறு இருப்பினும், பெறுமதி ரூபா. 73.07 மில்லியனாக இருந்த இந்த சூரிய வலு ஒழுங்கமைப்பு பெறுகைக்கு உரிய ஒப்பந்தத்தினை மீள் மதிப்பீட்டின் பின்னர் வழங்குவதற்கு சபையின் தலைவர் தலைப்பட்ட பெறுகை குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அந்த ஒப்பந்தம் வழங்கப்பட்ட நிறுவனத்தின் பங்குகளின் எண்பது சதவீத உரிமைத்துவம் தலைவரின் ஒரு சகோதரருக்கும் மற்றும் அந்த சகோதரரின் பிள்ளைகளுக்கும் உரித்துடையதாக இருந்ததுடன் 1974 இன் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை சட்டத்தின் 05 (04) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைய தலைவர் இந்த ஒப்பந்தம் தொடர்பில் இருக்கும் மறைமுக நாட்டத்தினை பணிப்பாளர் சபைக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**பணிப்பாளர் சபையின் சுயாதீனத்துவம் தொடர்பான சிக்கல்**

மனித வளத்தினை அபிவிருத்தி செய்யும் இலங்கை தேசிய சபையினால் வழங்கப்பட்டுள்ள அரச வணிகங்களின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையின் நல்லாழுகை கையேட்டின் 4.4.1 ஆம் பந்திக்கு அமைய பணிப்பாளர்கள் சபையிடம் இருந்து சுதந்திரமாக இருக்க வேண்டிய போதிலும், 2023 செப்டம்பர் மாதம் ஓய்வு பெற்ற அது வரையில் சபையில் பொது முகாமையாளராக சேவையாற்றிய உத்தியோகத்தர் 2023 ஒக்டோபர் தொடக்கம் பணிப்பாளர் சபை அங்கத்தவராக நியமிக்கப்பட்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிலும் அங்கத்தவராக நியமிக்கப்பட்டிருந்தார். மாதிரிக் கணக்காய்வு பரீட்சிப்புகளின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்த அந்த உத்தியோகத்தர் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடலின் போது அந்த குழுவின் சுதந்திரத் தன்மைக்கு தாக்கத்தினை ஏற்படுத்தி உள்ளது என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**வாகன விபத்துக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்காமை**

சபையின் பொது முகாமையாளருக்கு ஒதுக்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ வாகனம் 2023 ஏப்ரல் 12 ஆம் திகதி விபத்துக்கு உட்பட்டிருந்ததுடன் அதற்குரிய மதிப்பீடு செய்யப்பட்ட நட்டம் ரூபா. 13 மில்லியனாக இருந்தது. விபத்து ஓட்டுனரின் புறக்கணிப்பு மற்றும் கவனக்குறைவு காரணமாக ஏற்பட்டுள்ளது என நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது எனினும் சபையினால் நிதிப் பிரமாணம் 104 (3,4) இன் பிரகாரம் ஆரம்ப மற்றும் முறையான விசாரணை மேற்கொள்ளப்பட்டு பொறுப்பு கூற வேண்டியவர்கள் முடிவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலே கூறப்பட்ட நட்டச் சேதம் தொடர்பில் அமைச்சின் செயலாளர் மற்றும் அரச நிதித் திணைக்களம் தெளிவுபடுத்தப்பட்டிருக்காததுடன் தேவையான ஆவணங்கள் குறித்த வகையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்காத காரணத்தால் மேலே கூறப்பட்ட நட்டத்தினை காப்புறுதி மூலம் ஈடு செய்வதற்கும் முடியாது இருந்தது.

**சபை உத்தியோகத்தர்களை அமைச்சிக்கு விடுவித்தல்**

வரிசை அமைச்சுக்கு விடுவிக்கப்பட்ட பதினைந்து உத்தியோகத்தர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவாக 2023 ஆம் ஆண்டினுள் ரூபா. 24.34 மில்லியன் தொகையும் உள்ளடங்கலாக 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு இறுதி வரையில் நிரல் அமைச்சிடமிருந்து ரூபா. 263.33 மில்லியன் மீள் நிரப்பல் செய்யப்பட வேண்டி உள்ளது. இதில் ஊழியர்களில் நான்கு பேர் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணியினரை விஞ்சி இருந்த போதிலும் அமைச்சு அலுவலகத்தில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மேலும் 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு இறுதி வரையில் ஜனாதிபதி அலுவலகத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்த ஊழியர்களுக்காக மொத்தம் ரூபா. 5.04 மில்லியன் தொகை சபைக்கு அறவிடப்பட வேண்டி இருந்தது. இதற்கு மேலதிகமாக பிரதமர் அலுவலகத்திற்கு மேலும் சபை ஊழியர் ஒருவர் சம்பளம் செலுத்தப்படாது விடுவிக்கப்பட்டிருந்தார்.

**செயற்திட்ட நிதி முறையற்ற பயன்பாடு**

கண்டி நகர கழிவு நீர் செயற்திட்டத்தின் செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான ஒதுக்கீட்டினைப் பயன்படுத்தி செயற்திட்டத்தின் செயல்பாட்டு நடவடிக்கைகளுக்கு எதுவிதமான பங்களிப்பும் இல்லாத சொகுசு விளையாட்டுப் பயன்பாட்டிற்கான வாகனம் ஒன்று ரூபா. 39.2 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. CBG - 7386 இலக்கம் கொண்ட இந்த வாகனம் செயற்திட்ட வளாகத்திற்கு கொண்டு வரப்படாது இறக்குமதி செய்த 2019 ஆம் ஆண்டு தொடக்கம் நீர் வழங்கல் அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டு அது அமைச்சரின் ஒருங்கிணைப்பு செயலாளரின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டிருந்தது. 2023 ஜனவரி 19 ஆம் திகதி தொடக்கம் அமைச்சர் விலகியதன் பின்னர் அந்த வாகனம் முறையற்ற வகையில் வேறு அமைச்சுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டதுடன் 2024 மே 14 ஆம் திகதி வரையில் அந்த வாகனம் அமைச்சுக்கு அல்லது உரிய செயற்திட்ட நடவடிக்கைகளுக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

**வாகனங்களின் முறையற்ற பயன்பாடு**

2015 மே 25 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் PED i/ 2015 கொண்ட அரச வணிக சுற்றறிக்கையில் 2 ஆம் பந்திக்கு அமைய சபையின் தலைவர் மற்றும் உப தலைவருக்கு கடமை மற்றும் பிரத்தியேக பாவனைக்கு வெவ்வேறாக ஒரு உத்தியோகபூர்வ வாகனம் வீதம் ஒதுக்கப்பட வேண்டிய போதிலும் 2022 ஆம் ஆண்டு மற்றும் 2023 ஆம் ஆண்டுக்கு 2 உத்தியோகபூர்வ வாகனங்கள் வீதம் தலைவர் மற்றும் உப தலைவருக்கு இணைக்கப்பட்டு இருந்தது. 2022 ஜனவரி 14 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 01/2015 (ii ) கொண்ட அரச வணிக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் தலைவர் மற்றும் உப தலைவருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள எரிபொருள் வரையறை மாதாந்தம் 145 லிட்டர் வீதமான போதிலும் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் தலைவர் மற்றும் உப தலைவரினால் முறையே எல்லையினை விஞ்சி பயன்படுத்தப்பட்டிருந்த எரிபொருள் 5,806 லிட்டருக்காக ரூபா. 1,945,159 மற்றும் 6,393 லிட்டருக்காக ரூபா. 2,290,662 தொகையும் முறையான அனுமதியின்றி பெற்றுக் கொள்ளப்பட்டு இருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

2022 - 2023 ஆம் காலப் பகுதியினுள் சபையில் உப தலைவருக்கு வழங்கப்பட்டிருந்த PK - 3575 இலக்கம் கொண்ட கெப் வண்டி சபையின் கடமைகளுக்குப் புறம்பாக வேறு நபர்களின் பாவனைக்காக 07 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்தது என அந்த வாகனத்தின் நாளாந்த ஓட்ட அட்டவணைக்கு அமைய அவதானிக்கப்பட்டதுடன் அதன் போது 13,698 கிலோ மீட்டர் அந்த வெளி நபர்களினால் ஓட்டப்பட்டிருந்தது என்பதும் அவதானிக்கப்பட்டது.

இருக்கும் அரச வணிக சுற்றறிக்கையின் தீர்மானங்களுக்கு முரணாக பணம் அறவிடப்படும் அடிப்படையில் சபையின் வாகனங்கள் அலுவலக நேரத்தின் பின்னர் மற்றும் விடுமுறை தினங்களில் தனிப்பட்

பாவனைக்காக அனுமதியினை வழங்கி சபையினால் உள்ளகச் சுற்றறிக்கை வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய 1 கிலோ மீட்டருக்கு ரூபா.2.50, ரூபா.7.50, ரூபா.15 வீதம் கொடுப்பனவு செய்யும் அடிப்படையில் உத்தியோகத்தர்கள் சபையின் வாகனத்தினை தனிப்பட்ட நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தி இருந்ததுடன் 2023 ஜனவரி தொடக்கம் ஜூலை வரையில் 13 உத்தியோகத்தர்களைக் கொண்ட மாதிரி ஒன்றினைப் பரீட்சிப்பு செய்யும் போது தனிப்பட்ட பாவனைக்காக 12,009 லிட்டர் எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்தது என்பதும் வாகன பராமரிப்புக்காக செலவிடப்படும் ஏனைய செலவுகள் தவிர எரிபொருள் செலவுக்காக மட்டும் சபையினால் ரூபா.3,929,918 தொகை செலவிடப்பட்டிருந்தது என்பதும் அவதானிக்கப்பட்டது.

**உலக நீர் தின மாநாடு**

2022 ஆம் ஆண்டில் உலக நீர் தினத்துடன் இணைந்ததாக மாநாடு ஒன்றினை நடாத்தியிருந்ததுடன் அதற்கு செயற்திட்ட நிதியங்களில் இருந்து ரூபா. 18.15 மில்லியன் உள்ளடங்களாக ரூபா.23.44 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இந்த நடவடிக்கைகளை ஒழுங்கமைப்பதற்கு Event Management நிறுவனம் ஒன்றினை ஈடுபடுத்தி இருந்ததுடன் அதற்காக ரூபா. 18.159 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. நிறுவனம் ஒன்றினைத் தெரிவு செய்வதற்கு உரிய பணிப்பாளர் சபையின் அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் விலை மனு கோரல் அனுப்பப்பட்டிருந்ததுடன் பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.2.2 பந்திக்கு அமைய விலை மனு கோரல் வெளிப்படுத்தப்பட்டு விலை மனு சமர்ப்பிப்பதற்கு 21 நாட்கள் காலத்தினை வழங்கி இருக்க வேண்டிய போதிலும் அதற்காக 10 நாட்கள் மட்டுமே வழங்கப்பட்டிருந்தது.

**நில்வள உப்பு தடையில் தகடுகளை (sheet pile) அகற்றுதல்**

மாத்தறை நில்வள கங்கை நீர் நிலையில் இருந்து பெற்றுக் கொள்ளப்படும் நீரில் உப்பு கலப்பதை தடுப்பதற்காக 2023 ஆம் ஆண்டில் நிலவள கங்கைக்குக் குறுக்காக உப்புத் தடை ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில் ஏற்பட்டிருந்த வெள்ள நிலைமை காரணமாக விவசாயிகளிடமிருந்தும் மற்றும் பிரதேசவாசிகளிடமிருந்தும் ஏற்பட்ட தாக்கம் காரணமாக ரூபா. 7.8 மில்லியன் செலவில் அந்த **sheet pile** அகற்றப்பட்டிருந்தது. நில்வள உப்புத் தடை வளர்ச்சி அடைந்ததனால் தாக்கம் தொடர்பாக செய்யப்பட்ட ஆய்வின் அடிப்படையில் லங்கா ஹைட்ரோலிக் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட அறிக்கையின் மூலம் இந்த நிர்மாணத்தின் நோக்கத்தினை அடைவதற்கு **sheet pile** மீண்டும் தாபிக்கப்பட வேண்டும் என அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளதுடன் சுற்றாடல் அதிகார சபை குழுவினால் வழங்கப்பட்ட அறிக்கையிலும் மாத்தறை மாவட்டம் நீரில் மூழ்குவதற்கு உப்பு தடை நிர்மாணித்தல் மற்றும் வேறு காரணங்கள் தாக்கத்தினை ஏற்படுத்தி உள்ளது என்பது அழுத்தமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**Sheet pile** அகற்றப்பட்டதன் பின்னர் சபையின் நிலைமை பரீட்சிப்பு அறிக்கைக்கு அமைய சுத்திகரிப்பு செய்வதற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட நீரினுள் உப்பு காணப்படுகின்றது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதனால், தகடுகளைத் தாபித்தல் மற்றும் அகற்றுதல் செலவினைப் போன்றே உப்புத் தடை நிர்மாணிக்கும் மொத்த செலவான ரூபா. 2,482 மில்லியனளவான

செலவு பொருளாதாரமற்ற செலவாகி உள்ளது. மேலும் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியிலும் நில்வள உப்புத் தடை காரணமாக நீரில் மூழ்கும் சேதத்திற்கு உட்பட்ட விவசாய நிலங்களுக்கான நட்ட ஈடு செலுத்துதலைத் தீர்மானிப்பதற்கு மாத்தறை மாவட்ட செயலாளரினால் நியமிக்கப்பட்ட குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட நட்ட ஈட்டு தொகையின் பெறுமதி ரூபா. 1,208.4 மில்லியன் ஆகும்.

**கடன்பட்டோர் மீதியினை அறவிடுதல்**

ரூபா. 2,344.78 மில்லியனான வியாபாரக் கடன்பட்டோர், புதிய இணைப்பு கடன்பட்டோர், கழிவு நீர் கடன்பட்டோர் மற்றும் ஏனைய கடன்பட்டோர் இரண்டு வருடங்களுக்கு அதிக காலம் தொட்டு அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் பாராளுமன்ற உறுப்பினர்களின் அரச உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு வழங்கப்பட்டுள்ள 23 நீர் இணைப்புகளில் இருந்து ரூபா. 3.51 மில்லியன் தொகை 2023 ஆம் ஆண்டு இறுதியில் அறவிடப்படாது நீண்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டது.

முன்னாள் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன் மற்றும் முற்பணங்கள் ரூபா.17.5 மில்லியன் நீண்ட காலமாக நிலுவையாக காணப்பட்டது. மேலே கூறப்பட்ட கடன் மற்றும் முற்பணங்களைப் பெற்றுக் கொண்டுள்ள ஊழியர்களில் 90 சதவீதத்திற்கும் அதிகமானோரிடம் குறிப்பிடப்பட்ட தொகையினை அவிடாது ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

**நிதியத்தினை செயலற்று வைத்திருத்தல்**

கம்பஹா, அத்தனகல்ல மினுவங்கொடை நீர் வழங்கல் செயற்திட்டத்திற்கு சீன அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்பட்டுள்ள கடனுக்கான சலுகை காலத்தின் பின்னர், 2023 ஆம் ஆண்டின் இறுதியில் 45 மில்லியன் டொலரான ஆறு கடன் தவணைகள் செலுத்தப்பட்டுள்ளதுடன் சீன அபிவிருத்தி வாங்கியினால் வழங்கப்படுகின்ற கடன்களில் ரூபா. 16,836.51 மில்லியனுக்கு சமமான 52 மில்லியன் டொலர் தொகை அதாவது கடன்களின் 29 சதவீதம் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையில் செயற்திட்ட நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படாது Escrow கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

**முறையற்ற வகையிலான ஒப்பந்த விலை மாற்றத்திற்காக கொடுப்பனவை தீர்மானித்தல்**

கண்டி நகர கழிவு நீர் முகாமைத்துவ செயற்திட்டம் - பொதி 2 ஒப்பந்தத்தின் கீழ் ஒப்பந்தக்காரரின் உரிமைத்துவ கோரிக்கை 1 மற்றும் 2 மூலம் சார்புடைய செலவுகள் மற்றும் கால நீடிப்புக்கான கோரிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது எனினும் செயற்திட்டத்திற்குப் பொறுப்பான பொறியியலாளர் அது தொடர்பில் இணங்கவில்லை

என்பதனால் பிணக்கு நியாய சபையிடம் உரிமைத்துவக் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. பிணக்கு நியாய சபையின் தீர்ப்பு தொடர்பில் சபையினால் Dissatisfaction Notice பெற்றுக் கொடுக்கப்பட்ட காரணத்தினால் கூட்டு இணக்கப்பாட்டின் மூலம் சரி செய்தல் நடவடிக்கைகள் 2019 செப்டம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதன் போது ஒப்பந்தக்காரரினால் உரிமைத்துவப் பெறுமதியாக ரூபா. 1,745.20 மில்லியன் மற்றும் ரூபா. 1,304.69 மில்லியன் எனவும், பொறியியலாளர் மதிப்பீட்டிற்கு அமைய உரிமைத்துவப் பெறுமதியாக ரூபா.89.35 மில்லியனும், செயற்திட்ட முகாமைத்துவ அலகினால் உரிமைத்துவப் பெறுமதியாக ரூபா. 791.12 மில்லியன் மற்றும் ரூபா.1,138.31 மில்லியனும் எனும் ரீதியில் பல்வேறு பெறுமதிகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்த பெறுமதிகளின் உண்மைத்தன்மை, முழுமைத்துவம், செல்லுபடியாகும் தன்மை தொடர்பில் முறையான பரீட்சிப்பின்றி உரிமைத்துவப் பெறுமதியாக ரூபா. 1,304.69 செலுத்துமாறு 2021 நவம்பர் 23 ஆம் திகதி தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் தலைவரின் தலைமைத்துவத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு 2021 திசெம்பர் 20 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 4299(g) கொண்ட பணிப்பாளர் சபை தீர்மானத்தின் மூலம் இணக்கப்பாடு வழங்கப்பட்டிருந்தது.

# மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள்

அபிவிருத்தியின் முழுமையான பலன்களை நியாயமாகவும் சமமாகவும் அனுபவிக்கும் வளமான சமுதாயம் எனும் நோக்குடன் தேசிய முன்னுரிமைகள், தேவைப்பாடுகள் அதேபோல் சர்வதேச தரங்களைக் கவனத்திற்கொண்டு, பொருளாதார ரீதியில் வலுவூட்டுதல், மகளிர், சிறுவர்கள், பாதிக்கப்படக் கூடிய மற்றும் சலுகைகள் கிடைக்கப் பெறாத நபர்களின் சமூகப் பாதுகாப்பிற்குத் தேவையான சட்ட, நிறுவக மற்றும் மனித வள சேவைகளை வழங்கி மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை தொகுத்து செயலாக்குதல் என்பதை செயற்பணியாகக் கொண்டு மகளிர், சிறுவர் அலுவலகள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு செயற்படுகின்றது.

**செயற்பணிகள்**

மகளிர் மற்றும் சிறுவர் சாசனத்தைச் செயற்படுத்துதல்

அரசாங்க அலுவலகளின் போது தீர்மானங்களை எடுத்தலும் அரசியல் துறையினுள் பெண்களின் பங்கேற்பையும் பிரதிநிதித்துவத்தையும் அதிகரிப்பதற்காக உபாயமுறைகளைத் தயாரித்தலும் செயற்படுத்துதலும்.

மோதல்களாலும் வறுமையாலும் விபத்திற்குள்ளான பெண்களை வலுப்படுத்தத் தேவையான நடவடிக்கை எடுத்தல்.

மகளிர் மற்றும் சிறுவர் துன்புறுத்தல்களைத் தவிர்ப்பதற்கான சட்டங்களையும் கொள்கைகளையும் வலுப்படுத்தலும் செயற்படுத்தலும் பால்நிலை மற்றும் ஆண், பெண் எனச் சமூக ரீதியில் வேறுபடுத்திக் கருதுவதை தடுத்தல்

மகளிரை அடிப்படையாகக் கொண்ட வீட்டு அலகினைப் பலப்படுத்துவதற்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தல் மற்றும் செயற்படுத்துதல், மகளிர் மற்றும் சிறுவர் நடவடிக்கைகளுக்குரிய நீடுறுதியான அபிவிருத்தி அபிலாசைகளை நிறைவேற்றல், குடும்ப ஆலோசனைச் சேவைகளை நடைமுறைப்படுத்தல்.

ஆரம்பப் பாடசாலைகளுக்காக தேசியக் கொள்கையொன்றைத் தயாரித்துச் செயற்படுத்தல்.

உடல், உள ரீதியான ஆரோக்கியமான பிள்ளைகளை உருவாக்கும் நோக்குடன் முன்சிறுவர் பராய பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான கொள்கைகளையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்தலும்.

பாதுகாப்பற்ற நிலையில் உள்ள குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக சர்வதேச தரத்திற்கு ஏற்ற வகையில் நிகழ்ச்சித்திட்டங்களையும் செயற்திட்டங்களையும் வடிவமைத்து செயற்படுத்தல்.

சிறுவர் காப்பக நிலையங்களை ஒழுங்குமுறைப்படுத்தி செவன சரண ஆதரிப்புப் பெற்றோர் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்

விசேட திறமைகளுடைய சிறுவர்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்கான நிதி உதவிகளை வழங்குதல்.

சமுர்தி நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தல்

மக்கள் உதவித்தொகை திட்டங்களை மீளாய்வு செய்தலும் மீள் ஏற்பாடு செய்தலும் தகுந்த புதிய சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தலும்.

சயரோகம், சிறுநீரக நோய், தொழுநோய், புற்றுநோய் தெலிசீமியா நோயாளிகளுக்கும் அவர்களைத் தங்கிவாழ்வோருக்கும் உதவுதொகைகளை வழங்குதல்.

விசேட தேவைகளையுடைய நபர்கள் தொடர்பில் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கு ஏற்ப நடவடிக்கைகளை எடுத்து அந் நபர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கும் தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கும் உரிய நிறுவனங்களுடன் தொடர்புகொள்ளல்

விசேட தேவைகளையுடைய நபர்கள் பிரதான மக்கள் சமூகத்துடன் சேர்ந்து செயற்படக்கூடிய வகையில் தேவையான கொள்கை ரீதியான மாற்றங்களைத் தகுந்த முறையில் மேற்கொள்ளவும் அவற்றைச் செயற்படுத்தத் தேவையான நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்தலும், அவர்களுக்காக சமூகக் காப்புறுதித் திட்டங்களைச் செயற்படுத்துதல்.

வயது முதிர்ந்த ஆட்களின் நலக் கவனிப்பும் சமூக அபிவிருத்திப் பணிகளில் முதியோரின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்து, சிரேஷ்ட பிரஜைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

இச் செயற்பணிகளை மேற்கொள்வதற்காக அமைச்சின் கீழ் 03 திணைக்களங்களும் 12 நியதிச்சட்ட நிறுவனங்களும் செயற்பட்டு வந்தன. அந் நிறுவனங்களின் கணக்காய்வின் போது வெளிப்பட்ட விடயங்கள் பின்வருமாறாகும்.

## கணக்காய்வு அவதானிப்புகள்

### மகளிர், சிறுவர் அலுவலகள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு

**லங்கா விமன் ஈ மார்கட்**

**இணையதளம் செயற்படாமை**

முயற்சியாண்மையுடைய பெண்களின் வாழ்வாதார நிலைமையை உயர்த்தி பொருளாதார ரீதியாகப் பலப்படுத்தும் நோக்கில் அவர்களது உற்பத்திகளை நிகழ்நிலைத் தளத்தினூடாக மேம்படுத்துவதற்காக ரூபா 4.4 மில்லியன் செலவில் Lanka Women E-market இணையதள டிஜிடல் விற்பனைக் களம் 2022 மார்ச் 08 ஆம் திகதி வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இவ் இணைய தளம் வெளிப்படுத்தப்பட்டு 2 வருட காலம் கடந்திருந்த போதிலும் எந்தவித உற்பத்தியும் விற்பனை செய்யப்பட்டிராததுடன் வழங்குனர்கள் நிகழ்நிலை மூலம் தமது உற்பத்திகளை விற்பனை செய்வதற்காக பதிவுகளை மாத்திரம் மேற்கொண்டிருந்தனர். மேலும், உடன்பட்ட மாதிரிகளுக்கு இணங்க இணையதளம் உருவாக்கப்பட்டிராமையும், இதன் படி, E-market முறைமையைப் பேணுவதற்கு தேவையான தொழில்நுட்ப உதவி கிடைக்கப்பெற்றிராமை, முயற்சியாண்மையுடைய பெண்களின் தொழில்நுட்பத் திறனைக் குறைத்தல், உற்பத்திகளின் தெளிவான புகைப்படங்களை எடுக்கும் இயலுமை இன்மை மற்றும் முறைமையை செயற்படுத்துவது தொடர்பாக போதிய பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராமை போன்ற டிஜிடல் விற்பனைக் களம் தோல்வியுறக் காரணமாகியிருந்தது.

**கிராமிய சக்தி நிகழ்ச்சித்திட்டம்**

அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, இலங்கையில் நிலவும் வறுமை 2030 ஆம் ஆண்டு வரையில் தீர்க்கப்படும் நோக்கில் வறுமை நிலையை ஒழிப்பதற்காக சனாதிபதி அலுவலகத்தின் கீழ் கிராம சக்தி அலுவலகமொன்றை ஸ்தாபித்து "கிராம சக்தி" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி 25 மாவட்டங்களுக்காக I ஆம் II ஆம் கட்டமாக 3,618 சங்கங்கள் அமைக்கப்பட்டிருந்தன. எனினும், அச் சங்கங்களில் 2,067 சங்கங்கள் அதாவது 57 சதவீதமானவை மாத்திரம் செயலிழந்த நிலையில் காணப்பட்டதுடன் கிராம சக்தி சங்கங்களும் கள நிதிக் கணக்குகளில் ரூபா 635.7 மில்லியன் தொகையும் விளைவற்றுக் காணப்பட்டன.

## நன்நடத்தை மற்றும் சிறுவர் காப்புறுதி சேவைகள் திணைக்களம்

**வீதிச் சிறுவர்கள் குறித்த தரவு முறைமை ஒன்று இன் மை**

தேசிய கொள்கைகள் மற்றும் தேசிய தரத்திற்கு இணங்க அநாதையான, கைவிடப்பட்ட மற்றும் அநாதரவான பிள்ளைகளையும், சட்டச் சிக்கல்களுக்கு முகம்கொடுத்த பிள்ளைகளையும் தனித்துவப்படுத்தி சகல பிள்ளைகளினதும் உரிமைகளை உறுதிப்படுத்தி அவர்களுக்கு சமமான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களத்தின் செயற்பணியான போதிலும், பாரிய நெருக்கடிக்கு உட்படும் வீதிப் பிள்ளைகளை இனங்கண்டு அப் பிள்ளைகள் தொடர்பான தரவு முறைமை ஒன்றைப் பேணுவதற்கும் அப் பிள்ளைகளில் உரிமையை உறுதிசெய்வது தொடர்பில் முறையான பொறிமுறையொன்று இது வரையிலும் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**வெளிநாடுகளுக்கு பிள்ளைகள் பராமரிப்பிற்காக பிள்ளைகளை வழங்குதல்**

வெளிநாடுகளுக்கு இலங்கை பிள்ளைகளை பராமரிப்பதற்காக 2019 – 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது 32 பிள்ளைகள் வழங்கப்பட்டிருந்ததுடன் வெளிநாட்டு பிள்ளைகள் பராமரிப்புக் கட்டளைச் சட்டத்தின் 10 இ பிரிவின் படி பராமரிப்பதற்காக வழங்கப்பட்ட பிள்ளைகள் தொடர்பாக 10 வருடங்கள் வரையில் பின்தொடர் அறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அப் பின்தொடர் அறிக்கைகள் முறையான தொடர்ந்து 10 ஆண்டுகள் வரையில் பெற்றுக்கொள்ளப்பட்டிராததன் காரணமாக அந்தப் பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த இயலாதிருந்தது.

**ஒதுக்கீட்டின் குறை பயன்பாடு**

சிறுவர் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 2023 ஆம் ஆண்டின் போது UNICEF நிதியுதவியாகக் கிடைக்கப்பெற்ற ரூபா 35.9 மில்லியன் தொகையான மொத்த ஏற்பாட்டுத் தொகையில் ரூபா 21.3 மில்லியனான அதாவது 60 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. மேலும், அவசர சந்தர்ப்பங்களின் போது சகல விதத்திலும் வன்முறைகள், சுரண்டல்கள், துஷ்பிரயோகம், புறக்கணிப்பு மற்றும் தீங்குவிளைவிக்கும் பயன்பாடுகளை தடுப்பதற்கும் அவற்றிற்கு பதிலளிக்கும் வகையில் மேம்படுத்தப்பட்ட சிறுவர் பாதுகாப்பு முறைமை ஒன்றைச் செயற்படுத்துவதற்கு உதவியளித்தல் எனும் நோக்கிற்காக ரூபா 7 மில்லியன் நிதி உதவி வழங்கப்பட்டிருந்ததுடன் இதன் மூலம் பிரதேச செயலகங்களினூடாக செயற்படுத்தப்பட்டிருந்த 23 செயற்திட்டங்களில் 11 உம் செயற்திட்டத்தின் குறித்த

நோக்கங்களில் இருந்து முற்றாக வேறுபட்ட செயற்பணிகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| | |
|---|---|
| **பயிற்சிப் பாடநெறி மற்றும் ஆலோசனைச் சேவைகளை வழங்கும் நடவடிக்கைகள் நிறுத்தப்படுதல்** | துஷ்பிரயோகம் மற்றும் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்ட பெண் பிள்ளைகளுக்கு ஆலோசனை வழங்குதல், வாழ்க்கைத் திறன் விருத்தி, தொழிற்திறன் பயிற்சியை வழங்குவதன் மூலம் சமூகமயமாக்கலுக்காக தற்போதுள்ள ஒரே நிறுவகமான பரத்த சிறுவர் பயிற்சி மற்றும் ஆலோசனைச் சேவைகள் தேசிய நிலையமும் தேசிய பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம் எனும் 02 நிறுவனங்களில் 2021 மே மாதத்தின் போது கோவிட் இடைச் சிகிச்சை நிலையமாகப் பயன்படுத்துவதற்கு பாணந்துறை பிரதேச செயலகத்திற்கு உரித்தாக்கப்பட்டு 2023 யூன் 06 ஆம் திகதி மீள ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும், நிறுவனத்தின் பௌதீக வளங்கள் மற்றும் சுற்றுச் சூழல் உரிய முறையில் கொண்டு வரப்படாதிருந்ததுடன் இரு நிலையங்களும் வழமைக்குக் கொண்டுவருவதற்காக ரூபா 3.85 மில்லியன் செலவு ஏற்படும் என மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதன் திருத்த வேலை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக 6 மாதங்களுக்கு ஒரு முறை மாகாண நன்நடத்தை திணைக்களத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையத்தின் 40 பிள்ளைகளுக்காக பயிற்சிப் பாடநெறிகளும் ஆலோசனைச் சேவைகளும் வழங்கப்படும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தன. |

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

| | |
|---|---|
| **சிறுவர் பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கை செயற்படுத்தப்பட்டிராமை** | தேசிய பாதுகாப்பு தொடர்பான தேசியக் கொள்கைக்காக 2019 ஒக்டோபர் 29 ஆம் திகதி அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும் இக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய ஐந்தாண்டு செயல்நடவடிக்கைத் திட்டத்திற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு 2023 ஆம் ஆண்டின் இறுதித்தினம் வரையிலம் தவறியிருந்தத. இதன் காரணமாக உரிய தேசிய செயற்பாட்டுக் குழு, மாகாணக் குழு, மாவட்ட மற்றும் பிராந்தியக் குழு, சுயாதீன தொழிநுட்ப குழுக்களாக அமைக்கப்பட்டு நடாத்தப்படுவதற்கும் அதிகாரசபை தவறியிருந்தது. |
| **குறித்த நிறுவனங்களுக்கிடையே** | தரவு முறைமை ஸ்தாபிக்கப்பட்டு சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் இலங்கை பொலிஸ், நன்நடத்தைகள் |

| | |
|---|---|
| **முறையான தொடர்பாடல் ஒன்று இன்மை** | மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம் மற்றும் வரிசை அமைச்சிற்கு இடையே முறையான தொடர்பை ஏற்படுத்தும் பொறிமுறையை அறிமுகப்படுத்துவதற்கு 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததன் காரணமாக நாட்டில் கிடைக்கப்பெறும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான முறைப்பாடுகள் எத்தனை எனவும் அம் முறைப்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பாகக் கண்டறிந்து உறுதிப்படுத்துவதற்கு அதிகாரசபைக்கு இயலாதிருந்தமை கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது. |
| **வீடியோ சான்றுகள் பதிவிடும் பிரிவை ஆரம்பித்திராமை** | மாகாண மட்டத்தில் வீடியோ சான்றுகளை பதிவிடும் பிரிவொன்றை ஆரம்பிப்பதற்காக 2021 ஆம் ஆண்டின் போது அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரை 7 மாகாணங்களில் வீடியோ சான்றுகளை பதிவிடும் பிரிவொன்றை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. தென்மாகாண வீடியோ சான்றுகளை பதிவிடும் பிரிவு 2013 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் நிலவிய குறைபாட்டின் காரணமாக 2015 ஆம் ஆண்டில் இருந்தே இப் பிரிவும் கிடைக்கப்பெற்றிருந்த தொழில்நுட்ப உபகரணங்களும் விளைவற்ற நிலையில் காணப்பட்டதுடன் மீள அத் தொழில்நுட்ப உபகரணங்களை மாற்றுவதற்கு ரூபா 7.8 மில்லியன் மதிப்பிடப்பட்டிருந்தது. |
| **பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு தங்குமிட வசதிகளுக்காக பாதுகாப்பான வீடொன்றை பேணியிராமை** | சட்டமா அதிபர் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்டுள்ள வீடியோ சான்றுகளைப் பதிவிடும் வழிகாட்டல் 2.5 ஆம் பிரிவின் பிரகாரம் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு தங்குமிட வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக பாதுகாப்பான வீடொன்றை (safe house) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதிகாரசபை பேணுவதற்கு தவறியிருந்தது. |
| **விளைவற்ற காணிகள்** | 2014 ஆம் ஆண்டு முதல் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பயன்பாட்டிற்காக எடுக்குமாறு வாய்மொழி மூலமாக ஒப்படைக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டச் செயலக அலுவலகத்திற்கு உரித்தான கட்டிடம் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் எந்தவித பயன்பாட்டிற்கும் எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டதுடன் இக் கட்டிடத்தின் பாதுகாப்பு சேவை வழங்கப்படுவதற்காக 2023 ஆம் ஆண்டின் போது மாத்திரம் ரூபா 1.08 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. |

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு அருகாமையில் உள்ள காணி ரூபா 18.3 மில்லியன் பெறுமதியான 2016 ஆம் ஆண்டின் போது 30 வருட காலத்திற்கு குத்தகை அடிப்படையில் பெறப்பட்டிருந்த போதிலும் அக் காணி 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையில் எந்தவித பயன்பாட்டிற்கும் எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

## சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

**சமுர்த்தி நலன்பெறுனர்களுக்கு கட்டாய சேமிப்பு முதலீடு**

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமுர்தி நலனாளிகளின் உதவித் தொகையில் இருந்து கட்டாய சேமிப்பாக வைத்துக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 43 பில்லியன் தொகை நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் அன்றைய தினத்தில் முதலீட்டு வட்டி ரூபா 2.8 பில்லியனாகக் காணப்பட்டது. வங்கி நிதிப் பிரிவால் 2023 ஆம் ஆண்டின் போது 11 சதவீதம் முதல் 26 சதவீதம் வரையான வட்டி வீதத்தில் இந் நிதி முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் வங்கிக்கு வழங்கப்பட்டிருந்த வட்டி வீதம் 5 சதவீதமான குறைந்த வட்டியாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இதில் சமுர்த்தி நலன்பெறுனர்களுக்குச் செலுத்த வேண்டிய வட்டி 4 சதவீதமாகக் காணப்பட்டது. கட்டாய சேமிப்புப் பணத்தை நேரடியாக வங்கிக்கு அனுப்பிவைக்கப்படாது வங்கி நிதிப் பிரிவில் வைத்துக்கொள்ளப்பட்டு முதலீடு செய்யப்பட்டு வட்டி வருமானத்தை உழைக்கும் வாய்ப்பு கிடைக்கப்பெறாது போயிருந்தமையால் அத் தொகை மக்களின் வாழ்வாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுவதற்கான வாய்ப்பு இல்லாது போயிற்று.

**நலன்பெறுனர்களுக்குக் கடனை வழங்குதல்**

சமுர்தி சமூகசார்பான வங்கி முறைமையின் மூலம் 34 வகையான கடன்களின் கீழ் 2023 ஆம் ஆண்டின் போது 350,604 நலன்பெறுனர்கள் உள்ளடங்கலாக 12,309,875 நலன்பெறுனர்களுக்காகக் கடன் வழங்கப்பட்டிருந்தது. வழங்கப்பட்டிருந்த கடன் தொகையில் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவைக் கடன் மீதி ரூபா 73.8 பில்லியனாகக் காணப்பட்டது. ஒட்டுமொத்த வங்கி முறைமையில் மொத்த முதலீடு ரூபா 242 பில்லியன் தொகையான போதிலும் நலன்பெறுனர்களுக்காக வழங்கப்பட்டிருந்த கடன் தொகை ரூபா 73.8 பில்லியன் மாத்திரமேயாகக் காணப்பட்டதுடன் இது ஒட்டுமொத்த முதலீட்டின் 30 சதவீதமாகும்.

**விளைவற்ற செலவினம்**

2019 ஆம் ஆண்டின் போது சமுர்தி நிதியுதவி மேலும் 6 இலட்சம் பேர்களுக்கு வழங்கப்படுவதற்காகவும்

அவர்களை வலுவூட்டுதற்காக 5,000 ஏற்றுமதிக் கிராமங்களை உருவாக்கி அவற்றின் மூலம் ஒரு வருடத்திற்கு ஒரு மில்லியன் டொலர்களை உழைப்பது நோக்காக இருந்தது. நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உரிமை வழங்கலுக்காக நாடெங்கிலும் ஆரம்ப நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு, பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் அறிவூட்டல்கள் நடாத்தப்படுதல், பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் விழிப்புணர்ச்சியை மேற்கொள்வதற்காக 350 நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்கு சமூகப் பாதுகாப்பு நிதியத்தில் இருந்து ரூபா 144.7 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. செலவினத்தைத் தீர்ப்பதற்காக சமுர்தி உதவித்தொகையில் ரூபா 500 படி 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 143 மில்லியன் அறவிடப்பட்டிருந்தது. எனினும், நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நோக்கை எய்துவதற்கு இயலாதிருந்தது.

**கணக்காய்விற்கு உட்படுத்தப்படாத நிதியம்**

திவிநெகும அதிகாரச்சட்டத்தின் 44 (ஆ) பிரிவின் பிரகாரம், இரத்துச் செய்யப்பட்ட சட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்ட சமுர்தி அபிவிருத்தி அதிகாரசபை, தெற்கு அபிவிருத்தி அதிகாரசபை, உடரட்ட அபிவிருத்தி அதிகாரசபை முதலிய அதிகாரசபைகளுக்கு உரித்தான சகல நிலையான மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் அரசாங்கத்திடம் கையளிக்கப்பட வேண்டும். எவ்வாறெனினும், அந் நிறுவனங்களிடம் நிலையான சொத்துக்களும் நிதிய மீதிகளும் நிலையான வைப்பாக 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை திணைக்கள வங்கி நிதிப் பிரிவில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் அன்றைய தினத்தில் திணைக்கள வங்கி நிதிப் பிரிவில் காப்புறுதி நிதியமும் உள்ளடங்கலாக நிதிச் சட்ட சார்பற்ற 15 நிதியங்கள் உள்ளதாகவும் இதில் 06 நிதியங்கள் இயங்கும் நிலையில் உள்ளதாகவும் எஞ்சிய 09 நிதியங்கள் செயலிழந்த நிதியங்கள் எனவும் அவதானிக்கப்பட்டது. இவ் அனைத்து நிதியங்களிலும் நிலவும் நிதி வங்கி நிதிப் பிரிவால் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வட்டித் தொகையும் உள்ளடங்கலாக மொத்த முதலீட்டு நிதியம் ரூபா 49,523 மில்லியனாகக் காணப்பட்டது. எவ்வாறெனினும், இந்த நிதியங்கள் எதற்காகவும் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கமைய, இதன் மூலம் அரச நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பது குறித்து ஆய்வு செய்ய இயலாத காரணத்தால் இந் நிதி அரசாங்க நிதிக் கட்டுப்பாட்டிலிருந்து நீங்கியிருந்தது.

**ஊழியர் கடன் வழங்கல்**

திணைக்களத்தின் கீழ் இயங்கும் சமூக சார் வங்கி, மாவட்டக் காரியாலயங்கள் மற்றும் வங்கி நிதிப் பிரிவின் பதவியணியின் உத்தியோகத்தர்களுக்காக தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்திற்கு முரணான வகையில் ஊழியர் பணிக்கொடைக் கடன், ஊழியர் வீட்டுக் கடன், விசேட ஊழியர் கடன் மற்றும் விசேட இடர் எனும் வகையில் பல்வேறு ஊழியர் கடன் திட்டங்களின் மூலம் கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அக் கடன் மீதி ரூபா 14,286 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது.

**சமுர்தி சமூகசார் வங்கியால் பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் மீளளிக்கப்பட்டிராமை**

சமுர்தி நலனாளிகளின் கட்டாய சேமிப்புக் கணக்குகளில் நிலவிய நிதி மற்றும் நிதியக் கணக்குகளில் 2020 ஆம் ஆண்டின் போது வாழ்க்கை நிலையை வழமையான நிலையில் கொண்டுநடத்தும் நோக்கில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு ரூபா 5,000 கொடுப்பனவை வழங்குவதற்காக வங்கி முறைமையின் மூலம் ரூபா 32,418 மில்லியன் தொகை திறைசேரியால் பெற்றுக்கொள்ளப்பட்டு 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான 03 வருடங்களுக்கும் மேலான காலம் கடந்திருந்த போதிலும் வங்கிக்கு அப் பணத்தை மீளளித்திருக்கவில்லை.

**வங்கி முறைமையில் நிதி மோசடி**

2019 ஆம் ஆண்டு முதல் 2023 மார்ச் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு உரித்தாக திணைக்களத்தின் விசாரணைப் பிரிவிற்கு ரூபா 234.9 மில்லியன் பெறுமதியான 165 நிதி மோசடிகள் அறிக்கையிடப்பட்டிருந்தன. இவற்றில் மேலும் ரூபா 218.4 மில்லியனான 98 நிதி மோசடிகளுக்குரிய ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றிற்கிடையே 2014 சனவரி 03 ஆம் திகதி முதல் 2018 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரை வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களில் மேற்கொள்ளப்படும் நிதி முறைகேடுகளில் ரூபா 263.8 மில்லியன் பெறுமதியான 15 முறைகேடுகளின் செயற்பாடுகள் பூர்த்தியடைந்திருக்கவில்லை. உத்தியோகத்தர்களால் தொடர்ந்து இவ்வாறு நிதிமோசடிகள் மேற்கொள்ளப்படுவதற்கு வங்கி முறைமையில் நிலவும் குறைபாடுகள் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டளைகள் மூலமாகத் தண்டனைகள் குறைக்கப்பட்டமையும் காரணமாகி இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**போலிக் கல்விச் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை**

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயவ் நடைமுறை விதிக் கோவையின் 59 ஆம் 97 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அரசாங்க சேவையில் ஏதேனுமோர் பதவியில் எவரேனுமோர் நபரால் நியமன அதிகாரிக்கு

போலியான தகவல்கள் அல்லது போலி (மோசடிசெய்யப்பட்ட) ஆவணங்கள் சமர்ப்பிக்கப் பட்டுள்ளதாக கண்டறியப்படும் சந்தர்ப்பத்தில் அந் நியமனத்தை உடனடியாக இரத்துச் செய்து அதனை செயலிழக்கச்செய்து வலுவிழக்கச் செய்து அது வரையில் சம்பளம் மற்றும் படிப்பணமாக அரசாங்கத்தால் செலுத்தப்பட்ட சகல பணத்தையும் அவ் உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எனினும், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தில் சேர்க்கப்பட்டிருந்த 363 உத்தியோகத்தர்களால் தமது நியமனத்தைப் பெற்றுக்கொள்வதற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கல்விச் சான்றிதழ்கள் போலியானவை என தனியாள் கோவையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இவர்களில் 77 பேர் சேவையில் இருந்து பணி நீக்கம் செய்யப்பட்டிருந்ததுடன் 20 பேர் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் இழப்பீட்டைப் பெறும் உடன்பாட்டில் சேவையில் இருந்து விலகிச்சென்றிருந்தனர். தெரிவுக் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் பணியாற்றி ஓய்வூதியச் சம்பளமின்றி பணியை முடிவுறுதிக்கொண்டிருந்த உத்தியோகத்தர்களும் தற்போது சேவையில் ஈடுபட்டு வரும் உத்தியோகத்தர்களில் 30 பேர் நியமனம் பெற்ற நாள் முதல் ரூபா 195 மில்லியனும், மொனறாகலை மாவட்டத்தின் 4 பிரதேச செயலகங்களின் 4 உத்தியோகத்தர்களுக்காக 1999 ஆம் ஆண்டு முதல் ரூபா 40 மில்லியனும், கொழும்பு மற்றும் மாத்தறை மாவட்டங்களில் 17 உத்தியோகத்தர்களுக்காக 2023 ஆம் ஆண்டிற்கு உரித்தாக மாத்திரம் ரூபா 8.7 மில்லியனும் சம்பளம் மற்றும் படிப்பணமாகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களால் இது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## சமூகப் பாதுகாப்புச் சபை

**கணனிமயமாக்கப்பட்ட தகவல் முறைமை ஒன்று இன்மை**

சமூகப் பாதுகாப்பு ஓய்வுதிய சம்பள முறைக்கு புதிய மென்பொருள் முறைமை ஒன்றை ஸ்தாபிப்பதற்காக 2017 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் கணனி முறைமையை ஸ்தாபிப்பதற்கு 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

**நிதியத்தின் குறைவான பயன்பாடு**

நிறுவனத்தால் கட்டணம் அறவிடப்பட்டு நடாத்தப்பட்டு வரும் பாடநெறிகளில் இருந்து 20 சதவீதம் நிதியத்திற்கு வருடாந்தம் செலவு வைக்கப்படுகின்றன. 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 11 ஆம் பிரிவின் 7 ஆம் அத்தியாயத்தின் 7.1.4 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தின் உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அந் நிதியைப் பயன்படுத்த இயலுமான போதிலும் 2023 ஆம் ஆண்டின் போது கணக்கிடப்பட்டிருந்த ரூபா 8 மில்லியன் தொகையில் ரூபா 3.5 மில்லியன் அதாவது 43 சதவீதம் மாத்திரம் டிஜிடல் முறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கும் தரச் சான்றிதழிடும் நிகழ்ச்சித்திட்டத்திற்குமாக செலவிடப்பட்டிருந்தன. மேலும், கடந்த ஆண்டில் 4.2 மில்லியன் பாடநெறி வருமானத்தில் நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்த போதிலும் நிறுவனத்தின் உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பணம் செலவிடப்பட்டிருக்கவில்லை. இதனால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதியத்தின் மீதி ரூபா 13.6 மில்லியன் வரை விருத்தியடைந்து குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தன.

# துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை

தெற்காசிய வலயத்தில் ஆகக் கூடிய போட்டித் தன்மை கொண்ட கடல் சார் சேவைகள் கேந்திர நிலையமாக இலங்கையை அபிவிருத்தி செய்வதன் மூலம் அனைத்து பயனாளிகளுக்கும் உயர் நட்பு மட்டத்தில் கடல் சார் சேவை நிலையமாக இலங்கையைத் நிலைநாட்டுதல் துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைசின் துறைமுகங்கள மற்றும் கப்பல் துறை பிரிவின் நோக்காகும். இந்தப் பிரிவின் கீழ் செயல்படும் வணிக கப்பற்றுறை செயலகம், இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, வரையறுக்கப்பட்ட இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனம், ஜயா கன்டெய்னர் டெர்மினல்ஸ் தனியார் கம்பனி, துறைமுகங்கள் முகாமைத்துவம் மற்றும் ஆலோசனை வேைகள் கம்பனி மற்றும் மாகம்புர துறைமுகங்கள் முகாமைத்துவ (தனியார்) கம்பனியாக திணைக்களம் மற்றும் 05 நியதிச்சட்ட சபைகள் என்பவற்றினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயல்பாடுகள் மற்றும் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டி உள்ளன.

**கடமைப் பொறுப்புகள்**

வணிகத் துறைமுகங்கள் அபிவிருத்தி, முகாமைத்துவம் மற்றும் அவற்றின் முதலீட்டு சந்தர்ப்பங்களை விரிவுபடுத்துதல்.


கொள்கலன் முனையங்கள், எண்ணெய் தாங்கி உபகரணங்கள், கலங்கரை விளக்கங்கள் மற்றும் கலங்கரை விளக்க அபிவிருத்தி மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

கப்பல் உரிமை மற்றும் செயல்பாடுகள், கப்பல் முகாமைத்துவம், கப்பல் தரகு மற்றும் முகவர் சேவை தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் கப்பல் துறை வழங்குனர்கள் மற்றும் பயன்படுத்துவோரிடையே அறிவுறுத்தல் ஒருங்கிணைப்பை உறுதி செய்தல் மற்றும் ஒத்துழைப்பு வழங்குதல்.

கப்பல் கட்டணம் மற்றும் கப்பல் சேவை நடவடிக்கைகள் மற்றும் கரையோர பயணிகள் போக்குவரத்து நடவடிக்கைகள் என்பவற்றை ஒழுங்குறுத்தல் செய்தல்.

சிதைந்த கப்பல்கள் மற்றும் கடல் அழிவு மீட்புகளை ஏற்றல்.

2023 ஆம் ஆண்டு மேலே கூறப்பட்ட கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சுக்கு ரூபா. 3,962 மில்லியன் ஒதுக்கீடு பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையில் அதில் ரூபா.3,176 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய மீளாய்வாண்டு ரூபா.786 மில்லியன் பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தது.




உரு இலக்கம் 2.39 - வருடாந்த ஒதுக்கீடு, உண்மையான செலவு மற்றும் மீதி
ஆதாரம் - 2023 வருடாந்த நிதிக்கூற்று

## கணக்காய்வு அவதானிப்புகள்

## துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமான சேவைகள் அமைச்சு

**அமைச்சின் நோக்கங்களுடன் இணங்காத செலவுகள்**

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு இருந்த சூரியவெவ கிரிக்கெட் மைதானத்தினை நிர்மாணிப்பதற்கு ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு செலுத்தப்பட வேண்டியதான கடனைத் தீர்ப்பதற்கு 2017 திசெம்பர் 14 ஆம் திகதி அரச வாங்கி ஒன்றில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா.3,950.85 ஆன கடன் தொகைக்கு வருடாந்தம் 33.30 சதவீதமான வட்டியுடன் (வட்டி விகிதம் மாறுபடும்) 15 வருட காலத்தினுள் செலுத்தப்பட வேண்டிய ரூபா. 11,796.87 மில்லியன் கடன் தொகை மற்றும் தவணைப் பணத்தினை (வட்டி உள்ளிட்ட) செலுத்துவதற்கு அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதக்கமைய 2023 ஆம் ஆண்டில் கடன் தவணை மற்றும் வட்டியாக முறையே ரூபா. 329.2 மில்லியன் மற்றும் ரூபா. 820.7 மில்லியன் என மொத்தத் தொகையாக ரூபா. 1,149.9 மில்லியன் அமைச்சின் விடயப் பரப்பிற்கு உரித்தான செயற்பாடாக இல்லாத போதிலும் அமைச்சின் தலைப்பின் கீழ் செலுத்தப்பட்டிருந்தது.

**பிரதான அபிவிருத்தி செயற்திட்டம்**

அமைச்சின் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் கொழும்பு வடக்கு துறைமுக அபிவிருத்தி செயற்திட்டத்திற்கான சாத்தியக்கூறு ஆய்வு அறிக்கை தயாரிப்பதற்காக 2023 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட ரூபா. 240 மில்லியன் தேறிய ஒதுக்கீட்டின் சதவீதமாக மீதி 14 சதவீதம் காணப்பட்டது . மேலும், இந்த செயற்திட்டத்தில் செயற்திட்டப் பணிகள்

திட்டமிடப்பட்ட வகையில் 2020 பெப்ரவரி 24 ஆம் திகதி தொடக்கம் 15 மாதங்களில் அதாவது 2021 மே 23 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் இறுதி சாத்தியக்கூறு அறிக்கையில் வழங்கப்பட்டிருந்தது 2023 பெப்ரவரி 17 ஆம் திகதி ஆகும்.

**பிணைக் கட்டணம் மற்றும் கடன் வட்டி என்பன செயற்பாடின்றி செலுத்தப்பட்டமை**

காங்கேசன்துறை துறைமுகத்தினைப் புனரமைப்பு செய்வதற்காக இலங்கை அரசு, இந்தியாவின் எக்ஸ்ஸீம் வங்கியிடம் 45.27 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் கடன் தொகையினைப் பெற்றுக் கொள்வதற்கு 2018 ஜனவரி 10 ஆம் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 06 வருடங்கள் கடந்து இருந்த போதிலும் துறைமுகத்தின் நிர்மாண நடவடிக்கைகள் இதுவரையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதே போன்று கடன் தொகையில் 905,194 ஐக்கிய அமெரிக்க டொலர் மட்டும் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா. 20 மில்லியன் தொகை பயன்படுத்தப்படாத கடனுக்கான பிணைக் கட்டணம் மற்றும் வட்டியாக பொருளாதாரமற்ற ரீதியில் செலுத்த நேரிட்டிருந்தது.

## இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை

**சர்வதேச இடம்**

2023 ஆம் ஆண்டுக்கான உலக துறைமுகங்கள் செயல்பாடு தொடர்பாக வழங்கப்பட்டுள்ள அல்பா லைனர் அறிக்கைக்கு (Alpha Liner Report) அமைய கொழும்பு துறைமுகத்தின் இருபதுசம அலகு (Twenty Equivalent Unit) 6,949,912 செயல்பாடுகளை மேற்கொண்டு உலகின் 24 ஆவது இடத்தில் உள்ளதுடன் 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது கப்பல் பண்டங்கள் செயற்பாட்டு நடவடிக்கைகளில் 1.3 சதவீத அதிகரிப்பினைக் காணக் கூடியதாக உள்ளது. இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் கொள்கலன் கையாளுகை 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2023 ஆம் ஆண்டில் 2.04 சதவீதத்தினால் அதிகரித்து இருந்தது.

**கப்பல் பண்டங்கள் செயற்பாட்டு நடவடிக்கைகள்**

கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை ஆகிய முக்கிய துறைமுகங்களுக்கு 2019 ஆம் ஆண்டில் வந்த கப்பல்களின் எண்ணிக்கை 4,708 ஆக இருந்த போதிலும், 2023 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 4,809 வரையில் அதிகரித்திருந்தது. எவ்வாறு இருப்பினும், செயல்படுத்தப்பட்ட இருபது சம (TEUs) கொள்கலன் அலகுகளின் எண்ணிக்கை 2019 ஆம் ஆண்டில் 7.23 மில்லியன் தொடக்கம் 2023 ஆம் ஆண்டில் 6.9 மில்லியன் வரையில் குறைவடைந்திருந்தது. அதே போன்று செயல்படுத்தப்பட்ட வழமையான கப்பல் பண்டங்களின்

தொகை 2019 ஆம் ஆண்டில் 9.5 மில்லியன் மெட்ரிக் தொன் தொடக்கம் 2023 ஆம் ஆண்டு 6.3 மில்லியன் மெட்ரிக் தொன் வரையில் குறைவடைந்திருந்தது. விபரங்கள் அட்டவணை 01 இல் காட்டப்பட்டுள்ளது.


| விபரம் | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|---|---|
| **வருகைதந்த கப்பல்களின் எண்ணிக்கை** | 4,708 | 4,337 | 4,180 | 4,073 | 4,809 |
| **செயல்படுத்தப்பட்ட இருபது சம (TEUs) கொள்கலன் அலகுகளின் எண்ணிக்கை (அலகு '000)** | 7,228 | 6,854 | 7,249 | 6,862 | 6,949 |
| **செயல்படுத்தப்பட்ட வழமையான கப்பல் பண்டங்களின் தொகை (மெட்ரிக் தொன் '000)** | 9,530 | 8,894 | 9,229 | 6,249 | 6,271 |

அட்டவணை 2.26 - முக்கிய துறைமுகங்களில் செயல்படுத்தப்பட்ட கொள்கலன் அலகு மற்றும் வழமையான கப்பல் பண்ட எண்ணிக்கை


ஆதாரம் - இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் 2023 ஆம் ஆண்டு செயலாற்றுகை மீளாய்வு அறிக்கை

**படகுகளின் வருகை**

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 2023 ஆம் ஆண்டில் கொழும்பு துறைமுகத்திற்கு படகுகளின் வருகை 589 படகுகளினால் அதாவது 16 சதவீதத்தினால் அதிகரித்து இருந்தது. மத்திய மற்றும் சிறிய அளவிலான படகுகளுக்கு பதிலாக பாரிய அளவிலான படகுகள் வந்த காரணத்தினால் 2018 ஆம் ஆண்டின் பின்னர் 2021 ஆம் ஆண்டு வரையில் கொள்கலன் படகுகளின் வருகையில் படிப்படியான குறைவடைவு அவதானிக்கப்பட்ட போதிலும் 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2023 ஆம் ஆண்டில் கொள்கலன் தாங்கிய படகுகள் 603 அதாவது சுமார் 18 சதவீத அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. வேறு படகுகளின் வருகையும் 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 4.55 சதவீதப் பின்னடைவு அவதானிக்கப்பட்டது. விபரங்கள் உரு 2.40 இல் மற்றும் உரு 2.41 இல் காட்டப்பட்டுள்ளது.




உரு 2.40 - கொழும்பு துறைமுகத்திற்கு படகுகளின் வருகை (உள்வரவு ) – வகைப்படுத்தலுடன்
ஆதாரம் - இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் 2023 ஆம் ஆண்டு செயலாற்றுகை மீளாய்வு அறிக்கை




உரு 2.41 - கொழும்பு துறைமுகத்திற்கு படகுகளின் வருகை (உள்வரவு ) – மொத்த படகுகளின் எண்ணிக்கை
ஆதாரம் - இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் 2023 ஆம் ஆண்டு செயலாற்றுகை மீளாய்வு அறிக்கை


**கொள்கலன் முனைங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகள்**

கொழும்பு துறைமுகத்தினால் 2001 ஆண்டில் 1,726,616 கொள்கலன் அலகுகள் செயல்படுத்தப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் அந்த எண்ணிக்கை 6,949,912 கொள்கலன் அலகுகள் வரையில் அதிகரித்திருந்த போதிலும் இந்த கொள்கலன் செயல்பாட்டு நடவடிக்கைகளின் போது கொழும்பு துறைமுகத்தினுள், இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சந்தை பங்குகள் 2001 ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு இறுதி வரையான இருபத்தியிரண்டு வருட காலத்தினுள் 81 சதவீதம் தொடக்கம் 28 சதவீதம் வரையில்

வீழ்ச்சி அடைந்திருந்தது. கொழும்பு துறைமுகத்தினுள் துறைமுகங்கள் அதிகார சபையின் செயல்பாட்டு நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டு வரையில் ஜய கொள்கலன் முடிவுமுனை (JCT) மூலம் மட்டும் மேற்கொள்ளப்பட்டு இருந்ததுடன் 2021 ஆம் ஆண்டு தொடக்கம் கிழக்கு கொள்கலன் முடிவுமுனை (ECT) செயல்பாட்டு நடவடிக்கைகளில் இணைந்திருந்தது. நீண்ட கால குத்தகை அடிப்படையில் தெற்காசிய நுழைவு முடிவுனை (SAGT) 2001 ஆம் ஆண்டில் செயல்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 26 சதவீதமான சந்தை பங்குகளும், கொழும்பு சர்வதேச கொள்கலன் முடிவுமுனை (CICT) 2013 ஆம் ஆண்டில் செயல்பாடு ஆரம்பிக்கப்பட்டு 46 சதவீத சந்தைப் பங்குகளும் 2023 ஆம் ஆண்டு வரையில் உரிமையாக்கப்பட்டு இருந்தது.
விபரங்கள் அட்டவணை 2.27 இல் காட்டப்பட்டுள்ளது.

| ஆண்டு | SLPA (வருடாந்த முடிவுமுனை கொள்ளளவு கொள்கலன் இருபதுசம அலகு மில்லியன் 3.550) | சந்தை பங்கு | SAGT (வருடாந்த முடிவுமுனை கொள்ளளவு கொள்கலன் இருபதுசம அலகு மில்லியன் 1.950) | சந்தை பங்கு | CICT (வருடாந்த முடிவுமுனை கொள்ளளவு கொள்கலன் இருபதுசம அலகு மில்லியன் 2.400) | சந்தை பங்கு | மொத்த கொள்கலன் அலகு |
|---|---|---|---|---|---|---|---|
| 2019 | 2,282,618 | 32 | 2,052,153 | 28 | 2,893,566 | 40 | 7,228,337 |
| 2020 | 2,097,804 | 31 | 1,872,052 | 27 | 2,884,906 | 42 | 6,854,762 |
| 2021 | 2,198,334 | 30 | 1,838,693 | 25 | 3,212,331 | 45 | 7,249,358 |
| 2022 | 1,925,895 | 28 | 1,752,236 | 26 | 3,184,053 | 46 | 6,862,184 |
| 2023 | 1,965,131 | 28 | 1,763,863 | 26 | 3,220,918 | 46 | 6,949,912 |

அட்டவணை 2.27 - கடந்த ஐந்து வருடங்களுக்கான கொள்கலன் கையாளுகை தொடர்பான விபரங்கள்
ஆதாரம் - இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் 2023 ஆம் ஆண்டு செயலாற்றல் மீளாய்வு அறிக்கை




உரு ……… - இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் முடிவுமுனை செயற்பாட்டு நடவடிக்கை
ஆதாரம் - இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் 2023 ஆம் ஆண்டு செயலாற்றுகை மீளாய்வு அறிக்கை

மேலே குறிப்பிடப்பட்ட தரவுகளுக்கு அமைய இலங்கை துறைமுகங்கள் அதிகார சபைக்கு கொள்கலன் செயற்பாட்டிற்காக சொந்தமாக இருந்த சந்தை பங்கு படிப்படியாக தனியார் துறைக்கு உரிமையாகிக் கொண்டு வந்திருந்தது. அதிகார சபையின் கொள்கலன் செயல்பாட்டு நடவடிக்கைகள் (JCT) தொடர்பான முடிவுமுனை பயன்பாட்டு வீதத்தினை (Berth Occupancy Ratio) கருத்தில் கொள்ளும்போது 2019 தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரையில் அது முறையே 70 சதவீதம், 72 சதவீதம், 70 சதவீதம், 63 சதவீதம் மற்றும் 58 சதவீதமாக இருந்தது. அதற்கு அமைய அதிகார சபையின் முடிவுமுனை பயன்பாட்டு வீதம் 2023 ஆம் ஆண்டில் 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 8 சதவீதத்தினால் குறைவடைந்து இருந்தது. SAGT மற்றும் CICT கொள்கலன் முடிவுமுனைகளின் கொள்ளளவு முறையே இருபதுசம அலகு மில்லியன் 1.95 மற்றும் மில்லியன் 2.4 ஆக இருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டில் உண்மையான கொள்கலன் செயற்பாடு முறையே இருபதுசம அலகு மில்லியன் 1.96 மற்றும் இருபதுசம அளவு மில்லியன் 3.22 ஆக இருந்ததுடன் CICT முடிவுமுனை ஆகக் கூடிய கொள்ளளவினை விஞ்சி இருந்தது. எனினும், அதிகார சபையின் அனைத்து முடிவுமுனைகளினதும் (JCT மற்றும் ECT) கொள்ளளவு இருபதுசம அலகு மில்லியன் 3.55 ஆக இருந்த போதிலும், 2023 ஆம் ஆண்டில் உண்மையான கொள்கலன் செயற்பாட்டு இருபதுசம அலகு மில்லியன் 1.92 ஆக அதாவது 58 சதவீதம் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய துறைமுகங்கள் அதிகார சபைக்குச் சொந்தமான முடிவுமுனை கொள்ளளவுப் பயன்னாடு குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

**கிழக்கு கொள்கலன் முனையத்தின் குறைப்பயன்பாடு**

கொழும்பு துறைமுகத்தில் தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள கொள்கலன் கையாளுவதற்கான முடிவுமுனைகளுள் 14.25 மீட்டர் ஆழத்தை விட அதிகமான ஆழமுடைய பாரிய அளவிலான கப்பல்கள் வரக்கூடிய முடிவுமுனையானது

கொழும்பு சர்வதேச கொள்கலன் முடிவுமுனை (CICT) மற்றும் கிழக்கு கொள்கலன் முடிவுமுனை (ECT) மட்டுமே ஆகும். JCT முடிவுமுனைக் கொள்ளளவு போதுமானதாக இல்லாததன் அடிப்படையில் ECT முடிவுமுனையினை நிர்மாணிப்பதற்கு கொழும்பு துறைமுகத்தை விரிவுபடுத்தும் செயல்திட்டத்திற்கு உரியதாக இலங்கை வங்கியால் நிதியளிக்கப்பட்ட கொள்கலன் இருபதுசம அலகு மில்லியன் 0.8 வருடாாகந்த கொள்ளளவைக் கொண்ட நிர்மாண மொத்த செலவு ரூபா. 11,168 மில்லியனான 18 மீட்டர் ஆழமும் மற்றும் 440 மீட்டர் நீளமும் கொண்ட கிழக்கு கொள்கலன் முடிவுமுனையின் 1 ஆம் கட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் 2016 ஏப்ரல் மாதம் பூர்த்தி செய்யப்பட்டு இருந்தது. எனினும் கொள்கலன்களைக் கையாளுவதற்குத் தேவையான பாரம் தூக்கிகள் இல்லாத காரணத்தால் ஜய கொள்கலன் முடிவுமுனைக்காக கொள்வனவு செய்யப்பட்ட, கப்பலில் இருந்து கரை வரையான செயல்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய மூன்று பாரம் தூக்கிகள், 2020 பெப்ரவரி 07 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் PA/HD/25 கொண்ட பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் கிழக்கு கொள்கலன் முடிவுமுனையில் (ECT) பொருத்தப்பட்டு, அதன் செயல்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர், 2021 பெப்ரவரி 09 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் அமப/21/0198/328/005/டீபிஆர் கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் கிழக்கு கொள்கலன் முடிவு முனையை அபிவிருத்தி செய்தல், செயல்பாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் முழுமையான உரிமைத்துவத்துடன் கொள்கலன் முடிவுமுனையாக செயல்பாட்டு நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டினுள் 14.25 மீட்டரை விட அதிக ஆழமான பாரிய அளவிலான 30 கொள்கலன் கப்பல்கள் முடிவுமுனைக்கு வந்திருந்ததுடன் 495,541 கொள்கலன்கள் முடிவுமுனையினுள் செயல்படுத்தப்பட்டிருந்தது.. 2021 ஆம் ஆண்டில் 43 சதவீதத்தில் காணப்பட்ட முடிவுமுனை கொள்ளளவு பயன்பாட்டு வீதம் (Capacity Utilization ) 2023 ஆம் ஆண்டில் 62 சதவீதம் வரையில் அதிகரித்து இருந்தது. கப்பலில் இருந்து கரை வரையில் செயல்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய பாரிய அளவிலான 12 பாரம் தூக்கிகள் (STS Cranes) மற்றும் இரயில் தண்டவாளங்களில் பொருத்தப்பட்டு செயல்படுத்தப்படும் 40 தானியங்கி கென்ட்ரி பாரம் தூக்கிகள் (ARMG Cranes) ஐக்கிய அமெரிக்க டொலர் 282.56 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த செலவில் கொள்வனவு செய்வதற்கு உரியதாக 2021 திசெம்பர் 18 ஆம் திகதி பெறுகை மேற்கொள்ளப்பட்டு இருந்ததுடன் அதில் 03 பாரம் தூக்கிகள் 2024 பெப்ரவரி 07 ஆம் திகதி மற்றும் மேலும் 03 பாரம் தூக்கிகள் 2024 ஜூன் 05 ஆம் திகதியும் இரயில் தண்டவாளங்களில் பொருத்தப்பட்டு செயல்படுத்தப்படும் 12 தானியங்கி கென்ட்ரி பாரம் தூக்கிகள் 2024 ஓகஸ்ட் 05 ஆம் திகதியும் துறைமுகத்திற்குக்

கிடைத்திருந்தது. 2022 ஜனவரி 04 ஆம் திகதி முதல் கிழக்கு முடிவுமுனையின் இரண்டாம் கட்ட நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பதனால் முடிவுமுனையின் கொள்ளளவினை முழுமையாக பயன்படுத்துவதற்கு முடியாது இருந்தது.

**தாமதமடைந்த செயற்திட்டங்கள**

இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் மூலம் தற்போது முக்கிய செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் முடிவுமுனையின் நீளம் 600 மீட்டர் மட்டுமாக இருப்பதனால் 330 மீட்டர் நீளமான பாரிய அளவிலான 2 கப்பல்களை ஒரே நேரத்தில் கையாளுவதற்கு சிரமமாக உள்ள காரணத்தால் அதிகார சபையின் வியாபார சந்தர்ப்பங்கள் இழக்கப்படுகின்றன என்பதனால் அந்த முடிவுமுனையை 120 மீட்டரினால் நீடித்தும் மற்றும் 15 மீட்டர் ஆழப்படுத்தியும் கப்பல் தரிப்பிடத்தை நிர்மாணிப்பதற்கு 2017 ஜூலை மாதத்தில் அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டிருந்தது. 2018 நவம்பர் 29 ஆம் திகதி துறைமுகங்கள் அதிகார சபை, ஒப்பந்தக்காரருடன் ஏற்படுத்தி இருந்து உடன்படிக்கைக்கு அமைய ஒப்பந்த செலவு ரூபா. 5,035 ( VAT இன்றி ) ஆகும். ஒப்பந்த உடன்படிக்கைக்கு அமைய, 07 நாட்களுக்குள் ஒப்பந்தத்தினை ஆரம்பிப்பதற்கு அறிவிப்பு வழங்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அறிவிப்பு வழங்கப்பட்டு ஒப்பந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2020 செப்டம்பர் 29 ஆம் திகதி அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் ஒப்பந்தம் திருத்தப்பட்டு இருந்ததுடன் அதன் காரணமாக 02 வருட காலத்தின் பின்னர் அது 2020 நவம்பர் 23 ஆம் திகதி வேலை ஆரம்பிப்பதற்கான அறிவிப்பு வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய 2023 ஜூலை 31 ஆம் திகதி அளவில் ஒப்பந்தத்தினை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் இந்த செயற்திட்டத்தின் பௌதிக முன்னேற்றம் 82.6 சதவீதமாக மட்டுமே காணப்பட்டது.

**அதிகாரச் சட்டத்திற்கு இணங்காத மிகை விதிப்பு வரிச் செலுத்தல்**

2022 இன் 14 ஆம் இலக்க மிகை விதிப்பு வரிச் சட்டத்தின் 2(1)(அ) பிரிவிற்கு அமைய, 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கணக்கீடு செய்யப்படும், 2020 ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் மதிப்பீட்டு ஆண்டுக்காக, வரி அறவிடப்படக்கூடிய வருமானம் ரூபா. 2,000 மில்லியனை விஞ்சும் தனி நபர்களது, கூட்டு வியாபாரம் அல்லது கம்பனியினது, வரி அறவிடப்படக்கூடிய வருமானத்தின் அடிப்படையில் நூற்றுக்கு இருபத்தைந்து சதவீத அளவில் அறவிடப்பட வேண்டிய போதிலும் 2020/21 ஆண்டில் அதிகார சபையில் வரி அறவிடப்படக்கூடிய வருமானத்தின் அடிப்படையில் மிகை விதிப்பு வரி ரூபா. 1,196.94 மில்லியனுக்குப் பதிலாக ரூபா. 1,152.2 மில்லியன் மிகை விதிப்பு வரியாக ரூபா. 755.33 மில்லியன் கூடுதலாகச்

செலுத்தப்பட்டிருந்தது. அந்தத் தொகையை 2022 இன் 14 ஆம் இலக்க மிகை விதிப்பு வரி சட்டத்தின் 5 (1) ஆம் பிரிவின் பிரகாரம் மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**முறையாக காணியினை ஒப்படைத்திருக்காமை**

டி. ஆர். விஜேவர்த்தன மாவத்தையில் அமைந்துள்ள ரூபா. 625.5 மில்லியன் பெறுமதியான 2 ஏக்கர் 3 ரூட் 9.61 பேர்ச் கொண்ட காணியினை தாமரைக் கோபுரம் நிர்மாணிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு அனுபவிக்கும் உரிமையை ஒப்படைத்திருந்த மற்றும் கால்வாய் வளவு ( மேற்கு) கொழும்பு 01 பிரதான வீதி மற்றும் ஓல்கொட் மாவத்தையை எல்லையாக கொண்ட. ரூபா. 947.5 மில்லியன் பெறுமதியான 02 ஏக்கர் காணி சுங்கத் திணைக்களத்தின் கட்டட நிர்மாணிப்பிற்காக வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் காணிக்கான நட்ட ஈட்டுத் தொகை 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அதிகாரசபைக்குக் கிடைத்திருக்கவில்லை. மேலும், முறையான வழிமுறைகளுக்கு அமைய பெறுமதிகள் சொத்து ஆவணங்களில் இருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை.

கொழும்பு 10, விஜேயவர்த்தன மாவத்தையில் தொடர்பாடல் கோபுரம் நிர்மாணிக்கப்படும் இடத்திற்கு அண்மையில் உள்ள காணியினை இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவிற்கு வழங்குவதற்காக 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் கிடைக்க வேண்டிய மீதியான ரூபா. 37.9 மில்லியனுள் ஒரு வருடம் மற்றும் 1 வருடத்திற்கும் 5 வருடத்திற்கும் இடைப்பட்ட காலப் பகுதியினுள் தீர்க்கப்பட்டிருக்காத மீதிகள் முறையே ரூபா. 8.2 மில்லியன், ரூபா. 29.7 மில்லியன் என்பன உள்ளன. இந்தக் காணிக்கு உரியதான குத்தகை உடன்படிக்கையும் ஏற்படுத்தப்பட்டிருக்காததுடன் கணக்காய்வு தினம் வரையிலும் இந்தத் தொகையை அறவிடுவதற்கு அதிகார சபை தவறி இருந்தது.

மேலும், சிறில் சீ பெரேரா மாவத்தையில் அமைந்துள்ள ரூபா. 83.723 மில்லியன் பெறுமதியான 01 ஏக்கர் 02 ரூட் 14.9 பேர்ச் கொண்ட காணியை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு பெற்றுக் கொண்டிருந்த போதிலும் சட்டரீதியான பரிமாற்ற நடவடிக்கைகள் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை.

**பொருளாதார ரீதியிலான நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படாத காணிகள்**

திருகோணமலை துறைமுகத்திற்குச் சொந்தமான காணிகளில் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் வசிக்கும் அனுமதியற்ற வதிவிடதாரர்களுக்கு எதிராக 2023 ஜூலை 10 ஆம் திகதி வரையில் தொடுக்கப்பட்டிருந்த வழக்குகளின் எண்ணிக்கை 147 ஆக இருந்ததுடன் காலப் பகுதியினுள் அகற்றப்படாத வதிவிடதாரர்களின் எண்ணிக்கை 37 ஆகும். அதே போன்று, எதிர்காலத்தில் வழக்கு தொடுப்பதற்கு எண்ணியுள்ளோரின்

தொகை 46 ஆக உள்ளது. மேலும், திருகோணமலை துறைமுகத்திற்குச் சொந்தமான 1,871 ஹெக்டயரான 04 காணித் துண்டுகள் பொருளாதார ரீதியில் பயன்படுத்தப்படாது காணப்படுகின்றது.

**அதிகார சபைக்கு உரித்தாக்கப்பட்டிருக்காத பங்குகளின் உரிமை**

2010 ஆம் ஆண்டில் தெற்காசிய பிரவேச முடிவுமுனை (South Asis Gateway Terminal Ltd – SAGT) கம்பனி ஆரம்பிக்கப்படும் சந்தர்ப்பத்தில் இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையினால் வழங்கப்பட்டிருந்த மூன்று பாரம் தூக்கிகளின் பெறுமதியைப் பரிமாற்றம் செய்வதற்காக ரூபா. 141.63 மில்லியன் பெறுமதிக்கு அந்த கம்பனியின் பங்குகளை அதிகாரசபைக்கு வழங்குவதற்கு உடன்பட்டிருந்தது. எவ்வாறு இருப்பினும், 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையில் குறித்த பங்கு உரிமையை அதிகாரசபைக்கு அதற்கமைய வழங்கி இருக்காததுடன் குறித்த கம்பனியினால் பங்குகளுக்காக எந்தத் தொகையும் செலுத்தப்பட வேண்டியது இல்லை என 2023 ஆம் ஆண்டு மீதி உறுதிப்படுத்தல் மூலம் பதில் வழங்கியிருந்தது.

**துணைக் கம்பனிகளுக்கான கொள்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்காமை**

2021 நவம்பர் 16 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையுடன் வழங்கப்பட்டுள்ள பொது முயற்சிகளுக்கான நியதிச்சட்ட நல்லாளுகை வழிகாட்டல்களுக்கு அமைய நிர்வகிக்கும் கம்பனிக்கு தாய் கம்பனியின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட துணைக் கம்பனியின் கொள்கை (Board approved subsidiary policy ) தயாரிக்கப்பட்டு அதற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபையிடம் 03 துணைக் கம்பனிகளுக்காக அத்தகைய கொள்கை ஒன்று தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை.

**துணைக் கம்பனி ஒன்றினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடனுக்காக பிணை நிற்றல்**


இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையில் நிர்வகிக்கப்படும் கம்பனியாக மாகம்புர துறைமுக முகாமைத்துவ கம்பனி 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் 2013 ஜூலை 05 ஆம் திகதி நிறுவப்பட்டு இருந்ததுடன் முகாமைத்துவ ஒப்பந்தத்தின் மூலம் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் செயல்பாட்டு முகாமைத்துவம் கம்பனியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. கம்பனியினால் பெட்ரோலிய கூட்டுத்தாபனத்திடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட அனுமதி பத்திரத்தின் மூலம் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் எரிபொருள் வழங்குனராக செயல்பட ஆரம்பித்திருந்ததுடன் அதற்காக 2014 ஆம் ஆண்டில் கம்பனி தனியார் வங்கியிடம் இருந்து ஐக்கிய அமெரிக்க டொலர் 24 மில்லியன் கடன்

தொகையினைப் பெற்றுக் கொண்டிருந்தது. அதற்கமைய களஞ்சியப்படுத்துதல் மற்றும் சர்வதேச கப்பல்களுக்கு மீள் ஏற்றுமதி செய்தல் என்பவற்றை நோக்காக கொண்டு பாரிய அளவிலான எரிபொருள் இறக்குமதி செய்யப்பட்டது. எவ்வாறு இருப்பினும், அடிப்படை ரீதியில் உலக சந்தையில் எண்ணெய் விலை வீழ்ச்சி அடைந்த காரணத்தால் கம்பனிக்கு எரிபொருள் வழங்குதல் மூலம் குறிப்பிடத்தக்களவு நட்டம் ஏற்பட்டிருந்தது என்பதால் அதில் கடன் தொகை மற்றும் வட்டியாக ஐக்கிய அமெரிக்க டொலர் 26.49 மில்லியன் (ரூபா. 9,617 மில்லியன்) இந்த அறிக்கை தினம் வரையிலும் தீர்க்கப்படாது இருந்தது. 2017 நவம்பர் தொடக்கம் கம்பனியின் செயல்பாட்டு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு இருந்ததுடன் கடனைத் தீர்ப்பதற்காக கம்பனிக்குச் சொந்தமாக போதியளவு சொத்துக்கள் இல்லை என்பதால் வங்கியினால் இந்தக் கடனை அறவிடுவதற்காக நிர்வகிக்கப்படும் கம்பனிக்கு மற்றும் அதிகார சபைக்கு எதிராக இரண்டு வழக்குகள் 2020 ஆம் ஆண்டில் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டு இறுதி வரையில் வழக்கு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு இருக்கவில்லை. மேலும், மேல் மாகாண உயர் நீதிமன்ற வழக்கு இலக்கம் HC (Civil) 97/2021/CO கொண்ட வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் 2022 ஜுன் மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் முடிவு கட்டுபவர் ஒருவர் நியமிக்கப்பட்டு கம்பனியினை முடிவுறுத்தும் நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்

வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் இலங்கையில் கப்பல்துறை ஏற்றுமதி இறக்குமதி போக்குவரத்து செயற்பாடுகளில் வசதிகளை வழங்குவதற்காகத் தாபிக்கப்பட்டுள்ள அரச உரிமை உள்ள தொழில் முயற்சி ஆகும். அரச துறையிலுள்ள நிறுவனப் பொருட்களை ஏற்றுமதி செய்தல், சுங்க அனுமதி மற்றும் ஏனைய சேவைகளை வேறு கப்பல் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளுவதைக் குறைத்து அந்த சேவைகளை அரச உரிமைத்துவத்துடன் உள்நாட்டு நிறுவனத்தின் மூலம் மேற்கொண்டு அந்நிய செலாவணியை நாட்டினுள் தடுத்து வைக்கும் நோக்கில் இந்த கம்பனிக்கு அரச அனுசரனை வழங்கப்பட்டிருந்ததுடன் அந்தக் கம்பனிக்கு Ceylon Breeze மற்றும் Ceylon Princess எனும் பெயரில் இரண்டு கப்பல்கள் உரிமையாக இருந்தன. கம்பனியின் முக்கிய இரு வருமான மார்க்கமாக இருந்தது கூட்டுத்தாபனத்தின் கப்பல்கள் மூலம் வருமானத்தினை ஈட்டுதல், (Voyage) கூட்டுத்தாபனத்தின் கப்பல்களை வேறு நிறுவனங்களுக்கு செயல்பாட்டு நடவடிக்கைகளுக்காக வாடகை அடிப்படையில் வழங்குதல் மற்றும் வேறு நிறுவனங்கள் மூலம் வாடகை அடிப்படையில் கப்பல்களைப் பெற்றுக் கொள்ளுதல் (Charter Hire) ஆகும். 2023 ஆம் ஆண்டில் Voyage மூலம் ரூபா. 878.67 மில்லியன்

மற்றும் Charter ர்சைந சேவைகள் மூலம் ரூபா. 5,336.83 மில்லியன் வருமானம் ஈட்டப்பட்டிருந்தது. கம்பனி மேலே கூறப்பட்ட படகுகளைக் கொள்வனவு செய்வதற்காக 2016 ஆம் ஆண்டில் 70 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் காலக் கடன் வசதி மற்றும் அதன் வட்டியினை செலுத்துவதற்கு வட்டி முதலீட்டு கடனாக 5.44 மில்லியன் அமெரிக்க டொலரை மக்கள் வங்கியில் இருந்து பெற்றுக் கொண்டிருந்தது. 2023 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டில் இலங்கை ரூபாவானது ஐக்கிய அமெரிக்கா டொலருடன் ஒப்பிடும்போது 12.4 சதவீதத்தினால் குறைவடைந்த காரணத்தால் ரூபா. 2,811.9 மில்லியன் அந்நிய செலாவணி நட்டம் ஏற்பட்டிருந்தமையே கம்பனியின் மொத்த நட்டத்திற்கு காரணமாகி இருந்தது.




கம்பனி 2016 ஆம் ஆண்டு தொடக்கம் நட்டத்தினை அறிக்கையிட்டிருந்ததுடன் 2023 மார்ச் 31 ஆம் திகதியிலான நிதிக் கூற்றுக்கு அமைய நட்டம் ரூபா. 1,857.13 மில்லியனாக இருந்ததுடன் திரண்ட நட்டம் ரூபா. 10,855.14 மில்லியன் ஆகும். மேலும், 2023 மார்ச் 31 ஆம் திகதியில் கம்பனியின் தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா. 9,210.1 மில்லியன் எதிர்மறை பெறுமதியினைக் கொண்டிருந்தது. அதற்கு அமைய கம்பனியின் தொடர்ந்து நிலைத்திருக்கும் தன்மை தொடர்பில் நிச்சயமற்ற தன்மை காணப்பட்டது.

**அரச துறையினால் கப்பல் மூலம் பொருட்கள் இறக்குமதி செய்தல்**

இலக்கம் அமப/16/0035/737/003 கொண்ட 2016 ஜனவரி 21 ஆம் திகதி இடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் 2005 மே 06 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 415 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கை ஒழுங்கு விதிகளின் பிரகாரம் வெளிநாட்டு மானிய செயற்திட்டம் உள்ளிட்ட அனைத்து அரச நிறுவனப் பொருட்களும் இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் ஊடாக இறக்குமதி செய்யப்பட வேண்டும் என்பதுடன் அதில் அரச துறை நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுதல்

வேண்டும். எவ்வாறு எனினும் 2018 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அரச துறையின் பொருட்களைக் கம்பனியின் ஊடாக கொண்டு செல்லும் சந்தர்ப்பங்கள் ஒப்பீட்டளவில் குறைவாக இருந்ததுடன் அரச நிறுவன கப்பல் கூட்டுத்தாபன கம்பனி ஊடாக பொருட்களை இறக்குமதி செய்யவில்லை எனில் அதற்கு கைவிடல் கட்டளை (Waivers) பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். 2021/22 ஆம் ஆண்டில் மற்றும் 2022/223 ஆம் ஆண்டில் கைவிடல் கட்டளை முறையே 185 உம் மற்றும் 118 உம் அரச துறையில் பாரிய அளவில் ஏற்றுமதி நடவடிக்கைகளில் ஈடுபடும் அரச நிறுவனங்கள் வழங்கியிருந்ததுடன் அந்த நிறுவனங்களும் கம்பனியின் சேவையினைப் பெற்றுக் கொள்ளாது வேறு கப்பல் கம்பனி மூலம் பொருட்களை இறக்குமதி செய்திருந்தது.

## வணிகக் கப்பற்றுறை செயலகம்

**பொறுப்புகள் மற்றும் திட்டங்கள்**

இலங்கையில் வணிகக் கப்பல் நடவடிக்கைகள் நிர்வாகப் பொறுப்பு மற்றும் கடல்சார் நடவடிக்கைகளை கண்காணிப்பு செய்தலின் மொத்த பொறுப்பும் வணிகக் கப்பற்றுறை செயலகத்தின் மூலம் நிறைவேற்றப்படுகின்றது. இந்த நிறுவனம் 1971 இன் 15 ஆம் இலக்க வணிகக் கப்பல் நடவடிக்கை அதிகார சட்டம், 1972 இன் 10 ஆம் இலக்க கப்பல் முகவர்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கும் அதிகார சட்டம், 1919 இன் 40 ஆம் இலக்க அட்மிரல் நீதிமன்ற அதிகாரம் தொடர்பான அதிகார சட்டத்தின் பிரிவுகள் மற்றும் பின்னைய காலங்களில் உருவாக்கப்பட்ட பிரமாணங்கள் என்பன நடைமுறையில் உள்ளன. அந்த அலுவலகத்தின் மூலம் கடல் வாழ் உயிரின சொத்துக்களுக்கு பாதுகாப்பு, கடல் சார் கல்வி, பயிற்சி திறமை என்பன தொடர்பில் சான்றிதழ் வழங்குதல் இலங்கை அரசாங்கத்திற்குக் கப்பல்களைப் பதிவு செய்தல் கப்பல் முகவர்களுக்கு கொள்கலன் மத்திய நிலையங்கள் செயற்பாட்டாளர்களுக்கு வருடாந்தம் அனுமதிப் பத்திரம் வழங்குதல் மற்றும் அனைத்து தேசிய மற்றும் சர்வதேச மரபுகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்கி செயல்படுதல் தொடர்பில் பொறுப்பேற்கின்றது. 2023 ஆம் ஆண்டில் செயலகத்தின் செலவு ரூபா. 115.7 மில்லியனாக இருந்ததுடன் இணைந்த திட்டத்திற்கு அமைய 12 பிரதான செயல்பாடுகள், 04 குறுகிய காலத் திட்டங்கள் மற்றும் 03 நீண்ட காலத் திட்டங்கள் என்பன எதிர்காலத் திட்டங்களாகக் குறிப்பிடப்பட்டிருந்தன. எனினும் செயற்பாட்டு திட்டத்திற்கு அமைய ILO மரபிக்கு இணங்க உயிரியல் கூறுகளை சேர்த்து அனைத்து இலங்கை மாலுமிகளுக்கு அடையாள அட்டை விநியோகித்தல் (SID) தொடர்பான செயற்பாடு மட்டும் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய செயற்பாடுகள் அதில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**கணக்கு வைக்கப்படாத மற்றும் விளைவற்ற சொத்துக்கள்**

அரச கணக்கீட்டுப் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் 05/2023 மற்றும் 2023 நவம்பர் 30 ஆம் திகதி இடப்பட்ட அரச கணக்கு வழிகாட்டல் சுற்றறிக்கையில் 08/02 ஆம் பிரிவின் பிரகாரம் இனம் காணப்பட்ட நிதி அல்லாத சொத்துக்களின் மொத்த செலவிற்கு அல்லது மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். எனினும் யாழ்ப்பாண வணிகக் கப்பல் துறை உப செயலகம், சுற்றுலா விடுதி மற்றும் நீர்த்தளம் போன்ற நிதி அல்லாத சொத்துக்களில் நிர்மாண பெறுமதி ரூபா. 79.28 மில்லியனாக இருந்ததுடன் நிதி அல்லாத சொத்துக்களைக் கணக்கீடு செய்யும் போது ரூபா. 45.48 மில்லியன் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் அந்த சொத்து 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் செயற்பாடின்றி காணப்பட்டதுடன் அதன் பராமரிப்பு செலவுக்காக 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கு ரூபா. 3.4 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

## இலங்கை துறைமுகங்கள் முகாமைத்துவம் மற்றும் ஆலோசனை சேவை கம்பனி.

இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையில் அத்தியாவசியமான சேவைகளைச் சர்வதேச தரத்திற்கு அமைய வழங்குவதற்காக இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் 40 சதவீதத்தினையும் மற்றும் இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் 15 சதவீதத்தினையும் பங்கு மூலதனமாகக் கொண்ட கம்பனி தாபிக்கப்பட்டுள்ளது. கம்பனியின் தற்போதைய வணிக நடவடிக்கைகளாக துறைமுகங்கள் போக்குவரத்து செயற்பாட்டு கட்டுப்பாடு, அவற்றை ஒழுங்குபடுத்துதல், பண்டங்களை கையாளுதல், வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களை அமைத்தல், காலி முகத்திடலின் முகாமைத்துவம் நிர்வாகம் மற்றும் கடற்தொழில் பதவி அணியினரை ஆட்சேர்ப்பு செய்தல் என்பனவாகும். 2023 ஆம் ஆண்டு மொத்த வருமானம் ரூபா. 145.66 மில்லியனாக இருந்ததுடன் மொத்த செலவு ரூபா. 143.24 மில்லியன் ஆகும். எனினும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வருமானம் 3 சதவீதத்தினால் வீழ்ச்சி அடைந்திருந்ததுடன் மொத்த இலாபமும் ரூபா. 7.1 மில்லியனில் இருந்து ரூபா. 2.5 மில்லியன் வரையில் ரூபா. 4.7 மில்லியன் வீழ்ச்சி அடைந்திருந்தது. கம்பனியினால் 2014 ஆம் ஆண்டில் Tangyo Haulage தனியார் நிறுவனத்திடமிருந்து போக்குவரத்து வாகனங்கள் ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டு அதற்கான ஒப்பந்தத்தின் பிரகாரம் பணம் செலுத்தாத காரணத்தால் வழங்கல் கம்பனிக்கு ரூபா. 28.9 மில்லியன் நட்ட ஈடு செலுத்துமாறு நீதிமன்றத்தினால் 2017 ஆம் ஆண்டில் உத்தரவிடப்பட்டிருந்தது. மேலும், துறைமுகங்கள் அதிகார சபைக்குரிய Macculum Gate வளாகத்தில் சிற்றுண்டிச்சாலை ஒன்றை 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரையில் நடத்திச்

செல்வதற்கு மூன்றாம் தரப்பினருடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா. 4.5 மில்லியன் தொகை கம்பனிக்கு அறவிடப்பட வேண்டி இருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அந்தத் தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

# விமான சேவைகள்

அரசாங்கத்தில் காணப்படுகின்ற கொள்கைகளுக்கு இணங்கவும் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் வழங்கப்படுகின்ற வழிகாட்டிகளின் பிரகாரம் துறைமுகம், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் துறைகள் மற்றும் அது தொடர்பாக நியதிச் சட்ட நிறுவனங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்ட வழங்கல்கள், அமுல்படுத்தல்கள், பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீடு செய்தல் துறைமுகம் மற்றும் கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் பிரதான இலக்காக இருந்ததுடன் விமான சேவைகள் துறைக்குரிய சிவில் விமான சேவைகள் அதிகார சபை, வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (ஸ்ரீ லங்கா) (தனியார்) கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட சிறிலங்கன் எயாலைன்ஸ் மற்றும் அதன் துணைக் கம்பனிகளுக்கு அமைச்சினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைந்து கொள்வதற்காக தேவையான வழிகாட்டல் வழங்கப்படுகின்றது.

## கணக்காய்வு அவதானிப்புக்கள்

### சிவில் விமான சேவைகள் அதிகார சபை

**குடியகல்வு வரிகள்**

**கணக்கீடு செய்யப்படாமை**

அதிகார சபையின் வருமானங்களை இனங்காணும் கொள்கையின் பிரகாரம் குடியகல்வு வரியின் அடிப்படையில் (Embarkation Levy) சேவைக் கட்டணம் அட்டுறு அடிப்படையில் இனங்காண வேண்டியிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ஆறு விமானக் கம்பனிகளிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 11,070.73 மில்லியன் ஆன குடியகல்வு வரி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதில் பொதுத் திறைசேரிக்கு, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு மற்றும் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (ஸ்ரீ லங்கா) (தனியார்) கம்பனிக்கு பகிர்ந்தளிக்க வேண்டி இருந்த பணம் முறையே ரூபா 8,303.05 மில்லியனாலும், ரூபா 899.50 மில்லியனாலும் மற்றும் ரூபா 1,798.99 மில்லியனாலும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக அதிகார சபையின் விமான நிலைய வரியின் அடிப்படையில் சேவைக் கட்டண வருமானம் ரூபா 69.19 மில்லியனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**வெளிநாட்டு விற்பனை மிகைக் கட்டணம் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்படாமை**

2008 மே 22 ஆம் திகதிய இலக்கம் 1550/7 என்ற இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரத்தில் 07 மற்றும் 08 ஆம் பிரமாணங்கள் மற்றும் 2023 நவம்பர் 28 ஆம் திகதிய இலக்கம் 23/1937/628/094 என்ற அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இலங்கையில் இருந்து ஆரம்பிக்கின்ற விமான பயணங்களுக்காக இலங்கையிலிருந்து வெளியே விநியோகிக்கப்பட்ட அல்லது விற்பனை செய்யப்படுகின்ற

ஒவ்வொரு பிரயாணிகள் அனுமதிச் சீட்டுத் தொடர்பாகவும் அமெரிக்க டொலர் 60 வெளிநாட்டு விற்பனை வரியாக (OSS Levy) அல்லது அந்த நிதியத்துக்கு சமமான நிதியம் ஒன்று அறவிட வேண்டியிருந்ததுடன் அவ்வாறு அறவிடப்படுகின்ற வருமானம், ஒன்றிணைந்த நிதியத்தில் செலவு வைக்கப்படல் வேண்டும். எனினும் அதிகார சபை, வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்திலிருந்து 2023 நவம்பர் 20 வரை அவ்வாறு சேர்க்கப்பட்ட நிதி ஒன்றினைந்த நிதியத்தில் செலவு வைக்கப்படாமல் அதிகார சபையின் வருமானமாகக் கருதப்பட்டிருந்தது.

மேலும் 2023 நவம்பர் 28 ஆம் திகதிய இலக்கம் 23/1937/628/094 என்ற அமைச்சரவை தீர்மானத்தின் மூலமும் உரிய வருமானம் திரண்ட நிதியத்தில் செலவு வைக்குமாறும் அதிகார சபைக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தால் அதிகார சபையில் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்கள் ஒன்றினைந்த நிதியத்திற்கு அனுப்புவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அதிகார சபை நிருவகித்த உழைப்புக்களும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

**நிதியத்தின் பங்களிப்புப் பணம் மேலதிகமாக செலுத்துதல்**

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதிய சட்டங்களின் விளக்கம் காண்பிக்கப்பட்டுள்ள உழைப்புக்களுக்கு முரணாக அதிகார சபையினால் அந்த நிதியப் பங்களிப்பு கணிப்பிடும் போது பல்வேறு வகையான 07 படிவகைகள் உள்ளடக்கப்பட்டிருந்தது. இவ்வாறு தவறான கணிப்பிடலின் காரணமாக 2020 – 2023 தெரிவுக் கணக்காய்வு காலப்பகுதியில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கு ரூபா 125.15 மில்லியனும் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு ரூபா 15.02 மில்லியனும் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

**இழக்கப்பட்ட வட்டி வருமானம்**

அதிகார சபையின் பதவியணியினர் மற்றும் நிருவாக கைநூலின் பிரகாரம், ஆதனங்கள் மற்றும் வாகன கடன்களுக்கான வட்டி விகிதம் 7 சதவீதமாக இருக்க வேண்டிய போதிலும் அதிகார சபையால் அந்த வட்டி வீகிதமாக 4.2 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அதன் விளைவாக 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட பிரகாரம் முறையே ரூபா 2.11 மில்லியன் மற்றும் ரூபா 1.79 மில்லியன் ஆன கடன் வட்டி வருமானம் அதிகார சபைக்கு இழக்கப்பட்டிருந்தது.

**விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (ஸ்ரீ லங்கா) (தனியார்) கம்பனி**

**குறைநிரப்பு உடன்படிக்கையின் கீழ் செலுத்துதல்**

கம்பனியால் வரையறுக்கப்பட்ட சைனா ஹாபர் இஞ்சினியரிங் கம்பனி (CHEC) உடன் 2013 செப்தெம்பர் 06 ஆம் திகதி மத்தள ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்திற்காக கைச்சாத்திடப்பட்ட பிரதான உடன்படிக்கை (2009 நவம்பர் 27 ஆம் திகதி கையொப்பம் இடப்பட்ட அம்பாந்தோட்டை சர்வதேச அபிவிருத்தி செயற்திட்டத்தின் ஒப்பந்தம்) மத்தள பராமரித்தல், பழுதுபார்த்தல் மற்றும் மறுசீரமைத்தல் (MRO) செயற்திட்டத்திற்கு உரிய மொத்தக் கிரயம் அ.டொலர் 122.03 மில்லியன் மேலதிக பணிகளை அமுல்படுத்துவதற்காக குறைநிரப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. எனினும் உடன்படிக்கை நிபந்தனையின் பிரகாரம் சீனாவின் EXIM வங்கியால் வழங்கப்படுகின்ற சலுகைக் கடன், கம்பனியால் வழங்கப்படாதிருந்தமையால் உடன்படிக்கையின் தரப்பினர்கள் அதற்கு கட்டுப்பட்டிருக்கவில்லை.

எனினும் கம்பனியின் தலைவரால் 2013 ஒக்தோபர் 03 ஆம் திகதி CHEC இற்கு ஆரம்ப கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் உடன்படிக்கை செல்லுபடியாகாதிருக்கும் போது பிரயாணிகள் இறங்குதுறை கட்டிடத்தின் புதிய நுழைவாயில் ஓய்வு அறையில் நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இலக்கம் MMEZD/AV/04/AASL-MRIADEV என்ற கடிதத்தின் மூலம் சுற்றுலாத் துறை இராஜாங்க அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்ட குழுவினால் வழங்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் மற்றும் துறைமுகங்கள் கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட மீள்மதிப்பீட்டில் குறைநிரப்பு அறிக்கையின் பிரகாரம், CHEC இனால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 565.49 மில்லியன் பெறுமதிக்குச் சமமான அ.டொலர் 1.65 மில்லியன் பெறுமதியுடைய பட்டியல்கள், குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. இறுதியாக CHEC மற்றும் கம்பனியால் பொறியியலாளர் சான்றிதழ் இன்றி "Quantum of Merit" அடிப்படையில் மேற்கூறப்பட்ட தொகை மூன்று தவணைகளில் செலுத்துவதற்கு இணங்கப்பட்டிருந்தது. எனினும் அநேகமான திட்டமிடல்கள் தற்போதைக்காக பொருத்தமாக இல்லாமை மற்றும் கட்டிடம் நிர்மாணித்தல் நிர்மாணிக்கும் வரை ஆரம்பிக்க முடியாதிருந்தமையினட காரணமாக மேற்கூறப்பட்ட தொகையிலிருந்து ரூபா 187.60 மில்லியன் (அ.டொலர் 547,524) சிக்கனமற்றதாக இருந்தது.

**திரண்ட நிதியத்தில் குறித்துரைத்த இலாபம் வழங்கப்படாமை**

2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 5.3 ஆம் பிரிவின் பிரகாரம் வரி செலுத்தியதன் பின்னர் இலாபம் ஆகக் குறைந்தது முப்பது (30) சதவீதம் திரண்ட நிதியம் / பங்கு உரிமையாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும். 2023 ஆம் ஆண்டுக்காக கம்பனி ரூபா 28,121 மில்லியன் வரிக்குப் பின்னரான இலாபம் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் ரூபா 8,436 மில்லியன் தொகை ஒன்றிணைந்த நிதியத்திற்கு பகிர்ந்தளிக்க வேண்டியிருந்த போதிலும் கம்பனியால் ரூபா 5,000 மில்லியன் மாத்திரம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.

மேலும் கம்பனியால் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வரிக்குப் பின் இலாபம் ரூபா 4,802 மில்லியன் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் ரூபா 1,440 மில்லியன் பகிர்ந்தளிக்க வேண்டியிருந்தது. எனினும் கம்பனி திரண்ட நிதியத்திற்கு ரூபா 1,000 மில்லியன் மாத்திரமே பகிர்ந்தளித்திருந்தது.

**சிக்கனமற்ற செலவினம்**

BIA அபிவிருத்தி II ஆம் கட்டம் 2 ஆவது படிமுறை செயற்திட்டம் (தொகுதி A - பிரயாணிகள் இறங்குதுறை கட்டிடம் நிர்மாணித்தல்) மற்றும் அது சார் வேலைகள் தொடர்பான செயற்திட்டம், கைவிடப்பட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட செலவினம் ரூபா 184 மில்லியன் கடப்பாட்டுக் கட்டணம் மற்றும் செயற்திட்டம் சார்ந்த செலவினங்கள் சிக்கனமற்றதாக இருந்தது.

**உலக தரமிடலின் பிரகாரம் வீழ்ச்சி அடைந்தமை**

சர்வதேச விமான நிலையம் சமநிலம் (ACI) இனால் 2018 ஆம் ஆண்டில் உலக விமான நிலையங்கள் தொடர்பாக விநியோகிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் உலகத்தில் 2,583 விமான நிலையங்களில் இலங்கையில் மொத்த விமான அசைவுகளின் பிரகாரம் 370 ஆவது இடத்திலும், மொத்த பிரயாணிகள் பயணித்தலில் 205 ஆவது இடத்திலும் மொத்த பொருட்கள் போக்குவரத்தில் 89 ஆவது இடத்திலும் பின்னோக்கி இருந்தது. எனினும் 2022 ஆம் ஆண்டில் ACI அறிக்கையின் படி 2,677 விமான நிலையங்களில் இலங்கையின் மொத்த விமான பயணங்களின் பிரகாரம் 548 ஆவது இடத்திலும், மொத்த

பிரயாணிகள் போக்குவரத்தின் பிரகாரம் 292 ஆவது இடத்திலும் மொத்த பொருள் போக்குவரத்தின் பிரகாரம் 116 ஆவது இடத்திலும் காணப்பட்டது. அதன் பிரகாரம் 2018 இன் புள்ளி விபரங்களுடன் ஒப்பிடும் போது உலக தரமிடலில் வீழ்ச்சியடைந்து காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. முகாமைத்துவத்தால் காண்பிக்கப்பட்ட கருத்துக்களின் பிரகாரம் வீழ்ச்சி அடைவதற்கு பிரதான காரணமாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் கொவிட் தொற்று நோய் நிலைமை போன்றவை கூறப்பட்டுள்ளது.

**மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலைய செயற்பாடுகள்**

2023 ஆம் ஆண்டில் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாட்டுக் கிரயம் ரூபா 2,412.9 மில்லியனாக இருந்ததுடன் செயற்பாட்டு வருமானம் ரூபா 288 மில்லியன் ஆக இருந்தது. மேலும் விமான நிலையத்தின் செயற்பாட்டு நட்டம் (வரிக்கு முன்) ரூபா 2,124.1 மில்லியனாக இருந்ததுடன் பிரதானமாக அந்நிய செலாவனி மாற்றல் இலாபத்தின் தாக்கம் காரணமாக இலங்கைக்காக வரி செலுத்தியதன் பின்னர் 2023 ஆம் ஆண்டிற்காக வரி செலுத்திய பின்னர் தேறிய இலாபம் 926.6 மில்லியன் ஆகும். எனினும் 2018 முதல் 2023 ஆம் ஆண்டு வரை வரி செலுத்திய பின்னர் திரண்ட தேறிய நட்டம் ரூபா 38,489 மில்லியன் ஆக இருந்தது. மத்தளை விமான நிலையத்தில் எதிர்பார்க்கப்பட்ட வருடாந்த பிரயாணிகளின் இயலளவு ஒரு மில்லியன் மாத்திரமாக இரந்த போதிலும் கடந்த ஆறு வருட காலத்தில் வந்த பிரயாணிகளின் எண்ணிக்கை 190,750 ஆக மாத்திரமாக இருந்ததுடன் கடந்த ஆறு வருடங்களில் விமானப் பயணிகளின் எண்ணிக்கை 2,182 மாத்திரம் ஆக இருந்தது.

அதனால் விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்காக அதற்கு விலைகள் உயர்வடைந்து சென்றமை, முரண்பாடுகளை உள்ளடக்கியதாக செலவிடப்பட்ட டொலர் 247.7 மில்லியனுக்கு சமமான ரூபா 36,564 மில்லியன் மொத்தத் தொகை, ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் மேற்கூறப்பட்ட நிர்மாணங்களுக்காக முன்னர் பெறப்பட்ட டொலர் 190 மில்லியன் வெளிநாட்டுக் கடனுக்காக வருடாந்த கடன் வட்டியாக கம்பனியால் ரூபா 1,590 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி செயற்திட்டம்**

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் (BIA) அபிவிருத்தி செயற்திட்டத்தின் II ஆம் கட்டத்தின் 2 ஆவது படிமுறையின் கீழ் நிர்மாண நடவடிக்கைகள் 2020 மார்ச் 04 ஆம் திகதி ஜப்பானின் ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. 09 மாத தாமதத்தின் பின்னர் ஒப்பந்தத்தின் கீழ் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் 2022 ஏப்ரல் 12 ஆம் திகதி நிதி அமைச்சினால் வெளிநாட்டு கடன் சேவை வழங்கல் தொடர்பாக எடுக்கப்பட்ட கொள்கை ரீதியான திர்மானத்தின் காரணமாக பங்களிப்பாளரால் கடன் வசதிகளின் கீழ் சகல கொடுப்பனவுகளையும் கைவிடுவதன் அடிப்படையில் நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தது. அது வரையில் ஒப்பந்தத்தின் உள்ளபடியான செயல் முன்னேற்றம் 5.38 சதவீதமாக இருந்தது. பின்னர் அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் ரூபா 800 மில்லியன் மொத்த மதிப்பீடு ஒன்றுடன் இனங்காணப்பட்ட வேலை விடயம் ஒன்றை அமுல்படுத்துவதற்கு கம்பனி செயற்பட்டிருந்தது.

கோவையில் உள்ளடக்கப்பட்ட தகவலகளின் பிரகாரம் அடிப்படையாக மேற்கூறப்பட்ட ஒப்பந்தம், ஒப்பந்தக் கோவை (packages) தேசிய போட்டியாளர் கேள்வி நடைமுறை ஊடாக கேள்வி கோருவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் கம்பனி 2023 பெப்ரவரி 03 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தின் போது மேற்கொள்ளப்பட்ட பெறுகைகளுக்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கலந்துரையாடல் குழு (CANC) இனால் எடுக்கப்பட்ட தீர்மானம் ஒன்றுக்கு அனுப்பி கேள்விதாரர் இருவரிடமிருந்தும், கூறுவிலை கோரப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட செயற்பாடுகளுக்குரிய மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் 10 சதவீத நிகழ்த்தக்க பொறுப்புடன் ரூபா 275 மில்லியனாக இருந்தது.

செயற்திட்டப் பிரிவின் தலைவரின் 2023 மார்ச் 01 ஆம் திகதிய கடிதத்தில் ஆலோசனையாளர்களின் பொறியியலாளர் பிரதிநிதிக்கு ரூபா 640.28 மில்லியன் கிரயத்தில் ஒரு விலை சமர்ப்பித்தல் மாத்திரம் பெறப்பட்டிருந்தமையும் அது பொறியியல் மதிப்பீட்டினை விட ரூபா 365.28 மில்லியனால் அதிகரித்திருந்தாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் ஆலோசனையாளரின் பொறியியலாளர் முகவரினாலும் 2023 மார்ச் 07 ஆம் திகதிய இலக்கம் IAS-NK/PMU/Pk A/23/1557 என்ற கடிதத்திலும் கேள்வி விலை, பொறியியலாளரின் மதிப்பீட்டை விட 100 சதவீதத்தினால் அதிகரித்திருந்தமை மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் கலந்துரையாடலின் பின்னர் 2.5 சதவீத கழிவு, 4.7 சதவீத நிகழத்தக்கவைகள் மற்றும் வட் வரியினை உள்ளடக்கி ரூபா

475.12 மில்லியன் மொத்த கிரயத்திற்கு 2023 மே 31 ஆம் திகதி கேள்வி கையேற்றல் கடிதம் விநியோகிக்கப்பட்டிருந்தது. பொறியியலாளர் மதிப்பீடு மற்றும் பொறியியலாளர் மதிப்பீட்டுடன் ஒப்பீடு செய்யும் போது ஒப்பந்த விலை 73 சதவீதத்தை விட அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கன் விமான கம்பனி மற்றும் அதன் துணைக் கம்பனிகள்

**கம்பனி மற்றும் தொகுதியின்**

**இலாபம் / நட்டம்**

2024 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான தொகுதியின் இலாபம் (வரிக்கு பின்) ரூபா 7,925.01 மில்லியனாக இருந்ததுடன் அது 2023 ஆம் ஆண்டின் போது - ரூபா 71,306.66 மில்லியன் நட்டமாக இருந்தது. அத்திகதியில் திரண்ட நட்டம் ரூபா 592.626.52 மில்லியனாக இருந்ததுடன் 2023 மார்ச் 31 இல் உள்ளவாறு சராசரி நட்டம் ரூபா 599,605.96 மில்லியனாக இருந்தது. அத்திகதியில் தொகுதியின் நடைமுறைச் சொத்துக்களை விஞ்சிய நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 327,144.66 மில்லியன் (2023 - ரூபா 418,568.67 மில்லியன்) உம், தொகுதியின் மொத்த உரிமை மூலதனம் ரூபா (381,723.67) மில்லியன் (2023 - ரூபா (494,429.99) மில்லியன்) உம் காணப்பட்டது.

மேலும் 2024 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான கம்பனி ரூபா 3,870.86 மில்லியன் (2023 - ரூபா 73,621.53 நட்டம்) தேறிய இலாபமும், ரூபா 607,613.60 மில்லியன் திரண்ட நட்டம் ஒன்று (2023 - ரூபா 610,487.76 மில்லியன் நட்டம்) உம் பெறப்பட்டிருந்ததுடன் அத்திகதியில் கம்பனியின் நடைமுறை சொத்துக்களை விஞ்சிய நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 344,130.60 மில்லியன் (2023 - ரூபா 431,624.55 மில்லியன்) உம், கம்பனியின் மொத்த உரிமை மூலதனம் ரூபா (400,534.71) மில்லியன் (2023 - ரூபா (509,174.88) மில்லியன்) உம் ஆக இருந்தது. 2024 எப்ரல் 25 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் படி நிறுவன மீள் கட்டமைத்தல் மற்றும் தனியார் மயமாக்குகின்ற வரை “நீண்ட கால இருப்பொன்று உள்ளது” என்ற எண்ணக்கருவின் அடிப்படையில் 2024 யூலை 11 ஆம் திகதி திறைசேரி செயலாளர் (பதிற் கடமை) இனால் இலங்கை அரச கம்பனிக்கு (இ.அ) தமது செயற்பாட்டு நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்காக காணப்படுகின்ற நிதி ஒத்துழைப்பை உறுதிப்படுத்தி விநியோகிக்கப்பட்ட கடிதத்ததையும் கவனத்தில் கொண்டு நிதிக்கூற்றுக்கள் நீண்ட கால நிலைத்திருத்தல் என்ற எண்ணக்கருவின் தயாரிக்கப்பட்டிருந்தது.

**விமான அணிகள்**

இலங்கை விமான கம்பனியின் தேவை மதிப்பீட்டின் பிரகாரம் 27 விமானங்கள் தேவையாக இருந்ததுடன் 2024 ஆகஸ்ட் 12 ஆம் திகதி கம்பனியின் கீழ் பௌதீக மற்றும் செயற்பாட்டு விமான அணிகள் முறையே 22 மற்றும் 18 ஆகும். ஆதில் 03 விமானங்கள் 2023 ஒக்தோபர் 29 ஆம் திகதி முதல் 2024 ஆகஸ்ட் வரையான காலத்தில் பயன்படுத்தப்படாமல் இருந்ததுடன் அந்தக் காலத்தில் வாடகையாக ரூபா 2,808.96 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

## மிஹின் லங்கா (தனியார் கம்பனி)

**கலைப்பாளரின் கணக்குகளை சமர்ப்பித்தல்**

2017 ஒக்தோபர் 30 ஆம் திகதிய இலக்கம் MOF/DG/LAD/CO/142/2017 என்ற அமைச்சரவை உறுப்பின் முன்மொழிவு (அ), (ஆ) மற்றும் (இ) இற்கான இலக்கம் அமப/17/2383/733/026-1 மற்றும் 2017 நவம்பர் 08 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திறைசேரி செயலாளரால் கம்பனியைக் கலைப்பதற்காக விசேட முன்மொழிவு ஒன்று அங்கீகரிக்கப்பட்டு வனிக நீதிமன்றத்தில் இருந்து கிடைத்த கோரிக்கையின் பிரகாரம் 2018 மார்ச் 18 ஆம் திகதி கலைப்பாளர் நியமிக்கப்பட்டிருந்தார். கணக்காய்வு செய்யப்பட்ட 2016/17 நிதியாண்டில் இருந்து கலைப்பதற்கு நியமிக்கப்பட்ட திகதி வரையான காலத்திற்காக நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் கம்பனிகள் சட்டத்தின் 296(1) பிரிவின் பிரகாரம் கலைப்பாளரால் தயாரிக்கப்பட்ட 2018 சனவரி 29 ஆம் திகதி முதல் 2022 சனவரி 28 வரை அரையாண்டு கலைப்பாளரின் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு கணக்குகளில் 7 பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2019 சனவரி 28 ஆம் திகதி சமரப்பிக்கப்பட்ட கலைப்பாளரின் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுக் கணக்கின் பிரகாரம் ஆரம்பக் காசு மீதி ரூபா 102.18 மில்லியனாக இருந்ததுடன் 2017 மார்ச் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அந்த மீதி ரூபா 384.74 மில்லியன் ஆனதன் காரணமாக ரூபா 282.55 மில்லியன் வேறுபாடும் அவதானிக்கப்பட்டது. கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களின் திகதி மற்றும் களைப்பாளரின் கணக்குகளில் திகதிகளுக்கு இடையிலான காலத்திற்காக கணக்குகள் தயாரிக்கப்படாமையினால் இந்த மீதிகளுக்கு இடையே வேறுபாடுகளுக்கான காரணம் என கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை.

# முதலீட்டு ஊக்குவிப்பு அலுவல்கள்

இலங்கை போன்ற ஆசிய நாடுகளில் தனிநபர் வருமானத்தின் மெதுவான வளர்ச்சிக்கு பெரும்பாலும் மூலதனப் பற்றாக்குறையே காரணம். இந்தக் குறைபாட்டைச் சமாளிப்பதற்கான சிறந்த உத்தி முதலீட்டு ஊக்குவிப்பாகும். அதன்படி, முதலீட்டு ஊக்குவிப்பு என்பது ஒரு நாடு முதலீட்டுக்கு ஏற்ற இடமாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தேவையான பின்னணியை உருவாக்குவதாகும். அதன் பிரகாரம் முதலீட்டாளர்களுக்கு தேவையான பௌதீக, தத்துவார்த்த, நிதி மற்றும் சுற்றுச்சூழல் வசதிகளை வழங்குதல் முதலீட்டு ஊக்குவிப்பின் மூலம் ஏற்படுத்தப்படும். அதன் பிரகாரம் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் மூலம் பின்வரும் செயற்பாடுகள் மற்றும் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன.

**செயற்பாடுகள்**

இலங்கையின் பிராந்திய வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட கொள்கைகள், உத்திகள், வேலைத்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை உருவாக்குதல்.

இலங்கையில் வெளிநாட்டு நேரடி முதலீடு மற்றும் தனியார் துறை முதலீட்டை ஊக்குவித்தல், பொருளாதார ஆற்றலை ஊக்குவித்தல்

பொருளாதார அபிவிருத்தி வலயங்களை மேம்படுத்துதல், ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்

கொழும்பு தாமரை கோபுரத்தை வணிக மாதிரியொன்றாக மாற்றுதல் மற்றும் அதை சுற்றுலா மையமாக மேம்படுத்துதல்

தொழில்நுட்ப பூங்காக்களை உருவாக்குதல்


டிஜிட்டல் தொழில்நுட்ப வணிக விரிவாக்கல் தொடர்பான நடவடிக்கைகள்

மேற்படி பணிகளை நிறைவேற்றுவதற்கு அமைச்சின் கீழ் பின்வரும் நிறுவனங்களுக்கு ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தன. மதிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் , உண்மையான செலவு மற்றும் சேமிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| நிறுவனத்தின் பெயர் | மதிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் | உண்மையான செலவு | சேமிப்புகள் |
|---|---|---|---|
| -------------------- | ---------------- ரூபா மில்லியன் | ------------- ரூபா மில்லியன் | ---------- ரூபா மில்லியன் |
| முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு | 1,485.8 | 1,215.25 | 270.55 |
| இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை | 824 | 378.74 | 445.26 |
| இலங்கை முதலீட்டுச் சபை | 300 | 300 | - |
| கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு | 7 | 6 | 1 |
| டெக்னோ பாக் டெவெலொப்மென்ட் கம்பனி பிறைவேட் லிமிட்டட் | - | - | - |
| தகவல் தொழிநுட்ப பூங்கா | 13 | 11.33 | 1.67 |
| | ----------- | ------------- | --------- |
| | 2,629.8 | 1,911.32 | 718.48 |
| | ====== | ======= | ====== |

அட்டணை இலக்கம்: 2.28 அமைச்சு மற்றும் தொடர்புடைய நிறுவனங்களின் மதிப்பிடப்பட்ட எற்பாடு, உள்ளபடியான செலவ மற்றம் சேமிப்பு

2023 ஆம் ஆண்டில், மேற்கூறிய பணிகளை நிறைவேற்றுவதற்காக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சிற்கு மொத்தம் ரூபா 2,629.8 மில்லியன் நிகர ஒதுக்கீடுகள் பாராளுமன்றத்தால் வழங்கப்படடிருந்ததுடன் , மீளாய்வாண்டின் இறுதியில் அதில் ரூபா 1,911.3 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டது. விவர வரைபடம் 2.47 இல் காட்டப்பட்டுள்ளது




வுரைபட இலக்கம் 2.47- – மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான செலவு
மூலம் - 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள்

மேற்குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் மற்றும் பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின்போது வெளிப்படுத்தப்பட்ட பொருண்மையான முக்கிய கணக்காய்வு அவதானிப்புகள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

## முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு

**செயற்திட்டத்தை செயல்படுத்துவதில் தாமதம் -துறைமுக நகர செயற்திட்டம்**

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் காணித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கொழும்பு நகரை விரிவுபடுத்துவதற்காக கொழும்பு துறைமுகத்தை அண்டிய நிலத்தை நிரப்புவதற்கான முன்மொழிவொன்றாக கொழும்பு துறைமுக நகர அபிவிருத்திச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை அரசின் கொள்கை மாற்றங்களால் இச்செயற்திட்டம் இடைநிறுத்தப்பட்டது. இதன் விளைவாக, செயற்திட்ட கம்பனியால் 143 மில்லியன் அ.டொலர் இழப்பீட்டுத் தொகையொன்று விண்ணப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கு பதிலாக 2 ஹெக்டேர் வணிக காணியொன்று செயற்திட்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. இந்த காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி பதிவு செய்யப்படாததால், காணியின் பெறுமதியிலிருந்து அரசிற்கு இழப்பொன்று ஏற்பட்டிருந்தது.

துறைமுக நகரத்தின் கழிவு நீர் முகாமைத்துவத்திற்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கும் வரை, தற்காலிகத் தீர்விற்கான எதிர்பார்க்கப்பட்ட செலவினம் ரூபா 1,000 மில்லியனாக மதிப்பிடப்பட்டிருந்தும் திட்டத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் விலை அதிகரிப்பு காரணமாக மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 3,700 மில்லியனாக அதிகரித்துள்ளது. இப்பணிகள் கொழும்பு துறைமுக அபிவிருத்தி செயற்திட்டத்திற்கான முத்தரப்பு உடன்படிக்கையின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தபோதிலும் செயற்திட்டத்தின் பணிகள் 2022 திசெம்பரில் ஆரம்பிக்கப்பட்டன. 2017-2019 காலப்பகுதியில் இல் ரூபா 1,600 மில்லியன் செலவிடப்பட்ட போதிலும், 2023 செப்டம்பர் 31 வரை செயற்திட்டம் முடிக்கப்படவில்லை. மேலும், ரூபா 2,900 மில்லியன் மொத்த கிரயத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த நிரந்தரத் தீர்விற்கான பணிகளும் 2022 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தபோதிலும் 2023 செப்டம்பர் 31 வரை இச்செயற்திட்டத்தின் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை. 2022 ஆம் ஆண்டளவில், தற்காலிக மற்றும் நிரந்தர தீர்வுகள் இரண்டும் செயற்படுத்தப்படவில்லை. எனவே, தற்காலிக தீர்வின் மூலம் எதிர்பார்த்த பணிகள் நிறைவேற்றப்படாத நிலையில் நிரந்தர தீர்வை அமுல்படுத்துவதில் அமைச்சு கவனம் செலுத்தாமையால் தற்காலிக தீர்விற்காக செலவிடப்பட்ட ரூபா 3,700 மில்லியன் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டமொன்றாக அவதானிக்கப்பட்டது.

முத்தரப்பு ஒப்பந்தத்தின் அட்டவணை எண். 10 இன் பிகாரம் , வணிக நிலம், பொது நிலம் மற்றும் சாலைகளுக்கான நிலம் உள்ளிட்ட 118 காணித் துண்டுகளுக்கான மேம்பாடு 2019 செப்டம்பர் 16 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தபோதிலும் 2023 செப்டம்பர் 30 வரை 85 காணித் துண்டுகளுக்கு மட்டுமே நிறைவுச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது. மேலும், சாலைகள், பாலங்கள் மற்றும் சுரங்கப்பாதைகள் 2020 மார்ச் 14 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தபோதிலும் , 2023 செப்டம்பர் 30 வரை 50 சதவீதத்திற்கும் அதிகமாக முடிக்கப்பட்டிருந்ததுடன் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. 2020 மார்ச் 9 இல் முடிக்கப்பட வேண்டிய நிலப்பரப்பு வேலைகளில் 2023 நவம்பர் 30 ஆம் திகதி வரையில் 77 சதவீதம் மட்டுமே முடிக்கப்பட்டிருந்தது. 7 கட்டங்களாக முடிப்பதற்கு திட்டமிடப்பட்ட தெற்கு கழிவு நீர் பாதை 2023 ஜுலை 11 இல் முடிக்க திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2023 செப்டம்பர் 30 வரை அதன் மூன்று கட்டங்கள் இன்னும் திட்டமிடல் கட்டத்திலேயே காணப்பட்டன.

## இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை

**அறவிடப்பட முடியாத முதலீட்டுத் தொகை**

சபையினால் முதலீடு செய்யப்பட்ட கம்பனிகளின் இருப்பு தொடர்பிலான தொடர்ச்சியான பின்தொடர்தல் நடைமுறைகளின் போதாமை காரணமாக, கம்பனிப் பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்ட 26 கம்பனிகளில் செய்யப்பட்ட ரூபா 40.22 மில்லியன் ஆன பங்கு முதலீடுகளை அறவிடுவதற்கு தவறியிருந்தது.

**ஏற்றுமதி ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான பின்தொடரல் நடவடிக்கை எடுக்கப்படாமை**

2023 ஆம் ஆண்டில் ரூபா 16.49 மில்லியன் செலவில் நடாத்தப்பட்ட 07 ஏற்றுமதி ஊக்குவிப்புத் திட்டங்களில் பங்குபற்றிய 81 ஏற்றுமதியாளர்களின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு போதுமான பின்தொடர்தல் நடைமுறைகள் சபையினால் பின்பற்றப்படவில்லை.

## டெக்னோ பாக் டெவெலொப்மென்ட் கம்பனி பிறைவேட் லிமிட்டட்

**தொழிநுட்ப பூங்கா நிர்மாணிப்பதில் தாமதம்**

காலி மற்றும் குருநாகல் தொழில்நுட்ப பூங்காக்கள் 2021 இல் நிர்மாணிக்கப்பட்டு 2 வருடங்கள் கடந்துள்ள போதிலும், பௌதீக பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட 2024 பெப்ரவரி 05 ஆம் திகதி வரையில் நிர்மாணப் பணிகள் நிறுத்தப்பட்டிருந்தன. இந்த தாமதம் காரணமாக காலி மற்றும் குருநாகல் தொழில்நுட்ப பூங்கா ஒப்பந்த உடன்படிக்கையின் 14.6 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்தம் தாமதமாதன் அடிப்படையில் முறையே ரூபா 236.36 மில்லியன் மற்றும் ரூபா 416.8 மில்லியன் டெக்னோ பார்க் டெவலப்மென்ட் பிரைவேட் லிமிடெட் கம்பனி மூலம்

ஒப்பந்ததாரருக்குச் செலுத்தப்பட வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் அரசுக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 653.16 மில்லியன் ஆகும். மேலும், காலி தொழில்நுட்ப பூங்காவின் பொறியியலாளர் ஆலோசகருக்கு 2022 ஏப்ரல் முதல் ரூபா 18.17 மில்லியன் மற்றும் குருநாகல் பூங்காவின் பொறியியல் ஆலோசகருக்கு 2023 திசெம்பர் 31 இல் ரூபா 36.19 மில்லியன் மற்றும் காலி பூங்காவின் நிர்மாண ஒப்பந்ததாரருக்கு 2022 மார்ச் 31 இல் ரூபா 950.6 மில்லியன் செலுத்தப்பட்டிருக்க வேண்டும்.

அதற்கு மேலதிகமாக நுவரெலியா மற்றும் கண்டி உத்தேச தொழில்நுட்ப பூங்காவை நிர்மாணிப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட கம்பனி 2021 நவம்பர் 16 மற்றும் 2022 பெப்ரவரி 24 ஆகிய திகதிகளில் செயற்திட்ட முன்மொழிவை சமர்ப்பித்திருந்த போதிலும் அதன் நிர்மாணப் பணிகள் 2023 திசெம்பர் 31 வரை ஆரம்பிக்கப்படவில்லை.

**தகவல் தொழிநுட்பப் பூங்கா**

மீளாய்வாண்டில் யாழ்ப்பாணத் தகவல் தொழில்நுட்பப் பூங்காவின் கீழ் 11 சான்றிதழ் கற்கைநெறிகள் மற்றும் டிப்ளோமா கற்கைநெறிகள் மற்றும் 3 இணையத்தள தொழில்நுட்பச் செயலமர்வுகள் ஆகியவற்றிற்காக 320 மாணவர்களை பதிவுசெய்ய திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2 கற்கைநெறிகளுக்கு மற்றும் ஒரு செயலமர்விற்கு பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 43 அதாவது 13 சதவீதமாக இருந்தது 2020 ஆம் ஆண்டிலிருந்து பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 126 இலிருந்து 2023 ஆம் ஆண்டளவில் 43 ஆக படிப்படியாகக் குறைவடைந்திருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. மேலும், மன்னார் தகவல் தொழில்நுட்ப பூங்காவின் கீழ் உள்ள 10 கற்கைநெறிகளுக்கு 300 மாணவர்கள் எதிர்பார்க்கப்பட்ட போதிலும், 3 கற்கைநெறிகளுக்கு பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 155 ஆக இருந்தது. யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் பூங்காக்கள் இரண்டிலும் இருந்து எதிர்பார்க்கப்பட்ட கற்கைநெறிக் கட்டண வருமானம் முறையே ரூபா 1.1 மில்லியன் மற்றும் ரூபா 2.19 மில்லியன் இருந்தபோதிலும், பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்த காரணத்தினால் யாழ்ப்பாணப் பூங்காவிலிருந்து ரூபா 131,080 உம் மன்னார் பூங்காவிலிருந்து ரூபா 833,500 உம் அரச வருமானத்திற்கு சேர்த்துக் கொள்ளக் கூடியதாகவிருந்தது. இந்த பூங்காக்களின் பராமரிப்பு மற்றும் கற்கைநெறிகளை நடாத்துவதற்காக மீளாய்வாண்டில் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் தகவல் தொழில்நுட்ப பூங்காக்களுக்கு செலவிடப்பட்ட தொகை முறையே ரூபா 6.33 மில்லியன் மற்றும் ரூபா 5 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் இரண்டு பூங்காக்களிலும் 198 மாணவர்களிடமிருந்து அறவிடப்பட்ட வருமானத்தை விட ரூபா 10.37 மில்லியன் அதிகமாக செலவிடப்பட்டிருந்தது.

.

# பொதுமக்கள் பாதுகாப்பு

பொதுமக்களின் சேவைகளை செயற்திறனாகவும், பொதுமக்களின் நலன்களைப் பேணுவதன் மூலமும் நாட்டின் சகல குடிமக்களும் அச்சமோ சந்தேகமோ இன்றி சுதந்திரமாக வாழ்வதற்கு ஏற்ற சூழலை உருவாக்கி பிரஜைகளின் அடையாளத்தை உறுதிப்படுத்தவதற்கும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களுக்கான குடியேற்றம் மற்றும் குடிபெயர்வுப் பணிகளை இலவாக்குதல் மற்றும் தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்தும் வகையில் நாட்டில் செயற்படுகின்ற அரச சார்பற்ற நிறுவனங்களின் வலையமைப்பை ஒழுங்குபடுத்துதல், போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழித்தலும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள இலங்கைப் பொலிஸ், விஷேட அதிரடிப்படை, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் மற்றும் ஆட்பதிவுத் திணைக்களம் போன்ற நிறுவனங்களின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

**பணிப்பொறுப்புக்கள்**

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் நோக்கில் இலங்கை பொலிஸ் சேவையின் மட்டத்தை அதிகரித்தல்

போதைப்பொருள் அச்சுறுத்தலில் இருந்து சமூகத்தை விடுவிக்கும் வேலைத்திட்டங்களை சமூக மட்டத்திலும் பாடசாலை, கல்வி நிறுவனங்களின் மாணவர்கள், அரச மற்றும் தனியார் சேவை நிலையங்களை இலக்காகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்கள், சமய ஸ்தலங்கள், சமூக அமைப்புக்கள் அரச மற்றும் தனியார் துறைகளின் மூலம் அமுல்படுத்துதல்.

உள்நாட்டு பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் தீவிரவாதம் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளை தடுக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

மக்களின் வாழ்க்கையைப் பாதுகாப்பதற்காக கொள்ளை, கொலைகள், சமூக விரோதச் செயல்கள் மற்றும் குற்றங்களை அடக்கி ஒடுக்குதல்.

நாட்டின் சகல குடிமக்களுக்கும் விஷேடமாக பெண்கள் மற்றும் குழந்தைகள் தங்கள் வாழ்க்கையை சுதந்திரமாக வாழ்வதற்கு தேவையான பாதுகாப்பை எப்போதும் பேணிச் செல்லல்.

மோட்டார் வாகனங்களைப் பயன்படுத்தும் போது வீதிகளில் ஏற்படுகின்ற முறைகேடுகள் மற்றும் வீதி விபத்துக்களால் ஏற்படும் மரணங்கள், காயங்கள், மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதைத் தவிர்த்தல் மற்றும் ஒழுங்கற்ற, கவனக் குறைவாகக் வாகனம் ஓட்டுதல், நடைபாதைகள் மற்றும் வீதி சமிக்ஞைகளை மீறுதல் போன்ற விஷேடமாக நகரப் பிரதேசங்களில் முறையற்ற வகையில் வாகனங்களை ஓட்டுதல் இரு பக்கமும் வாகனங்களை நிறுத்திவைக்கின்றமையினால் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கும் ஒழுங்கான போக்குவரத்து ஒழுங்கு முறை அமைப்பு மற்றும் சட்ட கட்டமைப்பை அமுல்படுத்துவதற்கும், போக்குவரத்து பொலிஸ் துறையை மறுசீரமைத்து நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் உபாயங்களைப் பயன்படுத்தி அதனை நவீனமயப்படுத்துதல்.

தேசிய கொள்கை கட்டமைப்பில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பணிகளைத் தொடர்புபடுத்தி நாட்டில் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக பங்களிப்பை வழங்குவதற்கான சந்தர்ப்பங்களை வழங்குதல்.

குடிவரவு குடியகல்வு நிருவாக நடவடிக்கைகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் செயற்திறனான சேவையினை நடாத்திச் செல்லல்.

ஆள் அடையாளத்தை தேசிய ரீதியில் உறுதிப்படுத்துவதை சான்றுறுதிப்படுத்துகின்ற பின்புலன்களைத் தயாரித்தல் நவீனமயப்படுத்துதல் மற்றும் செயற்திறனான சேவையினை நடாத்திச் செல்லல்.

போதைப் பொருள் பாவனை மற்றும் அபாயகரமான ஔடதங்களை முறைகேடாகப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கு பொருத்தமான உபாய வழி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்.

## கணக்காய்வு அவதானிப்புக்கள்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு

**ஐக்கிய நாடுகளின் சமாதானக் கடமைகளுக்காக (Formed Police Unit) இற்காக விஷேட அதிரடிப்படை உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துதல்.**

2016 மே 16 ஆம் திகதிய இலக்கம் அமப/16/0738/703/083 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் மாலியில் ஐக்கிய நாடுகளின் அமைதிகாக்கும் பணிகளுக்காக விஷேட அதிரடிப்படையின் ஐக்கிய படையணியொன்றை மாலி அரசாங்கத்தில் ஸ்தாபிப்பதற்குத் தேவையான ஆயுதங்கள், கவச வாகனங்கள், வாகனங்கள், தகவல் தொடர்பு சாதனங்கள் மற்றும் எனைய உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் மேற்கூறப்பட்ட பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,590 மில்லியன் தொகையொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிஏற்பாடு போதியளவில் இல்லாமையின் அடிப்படையில் 2017 ஆகஸ்ட் 30 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மான இலக்கம் அமப/17/1811/784/001-1 இன் கீழ் மேலும் ரூபா 1,175 மில்லியன் தொகைக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

இந்த செயற்திட்டத்தின் நோக்கமாக இலங்கை பொலிஸ் விஷேட அதிரடிப்படை மூலம் ஐக்கிய நாடுகள் அமைப்பில் Formed Police Unit பிரிவொன்றை ஸ்தாபிப்பதன் மூலம் இலங்கைக்கு கிடைக்கின்ற அந்நியச் செலாவணியை

அதிகரித்தல், இந்தப் பிரிவின் கடமைகளில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களுக்கு மேலதிக வருமானமொன்றை பெறுவதன் மூலம் அந்த உத்தியோகத்தர்களின் பொருளாதார நிலைமையை வலுப்படுத்தி வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், இலங்கை பொலிஸ் விஷேட அதிரடிப்படைக்கு சர்வதேச ரீதியில் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல், பங்குபற்றுகின்ற உத்தியோகத்தர்களின் திறன் அபிவிருத்தி மற்றும் சர்வதேச ரீதியில் அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளல், விஷேட அதிரடிப்படையில் தகைமையுள்ள உத்தியோகத்தர்களுக்கு சந்தர்ப்பங்களை வழங்குவதன் மூலம் அவர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தை அடைவதாகும்.

ஐக்கிய நாடுகளின் சமாதான கடமைகளுக்காக எடுத்துச் செல்வதற்குத் தேவையான 57 வாகனங்கள், 03 டேலர் இதுவரை கொள்வனவு செய்யப்பட்டு கட்டுக்குருந்த, கோனஹேன, பூகொட, மொரட்டுவ, அம்பாறை, களனி, அசனிகம என்ற விஷேட அதிரடிப்படையின் முகாம்களில் வைக்கப்பட்டு பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் கட்டுக்குருந்த பயிற்சி பாடசாலையில் அந்த வாகனங்களுக்கிடையே 17 வாகனங்கள் மற்றும் கடமைகளுக்காக எடுத்துச் செல்வதற்கு கொள்வனவு செய்யப்பட்ட ஏனைய பொருட்கள் மற்றும் உபகரணங்கள் களஞ்சியப்படுத்தப்பட்டு பராமரித்து செல்லப்படுகின்றமை கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது. செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை இந்த வாகனங்கள் மற்றும் ஏனைய பொருட்கள் மற்றும் உபகரணங்களை பெற்றுக்கொள்வதை உள்ளடக்கி ரூபா 1,873 மில்லியன் அளவில் செலவிடப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டம் அமுல்படுத்தப்படாமையின் அடிப்படையில் நிறுவனம் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. சமாதானக் கடமைகளுக்காக வெளியே செல்லுதல் தாமதமடைந்ததன் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களை உள்ளடகிய ஏனைய பொருட்கள் மற்றும் உபகரணங்கள் 01 முதல் 06 வருடங்களுக்கிடையிலான காலம் பராமரிக்கப்பட்டு விளைவற்று காணப்பட்டமை மற்றும் அந்த பொருட்களுக்கு வழங்கப்பட்டுள்ள உத்தரவாத காலமும் பயன்படுத்தப்படாமல் காலாவதியாகி இருந்தமை மற்றும் உபகரணங்கள் விளைவற்று காணப்பட்டமை என்வாற்றால் ஏற்படுகின்ற இழப்புக்கள் தொடர்பான ஆபத்தினைப் போன்று சில பொருட்கள் காலாவதியாகி இருந்தமையும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## குடிவரவு, குடியகல்வு திணைக்களம்

**இணையவழி ஊடாக கடவுச்சீட்டுகள் விநியோகித்தல்**

தகவல் தொழில்நுட்ப பிரிவிலிருந்து பெறப்பட்ட அறிக்கையின் படி இணையவழி ஊடாக விரைவான சேவை மற்றும்

சாதாரண சேவைகளின் கீழ் பெறப்பட்டிருந்த 113,916 கடவுச்சீட்டு விண்ணப்பங்களுக்கிடையே 48,770 கடவுச் சீட்டுக்கள் அதாவது 43 சதவீதம் மாத்திரம் ஆண்டின் போது விநிகோகிக்கப்பட்டிருந்து. சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் காணப்பட்ட குறைபாடுகள் மற்றும் பல்வேறு வழுக்களின் காரணமாக 65,146 கடவுச் சீட்டுக்கள் விநியோகிக்க வேண்டியிருந்தது. வழங்கப்பட்டுள்ள ஆலோசனையின் படி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்காமையினால் அந்த குறைபாடுகளை சரிசெய்து கடவுச் சீட்டுக்களை விநியோகிப்பதற்கு ஏற்பட்டமையினால் கடவுச் சீட்டு விண்ணப்பித்தவர்களைப் போன்று திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் மேலதிக காலமும் மற்றும் கிரயமும் செலவிட வேண்டியிருந்தது.

**இணையவழி அல்லாத முறைமையின் கீழ் கடவுச் சீட்டுக்கள் விநியோகித்தல்.**

தகவல் தொழில்நுட்ப பிரிவின் மூலம் கணக்காய்விற்கு வழங்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் போது குடிவரவு மற்றும் குடியகழ்வு திணைக்களத்தின் பிரதான அலுவலகம் மற்றும் கிளை அலுவலகங்களுக்கு இணையவழி அல்லாத சாதாரண முறைமையின் கீழ் கடவுச் சீட்டு விண்ணப்பங்கள் 321,216 கிடைத்திருந்ததுடன் ஆண்டின் போது அதில் 198,592 கடவுச் சீட்டுக்கள் அதாவது 62 சதவீதம் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது.

**வெற்றுக் கடவுச் சீட்டுக்களைக் கொள்வனவு செய்தல்**

திணைக்களத்தால் வெற்றுக் கடவுச் சீட்டுக்கள் கொள்வனவு செய்வதற்கு 2003 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றின் மூலம் 2024 ஆம் ஆண்டு வரை 21 வருடங்கள் அளவிலான காலம் கேள்வி கோரல் இன்றி வழங்கல் நீடிக்கப்பட்டு பெறுகை பணிகளுக்குப் புறம்பாக கடவுச் சீட்டுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. காலரீதியான தேவைகளின் பிரகாரம் வெற்று கடவுச் சீட்டுக்களின் தேவை தீர்மானிக்கப்படாமல் பொதுவாக கொள்னவு செய்யப்பட்டதன் காரணமாக பல சந்தர்ப்பங்களின் போது கடவுச் சீட்டுக்களின் பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது. அதனால் 2022 முதல் 2023 திசம்பர் 31 வரையான காலத்தில் கடவுச் சீட்டுக்கள் விமானம் மூலம் பெற்றுக்கொள்வதற்கு வேண்டியேற்பட்டிருந்ததுடன் அதற்காக விமான பொருள் போக்குவரத்து, ஆவணங்கள் மற்றும் மேலதிக வேலைக் கட்டணமாக ஐ.அ.டொலர் 33,672 தனியார் நிறுவனம் ஒன்றிற்கும், ஏனைய கட்டணமாக ரூபா 0.38 மில்லியனும் செலுத்த வேண்டி ஏற்பட்டமையினால் திணைக்களத்திற்கு ரூபா 13.18 மில்லியன் மேலதிக செலவினமொன்று ஏற்பட்டிருந்தது.

2023 இனை உள்ளடக்கி கடந்த 05 வருட காலத்தில் கடவுச் சீட்டுக்களின் விண்ணப்பம் மற்றும் மேலதிக கொள்வனவுகள் (re-order) இன் கீழ் கொள்வனவு செய்தல் தொடர்பான விபரம் பின்வருமாறு.

| ஆண்டு | கடவுச் சீட்டுகளுக்கான விண்ணப்பம் | விநியோகிக்கப்பட்ட கடவுச் சீட்டுக்களின் எண்ணிக்கை | பொதுவான கொள்வனவுகள் | விஷேட கொள்வனவுகள் |
|---|---|---|---|---|
| 2019 | 580,990 | 570,692 | - | - |
| 2020 | 192,508 | 207,697 | 1,000,000 | - |
| 2021 | 409,464 | 382,527 | - | - |
| 2022 | 997,686 | 912,039 | 60,000 | 95,000 |
| 2023 | 921,977 | 910,574 | 845,000 | 75,000 |

அட்டவணை இலக்கம் 2.29 : 2019 முதல் 2023 வரை கடவுச் சீட்டுக்களின் விண்ணப்பம், விநியோகித்தல் மற்றும் கொள்வனவு செய்தல்

மூலம் : குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள்

## ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்

**பொருட்கள் / சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படாமை**

கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2012 முதல் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டதுடன் செயற்திட்டம் ஆரம்பத்தில் இருந்து 2023 திசம்பர் 31 வரை செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த மொத்தப் பொருட்கள் / சொத்துக்களின் பெறுமதி ரூபா 901.87 மில்லியன் ஆக இருந்த போதும் 2023 திசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அதில் திணைக்கள நிலையான சொத்து பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த பொருட்கள் / சொத்துக்களின் அளவு ரூபா 50.16 மில்லியன் மாத்திரம் ஆகும்.

**போதியளவான அட்டை இருப்புக்கள் பேணிச் செல்லப்படாமை.**

திணைக்களத்தால் குறித்துரைத்த காலத்தில் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொண்டு போதியளவான அட்டை இருப்பொன்றை பேணிச் செல்லாமையின் காரணமாக 2023 ஆம் ஆண்டில் க.பொ.த.(சாதாரண தரப்) பரீட்சைக்காக தோற்றுகின்ற விண்ணப்பதாரர்களுக்கு தேசிய அடையாள அட்டையின் தகவல்களை உறுதிப்படுத்தும் 51,000 கடிதங்களின் எண்ணிக்கைக்காக திணைக்களத்திற்கு அச்சிடல் மற்றும் தபால் செலவினமாக ரூபா 2.9 மில்லியன் மேலதிக கிரயமொன்றை செலவிட வேண்டி ஏற்பட்டிருந்தது.

## இலங்கை பொலிஸ்

**ஒட்டுமொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை**

இலங்கை பொலிஸ் பிரதேசத்தில் 45 பொலிஸ் பிரிவுகளையும், 79 செயற்பாட்டு பொலிஸ் பிரிவுகளையும் உள்ளடக்கி இருந்ததுடன் நாடு முழுவதும் அமைந்துள்ள

பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை 607 ஆகும். இந்த பொலிஸ் பிரிவுகள் மற்றும் பொலிஸ் நிலையங்களில் 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு சீருடை பதவியணியினராக 81,738 உம், பொலிஸ் உதவி சேவை பதவியணியினராக 1,180 உம், சிவில் பதவியணியினராக 6,409 உம் ஆக கூட்டுமொத்தமாக 89,327 பேர் சேவையாற்றுவதுடன் ஒட்டுமொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 25,888 ஆகும்.

**பொலிஸ் நிலையங்களுக்காக குறித்துரைத்த இனங்காணப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் காணப்படாமை.**

பொலிஸ் பிரிவுகள் மற்றும் பொலிஸ் நிலையங்களில் கடமைகளின் தன்மை தொடர்பாக ஆய்வொன்றின் பின்னர் குறித்துரைத்த ரீதியில் இனங்காணப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் ஒன்று காணப்படாமையின் அடிப்படையில் அந்தப் பிரிவுகள் மற்றும் பொலிஸ் நிலையங்களில் வெற்றிடங்கள் காணப்பட்டமையும், மிகைகள் காணப்பட்டதா என குறித்துரைத்த ரீதியில் வெளியிட முடியாதிருந்தது. இந்த நிலைமையில் பதவியணியினரை நிலையங்களுக்கு அமர்த்துதல் உரிய திட்ட முறைமையின்றி அமுல்படுத்தப்பட்டிருந்தது.

**பொலிஸ் கட்டளைச் சட்டத்தை திருத்துதல்**

1865 இன் 16 ஆம் இலக்க பொலிஸ் கட்டளைச் சட்டத்தை திருத்துதலின் தேவை தொடர்பாக திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டிய 16 துறைகள் 2014 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்டிருந்தது. தற்போதைய மற்றும் எதிர்கால சமூக மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி தேவைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் நாளதுவரையாக்கப்பட்ட திருத்தங்களுக்காக 2014 நவம்பர் 19 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரமும் கிடைத்திருந்த போதிலும் 2024 ஏப்ரல் மாதம் வரையில் சட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**தானியக்க தண்டப்பணம் செலுத்தும் திட்ட முறைமை**

தண்டப்பணம் அறவிடுவதை அதிகரிப்பதற்கும், அரச வருமானத்தில் சேகரிக்கப்படுகின்ற தண்டப் பண அளவை உயர்த்துவதற்கும், பொது மக்களுக்கு தண்டப் பணம் செலுத்துதலை இலகுவாக்கும் நோக்கில் மோட்டார் வாகன திட்டங்களுக்காக தானியக்க தண்டப்பணம் செலுத்தும் முறைமை ஒன்று (Spot Fine Information System) ஸ்தாபிப்பதற்காக 2014 ஆம் ஆண்டில் இருந்து திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இதுவரை உரிய முறைமை ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**தேசிய பொலிஸ் கல்லூரியில் விடுதி நிர்மாணம்**

கட்டான தேசிய பொலிஸ் கல்லூரியில் தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு 2019 ஆகஸ்ட் 20 ஆம் திகதி கேள்வி கையளிக்கப்பட்டிருந்ததுடன்

செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மந்தகதியில் மேற்கொள்ளப்பட்டமையால் 2023 ஏப்ரல் 26 ஆந் திகதி நிர்மாணங்கள் கைவிடப்பட்டிருந்தது. நிறைவேற்றப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 97.3 மில்லியன் மாத்திரமாக இருந்ததாக ஆலோசனை நிறுவனம் தீர்மானித்திருந்தது. அதன் பிரகாரம் ரூபா 42.2 மில்லியன் மீண்டும் அறவிட வேண்டியிருந்த போதிலும் அது அறவிடப்பட்டிருக்கவில்லை. கட்டிடத்தின் அத்திவாரம் மற்றும் கொங்கிரீட் தட்டுக்களில் (Slab) வெளியில் உடைந்து இரும்புக் கம்பிகள் துருப்பிடிக்கும் நிலையில் காணப்பட்டதுடன் வேலைத் தளத்தில் காணப்பட்ட ரூபா 1.7 மில்லியன் அளவிலான கம்பி இருப்புக்களும் துருப்பிடிக்கும் நிலைக்கு உட்பட்டிருந்தது.

**மோட்டார் வாகன குற்றங்கள் இடம்பெறுகின்ற தடவைகளின் எண்ணிக்கையின் பிரகாரம் தண்டப்பணம் அறவிடும் முறைமை.**

2019 இன் 10 ஆம் இலக்க மோட்டார் வாகன (திருத்தப்பட்ட) சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த மோட்டார் வாகன குற்றங்கள் மேற்கொள்கின்ற தடவைகளின் எண்ணிக்கையின் பிரகாரம் தண்டப்பணத்தை அறவிடும் முறைமை 2019 யூன் 20 ஆம் ஆந் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டிருந்த போதும் மோட்டார் வாகன குற்றங்கள் தொடர்பான குற்றமிழைத்தவர்கள் ஒரே தவறை மேற்கொள்கின்ற தடவைகளின் எண்ணிக்கை தெளிவாக இனங்காணக்கூடிய வகையில் தகவல் முறைமையொன்று இலங்கை பொலிஸ் அமுல்படுத்தாமையினால் ஒரே தவறை பல சந்தர்ப்பங்களில் புரிகின்ற குற்றமிழைத்தவர்களிடம் இருந்து சரியான தண்டப்பணத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

**வேக எல்லையினைப் பரீட்சிக்கும் உபகரணம்**

மோட்டார் வாகன வேக எல்லையினைப் பரீட்சிக்கும் உபகரணங்கள் இறுதி தடவையாக 2016 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் கொள்வனவு செய்யப்பட்ட எண்ணிக்கை 25 ஆகும். அதற்கு முன்னர் 2014 ஆம் ஆண்டின் போது 30 உம், 2010 ஆம் ஆண்டின் போது 100 உம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த உபகரணங்களுக்கிடையிலும் கணிசமான தொகை தற்போது செயலிழந்த நிலையில் காணப்படுகின்றது. 2018 – 2023 காலப் பகுதியில் வருடாந்த வேக அளவிடல் இயந்திரம் 500 வீதம் கோரப்பட்டிருந்த போதிலும் அதில் ஒரு பகுதியேனும் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவல்லை. அதன் பிரகாரம் வேக எல்லையினை மீறுகின்ற அதி வேகமாக மோட்டார் வாகனங்களை ஓடுதல், மோட்டார் வாகன விபத்துக்களுக்கு பிரதான காரணமாக இருந்த போதும் அதனைக் குறைப்பதற்கு தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு 2023 ஆம் ஆண்டின் போதும் இலங்கை பொலிஸ் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு துறை


இலங்கையின் ஏராளமான இயற்கை வளங்கள் இருந்த போதிலும், வெளிநாட்டு சந்தையில் வளைந்துகொடுக்காத தேவை கொண்ட தயாரிப்புக்களுக்கு தேவையான தொழில்நுட்பம் மற்றும் மூலதனம் இல்லாத காரணத்தால், முதன்மையான பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடாக அதனது நிலையைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. இதேபோல், நாட்டின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி இடைவெளியானது, அதன் அனைத்து ஆற்றல் தேவைகளுக்கும் வெளிநாட்டுச் சந்தையை நம்பியிருப்பதால், நாட்டிற்குள் கனிம வளங்களின் பற்றாக்குறையால் அவசியமான நீர் மின்சாரத்தின் மட்டுப்படுத்தப்பட்ட விநியோகத்தைத் தவிர, சாதகமற்றதாக நீடித்தது. இந்த நிலையைப் போக்குவதற்கான உகந்த அணுகுமுறையானது நெகிழ்வற்ற தேவையுடன் வெளிநாட்டு தொழிலாளர் சந்தையை நிறுவுவதாகும். எனினும், இதை அடைந்துகொள்வதற்கு, வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு பொருத்தமான பயிற்சி பெற்ற பணியாளர்களை உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்காக, தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டலின் கீழ் இயங்கும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு துறையில் அரசாங்கத்தின் வகிபங்கை நிறைவேற்றுவதற்கு பொறுப்பான முன்னணி நிறுவனமாக செயற்படுகிறதுடன் அதன் சேவை வழங்கல்கள் பின்வரும் நிறுவன கட்டமைப்பின் மூலம் நீட்டிக்கப்பட்டது.

- 15 வெளிநாட்டுத் தூதரகங்களில் தொழிலாளர் நலன் பிரிவுகளை நிறுவுதல்.
- வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்குப் புறப்பட்ட பின்னர் பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொண்டிருந்த புலம்பெயர்ந்த தொழிலாளர்களை தற்காலிகமாகத் தடுத்து வைப்பதற்காக இந்த நலன்புரிப் பிரிவுகளின் கீழ் 05 பாதுகாப்பு இல்லங்களைப் பேணுதல்.
- புலம்பெயர்ந்த தொழிலாளர்களை பழக்கப்படுத்துவதற்கும் பயிற்சியளிப்பதற்கும் தீவு முழுவதும் 10 பயிற்சி நிலையங்களை பேணுதல் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் 06 பிராந்திய அலுவலகங்களை நிறுவுதல்.

பணியகம் 2023 ஆம் ஆண்டில் அதன் சேவைகளில் இருந்து ரூபா 12,222 மில்லியன் மொத்த வருமானத்தை ரூபா 4,439 மில்லியன் மொத்த செலவினத்துடன் ஈட்டியிருந்தது. 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பணியகத்தின் மொத்த முதலீட்டு பெறுமதி ரூபா 17,705 மில்லியன் ஆக இருந்தது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தகவல்களின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டில் பணியகத்தில் பதிவு செய்து வேலைவாய்ப்பிற்காக வெளியேறியவர்களின் எண்ணிக்கை 297,656 ஆகும். அவர்களில், 164,608 அல்லது 55.3% ஆண் தொழிலாளர்களாக இருந்ததுடன் 133,048 அல்லது 44.7% பெண் தொழிலாளர்களாக இருந்தனர்.

பணியகத்தின் தகவல்களின் பிரகாரம், புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் விபரங்கள் பின்வருமாறுள்ளன.




வரைபட இல. 2.45: வெளிநாட்டு தொழிலாளரின் பயிற்சி நிலைகள்

| திறன் | | | | அரை திறன் | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஆண் | பெண் | மொத்தம் | % | ஆண் | பெண் | மொத்தம் | % | |
| 106,763 | 101,823 | 208,586 | 70.08 | 57,845 | 31,225 | 89,070 | 29.92 | 297,656 |

அட்டவணை இலக்கம் 2.30 பெண் மற்றும் ஆண் பாலினத்தின் பிரகாரம் பயிற்சி நிலைகள்

பணியகத்தின் பதிவு புள்ளிவிபரங்களின் பிரகாரம், 44% உள்நாட்டு வீட்டு முகாமைத்துவ உதவியாளர்களாக உள்ளனர், 31% குறைந்த திறன் கொண்ட தொழிலாளர்களாகவும், 1% அரை திறன் கொண்ட தொழிலாளர்களாகவும் இருந்ததுடன் 21% பயிற்சி பெற்ற தொழிலாளர்களாவர். மீதமுள்ள புள்ளிவிபரங்கள் 2% நடுத்தர மட்டத்திலும் 1% எழுதுநர்களாகவும் காணப்பட்டு தொழிலாளர் அல்லாத பிரிவின் கீழ் வருகின்றது. அவர்கள் முக்கியமாக பஹ்ரைன், குவைத், ஓமான், கட்டார், சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உள்ளிட்ட வளைகுடா நாடுகளில் பணிபுரிகின்றனர்.

## கணக்காய்வு அவதானிப்புக்கள்

### இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

**வீடமைப்பு கடன் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதிகளை அறவிடத் தவறியமை**

2013 சனவரி 24 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துடன் இணைந்து ரதவிருவோ வீடமைப்புக் கடன் திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு சமுர்த்தி அதிகாரசபையுடன் 05 வருட காலத்திற்கு புரிந்துணர்வு விஞ்ஞாபனம் ஒன்று

கைச்சாத்திடப்பட்டது. 2013 மார்ச் 08 இல் பணியகம் சமுர்த்தி அதிகாரசபைக்கு ரூபா 100 மில்லியன் தொகையை செலுத்தியிருந்ததுடன் இத்தொகை சமுர்த்தி அதிகாரசபை என்ற பெயரில் கீழ் நிலையான வைப்பில் வைப்பு செய்யப்பட்டது. வீடமைப்பு கடன் திட்டத்தின் செல்லுபடியாகும் காலம் 2018 மார்ச் 07 இல் முடிவடைந்த போதிலும், நிதியை அறவிடுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**முறையான அங்கீகாரம் இல்லாமல் செலுத்த வேண்டிய மீதிகளை வருமானத்திற்கு எடுத்தமை**

2022 திசெம்பர் 22 இல் நடைபெற்ற கணக்காய்வு முகாமைத்துவ கூட்டத்தின் போது 2008 முதல் 2018 வரையிலான காலப்பகுதிக்குரிய மீளளிக்கத்தக்க வைப்புக்களிலிருந்து வருமானத்திற்கு ரூபா 679 மில்லியன் மீதியை மாத்திரமே செலவு வைப்பதற்கு கலந்துரையாடப்பட்டது. எனினும், முறையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல், அந்தக் காலப்பகுதியுடன் தொடர்புடைய அனைத்து மீளளிக்கத்தக்க மீதிகளும் உள்ளடங்கிய ரூபா 1,388.8 மில்லியனை வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. இந்த மீளளிக்கத்தக்க மீதிகளை வருமானமாக செலவு வைப்பதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட நபர்களுக்குத் தெரிவிக்கவும், கொடுப்பனவிற்கான அதிகபட்ச முயற்சிகளை உறுதிப்படுத்துவதற்கும் சாத்தியமான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன என்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

**சட்டத்திற்கு முரணாக தொழிலாளர்களை வெளிநாட்டு பணியிலீடுபடுத்துவதற்கு அங்கீகாரத்தை வழங்கியமை**

1985 இன் 21 ஆம் இலக்க வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டத்தின் 53(3) ஆம் பிரிவிற்கு இணங்க, இலங்கைக்கு வெளியில் வேலைவாய்ப்பிற்காகப் புறப்படும் ஒவ்வொரு இலங்கையரும் அவ்வாறு புறப்படுவதற்கு முன்னர் பணியகத்தில் பதிவு செய்ய வேண்டும். எனினும், 2023 மார்ச் 20 முதல், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் ஓமானுக்கு சுற்றுலா விசாவில் வீட்டுப் பணிப்பெண்களை அனுப்புவதற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களுக்கு பணியகம் அனுமதி வழங்கியுள்ளது. இதற்காக, 2023 மார்ச் 20 ஆம் திகதிய 07/2023 ஆம் இலக்க தலைவரின் சுற்றறிக்கை மூலம் பணியகத்திற்கு ஐ.அ.டொலர் 100 கட்டணம் செலுத்தப்பட வேண்டும் என அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இம்முறையின் மூலம் வீட்டுப்

பணிப்பெண்கள் வேலைவாய்ப்பு ஒப்பந்தம் இன்றி வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டு, அவர்கள் வெளியேறிய பின்னர் அதிகபட்சம் 30 முதல் 45 நாட்களுக்குள், தொழில்தருநருடன் கைச்சாத்திட்ட வேலைவாய்ப்பு ஒப்பந்தம் தூதரகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தகவலை கணனியில் பதிவேற்றம் செய்ய வேண்டும். எனினும், 2024 யூன் 06 அளவில் மொத்தம் 4,942 வீட்டுப் பணிப்பெண்கள் இரு நாடுகளுக்கும் சுற்றுலா விசாவில் அனுப்பப்பட்டுள்ளனர், மேலும் அவர்களில் 3,954 பேரின் வேலைவாய்ப்பு தொடர்பான தகவல்கள் தூதரகத்தின் கணனி முறைமையில் பதிவேற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் பணியக சட்டத்திற்கு இணங்காத வகையில் தொழிலாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு பணியகமே அங்கீகாரத்தை வழங்கியிருந்தது.

தூதரக பதவியணியினருக்கான ஆட்சேர்ப்புக்கள்

2023 ஏப்ரல் 06 ஆம் திகதிய 01/2023 ஆம் இலக்க தலைவரின் சுற்றறிக்கையின் பிரகாரம் தூதரக பதவியணியினரிற்கான ஆட்சேர்ப்பின் போது இதுவரை தூதரக பதவியணியினரிற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படாதவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டது. மேலும், 2018 யூலை 02 ஆம் திகதிய 34.27.12 ஆம் இலக்கத்தின் கீழான பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் விண்ணப்பதாரர்கள் முந்தைய தூதரக பணிகளில் இருந்து திரும்பிய பின்னர் பணியகத்தில் 3 வருட சேவையை பூர்த்திசெய்திருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், பணியகத்திலிருந்து 16 ஊழியர்கள் தூதரக பதவியணியினருக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர், அவர்களில் 07 பேர் முன்னர் தூதரக பணிகளில் பணியாற்றிய உத்தியோகத்தர்களாவர், அவர்களில் இரண்டு பேர் 3 ஆவது மற்றும் 4 ஆவது தடவைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் என்பது அவதானிக்கப்பட்டது. மேலும் ஒரு நபர் தனது முந்தைய தூதரக பணிகளை முடித்த பின்னர் பணியகத்தில் தேவையான மூன்று வருட சேவையை பூர்த்தி செய்திருக்கவில்லை.

விமான பயணச்சீட்டு கட்டணங்களை இரண்டு தடவை கொடுப்பனவு செய்தமை

2023 யூலை 25 இல் தென் கொரியாவிற்குப் புறப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட 6 தொழிலாளர்கள், அத் திகதியில் பட்டியலிடப்பட்ட விமானத்திற்கான விமான பயணச்சீட்டுக்களை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸிடமிருந்து நேரடியாக ரூபா 279,000 இற்கு கொள்வனவு செய்திருந்தனர். எனினும், அவர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரிடம் இருந்து பயணச்சீட்டுக்களை கொள்வனவு செய்திருக்காததால், அவர்கள்

அன்று புறப்பட அனுமதிக்கப்படவில்லை, அதன் விலை ரூபா 319,522 அல்லது ரூபா 40,522 ஆகும். மேலும் ஒரு தொழிலாளர் இறுதியில் அதே விமானத்தில் ரூபா 319,522 ஐ செலுத்தி மற்றொரு இருக்கையை கொள்வனவு செய்து புறப்பட முடிந்திருந்தது. மீதமுள்ள 5 தொழிலாளர்கள் ஒவ்வொன்றும் ரூபா 329,291 இற்கு பயணச்சீட்டுக்களை மீண்டும் கொள்வனவு செய்ய வேண்டியிருந்ததுடன் ஒரு மாதம் கழித்து அனுப்பப்பட்டனர். அதன் பிரகாரம், பணியகத்தின் உயர் முகாமைத்துவம் இந்த 6 தொழிலாளர்களுக்கான பயணச்சீட்டுக்களுக்காக ஆரம்பத்தில் செலவிடப்பட்டிருக்கூடிய ரூபா 1.7 மில்லியனிற்கு பதிலாக ரூபா 3.6 மில்லியனை செலவிடுவதற்கு ஏற்பாடு செய்தது.

பாதுகாப்பு இல்லத்தை கையளிப்பதில் தாமதங்கள் காரணமாக விளைவற்ற கிரயங்கள் ஏற்பட்டமை

ஓமான் தூதரகத்தின் தொழிலாளர் நலன் பிரிவில் உத்தியோகபூர்வ பணிகளுக்காக மூன்று நபர்கள் மாத்திரமே நியமிக்கப்பட்டுள்ளனர், மேலும் தகுதியான மற்றும் போதுமான பதவியணியினர் இல்லாததால், 2022 ஆகஸ்ட் மற்றும் திசெம்பர் இற்கு இடையில் முறைகேட்டு சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன. பாதுகாப்பு இல்லத்தில் தங்கியிருக்கும் கைதிகளால் இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டதால் வசதி சேதமடைகிறது. வாடகைக் காலப்பகுதி 2023 சனவரி 31 இல் முடிவடைந்ததால், உரிமையாளருக்கு மீளளிப்பதற்கு முன்னர் ஏற்பட்ட சேதங்களை உடனடியாக பரீட்சித்து அசல் நிலையை மீட்டெடுக்க வேண்டியது அவசியமாகும். எனினும், நலன்புரி பிரிவில் பொறுப்பு வாய்ந்த அலுவலர் இல்லாததால், சேதங்களை மதிப்பிடுவதில் 2023 மே 16 வரையான தாமதத்திற்கு வழிவகுத்தது. அதன் பிரகாரம் தாமதம் காரணமாக, 2023 பெப்ரவரி 01 முதல் யூலை 31 வரையிலான 7 மாத காலப்பகுதிக்கான வாடகை, தண்ணீர் கட்டணம், மின்சாரக் கட்டணம் மற்றும் சேதங்களிற்காக கட்டிடம் பழுதுபார்க்கப்பட்டு உரிமையாளரிடம் ஒப்படைக்கப்படும் வரை மொத்தம் ரூபா 19.13 மில்லியன் செலுத்த வேண்டியிருந்தது.

பரிசு உறுதிச்சீட்டுக்கள உரித்துள்ள தரப்பினருக்கு வழங்கப்படாமை

ஒவ்வொன்றும் ரூபா 10,000 பெறுமதியான 14,000 பரிசு உறுதிச்சீட்டுக்கள் உள்நாட்டுத் துறையில் முதன்முறையாக வெளிநாடு செல்லும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு வழங்குவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் 2023 திசெம்பர் 31 அளவில் 46 உறுதிச்சீட்டுக்கள் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளன. 2024 ஆகஸ்ட் 14 அளவில் ரூபா 9.8 மில்லியன் பெறுமதியான 995 பரிசு உறுதிச்சீட்டுக்கள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உறுதிச்சீட்டுக்கள்

கொள்வனவு செய்ததிலிருந்து 11 மாதங்கள் கடந்திருந்த போதிலும் ரூபா 128.23 மில்லியன் பெறுமதியான பரிசு உறுதிச்சீட்டுக்கள் வழங்கப்படாமல் இருந்தது. விழா நடைபெறும் வரை இந்த உறுதிச்சீட்டுக்களை விநியோகம் செய்வதை தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டதால், ரூபா 10,000 பரிசு உறுதிச்சீட்டுக்களை பெற்றுக்கொள்வதில் மொத்தம் 13,261 வீட்டுப் பணிப்பெண்கள் தவறியிருந்தனர். இந்த மொத்தத்தில் பயிற்சியில் இருந்து விடுவிக்கப்பட்டு முதலில் உண்மையாக வெளிநாடு செல்லவிருந்த போது முன்பு வெளிநாடு சென்றதாக பொய்யாக அறிக்கையிட்டிருந்த 1,161 வீட்டுப் பணிப்பெண்கள் மற்றும் 12,100 தொழிலாளர்கள் உள்ளடங்கியிருந்தனர். இதன் விளைவாக, பணியகத்தால் எடுக்கப்பட்ட முறையற்ற நடவடிக்கைகள் காரணமாக ஏற்பட்ட செலவினங்கள் தொடர்பான நலன்களுக்கு உரித்துள்ள தரப்பினருக்கு அவை வழங்கப்பட்டிருக்கவில்லை.

வேலை அனுபவமின்றி பயிற்சியிலிருந்து விடுவிக்கப்படுதல்

2022 யூன் 07 ஆம் திகதிய பணியகத்தின் தலைவரின் CH/01/01 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம், வெளிநாடு செல்லும்போது முன்னைய சேவை அனுபவத்தை கொண்டிருந்தால், எழுத்துமூல ஆவணங்கள் மூலம் அவர்களது அனுபவங்களை சரிபார்க்க முடியாதிருந்த உள்நாட்டு துறையில் முன் அனுபவம் உள்ள தொழிலாளர்களை சான்றுபடுத்துவதற்கும் அதன் பிரகாரம் பயிற்சியிலிருந்து அவர்களை விடுவிப்பதற்கும் பிரதி பொது முகாமையாளருக்கு (இறுதி அங்கீகாரம் அளித்தவர்) அங்கீகாரம் வழங்கப்பட்டது. 2023 சனவரி 09 ஆம் திகதிய TR-D/02-01-11 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் முதன்முறையாக வெளிநாட்டிற்குச் செல்லும் வீட்டுப் பணிப்பெண்கள் 28 நாள் குடியிருப்புப் பயிற்சி நிகழச்சித்திட்டத்தில் ஈடுபட வேண்டும், அதற்கான கட்டணம் ரூபா 22,410 ஆகும். 2023 சனவரி முதல் 2024 மே 29 வரை 2024 மே 30 வரை பயிற்சியில் இருந்து விடுவிக்கப்பட்ட தொழிலாளர்களின் முன்னர் வெளிநாடு புலம்பெயர்ந்தவர்கள் தொடர்பான தகவல்கள் பணியகத்தின் பதிவு தகவல் முறைமை மூலம் கணக்காய்வால் பெறப்பட்டது. பணியகத்தில் பதிவுசெய்து முதன்முறையாக வெளிநாடுகளுக்குச் செல்லும் வீட்டுப் பணியாளர்களின் எண்ணிக்கை 28,165 என உறுதிப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம், பணியகத்திற்கு 2023 சனவரி முதல் 2024 மே 29 வரை ரூபா 631.2 மில்லியன் தொகையான பயிற்சி வருமானம் தவறியிருந்தது.

வியாபார கடைகளின் கொள்வனவு

2022 ஒக்தோபர் 15 மற்றும் 16 இல் காலி சமனல தோட்டத்தில் நடைபெற்ற நிகழ்விற்கு ஒரு வியாபார கடை ரூபா 170,000 இற்கு வாடகைக்கு பெறப்பட்டிருந்தது. எனினும், 2023 யாழ் மாவட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் போது, நிறுவனம் வாடகைக் கட்டணமா

அல்லது கொள்வனவு செய்ததா என்பதை ஆவணப்படுத்தாமல் ரூபா 500,000 இற்கு கடையொன்றை பெற்றிருந்தது. அதன் பிரகாரம் 2022 ஆம் ஆண்டில் 30 கடைகளுக்கு ரூபா 5.1 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் 25 கடைகளுக்கு ரூபா 12.5 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. நிறுவனங்களைத் தெரிவுசெய்வதற்கான பெறுகை செயன்முறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை, மேலும் இந்த கடைகளை கொள்வனவு செய்வது தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளரின் 2023 மே 29 ஆம் திகதிய கடிதத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் கம்பனி

**வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணிஒதுக்கீடுகள்**

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் முறையே 2860 மற்றும் 2303 வெளிநாட்டு வேலை வழங்கல்கள் கம்பனியால் பெறப்பட்டிருந்த போதிலும் 316 மற்றும் 663 நபர்கள் மாத்திரமே வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பிற்காக அனுப்பப்பட்டுள்ளனர். இது அந்த ஆண்டுகளில் பெறப்பட்ட மொத்த வேலை வழங்கல்களில் 4% மற்றும் 28.7% மாத்திரமே ஆகும். மேலும், 2023 இல் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட 663 நபர்களில், மொத்தம் 203 பேர் வெளித் தரப்பினர்கள் மூலம் வேலை வாய்ப்பு பெற்ற தொழிலாளர்களாவர். இது 2023 இல் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட மொத்த நபர்களின் எண்ணிக்கையில் 30% ஆகும். 2023 ஆம் ஆண்டில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொழிலாளர் சந்தையை மேம்படுத்துவதற்காக வெளிநாட்டு விஜயங்களுக்காக ரூபா 8 மில்லியன் ஒதுக்கப்பட்ட போதிலும் 06 வெளிநாட்டு விஜயங்களுக்காக ரூபா 12.04 மில்லியன் செலவிடப்பட்டது. இதில் வணிக ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 0.22 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டது.

**பிணை வைப்புக்கள் மீளளிக்கப்படாமை**

2006 இல் தென் கொரியாவிற்கு வேலைவாய்ப்பிற்காகப் புறப்பட்ட புலம்பெயர்ந்தவர்களிடமிருந்து மீள்நிதியிடும் அடிப்படையில் பிணை வைப்புக்களாக ரூபா 15.2 மில்லியன் தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. 15 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் இந்த வைப்புக்களை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதில் ரூபா 4.7 மில்லியன் மீதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது, 5 முதல் 10 ஆண்டுகள் வரை நிலுவையாக இருந்த ரூபா 4.09 மில்லியன் மீதிகள் காணப்பட்டன.

சிக்கலான கொடுப்பனவுகள்

2023 யூலை 15 மற்றும் 16 இல் யாழ்ப்பாணம் முத்துவெளி விளையாட்டரங்கில் நடைபெற்ற நடமாடும் தொழில் கண்காட்சிக்கான 05 வர்த்தக நிலையங்கள் மற்றும் பெயர் பலகையை கொள்வனவு செய்வதற்கு கூறுவிலைகள் கோரப்பட்டிருக்காத போதிலும் எந்த நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டது என்பதைக் குறிப்பிடாமல் 2023 யூலை 08 இல் கம்பனியின் தலைவரின் தனிப்பட்ட பெயரில் கூறுவிலைகள் மற்றும் விலைப்பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டன கம்பனியின் பெயருக்காக Glocal Fair என்ற தலைப்பிலான முகவரி அச்சிட்ட ஒரு கடிதத் தாள் பயன்படுத்தப்பட்டு, ரூபா 2.18 மில்லியன் Glocal Fair என்ற பெயரில் வங்கிக் கணக்கிற்கு செலுத்தப்பட்டது.

அதிக விலையிலான விமான பயணச்சீட்டுக்கள்

2006 இன் 25 ஆம் இலக்க பெறுகை வழிகாட்டல்களின் 2.7.5 ஆம் வழிகாட்டலிற்கு முரணாக தென் கொரியாவுக்குப் புறப்படும் தொழிலாளர்களுக்குத் தேவையான மொத்தம் 3,767 விமான பயணச்சீட்டுக்கள் 2023 ஆகஸ்ட் 08 வரையிலான காலப்பகுதியில் தனியார் முகவர்கள் மூலம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இந்த பயணச்சீட்டுக்களுக்காக தொழிலாளர்களிடம் இருந்து ரூபா 122.6 மில்லியன் மேலதிகமாக அறவிடப்பட்டது, இதில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் மற்றும் 04 தனியார் முகவர்கள் முறையே ரூபா 27.8 மில்லியன் மற்றும் ரூபா 94.8 மில்லியன் இலாபங்களை ஈட்டியிருந்தன.

தனியார் முகவர்கள் மூலம் விமான பயணச்சீட்டுக்களை கொள்வனவு செய்தல்

2022 ஒக்தோபர் 26 ஆம் திகதிய பணிப்பாளர் சபையின் 51/2022 ஆம் இலக்க முடிவின் பிரகாரம் கம்பனி ஒரு பயணச்சீட்டுக்கு 1% முதல் 7% வரையிலான அதிகபட்ச இலாப எல்லையுடன் பயணச்சீட்டுக்களை வழங்க வேண்டியிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் வழங்கியதை விட அதிக விலையில் தனியார் முகவர்கள் மூலம் பயணச்சீட்டுக்களை வாங்கியதன் காரணமாக, கம்பனியின் இலாப எல்லை 5% இலிருந்து 2.5% ஆகக் குறைவடைந்துள்ளது, இதன் விளைவாக கம்பனிக்கு ரூபா 27.1 மில்லியன் நட்டத்தை விளைவித்திருந்தது.

# தொழில்

தனியார் மற்றும் பகுதியளவில் அரச துறைப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களின் தொழிற்துறை உரிமைகளைப் பாதுகாத்தல், சமூகப் பாதுகாப்பு, கைத்தொழில் அமைதியை உறுதி செய்தல் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புச் சந்தைக்காகப் பயிலுனர்களை அனுப்பி வைத்தல், தொழில்களுக்கு அனுப்பிவைத்தல், தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்தி நாட்டில் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பணியாட்களை பொருளாதார விருத்திக்கான பங்களிப்பை அதிகரிப்பதற்குத் தேவையான கொள்கைகளை வகுத்து செயற்படுத்துவது தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் பிரதான செயற்பணியாகும். அமைச்சின் தொழில் துறையின் பணிகள் பின்வருமாறாகும்.

**செயற்பணி**

வேலைவாய்ப்பிற்கான புலம்பெயர் பற்றி இலங்கையின் தேசிய மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கையையும் நடைமுறைப்படுத்தல்.

சர்வதேச நியமங்களுக்கு அமைவாக தொழில் உறவுகள், நியமங்கள், ஊழியர் நிர்வாகம், நலனோம்பல் மற்றும் சுகாதாரம் தொடர்பாக கொள்கைகளைத் தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்.

சர்வதேச தொழிலாளர் அமைப்பு மற்றும் சர்வதேச சமூகப் பாதுகாப்பு அமைப்புகளுடன் பரஸ்பர ஒத்துழைப்பைப் பேணுதல்.

ஊழியர் சேமலாப நிதியம், தனிப்பட்ட சேமலாப நிதியங்கள் மற்றும் தனிப்பட்ட இளைப்பாறல் முறைகளை நிர்வாகம் செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்.

கைத்தொழில் உறவுகள் மற்றும் கைத்தொழில் பிணக்குகளைத் தீர்த்தல்

தொழிற்சங்கங்களைப் பதிவு செய்தல் மற்றும் அரச, தனியார் துறைகளின் சகல தொழிற்சங்க நடவடிக்கைகளையும் நாட்டின் அபிவிருத்திக்காக பயன்படுத்துவதற்குத் தேவையான சாதகமான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்தல்.

தேசிய உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காக கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்.

இச் செயற்பணிகளை மேற்கொள்வதற்காக அமைச்சின் கீழ் 02 திணைக்களங்களும் ஏனைய 07 நியதிச்சட்ட நிறுவனங்களும் செயற்படுகின்றன. இந் நிறுவனங்கள் கணக்காய்வு செய்கையில் கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

## கணக்காய்வு அவதானிப்புகள்

### தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

| | |
|---|---|
| **நட்ட ஈட்டுத் தொகை செலுத்தப்படாமை** | பணிபுரிகையில் பாதிப்பிற்குட்பட்ட தரப்பினருக்கு உரித்தாக்கப்பட வேண்டிய நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்ட 54 வழக்குகள் தொடர்பாக ரூபா 12.34 மில்லியன் இழப்பீட்டுத் தொகை 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் குறித்த தீர்ப்பின் படி தொழில் தருனர்களால் செலுத்தப்பட்டிருக்கவில்லை. இவற்றிற்கிடையே பிடியாணை பிறப்பிக்கப்பட்டு 10 ஆண்டுகள் கடந்திருந்த 11 வழக்குகளும், 5 - 10 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட 22 வழக்குகளும், 1 - 4 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட 11 வழக்குகளும் இருந்தன. |

### ஊழியர் சேமலாப நிதியம் - தொழில் துறை

| | |
|---|---|
| தனிப்பட்ட கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்டிராத பண மீதிகள் இருந்தமை | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் ஊழியர் சேமலாப நிதியத்தில் அங்கத்துவ கணக்கு மீதியில் ரூபா 95,625 மில்லியன் தொகை பல்வேறு காரணங்களால் ஒவ்வொரு அங்கத்தவர் கணக்குகளிலும் வரவு வைக்கப்படாது காணப்பட்டது. அங்கத்துவ நிதியத்தில் உள்ள தொழில் ஆணையாளர் கணக்கில் தொழில் தருனர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்து அறவிடப்பட்டு இலங்கை மத்திய வங்கியில் வைக்கப்பட்டுள்ள ரூபா 12,237 மில்லியன் தொகை, வழக்குத் தொடரப்பட்டு அறவிடப்பட்டு தீர்க்கப்படும் வரை தொழில் திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ள ரூபா 440 மில்லியன் தொகையும் தொழில் தருனர்களின் பெயரில் வெவ்வேறாக நடாத்தப்பட்டு வரும் “நடைமுறை ஆண்டின் பங்களிப்புத் தொகை இல. 01” எனும் பெயரிலான கணக்கில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 78,797 மீதி உரிய அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. பல்வேறு காரணங்களால் அங்கத்தவர்களுக்குச் செலுத்தப்படாது வைத்துக்கொள்ளப்பட்ட நலன் மற்றும் உரித்துக் கோரப்பட்டிராத நலன்கொடுப்பனவாக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 1009 மில்லியன் தொகையும், பற்றாக்குறை/ மிகைப் பங்களிப்புத் தொகையாக ரூபா 2590 மில்லியன் தொகையும், பற்றாக்குறை/ மிகைப் நலன் கொடுப்பனவாக ரூபா 552 |

மில்லியன் தொகையும், அங்கத்துவ நிதியத்தின் கீழ் மேலும் தீர்க்கப்பட வேண்டிய நிலையில் காணப்பட்டது.

**அங்கத்தவர்களைப் பதிவுசெய்யும் செயற்திட்டத்திற்கான உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டமை**

செயற்திட்டத்திற்காக ரூபா 27.89 மில்லியன் மொத்தப் பெறுமதியான 60 கணனிகள், 60 கமராக்கள் மற்றும் 60 அச்சீட்டு இயந்திரங்கள் 2022 ஆம் 2023 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2024 மார்ச் 14 ஆம் திகதி களஞ்சிய மெய்மையாய்வின் போது 51 கணனிகளும் 53 கமராக்களும் 50 அச்சீட்டு இயந்திரங்களும் பகிர்ந்தளிக்கப்படாது குறைவான பயன்பாட்டில் எதிர்பார்க்கப்பட்ட விளைவை எய்த இயலாது இருந்தது.

**முதலீட்டின் மீதான நலன் கிடைக்கப்பெற்றிராமை**

நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பட்டியலிடப்பட்ட 15 கம்பனிகளில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 17,401.39 மில்லியன் சாதாரண பங்குகளில் முதலீட்டிற்காக 2023 ஆம் ஆண்டின் போதும், பட்டியலிடப்பட்ட 9 கம்பனிகளில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 4,390.49 மில்லியன் சாதாரண பங்குகளில் முதலீட்டிற்காக 2019 ஆம் ஆண்டு முதலும் நிதியத்திற்கு நலன் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

பட்டியலிடப்படாத கம்பனி முதலீடுகளில் ரூபா 5,000 தொகை 2013 ஆம் ஆண்டின் போது தனியார் கம்பனியில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் அக் கம்பனியின் கீழ் நிர்மாணிக்கப்படுவதற்கிருந்த கொழும்பு கிரான்ட் ஹயட் ஹொட்டேல் கட்டிடத் தொகுதியின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் 2021 திசெம்பர் 27 ஆம் திகதி வரையில் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த போதிலும் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த இயலாததாக குறித்த கம்பனியால் அறிவிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக மேற்குறித்த முதலீடு மேற்கொள்ளப்பட்டு 11 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் எந்த வித பலனும் நிதியத்திற்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

**நிலுவையான பங்களிப்பும் மிகை அறவீட்டுத் தொகை அறவிடப்படுவதற்காக வழக்குத் தொடரப்படல்**

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 12,755.09 மில்லியன் கூட்டுத்தொகையை அறவிட்டுக்கொள்வதற்காக நிதியத்தால் வெளி நிறுவனங்களிற்கு எதிராக தொடரப்பட்டிருந்த மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 14,096 ஆகும். வெளி நிறுவனங்களால் நிதியத்திற்கு எதிராக ரூபா 201.3 மில்லியன் தொகை கோரப்பட்டு நீதிமன்றங்களில் தொடரப்பட்டிருந்த மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 62 ஆகும். மேலும் ஆண்டின் இறுதியில் தொடரப்பட்டிருந்த மொத்தம் ரூபா 2,420 தொகையை அறவிட்டுக்கொள்வதற்காக தொடரப்பட்டிருந்த 4,381 வழக்குகள் செயலற்ற நிலையிலும் ரூபா 1,232 மில்லியன்

கூட்டுத்தொகையை அறவிட்டுக்கொள்வதற்காக தொடரப்பட்டிருந்த 2138 வழக்குகள் திறந்த பிடியாணை நிலையிலும் காணப்பட்டன.

பதிவு செய்யப்படாத தொழில்தருனர்கள்

நிதியத்தில் பதிவு செய்யாது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையில் மாத்திரம் பதிவு செய்திருந்த தொழில் தருனர்களின் எண்ணிக்கை 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 28,994 ஆகக் காணப்பட்டதுடன் அத் தொழில் தருனர்களிடம் இருந்து அன்றைய தினத்திற்கு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபைக்குக் கிடைக்கப்பெற்றிருந்த பங்களிப்புத் தொகையின் கூட்டுத்தொகை ரூபா 401.25 மில்லியன் தொகையாகும். இதன் படி, அத் தொழில் தருனர்களுக்கிடையே நிதியத்தில் பதிவு செய்யப்பட வேண்டிய எனினும் பதிவு செய்யப்படுவதில் இருந்து விலகியிருந்த தொழில் தருனர்கள் இனங்காணப்பட்டு பதிவு செய்யப்படுவதற்காக சபையின் ஒருங்கிணைப்புடன் ஏற்ற செயற்பாடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சபை

**நிதியத்திற்குக் கிடைக்கப்பெற்ற பங்களிப்புத் தொகை அங்கத்துவக் கணக்குகளுக்கு செலவு வைக்கப்படாமை**

2024 ஏப்ரல் 01 ஆம் திகதி வரையிலும் 1981 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்கு உரித்தாக 4,526 சேவை வழங்கும் நிறுவனங்களால் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சபை செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 516.79 மில்லியன் தொகையான அங்கத்துவ பணம் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு சபை சட்டத்தின் 16 (3) ஆம் பிரிவின் பிரகாரம் அந்தந்த அங்கத்தவர்களின் தனிப்பட்ட கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. இக் காரணத்தால் அங்கத்துவ நிதிய மீதிக்கும் தனியான கணக்கு மீதியின் கூட்டுத்தொகைக்கும் இடையே இணக்கமின்மையும் அங்கத்தவர்களுக்கு தமது பங்களிப்புத் தொகையை மீளப் பெறுகையில் நட்டமான நிலை நிலவுவது அவதானிக்கப்பட்டது. மேற்குறித்த மீதியில் உள்ளடக்கப்பட்ட 09 வருடங்களுக்கும் 42 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் தொட்டு நிலவிவரும் மீதி ரூபா. 20 மில்லியன் ஆகும்.

**தகவல் முறைமை ஸ்தாபிப்பிரான தாமதம்**

தொழில்தருனரிற்கும் அங்கத்துவக் கணக்குகள், அங்கத்துவ நிதியம் மிகவும் துல்லியமாகவும் நம்பகத்தன்மையாகவும் பேணுவதற்கும், அங்கத்தவர்கள் மற்றும் தொழில் தருனர்களுக்காக நிகழ்நிலைத் தொடர்பாடல் முறை மூலம் முறைமையுடன் தொடர்புறுவதற்கு வசதிகளை வழங்கும் நோக்கில் தகவல்

முறைமை ஒன்றை ஸ்தாபிப்பதற்காக நிதி அமைச்சு நிதி ஏற்பாட்டின் கீழ் இலங்கை தகவல் தொழிநுட்ப நிறுவனத்திற்கும் சபைக்கும் இடையே 2016 ஆம் ஆண்டின் போது புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்திற்காக சபையால் வன்பொருள் கொள்வனவு செய்யப்பட்ட பயிற்சி நடவடிக்கைகளிற்காக ரூபா 183.28 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அந் நாள் வரை செயற்திட்ட நோக்கை அடைய முடியாதிருந்தது.

| | |
|---|---|
| **உரிமை கோரப்பட்டிராத அங்கத்துவ நலன்கள்** | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிமை கோரப்பட்டிராத அங்கத்துவ நலன்கள் கணக்குகளில் நிலவிய 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3.83 மில்லியன் தொகையானதுடன் குறித்த அங்கத்தவர்களை இனங்கண்டு இப் பணத்தைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **உரிமை கோரப்பட்டிராத மரண நலன் தொகை** | 2024 மார்ச் 31 ஆம் திகதியில் உள்ளவாறு உரிமை கோரப்பட்டிராத மரண நலன் தொகையாக 1,240 பேருக்கு ரூபா 23.04 மில்லியன் செலுத்தப்பட வேண்டியிருந்தது. இம் மீதியில் 07 இற்கும் 28 வருடங்களுக்கும் இடைப்பட்ட கால இடைவெளிக்கு உரித்தான 826 நலன்பெறுனர்களுக்குச் செலுத்தப்பட வேண்டியிருந்த மரண நலன் தொகை ரூபா 9.9 மில்லியன் ஆகும். |
| **முதலீட்டு நலன்** | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையால் 1994 ஆம் ஆண்டின் போது 14.48 சதவீதமான நிலையான வட்டி வீதத்தின் கீழ் தோட்டக் கம்பனி ஒன்றிற்கு மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 15 மில்லியனான தொகுதிக்கடன் முதலீட்டிற்காக அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை வட்டித் தொகை ரூபா 26.29 மில்லியனாக இருந்தது. |
| அங்கத்துவ பெயர் மற்றும் செல்லுபடியான அடையாள அட்டை இலக்கம் இன்றி கணக்குகள் பேணப்படல் | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கத்துவ பெயர் மற்றும் செல்லுபடியான அடையாள அட்டை இலக்கம் இன்றி பேணப்பட்டிருந்த 7,566 கணக்குகளிற்கு உரித்தாக ரூபா 41.22 மில்லியன் தொகை காணப்பட்டது. 2015 ஆம் ஆண்டு வரை இனங்காண முடியாத அத்தகைய அங்கத்துவக் கணக்குகள் கணனி முறைமையில் முடக்கப்படுவதற்காகச் செயற்பட்டிருந்ததுடன் 2024 மே 04 ஆம் திகதி வரை உரிமையாளர்கள் இனங்காணப்பட்டு இத் தொகை அங்கத்தவர் கணக்குகளிற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. |

## ஓய்வூதியத் திணைக்களம்

பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் திருப்திகரமான ஓய்வுபெற்ற சமூகம் எனும் நோக்குடன் செயற்படும் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு 2023 ஆம் ஆண்டின் போது மேற்குறித்த செயற்பணியை மேற்கொள்வதற்காக ரூபா 418,720 மில்லியன் ஏற்பாடு பாராளுமன்றத்தால் வழங்கப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 416,333 மில்லியன் பயன்படுத்தப்பட்டு 704,795 ஓய்வூழியர்களுக்கு ஓய்வூதியமும் 55,091 பேருக்கு பணிக்கொடைக் கொடுப்பனவுமாக செலுத்தப்பட்டிருந்தது.

மேற்குறித்த பணியையும் செயற்பணியையும் மேற்கொள்வது தொடர்பாக நடாத்தப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட பொருண்மையான முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள் தொகுக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| **அரசாங்க சம்பளத்தைப் பெறும் ஓய்வூழியர்களுக்கு வாழ்க்கைச் செலவினப் படி வழங்கப்படுதல்** | 2014 சனவரி 10 ஆம் திகதிய 1/2014 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கை மற்றும் 2010 செப்தெம்பர் 07 ஆம் திகதிய இல. 8/2010 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் பிரகாரம் வாழ்க்கைச் செலவினப் படியுடன் அரசாங்க சம்பளத்தைப் பெறுவதாயின் அவ்வாறு சம்பளத்தைப் பெறும் காலப்பகுதியில் ஓய்வூதியத்திற்கு வாழ்க்கைச் செலவினப் படி உரித்தற்ற போதிலும், அவ்வாறு வாழ்க்கைச் செலவினப் படியுடன் அரசாங்க சம்பளத்தைப் பெறும் 269 ஓய்வூழியர்களுக்கு வாழ்க்கைச் செலவினப் படி செலுத்தப்பட்டமையால் ரூபா 94.5 மில்லியன் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை களுத்துறை, தம்புல்லை, மததும்புர, ஹங்வல்ல, பமுனாகொடுவ, மாத்தறை, மாவனல்ல, கேகாலை பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகளின் போதும் திணைக்களத் தரவு முறை ஆய்வுகளின் போதும் அவதானிக்கப்பட்டன. |
| **இனங்காணப்படாத பெறுவனவுகள்** | 2022 யூன் 22 ஆம் திகதிய 14/2022, 14/2022(i) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 2022 செப்தெம்பர் 20 ஆம் திகதி இல. 06/2022 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் படி வெளிநாட்டு விடுமுறை பெற்ற உத்தியோகத்தர்கள் முறைப்படி பதிவு செய்திராத விதவைகள்/ தபுதாரர் மற்றும் அனாதைகள் பங்களிப்புத் தொகை ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டதன் காரணமாக 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அவ்வாறு அனுப்பிவைக்கப்பட்ட ரூபா 47.2 மில்லியன் பங்களிப்புத் தொகை இனங்காணப்படாத பெறுவனவாக பொது வைப்புக் கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| **இடைக்காலக் கொடுப்பனவு மேலதிகமாகச் செலுத்தப்படுதல்** | 2014 நவம்பர் 03 ஆம் திகதிய 13/2014 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் பிரகாரம் பல ஓய்வூதியங்களை ஒருமித்து பெறும் சந்தர்ப்பங்களின் போது மாதாந்தம் செலுத்தப்படும் இடைக்காலக் கொடுப்பனவு ஒன்றிணைந்த ஓய்வூதியத்திற்கு மாத்திரமே செலுத்தப்பட வேண்டிய போதிலும் ஹங்வல்லை, மாத்தறை, கேகாலை, அக்குறணை, யட்டிநுவர, பிங்கிரிய, மாவனல்ல, திவுலபிட்டிய, களுத்துறை பிரதேச செயலகங்களின் கணக்காய்வின் போதும் திணைக்களத் தரவு முறை மூலம் இனங்காணப்பட்ட 47 ஓய்வூழியர்களுக்கு ரூபா 13.7 மில்லியன் இடைக்காலக் கொடுப்பனவு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

# விளையாட்டு



தேசிய பொருளாதாரத்திற்கு ஆக்கபூர்வமான பங்களிப்பொன்றை வழங்கும் ஓர் இளைஞர் சமூகத்தை உருவாக்கி ஒழுக்கமான விளையாட்டு வீரர் சமூகமொன்றை உருவாக்குவதன் மூலம் ஐக்கிய மற்றும் வளமான நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு பங்களிப்பதே விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயற்பணியாகும். அந்த பெறுபேறுகளை அடைவதற்காக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சுடன் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் உள்ளடங்கலாக 11 நியதிச்சட்ட நிறுவகங்கள், விளையாட்டு நிதியம் மற்றும் 67 விளையாட்டுச் சங்கங்கள் மூலம் பின்வரும் செயற்பணிகளை நிறைவேற்ற வேண்டியிருந்தன.

| | |
|---|---|
| **செயற்பணி** | இலங்கையில் விளையாட்டுத் துறையை வலுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல், விளையாட்டுத் துறைக் கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல். |
| | விளையாட்டுத் துறையில் எதிர்பார்க்கப்படும் அடைவுகளைப் பூர்த்தி செய்வதற்கு தேவையான உட்பட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி பாராட்டுக்களை வழங்குதல். |
| | இலங்கை பற்றிய பிரதிவிம்பத்தை சர்வதேச ரீதியில் கட்டியெழுப்புவதற்காக விளையாட்டுத்துறையை பயன்படுத்தக்கூடியவாறான புதிய திறன் முறைகளை வகுத்தமைத்தலும் உரிய நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தலும். |
| | விளையாட்டு வீர வீராங்கனைகளை சர்வதேச போட்டிகளுக்கு பங்குபற்றுவதற்கான வாய்ப்புகளை விரிவுபடுத்துதல். |
| | விளையாட்டு மருத்துவ வசதிகளை மேம்படுத்தி, விளையாட்டுகளின் போது தடைவிதிக்கப்பட்டுள்ள ஊக்கமருந்துப் பயன்பாட்டை தவிர்ப்பதற்காக விளையாடுதல், பொது மக்களின் தேகாரோக்கிய நலனை ஏற்படுத்துவதற்கு அவசியமான வசதிகளை ஊக்குவித்தலும் கூட்டிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலும். |
| | விளையாட்டுக் கட்டிடத்தொகுதிகளை அபிவிருத்தி செய்தலும், முகாமை செய்தலும், விளையாட்டுச் சங்கங்கள், அமைப்புகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகளை மேம்படுத்தல். |
| | இளம் சந்ததியினரின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்திசெய்யும் நிகழ்ச்சித்திட்டங்களை இலக்காகக் கொண்ட உளவிருத்திச் செயற்திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தல், இளம் தொழில் முயற்சியாளர்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்து அவர்களுக்குத் தேவையான ஊக்குவிப்பையும் |


புதிய சந்தர்ப்பங்களையும் வழங்குவதற்காக முறைமை ஒன்றை அறிமுகப்படுத்தி செயற்படுத்துதல்.

இளம் சமூகத்தினரை மையப்படுத்திய சர்வதேச ஒத்துழைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல். உள்நாட்டு வெளிநாட்டு தொழில்வாய்ப்புகளுக்காக பொருத்தமான வகையில் இளைஞர் மனிதவள வங்கி ஒன்றை ஆரம்பித்தல்.

தொழில்வாய்ப்பற்ற இளைஞர்களை மையமாகக் கொண்ட ஆக்கத்திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல். இளைஞர் அமைப்புகள் தொடர்பான ஒழுங்குபடுத்தலும் அபிவிருத்தி நடவடிக்கைகளும்.

இளம் வயதிலான தொழில் தேர்ச்சி, தொழில் திறமைகள், ஆக்கபூர்வமான திறமைகள் என்பவற்றிற்கு சமூக அங்கீகாரம் கிடைக்கும் வகையில் அவர்களுக்கு தமது ஆற்றல்களை மேம்படுத்திக்கொள்ளக்கூடிய வகையிலான இளைஞர் சமுதாயத்தை இலக்காகக் கொண்ட விசேட நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தல்.

2023 ஆம் ஆண்டின் போது மேற்குறிப்பிடப்பட்ட செயற்பணிகளை நிறைவேற்றுவதற்காக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சிற்கும் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்திற்கும் மொத்தம் ரூபா 10,250 மில்லியன் தேறிய ஒதுக்கங்கள் பாராளுமன்றத்தால் வழங்கப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையில் அவற்றில் ரூபா 6,146 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் வருட இறுதியில் ரூபா 4,104 மில்லியன் ஆன ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்தன. விபரம் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.




| | விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு | விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் | மொத்தம் |
|---|---|---|---|
| தேறிய ஒதுக்கீடு | 8,032 | 2,218 | 10,250 |
| செலவினம் | 4,960 | 1,186 | 6,146 |
| சேமிப்பு | 3,072 | 1,032 | 4,104 |

வரைபடம் இல 2.46 : விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு மற்றும் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடும் செலவினமும்

ஆதாரம் : 2023 நிதிக் கூற்றுக்கள்

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களால் மேற்குறிப்பிடப்பட்ட செயற்பணிகளை மேற்கொள்வது தொடர்பான தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கிய மற்றும் பொருண்மையான கணக்காய்வு அவதானிப்புகள் தொகுக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

## கணக்காய்வு அவதானிப்புகள்

**சர்வதேச ரீதியான வெற்றி**

2023 ஆம் ஆண்டின் போது இலங்கை விளையாட்டு வீரர்கள் 19 முக்கிய சர்வதேச போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிபெற்று 11 தங்க 15 வெள்ளி மற்றும் 22 வெண்கலப் பதக்கங்களென 48 பதக்கங்களைப் பெற்றிருந்தனர். மேலும், இலங்கை மகளிர் கிரிகட் குழுவின் இங்கிலாந்து சுற்றுப்பயணம் (T20) மற்றும் இலங்கை மகளிர் கிரிகட் குழுவின் இங்கிலாந்து சுற்றுப்பயணம் (ODI) முதலிய போட்டிகளில் கலந்துகொண்டு சம்பியன் பட்டத்தை வென்றெடுத்திருந்தனர்.

## விளையாட்டுத் துறை மற்றும் இளைஞா விவகார அமைச்சு

**தியகம விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அபிவிருத்தி செய்யப்படல்**

அமைச்சால் தியகம மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு தொகுதி, விளையாட்டு அகடமியாகவும் சர்வதேச விளையாட்டு அரங்காகவும் அபிவிருத்தி செய்வதற்காக 2017 முதல் 2022 ஆம் ஆண்டு வரை ரூபா 3,866 மில்லியன் வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 606 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. இதில் ரூபா 487 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 400 மீட்டர் செயற்கை ஓட்டத் தடத்தில் பல இடங்களில் சேதமடைந்திருந்தமை மற்றும் ஓட்டப் பாதையைப் பிரிக்கும் கோடுகள் அழிந்திருந்ததன் காரணமாக அவ் ஓடுதளத்தில் போட்டியில் கலந்துகொள்ளும் விளையாட்டு வீரர்கள் சிரமத்திற்குள்ளாகியிருந்தனர். இவ்வாறே, மின் பிறப்பாக்கி இயந்திரத்தை ஸ்தாபிக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 30 மில்லியன் செலவில் 65 சதவீதமான நிர்மாணிப்பு முன்னேற்றம் இருக்கையில் செயற்திட்டத்தை முடிவுறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 34 மில்லியன் செலுத்தப்பட்ட சிறிய கேட்போர் கூடத்தின் நிர்மாணத்தின் முன்னேற்றம் 90 சதவீதமாக இருக்கையில் செயற்திட்டத்தின் பணிகள் முற்றாக பூர்த்தி செய்யப்படாது அவ் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டிருந்தது. மேலும், சமையலறைத் திருத்த வேலை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்காக ஓர் உடன்படிக்கை இன்றி ரூபா 5.4 மில்லியன் முற்பணத்தொகை அரசாங்க நிர்மாணிப்பு நிறுவனம் ஒன்றிற்கு 2019 ஆம் ஆண்டின்

போது செலுத்தப்பட்டிருந்த போதிலும் குறித்த திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிராத போதிலும் செலுத்தப்பட்ட முற்பணத் தொகையை மீள அறவிட்டுக்கொள்வதற்காக அமைச்சிற்கு இயலாது போயிருந்தது.

**குருநாகல் மலியதேவ வித்தியாலயத்தின் வில்வித்தைத் தடல் மற்றும் துப்பாக்கிச் சூட்டுத் தடல் நிர்மாணிப்பு**

விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சால் குருநாகல் மலியதேவ வித்தியாலயத்தின் வில்வித்தைத் தடல் மற்றும் துப்பாக்கிச் சூட்டுத் தடல் நிர்மாணிப்புகள் 06 மாதங்களுக்குள் பூர்த்தியடைவதற்காக ரூபா 12.23 மில்லியன் தொகையான ஒப்பந்தப் பெறுமதிக்கு 2018 மார்ச் 28 ஆம் திகதிய தனியார் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்திற்காக சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. மேலும், சில சந்தர்ப்பங்களில் ஒப்பந்த கால எல்லை 20 மாதங்களால் நீடிக்கப்பட்டிருத்தல், மேலதிக வேலைக்காக விளையாட்டு அமைச்சால் முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் படாது செயற்படுதல், தீர்வுச் செயற்பாட்டிற்காக துரிதமாகக் கவனம் செலுத்தப்பட்டிராமை மற்றும் விலைத்தளம்பல்கள் தொடர்பாக பரீட்சிப்பதற்காக நியமிக்கப்பட்ட தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவால் அத் தீர்மானத்தை வழங்குவதற்கு ஒரு வருடத்திலும் அதிக காலம் கடந்திருந்தமை போன்ற விடயங்கள் காரணமாக உடன்பட்ட பெறுமதியைப் பார்க்கிலும் ரூபா 4.23 மில்லியன் வரியுடனான பெறுமதி மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் அவ் விளையாட்டுத் திடலைப் பயன்படுத்தக்கூடிய நிலைக்குக் கொண்டுவருவதற்கு இது வரையில் அமைச்சு தவறியிருந்தது.

## விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்

**செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்படுதல்**

2013 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டுகளின் போது ஆரம்பிக்கப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 557.03 மில்லியனான மொனறாகலை மாவட்ட விளையாட்டுத் தொகுதிச் செயற்திட்டம் உள்ளடங்கலான பெறுமதிக் கூட்டுத்தொகை ரூபா 1649.03 மில்லியனான 09 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் திணைக்களத்தால் இதற்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூபா 606.13 மில்லியனாகி இருந்தது.

**செயற்திட்டம் மேற்கொள்வதிலான தாமதம்**

மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 1,024.86 மில்லியனான வேலை பூர்த்திசெய்யப்பட வேண்டிய 07 செயற்திட்டங்களின் வேலை 2023 ஆம் ஆண்டின் முடிவுத் திகதி வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிராததுடன் இதில் 05 செயற்திட்டங்களின் தாமதக் காலம் 19 மாதங்களில் இருந்து 70 மாதங்கள் வரையான கால வீச்சில் காணப்பட்டது. எஞ்சிய 02

செயற்திட்டங்களுக்கு உரிய செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. திணைக்களத்தால் இச் செயற்திட்டத்திற்காக 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 802.52 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

**வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

2016 இன் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டுக் கழக கட்டளை 7 (xii) இன் படி, தேசிய விளையாட்டுக கழகங்கங்களால் அடுத்துவரும் ஆண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு அச் செயல்நடவடிக்கைத் திட்டம் நடைமுறை ஆண்டு முடிவடையவதற்கு மூன்று மாதங்களின் முன்னர் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதன் படி, 2023 ஆம் ஆண்டிற்காக விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் 72 கழகங்கள் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றில் தற்போது இயங்கிவரும் 67 விளையாட்டுக் கழகங்களில் 63 உம் அவ்வாறு செயல்நடவடிக்கைத் திட்டத்தை சமர்ப்பித்திருக்கவில்லை.

**உலக வலைப்பந்து வெற்றிக்கிண்ணப் போட்டி**

2023 ஆம் ஆண்டின் போது தென்னாபிரிக்காவில் இடம்பெற்ற உலக வலைப்பந்து வெற்றிக்கிண்ணப் போட்டியில் கலந்துகொள்பவர்களுக்கு அனுமதி வழங்கப்படுவதற்கு முறையான காலவரையறையுடனான முறைமையை அறிமுகப்படுத்துவதற்கு திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இப் போட்டியில் கலந்துகொள்பவர்களுக்கான விமானப் பயணச்சீட்டுக்களைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 8.78 மில்லியன் 2023 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த போதிலும் கொள்வனவை மேற்கொண்ட நிறுவனத்தால் பல சந்தர்ப்பங்களின் போது முதல் விலைக் கோரலின் போது கூடிய விலைகளும், இரண்டாம் விலைக் கோரலின் போது குறைவான விலைகளும் சமர்ப்பிக்கப்பட்டு மனு பெறப்பட்டிருந்தமையால் இப் பயணச் சீட்டுக் கொள்வனவு நடைமுறையில் வெளிப்படைத்தன்மையின்மை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**பொது நலவாய இளைஞர் விளையாட்டு விழா**

2023 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட பொது நலவாய இளைஞர் விளையாட்டு விழா நிகழ்வை நடாத்தப்படுவது தொடர்பாக முறையாக திட்டமிட்டிராமை, மதிப்பீடு தயாரிக்கப்பட்டிராமை மற்றும் விமானப் பயணச் சீட்டுப் பெறுகை வெளிப்படையாக மேற்கொள்ளப்பட்டிராததன் காரணமாக விமானப் பயணச்சீட்டுக்களும் விசாக்களும் உரிய நேரத்தில் சிக்கனமாகவும் செயற்திறனான முறையிலும் கொள்வனவு செய்யப்படுவதற்கு இயலாதிருந்தமையால் திணைக்களத்திற்கு ரூபா 13.81 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. இதன் காரணமாக தேசிய ஒலிம்பிக் குழுவின் மூலம் பயணச்சீட்டுக் கட்டணமாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 7.03 மில்லியன் தொகை திணைக்களத்திற்குக்

கிடைக்கப்பெறாது போயிருந்தது. மேலும், இவ் விளையாட்டு விழாவிற்காக குறித்த காலத்தில் விளையாட்டு வீரர்களும் உத்தியோகத்தர்களும் இடம் பிடிப்பதற்கு இயலாது போனமையால் இலங்கைக்கு எதிர்பார்க்கப்பட்ட வெற்றியைப் பெற்றுக்கொள்ள இயலாது போயிருந்தது.

## விளையாட்டு மருத்துவ நிறுவகம்

**மனித செயற்திறன் ஆய்வக ஸ்தாபிப்பு**

2021 நவம்பர் 16 ஆம் திகதிய டெக்நோமெடிக்ஸ் இன்டர்நஷனல் எனும் பெயரிலான தனியார் கம்பனியால் ரூபா 248.59 மில்லியன் தொகைக்கு மனித செயற்திறன் ஆய்வகத்திற்காக உபகரணங்களை வழங்கல், ஸ்தாபித்தல், ஒப்படைத்தல், பயிற்சியளித்தல் மற்றும் பராமரிப்பதற்காக அக் கம்பனியுடன் விளையாட்டு மருத்துவ நிறுவனம் ஒப்பந்த உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தியிருந்த போதிலும் இது தொடர்பாக கிரய நலன் தொடர்பான பகுப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. குறித்த கம்பனியால் 2023 சனவரி 23 ஆம் 24 ஆம் திகதிகளில் உபகரணங்கள் மாத்திரம் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் ஆய்வகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. வழங்குனரால் முதலாம் இரண்டாம் ஆண்டுகளின் போது சேவை வழங்கப்பட்டிராததுடன் விளையாட்டு மருத்துவ நிறுவனத்தால் இது தொடர்பாக வழங்குனருடன் கலந்துரையாடப்பட்டு சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஒப்பந்த உடன்படிக்கையின் படி, 2021 நவம்பர் 16 ஆம் திகதி முதல் எட்டு கிழமைகளில் உபகரணங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் வழங்குனரால் 13 மாத காலதாமதத்தின் பின்னர் உபகரணங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. ஒப்பந்த நிபந்தனை 26.1 இன் படி, தாமதக் கட்டணமாக ஒரு கிழமைக்கு 1 சதவீதப்படி, ஆகக் கூடுதலாக 10 சதவீதமான அதாவது 24.86 மில்லியன் அறவிடப்பட இயலுமான போதிலும் இது தொடர்பாக பகுப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அத் தாமதக் கட்டணத்தை அறவிட்டுக்கொள்வதற்கு அமைச்சால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**சொத்து முகாமைத்துவம்**

விளையாட்டு மருத்துவ நிறுவகத்திடம் கதிரியக்க இயக்குனர் இன்றி, அருவகச் சொத்துக் கொள்வனவாக அணுசக்தி ஒழுங்குமுறைப்படுத்தல் சபையால் அங்கீகரிக்கப்பட்டிராததன் காரணமாக ரூபா 3.23 மில்லியன் மொபைல் கதிரியக்க இயந்திரம், ரூபா 1.11 மில்லியன் பெறுமதியான Radiation Protection Accessories Set உபகரணம், ரூபா 4.31 மில்லியன் பெறுமதியான கதிரியக்க மேசை மற்றும் X- Ray Digital Film Imaging

System ஒன்று உட்பட ரூபா 1.63 மில்லியன் செலவில் தயாரிக்கப்பட்ட கதிரியக்க அறை கொள்வனவு செய்யப்பட்ட நாள் முதல் முறையே 07 ஆண்டுகள், 06 ஆண்டுகள் 02 ஆண்டுகளிற்கும் மேலான காலமாக பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டன.

## தேசிய விளையாட்டுகள் நிதியம்

**நிகழ்வு வருமானத்தைப் பெற்றுக்கொண்டிராமை**

விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஊழியர் நலன்புரிச் சங்கத்தால் தேசிய விளையாட்டு நிதியத்திற்கு ரூபா 5 மில்லியன் தொகையான நிதியுதவியைத் திரட்டும் நோக்கில் 2023 ஆம் ஆண்டின் போது இசை நிகழ்வொன்று நடாத்தப்பட்டிருந்த போதிலும் நிகழ்வின் மூலம் பெறப்பட்ட வருமானம் எதுவும் நிதியத்திற்குக் கிடைக்கப்பெற்றிருக்க வில்லை.

**நோக்கத்திற்கு அப்பாற்பட்ட கொடுப்பனவுகள்**

சட்டமா அதிபதி திணைக்களத்தால் சட்ட உதவி வழங்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கையில் 2023 ஆம் ஆண்டின் போது அமைச்சராலும் அமைச்சருக்கு எதிராக தொடரப்பட்டிருந்த 06 வழக்குகளிற்கு உரித்தான ரூபா 8.25 மில்லியனான வழக்கறிஞர் கட்டணம் விளையாட்டு நிதியத்தின் நோக்கங்களுக்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகளுக்காக நிதியத்தால் செலுத்தப் பட்டிருந்தது.

**விளையாட்டு உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டம்**

13 விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திச் செயற்திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 104.67 மில்லியன் தொகை பல்வேறு தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் இதற்காக உத்தேசச் செயற்திட்டத்தை முறைப்படி அங்கீகரித்துக்கொண்டு இதன் படி வேலை ஆரம்பிப்பு முற்பணத்தை வழங்கி, வேலை பூர்த்திக் கட்டத்தின் படி செலவினத்தை மீள்நிரப்பப்படுவதற்குப் பதிலாக மதிப்பிடப்பட்ட மொத்தத் தொகையும் செயற்திட்டத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. மேற்குறித்த வகையில் வழங்கப்பட்டிருந்த தொகைக்கு உரித்தாக மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பணிகளுக்காக குறித்த கால எல்லை ஒன்றை அறிமுகப்படுத்தி அக் காலப்பகுதியின் போது குறித்த நிர்மாணத்தைப் பூர்த்தி செய்தமை குறித்த உறுதிப்படுத்தலையும் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. மேலும், 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 90.15 மில்லியன் பெறுமதியில் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 07 செயற்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் 0 முதல் 60 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டதுடன் எஞ்சிய செயற்திட்டத்தை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்தமைக்கு பொறியியலாளரால் ஓர் சான்றிதழ் கணக்காய்விற்குச்

சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் வழங்கப் பட்டிருந்த பணத் தொகை மேற்குறித்த செயற்திட்டத்திற் காகப் பயன்படுத்தப்பட்டதா எனவும் அச் செயற்திட்டத்திற்கு விடுவிக்கப்பட்ட தொகைக்கு ஏற்ற பிரதிபலன் பெறப்பட்டுள்ளதா என்பது குறித்து உறுதிப்படுத்தவும் இயலாதிருந்தது.

## இலங்கை கிரிகட் நிறுவகம்

**கிரிகட் அமைப்புகளுக்கும் கழகங்களுக்கும் பணம் வழங்கல்**

2024 ஆம் ஆண்டின் போது இலங்கையில் இடம்பெறுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த 19 வயதிற்குக் உட்பட்ட உலகக் கிண்ணத்திற்காக விளையாட்டரங்கை அபிவிருத்தி செய்வதற்காக 04 கிரிகட் கழகங்களுக்கு ரூபா 460.73 மில்லியன் முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. குறித்த செயற்பணிகள் 2024 சனவரி 19 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், அதில் எந்தச் செயற்திட்டமும் குறித்த காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. குறித்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிராததன் காரணமாக மேற்குறித்த தொகையில் ரூபா 195.10 மில்லியன் குறித்த கிரிகட் கழகத்தால் வைத்திருக்கப்பட்டு பின்னர் மீள வழங்கப்பட்டிருந்ததன் காரணமாக இலங்கை கிரிகட் நிறுவகத்திற்கு நேர்ந்திருந்த நிதி நட்டம் ஏறத்தாழ ரூபா 4.8 மில்லியனாகும். 2024 மே 31 ஆம் திகதி வரையிலும் ரூபா 79.73 மில்லியன் தொகை குறித்த செயற்பணிக்காக ஈடுபடுத்தப்படாது மேற்குறித்த 04 கிரிகட் கழகங்களால் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தன.

**முன்னோடி கண்டி உயர் தொழில்நுட்ப பயிற்சி நிலைய செயற்திட்டம்**

இலங்கை கிரிகட் நிறுவகத்தால் நிர்மாணிக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த கண்டி உயர் தொழில்நுட்ப பயிற்சி நிலைய செயற்திட்டத்திற்காக கண்டிப் பகுதியில் 1 ஏக்கர் 3 ரூட் 20.2 பேர்ச் அளவிலான ஓர் காணி 30 வருட குத்தகை அடிப்படையில் ரூபா 26.5 மில்லியனிற்கு 2017 ஏப்ரல் 20 ஆம் திகதி குத்தகைக்குப் பெறப்பட்டிருந்தது. இக் காணியில் குடியிருந்த ஓர் நபரை அகற்றுவதற்காக ரூபா 0.5 மில்லியன் 2018 சனவரி 25 ஆம் திகதி இலங்கை கிரிகட் நிறுவனத்தால் குத்தகைதாரருக்கு செலுத்தப்பட்டிருக்கையில் காணியின் அளவைப் படங்களுக்கிடையே இணக்கமற்ற நிலை காணப்பட்டதை அடுத்து உரிமை சிக்கலான காணி ஒன்றிற்காக குத்தகை உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்திக்கொள்வதற்கு வழக்கறிஞர் ஒருவருக்கு 2017 செப்தெம்பர் 06 ஆம் திகதி ரூபா 0.53 மில்லியன் இலங்கை கிரிகட் நிறுவகத்தால் செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறே, 2021 ஆம் ஆண்டின் பின்னர் இச் செயற்திட்டத்தில் எந்தவித நிர்மாணிப்பும் மேற்கொள்ளப்பட்டிராததுடன் காணி குத்தகைக்குப் பெறப்பட்டு 06 வருடங்கள் கடந்திருந்த போதிலும் நிர்மாணிப்புகள் ஆரம்ப கட்டத்திலேயே காணப்பட்டது.

**இணைப்புப் பதவிக்காக கொடுப்பனவு வழங்கப்படுதல்.**

நிறைவேற்றுச் சபையின் அங்கீகாரத்தில் இலங்கை கிரிகட் நிறுவனத்திற்காக பல்வேறு நிலையிலான 44 நபர்கள் இணைப்பாளர் பதவிக்காக மாகாண மட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவாகவும், விழா மற்றும் இடர்க் கொடுப்பனவாகவும் போக்குவரத்துக் கொடுப்பனவு மீள்நிரப்பல் தொகையாகவும் ரூபா 65.98 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், மேற்குறித்த இணைப்பாளர்களுக்கு நாளாந்தம் மேற்அகொள்ளப்பட வேண்டிய பணிகளை இனங்கண்டு ஒப்படைகளை வழங்குவதற்குப் பதிலாக அவர்களுக்கு குறுகிய காலத்திற்குள் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு செயற்பணி அல்லது 02 பணிகள் மாத்திரம் ஒப்படைக்கப்பட்டிருந்தமையாலும் அவர்கள் ஏற்கும் நிரந்தர பதவி தொடர்பாக ஆராயாது மேற்குறித்த நபர்கள் நியமிக்கப்பட்டிருந்தமையாலும் அவர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த தொகைக்கு ஏற்ற சேவை பெறப்படுகின்றதா என்பது குறித்து கணக்காய்விற்கு நிச்சயிக்க இயலாதிருந்தது.

**19 இற்கு உட்பட்ட உலகக் கிண்ணப் போட்டியின் தொகுப்பு கிடைக்கத் தவறியமை**

2024 ஆம் ஆண்டின் போது நடாத்தப்படுவதற்கு இருந்த 19 இற்கு உட்பட்ட உலகக் கிண்ணப் போட்டியின் தொகுப்பு கிடைக்கத் தவறியமையால் ICC Business Corporation FZLLC உடன் இலங்கை கிரிகட் நிறுவனம் ஏற்படுத்தப்பட்டிருந்த 2023 ஒக்டோபர் 13 ஆம் திகதிய உடன்படிக்கையின் படி இலங்கை கிரிகட் நிறுவனத்திற்குக் கிடைக்கப்பெற இருந்த ஏறத்தாழ 2.46 மில்லியன் ஐ.அ.டொ.களுக்கு சமனான ரூபா 787 மில்லியன் கிரிகட் நிறுவனத்திற்குக் கிடைக்கப்பெறாது போயிற்று. இவ்வாறே, உலகக் கிண்ணப் போட்டி நடாத்தப்படுவதற்கு குறித்த காலப்பகுதியில் சுற்றுலா விடுதிகளில் ஒதுக்கப்பட்டிருந்த 700 அறைகளுக்காக கிடைப்பதற்கிருந்த அந்நிய செலாவணி வருமானமும் கிடைக்கப்பெற இருந்த சுற்றுலா நலன்களும் நாட்டிற்குக் கிடைக்கப்பெறாது போயிற்று.

## சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகாரசபை

**மூலதனச் செயற்திட்டங்களை செயற்படுத்தியிராமை**

2023 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத்திட்டத்தின் படி, ரூபா 398 மில்லியன் மூல மதிப்பீட்டில் 10 மூலதனச் செயற்திட்டங்களை மேற்கொள்வதற்காகத் திட்டமிட்டிருந்த போதிலும் நடப்பாண்டின் போது ரூபா 26.29 மில்லியன் செலவில் ஒரு செயற்திட்டம் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

## தேசிய இளைஞர் படையணி

**வீரர் குழாமைத் தேர்ந்தெடுத்தல்**

விளையாட்டுக்களுக்காக திறமை அடிப்படையில் இனங்காணப்பட்ட 750 வீர வீராங்கனைகளின் குழுவைத் தேர்ந்தெடுத்து அக் குழுவில் 2024 ஒலிப்பிக் விளையாட்டு விழாவைப் பிரதிநிதித்துவம் மற்றும் வெற்றிபெறல் மற்றும் 2025 ஆம் ஆண்டின் 150 வீர வீராங்கனைகளை பணிக்கமர்த்தும் நோக்குடன் 2022 ஆம் ஆண்டின் போது விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகாரத்துறை அமைச்சால் ரூபா 17.5 மில்லியன் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், இதற்காக ரூபா 7.5 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் எஞ்சிய தொகையான ரூபா 10 மில்லியன் நிலையான வைப்பில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

**பதவி வெற்றிடங்கள்**

படையணியின் முக்கிய செயற்பணியான இளைஞர் விருத்தி, தொழிற் பயிற்சி மற்றும் தொழிற்திறன் கல்வியை ஆக்கபூர்வமாகவும் செயற்திறனான முறையிலும் மேற்கொள்வதற்குத் தேவையான 137 நடுநிலையாளர் மற்றும் ஆலோசகர் பதவிகளுக்கு தொடர்ந்து வெற்றிடங்கள் நிலவியமை படையணியின் நோக்கை எய்துவதற்கும் பாடநெறியின் தரத்தைப் பாதுகாப்பதற்கும் பாரியளவில் தாக்கமளித்திருந்தது.

## தேசிய இளைஞர் சேவைகள் சபை

**வருமானம் பெறப்பட்டிராமை**

பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இன்றி 2023 திசெம்பர் 31 ஆம் திகதி தாமரைக் கோபுர வளாகத்தில் நடாத்தப்பட்ட 31st Night Youth Celebration இசை நிகழ்ச்சிக்கு சபையால் ரூபா 10.29 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இந் நிகழ்ச்சியை நடாத்தியமை யால் கிடைக்கப்பெற்ற ரூபா 6.86 மில்லியன் நுழைவுச்சீட்டு வருமானம் சபைக்குப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**பண்ணைப் பயிற்சிப் பாடநெறிகள் நடாத்தப்பட்டிராமை**

1979 இன் 69 ஆம் இலக்க தேசிய இளைஞர் சேவைகள் அதிகாரச்சட்டத்தின் 4(ஈ), 5(2)(எ) மற்றும் 5(2)(ஏ) பிரிவின் பிரகாரம் இளைஞர் யுவதிகள் விவசாயத்துறையில் ஈடுபடுத்தப்படுவதற்காக பண்ணைகளை ஆரம்பிப்பது நோக்கான போதிலும், சபையில் உள்ள 09 பண்ணைகளில் பயிற்சிப் பாடநெறிகள் நடாத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் அற்ற நிகழ்ச்சிகள்**

பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இன்றி, பணிப்பாளர் நாயகத்தின் விருப்பில் காலநிலை மாற்றத்தைக் குறைப்பது தொடர்பாக இளைஞர்களின் பங்களிப்பை வழங்குவதன் பேரில் நிகழ்ச்சி ஒன்று தனியார் ஹொட்டேலில் நடாத்தி ரூபா 1.2 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

**தேசிய இளைஞர் விளையாட்டு விழாவை நடாத்தல்**

34 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவை நடாத்துவதற்காக ரூபா 9.7 மில்லியன் பெறுமதியான உணவு, நீர்ப் போத்தல்கள் மற்றும் ரீ- சேட்களைக் கொள்வனவு செய்கையில் போட்டி விலை மனுக்கள் கோரப்படாது விலைக்குழு ஒன்றின் மூலம் இது மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், 500 மி.லீ. குடிநீர் போத்தல் ஒன்று ரூபா 70 படி கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அப் போத்தலின் விலை ரூபா 30 என உறுதிப்படுத்தப்பட்டிருந்தமையால் இதன் மூலம் ரூபா 0.82 மில்லியனான முறையற்ற கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**புத்தாக்கத்தை வெளிப்படுத்தல்**

இளைஞர் சமூகத்தின் இளைஞர் யுவதிகளின் பங்களிப்பின் மூலம் புதிய நிர்மாணிப்புகளை வெளிப்படுத்துவது சபையின் ஒரு நோக்கான போதிலும் இதற்கு மாறாக நடிகர் நடிகைகளைத் தொடர்புபடுத்தி “கினிஹிரியா மல” நாடகம் தயாரிக்கப்பட்டிருந்தது. இதற்காக ரூபா 4.8 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் இது வரையில் அந்த நாடக நடவடிக்கைகளும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

**கைவிரலடையாள இயந்திரம் இயங்கியிராமை**

சபையால் 2023 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளின் போது ரூபா 4.7 மில்லியன் செலவில் கைவிரலடையாளப் பதிவு இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அவ் இயந்திரம் முறையாக இயங்கியிராததன் காரணமாக குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது.

## 2022 சர்வதேச கிரிக்கெட் சபையின் ரீ -20 உலகக் கோப்பை (ஆண்கள்) கிரிக்கெட் போட்டியுடன் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை

**போட்டியைப் பார்வையிடுவதற்கான செலவினம்**

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் செயற்குழுவை பிரதிநிதித்துவப்படுத்தும் 07 உத்தியோகத்தர்கள் உட்பட 14 செயற்குழு உறுப்பினர்கள் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற போட்டிகளை பார்வையிட சென்றிருந்தமை கண்டறியப்பட்டதுடன் அவர்களுக்கான விமானப் பயணச் சீட்டுக்கள், வீசா கட்டணம், பயணக் காப்புறுதி, கொடுப்பனவுகள் மற்றும் போட்டிச் செலவுகளுக்காக ரூபா 68.24 மில்லியன் தொகை இலங்கை கிரிக்கெட் சபையால் செலுத்தப்பட்டிருந்தது. இதில் 3 செயற்குழு உறுப்பினர்கள் ரூ. 2.65 மில்லியன் தொகையை இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு மீளச் செலுத்தியிருந்தனர்.

**ஊடகவியலாளர்களுக்கான அனுசரணை வழங்கல்**

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் செயலாளரால் தெரிவு செய்யப்பட்ட நான்கு ஊடக நிறுவனங்களுக்கு 2022 செப்டெம்பர் 30 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில், நிறைவேற்று அதிகாரியின் முடிவின்படி ஒரு ஊடகவியலாளர் அவுஸ்திரேலியா சென்று வருவதற்கான விமானப் பயணச் சீட்டும் 1,500 ஐ.அமெரிக்க டொலர் கொடுப்பனவும் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. 2022 செப்தெம்பர் 23 ஆம் திகதிய 12 ஆவது செயற்குழு கூட்டத்தில், நான்கு ஊடகவியலாளர்களுக்கான அனுசரணை வழங்கப்படுவதாக செயற்குழு அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும் அவ் அனுசரணைகள் என்ன என்பது குறித்த தீர்மானம் அல்லது செலுத்தப்படும் பெறுமதிக்கான செயற்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டமை அவதானிக்கப்பட்டிருக்கவில்லை.

**விசா கோரல் கடிதங்கள் வழங்கப்படுதல்.**

11 செயற்குழு உறுப்பினர்களுக்கும் இலங்கை கிரிக்கெட் நிறுவனத் தலைவரின் குடும்ப உறவினர்கள் மற்றும் நண்பர்கள் 21 பேருக்கும், உப தலைவரின் 02 நண்பர்களுக்கும், 8 செயற்குழு உறுப்பினர்களின் 9 மனைவிகள்/குடும்ப உறுப்பினர்களுக்கும் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துடன் தொடர்புடைய மற்றும் ஏனைய 11 பேருக்கும் அவர்களது இரண்டு மனைவிகளுக்கும் விசாவைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கை கிரிகட் நிறுவனத்தால் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் காரியாலயத்திற்கு விசா கோரிக்கை கடிதங்கள் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**விசா பெற்று மீள இலங்கைக்கு வருகை தராமை**

விசா வழங்கப்படுவதற்கான கடிதங்கள் வழங்கப்பட்ட நபர்களில் ஒருவர் ரீ – 20 போட்டியைப் பார்வையிடுவதற்காக விசாவைப் பெற்று 2022 நவம்பர் 03 ஆம் திகதி அவுஸ்திரேலியாவிற்குச் சென்றிருந்த போதிலும், அவர் 2023 செப்தெம்பர் 11 ஆம் திகதி வரையிலும் மீள இலங்கைக்கு வருகைதந்திராமை அவதானிக்கப்பட்டது.

**விமானப் பயணச்சீட்டுக்களைக் கொள்வனவு செய்த செலவினம்**

இதன்படி, அவுஸ்திரேலியா செல்வதற்காக இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் செயற்குழுவில் பதவிவகிக்கும் 07 அதிகாரிகளுக்காக ரூபா 14.27 மில்லியனும் செயற்குழுவின் 07 உறுப்பினர்களுக்காக ரூபா 8.40 மில்லியனும் 04 அதிகாரிகளுக்கு 6.03 மில்லியனும் மேலதிகமான 05 வீரர்களுக்காக ரூபா 14.48 மில்லியனும் துணைப் பதவியணியில் இருவருக்காக ரூபா 4.33 மில்லியனும் 04 ஊடகவியலாளர்களுக்காக ரூபா 3.33 மில்லினுமாக 29 பேருக்காக ரூபா 50.85 மில்லியன் விமானப் பயணச்சீட்டுக் கொள்வனவிற்காகச் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**இரண்டு அதிகாரிகளால் விமானப் பயணச்சீட்டுக்கள்**

2022 ரீ - 20 உலக வெற்றிக்கிண்ணப் போட்டியின் போது 29 பேர் அவுஸ்திரேலியா செல்வதற்காக 29

**கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை**

சந்தர்ப்பங்களின் போது விமானப் பயணச்சீட்டுக்களைக் கொள்வனவு செய்திருந்ததுடன் இலங்கை கிரிக்கட் நிறுவனத் தலைவர், செயலாளர், பிரதம நிறைவேற்று அதிகாரி, மேலதிக வீரர்கள், துணைப் பதவியணியில் துணை ஊழியர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் உட்பட 12 பேரின் ரூபா 26.45 மில்லியன் பெறுமதியான பயணச்சீட்டுக்கள் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் நிர்வாக முகாமையாளராலும், பிரதம நிர்வாக அதிகாரி மற்றும் ஏனைய செயற்குழு உறுப்பினர்கள் 12 பேருக்காக ரூபா 16.25 மில்லியன் பெறுமதியான பயணச்சீட்டுக்களின் கொள்வனவு இலங்கை கிரிகட் நிறுவனத்தின் தலைமை நிர்வாக உத்தியோகத்தராலும் மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் இவ்வாறு இரண்டு அதிகாரிகளால் தனித்தனியாக விலைகள் கோரலுக்கான நடவடிக்கை எடுத்திருந்தமை சர்ச்சைக்குரிய தன்மையென அவதானிக்கப்பட்டது.

# நீர்ப்பாசனப் பிரிவு

## நீர்ப்பாசன அமைச்சு

நீர்ப்பாசன அமைச்சு மற்றும் 2023 ஆம் ஆண்டில் அதன் கீழ் செயல்பட்டு வந்த திணைக்களம், 04 நியதிச்சட்ட சபைகள், 01 அரச நிறுவனம் மற்றும் 14 செயற்திட்டங்களினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடமைப் பொறுப்புகள் மற்றும் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டி இருந்தன.

நீர் ஆதாரங்களை அபிவிருத்தி செய்தல், வடிகால் மற்றும் வெள்ளத்தினைக் கட்டுப்படுத்துதல், நீர் நிலைகள் மற்றும் நீர்ப்பாசன வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் விவசாயம், குடிநீர், மின்சாரம் போன்றவற்றுக்குத் தேவையான நீரினைப் பொருத்தமான முகாமைத்துவத்தின் கீழ் வழங்குதல்.

மேலே குறிப்பிடப்பட்ட கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு நீர்ப்பாசன அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள திணைக்களத்திற்கு 2023 ஆம் ஆண்டில் மொத்தமாக ரூபா. 84,659 மில்லியன் தேறிய ஒதுக்கீடு பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையில் அதில் ரூபா. 53,679 மில்லியன் மட்டும் பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே கட்டப்பட்டுள்ளன.

| | நீர்ப்பாசன அமைச்சு ரூபா. மில்லியன் | நீர்ப்பாசன திணைக்களம் ரூபா. மில்லியன் | மொத்தம் ரூபா. மில்லியன் |
|---|---|---|---|
| தேறிய ஒதுக்கீடு | 69,226 | 15,433 | 84,659 |
| செலவு | 41,249 | 12,430 | 53,679 |
| மீதி | 27,977 | 3.003 | 30,980 |

## கணக்காய்வு அவதானிப்புகள்

**மொரகஹகந்த நீர்மின் நிலையத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்கான கட்டணம்**

மொரகஹகந்த நீர்மின் நிலைய செயற்கிட்டத்தின் I, II மற்றும் III ஆம் கட்டங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்துக்காக 2021 - 2023 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் இலங்கை மகாவலி அதிகார சபையினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் ரூபா. 3,697.43 மில்லியனுக்கான விலைப்பட்டியல்களை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது எனினும் அதில் 23 சதவீதம் அதாவது ரூபா. 853.73 மில்லியன் மட்டுமே இலங்கை மின்சார சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டிலிருந்து சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலைப்பட்டியல்களின்

அறவிடப்படாத பெறுமதியை அறவிடுவதற்கு போதியளவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| ஆண்டு | திருத்தப்பட்ட வருமான மதிப்பீடு | சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியர்களின் பெறுமதி | அறவிடப்பட்ட பெறுமதி | 2023.12.31 ஆம் திகதியில் நிலுவை வருமானம் | மொத்த நிலுவை வருமானம் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| -------- | ----------------- | --------------- | ------------- | ---------------- | ----------- |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | % |
| 2021 | 1,221.67 | 1,200.62 | 643.73 | 556.89 | 46 |
| 2022 | 1,348.90 | 1,369.95 | 209.99 | 1,159.95 | 85 |
| 2023 | 1,335.90 | 1,126.86 | - | 1,126.86 | 100 |
| **மொத்தம்** | 3.906.47 | 3,697.43 | 853.73 | 2,843.70 | |

அட்டவணை இல. 2.31: இலங்கை மின்சார சபையால் செலுத்தப்பட்ட பட்டியல்களின் பெறுமதி

## உமா ஓயா கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி செயற்திட்டம்

**செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிப்புகளின் முன்னேற்றம்**

உமா ஓயா கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 2010 ஆம் ஆண்டில் அனுமதி வழங்கப்பட்ட மதிப்பீடு ரூபா. 9,352 மில்லியனாக இருந்த போதிலும் பின்னர் அது ரூபா. 17,914 . மில்லியனாக திருத்தப்பட்டு 2024 ஜூன் 30 ஆம் திகதியில் ரூபா. 16,269 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் இது வரையில் கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி செயற்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட செயல்களில் 50 சதவீதத்தையேனும் பூர்த்தி செய்ய முடியவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**நீர்ப்பாசன வசதிகளை வழங்கும் காணிகள் இனங்காணப்படாமை**

செயற்திட்டம் 4500 ஹெக்டயர் புதிய காணிகளுக்கும் மற்றும் தற்போது உள்ள 1500 ஹெக்டயர் காணிகளுக்கும் நீர்ப்பாசன வசதிகளை வழங்குவதை அடிப்படை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டிருந்த போதிலும் இது வரையிலும் 750 ஹெக்டயர் புதிய வயல் காணிகளுக்கு மட்டும் பயிர் செய்வதற்கு நீர்ப்பாசன

வசதிகளை வழங்கி இருந்ததுடன் ஏனைய காணிகள் இனம் காணப்பட்டிருக்கவில்லை.

**கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி நடவடிக்கைகள்**

பூர்த்தி செய்யப்பட்டிருந்த அலிகொட்டஆர நீர்த்தேக்கத்திலிருந்து 18 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள மீகஸ்ஆர வெவவுக்குக் குறுக்காக கொண்டு செல்லப்படும் நீர் 24 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள குடா ஓயா நீர்த்தேக்கத்திற்கு கொண்டு செல்லப்பட்டதன் பின்னர் பிரியந்தகே வெவ வரையில் கொண்டு செல்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அவ்வாறு இருந்த போதிலும் தரமற்ற செயல்திட்ட திட்டமிடல் காரணமாக கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு இருக்காததால் மீகஸீஆர வெவ வரையிலும் கூட நீரினைக் கொண்டு செல்வதற்கு முடியாதிருந்தது.

**குடா ஓயா நீர்த் தேக்கத்திற்கு நீரினைக் கொண்டு வருதல்**

உமா ஓயா ஆற்றுப்பள்ளத்தாக்கு நீரை தென் மாகாணத்தில் விவசாய நடவடிக்கைகளுக்கு விடுவிப்பதற்காக, சேகரித்து வைப்பதனை நோக்காகக் கொண்டு 22. 5 மில்லியன் கன மீட்டர் கொண்ட குடா ஓயா நீர்த்தேக்கத்தினை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், நீர்த்தேக்கத்தின் திட்டம் உமா ஓயாவில் இருந்து குடா ஓயா நீர்த் தேக்கத்திற்கு நீரினைக் கொண்டு வருவதற்கு 30 கிலோ மீட்டர் நீளத்தினை கொண்ட திட்டமிடப்பட்ட கால்வாய் மார்க்கத்திற்கு மேலாக இருக்குமாறு, முறையான அனுமதி இன்றி திருத்தப்பட்டு நிர்மாணிக்கப்பட்டு இருந்தது. அதற்கு அமைய உமா ஓயா திருப்பப்பட்டு கொண்டு வரப்படும் நீர் குடா ஓயா நீர்த்தேக்கத்தில் சேகரித்து வைக்கும் நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்ளுவதற்கு முடியாதிருந்தது.

## சியம்பலன்கமுவ ஓயா தொடக்கம் மக கல்கமுவ வெவ வரையில் கால்வாய் நிர்மாணிக்கும் செயற்திட்டம்

இந்த செயற்திட்டம் 2012 - 2014 ஆம் ஆண்டு கால எல்லைக்குள் அதாவது 3 வருடத்திற்குள் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் 9 வருடங்கள் கடந்து இருந்த போதிலும் இதுவரையில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்திற்காக 2023 ஆம் ஆண்டு வரையில் ரூபா. 580.93 மில்லியன் ஒதுக்கீடு கிடைத்திருந்ததுடன் அதில் ரூபா. 374.05 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

**தேதுரு ஓயா பல்நோக்கு அபிவிருத்தி செயற்திட்டத்தில் மின் நிலையத்தினை பேணிச் செல்லுதல்**

தேதுரு ஓயா பல்நோக்கு அபிவிருத்தி செயற்திட்டத்தில் மின் நிலையம் ஒன்றினை பேணிச் செல்வதற்காக நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தினால் தனியார் நிறுவனம் ஒன்றுடன் 2017 ஒக்டோபர் 13 ஆம் திகதி புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைசாத்திடப்பட்டிருந்தது. அந்த ஒப்பந்தத்திற்கு அமைய குறித்த நிறுவனத்தினால் 2021 ஜனவரி தொடக்கம் 2022 திசெம்பர் வரையில் 11,519.68 (kwh) மின் அலகுகள் உற்பத்தி செய்யப்பட்டுத் தேசிய மின்சார ஒழுங்கமைப்பிற்கு சேர்க்கப்பட்டிருந்தது. அந்த மின்சாரத்தை, இலங்கை மின்சார சபைக்கு விற்பனை செய்ததன் மூலம் ரூபா. 200.93 மில்லியன் வருமானம் குறித்த நிறுவனத்தினால் ஈட்டிக் கொள்ளப்பட்டிருந்ததால் ஒப்பந்தத்திற்கு அமைய அந்த வருமானத்தில் 15 சதவீதம் அதாவது ரூபா. 30.14 மில்லியன் நீர்ப்பாசன திணைக்களத்திற்கு செலுத்தப்பட வேண்டி இருந்தது. அதில் ரூபா. 6.09 மில்லியன் அதாவது 20 சதவீதம் மட்டும் அறவிடப்பட்டிருந்ததுடன் மீதி ரூ. 24.06 மில்லியனை உரிய வகையில் அறவிடுவதற்கு இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மேலும் 2023 ஆம் ஆண்டுக்காக உற்பத்தி செய்யப்பட்டிருந்த மின் அலகுகளின் எண்ணிக்கை மற்றும் விற்பனை மூலம் ஈட்டப்பட்டிருந்த வருமானம் மற்றும் அதற்கமைய நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குக் கிடைக்க வேண்டிய வருமானமும் இனம் காணப்பட்டிருக்கவில்லை.

## பஸ்னாகொட நீர்த்தேக்க நிர்மாண செயற்திட்டம்

**பரிந்துரைகளுக்கு முரணாக விலைத் தளம்பலை செலுத்தியமை**

ஆரம்ப ஒப்பந்த உடன்படிக்கைக்கு அமைய ஒப்பந்தக்காரருக்கு விலை தளம்பலுக்காக எதவித கொடுப்பனவும் மேற்கொள்ளப்பட மாட்டாது என்பதான நிபந்தனையைத் திருத்தி மொத்த செலவு மதிப்பீட்டில் 47 சதவீதம் அதாவது ரூபா. 1,085 மில்லியன் விலைத் தளம்பலுக்கான கொடுப்பனவைச் செய்வதற்கு அமைச்சரவையின் அனுமதி கோரப்பட்டிருந்தது. மேலும் திறைசேரிக்கு எதுவித மேலதிக சுமையையும் சுமத்தாது நீர்ப்பாசன அமைச்சினால் இது தொடர்பில் தேவையான நிதியினை வழங்க வேண்டிய போதிலும் அந்தப் பரிந்துரையைப் புறக்கணித்து ஒப்பந்தத்தின் விலைத் தளம்பல்களைச் செலுத்தக்கூடிய வகையில் அரசாங்கத்திற்கு அனுகூலமற்ற வகையில் நீர்ப்பாசன திணைக்களத்தின் செயலாளரினால் 2024

ஏப்ரல் 16 ஆம் திகதி திருத்தப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.
செயற்திட்டத்தில் தொடர்ந்து நிறைவேற்றப்பட வேண்டிய 20 சதவீதம் அளவான வேலைகள் மீதியாக இருந்தபோது 2024 மே தொடக்கம் செயற்திட்டத்தின் நிர்மாணங்கள் நிறுத்தப்பட்டிருந்தன.

## யான் ஓயா நீர்த்தேக்க நிர்மாண செயற்திட்டம்

**உடன்படிக்கைத் திருத்தங்கள்**

யான் ஓயா நீர்த்தேக்க செயற்திட்டத்தின் கீழ் பிரதான அணையினை நிர்மாணித்தல், 04 பக்க அணைகளை நிர்மாணித்தல், இடது கரை கால்வாயை 18 கிலோ மீட்டர் நீளம் கொண்டதாக நிர்மாணித்தல் மற்றும் தெற்குக் கரை கால்வாயை 12 கிலோ மீட்டர் நீளம் கொண்டதாக நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டிருந்தது. அதன் கீழான தெற்குக் கரை கால்வாய் தவிர ஏனைய செயல்களை நிறைவேற்றுவதற்கு அமைச்சரவை அனுமதியின் அடிப்படையில், 176 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை நேரடி ஒப்பந்தமாக சீன நிறுவனம் ஒன்றுடன் 2011 நவம்பர் 03 ஆம் திகதி உடன்படிக்கையிடப்பட்டிருந்தது. அந்த ஒப்பந்த உடன்படிக்கையின் விடயப் பரப்பில் பிரதான அணை மற்றும் 04 பக்க அணைகளை நிர்மாணிப்பதற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட வகையில் மற்றும் ஒப்பந்த பெறுமதி 150 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலராகும் வகையில் 2013 ஓகஸ்ட் 16 ஆம் திகதி திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீண்டும் இடது கரை கால்வாயை நிர்மாணிப்பதற்கு 39.5 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கான உடன்படிக்கை 2017 திசெம்பர் 12ஆம் திகதி குறித்த ஒப்பந்தக்காரருடன் கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதற்கு அமைய ஆரம்ப சந்தர்ப்பத்தில் 176 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு இணங்கி இருந்த செயலினை நிறைவேற்றுவதற்காக 189.5 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரை செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது.

**காணியினை இழந்தவர்களுக்கு மாற்றுக் காணியினை வழங்குதல்**

யான் ஓயா நீர்த்தேக்கத்தினை நிர்மாணித்ததனால் ஹொரவபொத்தான மற்றும் கோமரன்கட பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உரிய 4,148 ஹெக்டயர் மேடு மற்றும் மண் நிலங்கள் நீர்த்தேக்கத்தில் மூழ்கி இருந்தன. 1,515 ஹெக்டயர் புதிய காணிகளுக்கு நீர்ப்பாசன வசதிகளை வழங்கி பயிர்ச் செய்கைக்கு இணைக்கும் அடிப்படை நோக்கத்தில் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் இதுவரையில் 421 ஹெக்டயர் அதாவது 28 சதவீதம் புதிய வயல் நிலங்களுக்கு மட்டும் பயிர் செய்கைக்கான நீர்ப்பாசன வசதிகள் வழங்கப்பட்டிருந்தன.

அதற்கமைய செயறதிட்டத்தினால் நீரில் மூழ்கிய வயல் நிலங்களை இழந்தவர்களுக்காக ஆகக்கூடியது 1.5 ஏக்கர் வீதம் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதற்குத் தேவையான காணியினை அடையாளம் கண்டு வன பாதுகாப்பு திணைக்களத்திடமிருந்து விடுவித்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மாற்று வயல் காணியினை வழங்குவதற்குப் பதிலாக 506 குடும்பங்களுக்கு ரூபா. 1.8 மில்லியன் வீதம் ரூபா. 910.80 மில்லியன் மேலதிக நட்ட ஈடு 2024 மே 31 ஆம் திகதி வரையில் செலுத்தப்பட்டிருந்தது.

**கைப்பற்றப்பட்டிருந்த காணிகளுக்குப் பதிலாக நட்ட ஈடு வழங்குதல்**

2023 மார்ச் 28 ஆம் திகதி எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய யான் ஓயா நீர்த்தேக்க நிர்மாண செயற்திட்டத்திற்கு மற்றும் இடது கரை பிரதான கால்வாயை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்கு உரியதாக தற்போது செலுத்தப்பட்டுள்ள நட்ட ஈட்டுத் தொகை மற்றும் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள அடிப்படை நட்ட ஈட்டுத் தொகை தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்ட அந்த செயற்திட்டத்திற்கான காணியினைக் கைப்பற்றிக் கொள்வதன் முன்னேற்றம் தொடர்பான விரிவான அறிக்கையொன்று பரிசீலனை செய்யும் நோக்கில் ஒரு மாதத்தினுள் அமைச்சரின் ஊடாக அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான விரிவான அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக காணி கைப்பற்றிக் கொள்ளும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது எனவும் மற்றும் நட்ட ஈடு செலுத்தல் அமைச்சரவையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ள மூலப்பிரமாணங்களுக்கு இணங்க உரிய நபர்களுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் கணக்காய்வில் உறுதிப்படுத்திக் கொள்ள முடியாது இருந்தது.

செயற்திட்டத்திற்கு உரியதான சுமார் 2,438 காணித் துண்டுகளுக்கு நட்ட ஈடு செலுத்துதல் நிறைவு செய்யப்பட்டிருந்ததுடன் 1,481 காணித் துண்டுகளுக்குரிய நட்ட ஈடு செலுத்தல் நிறைவு செய்யப்பட்டு இருக்கவில்லை. நீர்த்தேக்கத்தில் மூழ்கிய 105 காணித் துண்டுகள் மற்றும் இடது கரை கால்வாயில் மூழ்கிய 170 காணித் துண்டுகளுக்கு எதுவித நட்ட ஈடும் இதுவரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**ஒப்பந்தக்காரர் வேலைத் தளத்திலிருந்து வெளியேறாமை**

நிர்மாண ஒப்பந்தத்தின் கீழ் வேலைத் தளத்திற்கு வருதல் மற்றும் வெளியேறுதலுக்காக 4,672,247 அமெரிக்க டொலர் ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும்

ஒப்பந்தக்காரர்கள் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் வேலைத் தளத்தில் இருந்து வெளியேறி இருக்காதுடன் அங்குள்ள தற்காலிக அலுவலகக் கட்டடங்கள், கல் அரைக்கும் இயந்திரம் மற்றும் ஏனைய இயந்திராதிகளுக்கு ஒப்பந்தக்காரர்களினால் பாதுகாப்பு சேவை வழங்கி காணி தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**பெறுபேற்றினை அடைதல் தொடர்பாகத் பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளாமை**

திருகோணமலை மாவட்டத்தில் மற்றும் அனுராதபுரம் மாவட்டத்தில் இனம் காணப்பட்ட பிரதேசங்களுக்கு குடிநீர் மற்றும் விவசாய காணிகள் முறையே 2,287 ஹெக்டயர் மற்றும் 5,360 ஹெக்டயர் பயிர் செய்கைக்குத் தேவையான நீரினை வழங்குதல், வாஹல்கட, பதவிய, கோமரன்கடவல ஆகிய விவசாயப் பிரதேசங்களில் பெரும்பாலும் காணக்கூடியதாக உள்ள சிறுநீரக நோயினைக் கட்டுப்படுத்துவதற்கு சுத்தமான குடிநீரினை வழங்குதலுக்கான செயற்திட்டத்தினை ஆரம்பித்தல் இந்த செயற்திட்டத்தின் பிரதான பெரறுபெறாக இனம் காணப்பட்டிருந்த போதிலும் அந்த நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கான முன்னேற்றம் தொடர்பில் செயல்திறனான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக 2024 ஜூன் 30 ஆம் திகதி செயற்திட்டத்திற்காக ரூபா. 40,385 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார பெறுபேறு போதுமான வகையில் தேசிய பொருளாதாரத்திற்கு இணைக்கப்பட்டுள்ளதா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

## மாதுரு ஓயா வலது கரை கால்வாய் நிர்மாணிப்பு

**தம்மின்னள-எவலமன்டிய வீதியை அபிவிருத்தி செய்தல்**

மாதுரு ஓயா வலது கரை கால்வாயை அபிவிருத்தி செய்யும் செயல் திட்டத்திற்கு ரூபா. 38,500.90 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டு பிரதான கால்வாய் உள்ளிட்ட 14 அபிவிருத்தி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. அந்த அபிவிருத்தி நடவடிக்கைகளில் ரூபா. 7,475 மில்லியன் மதிப்பீட்டின் அடிப்படையில் பாலங்கள் உள்ளிட்ட பிரதான சந்தை வீதியினை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. அதன் கீழ் தம்மின்ன தொடக்கம் வலமண்டிய வரையான வீதி 0, 630 கிலோ மீட்டர் தொடக்கம் 4,030 கிலோ மீட்டர் வரையான பகுதியினை அபிவிருத்தி செய்தல் ரூபா. 93.46 மில்லியன் மதிப்பீட்டின் அடிப்படையில், 2021 ஜூலை 30 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது, மேலே கூறப்பட்ட வீதி புனர்நிர்மாணம் செய்யும் போது முறையான

திட்டமின்றி வீதியில் ஒரு சில இடங்களில் 3.4 கிலோ மீட்டர் தோண்டப்பட்டிருந்ததுடன் 2023 செப்டம்பர் வரையிலும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி உள்ளடங்களாக ரூபா. 82.99 மில்லியன் செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்தது.

**நீர்ப்பாசன திணைக்களத்தின் கொடுப்பனவு ஒழுங்கு முறை**

நீர்ப்பாசன திணைக்களத்தின் வலய அலுவலகங்களின் கொடுப்பனவு ஒழுங்கு முறைகளைத் திருத்துவதற்கு கணக்காளர் பதவியணியின் சேவையினைப் பெற்றுக் கொள்ளுமாறு 2016 செப்டம்பர் 22 ஆம் திகதி அரச கணக்கீட்டு செயற்குழு கட்டளையிட்டிருந்தது. அவ்வாறு இருந்த போதிலும் அந்த கட்டளையைப் புறக்கணித்து 2017 ஏப்ரல் 07 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 2013/31 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரசுரிக்கப்பட்டு இருந்த பொறியியல் உதவியாளர் சேவையின் சேவை பிரமாணக் குறிப்புக் கோவைக்கு கணக்காளர் ஒருவரினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் உள்ளடக்கப்பட்டிருந்தது.
2021 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2023 ஓகஸ்ட் 30 ஆம் திகதி வரையில் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகங்கள் மூலம் கணக்காளர் ஒருவரின் உறுதிப்பாடின்றி ரூபா. 13.2 பில்லியன் தொகை வலய உதவியாளரால் உறுதிப்படுத்தப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**கொடுப்பனவு நடைமுறையின் குறைபாடுகள்**

அதன் போது 2022 ஆம் ஆண்டில் ரூபா. 352.42 மில்லியன் பெறுமதியான 1177 காசோலைகள் நிதிப் பிரமாணம் 385(1)அ இற்கு முரணாக பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளரின் பெயருக்கு வழங்கப்பட்டு, குறுக்கு கோடு இரத்து செய்யப்பட்டு கொடுப்பனவை உறுதிப்படுத்திய வலய உதவியாளரினாலேயே பணமாக்கப்பட்டிருந்தது. நிர்மாணம் மற்றும் பராமரிப்பு வேலைகளுக்கு களத்திற்கு நேரடியாகக் கிடைக்கும் பொருட்கள் சரியாகக் கிடைத்துள்ளது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளாது கொடுப்பனவை உறுதிப்படுத்துதல், சரியான பெறுகை ஒழுங்கு முறை பின்பற்றப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்தாது கொடுப்பனவை உறுதிப்படுத்துதல், சேவை உடன்படிக்கையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட தற்காலிக தொழிலாளர்களுக்கு சேவை வருகைப் பதிவேட்டினை உறுதிப்படுத்தாது சம்பளம் வழங்கியமை, வெளித் தரப்பினரிடம் இருந்து வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட இயந்திரங்களுக்கு வழங்குனர்களிடம் இருந்து விலைப்பட்டியல்களைப் பெற்றுக்

கொள்ளாது வவுச்சர்களை உறுதிப்படுத்துதல், விவசாய சங்கங்கள் மூலம் நிர்மாணம் மற்றும் பராமரிப்பு வேலைகளை ஒப்பந்த அடிப்படையில் நிறைவேற்றிக் கொள்ளும் போது விலைப் பட்டியலின்றி கொடுப்பனவை உறுதிப்படுத்துதல், நிறுவனத்தின் பொருட்கள் அல்லது சேவைகளுக்கு உரிய வழங்கலை நேரடி தொழிலாளர் அடிப்படையில் மேற்கொண்டிருந்த நிர்மாண ஒப்பந்தங்களுக்கு குறித்த வேலை நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதனை இறுதி வேலையின் மூலம் உறுதிப்படுத்தாது கொடுப்பனவை உறுதிப்படுத்தியமை போன்ற குறைபாடுகள் கொடுப்பனவு செயல்பாடுகளின் போது இடம்பெற்றிருந்தன.

**சொந்த ஊழியர்கள் மற்றும் உபகரணங்களைப் பயன்படுத்தி நிறைவேற்றப்படும் பெறுகை முறைமையை ஈடுபடுத்துதல்**

இந்த பெறுகை முறையின் (Force Account) கீழ் வாவிகள் ய நீர்த்தேக்கங்களை நிர்மாணித்தல் மற்றும் புனர்நிர்மாணத்திற்குத் தேவையான தொழிலாளர்களை நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டுள்ள தொழிலாளர்களின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட முடியாத சந்தர்ப்பங்களில் மட்டும் வெளியில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் அனைத்து பயிற்சி பெற்ற மற்றும் பயிற்சி பெறாத தொழிலாளர் தேவைப்பாடுகளும் தொழிலாளர் வழங்குனர்களிடம் இருந்து அல்லது விவசாய சங்கங்களின் மூலம் அல்லது தனிநபர் தொழிலாளர் உடன்படிக்கையின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இந்த முறைமையில் வாவிகள் ய நீர்த்தேக்கங்களை நிர்மாணித்தல் மற்றும் புனர்நிர்மாணத்திற்கு திணைக்களத்திடம் சொந்தமாக உள்ள இயந்திராதிகள் மூலம் குறித்த சேவையினைப் பெற்றுக் கொள்ள முடியாதவிடத்து மட்டும் தேவையான இயந்திரங்களை வெளியிலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய போதிலும் திணைக்களத்திற்கு சொந்தமாக உள்ள சுமார் 350 இயந்திராதி தொகுதியினுள் செயல்படும் நிலைமையில் காணப்படும் இயந்திராதிகள் பயன்படுத்தப்படாது இருக்கையில் வெளி வழங்குனர்களிடம் இருந்து வாடகை அடிப்படையில் இயந்திராதிகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன.

**வாகன நிர்வாகம்**

நீர்ப்பாசன அமைச்சின் பெயரில் 654 வாகனங்களும், நீர்ப்பாசன திணைக்களத்தின் பெயரில் 2004 வாகனங்களும் பதிவு செய்யப்பட்டுள்ள போதிலும் நீர்ப்பாசன அமைச்சின் வாகன பதிவேட்டிற்கு அமைய அமைச்சுக்குச் சொந்தமான மற்றும் பயன்படுத்தப்படும் வாகனங்களின் எண்ணிக்கை 74 ஆகவும், திணைக்களத்தின் வாகனப் பதிவேட்டிற்கு அமைய திணைக்களத்திடம் உள்ள மற்றும் பயன்படுத்தப்படும்

வாகனங்களின் எண்ணிக்கை 1,544 ஆகவும் உள்ளன. அதற்கு அமைய அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள 580 வாகனங்களும், திணைக்களத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள 460 வாகனங்களுமாக மொத்தம் 1040 வாகனங்கள் அமைச்சு / திணைக்களத்தின் பொறுப்பில் காணப்படவில்லை. வாகன நிர்வாகம் தொடர்பிலான தரவு ஒழுங்கமைப்பொன்று பேணப்படாததன் காரணமாக அந்த வாகனங்களை ஒழுங்கான முறையில் நிர்வகிக்க முடியாது இருந்தது.

**அத்துமீறிய நிர்மாணம் மற்றும் பயிர்ச்செய்கை**

திணைக்களத்தினால் செயற்பாடு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற 387 நீர்த்திருக்கங்கள், ஏரி அணைக்கட்டுகள் மற்றும் முன்மொழிவுத் திட்டங்களின் ஒதுக்கப்பட்ட பிரதேசங்களில் அனுமதியற்ற நடவடிக்கைகள் தொடர்பான முறையான பதிவுகள் பேணப்பட்டு வந்திருக்கவில்லை. அவற்றிடையே 116 இல் 397 அனுமதியற்ற நிர்மாணங்கள் அல்லது பயிர் செய்கைகள் காணப்படுகின்றன என பதிவிடப்பட்டிருந்த போதிலும் 1946 இன் 32 ஆம் இலக்க நீர்ப்பாசன கட்டளைச் சட்டத்தின் 65 ஆம் பிரிவின் பிரகாரம் அது தொடர்பில் மாவட்ட செயலாளருக்கு அறிக்கையிடப்பட்டு இருக்கவில்லை.

## இலங்கை மகாவலி அதிகார சபை

மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான காணிகள் அரச காணிகள் கட்டளை சட்டத்தின் கீழ் நிறுவனம், அதிக வருமானம் பெறும் நபர்கள், கைத்தொழில் மற்றும் முதலீடுகளுக்காக விலை கேள்வி ய ஏலம் அல்லது அனுசரணை அதாவது தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படையில் அகற்றப்பட வேண்டிய போதிலும், முக்கியமாக தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படையின் கீழ் காணிகள் அகற்றப்பட்டிருந்தன. அதற்கு அமைய 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் அதிகார சபையில் காணிகள் பின்வருமாறு அகற்றப்பட்டிருந்தன.

| நோக்கம் | அகற்றப் பட்டுள்ள காணியின் அளவு (ஹெக்டயர்) | அகற்றப் பட்டுள்ள காணியின் அளவு (துண்டு) | நீண்ட கால கொடுப்பனவுப் பத்திரம், சலுகை கொடுப்பனவுப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள அளவு (துண்டு) | இன்னமும் கொடுப்பனவுப பத்திரம் வழங்கப்பட வேண்டியுள்ள அளவு (துண்டு) | இன்னமும் வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவுப் பத்திரத் தொகை சதவீதமாக % |
|---|---|---|---|---|---|
| ---------------------- | ---------- | -------------- | ---------- | ---------------- | ---------------- |
| வர்த்தகம் | 289 | 9398 | 953 | 8445 | 89 |
| வீடமைப்பு | 1261 | 12390 | 3369 | 9021 | 72 |
| முதலீட்டு செயற்திட்டம் | 6534 | 797 | 204 | 593 | 74 |
| விகாரைகள் | 906 | 564 | 162 | 402 | 71 |
| அரச நிறுவனங்கள் மற்றும் வேறு | 9776 | 1586 | 390 | 1196 | 75 |
| | 18766 | 24735 | 5078 | 19657 | 79 |

அட்டவணை இல. 2.32: மஹாவலி அதிகாரசபைக்டகு சொந்தமான காணிகளை தேர்ந்தெடுக்கப்பட்ட முறையில் அகற்றப்படல்

வர்த்தகம், வீடமைப்பு, முதலீட்டு செயற்திட்டம், விகாரை மற்றும் அரச நிறுவனங்களுக்கு உரியதாக 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 18,766 ஹெக்டயர் காணி 24,735 துண்டுகளாக அகற்றப்பட்டிருந்த போதிலும் அதில் 19,657 துண்டுகள் அதாவது 79 சதவீதத்திற்கு நீண்ட காலக் கொடுப்பனவுப் பத்திரம், சலுகை கொடுப்பனவுப் பத்திரம் என்பவற்றை வழங்குவதற்கு இலங்கை மகாவலி அதிகார சபை தவறியிருந்தது.

காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் மூலம் கமச் செய்கை வகுப்பு நபர்களுக்குக் காணி கச்சேரி மூலம் முக்கியமான காணி அகற்றப்பட்டிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் அகற்றல் பின்வருமாறு காணப்பட்டது.

| நோக்கம் | அகற்றப்பட்டுள்ள காணியின் அளவு (ஹெக்டயர்) | அகற்றப்பட்டுள்ள காணியின் அளவு (துண்டு) | நீண்ட கால கொடுப்பனவுப் பத்திரம், சலுகை கொடுப்பனவுப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள அளவு (துண்டு) | இன்னமும் கொடுப்பனவுப பத்திரம் வழங்கப்பட வேண்டியுள்ள அளவு (துண்டு) | இன்னமும் வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவுப் பத்திரத் தொகை சதவீதமாக % |
|---|---|---|---|---|---|
| ------------------ | ---------------- | --------------- | ---------------- | ---------------- | ---------------- |
| மேல் நில | 51387 | 201324 | 125912 | 75412 | 37 |
| நீர்ப்பாசனம் | 93438 | 101251 | 75008 | 26243 | 25 |
| மழை ஊட்டம் | 13018 | 12954 | 3707 | 9247 | 71 |
| | 157843 | 315529 | 204627 | 110902 | 35 |

மேட்டு நிலம், நீர்ப்பாசனம் மற்றும் மழை ஊட்டம் என 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 157,843 ஹெக்டயர் காணி அதாவது 315,529 துண்டுகள் எனும் ரீதியில் அகற்றப்பட்டிருந்ததுடன், 110,902 துண்டுகளுக்கு அதாவது 35 சதவீதத்திற்கு மானியப் பத்திரம் வழங்குவதற்கு இலங்கை மகாவலி அதிகார சபை தவறியிருந்தது.

**பொது மக்களின் நலனுக்காகக் காணிகளை அகற்றுதல்**

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்குப் புறம்பாக ஜனாதிபதியின் மற்றும் பிரதமரின் தனிப்பட்ட பட்டியலை அடிப்படையாகக் கொண்டு பொது மக்களின் நலன் நோக்கிலான ஒதுக்கீட்டின் கீழ் காணிகள் அகற்றப்பட்டிருந்தன. மாதிரி பரீட்சிப்புகளுக்கு அமைய சி வலயத்தில் 395 நபர்களுக்கும், ஈ வலயத்தில் 91 நபர்களுக்கும், அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படையில் 1998 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான காலத்தினுள் காணிகள் அகற்றுவதற்கு தெரிவு செய்யப்பட்டிருந்தது.

**முதலீட்டு செயற்திட்டத்திற்காக காணிகளை அகற்றுதல்**

மகாவலி அதிகாரப் பிரதேசங்களில் காணப்படும் காணிகள் முதலீட்டு செயல்திட்டங்களுக்கு அகற்றுவதற்கான தேசிய கொள்கையொன்று இல்லாதிருந்ததுடன், 1979 இன் 23 ஆம் இலக்க இலங்கை மகாவலி அதிகார சபை சட்டத்தின் அதிகாரங்களின் பிரகாரம், காணி தொடர்பான பொது சட்டங்கள் மற்றும் அதிகார சபையின் உள்ளகச் சுற்றறிக்கையின் பிரகாரம் காணிகள் அகற்றப்பட்டிருந்தது. கணக்காய்விற்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ள 07 வலயங்களில் 186 முதலீட்டு

செயல்திட்டங்களுக்காக அகற்றப்பட்டிருந்த 229.3 ஹெக்டயர் காணிகளுக்கு அரச மதிப்பீட்டினைப் பெற்றுக் கொள்ளாது மொத்த மதிப்பீட்டின் மீதான அடிப்படையில் வரி அறவிடப்பட்டிருந்ததுடன் இந்த காணியினை குத்தகைக்கு வழங்கி 02 வருடங்களுக்கும் 34 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், அரச மதிப்பீட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 05 வலயங்களில் அதிகார சபையினால் 30 வருட காலத்திற்குக் குத்தகைக்கு வழங்கியிருந்த 421.22 ஹெக்டயர் காணிக்குரிய குத்தகைக் காலம் கணக்காய்வுத் தினமான 2024 மே 10 ஆம் திகதியில் 06 வருடம் தொடக்கம் 13 வருடம் வரையான காலம் கடந்திருந்த போதிலும், அந்த குத்தகை உடன்படிக்கையைப் புதுப்பிப்பதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், வலயத்தில் முதலீட்டு செயற்திட்டத்திற்காக அகற்றப்பட்டிருந்த 85.42 ஹெக்டயர் காணி முறையற்ற வகையில் பாராதீனப்படுத்தப்பட்டிருந்தது.

**அபிவிருத்தி செய்யப்படாத காணிகள்**

2012 ஜூன் 12 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் அமப/12/0581/508/013 கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய விவசாய வர்த்தக தனியார் நிறுவனத்திற்கு சித்தபுர பண்ணையில் இருந்தும் மற்றும் முத்துவெல பண்ணையில் இருந்தும் 500 ஏக்கர் வீதம் மொத்தமாக 1000 ஏக்கர் கால்நடை பண்ணை நடவடிக்கைகளுக்காக 2008. 11.02 ஆம் திகதி தொடக்கம் 30 வருட நீண்ட கால குத்தகை அனுமதிப் பத்திரத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறு இருப்பினும் கால்நடைப் பண்ணை நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட இந்த நிலத்தினை அபிவிருத்தி செய்யாத காரணத்தால் நீண்ட காலக் குத்தகை அனுமதிப் பத்திரம் 2021 செப்டம்பர் 29 ஆம் திகதி இரத்துச் செய்யப்பட்டிருந்தது. இந்த நிலத்தினை அபிவிருத்தி செய்தல் மற்றும் மீளவும் குத்தகைக்கு வழங்குதல் தொடர்பில் தீர்மானமான திட்டமொன்று அதிகார சபையிடம் இருக்கவில்லை. வேறு 16 முதலீட்டாளர்களுக்கு குறுகிய கால பயிர்ச் செய்கைக்கு இந்த காணியில் இருந்து 400 ஏக்கர் வழங்கப்பட்டிருந்தது. குத்தகைக்கு வழங்கிய 16 முதலீட்டாளர்களிடையே 9 பேர் வருடத்திற்குரிய குத்தகைத் தொகையினை செலுத்தி இருக்காததுடன் குறித்த காணியினை ஒப்புக்கொண்ட வகையில் அபிவிருத்தியும் செய்திருக்கவில்லை.

**வாடகையைக் குறைவாக அறவிடுதல்**

பி வலயத்தில் தம்மின்ன பிரிவில் அலுத்வெவ அலகில் விவசாய செயற்திட்டத்தின் கீழ் தெங்குப் பயிர்ச் செய்கைக்காக நிறுவனம் ஒன்றிற்கு நீண்ட காலக் குத்தகை அடிப்படையில் 100 ஏக்கர் 1983 திசெம்பர் 13 ஆம் திகதி தொடக்கம் 30 வருட காலத்திற்கு

வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய குத்தகைக் காலம் 2013 திசெம்பர் 14 ஆம் திகதியில் முடிவடைந்து இருந்த போதிலும் மீண்டும் வழங்கப்பட்டிருக்காததுடன் 100 ஏக்கருக்கு ஒரு வருடத்திற்கு ரூபா. 7,302 வீதம் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையிலும், ரூபா. 8,764 வீதம் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையிலும் மொத்தமாக ரூபா. 80,330 தொகை இந்த நிறுவனத்திடம் இருந்து அறவிடப்பட்டிருந்தது. எவ்வாறு இருப்பினும் 2013 ஆம் ஆண்டில் குத்தகைக் காலம் முடிவடைந்த இந்த காணிக்கு வேறு நிறுவனம் ஒன்று நீண்டகால குத்தகை வழங்குவதாக 2013 ஆம் ஆண்டு தொடக்கம் விண்ணப்பித்து இருந்ததுடன், அதன் போது பெற்றுக் கொள்ளப்பட்ட அரச மதிப்பீட்டிற்கு அமைய இந்த 100 ஏக்கர் தெங்கு பயிர்ச் செய்கையின் மதிப்பீட்டுப் பெறுமதி 2013 திசெம்பர் 12 ஆம் திகதியில் ரூபா. 15 மில்லியன் என மதிப்பீட்டுத் திணைக்களம் அறிக்கையிட்டு இருந்தது. அதற்கமைய கணக்கீடு செய்யும் போது இந்த காணிக்காக 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையில் ஒரு வருடத்திற்கு ரூபா. 0.6 மில்லியன் வீதம் ரூபா. 3 மில்லியனும், 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையில் ஒரு வருடத்திற்கு ரூபா. 0.72 மில்லியன் வீதம் ரூபா. 2.88 மில்லியனுமாக மொத்தம் ரூபா. 5.88 மில்லியன் தொகை அறவிடப்பட வேண்டி இருந்த போதிலும், அதிகார சபை ரூபா. 80,330 ஐ மட்டுமே அறவிட்டிருந்தது.

**கொத்மலை ஓய்வு விடுதி** 1.7176 ஹெக்டயர் நிலப்பரப்பில் அமைந்துள்ள பிரதான கட்டிடம். விளையாட்டுத் தொகுதி. நீச்சல் குளம் மற்றும் 15 விடுதிக் கட்டடங்களைக் கொண்ட கொத்மலை ஓய்வு விடுதியின் காணி மற்றும் கட்டடங்களை வெளித்தரப்பு முதலீட்டாளர்களுக்கு குத்தகைக்கு வழங்கும் போது பின்பற்றப்படும் பொதுவான நடைமுறைகளுக்கு முரணாக முகாமைத்துவ உடன்படிக்கையின் கீழ் தனியார் தரப்பினருக்கு 2013 நவம்பர் 25 ஆம் திகதி ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஓய்வு விடுதியினை ரூபா. 0.3 மில்லியன் மாதாந்த முகாமைத்துவ கட்டணத்தின் அடிப்படையில் 2013 நவம்பர் மாதம் தொடக்கம் 10 வருட காலத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் இதற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட பணிப்பாளர் சபை அனுமதி மற்றும் முகாமைத்துவக் கட்டணம் தீர்மானிக்கப்பட்ட முறை என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2022 நவம்பர் 30 ஆம் திகதியில் ரூபா. 5.1 மில்லியனான இந்த ஓய்வு விடுதிக்காகப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய நிலுவை முகாமைத்துவக் கட்டணம் கணக்காய்வு தினமான 2024 மார்ச் 22 ஆம் திகதி வரையில் அறவிடுவதற்கு அதிகார சபை தவறியிருந்தது. முகாமைத்துவ உடன்படிக்கையில் நிபந்தனை உடன்படிக்கையை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் இணங்கி இருந்த ரூபா. 0.3 மில்லியனான மாதாந்த முகாமைத்துவக் கட்டணம் இருதரப்பு இணக்கப்பாட்டின் அடிப்படையில் 05

வருடங்களின் பின்னர் அதிகரிக்கப்பட வேண்டும் என இணங்கி இருந்த போதிலும் 2018 நவம்பர் 25 ஆம் திகதியின் பின்னர் அந்த முகாமைத்துவக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**திகனை வில்லேஜ் ரிசோர்ட் நிறுவனம்**

அதிகார சபைக்குச் சொந்தமான திகனை கிராமத்தினுள் 07 ஏக்கர் காணியில் அமைக்கப்பட்டுள்ள திகனை வில்லேஜ் ரிசோர்ட் நிறுவனம் 1993 ஜூன் 01 ஆம் திகதி தனியார் கம்பனி ஒன்றுக்கு புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. எவ்வாறு இருப்பினும் இந்த முதலாட்டில் இருந்து இணங்கி இருந்த நலன்கள் கிடைத்திருக்காததுடன், குத்தகைத் தரப்பினர் இந்த வளாகத்தினை 1993 ஆம் ஆண்டு தொடக்கம் 20 வருட காலம் வெளி நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்குப் பல்வேறு கொண்டாட்ட நடவடிக்கைகளுக்கு மற்றும் தங்குமிட வசதிகளை வழங்குவதன் மூலம் வருமானத்தினை ஈட்டிக்கொண்டிருந்ததுடன், அதிகார சபைக்கு எதுவித தொகையினையும் செலுத்தி இருக்கவில்லை. கணக்கீடு செய்யப்பட்டிருந்த வகையில் நிலுவை வாடகை ரூபா. 4.5 மில்லியன் தொகையாகும். இரு தரப்பினரிடையே ஏற்பட்டபிணக்கு நீதிமன்றத்தின் மூலம் தீர்க்கப்பட்டிருந்ததுடன் 2023 பெப்ரவரி 26 ஆம் திகதிக்கு முன்னர் தீர்மானிக்கப்பட்ட வகையில் வளாகத்தினை அதிகார சபையிடம் ஒப்படைத்திருக்க வேண்டிய போதிலும், அவ்வாறு ஒப்படைக்காததன் அடிப்படையில் மீண்டும் 2023 மார்ச் 10 ஆம் திகதி தெல்தெனிய நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. சொத்தினை அனுபவித்து வரும் தரப்பினர் முறையாக இந்த சொத்தினை அதிகார சபைக்கு மீண்டும் ஒப்படைக்காது 2023 பெப்ரவரி 26 ஆம் திகதி தொடக்கம் குறித்த வளாகத்தில் இருந்து அகன்றிருந்ததுடன் கணக்காய்வு தினமான 2024 மார்ச் 22 ஆம் திகதி வரையில் வளாகத்தினுள் நுழைவதற்கு முடியாத வகையில் காடாக புற்கள் வளர்ந்து சொத்துக்கள் சேதமடைந்து காணப்பட்டது. அவ்வாறு இருந்த போதிலும் வளாகத்திற்கு ஏற்பட்டிருந்த நட்ட சேதம் மதிப்பீடு செய்யப்பட்டு அதற்குப் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினரிடம் இருந்து அந்த நட்டத்தினை அறவிட்டுக் கொள்வதற்கும், வளாகம் உள்ளிட்ட ஏனைய சொத்துக்களை பாதுகாக்கப் போதியளவு வேலைத் திட்டத்தினை ஈடுபடுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தினுள் அனுமதியற்ற பயிர்ச்செய்கை**

அதிகார சபைக்கு சொந்தமான மயூரபுர அதிகாரப் பிரதேசத்தினுள் சுமார் 4700 ஹெக்டயர் அளவிலான காணி 2021 ஏப்ரல் 09 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள இலக்கம் 2222/62 கொண்ட அதிவிசேட வர்த்தமானியின் மூலம் அம்பாந்தோட்டை

காட்டு யானை முகாமைத்துவப் பிரதேசமாக பெயரிடப்பட்டிருந்தது. அவ்வாறு இருந்த போதிலும் இந்த நிலப் பரத்சத்தினுள் இரு நபர்களினால் 6000 மாங்கன்றுகள் அனுமதியின்றி பயிர் செய்யப்பட்டிருந்ததுடன் பாதுகாப்பு பிரிவுகளின் உதவியினைப் பெற்றுக் கொண்டு அனுமதியற்ற பயிர்ச் செய்கையாளர்களை அகற்றுவதற்கு உரிய சட்ட ரீதியான நடவடிக்கைகள் 2021 ஓகஸ்ட் 31 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்யப்பட வேண்டும் என அறிவுரை வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனினும் இந்த அனுமதியற்ற மாம்பழ பயிர் செய்கைக்கு இணைந்ததாக வேறு இரு நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட சேனைப் பயிர்ச் செய்கையை அந்த இடங்களில் இருந்து அகற்றுவதற்கு உத்தியோகத்தர்களினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**சட்டவிரோத காணிப்பாவனை**

மயூரபுர பிரிவில் 20,2343 ஹெக்டயர் காணியினை மண் அகழும் செயற்திட்டத்திற்காக 2016 ஆம் ஆண்டில் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த நிறுவனம் 2016 திசெம்பர் 20 ஆம் திகதி தொடக்கம் 2017 திசெம்பர் 19 ஆம் திகதி வரையில் குறித்த நிலத்தில் இருந்து 66,012 கியூப் மண்ணை அகழ்ந்து எடுத்திருந்ததுடன், அதிகார சபைக்கு அறவிடப்பட வேண்டிய காணிப் பாவனைக் கட்டணமான ரூபா. 51.53 மில்லியன் கணக்காய்வுத் தினமான 2024 மார்ச் 19 ஆம் திகதி வரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், இணங்கிய வகையில் குறித்த காணியின் புனர்நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**அகழ்வு காணிகள் புனரமைப்பு செய்யப்படாமை**

மகாவலி அதிகார சபை சட்டத்தின் 12 (ஈ) பிரிவிற்கு அமைய ஏதேனும் விசேட பிரதேசத்தினுள் பௌதிக சுற்றாடல் பாதுகாப்பு செய்தல் மற்றும் அதனைப் பேணிச் செல்லுதல் அதிகார சபையின் முக்கியமான பணியாக இனம் காணப்பட்டிருந்த போதிலும், கனிம அகழ்வுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கும் போது அந்த அகழ்வு நிலத்தினை புனர்நிர்மாணம் செய்தல் தொடர்பில் அதிகார சபையால் சட்டம் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக 2019 ஆம் ஆண்டுக்கு முன்னர் தெற்கு அதிவேக வீதியின் நிர்மாண செயற்திட்டத்திற்கு மகாவலி அதிகார பிரதேசங்களில் இருந்து கருங்கல், மண் மற்றும் சிறு கற்கள் பாரிய அளவில் அகழ்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது எனினும், அந்த நிலத்தினை புனர் நிர்மாணம் செய்தல் உள்ளிட்ட அந்த சுற்றாடந் ஒழுங்கமைப்பைப் பாதுகாத்தல் தொடர்பான சட்டங்களை உருவாக்குதல் அல்லது வேறு ஏதேனும் முறையில்

அகழ்வாளர்களைத் தெளிவுபடுத்தாத காரணத்தால் கணக்காய்வு தினமான 2024 மே 20 ஆம் திகதி வரையிலும் அந்த அகழ்வு நிலம் புனர்நிர்மாணம் செய்யப்படாது பாதுகாப்பற்ற பாரிய நீர் நிறைந்த குழிகளாகக் கைவிடப்பட்டிருந்தன.

**அகழ்வு அனுமதிப் பத்திரம் வழங்கும் போது நிலுவை வருமானம் அறவிடப்படாமை**

கனிம அகழ்வு அனுமதிப் பத்திரத்தினை நீடிப்பு செய்யும் சந்தர்ப்பங்களில் முன்னைய ஆண்டுக்காக அறவிடப்பட வேண்டிய நிலுவைக் காணிப் பயன்பாட்டுக் கட்டணத்தினை அறவிட்டதன் பின்னர் புதிய அனுமதிப் பத்திரத்தினை வழங்கும் ஒழுங்கான முறைமையினை பின்பற்றி இருக்காமை மற்றும் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் உரிய நிலுவைக் கட்டணத்தினை இற்றைப்படுத்தி அறவிடுவதைப் புறக்கணித்தமை என்பவற்றின் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டு இறுதி வரையில் அதிகார சபைக்கு அறவிடப்பட வேண்டிய நிலுவைக் காணி பயன்பாட்டு கட்டணம் மொத்தமாக ரூபா. 1,898.91 மில்லியன் ஆகும். 2020 திசெம்பர் 14 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் அமப/20/1852/317/012 கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அவ்வாறு கருங்கல் வியாபாரிகளிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை காணி பயன்பாடுக் கட்டணத் தொகையில் இருந்து 75 சதவீதத்தினை நீக்குவதற்கும், மீதியை 36 தவணைகளில் அறவிடுவதற்குமான சலுகை வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய சி, ஹெச், எல் மற்றும் வளவ வலயங்களுக்கு உரிய அதிகார சபைக்கு அறவிடப்பட வேண்டி இருந்த நீக்கப்பட்ட நிலுவைக் கட்டணம் ரூபா. 1,311.08 மில்லியன் ஆகும். மீதி நிலுவைத் தொகையினைச் செலுத்துவதற்கு வழங்கப்பட்ட சலுகைக் கால எல்லை 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்து இருந்த போதிலும், 57 அகழ்வாளர்களிடம் இருந்து ரூபா. 271.42 மில்லியன் தொகை 2024 மே 20 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**அரச தனியார் கூட்டு வியாபாரம் ஆரம்பித்தல்**

அதிகார சபையின் வளங்களைப் பயன்படுத்தி ஆரம்பிக்கப்பட்ட மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய வியாபார (தனியார்) நிறுவனம் செயற்திட்டக் குழுவினால் தெரிவு செய்யப்பட்ட வெளிவாரி முதலீட்டாளருடன் இணைந்து அரச தனியார் கூட்டு வியாபாரமாக மீளமைப்பு செய்வதற்கு 2018 செப்டம்பர் 18 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் அமப/18/2083/803/031 கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய நிறுவனம் அரச தனியார் பங்குரிமைக் கூட்டு நிறுவனமாக செயல்படுவதற்கு

ஆர்வலர்களை வரவழைப்பதற்கு 2022 பெப்ரவரி 28 ஆம் திகதி அதிகார சபையின் பணிப்பாளர் சபை அனுமதி வழங்கி இருந்தது. மீள் அமைப்பிற்கு உரிய எதிர்பார்க்கப்பட்ட செயல்களின் கால சட்டகத்திற்கு அமைய 2024 ஏப்ரல் 22 ஆம் திகதி அளவில் முதலீட்டாளர்களின் செயற்திட்ட அறிக்கை பரீட்சீப்பு செய்யப்பட்டு பொருத்தமான செயற்திட்டம் தெரிவு செய்யப்பட வேண்டிய போதிலும், அதற்குரிய நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**கலைத்தலை நிறைவு செய்யாத கம்பனிகள்**

அதிகாரசபைக்கு சொந்தமான இரு துணைக் கம்பனிகளான மகாவலி வெஞ்சர் கெப்பிட்டல் (தனியார்) நிறுவனம் 2012 ஆம் ஆண்டிலும், இயற்கை வள முகாமைத்துவ (தனியார்) நிறுவனம் 2019 ஆம் ஆண்டிலும் முடிவுறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டு அதற்குரிய ஆரம்ப நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி வரையிலும் முடிவுறுத்தல் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு இருக்கவில்லை.

மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய வியாபார (தனியார்) கம்பனியயால் பயன்படுத்தப்பட்ட இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான தெமட்டகொடை, பேஸ்லைன் வீதியில் அமைந்துள்ள 0.213 ஹெக்டயர் காணி மற்றும் கட்டடம் 2020 ஆம் ஆண்டில் மீண்டும் மகாவலி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், அந்த சொத்தினை உரிய வகையில் கையளிப்பதற்கு மற்றும் கையேற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2018 ஆம் ஆண்டில் இந்தக் காணி ரூபா 296 மில்லியனுக்கும், கட்டடம் ரூபா. 619 மில்லியனுக்கும் மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2023 மே 15 ஆம் திகதி கணக்காய்வினால் பௌதீகப் பரீட்சிப்பு செய்யும் போது காணியில் அமைந்திருந்த கட்டடம் கிட்டத்தட்ட முழுமையாக சிதிலமாகி அழிவடைந்து இருந்தது என்பதும் அந்த கட்டடத்தினுள் தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் எதுவும் இருக்கவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டிருந்ததுடன், கணக்காய்வுத் தினமான 2024 ஏப்ரல் 28 ஆம் திகதி வரையில் இது தொடர்பில் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**உற்பத்தி நடவடிக்கைகளுக்காக விடுவிக்கப்பட்ட நீருக்கான கட்டணம் அறவிடப்பட்டிருக்காமை**

நீர்த்தேக்கம், நீர்ப்பாசனம் விநியோகித்தல் முறைமை மற்றும் மின்சாரம் உற்பத்தி செய்தல் மற்றும் வழங்குதலுக்கான இயந்திர

நிலையங்களை நிர்மாணித்தல், செயற்படுத்துதல் உள்ளிட்ட மகாவலி கங்கை அபிவிருத்தி முன்மொழிவு முறை திட்டமிடல் மற்றும் செயல்படுத்துதல் என்பன அதிகார சபையின் முக்கிய பணிகளுள் ஒன்றாகும். இதற்கமைய மின்சாரம் உற்பத்தி செய்வதற்காக விக்டோரியா, ரன்தெனிகல, ரன்டம்பே, கொத்மலை, போவதென்ன, மாதுருஓயா, பொல்கொல்ல மற்றும் உடவளவ ஆகிய நீர்த்தேக்கங்களில் நீரினை சேகரித்து வைத்து வழங்கப்படுவதுடன், அந்த நீர்த் தேக்கங்களின் பராமரிப்பு மற்றும் செயற்பாடுகளுக்காக அதிகார சபையினால் வருடாந்தம் பாரிய செலவினச் சுமையொன்று மேற்கொள்ளப்படுகின்றது. எவ்வாறு இருப்பினும் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் நீர் மின்சாரத்தினை உற்பத்தி செய்வதற்காக இந்த நீர்த்தேக்கங்களில் இருந்து முறையே 11042.07 மில்லியன் கியூப் மீட்டர் நீர் மற்றும் 9210.85 மில்லியன் கியூப் மீட்டர் நீர் விடுவிக்கப்பட்டிருந்ததுடன், அதிலிருந்து முறையே 2327.461 கிகா வோட் மணி மற்றும் 1845.758 கிகா வோட் மணி மின்வலு உற்பத்தி செய்யப்பட்டிருந்த போதிலும் எதுவித கட்டணமும் அதிகார சபை அறவிட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக அதிகார சபைக்குச் சொந்தமான ஆறுகள், நீர்த்தேக்கங்கள், ஏரிகள் மற்றும் குளங்கள் ஒழுங்கமைப்பிலிருந்து பல்வேறு விதமான வியாபாரங்களுக்கு நீரினை பாரிய அளவில் வழங்கியிருந்ததுடன் கணக்காய்வுக்கு பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த தகவல்களுக்கு அமைய 48 பண்ணைகள் / வேலைத்தளங்களுக்கு ஒரு நாளைக்கு 133,113 கன மீட்டர் நீர் வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்கான ஒழுங்கான முறைமையின் கீழ் கட்டணம் அறவிடுதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலே கூறப்பட்ட நீர் மின் நிலையங்களுக்கு மேலதிகமாக அதிகார சபையினால் ஒழுங்குறுத்தப்படாத எனினும், மகாவலி விசேட அதிகார பிரதேசத்தினுள் மின்சார உற்பத்தியில் ஈடுபட்டுள்ள 65 சிறிய அளவிலான நீர்மின் நிலையங்களில் இருந்து நீர் ஊட்ட பிரதேச முகாமைத்துவ கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதிலும் அதற்கான ஒழுங்கான உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**தொங்கும் மின் வேலிகளை நிர்மாணித்தல்**

மகாவலி பி வலயத்தில் அரலகங்வில, கந்தகாடு, சிங்கபுர என்பவற்றுக்கிடையே மற்றும் சி வலயத்தில் மகாவலி பயிற்சி மத்திய நிலையத்தினைச் சுற்றி தொங்கும் முறையிலான மின் வேலி நிர்மாணிப்பதற்கு இலங்கை புதிய உற்பத்தியாளர்களின் ஆணைக்குழுவிற்கு முறையே ரூபா. 4.84 மில்லியன், 9.23 மில்லியன் மற்றும் 8 மில்லியன் எனும் ரீதியில் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. பெறுகை வழிகாட்டல் கோவை ஒழுங்குவிதிகளுக்கு முரணாக இவ்வாறு ஒரு நிறுவனத்திற்கு ஒப்பந்தத்தினை வழங்குதல் மற்றும் கொடுப்பனவு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த யானை வேலிகள் ஒழுங்கான முறையில்

நிர்மாணிக்கப்பட்டு உள்ளது என்பதற்கு அதிகார சபையின் தொழில்நுட்ப பிரிவு அல்லது வேறு தரப்பினரினால் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் மற்றும் ஒழுங்கான முறையில் விலைப்பட்டியல் சமர்ப்பிப்பதற்கு முடியாததன் அடிப்படையில் முற்பணத்தினைத் தீர்ப்பதற்கு முடியாது இருந்தது.

**மீள் குடியேற்றப்பட்ட மக்களுக்கு நீர் வசதிகள் இல்லாமை**

மொரகஹகந்த நீர்த்தேக்கம் நிர்மாணிக்கப்பட்ட காரணத்தால் வீடுகள் சொத்துகளை இழந்த மக்களை மீள்குடியேற்றம் செய்யும் நடவடிக்கைகள் 2022 நவம்பர் மாதம் அளவில் நிறைவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு இருந்த போதிலும் இந்த மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களின் அடிப்படைத் தேவையான குடிப்பதற்கு மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்கான நீர் வழங்கல் தொடர்பில் அடிப்படையில் ஒழுங்கான திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தால் கணக்காய்வுத் தினமான 2024 ஏப்ரல் 28 ஆம் திகதி வரையிலும் வல்லேவெல நவகுருவெலவில் குடியேற்றப்பட்ட முறையே 47 குடும்பங்கள் மற்றும் 426 குடும்பங்களுக்கு குடிப்பதற்கும் மற்றும் ஏனைய தேவைப்பாடுகளுக்கும் நாளாந்தம் பவுசர் வண்டி மூலம் நீரினை வழங்குவதற்கு நேரிட்டுள்ளது. இதற்காக 2023 ஆம் ஆண்டில் ரூபா. 40.73 மில்லியனும் 2024 ஜனவரி தொடக்கம் மார்ச் வரையில் ரூபா. 8.55 மில்லியனும் அதிகார சபையினால் செலவிடப்பட்டிருந்தது. இவ்வாறு மீள்குடியேற்றப்பட்ட மக்களிடையே நவகுருவெல, நவ லக்கல மற்றும் நீரம் ஓய அலகுகளில் வசிக்கும் 161 குடும்பங்களுக்கு கணக்காய்வு தினமான 2024 ஏப்ரல் 28 ஆம் திகதி வரையிலும் வயல் காணிகள் வழங்கப்பட்டு இருக்காதுடன், அவர்களது வாழ்வாதாரத்தை இதனால் தொடர முடியாது இருந்தது. அதன் காரணமாக ஆரம்பத்தில் செயற்திட்டத்தில் இருந்தும், பின்னர் 2022 ஜூலை மாதம் தொடக்கம் கணக்காய்வு தினமான 2024 ஏப்ரல் 28 ஆம் திகதி வரையிலும் அதிகார சபையினால், 2022 ஆம் ஆண்டில் ரூபா. 4.45 மில்லியனும், 2023 ஆம் ஆண்டின் ரூபா. 9.43 மில்லியனுமாக மொத்தம் ரூபா. 13.88 மில்லியன் தொகை இந்த மீள்குடியேற்றப்பட்டவர்களின் உலர் உணவுப் பொருட்களை வழங்குவதற்கு செலவிடப்பட்டிருந்தது. மேலும் 2024 ஏப்ரல் 28 ஆம் திகதியில் இன்னமும் வயல்களாக தயாரிப்பதற்கு இனம் காணப்பட்டிருந்த 181.5 ஏக்கராக இருந்ததுடன், அதில் 72 ஏக்கர் காட்டு நிலம் முழுமையாக சுத்தப்படுத்துவதற்கும் 87 ஏக்கர் சமப்படுத்துவதற்கும் மீதமாக இருந்தன.

அதிகாரசபை பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து மகாவலி குடியேற்றவாசிகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதை நோக்காகக் கொண்டு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான 3 கடன் முறைகளை நடைமுறைப்படுத்தியிருந்தது. மகாவலி சவிய கடன் திட்டம் 2010 ஆம் ஆண்டில் ரூபா. 72.75

மில்லியனில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் வட்டியுடன் மீதி ரூபா, 82.02 மில்லியனாக இருந்தது. இந்தக் கடன் முறைமையின் கீழ் ரூபா. 66.57 மில்லியன் தொகை 2023 நவம்பர் 30 ஆம் திகதியில் கடனாக வழங்கப்பட்டிருந்ததுடன், கைச்சாத்திடப்பட்டிருந்த புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைய கடனுக்கு வங்கி அறவிடும் வட்டியில் இருந்து எதுவித தொகையும் அதிகார சபைக்கு உரித்துடையது அல்ல. மொரகஹ கந்த அத்வெல கடன் முறைமை 2017 ஆம் ஆண்டில் ரூபா. 25 மில்லியன் மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2023 திசெம்பர் 31 ஆம் திகதி அந்தத் தொகையிலிருந்து குடியேற்ற வாசிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது ரூபா. 11.68 மில்லியன் ஆகும். வழங்கப்படாத கடனுக்காக கிடைக்கும் வட்டி வருமானம் சுழல் நிதியத்தில் சேகரிக்கப்பட மாட்டாது. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கான கடன் வேலைத் திட்டத்திற்கு 2006 ஆம் ஆண்டில் அதிகார சபையினால் ரூபா 50 மில்லியன் பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் அந்தக் கடன் தொகையில் இருந்து எவ்வளவு கடன் வழங்கப்பட்டுள்ளது, வட்டி எவ்வளவு என்பவை தொடர்பில் எதுவித தகவல்களும் அதிகார சபையிடம் காணப்படவில்லை.

## நீர் வளங்கள் சபை

**தரவு மத்திய நிலையக் கட்டடத்தினை நிர்மாணித்தல்**

பத்தரமுல்ல நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான காணியில் தரவு மத்திய நிலைய கட்டடத்தினை நிர்மாணிப்பதற்காக ரூபா. 259.1 மில்லியன் அதாவது 1,473,462 யூரோ ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா. 329.8 மில்லியன் அதாவது 1,875,447 யூரோ நிச்சயமற்ற ஒதுக்கீடும் தரவு மத்திய நிலையத்திற்கான பயன்பாட்டிற்காகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதில் மொத்த பெறுமதியில் 15 சதவீதமான ரூபா. 544.2 மில்லியன் அதாவது 3,094,488 யூரோ முற்பணமாக நெதர்லாந்து ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் காணி உரிமைத்துவத்தினைப் பெற்றுக் கொண்டிருக்காத காரணத்தால் தரவு மத்திய நிலையம் நிர்மாணிக்கப்பட்டிருக்காததுடன் செலுத்தப்பட்டிருந்த 3,094,488 யூரோ முற்பணத் தொகை பயனற்று இருந்தது.

நீர்வள சபை அதிகார சட்டத்தினைத் திருத்துவதற்கு உரிய வரைவினைத் தயாரிப்பதற்குத் தனியார் சட்டத்தரணி மற்றும் சட்டத்தரணி நிறுவனத்தின் சேவையினைப் பெற்றுக் கொண்டு கணக்காய்வு தினம் வரையில் ரூபா. 0.645 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் சட்டம் திருத்தப்பட வேண்டும் என

இனம் காணப்பட்டு 4 வருடங்கள் கடந்து இருந்த போதிலும் அந்த செயல் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**சபையின் தலைமை அலுவலகம்**

நீர் வள சபை 1978 ஆம் ஆண்டு தொடக்கம் பேணப்பட்டு வந்துள்ள கொழும்பு 07 ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தையில் தலைமை அலுவலகம் அமைந்துள்ள காணிக்கு 2013 ஆம் ஆண்டு தொடக்கம் வருடாந்தம் ரூபா. 12.77 மில்லியன் வாடகை தொகையை செலுத்தி வருடாந்த குத்தகை அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றுக் கொள்ளுமாறு திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் சபைக்கு தெரிவித்திருந்த போதிலும் அதற்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளாத காரணத்தால் பிரதேச செயலாளரினால் 2019 ஆம் ஆண்டில் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டிருந்தது. பின்னர் காணியின் உரிமை தொடர்பில் தீர்வொன்றுக்கு வருமாறு நீதிபதியினால் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்த போதிலும் நீதிபதியின் அறிவுரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது சுமார் 45 வருடங்களாக தலைமை அலுவலகம் பேணிச் செல்லப்பட்டிருந்த வளாகம் அப்போதைய பிரதமர் பயன்படுத்திய உத்தியோகபூர்வ இல்ல விரிவாக்க செயல்பாடுகளுக்கு ஈடுபடுத்துவதற்கு அமைச்சரவை அனுமதியின்றி வழங்கப்பட்டிருந்தது. தலைமை அலுவலகம் 2021 ஜூலை 18 ஆம் திகதி தொடக்கம் 2022 ஜூலை 15 ஆம் திகதி வரையில் ராஜகிரிய பிரதேசத்தில் தனியார் வாடகைக் கட்டடத்திலும், 2022 ஓகஸ்ட் 01 ஆம் திகதி தொடக்கம் நாவல கொஸ்வத்த பிரதேசத்தில் தனியார் கட்டடத்திலும் பேணிச் செல்லப்பட்டிருந்தது. அதற்காக 2021 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரையில் கட்டட வாடகையாக ரூபா. 30.51 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

இலங்கை இயற்கை கனிய வளங்கள் நிறைந்த நாடாகும். இந்த வளங்களை அபிவிருத்தி செய்வதற்கு பல வாய்ப்புக்கள் உள்ளன என்பதை மறுக்க முடியாது. இந்த வளங்களை ஒழுங்குபடுத்துதல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் கைத்தொழில் அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களுக்கு உரியதான தெல்லியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம், லங்கா மினரல் சேன்ட் கம்பனி, இலங்கை பொஸ்பெட் கம்பனி, கஹட்டகஹ கிரபைட் லங்கா கம்பனி மற்றும் சுற்றாடல் அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற ஜீஎல்எம்பீ தொழில்நுட்ப சேவை (தனியார்) கம்பனி இந்த நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டில் இந்த நிறுவனங்கள் மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.



## கணக்காய்வு அவதானிப்புக்கள்

### புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம்

**தொழில் முயற்சி வள திட்டமிடல் முறைமையை ஸ்தாபிக்காமை**

பணியத்திற்காக தொழில் முயற்சிவள திட்டமிடல் முறைமை (ERP) ஸ்தாபிப்பதற்காக 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 1.66 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. பணியகத்தால் உத்தேசிக்கப்பட்ட முறைமையினை அமுல்படுத்தும் நோக்கில் ரூபா 20.39 மில்லியன் தொகையில் 60 கணனிகளும், 2023 பெப்ரவரி 21 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் 2023 பெப்ரவரி 20 ஆந் திகதி மேற்கூறப்பட்ட பெறுகைப் பணிகள் அமுல்படுத்தாமைக்கு தீர்மானம் எடுக்கபட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக நடைமுறை வேலைக் கணக்கில் உள்ளடக்கப்பட்ட ரூபா 1.66 மில்லியன் செலவினம் சிக்கனமற்ற செலவினத்திற்குட்பட்டிருந்தது. மேலும் 2024 மார்ச் 15 ஆம் திகதி வரையிலும் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4.08 மில்லியன் பெறுமதியான 12 கணளி இயந்திரங்கள் விளைவற்று களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

**படிவு ஆய்வு அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளப்படாமை**

லங்கா மினரல்ஸ் செயன்ஸ் லிமிட்டட் கம்பனிக்கு வணிக ரீதியான ஆய்வு படிவத்திற்காக விநியோகிக்கப்பட்ட இலக்கம் EL/406 என்ற ஆய்வு அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடிக் காலம் 2022 திசெம்பர் 30 ஆந் திகதியில் முடிவடைந்திருந்ததுடன் உரிய படிவு ஆய்வு பிரதேசங்கள் மேலும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கான நடைமுறையொன்றைக் கட்டியெழுப்புவதற்காக இந்தக் கம்பனிக்கு 2 வாரகாலம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் படிவு ஆய்வு அனுமதிப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்ட 07 கிரீட் நிலப் பிரதேசம் ஒன்று 2023 ஒக்தோபர் 09 ஆந் திகதி முதல் 2025 ஒக்தோபர் 08 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் படிவு ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இன்னொரு தனியார்

கம்பனிக்கு EL/434 என்ற படிவு ஆய்வு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது.

**அப்படைட் மற்றும் பொஸ்பேட் கனிமங்கள் தொடர்பான விரிவான ஆராய்ச்சியினை மேற்கொள்ளுதல்**

இலங்கையில் பொஸ்பேட் கனிப் பொருளுக்காக பணியகத்தால் ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்படும் வரை பொஸ்பேட் கணியத்திற்காக எந்தவொரு உடன்படிக்கையும் கைச்சாத்திடல் 2000 யூன் 02 ஆம் திகதிய SE(FR)884-99 என்ற புளக்குளம எதிரிவ செயலாளர் கைத்தொழில் அமைச்சு மற்றும் ஏனையவர்களுக்கு வழக்கின் மூலம் தடை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக தேசிய விஞ்ஞான சபையினதும் தேசிய விஞ்ஞான மன்றத்தினதும் ஆலோசனையின் அடிப்படையில் பணியகத்தால் இலங்கையில் அப்பட்டைட் மற்றும் ஏனைய பொஸ்பேட் கனியங்கள் தொடர்பாக விரிவான ஆராய்சி ஒன்று மேற்கொண்டு அறிக்கை ஒன்று பிரசுரிக்க வேண்டியிருந்தமையும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 22 வருடங்களின் பின்னர் பணியகத்தால் எத்தாவல பொஸ்பேட் படிவு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கை தேசிய விஞ்ஞான மன்றம் மற்றும் தேசிய விஞ்ஞான எக்கடமியின் பரிந்துரையைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் 2023 யூன் 21 ஆம் திகதி பணியகத்தின் உத்தியோகபூர்வ இணையதள பக்கம் ஊடாகவும் மற்றும் பத்திரகை மூலமும் பகிரங்கப்படுத்தப்பட்டது. 2023 ஆகஸ்ட் 25 ஆம் திகதி தேசிய விஞ்ஞான மன்றத்தால் சமர்ப்பிக்கப்பட்ட அவதானிப்பு அறிக்கையின் மூலம் நீதிமன்ற கட்டளை இடப்பட்ட பணிகள் உரிய பிரகாரம் நிறைவேற்றுவதற்கு பணியகம் தவறியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்ததுடன் ஆய்வு அறிக்கைக்காக சிய விஞ்ஞான மன்றத்தின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. வழக்கு தீர்ப்பின் பிரகாரம் சிய விஞ்ஞான மன்றத்தின் இணக்கப்பாட்டை பெற்றுக்கொண்டதன் பின்னர் ஆய்வு அறிக்கையை பகிரங்கப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி அனுமதிப்பத்திரம் வழங்குதல் பணியகத்தால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக லங்கா பொஸ்பேட் கம்பனியால் தெரிவு செய்யப்பட்ட பொஸ்பேட் ஏற்றுமதியாளருக்கு பணியகத்தால் ஏற்றுமதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் அடிப்படையில் தனியார் ஏற்றுமதியாளர்கள் இருவரினால் மெட்ரிக்தொன் 7500 மற்றும் 2350 ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தது.

**அமுல்படுத்தும் உத்தியோகத்தர்களின் வெற்றிடம்**

சட்டவிரோதமாக மேற்கொள்ளப்படுகின்ற கனிய அகழ்வு, தயாரித்தல், விற்பனை செய்தலை சுற்றிவளைக்கும் நோக்கில்

பணியகத்தில் அமுல்படுத்தும் பிரிவொன்று ஸ்தாபித்து அமுல்படுத்தும் உத்தியோகத்தர் பதவிகள் 06 அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் வெற்றிடமான 3 பதவிகளுக்காக ஆட்சேர்த்தல் மேற்கொள்ளாமையின் காரணமாக அந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் நலிவடைந்திருந்தது.

**கனிப்பொருள் வளங்கள் தொடர்பாக தேசியக் கொள்கையொன்று தயாரிக்கப்படாமை**

2017 மே 22 ஆம் திகதி அமைச்சரவை மேற்கொண்ட அறிவித்தலின் பிரகாரம் கனியவளங்கள் தொடர்பாக தேசியக் கொள்கை ஒன்று தயாரித்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வுத் திகதியான 2024 யூலை 16 வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## லங்கா மினரல் சேன்ட் கம்பனி

**பயன்படுத்தப்படாத இயந்திரம் (Spiral Machine)**

கனிய மணல் தயாரிப்பதற்காக முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்குளாய் புதிய இயந்திரக் கூடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு 2013 பெப்ரவரி 13 ஆம் திகதி ரூபா 2.25 மில்லியன் தொகையில் 17.69 ஹெக்ரேயர் காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இயந்திரக்கூடத்தின் நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கு முன் அந்த ஆண்டின் போது ரூபா 39.34 மில்லியனுக்கு சைப்பிலாகார இயந்திரம் (Spiral Machine) கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த இயந்திரம் புல்மோட்டை இயந்திரக் கூடத்தில் விளைவற்று வைக்கப்பட்டிருந்தது. இந்த இயந்திர கூடத்திற்காக 2015 ஆம் ஆண்டின் போது 117 ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் அவ்வாறு சேர்க்கப்பட்ட ஊழியர்கள் புல்மோட்டை இயந்திரக் கூடத்தில் சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். 2023 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2023 – 2026 காலப்பகுதியில் இல்மனைட் மொட்றிக்தொன் 100,000 உற்பத்தி செய்வதற்கு இலக்கிடப்பட்டிருந்தது.

**இரண்டு வகையான ஊக்குவிப்புப் படிகள் செலுத்துதல்**

இலாபத்தின்அடிப்படையில் செலுத்தப்படுகின்ற அங்கீகரிக்கப்பட்ட ஊக்குவிப்புப் படி தொடர்பாக குறிப்பிடாமல் இல்மனைட் உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு ஊக்குவிப்புப் படி செலுத்துவதற்காக 2022 ஆகஸ்ட் 02 ஆந் திகதி திறைசேரியிலிருந்து கோரப்பட்டிருந்ததுடன் பொது முயற்சிகள்

பணிப்பாளர் நாயகத்தால் 2022 நவம்பர் 29 ஆம் திகதி அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது வருடாந்த இலாபத்தின் அடிப்படையில் ஊக்குவிப்புப் படியாக ரூபா 193.68 மில்லியனும் இல்மனைட் உற்பத்தியின் அடிப்படையில் ஊக்குவிப்புப் படியாக 84.16 மில்லியனும் செலுத்தப்பட்டிருந்தது.

**கிடங்கு இயலளவு மட்டத்தை விஞ்சி சென்றமையால் இல்மனைட் உற்பத்தி நிறுத்தப்பட்டமை**

2023 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் கனிய மணல் மெட்ரிக்தொன் 105,282 கம்பனிக்கு உரியதாகக் காணப்பட்டதுடன் 2023 ஆம் ஆண்டின் போது கம்பனியில் கனிய மணல் மெடரிக்தொன் 111,286 உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. அதில் 30 சதவீதம் கனியமணல் அளவு மாத்திரம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்டிருந்தது. ரூபா 1,854.19 மில்லியன் பெறுமதியுடைய கனியமணல் மெட்ரிக்தொன் 187,951 இருப்பொன்று இயந்திரக் கூடத்தில் கிடங்கில் வைக்கப்பட்டிருந்தது. பிரதான கனிப்பொருள் உற்பத்தியான இல்மனைட் 53,856 மெட்ரிக்தொன் 2023 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்து ஆண்டின் இறுதியில் மெட்ரிக்தொன் 78,287 எஞ்சியிருந்ததுடன் கிடங்கின் இயலளவு மட்டத்தை விஞ்சி சென்றதன் காரணமாக இல்மனைட் உற்பத்தி 2024 மே மாதம் வரையில் நிறுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

**சிக்கனமற்ற செலவினம்**

கம்பனிக்குச் சொந்தமான 13 வீல் லோடர் இயந்திரங்கள் காணப்பட்ட போதும் 2023 ஆம் ஆண்டில் 07 இயந்திரங்கள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் எஞ்சியிருந்த இயந்திரங்களைப் பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. சேவையில் ஈடுபடுத்தப்பட்ட 07 இயந்திரங்களும் வருடமொன்றில் 17,343 மணித்தியாலங்கள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் வீல் லோடர் இயந்திரங்களின் 21 செயற்படுத்துனர்கள் சேவையில் ஈடுபடுத்தி 2023 ஆம் ஆண்டில் ரூபா 20.368 மில்லியன் சம்பளம், படிகள் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் ரூபா 12,400 மணித்தியால விலை வீதக் கூலி அடிப்படையில் லோடர் இயந்திரமும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதுடன் அந்த ஒப்பந்தகாரரை தொரிவு செய்யும் போது மணித்தியாலத்திற்கு ரூபா 9,500 மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவும் போது அந்த விலை வீதத்தை விட ரூபா 2,900 அதிக விலையும் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. 2023 நவம்பர் 17 முதல் 2023 திசெம்பர் 31 வரை வாடகை அடிப்படையில் பெறப்பட்ட இயந்திரம் 817.9 மணித்தியாலம்

சேவையில் ஈடுபடுத்தி இயந்திர வழங்குனருக்கு ரூபா 7.16 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

**பயன்படுத்தப்படாத இயந்திரம்**

எரிபொருள் செலவினத்தை 50 சதவீதத்தால் சேமிப்பதற்காக உலர்த்தும் இயந்திரம் ஒன்று 2016 யூன் 30 ஆம் திகதி இறக்குமதி செய்வதற்காக ரூபா 45.12 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த இயந்திரத்தை பயன்பாட்டுக்கு எடுக்கக்கூடிய நிலைக்கு கொண்டுவந்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**பயன்படுத்தப்படாத இயந்திரக்கூடம்**

அகழப்படுகின்ற கனிய மணல்களின் தரத்தன்மையை அதிகரித்தல், தேவையற்ற போக்குவரத்து மற்றும் கையாளல் கிரயங்களைக் குறைக்கும் நோக்காகக் கொண்டு ரூபா 264.78 மில்லியன் பெறுமதியான நடமாடும் இயந்திர பெறுமதியான இரண்டு நடமாடும் இயந்திரக் கூடங்கள் 2022 நவம்பர் மாதத்தில் கம்பனியால் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 159.34 மில்லியன் பெறுமதியான ஒரு இயந்திரம் 2023 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் கொடுவாகட்டுவ செயற்திட்டத்தில் ஸ்தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2024 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் ஸ்தாபிக்கப்படாமல் வளவில் பயனற்றுக் காணப்பட்டது.

## லங்கா பொஸ்பேட் கம்பனி

**பயன்படுத்தப்படாத இயந்திரம்**

2014 ஆம் ஆண்டின் போது ரூபா 35.87 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கிரீஸ்பர் இயந்திரம் எந்தவொரு பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் கம்பனியின் வளவில் பயனற்று வைக்கப்பட்டிருந்ததுடன் அதற்குரிய நிறுத்தி வைத்தல் ரூபா 4.39 மில்லியனும் 2014 ஆம் ஆண்டு முதல் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

**தெங்கு பசளை உற்பத்தி செயற்திட்டத்தை நிறுத்துதல்**

2014 ஆம் ஆண்டின் போது ரூபா 21.23 மில்லியன் மூலதன செலவில் ஆரம்பிக்கப்பட்ட வாரியபொல தெங்கு உர செயற்திட்டத்தின் உற்பத்தி நடவடிக்கைகள் 2021 மே 05 ஆம் திகதி அளவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் அந்த செயற்திட்டத்திலிருந்து ரூபா 31.71 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது.

**சிக்கனமற்ற செலவினம்**

கம்பனியால் கனிப்பொருட்களை அரைக்கும் இயந்திரத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்ற இறப்பர் பிரஸ் அலகொன்று ரூபா 350 வீதம் உள்நாட்டு கம்பனியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டு கணக்காய்வுத் திகதியான 2023 செப்தெம்பர் 14 வரையும் இயந்திரத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. உரிய பொருட்களில் 81 அலகுகள் களஞ்சியத்தில் காணப்படும் போது இருப்பு பூச்சியமாக இருந்ததாக காண்பித்து 2022 திசெம்பர் 17 ஆந் திகதி அலகொன்று ரூபா 79,082 வீதம் 200 இறப்பர் புஸ் அலகுகள் ரூபா 15.82 மில்லியன் தொகையில் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 70,000 ஆன ஆகக் குறைந்த கிரயத்தின் கீழ் கொள்வனவு செய்வதற்கு முடியுமாக இருந்த உரிய விடய இருப்பு மிகவும் உயர்ந்த பெறுமதியில் இறக்குமதி செய்யப்பட்டதன் மூலம் ரூபா 15.75 மில்லியன் நட்டம் கம்பனிக்கு ஏற்பட்டிருந்தது. கொள்வனவு செய்யப்பட்ட இந்த இருப்புக்கள் கணக்காய்வுத் திகதியான 2023 செப்தெம்பர் 14 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல் களஞ்சியத்தில் விளைவற்று வைக்கப்பட்டிருந்ததுடன் கொள்வனவு செய்யும் போது இந்த இறப்பர் பிரிஸ்களுக்கு மேலதிகமாக இணைக்கும் ஆணிகள் 198 அலகுகளுடன் கிடைத்திருந்த போதிலும் அந்த ஆணிகளிலிருந்து உரிய இயந்திரத்திற்கு எந்தவொரு பயன்பாடும் இல்லாதிருந்தமையால் அவை விளைவற்று வைக்கப்பட்டிருந்தது.

.

**முறையற்ற பெறுகைகள்**

கம்பனியின் பெறுகைகள் TGM – 160 Six Roller அரைக்கும் இயந்திரத்திற்காக கியர் பெட்டிதுணைப்பாகம் ஒன்று 2022 ஆம் ஆண்டின் போது சீனாவின் கனரக இயந்திர விற்பனை நிறுவனத்திலிருந்து ரூபா 4.80 மில்லியன் (ஐ.அ. டொலர் 13,000) இற்கு இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. விலைக்குரிய 2021 நவம்பர் 24 ஆம் திகதிய தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு அறிக்கையின் பிரகாரம் வழங்குனர் தெற்காசிய வலயத்தின் TGM அரைக்கும் இயந்திரத்தின் உதிரிப்பாகங்களை வழங்கும் முகவராக இருந்ததன் காரணமாக அந்த நிறுவனத்திலிருந்து உரிய துணைப்பாகங்களை கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் துணைப்பாகங்களின் போட்டியாளர் சந்தையில் கூறுவிலைகள், மாதிரிகள் மற்றும் போட்டி வழங்குனர்கள் தொடர்பான முறையான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. உரிய துணைப்பாகங்கள் 2023 மே 10 ஆம் திகதி நிறுவனத்தின் பிரதான களஞ்சியத்திற்கு கிடைத்திருந்தது. இது தொடர்பாக நியமிக்கப்பட்ட நிறுவன அங்கத்தவர்களைக கொண்ட குழுவொன்றினால் கியர் பெட்டி துணைப்பாகங்களின் மாதிரிகளில் மாற்றங்கள் உள்ளமையால் துணைப்பாகங்களை ஏற்றுக்கொள்ள முடியாதிருந்ததாக அறிக்கையிடப்பட்டிருந்தது. எனினும் மொத்தத் தொகையும் செலுத்தி துணைப்பாகங்கள் கொள்வனவு செய்யும் போது வழங்குனருடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடாமையின்

காரணமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக வழங்கனர்களுடன் இணக்கப்பாட்டிற்கு முடியாதிருந்தது.

## கஹட்டகஹ கிரபைட் லங்கா கம்பனி

**காணி உரித்துக்கள் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் உத்தியோகபூர்வ இல்லங்களில் அனுமதியற்று குடியிருக்கின்றமை**

கஹட்டகஹ சுரகத்திற்கு உரிய கூட்டுமொத்தமான 32.5 ஏக்கர் அளவான இரண்டு காணிப்பகுதிகள் தொடர்பான உரித்து சமர்ப்பித்து வெளிநபர்களினால் முறையே 2004 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளின் போது கம்பனிக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்தது. எனினும் அந்த வழக்கு நடவடிக்கைகள் கணக்காய்வுத் திகதியான 2023 மே 31 ஆம் திகதி வரையிலும் முடிவடைந்திருக்கவில்லை. மேலும் சுரங்க சேவையில் நபர்கள் மூவரை உள்ளடக்கிய 11 பேர்கள் சுரங்க நிலத்தில் அமைந்துள்ள 02 ஏக்கர் 02 றூட் 07 பேர்ச் பிரதேசத்தில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ இல்லங்களில் அனுமதியற்ற வகையில் குடியிருந்து வருவதுடன் அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கு அமைச்சு மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் 2023 திசெம்பர் 31 வரையிலும் அந்த பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு முடியாதிருந்தது.

**பெறுமதி சேர்க்கப்பட்ட, பூர்த்தி அல்லது அரைவாசி பூர்த்தி உற்பத்திகள் மேற்கொள்ளப்படாமை**

காரிய கனிப்பொருளுக்காக பெறுமதி சேர்க்கும் செயற்பாடுகளை நோக்காகக் கொண்டு கம்பனியில் ஆய்வு கூடம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய பணிகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஏற்றுமதிக்காக தயாரிக்கப்படுகின்ற காரிய மாதிரிகளில் உள்ளடக்க வேண்டிய காபன் சதவீதத்தை அளவிடல் மாத்திரம் அதன்போது மேற்கொள்ளப்பட்டிருந்தது. கம்பனி தற்போது வரையில் பியலி (Flake-காபன் சதவீதம் 97-99) சிப்ஸ் (Chips – காபன் சதவீதம் 90-92) என்ற முறைகளில் மாத்திரம் காரியம் ஏற்றுமதி மேற்கொள்ளப்படுவதுடன் பெறுமதி சேர்க்கப்பட்ட பூர்த்தி அல்ல துபகுதி பூர்த்தியாக உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**முறையற்ற காணி கையேற்றல்**

2003 ஒக்தோபர் 15 ஆம் திகதிய கொள்கை வழங்கல் மற்றும் அமுலாக்கல் அமைச்சின் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் தொடம்கஸலந்த இளைஞர் படையணி பயிற்சி நிலையத்திற்காக

தேவையான இடவசதிகள் கஹட்டகஹ சரங்கத்திற்குரிய காணிகளிலிருந்து வழங்குவதற்கு 2003 ஒக்தோபர் 16 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2003 ஆம் ஆண்டு முதல் 03 வருட காலத்திற்காக காணி விடுவிக்கப்பட்டிருந்த போதும் 2023 வரையிலும் அந்த காலத்தை விஞ்சி 17 வருடங்கள் பயிற்சி நிலையம் நடாத்திச் செல்லப்படுகின்ற போதும் வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கும், வாடகை அறவிடுவதற்கும் கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**காரியங்களின் அபிவிருத்திப் பணிகள**

காரியங்கள் அபிவிருத்திப் பணிகளை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் முதலாவது அடி 1130 மட்டத்திலிருந்து 2000 அடி மட்டம் வரை நுழைவதற்கு இரண்டாவது சுரங்க குழி (2nd Shaft) ஸ்தாபிக்கப்பட்டு ஆரம்ப நவடிக்கைகள் பல வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு 2023 ஆம் ஆண்டில் ரூபா 8 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய மிகுதிழ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## ஜீஎஸ்எம்பீ தொழில்நுட்ப சேவை (தனியார் கம்பனி)

**கந்தளாய் மணல் அகழ்வு மற்றும் ஆற்று ஓரங்களைப் பாதுகாக்கும் செயற்திட்டம்**

கந்தளாய் பிரதேச செயலகப் பிரிவில் சூரியபுர கிராம உத்தியோகத்தர் பிரிவில் மகாவலி கங்கையின் பாதுகாப்பு எல்லைக்கு அச்சுறுத்தலாக இருக்கும் வகையில் வைக்கப்பட்டுள்ள கியூப் 103,128 மணல் படிவினை அகற்றுவதற்காக 2019 ஆம் ஆண்டின் போது இலங்கை மகாவலி அதிகார சபையினால் கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமுல்படுத்தப்பட்ட செயல்திட்டம் 2022 யூலை 10 ஆம் திகதி முதல் நிறுத்தப்பட்டமையால் பின்னர் எந்தவொரு மணல் அகழ்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. எனினும் 2022 ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சம்பளம், படிகள், வீட்டு வாடகை, அலுவலக செலவினம், பிரயாணச் செலவினம் போன்றவைகளுக்காக செயற்திட்டத்தால் ரூபா 4.77 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் கீழ் 168.25 மில்லியன் செலவில் மகாவலி கங்கையின் 03 ஓரப்பகுதிகளில் நிர்மாணிப்பதற்கு கம்பனி திட்டமிட்டிருந்தது. அதில் ஒரு ஓரப்பகுதியை நிர்மாணித்தல் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் மிகுதி ஆற்றோரப் பகுதிகளில் 02 தடுப்புக்களை நிர்மாணித்தலின் செயல்முன்னேற்றம் 75 சதவீதம்

மற்றும் 54 சதவீதமாக இருந்ததுடன் இந்த தடுப்பு சுவர்களை நிர்மாணிக்கும் ஒப்பந்தகாலத்தை விஞ்சியிருந்தது.

**மூதூர் மணல் செயல்திட்டம்**

கம்பனி அமுல்படுத்தியிருந்த மூதூர் மணல் செயல்திட்டத்தின் அகழ்வு நடவடிக்கைகள் 2022 ஏப்ரல் முதல் நிறுத்தப்பட்டிருந்தது. எந்தவொரு மணல் அகழ்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளாமல் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் சம்பளம், படிகள், எரிபொருள், மின்சாரம், வீட்டு வாடகை போன்றவைகளுக்காக ரூபா 1.57 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

**கெல்சைட் படிவு அகழ்தல்**

இரத்தினபுரி மாவட்டத்தில் பலாங்கொடை பிரதேச செயலகப் பிரிவில் கஜவக்க ஒதுக்கப் பிரதேசத்தில் காணப்படுகின்ற கெல்சைட் படிவினை அகழ்ந்து பெறுமதி சேர்த்து ஏற்றுமதி செய்வதற்கும், உள்நாட்டு ரீதியில் பயன்படுத்தும் நோக்கத்தையும் கொண்டு செயற்திட்டம் ஒன்று பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பட்டத்தின் படிப்பு நிறுவனத்துடன் ஒன்றினைந்து மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்காக விஞ்ஞான பட்டத்தின் படிப்பு நிறுவனத்திற்கு ஆலோசனை சேவைக் கட்டணம் செலுத்துதல், போக்குவரத்து, பிரயாணச் செலவினம், இணைந்த படிகள், பரிசோதனைக் கட்டணம் போன்றவைகளுக்காக 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையில் கம்பனியால் ரூபா 3.3 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது.

.

**மணல் விற்பனை நிலையம் ஒன்றை ஆரம்பித்தல்**


கந்தளாய் சிறி மங்களபுர மணல் விற்பனை நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்காக 2023 யூன் மாதம் முதல் 06 ஊழியர்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் சம்பளம் மற்றும் வேதனம், எரிபொருள், வீட்டு வாடகை ,நலன்புரி, மின்சாரம் போன்றவைகளுக்காக 1.76 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்டத்தை நிறுத்துவதற்கு 2024 சனவரி மாதத்தின் போது தீர்மானம் எடுக்கப்பட்டதன் காரணமாக செலவிடப்பட்ட பணம் பயனற்றதாக இருந்தது.

.

வெளிநாட்டுச் செயற்திட்டங்கள்

நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கண்காணிப்பு மற்றும் செயற்பாட்டின் கீழ் 2023 ஆம் ஆண்டு இறுதியில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் உதவியின் கீழ் செயற்படும் நீர் வழங்கல் மற்றும் சுகாதார சேவைத் துறைக்கு உரிய 27 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. உடன்படிக்கையின் பிரகாரம் அச் செயற்திட்டங்களின் மொத்த நிதிப் பெறுமதியின் கூட்டுத்தொகை ரூபா 763,564.47 மில்லியன் ஆகும். 2023 ஆம் ஆண்டு பூர்த்தியாகும் போது அச் செயற்திட்டங்களின் மொத்த நிதி முன்னேற்றம் ரூபா 476,942.93 மில்லியனாகும்.

குறித்த காலப்பகுதியின் போது பூர்த்திசெய்யப்பட்டு உரிய நலன்பெறுனர்களுக்கு தேவையான சேவையை வழங்குவதற்கு முடியாமைப் போனமை இச் செயற்திட்டத்தைச் செயற்படுத்தும் பொதுக் குறைபாடாகும் என அவதானிக்கப்பட்டதுடன் மேற்குறித்த செயற்திட்டத்திற்கிடையே 19 செயற்திட்டங்களுக்காக உடன்படிக்கையின் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய காலத்தைப் பார்க்கிலும் அதிகரித்திருந்த 02 முதல் 08 சந்தர்ப்பங்கள் வரையான கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. இதன் படி அச் செயற்திட்டக் காலப்பகுதிகள் எதிர்பார்க்கப்பட்ட காலத்தைப் பார்க்கிலும் அண்ணளவாக 1.5 முதல் 7 வருடங்கள் வரையில் கடந்திருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டு பூர்த்தியாகும் போதும் பூர்த்தியடையாது காணப்பட்டன. இப் 19 செயற்திட்டங்களினதும் காலதாமதம் தொடர்பான விபரம் பின்வரும் வரைபடத்தின் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது.




உரு இல. 2.47: செயற்திட்டத்திற்கு கால நீடிப்பு வழங்குதல்

மூலம்: தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

மேற்குறித்த வகையில் வழமைக்கு மாறாக செயற்திட்டங்களின் காலம் நீடிக்கப்பட்டதன் காரணமாக அந் நீர் வழங்கல் செயற்திட்டங்களில் இருந்தான நலன்களை எதிர்பார்த்துள்ள மக்களுக்குத் தேவையான சேவையை குறித்த வகையில் வழங்கப்பட இயலாதிருந்ததுடன் சபைக்குக் கிடைக்கப்பெற இருந்த வருமானம் குறித்த காலத்திற்குள் கிடைக்கப்பெற்றிராமையால் ஏற்படும் நட்டத்தை ஈடுசெய்தவதற்காக நீர்க் கட்டணங்களை அதிகரிப்பதற்கு நேர்ந்தமை, ஆலோசனைச் சேவைகளுக்காக உடன்படிக்கையிடப்பட்ட பெறுமதியைப் பார்க்கிலும் பாரியளவு தொகை அதிகரித்திருந்ததுடன் பின்வரும்

உதாரணங்களாகக் காண்பிக்கப்பட்டுள்ளவாறு பல்வேறு பாதகமான விளைவுகளை எதிர்கொள்ள நேர்ந்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

- கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு செயற்திட்டம் கட்டம் 01 இன் அடிப்படை ஒப்பந்தக் கிரயத்துடன் ஒப்பிடுகையில் 3.46 மில்லியன் அ.டொ. களாலும் ரூபா 5917 மில்லியனாலும் ஒப்பந்தக் கிரயம் அதிகரித்திருந்தது.

- ருவன்வல்ல நீர் வழங்கல் செயற்திட்டத்தின் அமைப்பின் மாற்றங்களுக்காக அங்கீகாரம் வழங்கப்படுவதிலான தாமதம் காரணமாக ரூபா 720 மில்லியன் கூட்டுத்தொகையான கோரிக்கைகள் கோரப்பட்டிருந்தன.

- கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துச் செயற்திட்டத்தின் கால நீடிப்பிற்காக ஒப்பந்ததாரரால் ரூபா 1,304.69 மில்லியன் கோரிக்கைக்கான கோரல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அம்பத்தலை நீர் வழங்கல் முறைமையை மேம்படுத்தல் மற்றும் வலுசக்தி சேமிப்புச் செயற்திட்டத்தின் திட்டமிடல் மீளாய்வு மற்றும் நிர்மாணிப்பின் கண்காணிப்பு ஆலோசனைச் சேவைக்கான ஒப்பந்தத்தின் ஒப்பந்தக் காலம் நீடிக்கப்பட்டதை அடுத்து ஆலோசனைச் சேவையின் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 159 மில்லியனால் உயர்வடைந்திருந்தது. செயற்திட்டத்தின் காலநீடிப்பிற்கான காரணமாக நாட்டில் நிலவிய கோவிட் 19 தொற்றுநோய் பரவல் மற்றும் பொருளாதார வீழ்ச்சி நிலை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மேற்குறித்த செயற்திட்டங்களில் 12 செயற்திட்டங்களின் ஆரம்ப உடன்படிக்கையின் படி பூர்த்தி செய்யப்பட வேண்டிய தினம் மேற்குறித்த பொருளாதார வீழ்ச்சி மற்றும் கோவிட் 19 தொற்றுநோய் பரவலுக்கு முன்னைய தினங்களாகியிருந்தன.

நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக செயற்திட்டத்திற்காக கடன் மீள் கொடுப்பனவு இடைநிறுத்தப்படுவதாக 2022 ஏப்ரல் 12 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டதை அடுத்து 31 செயற்திட்டங்களின் வெளிநாட்டுக் கடன் தவணைப்பணக் கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டிருந்தது. இதன் படி, 2022 ஒக்டோபர் 28 ஆம் திகதி நியமிக்கப்பட்ட பெருமளவான அபிவிருத்திச் செயற்திட்டங்கள் மீள மூலோபாயங்களுடன் துரிதப்படுத்தும் அதிகாரத்துடன் அதிகாரிகள் குழுவால் 07 செயற்திட்டங்கள் 2022 ஆம் ஆண்டின் போது முற்றாக பூர்த்தி செய்யப்படுவதற்கும் 14 செயற்திட்ட நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதற்கும் 10 செயற்திட்டங்கள் 2023 ஆம் ஆண்டின் போது முற்றாகப் பூர்த்தி செய்யப்படுவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

மேற்குறித்த தீர்மானத்தால் நிர்மாணிப்புகளின் இறுதிக் கட்டத்தில் இருந்த 14 செயற்திட்டங்கள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன. தெரிவுக் கணக்காய்விற்கு உட்பட்ட

ரூபா 6,402 மில்லியன் தொகை செலவிடப்பட்ட 05 செயற்திட்டங்கள் அவ்வாறு இடைநிறுத்தப்பட்டிருந்தமையால் எதிர்பார்க்கப்பட்ட நலனை மக்களுக்கு வழங்குவதற்கு தொடர்ந்தும் தாமதமாகியிருந்தது.

2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் மேற்குறித்த செயற்திட்டங்களில் 24 செயற்திட்டங்களுக்கு உரித்தாக ரூபா 16,750 மில்லியன் கூட்டுத்தொகையான விலை மாற்றங்கள் கோரப்பட்டிருந்ததுடன் இவற்றில் ரூபா 13,631.4 மில்லியன் விலைமாற்றங்களுக்கு உரித்தான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதன் படி, தொடர்ந்தும் கலந்துரையாடப்பட்டு வரும் நிலையில் உள்ள விலை மாற்றக் கோரிக்கைகளின் பெறுமதியின் கூட்டுத்தொகை ரூபா 3,118.5 மில்லியன் ஆகும். 11 செயற்திட்டங்களுக்கு உரித்தாக குறித்த காலப்பகுதியில் நிர்மாணிப்புகள் பூர்த்திசெய்யப்பட்டு கடன் வழங்கும் நிறுவனங்களால் கடன் மீளளிக்கப்பட்டிராத காரணத்தால் உறுதிக் கட்டணமாக (Commitment Charge) ரூபா 2,251.53 மில்லியன் கூட்டுத்தொகையான பணத்தை அச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது முதல் 2023 திசெம்பர் 31 வரை பொதுத் திறைசேரியால் குறித்த கடனை வழங்கிய நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. அச் செலவினத்தால் எவ்வித பொருளாதார நலனும் நாட்டிற்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. மேலும், செயற்திட்டம் குறித்த தினத்தில் பூர்த்தி செய்யப்படாது அல்லது இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டங்களுக்கு உரிய கடன் தவணைப்பணமும் வட்டிக் கொடுப்பனவும் குறித்த தினத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. இதன் படி, மேற்குறித்த செயற்திட்டங்களில் 24 செயற்திட்டங்களுக்கு உரித்தாக எதிர்பார்க்கப்பட்ட நலன் மக்களுக்குக் கிடைக்காது கடன் தவணைப்பணமாக ரூபா 6,107 மில்லியன் கூட்டுத்தொகையான அளவு செலுத்தப்பட வேண்டியிருந்தது. இவ்வாறே, மேற்குறித்த வகையில் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ள செயற்திட்டங்களுக்காக கொள்வனவு செய்யப்பட்டுள்ள இயந்திரங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் விளைவற்ற நிலையில் அல்லது சேதமடைந்தவாறு இருந்தமை அவதானிக்கப்பட்டது.

மேற்குறித்த செயற்திட்டங்களின் செயற்பாடு தொடர்பாக மேலும் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் சில பின்வருமாறாகும்.

## நீர் வழங்கல் மற்றும் சுகாதார சேவைகள் மேம்பாட்டு செயற்திட்டம்

| | |
|---|---|
| **விரிவான மூலோபாயத் திட்டம்** | நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சால் வெளியிடப்பட்ட விரிவான மூலோபாயத் திட்டம் மற்றும் வீதி வரைபடத்தின் படி, நீர் வழங்கல் மறறும் சுகாதார மேம்பாட்டு செயற்திட்டத்தின் மூலம் 2020-2030 காலப்பகுதியின் போது மொனறாகலை, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவிற்காக சுத்திகரிப்பு ஆலைக்கான தேவைப்பாடு இருக்கவில்லை. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் மூலம் அந்த மாவட்டங்களிலுள்ள சுத்திகரிப்பு ஆலைக்காக ரூபா 345.53 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் கிளிநொச்சி |

மாவட்டத்தில் பூர்த்திசெய்யப்பட்ட சுத்திகரிப்பு ஆலைக்குச் சென்றடைவதற்கான நுழைவு வீதி பூர்த்தியாக்கப்பட்டிராமையால் 2023 பெப்ரவரி மாதத்திலிருந்து அது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**விசேட தேவையுள்ள நலனாளிகளின் சுகாதார வசதிகள்**

செயற்திட்டத்தின் ஆரம்ப செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம், கேகாலை, மொனறாகலை மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் ஒவ்வொன்றும் ரூபா 0.250 மில்லியனான 84 விசேட தேவையுடனான நலனாளிகளின் சுகாதார கூறுகள் நிர்மாணிக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்ட காலம் பூர்த்தியடைகையில் கேகாலை மற்றும் மொனறாகலை மாவட்டங்களில் 48 கூறுகள் அதாவது 57 சதவீதம் மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் நிர்மாண நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

**ரிதீமாலியத்த கிராமிய நீர் வழங்கல் செயற்திட்டம்**

250 நலன்பெறுனர்களுக்கு நீர் வழங்கப்படுவதற்காக 2019 ஆம் ஆண்டின் போது
ரூபா 26 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த ரிதீமாலியத்த கிராமிய நீர் வழங்கல் செயற்திட்டத்தின் நீரின் தரம் எதிர்பார்க்கப்பட்ட நிலையில் இருக்காமையால் இரண்டு வருடங்களுக்கு மேலான காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டது.

## நகரங்களிற்கான சுகாதாரம் மற்றும் தூய்மை முயற்சிகளின் செயற்திட்டத்தின் (கட்டம்- 01)

**உரித்தற்ற செலவினம்**

இச் செயற்திட்டத்தின் நிதியத்தைப் பயன்படுத்தி 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 4.395 மில்லியன் தொகை செயற்திட்ட நோக்கங்களிற்கு மாறாக வேறு நடவடிக்கைகளிற்காகச் செலவிடப்பட்டிருந்தன.

## கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 01

**சபையின் சொத்துக்கள் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிராமை**

செயற்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட 14 க்ரூ கப் (Crew Cabs) வண்டிகள மற்றும் 07 டபிள் கப் (Double Cabs) வண்டிகள் சபைக்கு ஒப்படைக்கப்பட்டதாகக் கூறப்பட்ட போதிலும் சபையின் சொத்துப் பதிவேட்டின் படி 16 வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இதன் படி, ரூபா 28.5 மில்லியன் பெறுமதியான 5 வாகனங்கள் தொடர்பாக கணக்காய்விற்குச் சாட்சிகளை வழங்கு செயற்திட்ட முகாமைத்துவம் தவறியிருந்தது.

**DMA மானி செயலிழந்த நிலையில் உள்ளமை**

கொழும்பு நகர வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் வருமானத்தைப் பெறாத நீரின் சதவீதத்தை 49 முதல் 18 வரையாகக் குறைக்கும் நோக்குடன் இச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் வருமானத்தைப் பெறாத நீர் முகாமைத்துவத்தைச் செயற்படுத்துவதற்காக பாய்ச்சல் அளவின் தரவைப் பெற்றுக்கொள்வதற்காகவும் நோக்கத்தின் முன்னேற்றத்தைக் கண்டுகொள்வதற்கும் 36 DMA மானிகள் 383.710.2 அ.டொ இற்கு அதாவது ஏறத்தாழ ரூபா 115 மில்லியனுக்கு ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், 2024 மே 28 கணக்காய்வுத் திகதி வரையிலும் மேற்குறித்த 36 DMA மானிகளில் 31 மானிகள் செயலிழந்த நிலையில் காணப்பட்டன.

**முறையான வகையில் நிலையான சொத்துக்கள் ஒப்படைக்கப்பட்டிராமை**

செயற்திட்ட நடவடிக்கைகள் இரண்டு ஆண்டுகளாக பூர்த்தி செய்யப்பட்டு ஒப்பந்தத்தின் இறுதி பற்றுச்சீட்டு ஒப்பந்ததாரருக்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், ரூபா 16,452.7 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்களுக்கு உரித்தான சொத்துக்கள் மூலதனமாக்கப்படுவதற்கான செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே, 2024 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரை சொத்துக்கள் ஒப்படைக்கப்படும் பத்திரத்தின் மூலம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு முறைப்படி நிலையான சொத்துக்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் குழாய் ஸ்தாபிக்கப்படும் சகல பாதைகளும் கொழும்பு மாநகர சபையிடம் ஒப்படைக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், செயற்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணிப்புகள் தொடர்பாக வைக்கப்பட்டுள்ள ரூபா 109.83 மில்லியன் தொகையான பாதுகாப்பு வைப்பை அறவிட்டுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 02

**ஸ்தாபிக்கப்பட்ட 23 DMA மானிகள் செயலிழந்த நிலையில் உள்ளமை**

ICB 04 ஒப்பந்தத்தின் கீழ் கொழும்பு நகரத்தின் தெற்குப் பகுதியின் 23 மாவட்ட அளவீட்டு பிரதேசங்களில் (DMAs) வருமானத்தைப் பெறாத நீர் முகாமைத்துவத்திற்காக நீர் பாய்ச்சல் அளவின் தரவைச் சேகரித்துக் கொள்வதற்காக 246,337.80 அ.டொ இற்கு (தற்போதைய பெறுமதி ஏறத்தாழ ரூபா 73.9 மில்லியன்) பெறுமதியான 23 DMA மானிகள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், 2024 மே 02 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது அந்த சகல மானிகளும் பழுதடைந்துள்ளமையும் 2021 ஆம் ஆண்டில் இருந்தே சில மானிகள் செயலிழந்த நிலையில் காணப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது.

**வீட்டு நீர் மானிகள் காணாமற் போயிருந்தமை**

ICB 3 பிரதான ஒப்பந்ததாரரால் செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக இறக்குமதி செய்யப்பட்டிருந்த ரூபா 51.36 மில்லியன் அளவு பெறுமதியான“NWS&DB” எனக் குறிப்பிடப்பட்ட Ningbo வகையான 6548 வீட்டு நீர் மானி இருப்புகள் ஒப்பந்ததாரரின் பொறுப்பில் இருக்கையில் காணாமற் போயிருந்தன. இவ்வாறு காணாமற் போயிருந்த 913 மானிகள் தனியார் கம்பனி ஒன்றால் விற்பனை செய்யப்படுவதற்கு வைத்திருக்கையில் கண்டெடுக்கப்பட்டிருந்தன.

**இலாப மற்றும் பொதுச் செயற்பாட்டுச் செலவினம்**

நீர் வழங்கல் சபைக்காக 122,500 வீட்டு நீர் மானிகளும் 100,000 Gunmetal furrules களும் இறக்குமதி செய்யப்படுவதற்காக கடன் பத்திரங்கள் (LC) திறக்கப்படுவதற்காக ICB 3 ஒப்பந்ததாரருக்கு செயற்திட்ட நோக்கங்கள் மீறப்பட்டு ரூபா 870 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அப் பெறுமதியில் 15 சதவீதமான ஒப்பந்ததாரரின் இலாபமும் பொதுப் பணிக்கான செலவினமான ரூபா 113.56 மில்லியன் தொகையும் உள்ளடங்கியிருந்தது. மேலும், அச் செயற்திட்டத்தின் மூலம் நீர் வழங்கல் சபையின் பயன்பாட்டிற்காக ரூபா 1,657.87 மில்லியன் பெறுமதியான நீர் இணை கருவிகளும் ரூபா 293.85 மில்லியன் பெறுமதியான இரசாயனப் பொருட்களும் ICB 4 மற்றும் ICB 3 இன் பிரதான ஒப்பந்ததாரர்களிடம் இருந்து பெறப்பட்டிருந்தன. எவ்வாறெனினும்,
செயற்திட்டத்தின் பிரதான நோக்கங்கள் மீறப்பட்டு மேற்குறித்த வழங்கல்கள் தொடர்பாக ஒப்பந்ததாரர்களின் இலாபமும் பொதுப் பணிச் செலவினமாக (15%) மாக செயற்திட்டம் ரூபா 254 மில்லியன் தொகையைச் செலவிட்டிருந்தது.

**தேலவல பயிற்சி நிலையம்**

செயற்திட்டத்தின் பயிற்சி மற்றும் அபிவிருத்தி இயலளவினை அதிகரிக்கும் முன்மொழிவின் கீழ் ரூபா 1571 மில்லியன் செலவினம் சபையின் உலக தேவைப்பாடுகளுக்கு மாத்திரம் அல்லாது வணிக அடிப்படையில் வெளி வாரி நடவடிக்கைகளுக்கும் ஈடுபடுத்தப்படும் வகையில் (CEWAS) பயிற்சி நிலையம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் 16 ஆம் தேதி முதல் சபையின் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி அந்த செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டினுள் அதன் பராமரிப்பு பணிகளுக்காக ரூபா 41.63 மில்லியன் பாத்திரம் செலவழிக்க பட்டிருந்ததுடன் மொத்த வருமானம் ரூபா 27.28 மில்லியன் ஆகும். அமைய அந்த காலத்தினுள் ஏற்பட்ட நட்டம் ரூபா 14.35 மில்லியன் ஆகும். மேலும் ரூபா 7.22 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் கொண்ட 337.5 சதுர அடிகள் பரப்பளவு உடனான அனைத்து அம்சங்களுடனான அலுவலக வளாகம், 74 சதுர அடிகள் மற்றும் 50 மதுர அடிகள் பரப்பளவு ஆன 2 கணினி கூடங்கள், 73 சதுர அடி பரப்பளவான வாசிகசாலை மற்றும் ரூபா 4.1 மில்லியன் பெறுமதியான உடற்பயிற்சி உபகரணங்களுடன் 55

சதுர அடி பரப்பளவான உடற்பயிற்சி கூடமொன்று திறக்கப்பட்ட திகதியிலிருந்து எந்த ஒரு பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாது விளைவற்று காணப்பட்டது.

**இலக்குகளை அடைந்து கொள்ளல்**

வருமானம் ஈட்டாத நீரின் சதவீதத்தினை 18 வீதத்தினை விடவும் குறைத்து சிறந்த நீர் வழங்கல் சேவையொன்றினை ஆக்கபூர்வமாக வழங்கும் நோக்கில் இந்த செயல்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இவ்வாறான போதிலும் செயல்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 111 மாதங்கள் கடந்துள்ள போதிலும் பணிகள் முழுமையாக நிறைவு செய்யப்பட்டு நீர் வளங்கள் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது (DMA) 42 மாவட்ட அளவீட்டு வலயங்களில் 25 வலயங்கள் மாத்திரம் ஆகும். இதன் காரணமாக உத்தேச இலக்குகளை பூர்த்தி செய்துள்ளது என்பதை உறுதிப்படுத்த முடியாது இருந்தது. எவ்வாறான போதிலும் ரூபா 2,902.76 மில்லியன் தொகையான கடன் மீள் கொடுப்பனவுகளும் கடப்பாட்டு கட்டணங்கள் மற்றும் வட்டி கட்டணங்கள் என ரூபா 9.27 மில்லியன் ரூபா 295.86 மில்லியன் எனுமாறு 2023 திசெம்பர் 31 ஆம் திகதி அளவில் அரசினால் செலுத்தப்பட்டிருந்தது.

செயற்திட்டத்தின் திருத்தங்களை நிறைவு செய்யும் திகதியை கடந்து கணக்காய்வு திகதியான 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் 2 வருடங்கள் கடந்துள்ள போதிலும் ரூபா 14,599 மில்லியன் பெறுமதியுடனான நிலையான சொத்துக்கள் தேசிய நீர் வளங்கள் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு கையளிக்கப்பட்டு இருக்கவில்லை.

## கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவ மேம்படுத்தல் முதலீட்டு நிகழ்ச்சி திட்ட செயல்திட்டம் - 03

**காலத்தை நீடிப்பு செய்வதற்கு கட்டணம் செலுத்துதல்**

செயற்திட்டத்தினால் ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்ட கால நீடிப்பின் அடிப்படையில் ICB 01 மற்றும் ICB 02 ஒப்பந்ததாரர்களுக்கு ஐக்கிய அமெரிக்க டொலர் மற்றும் ரூபா 345 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டாலர் 1,637,367.61 உடன் ரூபா 89.7 மில்லியன் மற்றும் ICB 3 ஒப்பந்ததாரருக்கு ரூபா 436.48 மில்லியன் செயற்திட்டத்தின் மதியரையாளர்களின் அங்கீகாரம் இல்லாது கால நீடிப்பு கிரயம் (Prolongation Cost) என செயல்திட்ட நிதி பயன்படுத்தப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**மாற்றல் உரித்து கொடுப்பனவு**

கால நீடிப்புகளுக்கு உரிய பதிவேடுகளின் பிரகாரம் ஒப்பந்த பெறுமதி நீங்கலாக மேலதிக கிரயம் ஒன்றுக்கு உரித்து கோருவதற்கு ஒப்பந்ததாரருக்கு உரித்து இல்லாதிருந்ததாக ஒப்பந்ததாரர் இணங்கியுள்ள போதிலும் அந்த நிபந்தனையிலிருந்து விலகி ஒப்பந்ததாரரின் விலகல் உரித்திற்காக ரூபா 532.91

ஸ்ரீமில்லியன் மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர் 3,046,465 செயற்திட்டத்தினால் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

| | |
|---|---|
| **இறுதி பொருள் ரீதியான இணக்கம் மேற்கொள்ளாமை** | செயற்திட்டத்தின் ICB 01 மற்றும் ICB 02 ஒப்பந்தங்களின் பௌதீக பணிகள் முறையே 2022 மார்ச் 15 மற்றும் 2022 மே 21 ஆம் திகதிகளில் நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு 2024 மே மாதம் வரையிலும் இறுதிப் பட்டியல்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. அவ்வாறே மேற்படி இரு ஒப்பந்தங்களின் பணிகள் நிறைவு செய்யப்பட்டு 2 வருடங்கள் கடந்திருந்த போதிலும் FIDIC நிபந்தனையின் 7.6 பிரிவின் பிரகாரம் இறுதி பட்டியல்கள் தீர்ப்பதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய பொருள் ரீதியான இணக்கப்பாடு (Material reconciliation) மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

**அம்பத்தலை நீர் வழங்கல் முறைமை முன்னேற்ற மற்றும் வலுச்சக்தி சேமிப்பு செயற்திட்டம்**

| | |
|---|---|
| **சிக்கனமற்ற செலவினங்கள்** | ICB 3 ஒப்பந்தத்தின் கீழ் மொரகஸ்முல்ல நீர்த்தாங்கிக்கு நீரை கொண்டுசெல்வதற்காக மொரகஸ்முல்ல பிரதேசத்தில் புஸ்டர் நீர் பம்பி கூடம் ஒன்றினை நிர்மாணிப்பதற்கு ரூபா 86 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அதன் கட்டுமான பணிகள் 93.88 சதவீதம் வரையிலும் நிறைவு செய்யப்பட்ட பின்னர் நீர் வளங்கள் சபையினால் நீரை விநியோகிப்பதற்கு தீர்மானம் எடுத்த பின்னர் அந்த செயல்திட்டம் நிறைவு செய்யப்பட்டிருந்தது. ICB 03 ஒப்பந்தத்தின் கீழ் மாளிகாகந்த பிரதேசம் வரையிலும் இழையப்பட்ட 1200 மில்லி மீட்டர் நிலைமாற்றல் குழாய்க்கு நேரடியாக குழாய் வழி இணைப்பு வழங்குவதன் மூலம் மொரகஸ்முல்ல நீர் தாங்கிக்கு உயர் அழுத்தத்துடன் வழங்க முடியும். இவ்வாறான போதிலும் இந்தத் தீர்மானத்தை எடுக்கும் போது விலகல்களுக்கு கோரப்பட்ட உரித்துகளுக்காக ரூபா 28.86 மில்லியன் உடன் ரூபா 66.5 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. |
| **பூர்த்தி செய்யப்படாத நிர்மாணங்கள்** | ஒரு வருட காலத்தினுள் ஆறு ஊழியர் உத்தியோகபூர்வ இல்லங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 129 பெறுமதியான ஒப்பந்தம் ஒன்று 2021 ஆகஸ்ட் 10 ஆம் திகதி தனியார் ஒப்பந்ததாரர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2023 செப்டம்பர் மாதம் வரையிலும் நான்கு கால நீடிப்புகள் பெற்று எஞ்சியுள்ள சில பணிகள் உள்ளபோது சபையினால் பரஸ்பர இணக்கப்பாட்டின் அடிப்படையில் ஒப்பந்தம் நிறைவு செய்யப்பட்டிருந்தது. 2023 செப்டம்பர் 11 ஆம் நிகதி இறுதிப்பட்டியல்களின் சான்றுபடுத்திய பெறுமதியின் பிரகாரம் ரூபா 131.51 மில்லியன் ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 44.12 மில்லியன் கொடுப்பனவுகளும் உள்ளடங்கி இருந்தது. |

இவ்வாறான போதிலும் கணக்காய்வு திகதியான 2024 ஜூலை 10 ஆம் திகதி வரையிலும் நிர்மாண வளாகங்களில் டைல் பணிகள் உள்ளடங்களாக நிறைவு செய்ய பல பணிகள் எஞ்சி இருந்தது. அதற்கமைய கையளிக்கப்பட்ட ஒப்பந்த பெறுமதியினுள் நிர்மாணங்களை முழுமையாக பூர்த்தி செய்வதற்கு செயல்திட்டத்தின் பதவியணி தவறி இருந்தது.

## அழுத்கம, மத்துகம, அகலவத்த ஒருங்கிணைந்த நீர் வளங்கள் செயல்திட்டம்

**எதிர்பார்த்த நீர் இயலளவு கிடைக்காமை**

இந்த செயற்திட்டத்திற்கு உரிய நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு நாளாந்தம் வழங்கப்பட வேண்டிய 78,500 கன மீட்டர்கள் கொள்ளளவு சான்றுபடுத்துவதற்கு பழைய நீர்ப்பம்பிகள் நவீன மயப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்ததுடன், ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ஐக்கிய அமெரிக்க டாலர் 9.1 மில்லியன் ஆன மதிப்பீட்டு கிரயத்தில் அமெரிக்க டொலர் 7.2 மில்லியன் ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் நவீன மயப்படுத்தல் பணிகள் நிறைவு செய்யப்பட்டிராததுடன் பொருத்தப்பட்ட புதிய பம்பிகளில் இருந்து பெற்றுக்கொள்ள கூடியதாக இருந்தது 57,000 கன மீட்டர்கள் கொள்ளளவு நீர் மாத்திரம் ஆகும்.

2024 பெப்ரவரி 2 ஆம் திகதி அளவில் பழைய நீர்ப்பம்பிகளின் செயற்பாட்டு நடவடிக்கைகள் முழுமையாக நிறுத்தப்பட்டிருந்ததுடன் புதிய நீர் பம்பிகளை பொருத்துவதிலான குறைபாடுகள், நீர் பம்பிகளில் காணப்படும் அதிக அதிர்வினை கட்டுப்படுத்த முடியாது இருந்தமை போன்ற காரணங்கள் இதற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**புதிய நீர் பம்பிகளில் குறைபாடுகள் காணப்படுகின்றமை**

அவ்வாறே கடல் உப்பு கலக்கும் காலப்பகுதியில் மாத்திரம் 15.5 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ள கொலேமோதர புதிய நீர் பம்பியிலிருந்து கெத்ஹேன நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கழிவு நீரை நிலை மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் பழைய நீர் பம்பிகளில் நீர் பம்பிகளில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக அவ்வப்போது சுத்திகரிப்பிற்கு புதிய நீர் பம்பியிலிருந்து கழிவு நீர் அனுப்புவதற்கு நேரிட்ட காரணத்தால், நீர் பம்பிகள் செயலிழந்த காலப்பகுதியில் மாத்திரம் ரூபா 106 மில்லியன் மேலதிகமான மின்சார செலவினம் ஒன்று சபைக்கு செலவிட நேர்ந்திருந்ததுடன் அந்த செலவினத்தை ஒப்பந்ததாரர்களிடம் அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் பழைய நீர் பம்பிகளின் வளாகத்தில் ஐ.அ.டொலர் 490,000 செலவிடப்பட்டு நிறுவப்பட்ட மின் பிறப்பாக்கி இயந்திரம் உரிய நியமத்திற்கு இணங்க காணப்படாத காரணத்தால் ஒரு வருடம் கடப்பதற்கு முன்னர் செயலிழந்திருந்ததுடன், அதன் குறைபாடுகளுக்காக உத்தரவாத காலம் நிறைவடைவதற்கு முன்னர்

உரிய நடவடிக்கை எடுப்பதற்கு செயல்திட்ட முகாமைத்துவம் தவறியிருந்தது.

**சேற்றினை திரட்டும் அலகு**

கொள்ளளவுக்கு பொருத்தமான முறையில் குறைவான கிரயத்துடன் சேற்றினை திரட்டும் தடாகம் ஒன்றினை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்ததாரரின் நிர்மாண திட்டம் மீளாய்வு மற்றும் உரிய கண்காணிப்பு இல்லாது ஐ.அ.டொ. 4.76 மில்லியன் (தற்போது ரூபா 1,428 மில்லியன்) கிரய மதிப்பீடு ஒன்றின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்ட திட்டமிடப்பட்ட சேற்றினை திரட்டும் பிரிவின் பௌதிக முன்னேற்றம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக 90 சதவீதம் அளவில் காணப்பட்டதுடன் அது வரையிலும் ஒப்பந்ததாரருக்கு மதிப்பிடப்பட்ட தொகையில் 98 சதவீதம் செலுத்தி நிறைவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் ஒரு பரிசோதனை சுற்றேனும் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், உடன்படிக்கையின் பிரகாரம் வழங்கப்பட வேண்டிய பதவியணி பயிற்சி திட்டங்களும் ஒப்பந்ததாரரால் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## நீர்ப்பாசன துறை

| செயற்திட்டத்தின் பெயர் | கடன் / உதவித் தொகை | | 2023.12.31 ஆந் திகதியில் பயன்பாடு | | | 2023.12.31 ஆந் திகதியில் முன்னேற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ. டொலர் | ரூபா மில்லியன் | ஆரம்பித்த ஆண்டு | ஐ.அ. டொலர் | ரூபா மில்லியன் | நிதி முன்னேற்றம் | பௌதீக முன்னேறம் |
| மஹாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (இலங்கை அரசு/ஆசிய அபிவிருத்தி வங்கி) (MWSIP) | 557.50 | 160,356 | 2015 | 368.16 | 92,849 | 57.90 | 45 |
| ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ பிரவேசத்தின் மூலம் இலங்கையின் உலர் வலயத்தின் சிறு நில உரித்துடைய விவசாயகளின் எதிர்கொள்ளும் | 52.08 | 10,416 | 2017 | 36.75 | 7,351 | 70.56 | 82 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சக்தியை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் (பசுமை காலநிலை நிதியம் / ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்) (CRIWMP) | | | | | | | |
| ஒருங்கிணைந்த நீர்நிலை மற்றும் நீர்வள முகாமைத்துவ செயற்திட்டம் (IWWRMP) | 45.03 | 13,939 | 2021 | 10.31 | 3,215 | 23.07 | 38.60 |
| காலநிலை மாற்றத்தைர எதிர்கொள்ளும் பல்-கட்ட நிகழ்ச்சித்திட்ட அணுகுமுறைச் செயற்திட்டம் (CResMIPA) | 93.00 | 27,900 | 2021 | 2.231 | 677 | 2.42 | 25.60 |
| நாச்சிதூவ பாரிய நீர்ப்பாசன பணியின் பண்ணை காணிகளை புனரமைப்பு செய்யும் கற்கைக்கான முன்னோடி செயற்திட்டம் | 93.00 | 156 | 2020 | 0.0436 | 79 | 51.09 | 100 |
| நக்கள்ஸ் மலைத்தொடரில் ஆபத்திற்குள்ளாகியுள்ள ஆற்றுப் படுகைகள், நீர்வீழ்ச்சிகளை அண்மித்த பிரதேசங்களில் வசிக்கும் விவசாயிகள் மற்றும் பெருந்தோட்ட மக்களின் காலநிலை மாற்றங்களுக்கு எதிர்கொள்ளும் சக்தியை மேம்படுத்தல் (பசுமை காலநிலை நிதியம் GCF Knuckels) | 48.97 | 7,836 | 2023 | 0.0827 | 26 | 0.34 | 1 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்திச் செயற்திட்டம் | 529.05 | 99,100 | 2010 | 508.45 | 84,256 | 85.02 | 99.66 |

அட்டவணை இல. 2.34: நீர்ப்பாசன துறையின் செயற்திட்டங்கள்

**மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சி திட்டம் - கட்டம் 01**

**மினிப்பே கால்வாயை உயர்த்தும் ஒப்பந்தம்**

மினிப்பே இடதுகரை மற்றும் வலதுகரை கால்வாய்களுக்கான நீர் கட்டுப்பாடு மற்றும் அளவீட்டு வசதிகளுடன் மினிபபே கால்வாயை உயர்த்தும் ஒப்பந்தம் ரூபா 1,864.80 மில்லியன் வரி நீங்கலான பெறுமதிக்க வெளிநாட்டு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது, இது 2020 நவம்பர் 12 இல் நிறைவு செய்யப்பட வேண்டும். இருப்பினும், ஒப்பந்த காலம் 2021 ஜூலை 13 வரை 243 நாட்கள் நீட்டிக்கப்பட்டது. பின்னர் இந்த ஒப்பந்தம் திகதிகளை நீடிக்காமல் கிட்டத்தட்ட 02 வருடங்கள் பேணப்பட்டதுடன், இக்காலப்பகுதியில் ஒப்பந்தத்தின் நிர்மாண முன்னேற்றம் 22 வீதமாக இருந்தது. இந்த ஒப்பந்தத்தின் மதிப்பு ரூபா 2,912.85 தொகை வரை அதிகரித்து, எஞ்சியுள்ள பணிகள் ஆரம்ப ஒப்பந்ததாரரின் மூலம் நிறைவேற்றுவதற்னுதிருத்தப்பட்ட உடன்படிக்கை இலக்கம் 02 இனை கையொப்பமிடுவதற்கும், ஒப்பந்த காலத்தினை 2023 செப்தம்பர் 21 ஆந் திகதி வரை அதிகரிப்பதற்கும் 2023 யூன் 05 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்தத்தின் கீழ முன்மொழியப்பட்ட மின்பே கால்வாயின் நடுவில் வண்டல் மண் அகற்றும் வாயில் ஒன்றினை நிறுவ திட்டமிடப்பட்டது, மேலும் அதை நிறுவுவது நடைமுறை சிக்கல்களை ஏற்படுத்தும் என்று அங்கீகரிக்கப்பட்டதையடுத்து, அந்த பணி விடயத்தை அகற்ற 134 நாட்கள் அவகாசம் கொடுக்கப்பட்டது பிரச்சினைக்குரியதாக காணப்பட்டது.

**கால்வாய்களை நிர்மாணங்கள் இடைநிறுத்தப்படல்**

மொரகஹகந்த நீர்த்தேக்கத்திலிருந்து கி.மீ. 6.225 வரை தூரத்தில் கட்டப்பட வேண்டிய கால்வாயின் கட்டுமானப் பணிகள் 64 சதவீதமாக இருந்த நிலையில், நிதி நெருக்கடி காரணமாக ஒப்பந்ததாரர் ஒப்பந்தத்தைத் தொடர முடியாமல் போனதால், 2021 யூலை 13 ஆந் திகதி ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது. ஒப்பந்ததாரரின் செயலாற்றல் பிணையை காசாக்குவதன் மூலம் இழப்பை ஈடுசெய்யும் முயற்சியில், ஒப்பந்ததாரர் தாக்கல் செய்த வழக்கு காரணமாக பணத்தை அறவிட முடியவில்லை. அதன்படி, வழங்கப்பட்ட முற்பணப் பிணையில் இருந்து ரூபா 185.89 மில்லியன் மற்றும் செயலாற்றல் பிணையின் பெறுமதியான ரூபா 390.51 மில்லியன் இதுவரை அறவிட முடியாதிருந்தது.

**வடமேற்கு கால்வாயின் நிர்மாணம்**

வடமேற்கு கால்வாயில் நேபடகஹவத்தவிலிருந்து மஹகிதுல நுழைவு சுரங்கப்பாதை வரையிலான கி.மீ. 17+050 கால்வாய் கட்டுமானம் தொடர்பான ஒப்பந்தம் 2018-2021 காலப்பகுதியில் நிறைவு செய்யப்பட வேண்டும் என்றாலும், கட்டுமானப் பகுதிகளில் நிலம் மற்றும் நிலத்தின் உரிமைகளைத் தீர்ப்பதற்று 2 ½ வருடங்கள் தாமதமடைந்த காரணத்தால் 2023 டிசம்பர் 05 ஆம் திகதி வரை 04 முறை ஒப்பந்த காலம் நீட்டிக்கப்பட்டது. அங்கு 03 காணி உரிமையாளர்களுக்கான நட்டஈடு தொடர்பான பிரச்சினை காரணமாக 355 மீற்றர் கால்வாயை அமைக்க முடியாமல் நீண்ட காலமாக ஒப்பந்தம் தாமதமானது. இந்த தாமதத்தால் வற் வரி நீங்கலாக ரூபா 7,226.62 மில்லியன் தொகைக்கு வழங்கப்பட்ட் ஒப்பந்தம் ரூபா 15,154.74 மில்லியன வரை ரூபா 7,928.12 மில்லியனால் அதாவது 110 சதவீதம் அதிகரித்துள்ளது. 2022 ஆம் ஆண்டு முதல் பொருளாதார மற்றும் நிதி மந்தநிலை காரணமாக, கட்டுமானப் பொருட்களின் விலை அதிகரிப்பால், ரூபா 162 மில்லியன் ரூபா 5,827.7 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தின் கூடுதல் பணிகள் மற்றும் ஒப்பந்தத்தில் அளவு மாற்றங்களுக்கு ரூபா 540 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ள போதிலும், அது ரூபா 2,024.9 மில்லியனாக ரூபா 1,484.9 மில்லியனால் அதிகரித்துள்ளது. அங்கு, 13 மீட்டர் அகலத்தில் திறக்க திட்டமிடப்பட்ட கால்வாயை, பின்னர், 10 மீட்டர் அகலத்தில், 02 கால்வாய்களாக, கான்கிரீட்டால் அமைக்க, மதியுரைக் கம்பனி தீர்மானித்து அதற்கேற்ப, செயற்திட்டம் மாற்றப்பட்டதால் 45,425 கன. மீட்டர் கான்கிரீட் கூடுதலாக பயன்படுத்தப்பட்டு ரூபா 1,245.54 மில்லியன் கூடுதலாக செலவிட வேண்டியிருந்தது. இதன்போது மதியுரைக் கம்பனியின் கட்டுமான வடிவமைப்பு நிபுணத்துவம் சவாலுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தது.

**திட்டமிடல் மற்றும் மதியுரைச் சேவைகளை வழங்குதல்**

இந்தத் நிகழ்ச்சித் திட்டத்தைத் தயாரிப்பதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி (PPTA) தொழில்நுட்ப உதவிக்காக நியமித்த குழுவின் தலைவர் பின்னர் இந்தத் நிகழ்ச்சித் திட்டத்தின் மதியுரைக் கம்பனியின் சேவையில் சேர்ந்து Team Leader & Chief Design Engineer ஆக 07 வருட காலம் பணியாற்றினார். அதற்காக அவருக்கு மாதச் சம்பளமாக 26,000 யூரோக்கள் (ரூபா 8.5 மில்லியன்) செலுத்தப்பட்டவாறு இருந்ததுடன், 2023 ஜூன் மாதமளவில் அவருக்கு ரூபா 702.18 மில்லியன் சம்பளமாக வழங்கப்பட்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் சார்பாக பல நிரல் தயாரிப்பு பணிகளில் உதவிய ஒரு நபர் நிகழ்ச்சிதிட்டத்தின் மதியுரைக் கம்பனியில் பணியாற்றுவதன் மூலம் நிகழ்ச்சித்திட்ட மேற்பார்வையின் சுயாதீனத்துவம் சவாலுக்கு உள்ளாக்கப்பட்டது. இந்த ஆலோசகரின் சேவைகளைப் பெறுவது 2013 இல் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட்ட ஆலோசகர்களைப் பயன்படுத்துவதற்கான கையேட்டின் பந்தி 1.11 இற்கு முரணானது ஆகும்.

| | |
|---|---|
| **கால அடிப்டையில் மதியுரைக் கட்டணங்களை செலுத்துதல்** | கட்டுமான ஒப்பந்தங்களில் செயலாற்றலின் அடிப்படையிலஆலோசனைக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும் என்றாலும், காலத்தை அபப்படையாக கொண்டு மதியுரைக் கட்டணம் செலுத்துவதற்காக 2015 நவம்பர் 16 முதல் 60 மாத காலத்திற்கு ஐ.அ.டொ. 22.09 மில்லியன் பெறுமதிக்கு உள்நாட்டு மதியுரைக் கம்பனியொன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. கட்டுமானப் பணிகளில் தாமதம், திட்டக் கால நீட்டிப்பு காரணமாக, இந்த நீட்டிக்கப்பட்ட காலத்தின் அடிப்படையில் ஆலோசனைக் கட்டணம் செலுத்த வேண்டியிருப்பதால், ஒப்பந்த உடன்படிக்கை 2024 யூன் 30 வரை 06 சந்தர்ப்பங்களில் நீட்டிக்கப்பட்டு கிரயம் ஐ.அ.டொ. 41.56 மில்லியன வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. ஆசிய அபிவிருத்தி வங்கியால் கட்டம் 01 மற்றும் 02 இற்கான ஆலோசனைக் கட்டணங்களைச் செலுத்துவதற்கு 25.93 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கியிருந்ததால், ஏனைய செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகையை விட மேலதிகமாக ஆலோசகர் கட்டணம் செலுத்த நேர்ந்திருந்தது. |
| **உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மதியுரை சேவைகள் செலவினம்** | செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் 34 வெளிநாட்டவர்கள் ஆலோசனைப் பணிக்காக இணைத்துக்கொள்ளப்பட்ட நிலையில் தற்போது 08 வெளிநாட்டவர்கள் பணிபுரிகின்றனர். ஒரு வெளிநாட்டவருக்கு மாதம் ஒன்றுக்கு 16,000 முதல் 26,000 யூரோக்கள் (ரூபா 5.5 மில்லியன் முதல் ரூபா 9 மில்லியன் வரை) சம்பளம் மற்றும் ஒரு நாளைக்கு 110 முதல் 70 யூரோக்கள் வரை வாழ்க்கைச் செலவின படிகள் வழங்கப்பட்டன. இந்த வெளிநாட்டு நபர்களுக்கு 2023 யூன் 30 ஆந் திகதியில் உள்ளபடியாக 12,843,998 யூரோக்கள் (ரூபா 4,341 மில்லியன்) சம்பளம் மற்றும் 1,068,599 யூரோக்கள் (ரூபா 361.18 மில்லியன்) இணைந்த படிகளும் வழங்கப்பட்டுள்ளன. செயற்திட்டத்தின் பணிக்காக, வெளிநாட்டு ஆலோசனை நிறுவனம் தனது 02 இணைந்த உள்ளூர் நிறுவனங்களின் மூலம் 161 உள்ளூர் ஊழியர்களை பணியமர்த்தியதுடன், தற்போது 110 பேர் பணியாற்றி வருகின்றனர். இந்த ஊழியர்களுக்கு மேலதிகமாக, கொழும்பு செயற்திட்ட அலுவலகம் மற்றும் ஒப்பந்தப் பகுதிகளில் அமைந்துள்ள 08 பணியிட அலுவலகங்களில் பணிபுரியும் 48 பதவியணியினருக்கு நேர அடிப்படையில் ஆலோசனைக் கட்டணம் செலுத்தப்பட்டவாறு இருந்தது. |
| **மதியுரைக் கம்பனிகளுக்காக ஏனைய செலவினங்கள்** | இதற்க மேலதிகமாக செயற்திட்டத்திற்குச் சொந்தமான 14 வாகனங்கள் மற்றும் 03 மோட்டார் சைக்கிள்கள் ஆலோசனை நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதுடன், அவற்றின் செயல்பாடு மற்றும் பராமரிப்புக்காக 2023 ஜுன் 30 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 67 மில்லியன், ஆலோசனை நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தை புதுப்பிக்க ரூபா 9.65 மில்லியன், ஆலோசனை நிறுவனத்திற்கு சொந்தமான அலுவலகங்களை அமைப்பதற்கு ரூபா 13.47 மில்லியன் மற்றும் அவற்றின் பராமரிப்புக்காக மற்றும் ரூபா 84.83 மில்லியன் தொகையும் 2023 யூன் 30 ஆந் திகதி வரை |

செலவிடப்பட்டிருந்தது.

**வழிகாட்டல்களுக்கு முரணாக மதியுரையாளர்களை ஆட்சேர்ப்பு செய்தல்**

2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் அதன் கடனாளிகளால் ஆலோசகர்களை ஈடுபடுத்துவதற்கான வழிகாட்டுதல்களின் 1.11(b) மற்றும் (c) பதந்திகளின் படி தேர்ந்தெடுக்கப்பட்ட மதியுரையாளர் தொடர்புடைய செயற்திட்டம் தொடர்பாக முன்னர் பிற ஒப்பந்தங்களைச் செய்திருந்தால் (உ.ம்.- வடிவமைப்புத் திட்டங்களைத் தயாரித்தல், சுற்றாடல் மதிப்பீடுகள்) ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் கடன் பெறும் நிறுவனங்களின் ஊழியர்களுடன் குடும்பம் மற்றும் வணிக உறவுகளைக் கொண்ட நபர்களை மீண்டும் ஆலோசனைப் பணிக்கு நியமிக்கக் கூடாது. இருந்தபோதிலும், இத்திட்டத்தில் வடமத்திய மற்றும் வடமேற்கு கால்வாய்கள் மற்றும் மினிபே கால்வாய் புனரமைப்பு திட்டங்களின் வடிவமைப்புத் திட்டங்கள், சுற்றுச்சூழல் மதிப்பீட்டு அறிக்கைகள், சாத்தியக்கூறு ஆய்வு அறிக்கைகள் மற்றும் Modification Report தயாரிக்கப்பட்டு, அதற்காக ரூபா 102.98 மில்லியன் தொகையை அரசாங்க கம்பனியின் ஊடாக பெற்ற ஒரு கம்பனி பின்னர் 2015 ஆம் ஆண்டு முதல் இந்தத் செயற்திட்டத்தின் பிரதான மதியுரைக் கம்பனியின் இலங்கைப் பிரதிநிதி நிறுவனமாக செயற்பட்டு வந்தது. மேலும் இந்த கம்பனியின் பிரதான பதவியணி கடன் பெறுநரான நீர்ப்பாசன அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களில் இருந்து ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களை கொண்டிருந்தது.

மகாகிதுலா சுரங்கப்பாதை, மகாகிதுலா மற்றும் மகாகிருளா நீர்த்தேக்கங்கள் மற்றும் கால்வாய்கள் அமைத்தல்

மஹாகிதுல சுரங்கப்பாதை, மஹாகிதுலா மற்றும் மஹாகிருள நீர்த்தேக்கங்கள் 02 மற்றும் இந்த 02 நீர்த்தேக்கங்களுக்கிடையில் கால்வாய் நிர்மாண ஒப்பந்தம் 2020-2024 காலப்பகுதியில் ரூபா 9,978.48 மில்லியன் செலவில் நிர்மாணிக்க பொறுப்பேற்ற கம்பனிக்கு கட்டுமானப் பணிகளுக்குத் தகுந்த பணியாளர்கள் மற்றும் கட்டுமான உபகரணங்களின் பற்றாக்குறை, மோசமான தள முகாமைத்துவம் போன்ற காரணங்களால், திட்டமிட்டபடி கட்டுமான முன்னேற்றத்தை பராமரிக்க முடியவில்லை. இதன் விளைவாக, 2023 மே 26 ஆந் திகதி ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டது, அதற்குள் கட்டுமான முன்னேற்றம் 2.97 சதவீதமாக இருந்தது. மஹகிதுல மற்றும் மஹகிருள நீர்த்தேக்கங்களை நிர்மாணிப்பதற்காகவும், இடையில் உள்ள மகாதம்பே நீர்த்தேக்கத்தை மேம்படுத்துவதற்காகவும் 778 ஏக்கர் பரப்பளவில் வனப்பகுதியில் 47,552 மரங்கள் மரக் கூட்டுத்தாபனத்தினால் வெட்டப்பட்டுள்ளன.

ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் மகாகித்துல நீர்த்தேக்கத்தின் அணையின் அஸ்திவாரம் வெட்டி களிமண் போட்டு முடிக்கப்பட்டு குறித்த குளக்கட்டின் 1.5 சதவீத பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 58.2 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. மேற்படி கட்டுமானத்தின் மேற்பார்வைக்கான ஆலோசனைச் செலவுகளாக ரூபா 139 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

## மஹாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - கட்டம் 02

**277 கி.மீ. நீள சுரங்கப்பாதை அமைத்தல்**

மேற்படி சுரங்கப்பாதை கால்வாய் அமைக்கும் போது, மின்னேரியா-கிரித்தலே இயற்கை சரணாலயம், சிகிரியா சரணாலயம், மின்னேரியா தேசிய பூங்கா மற்றும் ஹுருலு ஏரி காப்பகம் ஆகியவற்றிற்குள் கால்வாய் அமைக்கும் பணியை Cut & Cover, double Conduit அல்லது tunnel பயன்படுத்தி மேற்கொள்ள வேண்டும் என வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது. இங்கு 02 சுரங்கம் துளையிடும் இயந்திரங்களைப் பயன்படுத்தி தோண்டும் முறையானது, அதிக செலவில் இருந்த முறையானது, தொழில்நுட்ப ரீதியாக பொருத்தமானதாகவும், தேசிய ரீதியில் பயனுள்ளதாகவும், சுற்றுச்சூழலுக்கு குறைந்த தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

**01 வது சுரங்கம் தோண்டும் இயந்திரம்**

01 வது சுரங்கம் தோண்டும் இயந்திரம் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு அந்த இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அதனை பொருத்துவதற்காக ரூபா 6,690.97 மில்லியன் மொத்த தொகையும் ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டுள்ளதுடன், திருகோணமலை துறைமுகத்தில் இருந்து சுரங்கம் தோண்டும் இயந்திரம் வெளிவரும் போது அதன் விலை ரூபா 2,155.97 மில்லியன் ஆகும். அதன்படி, திருகோணமலையிலிருந்து நாமல்புரத்திற்கு இயந்திரத்தின் போக்குவரத்து மற்றும் பொருத்துதல் மற்றும் ஒப்பந்தக்காரரின் இலாபத்திற்காக ரூபா 4,535 மில்லியன் எனும் பெரும் தொகை செலுத்தப்பட்டமை கணக்காய்வில் சர்ச்சைக்குரியதாக காணப்பட்டது.

**01 ஆவது சுரங்கம் தோண்டும் இயந்திரம்**

அரச நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் 02 ஆவது சுரங்கப்பாதை இயந்திரத்தை பயன்படுத்துவதற்கு பரிந்துரை செய்யவில்லை என்பதுடன், அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்ட விசேட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் பிரேரணையின் சாத்தியக்கூறு சந்தேகத்திற்குரியது என்றும், ஒப்பந்தத்திற்கான கூடுதல் நிதியை நியாயப்படுத்த முடியாது எனவும் பரிந்துரை வழங்கப்பட்டுள்ள போது மீள நியமிக்கப்பட்ட விசேட தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவொன்றின் மூலம் 02 ஆவது சுரங்க் துளையிடும் இயந்திரத்தை ஈடுபடுத்த பரிந்துரை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. 02 ஆவது சுரங்கப்பாதை துளையிடும் இயந்திரமும் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு பணியிடத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அதன் நிறுவலுக்கு ரூபா 6,690.97 மில்லியன் ஒட்டுமொத்த தொகையும் ஒப்பந்ததாரருக்கு வழங்குவதற்கு இணங்கியமைக்கமைய 2024 மார்ச் 15 ஆந் திகதியளவில் அவற்றுள் ரூபா 6,021.87 மில்லியன் செலுத்தப்பட்டது. சுரங்கம் தோண்டும் இயந்திரம் திருகோணமலை துறைமுகத்தில் இருந்து வெளிவரும் நேரத்தில் ரூபா 3,635.61

மில்லியன் செலவிடப்பட்டது. இதன்படி, திருகோணமலையிலிருந்து கோந்துருவாவிற்கான போக்குவரத்து மற்றும் கூட்டிணைப்பு மற்றும் ஒப்பந்தக்காரரின் இலாபத்திற்காக ரூபா 3,055.36 மில்லியன் கணக்காய்வின் போது சர்ச்சைக்குரியதாக இருந்தது.

**கால்வாயின் எஞ்சிய 68.3 கி.மீ நிர்மாணிப்பதற்காக திட்டமொன்று காணப்படாமை**

2025 ஆம் ஆண்டில் நிகழ்சித்த்திட்டத்தின் இறுதிக்குள் மொரகஹகந்த நீர்த்தேக்கத்திலிருந்து கந்தரா ஓயா வரையான 96 கி.மீ. வடமத்திய மாகாண கால்வாயில் தற்போது 27.7 கிமீ நீள சுரங்கப்பாதையை மட்டுமே முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்பதால், எஞ்சிய 68.3 கி.மீ. கால்வாயை நிர்மாணித்து அதன் பலனைப் பெறுவதற்கான குறிப்பிட்ட திட்டம் எதுவும் கணக்காய்வு திகதி வரை சமர்ப்பிக்கப்படவில்லை. இத்திட்டத்தின் கீழ் வடமத்திய மாகாண கால்வாய் நிர்மாணிப்பு மஹகனதரவ நீர்த்தேக்கத்தின் நீரை பயன்படுத்தி ரம்பேவ, மெதவாச்சி பிரதேசத்திற்கு குடிநீரை வழங்குவதற்கு ரூபா 11,515 மில்லியன் மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டின் கீழ் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் கடனுதவியுடன் அனுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அதன் பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளது, ஆனால் வடமத்திய மாகாண கால்வாய் திட்டம் குறித்த காலத்திற்குள் அமுல்படுத்தப்படாமை காரணமாக இந்த குடிநீர் இத்திட்டத்தின் நீர் மகாகனதரவ நீர்த்தேக்கத்திற்கு வரும் வரையில் குடிநீர் செயற்திட்டம் நடைமுறைப்படுத்த முடியாத நிலையிலேயே காணப்பட்டது.

## ஒருங்கிணைந்த நீர் உதவி மற்றும் நீர்வள முகாமைத்துவ செயற்திட்டம்

**செயற்திட்ட நிதியேற்பாடு குறைக்கப்படல்**

செயற்திட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட ஐ.அ.டொ. 75.03 மில்லியன் தொகை ஐ.அ.டொ. 35.03 மில்லியன் ஆக ஐ.அ.டொ. 40 மில்லியனால் குறைக்க 2023 ஆம் ஆண்டு அமைச்சரவை தீர்மானித்திருந்தது. அதன்படி, உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி சங்கம் செயற்திட்டத்திற்கு வழங்க வழங்க ஒப்புக்கொண்ட ஐ.அ.டொ. 25 மில்லியன் தொகையை இரத்துச் செய்வதற்கும், மேலும் ஐ.அ.டொ. 10 மில்லியன் செயற்திட்ட பணிகளிலிருந்து அகற்றப்பட்டு 25 மாவட்டங்ளகின் மாவட்ட ஒருங்கிணைப்பு மற்றும் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நீர்ப்பாசன, மஹாவலி, வடக்கு, கிழக்கு மாகாண நீர்ப்பாசன திணைக்களத்திற்கு சொந்தமான சிறு மற்றும் நடுத்தர அளவிலான நீர்ப்பாசன, சமூக அடிப்படை அமைப்புகளின் ஊடாக புனரமைப்பு செய்வதற்கு இலங்கை அரசாங்கம் திட்டத்திற்கு ஈடுபடுத்தும் ஐ.அ.டொ. 05 மில்லியன் தொகையை இரத்து செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

**அம்பாறை சேனாநாயக்க சமுத்திரத்தில் அலைக்கட்டு மற்றும் வீதி நிர்மாணம்**

நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான அம்பாறை சேனாநாயக்க சமுத்திரத்தின் அலைக்கட்டு மற்றும் குளக்கரையின் தற்போதைய வீதியை மேம்படுத்துவதற்காக ரூபா 532.85 மில்லியன் (வரி நீங்கலாக) மதிப்புள்ள ஒப்பந்தம் 2022 திசெம்பர் 28 ஆந்

திகதி வழங்கப்பட்டது. அந்த அலைக்கட்டின் தயாரிப்பில் தரம் குறைந்த கருங்கல் பயன்படுத்தப்பட்டதாகவும், அதன் மேற்பரப்பில் உயர்தர கருங்கல் பயன்படுத்தப்பட்டதாகவும் ஊடகங்களில் விளம்பரம் செய்யப்பட்டது. இதுகுறித்து, செயற்திட்டக்குழுவினர் நடத்திய விசாரணையில், அலைக்கட்டு தயார் செய்வதற்காக பணியிடத்துக்கு கொண்டு செல்லப்பட்ட இரண்டு வகையான கருங்கற்கள் 282 கியூப்கள் தரமற்றவை என கண்டறியப்பட்டு, அவற்றை பணியிடத்தில் இருந்து அகற்ற ஒப்பந்ததாரரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. அலைக்கட்டுக்கு பயன்படுத்தப்பட்ட தரமற்ற கற்களை அகற்றி மீண்டும் புனரமைப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நீர்ப்பாசன உத்தியோகத்தர்களும் அலைக்கட்டின் சில இடங்களில் தரமற்ற கருங்கற்களை அடையாளம் கண்டுள்ளனர்.

**நிரந்தர பளு தூக்கும் இயந்திரங்களை நிறுவுதல்**

மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான 02 பொல்கொல்ல மற்றும் உடவலவ நீர்த்தேக்கங்களுக்கு 02 நிரந்தர பளு தூக்கும் இயந்திரங்களை நிறுவுவதற்கு ரூபா 805 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான விலைக்கேள்வி கோரப்பட்டு 07 மாதங்களுக்குப் பிறகு, அதாவது 2022 ஏப்ரல் 08 ஆந் திகதி அன்று, 02 ஒப்பந்தங்கள் ரூபா 797.61 மில்லியனுக்கு வழங்கப்பட்டுள்ளது, ஆனால் ஒப்பந்ததாரர் ஒப்பந்தத்தை முன்னர் வழங்கிய விலையில் நிறைவேற்ற விரும்பாததாலும், ரூபாயின் மதிப்பு வீழ்ச்சியாலும், இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களுக்கு அதிக விலை கொடுக்க வேண்டியதினால், இந்த 2 ஒப்பந்தங்களும் ரூ. 1,248.37 மில்லியனுக்கு செய்ய ஒப்பந்ததாரர் பின்னர் ஒப்புக்கொண்டார். இதன்படி, முன்னைய விலையை விட ரூபா 450.76 மில்லியனை கூடுதலாக செலுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டதுடன், 2023 ஆம் ஆண்டு இறுதிக்குள் உடவளவ நீர்த்தேக்கத்திற்கான பாரம் தூக்கும் இயந்திரத்தின் நிர்மாண முன்னேற்றம் 33 வீதமாகவும் பொல்கொல்ல நீர்த்தேக்கத்தின் பாரம் தூக்கும் இயந்திரத்தின் நிர்மாண முன்னேற்றம் 37 சதவீதமாக இருந்தது.

**நகர்வுகளை கண்காணிப்புக்கான தானியங்கி புவிசார் அளவீடுகள் கட்டமைப்பை நிறுவுதல்**

கொத்மலை மற்றும் ரன்தெனிகல நீர்த்தேக்க அணைகளின் நகர்வுகளை கண்காணிப்பதற்காக தானியங்கி புவிசார் அளவீட்டு முறையை நிறுவுவதற்கு 2022 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ. 1,749,791 (ரூபா 629.92 மில்லியன்) தொகைக்கு வெளிநாட்டு கம்பனியொன்றுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. விலை அழைக்கப்பட்டு 11 மாதங்களுக்குப் பிறகு ஒப்பந்தம் வழங்கப்பட்டது மற்றும் ஒப்பந்ததாரர் ஆரம்ப விலையில் ஒப்பந்தத்தை ஏற்காததால் 2023 பெப்ரவரி 24 அன்று மகாவலி அதிகாரசபையால் ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**கலா வாவியின் இடது கரை கால்வாய் கதவுகள்**

மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான கலா வாவியின் இடது கரை கால்வாயின் கதவுகளை திருத்துவதற்கான ஒப்பந்தம் ரூபா

**பழுதுபார்த்தல்**

153.99 மில்லியன் வரி நீங்கலான பெறுமதிக்கு 2022 சனவரி 24 ஆந் திகதி வழங்கப்பட்டதுடன், அந்த ஒப்பந்தம் 2023 சனவரி 23 ஆந் திகதி நிறைவு செய்யப்பட வேண்டியதாக இருந்தது. 2023 இன் இறுதியில், கட்டுமான முன்னேற்றம் 39 சதவீதமாக இருந்தது, மேலும் ஒப்பந்தம் 2024 ஜூலை 30 வரை 03 முறை நீட்டிக்கப்பட்டது. ஒப்பந்த தாமதத்தால் ஏற்பட்ட விலை மாறுபாடு ரூபா 28.18 மில்லியன் வரை உயர்வடைந்திருந்ததுடன், அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூபா 13.99 மில்லியன் ஆனமையால் எல்லையினை விஞ்சி ரூபா 14.19 மில்லியன் செலவிட வேண்டியிருந்தது.

**விலைத்தளம்பலுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளல்**

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த முத்தியன்கட்டு தென்கரை கால்வாய் 02 ஆம் கட்டத்தை புனரமைப்பதற்கான ஒப்பந்தமும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பிரமந்தலாறு நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் கீழ்பள்ளத்தாக்கு புனரமைப்புக்கான ஒப்பந்தமும் 2021 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. ஆனால் ஒப்பந்த காலத்தை முறையே 2024 மற்றும் 2023 வரை நீட்டிக்க வேண்டியதன் காரணமாக, ஒப்பந்தங்களுக்கான விலை தளம்பல்கள் முறையே ரூபா 49.13 மில்லியன் மற்றும் ரூபா 8.013 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. அந்த உயர்வுக்காக, ஊதிய ஒப்பந்தத்தின் கீழ் செய்ய வேண்டிய பணிகள் ரூபா 33.85 மில்லியனாலும், ரூபா 7.02 மில்லியனாலும் குறைக்கப்பட்டன.

## உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டம்

உமா ஓயா வடிநிலத்தில் இருந்து கிரிந்திஓயா படுகைக்கு நீர் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ள தென் பிராந்தியத்திற்கு வருடாந்தம் 145 மில்லியன் கனமீற்றர் நீரை திருப்பி விடும் பிரதான நோக்கத்துடன். இலங்கையின் நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சும் ஈரானின் ஃபராப் நிறுவனமும் 2008 ஆம் ஆண்டு ஏப்ரல் 28 ஆம் திகதி பொறியியல், கொள்வனவு மற்றும் நிர்மாண (EPC) ஒப்பந்த முறையின் கீழ் ஒப்பந்த உடன்படிக்கை ஒன்றை மேற்கொண்டிருந்தன. அதற்குரிய திருத்தப்பட்ட மொத்த செலவு மதிப்பீடு 529.06 மில்லியன் அமெரிக்க டாலர்கள் அல்லது ரூபா 74,325.75 மில்லியன் ஆகும். இத்திட்டம் 2008 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 07 வருடங்களில் அதாவது 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் திகதி முடிவடையும் என முதலில் எதிர்பார்க்கப்பட்டது. மேற்படி திட்டத்தின் மூலதனப் பணிகளுக்காக 2023 திசெம்பர் 31 ஆந் திகதிய ஐ.அ.டொ. 504.05 மில்லியன் டாலர்கள் பணிகள் சான்றுபடுத்தப்பட்டு செலுத்தப்பட்டது.

**செயற்திட்ட நிதியீட்டம்**

செயற்திட்டத்திற்கான நிதி ஈரானின் ஏற்றுமதி அபிவிருத்தி வங்கியின் மூலம் நிதியீட்டம் செய்வதற்கு உட்பட்டு போட்டி அடிப்படையிலான விலைக்கேள்வி கோரப்படாது அமைச்சரவையின் முடிவின்படி ஒப்பந்தக்காரரைத் தேர்ந்தெடுத்து ஒப்பந்தம் 2007 நவம்பர் 27 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2013 இல் ஈரான் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகள் காரணமாக ஈரானின் ஏற்றுமதி அபிவிருத்தி வங்கி வழங்கிய கடனை இடைநிறுத்தியதால், 50 மில்லியன் அமெரிக்க டாலர்கள் அல்லது ரூபா 6,522.85 மில்லியன் நிதியுதவிக்குப் பிறகு, 2023 திசெம்பர் 31 ஆந்

திகதியளவில் இந்தத் செயற்திட்டத்தின் கிரயம் ஐ.அ.டொ. 453.913 மில்லியன் அல்லது ரூபா 67,737.738 மில்லியன் இலங்கை அரசாங்க நிதியிலிருந்து நிதியளிக்கப்பட்டது. உள்ளூர் நிதியில் இத்திட்டத்தை முன்னெடுப்பதா என்பதை தீர்மானிக்கும் போது, சர்வதேச போட்டி அடிப்படையில் விலைக்கேள்வி அழைப்பதன் மூலம் இலங்கை அரசாங்கம் பெற்றிருக்கக்கூடிய போட்டி நன்மைகள் குறித்து அமைச்சரவைக்கு அறிவிக்கப்படவில்லை.

**செயற்திட்ட தாமதம்**

செயற்திட்டம் 7 ஆண்டுகளில் அதாவது 2015 நவம்பர் 15 ஆந் திகதி முடிக்க திட்டமிடப்பட்டதுடன், 2023 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 8 ஆண்டுகள் மற்றும் ஒரு மாத கால தாமதம் ஆகும். இந்த செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் பலன்களான மின்சார உற்பத்திக் கட்டமைப்பிற்கு 120 மெகாவாட் மின்சாரம் சேர்க்கப்பட்டமையின் மூலம் நாளொன்றுக்கு மின்சார சபைக்கு ரூபா 55 மில்லியனுக்கு அதிகரிக்காத தொகை சேமிப்பக்கடும் என மதிப்பிடப்பட்டது, அதன்படி 8 வருடங்கள் தாமதப்படுத்தியதால் ஏற்பட்ட இழப்பு ரூபா 162,250 மில்லியன் ஆக காணப்பட்டது. இந்த தாமதம் காரணமாக மொனராகலை மாவட்டத்தின் வெல்லவாய மற்றும் தனமல்வில பிரதேச செயலாளர் பிரிவுகளில் 4,500 ஹெக்டேயர் புதிய காணிகளுக்கும், 1,500 ஹெக்டேயர் நிலப்பரப்புக்கும் நீர்ப்பாசனம் வழங்குவதுடன், பண்டாரவளை மற்றும் அடம்பிட்டிய பிரதேசங்களில் குடிநீர் மற்றும் தொழிற்சாலைகளுக்கு வருடாந்தம் 30 மில்லியன் கன மீற்றர் நீர் வழங்கப்படுகின்றது. பதுளை மாவட்டத்தின் பண்டாரவளை மற்றும் எட்டம்பிடிய பிரதேசங்களின் குடிநீர் தேவையை அடைதல் எனும் நலன்களை அடைந்துகொள்ள முடியாதிருந்தது.

**ஒப்பந்ததாரரிடம் இருந்து தாமதமாக கட்டணம் அறவிடுதல்**

மேற்படி காலதாமதத்தின் போது எதிர்பார்க்கப்படும் நன்மைகள் கிடைக்காத காரணத்தினால், சேவை பெறுநரான இலங்கைக் குடியரசிற்கு ஏற்பட்டுள்ள இழப்பு மற்றும் அது தொடர்பான காலச் செலவுகள் கணக்கிடப்பட்டு EPC ஒப்பந்தத்தின் விதிமுறைகளின்படி, ஒப்பந்தக்காரரிடமிருந்து மீளப்பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் ஒப்பந்தம் கவனம் செலுத்தப்படவில்லை. செயற்திட்டம் தொடர்பான 71 அமைச்சரவைப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒப்பந்த உடன்படிக்கையின் 8.7 ஆவது சரத்தின் படி, ஒப்பந்தப் பெறுமதியில் 0.01 வீதத்தை அதிகபட்சமாக 5 வீதம் அதாவது 26.45 மில்லியன் டொலர்கள் வரை அறவிட முடியும் என அமைச்சரவைக்கு அறிவிக்கப்படவில்லை. தாமதக் கட்டணமாக ஐ.அ.டொ. மில்லியன் 6.63 மட்டுமே வசூலிக்கப்பட்டது மற்றும் ஐ.அ.டொ. மில்லியன் 5.3 அமைச்சரவை முடிவின்படி ஒப்பந்தக்காரருக்குத் திருப்பிச் செலுத்தப்பட்டது.

**நிதி அமைச்சரின் அவதானிப்புகளைப் பொருட்படுத்தாமல் ஒப்பந்தக் காலத்தை நீட்டித்தல்**

இந்த செயற்திட்டத்தின் ஒப்பந்த காலத்தை நீடிப்பதற்காக 2023 ஜனவரி 08 ஆம் திகதி நீர்ப்பாசன அமைச்சர் சமர்ப்பித்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் 2023 ஜுன் 30 ஆம் திகதி வரை செயற்திட்டத்தை நிறைவு செய்வதற்கான கால அவகாசம் முன்மொழியப்பட்டிருந்தது. அந்த நோக்கத்திற்காக, நிதியமைச்சர் சமர்ப்பித்த 2023 ஜனவரி 16 ஆந் திகதிய கண்காணிப்புக்கு உட்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டது, மேலும் திட்டத்தின் தொடர்ச்சியான தாமதம் காரணமாக, தேசிய மின்கட்டமைப்பில் தினசரி 120 மெகாவாட் மின்சாரத்தை சேர்க்க முடியாது என்பதால் இலங்கை மின்சார சபைக்கு வெளித் தரப்பினரிடமிருந்து மின்சாரத்தை கொள்வனவ செய்வதற்கு நாளொன்றுக்கு ரூபா 100 மேலதிக கிரயம் மேற்கொள்ள நேர்கின்றமையால், ஒப்பந்ததாரரால் 2023 ஜுன் 30 ஆந் திகதிக்குள் திட்டத்தை முடிக்கத் தவறினால், 2023. யூன் 30 இன் பிறகு கடந்து செல்லும் ஒவ்வொரு நாளும் ஒப்பந்தக்காரரிடம் இருந்து சரியான இழப்பீடு பெறுவதற்கு செயற்திட்ட நீட்டிப்பு ஒப்பந்தத்தைத் தயாரிக்க வேண்டும் என்று நிதி அமைச்சர் பரிந்துரைத்தார். அவ்வாறான பேதிலும், அதற்கு இணங்க ஒப்பந்தம் தயாரிக்காமல், அமைச்சரவையின் முடிவை புறக்கணித்து, திட்ட காலம் நீட்டிக்கப்பட்டு, திட்டம் செயல்படுத்தப்பட்டது. மேலும், அமைச்சரவையின் முடிவுகளின்படி, EPC ஒப்பந்த ஒப்பந்தத்தின் விதிகளின்படி, நீட்டிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் திட்டப் பணிகள் முடிக்கப்பட வேண்டும் என்று விதிக்கப்பட்டது. கால நீட்டிப்பு காரணமாக ஒப்பந்தக்காரரால் ஏற்கப்பட வேண்டும் மற்றும் திட்டமிடப்பட்ட திகதியில் திட்டத்தை முடிக்கத் தவறியதன் விளைவாக ஏற்படும் செலவுகளை திரும்பப் பெற வேண்டும் என்று ஒப்பந்தக்காரருக்குத் தெரிவித்திருக்க வேண்டும், ஆனால் இது செய்யப்படவில்லை.

**ஒப்பந்தக்காரரின் விலை நீட்டிப்புக்கான செலவின கோரிக்கைகள்**

ஒப்பந்ததாரரால் 2023 ஜுலை மாதம் சமர்ப்பித்த இரண்டாவது கோரிக்கை பட்டியலில் கால நீட்டிப்பு தொடர்பான 8 காரணங்களுக்காக ஐ.அ.டொ. 105.16 மில்லியன் கோரப்பட்டது. அதில், 2020 திசெம்பர் முதல் 2023 ஜுலை வரையிலான நீட்டிக்கப்பட்ட காலத்திற்கு, ஆளணி செலவினம் ஐ.அ.டொ. 56.15 மில்லியன் மற்றும் இயந்திரங்களின் விலை ஐ.அ.டொ. 4.56 மில்லியன் மற்றும் 2020 மார்ச் 21 முதல் 2020 ஜுன் 15 வரை நீட்டிக்கப்பட்ட காலத்திற்கு, ஆளணி செலவினமாக .ஐ.அ.டொ. 10.4 மில்லியன் மற்றும் ஐ.அ.டொ. 0.4 மில்லியன் இயந்திரங்கள் செலவாக சேர்க்கப்பட்டது. அங்கு, சர்வதேச ஒப்பந்த நிபந்தனைகள் மற்றும் அமைச்சரவை முடிவுகளால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை பொருட்படுத்தாமல் FIDIC சர்வதேச உடன்படிக்கை நிபந்தனைகள் மற்றும் அமைச்சரவை தீர்மானங்களின் மூலம் விதிக்கப்பட்ட வரையறைகளை கருத்திற்கொள்ளாது ஒப்பந்த நிர்வாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன், இந்த உரித்து கோரல் தொடர்பில் தகவல்கள் இல்லது ஒப்பந்ததாரரின் தாமதக் கட்டணங்கள்

அறவிடுதல் தொடர்பில் மேற்படி விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**ஒப்பந்தக்காரரின் தாமதக்கட்டணம் உரிமைகோரல்**

ஒப்பந்தக்காரரினால் செயற்திட்டத்தில் ஏற்படும் தாமதங்களுக்கு ஒப்பந்ததாரரின் தாமதக் கட்டண உரிமையாக 181.34 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தாமதக் கட்டணமொன்று ஒப்பந்ததாரர், அரசாங்கத்திடம் இருந்து கோரியுள்ளார். இதை ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்க அமைச்சரவையால் 7 அதிகாரிகளைக் கொண்ட பேச்சுவார்த்தைக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன் அந்தக்குழுவினால் இந்தச் செயற்திட்டத்தின் ஒப்பந்ததாரரினால் கணக்கிட்டு வழங்கிய தாமதக் கட்டணத்திற்குப் பதிலாக 19.52 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தாமதக் கட்டணமாக பரிந்துரைக்கப்பட்டது. இந்த தாமதமான கட்டண உரிமைக்கு மேலதிகமாக ஈரான் அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகள் மற்றும் பிற சிரமங்கள் காரணமாக ஒப்பந்ததாரர் எதிர்கொள்ளும் நிதி நெருக்கடிகளுக்காக கருணை அடிப்படையில் அமைச்சரவையின் விருப்பத்தின் பேரில் 19.09 மில்லியன் அமெரிக்க டொலர் மேலதிக கட்டணமொன்று செலுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டது. அதன்படி, தாமதக்கட்டணம் கருணை அடிப்படையில் பரிசீலிக்கப்படுவதற்கு பரிந்துரைக்கப்பட்ட தொகை சேர்க்கப்பட்டு 38.62 மில்லியன் அமெரிக்க டொலர்களை தாமதக் கட்டணமாகச் செலுத்துவதற்கு குழு பரிந்துரைத்து விளக்கமளித்து அமைச்சரவைப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**மேலதிக கட்டணம் செலுத்துதல்**

இந்த செயற்திட்டத்தின் ஆரம்பம் முதல் செயல்பாட்டில் ஈடுபட்டு, அதைப் பற்றிய முழுமையான புரிதல் உள்ள அதிகாரிகள் இல்லாததாலும், ஒருமித்த கருத்துக்காக செயற்திட்டத்தில் நேரடியாக ஈடுபடாத அதிகாரிகளின் குழுவொன்றை பேச்சுவார்த்தைக்குழுவிற்கு நியமிக்க முன்மொழியப்பட்டதாலும் குழுவினால் அத்தியாவசியத் தரப்பினருடன் போதியளவு தகவல் பரிமாற்றம் செய்யாமை, அடிப்படை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இத்திட்டத்தின் பணிகள் காலதாமதமாக இருந்த போதிலும், அதன் மூலம் இலங்கை குடியரசிற்கு ஏற்பட்ட இழப்பு மற்றும் அதற்கான கிரயம் EPC ஒப்பந்த உடன்படிக்கையின் விதிமுறைகளின்படி, அறவிடுவதற்கான சாத்தியக்கூறுகள் எதுவும் பரிசீலிக்கப்படாமை, ஒப்பந்த காலத்தை நீடிக்கும்போது “அரசுக்கு மேலதிக செலவில்லாமல், நீட்டிக்கப்பட்ட காலத்திற்குள் அனைத்து கட்டுமானங்களையும் முடித்து, செயற்திட்டத்தை முறையாக அரசிடம் ஒப்படைக்க வேண்டும்” என்ற நிபந்தனை விதிக்கப்பட்டும், அந்த நிபந்தனை கருத்திற் கொள்ளப்படாமை, குழுவின் பரிந்துரையில் கருணை அடிப்படையில் அமைச்சரவையின் விருப்பத்தின் பேரில் 19.09 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மேலதிக கட்டணமொன்றை செலுத்துவதற்கு குறிப்பிடப்படாத மற்றும் தொழில்சார்ந்த பரிந்துரைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

**தாமதக் கட்டணம் மற்றும் மேலதிக கட்டணங்கள்**

2021 நவம்பர் 01 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டதுடன் இந்த அங்கீகாரத்தின் அடிப்படையில் முதலில் 50 சதவீத தவணையை மட்டும் செலுத்துவதற்கும், மிகுதியை ஒப்பந்ததாரரின் உத்தரவாதக் காலம் முடிந்த பிறகு செலுத்துவதற்கும் இலங்கை மின்சார சபையால் முதல் 50 சதவீத தவணையைச் செலுத்தும் அடிப்படையில் 19.31 மில்லியன் ஐ.அ.டொலர்களில் 2022 இல் 7.43 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மற்றும் 2023 இல் 11.52 மில்லியன் அமெரிக்க டொலர்களுமாக 18.96 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலுத்தப்பட்டது.

செயற்திட்டத்தின் மாற்று சாலையின் ஆரம்ப வடிவமைப்பில் சேர்க்கப்பட்டுள்ள பூஹல்பொல அணைக்கட்டு நிர்மாணிப்பதற்கு முன்நிபந்தனையாக இருந்த பதுளை, வெலிமடை வீதியின் பழைய வீதியை 250 மீற்றர் விரிவாக்குவதற்கு ஒப்பந்தக்காரரால் தமது விடயத்திற்கு புறம்பாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் முன்வைக்கப்பட்ட ரூபா 133.47 மில்லியன் மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கப்பட்டு அவர்கள் தங்கள் விலைப்பட்டியலில் இருந்து கழிப்பதன் மூலம் பணம் செலுத்த ஒப்புக்கொண்டனர். இதன்படி வீதியை தயார் செய்வதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்த வீதி தயார் செய்யப்படாததுடன் பூஹல்பொல அணைக்கட்டுப் பணியிடத்தில் அணுகு சாலை மற்றும் புதிய பாதையை தயாரிப்பதற்காக 1.51 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மதீப்பிடப்பட்டு மற்றும் ரூபா 1.32 மில்லியன் செலுத்தப்பட்டது.

**நீர் கசிவுக்கு இழப்பீடு செலுத்துதல்**

செயற்திட்டத்தின் பிரதான சுரங்கப்பாதையில் நீர் கசிவு ஏற்பட்டதற்கு இழப்பீடாக ஒப்பந்ததாரர் 5 மில்லியன் அமெரிக்க டொலர்களை சம்பந்தப்பட்ட காப்பீட்டு நிறுவனத்திடம் இருந்து பெற்றிருந்தார். 2021 ஆகஸ்ட் 31 இல் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகைக்காக ஒப்பந்ததாரர் அரச நிதியிலிருந்து ரூபா 1,931.346 மில்லியன் செலுத்தியதுடன் அரசாங்கம் செலுத்திய இழப்பீட்டை அறவிட வேண்டுமென்பதாக 2019 மே 22 இல் அரச கணக்குகள் குழுவினால் உத்தரவிட்ட போதிலும் அதில் ரூபா 1,124.62 மில்லியன் கணக்காய்வுத் திகதி வரை வசூலிக்கப்படவில்லை.அவர்களிடமிருந்து அறவிட்ட தொகையை திரும்ப வழங்குமாறு ஒப்பந்ததாரர் நிறுவனம் கோரிக்கை விடுத்திருந்தது. மேலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் இழப்பீடு மற்றும் குடிநீர் வழங்க கம்பனியால் செலவிடப்பட்ட 6.108 மில்லியன் அமெரிக்க டொலர் செலவையும் வழங்குமாறு கம்பனி செயற்திட்டத்திடம் கேட்டிருந்தது.

நீர்ப்பாசன அமைச்சரினால் 2024 பெப்ரவரி 05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமப/24/0044/623/002 ஆம் இலக்க

அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவையின் தீர்மானத்தின் மூலம் உமா ஓயா பல்நோக்குத் திட்டத்தின் 514 அமெரிக்க டொலர் செலவிடப்பட்டு முடிக்கப்பட்ட செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் 2024 மார்ச் 31 இற்குள் நிறைவடைந்தவுடன், செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை மகாவலி அதிகாரசபையிடம் தனது செயற்பாடுகளை கையளித்ததுடன், சொத்துக்கள் மற்றும் ஆவணங்கள் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டாலும், செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு, ∴பராப் நிறுவனத்திடம் இருந்து உரிய சொத்துக்கள் மற்றும் ஆவணங்களை எடுத்துக் கொண்டு, உரிய நிறுவனங்களுக்கு ஒப்படைக்கவில்லை.

## சுகாதார பிரிவு

| செயற்திட்டத்தின் பெயர் | கடன் / உதவித் தொகை | | ஆரம்ப ஆண்டு | 2023/12/31 ஆந் திகதியில் பயன்பாடு | | 2023/12/31 ஆந் திகதியில் முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | நிதி முன்னேற்றம் |
| சுகாதார கட்டமைப்புகளை மேம்படுத்தும் செயற்திட்டம் | கடன் 37.5 | 6,937.50 | 2018 | 23.24 | 5,068.62 | 62 |
| | உதவி 12.5 | 2,312.50 | - மேற்படி- | 6.28 | 1,329.68 | 50 |
| | உள்நாட்டு 10.00 | 1,850.00 | - மேற்படி- | 2.09 | 452.58 | 24 |
| சுகாதார கட்டமைப்புகளை மேம்படுத்தும் செயற்திட்டம் - மேலதிக நிதியீட்டம் | கடன் 110 | 21,975.00 | 2021 | 37.29 | 10,725.03 | 34 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | உதவி 03 | 598.50 | - மேற்படி- | இல்லை | இல்லை | 0 |
| | உள்நாட்டு 10 | 1,995. | - மேற்படி- | 0.21 | 69.99 | 3 |
| **கொவிட்-19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமைகளின் தயார்நிலை செயற்திட்டம் மற்றும் கொவிட்-19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமைகளின் தயார்நிலைக்கான செயற்திட்டத்திற்கான இரண்டாவது மேலதிக நிதியளிப்பு செயற்திட்டம்** | கடன் 209.11 | 41,717.45 | 2020 | 215.39 | 42,466.35 | **102** |
| **கொவிட்-19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமைகளின் தயார்நிலை செயற்திட்டம் - மூன்றாவது மேலதிக நிதியளிப்பு செயற்திட்டம்** | கடன் **100** திருத்தம் **86.76** | 21000 திருத்தம் 18219.60 | 2021 | **86.76** | **18,219.60** | **100** |
| **சுகாதார கட்டமைப்பு பதிலளிப்பு செயற்திட்ம்** | கடன் 100.00 | 35,000.00 | 2022 | 15.34 | 5,536.54 | **15** |
| **ஆரம்ப கட்ட சுகாதார பராமரிப்பு சேவை முறைமையினை** | கடன் **50.845** | 8,030.46 | 2019 | 18.9 | 2,993. | **37** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **வலுப்படுத ்தும் செயற்திட ்டம் - கூறு I** | | | | | | |
| **ஆரம்ப கட்ட சுகாதார பராமரிப்பு சேவை முறைமையினை வலுப்படுத்தும் செயற்திட ்டம் - கூறு II** | கடன் 14.22<br>திருத்தம் 5.22 | 2,590.74<br>951.03 | 2019 | 3.05 | 653.27 | **69** |
| | உள்நாட்டு 11.85<br>திருத்தம் 8.48 | 2,370.00<br>1,838.43 | -மேற்படி- | - | 25 | **1.4** |
| **சுகாதாரம் மற்றும் மருத்துவ சேவைகள் மேம்படுத்தல் செயற்திட்டம்** | கடன் (ஜப்பான் யென்)<br>**10,639** | 15,915 | 2018 | 243.10 (ஜப்பான் யென்) | 437.19 | **2.7** |
| | உள்நாட்டு | 713 | -மேற்படி- | | 107.23 | **15** |

**அட்டவணை இல. 2.35 : சுகாதார துறை செயற்திட்டம்**

## சுகாதார முறைமை பதிலளிப்பு செயற்திட்டம்

**சுகாதார கட்டமைப்பு பதலளிப்பு செயற்திட்டத்திற்காக அலுவலன கட்டிடமொன்றை வாடகைக்கு எடுத்தல்**

விலைக்கேள்வி ஆவணங்களில் உள்ள விதிமுறைகள் மற்றும் விவரக்குறிப்புகளுக்கு முரணான நிபந்தனையாக இரண்டு மாத பாதுகாப்பு வைப்பு மற்றும் ஒரு வருடத்திற்கு முற்பணம் (upfront payment) செலுத்த வேண்டும் என்பது அத்தியாவசியமான நிபந்தனையொன்றாக குறிப்பிடப்பட்டிருந்தது.

இதன்படி, இந்த விலைக்கேள்வி நிராகரிக்கப்பட வேண்டும், ஆனால் இதற்கு மாறாக, இந்த விலைக்கேள்வி ஏற்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட விலைக்கேள்வியாளருக்கு இரண்டு மாதங்களுக்கு முற்பணமாக ரூபா 06 மில்லியன் மற்றும் பாதுகாப்பு வைப்புத் தொகையாக ரூபா ஒரு மில்லியன் செலுத்தப்பட்டது. அதற்கமைய இந்த கொடுப்பனவுகள் சட்டவிரேதமானவை என்பதுடன், அவ்வாறு செலுத்தப்பட்ட ரூபா 07 மில்லியனை ஒரே தடவையில் மீள அறவிடப்பட வேண்டும் என அவதானிக்கப்பட்டது.

விலைக்கேள்வி ஆவணங்களில் தேவைப்பாடு 2500 சதுர அடி என கொடுக்கப்பட்டிருந்தாலும், விலைக்கேள்வியாளரடமிருந்து சுமார் 5000 வளாகம் அதிக விலைக்கு பெறப்பட்டதுடன், கட்டிடத்தின் கீழ் தளம் முழுமையாக பயன்படுத்தப்படாமல் இருப்பதை அவதானிக்க முடிந்தது.

**03 மில்லியன் மீற்றர் சத்திரசிகிச்சை கோஸ் நூல் கொள்வனவு செய்யும் பெறுகை**

2012 திசெம்பர் 05 ஆந் திகதிய அமப/12/1602/509/005-11 இன் அமைச்சரவை முடிவின்படி, உள்ளூர் கைத்தொழிலை பாதுகாக்கும் நோக்கத்துடன், உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து அரசாங்க மருத்துவமனைகளுக்கான வருடாந்திர அறுவைசிகிச்சை கோஸ் பெறப்பட்டது. மற்றும் மருத்துவ வழங்கல் பிரிவில் பதிவு செய்யப்பட்ட சத்திரசிகிச்சை துணி உற்பத்தியாளர்களுக்கு வருடாந்த கோட்டா அடிப்படையில் கோஸ் வழங்குவதற்கான திட்டம் அங்கீகரிக்கப்பட்டது. ஆனால் 2022 ஆம் ஆண்டில், மருத்துவ வழங்கல் பிரிவு ரூபா 268.5 மில்லியன் பெறுமதியான 03 மில்லியன் மீற்றர் சத்திரசிகிச்சைத் துணியை சுகாதார கட்டமைப்பு மேம்படுத்தல் செயற்திட்டத்தின் (HSEP) மூலம் இறக்குமதி செய்து கொள்வனவு செய்ய ஏற்பாடு செய்திருந்தது.

அதன்போது 03 மாதங்களுக்குரிய பாதுகாப்பு இருப்பை பேணுவதற்காக 03 மில்லியன் மீற்றர் கோஸ் பெறுவதற்கும், ரூபா 500 மில்லியனை விஞ்சிய பெறுகைகள் பெறுகைகள் குழுவால் கொள்வனவு செய்ய இயலாமையால கட்டளையை 03 மில்லியன் மீட்டராக குறைப்பதற்கும், பதிற்கடமை மருத்துவ வழங்கள் பணிப்பாளரின் தலைமையில் 2022 நவம்பர் 21 ஆந் திகதி இடம்பெற்ற செயற்திட்ட பெறுகைகள் குழுவில் மருத்துவ வழங்கல் பிரிவின் அவசரத் தேவைப்பாடாக குறிப்பிட்டு விலைக்கேள்வி சமர்ப்பித்திருந்த ஒரேயொரு விலைக்கேள்விளரான Sisili Projects Consortium தனியார் கம்பனிக்கு கோஸ் 03 மில்லியன் மீட்டரை கையளிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அந்த நேரத்தில், மருத்துவ வழங்கல் பிரிவில் அதிக விலையில் கோஸ் வாங்க வேண்டிய அவசியம் காணப்படவில்லை எனவும், கட்டளை வழங்கப்பட்ட நேரத்தில், உள்ளூர் வழங்குநர்களால் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு 3,635,700 மீட்டர் கோஸ் விநியோகித்திருந்ததாகவும், 2022 செப்டெம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் அண்ணளவாக 08 மில்லியன் மீட்டர் அளவான கோஸ் பெறுவனவு மற்றம் விநியோகம் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

இவ்வாறு கட்டளையை பெற்ற வழங்குநர் மருத்துவ வழங்கல் பிரிவின் கோட்டா முறையின் கீழ் ரூபா 74.96 படியாக கோஸ் விநியோகிக்கும் உள்நாட்டு வழங்குநர் என்பதும், இந்த கட்டளையில ஒரு மீட்டர் ரூபா 89.50 படியாக இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்க விலைக்கேள்வி

சமர்ப்பிக்கப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. எனினும், இந்த இருப்பு உண்மையாக இந்தியா உற்பத்தியாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டதா, அல்லது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட இருப்பா என்பது சுகாதார கட்டமைப்புகளை மேம்படுத்தும் செயற்திட்டத்தினால் உறுதிப்படுத்தப்படவில்லை.

## சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்திட்டம்

**சுகாதார மேம்படுத்தல் வேன்களுக்காக பொது அழைப்புக் கட்டமைப்பொன்றை (Public Addressing System) பொருத்துதல்**

சுகாதார கட்டமைப்பினை மேம்படுத்தல் செயற்திட்டத்தின் நிதியங்களை பயன்படுத்தி 2021 ஆம் ஆண்டில ரூபா 87.21 மில்லியன் மதிப்புடைய 09 "Nissan Urvan" வகை வேன்கள் சுகாதார கட்டமைப்பு மேம்படுத்தல் செயற்திட்டத்தின் நிதியைப் பயன்படுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேற்படி வேன்கள் பொது சுகாதார மேம்படுத்தல் பணிக்காக ஈடுபடுத்துவதற்கு முன்னர் பொது மக்கள் அழைப்புக் கட்டமைப்பொன்று (Public Addressing System) வழங்கி பொருத்துவதற்கு மற்றும் அதனுடன் தொடர்புடைய பணிகள் 2021 ஆம் ஆண்டில் தொடங்க திட்டமிடப்பட்ட போதிலும், கணக்காய்வுத் திகதியான 2024 மே 31 வரை கொள்முதல் பணிகள் தொடங்கப்படவில்லை என்பது தெரியவந்தது. இதனால், மேற்படி வேன்கள் ஒன்பது குறித்த பணிக்காக பரிமாற்றப்படும் பணிகளுக்காக மூன்ற வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்துள்ள போதிலும், இந்த பணிக்காக பொருத்தமான நிறவனமொன்றை தெரிவு செய்ய பெறுகை நிறுவனம் தவறியிருசந்தது. இதற்கிடையில் அந்த வேன் குறித்த நோக்கத்திற்கு மாறாக ஏனைய ஓட்டக் கடமைகளில் பயன்படுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

## நகர மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி பிரிவு

| செயற்திட்டத்தின் பெயர் | கடன் தொகை | | காலம் | 2023.12.31 ஆந் திகதியில பயன்பாடு | 2023.12.31 ஆந் திகதியில் முன்னேற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் | ரூபா மில்லியன் |
| அநுராதபுரம் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தி செயற்திட்டம் | Euro 52 | 8,354.32 | 2016 | 5.07 | 1,783.14 | 21.34 |
| நகர செயற்திட்டங்களை தயாரிக்கும் செயற்திட்டம் | 5.27 | 1,064.79 | 2022 | 1.33 | 437.95 | 41.13 |
| கொழும்ப நகர மீளுருவாக்கலுக்கான செயற்திட்டத்திற்கு உதவியளிக்கும் செயற்திட்டம் (SCURP) | 200<br>** 130 | 35,163.7<br>** 47,096 | 2019 | 58.75 | 15,985.67 | 33.94 |

அட்டவணை இல. 2.36: நகர மற்றும் வீடமைப்பு அபிவிருத்திப் பிரிவின் செயற்திட்டம்

## கொழும்பு பெரும்பாக நகர அபிவிருத்திச் செயற்திட்டம் (MCUDP)

மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 42,031.74 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 321 மில்லியனான கொழும்ப பெரும்பாக நகர அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக (MCUDP) ரூபா 27,890.22 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 213 மில்லியன் வழங்குவதற்கு மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. 2022 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் செயற்திட்டத்தை நிறைவு செய்யும் போது அதில் ஐ.அ.டொலர் 199 மில்லியன் அளவில் அதாவது 93 சதவீதம் செலவிடப்பட்டிருந்தது.

மேற்படி செயற்திட்டம் முடிந்ததும், ஒருங்கிணைந்த வெள்ளநீர் முகாமைத்துவ கட்டமைப்புக்காக ரூபா 198 மில்லியன் செலவிடப்பட்டும் பணிகள் நிறைவடையவில்லை. இத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட 3 நீரேற்று நிலையங்கள், 3 வெள்ளக் கட்டுப்பாட்டு கதவுகள் மற்றும் ஏனைய சிறிய சேமிப்பு அமைப்புகளை வெள்ள முகாமைத்துவ அமைப்பில் ஒருங்கிணைத்தல், நிறுவப்பட்ட நீர் நிலை மானிகள் மற்றும் மழை மானி தரவுகளை உரிய நிலையங்களுக்கு அனுப்புதல் மற்றும் கொழும்பில் வெள்ள

அபாய எச்சரிக்கை முறையை முறையாக நடைமுறைப்படுத்துதல். பெருநகரப் பகுதி பொது மக்களுக்கு முக்கியமானதாக இருக்கும் தகவல்களை இணையதளம் மூலம் பரப்புவது மற்றும் காலநிலை மாற்றத்தால் உருவாக்கப்பட்ட நகர்ப்புற வளர்ச்சி மற்றும் பாதிப்புக்கான ஆதரவை செய்திருக்க முடியாது. இதன் காரணமாக ரூபா 600 மில்லியன் செலவிடப்பட்டிருந்த நிலையில், 2016 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 3 நீர் கட்டுப்பாட்டு கதவுகள் மற்றும் 3 நீரேற்று நிலையங்கள் உட்பட ஏனைய கட்டுமானங்கள் எதிர்பார்த்த வருமானத்தைப் பெற முடியவில்லை. மேலும், இந்தப் பணிகளை முடிப்பதற்கான வேலைத்திட்டம் அமைச்சிடம் இருப்பதாகவும் அவதானிக்கப்படவில்லை.

கொழும்பு பெருநகர நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம் (MCUDP) நிறைவடையும் போது, பிரதான கணக்காய்வு உத்தியோகத்தரின் எழுத்துப்பூர்வ அங்கீகாரம் இன்றி, செயற்திட்டத்திற்குச் சொந்தமான சொத்துக்களை மாற்றுவதற்கு ரூபா 28,115 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் மற்றும் 81 அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியதோடு அதன் பெறுமதி ரூபா 2,929.44 மில்லியன் நிபுணத்துவ செலவினம் 4 உள்ளூராட்சி நிறுவனங்கள், நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் இலங்கை நில மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம் ஆகியவற்றிற்கு திட்டத்தின் விருப்பத்தின் பேரில் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

### திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (SCDP)

செயற்திட்டத்தின் கடன் ஒப்பந்தத்தின்படி, ரூபா 27,507 மில்லியனுக்கு சமனான அமெரிக்க டொலர் 202 மில்லியன் கடன் வழங்கும் நிறுவனத்தால் வழங்க ஒப்புக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 7 ஆண்டுகளுக்குப் பிறகும், ரூபா 16,437 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 89.92 அதாவது 44 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தமையால் ஐ.அ.டொலர் 92 மில்லியனை இரத்துச் செய்வதற்கு 2021 திசெம்பர் 31 ஆந் திகதி கடன் வழங்கும் நிறுவனம் தீர்மானித்திருந்தது. அதன் காரணமாக செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்த்த நோக்கங்களிலிருந்து அதிகமான பகுதியை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

செயற்திட்டத்தை நிறைவு செய்யும் போது ரூபா 649 மில்லியன் கையிருப்பில் எஞ்சியிருந்ததுடன், அந்த பணத்தை செயற்திட்டத்தின் உப செயற்திட்டத்தின் பட்டியல்களை தீர்ப்பதற்காக நிறுத்தி வைக்கப்பட்டு குறித்த பட்டியல்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காது, 2022 யூலை 05 ஆந் திகதி கடன் வழங்கும் நிறுவனத்திற்கு மீள அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதனால் முழுமையற்று காணப்பட்ட 22 உப செயற்திட்டங்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா 277 மில்லியன் அரசின் நிதியிலிருந்து செலுத்துவதற்கு நேர்ந்திருந்தது. அவற்றுள் ரூபா 22.78 மில்லியன் 2023 செப்தம்பர் 30 ஆந் திகதியளவில் அமைச்சினால் தீர்க்கப்பட்டிருந்தது.

### நகர செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதி செயற்திட்டம்

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் ஆசிய அபிவிருத்தி வங்கியால் ரூபா 1064.79 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 5.27 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. இலங்கை அரசு ரூபா 232.35 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 1.15 மில்லியன் செலவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. செயற்திட்டம் 2019 மார்ச் 06 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்டத்தின் அனைத்து செயற்பாட்டு பணிகளும் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், மீண்டும் உடன்படிக்கை காலம் 2024 மார்ச் 31 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது.

இந்த செயற்திட்டத்தை 3 கூறுகளின் கீழ் செயல்படுத் தம்புள்ளை, திருகோணமலை, குருநாகல் மற்றும் இரத்தினபுரி ஆகிய நகரங்கள் தெரிவு செய்யப்பட்டு 2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை ரூபா 418.29 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. கால நீடிப்பின் போது திருகோணமலை, தம்புள்ளை மாவட்டங்களுக்கு மட்டுமே முன்னுரிமை வழங்க தீர்மானித்தமையினால் குருநாகல், இரத்தினபுரி மாவட்டங்களுக்கு செலவிடப்பட்ட பணம் பயனற்று போயிருந்தது.

## நகர மீளுருவாக்கலிற்கு ஆதரவளித்தல் செயற்திட்டம் (SCURP)

நகர்ப்புற மீளுருவாக்கலிற்கு ஆதரவளிக்கும் செயற்திட்டத்திற்கு கடன் வழங்கும் நிறுவனத்தால் இணங்கிய ஐ.அ.டொலர் 200 மில்லியனுக்கு கடன் தொகையில் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 4 வருடங்களுடம் 6 மாதங்களின் பின்னர் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ஐ.அ.டொலர் 58.753 மில்லியனுக்கு சமனான ரூபா 15,986 மில்லியன் மாத்திரம் ஆகும்.

செயற்திட்டத்தில் நிதியைப் பயன்படுத்துவதில் திறமையின்மை காரணமாக, ஐ.அ.டொலர் 200 மில்லியன் கடன் தொகையில் ஐ.அ.டொலர் 70 மில்லியன் கழிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்திருந்தது. இதன் பிரகாரம் 3 ஆம் கட்டத்தில் செயற்திட்டத்தின் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன், வீட்டு நலனாளிகளின் எண்ணிக்கை 1,272 ஆக குறைக்கப்பட்டிருந்தது. மேலும், ஐ.அ.டொலர் 42 மில்லியனான இலங்கை அரசின் பங்களிப்பு ஐ.அ.டொலர் 28 மில்லியன் வரை ஐ.அ.டொலர் 14 மில்லியன் வரை குறைக்கப்பட்டிருந்தது. திருத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் காணி சீர்திருத்தத்திற்காக தனியார் பங்குடமை பங்களிப்பு முழுமையாக அகற்றப்பட்டிருந்தது.

## அநுராதபுரம் ஒருங்கிணைக்கப்பட்ட நகர அபிவிருத்திச் செயற்திட்டம் (AIUDP)

செயற்திட்டத்தின் பணிகள் 2016 திசெம்பர் 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2023 செப்தம்பர் 30 ஆந் திகதி நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும், கடன் உடன்படிக்கையின் பிரகாரம் பிரான்ஸ் முகவர் நிறுவனம் இணங்கிய கடன் தொகையான யூரோ 52 மில்லியன் தொகையில் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக யூரோ 5.07 மில்லியனுக்கு சமனான ரூபா 1783.14 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. கடன் தொகையில் 10 சதவீதம் எனும் மிகவும் குறைவான சதவீதம் பயன்படுத்தப்பட்ட காரணத்தால் செயற்திட்டத்தின் உத்தேச பெறுபேறுகளை அடைந்துகொள்ள முடியாதிருந்தது. பின்னர் செயற்திட்டத்தின் விடயப்பரப்பு திருத்தப்பட்டு பின்னர் செயல்திட்டத்தின் விடய பரப்பு திருத்தப்பட்டு தெற்கு பல்லூடக போக்குவரத்து நிலையத்தினை நிர்மாணிப்பதற்கு மாத்திரம் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் உள்நாட்டு

நிதியங்கள் மாத்திரம் பேணி செல்லப்பட்டிருந்தன.

முதலாம் கட்டத்தில் அனுராதபுரம் வடக்கு மற்றும் தெற்கு பல் ஊடக போக்குவரத்து நிலையத்தினை நிர்மாணிப்பதன் ஆரம்ப பணிகளுக்காக ரூபா 288 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், மீண்டும் நிர்மான பணிகளை ஆரம்பிப்பதற்கு ஆரம்ப ஒப்பந்த பெறுமதியான ரூபா 1,176 மில்லியன் ரூபா 1,795 மில்லியன் வரையிலும் அதாவது 53 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டு மீண்டும் (Addendum) உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. மேலும் தேசிய கண்காணிப்பு நிலையத்தினால் வழங்கப்பட்ட அறிவுரைகளின் அடிப்படையில் உள்நாட்டு நிதியினை பயன்படுத்தி 2024 ஆம் ஆண்டில் ரூபா 2,070 நிதியேற்பாட்டின் அடிப்படையில் செயல்திட்டம் செயல்படுத்தப்பட்டவாறு இருந்தது. எனினும் கடன் வழங்கும் நிறுவனத்துடன் ஏற்படும் விதம் தொடர்பில் உடன்படிக்கையின் மூலம் இணக்கம் காணப்பட்டிருக்கவில்லை.

## போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் துறை

| செயற்திட்டத்தின் பெயர் | கடன்/உதவித் தொகை | | ஆரம்ப ஆண்டு | 2023.12.31 ஆந் திகதியில் பயன்பாடு | | 2023.12.31 ஆந் திகதியில் முன்னேற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | நிதி முன்னேற்றம் | பௌதீக முன்னேற்றம் |
| ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - 1 | 800 | 104,000 | 2014 | 544 | 97,178 | 68% | கிராமிய வீதிகள் 93% தேசிய வீதிகள் 54% |
| ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - 1 | 900 | 137,070 | 2018. | 509 | 109,316 | 57% | 67% |
| பரந்த இணைப்பு மற்றும் அபிவிருத்திச் செயற்திட்டம் | 175 | 59,062 | 2021 | 48 | 13,952 | 27% | 27% |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பதுளை செங்கலடி வீதி புனரமைப்புச் செயற்திட்டம் | 120 | 15,600 | 2017 | 79 | 15,520 | 66% | 92% |
| சவூதியால் நிதியளிக்கப்பட்ட வீதி வலைப்பின்னல் அபிவிருத்தி செயற்திட்டம் | 40 | 4,560 | 2013 | 2.55 | 435.24 | 85% | 90% |
| சீனாவின் எக்ஸிம் வங்கியினால் (ஹுனான் கிளை) நிதியளித்த மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள வீதிகள் மற்றும் பாலங்ளை அகலமாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் செயற்திட்டம் | *SRA-225 | 7,800 | 2013 | *SRA - 219 | 8,292 | 97% | 100% |
| கொஹுவல மற்றும் கெட்டம்பே மேம்பாலங்களின் நிர்மாணம் மற்றும் கட்டுமான செயற்திட்டம் | 85 | 17,932 | 2018 | 73.15 | 14,070 | 100% | 100% |
| கண்டி பல்வகையிலான போக்குவரத்து நிலையத்தை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் | 52 (யூரோ) | 10,192 | 2021 | 13.85 | 3,238 | 26% | 61% |
| 25 பாலங்களை மீள நிர்மாணிக்கும் செயற்திட்டம் | 69.33 | 13,762 | 2021 | 0.85 | 153 | 1% | 9% |
| போக்குவரத்துச் செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதி செயற்திட்டம் | 10 (குவைட் தினார்) | 4,632 | 2015 | 6.6 (குவைட் தினார்) | 4,128 | 66% | 96% |
| போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவ செயற்திட்டம் | 10 | 1,457 | 2017 | 34 | 5,264 | 94% | 94% |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| துறைமுக நுழைவினை மேன்மையுறச்செய்த நெடுஞ்சாலைச் செயற்திட்டம் | 7 | 2,086 | 2017 | 5.97 | 1,749.15 | 93.39 | 98.81 |
| துறைமுக நுழைவினை மேன்மையுறச்செய்த நெடுஞ்சாலைச் செயற்திட்டம் | 293.89 | 46,381.72 | 2019 | 172.94 | 48,470.6 3 | 58.84 | 82 (துறைமுக நுழைவாயில் விமான பாதை) |
| | | | | | | ; | 34.9 (துறைமுகங்கள் அதிகாரசபையின் புதிய கட்டிடம்) |
| கொழும்பு தேசிய நெடுஞ்சாலைகளின் புனரமைப்பு மற்றும் முன்னேற்ற செயற்திட்டம் - (OFID II) | 50 | 6,499.57 | 2013 | 41.67 | 7,349.44 | 92 | 99 |
| மேல் மாகாண வீதிச் செயற்திட்டம் - (OFID III) | 17 | 2,209.84 | 2017 | 14.79 | 2,993.92 | 99.92 | 100 |
| A-017 வீதி புனரமைப்பு மற்றும் முன்னேற்றச் செயற்திட்டம் (OFID IV) | 40 | 5,497.90 | 2022 | 7.72 | 2,529.19 | 35 | 39.17 |

அட்டவணை இல. 2.37 : போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் பிரிவின் செயற்திட்டங்கள்

### பரந்த இணைப்பு மற்றும் அபிவிருத்தி செயற்திட்டம் (ICDP)

**வீதித் துறையின் நிறுவன மற்றும் கொள்கைச்**

செயற்திட்ட மதிப்பீட்டு பதிவேட்டின் பிரகாரம் உப கூறு 1.2 இன் கீழ் நெடுஞ்சாலைகள் துறையின் நிறுவனங்கள் மற்றும்

**சட்டகத்தினை மேம்படுத்தல்**

கொள்கைச் சட்டகத்தினை மேம்படுத்துவதற்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 5 மில்லியன் ஒதுக்கப்பட்டு இருந்தது. இந்த உப கூறுகளின்மூலம் நீதித்துறையின் ஒட்டுமொத்த முகாமைத்துவத்தினை மேம்படுத்துவதன் மூலம் செயல்திறனை அதிகரித்தல் மற்றும் அதில் வெளிப்படுத்தப்படும் இணைப்புகள் மற்றும் சவால்களுக்கு பதில் கூறும் வகையில் அதன் இயலுமையை அதிகரித்தல் அதன் நோக்கமாக குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் செயல்திட்டத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 02 வருடங்கள் கடந்துள்ள போதிலும் இந்த கூறு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**விவசாயிகளுக்கான விநியோகத்தினை அதிகரித்தல் மற்றும் சேவைகளுக்கான பிரவேசம்**

2021 ஆகஸ்ட் 16 ஆம் திகதிய CM:34/2021 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் 2017 ஆகஸ்ட் 17 ஆம் திகதிய 21/1524/319/028 இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் விவசாய அமைச்சுடன் ஒருங்கிணைந்து நடைமுறைப்படுத்தும் பொறிமுறை ஒன்று தயாரிக்கப்பட்டு நிறுவுவதற்கான செயற்திட்டத்தின் கூறு 2 கீழ் திட்டமிடப்பட்டிருந்தது. ஆரம்பத்தில் இந்த கூறுகளுக்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 50 மில்லியன் பணம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 2023 மே 09 ஆம் திகதி செயல்திட்டம் மேல்கட்டமைக்கும் பாத்திரத்தில் அது ஐக்கிய அமெரிக்க டொலர் 15 மில்லியன் ஆக குறைக்கப்பட்டு இருந்தது. எவ்வாறான போதிலும் மேற்படி அமைச்சரவை பத்திரத்தின் பரிந்துரைகளுக்கு முரணாக 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் இந்த கூறு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சி திட்டம் (iRoad Program)

**ஒப்பந்த நிர்வாகம்**

உரிய நிதி நிறுவனங்களில் இருந்து கிடைக்கும் முற்பணங்களின் பிணையின் மூலம் நிலுவை முற்பணப்பை அளவிடுவதற்கு எதிராக ஒப்பந்ததாரர்களானால் பிடியாணை பெற்றுக்கொள்ளப்பட்ட காரணத்தால் 05 மாகாணங்களில் இடைநிறுத்தப்பட்டிருந்த 12 ஒப்பந்த பொதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 2,793.41 மில்லியனான முற்பணத் தொகை 2023 திசெம்பர் 31 ஆம் திகதி அளவில் அந்த ஒப்பந்ததாரர்களிடம் இருந்து அளவிட முடியாதிருந்தது. மேலும் ஆற்றல் பிணை முறைகளில் இருந்து அளவீடு செய்தல் தாமதமடைந்த காரணத்தால் ரூபா மில்லியன் அளவீடு நிலுவையாக காணப்பட்டது.

ஒப்பந்தாரர்களுக்கு உரிய கொடுப்பனவுகள் தாமதமடைதல்

மற்றும் ஆசிய அபிவிருத்தி வாங்கியால் வழங்கப்பட்ட கடன் உதவி மட்டுப்படுத்தப்பட்ட காரணத்தால் வீதிகளின் அத்தியாவசியமான பணிகள் மாத்திரம் நிறைவு செய்ய தீர்மானிக்கப்பட்டமையால் வீதி புனரமைப்பு ஒப்பந்தத்தின் கீழ் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி அளவில் வழங்கப்பட்டிருந்த ரூபா 6,250.03 மில்லியன் தொழில் ஆரம்பிப்பு முற்பணத்தை மீள அறவிடுவதற்கு உள்ள இயலுமை நிச்சயமற்றதாக காணப்பட்டது.

ஒப்பந்தத்தின் பொது நிபந்தனை 14.7 உப பிரிவுகளின் பிரகாரம் சேவை பெறுநரால் இடை கொடுப்பனவு சான்றிதழ்களில் சான்றுபடுத்திய தொகை 56 நாட்களுள் செலுத்தப்பட வேண்டிய போதிலும், 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக சிவில் பணிகளுக்கு ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 2,671.28 மில்லியன் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அந்த காரணத்தால் ஒப்பந்தத்தின் பொது நிபந்தனை 14.8 உப பிரிவுகளின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்த வேண்டிய தாமத வட்டியாக ரூபா 284.77 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதனால் ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்துவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக அரசாங்கத்திற்கு கூடுதல் செலவினை சுமை ஒன்று ஏற்பட்டிருந்தது.

**வாகனங்கள் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல்**

நிகழ்ச்சி திட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட 335 வாகனங்களில் 318 வாகனங்கள் வீதி மறுசீரமைப்பு பணிகளை நிறைவு செய்வதற்கு முன்னர் பீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதனால் நிகழ்ச்சி திட்டத்தின் மூலம் ஆண்டினுள் செயற்கிட்ட முகாமைத்துவ பிரிவில் மற்றும் மாகாண அலுவலகங்களின் பயன்பாட்டுக்காக 14 வாகனங்கள் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. 2023 திசெம்பர் 15 ஆம் திகதியில் உள்ள படியாக அந்த வாகனங்களுக்காக குத்தகை வாடகையாக ரூபாய் 16.36 மில்லியன் செலவிட நேர்ந்தது.

**ஆரம்ப திட்டத்தில் இல்லாத வீதி மறுசீரமைப்புகள்**

2022 ஆம் ஆண்டில் RMC 04 பொதியின் கீழ் பெல்மடுல்ல – எம்பிலிபிடிய – நோனாகம வீதியின் மேலதிக ஒப்பந்த பணியொன்றாக (Variation); பலாங்கொட – போவத்த – கல்தொட்ட வீதியில் 2022 ஆம் ஆண்டில் புனரமைக்கப்பட்டிருந்தது. பெல்மடுல்ல – எம்பிலிபிடிய – நோனாகம வீதியின் புனரமைப்பு நடவடிக்கைகள் தற்போது

வழங்கப்பட்டுள்ள 04 ஒப்பந்ததாரர்களுக்கும் 16 கிலோமீட்டர் அளவான இந்த வீதியின் மொத்த நீளத்திற்கும் உரிய புனரமைப்பு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன், அதன் போது உரிய பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. மேலும் விதி புனரமைப்பு நடவடிக்கை நிகழ்ச்சி திட்டத்தின் ஆரம்பத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் ஆரம்ப விசாரணைகள் நடாத்தப்பட்டு அறிக்கைகள் பனிப்பாளர் நாயகன் (பொறியியலாளர்) ஆனால் 2023 நவம்பர் 30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதிக நடவடிக்கைகள் தொடர்பில் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை.

## இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சி திட்டம் (Second iRoad Program)

**சான்றுபடுத்திய பட்டியல்களின் தாமதம்**

ஒப்பந்த பொது நிபந்தனை 14.7 இன் உப பிரிவுகளின் பிரகாரம் சேவை பெறுநரால் ஒவ்வொரு இடைக் கொடுப்பனவு சான்றிதழ்களிலும் சான்று படுத்திய பெருமதிகள் 56 நாட்களினுள் செலுத்தப்பட வேண்டிய போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக சிவில் வேலைகளுக்காக ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்த வேண்டிய தொகை ரூபா 5,558.94 மில்லியன் என்பது அவதானிக்கப்பட்டது. அவற்றுள் ரூபா 1,188.03 மில்லியன் இடைக் கொடுப்பனவு சான்றிதழ் பத்திர பெறுமதி 2022 ஆம் ஆண்டில் சான்றுபடுத்தப்பட்டிருந்ததுடன் அது 2023 ஆம் ஆண்டு நிறைவடையும் வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் ஒப்பந்த பொது நிபந்தனை 14.8 உப பிரிவின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக ரூபா 2,074.11 மில்லியனான தாமத வட்டிக்காக நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**தொழில் ஆரம்பிப்பு முற்பணத்தை பெற்றுக்கொள்வதில் நிச்சயமற்ற தன்மை**

ஒப்பந்ததாரர்களுக்கு கொடுப்பனவுகள் தாமதமடைந்தமை மற்றும் எஞ்சிய வீதி புணரமைப்பு நடவடிக்கைகளின் இடையபரப்பு மட்டுப்படுத்தப்பட்டவை ஆகிய காரணங்களால் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக ரூபா 8,197.88 மில்லியன் தொழில் ஆரம்பிப்பு முற்பணத்தை அறவீடு செய்வதில் இயலுமை நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டது.

**இரத்துச்செய்யப்பட்ட ஒப்பந்த பொதிகள்**

2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக சேவை பெறுநர் மற்றும் ஒப்பந்ததாரர்களால் ஊவா, வடக்கு மற்றும் மேல் மாகாணங்களில் 10 ஒப்பந்த பொதிகள் இரத்து

செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளதுடன், 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக ரூபா 2,014.10 மில்லியன் தொழில் ஆரம்பிப்பு முற்பணங்கள் அந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அறவிட முடியாதிருந்தது.

**அரச செலவினங்கள் மீளாய்வுக் குழுவின் அறிக்கைக்கு முரணான தீர்மானங்கள்**

2023 ஜுலை 13 ஆம் திகதி போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சிக்காக வெளியிடப்பட்ட அரச செலவின மீளாய்வுக் குழுவின் அறிக்கையின் பிரகாரம் நிகழ்ச்சி திட்டத்தினால் தற்போது பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள வீதி புனரமைப்பு ஒப்பந்தங்களை எதிர்காலத்தில் அந்த வீதிகளில் போக்குவரத்துக்கு உகந்த நிலைமைக்கு மாத்திரம் உள்ளாக்கி அந்த வீதிகளில் உள்ள அரசு நிறுவனங்களுக்கு கையளிப்பதற்கு குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட போதிலும் மேற்படி குழுவின் தீர்மானங்களுக்கு முரணாக மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 321.71 மில்லியன் ஆன 9.02 கிலோமீட்டர் நீளமுடைய கம்பஹா மாவட்டத்தின் 04 புதிய வீதிகளை புனரமைப்பு செய்யும் நிகழ்ச்சி திட்டத்தினால் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

## கொழும்பு தேசிய நெடுஞ்சாலைகள் புனரமைப்பு மற்றும் முன்னேற்ற செயற்திட்டம்

**ஒருகொடவத்த - அம்பத்தலை வீதியின் கட்டம் II**

2023 திசெம்பர் 31 ஆம் திகதிய முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் ஒருகொடவத்த - அம்பத்தலை வீதியின் கட்டம் II பகுதியை நிறைவு செய்யும் கால எல்லையில் இருந்து 2 வருடங்கள் கடந்து இருந்த போதிலும் ஒப்பந்தம் தொடர்ந்தும் 94.2 சதவீதமான முன்னேற்றத்தினை மாத்திரம் பெற்றுக் கொண்டிருந்தது.

## போக்குவரத்து இணைப்புகள் மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவ செயற்திட்டம்

**செயலாற்றல்**

போக்குவரத்து இணைவுகள் மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவ செயல்திட்டத்தின் (TCAMP) இறுதித் திகதி 2023 செப்டம்பர் 30 ஆன போதிலும் உத்தேச பௌதீக செயலாற்றல் 100 சதவீதத்தில் அடைந்துள்ள செயலாற்றலானது 98.81 சதவீதம் ஆகும்.

**ஆற்றல் கிரயம்**

ஒப்பந்தத்தின் ஆரம்பத்தில் இனம் காணப்படாத மாற்றல் கட்டளைகளின் கீழ் மேலதிக பணிகள் இனம் காணப்பட்ட

காரணத்தால் மதியுரை பணிகள் ஆரம்ப விடய பரப்பில் வேறுபாடு உள்ளமை அவதானிக்கப்பட்டதுடன், ஒப்பந்தம் பெறுகைகள் கையேட்டின் 14 ஆம் மேலதிகத்தின் பிரகாரம் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாது ஒப்பந்த பொதியின் மொத்த கிரயத்தில் 17.79 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 29.23 மில்லியன் வரையிலும் விலகல் சேர்த்தல் இடம்பெற்றிருந்தது.

**மதியுரை அறிக்கைகளுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளல்**

ஒப்பந்த உடன்படிக்கையின் பொது நிபந்தனைகளின் (GCC) 3.1 பிரிவின் பிரகாரம் சேவை வழங்குனரால் அமைப்பு குறிப்பீடுகள் மற்றும் தேவையின் விவரங்களுக்கு இணங்க சேவை நிறைவேற்றப்பட வேண்டும். ரூபா 161 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த மதியுரை அறிக்கை அதிவேக வீதி அளவீட்டுப் பணிகளுக்கு ஈடுபடுத்த முடியாது இருந்த நிலைமையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் அறிக்கைளை பெற்றுக் கொள்ளாது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் கணக்காய்வில் பிரச்சினைக்குரியதாக காணப்பட்டது.

ஒப்பந்தத்தின் நோக்கமானது வீதி ஒதுக்கீடு மற்றும் நீர்ப்பாசன வரைபடத்தினை தயாரித்தல் மற்றும் மேல், வடமேல் மற்றும் சபரகமுவ மாகாணங்களின் தேசிய ஜிஜஎஸ் மாதிரி காணப்படும் நீர்ப்பாசன கட்டமைப்பு மற்றும் உரிய நீர் வழங்கல் மேம்படுத்தல்களை இனம் காணுதல் தொடர்பிலான தகவல்களை சேகரித்தல் ஆன போதிலும், மாற்றல் கட்டளை இலக்கம் 01,02,03 மற்றும் 06 மூலம் ஒப்பந்தத்தின் விடயப்பரப்பிற்கு உரித்தற்ற சாரதி சம்பளங்களை செலுத்துதல் மற்றும் இரட்டை கேப் வண்டி ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக ரூபா 10.79 மில்லியன் செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### ஏ - 17 வீதியினை புனரமைப்புச் செய்தல் மற்றும் மேம்படுத்தல் செயற்திட்டம் - இரக்குவானை – சூரியகந்த

**செயலாற்றல்**

பெறுகை நடைமுறையிலான தாமதங்கள் மற்றும் காணிகளை சுவிகரிப்பதில் உள்ள தாமதங்கள் காரணமாக செயல்திட்டத்தின் பணிகள் நான்கு வருடங்களின் பின்னர் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்தது மேலும் செயற்திட்டத்தின் காலப்பகுதியினுள் செயற்திட்ட பணிகளை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் உத்தேச முன்னேற்றமான

| | |
|---|---|
| | 46 சதவீதத்தினை ஒப்பிடுகையில் 39 சதவீதமான முன்னேற்றம் மாத்திரம் அடையப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| **காணிகளை சுவீகரிப்பதிலான தாமதங்கள்** | கணக்காய்விற்கு கிடைத்துள்ள தகவல்களின் பிரகாரம் செயலத்திட்டத்தின் கட்டுமானங்களுக்காக 1515 காணித் துண்டுகள் சுவீகரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் மூலம் 789 காணித் துண்டுகளுக்கு மாத்திரம் 38(அ) பிரிவு வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2023 திசெம்பர் 31 வரையிலும் 17 ஆம் பிரிவின் கீழ் எந்த ஒரு காணினதும் நட்டஈடு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. காணிகளை சுவீகரிக்கும் நடைமுறையின் நலிவான கண்காணிப்பு அந்த தாமதத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்ததுடன் எதிர்காலத்தில் செயற்திட்டம் கிரயத்தினை விஞ்சி செல்வதற்கு பாதகமான ரீதியில் தாக்கமளிக்கக்கூடும். |
| **திட்டத்தின் பிரகாரம் நிறைவு செய்வதில் நிச்சயமற்ற தன்மை** | சூரியகந்த - ரக்வான செயற்திட்டத்தின் கீழ் வீதிகளை நிர்மாணிக்கும் பணிகள் 2024 அக்டோபர் 17 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு, 2024 அக்டோபர் 16 ஆம் திகதி நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது காணப்படும் குறைவான முன்னேற்றத்தின் பிரகாரம் முதலில் நிறைவு செய்தல் திகதியான 2024 அக்டோபர் 16 ஆம் திகதிக்கு முன்னர் வீதியின் எஞ்சிய பகுதியின் நிர்மாண பணிகளை நிறைவு செய்வதற்கு செயல்திட்டத்திற்கு இயலுமை இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| **சுற்றாடல் பாதுகாப்பு** | நில அரிப்பினை குறைப்பதற்கு மற்றும் சரிவு வெட்டுகளை உறுதிப்படுத்துவதற்காக இயற்கை வளங்கள் முகாமைத்துவ நிலையத்தினால் வெளியிடப்பட்ட 2021 பெப்ரவரி 18 ஆம் திகதிய கடிதத்தின் வழிகாட்டி மற்றும் முன்மொழிவுகளின் பிரகாரம் நிர்மாணங்களின் இடை நடுவே சரிவு வெட்டு மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் அகழ்ந்து எடுக்கப்பட்ட பொருட்கள் மற்றும் கட்டுமானத்திற்காக பயன்படுத்தப்படும் எந்த ஒரு மூலப் பொருட்களின் மூலமும் நீர் மாசடைதலுக்கு இடமளிக்க கூடாததுடன் அகழப்பட்ட மண் உரிய முறையில் குப்பைகளை கொட்டும் இடத்திற்கு கொண்டு செல்லப்பட வேண்டியதுடன் நில அரிப்பிற்கு உள்ளாக்கப்பட கூடாது. இவ்வாறான போதிலும் நிலம் அரித்துச் செல்லப்படும் இடங்கள் மற்றும் நலிவான நீர்ப்பாசன வசதிகள் பௌதிக பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டன. |

**தூண்களின் மீது நிர்மாணிக்கப்படும் துறைமுக நுழைவாயில் அதிவேக வீதி**

| | |
|---|---|
| **தாமத கட்டணங்கள் மற்றும் கால நீடிப்பு கட்டணங்கள்** | துறைமுக நுழைவாயில் விமான பாதையினை நிர்மாணிப்பதற்கு உரிய மதியரையாளரின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் ஒப்பந்ததாரரால் பொறுப்பு கூற வேண்டிய தாமதங்கள் காணப்படுவதுடன் உத்தேசித்த நிறைவு செய்யும் திகதியான 2024 செப்டம்பர் 08 திகதிக்கு பணிகளை நிறைவு செய்தல் நிச்சயமற்றது என்பது அவதானிக்கப்பட்டது. அதற்கமைய இறுதியாக கால நீடிப்பு அங்கீகரிக்கப்பட்ட 2024 மே மாதத்தின் பின்னர் தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு செயற்திட்டத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்தினால் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் கால நீடிப்பு செய்வதற்கான கிரயத்திற்கு ரூபா 493.03 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| **சமுத்திர வசதிகள் மத்திய நிலையம்** | சமுத்திர வசதிகள் மத்திய நிலைய கட்டிடத்தினை நிறைவு செய்து இலங்கை துறைமுகங்கள் அதிகார சபைக்கு ஒப்படைப்பதில் தாமதம் ஏற்பட்ட காரணத்தால் இலங்கை துறைமுகங்கள் அதிகார சபைக்கு தற்போதுள்ள பதவிய அணியினை மாற்றி அமைப்பதற்கு ஆற்றல் கட்டளை 03 இன் கீழ் செயல்திட்டத்தினால் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக ரூபா 221.53 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. |
| **குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படாமை** | 2021, 2022 மற்றும் 2023 ஆகிய வருடங்களுள் தொடர்ச்சியான வெப்பநிலை, ABC உயர் மட்டத்திலான வேறுபாடுகள், மேல் மற்றும் பக்கச்சுவர்களில் வெடிப்புகள் காணப்படல், தூண்கள் பலமின்றி காணப்படல், சரிவு பாதுகாப்புக்காக எடுக்கப்பட்டுள்ள பொருத்தமற்ற நடவடிக்கைகள், bottom ducts பொருந்தாமை போன்ற குறைபாடுகளுக்காக வெளியிடப்பட்ட 21 இணங்காமை அறிக்கைகள் (non-conformance reports) 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் திருத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. |

## மேல் மாகாண வீதி அபிவிருத்தி செயற்திட்டம் (OFID III)

**செயற்திட்டபணிகள்**

04 தேசிய வீதிகளின் 25.8 கிலோமீட்டர்களுக்கு உரிய புனரமைப்பு நடவடிக்கைகளின் ஒப்பந்தமானது 02 பொதிகளின் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு இருந்தது. 2015 ஜூன் 26 ஆம் திகதிய கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட போதிலும் காணிகளை சுவீகரிக்கும் நடைமுறையில் ஏற்பட்ட தாமதம் காரணமாக 02 ஒப்பந்த பொதிகளின் புனரமைப்பு நடவடிக்கைகள் 2½ வருடங்களின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், செயற்திட்ட கிரயம் ரூபா 645 மில்லியனால் விஞ்சி இருந்தது. கடுவலை முதல் அத்துருகிரிய பீதியின் எஞ்சிய பணிகளை நிறைவு செய்யாது எஞ்சிய கடன் தொகையிலிருந்து ஆரம்ப விடய பரப்புக்கு ஒருகொடவத்த - அம்பத்தலை வீதியின் 9/1 இலக்கமுடைய பாலத்தினை புனரமைப்பதற்கு செயற்திட்டம் தற்போது பெறுகை நடவடிக்கையை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்த பொதியின் கீழ் வல்கம – அத்துறுகிரிய பாதையின் 1.25 கிலோமீட்டர் நீளமான புனரமைப்பு நடவடிக்கைகள் காணி சுவீகரிப்பு நடைமுறையின் சிக்கல்கள் காரணமாக செயல்திட்டத்தின் விடயப்பரப்பிலிருந்து பின்னர் அகற்றப்பட்டுள்ளது.

**பெறவேண்டிய மீதிகள்**

செயற்திட்டம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக கடந்த நான்கு வருடங்களினுள் விளம்பர அறிவித்தல்கள், அளவீட்டு நடவடிக்கைகள், மண் சரிவு கற்கைகள் நடைபாதை திட்டமிடல் மற்றும் சுற்றாடல் மதியுரை செலவினம் ஆகியவற்றுக்காக ரூபா 16.96 மில்லியன் வரையிலும் பெறவேண்டிய இரு மீதிகள் அறவிடுவதற்கு எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**பிரதான செயலாற்றல் குறிக்காட்டிகள்**

செயற்திட்டத்தின் செயல்படு நிலைமையின் பெறுபேறுகள் மற்றும் நலன்களை அளப்பதற்கு பிரதான செயலாற்றல் குறிகாட்டிகள் (KPI) நிறுவப்பட்டிருக்கவில்லை. அதனால் செயற்திட்டத்தில் பொதுமக்களுக்கு கிடைக்கும் நலன்களின் மட்டத்தினை கணக்காய்வில் சான்றுறுதிப்படுத்த முடியாது இருந்தது.

கடுவலை அத்துருகிரிய வீதியின் 9.5 கிலோமீட்டர்களை

புணரமைப்பு செய்யும் பணிகளுக்காக ஒப்பந்ததாரர் 2018 ஜனவரி 29 ஆம் திகதி ரூபா 1,065 மில்லியன் செலவிட்டு ஆரம்பித்து 2019 ஜூலை 28 ஆம் திகதி நிறைவு செய்ய திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் ஒப்பந்ததாரருக்கு 841 நாட்கள் கால நீடிப்பின் மூலம் 2023 ஆகஸ்ட் 29 ஆம் திகதி வரையிலும் செயல்திட்டத்தின் ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டிருந்தது. மேலும் ஒப்பந்ததாரரால் 841 நாட்கள் வரையிலும் கால நீடிப்போ செய்வதற்கு உரிய கிரயமாக ரூபா 311 மில்லியன் கோரப்பட்டுள்ளதாகவும், ஒப்பந்ததாரரின் நலிவான செயற்பாடுகளை கருத்தில் கொள்ளாது செயல்திட்டத்தினால் அந்த உரித்துக் கோரல் அங்கீகரிக்கப்பட்டு உள்ளமையும் அவதானிக்கப்பட்டது. அது கணக்காய்வில் பிரச்சினைக்கு உரியதாக காணப்பட்டது.

செயல்திட்டத்தின் மதியுரை உடன்படிக்கை 2018 மார்ச் 08 திகதி ரூபா 147.79 மில்லியனுக்கு ஆரம்பிக்கப்பட்டதுடன், இறுதித் திகதி 2019 ஜூலை 28 ஆகும். எவ்வாறான போதிலும் செயல்திட்டத்தின் கட்டுமான பணிகள் தாமதமடைந்த காரணத்தால் மதியுரை கட்டணம் ரூபா 299.36 மில்லியன் வரை மாற்றப்பட்டுள்ளதுடன் நிறைவு செய்யும் திகதி 2023 பெப்ரவரி 31 ஆம் திகதி வரையிலும் பல தடவைகள் நீடிக்கப்பட்டுள்ளது. செயற்திட்டத்தினை நிறைவு செய்தல் தாமதம் அடைந்த காரணத்தால் மதியுரை ஒப்பந்தத்தின் மொத்த கிரயத்தில் 102.57 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தி ரூபா 151.59 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் செயற்திட்ட கிரயத்தினை மிஞ்சியமைக்கு ஒப்பந்ததாரரின் நலிவான செயல்பாடுகள் பாதகமாக தாக்கமளித்துள்ளமை அவதானிக்கப்பட்டது.

# மாகாண சபைகள்

1987 ஆம் ஆண்டின் போது பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைபபிற்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட 154 அ (1) உறுப்புரையின் மூலம் மேல், மத்திய, தெற்கு, வடமேல், வட மத்திய, ஊவா, கிழக்கு, வடக்கு, சப்ரகமுவ ஆகிய 09 மாகாண சபைகள் நிறுவப்பட்டுள்ளன.

மாகாண சபையொன்று ஆளுநரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளதுடன் பிரதம செயலாளர் நிருவாக உத்தியோகத்தராகச் செயற்படுகிறார். சட்டவாக்க சபையின் பிரதானியாக பிரதம அமைச்சர் செயற்படுவதுடன் பிரதம அமைச்சர் உள்ளடங்கலாக 05 அமைச்சர்களை மாகாண சபை உள்ளடக்கியுள்ளது.

மாகாண சபைகளில் பின்பற்றவேண்டிய நடைமுறைகள், மாகாண சபைகள் அரசாங்க சேவைக்குரிய விடயங்கள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றிற்கு துணையான விடயங்கள் தொடர்பான ஒழுங்குவிதிகளை வழங்குவதற்காக 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டம் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள 09 மாகாண சபைகளின் உத்தியோகபூர்வக் காலம் முடிவடைந்துள்ளமையால் அரசியலமைப்பின் 154 (உ) உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அச்சபைகள் கலைக்கப்பட்டுள்ளதாகக் கருதப்பட்டுள்ளது. அதற்கிணங்க சபையொன்று இல்லாது சப்ரகமுவ, கிழக்கு மற்றும் வட மத்திய மாகாண சபைகள் 2017 ஆம் ஆண்டிலிருந்தும், வடமேல்,மத்திய மற்றும் வடக்கு மாகாண சபைகள் 2018 ஆம் ஆண்டிலிருந்தும், மேல், ஊவா மற்றும் தெற்கு மாகாண சபைகள் 2019 ஆம் ஆண்டிலிருந்தும் 1989 இன் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (துணையான ஏற்பாடுகள்) அதிகாரச் சட்டத்தின் 2(1) (அ) பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஒவ்வொரு மாகாண சபையின் ஆளுநரினால் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

## மாகாண சபைகளின் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

| | |
|---|---|
| நிதிக் சுற்றுக்கள் கணக்காய்வு | ஒவ்வொரு மாகாண சபையாலும் சபை நிதியத்தின் நிதி நிலைமையை மற்றும் செயற்பாட்டு விளைவை வெளிப்படுத்தும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையின் பிரகாரமும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23 (1) ஆம் பிரிவின் பிரகாரமும் அந் நிதிககூற்றுக்கள் மீதான கணக்காய்வு கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| சீரான கணக்கு முறையொன்று அறிமுகப்படுத்தப்படாமை | ஆரம்பத்திலிருந்து இற்றை வரைக்கும் மாகாண சபைகளின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதற்காக சீரான கணக்கு முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிராததுடன் 2022 ஆம் 2023 ஆம் ஆண்டுகளில் 09 மாகாண சபைகளால் பல்வேறு முறைமைகள் பின்பற்றப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.<br><br>அந் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் ஒன்றுடனொன்று |

மாறுபட்ட வடிவங்கள், பெயர்கள் மற்றும் ஆதாரங்களைப் பயன்படுத்தி பெறுமதிகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. மாகாண சபை நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக முறையான சீரான வழிகாட்டல் ஒன்று அல்லது சுற்றறிக்கையொன்று அரசினால் அல்லது மாகாண சபைகளால் வெளியிடப்பட்டிராததுடன் அவற்றைப் பகுப்பாய்வு செய்து ஒப்பீட்டளவில் பயன்படுத்தி தீர்மானங்களை எடுப்பதற்கு இயலாத நிலையொன்று காணப்பட்டது.

குறிப்பிட்ட வழிகாட்டல் ஒன்று பெறப்படாமை மற்றும் மாகாண சபை அமைச்சாலும் ஒழுங்தமைப்பொன்று மேற்கொள்ளப்பட்டிராததன் காரணமாக மாகாண சபைகளுக்கு தகவல்களை மறைப்பதற்கோ, தவிர்ப்பதற்கோ அல்லது தீர்மானம் எடுப்பவர்களை தவறாக வழிநடத்தும் வகையில் தகவல்களை முன்வைப்பதற்கான வாய்ப்புக்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

**மாகாண சபைகளின் வருமானம் மற்றும் செலவினங்கள்**

மாகாண சபைகள் அட்டுறு அடிப்படை, காசு அடிப்படை, மேம்பாடு செய்யப்பட்ட காசு அடிப்படை எனும் அடிப்படைகளில் மாற்று அடிப்படையில் பயன்படுத்தப்பட்டிருந்தமை மற்றும் சீரான முறையொன்று பின்பற்றப்பட்டிராமை போன்ற நிலைமைகளுக்கு உட்பட்டு மாகாண சபைகளின் வருமானமும் செலவினமும் ஒப்பிடப்பட்டிருந்தன.

| மாகாண சபை | சேகரிக்கப்பட்ட வருமானம் | சதவீதமாக% | அரச மானியங்களின் கூட்டுத் தொகை (ரூபா மில்) | மொத்த வருமானம் (ரூபா மில்) | மொத்த செலவினம் (ரூபா மில்) | மிகை /பற்றாக்குறை (ரூபா மில்) |
|---|---|---|---|---|---|---|
| மேல் மாகாண சபை | 43,287 | 40.9 | 62,396 | 105,683 | 96,349 | 9,334 |
| மத்திய மாகாண சபை | 5,692 | 11.1 | 45,409 | 51,101 | 51,032 | 69 |
| தென் மாகாண சபை | 8,053 | 13.9 | 49,555 | 57,608 | 58,461 | (851) |
| வடமேல் மாகாண சபை | 10,186 | 19.2 | 42,658 | 52,844 | 49,527 | 3317 |
| வடமத்திய மாகாண சபை | 4,156 | 12.9 | 27,997 | 32,153 | 30,415 | 1738 |
| ஊவா மாகாண சபை | 2,032 | 5.6 | 33,790 | 35,822 | 38,766 | (2944) |
| கிழக்கு மாகாண சபை | 3,362 | 7.8 | 39,228 | 42,590 | 40,287 | 2303 |
| வட மாகாண சபை | 2,127 | 5.6 | 35,419 | 37,546 | 36,646 | 900 |
| சப்ரகமுவ மாகாண சபை | 4,649 | 10.7 | 38,570 | 43,219 | 41,645 | 1574 |
| **கூட்டுத்தொகை** | **83,544** | | **375,022** | **458,566** | **443,128** | **15,440** |

அட்டவணை இல: 2.38 2023 ஆம் ஆண்டின் மாகாண சபைகளின் வருமானம், செலவினம், மிகை /பற்றாக்குறை தொடர்பான விபரம்
ஆதாரம் : 2023 மாகாண சபை நிதிக் கூற்றுக்கள்

**மாகாண சபைகளின் வருமானம்**

ஒன்பது மாகாண சபைகளால் 2023 ஆம் ஆண்டின் போது மொத்தம் ரூபா 458,566 மில்லியனான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. இவ் வருமானம் வரி, வரியல்லாத மற்றும் ஏனைய வருமானம் என ரூபா 83,544 மில்லியனை உள்ளடக்கியிருந்தன. எவ்வாறெனினும், அரசாங்கத்தினால் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருந்த அரச மானியக் கூட்டுத்தொகை ரூபா 375,022 மில்லியனாக இருந்தது. இதன் படி, ஒன்பது மாகாண சபைகளின் மொத்த வருமானத்தில் 82 சதவீதம் அரசினால் வழங்கப்பட்ட மானியங்களை உள்ளடக்கியிருந்தமையால் சகல மாகாண சபைகளும் திறைசேரியால் வழங்கப்படும் மானியத்தைச் சார்ந்துள்ளமை அவதானிக்கப்பட்டது.

அட்டவணை இல: 2.38 இல் காண்பிக்கப்பட்டவாறு திறைசேரி ஒதுக்கீட்டில் சார்ந்து மாகாண சபைகள் இயங்கிய போதிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுவான ஓர் சுற்றறிக்கைகளுக்கு மாறாக மாகாண சபை ஆளுனர்களின் அங்கீகாரத்தில் உத்தியோகத்தர்களின் எரிபொருள் படிப்பணக் கொடுப்பனவு அதிகரிக்கப்படுதல், ஏனைய விதத்திலான நியாயமற்ற படிப்பணங்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் தாபன விதிக் கோவைக்கு மாறாக வீட்டு வாடகைப் படிப்பணத்தில் இருந்து பெற்றுக்கொள்வதன் மூலம் மாகாண சபைகளின் சிக்கனமற்ற முறையில் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**மாகாண சபைகளின் செலவினம்**

ஒவ்வொரு மாகாண சபையாலும் தனியார் தொழில் முயற்சிகள், ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் பராமரிப்பு செலவுகள் உட்பட மீண்டெழும் செலவுகளும் , மூலதன வடிவில் அபிவிருத்தி செலவுகளும் வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்றன. 2023 ஆம் ஆண்டின் போது 09 மாகாண சபைகளால் மொத்தம் ரூபா 443,128 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அந்த செலவில் 96 சதவீதம் மீண்டெழும் செலவுகளாகவும், 4 சதவீதம் மூலதனச் செலவுகளாகவும் செலவிடப்பட்டிருந்தன. இவ்வாறே, மொத்த மீண்டெழும் செலவுகளில் 77 சதவீதம் மாகாண சபைகளின் தனியாள் சம்பளங்கள், படிகள் செலுத்தப்படுவதற்காகச் செலவிடப்பட்டிருந்தன.

**சேமிப்பும் முதலீடும்**

மாகாண சபைகளால் அரசாங்கத்திடம் இருந்து பெறப்பட்ட மானியங்களை குறைவாகப் பயன்படுத்தி அல்லது மாகாண சபைகளின் வருமானத்தை சரியாக மதிப்பிடப்படாது மத்திய அரசிடமிருந்து மிகையான ஒதுக்கீடுகளைப் பெற்றிருந்ததன் காரணமாக ஆண்டின் இறுதியில் சேமிக்கப்பட்ட ஒதுக்கீடு, நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்படுவது வருடாந்தம் படிப்படியாக அதிகரிக்கப்பட்டு வந்தன. நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருந்த பணம் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காசு மற்றும் வங்கி மீதி (ரூபா. மில்) | மாகாண சபைகள் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான முதலீட்டு மீதி (ரூபா. மில்) | |
|---|---|---|---|
| | | 2023 | 2022 |
| 3,748 | மேல் மாகாண சபை | 35,500 | 25,500 |
| 2,714 | தென் மாகாண சபை | 7,159 | 5,840 |
| 2,507 | வடமேல் மாகாண சபை | 11,679 | 9,703 |
| 2,734 | சப்ரகமுவ மாகாண சபை | 3,966 | 3,050 |
| 419 | ஊவா மாகாண சபை | 778 | 1,184 |
| 787 | மத்திய மாகாண சபை | 274 | 19 |
| 5,124 | வடமத்திய மாகாண சபை | 1,983 | 1,793 |
| 1,280 | கிழக்கு மாகாண சபை | 618 | - |
| 3269 | வட மாகாண சபை | - | - |
| **22,582** | **கூட்டுத்தொகை** | **61,957** | **47,089** |

அட்டவணை இல: 2.39 மாகாண சபைகளின் காசு மற்றும் வங்கி மீதி, சேமிப்பு மற்றும் முதலீடுகள் தொடர்பான விபரம்

ஆதாரம் : 2023 மாகாண சபை நிதிக் கூற்றுக்கள்

மேலே காண்பிக்கப்பட்டவாறு, 2022 ஆம் ஆண்டின் போதான ரூபா 47,089 மில்லியனான முதலீடுகளும் சேமிப்புக் கணக்குகளிலான கூட்டுத்தொகை 2023 ஆம் ஆண்டின் போதான ரூபா 61,957 மில்லியனாக அதிகரித்தமையால் அண்ணளவாக 32 சதவீதமான அளவால் முதலீடுகளும் சேமிப்புகளும் அதிகரித்திருந்தன. எவ்வாறெனினும், சீரான கணக்கீட்டு முறையொன்று இன்மையால் வட மாகாண சபையினதும் கிழக்கு மாகாண சபையினதும் 2022 ஆம் ஆண்டின் போதான தகவல்கள் கணக்காய்விற்குப் பெற்றுக்கொள்ள இயலாதிருந்தது.

**மாகாண சபைகளின் காசு மற்றும் வங்கி மீதி**

ஒவ்வொரு மாகாண சகையினதும் வருட இறுதியில் குறிப்பிடத்தக்க அளவு காசு மீதி நிலவியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அக் காசு மீதி திறைசேரிக்கு மீள அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

மேற்குறித்த வரைபட இல: 2.39 இல் காண்பிக்கப்பட்டவாறு 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 09 மாகாண சபைகளில் ரூபா 22,582 மில்லியன் அளவான காசும் வங்கி மீதியும் நிலவியமை மேலும் அவதானிக்கப்பட்டது. இதன் படி, மாகாண சபைகளுக்கு ஒதக்கீடு வழங்கப்படுகையில் திறைசேரி, நிதி ஆணைக்குழு, உள்ளூராட்சிச் சபைகள் மற்றும் மாகாண சபை அமைச்சு போன்ற நிறுவனங்களால் மாகாண சபைகளில் உள்ள முதலீடுகள் மற்றும் சேமிப்புகளின் அளவு தொடர்பான எந்தவித கவனமும் செலுத்தப்படாது ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தமை

அவதானிக்கப்பட்டது.

**மாகாண சபைச் சொத்துக்கள்**

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 409,890 மில்லியனக இனங்காணப்பட்ட மாகாண சபைகளின் மொத்த சொத்துகளின் அளவு 2023 திசெம்பர் 31 இல் ரூபா 517,112 ஆக ரூபா 107,222 ஆல் அதாவது
26 சதவீததடதால் வளர்ச்சியடைந்திருந்தது. இவ்வாறே, 2023 ஆம் ஆண்டில் மாகாண சபைகளின் மொத்த சொத்துக்களில் ரூபா 413,336 மில்லியன் அதாவது மாகாண சபைகளின் மொத்த சொத்துக்களின் 80 சதவீதமானவை நிதியல்லாச் சொத்துக்களாக இருந்தன. மேலும்,
மேல் மாகாண சபை உட்பட பல மாகாண சபைகளால் காணி மற்றும் கட்டிடங்கள் உள்ளிட்ட சொத்துக்கள் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதற்கும், உரிய நேரத்தில் மீள்மதிப்பீடு செய்வதற்கும், பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் முறையாக கையகப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதற்கும் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையும் அவதானிக்கப்பட்டது.

| மாகாண சபைகள் | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியல்லாச் சொத்துக்களின் மீதி (ரூபா. மில்) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்தச் சொத்துக்களின் மீதி (ரூபா. மில்) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்தச் சொத்துக்களின் மீதி (ரூபா. மில்) |
|---|---|---|---|
| மேல் மாகாண சபை | 51,606 | 98,356 | 64,965 |
| மத்திய மாகாண சபை | 11,391 | 13,756 | 9,258 |
| தென் மாகாண சபை | 48,259 | 60,745 | 58,358 |
| வடமேல் மாகாண சபை | 90,373 | 106,380 | 96,693 |
| வடமத்திய மாகாண சபை | 28,793 | 35,864 | 31,997 |
| ஊவா மாகாண சபை | 82,952 | 85,387 | 88,220 |
| கிழக்கு மாகாண சபை | 17,819 | 19,881 | 18,007 |
| வட மாகாண சபை | 53,271 | 57,751 | 25,956 |
| சப்ரகமுவ மாகாண சபை | 28,872 | 38,992 | 16,436 |
| **கூட்டுத்தொகை** | 413,336 | 517,112 | 409,890 |

அட்டவணை இல: 2.40 2022 ஆம் 2023 ஆம் ஆண்டுகளில் மாகாண சபைகளின் சொத்துக்கள் தொடர்பான விபரம்
ஆதாரம் : 2023 மாகாண சபை நிதிக் கூற்றுக்கள்

**மாகாண சபையின் பொறுப்புக்கள்**

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 10,601 மில்லியனான மாகாண சபையின் மொத்தப் பொறுப்புகளும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா. 10,492 மில்லியன் வரை சிறிதளவில் குறைவடைந்திருந்தது. ஒவ்வொரு மாகாண சபைகளினதும் பொறுப்புகள் தொடர்பான விபரம் பின்வருமாறாகக் காண்பிக்கப்பட்டுள்ளன.

| **மாகாண சபைகள்** | **2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்தப் பொறுப்புக்களின் மீதி (ரூபா. மில்)** | **2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்தப் பொறுப்புக்களின் மீதி (ரூபா. மில்)** |
|---|---|---|
| மேல் மாகாண சபை | 644 | 520 |
| மத்திய மாகாண சபை | 679 | 962 |
| தென் மாகாண சபை | 2,212 | 1,627 |
| வடமேல் மாகாண சபை | 98 | 100 |
| வடமத்திய மாகாண சபை | 1,118 | 1,000 |
| ஊவா மாகாண சபை | 867 | 1,047 |
| கிழக்கு மாகாண சபை | 553 | 984 |
| வட மாகாண சபை | 3,300 | 3,104 |
| சப்ரகமுவ மாகாண சபை | 1,021 | 1,257 |
| **கூட்டுத்தொகை** | **10,492** | **10,601** |

அட்டவணை இல: 2.41 மாகாண சபைகளின் பொறுப்புக்கள் தொடர்பான விபரம்
ஆதாரம் : 2023 மாகாண சபை நிதிக் கூற்றுக்கள்

## மேல் மாகாண சபை

வெஸ்பிரோ அச்சகம்

வெஸ்பிரோ அச்சகத்தின் 2023 ஆகஸ்ட் 08 ஆம் திகதி கணிப்பிடப்பட்டிருந்த பௌதீக இருப்பிற்கு உரித்தாக நிறுவனத்தினால் பேணப்பட்ட களஞ்சியப் பேரேட்டு செய்கைப் பத்திரப் பொழிப்பு, கொள்வனவு பொழிப்பை அடிப்படையாகக் கொண்டு 38 வகையான அச்சீட்டுப் பொருட்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட இருப்புக் கணக்காய்வின் போது ரூபா 41 மில்லியன் பெறுமதியான அச்சீட்டுப் பொருட்களின் இருப்புப் பற்றாக்குறை ஒன்று அவதானிக்கப்பட்டிருந்ததுடன் குறித்த இருப்புக் கொள்வனவின் போது சில அசீட்டுப் பொருட்கள் நிறுவனத்திற்குக் கிடைக்கப்பெற்றிராத போதும் நிறுவனததிற்குக் கிடைக்கப்பெற்றதாக ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு, உறுதிப்படுத்தப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

காலாவதியான மருந்துப் பொருட்கள்

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு உரித்தான 7 சுகாதார நிறுவனங்கள் 2023 திசெம்பர் 31 இல்

| | |
|---|---|
| | உள்ளவாறு ரூபா 2 மில்லியன் பெறுமதியான காலாவதியான மருந்துப் பொருட்களையும் ரூபா 19 மில்லியன் பெறுமதியான தரத்தில் குறைவான மருந்துப் பொருட்கள் காணப்பட்ட போதிலும் அம் மருந்துப் பொருட்களை உடனடியாக கைதவிர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. |
| நிலுவை முத்திரைக் கட்டணம் மற்றும் தண்டப் பணம் அறவிடப்படுதல் | பதினாறு காணிப் பதிவாளர் காரியாலயங்களில் இருந்து 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டுவரையான ஆண்டுகளுக்கு உரித்தான 4896 உறுதிகளின் பெறுமதி ரூபா 7,303 மில்லியன் தொடர்பான தகவல்கள் 2023 ஆம் ஆண்டின் போது மாகாண வருமானத் திணைக்களத்திற்குக் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் 4693 உறுதிகள் தொடர்பான கோவைகள் ஆரம்பிக்கப்பட்டு நிலுவையான முத்திரைக் கட்டணங்களும் தண்டப் பணமும் அறவிடுவது தொடர்பான தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| கேள்வி நடைமுறைகளுக்கு மாறாக அனுமதிப்பத்திரம் வழங்கப்படுதல் | சபையால் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு விநியோகிக்கப்பட்டிருந்த 6,047 சமூக சேவை அனுமதிப்பத்திரங்களில் 5,454 அனுமதிப்பத்திரங்கள் அதாவது விநியோகிக்கப்பட்ட எண்ணிக்கையில் 90 சதவீதமானவை முறையான கேள்வி நடைமுறைகளுக்கு மாறாக வழங்கப்பட்டிருந்தன. |
| மாதாந்த உத்தியோகபூர்வ இல்லத்திற்கான வாடகைக் கொடுப்பனவொன்று செலுத்தப்படுதல் | தாபன விதிக் கோவையின் பிரகாரம், மாதாந்த வீட்டு வாடகையாக கொடுப்பனவொன்றைச் செலுத்துவதற்கு எந்தவிதமான இயலுமை இல்லாத போதிலும் மேல் மாகாண சபையின் உயர் பதவிகளை வகிக்கும் 14 அதிகாரிகளுக்கு 2017 நவம்பர் முதல் 2023 திசெம்பர் 31 வரை ரூபா 25 மில்லியன் மாதாந்த உத்தியோகபூர்வ வீட்டு வாடகைக் கொடுப்பனவொன்று செலுத்தப்பட்டிருந்தது. |
| நாளாந்த வருகை மற்றும் வெளியேறலை உறுதிப்படுத்திக் கொண்டிராமை | 2023 ஆம் ஆண்டின் போது மேல் மாகாண சபை சுகாதார சேவைகள் திணைக்களத்தின் 1,710 வைத்திய அதிகாரிகள், 2,556 தாதியினர் மற்றும் ஏனைய 7,224 பதவியணியினருக்காக நாளாந்த வருகை மற்றும் வெளியேறலை உறுதிப்படுத்திக்கொள்ளாது அவர்களால் பேணப்பட்டு வரும் நாட்குறிப்புப் புத்தகத்தின் நேரத்தை அடிப்படையாகக் கொண்டு சம்பளமும் படிப்பணங்களும் வழங்கப்பட்டிருந்தன. |
| எரிபொருள் படிகள் வழங்கப்பட்டிருந்தமை | மேல் மாகாண சபையின் 10 நறுவனங்களுக்கு உரித்தான 14 பதவிகளுக்குரித்தான 39 ஊழியர்களுக்கு பொது நிர்வாகச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட எல்லைகள் மீறப்பட்டு மாகாண ஆளுனரின் அங்கீகாரத்தில் 2012 ஆம் ஆண்டு முதல் 2023 |

திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கு உரித்தாக ரூபா 16 மில்லியனிற்காக எரிபொருள் படிகள் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

| | |
|---|---|
| நிதிசார் நட்டத்தை அறவிட்டிராமை | கொழும்பு, கம்பஹா மாவட்டங்களின் 5 கூட்டுறவுச் சங்கங்களில் ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்ட பண மோசடி மற்றும் பணப் பற்றாக்குறைப் பெறுமதி ரூபா 338 மில்லியன் ஆன போதிலும் குறித்த மாவட்டங்களின் உதவி ஆணையாளர்களால் இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு நிதி நட்டத்தை அறவிட்டுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ரூபா 13 மில்லியன் நிதி மோசடி தொடர்பாக ஹெனரத்கொட சங்கத் தலைவரான கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தருக்கும் சபை அங்கத்தவர்கள் 11 பேருக்கும் குற்றப்பத்திரிகை விநியோகிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக விசாரணைகள் நடாத்தப்பட்டு 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையில் 3 ½ வருடங்கள் கடந்திருந்த போதிலும் நிதி நட்டத்தை அறவிட்டுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| வாகனப் பழுதுபார்த்தல் செலவினம் | 2022 செப்தெம்பர் 21 ஆம் திகதி விபத்திற்குள்ளாகிய Discovery வகையிலான ஜீப் வண்டியின் பழுதுபார்ப்புச் செலவினம் ரூபா 19 மில்லியனாக இருந்ததுடன் காப்புறுதி இழப்பீடாக ரூபா 14 மில்லியன் கூட்டுறவு காப்புறுதிக் கம்பனியில் இருந்து 2024 பெப்ரவரி 09 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்தது. 2024 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் விபத்திற்குரிய பொறுப்புவாய்ந்த தரப்பினரை இனங்கண்டு திருத்தவேலைகளுக்காகச் செலுத்தப்படுவதற்காக நியமிக்கப்பட்ட தொகையான ரூபா 5 மில்லியன் செலுத்தப்பட்டு ஜீப் வண்டியின் திருத்தவேலைகளைப் பூர்த்தி செய்து சுகாதார அமைச்சிடம் ஒப்படைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## தென் மாகாண சபை

| | |
|---|---|
| பதிவுப் பொருட்களை மீள ஒப்படைத்திராமை | அமைச்சர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் ரூபா 10.5 மில்லியன் செலவில் 51 மடிக்கணனிகளும், 54 டப் உபகரணங்களும் கணனி இயந்திரம் ஒன்றும் 2015 ஆகஸ்ட் 25 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தன. 2019 ஏப்ரல் 10 ஆம் திகதி முதல் மாகாண சபை கலைக்கப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அவற்றை மீள சபைச் செயலகத்தில் ஒப்படைத்திராததுடன் அந்நாள் வரையிலும் அவற்றை மீப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. |
| மாகாண அரசாங்க சேவைகள் | தற்போது 06 அங்கத்தவர்களைக் கொண்ட தென்மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் தலைவரின் வயது 78 |

| | |
|---|---|
| ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் | ஆகவும் 4 அங்கத்தவர்களின் வயது 65 இற்கும் 77 இற்கும் இடையிலானதாக இருந்ததுடன் அவர்களது ஆணைக்குழு அங்கத்துவ பதவிக் காலம் 03 வருடங்களில் இருந்து 29 வருடங்கள் வரையான காலமாகக் காணப்பட்டது. இதில் 77 வயதையும் 78 வயதையும் கொண்ட அங்கத்தவர்கள் இருவரும் 1994 ஆம் ஆண்டில் இருந்தும் 1997 ஆம் ஆண்டில் இருந்தும் ஆணைக்குழு அங்கத்தவர்களாக தொடர்ந்து நியமிக்கப்பட்டிருந்ததுடன் அவர்களது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பதவிக் காலம் முறையே 29 ஆகவும் 26 ஆகவும் இருந்தது. இந் நிலை ஆணைக்குழுவின் தீர்மானங்களுக்கு வெளிப்படைத்தன்மை, பக்கச்சார்பின்மை தொடர்பாக பாதகமான தாக்கத்தை விளைவிக்கக் கூடும் என்பது அவதானிக்கப்பட்டது. |
| சுயதொழில் உதவி வழங்குதல் | தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையின் சுயதொழில் உதவி வழங்கப்படுவது தொடர்பாக முறையான வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மாகாண சபை உறுப்பினர்களால் வழங்கப்படும் பெயர்ப்பட்டியலை அடிப்படையாகக் கொண்டு சுயதொழில் உதவி வழங்கப்பட்டிருந்ததுடன் மாகாண சபை இயங்கியிராத 2020,2021 ஆம் 2022 ஆம் ஆண்டுகளின் போதும் உறுப்பினர்களின் ஒதுக்கீடு, 13 உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பெயர்ப்பட்டியல்களின் படி ரூபா 3 மில்லியன், ரூபா ….. மில்லியன், ரூபா ….. மில்லியனாக சுயதொழில் உதவி உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியல் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. |
| நிலுவை முத்திரைக் கட்டணம் மற்றும் தண்டப் பணம் அறவிடப்படுதல் | மாகாண சபை நிதிச் சாசனத்தின் படி, நொத்தாரினால் எழுதப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட உறுதிகளின் இரண்டாம் பிரதிகளுக்காக குறித்த முத்திரைக் கட்டணம் செலுத்தப்படாதவிடத்து, நிலுவை முத்திரைக் கட்டணமும் தண்டப்பணமும் அறவிடப்பட வேண்டும். எனினும், மாத்தறை காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து 2021 ஆகஸ்ட் முதல் 2022 ஏப்ரல் வரையான 08 மாதங்களுக்கு உரித்தாக ரூபா 9.6 மில்லியனான 2784 உறுதிகளின் தகவல் 2023 பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி மாகாண வருமான பிராந்திய அலுவலகத்திற்குக் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும், 2023 நவம்பர் 27 ஆம் திகதி வரையில் இது தொடர்பாக கோவைகள் திறக்கப்பட்டு மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>2018 மே முதல் 2020 ஆகஸ்ட் வரையான 19 மாதங்களுக்கு உரித்தான ரூபா 0.5 மில்லியனைப் பார்க்கிலும் கூடுதல் பெறுமதியுடனான 7481 உறுதிகள் தொடர்பான பட்டோலை மாத்தறை காணிப் பதிவாளர் அலுவலகத்தால் 2020 யூலை 30 ஆம் திகதியும் 2021 ஏப்ரல் 07 ஆம் திகதியும் செப்தெம்பர் 23 ஆம் திகதியும் மாகாண வருமான அலுவலகத்திற்கு |

சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இவ் உறுதிகளில் 2023 சனவரி 01 ஆம் திகதி முதல் 2023 நவம்பர் 24 ஆம் திகதி வரையில் 5154 உறுதிகள் தொடர்பாக குறித்த உறுதிகளை இனங்கண்டு முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய உறுதிகளுக்காக கோவைகள் திறக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.


| | |
|---|---|
| காணிப் பரிமாற்றங்களுக்கு உரித்தான உறுதிகளின் பதிவு பரீட்சித்தமை | தென் மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களின் நொத்தாரிசுக்களால் மாத்தறை மாவட்ட காணிப் பரிமாற்றங்களுக்கு உரிய உறுதிகள் பதிவு செய்யப்படுவது தொடர்பாக கணக்காய்வுத் தினமாகிய 2023 நவம்பர் 27 ஆம் திகதி மாத்தறைக் காணிப் பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது 2020 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகாக ரூபா 54.9 மில்லியன் பெறுமதியான காணி பரிமாற்றப்பட்ட 18 சந்தர்ப்பங்களுக்கு உரித்தான தகவல்கள் அவதானிக்கப்பட்டதுடன் இவற்றில் 16 உறுதிகளுக்கு உரிய தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு கோவைகள் திறக்கப்பட்டு குறித்த முத்திரைக் கட்டணம் செலுத்தப்படுவது தொடர்பாக ஆராயப்பட்டிருக்கவில்லை. |
| ஆதன பரிமாற்றற் கட்டணக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுவதைத் தவிர்த்தல் | தனியார் நிறுவனம் ஒன்றிடம் இருந்த ரூபா 243 மில்லியனான ஆதனத்தை வேறோர் தனியார் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்படுகையில் செலுத்தப்பட வேண்டிய முத்திரைக் கட்டணத் தொகையான ரூபா 9.7 மில்லியன் கொடுப்பனவு தவிர்க்கப்பட்டிருந்தது. |
| மருத்துவ வழங்கல் பிரிவிடமிருந்து தகவல் முகாமைத்துவ முறைமை | 2016 ஆம் ஆண்டில் இருந்து இயங்கிய மருத்துவ வழங்கல் தகவல் முகாமைத்துவ முறைமையின் (MSMIS) மூலம் காலாவதியான மருந்துப் பொருட்கள் ஒரு வருட காலத்திற்குள் இனங்காணப்பட்டு கைதவிர்க்கப்படுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு, நிதிப் பிரமாணம் 102 முதல் 109 இன் பிரகாரம் புத்தகத்திலிருந்து நீக்கப்படுவதற்காக சுகாதார அமைச்சுச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என 2021 திசெம்பர் 08 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க சுகாதார அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டிருந்த போதிலும் காலி பிராந்திய வைத்தியசாலை இதன் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இவ்வாறே குழு அறிக்கையின் படி, கண்டறியப்பட்டிருந்த ரூபா 23.6 மில்லியனை அண்மித்த காலாதியான மருந்துப் பொருட்கள் PRONTO முறைமையின் மூலம் முறையான அங்கீகாரம் இன்றி பொருள் மெய்மையாய்விற்காக வழங்கப்பட்டிருந்த இரகசியக் குறியீட்டைப் பயன்படுத்தி அழிக்கப்பட்டிருந்தது. |
| மத்திய வாயுக் குளிரூட்டி முறைமை | கும்புறுபிட்டிய ஆதார வைத்தியசாலைக்கு ரூபா 14.4 (வரி அல்லாத) பெறுமதிக்கு 2015/2016 ஆம் ஆண்டுகளின் போது |

| | |
|---|---|
| தோல்வியுற்றிருந்தமை | மத்திய வாயுக் குளிரூட்டி முறைமை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் ஸ்தாபிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் இருந்து அது செயலிழந்த நிலையில் காணப்பட்டது. மேலும், பலபிட்டிய ஆதார வைத்தியசாலைக்காக மத்திய வாயு பொருத்தி முறைமை ஒன்று ரூபா 7.7 மில்லியன் செலவில் 2016 யூன் 20 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் இதுவும் 2017 திசெம்பர் 03 ஆம் திகதி வரையில் முற்றாகச் செயலிழந்து காணப்பட்டது. இதன் படி இரு வைத்தியசாலைகளிலும் சத்திரசிகிச்சையை இயக்குவதற்காக ரூபா 4.4 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் 22 ஸ்பிலிட் வாயுக் குளிரூட்டல் இயந்திரங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் தினம் வரையிலும் மேற்குறித்த செயற்திட்டங்கள் தோல்வியடைந்தமை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு அரசாங்கத்திற்கு நேர்ந்த இழப்பை அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| விவசாயத் திணைக்களத்தால் செயற்படுத்தப்பட்ட தகவல் முகாமைத்துவ முறைமை | 2016 ஆம் ஆண்டு முதல் 2022 ஒக்டோபர் வரை ரூபா 15 மில்லியன் செலவில் தென் மாகாண விவசாயத் திணைக்களத்தால் தகவல் முகாமைத்துவ முறைமை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் திணைக்களத்தின் விவசாய ஆலோசகர்கள் அச் செயற்பாடுகளில் இருந்து நீங்கியமையால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கை எய்த இயலாதிருந்தது. இவ்வாறே, தகவல் முகாமைத்துவ முறைமையை இயக்குவதற்காக ரூபா 8.8 மில்லியன் செலவிடப்பட்டு வழங்கப்பட்டிருந்த 225 டப் கணனிகளின் தற்போதைய உரித்தும் செயற்பாடு தொடர்பான போதிய தகவல்களும் திணைக்களத்தால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| பௌதீக ரீதியாக உள்ளமை குறித்து உறுதிப்படுத்தப்படாத வாகனங்களும் மோட்டார் சைக்கிள்களும் | தென் மாகாணசபையில் நிறுவனங்களின் பெயரில் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்த 178 வாகனங்களும் மோட்டார் சைக்கிள்களும் நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வாகனப் பட்டியலில் குறிப்பிடப்பட்ட 07 வாகனங்களும் நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருந்த 04 வாகனங்களும் மோட்டார் சைக்கிள்களும் உள்ளடங்கலாக 201 வாகனங்களின் பௌதீக ரீதியான உள்ளமையை உறுதிப்படுத்திக் கொள்ள இயலாதிருந்தது. இவற்றில் தென் மாகாண, உள்ளூராட்சிச் சபைகள் ஆணையாளர் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த 30 மோட்டார் சைக்கிள்களுக்காக பல சந்தர்க்கங்களில் விலக்களிக்கப்பட்ட வருமான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் வாகனங்களின் உரிமையும் பௌதீக உள்ளபடிநிலை தொடர்பாகவும் உறுதிப்படுத்திக் கொள்ளாது விலக்களிக்கப்பட்ட வருமான அனுமதிப்பத்திரம் எவ்வாறு பெறப்பட்டது என்பது குறித்து கணக்காய்வின் போது சர்ச்சைக்கு உட்பட்டிருந்தது. |
| பெறுகைகளின் வெளிப்படைத்தன்மை | தென் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மாத்தறை மாவட்ட அலுவலக அதிகார எல்லைக்கு உட்பட்ட பகுதியில் |

| | |
|---|---|
| தொடர்பான பிரச்சனை | முலடியன கமகெவத்த அணைக்கட்டின், கேபியன் மதகை நிர்மாணிப்பதற்காக ரூபா 8.2 மில்லியனும் ரத்மலாவ அணைக்கட்டு நிர்மாணிப்பிற்காக ரூபா 11 மில்லியனுமான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு 2024 மார்ச் 05 ஆம் திகதி பத்திரிகை மூலம் பெறுகை விளம்பரம் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு செய்யப்பட முன்பிருந்தே நிர்மாணிப்புகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட வேலைத்தளத்திற்கு கட்டுமானப் பொருட்களான 355 கனமீற்றர்களிலான பளிங்குக் கற்களும் 34 கன மீட்டர்களிலான ஏபீசீ அளவில் கொண்டு செல்லப்பட்டு குவித்து வைக்கப்பட்டிருந்தன. திணைக்களத்தின் முகாமைத்துவம் இது குறித்து அறிந்திருந்த போதிலும் இது தொடர்பாக தேவையான சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. இதன் காரணமாக செயற்திட்டத்திற்கான பெறுகை வெளிப்படை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தி கொள்ள இயலாதிருந்தது. |
| விளைவற்ற சொத்துக்கள் | தென் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்த 905 குளங்களின் ஆக்கிரமிப்பு நீர்வாழ்த் தாவரங்களை அகற்றி மறுசீரமைப்பதற்காக ரூபா 84 மில்லியன் மதிப்பிலான இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு 2023 செப்தெம்பர் 14 ஆம் திகதி வரையில் 587 நாட்கள் கடந்திருந்த போதிலும் இயந்திரங்கள் அந் நாள் வரை 414 மணித்தியாலங்கள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தன. இவ்வாறே, 06 குளங்களின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளிற்காக இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் , 03 குளங்கள் மாத்திரமே மறுசீரமைக்கப்பட்டிருந்தமையால் 234 இயந்திர மணித்தியாலங்கள் விளைவற்றுக் காணப்பட்டன. இதில் திருத்த வேலைகளுக்காக 199 நாட்கள் கடந்திருந்ததுடன் இறக்குமதி செய்த கம்பனி போதிய சேவை வழங்கலையும் திருத்த வேலைகளையும் மேற்கொண்டிருக்கவில்லை. எனினும், இயந்திரக் கொள்வனவின் போது இது தொடர்பாகக் கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## மத்திய மாகாண சபை

2023 ஆம் ஆண்டின் போதும் கடந்த 04 ஆண்டுகளின் போதும் மாகாண சபையின் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான விபரம் பின்வரும் வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது.




| | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|---|---|
| மதிப்பிடப்பட்ட வருமானம் | 45இ256 | 43இ403 | 48இ021 | 45இ558 | 54இ444 |
| உள்ளபடியான வருமானம் | 40இ066 | 42இ304 | 45இ811 | 48இ375 | 51இ101 |
| மதிப்பிடப்பட்ட செலவினம் | 46இ335 | 44இ281 | 50இ060 | 45இ558 | 56இ792 |
| உள்ளபடியான செலவினம் | 40இ312 | 42இ538 | 45இ203 | 51இ247 | 51இ032 |

வரைபடம் 2.48 மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானமும் செலவினமும்
மூலாதாரம் - மத்திய மாகாண சபை நிதிக் கூற்றுக்கள்

| | |
|---|---|
| கணக்கீடு செய்யப்பட்டிராத குத்தகை | வலப்பனை பிரதேசச் செயலகப் பிரிவில் ஓர் நபருக்கு குத்தகைக்காக வழங்கப்பட்டிருந்த ஓர் காணியில் இருந்து 2010 சனவரி 10 ஆம் திகதி முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பெற வேண்டியிருந்த குத்தகை ரூபா 23.324 மில்லியன் தொகை அறவிடப்பட்டிராததுடன் அவ் அறவிடப்பட வேண்டிய குத்தகை தொடர்பாக காணித் திணைக்கள நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| நிலுவை வருமானம் | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மாகாண சபை வருமானக் கணக்குகளின் 04 விடயங்களுக்கு உரித்தாக ரூபா 135.833 தொகையான நிலுவை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. இதில் ரூபா 68.561 மில்லியன் கூட்டுத்தொகை காணிக் குத்தகைதாரரிடம் இருந்து அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்டது. ஒட்மொத்த நிலுவை வருமானத்தில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் அறவிடப்படாதிருந்த தொகை ரூபா 28.513 மில்லியனாகக் காணப்பட்டது. |
| மேலதிக முத்திரை வரி சேகரிக்கப்பட்டிராமை | 1990 இன் 17 ஆம் இலக்க மத்திய மாகாண நிதி சாசனத்தின் 73 (8) ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த ஆதன விற்பனை மீள மதிப்பீடு செய்யும் 96 நிகழ்வுகளின் தகவல்கள் திரட்டப்படுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது 70 சந்தர்ப்பங்களுக்கு உரித்தான ஆதனப் பரிமாற்றங்கள்/ விற்பனைகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய |

மேலதிக முத்திரை வரி ரூபா 5.936 மில்லியன் குறித்த கொள்வனவாளர்களால் 10 மாதங்கள் முதல் 07 வருட காலமளவில் சேகரிக்கப்படுவதற்கு வருமானத் திணைக்களம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

**கணக்காய்வு மிகைக்கட்டணம் அறவிடப்பட்டிராமை**

உள்ளூராட்சி திணைக்களத்தால் 2013 முதல் 2022 வரையான காலப்பகுதியின் போது 06 உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்காக விநியோகிக்கப்பட்ட 15 கணக்காய்வு மிகைக் கட்டணங்களின் கூட்டுத்தொகை ரூபா 9.704 மில்லியனானதுடன் அம் மிகைக்கட்டணங்கள் குறித்த தரப்பினரிடம் இருந்து அறவிடப்படுவதற்கோ அல்லது சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படுவதற்கோ 2023 ஆம் ஆண்டின் இறுதி நாள் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**காலாவதியான மருந்துப்பொருட்கள்**

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் 03 மாவட்ட மற்றும் பிராந்திய வைத்தியசாலைகளில் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் 03 மாதங்கள் முதல் 96 மாதங்கள் வரையான கால வீச்சில் ரூபா 3.250 மில்லியன் கூட்டுத்தொகையான காலாவதியான 452,650 அலகு மருந்துப் பொருட்களும் கலகெதர பிராந்திய வைத்தியசாலையில் ரூபா 398,280 ஆன தரத்தில் குறைவான 72,206 அலகு மருந்துப் பொருட்களும் காணப்பட்டன.

**மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து வரி அறவிடப்பட்டிராமை**

02 பிரதேசச் செயலகப் பிரிவுகளில் அமைந்துள்ள 03 நீர் மின் உற்பத்தி நிலையங்கள் 03 வருடங்கள் முதல் 20 வருடங்கள் வரையான காலப்பகுதி முதல் மின் உற்பத்தியை மேற்கொண்டு தேசிய முறைமைக்கு மின்சாரத்தை வழங்கியிருந்த போதிரும் அம் மின் உற்பத்தி நிலையங்களிற்காக 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நீர் மாற்று அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டு வரியை அறவிட்டுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராததன் காரணமாக ரூபா 4.668 மில்லியன் வரி வருமானத்தை மாகாண காணித் திணைக்களத்திற்குக் கிடைக்காது போயிருந்தது.

**செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிராமை**

முத்திய அரசாங்கத்தின் கல்வி அமைச்சின் கீழ் செயற்படுவதற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 31.650 மில்லியனான 02 கைத்தொழில்களும், வேறு நிதியத்தின் கீழ் நுவரெலியா மாவட்டத்தில் செயற்படுத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த ரூபா 239.619 மில்லியனான 25 செயற்திட்டங்களும் HSEP செயற்திட்டத்தின் கீழ் மத்திய மாகாண சுகாதாரத் துறையால் செயற்படுத்தப்படுவதற்கு மதிப்பிடப்பட்ட ரூபா 421.321 மில்லியனான 33 செயற்திட்டங்களும் 2023 ஆம் ஆண்டின் போது பொறியியல் சேவைகள் திணைக்களத்தால் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**பிணைப்பணம்**

தெல்தெனியா ஆதார வைத்தியசாலைகளில் பணிபுரிந்த

| | |
|---|---|
| அறவிடப்பட்டிராமை | வைத்திய அதிகாரி ஒருவர் 2016 மே 02 ஆம் திகதி முதல் 2021 மே 01 ஆம் திகதி வரையான காலப்பகுதியின் போது சம்பளமற்ற லீவிற்கான அங்கீகாரத்தைப் பெற்று வெளிநாட்டிற்குச் சென்றிருந்த போதிலும் 2023 ஒக்டோபர் வரையிலும் கடமைக்குச் சமூகமளித்திராத போதிலும் உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய ரூபா 1.175 மில்லியன் தொகையை அறவிட்டுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| வாகனங்கள் பௌதீக ரீதியாக இன்மை | மோட்டார் வாகனப் பதிவுத் திணைக்களத்திடம் இருந்தும் மாகாண போக்குவரத்துத் திணைக்களத்திடம் இருந்தும் பெறப்பட்ட உறுதிப்படுத்தல்களின் படி, மாகாண சபைகளுக்கு உரித்தான வாகனங்களாகக் கண்டறியப்பட்ட 734 வாகனங்களில் 59 வாகனங்களின் தகவல்கள் மத்திய மாகாண சபையின் நிறுவனங்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிராததுடன் அவ் வாகனங்கள் மத்திய மாகாண சபையின் நிறுவனங்களால் பயன்படுத்தப்படுவது குறித்தும் எவ்வித வடிவிலும் உறுதிப்படுத்திக் கொள்ள இயலாதிருந்தது. |
| சிக்கனமற்ற செலவினங்கள் | 2018 ஒக்டோபர் 18 ஆம் திகதி மத்திய மாகாண சபை கலைக்கப்பட்டதை அடுத்து அமைச்சர்களும் தனிப்பட்ட பதவியணியினரும் பயன்படுத்திய 61 வாகனங்கள் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன. அவ் வாகனங்கள் தேவைப்பாட்டிற்கமைவாக வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குப் பெற்றுக்கொள்ளும் இயலுமை தொடர்பாக கருத்திற்கொள்ளப்படாது அவ் அதிகாரசபையால் அதன் பிரதான.ஃ. நிறைவேற்றுப் பொறியியலாளருக்கு 12 டபிள் பேர்பஸ் வாகனங்கள் 2018 முதல் 2023 ஆகஸ்ட் வரையான காலப்பகுதியின் போது வாடகை அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வாடகையாக ரூபா 75.092 மில்லியன் தனியார் தரப்பினருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. |
| ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்டிராமை | 2018 முதல் 2023 வரையான காலப்பகுதியின் போது குழந்தைப் பருவ செயற்றிட்டத்திற்காக 03 அரசசார்பற்ற அமைப்புகளில் இருந்து வழங்கப்பட்டிருந்த ஒதுக்கீடுகளில் ரூபா 3.033 மில்லியன் குறித்த நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படாது வருமானத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தன. |
| விளைவற்ற சொத்துக்கள் | சுற்றுலா அலுவல்கள் திணைக்களத்தால் 2016 ஆம் ஆண்டில் ரூபா 7.948 மில்லியன் செலவில் ரங்கிரி தம்புல்ல ரஜமஹா விகாரைக்கு உரிய காணியில் ஆயுர்வேத ஆரோக்கிய மையம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையில் நிர்மாணிக்கப்பட்டு 07 வருடங்கள் பூர்த்தியாகியிருந்த போதிலும் இந் நிலையம் பயன்படுத்தப்படாதிருந்தது. இக் காணியின் உரிமையைக் கையேற்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான அம்பதென்ன சேவை நிலையத்தின் இயந்திரச் செயற்பாட்டிற்குத் தேவையான தொழிநுட்பப் பயிற்சி பெற்ற பதவியணியை ஆட்சேர்ப்பதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக 2015 ஆம் ஆண்டின் போது சேவை நிலையத்தால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 4.040 மில்லியனான 03 இயந்திரங்கள் 08 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக சேவை நிலையத்தில் விளைவற்றுக் காணப்பட்டது.

| | |
|---|---|
| பண்ணைகளின் எண்ணிக்கையும் விலங்குகளின் நெரிசல் குறைவும் | விலங்கின வளர்ப்பு நடவடிக்கைகளின் விருத்தியின் மூலம் விவசாய விலங்கின உற்பத்திப் பங்களிப்பை உயர்த்துவது மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பிரதான செயற்பாடான போதிலும் 2020 ஆம் ஆண்டின் மத்திய மாகாணத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த கால்நடைப் பண்ணைகளின் எண்ணிக்கை 38,081 ஆன போதிலும் 2022 ஆம் ஆண்டின் போது அவ் எண்ணிக்கை 31,344 பண்ணைகள் வரை 6,737 ஆல் குறைவடைந்திருந்தது. இதில் அக் காலப்பகுதிக்கு உரித்தான உள்நாட்டுப் பால் உற்பத்திக்கு முக்கிய பங்களிப்பை வழங்கும் பசுமாடுகள் மற்றும் எருமை மாட்டுப் பண்ணைகளின் எண்ணிக்கை 6441 ஆல் அதாவது 17 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. இவ்வாறே 2020 ஆம் ஆண்டில் 100,423 ஆன விலங்கின எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டின் போது 82,228 வரை 18,195 ஆல் வீழ்ச்சியடைந்திருந்தமை பால் உற்பத்திக் குறைவிற்குத் தாக்கமளித்திருந்தது. 2020 முதல் 2022 வரை கால்நடை வளத் துறையின் பல்வேறு அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக ரூபா 123.163 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் பெருமளவிலான விவசாயிகள் கால்நடை வளர்ப்பில் இருந்து விலகியிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| மண் ஆய்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிராமை | 2021 ஆம் ஆண்டின் போது சேதனப் பசளை உற்பத்திச் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டின் கீழ் விவசாயத் திணைக்களத்திற்கு உரித்தான நவயாலதென்ன மாவட்ட விவசாய ஆராய்ச்சிகள் மற்றும் பயிற்சி நிலையத்தில் மண் ஆய்வு கூட நவீனமயமாக்கல் மற்றும் மண் ஆய்வு உபகரணங்களுக்காக ரூபா 17.518 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையில் ஒரு வருடத்திற்கும் மேலான காலம் கடந்திருந்த போதிலும், மண் ஆய்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாது இதற்காக வழங்கப்பட்ட உபகரணங்கள் பொதிகளினுள்ளேயே விளைவற்றுக் காணப்பட்டன. |
| இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்த செயற்திட்டங்கள் | 2021 ஆம் ஆண்டின் போது மாகாண நிர்ணயிக்கப்பட்ட அபிவிருத்தி உதவியின் கீழ் முல்ஹால்கலே விவசாய ஆலோசனை உத்தியோக பூர்வ விடுதி, வலப்பனே உதவி விவசாய பணிப்பாளர் அலுவலகமாக |

நவீனமயமாக்கப்படுவதற்காக 2021 ஒக்டோபர் 04 ஆம் திகதி ரூபா 10.229 மில்லியனிற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 30 ஆம் திகதியில் உள்ளவாறு நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 2022 திசெம்பர் 15 ஆம் திகதி வரையில் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் மேற்கொள்ளப்பட்ட வேலைக்காக ரூபா 4.094 மில்லியன் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அதன் நிர்மாணிப்புகள் பூர்த்தியடைந்திராமையால் இதற்காக செலவிடப்பட்ட பணம் விளைவற்ற செலவினமாகியிருந்தது.

## வட மேல் மாகாண சபை

வாகன விபத்துக்கள்

முன்னாள் ஆளுனர் ஒருவரால் பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனம் 2020 யூலை 1 ஆம் திகதி விபத்திற்குள்ளாகியிருந்தது. ஆம் மோட்டார் வாகனத்தைத் திருத்துவதற்காக ரூபா 5.3 மில்லியன் மாகாண சபையால் செலவிடப்பட்டிருந்த போதிலும் காப்புறுதி நிறுவனத்தில் இருந்து ரூபா 3.9 மில்லியன் மாத்திரமே கிடைக்கப்பெற்றிருந்தது. எஞ்சிய தொகையான ரூபா 1.4 மில்லியன் சாரதியிடம் இருந்து அறவிட்டுக்கொள்வதற்காக தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் தினமான 2024 மார்ச் 06 ஆம் திகதி வரையிலும் அத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

வட மேல் மாகாண சபைச் செயலாளர் காரியாலயத்தின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டிருந்த ஓர் வாகனம் முறையான அங்கீகாரம் இன்றி மாகாண சபையில் பிரதித் தலைவிக்கு வழங்கப்பட்டிருக்கையில் 2002 ஒக்டோபர் 11 ஆம் திகதி அவ் வாகனம் பாதுகாப்பற்ற முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கையில் முற்றாகத் தீக்கிரையாக்கப்பட்டு சேதத்திற்கு உள்ளானமை குறித்து நேர்ந்த நட்டம் 2024 சனவரி 19 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மாகாண நிதிசார் விதி 54.4 இன் பிரகாரம் 2020 சனவரி 03 ஆம் திகதி திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி சாரதியால் ஓட்டிச் செல்லப்பட்டு தம்புல்ல வீதியில் சமன்புர பகுதியில் விபத்திற்குள்ளாக்கப்பட்டிருந்த ஓர் வான் மீளமைக்கப்படுவதற்காக மாகாண சபையின் ஒதுக்கீட்டில் ரூபா 1.4 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. மேற்குறித்த வாகனம் முற்றாகக் காப்புறுதியிடப்பட்டிருந்த போதிலும், சாரதி குடிபோதையில் என்ற காரணத்தால் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் ரூபா 0.4 மில்லியன் மாத்திரமே மீளளிக்கப்பட்டிருந்தது. நுட்டத்தை அறவிடுவது தொடர்பில் 2024 ஏப்ரல் 10 ஆம் திகதி வரையிலும் வடமேல் மாகாண கல்வி திணைக்களம் நடவடிக்கை

எடுத்திருக்கவில்லை.

குருநாகல் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயத்திற்கு உரித்தான இரு வாகனங்கள் விபத்திற்கு உட்பட்டு முறையே 3 1/2 யும் 02 வருடங்களும் 03 மாதங்களும் கடந்திருந்த போதிலும் ஆரம்ப கட்ட விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டு ஒழுக்காற்று விசாரணைகள் பூர்த்தியடைந்திராததன் காரணமாக ரூபா 18.3 மில்லியன் அளவான நட்டம் குறித்த பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினரிடம் இருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

2018 ஒக்டோபர் 10 ஆம் திகதி மாகாண சபை கலைக்கப்படுவதற்கு முன்னர் அரசியல் வாத அதிகாரிகளுக்கு ஒதுக்கப்பட்டிருந்த டபிள் பேர்பஸ் கப் வண்டிக்கு 2014 திசெம்பர் 30 ஆம் திகதி நேர்ந்த விபத்திற்கு உரித்தாக ரூபா 6.0 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 3.96 மில்லியன் தொகை காப்புறுதிக் கம்பனியின் மூலம் மீளளிக்கப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 2.06 மில்லியன் தொகை குறித்த பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினரிடம் இருந்து 2023 ஆகஸ்ட் 08 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | |
|---|---|
| வாகனக் கட்டுப்பாடு | மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தாலும் இலத்திரனியல் வருமான அனுமதிப்பத்திர வழங்கல் முறைமையின் மூலம் 288 வாகனங்களின் பதிவு தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் படி, வடமேல் மாகாண சபையின் நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த 38 வாகனங்கள் மாகாண சபையின் நிறுவனத்தின் பெயரில் இருக்கவில்லை. |
| தனியார் பெயரில் பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் | வடமேல் மாகாண சபையின் கமநலத் திணைக்களத்தில் பயன்படுத்தப்படும் 03 வாகனங்கள் தனியார் பெயர்களில் பதிவு செய்யப்பட்டிருந்தன. |
| கலா மன்றத்தின் கேட்போர் கூட நிர்மாணிப்பு | கலா மன்றத்தின் கேட்போர் கூட நிர்மாணிப்பிற்காக 2017 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை ரூபா 209.7 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் இச் செயற்திட்டம் இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. |
| பற்றுச்சீட்டுக்களின் மூலம் குறித்த வகையில் முற்பணங்களை அறவிட்டிராமை | வடமேல் மாகாண சபையும் குருநாகல் மாநகரசபையும் இணைந்து நிர்மாணிக்கப்பட்ட ஒப்பந்தப் பெறுமதி ரூபா 973.6 மில்லியன் பெறுமதியான ஆறு மாடிக் கட்டிட நிர்மாணிப்புச் செயற்திட்டத்திற்காக ஒப்பந்ததாரருக்கு 2020 திசெம்பர் 24 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த முற்பணத் தொகை ரூபா 185.1 மில்லியனாகும். குாசாக வழங்கப்படும் எட்டாவது பற்றுச்சீட்டு வரையான பெறுமதி ரூபா ……….மில்லியனான போதிலும் |

அறவிடப்பட்டிருந்த முற்பணத் தொகை ரூபா 24.2 மில்லியனாக மாத்திரம் இருந்தது.

| | |
|---|---|
| மிகைக்கட்டணம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை | 1996 ஆம் ஆண்டு முதல் 2014 வரையான காலப்பகுதியின் போது வடமேல் மாகாணத்தின் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் நடவடிக்கைகள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களால் விடுக்கப்பட்டிருந்த ரூபா 3.3 மில்லியன் கூட்டுத்தொகையான 07 மிகைக்கட்டணச் சான்றிதழ்கள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் வடமேல் மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் பொறுப்பு வாய்ந்த தரப்பினரால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| விரலடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட்டிராமை | 2017 ஏப்ரல் 09 ஆம் திகதிய 03/2017 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் சகல அரச உத்தியோகத்தர்களும் தமது கடமை நிலையத்திற்கு வருகையையும் வெளிச்செல்லலையும் விரலடையாளப் பதிவு இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும், மாகாண சபையின் எந்தப் பாடசாலையிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| காணி உரிமை உறுதிப்படுத்தியிராமை | மாகாண கல்வி திணைக்களத்திற்கு உரித்தான 03 வலயக் காரியாலயங்களுக்கு உரித்தான 364 காடசாலைகளில் அவ் வளாகத்தின்/ காணியின் உரிமையை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக 2024 பெப்ரவரி 20 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| இடமாற்ற நடைமுறையை முறைப்படி செயற்படுத்தியிராமை | வடமேல் மாகாணத்தின் அதிபர் தரத்திலானோரின் இடமாற்ற நடைமுறையின் படி பாடசாலைகளில் ஒரே பாடசாலையில் 5 வருடங்களுக்கு மேலாக அதிபர் சேவைக் காலத்துடன் அதிபர்கள் இடமாற்றம் செய்யப்பட வேண்டிய போதிலும் இடமாற்றக் கொள்கை முறைப்படி செயற்படுத்தப்பட்டிராததன் காரணமாக குருநாகல் வலயத்தில் மாத்திரம் 05 வருடங்களிற்கும் 14 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலமாக ஒரே பாடசாலையில் கடமையாற்றியிருந்த 72 அதிபர்கள் காணப்பட்டனர். |
| கூட்டுறவு நடவடிக்கைகள் | 04 கூட்டுறவு உதவி ஆணையாளர் பிரிவுகளிற்கு உரித்தான 677 பதிவு செய்யப்பட்ட சங்கங்களால் கூட்டுறவு நிதியத்திற்கு நிலுவையான பங்களிப்புத் தொகையான ரூபா 113.5 மில்லியன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மாஹோ மற்றும் குளியாப்பிட்டிய உதவி ஆணையாளர் காரியாலயங்களுக்கு உரித்தான முறையே 287 கோவைகளும் 93 கோவைகளும் கடன் மற்றும் பல்வேறு சிக்கல்களுக்கு உரித்தான ரூபா 50.1 மில்லியன் பெறுமதியான மொத்தம் 380 கோவைகள் 01 மாதத்தில் இருந்து 31 மாதங்கள் வரையான கால தாமதத்தில் நிலவிய போதிலும் தீர்மானம் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் 04 கூட்டுறவு உதவி ஆணையாளர் பிரிவுகளில் உள்ள 61 கூட்டுறவுச் சங்கங்களில் 149 பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 88.4 மில்லியன் தொகை மோசடி, பணப் பற்றாக்குறை 2023 ஆம் ஆண்டின் இறுதி வரை அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் இதற்கு உரித்தான விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதில் நலிவான நிலை காணப்பட்டது.

| | |
|---|---|
| காணி நிர்வாக நடவடிக்கைகள் | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை வருமான அறிக்கையின் படி அன்றைய நாளில் 55 நிறுவனங்களிடமிருந்தும் நபர்களிடமிருந்தும் அறவிடப்பட வேண்டிய நிலுவையாகக் காணப்பட்ட நீண்டகாலக் குத்தகைப் பெறுமதி ரூபா 107.9 மில்லியனாகக் காணப்பட்டது. |

குருநாகல் மல்கடுவாவ 01 ஏக்கர் 4.3 பேர்ச், தனியார் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு 30 வருட காலத்திற்காக நீண்ட கால குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் குத்தகை உடன்படிக்கையின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிராததன் காரணமாக காணியை மீள ஒப்படைக்குமாறு நீதிமன்றம் தீர்மானமொன்றை வழங்கியிருந்தது. தனியார் நிறுவனம் ஒன்றால் காணியின் உரிமை பிரதேச செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டிராததுடன் குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்பட்ட நாள் முதல் குத்தகைத் தொகையும் இதன் மீதான வட்டித் தொகையுமாக ரூபா 52 மில்லியன் அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்டது.

புத்தளம் பிரதேச செயலகப் பிரிவில் மனதீவு கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கு உரிய 29 ஏக்கது 10 பேர்ச் அளவிலான அரசாங்கக் காணி 1988 யூன் 29 ஆம் திகதி முதல் 30 வருட காலமாக தனியார் கம்பனி ஒன்றிற்கு நீண்டகாலக் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அத் தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த காணி அக் கம்பனியால் மாகாண காணி ஆணையாளரின் அங்கீகாரம் இன்றி 2008 யூன் 11 ஆம் திகதி வேறு தனியார் கம்பனிக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது.

| | |
|---|---|
| சுகாதார சேவை நடவடிக்கைகள் | வைத்தியசாலை சுகாதார தகவல் முகாமைத்துவ முறைமை (HHIMS) செயற்படுத்தப்படுவதற்காக தம்பதெனிய, கல்கமுவ மற்றும் நிகவெரடிய வைத்தியசாலைகளுக்காக வழங்கப்பட்டிருந்த 22 மடிக்கணனிகள் 20 குறியீட்டு வாசிப்பு உபகரணங்கள், 02 அச்சு இயந்திரங்கள், 04 ஸ்டிகர் அச்சு இயந்திரங்கள் மற்றும் 15 ஸ்டிகர் சுரள்கள் விளைவற்றுக் காணப்பட்டன. |
| சியம்பலன்கமுவ ஆரம்ப மருத்துவ | மருத்துவ சிகிச்சைப் பிரிவு மற்றும் உத்தியோகபூர்வ விடுதிக்காக ரூபா 18.6 மில்லியன் செலவில் 2018 ஆம் ஆண்டின் போது |

சிகிச்சைப் பிரிவு

நிர்மாணிக்கப்பட்ட சியம்பலன்கமுவ ஆரம்ப மருத்துவ சிகிச்சைப் பிரிவின் நடவடிக்கைகள் 2022 ஆம் ஆண்டின் மார்ச் 31 ஆம் திகதின ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், அங்கு பணியாற்றும் தலைமை மருத்துவ அதிகாரி 2023 சனவரி 06 ஆம் திகதி முதல் பயிற்சிக்காக அவ் இடத்தில் இருந்து விடுவிக்கப்படுவதுடன் அன்றைய நாள் முதல் நோயாளர்களின் சிகிச்சைக் சேவைகள் இடைநிறுத்தப்பட்டு அப் பிரிவு விளைவற்று மூடப்பட்டிருந்தது.

விளைவற்ற உபகரணங்கள்

செயற்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1.2 மில்லியன் பெறுமதியான 04 அவசர ட்ரொலி Emergency Trolley களும் 08 மருந்து ட்ரொலிகளும் 2024 மார்ச் வரை பகிர்ந்தளிக்கப்படாது 14 மாத காலமாக மாரவில வைத்தியசாலைக் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டன.

நாளாந்த வழமையான பணிக் காலத்திற்காக மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்படுதல்

குறித்த நாளாந்த பணிக் காலத்திற்குரிய பகல் ஓய்வு நேரத்திற்கான 30 நிமிட காலம் உள்ளடங்கலாக நண்பகல் 12.00 மணி முதல் பி.ப 1.00 மணி வரையான ஒரு மணித்தியாலத்திற்கு 2022 ஆம் 2023 ஆம் ஆண்டுகளுக்காக மேலதிக நேரக் கொடுப்பனவாக குருநாகல் மற்றும் புத்தளம் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயத்திற்கு ஈடுபடுத்தப்பட்ட முறையே 21 வைத்தியர்களுக்காக ரூபா 1.9 மில்லியனும், 11 வைத்தியர்களுக்காக ரூபா 1.2 மில்லியனுமாக மேலதிக நேரப் படிப்பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய பணம்

2023 ஆம் ஆண்டிற்கு உரித்தான 30 உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணமான ரூபா 275.3 மில்லியனும் 22 உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய முத்திரைக் கட்டணங்களான ரூபா 353.5 மில்லியன் தொகையும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்படுவதற்கு பிரதான செயலாளர் காரியாலயத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

விளைவற்ற உப்புக் களஞ்சியம்

கல்கமுவை அரசாங்க பண்ணையில் உள்ள 2022 ஆம் ஆண்டின் பெப்ரவரி 02 ஆம் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்ட ரூபா 3.6 மில்லியன் பெறுமதியான உப்புக் களஞ்சியம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டன.

வன்னிகம ஒருங்கிணைந்த பண்ணை வருமானமும் செலவினமும்

வன்னிகம ஒருங்கிணைந்த பண்ணை அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையத்தின் 2023 ஆம் ஆண்டின் மொத்த வருமானம் ரூபா 12.57 மில்லியனானதுடன் மொத்த மீண்டெழும் செலவினமும் மூலதனச் செலவினமும் முறையே ரூபா 34.01 மில்லியனாகவும் ரூபா 1.54 மில்லியனாகவும் இருந்தன. இதன் படி, மீளாய்வாண்டிற்கான மீண்டெழும் செலவினத்தையேனும்

ஈடுசெய்யக் கூடிய வகையில் போதிய வருமானத்தை பண்ணையால் உழைத்துக்கொள்ள இயலாதிருந்தது.

| | |
|---|---|
| சட்ட ரீதியான ஒதுக்கீடுகள் இன்றி படிப்பணம் செலுத்தப்படுதல் | வடமேல் மாகாண சுற்றாடல் அதிகாரசபையின் நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கு சட்ட ஒதுக்கீடுகள் இன்றி 2015 முதல் 2023 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கு நிறைவேற்றுப் படிப்பணமாக ரூபா 4.52 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், சட்ட ரீதியான ஒதுக்கீடுகள் இன்றி உதவிப் பணிப்பாளர் பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக 2018 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் 3 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 2.32 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. |
| சட்டங்கள், விதிகளுக்கு முரணான நியமனங்கள் | வடமேல் பிராந்திய வள அபிவிருத்தி அதிகாரசபை சாசனம் மற்றும் தாபன விதிக் கோவையில் குறிப்பிடப்பட்ட சட்டங்கள், விதிகளிற்கு மாறாக பிராந்திய வளங்களின் அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைத்துவப் பணிப்பாளர் பதவியின் பதில் கடமையாற்றுவதற்காக விவசாய அமைச்சின் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் நியமிக்கப்பட்டு 2017 யூன் 01 ஆம் திகதி முதல் 2023 நவம்பர் 30 ஆம் திகதி வரை ரூபா 1.57 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| முன்பள்ளி ஒழுங்குமுறை | வடமேல் மாகாணத்தின் சகல முன்பள்ளிப் பாடசாலைகளும் வடமேற்கு குழந்தைக் கல்வி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் பதிவுசெய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு வடமேல் மாகாண சபையில் செயற்படும் 2152 முன்பள்ளிகளில் 910 முன்பள்ளிகள் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. இதன் படி, வடமேல் மாகாணத்தில் உள்ள முன்பள்ளிகளின் எண்ணிக்கையில் 42 சதவீதமானவை நிறுவனத்தின் ஒழுங்குமுறைகளிற்கு உட்பட்டிருக்கவில்லை. |
| பெறவேண்டிய போக்குவரத்துக் கட்டணம் | 2013 ஆம் ஆண்டு முதல் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு உரித்தாக வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைக்குக் கிடைக்கப்பெற வேண்டிய மாதாந்த ஓட்டஅட்டவணைப் பத்திரக் கட்டணமான ரூபா 13.49 மில்லியனும் தாமதக் கட்டணமான ரூபா 2.71 மில்லியனும் அறவிடப்படுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| பயணிகள் சேவை அனுமதிப்பத்திர ஒப்படைப்பு | பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தை வேறொரு நபருக்கு ஒப்படைக்க இயலாததுடன் அவ்வாறு ஒப்படைக்கப்படின் அது செயலிழந்த அல்லது இரத்தாகும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 50.25 மில்லியன் பெறுமதியான 112 அனுமதிப்பத்திரங்கள் வேறு தரப்பினருக்கு ஒப்படைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் |

மேற்கொள்ளப்பட்டிருந்தன.

2011 ஆம் ஆண்டின் போது இரு சந்தர்ப்பங்களின் போது பத்திரிகை விளம்பரங்களின் மூலம் கேள்வி கோரப்பட்டு ரூபா 19.28 மில்லியன் பெறுமதியான 40 வீதி அனுமதிப்பத்திரங்கள் 05 வருட செல்லுபடிக் கால எல்லைக்காக வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அவ் அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடிக் கால எல்லை 2016 ஆம் ஆண்டுடன் முடிவுற்றதன் பின்னர் 2016 ஆம் 2021 ஆம் ஆண்டுகளின் போது மீள கேள்வி கோரப்பட்டமையால் ரூபா 38.57 மில்லியனிற்கு அண்மித்த தொகை உழைக்கப்படக் கூடியதாக இருந்த போதிலும் அந்த 40 அனுமதிப்பத்திரங்களோ அல்லது மீளக் கேள்வி எழுப்பப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## சப்ரகமுவ மாகாண சபை

| | |
|---|---|
| விரிவுரை மண்டபம் நிர்மாணிக்கப்படுதல் | கரபிஞ்ச விவசாயப் பயிற்சி நிலையத்தை வதிவிடப் பயிற்சி நிலையமாக ஆரம்பிக்கும் நோக்குடன் விவசாய அமைச்சால் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 27.6 மில்லியன் செலவிடப்பட்டு ஓர் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் விரிவுரை மண்டப நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிராததன் காரணமாக பயிற்சி நிலையத்தின் வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 2024 சனவரி வரையிலும் ஆரம்பிக்கப்படுவதற்கு இயலாதிருந்தது. |
| சமூக நலன்புரி உபகரணங்களின் பகிர்வு | 2021 நவாம்பர் மாத சமூக நலன்புரி அமைச்சால் கொள்வனவு செய்யப்பட்டு அங்கவீனமுற்றவர்களுக்கு பகிர்ந்தளிக்கப் படுவதற்காக சமூக சேவைப் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 2 மில்லியனான 143 கேட்போர் கூட உபகரணங்களும் 2023 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 5.5 மில்லியனான 44 ஊன்றுகோல்களும், 98 கொமர்ட் சக்கர நாற்காலிகளும், 04 சாதாரண சக்கர நாற்காலிகளும், 22 கொமர்ட் சக்கர நாற்காலிகளும், 84 நடைச் சட்டங்கள், 63 கைத்தாங்கிகள் மற்றும் 72 வாயு மெத்தைகள் 2024 மார்ச் 05 ஆம் திகதி வரையில் குறித்த தரப்பினர்களுக்கு வழங்கப்படாது களஞ்சியத்தில் காணப்பட்டது. |
| இணைய சுகாதார முகாமைத்துவ கணனித் தகவல் முறைமை | ஆரம்ப சுகாதார சேவைகள் அதிகாரமளிப்புச் செயற்திட்டத்தின் முக்கிய நோக்கமான இணைய சுகாதார முகாமைத்துவ கணனித் தகவல் முறைமையைச் செயற்படுத்துவதற்காக மாகாண சுகாதார அமைச்சால் 2021,2022 ஆம் 2023 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்ட 04 வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 9 மில்லியன் கூட்டுத்தொகையான 131 தொழில்நுட்ப உபகரணங்கள்2024 பெப்ரவரி 26 ஆம் திகதி வரையிலும் குறித்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| விளைவற்ற சொத்துக்கள் | தலைமை அமைச்சால் ரூபா 67 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டணம் செலுத்தும் வாட்டுடனான கட்டிடம் 2020 நவம்பர் 09 ஆம் திகதி கேகாலை ஆயுர்வேத வைத்தியசாலைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் 2024 சனவரி 18 வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது. மேலும் இக் கட்டிடத்தை மீள புனரமைப்புச் செய்ய வேண்டிய நிலைக்குக் கொண்டுவரப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| மிகையான இருப்பைக் கொண்டிருத்தல் | பிரதிப் பிரதம செயலாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலகத்தால் 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 38 மில்லியனிற்கு 970 தார் பீப்பாக்களும் ரூபா 5.3 மில்லியனிற்கு 120 கோலாஸ் பீப்பாக்களும் கொள்வனவு செய்யப்பட்டு 2023 மே மாதத்தின் போது நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன. அது வரையில் களஞ்சியத்தில் போதியளவான இருப்பு இருக்கையிலும் நிறைவேற்றுப் பொறியியல் அலுவலகங்களுக்கிடையே இருப்பு பரிமாற்றம் செய்யக் கூடிய இயலுமை இருந்த போதிலும் மீள இருப்பைக் கொள்வனவு செய்த காரணத்தால் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ரூபா 31 மில்லியன் பெறுமதியான 783.7 மில்லியன் தார் பீப்பாக்களும் ரூபா 5.3 மில்லியன் பெறுமதியான 120 கோலாஸ் பீப்பாக்களும் 07 மாத கால அளவில் களஞ்சியத்தில் மிகையான இருப்பாக வைத்துக்கொள்ளப்பட்டிருந்தன. |
| முறையான அங்கீகாரமற்ற காப்புறுதித் திட்டங்கள் | சப்ரகமுவ மாகாண சபையால் 2011 ஆம் ஆண்டு முதல் மாகாண சபை கலைக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டு வரையிலும் சகல உறுப்பினர்களுக்கும், மாகாண சபை கலைக்கப்பட்டதை அடுத்து ஆளுனர் மற்றும் தலைவருக்காக 02 காப்புறுதித் திட்டங்கள் அமைச்சரவைத் தீர்மானத்தில் செயற்படுத்தப்பட்டிருந்தன. இக் காப்புறுதித் திட்டங்களின் மூலம் வழங்கப்பட்டிருந்த காப்புறுதிக் காப்பு 1988 இன் 37 ஆம் இலக்க மாகாண சபை (சம்பளங்கள் மற்றும் படிப்பணக் கொடுப்பனவு) சட்டத்தின் 02 ஆம் பிரிவிற்கு இணங்கியிராததன் காரணமாக 2011 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான வருடாந்த தவணைப்பணமாக ரூபா 53.8 மில்லியன் சட்ட ரீதியான முறையில் அன்றி மாகாண சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. |

## கிழக்கு மாகாண சபை

| | |
|---|---|
| விளைவற்ற சொத்துக்கள் | 2021 ஆம் ஆண்டின் போது மாகாண விவசாய அமைச்சின் மூலம் சேதனப் பசளை உற்பத்திக்காக ரூபா 17.67 மில்லியன் நிலையான 30 துண்டாக்கும் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும், துண்டாக்கும் இயந்திரங்களை இயக்குவதற்காக நான்கு சக்கர உழவு இயந்திரங்கள் இன்மையால் எதிர்பார்க்கப்பட்ட பணியில் ஈடுபடுத்தப்பட்டிராததுடன் 02 வருட காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டன. |

| | |
|---|---|
| ஒதுக்கீடு உாயி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிராமை | சுத்துணவு நிகழ்ச்சித் திட்டம், மாகாண விசேட அபிவிருத்தி மானிய பணி, பொதுக் கல்வி நவீனமயமாக்கல் செயற்திட்டப் பணிகள் மற்றும் (UNICEF) இன் செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக மாகாணக் கல்வித் திணைக்களங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 96.97 மில்லியன் தொகை 2022 ஆம் 2023 ஆம் ஆண்டுகளின் போது எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்ட நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படாது அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு முற்பணம் வழங்கப்படுவதற்காகவும் பொது வைப்பு மீதிகளை ஈடுசெய்வதற்காகவும் பயன்படுத்தப்பட்டிருந்தன. |
| சுற்றுலாக் கவர்ச்சிமிக்க பகுதிகள் | இம் மாகாணத்தில் சுற்றுலாக் கவர்ச்சிமிக்க 48 இடங்கள் இனங்காணப்பட்டுள்ள போதிலும், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2016 மார்ச் 18 ஆம் திகதிய 1985∴73 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் ஐஏ(ஏ) பிரிவின் மூலம் 10 பிரதான செயற்பணிகள் மேற்கொள்ளப்படுவதற்கோ அல்லது கடந்த 05 வருடங்களின் போது தமது வருமானத்தை உழைப்பதற்கோ செயற்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை பணியகத்தின் பல்வேறு நடவடிக்கைகளிற்காக ரூபா 128.40 மில்லியன் தொகை மாகாண நிதியக் கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது. |

## ஊவா மாகாண சபை

| | |
|---|---|
| பண்டாரவளை புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் காட்சிக் கூடம் மற்றும் உணவகம் ஒன்றை நிர்மாணித்தல் | ஊவா மாகாண விளையாட்டுக்கள் மற்றும் இளைஞர் விவகார, சுற்றுலா, போக்குவரத்து, கலாச்சாரம் மற்றும் புடவைக் கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சால் ஊவா மாகாணத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்காக பண்டாரவளை புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் காட்சிக் கூடம் ஒன்றையும் உணவகம் ஒன்றையும் 03 கட்டங்களின் கீழ் நிர்மாணிப்பதற்காகத் திட்டமிடப்பட்டிருந்தது. அதன் முதலாம் கட்டத்தின் கீழ் ரூபா 2.232 மில்லியன் செலவில் காட்சிக் கூடம் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2023 நவம்பர் 20 ஆம் திகதி வரையிலும் காட்சிக் கூடத்திற்கு வருவதற்கான படிகள் பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள இயலாத நிலையில் இருந்த போதிலும் மதிப்பீட்டின் படி, படிகளுக்கான மொத்தப் பெறுமதி ரூபா 0.552 மில்லியனும் செலுத்தப்பட்டிருந்தன. பின்னர் செயற்திட்ட நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தமையால் செயற்திட்டப் பகுதி பற்றைகள் வளர்ந்து காணப்பட்டதுடன் செலவிடப்பட்ட பணத்தொகை விளைவற்றுக் காணப்பட்டது. |
| விளைவற்ற குறைவான | ஆரம்ப சுகாதார சேவைகள் முறைமையை உறுதிப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டின் போது கொள்வனவு |

| | |
|---|---|
| பயன்பாடுடைய சொத்துக்கள் | செய்யப்பட்டிருந்த ரூபா 1.191 மில்லியன் பெறுமதியான செயற்திட்ட உபகரணங்கள் (Treadmill sprit fitness) 2023 யூலை 04 ஆம் திகதியளவிலும் பதுளைப் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயக் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டது.<br><br>முன்னைய தேவைப்பாடுகள் இனங்காணப்படாது பதுளை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயத்தால் கொள்வனவு செய்யப்பட்டு வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1.457 மில்லியன் கூட்டுத்தொகையான உபகரணங்கள், ……………….. காரணத்தால் வைத்தியசாலையால் பயன்படுத்தப்பட்டிராததுடன் பதுளை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயத்திற்கு மீள ஒப்படைக்கப்பட்டிருந்தன.<br><br>2019 முதல் 2023 வரையான காலப்பகுதிக்கு உரித்தாக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 11.082 மில்லியன் பெறுமதியான மருத்துவ மற்றும் 04 ஏனைய காரியாலய உபகரணங்களுக்கு உரிய 99 அலகுகள் 2023 யூலை 04 ஆம் திகதி வரையிலும் எதிர்பார்க்கப்பட்ட நோக்கிற்காக பயன்படுத்தப்படாது, விளைவற்றுக் காணப்பட்டன.<br><br>2022 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டு வெல்லவாய ஆதார வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 11.090 மில்லியனான 06 மருத்துவ உபகரணங்கள் கணக்காய்வுத் தினமாகிய 2023 யூலை 18 ஆம் திகதி வரையிலும் மருந்துக் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டன. |
| எதிர்பார்க்கப்பட்ட நலனைப் பெற்றிராமை | ஊவா மாகாண வீதி அமைச்சால் செயற்படுத்தப்பட்டிருந்த ரூபா 4.134 மதிப்பீட்டுப் பெறுமதியான கமேவெல நீர்த் திட்ட முறைமையை மறுசீரமைப்பதற்கான செயற்திட்டம் 2021 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு ஒக்டோபர் 31 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட இருக்கையில் 2024 சனவரி 23 ஆம் திகதி வரையிலும் கால்வாய்கள் வெட்டப்பட்டு நீர்க்குழாய்கள் அமைக்கப்படுவது மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br><br>விவசாயத்திற்காக சேதனப் பசளை மற்றும் ஏனைய சேதன உள்ளீட்டு உற்பத்திகளை மாகாண மட்டத்தில் உற்பத்தி செய்வதனை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஊவா மாகாண சசபையால் விவசாய இராஜாங்க அமைச்சின் ஒதுக்கீடு ரூபா 70.7 மில்லியனும், மாகாண விடயம் சார்ந்த ஒதுக்கீடு (PSDG) ரூபா 21.24 மில்லியனுமாக ரூபா 91.94 கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது. நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சேதனப் பசளை உற்பத்தியை மேம்படுத்துவதற்காக ரூபா 15,000 ஆகக் கூடுதலான அளவிற்கு உட்பட்டு நிதி உதவி உள்ளடங்கலான ஓர் பொதி வழங்கப்படுவதற்காக மொனறாகலை மாவட்டத்தின் 1686 நலனாளிகளும் பதுளை மாவட்டத்தின் 2268 நலனாளிகளும் |

தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். எவ்வாறெனினும், பொதியில் வழங்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த 800,000 கி.கிராம் எப்பாவெல ரொக் பொஸ்பேட் வழங்கப்பட்டிராததன் காரணமாக திட்டமிடப்பட்டவகையில் பொஸ்பேட்டுடனான 26,000 மெட்ரிக் தொன் சேதனப் பசளை உற்பத்தியை மேற்கொள்ள இயலாதிருந்தது. செயற்திட்டத்தின் கீழ் செலவிடப்பட்டிருந்த ரூபா 32.351 செலவினம் விளைவற்ற செலவினமாகி இருந்தது. 2024 மார்ச் 15 ஆம் திகதி வரையிலும் நிகழ்ச்சித்திட்டச் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

| | |
|---|---|
| பாடசாலைச் சீருடைகள் | ஊவா மாகாண 04 வலயக் கல்விக் காரியாலயங்கள் 2021 ஆம் 2022 ஆம் ஆண்டுகளின் போது பாடசாலை மாணவர்களுக்காக தேவையான பாடசாலைச் சீருடைகள் கட்டளையிடுகையில் அளவைச் சரியாக மதிப்பீடு செய்யாது கட்டளையிடப்பட்டதன் காரணமாக 47 வகையான ரூபா 2.469 மில்லியன் பெறுமதியான 6424 சீருடைத் தொகுதிகள் களஞ்சியங்களிலும் அபிவிருத்திப் பிரிவிலும் குவித்து வைக்கப்பட்டிருந்தன. |
| ஆசிரிய பற்றாக்குறையும் மிகையும் | ஊவா மாகாண கல்வித் திணைக்களத்திற்கு உரித்தான 06 வலயங்களில் முறையான ஆசிரிய சமநிலை மேற்கொள்ளப்பட்டிராததன் காரணமாக 382 கிராமிய பாடசாலைகளின் 2214 ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவியதுடன் 165 நகர பாடசாலைகளில் 583 ஆசிரியர்கள் மிகையாகக் காணப்பட்டது. மிகையாக உள்ள ஆசிரியர்களுக்காக 2022 ஜனவரி 01 முதல் 2023 திசெம்பர் 31 வரை சம்பளமாக ரூபா 549.754 செலுத்தப்பட்டிருந்தது. |
| விளைவற்ற பதவியணி நியமிக்கப்படல் | ஊவா மாகாணத்தில் ஆய்வு கூடமொன்று இல்லாத 27 பாடசாலைகளுக்காக 32 ஆய்வுகூட உதவியாளர் பதவியினரும், நூலகங்கள் இல்லாத 14 பாடசாலைகளுக்காக நூலக உதவியாளர்களும் நியமிக்கப்பட்டிருந்தனர். 2022 சனவரி 01 ஆம் திகதி முதல் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியின் போது இவ் விளைவற்ற பதவியணிக்காக சம்பளமாக ரூபா 28.621 செலுத்தப்பட்டிருந்தது. |

## வட மாகாண சபை

| | |
|---|---|
| பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் விசேட அபிவிருத்திப் பிரிவு | நெதர்லாந்து அரசாங்கத்தால் ரூபா 04 பில்லியன் செலவில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள், தளபாடங்களுடன் நிர்மாணிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்ட கட்டிடம் உள்ளடங்கலாக ஆதனங்கள், விசேட அபிவிருத்திப் பிரிவிற்கு தேவையான தாதிகள், மருத்துவர்கள் மற்றும் குறித்த பதவியணியினர் வைத்தியசாலைக்கு ஈடுபடுத்தப்பட்டு சுகாதார சேவை வழங்கப்படுவதற்காக கடந்த 01 வருட காலமாக நடவடிக்கை எடுத்திராததன் காரணமாக மாகாண சபைக்கு மருத்துவ உபகரணங்களின் உத்தரவாதக் காலத்தின் போது நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு இயலாத |

நிலை ஏற்பட்டிருந்தது.

| | |
|---|---|
| வாகனங்கள் ஏலவிற்பனை செய்யப்பட்டிராமை | 2023 ஆம் ஆண்டின் போது 03 மாகாண அமைச்சுக்களாலும் 05 திணைக்களங்களாலும் ஏலவிற்பனை செய்யப்படுவதற்கு குறித்த கிரயம் ரூபா 16.970 மில்லியனான 56 மோட்டார் வாகனங்கள் குறித்த நிறுவனங்களின் நிதி நிலைமைக் கூற்றுக்களில் இருந்து அகற்றப்பட்டிருந்த போதிலும் ஏலவிற்பனை செய்யப்பட்டிருக்கவில்லை. |
| பெறுகை உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிராமை | பெறுகை வழிகாட்டல் நடைமுறைகளுக்கு மாறாக உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படாது முல்லைத்தீவு பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தாலும் சுதேச மருத்துவத் திணைக்களத்தாலும் ரூபா 33.026 மில்லியனான 18 வகை சமைத்த உணவும் உலர் உணவுப் பொருட்களும் பெறப்பட்டிருந்தன. |
| தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் ஸ்தாபிக்கப்படுதல் | 2015 யூலை 14 ஆம் திகதிய வட மாகாண நிதிச் சுற்றறிக்கை PF/06/2015 இற்கு மாறாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையால் ஆய்வுகூடத்திற்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்கையில் ரூபா 0.5 மில்லியனிலும் கூடுதலான ரூபா 35.955 ஆன 15 பெறுகைகளுக்காக தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு ஸ்தாபிக்கப்படாது மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| தவணைப் பரீட்சைகளுக்காக அதிகளவில் பணம் அறவிட்டிருத்தல் | 2023 ஆம் ஆண்டின் போது மாகாண கல்வித் திணைக்களத்தின் மூலம் 06 முதல் 11 வருடங்கள் வரை மாணவர்களுக்கு 2022 ஆம் ஆண்டிற்காக நடாத்தப்பட்ட இறுதித் தவணைப் பரீட்சைக்காக ரூபா 18.950 மில்லியன் மாணவர்களிடம் இருந்து அறவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 13.926 மில்லியன் செலவிடப்பட்டதை அடுத்து மாணவர்களிடம் இருந்து அறவிடப்பட்ட மேலதிக பணமான ரூபா 5.023 மில்லியன் மாகாண கல்வி திணைக்களத்தில் வைப்பிலிடப்பட்டிருந்தது. |
| உரித்தற்ற செலவினங்கள் | வவுனியா பொது வைத்தியசாலை வளாகத்தில் பொருத்தப்பட்டிருந்த தொலைத் தொடர்புக் கோபுரங்கள் இரண்டிற்காக வெவ்வேறு துணை மானிகள் பொருத்தப்பட்டிருந்த போதிலும் குறித்த நிறுவனங்களிடம் இருந்து அறவிடப்படாது மின் பட்டியல்கள் வவுனியா மாவட்ட வைத்தியசாலையாலேயே செலுத்தப்பட்டிருந்தன. இவ்வாறே, 2016 பெப்ரவரி 01 ஆம் திகதி முதல் 2022 சனவரி 31 வரையான காலப்பகுதியின் போது ரூபா 4.538 மில்லியன் அரசாங்க வருமானம் வவுனியா மாவட்ட நோயாளிகளின் நலன்புரி சங்கத்திற்கு மாற்றப்பட்டிருந்தன. |
| வருடாந்த இடமாற்றக் கட்டளைகள் செயற்படுத்தப்பட்டிராமை | வட மாகாண சாரதி சேவை உத்தியோகத்தர்களுக்காக 2017 ஆம் ஆண்டின் பின்னர் வருடாந்த இடமாற்றக் கட்டளைகள் செயற்படுத்தப்பட்டிராமையால் சில திணைக்களங்களின் |

| | |
|---|---|
| | சாரதிகளுக்கு 06 முதல் 19 வருடங்கள் வரை தொடர்ந்து கடமையாற்றுவதற்கு வழங்கப்பட்டிருந்தது. |
| படிப்பணம் மேலதிகமாகச் செலுத்தப்பட்டமை | பாடசாலை வகைப்படுத்தல் சுற்றறிக்கையின் படி, ஆசிரியர்களுக்கு உரித்தான படிப்பணம் வழங்கப்படாது 2019 முதல் 2023 ஆம் ஆண்டு வரை திவுசார் கல்வி வலயங்களில் உள்ள ஆசிரியர்களுக்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 10.230 மில்லியன் தொகையான படிப்பணம் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| ஆளுனரின் உணவுப் படிப்பணம் | 2018 ஒக்டோபர் 12 ஆம் திகதிய PS/CSA/11-18 ஆம் இலக்க சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம், ஆளுனருக்கு உணவு தொடர்பாக எந்தவித படிப்பணமும் குறிப்பிடப்பட்டிராத போதிலும் 2021 திசெம்பர் முதல் 2023 மே வரையான காலத்திற்கு உணவிற்காக ரூபா 4.037 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. |
| உத்தியோகபூர்வ விடுதி | ஆளுனரின் கொழும்பில் உள்ள உப அலுவலகக் கட்டிடத்தின் மாதாந்த வாடகை பிரதான மதிப்பீட்டாளரால் மாதம் ஒன்றிற்கு ரூபா 0.100 மில்லியனாக மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், இம் மதிப்பீட்டிற்கு மாறாக மாதாந்தம் ரூபா 0.080 மில்லியன் படி அதிகமாகச் செலுத்தப்பட்டமையால் மாகாண நிதியத்திற்கு ரூபா 1.240 தொகையான நிதி நட்டம் ஏற்பட்டிருந்தது. |
| கணனி மற்றும் உபகரணங்கள் திருத்தப்பட்டிராமை | வடமாகாண பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டிருந்த 1,316 மேசைக் கணனிகளும், 101 மடிக்கணனிகளும், 186 டப் உபகரணங்களும் 91 மல்டி பேர்பர்ஸ் புரொஜெக்டர்களும் 38 வைட் போட்களும் உடைந்திருந்த போதிலும் அவை திருத்தப்பட்டு பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| ஆசிரிய வளங்கள் பகிர்ந்தளித்தல் | வட மாகாண கல்வித் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆசிரியர் குழுவின் கணக்காய்வின் போது வடமாகாண கல்வி திணைக்களத்தின் ஆசிரிய வளங்கள் அனைத்தும் மாணவர்களுக்கு பயன்படும் வகையில் ஆக்கபூர்வமாக சமமாக பகிரப்பட்டிராமையால் 13 வலயங்களில் 560 மிகையும் 439 பற்றாக்குறையும் நிலவுவது அவதானிக்கப்பட்டது. |

## வடமத்திய மாகாண சபை

| | |
|---|---|
| நீண்ட கால குத்தகை | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு வடமத்திய மாகாண 24 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு உரித்தாக 2,474 நீண்ட கால காணி அனுமதிப்பத்திர உரிமையாளர்களிடம் இருந்து நீண்ட கால காணி அனுமதிப்பத்திரக் கட்டணமான ரூபா 398.06 மில்லியன் நிலுவையாகக் காணப்பட்டது. |

**ஓய்வூதியம் நலனாளிகளுக்குச் செலுத்தப்பட்டிராமை**

2023 ஆம் ஆண்டின் இறுதியில் வட மத்திய மாகாண கூட்டுறவு சேவை ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன் திட்டத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய ரூபா 27.23 மில்லியன் தொகையான ஓய்வூதியம் குறித்த நலனாளிக்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**திரிபோஷ பகிர்வு**

அநுராதபுர பிரதேச சுகாதார சேவை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் நலனாளிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படுவதற்காக 2023 முதல் அரையாண்டிற்கு உரித்தான காலப்பகுதிக்காக இலங்கை திரிபோஷ கம்பனியில் இருந்து வழங்கப்பட்டிருந்த ரூபா 26 மில்லியனான திரிபோஷ இருப்பில் ரூபா 1.1 மில்லியனான 2310 திரிபோஷ பொதிகள் காணாமற் போயிருந்தன. மேலும், ரூபா 23.5 மில்லியனான 52,500 திரிபோஷ பொதிகள் அநுராதபுரம் புகையிரத நிலையத்தில் புகையிரத வகனிற்குள் 02 மாதங்களிற்கு மேலான காலமாக விடுவிக்கப்படாது வைத்துக்கொள்ளப்பட்டதன் காரணமாக தாமதக் கட்டணமாக ரூபா 1.08 மில்லியன் தொகை புகையிரதத் திணைக்களத்திற்கு செலுத்த நேரிட் டிருந்தது.

**வேலை ஆரம்பிக்கப்பட்டிராமையால் முற்பணத்தை மீளப் பெற்றுக்கொள்ளல்**

2017 ஆம் ஆண்டின் போது …………… பலுகஸ்தமன மஹா வித்தியாலயத்திற்காக கேட்போர் கூடமொன்றின் நிர்மாணிப்பிற்காக நிர்மாணிப்புக் கம்பனி ஒன்றுடன் ரூபா 542 மில்லியன் பெறுமதிக்கு ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்தது. ரூபா 100 மில்லியனான வேலை ஆரம்பிப்பு முற்பணத் தொகை ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் குறித்த பணி ஆரம்பிக்கப்பட்டிராததுடன் செலுத்தப்பட்ட முற்பணத் தொகை மீள அறவிடப்படுவதற்கு 2023 திசெம்பர் 31 வரையிலும் இயலாதிருந்தது.

**ஹபரண சுற்றுலா தகவல் மைய நிர்மாணிப்பு**

ஹபரண சுற்றுலா தகவல் மைய நிர்மாணிப்புச் செயற்திட்டத்திற்காக ரூபா 598 மில்லியன் பெறுமதிக்கு தனியார் கம்பனி ஒன்றுடன் ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் 2017 செப்தெம்பர் 27 ஆம் திகதி ரூபா 119.6 மில்லியன் வேலை ஆரம்பிப்பு முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், தகவல் மைய நிர்மாணிப்பு இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் அச் சந்தர்ப்பம் வரையிலும் செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 369 மில்லியனாகக் காணப்பட்டது. நிர்மாணிப்புகள் இடைநிறுத்தப்பட்டு 07 வருடங்களுக்கு மேலான காலம் கடந்திருந்த போதிலும் ரூபா 45.1 மில்லியன் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த முற்பணத் தொகை 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**வட மத்திய மாகாணத்தின் மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் பகுப்பாய்வு**

மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட விபரங்களின் படி, தேசிய மட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்காக நடாத்தப்பட்ட பரீட்சைகளுக்குத் தோற்றிய வட மத்திய மாகாண மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்கையில் பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(அ) க.பொ.த. (சா.த) பரீட்சைப் பெறுபேறுகளின் படி 2017 ஆம் ஆண்டு வரை 06 ஆம் இடத்தைத் தக்கவைத்த வட மத்திய மாகாணம் 2021 ஆம் 2022 ஆம் ஆண்டுகளின் போது 09 ஆவது (இறுதி) இடத்தை அடைந்திருந்தது.

(ஆ) க.பொ.த. (உ.த) பரீட்சைப் பெறுபேறுகளின் படி 2017 ஆம் ஆண்டின் போது 08 ஆம் இடத்தைத் தக்கவைத்த வட மத்திய மாகாணம் 2021 ஆம் 2022 ஆம் ஆண்டுகளின் போது 09 ஆவது (இறுதி) இடத்தை அடைந்திருந்தது.

(இ) 2021 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின் போது 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொள்ளல், ஏனைய மாகாண பெறுபேறுகளுடன் ஒப்பிடுகையில் வட மத்திய மாகாணத்திற்கு முறையே 5,6,6 ஆவது இடம் கிடைக்கப்பெற்றிருந்தது. இவ்வாறு 100 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்களின் சதவீதம் கடந்த 03 வருடங்களின் போதும் 50 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**அரசாங்க நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டம்**

அரசாங்க நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 43 மில்லியன் உணவு ஆணையாளர் திணைக்களத்தினால் வட மத்திய மாகாண கூட்டுறவுத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அத் தொகையில் வரையறுக்கப்பட்ட அநுராதபுர மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்திற்கு 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 33 மில்லியன் கடனாக வழங்கப்பட்டிருந்ததுடன் 2024 பெப்ரவரி 26 ஆம் திகதி வரையிலும் இதில் ரூபா 27.65 மில்லியன் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை. அச் சங்கங்களில் இருந்து அறவிடப்பட வேண்டிய கடன் தொகை அறவிடப்பட்டிராத காரணத்தால் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தால் கடன் வழங்கும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டு எஞ்சிய தொகையான ரூபா 15.35 தொகை பொது வைப்புக் கணக்கில் வைப்பிலிடப்பட்டிருந்தமையால் மேற்குறித்த நிகழ்ச்சித்திட்டங்களின் நோக்கமான “திறந்த சந்தையில் அரிசிப் பற்றாக்குறை ஏற்படுவதைத் தடுத்தல் மற்றும் அரிசி விலைக் கட்டுப்பாடு” எனும் நோக்கங்கள்

எய்தப்பட்டிருக்கவில்லை.

# உள்ளூராட்சி அதிகாரசபைகள்

இலங்கையில் உள்ளூராட்சி நடவடிக்கைகள், 341 உள்ளூராட்சி அதிகாரசபைகளுடாக செயற்படுத்தப்படுவதுடன் அவ் உள்ளூராட்சி அதிகாரசபைகள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 252 ஆம் அதிகாரத்தின் மூலம் செயற்படுத்தப்படும் 28 மாநகர சபைகளையும், நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 255 ஆம் அதிகாரத்தின் மூலம் செயற்படுத்தப்படும் 37 நகர சபைகளையும், 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற 276 பிரதேச சபைகளையும் உள்ளடக்கி உள்ளது. இவ் உள்ளூராட்சி அதிகாரசபைகளில் 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் மற்றும் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயங்கள் தொடர்பான பொழிப்பு பின்வரும் அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

| உள்ளூராட்சி அதிகாரசபைகளின் வகை | நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சபைகளின் எண்ணிக்கை | 2024 பெப்ரவரி 28 ஆந் திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்த சபைகளின் எண்ணிக்கை | கணக்காய்வு அறிக்கை விநியோகித்த சபைகளின் எண்ணிக்கை | 2024 ஆகஸ்ட் 15 இல் உள்ளவாறு விநியோகிக்கப்பட்ட அறிக்கைகளின் பிரகாரம் கணக்காய்வு அபிப்பிராயம் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | முனைப்பழியற்ற அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | மறுப்பு அபிப்பிராயம் | பாதகமான அபிப்பிராயம். |
| மாநகர சபைகள் | 28 | 24 | 24 | 0 | 20 | 3 | 1 |
| நகர சபைகள் | 37 | 37 | 37 | 0 | 34 | 1 | 2 |
| பிரதேச சபைகள் | 276 | 276 | 276 | 8 | 256 | 6 | 6 |
| மொத்தம் | **341** | **337** | **337** | **8** | **310** | **10** | **9** |

அட்டவணை இல. 2.42 – நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல் மற்றும் கணக்காய்வு அபிப்பிராயம் (களுத்துறை, கேகாலை, புத்தளம் மற்றும் வவுனியா மாநகர சபைகளின் 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## இறை வரி, ஆதன வாடகை, அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் ஏனைய வருமானங்களை அறவிடுதல்.

2023 ஆம் ஆண்டின் போது மேற்குறிப்பிடப்பட்ட உள்ளூராட்சி அதிகாரசபைகளின் இறை வரி, ஆதன வாடகை, அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் ஏனைய வருமானங்களுக்காக பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 29,095 மில்லியனாக இருந்ததுடன் இது தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்பட்டுகள்ளது.

| உள்ளூராட்சி அதிகாரசபைகளின் வகை | இறை வரி | வாடகை | அனுமதிப்பத்திரக் கட்டணம் | ஏனைய வருமானம் | மொத்த வருமானம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| மாநகர சபைகள் | 4,480 | 1,700 | 469 | 5,128 | 11,777 |
| நகர சபைகள் | 1,336 | 824 | 91 | 1,424 | 3,675 |
| பிரதேச சபைகள் | 1,903 | 2,908 | 693 | 8,139 | 13,643 |
| மொத்தம் | 7,719 | 5,432 | 1,253 | 14,691 | 29,095 |

அட்டவணை இல. 2.43 – உள்ளூராட்சி அதிகாரசபைகளின் இறைவரி, ஆதன வாடகை, அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மற்றும் ஏனைய வருமானங்கள்

## கணக்காய்வு அவதானிப்புகள்

2023 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளுராட்சி அதிகாரசபைகளிற்குக் கிடைக்க வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 13,709 மில்லியன் ஆக இருந்ததுடன் வரியை அறவிடுவதற்காக சட்ட ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை, வாடகை வருமானத்தை அறவிடுவதற்காக வாடகை உடன்படிக்கைகளின் நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை, நிலுவை வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணங்களை அறவிடுவதற்காக வழக்குகள் தொடரப்பட்டிராமை மற்றும் ஏனைய வருமானங்களை அறவிடுவதற்காக சட்ட ஏற்பாடுகள், துணைச் சட்டங்கள் மற்றும் உடன்படிக்கைகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை இதற்கான காரணங்களாகியிருந்தன. இது தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

**இறை வரி அறவிடப்படாமை**

உள்ளுராட்சி அதிகாரசபைகளில் 05 முதல் 10 வருட காலமாக நிலவும் இறை வரி மதிப்பீட்டிலான தாமதங்கள், அபிவிருத்தி அடைந்த பகுதிகளை இனங்கண்டு இறைவரி அறவிடப்பட்டிராமை மற்றும் அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்களை வழங்கியதன் பின்னர் இணக்கச் சான்றிதழ் விநியோகிக்கப்பட்டு வரித்திருத்தம் செய்யப்பட்டிராத காரணத்தால் மாகாண உள்ளுராட்சி அதிகாரசபைகளுக்கு அறவிடப்பட வேண்டிய பாரியளவு இறைவரித் தொகை அறவிடப்படாதிருந்தது.

**பெறவேண்டிய வாடகை வருமானம்**

உரிய நேரத்தில் வாடகை மதிப்பிடப்பட்டிராமை, மதிப்பிடப்பட்ட குத்தகை வாடகையை அறவிடுவதிலான தாமதம் மற்றும் குத்தகை உடன்படிக்கையை புதுப்பிக்காத காரணத்தால் பல உள்ளுராட்சி அதிகாரசபைகளுக்கு கிடைக்கப்பெற வேண்டியிருந்த வாடகை வருமானம் கைவிடப்பட்டிருந்தது.

**அறவிடப்பட வேண்டிய நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிராமை**

2023 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளுராட்சி அதிகாரசபைகளின் நிதிக் கூற்றுக்களின் படி, நீதிமன்றத் தண்டப்பணத் தொகையான ரூபா 1,838 மில்லியனும் முத்திரைக் கட்டணமான ரூபா 8,999 தொகையும் மாகாண சபைகளில் இருந்து அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| உள்ளூராட்சி அதிகாரசபைகளின் வகை | நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா மில்லியன | முத்திரைக் கட்டணம் ரூபா மில்லியன் | மொத்தம் ரூபா மில்லியன் |
|---|---|---|---|
| மாநகர சபைகள் | 126 | 1,501 | 1,627 |
| நகர சபைகள் | 25 | 647 | 672 |
| பிரதேச சபைகள் | 1,687 | 6,851 | 8,538 |
| **மொத்தம்** | 1,838 | 8,999 | 10,837 |

அட்டவணை இல. 2.44 – நிலுவையாக உள்ள நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

நீதிமன்றத் தண்டப்பணத்தொகையையும் முத்திரைக் கட்டணங்களையும் முறையாக உள்ளூராட்சி அதிகாரசபைகளிற்கு வழங்கப்படுவதற்கு மாகாண சபைகளால் தவறவிடப்பட்டிருந்ததுடன் இது உள்ளூராட்சி உள்ளூராட்சி அதிகாரசபைகளின் வரவுசெலவுத் திட்டம் மற்றும் திட்டமிடச் செயற்பாடுகளுக்கு பாதகமான தாக்கத்தை விளைவித்திருந்தது.

## சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

**காணி மற்றும் கட்டிடங்கள்**

நாட்டில் உள்ள வணிகப் பெறுமதி கூடுதலான காணிகள் மற்றும் கட்டிடங்களில் கணிசமான அளவின் உரித்து உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு உரித்தானதாகும். நிதிக் கூற்றுக்களின் படி, அப்பெறுமதி ரூபா 260,789 மில்லியன் ஆகும். விபரம் பின்வருமாறாகும்.

| உள்ளூராட்சி அதிகாரசபைகளின் வகை | பெறுமதி ரூபா. மில்லியன் |
|---|---|
| மாநகர சபைகள் | 93,745 |
| நகர சபைகள் | 43,292 |
| பிரதேச சபைகள் | 123,752 |
| மொத்தம் | **260,789** |

அட்டவணை இல. 2.45 – உள்ளூராட்சி அதிகாரசபைகளின் காணி மற்றும் கட்டிடங்கள்

மேற்குறித்த காணிகள் மற்றும் கட்டிடங்களில் உள்ளடங்கப்பட்டுள்ள காணி, கட்டிடங்களில் மேல் மாகாணம் மற்றும் வட மத்திய மாகாண உள்ளூராட்சி அதிகாரசபைகளில் மாத்திரம் உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்கள் தற்போதைய சந்தை

விலையில் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தன.

**மோட்டார் வாகனங்கள்**

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு சொந்தமான மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை 11,009 ஆக இருந்ததுடன் அவற்றின் பெறுமதி ரூபா 28,327 மில்லியன் ஆகும். விபரம் பின்வருமாறாகும்.

| உள்ளூராட்சி அதிகாரசபைகளின் வகை | வாகனங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா. மில்லியன் |
|---|---|---|
| மாநகர சபைகள் | 3,342 | 11,600 |
| நகர சபைகள் | 1,167 | 2,508 |
| பிரதேச சபைகள் | 6,500 | 14,219 |
| மொத்தம் | **11,009** | **28,327** |

அட்டவணை இல. 2.46 – உள்ளூராட்சி அதிகாரசபைகளிடம் உள்ள மொட்டார் வாகனங்கள்

**முதலீடு**

உள்ளூராட்சி அதிகாரசபைகளின் பிரதான நோக்கம் சட்டத்தால் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதாகும். ஆகையால் அதற்காக சபையின் வருமானத்திற்கு ஏற்ற வகையில் செலவினங்களைத் திட்டமிட்டு வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எனினும், உள்ளூராட்சி அதிகாரசபைகளில் பலவற்றின் வரவு செலவுத் திட்டம் மற்றும் குறைநிரப்பு மதிப்பீடு சரியாக தயாரிக்கப்பட்டிராமையால் ஒதுக்கீடு சேமிக்கப்பட்டு அவை வருமானம் உழைக்கும் நோக்குடன் நிலையான வைப்புக்கள் மற்றும் ஏனைய வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தன. விபரம் பின்வருமாறாகும்.

| உள்ளூராட்சி அதிகாரசபைகளின் வகை | முதலீட்டுத் தொகை ரூபா. மில்லியன் |
|---|---|
| மாநகர சபைகள் | 12,479 |
| நகர சபைகள் | 2,716 |
| பிரதேச சபைகள் | 11,531 |
| **மொத்தம்** | **26,726** |

அட்டவணை இல. 2.47 : உள்ளூராட்சி அதிகாரசபைகளின் முதலீடுகள்

உள்ளூராட்சி அதிகாரசபைகளுக் கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள். பொது வீதிகள் தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் பொது மக்கள் நலன்புரி நடவடிக்கைகளை நிறைவேற்றுகையில் சரியான முறையில் நிறைவேற்றப்படாதிருக்கும் போது அந் நிதியத்தை நிலையான வைப்புக்களாக பேணிச் செல்வது பிரச்சினையான நிலைமையாகக் காணப்பட்டது.

**காசு மற்றும் வங்கி கணக்குகள்**

2023 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளூராட்சி அதிகாரசபைகளின் வங்கி கணக்குகளில் காணப்பட்ட மற்றும் கையிலுள்ள காசு மீதி ரூபா 12,720 மில்லியன் ஆகும். விபரம் பின்வருமாறாகும்.

| உள்ளூராட்சி அதிகாரசபைகளின் வகை | தொகை ரூபா. மில்லியன் |
|---|---|
| மாநகர சபைகள் | 1,704 |
| நகர சபைகள் | 1,724 |
| பிரதேச சபைகள் | 9,292 |
| மொத்தம் | **12,720** |

அட்டவணை இல. 2.48 : உள்ளூராட்சி அதிகாரசபைகளின் வங்கி கணக்குகளில் காணப்பட்ட மற்றும் கையிலுள்ள காசு மீதி

**உள்ளூராட்சி அதிகாரசபைகளின் கடன்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் உள்நாட்டு கடன் நிதியம் (LLDF) இலிருந்தும் மற்றும் ஏனைய நிறுவனங்களிலிருந்தும் பெறப்பட்ட கடனின் அளவு ரூபா 7,747 மில்லியன் ஆகும். விபரம் பின்வருமாறாகும்.

| உள்ளூராட்சி அதிகாரசபைகளின் வகை | உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட கடன் ரூபா. மில்லியன் | ஏனைய கடன் ரூபா. மில்லியன் | மொத்தம் ரூபா. மில்லியன் |
|---|---|---|---|
| மாநகர சபைகள் | 33,946 | 1,641 | 5,587 |
| நகர சபைகள் | 993 | 44 | 1037 |
| பிரதேச சபைகள் | 735 | 388 | 1123 |
| **மொத்தம்** | **55,674** | **2,073** | **7,747** |

அட்டவணை இல. 2.49 : உள்ளூராட்சி அதிகாரசபைகளின் கடன்கள்

**மிகைக் கட்டணம் அறவீடு**

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 226 ஆம் பிரிவு மற்றும் பிரதேச சபைகள் சட்டத்தின் 172 ஆம் பிரிவுகளால்

கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் போது 130 தரப்பினருக்கு ரூபா 79.25 மில்லியன் மிகைக் கட்டண அறிவித்தல்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் அந்த மிகைக் கட்டண அறிவித்தல்களில் 10 தரப்பினர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 50.36 மில்லியன் மிகைக்கட்டண அறவீட்டிற்கான பணம் குறித்த சபை நிதியத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. மேற்குறித்தவாறு விநியோகிக்கப்பட்ட மிகைக்கட்டண அறிவித்தல்களில் 62 தரப்பினர்களுக்காக ரூபா 2.15 மில்லியன்ள பெறுமதியான மிகைக்கட்டணச் சான்றிதழ்களும் 2023 ஆம் ஆண்டின் போது விநியோகிக்கப்பட்டுள்ளன.

**மிகைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை**

2023 ஆம் ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளுக்கு உரித்தான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 226 ஆம் பிரிவு, நகர சபை கட்டளைச் சட்டத்தின் 182 ஆம் பிரிவு மற்றும் பிரதேச சபைகள் சட்டத்தின் 172 ஆம் பிரிவுகளின் படி, கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் 254 தரப்பினருக்கு விநியோகிக்கப்பட்டிருந்த ரூபா 1.58 மில்லியன் மிகைக்கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## மேல்மாகாணம்

மேல்மாகாணத்தின் 49 உள்ளூராட்சி அதிகாரசபைகளில் 08 மாநகர சபைகள், மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அதிகாரம்) ஏற்பாடுகளாலும், 13 நகர சபைகள், நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) ஏற்பாடுகளாலும், 28 பிரதேச சபைகள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரமும் ஸ்தாபிக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றன.

### கொழும்பு மாநகர சபை

(அ) உலக வங்கியின் கடன் உதவியின் மூலம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்ட கொழும்பு நகரை அண்மித்த நொரிஸ் கால்வாய் அபிவிருத்தியின் மூலம் இதில் தேங்கும் மழை நீர் விரைவாக பேர வாவிக்கு வடிந்தோடுவதற்காக 632 மீற்றர்களாலான புதிய கால்வாய் ஒன்றை நிர்மாணிப்பதற்கு ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் மாநகர சபைக்கு உரித்தான 36 வீடுகளைக் கொண்ட பழுதடைந்த வீட்டுத்தொகுதியின் காரணமாக ஒப்பந்தத்தைப் பூர்த்தி செய்ய இயலாத நிலை ஏற்பட்டிருந்ததுடன் எஞ்சியிருந்த 105 மீற்றர் வாய்க்காலைப் பூர்த்தி செய்வதற்காக 2023 ஆம் ஆண்டின் போது நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் ரூபா 150 மில்லியன் தொகையான ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அக்

குடியிருப்பாளர்களை அப்புறப்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை துரிதமாக்கப் பட்டிராமையால் மாநகர சபைக்கு அந் நிதியத்தைப் பயன்படுத்த இயலாதிருந்தமையால் மருதானை டீன்ஸ் வீதி மழை நீரால் மூழ்குவதைத் தடுக்க இயலாதுள்ளது.

(ஆ) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 188 (1) ஆம் பிரிவின் கீழ் இடமளிக்கப்பட்டிராத செலவினமான ரூபா 459.6 மில்லியன் தொகைக்கு ரூபா 3,500 படியான 134,000 பரிசுப் பொதிகள் லக் சதொச இடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு எந்தவித தலைமைத்துவமும் இன்றி ஒவ்வொரு நகர சபை உறுப்பினர்களது விருப்பத்திற்கமைவாக விநியோகிக்கப்பட்டிருந்தது. நாட்டில் நிலவிய பொருளாதார பணவீக்கம் காரணமாக பொருளாதார நெருக்கடிக்கு உட்பட்ட மக்களுக்கான சலுகை வழங்கும் அடிப்படையில் இவ்வாறு செயற்பட்டிருந்த போதிலும் மாநகர சபை கட்டளைச் சட்டம் அல்லது வறுமைக் கட்டளைச் சட்டத்தின் மூலம் இதற்காக சட்ட ரீதியான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

| | |
|---|---|
| **தேஹிவளை கல்கிசை மாநகர சபை** | 2023 ஆம் ஆண்டின் இறுதியில் மாநகரசபைக்கு உரித்தானதென இனங்காணப்பட்டிருந்த 206 காணித் துண்டுகளில் 48 துண்டுகளுக்காக மாத்திரமே உறுதி அல்லது உரித்துச் சான்றிதழ்கள் பெறப்பட்டிருந்தன. |
| **ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை** | ‘‘ஜனஜய சிடி’’ சந்தைத் தொகுதி நிர்மாணிப்பிற்காக 2014 முதல் பட்டியல் பெறுமதி குறைவாகச் செலுத்தப்பட்டிருந்ததன் காரணமாக உறுதிப்படுத்தப்படாது செலுத்தப்பட்டிருந்த தாமதக் கட்டணம் ரூபா 31 மில்லியனாகும். |
| **கடுவெல மாநகர சபை** | கடுவெல பஸ் தரிப்பிட வளாகத்தின் மேல்மாடியில் கடைகளுக்குள் செல்வதற்காக ரூபா 3 மில்லியன் செலவில் 2013 இல் ஸ்தாபிக்கப்பட்ட மின்தூக்கி 2016 ஆம் ஆண்டின் போது செயலிழந்தது 07 ஆண்டுகாலம் கடந்திருந்த போதிலும் இது திருத்தப்பட்டிருக்கவில்லை. 2021 ஆம் ஆண்டின் போது எடுக்கப்பட்ட சபைத் தீர்மானத்திற்கமைய இது பஸ் தரிப்பிடத்திற்கு பலனளிக்காமையால் தலைமைக் காரியாலயத்திற்கு ஏற்ற வகையில் ஸ்தாபிப்பதற்கும் பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் அதுவும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| **மஹரகம நகர சபை** | மஹரகம நகர சபையால் உக்கலடையும் அல்லது உக்கலடையாத குப்பை முகாமைத்துவம் தொடர்பாக எந்தவித செயற்திட்டங்களும் செயற்படுத்தப்பட்டிராததுடன் 2023 ஆம் ஆண்டில் குப்பை அகற்றுவதற்காக ரூபா 113 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் இதற்காக சபையின் குப்பை கொண்டு செல்லும் வாகனம் பயன்படுத்தப்பட்டிருந்தது. |
| **கொலொன்னாவ நகர சபை** | சபையால் பயன்படுத்தப்படும் மீள்பெறுமதியிப்பட்ட பெறுமதி ரூபா 3,706.3 மில்லியனான 21 காணிகளுக்கான உரித்துறுதி பெறப்பட்டிருக்கவில்லை. |
| **ஹோமாகம பிரதேச சபை** | காணி தீர்வாகாமையாலும் உடன்படிக்கையில் தவறுகள் காணப்பட்டமையாலும் மீகொட பொருளாதார நிலையத்தில் இருந்து 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு பெற வேண்டியிருந்த ரூபா 255 மில்லியனான பெறுவனவுகள் நிச்சயமற்றதாகக் காணப்பட்டது. |
| **சீத்தாவக்க பிரதேச சபை** | 2020 வரவு செலவுத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு சுதுவெல்ல மயான பூமியில் பூதவுடல் வைக்கும் இடத்தை நிர்மாணிப்பதற்காக உள்ளூராட்சி அமைச்சின் பணிப்பாளர் (திட்டமிடல்) பரிந்துரை செய்திருந்த ரூபா 11.6 மில்லியன் (பெறுமதி சேர் வரியுடனான) மதிப்பீட்டின் அடிப்படையிலான ஒப்பந்தம் தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. 2023 சனவரி 31 ஆம் திகதி இதற்கான ரூபா 896,624 தொகையான பிடித்து வைத்தல் பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் 04 ஆம் திகதி கணக்காய்வால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக ஆய்வின் படி இவ் ஒப்பந்தம் வேலை பூர்த்தியடையாத நிலையில் ஒப்படைக்கப்பட்டிருந்ததெனவும் அதன் எஞ்சிய வேலைப் பகுதிகள் பூர்த்தியாகும் வரை பயன்படுத்தப்பட இயலாத நிலையில் விளைவற்றுக் காணப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது. |
| **பாலியகொட நகர சபை** | சபைக்கு உரித்தற்ற புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணியில் நிர்மாணிக்கப்பட்ட 4 ஆம் கம்ப பொது மலசல கூட முறைமைக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 10.20 மில்லியன் தொகையான பணம் முறையற்ற கொடுக்கல்வாங்கலானதுடன் பொது மக்கள் நடமாடாத இடத்தில் ஆண்களுக்கான 3 மலசல கூடங்களும் பெண்களுக்கான 3 மலசல கூடங்களும் மாற்றுத் திறனாளிகளுக்கு 2 மலசல கூடங்களும் ஆண்களுக்கும் பெண்களுக்குமான 02 குளியலறைகளுமாக பாரிய மலசல கூட முறைமை நிர்மாணிக்கும் செலவினம் விளைவற்ற செலவினமாகியிருந்தது. |

| | |
|---|---|
| **மினுவங்கொட நகர சபை** | நிவ்ஹெம் வீதி ஆரம்பமாகும் இடத்தில் அமைந்துள்ள சபைக்கு உரித்தான வாகனத் தரிப்பிடம் 2019 ஆம் ஆண்டின் போது குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் குத்தகைதாரர் அவ் ஆண்டின் போதே அவ் இடத்திலேயே 10 தற்காலிகக் கடைகள் நிர்மாணிக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டு முதல் 3 வருட காலத்திற்காக வேறு தரப்பினருக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கையின் பிரகாரம் சபை இதற்கு எதிராக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| **கட்டுநாயக்க சீதுவ நகர சபை** | கட்டுநாயக்க புதிய சந்தைத் தொகுதியின் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த கடைகள் திறக்கப்பட்டிராமை தொடர்பாக சபையால் எந்தவித கண்காணிப்பும் மேற்கொள்ளப்பட்டிராததன் காரணத்தால் சந்தைத் தொகுதி மக்கள் நடமாட்டமின்றிக் காணப்பட்டதுடன் ஆக்கபூர்வமான செயற்பாட்டிற்காகப் பயன்படுத்தப்படக் கூடிய வகையில் அமைந்துள்ள கட்டிடத்தின் கீழ் மாடியில் பாரிய இடப்பரப்பும் எந்தவித பயன்பாட்டிற்கும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| **மீரிகம பிரதேச சபை** | மீரிகம பிரதேச சபையின், 2019 ஆம் ஆண்டின் போது வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த 31 கடைகளில் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்திருந்த போதிலும் முன்னர் பணம் அறவிடப்பட்டு உடன்படிக்கையிடப்பட்டதை அடுத்து கடைகளின் திறப்பு வழங்கப்பட்டிராத காரணத்தால் நிலுவை முற்பண மீதி ரூபா 41 மில்லியன் அறவிடப்பட இயலாதிருந்தது. |
| **தொம்பே பிரதேச சபை** | தோம்பே பிரதேச சபையின் 2018 ஆம் ஆண்டின் போது சபை நிதியத்தில் இருந்தும் பிராந்திய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 8.6 மில்லியன் செலவிடப்பட்டு கூட்ட அரங்குடன் நிர்மாணிக்கப்பட்டிருந்த ஓர் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்ட நாள் முதல் விளைவற்ற நிலையிலும் பாதுகாப்பற்ற நிலையிலும் காணப்பட்டது. |
| **ஜாஎல பிரதேச சபை** | 2019 ஆம் ஆண்டிற்காக ராகம வாராந்த சந்தை குத்தகைக்கிடுவதற்காக கேள்வி கோரப்படாது சபைத் தீர்மானத்தில் பழைய குத்தகைதாரருக்கு அவ் ஆதனம் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2019 ஆம் ஆண்டு வரை அக் குத்தகைதாரரிடம் இருந்து அறவிடப்பட வேண்டியதாக இருந்த ரூபா 4 மில்லியன் |

தொகை 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**மதுகம பிரதேச சபை**

சபையிடம் உள்ள காணியாக இனங்காணப்பட்டிருந்த 252 காணிகளில் 48 காணிகளுக்கு உரித்தான சட்டரீதியான உரித்து உறுதிப்படுத்துவதற்கு உரிய ஆவணங்கள் சபையிடம் இருக்கவில்லை.

**பேருவளை பிரதேச சபை**

பேருவளை பிரதேச சபையில் பாரியளவில் சேரும் குப்பைகளை அகற்றுவதற்காக நீண்டகால முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. சபைக்குச் சொந்தமான மாட்டு இறைச்சிக் கூடத்தில் மாடுகளைச் சுகாதார ரீதியாக கொல்வதற்காக போதிய இடவசதிகள் வழங்கப்பட்டிராததுடன் இதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அனுமதிப்பத்திரத்தையும் பெற்றிருக்கவில்லை. மேலும், அங்குள்ள நீரை முறைப்படி அகற்றுவதற்கான முறையொன்று இன்மையால் கழிவு நீர்ப் பகுதிக்கு அருகாமையில் பென்தர ஆற்றில் கலக்கப்பட்டிருந்தது.

## தென் மாகாணம்

காலி மாநகர சபை

சபையால் இயந்திரமயமாக்கப்பட்ட சேதனப் பசளை உற்பத்திசெய்வதற்காக சாத்திய வள ஆய்வொன்று மேற்கொள்ளப்படாது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தையும் பெறாது பாரிய அளவிலான கவ்சிமா சேதனப் பசளைச் செயற்திட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டிருந்தது. நிர்மாணிக்கப்பட்டிருந்த செயற்திட்டத்தில் நிலவிய 07 பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திராமையால் ரூபா 220 மில்லியன் கிரயமான சேதனப் பசளை உற்பத்திச் செயற்திட்டம் பயனளிக்கவில்லை.

**இமதும பிரதேச சபை**

இமதும பிரதேச சபையின் 17 ஆண்டுகளுக்கு முன்னர் ரூபா 9.6 மில்லியன் செலவில் சாத்தியவள ஆய்வொன்றும் மேற்கொள்ளப்படாது நிர்மாணிக்கப்பட்டிருந்த 260 சதுர மீற்றர் கொண்ட இமதுவ சந்தைத் தொகுதியின் 14 கடைகள் தொடர்பாக தேசிய கட்டிட ஆய்வு அமைப்பால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிராமையால் பயனுள்ள பொருளாதாரச் செயற்பாட்டில் ஈடுபடுத்த முடியாதிருந்தது.

**கடுவன மற்றும் பெலிஅத்த பிரதேச சபை**

2010 திசெம்பர் 27 ஆம் திகதிய தபபா/பபாகொ/2010/01 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் (தெற்கு) சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் படி கடைகளை குத்தகைக்கு வழங்கப்பட்ட நாளில் அல்லது 06

மாதங்களுக்குள் ஆகக் கூடுதலாக 06 தவணைகளுக்கு உட்பட்டு பணத்தை அறவிட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததன் காரணமாக 2023 திசெம்பர் 31 ஆம் திகதி கட்டுவன மற்றும் பெலிஅத்த பிரதேச சபைகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தின் அளவு ரூபா 14.6 மில்லியன் தொகையாகும்.

**முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

திஸ்ஸமஹறாம, அங்குனுகொலபலஸ்ஸ, அம்பலந்தொட மற்றும் வீரகெட்டிய எனும் பிரதேச சபைகளால் அங்கீகரிக்கப்பட்டிருந்த 21 கட்டிட வடிவமைப்புகளுக்கு உரித்தாக அறவிடப்பட வேண்டிய ரூபா 3.9 மில்லியன் தொகையான கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**தங்காலை நகர சபை**

தங்காலை நகர சபைக்கு உரித்தான 32 ஆம் இலக்க கடை 1994 மே 19 ஆம் திகதி முதல் குத்தகை அடிப்படையில் பெற்றிருந்த குத்தகைதாரரால் குத்தகைக் கொடுப்பனவு செலுத்தப்படாதிருந்ததுடன் கடை அமைந்துள்ள பகுதியில் இரண்டு மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணித்து சிற்றுண்டிச் சாலையொன்றை நடாத்தியிருந்தார். இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சபை முகாமைத்துவத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**திஸ்ஸமஹறாம பிரதேச சபை**

திஸ்ஸமஹறாம பிரதேச சபைக்குச் சொந்தமான பன்னேகமுவ பொதுச் சந்தையில் 28 கடைகளுடனான புதிய சந்தைக் கட்டிடமொன்றும் திறந்த கட்டிடமொன்றும் ரூபா 62.9 மில்லியன் செலவில் மாவட்டச் செயலகத்தால் நிர்மாணிக்கப்பட்டு 2021 ஆம் ஆண்டு சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. கணக்காய்வுத் தினமாகிய 2023 திசெம்பர் 11 ஆம் திகதி வரையிலும் இச் சந்தைத் தொகுதி பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிராததன் காரணமாக கட்டிட வளாகம் பற்றை வளர்ந்து பாரியளவில் அசுத்தமடைந்திருந்தது. இதன் படி, நிர்மாணிப்பதற்காக ரூபா 62.9 மில்லியன் அரச நிதி செலவிடப்பட்டு சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த இச் சந்தைக் கட்டிடம் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாமை மக்கள் பண விரயத்தையும் சபைக்குப் பெற்றுக்கொள்ளக் கூடிய முறையான வருமானம் கிடைக்காது போனமையும் அவதானிக்கப்பட்டது.

**சூரியவெவ பிரதேச சபை**

பிரதேச சபைக்கு உரித்தான சபை நிதியத்தில் இருந்து ரூபா 21.6 மில்லியன் செலவில் நிர்மாண வேலைகள் மற்றும் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த 04 கடைகள், நூலகக் கட்டிடம், மக்கள் நீர் செயற்திட்டம் மற்றும் நீர்க் கோபுரம் ஒன்றும் பயன்பாட்டிற்கு

எடுக்கப்படாது 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது.

**வெலிகம பிரதேச சபை**

(அ) 2022 ஆம் ஆண்டின் போது வெலிகம பிரதேச சபையின் குப்பைகள் செயற்திட்டத்தின் கீழ் குப்பைத் தொட்டிகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் சுத்திகரிக்கப்படும் நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக போலி உரிமையாளர் ஒருவரின் பெயரில் ரூபா 16.8 மில்லியனிற்கு காணியின் பெறுமதியை மதிப்பிட்டு காணி ஒன்றைக் கொள்வனவு செய்திருந்ததுடன் இதற்காக சட்டத்தரணி மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 0.78 மில்லியனும் சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. மேற்குறித்த செயற்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு காணியின் அளவு போதாதிருந்தமையால் செயற்திட்டம் செயற்படுத்தப்படாதிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் எந்தவித செயற்பாடுகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 ஆம் ஆண்டின் போது காணிகளைக் கூறாக்கி விற்பனை செய்யப்படுவதானால் பொது நடவடிக்கைகளிற்காக வெலிகம பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்ட 01 ஏக்கர், 01 ரூட், 2.80 பேர்ச் அளவான களுவர பத்த காணி முன்னாள் தலைவரின் உறவினரது தொடர்பிலும் அவரால் 2012 திசெம்பர் 01 ஆம் திகதி முதல் 2013 நவம்பர் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்காக குத்தகைக்குப் பெறப்பட்டிருந்த கம்புறுகமுவ மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள கராடுவ கடலான 01 ஏக்கர் 2 ரூட் அளவான தனியார் காணிக்கு பரிமாற்றப்பட்டிருந்ததுடன் அவ்வாறு பரிமாற்றப்பட்ட களுவர பத்த காணி கூறாக்கப்படுவதற்காக போலியான அங்கீகாரம் வழங்கப்பட்டு மீள அக் காணியில் இல. 4 மற்றும் 5 பகுதிகள் பொது நடவடிக்கைகளுக்காக ரூபா 3.85 மில்லியன் செலவில் சபைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) வெலிகம பிரதேச சபைக்குரிய வரகாபிட்டிய மயானத்திற்காக வாகனத் தரிப்பிடம் உள்ள காணி அரசாங்க காணிக் கட்டளைச் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் படி சபைக்கு

ஒப்படைக்கப்படுவதற்கான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கையில், போலியான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டு மதிப்பீட்டு அறிக்கை ஒன்று பெறப்பட்டு மூன்றாம் தரப்பினருக்கு ரூபா 4 மில்லியன் தொகைக்கு சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) வெலிகம பிரதேச சபை குறைபாடுகளுடனான மற்றும் அங்கீகாரமளிக்கப்படாத கட்டிட நிர்மாணிப்பதற்கு உரித்தாக 58 அபிவிருத்தி அனுமதிப்பத்திரக் கோவைகளும் காணி உபபிரிவுகளுக்கு உரித்தான 134 கோவைகளும் முன்னாள் தலைவர் ஒருவரால் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதைத் தடுக்கும் வகையில் தமது உத்தியோகபூர்வ அறையில் களஞ்சியப்படுத்தியிருந்ததுடன் கோவைகளில் உள்ளடக்கப்பட்ட 3 கட்டிட வடிவமைப்புப் பிரதிகளின் ஒரு பிரதி கோவையில் இருந்து அகற்றப்பட்டு போலி முத்திரை பதிக்கப்பட்டு கட்டிட வடிவமைப்பு அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

**வெலிகம நகர சபை**

வெலிகம நகர சபையின் ஜயவிக்கும்கம ஆரம்பப் பாடசாலை ரூபா 06 மில்லியன் தொகை செலவில் 05 வகுப்பறைகளையும் 05 மலசல கூடங்களையும் கொண்ட 100 மாணவர்களுக்குக் கல்வி வழங்கும் வசதிகளுடன் 2002 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டு வரையில் அக் கட்டிடங்கள் பழுதடைந்த நிலையில் காணப்பட்டதுடன் வெளித்தரப்பினர்களால் இவ் ஆதனங்கள் அத்துமீறிப் பயன்படுத்தப்பட்டி போதிலும் இது தொடர்பாக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**மாத்தறை மாநகர சபை**

(அ) மாத்தறை மாநகர சபையின் நகர ஆளுனரின் உத்தியோகபூர்வ விடுதி நிர்மாணிக்கப்படுவதற்காக ஒப்பந்ததாரருக்கு இரண்டு கட்டங்களின் கீழ் ரூபா 23.35 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் மொத்தக் கிரய மதிப்பீடு சரியாகத் தயாரிக்கப்பட்டிராமை, முறையாக வடிவமைக்கப்பட்டிராமை, சரியான கேள்வி பயன்படுத்தப்பட்டிராமை, செய்யப்பட்டிராத வேலைப் பகுதிகள் மற்றும் முறையான தரத்தில் மேற்கொள்ளப்பட்டிராத வேலைகளுக்காக மொத்தப் பெறுமதி ரூபா 4.2 மில்லியன் மேலதிகமாக சபை நிதியத்தில் இருந்து ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 4:3:1 (இ)(ii) ஏற்பாடுகளிற்கு மாறாக சிவில்

வேலைப் பெறுமதியில் 10 சதவீத ஆகக் கூடுதலான வகையில் ரூபா 1.2 மில்லியன் தொகை மிகைக்கப்பட்டு மேலதிக வேலை (Extra work) மற்றும் மிகையான வேலை (Excess work) இற்காக ரூபா 7.89 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இது மொத்த மதிப்பீட்டுப் பெறுமதியில் 61 சதவீதமாகும்.

(ஆ) 2021 ஆம் ஆண்டின் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஒதுக்கீட்டில் ரூபா 14 மில்லியன் செலவில் மாத்தறை பொது பஸ் தரிப்பிடத்தில் ஸ்தாபிக்கப்பட்ட கழிவு நீர் மற்றும் மலக் கழிவு மீள்சுழற்சி முறைமையை நிர்மாணிப்பதற்கு உரிய ஒப்பந்தத்தை வழங்குகையில் 2006 பெறுகை வழிகாட்டல் நடைமுறையின் ஏற்பாடுகளுக்கு மாறாக பெறுகை நடைமுறை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் கழிவு நீர் மற்றும் மலக் கழிவு மீள்சுழற்சி முறைமையின் மூலம் விடுவிக்கப்படும் நீர் குறித்த தரத்தில் இன்மையும் அவதானிக்கப்பட்டது. இதன் படி, மீள் சுழற்சியின் மூலம் நாட்டின் உள்ளக நீர்த் தேக்கங்களுக்கு வெளியேற்றப்படும் கழிவு நீர் அல்லது நீர்க் கழிவிற்கான இயலளவு எல்லைகள் மிகைத்திருந்தமையால் முறையான மீள்சுழற்சி இன்றி வெளியேற்றப்படுவது பரிந்துரை செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகையால் மேற்குறித்த நிர்மாணிப்புகளின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் எய்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மாத்தறை மாநகர சபையால் குப்பைகளின் மூலம் மின்உற்பத்தி செய்யப்படும் செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியில் 10 வருடங்களுக்குக் கிட்டிய காலம் கடந்திருந்த போதிலும், இச் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. குறித்த கம்பனிக்கு கையேற்கப்பட்டிருந்த சபைக்குரித்தான 05 ஏக்கர் காணிக்காக மாதாந்தம் குத்தகை வாடகை ஒன்று அறவிடப்படுவதற்கும் செயற்திட்டம் செயற்படாத நிலையின் கீழ் அக் கட்டிடத்தின் தற்காலிக உரித்து இரத்துச் செய்யப்படுவதற்கும் 2023 ஆம் ஆண்டின் இறுதியிலும் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இவ்வாறே, உருவாகும் பாரிய குப்பை மேடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு வாடகை அடிப்படையில் எக்ஸ்கவேட்டர்

இயந்திரம் ஒன்று பயன்படுத்தப்பட்டு மண்ணால் குப்பைகளை மூடுவதற்காக 2018 மே முதல் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் ரூபா 57.72 மில்லியன் வாடகை சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்த போதிலும் இதன் மூலமும் நிலையான தீர்வு பெறப்பட்டிருக்கவில்லை.

## சப்ரகமுவ மாகாணம்

**இம்புல்பே பிரதேச சபை**

பிரதேச சபையால் பபஹின்ன வாராந்த சந்தை அபிவிருத்திக்காக 2017 ஆம் ஆண்டளவில் ரூபா 4.6 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், சந்தை நடாத்தப்படுவதற்கு ஏற்ற வகையில் அபிவிருத்தி செய்யப்பட்டிராததன் காரணமாக செலவிடப்பட்ட தொகை விளைவற்ற செலவினமாகியிருந்தது.

**குருவிட்ட பிரதேச சபை**

குருவிட்ட பிரதேச சபை சந்தைத் தொகுதி ரூபா 35 மில்லியன் செலவில் 2022 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அடிப்படைத் தேவைப்பாடுகள் பூர்த்தியாகி இராமையால் 2023 திசெம்பர் வரையில் விளைவற்றுக் காணப்பட்டது. மேலும், மாநாட்டு மன்ற நிர்மாணிப்பின் போது ரூபா 3.2 மில்லியன் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**இரத்தினபுரி பிரதேச சபை**

பிரதேச சபையின் விடய உத்தியோகத்தரால் எரிபொருள் பட்டியல்கள் தீர்க்கப்படுகையில் போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு 2023 மே முதல் 2024 சனவரி வரையான காலப்பகுதியின் போது ரூபா 2.2 மில்லியன் அளவில் நிதி முறைகேடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை இதற்காக நியமிக்கப்பட்ட ஆரம்ப கட்ட விசாரணைக் குழு அறிக்கையிட்டிருந்தது. உள்ளக வேலைப் பகிர்வு இன்மை இதற்குக் காரணமாகியிருந்தது. உறுதிச்சீட்டுக்களுடன் எரிபொருட் கட்டளைகள் அனைத்தும் மாற்றப்பட்டிருந்தமை மிகத் தெளிவான போதிலும், அவ் உறுதிச்சீட்டுக்கள் பரீட்சிக்கும், பரிந்துரை செய்யும், அங்கீகரிக்கும் மற்றும் கொடுப்பனவுகளை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தர்கள் இது குறித்து கவனத்திற்கொள்ளாது செயற்பட்டிருந்தமை பிரச்சனைக்குரியதாக இருந்தது.

**இரத்தினபுரி மாநகர சபை**

மாநகர சபைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை விஞ்சிய நிலையில் தனிப்பட்ட ரீதியாக நிரந்தரமாக்கப்பட்ட 157 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கையில் முறையான அங்கீகாரம் இன்றி 65 ஊழியர்களும் பணி உடன்படிக்கையின் அடிப்படையில் 40 பேரும் குறித்த துறைகளில் ஆட்சேர்க்கப்பட்டு 2023 ஆம் ஆண்டிற்காக

ரூபா 24 மில்லியன் சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது. மேலதிக ஊழியர்களில் பலர் நிர்வாகக் காரியாலயங்களிலும், நூலகங்களிலும் ஆரம்பப் பாடசாலைகளிலும் முறையான வேலை ஒப்படைப்புகள் இன்றி பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

**வுரகாபொல பிரதேச சபை**

(அ) பிரதேச சபை உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்வதற்கான 2021 இல் பிரதேச சபைகளில் நகர மண்டபக் கட்டிடங்களைப் புதிதாக நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 56.1 மில்லியன் ஒப்பந்தப் பெறுமதியில் 270 வேலை நாட்களில் பூர்த்தி செய்யப்படுவதற்காக 2021 ஆகஸ்ட் 12 ஆம் திகதி உடன்படிக்கையிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும், 2022 திசெம்பர் 02 ஆம் திகதி இருதரப்பினரின் உடன்பாட்டில் ரூபா 23.81 மில்லியன் பூர்த்தி செய்யப்பட்ட வேலைப் பெறுமதியுடன் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளத்தக்க வகையில் பணி பூர்த்தி செய்யப்பட்டிராததன் காரணமாக 2024 ஏப்ரல் 25 ஆம் திகதி வரையிலும் அக் கட்டிடம் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) வரகாபொல பிரதேச சபையால் வருடாந்தம் ரூபா 2 மில்லியன் வருமான எதிர்பார்ப்புடன் ரூபா 3.82 மில்லியன் செலவில் டிஜிடல் பெயர்ப் பலகை ஒன்று 2019 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் 2021 ஆம் 2022 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 0.37 மில்லியன் வருமானம் மாத்திரம் உழைக்கப்பட்டிருந்தது. இவ் விளம்பரப் பலகைக்கு உரித்தான விடயக் கோவையும் காணாமற் போயிருந்தது.

**தரணியகல பிரதேச சபை**

தரணியகல பிரதேச சபையால் 2023 ஆம் ஆண்டின் போது உயிர் வாயுப் பிரிவொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் உயிர் வாயு மிகவும் சிறிய அளவில் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டு கூடுதலான அளவு எரிக்கப்பட்டு வீணடிக்கப்பட்டிருந்தது. இச் சகல நிர்மாணிப்பிற்காகவும் ஏற்கப்பட்ட ரூபா 8.7 மில்லியன் வினைத்திறனாக ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தப்படுவதற்கு சபை தவறியிருந்தது.

**இரம்புக்கன பிரதேச சபை**

கதிர்காம ஆலயத்திற்கு உரித்தான 01 ஏக்கர் 04 பேர்ச் அளவிலான காணிக்கு சீவிய உரித்து உறுதியோ அல்லது மாற்று உறுதி ஒன்றின் மூலமோ ஒப்படைக்கப்பட்டிராத

சந்தர்ப்பத்தில் இரம்புக்கன பிரதேச சபையால் ரூபா 97. 59 மில்லியன் செலவில் அங்கு ஓர் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

## வடமேல் மாகாணம்

**கிரிபாவ பிரதேச சபை**

கிரிபாவ பிரதேச சபை 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 6.86 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த நிராவிய சேதன திண்மக் கழிவுப் பொருள் நிலையத்தின் சேதன உரப் பிரிவு சபை அதிகாரத்திற்குட்பட்ட பகுதியில் குப்பை சேகரிக்கப்படாததன் காரணமாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது கைவிடப்பட்டிருந்தது.

## மத்திய மாகாணம்

**கண்டி மாநகர சபை**

(அ) மாநகர சபைக்கு உரித்தான கப்படிபொல, போகம்பர, மனிக்கும்புர மற்றும் மத்திய பொது சந்தை இறைச்சிக் கடை போன்ற வர்த்தகத் தொகுதியின் 31 கடைகளில் இருந்து கடை வாடகை அறவிடப்படாது போலிப் பற்றுச்சீட்டு இலக்கங்கள் இடப்பட்டு கடை வாடகை பெறப்பட்டதாக கடை வாடகைப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு 2018 ஆம் ஆண்டு முதல் 2023 யூலை 31 வரையான காலப்பகுதியின் போது ரூபா 8.28 மில்லியன் மோசடி செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மாநகரசபைக்கு உரித்தான மனிக்கும்புர, கப்பெட்டிபொல, போகம்பர மற்றும் ஜோர்ஜ்.ஈ.த சில்வா எனும் 04 வர்த்தகக் கட்டிடத் தொகுதிகளில் 18 கடைகளின் குத்தகை உரித்து மாற்றப்படுகையில் அறவிடப்பட வேண்டிய தொகை அறவிடப்பட்டமைக்கு பற்றுச்சீட்டுக்கள் போலியாகத் தயாரிக்கப்பட்டு பற்றுச்சீட்டுக்கள் இன்றி கடைகள் ஒப்படைக்கப்பட்டு சுகாதார செயற்பாட்டுக் குழு மற்றும் பிரதான குழுவின் அங்கீகாரமின்றி கடைகள் வழங்கப்பட்டிருந்தமையால் பெறப்பட வேண்டிய பணம் சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்படாது ரூபா 13.60 மில்லியன் முறைகேடு ஏற்பட்டிருந்தது. இது தொடர்பாக நி.பி.104 (4) விசாரணைகள் நடாத்தப்பட்டு நட்டத்தை அறவிட்டுக்கொள்வதற்கும் தேவையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மாநகர சபையின் காசாளர் 02 நாட்களுக்கு நாளாந்தம் சேகரித்த ரூபா 5.16 மில்லியன்

தொகையை வங்கியில் வைப்புச் செய்யாது தவறான முறையில் பயன்படுத்தியிருந்தார். இது தொடர்பாக நி.பி. 104(4) விசாரணைகள் நடாத்தப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | |
|---|---|
| **நாவலப்பிட்டி நகர சபை** | 2020 ஆம் 2021 ஆம் ஆண்டுகளின் போது இறைவரி வருமானம், வருமானத்திற்கு செலவு வைக்கப்படாது ரூபா 1.43 மில்லியன் முறைகேடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு பொறுப்பு வாய்ந்த தரப்பினர் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **குண்டசாலை பிரதேச சபை** | குண்டசாலை பிரதேச சபை மற்றும் பாததும்பறை பிரதேச சபையுடன் ஒன்றிணைந்து செயற்படுத்தப்படும் திகன அலுத்வத்த குப்பை நிலையத்தை மேம்படுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 90 மில்லியன் மத்திய மாகாண சபையில் இருந்து வழங்கப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டின் இறுதித் திகதியில் அவ் ஒதுக்கீடு செலவிடப்பட்டிருந்த போதிலும் இச் செயற்திட்டத்தின் கட்டிடங்கள் முறையான வகையில் திட்டமிடப்பட்டிராமை மற்றும் உத்தியோகத்தர்களின் செயற்திறனின்மையால் திட்டமிடப்பட்ட வகையில் நிர்மாணிக்கப்பட இயலாதிருந்தமையால், செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை எய்த இயலாதிருந்தது. இவ்வாறே, சேதனப் பசளைப் பிரிவிற்காக கழிவுப் பொருட்களில் உள்ள கூடுதலான ஈரலிப்பை அகற்றுவதற்காக 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 10.29 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்ட நாள் முதல் 2023 ஆம் ஆண்டு வரை செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டது. இவ்வாறே, திண்மக் கழிவுப் பொருள் செயற்திட்டத்தின் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் மூலம் எரிபொருள் உற்பத்தி செய்யப்பட இருந்த செயற்திட்டத்திற்காக 2021 சனவரி 28 ஆம் திகதி சபை தனியார் நிறுவனம் ஒன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்த போதிலும் 2023 ஆம் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், செயற்திட்டத்திற்கான தளத்தைத் தயாரிப்பதற்காக 2021 ஆம் 2022 ஆம் ஆண்டுகளின் போது சபை நிதியத்தில் இருந்து ரூபா 29.78 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும், இவ் இயந்திரத்தைப் பொருத்துவதற்கான உடன்பாட்டுடன் உடன்படிக்கையிட்டிருந்த ஒப்பந்ததாரர் இதனைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திராததன் |

காரணமாக இதற்காக சபையால் ஏற்கப்பட்ட செலவினம் விளைவற்றிருந்தது. இது தொடர்பாக ஒப்பந்தமிடப்பட்ட நிறுவனம் தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**மாத்தளை மாநகர சபை**

(அ) 2021 திசெம்பர் 29 ஆம் திகதிய 13/2008 (vi) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் படி அங்கீகரிக்கப்பட்ட 135 லீற்றர் எரிபொருளுக்கு உரித்தான எரிபொருள் கொடுப்பனவு சம்பளத்திற்கு சேர்க்கப்பட்டு வழங்கப்பட்டிருக்கையில் அந்த அளவிற்கும் மேலாக 2021 யூன் முதல் 2023 ஒக்டோபர் வரை அங்கீகாரம் இன்றி மாத்தளை மாநகர சபை நகர ஆணையாளரின் போக்குவரத்திற்காக ரூபா 1.04 மில்லியன் எரிபொருள் கட்டளைகள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) 2022 ஒக்டோபர் 01 ஆம் திகதி முதல் 2023 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியின் போது மயானத்தின் பூத உடல் தகனம் செய்யும் மற்றும் அடக்கம் செய்யும் கட்டணமாக உத்தியோகத்தர்களால் அறவிடப்பட்டிருந்த பணத்திற்காக ஏனைய வருமானப் பெறுவனவுகளுக்கு உரிய பதிவேடுகளில் போலியாகக் காண்பிக்கப்பட்டு, பற்றுச்சீட்டுக்கள் மாற்றப்படுதல், குறித்த அனுமதிப்பத்திரப் பதிவுகள் மாற்றம் செய்தல், பணம் பெறப்பட்டு பற்றுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டிராமை போன்ற ஆவணங்கள் மாற்றப்பட்டு சேகரிக்கப்பட்ட பணமான ரூபா 0.70 வருமானத்திற்குச் செலவு வைக்கப்படாது மோசடி செய்யப்பட்டிருந்தது.

(இ) 2023 ஆம் ஆண்டின் போது 57 கழிவகற்றல் சேவைகளை வழங்குவதற்காக அறவிடப்பட்ட பணத்திற்காக சேவையைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பத்தில் ஏனைய வருமானத்திற்காக விநியோகிக்கப்பட்ட பற்றுச்சீட்டு இலக்கம் தவறாகப் பயன்படுத்தப்பட்டு, வருமானம் குறைவாக வங்கியிலிடப்பட்டு, பற்றுச்சீட்டுக்கள் இரத்துச் செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டு சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிராமை உள்ளடங்கலாக ரூபா 0.49 மில்லியன் மோசடி செய்யப்பட்டிருந்தது.

**நுவரெலியா மாநகர சபை**

1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 24(இ) மற்றும் 24 (ஈ) பிரிவின் படி, 2007 மார்ச் 05 ஆம் திகதிய 1487/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் III ஆம் பட்டோலையின் 03 ஆம் நிபந்தனையின் படி, மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அங்கீகாரம் மற்றும் பரிந்துரை பெற்றுக்கொள்ளப்படாது கிரகரி வாவியின் IV ஆம் கட்டம் மாநகர சபையால் கொங்கிரீட் சிலப் இடப்பட்டு கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 3.73 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் மாநகர சபைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

**கோடகல பிரதேச சபை**

பிரதேச சபைக்குப் புதிய கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக 2015 மே 11 ஆம் திகதி ரூபா 83.37 மில்லியன் தொகையான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு பணி ஆரம்பிக்கப்பட்டிருந்த துடன் 2016 திசெம்பர் 31 ஆம் திகதி வரை இதற்காக ரூபா 21.56 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் அதன் நிர்வாக மற்றும் தொழிநுட்பப் பிரச்சனைகள் காரணமாக மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் பணி இடைநிறுத்தப்பட்டு 08 வருடங்களுக்கு மேலான காலம் கடந்திருந்த போதிலும் பணியை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## ஊவா மாகாணம்

**பண்டாரவளை பிரதேச சபை**

பண்டாரவளை பிரதேச சபையால் பிரதேச அபிவிருத்தி உதவி செயற்திட்டத்தின் (LDSP) ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக ரூபா 3.97 மில்லியனிற்கு 02 கொள்கலன்களும் 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 3 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த நடமாடும் வியாபாரக் கூடங்கள் 04 உம் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டன.

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 19 (XII) ஆம் பிரிவின் படி, பிரதேச சபைக்கு உரித்தான கடைகள் 03 வருடங்களுக்கு மேலான காலமாக குத்தகைக்கு வழங்கப்படுகையில் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இதற்கு முரணான வகையில் புத்தல, படல்கும்புர, வெல்லவாய, தனமல்வில மற்றும் பிபில போன்ற 05 பிரதேச சபைகளின் 96 கடைகள் 03

வருடங்களுக்கும் மேலான காலமாக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன.

1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 83 (1) ஆம் பிரிவின் படி, 2021 ஆம் ஆண்டிற்கு முன்னர் புத்தல, படல்கும்புர, வெல்லவாய, மடுல்ல, தனமல்வில, மொனறாகலை, பிபில மற்றும் கதிர்காமம் போன்ற 08 பிரதேச சபைகளால் அங்கீகரிக்கப்பட்ட 1573 கட்டிட வடிவமைப்புகள் பரீட்சிக்கப்பட்டு இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

படல்கும்புர, வெல்லவாய, சியம்பலாண்டுவ, மெதகம, தனமல்வில, பிபில மற்றும் கதிர்காமம் போன்ற 07 பிரதேச சபைகளால் வழங்கப்பட்டிருந்த 126 சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடிக் காலம் முடிவுற்றிருந்தது. மேலும், படல்கும்புர, தனமல்வில, பிபில மற்றும் கதிர்காமம் போன்ற 04 பிரதேச சபைகளால் மீளாய்வாண்டின் போது இனங்காணப்பட்டிருந்த சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய 41 கைத்தொழில்களுக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் படி, அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கும் கைத்தொழில்கள் முறையான ஒழுங்கமைப்பு முறைக்கு உட்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

மடுல்ல, மெதகம, தனமல்வில, பிபில போன்ற 04 பிரதேச சபைகளால் நடாத்தப்படும் திண்மக் கழிவுப் பிரிவிற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை.

| | |
|---|---|
| தனமல்வில பிரதேச சபை | தனமல்வில பிரதேச சபைக்கு உரித்தான டங்டும வாராந்த சந்தைக்கு அருகாமையில் 05 ஆம், 06 ஆம் இலக்க கடைகள் 2019 ஆம் ஆண்டின் போது குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அங்கு பெறுகை ஏலத்தொகையின் 50 சதவீதமான ரூபா 1.5 மில்லியன் ஆரம்பத் தொகையாக செலுத்தப்பட்டதாக கடையை குத்தகை வழங்கலுக்குரிய ஆவணக் கோவையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அத் தொகை சபை நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. |

## வட மாகாணம்

**முகாமைத்துவ நலிவுகள்**

(அ) பருத்தித்துறை பிரதேச சபையால் மணல்காடு பிரதேசத்தில் சுற்றுலாப் பயணிகளுக்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 2.80 மில்லியனிற்கு பூர்த்தி செய்யப்பட்ட ஓர் செயற்திட்டமும் வடமராச்சி மேற்கு பிரதேச சபையால் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 2.99 மில்லியனிற்கு பூர்த்தி செய்யப்பட்டிருந்த முடலைகுலி குடிநீர் திட்ட முறைமை முற்றாகக் கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) யாழ்ப்பாண மாநகர சபையால் 05 முதல் 27 வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்திற்காக ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 6.88 மில்லியனான 30 முற்பணங்கள் இது வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 5 வருடங்களுக்கு மேலான காலமாக 03 ஒதுக்கங்களில் இருந்த ரூபா 373.56 மில்லியனைப் பயன்படுத்துவதற்கு யாழ்ப்பாண மாநகர சபையால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) யுாழ்ப்பாண மாநகர சபை, பருத்தித்துறை நகர சபை, சாவகச்சேரி நகர சபை மற்றும் வடமராச்சி மேற்கு பிரதேச சபைக்குச் சொந்தமான 238 கடைகளுக்கு உரித்தாக 05 வருடங்களுக்கு அல்லது 03 வருடங்களுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட வேண்டிய நீண்டகால குத்தகை உடன்படிக்கை 03 முதல் 43 வருடங்கள் வரையான காலப்பகுதியாக புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 31 சட்டவிரோதமான கட்டிடங்கள் இனங்காணப்பட்டிருந்ததுடன் வெங்கல செட்டிக்குளம் பிரதேச சபையால் 2023 ஆம் ஆண்டின் போது இது தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**சொத்து முகாமைத்துவம்**

(அ) மாந்தை கிழக்கு பிரதேச சபை, துணுக்காய் பிரதேச சபை, புதுக்குடியிருப்பு பிரதேச சபை, வவுனியா வடக்கு தமிழ் பிரதேச சபைகளில் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை, கரச்சி பிரதேச சபை, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை மற்றும் பூனகரி பிரதேச சபை, மன்னார் நகர சபை, மன்னார் பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச

சபை மற்றும் முசலி பிரதேச சபையிடம் காணப்பட்ட நீண்ட காலமாக பழுதடைந்த நிலையிலான 91 வாகனங்கள் திருத்தப்பட்டு மீளப் பயன்படுத்தப்படுவதற்கோ அல்லது கைதவிர்ப்பதற்கோ சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கரைத்துறைப் பற்று பிரதேச சபை மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபை, வேலணை பிரதேச சபை,
வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை மற்றும் வவுனியா வடக்கு பிரதேச சபை, கரச்சி பிரதேச சபை, பச்சிழைப்பள்ளி பிரதேச சபை, பூனகரி பிரதேச சபை மற்றும் மன்னார் நகர சபையால் பயன்படுத்தப்பட்ட 80 வாகனங்களின் உரிமை குறித்த சபையின் பெயரிற்கு மாற்றப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 திசெம்பர் 30 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை 2016/01 இன் 1.1 ஆம் பந்திக்கு மாறாக, யாழ்ப்பாண மாநகர சபைக்கு, சாவகச்சேரி நகர சபைக்கு, வல்வெட்டித்துறை நகர சபைக்கு, சாவகச்சேரி பிரதேச சபைக்கும் காரைநகர் பிரதேச சபைக்கும் பருத்தித்துறை பிரதேச சபைக்கும் உரித்தற்ற காணிகளின் ரூபா 67.16 மில்லியன் மொத்தப்பெறுமதியான செலவில் 36 கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

(ஈ) சாவகச்சேரி நகர சபை, பருத்தித்துறை நகர சபை, வல்வெட்டித்துறை நகர சபைக்கு, காரைநகர் பிரதேச சபை, நல்லூர் பிரதேச சபை, ஊர்காவற்றுறை பிரதேச சபை மற்றும் வலிகாமம் மேற்கு சபைக்கு உரித்தற்ற ரூபா 318.8 மில்லியனான 67 காணிகளும் 29 கிணறுகளும் நிலையான சொத்தாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(உ) யாழ்ப்பாண மாநகர சபை, பருத்தித்துறை பிரதேச சபை, நெடுந்தீவு பிரதேச சபை, ஊர்காவற்றுறை பிரதேச சபை, வேலணை பிரதேச சபை, வலிகாமம் வடக்கு பிரதேச சபை, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, காரைநகர் பிரதேச சபை, சாவகச்சேரி பிரதேச சபை, வடமராச்சி தென்மேற்கு பிரதேச சபை, வலிகாமம் தெற்கு, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மற்றும்

வலிகாமம் மேற்கு பிரதேச சபை மூலம் பயன்படுத்தப்படும் 98 காணிகளும் கட்டிடங்களும், 188 மயானங்களும், 193 கிணறுகளும் 81 வாகனங்களும் உரிமை இதுவரையில் மாநகர சபை, நகர சபை மற்றும் பிரதேச சபையால் கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) வலிகாமம் வடக்கு பிரதேச சபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை மற்றும் வவுனியா வடக்கு பிரதேச சபை, கரச்சி பிரதேச சபை, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பூனகரி பிரதேச சபைக்கு உரித்தான 345 காணிகளின் பெறுமதி மதிப்பிடப்படுவதற்கும் கணக்கீடு செய்யப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.

**விளைவற்ற/ குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்**

(அ) மாந்தை கிழக்கு பிரதேச சபையின் பல கட்டிடங்களும் பொதுக் கிணறுகளும் ரூபா 53.5 மில்லியனான மொத்தக் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றின் உரிமையை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு சபை தவறியிருந்ததுடன் இது வரையிலும் அவை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வடக்கின் துரித மீட்டெடுப்புச் செயற்திட்டத்தின் கீழ் 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 26.1 மில்லியன் செலவில் நெடுங்கேணி பேரூந்து தரிப்பிடம் மற்றும் கடைகளை நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் வவுனியா வடக்குப் பிரதேச சபையால் 12 ஆண்டுகளாக அவற்றைப் பயன்படுத்துவதற்குத் தேவையான எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கரச்சி பிரதேச சபையால் சபை நிதியம் மற்றும் பிரதேச அபிவிருத்தி நிதியத்தின் கீழ் ரூபா 100.16 மில்லியன் பணத்தொகையால் 03 சந்தைத் தொகுதிகள், 23 கடைகள், பூங்காக்கள் மற்றும் வாகன தரிப்பிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அவை 01 முதல் 02 வருட காலமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் கரச்சி பிரதேச சபையால் உமயாழ்புர திண்மக் கழிவை சேதனப் பசளை தயாரிப்பு நிலையம் ரூபா 4.1 மில்லியன் செலவில் 2017 ஆம் ஆண்டின்

போது நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் இது 6 வருட காலமாக பயன்படுத்தப்படாதிருந்தது.

## வட மத்திய மாகாணம்

| | |
|---|---|
| **அநுராதபுரம் மாநகர சபை** | நகர சபைக்கு உரித்தான முன்னைய ஆண்டுகளின் போது ஏற்பட்ட ரூபா 56.42 மில்லியன் மோசடிகள் மற்றும் நட்டங்களுக்காக ஒழுக்காற்று விசாரணைகளும் தேவையான சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br><br>அநுராதபுரம் மாநகர சபைக்கு உரித்தான உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து சபைக்கு அறவிடப்பட வேண்டிய நிலுவை வாடகையான ரூபா 11.23 மில்லியனை அறவிடுவதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **ரம்பாவ பிரதேச சபை** | 2023 செப்தெம்பர் மற்றும் ஒக்டோபர் ஆகிய 02 மாதங்களுக்குள் காசாளருக்கு நாளாந்தம் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 349,515 சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்படாது மோசடி செய்யப்பட்டமை தொடர்பாக காசாளர் பதவியில் கடமையாற்றிய உத்தியோகத்தரின் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக முறையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பொறுப்புடைய தரப்பினரால் நட்டத்தை அறவிடுவதற்காக பிரதேச சபை விதி 13, 14, 15 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **தலாவ பிரதேச சபை** | 2019 ஏப்ரல் 15 ஆம் திகதி விபத்திற்குள்ளான சபைக்குச் சொந்தமான கப் வண்டியின் நட்டத்தில் ரூபா 4.46 மில்லியன் பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| **ஹொரவபொத்தான பிரதேச சபை** | சபைக்குச் சொந்தமான குப்பை முகாமைத்துவ நிலையத்தில் ரூபா 3.2 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்கள் விளைவற்றுக் காணப்பட்டதுடன் உக்கும் குப்பைகளில் இருந்து சேதனப் பசளை உருவாக்கப்பட்டு திண்ம குப்பைகள் தேர்தெடுக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகையால் சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் கொண்டு வரப்படும் குப்பைகள் மோட்டோகோநாவ காப்பகத்திற்கு சட்டவிரோதமான முறையில் கொட்டப்பட்டிருந்தன. |

| | |
|---|---|
| **பதவிய பிரதேச சபை** | வருமான உழைக்கும் செயற்திட்டத்திற்காக 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 5.83 மில்லியன் செலவிடப்பட்டு 34 மீன்பிடிப் படகுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் குறித்த மீன்பிடிப் படகுகளில் 30 படகுகள் வருமான உழைப்பிற்காகப் பயன்படுத்தப்படாது விளைவற்று சபை வளாகத்தில் காணப்பட்டன. |
| **பலாகல பிரதேச சபை** | 2022 ஆம் ஆண்டின் போது ஹிங்குருவெவ பிரதேசத்தில் ரூபா 19.7 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பல்நோக்குக் கட்டிடமும் கிணறும் விளைவற்றுக் காணப்பட்டன. |
| **நொச்சியாகம பிரதேச சபை** | சபையால் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 11.7 மில்லியன் பெறுமதியான 03 கட்டிடங்களும் பெறுமதி வெளிப்படுத்தப்பட்டிராத உத்தியோகபூர்வ இல்லம் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு வருமானம் ஈட்டப்படும் நோக்கிற்காகப் பயன்படுத்தப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராமையால் விளைவற்றுக் காணப்பட்டன. |
| **கஹட்டகஸ்திகிலிய பிரதேச சபை** | சபைக்குச் சொந்தமான கஹட்டகஸ்திகிலிய வாராந்த சந்தையில் இருந்து 2023 ஆம் ஆண்டின் சனவரி முதல் யூன் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியின் போது அறவிடப்பட்டிருந்த ரூபா 1.07 மில்லியன் தொகையான கட்டணம் சபைக்குக் கிடைக்கப்பெற்றிராமை தொடர்பாக அக் காலப்பகுதியின் போது கடமையாற்றிய வருமானப் பரிசோதக உத்தியோகத்தர் வேறு சபைக்கு இடமாற்றம் மாத்திரம் செய்யப்பட்டிருந்த போதிலும் முறையான ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு சபைக்கு நேர்ந்த நட்டத்தை அறவிடுவதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

# நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பித்திராத அரச தொழில் முயற்சிகள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (2) ஆம் பிரிவு மற்றும் 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 1/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் கண்காணிப்பின் கீழ் உள்ள அரசாங்கத்திற்கு உரித்தான தொழில்முயற்சிகள் (State Owned Enterprises) வர்க்கத்திற்குள் அடங்கும் நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்கள் நிதி ஆண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அரச கம்பனிகள் பதின்மூன்றும் (13), அரச கூட்டுத்தாபனங்கள் நான்கும் (04), நியதிச்சட்ட சபைகள் ஆறும் (06), நியதிச்சட்ட அதிகார சபைகள் மூன்றும் (03), ஏனைய நியதிச்சட்ட நிறுவனங்கள் பதின் மூன்றும் (13) உள்ளடக்கப்பட்ட 36 முப்பத்தாறு நிறுவனங்களுக்கு உரித்தான (அட்டவணை இல. 1,2 மற்றும் 3 இல் காண்பிக்கப்பட்டுள்ள) நிதிக்கூற்றுக்கள் நியதிச்சட்ட ஒழுங்கு விதிகளுக்கமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு உரிய நிறுவனங்களின் முகாமைத்துவ சபையால் 2024 யூலை 31 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிராத போதிலும் குறித்த நிறுவனங்கள் தொடர்பாக திறைசேரியின் அரச முயற்சிகள் திணைக்களத்தின் முறையான கண்காணிப்பிற்கும் கவனத்திற்கும் உட்பட்டிருக்கவில்லை.

குறித்த நிறுவனங்களால் இறுதியாக கணக்காய்விற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களிற்கு உரித்தான நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட ஆண்டுகள் மற்றும் குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் வழங்கப்பட்டுள்ள கணக்காய்வு அபிப்பிராயங்கள், நிறுவனங்களின் மொத்தச் சொத்துக்கள், உரிமைகள், பொறுப்புக்கள், மொத்த வருமானம் மற்றும் மொத்தச் செலவினங்கள் தொடர்பான தகவல்கள் பின்வரும் அட்டவணை இல. 2.50, 2.51 மற்றும் 2.52 இல் காண்பிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை இல. 2.50 - அரச கம்பனிகள்** **(ரூபா மில்லியன்)**

| கணக்காய்விற்கு உட்பட்ட நிறுவனம் | ஆண்டு | அபிப்பிராயம் | மொத்தச் சொத்துக்கள | உரிமைகள் | மொத்தப் பொறுப்புக்கள | மொத்த வருமானம | மொத்தச் செலவினங்கள் | வரிக்குப் பின்னைய இலாபம் / (நட்டம்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| மில்கோ (பிறைவட்) லிமிட்டெட் கம்பனி | 2020 | மறுப்பு | 21,511.87 | 653.81 | 20,858.05 | 11,191.16 | 10,965.40 | 226.00 |
| இலங்கை கோழி வளர்ப்பு அபிவிருத்தி (தனியார்) கம்பனி | 2021 | முனைப்பழியான | 263.58 | 209.14 | 54.44 | 65.99 | 56.62 | 9.00 |
| வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடை வள மற்றும் விவசாய வணிக (தனியார்) கம்பனி | 2019/ 2020 | மறுப்பு | 132.55 | (28.31) | 160.86 | 130.13 | 159.30 | (29) |
| வரையறுக்கப்பட்ட வோட்டர்ஸ் ஏஜ் ரிக்கிரியேஷன் | 2022 | முனைப்பழியான | 150.69 | (8.09) | 158.79 | 209.87 | 211.84 | 0.90 |
| வரையறுக்கப்பட்ட வோட்டர்ஸ் ஏஜ் | 2022 | முனைப்பழியற்ற | 7,448.02 | 1,486.76 | 5,961.26 | 2,322.41 | 1,878.87 | 353.20 |
| லங்கா சலுசல கம்பனி | 2010 | மறுப்பு | 275.62 | (367.36) | 642.98 | 231.21 | 150.99 | 80.21 |
| வரையறுக்கப்பட்ட லங்கா சதொச | 2022 | மறுப்பு | 12,175.35 | (12,609.84) | 24,785.19 | 57,545.66 | 57,581.08 | (35.42) |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வரையறுக்கப்பட்ட சதொச பாதுகாப்பு மற்றும் பொது (தனியார்) கம்பனி | 2022 | முனைப்பழியான | 119.15 | 45.20 | 73.95 | 249.77 | 255.04 | (5.27) |
| சதொச நிர்மாணிப்பு மற்றும் பொறியியல் (தனியார்) கம்பனி | 2020 | மறுப்பு | 272.06 | 13.55 | 258.50 | 5.61 | 8.58 | (3.86) |
| லங்கா ரெஸ்ட் ஹவுஸ் கம்பனி | 2021 | மறுப்பு | 97.84 | (32.27) | 130.12 | 36.31 | 38.32 | (2.0) |
| எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி | 2021 | - | 1,673.45 | 681.15 | 992.30 | 757.98 | 431.82 | 323.03 |
| வரையறுக்கப்பட்ட சதொச பாதுகாப்பு மற்றும் பொது (தனியார்) கம்பனி | 2021 | முனைப்பழியான | 119.15 | 45.20 | 73.94 | 249.76 | 255.03 | (5.27) |
| வரையறுக்கப்பட்ட நோர்த் சீ | 2020/2021 | முனைப்பழியான | 340.00 | 260.00 | 600.00 | 269.00 | 358.00 | (89.00) |

**அட்டவணை இல. 2.51 – அரச கூட்டுத்தாபனங்கள்/ நியதிச்சட்ட சபைகள் மற்றும் அதிகாரசபைகள்**

**(ரூபா மில்லியன்)**

| கணக்காய்விற்கு உட்பட்ட நிறுவனம் | ஆண்டு | அபிப்பிராயம் | மொத்தச் சொத்துக்கள் | உரிமைகள் | மொத்தப் பொறுப்புக்கள் | மொத்த வருமானம் | மொத்தச் செலவினங்கள் | வரிக்குப் பின்னைய இலாபம் / (நட்டம்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை | 2020 | முனைப்பழியான | 5,689.42 | 4,223.40 | 1,466.01 | 3,290.00 | 3,312.00 | (22) |
| பெருந்தோட்ட வலயத்திற்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை | 2019 | முனைப்பழியான | 0.05 | (0.45) | 0.5 | 0.00 | 2.50 | (0.50) |
| மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை | 2019 | மறுப்பு | 2,912.23 | (924.83) | 3,837.06 | 1,129.43 | 1,478.32 | (415.29) |
| மசாலாவும் அதுதொடர்பான தயாரிப்புகள் சந்தைப்படுத்தல் சபை | 2021 | முனைப்பழியான | 266.52 | 242.82 | 23.63 | 127.65 | 140.05 | 15.80 |
| கித்துள் அபிவிருத்தி சபை | - | - | - | - | - | - | - | - |
| தென்னைப் பயிர்ச்செய்கை சபை | 2020 | - | 769.30 | 100.51 | 668.79 | 48.33 | 2.15 | 46.20 |
| இலங்கை அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனம் | 2020 | - | 17,319.37 | 1,831.11 | 15,488.26 | 2,254.57 | 3,631.17 | (1,561.41) |
| வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டிட பொருட்கள் கூட்டுத்தாபனம் | 2018 | மறுப்பு | 549.05 | (930.23) | 1,479.27 | 233.48 | 184.83 | (167.21) |
| நெற் சந்தைப்படுத்தல் சபை | 2020 | மறுப்பு | 10,483.65 | (14,656.27) | 25,139.92 | 1,459.58 | 2,857.75 | 1,398.17 |
| தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை | 2021 | முனைப்பழியான | 31.02 | 14.33 | 16.69 | 35.36 | 58.66 | 8.68 |
| நகர அபிவிருத்தி அதிகாரசபை | 2021 | மறுப்பு | 219,766.08 | 77,103.82 | 142,662.26 | 4,041.96 | 3,790.60 | 235.10 |
| இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் | 2022 | மறுப்பு | 5,573.00 | 4,780.00 | 793.00 | 1,372.00 | 1,546.00 | 364 |
| கடற்றொழில் கூட்டுத்தாபனம் | 2018 | மறுப்பு | 1,985.00 | 397.00 | 1,588.00 | 3,179.00 | 3,213.00 | (34.00) |

**அட்டவணை இல. 2.52 – ஏனையவை ( நிதியம்/ மன்றம்/ பொருளாதார நிலையம்)**

**(ரூபா மில்லியன்)**

| கணக்காய்விற்கு உட்பட்ட நிறுவனம் | ஆண்டு | அபிப்பிராயம் | மொத்தச் சொத்துக்கள் | உரிமைகள் | மொத்தப் பொறுப்புக்கள் | மொத்த வருமானம் | மொத்தச் செலவினங்கள் | வரிக்குப் பின்னைய இலாபம் / (நட்டம்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| தேயிலை சக்தி நிதியம் | 2017 | மறுப்பு | 666.19 | 65.65 | 600.54 | 181.87 | 43.50 | 184.47 |
| தேசிய நூலகம் | 2021 | பாதகமான | 237.50 | 178.43 | 59.07 | 5.37 | 153.63 | 153.00 |
| சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம் | 2019 | முனைப்பழியான | 438.90 | 326.00 | 112.60 | - | 23.30 | 5.30 |
| விஜய குமாரதுங்க ஞாபகார்த்த மன்றம் | - | - | - | - | - | - | - | - |
| புத்தசாசன நிதியம் | 2021 | முனைப்பழியான | 845.24 | 843.24 | - | 42.44 | 24.80 | 17.70 |
| மத்திய கலாச்சார நிதியம் | 2019 | மறுப்பு | 8,574.98 | 7,564.03 | 1,010.95 | 4,016.05 | 4,164.28 | 1,917.00 |
| ஜே.ஆர். ஜெயவர்தன நிலையம் | 2022 | முனைப்பழியான | 193.52 | 172.10 | 21.43 | 44.53 | 39.04 | 5.50 |
| திரைப்பட கலைஞர்கள் மற்றும் திரைப்பட தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய திரைப்பட கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பு | 2022 | முனைப்பழியான | 18.2 | 18.10 | 0.10 | 1.80 | 9.90 | 0.20 |
| சமுர்த்தி நுண்நிதி எழுதுகருவிகள் சுழற்சி நிதியம | 2019 | முனைப்பழியற்ற | 167.00 | 133.00 | 22.00 | 13.00 | 2.00 | - |
| சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 2019 | முனைப்பழியான | 65.13 | 65.13 | - | 66.00 | 5.00 | - |
| லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச தொடர்புகள் மற்றும் உபாயக் கற்கைகள் நிறுவகம் | 2022 | முனைப்பழியான | 167.66 | 165.68 | 1.98 | 47.56 | 44.66 | 2.90 |
| வெயாங்கொடை பொருளாதார நிலையம் | 2021 | முனைப்பழியான | 256.55 | 253.96 | 2.57 | 18.92 | 12.59 | 6.32 |
| பிலியந்தல பொருளாதார நிலையம் | 2021 | மறுப்பு | 75.42 | 65.10 | 10.32 | 8.96 | 15.30 | (6.34) |

**செயற்பாடற்ற (Non-Operating) அரச முயற்சிகள்**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்களின் படி, 2024 யூலை 31 ஆம் திகதி வரை 10 அரச கம்பனிகளும், அரச கூட்டுத்தாபனங்கள் இரண்டும், செயற்பாட்டு நடவடிக்கைகள் செயற்படுத்தப்படாத நிலையில் காணப்பட்டன. இதில் இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி கூட்டுத்தாபனம் முடக்கப்பட்டு கூட்டுத்தாபனத்திற்குரிய அல்பிட்டிய போபம் இறப்பர் தொழிற்சாலை குத்தகைக்கிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததுடன் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் சகல ஊழியர்களும் 2023.09.30 ஆம் திகதி ஓய்விற்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். எனினும், குறித்த கூட்டுத்தாபனத்தைக் கலைப்பதற்கு இது வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத பத்து (10) அரச கம்பனிகளில் சில கம்பனிகள் அமைச்சரவைத் தீர்மானத்தில் கலைக்கப்படுவதற்கும் சில கம்பனிகள் தொடர்ந்து நட்டமடைந்தமையால் கம்பனி தன்னிச்சையாகக் கலைக்கப்படுவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானம் எடுத்திருந்தது. கலைக்கப்படுவதற்கு தீர்மானம் எடுத்திருந்த நான்கு (04) கம்பனிகள் கலைப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்த போதிலும் குறித்த நடவடிக்கைகள் 2024 யூலை

31 ஆம் திகதி வரையிலும் பூர்த்தியடைந்திராததுடன் ஆறு (06) கம்பனிகள் கலைப்பு நடவடிக்கைகளை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

குறித்த நிறுவனங்களால் இறுதியாக கணக்காய்விற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களுக்கு உரித்தான நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆண்டுகள் மற்றும் குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் வழங்கப்பட்டுள்ள அபிப்பிராயங்கள், நிறுவனங்களின் மொத்தச் சொத்துக்கள், உரிமைகள், பொறுப்புகள், மொத்த வருமானம் மற்றும் மொத்தச் செலவினங்கள் தொடர்பான தகவல்கள் பின்வரும் அட்டவணை 2.53 இல் காண்பிக்கப்பட்டுள்ளன;

**அட்டவணை இல. 2.53 செயற்பாடற்ற (Non-Operating) அரச முயற்சிகள்**

**(ரூபா மில்)**

| கணக்காய்விற்கு உட்பட்ட நிறுவனம் | ஆண்டு | அபிப்பிராயம் | மொத்தச் சொத்துக்கள் | உரிமைகள் | மொத்தப் பொறுப்புக்கள் | மொத்த வருமானம் | மொத்தச் செலவினங்கள் | வரிக்குப் பின்னைய இலாபம் / (நட்டம்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம் | 2020 | பாதகமான | 924.10 | (51.20) | 975.30 | 75.10 | 5.10 | (2.7) |
| வரையறுக்கப்பட்ட கந்தளாய் சீனி கைத்தொழில் | 2019 | மறுப்பு | 162.95 | (3.18) | 166.13 | 0.42 | 19.77 | 8.60 |
| வரையறுக்கப்பட்ட ஹிங்குரான சீனிக் கைத்தொழில் | 2015 | மறுப்பு | 300.29 | (1445.21) | 1,745.49 | 5.91 | 10.19 | 1.50 |
| வரையறுக்கப்பட்ட இயற்கை வள முகாமைத்துவ சேவைகள் (தனி) கம்பனி | 2019 | முனைப்பழி யான | 7.51 | 6.46 | 1.05 | 0.71 | 2.31 | (1.59) |
| வரையறுக்கப்பட்ட வென்சர் கபிடல் (தனி) கம்பனி | 2018 | மறுப்பு | 15.60 | 15.22 | 0.38 | 0.50 | 0.13 | 0.30 |
| லங்கா சீமேந்து (தனி) கம்பனி | 2016 | மறுப்பு | 275.25 | (634.16) | 909.41 | 36.02 | 41.70 | 5.68 |
| சிலின்டெக் அகடமி | 2021/2022 | முனைப்பழி யான | 4.60 | (8.6) | 13.20 | 0.05 | 1.60 | 0.30 |
| லங்கா ஜெமொலொஜிகல் லபோரடரி தனியார் கம்பனி | 2013/2014 | முனைப்பழி யற்ற | 139.01 | 124.18 | 14.83 | - | (0.26) | (0.26) |
| நெட்வெல்த் செக்கியூரிட்டி லிமிடட் | 2021 | முனைப்பழி யான | 1,286.47 | 811.26 | 475.21 | 61.55 | 79.49 | (423.38) |
| நசனல் வெல்த் கோர்பரேசன் லிமிடட் | 2021 | முனைப்பழி யான | 1,258.48 | 1,257.30 | 1.19 | 1.68 | 3.90 | (2.2) |
| கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் | 2020 | மறுப்பு | 11,050.71 | (2,941.27) | 13,991.98 | 26.39 | 645.37 | (614.42) |
| பாலியகொட வெயார் ஹவுஸ் கம்பனி | 2016 | முனைப்பழி யான | 220.56 | 196.66 | 23.90 | 84.26 | 9.78 | 65.87 |




# 03

# நிதியல்லா கணக்காய்வு

# செயலாற்றல் கணக்காய்வுத் துறை

அரசியலமைப்புச் சட்டத்தின் 154 ஆம் பிரிவின் பிரகாரம் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் பிரிவுகளின் மூலம் செயலாற்றல் கணக்காய்வினை மேற்கொள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டின் போது செயலாற்றல் கணக்காய்வு அலகொன்று நிறுவனத்தினுள் நிறுவப்பட்டதுடன், அது முதல் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு தலைப்புகளின் கீழ் நூற்றுக்கு அண்மிய செயலாற்றல் கணக்காய்வு அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. செயலாற்றல் கணக்காய்வின் மூலம் ஏதேனம் அரச நிறுவனம் ஒன்றிலன், நிகழ்ச்சித்திட்டத்தின், செயற்திட்டத்தின் அல்லது ஏதேனும் செலவினம் அலகொன்றின் தெரிவு செய்யப்பட்ட துறைகள் தொடர்பில் அதன் பொருளியல் நலன், செயற்திறன் மற்றும் ஆக்கபூர்வமான தன்மை மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நிறுவனத்தின் () அங்கத்துவ நாடுகளின் அதியுயர் கணக்காய்வு நிறுவனத்தினால் செயலாற்றல் கணக்காய்வு தொடர்பில் கூடிய கவனம் செலுத்தியவாறு உள்ளதுடன், எமது நாட்டில் பொது மக்கள் மற்றும் ஏனைய தரப்பினரிடையே செயலாற்றல் கணக்காய்வு அறிக்கை தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

எமது கணக்காய்வு INTOSAI இனால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள உள்நாட்டு தேவைப்பாடுகளுக்கு இணங்க ஒப்பிடப்பட்ட அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கான சர்வதேச நியமங்களுக்கு ( ISSAI) காணப்படும் தேவைப்பாடுகளுக்கு இணங்கும் வகையில் மேற்கொள்ளப்படுகின்றது. கணக்காய்வு நடவடிக்கைகள் தேசிய கணக்காய்வு அலவுலகத்தில் நிறுவப்பட்டுள்ள செயலாற்றல் கணக்காய்வு துறையின் போலவே கிளை மட்டத்திலும் மேற்கொள்ளப்படுகின்றது. சர்வதேச நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் ஒத்துழைப்பு கணக்காய்வுகளுக்கு பங்குபற்றுதலும் தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் நிறுவப்பட்ட செயலாற்றல் கணக்காய்வுத் துறையினால் மேற்கொள்ளப்படும்.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டு 2023 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் கணக்காய்வு அறிக்கைகளின் பஜரதான விடயங்கள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கைகள் பின்வருமாறு.

## நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்தலை கணக்காய்வு செய்தல் - இலங்கையில் வலுவான மற்றும் மீளத்தக்க தேசிய பொது சுகாதார முறைமை (நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 3(ஈ) தொடர்பானது

### வெளியிடுவதற்கான பின்புலம்

நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 3 இன் கீழ் ஆரோக்கியமான வாழ ்க்கையை உறுதிப்படுத்தல் மற்றும் அனைத்து வயதினருக்கும் நல்வாழ ்வை மேம்படுத்துதல் என்பன குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இது 2015 இல் ஐக்கிய நாடுகள் சபையால் நிறுவப்பட்ட 17 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளில் ஒன்றாகும். நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 3 ஐ அடைய நிறுவப்பட்ட இலக்குகளில் அனைத்து நாடுகளின் திறனை வலுப்படுத்துதல், குறிப்பாக வளரும் நாடுகளில், முன்கூட்டியே எச்சரிக்கை, அபாயக ் குறைப்பு மற்றும் தேசிய மற்றும் உலகளாவிய சுகாதார அபாயங்களை நிர்வகித்தல்" இலக்கு 3.ஈ ஆல் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த இலக்கின் சாதனைகள் குறிகாட்டிகளால் மதிப்பிடப்படுகிறன: பாதுகாக்கவும், கட்டுப்படுத்தவும், பொது சுகாதாரப் பதிலை வழங்கவும், சர்வதேச சுகாதார ஒழுங்குமுறைகள் (IHR 2005) ஆனது 2005 மே 23 அன்று 58 ஆவது உலக சுகாதார சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடு என்ற வகையில் இலங்கையும் சர்வதேச சுகாதார விதிமுறைகளை பின்பற்ற கடமைப்பட்டுள்ளது. இன்றைய

பொதுமக்கள் தொற்று நோய் பரவும அபாயங்கள், அவசரநிலைகள் மற்றும் அந்த பயன்பாடுகள் மற்றும் பிற ஆபத்துகளுடன் தொடர்புடைய பேரழிவுகள் ஏற்படல் ஆகியவற்றுக்கு உள்ளாகியுள்ளதுடன், மேலும் இந்த அபாயங்களையும் அவற்றின் விளைவுகளையும் குறைப்பது சுகாதார பாதுகாப்பிற்கு அவசியம் ஆகும்.

இந்த இலக்குகளை அடைவதற்கான நாட்டின் தயார்நிலை மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் செயல்திறனை மதிப்பீடு செய்வதே அறிக்கையின் நோக்கமாகும்.

**அறிக்கையை வெளியிட்ட நிறுவனங்கள் பின்வருமாறு**

சுகாதார அமைச்சு, நிதி அமைச்சு, பொருளாதார உறுதிப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், உள்ளூராட்சி சபைகள் அமைச்சு, விவசாய அமைச்சு, கடற்றொழில் அமைச்சு, சுற்றாடல் அமைச்சு, நிலையான அபிவிருத்தி சபை, அனர்த்த முகாமைத்துவ நிலையம், கால்நடைவள உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம், நிதி ஆணைக்குழு மற்றும் இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் சபை.

**வழங்கப்பட்ட முக்கியமான பரிந்துரைகள்**

- தேசிய சுகாதார சபை உடனடியாக மீண்டும் நிறுவப்பட்டு, 3(ஈ) இலக்கு தொடர்பாக முக்கிய பங்குதாரர்களால் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் சர்வதேச சுகாதார பிரமாணங்கள் செயற்படுத்தல் குழுவுடன் சுகாதார சபையின் தொடர்ச்சியான சந்திப்பின் மூலம் ஒத்துழைக்க வேண்டும்.

- தடுப்பூசிகள் உட்பட ஒவ்வொரு கொள்வனவுக்கும் பெறுகை வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டியதுடன் மருந்துகளுக்கு செயற்திறனான இருப்பு கட்டுப்பாட்டு முறைமை அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

- அனர்த்த தயார்நிலை மற்றும் பதிலளிப்புப் பிரிவு (DPRD) மற்றும் சர்வதேச சுகாதார ஒழுங்குமுறைகளுக்கான மையங்கள் சுகாதாரப் பாதுகாப்பிற்கான தேசிய செயல்திட்டம் தொடர்பான அனைத்துப் பங்குதாரர்களுக்கும் அவர்களின் பொறுப்பை உணர்த்தவும், சுகாதாரப் பாதுகாப்புக்கான தேசிய செயல்திட்டத்தை (NAPHS) செயல்படுத்துவதில் அனைத்துப் பங்குதாரர்களின் செயலூக்க ஈடுபாட்டைப் பெறவும் செயல்பட வேண்டும்.

- நாட்டின் ஒட்டுமொத்த சுகாதாரத் தகவலைக் காட்சிப்படுத்துவதற்கு ஒரு சிறந்த சுகாதார தகவல் முறைமையை நிறுவுதல்.

- பொது சுகாதார அமைப்பை வலுப்படுத்த கீழ் மட்டத்தில் அரச தரப்பு சுய மதிப்பீட்டு அறிக்கையின் (SPAR) செயல்பாடுகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

- பொறுப்புக்கூறல், உள்ளடக்குதல், சுயாதீனத்தன்மை, சான்றாதாரங்களை அடிப்படையாகக் கொண்ட, வெளிப்படையான மற்றும் தீர்வு நடவடிக்கைகளுக்கு வழிவகுப்பதற்கான பொறிமுறைகளை நிறுவுதல்.

- நிலையான அபிவிருத்தி சபையானது சட்டத்தின் கீழ் நிஅஇகளை (SDGs) கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதலிற்கான முக்கிய நிறுவனமாக இருப்பதால் நிஅஇ 3(ஈ) இலக்கு உட்பட நிஅஇ (SDGs) இலக்குகளுக்கான தொடர்ச்சியான கண்காணிப்பு முறைமையை சபை பேணுதல் வேண்டும்.

- பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் 2021 முதல் 2024 வரை சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பான செயற்திட்டங்கள் / நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

- மாகாண அடிப்படையில் வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிப்பதில், சுகாதாரப் பாதுகாப்பிற்கான தேசிய செயற்திட்டம் (NAPHS) நிதி ஆணைக்குழுவுடன் ஒருங்கிணைக்கப்பட வேண்டும் மற்றும் வரி சுகாதார அமைச்சு மாகாண சபைகளுடன் தீவிரமாக இணைக்கப்பட வேண்டும் மற்றும் மாகாண சபைகளும் ஒருங்கிணைக்க வேண்டும். சுகாதார பாதுகாப்புக்கான தேசிய செயல் திட்டத்தின் (NAPHS) முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்.

- பிரதேச சுகாதார சேவைகளின் பணிப்பாளர் அலுவலகத்திற்கு (RDHS) வளங்களை ஒதுக்குவது, மக்கள் தொகைப் பரவல் மற்றும் பிற தொடர்புடைய தேவை காரணிகளின் இருப்பைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

  சுகாதார துறையின் கீழ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் உற்பத்தி மற்றும் மேம்படுத்தல் தொடர்பில் அரச நிறுவனங்களின் பணிப்பொறுப்பினை மதிப்பீடு செய்தல்

### வெளியிடுவதற்கான பின்புலம்

விவசாயத்திற்குச் சாதகமான காலநிலை நிலவும் சூழல் காணப்படுதல் மற்றும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை முறைக்குப் பழக்கப்பட்ட மக்கள் வாழும் காரணத்தால் நீண்ட காலம் தொட்டு உள்நாட்டு நுகர்வைப் போன்றே ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட விவசாயப் பயிர்ச்செய்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நீண்ட காலமாக ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கை ஏற்றுமதி பங்களிப்பில் போதுமான அளவில் முன்னேற்றம் ஏற்பட்டு இருக்காமை, உள்நாட்டு சந்தைகளில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு, பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளின் ஏற்றுமதி குறைந்த சதவீதத்தில் காணப்படுவதால் கிடைக்கும் அந்நிய செலாவணி வருமானம் குறைவடைதல், ஒரு சில ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கை 1 கிலோ கிராம் அலகுக்கான ஏற்றுமதி வருமானத்துடன் ஒப்பிடும்போது அதிக செலவில் இறக்குமதி செய்தல், விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்காமை, மீள் ஏற்றுமதி சிக்கல்கள் மற்றும் வெளிநாட்டு அந்நிய செலாவணி ஈட்டும் தேவைப்பாட்டிற்கு அமைய ஏற்றுமதி விவசாயப் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் நடவடிக்கை மேற்கொள்ளும் அரச நிறுவனங்களின் செயலாற்றலை மதிப்பிடல் என்பன இந்தக் கணக்காய்வின் பிரதான நோக்கமாகும்.

**அறிக்கை பின்வரும் நிறுவனங்களுக்கு வெளியிடப்பட்டது**

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, விவசாய திணைக்களம், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை, ஏற்றுமதி விவசாய திணைக்களம், பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

**வழங்கப்பட்ட முக்கியமான பரிந்துரைகள் பின்வருமாறு**

- ஏற்றுமதி விவசாயப் பயிர்களை ஊக்குவிப்பதற்கு ஏற்றுமதி விவசாயம் தொடர்பான கொள்கையினை உள்ளடக்கி விவசாயக் கொள்கை ஒன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்துதல்.

- 1992 இன் 46 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாய ஊக்குவிப்புச் சட்டமானது சாதகமான திருத்தங்களை இணைத்து உடனடியாக நடைமுறைக்கு கொண்டு வரல்.

- ஆராய்ச்சி முன்னுரிமைகளை அடையாளம் கண்டு அதனுடன் போதியளவு நிதியினை பெற்றுக் கொடுப்பதன் மூலம் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளின் ஏற்றுமதியினை ஊக்குவித்தல்.

- உள்நாட்டு மருந்துகளுக்குத் தேவையான பயிர்களை உற்பத்தி செய்வதற்கு மேலதிகமாக ஏற்றுமதியினை நோக்காக கொண்டு இலங்கை ஆயுர்வேத கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான மூலிகை தோட்டங்களில் மற்றும் வேறு பொருத்தமான இடங்களில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.

- விவசாயப் பயிர்களில் இருந்து முடியுமான வரையில் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள், துணை உற்பத்திகளை அடையாளம் காணுதல் மற்றும் அவற்றுக்கான வழிமுறைகளைத் திட்டமிடுதல்.

- ஏற்றுமதி விவசாயப் பயிர்களுக்குரிய விதை மற்றும் நாற்றுப் பொருட்களை சான்றுப்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவு மற்றும் திறன் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திடம் உள்ளதால் அதற்குத் தேவையான சட்ட ரீதியான அதிகாரத்தை ஏற்றுமதி விவசாயப் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக் கொள்ளும் வகையில் குறித்த சட்டரீதியான திருத்தங்களை உருவாக்குதல்.

- வாசனைத் திரவியங்கள் மற்றும் அவை சார்ந்த உற்பத்தி விற்பனை சபையின் மூலம் சிறு ஏற்றுமதிப் பயிர்களைக் கொள்வனவு செய்தல், உற்பத்தியாளர்களுக்குத் தேவையான இருப்பினை பெற்றுக் கொடுத்தல் மற்றும் நியாயமான விலைக்குத் தரமான பொருட்களை நுகர்வோருக்கு பெற்றுக் கொடுத்தல்.

- ஏற்றுமதி விவசாயப் பயிர்களுக்குரிய விதை மற்றும் நாற்றுப் பொருட்களை சான்றுப்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவு மற்றும் திறன் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திடம் உள்ளதால் அதற்குத் தேவையான சட்ட ரீதியான அதிகாரத்தை வழங்குதல்.

- விவசாயப் பயிர் வகைகளுக்குரிய நாற்றுக்களை விவசாயிகளுக்குப் பெற்றுக் கொடுக்கும் போது பயிர்ச்செய்கைக்குத் தேவையான வசதிகள் காணப்படுகின்ற தீர்மானமாக அடையாளம் காணப்பட்ட பயிர்ச்செய்கையாளர்களுக்கு மட்டும்

நாற்றுக்களை வழங்குதல் மற்றும் அறுவடை செய்தல் வரையில் தொடர்ச்சியான கண்காணிப்பு முறையினைத் தயாரித்தல்.

- ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் சார்ந்த விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்களுக்கு சிறந்த விவசாய நடைமுறைகள் (GAP) மற்றும் சிறந்த உற்பத்தி நடைமுறைகள் (GMP) சான்றழதழ்களின் பிரகாரம் உற்பத்தியில் ஈடுபடல்.

**விவசாயத் துறையின் கீழ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.**

## கொள்கலனுடைய நடமாடும் டீசல் மின்பிறப்பாக்கிகளின் கொள்வனவு மீதான செயலாற்றல் மதிப்பீடு

### அறிக்கையை வெளியிடும் பின்புலம்

மின்சார சபை மின்சாரத்தை உற்பத்தி செய்யும் சில சந்தர்ப்பங்களில் உற்பத்தி குறைவின் காரணமாக மற்றும் சிறு குறைபாடுகளின் காரணமாக மொத்த முறைமையும் செயலிழக்க நேரிடும் என்பதால் மின் உற்பத்தியில் குறைவு ஏற்படும் சந்தர்ப்பங்களை தவிர்ப்பதற்காக 1 MW/1.25 MVA கொள்கலன் செய்யப்பட்ட 50 டீசல் மின்பிறப்பாக்கி இயந்திரங்கள், கொள்கலன் செய்யப்பட்ட 25 டிரான்ஸ்போமர்கள் மற்றும் கொள்கலன் செய்யப்பட்ட 25 எரிபொருள் தாங்கிகள் என்பவற்றை கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்கான மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா 3,000 மில்லியன் ஆக இருந்ததுடன், அதற்குத் தேவையான நிதி இலங்கை மின்சார சபையினால் செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2023 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தப் பெறுமதியில் 10 சதவீதம் முற்பணத் தொகையுடன் ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்ட மொத்தப் பெறுமதி ஐ.அ.டொலர். 12,209 மில்லியனுக்கு சமமான ரூபா 2,373.32 மில்லியன் ஆகும். இந்த செயற்திட்டத்தின் மூலம் தேசிய மின் முறைமை அவசரமாக செயலிழக்க நேரிடும் போது உரிய சேவைகளை பிரதேச மட்டத்தில் தொடர்ச்சியாக வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன், இதன் மூலம் நாட்டின் பிரதேசங்களுக்கு மின்சாரம் செயலிழக்கும் போது ஏற்படுகின்ற நெருக்கடிகளை தற்காலிகமாக மாற்றியமைப்பதன் மூலம் மக்களின் அன்றாட வாழ்வாதார நடவடிக்கைகள், பொதுமக்களின் செயற்பாடுகள் மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக பேணிச் செல்லும் நோக்கத்தில் இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போதும் அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு தவறியமையின் காரணமாக இது தொடர்பாக செயலாற்றல் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.

### அறிக்கை பின்வரும் நிறுவனங்களுக்கு வெளியிடப்பட்டது

இலங்கை மின்சார சபை, மின்சார அமைச்சு

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

**வழங்கப்பட்ட முக்கியமான பரிந்துரைகள் பின்வருமாறு**

- மின்வலு வழங்கும் நம்பகத் தன்மையை மேம்படுத்தும் நோக்கில் ஆகக் குறைந்த கிரயத்துடன் நீண்ட கால உற்பத்தி திட்டமொன்று மற்றும் நீண்ட கால விநியோகித்தல் அபிவிருத்தி திட்டமொன்றில் குறிப்பிடப்படுகின்ற நடவடிக்கைகளுக்கு செயற்பாடுகளில் உடன்படல்.

- திட்டங்களுக்கு புறம்பான செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படுமாயின் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும்.

- விலைக்கேள்வி ஆவணங்கள் தயாரிக்கும் போது உரிய நோக்கங்கள் சரியாக அடைந்து கொள்வதற்கு முடியுமான வகையில் நிபந்தனைகளை உள்ளடக்குதல் வேண்டும்.

- கேள்விதாரரின் முன்னைய தகைமைகளை பரீட்சிக்கும் போது உரிய நோக்கங்களை அடைந்து கொள்ளக் கூடிய வகையில் மிகவும் பொருத்தமான முறைமையொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும்.

- உயர் பெறுமதியுடைய கொள்வனவுகளுக்காக விரிவான கிரய பொறியியல் மதிப்பீடு தயாரிக்க வேண்டியிருந்ததுடன், கேள்வி மதிப்பீட்டின் போது மதிப்பீடு மற்றும் ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் கிரயங்களுக்கு இடையே முரண்களை மதிப்பிடுதல் வேண்டும்.

- ஒன்றிணைந்த கணிசமான அளவில் ஒப்பந்தங்கள், வளங்கள் பொருத்துதல் என்ற ஒப்பந்தங்களுக்காக இரட்டை உறை முறைமை பயன்படுத்தல், செயற்திட்டம் கால அட்டவணையின் பிரகாரம் மேற்கொள்ளப்படல், சபையினால் மேற்கொள்ள வேண்டிய சிவில் வேலை போன்றவைகள் உரிய பிரகாரம் நிறைவேற்றுதல், மின்பிறப்பாக்கிகளை செயற்படுத்துதல் மற்றும் பராமரித்தல் தொடர்பாக சபையின் உத்தியோகத்தர்களுக்கு ஒழுங்கு முறையாக பயிற்சியை வழங்குதல்.

- உயர் தொழில்நுட்பம் கொண்ட கொள்வனவுகளின் போது விலைக்கேள்விகளின் தொழில்நுட்ப அயலுமை மற்றும் அனுபவம் தொடர்பில் விசேட கவனம் செலுத்துதல்.

**அவதானிப்புகள் உள்ளடக்கப்பட்டுள்ள துறை மின்சாரம் மற்றும் வலுச்சக்தி துறை**

**இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்கள் தொகுதியை உச்ச இயலளவில் பயன்படுத்தும் செயலாற்றல்**

**அறிக்கையை வெளியிடும் பின்புலம்**

தற்பொழுது இலங்கை போக்குவரத்துச் சபை நாடளாவியரீதியில் பரவிக் காணப்படுவதுடன் பயணிகள் போக்குவரத்து சேவையை நிறைவேற்றுவதற்காக சபையின் நடவடிக்கைகளை 5 பயன்முகப்படுத்தவதனை முன்னிட்டு 12 பிராந்திய அலுவலகங்களைத் தோற்றுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த பிராந்திய அலுவலகங்களின் கீழ் 114 டிப்போக்கள் தோற்றுவிக்கப்பட்டன. மேலும் பஸ்களை திருத்தம் செய்தல் மற்றும் பராமரித்தல் நடவடிக்கைகளுக்காக 11 பிராந்திய வேலைத்தளங்களும் 07 சாரதி பயிற்சிக் கல்லூரிகளும் சபையின் கீழ் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பஸ் தொகுதியில் 6951 பஸ்கள் உள்ளதுடன் செயற்பட வேண்டிய மொத்த செயற்படும் கால

அட்டவணைகளின் எண்ணிக்கை 7,339 ஆகும். வழங்கப்பட்டுள்ள இலக்குகளின் பிரகாரம் 5,050 பஸ்கள் செயற்பட்டிருந்ததுடன் அது 84 சதவீதமானக இருந்தது

**அறிக்கை பின்வரும் நிறுவனங்களுக்கு வெளியிடப்பட்டது**

- போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு
- போக்குவரத்து ஆணைக்குழு

**வழங்கப்பட்ட முக்கியமான பரிந்துரைகள் பின்வருமாறு**

- தேசிய போக்குவரத்து கொள்கையை தயாரிப்பதனை துரிதப்படுத்துதல்.
- 1991 இன் 37 ஆம் இலக்க போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் உரிய செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- 1991 இன் 37 ஆம் இலக்க போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் உரிய செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- பொது போக்குவரத்து சேவையின் தரத்தினை மேம்படுத்தும் வகையில் பஸ் தொகுதியினைப் **(Fleet)** பயன்படுத்தக்கூடிய முறைமையில் பிரேரணைகளை அமுல்ப்படுத்துதல்.
- 2005 இன் 27 ஆம் இலக்க போக்குவரத்து சபை அதிகாரச் சட்டத்தின் 10.1 (அ) பிரிவின் பிரகாரம் தேசிய போக்குவரத்:து ஆணைக்குழு மற்றும் உரிய மாகாண போக்குவரத்து அதிகார சபை மற்றும் போக்குவரத்து சபையின் பிரேரணைகளை உள்ளடக்கி பாதீடு உள்ளடங்கலாக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தினை தயாரித்தல்.
- தற்பொழுது செயற்படுகின்ற பயண முனைய சேவைகளை வினைத்திறனாக திருத்தம் செய்து இனங்காணப்பட்ட புதிய வீதிகளில் பஸ்களை செயற்படுத்துதல், தபால் சேவைகள் மற்றும் கூரியர் சேவைகளை ஆரம்பித்தல் மற்றும் புதிய அலுவலக பஸ் சேவைகளை அறிமுகப்படுத்துதல்.
- புதிய அலுவலக பேரூந்து சேவைகளை அறிமுகப்படுத்தல், நிதி ஏற்பாடுகளை முறையாக பயன்படுத்தி பிராந்திய வேலைத்தளங்கள் மற்றும் டிப்போக்களின் மூலம் பழைய உதிரிபாகங்கள் மற்றும் பஸ்களை திருத்தம் செய்தல்.
- தொழில்நுட்ப பிரிவின் ஆளணியை முறையாக பயன்படுத்துதல், டயர்களை மீள்நிரப்பும் தொழிற்சாலையின் இயலளவினை அதிகரித்து சபையின் பஸ் தொகுதிக்கான டயர்களை மீள் நிரப்புதல் (Rebuild) மற்றும் மீள் உருவாக்கல் (Recap) செய்வதற்காக நடவடிக்கை எடுத்தல்.
- தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் பயணிகள் போக்குவரத்து தேவைப்பாட்டினை நிறைவேற்றும வகையில் விஞ்ஞான ரீதியாக தீர்மானம் எடுக்கின்ற போது நேர அட்டவணையின் அடிப்படையில் பயணிகள் போக்குவரத்து தேவைப்பாட்டினை நிறைவேற்றுதல் மற்றும் பயணிகளுக்கு பாதுகாப்பு மற்றும் சௌகரியத்தினை வழங்கும் வகையில் அரசாங்கம் மற்றும் தனியார் ஆகிய இரண்டு துறைகளினதும் பஸ்களுக்கு உரியவாறு சுழற்சி நேர அட்டவணையை தயாரித்தல்.

- நேர அட்டவணை தயாரிக்கின்ற செயற்படும் வீதியின் அல்லது செயற்படும் வீதிகளின் மொத்த சந்தைப் பங்கில் 40% ஆன அளவினை சபையின் மூலம் உள்ளடக்குவதற்காக உரிய நடவடிக்கை எடுத்தல்.

- பஸ்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பான தரப் பரிசோதனையை தொடர்ச்சியாக மேற்கொள்ளல் மற்றும் சாரதிகளினதும் நடத்துனர்களினதும் பற்றாக்குறையை தவிர்த்து முறைப்படியாக கடமைச் சுழற்சியினைத் தயாரித்தல்.

- பஸ்கள் திருத்தம் செய்யும் நடவடிக்கைகளுக்காக வருகின்ற சந்தர்ப்பத்தில் டிப்போ பொறியியலாளரினால் உரிய பஸ்களின் தரம் தொடர்பான தர அறிக்கையினைப் பெற்றுக்கொள்ளல், பழுதுபார்த்தல் மேற்கொண்டு மீண்டும் இயக்குவது, சரியான நேரத்தில் பராமரிப்பு மற்றும் கிரீஸ் தடவி பஸ்கள் இயங்குவதற்கு ஏற்ற நிலையில் உள்ளதா என சரிபார்த்தல்.

- டிப்போக்களில் இருந்து பேருந்துகளுக்கான உதிரி பாகங்களை வாங்குவதற்குப் பதிலாக ஒரு மையப்படுத்தப்பட்ட விநியோக செயல்முறைக்கு ஒரு நெறிப்படுத்தப்பட்ட கட்டமைப்பை அறிமுகப்படுத்துதல்.

- பாரிய கழிவுடனான உருப்படிகளான டர்போசார்ஜர், ரேடியேட்டர், ஸ்டார்டர் மோட்டார், டயர்கள், உதிரி பாகங்கள், பேட்டரிகள், எரிபொருள் பம்புகள் மற்றும் இன்ஜின் ஆயில் போன்ற அதிக மதிப்புள்ள பொருட்களை டிப்போ அளவில் கொள்முதல் செய்வது நிறுத்தப்பட்டு, தேவையான இருப்புக்கள் திறந்விலைக்கேள்வி மூலம் கொள்வனவு செய்யப்பட்டு டிப்போக்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுத்தல்.

- புகைப் பரிசோதனை அறிக்கைகள் மற்றும் பேருந்துகளுக்கான சுற்றாடல் அனுமதிகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துக் குழாம **(Fleet)** பொருளாதார ரீதியாகவும், வினைத்திறனாகவும், விளைத்திறனாகவும், செலவு குறைந்த, நம்பகமான மற்றும் வசதியான போக்குவரத்துச் சேவைக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

**அவதானிப்புகள் உள்ளடக்கப்பட்டுள்ள துறை**

- போக்குவரத்து துறை

## சிறைச்சாலைகளில் காணப்படுகின்ற இட நெருக்கடியை முகாமைத்துவம் செய்தல் தொடர்பான செயலாற்றல் கணக்காய்வு

சிறைச்சாலையின் வடிவம் தொடர்பாக இங்கிலாந்தின் ஜோன் ஹோர்வாட் (துழாபெ ர்ழசறயசன) இனால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம் சிறைச்சாலைகளின் சுத்தம், இட வசதிகளுடன், கல்வி ரீதியான மற்றும் சமய கற்பித்தல்கள் மேகொள்ள வேண்டியிருந்ததுடன் உரிய நபர் விலகிச் சென்றதன் பின்னர் அவர் தொடர்பாக கண்டறிய வேண்டிய நிறுவனமாக இனங்காணப்பட்டிருந்தது. கைதி ஒருவர் குற்றம் இழைத்தவராக இருக்கும் போது அவர் உடலியல் மற்றும் மனரீதியான அழுத்தங்களுக்கு உட்படுத்தி தவறுக்கான தண்டனை வழங்க வேண்டியது என்ற நோக்கம் மற்றும் தவறின் அளவில் பாதிப்பு ஏற்படக்கூடியது என்ற எண்ணக்கரு கடந்த காலத்தில் சிறைச்சாலை முறைமையில் காணப்பட்டது. இந்த எண்ணக்கரு

முன்னாள் இருந்த ஆய்வாளர்கள் மற்றும் சமூக சீர்திருத்தவாதிகளின் கடுமையான விமர்சனத்திற்கு உட்பட்டிருந்தது. இந்த விடயத்தை அடிப்படையாக கொண்டு சிறைச்சாலை நோவினை கொடுக்க வேண்டியில்லாது இருந்ததுடன் அது சமூக சீர்திருத்தகமாக இருக்க வேண்டிய எண்ணம் மேல்லோங்கியிருந்தது. இதன் காரணமாக தண்டனை வடிவத்தில் காணப்பட்ட சிறைச்சாலையின் வரலாறு சீர்திருத்தமாக உட்பட்டு சீர்திருத்த கொள்கையொன்று முதன்மையாக கொண்டு கைதிகளை நிர்வகித்தல் மேற்கொள்ளப்படுகின்றது.

**அறிக்கை வழங்கப்பட்ட நிறுவனம் / நிறுவனங்கள்**

சிறைச்சாலைகள் திணைக்களம், நீதி சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு சீரதிருத்த அமைச்சு

**வழங்கப்பட்ட முக்கியமான பரிந்துரைகள் பின்வருமாறு**

- 1877 இன் 16 ஆம் இலக்க சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் 54 ஆவது அத்தியாயத்திற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் 178 மற்றும் 179 ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்.

- மீண்டும் மீண்டும் சிறையில் அடைக்கப்படுவதை குறைப்பதற்காக வலுவான மற்றும் போதியளவான புனர்வாழ்வு செயற்பாடுகளை ஏற்படுத்துதல் மற்றும் வாழ்வாதார பயிற்சிகளை வலுப்படுத்துதல்.

- முன்னைய வழக்கு விசாரணைகளை தடுத்து வைத்தல் குற்றங்களை சமர்ப்பித்தல் தாமதத்தை குறைப்பதற்கு உள்ள உரிய தரப்பினர் முன்வரல்.

- தடுத்து வைத்தல் சிறைச்சாலைக்கு பதிலாக வீட்டின் உள்ளே தடுத்து வைத்தல் போன்ற மாற்று ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைமை இலங்கை குற்றம் இழைக்க கூடிய இனங்காணல் தொடர்பாக கவனம் செலுத்தி பொருத்தமான நடவடிக்கை எடுத்தல்.

- நீதிமன்றத்தின் மூலம் சிறைச்சாலையில் அடைக்கப்படுகின்ற சந்தேக நபர்களுக்கு உரியதாக பொலிஸ் திணைக்களத்தால் அரச இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு தெரிவுகளுக்குரிய இரசாயன பகுப்பாய்வு அறிக்கை நீதிமன்றத்திற்கு தாமதமின்றி சமர்ப்பித்தல்.

- குற்றம் இழைக்கும் மூலங்களில் காணப்படுகின்ற நிறுவனங்களுக்கு இடையே புரிந்துணர்வு பொறிமுறை ஒன்றை அபிவிருத்தி செய்தல் மற்றும் இயலுமானவரை நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துதல்.

- குடியிருப்பாளர்களின் தங்குமிடம் மற்றும் பராமரிப்பிற்கான சர்வதேச மற்றும் தேசிய நியமங்களின் படி கைதிகளை தடுத்து வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளல்.

- சிறைச்சாலைகள் முகாமைத்துவத்திற்கு இலகுவான வகையில் சமூக பாதுகாப்புக்கு இழப்பு ஏற்படாத வகையில் போதைப்பொருள் குற்றங்கள் மற்றும் தொடர்புடைய சட்டங்களை திருத்துதல் தொடர்பாக கவனம் செலுத்துதல்.

- புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களை போதியளவான பிரகாரம் ஈடுபடுத்தல் மற்றமு் தேவையான திருத்தங்களை மேற்கொள்ளல்.

- சிறைச்சாலைகள் திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினில் தற்போது வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ள அத்தியாவசிய பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்தலை விரைவுபடுத்துதல்.

- சிறைச்சாலை திணைக்களத்தின் பதவி வெற்றிடங்களுக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்தல்.

- கைதிகளின் உழைப்பு மற்றும் அறிவை சமூகரீதியான உற்பத்தி நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்தல்.

**அவதானிப்புகள் உள்ளடக்கப்பட்டுள்ள துறை**

நீதி சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு சீரதிருத்த துறை

**போக்குவரத்து துறை**

**இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்கள் தொகுதியை உச்ச இயலளவில் பயன்படுத்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட செயலாற்றல் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கியமான அவதானிப்புகள்**

| | |
|---|---|
| தேசிய போக்குவரத்துக் கொள்கை | 1991 நவம்பர் 27 ஆந் திகதி அமைச்சரவையினால் அங்கீகரித்த போக்குவரத்து கொள்கை 2009 ஒக்தோபர் 14 ஆந் திகதி திருத்தம் செய்யப்பட்டிருந்தது. 2023 மார்ச் 01 ஆந் திகதி வரை 15 ஆண்டுகள் காலம் கடந்திருந்தும் தேசிய போக்குவரத்து கொள்கையானது நாளதுவரையாக்கப்படாது இன்னும் வரைபு நிலையில் காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. |
| இலாபமீட்டாத போக்குவரத்து சேவைகள் மற்றும் போக்குவரத்து தடவைகள் | அதிகாரச் சட்டத்தின் முகவுரையின் (இ) பிரிவின் பிரகாரம் சமூக ரீதியாக அத்தியவசியமான எனினும் இலாபம் கிடைக்காத பயண வழிச் சேவை மற்றும் பயண தவணை பஸ்களின் மூலம் பயணிகள் போக்குவரத்து தொடர்பாக போதியளவான பஸ் சேவைகளை செயற்படுத்துவதற்கான ஏற்பாடுகளை வழங்குவதற்கும் அச்சேவைகளை வழங்குபவர்களுக்கிடையே சிறந்த போட்டியை உருவாக்கி நியாயமற்ற மற்றும் இலாபம் கிடைக்காத போட்டித் தன்மையை தவிர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கை மற்றும் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட |

வேண்டிய போதிலும் ஆணைக்குழுவினால் அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

பேரூந்து தொகுதி

இலங்கை போக்குவரத்துச் சபையின் தொழில்நுட்ப பிரிவின் மூலம் பிராந்தியங்களினூடாக 5,918 பஸ்களும் மத்திய பஸ் அலுவலகத்தினதும் அதி சொகுசு சுற்றுலா போக்குவரத்து சேவையின் 85 பஸ்களுமாக மொத்தமாக 6,003 பஸகளை நாளாந்தம் சேவைக்கு வழங்குவதற்கு திட்டமிட்டிருந்தும் தொழில்நுட்ப பிரிவின் மூலம் செயற்படுத்துவதற்கு வழங்குவதற்கு முடியுமாக உள்ள பஸ்களின் அளவு 5,118 அதாவது 85.26 சதவிதம் என அவதானிக்கப்பட்டது.

போதிய எண்ணிக்கையிலான சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் இல்லாதிருந்தமை

பஸ் தொகுதியை முழுமையாக செயற்பாட்டில் 786 மற்றும் நடத்துனர்களின் அளவு 7,768 தாக்கமளித்துள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. நீண்டகாலமாக சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் புதிதாக சேர்த்துக்கொள்ளாமை இந்நிலைமைக்கு காரணமாக உள்ளது என்பது மேலும் அவதானிக்கப்பட்டது.

காணப்படுகின்ற பஸ் தொகுதியில் ஆயுட்காலம் 15 ஆண்டுகளை மிகைத்து செயற்படாதுள்ள டாடா வகையான 630 பஸ்கள், லேலன்ட் வகையான 425 பஸ்கள், ஏனைய வகையான 50 பஸ்கள் என்பனவாக 1,105 பஸ்கள் காணப்படுவதுடன் இந்த பஸ்களில் எதுவும் பாதுகாப்பு நடைமுறையின்றி டிப்போக்களில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

2022 ஆம் ஆண்டின் பேரூந்துகளின் பழுதுபார்ப்பு

பஸ்களை புனரமைப்புச் செய்வதற்காக 2022 ஆம் ஆண்டில் பொதுத்திறைசேரியினால் ரூபா 750 மில்லியன் வழங்கப்பட்டிருந்ததுடன் இப்பணத்தைப் பயன்படுத்தி புனரமைப்புச் செய்து செயற்பாட்டிற்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட பஸ்கள் தொடர்பான எந்த அறிக்கையும் சபையிடம இல்லாததுடன் அப்பணத்தில் ரூபா 606.31 மில்லியன் போக்குவரத்துச் சபையினால் மற்றும் ரூபா 143 மில்லியன் லக்திவ பொறியியலாளர் நிறுவனத்தின் மூலமும் செலவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெய் கழிவினை அகற்றுதல்

போக்குவரத்து சபையின் அனைத்து டிப்போ வளவுகளில் மற்றும் பிராந்திய வேலைத்தளங்களில் உள்ள நிலையங்களின் எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணைக் கழிவுகளை வெளியேற்றுவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகரித்த நடைமுறை பின்பற்றப்பட வேண்டியதுடன் அதற்காக 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் மற்றும் 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டத்திற்கு இணங்க மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடமிருந்து அதிகாரப் பத்திரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. எனினும் சபையின் 12 பிராந்தியங்களின் தரவுகளுக்கு இணங்க மேற்கூறிய பிராந்தியங்களுக்குரிய 111 டிப்போக்கள் மற்றும் வேலைத்தளங்களில் 51 டிப்போக்கள் மற்றும் வேலைத் தளங்கள் சுற்றாடல் அதிகாரப் பத்திரத்தினை பெற்றுக்கொண்டிருக்காததுடன் கழிவுப் பொருட்களை சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் வெளியேற்றுவதும் இடம்பெற்றிருக்கவில்லை.

புகைப் பரிசோதனை பெற்றுக்கொள்ளல்

போக்குவரத்து சபையின் பஸ் தொகுதியில் அதிக எண்ணிக்கையானவை வருமான அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ளும் போது சமர்ப்பிக்க வேண்டிய புகை வெளியேற்றல் சான்றிதழினைப் (புகைப் பரிசோதனை சான்றிதழ்) பெற்றுக்கொண்டிருக்காததுடன் பரீட்சிப்பிற்கு உட்பட்ட கண்டி பிராந்தியத்திலுள்ள 07 டிப்போக்களின் 566 பஸ்களில் 226 பஸ்களுக்காக புகை வெளியேற்றல் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. உரிய முறைப்படி புகைப்பரிசொதனை சான்றிதழினைப் பெற்றுக்கொள்ளாமையின் அடிப்படையில் பஸ்களினால் நுகரப்படுகின்ற எரிபொருட்களின் மூலம் வெளியாகின்ற பாதகமான புகை அதாவது Co,S போன்ற ஈயத்தாது சுற்றாடலில் ஒன்று சேர்வதன் மூலம் புகை வெளியேற்றுவதன் மூலம் சுற்றாடல் மாசுபடலாம் என அவதானிக்கப்பட்டது.

**சிறைச்சாலைகளில் காணப்படுகின்ற சிறைச்சாலைகளில் இட நெருக்கடியை முகாமைத்துவம் செய்தல் தொடர்பான செயலாற்றல் கணக்காய்வு**

இலங்கையில் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சிறைச்சாலைகளில் கைதிகளின் எண்ணிக்கை 26,176 ஆக இருந்ததுடன் அதில் 53 சதவீதத்திற்கு மேற்பட்ட தரப்பினர் அதாவது 13இ794 பேர் போதைப் பொருள் குற்றங்கள் மற்றும் தொடர்புடையதான கைதிகள் ஆகும். போதைப் பொருள் குற்றம் தொடர்பாக 4,406 கைதிகளுக்கு சிறைக் கைதிகளாக இருந்ததுடன், 9,388 பேர் சந்தேகத்திற்குரியவர்களாகும்.

**வெலிக்கடை சிறைச்சாலை வாளகத்தை ஹொரணை வளாகம் பகுதியை மீண்டும் நிறுவுதல்**

வெலிக்கடை சிறைச்சாலை தொகுதி கொறனை பிரதேசத்தில் மீண்டும் ஸ்தாபிக்கும் செயற்திட்டம் நகர அபிவிருத்தி அதிகார சபை, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு மற்றும் சிறைச்சாலைகள் திணைக்களம் ஒன்றினைந்து மேற்கொள்கின்றது. இந்த செயற்திட்டத்திற்குரிய சுற்றாடல் தாக்கங்களில் மதிப்பீட்டறிக்கை, திட்டமிடல் நிர்மாண நடவடிக்கைகள், உள்ளக வழி மற்றும் உள்ளக வீதி, ந ீர் மற்றும் மின்சாரத்தை உள்ளடக்கிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவருத்தி செய்யும் நடவடிக்கைகளில் 30 சதவீதம் அளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. எனினும், நிதியமைச்சினால் விநியோகிக்கப்பட்ட 2022.04.26 ஆந் திகதிய இலக்கம் 03/2022 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி இந்த செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துதல் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

**சுகாதார வசதிகள்**

சிறைச்சாலை இயலளவை விஞ்சி கைதிகளின் அளவு அதிகரித்தமையால் கைதிகளுக்கு போதியளவு பிரகாரம் சுகாதார வசதிகளை வழங்குதல் கஷ்டமாகியிருந்தது. 2023 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையில் 27 சிறைச்சாலைகளில் 187 மலசல கூடங்களில் பற்றாக்குறை காணப்பட்டதுடன் தற்போது காணப்படுகின்ற மலசல 20 கூடங்களிலும் 287 பழுது பார்க்க வேண்டிய நிலைமைகளில் காணப்பட்டது.

#### இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கைகளை சமர்ப்பிப்பதிலான தாமதங்கள்

நீதிமன்றத்தின் மூலம் சிறைச்சாலைகளில் இடம் பெற்றுள்ள சந்தேக நபர்களுக்குரிய பொலிஸினால் இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதைப்பொருள் பாவனைகளுக்கு உரிய பகுப்பாய்வு அறிக்கை 12 மாதங்கள் விஞ்சாத காலத்தில் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் இந்த இரசாயன பகுப்பாய்வு அறிக்கை இது வரை சமர்ப்பிக்காமையினால் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு தடுத்து வைத்தல் சிறைச்சாலைகளில் உள்ள சந்தேக நபர்களின் எண்ணிக்கை 5,676 ஆகும்.

#### மேன்முறையீடுகளை சமர்ப்பித்து இறுதித் தீர்ப்பிற்கு காத்திருக்கும் கைதிகள்

கைதிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக நீதிமன்ற செயற்பாடுகளின் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் விசாரனை நடாத்தப்படாமை, தாமதமாயின் விசாரனைக்கு எடுத்தல் மற்றும் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக அது பொதுவான நிருவாகத்திற்கு புறம்பான விடயமாக இருந்தது. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறைப்பாடு சமர்ப்பிப்பதற்கு இறுதி தீர்மானம் பெற்றுக்கொள்வதற்கு இருந்த சிறைச்சாலைகளில் இருந்த கைதிகளின் எண்ணிக்கை 301 ஆகும். விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### சிறைக்கைதிகளின் ஊழியத்தை தனியார் துறை செயற்திட்டங்களுக்கு ஈடுபடுத்தல்

சிறைச்சாலைகளின் கூட்ட நெரிசலை அதிகரித்துச் செல்வதுடன் கைதிகளின் அளவு அதிகரிக்கின்றமையால் கைதிகளை புனர்வாழ்வளிப்பதற்காக காணப்படுகின்ற பௌதீக மற்றும் மனிதவளங்கள் பற்றாக்குறையின் அடிப்படையில் சிறைக்கைதிகளின் ஊழியத்தை தனியார் துறையின் செயற்திட்டங்களில் தனியார் கம்பனிகளில் சேவையில் தொழில் ரீதியான மட்டத்தில் சான்றிதழ் (NVQ) வழங்குவதற்கும் வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காக வெளிநாட்டு மொழிப்பயிற்சி வழங்கப்பட்டிருக்கவில்லை.

#### சிறைக் கைதிகளின் சீர்திருத்தம்

காலத்தின் தேவைப்பாட்டுக்கு சிறைக் கைதிகளுக்கு புனரமைப்பு செய்து, நல்ல குடிமக்களாகப் சமூகமயப்படுத்துவதற்குத் தேவையான சமூகப் பின்னணியை அமைத்துக் கொடுப்பது சிறைச்சாலையின் முக்கியப் பணிகளில் ஒன்றாகும். ஆனால் சிறைச்சாலைகளில் கூட்டம் அதிகமாக உள்ளதால், கைதிகளின் புனரமைப்பில் சிக்கல்கள் எழுகின்றன.

#### கொள்கலனுடன் நடமாடும் டீசல் மின்பிறப்பாக்கிகளின் கொள்வனவு மீதான செயலாற்றல் கணக்காய்வு

இலங்கை மின்சார சபை தேசிய முறைமையை கட்டுப்படுத்தும் நிலையத்தின் தரவுகள் மற்றும் களனிதிஸ்ஸ மின்சார வலுக்கூடத்தில் பேணிச் செல்லப்படுகின்ற 50 மின் உற்பத்தி இயந்திரங்களுக்கு உரிய மின்சாரம் செயலிழந்தமை, அறிக்கையின் பிரகாரம் ஒப்பந்தகாரரால் நிறைவேற்றப்படாத தவறுகள், குறைபாடுகள், திட்டமிடலில் குறைபாடுகளின் காரணமாக ஏற்பட்ட இயந்திரங்களின் வீழ்ச்சி மற்றும் நிறுத்துவதற்கான தாக்கங்களினால் 2022 சனவரி முதல் ஏப்ரல் மாதம் வரையான காலத்தில் இலங்கை மின்சார சபைக்கு ரூபா 1,263

மில்லியன் 37 மதிப்பீடு செய்யப்பட்ட நிதி நட்டமொன்று ஏற்பட்டிருந்தமை 2022 மே 22 ஆம் திகதிய பிரதான சட்ட உத்தியோகத்தருக்கு முகவரியிடப்பட்ட பிரதி பொது முகாமையாளர் (வெப்ப வலுக்கூடம்) கடிதத்தில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**மின்பிறப்பாக்கி இயந்திரம் தொழில்நுட்ப கோளாறுக்கு உட்படல்**

அவ்வாறே மின்பிறப்பாக்கிகளின் செயலாற்றல் எதிர்பார்த்த மட்டத்தில் காணப்படாதிருந்தமையும், அது குறைபாடுகளுடன் உள்ளமையும் மற்றும் மேற்குறிப்பிட்ட பிரகாரம் அந்த வழுக்கள் உத்தரவாதக் காலத்தின் போது சரிசெய்வது தொடர்பில் ஒப்பந்தகாரரின் பங்களிப்பு குறைவான மட்டத்தில் காணப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது.

**மொத்தக் கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிராமை**

கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.3.1 இன் பிரகாரம் கொள்வனவுப் பகுதியால் சகல தொடர்புடைய கிரயங்களையும் உள்ளடக்கி மொத்தி கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், இந்த செயற்திட்டத்திற்குரியதாக அவ்வாறான பொறியியல் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவினனால் பரிந்துரை செய்யப்பட்ட கேள்விதாரரின் விலை மற்றும் தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரின் விலை என்பவற்றை ஒப்பீடு செய்யும் போது தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரரின் விலை ரூபா 1,313,493,791 (3,432,601,733 – 2,119,107,942) இனால் குறைவடைந்திருந்தது. அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.9.11 இன் பிரகாரம் தீர்மானரீதியான அல்லது மிகவும் முக்கியமான விடயம் தொடர்பாக கேள்விதாரரினால் பொருத்தமற்ற குறைந்த அளவேனும் குறிப்பிடப்பட்டிருக்குமாயின், சமர்ப்பிக்கப்பட்ட குறைந்த அளவின் பிரகாரம் அந்த விடயம் எவ்வாறு பெறப்பட்டது எனவும், அந்த வேலை எவ்வாறு நிறைவேற்றப்பட்டது எனவும், அந்த சேவை எவ்வாறு வழங்கப்பட்டது என்பது தொடர்பாகவும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் கேள்விதாரரின் தகவல்கள் கோரப்பட வேண்டிய போதிலும் இந்த கூறுவிலைகளுக்கு இடையே காணப்படுகின்ற கவனத்தில் கொள்ளக்கூடிய வேறுபாடுகள் தொடர்பாக அதன் பிரகாரம் கொள்வனவு குழு நடவடிக்கை எடுத்திருந்தமை அவதானிக்கப்படவில்லை.

**ஆகக் குறைந்த விலை தொடர்பான தீர்மானம்**

தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு பரிந்துரை செய்த கேள்விதாரர் மற்றும் ஆகக் குறைந்த நிதி ரீதியான கேள்வி சமர்ப்பித்த கேள்விகளுக்கு இடையே ஏற்பட்ட கணிசமான நிதி வேறுபாடுகள் மற்றும் கொள்வனவுகளை கையளிக்கும் போது தேசிய நலனைக் கவனத்தில் கொண்டு குறைந்த வர்த்தக ரீதியான ஆர்வத்தைக் காண்பிக்கின்ற கேள்விதாரருக்கு (Lowest Commercial Responsive Bidder) Sterling and Wilson Private Ltd இற்கு கேள்வி கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் கொள்வனவுகள் கையளிக்கும் ஆரம்ப நோக்கமாக, ஆகக் குறைந்த கிரயத்துடன் கேள்வி தெரிவு செய்யப்படாமை, உயர் தரத்துடன் ஆகக் குறைந்த கிரயத்தையுடைய ஆகக் கூடிய பொருளாதார நலன்களைக் கொண்ட கேள்வி தெரிவு செய்தல் வேண்டும். எனினும், பல கட்டங்களில் மதிப்பாய்விற்கு உட்படுத்தி பொருத்தமான கேள்விதாரரை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும்,

இவ்வாறான தொழில்நுட்ப ரீதியான முக்கியத்துவமான இயந்திர உபகரணங்களில் அதற்குரித்தான வகையில் விடயங்களை கவனத்தில் கொண்டு கொள்வனவுகள் குழுவின் தீர்மானம் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் ஆகக் குறைந்த விலை தொடர்பான தீர்மானம் மேற்கூறப்பட்ட செயற்பாடுகளில் ஏற்பட்டிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது.

**திட்டமிடப்பட்ட முறையில் நடைமுறைப்படுத்தாமை**

தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு பரிந்துரை செய்த கேள்விதாரர் மற்றும் ஆகக் குறைந்த நிதி ரீதியான கேள்வி சமர்ப்பித்த கேள்விகளுக்கு இடையே ஏற்பட்ட கணிசமான நிதி வேறுபாடுகள் மற்றும் கொள்வனவுகளை கையளிக்கும் போது தேசிய நலனைக் கவனத்தில் கொண்டு குறைந்த வர்த்தக ரீதியான ஆர்வத்தைக் காண்பிக்கின்ற கேள்விதாரருக்கு (Lowest Commercial Responsive Bidder) Sterling and Wilson Private Ltd இற்கு கேள்வி கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் கொள்வனவுகள் கையளிக்கும் ஆரம்ப நோக்கமாக, ஆகக் குறைந்த கிரயத்துடன் கேள்வி தெரிவு செய்யப்படாமை, உயர் தரத்துடன் ஆகக் குறைந்த கிரயத்தையுடைய ஆகக் கூடிய பொருளாதார நலன்களைக் கொண்ட கேள்வி தெரிவு செய்தல் வேண்டும். எனினும், பல கட்டங்களில் மதிப்பாய்விற்கு உட்படுத்தி பொருத்தமான கேள்விதாரரை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும், இவ்வாறான தொழில்நுட்ப ரீதியான முக்கியத்துவமான இயந்திர உபகரணங்களில் அதற்குரித்தான வகையில் விடயங்களை கவனத்தில் கொண்டு கொள்வனவுகள் குழுவின் தீர்மானம் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் ஆகக் குறைந்த விலை தொடர்பான தீர்மானம் மேற்கூறப்பட்ட செயற்பாடுகளில் ஏற்பட்டிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது.

**சுகாதாரத் துறை**

**நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் - இலங்கையில் வலுவான மற்றும் மீளத்தக்க தேசிய பொது சுகாதார முறைமை (நிஅஇ 3.ஈ தொடர்பானது) தொடர்பான**

**தேசிய சுகாதார பேரவை**

உயர் மட்டத்தில் சுகாதாரப் பிரச்சினைகளைப் பற்றி கலந்துரையாடுவதற்கு தேசிய சுகாதார சபை ஒரு முக்கியமான தளமாக இருந்த போதிலும், அது 2004 முதல் கூட்டப்பட்டிருக்கவில்லை. இது தேசிய மட்டத்திலும் உப தேசிய மட்டத்திலும் இடைநிலை ஒத்துழைப்பிற்கான அரசியல் உறுதிப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கான முறையான பொறிமுறையின் இருப்பு காணப்படாதமையை ஏற்படுத்தியது.

**சுகாதார பாதுகாப்புக்கான தேசிய செயல்நடவடிக்கைத் திட்டம்**

சுகாதாரப் பாதுகாப்பிற்கான தேசிய செயல்நடவடிக்கைத் திட்டத்தில் (பின்னிணைப்பு 1) குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை தாங்கள் அறிந்திருக்கவில்லையெனவும் அதற்குப் பொறுப்பல்ல எனவும் எட்டு நிறுவனங்கள் குறிப்பிட்டிருந்தன. மேற்படி நிலையை சரவ்தேச சுகாதார பிரமாணங்கள் (IHR) மூலம் நிர்ணயிக்கப்படும் நிலையை அடைந்துகொள்வதற்கு

முன்னோக்கி செல்லும் போது சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கிடையே ஒருங்கிணைப்பு இல்லாததை மேற்படி சூழ்நிலை காட்டுகிறது.

தேசிய சுகாதார அபிவிருத்திக் குழு என்பது 1980 இல் பாராளுமன்றத்தால் அடையாளம் காணப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட சுகாதார அபிவிருத்தி வலையமைப்பின் இடைநிலை நிலை ஆகும். இது சுகாதார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள், ஏனைய அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண அதிகாரிகள் மற்றும் தொடர்புடைய சுகாதாரம் அல்லாத பங்குதாரர்களின் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் வருடத்திற்கு ஒரு கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

### நிறுவன இடர் முகாமைத்துவ திட்டம்

என்டிஎம்பி (2013-2017) அடிப்படையில் அனைத்து அமைச்சுக்கள், அரச நிறுவனங்கள், திணைக்களங்கள் மற்றும் முகவராண்மைகளுக்கு ஐடிஎம்பி 2021 தயாரிப்பதற்கான வழிகாட்டல்களை அமுநி தயாரித்துள்ளது. எனினும், அனர்த்த முகாமைத்துவத்திற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களை ஒருங்கிணைப்பது போதுமானதாக காணப்படவில்லை. ஐடிஎம்பி 2021 ஐ தயாரிப்பதற்கான வழிகாட்டல்கள் பழைய தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தின் அடிப்படையில் அமைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

### தடுப்பு பராமரிப்பு மற்றும் புலம்பெயர் சுகாதார அலகுகள்

சர்வதேச சுகாதார ஒழுங்குமுறைகளுக்கு (IHR 2005) இணங்குவதன் மூலம் சர்வதேசப் பரவல் தொடர்பான நோய்களின் சாத்தியமான நுழைவு தொடர்பான தனிமைப்படுத்தல் மற்றும் இடம்பெயர்தல் சுகாதாரப் பிரிவுகளின் விழிப்புணர்வு தேசிய சுகாதாரக் கொள்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. காலநிலை மாற்றம் மற்றும் காலநிலை முரண்பாடுகள் காரணமாக ஏற்படும் சுகாதார பாதிப்பைக் குறைப்பதற்கான பொறிமுறைகளை உருவாக்குவது அவசியமாகும்.

### அவசர விபத்துகள் மற்றும் அவசர சந்தர்ப்பங்கள்

விபத்துக்கள் மற்றும் அவசரநிலைகள் தொடர்பான தடுக்கக்கூடிய இறப்பு மற்றும் நோயுற்ற தன்மையைக் குறைப்பதற்காக அனைத்து செயலாற்றல் கணக்காய்வுப் பிரிவு பக்கம் 50 50 நிலைகளிலும் விரிவான விபத்து, அவசர மற்றும் உடனடி சிகிச்சை சேவைகள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துதல் அவசியமானது ஆகும்.

### சுகாதார பாதுகாப்புக்கான தேசிய செயல்நடவடிக்கைத் திட்டம்

சுபாதேசெதி )NAPHS) இன் பிரகாரம் சுகாதார அமைச்சு, கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் )DAPH) மற்றும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு )Mo FAR) ஆகியவற்றால் மனித மற்றும் விலங்குத் துறைகளுக்கு இடையே பல்துறை ஒருங்கிணைப்புக்கான முறைமையொன்றை உருவாக்குவதற்கு திட்டமிடப்பட்டது. )AMR ( தொடர்பான தேசிய ஆலோசனைக் குழு மூலம் ஒரு பொறிமுறையை நிறுவியிருந்த போதிலும்

முக்கியமாக நிதி கிடைக்காததால் )AMR( மூலோபாய செயல்நடவடிக்கைத் திட்டத்தை அமுல்ப்படுத்துதல் எதிர்பார்த்த அளவில் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை,

**நுண்ணுயிர் பாதுகாப்பு அவதானிப்பு மற்றும் கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்**

2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை காஉசுதி )DAPH) மூலம் பண்ணைகளில் தொற்று கட்டுப்பாட்டு கண்காணிப்பை வலுப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டது. காஉசுதி )DAPH) ஆல் கோழி வளர்ப்பு பண்ணைகளில் உயிர் பாதுகாப்பு கண்காணிப்பு மற்றும் கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் தொடங்கப்பட்டிருந்த போதிலும், வணிக கால்நடைகள் மற்றும் கோழி பண்ணைகளில் இது தொடங்கப்பட்டிருக்கவில்லை.

**பிரமாணங்கள் விதிக்கப்படல்**

மாதிரி போக்குவரத்து முறைமையை மேம்படுத்துவதற்கும், ஒரு முறையான தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை உருவாக்குவதற்கும், ஒவ்வொரு முக்கிய சோதனைகளுக்கும் ஒரு மாதிரி பரிந்துரை வலையமைப்பிற்கான ஒழுங்குமுறைகளை நிறுவுவதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. இந்த நடவடிக்கையை 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ள திட்டமிடப்பட்ட போதிலும், இந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**இடர் ஆயத்தம் மற்றும் பதில் திட்டத்தை நாளதுவரையாக்குதல்**

2021 ஆம் ஆண்டின் இறுதிக்குள் மருத்துவ வழங்கல் பிரிவால் தற்போதைய அனர்த்த தயார்நிலை மற்றும் பதிலளிப்புத் திட்டத்தை புதுப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், குறிப்பிட்ட காலத்திற்குள் அந்த பணியை )MSD( ஆல் பூர்த்திசெய்ய முடியாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**பயன்பாட்டு பயிற்சிகள் வருடாந்த கலந்துரையாடல்**

மருத்துவ வழங்கல் பிரிவின் வருடாந்த கணனிப் பாவனை பயிற்சியின் மூலம் அவசரகால தயார்நிலை மற்றும் பதிலளிப்பு திறனை மதிப்பிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், 2023 மார்ச் 21 வரையிலும் இந்த செயன்முறை ஆரம்பிக்கப்பட்டிருக்காதமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## விவசாய துறை

### ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் உற்பத்தி மற்றும் மேம்படுத்தல் தொடர்பில் அரச நிறுவனங்களின் பணிப்பொறுப்பினை மதிப்பீடு

**அதிகாரச்சட்டத்திற்கு உரிய திருத்தங்களை மேற்கொள்ளல்**

வாசனைத் திரவிய பொருட்கள் மற்றும் அவை சார்ந்த பயிர்ச் செய்கைகளில் இருந்து தேசிய வருமானத்துக்கு கிடைக்கும் பங்களிப்பு படிப்படியாக அதிகரித்துச் செல்லுவதற்கு அந்தத் துறையில் மேலதிக அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் மிகவும் வினைத்திறனாகவும் மற்றும் விரிவாகவும் மேற்கொள்ளப்படுவதற்கான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு போதிய அளவு நிதி 1992 இன் 46 ஆம் இலக்க சட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை என்பதைக் காணக்கூடியதாக உள்ளதுடன் 2009 ஆம் ஆண்டில்

இந்தச் சட்டத்ததினைத் திருத்தம் செய்வதற்கு அப்போதைய கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் பணிப்பாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட 2009 செப்டம்பர் 29ஆம் திகதி இடப்பட்ட பத்திரத்திற்கு 2009 ஒக்டோபர் 28 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தேவையான திருத்தங்களுக்கான சட்டத்தினை உருவாக்குவதற்கு சட்ட வரைவாளருக்கு ஆலோசனை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டது என்பதும் அதற்கமைய திருத்தங்கள் உள்ளடக்கப்பட்ட வரைவு சட்ட வரைவாக்கல் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டு இணக்கப்பாட்டினை பெற்றுக் கொண்டுள்ள போதிலும், 2022 செப்டம்பர் 2 ஆம் திகதி கணக்காய்வு சந்தர்ப்பம் வரையிலும் சட்டத்தினை திருத்தம் செய்வதற்கு உரிய மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

**பாக்கு கன்றுகளின் உற்பத்தி குறைவடைதல்**

2018 ஆம் ஆண்டில் 283,953 ஆக இருந்த பாக்கு கன்று உற்பத்தி 2021 ஆம் ஆண்டில் 88,958 வரையிலும் குறைவடைந்து இருந்தது. அந்தக் காலப் பகுதியினுள் பாக்கு கன்று உற்பத்தி 29 சதவீதத்தில் இருந்து 4.37 சதவீதம் வரையிலும் குறைவடைந்து இருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

**கோப்பி கன்றுகளின் உற்பத்தி அதிகரித்தல்**

2018 ஆம் ஆண்டு 56,509 ஆக இருந்து கோப்பிக்கன்று உற்பத்தி 2021 ஆம் ஆண்டில் 203,258 வரையில் அதிகரித்திருந்தது. 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் 11 நாற்று மேடைகளின் மொத்த நாற்றுக்களின் உற்பத்தியில் கோப்பிக் கன்று உற்பத்தி 05 சதவீதம் தொடக்கம் 10 சதவீதம் வரையில் அதிகரித்திருந்தமை சிறந்த போக்காகும் என்பது அவதானிக்கப்பட்டது.

**விவசாய பயிகள் தொடர்பான நியமங்கள்**

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் விவசாயப் பயிர்கள் தொடர்பான தரங்கள் தயாரிக்கப்பட்டு விதை உறுதிப்படுத்தும் சேவைக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. 2003 இன் 22 ஆம் இலக்க விதை சட்டம் நிறைவேற்றப்பட்டு சுமார் 20 வருட காலம் கடந்துவிட்டிருந்த போதிலும் அந்த தரங்களை வெளியீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

# விசேட அறிக்கைப் துறை

அரசியலமைப்புச் சட்டத்தின் 154 ஆம் பிரிவின் பிரகாரம் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் …………………….. பிரிவின் மூலம் விசேட கணக்காய்வுகளை மேற்கொள்ளுவதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஏதேனும் முறைகேடுகள், மோசடிகள், தவறுகள் ஏற்பட்டு ∴ ஏற்படுத்தப்பட்டு உள்ளது என்பதான சம்பவம் அல்லது கொடுக்கல் வாங்கல் தொடர்பில் ஆழமாக விசாரணை செய்து அது தொடர்பான அவதானிப்புகளைச் சமர்ப்பித்தல் மற்றும் திருத்தும் வழிமுறைகள் உள்ளிட்ட பரிந்துரைகளை சமர்ப்பித்தல் இந்த அறிக்கை மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. பிணையங்கள் வழங்கப்பட்ட சம்பவம், சீனி வரி விகிதங்களில் ஒரே தடவையில் மாற்றங்களை ஏற்படுத்தியதனால் ஏற்பட்ட தாக்கம் மற்றும் அரச கடன் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வழங்கப்பட்ட அறிக்கை தொடர்பில் பெரும்பாலானோரின் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டினுள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அவ்வாறு வழங்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பான பின்புலத் தகவல்கள், வழங்கப்பட்ட நிறுவனம் மற்றும் வழங்கப்பட்ட முக்கிய பரிந்துரைகள் இந்த பந்தியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கிய அவதானிப்புகள் குறித்த கணக்காய்வுப் பிரிவின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## இலங்கை மின்சார சபையினால் ஏஸ் பவர் எம்பிலிப்பிட்டிய தனியார் கம்பனியிடமிருந்து மின்சாரம் கொள்வனவு செய்தல் தொடர்பான் விஷேட கணக்காய்வு அறிக்கை

### அறிக்கையை வழங்குவதற்கான பின்புலம்

ஏஸ் பவர் எம்பலிபிட்டிய (தனியார்) கம்பனியுடன் இலங்கை மின்சார சபை ஏற்படுத்திக் கொண்டிருந்த ஆரம்ப உடன்படிக்கைக் காலம் முடிவடைந்ததன் பின்னர் இந்த நிலையத்தினை இலங்கை மின்சார சபையின் மூலம் கொள்வனவு செய்ய பரிசீலனை செய்வதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தினை நடைமுறைப்படுத்தாது ஆரம்ப உடன்படிக்கைக் காலம் முடிவடைந்து ஒரு வருடத்தின் பின்னர் மின்சாரத்தினைக் கொள்வனவு செய்யும் உடன்படிக்கையை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக இலங்கை மின்சார சபையின் நிதி நிலைமைக்கு மற்றும் இலாபத் தன்மைக்கு ஏற்பட்டிருந்த அனுகூலமற்ற பெறுபேறு அடையாளம் காணப்பட்டதனால், அந்த அனுகூலமற்ற பெறுபேறு மற்றும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும் இவ்வாறான செயல்திட்டங்களில் இருந்து எதிர்பார்க்கப்படும் பெறுபேற்றினை சிறந்ததாகப் பெற்றுக் கொள்வதற்கு கவனத்தினை செலுத்துவதற்காக இந்த அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

### அறிக்கை வழங்கப்பட்ட நிறுவனம்

மின்வலு அமைச்சு, இலங்கை மின்சார சபை, பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு

### வழங்கப்பட்ட முக்கிய பரிந்துரைகள் சுருக்கமாக

- மின்வலு நிலைத்தினை கொள்வனவு செய்வதன் பொருளாதார நலன் தொடர்பில் மீள ஆராய்ந்து கொள்வனவுகள் சாதகமான நிலைமையொன்றினை உறுதிப்படுத்தினால் தாமதிக்காது அல்லது நிலவும் உடன்படிக்கை நிறைவடைந்ததும் மின்வலு நிலையத்தை கொள்வனவு செய்ய கவனம் செலுத்தப்பட வேண்டியமை.

- அரச மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யும் போது கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்களுக்காக உரிய கவனம் செலுத்தப்படாத காரணத்தால் அல்லது / மற்றும் கவனயீனம் காரணமாக சரியான மதிப்பீட்டு பெறுமதியை விட குறைவான பெறுமதியொன்று கிடைத்திருப்பின் அதற்காக பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் இனங்காணப்பட்டு பொருத்தமான நடவடிக்கை எடுத்தல்.

- அந்த மதிப்பீட்டாளருக்கு இலங்கை மின்சார சபையினால் போதிய தகவல் வழங்கப்படவில்லை எனின் மற்றும் அதற்கு தேவையான ஒத்துழைப்பு வழங்கப்படாத காரணத்தால் மதிப்பீடு குறைவடைந்திருந்தால், அது தொடர்பிலும் உரிய நடவடிக்கை எடுத்தல்.

- ஏதேனும் காரணத்தால் மின்வலு நிலையம் கொள்வனவு செய்யப்படாவிட்டால் மற்றும் தொடர்ந்தும் இந்த மின்வலு நிலையத்திலிருந்து மின்சாரத்தினை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டால், அந்த கொள்வனவுக்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டால், அந்த உடன்படிக்கையை அரசிற்கு உச்ச நலன் கிடைக்கும் வகையில் உடன்படிக்கை கைச்சாத்திடல்.

- மின்சாரக் கட்டமைப்பில் நிலவக்கூடிய நலிவுகள் மற்றும் கட்டமைப்பு வரைபறைகள் தொடர்பிலும் அந்த நலிவுகள் மற்றும் வரைபறைகளுக்காக எடுக்க வேண்டிய ஆக்கபூர்வமான மாற்று நடவடிக்கைகள் தொடர்பில் உயர் முகாமைத்துவத்திற்கு சரியான தகவல் சமர்ப்பித்தலும், உயர் முகாமைத்துவத்தினால் குறித்த பிரிவுகளிலிருந்து கால அடிப்படையில் தகவல் பெற்றுக் கொள்ளப்பட்டு அந்த தகவல்கள் தொடர்பில் கவனம் செலுத்தி சிறந்த தீர்மானங்களை மேற்கொள்ளல்.

## 2022 சர்வதேச கிரிக்கெட் சபையின் T-20 உலகக் கிண்ண (ஆண்கள்) கிரிக்கெட் போட்டி தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை

### அறிக்கையை வழங்குவதற்கான பின்புலம்

சர்வதேச கிரிக்கெட் பேரவையால் 2022 அக்டோபர் 09 முதல் நவம்பர் 13 வரை அவுஸ்திரேலியாவில் நடத்தப்பட்ட 2022 T-20 உலகக் கோப்பை (ஆண்கள்) கிரிக்கட் போட்டிக்காக இலங்கையின் தேசிய நாமத்துடன் கூடிய இலங்கை தேசிய அணி தொடர்பில் சர்வதேச கிரிக்கெட் பேரவையுடன் இலங்கை அரசாங்கம் சார்பாக செயற்படுகின்ற இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனைகளின் போது கண்டுபிடிக்கப்பட்ட ஏனைய தொடர்புடைய விடயங்களை உள்ளடக்கிய இந்த விசேட கணக்காய்வு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

**அறிக்கை வழங்கப்பட்ட நிறுவனம் பின்வருமாறு ஆகும்.**

**வழங்கப்பட்ட முக்கிய பரிந்துரைகள் சுருக்கமாக**

- தேசிய உத்தியோகபூர்வ நாமங்கள் மற்றும் தேசிய விளையாட்டுக் குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான பணிகளில் ஈடுபட்டுள்ள விளையாட்டுச் சங்கங்கள் அந்தப் பணிகளை நிறைவேற்றுகையில் அரசாங்கத்திற்கு அல்லது பொதுமக்களிற்குப் பொறுப்புக்கூறக்கூடிய சங்கங்களாக தமது பொறுப்புக்கள் மற்றும் கடமைகளை ஒப்படைக்கும் இயலுமை குறித்து கவனம் செலுத்துதல்.

- இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினதும் இலங்கை அரசினதும் நற்பெயருக்குக் கேடு விளைவிக்கும் வகையிலும் நிதி ரீதியாக நட்டத்தை ஏற்படுத்தும் வகையிலும் செயல்பட்டுள்ள தரப்பினரைக் கண்டறிந்து அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுத்தல்.

- விளையாட்டுத்துறைக்கு பொறுப்பான அமைச்சரினதும் அல்லது விளையாட்டுப் பணிப்பாளர் நாயகத்தினதும் கண்காணிப்பு நடவடிக்கைகளை விரிவுபடுத்துதல்.

- இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்குத் தேவையான மூலதனப்பொருள் கொள்வனவுகளின் போது இடம்பெற்றுள்ள முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களுக்கு பொறுப்பான தரப்பினரைக் கண்டறிந்து அவர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் மற்றும் முறையான வழிமுறைகளை வலுப்படுத்தி, போட்டித்தன்மையை அதிகரிக்கும் வகையில் வழங்குனர்களை பதிவுசெய்தல் மற்றும் கொள்வனவுச் சபையின் ஒப்புதலின் கீழ் மாத்திரம் கொள்வனவுகளைச் செய்தல்.

- இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தேவையற்ற செலவுகளை நிறுத்தி, செலவினங்களை முடிந்தவரை குறைத்து, உள்நாட்டில் பிரதேச மட்டத்தில் கிரிக்கெட் தொடர்பான வசதிகளை மேம்படுத்துதல்.

- இந்த அறிக்கையில் இனம் காணப்பட்ட பலவீனமான பகுதிகளை ஒழுங்குபடுத்துவதற்கு விதிமுறைகளை அமுல்படுத்துதல் அல்லது ஏற்கனவே உள்ள விதிமுறைகளை வலுப்படுத்துதல் மற்றும் விதிமுறைகளுடன் இணங்குவதை சரி பார்ப்பதற்கான பொறிமுறையை வலுப்படுத்துதல்.

- அனைத்து விளையாட்டு சங்கங்களுக்கும் செல்லுபடியாகும் விதத்தில் பாராளுமன்றக் கட்டுப்பாட்டை மேலும் பலப்படுத்தும் வகையில் உரிய காலப் பகுதிகளுக்கான வருடாந்த அறிக்கைகளைப் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டுமென்பதுடன் பாராளுமன்றக் குழுவில் முன்னிலைப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் விளையாட்டுக்கள் சட்டத்திற்கு தேவையான திருத்தங்களை செய்தல் வேண்டும்.

## தவறான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது ஒன்று சேர்க்கப்பட்ட வாகனங்களின் செசி இலக்கம் மற்றும் இன்ஜின் இலக்கத்தை மோட்டார் வாகனங்களை பதிவு செய்யும் தரவு முறைமைக்குள் மோசடியாக தரவுகளை உள்ளடக்கி மோட்டார் வாகனங்களைப் பதிவுசெய்து போலியான சான்றிதழ்களை வழங்குவது தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை - 2022

**அறிக்கையை வழங்குவதற்கான பின்புலம்**

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் தரவு முறைமை, மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் பயன்படுத்திய கடினப் பொருள் பிரதியுடனான கோவையினைப் போல வடமேல் மாகாணம் மற்றும் மத்திய மாகாணத்திற்காக வருமான உத்தரவுப் பத்திரம் வழங்குவதற்காக ஸ்தாபிக்கப்பட்டுள்ள இலத்திரனியல் வருமான உத்தரவுப் பத்திர (ERL) தரவுமுறைமைக்குள் உள்ளடக்கப்பட்ட தகவல்களை ஒப்பீட்டு ரீதியான புலனாய்வுக்கு உட்படுத்தி அவதானிக்கப்பட்ட விடயங்களின் உதவியியுடன் இந்த அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

**அறிக்கை வழங்கப்பட்ட நிறுவனம் பின்வருமாறு ஆகும்.**

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்

**வழங்கப்பட்ட முக்கிய பரிந்துரைகள் சுருக்கமாக**

- ஒரு மோட்டார் வாகனத்தை பதிவுசெய்தல் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து திருத்தங்களுக்குமுரிய பழைய தகவல்கள் மற்றும் அத்தகவல்களை மாற்றம் செய்வதற்கு பங்களிப்புச் செய்த பாவனையாளர்கள் சம்பந்தமான விபரங்கள் சுயமாக முறைமைக்குள் களஞ்சியப்படுத்தும் வகையில் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் தரவு முறைமையை அபிவிருத்தி செய்தல்.

- மோட்டார் வாகன அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் பதிவுசெய்த ஒரு மோட்டார் வாகனத்தின் செசி இலககத்தினை மாற்றம் செய்ய முடியாது என்பதனால் கணனி முறைமையினுள் எந்த வகையிலும் செசி இலக்கத்தினை மாற்றம் செய்வதற்கு முடியாதவாறு அதாவது அவ்வாறான வேண்டுதல் சுயமாகவே நிராகரிக்கப்படும் வகையில் முறைமையினை திருத்தம் செய்தல்.

- மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் கணனி முறைமைக்கு அனுப்பிவைக்கப்படுகின்ற தரவுகளில் மாற்றம் செய்து வருமான உத்தரவுப் பத்திரத்தினை வழங்குவதற்காக ERL தரவு முறைமையினூடாக பயன்டுத்துனருக்கு வழங்கப்பட்டுள்ள வாய்ப்பினைத் தடுத்து மோசடியாக வருமான உத்தரவுப் பத்திரம் வழங்குவதனைத் தவிர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல்.

- இந்த அறிக்கையில் வழங்கப்பட்டுள்ள உரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் சம்பந்தமாக நிறுவன மட்டத்தில் பரீட்சிப்புக்களை மேற்கொண்டு பொறுப்புக் கூறவேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் பிரகாரம் மற்றும் ஏனைய உரிய சட்டங்களின் பிரகாரம் பொருத்தமான ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல்.

- மோட்டார் வாகன போக்கவரத்து திணைக்களத்தினால் பயன்பாட்டிற்கு எடுத்தக்கொள்ளப்படாத வெற்று இலக்கம், செயற்பாடற்றதாக்கிய இலக்கம், பதிவு செய்த இலக்கத்தின் இறுதி நான்கு இலக்கங்கள் 13 இல் முடிவடைகின்ற மற்றும் அந்த நான்கு இலக்கங்களின் மொத்தம் 13 ஆகும் இலக்கங்கள் என்பவைகளை உள்ளடக்கி இதுவரை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாத மற்றும் எதிர்காலத்திலும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாத இலக்கங்களுக்காக எந்த வகையிலும் மோட்டார் வாகனம் பதிவு செய்யப்படுவதனை தவிர்ப்பதற்காக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் தரவு முறைமையை தடுப்பதற்கும் காலத்திற்கு காலம் அவ்வாறு தடுக்கப்படுகின்ற இலக்கங்களை பிரசித்தப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல்.

## 2020 ஜனவரி 01 தொடக்கம் 2022 மே 31 வரையான ஆண்டுகளில் தேசிய பாடசாலைகளில் இடை நடுவிலான தரங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை

**அறிக்கையை வழங்குவதற்கான பின்புலம்**

தேசிய பாடசாலைகளில் இடை நடுவிலான தரங்களுக்கு மாணவர்களை அனுமதிக்கும் குறித்த வழிமுறைமையினைத் தவிர்த்து பல்வேறு தரப்பினர்களின் கோரிக்கை / பரிந்துரைகள் / மேல்முறையீடுகள் / கட்டளைகள் என்பவற்றின் அடிப்படையில் கல்வி அமைச்சின் செயலாளரினால் நேரடியாக அதிபர்களுக்கு கடிதம் வழங்கப்பட்டு மாணவர்களை அனுமதித்தல் மற்றும் நியதிகளுக்கு முரணாக தலையிடுவதன் காரணமாக சுற்றறிக்கையின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய வகுப்பறை ஒன்றில் இருக்கக்கூடிய ஆகக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையை விஞ்சி அந்த வகுப்பறைகளில் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர் என்பது கணக்காய்வினால் அடையாளம் காணக் கூடியதாக இருந்தது. இந்த காரணத்திற்காக பல்வேறு சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் பிரதிநிதித்துவங்கள் கணக்காய்விற்குக் கிடைத்திருந்ததுடன் ஊடகங்களின் மூலமும் அவ்வப்போது இது தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டு இருந்தது என்பதை அடையாளம் காணக்கூடியதாக இருந்தது.

**அறிக்கை வழங்கப்பட்ட நிறுவனம் பின்வருமாறு ஆகும்.**

**கல்வி அமைச்சு**

**வழங்கப்பட்ட முக்கிய பரிந்துரைகள் சுருக்கமாக**

- அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் நீதிமன்ற உத்தரவு என்பவற்றின் மூலம் பாடசாலையில் வகுப்பொன்றில் இருக்க வேண்டிய ஆகக் கூடிய மாணவர் எண்ணிக்கை தொடர்பான எல்லைகள் தீர்மானிக்கப்பட்டு இருந்த போதிலும் அந்த எல்லையினை விஞ்சி மாணவர்களை அனுமதிப்பதற்கு பல்வேறு முறைமைகளை அறிமுகப்படுத்துவதை தவிர்த்தல் மற்றும் மாணவர்களை அனுமதிக்கும் போது வெளிப்படைத் தன்மை மற்றும் தெள்ளத் தெளிவுடன் நடவடிக்கை எடுத்தல்.

- தேசிய பாடசாலைகளில் இடை நடுவிலான தரங்களுக்கு மாணவர்களை அனுமதிக்கும் போது வழங்கப்பட்டுள்ள அமைச்சரவைத் தீர்மானம், அவ்வப்போது அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு முரணான வகையில் மாணவர்களை அனுமதிப்பதற்கு அமைச்சின் செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்ட காரணத்தால் அனைத்து மாணவர்களுக்கும் தேசிய பாடசாலையில் அனுமதி பெறுவதற்கு இருந்த சமனான நுழைவு சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டுள்ளது என்பதனால் அவ்வாறு இடை நடுவிலான தரங்களுக்கு மாணவர்களை அனுமதிக்கும் போது இருக்கும் சட்டங்கள், விதிகள் என்பவற்றுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதன் மூலம் குறித்த மூலப்பிரமாணங்களுக்கு உரிய அனைத்து மாணவர்களுக்கும் சமமான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.

- தேசிய பாடசாலைகளில் இடை நடுவிலான தரங்களுக்கு மாணவர்களை அனுமதிக்கும் போது குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் குறித்த பாடசாலையில் தாபிக்கப்பட்டுள்ள குழுவின் மூலம் பரிந்துரை செய்யப்பட்ட மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டிய போதிலும் செயலாளர் அந்த முறைமையில் இருந்து முரண்பட்ட காரணத்தால் குறித்த சுற்றறிக்கையின் ஒழுங்கு விதிகள் மீறப்பட்டுள்ளது என்பதனால் செயலாளருக்கு தீர்மானமாக நியாயப்படுத்தப்படக்கூடிய விசேட மற்றும் அரிய சந்தர்ப்பம் தவிர எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் நேரடியாக செய்யப்படும் கோரிக்கை. பரிந்துரை. அனுசரணை மற்றும் மேல் பார்வைக்கு செல்வாக்காகக் கருதப்படக் கூடிய சந்தர்ப்பங்களுக்கு கடிதம் வழங்காதிருப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- தற்போதுள்ள விதிகளை கருத்தில் கொள்ளாது மக்கள் பிரதிநிதிகள் போன்ற வேறு விசேட நபர்களினால் செய்யப்படும் கோரிக்கைகள், பரிந்துரைகள், அனுசரணைகள், மேல் பார்வைக்கு செல்வாக்காகத் தோன்றக்கூடிய கடிதங்களின் அடிப்படையில் மாணவர்களை அனுமதிப்பதற்கு கல்வி அமைச்சின் செயலாளர் நடவடிக்கை எடுத்த காரணத்தால் மாணவர்கள் அனைவருக்கும் சமமான நுழைவு சந்தர்ப்பம் கிடைக்காததன் அடிப்படையில் அது சார்புடையது என இனம் காணக்கூடியதாக உள்ளதுடன் அவ்வாறு கிடைக்கும் கடிதங்கள் தொடர்பில் விசேட சந்தர்ப்பத்தினை வழங்குவதைத் தவிர்த்தல்.

- கல்வி அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்ததாக குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களில் மூன்று வருடங்களை விட அதிக காலம் சேவையாற்றிய பதவி அணியினரின் பிள்ளைகளைத் தேசிய பாடசாலைகளுக்கு அனுமதிப்பதற்கான விசேட சந்தர்ப்பம் குறித்த சுற்றறிக்கையின் மூலம் வழங்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறான விசேட சந்தர்ப்பத்தினை வழங்குவதன் மூலமும் மேலே கூறப்பட்ட பந்தியின் பிரகாரம் சமத்துவம் மீறப்படுகின்றது என்பதை இனம் காணக்கூடியதாக உள்ளது என்பதால் அவ்வாறான சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவதை மீளவும் கவனத்தில் கொள்ளுதல்.

- தேசிய பாடசாலைகளில் இடை நடுவிலான தரங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை மேற்கொள்ளும் போது குறித்த விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளுதல், கடிதங்களை பாடசாலைகளுக்கும் மற்றும் பெற்றோர்களுக்கும் வழங்கும் தீர்மானமாக இனம் காணப்பட்ட ஒழுங்கான முறைமையினைப் பின்பற்றாத காரணத்தால் ஏதேனும் நிதி அல்லது வேறு சட்டவிரோத கொடுக்கல் வாங்கல்கள் அல்லது பல்வேறு முறைகேடுகள் ஏதேனும் மட்டத்தில் இடம்பெற்றுள்ளதா என பரீட்சிப்பதற்கு மேலதிக பரீட்சிப்பை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- தீர்மானங்களை மேற்கொள்ளும் போது வெளித் தரப்பினர்களின் தலையீட்டினைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் உரிய தீர்மானங்களை எடுப்பதற்கு மற்றும் பரிந்துரைகளை வழங்குவதற்கு முறையான சுற்றறிக்கைகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை விஞ்சி அல்லது பெருமளவில் மேலதிக குழுக்களை அமைத்து அங்கத்தவர்களை நியமிப்பதை தவிர்த்துக் கொள்ளுதல்.

## இலங்கையில் புகையிரதக் கடவைகளுக்கான பாதுகாப்புக் கட்டமைப்பினைத் தாபித்தல் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை.

**அறிக்கையை வழங்குவதற்கான பின்புலம்**

புகையிரத வீதி பாதுகாப்பு ஒழுங்கு அமைப்பை விஞ்ஞான ரீதியில் திட்டமிடுவதன் முக்கியத்துவத்தைப் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினருக்கு சுட்டிக்காட்டி மற்றும் தற்போது காணப்படும் பாதுகாப்பு கட்டமைப்பினை ஒழுங்குபடுத்துதல் தொடர்பில் கவனத்தினைச் செலுத்துவதற்கும் இந்த விசேட கணக்காய்வு அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

**அறிக்கை வழங்கப்பட்ட நிறுவனம் பின்வருமாறு ஆகும்.**

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் புகையிரத திணைக்களம்

**வழங்கப்பட்ட முக்கிய பரிந்துரைகள் சுருக்கமாக**

- தற்போது நடைமுறைப்படுத்தப்படும் சுமார் 120 ஆண்டுகள் பழமை வாய்ந்த 1902 இன் 09 ஆம் இலக்க இலங்கை புகையிரத கட்டளைச் சட்டத்தின் சட்ட விதிகள் பிரமாணங்கள், தண்டனைகள் மற்றும் பதவிப் பெயர்கள் உள்ளிட்ட சட்டத்தின் பிரிவுகள் தற்காலத்திற்கு பொருத்தமான வகையில் உடனடியாகத் திருத்தப்பட்டு வினைத்திறனான நிர்வாகத்திற்கு பயன்படக்கூடிய வகையில் சட்டத்தினை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- புகையிரதக் கடவைகளில் பாதுகாப்பை சரியான வகையில் ஈடுபடுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தலும், அதிக மொத்த செலவினை மேற்கொண்டு தாபிக்கப் பட்ட பாதுகாப்புக் கட்டமைப்புகள் சரியான முறையில் பராமரிப்பு செய்து இடம்பெறும் விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்வதற்கு எடுக்கக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல்.

- இலங்கையினுள் புகையிரதக் கடவைகள் எத்தனை உள்ளன என்பது தொடர்பில் சரியான ஆய்வினை மேற்கொண்டு இற்றைப்படுத்தப்பட்ட தரவு ஒழுங்கமைப்பினை பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தலும், பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகளில் விபத்துகளில் மரணம் அடைந்த மற்றும் காயமடைந்த நபர்களுக்கு மற்றும் சொத்துக்களுக்கு நட்ட ஈட்டினை வழங்கும் ஒழுங்கான வேலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

- வீதிப் பாதுகாப்பு ஒழுங்கமைப்பினை நிர்மாணிக்கும் போது தமது பொறுப்புக்களை சரியான முறையில் நிறைவேற்றாத காரணத்தால் புகையிரத எஞ்சின்கள், மேடைகள் மற்றும் வீதிகளுக்கு ஏற்பட்டிருந்த சேதம் மற்றும் அவற்றை மீட்பதற்கு மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவு தொடர்பில் குறித்த காலப்பகுதியில் புகையிரத பொது முகாமையாளர் பதவியில் சேவையாற்றிய நபர்களுக்கு எதிராக தற்போதுள்ள சட்டங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்.

- தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் வெளிப்படையாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனக் குறித்த கூற்று மற்றும் அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதால் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அமைச்சரவைக்கு போதிய அளவு மற்றும் உண்மையான தகவல்களைப் பெற்றுக் கொடுக்காமை தொடர்பில் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவிற்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் தொடர்பில் கவனத்தில் கொள்ளுதல்.

- திணைக்களத்தினால் பெறுகையை இரத்துச் செய்யும் இயலுமையைக் கண்டறிவதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் மூலம் பெறுகையை இரத்துச் செய்து மீண்டும் பெறுகை மேற்கொள்ளப்பட்டு வீதி பாதுகாப்பு கட்டமைப்பை தாபிக்குமாறு பரிந்துரை வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்தப் பரிந்துரைகள் தொடர்பில் மதிப்பீடு செய்யாது 2

½ வருடங்களின் பின்னர் அந்த பெறுகையினைக் குறித்த நிறுவனத்திடம் ஒப்படைப்பதற்கு செயல்பட்டமை தொடர்பில் மற்றும் அதற்காக செயல்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அதன் மூலம் ஏதேனும் நிதி ரீதியான முறைகேடு ஏற்பட்டுள்ளதா என்பது தொடர்பில் பரீட்சிப்பு செய்தல் வேண்டும்.

- தவறான தகவல்களைச் சமர்ப்பித்து திணைக்களத்தினை திசை திருப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் குறித்த காலத்தினுள் கொள்முதல் பணிகளை நிறைவேற்றாத வழங்குநர் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

## இலங்கை மின்சார சபையினால் ஏஸ் பவர் எம்பிலிப்பிட்டிய தனியார் கம்பனியிடமிருந்து மின்சாரம் கொள்வனவு செய்தல் தொடர்பான விஷேட கணக்காய்வு அறிக்கை

**கம்பனியை கொள்வனவு செய்யும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டமை**

இலங்கை மின்சார சபைக்கு நீண்ட கால உற்பத்தி திட்டங்களை அடைந்துகொள்ள முடியாமையும், உற்பத்தி செய்யப்படும் மின்சார அலகுகளின் அளவானது உள்நாட்டு கேள்வியை பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லாதிருந்தமையால், ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய (தனியார்) கம்பனியிலிருந்து மின்சாரத்தினை கொள்வனவு செய்வதற்காக 10 வருட உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. உடன்படிக்கை காலம் நிறைவடைந்ததும், இந்த மின்வலு நிலையம் இலங்கை மின்சார சபையினால் கொள்வனவு செய்வதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு செயற்படாது 2016 ஏப்ரல் 06 ஆந் திகதி முதல் 2022 செப்தம்பர் 08 ஆந் திகதி வரையிலும் 4 சந்தர்ப்பங்களில் 05 வருடங்கள் 06 மாத காலத்தினால் ஆரம்ப உடன்படிக்கையை நீடிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இலங்கை மின்சார சபைக்கு சொந்தமாக்கி அரசாங்கத்தை விட இலாபகராமான முறையில் பணிகளை மேற்கொள்வதற்கு காணப்பட்ட சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. அரச மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டு பெறுமதி கம்பனியின் உரிமையாளர்களினால் கம்பனியை விற்பனை செய்வதற்கு விருப்பினை தெரிவித்த விலையை விட குறைவாக மதிப்பிட்டிருந்தமை என்பதால் இந்த கொள்வனவு சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

**அடிப்படை உடன்படிக்கையின் குறைபாடு**

2003 ஆம் ஆண்டின் போது ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஆரம்ப உடன்படிக்கை 10 வருடங்களில் நிறைவடைந்த போதிலும், ஆரம்ப உடன்படிக்கையின் 11 ஆம் உறுப்புரையின் பிரகாரம், Buy out Event தொடர்பில் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய அந்த உடன்படிக்கையின் பிரகாரம் Buy out Event அடிப்படையில் இந்த மின்வலு நிலையத்தினை கொள்வனவு செய்யும் உரித்து பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. மேலும், 20 வருட பயன்படு ஆயுட் காலத்துடனான சொத்தொன்றுக்காக இந்த சொத்தின் முழுமையான பெறுமதியும் 10 வருட காலப்பகுதியினுள் இலங்கை மின்சார சபையினால் ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது.

**தாமத வட்டி கொடுப்பனவு**

முதல் உடன்படிக்கையின் காலப்பகுதியுள் தாமத வட்டி என ரூபா 580 மில்லியன் தொகை இலங்கை மின்னார சபையினால் செலுத்தப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டதுடன், உடன்படிக்கையை நீடித்த பின்னர் ஐந்து வருட காலப்பகுதிக்காக ரூபா 1,364 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி, இலங்கை மின்னார சபையின் தற்போதைய நிதி நிலைமையின் கீழ் கடன் மூலதனம் ஈடுபடுத்துவதன் மூலம் அல்லது மின்வலு நிலையத்தை கொள்வனவு செய்வதற்காக நடவடிக்கை எடுப்பதன் மூலம் இ.மி.ச. இற்கு மிகவும் அநுகூலமாக நிலமை ஒன்றை நெருங்குவதற்கு இயலுமை ஒன்று காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

**பல்வேறு வரி செலவு கொடுப்பனவு**

ஆரம்ப உடன்படிக்கை காலப்பகுதியுள் கம்பனியினால் பல்வேறு வரிச் செலவுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 4,784 மில்லியன் தொகை இ.மி.ச இருந்து மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக TEC மற்றும் SCANC குழுவினால் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என அவதானிக்கப்படாததுடன் உடன்படிக்கை நீடிக்கப்பட்ட பின்னர் வரி மீளளிப்புக்காக, ரூபா 1,499 மில்லியன தொகை செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே, இவ்வாறான நிபந்தனைகள் உள்ளடங்கிய உடன்படிக்கையொன்றை மீண்டும் நீடிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் தனியார் கம்பனியொன்றின மூலம் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய வரி அரச நிறுவனமொன்றினால் செலுத்தியமையால் அரசாங்கத்திற்கு உரித்தாக வேண்டிய உள்ளபடியான வரி வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் பிரிவு 09 இற்கு இணங்க மற்றும் 2013 இன் 31 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை (திருத்திய) சட்டத்தின விதிமுறைகளுக்கு இணங்க இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவில் இருந்து மின் உற்பத்திக்காக அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் படி மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 43(1) இற்கு இணங்க அவ்வாறு உற்பத்திக்கான அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொண்டிருந்த கம்பனிகளிடமிருந்து மாத்திரம் மின்சார உற்பத்தி மற்றும் விநியோகம் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு உற்பத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிராத ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய கம்பனியில் இருந்து 2016 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை மின்சாரம் கொள்வனவு செய்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

## 2022 சர்வதேச கிரிக்கெட் சபையின் T-20 உலகக் கிண்ண (ஆண்கள்) கிரிக்கெட் போட்டி தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை

### போட்டியைப் பார்வையிடுவதற்கான செலவு

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் நிறைவேற்று குழுவை பிரதி நிதித்துவப்படுத்துகின்ற உத்தியோகபூர்வ பதவியில் உள்ள (Office Bearers) 07 பேர்களை உள்ளடக்கிய நிறைவேற்று குழுவின் 14 அங்கத்தவர்களுக்கு அவுஸ்ரேலியாவில் நடைபெற்ற போட்டியினை பார்வையிடுவதற்காக சென்றிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், அவர்களுக்கான விமான பயணச் சீட்டுக்கள், வீசா கட்டணம், பிரயான காப்புறுதி, படிகள் மற்றும் போட்டியினை பார்வையிடும் நுழைவுச் சீட்டுக்களாக ரூபா 68,237,263 இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தால் செலுத்தப்பட்டிருந்ததுடன் 03 நிறைவேற்றுக் குழு அங்கத்தவர்கள் ரூபா 2.653 மில்லியன் தொகையை இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு மீளச்செலுத்தியிருந்தனர்.

### ஊடகவியலாளர்களுக்கான அனுசரணையினைப் பெற்றுக் கொடுத்தல்

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் செயலாளரால் தெரிவு செய்யப்பட்ட ஊடக நிறுவனங்கள் நான்கிற்கு முகவரியிடப்பட்ட 2022 செப்டம்பர் 30 ஆம் திகதிய கடிதம் மூலம் நிறைவேற்று குழு எடுத்த தீர்மானத்தின் படி ஒரு ஊடக வியலாளருக்கு அவுஸ்ரேலியா செல்வதற்காக அ.டொலர் 1,500 படியும் வழங்கப்படுவதாக காண்பித்து அனுப்பப்பட்டிருந்தது. 2022 செப்டம்பர் 23 ஆம் திகதிய 12 ஆவது நிறைவேற்று குழு கூட்டத்தின் போது ஊடகவியலாளர் நான்கு பேர்களுக்காக அனுசரனை வழங்கப்பட்டமை நிறைவேற்று குழு அங்கீகாரம்

வழங்கப்பட்டிருந்தமையும் அந்த அனுசரனை எவ்வாறான தீர்மானத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது அல்லது செலுத்தப்பட்ட பெறுமதிகளுக்காக நிறைவேற்று குழு அங்கீகாரம் வழங்கப்பட்டமை அவதானிக்கப்படவில்லை.

### வீசா கோரிக்கைக் கடிதங்களை வழங்குதல்

நிறைவேற்றுக் குழு அங்கத்தவர்கள் 11 பேர்களுக்கும், இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் சம்மி சில்வா அவரின் குடும்பத்தின் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் 21 பேர்களுக்கும், உப தலைவர் ஜயந்த தர்மதாச அவர்களின் 02 நண்பர்களுக்கும், நிறைவேற்று குழுவின் 08 அங்கத்தவர்களின் மனைவிகள் / குடும்பத்தின் 09 அங்கத்தவர்களும், இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துடன் தொடர்புடைய மற்றும் ஏனைய நபர்கள் 11 பேர்களுக்கும் மற்றும் அவர்களின் இரண்டு மனைவிமார்கள் என்போருக்காக வீசா பெற்றுக்கொள்வதற்காக இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தால் அவுஸ்திரேலி தூதுவர் அலுவலகத்திற்கு வீசா கோரிக்கை கடிதம் விநியோகிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### வீசா பெற்றுச் சென்று மீண்டும் இலங்கைக்கு திரும்பாமை

வீசா விநியோகிக்கப்பட்டவர்களுக்கு இடையே திரு. சன்ஜீவ நிசாந்த என்றவர் T-20 போட்டியை பார்வையிடுவதற்காக வீசா பெற்று 2020 நவம்பர் 03 ஆம் திகதி அவுஸ்ரேலியா நோக்கி சென்று இருந்த போதும் அவர் இந்த அறிக்கை விநியோகிக்கப்பட்ட திகதி வரையிலும் மீண்டும் இலங்கைக்கு வருகை தாராதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### விமானப் பயணச்சீட்டு கொள்வனவு செய்தல் செலவு

அதற்கமைய அவுஸ்ரேலியாவிற்கு செல்வதற்காக இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் நிறைவேற்று குழுவின் உத்தியோகபூர்வ பதவிகளில் உள்ள 07 பேர்களுக்காக ரூபா 14.273 ம்ல்லியன் தொகை, நிறைவேற்று குழுவின் 07 அங்கத்தவர்களுக்காக ரூபா 8.403 மில்லியன் தொகை 04 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 6.031 மில்லியன் தொகை, 05 மேலதிக விளையாட்டு வீரர்களுக்காக ரூபா 14.479 மில்லியன் தொகை, உதவி பதவியணியில் இரண்டு பேர்களுக்காக ரூபா 4.330 மில்லியன் தொகை மற்றும் 04 ஊடகவியலாளர்களுக்காக ரூபா 3.331 மில்லியன் தொகை வீதம் 29 பேர்களுக்காக ரூபா 50.849

மில்லியன் தொகை விமான பயணச் சீட்டுக்களை கொள்னவு செய்வதற்காக செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### உத்தியோகத்தர்கள் இருவரினால் விமானப் பயணச்சீட்டு கொள்வனவு செய்தமை

2022 T-20 உலகக் கிண்ண போட்டி நடைபெற்றதற்கு இடையே 29 பேர்களுக்கு அவுஸ்ரேலியாவிற்கு செல்வதற்காக 29 சந்தர்ப்பங்களின் போது விமானப் பயணச் சீட்டுக்கள கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர், செயலாளர், பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர், மேலதிக விளையாட்டு வீரர்கள், உதவி பதவி அணியினர் மற்றும் 12 ஊடகவியலாளர்களை உள்ளடக்கி ரூபா 26.453 மில்லிலயன் பெறுமதியான பயணச் சீட்டுக்கள் கொள்வனவு செய்வதற்காக இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் நிர்வாக முகாமையாளரினாலும், பிரதான செயற்பாட்டு உத்தியோகத்தர் மற்றும் ஏனைய நிறைவேற்று குழு அங்கத்தவர்கள் 12 பேர்களுக்காக ரூபா 16.245 மில்லியன் பெறுமதியான பயணச் சீட்டுக்களையும் கொள்வனவு செய்தல் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் பிரதான நிர்வாக உத்தியோகத்தரினாலும் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், இவ்வாறு இரண்டு உத்தியோகத்தரினாலும், தனித்தனியாக கூறுவிலை கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை பிரச்சினைக்குரியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## தவறான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது ஒன்று சேர்க்கப்பட்ட வாகனங்களின் செசி இலக்கம் மற்றும் இன்ஜின் இலக்கத்தை மோட்டார் வாகனங்களை பதிவு செய்யும் தரவு முறைமைக்குள் மோசடியாக தரவுகளை உள்ளடக்கி மோட்டார் வாகனங்களைப் பதிவுசெய்து போலியான சான்றிதழ்களை வழங்குவது தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை - 2022

### வடமேல் மாகாண பயன்படுத்துனர்களால் நுசுடு ஒழுங்கமைப்பினுள் உள்ளடக்கப்பட்ட தரவுகள் மாற்றப்பட்டமை

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவுசெய்த மோட்டார் வாகனத்தின் தொடக்க பதிவுசெய்த திகதியிலிருந்து வருமான உத்தரவுப் பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதுடன் தொடக்க பதிவுசெய்த திகதியிலிருந்து வருமான உத்தரவுப் பத்திரம் பெற்றுக்கொண்ட ஆண்டுகளின் எண்ணிக்கை மற்றும் வருமானம் உத்தரவுப் பத்திர கட்டணம் ERL முறைமையினுள் காணப்படும். எந்தவொரு சட்டரீதியான அதிகாரமுள்ள நிறுவனத்தின் அனுமதியின்றி ERL முறைமையினுள் உள்ளடக்கப்பட்ட தொடக்க பதிவுசெய்த திகதியினை மாற்றம் செய்து அதாவது பிற்திகதியிட்டு

மேற்கூறியவாறு கணிக்கப்படுகின்ற நிலுவை வருமான கட்டணத்தை அறவீடுசெய்யாது வருமான உத்தரவுப் பத்திரத்தினை வழங்குவதற்கு வடமேல் மாகாண வருமான உத்தரவுப் பத்திரம் வழங்கும் தரவு முறைமையினுள் பயன்படுத்துனரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**திணைக்களப் பயன்படுத்துனர்களால் ஒழுங்கமைப்பினுள் உள்ளடக்கப்பட்ட தரவுகள் மாற்றப்பட்டமை**

நீண்டகாலமாக வருமான உத்தரவுப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள பதிவுசெய்யப்பட்ட 99 மோட்டார் சைக்கிள˙கள் தொடர்பான செசி இலக்கம் மற்றும் இன்ஜின் இலக்கத்தினை முறைமையிலிருந்து நீக்கி மோசடியாக இறக்குமதி செய்யப்பட்ட ஏனைய மோட்டார் சைக்கிள்களின் இன்ஜின் இலக்கத்தையும் செசி இலக்கத்தினையும் மோசடியாக முறைமையினுள் உள்ளடக்கி பழைய பதிவுசெய்த வாகன இலக்கத்திற்காக புதிய நாளதுவரையான மோட்டார் வாகன பதிவு சான்றிதழினை வழங்கி மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் தரவு முறைமையில் பழைய தரவுகளை அழித்து தரவு முறைமையினை நாளதுவரையாக்குவதற்கு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

**இழக்கப்பட்டிருந்த சுங்க வரி வருமானம்**

தரவுகளை மாற்றி தவறான முறையில் செசி இலக்கத்தினையும் இன்ஜின் இலக்கத்தினையும் உள்ளடக்கி முறைமையினுள் புதிய (மோசடியான) பதிவுசெய்தல் சான்றிதழ் வழங்கியுள்ள மோட்டார் சைக்கிள்களின் இன்ஜின் இயலளவு கவனத்திற்கு எடுத்துகொள்ளப்பட்ட பதிவு இலக்கம் 91 தொடர்பான மோட்டார் சைக்கிளின் செல்லுபடியாகும் சுங்க பட்டோலையுடன் இறக்குமதி செய்யப்படாததன் காரணமாக அரசாங்கம் ரூபா 55.207 மில்லியன் சுங்க வரி வருமானத்தை இழந்துள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

**இழக்கப்பட்டிருந்த வருமானம்**

மிகைக் கட்டண பணத்தை அறவீடு செய்யாது மோசடியாக பழைய இலக்கத்தின் கீழ் பதிவுசெய்தல் சான்றிதழ்களை வழங்கியதன் கரணமாக 91 வாகனங்கள் தொடர்பாக ரூபா 21.476 மில்லியன் மிகைக் கட்டணத்தையும் மற்றும் புதிய பதிவுசெய்தல் கட்டணத்தையும் அரசாங்கம் இழந்திருந்தது.

## செசி இலக்கம் மற்றும் என்ஜின் இலக்கத்தினை மாற்றியமை

ஏற்கனவே வருமான உத்தரவுப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள ஏனைய வாகன வகுப்பிற்குரிய பதிவுசெய்யப்பட்டுள்ள 29 வாகனங்கள் தொடர்பான செசி இலக்கம் மற்றும் இன்ஜின் இலக்கத்தை முறைமையிலிருந்து நீக்கி சட்டத்துக்கு முரணான வகையில் இறக்குமதி செய்யப்பட்ட ஏனைய வாகனங்களின் செசி இலக்கம் மற்றும் இன்ஜின் இலக்கத்தை முறைமைக்குள் உள்ளடக்கி பழைய பதிவு செய்த இலக்கத்திற்காக மோட்டார் வாகனங்களை பதிவுசெய்யும் சான்றிதழினை வழங்குவதற்கும் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் தரவு முறைமையில் மேற்கூறிய பழைய பதிவு செய்தலுக்குரிய தரவுகளை அழிப்பதற்கு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

## வருமான அனுமதிப் பத்திரக் கட்டணம் செலுத்தாமை

நீண்ட காலமாக வருமான உத்தரவுப் பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ளாது நிலுவை வருமான உத்தரவுப்பத்திர கட்டணத்துடன் பதிவுசெய்த 04 மோட்டார் சைக்கிள்களின் இன்ஜின் இலக்கத்தையும் செசி இலக்கத்தினையும் மாற்றம் செய்து ஏனைய தவறான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட 04 மோட்டார் சைக்கிள்களின் இன்ஜின் இலக்கத்தினையும் செசி இலக்கத்தினையும் உட்படுத்தி மோசடியாக 2022 ஆம் ஆண்டின் போது மோட்டார் வாகனங்களை பதிவுசெய்தல் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது.

## மீள் ஏற்றுமதி செய்யப்பட்ட வாகன இலக்கங்களை மோசடியாகப் பயன்படுத்தியமை

வெளிநாட்டு தூதுவர்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களுக்காக இறக்குமதி செய்யப்பட்ட அரசாங்க அனுசரணையின் கீழ் தீர்வை இன்றி விடுவிக்கப்பட்டு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதன் பின்னர் அந்த வாகனங்களை மீண்டும் மீள் ஏற்றுமதி செய்கின்ற சந்தர்ப்பத்தில் பதிவுசெய்தல் பதிவினை இரத்துச் செய்த 06 வாகனங்களின் பதிவு இலக்கத்திற்காக பிழையாக ஏனைய அதிசொகுசு வாகனங்களின் செசி இலக்கம் மற்றும் இன்ஜின் இலக்கத்தை முறைமையினுள் உட்படுத்தி ஏனைய தனிப்பட்டவர்களின் பெயருக்கு பதிவுசெய்தல் சான்றிதழ்களை வழங்குவதற்கு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

### இழக்கப்பட்டிருந்த வரி வருமானம்

இவ்வாறு சட்டரீதியற்ற முறையில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட அல்லது உள்நாட்டில் ஒன்று சேர்பக்கப்பட்ட வாகனங்களானது மோசடியாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுத்ததன் காரணமாக அதிசொகுசு வரி மற்றும் ஏனைய அறவீடுகளைத் தவிர்த்து இலங்கை சுங்கத்தினால் அறவிட வேண்டியிருந்த அண்ணளவாக ரூபா 122,282,900 வரி வருமானம் மோசடியாக அரசாங்கத்தினால் இழக்கப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

## 2020 ஜனவரி 01 தொடக்கம் 2022 மே 31 வரையான ஆண்டுகளில் தேசிய பாடசாலைகளில் இடை நடுவிலான தரங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை

### செயலாளரினால் வழங்கப்பட்ட கடிதங்களின் அடிப்படையில் அனுபதிக்கப்பட்டமை

தேசிய பாடசாலைகளில் இடை நடுவிலான தரங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்காக 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 மே 31 ஆம் திகதி வரையில் கல்வி செயலாளரினால் சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த முறையான வழிமுறைக்கு முரணாக அந்த செயலாளரினாலேயே வழங்கப்பட்டிருந்த 4,775 கடிதங்களைப் பயன்படுத்தி பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்பட்டிருந்த மாணவர்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்வினால் அதிபர்களிடமிருந்து கேரப்பட்டிருந்தன. அதற்கமைய அந்த தகவல்கள் கிடைத்த 37 பாடசாலைகளில் மேலே கூறப்பட்ட அட்டவணை இலக்கம் 15 இல் காட்டப்பட்டுள்ள வகையில் 2,237 மாணவர்கள் அந்த அதிபர்களினால் தமது பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

### அமைச்சுக்கு நேரடியாக அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் அனுமதிக்கப்பட்டமை

சுற்றறிக்கை மூலம் தீர்மானமான முறைமைகள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த சுற்றறிக்கைகளின் ஒழுங்கு விதிகளுக்கு முரணாகக் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட 2020 ஜனவரி தொடக்கம் 2022 மே 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் மட்டும் பெற்றோர் / பாதுகாவலர்களினால் பாடசாலை அதிபர்களுக்கு விண்ணப்பிக்காது அமைச்சுக்கு நேரடியாக அனுப்பப்பட்டிருந்த விண்ணப்பம் / கோரிக்கைகளுக்காக பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுமதித்தலை அங்கீகரித்து 3,308 கடிதங்கள் செயலாளரினால் வழங்கப்பட்டிருந்தன.

**பல்வேறு அதிகாரிகளின் பிரத்தியேகக் கட்டளை**

அனுமதி வழங்கப்பட்ட 3,308 கடிதத் தொகையில் சுமார் 2,367 தொகையானவை அதாவது 72 சதவீதமான தொகை அட்டவணை இலக்கம் 09 இல் காட்டப்பட்ட முறையில் அரச அமைச்சர்கள் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள், திணைக்களத்தலைவர், ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம், பாராளுமன்றம் உள்ளிட்ட பல்வேறு அதிகார நபர்கள் / இடங்கள் / அலுவலகங்களில் இருந்து கிடைத்த கோரிக்கை, மேல் பார்வைக்கு செல்வாக்காக அல்லது கட்டளையாக இனம் காணப்படக்கூடிய பிரதிநிதித்துவங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டிருந்த அங்கீகாரங்கள் என்பது அவதானிக்கப்பட்டது.

**மாணவர்களின் சமனான அனுமதி சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டமை**

மக்கள் பிரதிநிதிகளிடம் இருந்து கோரிக்கை மேற்கொள்ளப்படும் போது விண்ணப்பதாரர்களுடன் காணப்படும் அரசியல் ரீதியான தொடர்புகளைக் குறிப்பிட்டு மாணவர்களை அனுமதிக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளருக்குகோரிக்கை / கட்டளை / பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் குடிமக்கள் ஆகியோருக்கு இடையே காணப்படும் தொடர்புகளுக்கு அமைய அவ்வாறானவை ஏற்படக்கூடியதாக உள்ள போதிலும் அவ்வாறான கோரிக்கைகளின் அடிப்படையில் செயலாளரினால் நிபந்தனைகள் இன்றி கடிதங்கள் வழங்குவதன் மூலம் சுற்றறிக்கை மீறப்பட்டு மாணவர்களின் சமனான நுழைவு சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டுள்ளது என்பது மேலும் அவதானிக்கப்பட்டது.

**புலமைப் பரிசில் மாணவர்களின் சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டமை**

மிகவும் போட்டித் தன்மை வாய்ந்த தடைதாண்டல் பரீட்சைக்கு முகம் கொடுத்து சித்தியடைந்த 371 புலமைப் பரிசில் மாணவர்கள் மிகவும் பிரசித்தி பெற்ற பாடசாலைக்கு அனுமதி பெறுவதற்கு இருந்த சந்தர்ப்பங்கள் பல்வேறு வகையில் இழக்கப்பட்டு அந்த சந்தர்ப்பத்தில் புலமை பரிசில் பெறுபேறுகளின் அடிப்படையில் அந்த பாடசாலைக்கு அனுமதி பெறுவதற்கான தகுதிகள் இல்லாத மற்றும் / அல்லது விண்ணப்பிக்காத மாணவர்களுக்கு பின்னர் அந்த பாடசாலையில் அனுமதி பெறும் சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு செயலாளரினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**தேசிய கல்வி கொள்கையை தயாரித்திருக்காமை**

தேசிய கல்விக் கொள்கையினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளருக்கு அமைச்சரவையினால் கட்டளை இடப்பட்டிருந்த போதிலும் இந்த அறிக்கை தினம் வரையிலும் அவ்வாறான தேசிய கொள்கை ஒன்று தயாரிக்கப்பட்டு இருந்தது என்பது கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை.

**தேசிய பாடசாலைகளில் இடை நடுவிலான தரங்களுக்கு மாணவர்களை அனுமதிக்கும் முறையற்ற செயல்முறைகள்**

2020 ஜனவரி தொடக்கம் 2022 மே 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் தேசிய பாடசாலையில் இடை நடுவிலான தரங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல் தொடர்பான விரிவான கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது எனினும் அந்த காலப் பகுதியின் பின்னர் 2022 ஒக்டோபர் 31 ஆம் திகதி வரையில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி பரீட்சிப்புக்கு அமைய 09 பாடசாலைகளுக்கு 281 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். மேலும் 2023 ஜனவரி 02 ஆம் திகதி இடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இடை நடுவிலான தரங்களுக்கு மாணவர்களை அனுமதிக்கும் முறைமையை ஒழுங்குபடுத்தும் நோக்கில் இலக்கம் 17/2023 கொண்ட புதிய சுற்றறிக்கை 2023 ஏப்ரல் 25 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது எனினும் அந்த சுற்றறிக்கையின் பின்னரும் 09 தேசிய பாடசாலைகளுக்கு 103 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர் என மேற்கொள்ளப்பட்ட மாதிரி பரீட்சிப்பில் அவதானிக்கப்பட்டது. அதற்கு அமைய தேசிய பாடசாலைகளில் இடை நடுவிலான தரங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கு கல்வி அமைச்சின் செயலாளரினால் சுற்றறிக்கை ஒழுங்கு விதிகள் மீறப்பட்டு தமது தற்றுணிவின் படி கடந்த காலத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்டு வந்த முறையற்ற செயல்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

## இலங்கையில் புகையிரதக் கடவைகளுக்கான பாதுகாப்புக் கட்டமைப்பினைத் தாபித்தல் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை.

**புகையிரதக் கடவை விபத்துக்கள்**

புகையிரதத் திணைக்களத்தினால் புகையிரத கடவைகளுக்கான பாதுகாப்புக் கட்டமைப்பு ஒழுங்காக தாபிக்கப்படாமையும், பராமரிக்கப்படாமையும் காரணமாக 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையில் 1,501 விபத்துக்கள் இடம் பெற்று இருந்ததுடன் அந்த காலப் பகுதியினுள் 298 உயிர் சேதங்கள் இடம்பெற்றிருந்ததுடன் 1,054 நபர்கள்

காயமடைந்து இருந்தனர் எனக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**மரணமடையும் நபர்களுக்கு நட்ட ஈட்டினை வழங்கும் வேலைத் திட்டமொன்று இல்லாமை**

மரணம் அடைந்த நபர்களுக்கான நட்ட ஈட்டினை வழங்கும் வேலைத் திட்டம் ஒன்று புகையிரதத் திணைக்களம் அல்லது அரசாங்கத்திடம் இல்லாததுடன், மரணமடையும் நபர்களின் குடும்ப அங்கத்தவர்களின் வாழ்க்கை நிலைமை மற்றும் நபர்கள் மரணமடையும் காரணத்தால் அவர்களது குடும்ப அங்கத்தவர்களுக்கு ஏற்படும் துன்பம் தொடர்பில் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கும் வழிமுறை ஒன்று திணைக்களத்திடம் இல்லை எனவும் அவர்களுக்காக சட்டத்தின் 32 ஆம் பிரிவின் திருத்தத்திற்கு அமைய புகையிரதப் பொது முகாமையாளர் பொறுப்பேற்று இருக்கவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது.

**புகையிரதக் கட்டளைச் சட்டம் 120 வருடங்கள் பழமையானது**

தற்போது செயல்படுத்தப்படும் புகையிரதக் கட்டளைச் சட்டமானது 120 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாக உள்ளதுடன் காணப்படும் தண்டனைகளை விதித்தல் தற்போதைய ரூபாய் பெறுமதியுடன் ஒப்பிடும் போது போதியதாக இல்லாத காரணத்தால் குறித்த நபர்களுக்குத் தவறுகளில் ஈடுபடாதிருக்க அதன் மூலம் உந்துதல் ஏற்படாது எனவும் குறித்த தண்டனைக் கட்டணத்தைப் பரீட்சிப்பு செய்யும் போது அவதானிக்கப்பட்டதுடன் பயன்படுத்தப்பட்டுள்ள ஒரு சில பதவிப் பெயர்களும் (ஆளுநர் ) தற்போது பொருத்தமற்றது என அவதானிக்கப்பட்டது.

**சிறிய கடவைகளில் கடவை படலைகள் நிர்மாணிக்கப்பட்டு இருக்காமை**

சிறிய கடவைகளின் பாதுகாப்பிற்கான கட்டளைச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கடவை படலைகள் நிர்மாணிக்கப்பட்டிருக்காததுடன் அவற்றின் நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் செயல்பட்டு இருக்காதடன் வதிவிடங்களுக்கான கடவைகள் முறையாக இனம் காணப்பட்டு அவற்றின் பாதுகாப்பிற்குத் தேவையான ஒழுங்கு விதிகளை ஏற்படுத்துவதும், அவற்றை தாபிப்பதற்காக செலவிடப்பட்ட ஆரம்ப மொத்த தொகை மற்றும் பராமரிப்பிற்காக வருடாந்த வாடகை குறித்த வீதியினைப் பயன்படுத்துபவர்களிடம் இருந்து அறவிடப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**விஞ்ஞான ரீதியிலான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு இருக்கலாமை**

புகையிரதக் கடவைகள் முழுமையாக உள்ளடங்கும் வகையில் வீதிப் பாதுகாப்பு கட்டமைப்பினை நிர்மாணிப்பதற்கு விஞ்ஞான ரீதியான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு இருக்காதுடன் பிரதேச செயலகங்கள், மாகாண சபை மற்றும் மாகாண நிர்வாக நிறுவனங்களுடன் புகையிரதக் கடவைகளை நிர்மாணித்தல் மற்றும் அதற்கான வீதிப் பாதுகாப்புக் கட்டமைப்பை தாபித்தல் பற்றிய ஒன்றிணைந்த திட்டங்கள் மற்றும் விதிமுறைகள் செயல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**புகையிரத வீதிகளின் ஊடாக புதிதாகக் குறுக்கு வீதிகளை நிர்மாணித்தல்**

புகையிரத வீதிகளுக்கு ஊடாக புதிதாக விதிகள் நிர்மாணிக்கப்படும் போது மேலே 5.4.1.4. ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள வகையில் அந்த வீதியை நிர்மாணிக்கும் நிறுவனங்களினால் அல்லது நபர்களிடம் இருந்து கட்டணம் அறவிடப்பட்டு வீதி பாதுகாப்பு கட்டமைப்பைத் தாபிக்க வேண்டிய போதிலும் அவ்வாறு புதிதாக உருவாகும் வீதிகள் தொடர்பில் முறையாக மதிப்பீடு செய்யப்பட்டு கட்டணம் அறவிடப்பட்டு வீதி பாதுகாப்புக் கட்டமைப்பை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**மணி மற்றும் மின் ஒழுங்கமைப்பின் செயல்பாடு**

திணைக்களத்தின் மூலம் இந்த அறிக்கையின் திகதி வரையிலும் தாபிக்கப்பட்டு இருந்த மணி மற்றும் வெளிச்ச (Bell & Light) கட்டமைப்புகள் பலவற்றின் செயல்பாடுகள் சரியான முறையில் இடம்பெறாததுடன், அந்த கட்டமைப்பு செயல்படுகின்றதா இல்லையா என்பது தொடர்பில் புகையிரதத் திணைக்களத்தின் சமிக்ஞைத் திணைக்களத்திற்கு அல்லது புகையிரத ஓட்டுனருக்கு தெரிவிக்கக் கூடிய திறன் இந்த ஒழுங்கமைப்பினுள் இல்லை என அவதானிக்கப்பட்டது. மேலும் மணி மற்றும் வெளிச்ச சமைக்ஞைக் கட்டமைப்பின் மின்னியல் கட்டமைப்பின் குறைபாடு காரணமாக அல்லது மின் வழங்கல் கட்டமைப்பின் குறைபாடு காரணமாக கட்டமைப்பு ஒழுங்கான முறையில் இயங்காத இடத்தில் அது தொடர்பில் குறித்த புகையிரத ஓட்டுனருக்கு அல்லது சமைக்ஞைத் திணைக்களத்திற்கு உடனடியாக அறிந்து கொள்ளக்கூடிய திறன் குறித்த ஒழுங்கமைப்பினுள் காணப்படவில்லை.

## லிட்ரோ கேஸ் லங்கா லிமிடெட் (LGLL) கம்பனியால் 2022/2023 ஆம் ஆண்டுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட திரவ பெற்றோலிய வாயு (LPG) பெறுகைகள் தொடர்பான விஷேட அறிக்கை

**அங்கீகரிக்கப்பட்ட விநியோகத்தருக்கு பெறுகையினை வழங்காமை**

ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த Siam Gas Trading Pvt Ltd கம்பனி 2022 – 2023 ஆம் ஆண்டுகளுக்காக தகைமை பெற்ற கேள்விதாரராக இருந்தமைக்கு 2022 ஏப்ரல் 26 ஆம் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு பரிந்துரை செய்து பெறுகைக் குழுவினால் 2022 ஏப்ரல் 28 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மேலும் இந்த கம்பனி வழங்குனராக தெரிவு செய்வதற்காக 2022 மே 04 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரமும் கிடைத்திருந்தது. அதன் பின்னர் OQ Trading Ltd இனால் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாட்டை கவனத்தில் கொண்டு முறைப்பாட்டு சபையும் உரிய பெறுகைகள் இந்த கம்பனிக்கு கையளிப்பதற்காக 2022 மே 28 ஆம் திகதி அங்கீகாரம் வழங்கியிருந்தது. அவ்வாறு அங்கீகாரம் பெறப்பட்டிருக்கும் போது மற்றும் 2022 மார்ச் மாதம் முதல் இலங்கைக்கு கேஸ் கொள்வனவு செய்வதற்காக குறித்துரைத்த திட்ட முறைமையொன்றும் காணப்படாத சந்தர்ப்பத்தில் Siam Gas Trading Pvt Ltd கம்பனியால் வழங்குவதற்கு இணங்கிய விலையான CP+96 USD விலையினை விஞ்சி OQ Trading கம்பனியில் இருந்து கேஸ் கொள்வனவு செய்திருக்கும் போது 2022 யூன் 13 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானத்தின் படி புதிய பெறுகையொன்றை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

**மேலதிக செலவு சுமையினை அரசாங்கத்திற்கு ஏற்க நேரிட்டமை**

Siam Gas Trading Pvt Ltd கம்பனி தெரிவு செய்யப்பட்டிருக்கும் போது அந்த தவணை பெறுகை இரத்துச் செய்யப்பட்ட அந்த விலையினை விட உயர்ந்த விலையின் OQ Trading கம்பனியில் இருந்து கேஸ் கொள்வனவு செய்யப்பட்டதன் காரணமாக அ.டொலர் 3,145,960 அதாவது ரூபா 1,138,837,430 மேலதிக செலவின பொறுப் பொன்று காணப்பட்ட பொருளாதார நெருக்கடிகளுக்கு இடையே இலங்கை அரசாங்கத்திற்கு செலவிட வேண்டியிருந்தது.

**அமைச்சரவைப் பத்திரத்தில் விடயங்களைக் குறிப்பிட்டமை**

2022 யூன் 08 ஆம் திகதி பிரதமரால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை குறிப்பின் பின்புலத்தில் 3.2(ii) இல் காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் ஆகக் குறைந்தது மெற்றிக்தொன் 100,000 உறுதிப்படுத்தப்பட்ட SBLC அல்லது அ.டொலர் 20 மில்லியன் முற்செலுத்தும் நிபந்தனையின் அடிப்படையில் செலுத்தி தயாரிக்க வேண்டியிருந்தமை OQ Trading கம்பனியால் அறிவிக்கப்பட்டிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும், அங்கீகாரம் கோரும் போது (குறிப்பின் 3.3(a) பந்தியில்) அவ்வாறே OQ Trading கம்பனியால் செலுத்துதல் தொடர்பான நிபந்தனை சமர்ப்பிக்கப்பட்டிருந்தாக காண்பிக்கப்படாதிருந்தமை பிரச்சினையுடனாக இருந்தது. மேலும், வங்கி பிணையொன்று இன்றி கொடுப்பனவு செய்தல் லிட்ரோ கம்பனியில் காணப்பட்ட முறைமையாக குறிப்பிடப்பட்டு வங்கி பிணை முறியொன்று இன்றி பொருட்களுக்காக கொடுப்பனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கோரப்பட்ட போதிலும், அவ்வாறு வங்கி பிணை முறியின்றி கொடுப்பனவு முறையொன்றை கம்பனி பின்பற்றுகின்றமை (பொருளாதார

நெருக்கடிகளுக்கு இடையே ஒரே தடவையில் மாத்திரம் அவ்வாறு வங்கி பிணைமுறி இன்றி செலுத்தப்பட்டிருந்தது.) அவதானிக்கப்படாதிருந்ததுடன், அமைச்சரவை குறிப்பில் அவ்வாறு விடயங்கள் காண்பிக்கப்பட்டிருந்தமையும் கணக்காய்வின ் போது கேள்விக்குரியதாக அவதானிக்கப்பட்டது.

**முன் கொடுப்பனவு நிபந்தனைகள்**

காத்திருத்தல் நாணயக் கடிதம் (SBLC) பெறுமதி மாதம் ஒன்றில் வழங்குவதற்கு சமமான பெறுமதி வரை குறைக்கும் நிபந்தனையின் கீழ் பெறுகைக் குழுவினால் உரிய பெறுகைகள் அங்கீகரிக்கப்பட்ட போதிலும், உரிய காத்திருத்தல் நாணயக் கடிதம் வழங்குவதற்கு முடியாதிருந்தமை பிரதான காரணமாக கொண்டு புதிய பெறுகைகளுக்கு செல்வதற்கு தீர்மானிக்கப்பட்ட போதிலும், அதன் பின்னர் OQ Trading கம்பனியில் இருந்து உடன் கொள்வனவுகள் (Spot Contract) இன் கீழ் மெற்றிக் டொன் 100,000 காத்திருத்தல் நாணயக் கடிதம் (SBLC) அல்லது அ.டொலர் 20 மில்லியன ் முற்செலுத்துதல் என்ற நிபந்தனையின் கீழ் பெற்றுக் கொள்ளுதல் என்ற நிபந்தனையின் கீழ் பெற்றுக் கொள்வதற்கு இணங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**பெறுகையின் வெளிப்படைத் தன்மை மற்றும் நம்பிக்கைத் தன்மை சிக்கலுக்குரியதாக இருந்தமை**

குறைந்த விலையில் கேஸ் பெற்றுக் கொள்வதற்கு இணங்கிய Siam Gas Trading Pte Ltd கம்பனியில் இருந்தும் உடனடி கொள்வனவுகளை செய்வதற்காக SBLC வழங்குவதற்கு முடியாதிருக்குமாயின் முற்கொடுப்பனவு அடிப்படையில் கேஸ் வழங்குவதற்க இணங்கியிருக்கும் போதும் தீர்மானம் எடுக்கும் போதும் அந்த கோரிக்கை இடமளிக்காமல் / சமர்ப்பித்தலை கவனத்தில் கொள்ளாமல் அந்த நிபந்தனையின் கீழ் அதிக விலையின் கீழ் ஒரு கம்பனிக்கு மாத்திரம் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தமை பெறுகைகள் மேற்கொள்ளும் வெளிப்படையான நம்பிக்கை தன்மை தொடரபாக கணக்காய்வில் ஏற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

**நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாமை**

Siam Gas Trading Pte Ltd கம்பனி 2022 மே மற்றும் யூன் மாதங்களுக்காக CP+102 USD விலையில் கேஸ் வழங்குவதற்கு விருப்பம் தெரிவித்திருந்ததுடன், அந்த கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இரண்டு நிபந்தனைகளையும் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தமையினால் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மேலே குறிப்பிடப்பட்ட அந்த விலை மே மாத கேஸ் தேவையினை பூர்த்தி செய்வதற்கு வழங்கப்பட்டிருந்த இரண்டு நாள் செல்லுபடி காலம் போதியளவில் இல்லாமையின் அடிப்படையில் தேவையான மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு லிட்ரோ கேஸ் கம்பனி நடவடிக்கை எடுக்காதிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும், இந்த பெறுகைகளுக்குரிய சில தீர்மானம் ஒரு நாளில் எடுக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டது. மேலும், 5.5.2 பந்தியில் காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் Siam Gas Trading Pte Ltd கம்பனியில் இருந்து மீண்டும் ஒரு தடவை 2022 மே மாதத்திற்காக கேஸ் கொள்வனவு செய்வதற்காக கூறுவிலை

கோரப்பட்டிருந்ததுடன், அதன் போது அந்த கம்பனியால் CP+105 USD விலை வழங்கப்பட்டிருந்தது.

## நனோ நைட்ரஜன் திரவ உரம் இறக்குமதி செய்தல் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை

### உர இறக்குமதிக்கான கொடுப்பனவு

நனோ திரவ உரத்தினை இலங்கைக்கு இறக்குமதி செய்த காலப்பகுதியில் இந்திய உற்பத்தியாளரான IFFCO கம்பனியின் வலைதளத்தில் நனோ திரவ உரம் 500 மில்லி லீட்டர் போத்தலொன்றின் விலை 240 இந்திய டொலர்களுக்கு சமனான ஐ.அ.டொலர் 3.185 ஆன காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், சுங்கப் பதிவுகளுக்கமைய அந்த போத்தலொன்று ஐ.அ.டொலர் 5 இற்கு இலங்கைக்கு கொண்டுவரப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும், இந்த வலைதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விலைக்கு இலங்கைக்கு இறக்குமதி செய்யக்கூடியதாக இருக்கும் என்பது கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படாத போதிலும் அமைச்சரவைக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திரவ உரம் 500 மில்லி லீட்டர் ஆன போத்தலொன்றின் விலை ஐ.அ.டொலர் 5.25 (FCA) என்பது 2021 நவம்பர் 10 ஆந் திகதி இடம்பெற்ற கூட்டத்தில் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான குறைந்த விலைக்கு கொள்வனவு செய்யாது நனோ நைட்ரஜன் திரவ உர போத்தல்கள் 100,224 இற்கு ஐ.அ.டொலர் 12.45 மற்றும் 206,232 போத்தல்களுக்கு ஐ.அ.டொலர் 10 எனும் உயர்வான விலையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த காரணத்தால் அரசாங்கத்திற்கு இலாபகரமான விலைக்கு வழங்குநருடன் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு CCFL கம்பனி / அல்லது விவசாய இராஜாங்க அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது மற்றும் சராசரி இலாப வீதத்தினை விஞ்சிய இலாபமொன்று வழங்குநர் / அவரின் பிரதிநிதி / உற்பத்தியாளர் பெற்றுக்கொண்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

### இரு அரசாங்கங்களுக்கு இடையில் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்படக்கூடிய இயலுமை தொடர்பில் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்காமேமை

இந்திய கடன் வசதிகள் வழங்கப்பட்டவாறு காணப்பட்ட போது மற்றும் குறித்த வழங்குநர் இந்திய அரசாங்கத்திற்கு உரிய நிறுவனமொன்றாக பல்வேறு சந்தர்ப்பங்களில் இனங்காணப்பட்டுள்ள போது அந்த கடன் வசதிகளின் கீழ் வழங்கும் இயலுமை காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள போது இந்த கொடுக்கல் வாங்கல் இரு அரசாங்கங்களுக்கிடையிலான

கொடுக்கல் வாங்கலாக மேற்கொள்ளும் இயலுமை தொடர்பில் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததாக அவதானிக்கப்படவில்லை.

**சுய விருப்பின் பேரில் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து முன்மொழிவுகளையும் மதிப்பீடு செய்திருக்காமை**

விவசாய அமைச்சர் மற்றும் விவசாய இராஜாங்க அமைச்சரின் தலைமையில் 2021 செப்தம்பர் 21 ஆந் திகதிய விவசாய அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது மிகவும் அவசரமான பணியொன்றாக கருதி சுய விருப்பின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள் (Unsolicited Proposal) மதிப்பீடு செய்யப்பட்டு உரம் இறக்குமதி செய்வதற்கு வரையறுக்கப்பட்ட CCFL கம்பனிக்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்ததாக 2021 செப்தம்பர் 28 ஆந் திகதிய பணிப்பாளர் சபை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறான போதிலும், Muller International கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கேள்வி ஆவணங்கள் அல்லது கூறுவிலைகள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மதிப்பீடு செய்யப்படவில்லை என தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் செயலாளரினால் 2023 ஓகஸ்ட் 14 ஆந் திகதி கணக்காய்வுக்கு அறிவிக்கப்பட்டிருந்த காரணத்தால் அமைச்சின் அறிவுரைகளை கருத்திற்கொள்ளாது தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு செயற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

**உற்பத்திக் கொள்ளளவினை உறுதிப்படுத்தியிருக்காமை**

IFFCO கம்பனிக்காக UFT இனால் வழங்கப்பட்டதாக கருதப்படும் முன்மொழிவினுள் 500 மில்லி லீட்டர் திரவ உரம் அடங்கிய 4,250,000 போத்தல்களை உரிய காலப்பகுதியில் உற்பத்தி செய்ய தேவையான இயலளவு, களஞ்சிய வசதிகள், ஏற்றுமதிக்கான அனுமதி மற்றும் இயலுமை காணப்படுவதாக குறிப்பிடப்பட்டிருக்காத போதிலும், குறித்த மதிப்பீட்டினை மேற்கொள்ளும் போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அது குறித்து கவனம் செலுத்தப்பட்டது என்பது அவதானிக்கப்படவில்லை.

**அமைச்சரவைக்குத் தகவல்களை மறைத்தமை**

இலங்கை பொருளாதாரத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானமொன்றை எடுப்பதற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட இரு முன்மொழிவுகளில் ஒன்றான Muller International கம்பனியின் முன்மொழிவினை மதிப்பீடு செய்வதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு சமர்ப்பிக்காதிருப்பதற்கு, Muller

International. கம்பனியின் முன்மொழிவில் உள்ளடக்கப்பட்டுள்ள உர வகையானது சேதனப் பசளையொன்றாக அவதானிக்கப்பட்டமை மற்றும் அதன்போது சேதனப் பசளை இறக்குமதிக்கு பொது மக்கள் மத்தியில் நிலவிய எதிர்ப்பின் காரணமாக அந்த முன்மொழிவு தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை என்பதும், 2023 செப்தம்பர் 01 ஆந் திகதிய முன்னாள் விவசாய இராஜாங்க அமைச்சின் முன்னாள் செயலாளர் மற்றும் மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) ஆகியோரால் கணக்காய்வுக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறான போதிலும், இந்த விடயங்களின் அடிப்படையில் எடுக்கப்பட்ட அந்த தீர்மானம் விவேகமான முறையில் எடுக்கப்பட்டதா என்பது கணக்காய்வுக்கு உறுதிப்படுத்தப்படவில்லை. இது தொடர்பில் அமைச்சரவைக்கு அறிவிக்காமை மூலம் அமைச்சரவைக்கு குறித்த தகவல் மறைக்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்படுகின்றது.

**முன்னைய கொடுக்கல் வாங்கல்கள் உறுதிப்படுத்தப்படாமை**

IFFCO நிறுவனம் நானோ நைட்ரஜன் திரவ உர இறக்குமதிக்காக தெரிவு செய்யப்பட்டிருந்ததாக 2021 நவம்பர் 15 ஆம் திகதி இடப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த கம்பனியுடன் விவசாரய இராஜாங்க அமைச்சு அல்லது வரையறுக்கப்பட்ட கொழும்பு கமர்ஷியல் உரக் கம்பனி எந்தவொரு கொடுக்கல் வாங்கலினையும் மேற்கொண்டிருந்ததாக அவதானிக்கப்படவில்லை.

**சேதன உற்பத்தியாக ஏற்றுக் கொள்ளப்படாமை**

நனோ நைட்ரஜன் திரவ உரம் சேதனப் பசளையொன்றாக பதிவு செய்வதற்கு UFT கம்பனி 2021 ஓகஸ்ட் 24 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் நனோ தொழில்நுட்ப உற்பத்தி (Nano technology Product) சேதன உற்பத்தியொன்றாக ஏற்றுக்கொள்ள முடியாது என்பதால் நனோ நைட்ரஜன ் திரவ உரம் சேதனப் பசளையொன்றாக பதிவு செய்வதற்கு ஏற்றுமதி அபிவிருத்தி சபை நிராகரித்துள்ள போது சேதனப் பசளை இறக்குமதி செய்வதற்கு எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் UFT கம்பனியிடமிருந்து இந்த திரவ உரம் இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்ப

# விசேட விசாரணைத் துறை

விசாரணை எனும் பதம் அடிப்படையில் பயன்படுத்தப்படுவது ஏதேனும் ஒரு சம்பவம் அல்லது தற்போதுள்ள நிலைமையின் உண்மையான தன்மையை அடையாளம் காணும் ஒரு கருவியாகவே ஆகும். ஏதேனும் ஒரு சம்பவம் அல்லது தற்போதுள்ள நிலைமைக்கு பின்புலமாக அமைந்த விடயங்கள், பின்பற்றப்பட்டுள்ள வழிமுறைகள், அதன் தற்போதைய இலட்சணங்கள், அதன் மூலம் உருவாக்கப்படக்கூடிய பெறுபேறு மற்றும் அதன் தரப்பினர்கள் ஆகிய விடயங்கள் விசாரணையின் போது வெளிப்படுத்தப்பட்டு பகுத்தாயப்படும். அந்த வகையில் ஏதேனும் கணக்காய்வு நிறுவனத்திற்கு உரிய ஏதேனும் நியாயம் அல்லாத அல்லது சந்தேகத்துக்கிடமான ஏதேனும் கொடுக்கல் வாங்கல் அல்லது சம்பவம் தொடர்பில் ஒரு விசாரணை கணக்காய்வு மேற்கொள்ள வேண்டிய தேவைப்பாடு எழுமிடத்து அவ்வாறான விசாரணைக் கணக்காய்வு செயல்பாடுகள் விசேட விசாரணைப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும். அதற்கு தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் கடமையாற்றும் விசேட விசாரணை மற்றும் தடயவியல் கணக்காய்வு தொடர்பான பயிற்சி மற்றும் அனுபவம் உடைய உத்தியோகத்தர்களைக் கொண்ட விசேட விசாரணைப் பிரிவு ஒன்று தாபிக்கப்பட்டுள்ளது. இந்தக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது பயன்படுத்தப்படும் முறைமைகள் அலுவலக இணைய தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு அமைய முதலில் சம்பவம் தொடர்பிலான ஆபத்துக் கட்டமைப்பு இனம் காணப்படும். அதற்கு அமைய கணக்காய்வினைத் திட்டமிடுதல் மற்றும் வளங்களைப் பயன்படுத்துதல், கணக்காய்வினை செயல்படுத்துதல், வெளிப்படுத்துதல், பதில்களைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் அறிக்கையிடுதல் போன்ற படிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

2018 இன் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 04 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு தலைமை அதிபதிக்கு அனுப்பப்படும் மக்கள் பிரதிநிதித்துவத்தினால் எழுப்பப்படும் விடயங்கள், அரச கணக்கீடு தொடர்பான செயற்குழுவின் மற்றும் அரச வியாபாரம் தொடர்பான செயற்குழுவின் கோரிக்கை, அரச நிறுவனத் தலைவர்களிடம் இருந்து கிடைக்கும் தகவல்கள், வெகுஜன ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்தப்படும் தகவல்கள், காலத்திற்கு ஏற்ப முக்கியத்துவம் வாய்ந்த வேறு பொருளாதார மற்றும் சமூக விடயங்கள் என்பவற்றைக் கவனத்தில் கொண்டு விசேட கணக்காய்வு விசாரணைக்கு உட்படுத்துவதற்கு ஏற்ற போதியளவான மற்றும் தரமான கொடுக்கல் வாங்கல் மற்றும் சம்பவங்கள் இந்த விசாரணைப் பிரிவில் கணக்காய்விற்கு உட்படுத்தப்படுகின்றன.

பிரிவினுள் மேற்கொள்ளப்படும் விசாரணைக்குரிய கணக்காய்வுகளுக்கு மேலதிகமாக ஒரு சில சந்தர்ப்பங்களில் இந்த பிரிவிலுள்ள உத்தியோகத்தர்கள் சேவை தேவைப்பாட்டின் பிரகாரம் வேறு கணக்காய்வுப் பிரிவு / கிளைகளுக்கு தற்காலிகமாக இணைக்கப்பட்டு அந்தப் பிரிவு / கிளைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளுக்குரிய விசேட விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2023 ஆம் ஆண்டில் அவ்வாறு விசேட கணக்காய்விக்ற் உட்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல் மற்றும் சம்பவங்களின் தொகுப்புகளிடையே போதியளவு முக்கியத்துவம் வாய்ந்த பரீட்சிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் / சம்பவங்கள் /நிறுவனங்கள்

I. 2022 சர்வதேச கிரிக்கெட் சபையில் T - 20 உலகக் கோப்பை (ஆண்கள்) கிரிக்கெட் போட்டி சார்ந்த விசேட கணக்காய்வு.

II. இலங்கை துறைமுகங்கள் அதிகார சபைக்கு சொந்தமான காணித் துண்டினைக் குறைந்த பெறுமதிக்கு மதிப்பீடு செய்து நிறுவனம் ஒன்றுக்கு வழங்கியமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரீட்சிப்பு.

III. நெல் விற்பனை சபையில் 2018 திசெம்பர் 31 ஆம் திகதியிலான நிதி நிலைமைக் கூற்றில் விற்பனை கடன்பட்டோர் மீதியின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா. 3,047,107 மில்லியன் மீதி தொடர்பான பரீட்சிப்பு.

IV. மீதொட்டுமுல்லை குப்பைமேடு சரிந்து விழுந்த இடத்தில் நகர பூங்காவினை நிர்மாணித்தல் மற்றும் கலப்பு அபிவிருத்திச் செயற்திட்டம் தொடர்பான கணக்காய்வுப் பராட்சிப்பு.

V. லுனாவை வாடி வீட்டு காணியை அரசாங்கத்திடம் ஒப்படைத்தல் தொடர்பான விசாரணை.

VI. இலங்கை யுனெஸ்கோ தேசிய ஆணைக் குழு மூலம் செயல்படுத்தப்பட்ட கற்றல் செயற்பாட்டில் அனுதாப செயற்பட்டத்திற்கு உரிய பிரதிநிதித்துவத்திற்கான பரீட்சிப்பு.

VII. இலங்கை ஹதபிம அதிகார சபையில் செயல்பட்ட சந்தைப்படுத்தல் செயற்திட்டத்தினை மீளமைப்பு செய்து கூட்டுறவு சங்கம் ஒன்றை அமைப்பதற்குப் பதிலாகக் கூட்டுறவு சபை ஒன்றினைத் தாபித்தமை தொடர்பான கணக்காய்வுப் பரீட்சிப்பு.

VIII. வெகுஜன ஊடக அமைச்சு வளாகத்தினைச் சூழ நவீனமயமாக்கல் மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான கணக்காய்வு பரீட்சிப்பு.

IX. நிதி அமைச்சில் கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவருக்கு கலாநிதிப் பட்டப் படிப்பினைப் பின்பற்றுவதற்கு சம்பளத்துடனான விடுமுறை வழங்கியமை தொடர்பிலான கணக்காய்வு பரீட்சிப்பு.

X. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் ஆட்சேர்ப்பு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரீட்சிப்பு.

XI. அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியில் மறு நிதியளிப்புக் கடன் வசதிகளை வழங்கியமை மற்றும் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்தமை தொடர்பான கணக்காய்வு பரீட்சிப்பு.

XII. நிர்மாண அபிவிருத்தி அதிகார சபையின் தலைவரின் நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரீட்சிப்பு.

XIII. தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையில் அரச வாகனங்களைத் துஷ்பிரயோகம் செய்தமை மற்றும் பதிவேடுகளை குறைபாட்டுடன் பேணிச் சென்றமை தொடர்பான பரீட்சிப்பு.

XIV. இலங்கை கராத்தே தோ சம்மேளனத்தின் நடவடிக்கைகளை இடை நிர்வாகக் குழுவின் கீழ் நியமிப்பதற்கு விளையாட்டு அமைச்சரினால் வழங்கப்பட்ட அனுமதியினை பதிவழித்து குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்த உத்தியோகத்தர்களுக்கு சம்மேளனத்தின் நடவடிக்கைகளை பேணிச் செல்வதற்கு இடமளித்தமை.

XV. 2015 - 2022 காலப் பகுதியினுள் இலங்கை ஹொக்கி விளையாட்டின் நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரீட்சிப்பு.

விசேட விசாரணைப் பிரிவினால் வெளிப்படுத்தப்பட்ட ஒரு சில அவதானிப்புகள் தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 11 மற்றும் 12 ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட வருடாந்த கணக்காய்வு அறிக்கையாகவும் அதிகார சட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கப்படும் விசேட அறிக்கைகள் ஆகவும் அரசியலமைப்பு சட்டத்தில் 154 ஆம் நியதிச் சட்டத்தின் பிரகாரம் அவைக்களிக்கப்படுவதுடன் ஒரு சில அவதானிப்புகள் முகாமைத்துவத்திடம் வழங்கப்படும் அறிக்கைகளில் மட்டும் உள்ளடக்கப்படுகின்றன.

எவ்வாறு இருப்பினும் 2023 ஆம் ஆண்டில் கணக்காய்வுப் பதவியணியில் பெருமளவு வெற்றிட எண்ணிக்கையின் கீழ் பணிகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றும் போது நிதிக் கூற்று கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு விசேட விசாரணைப் பிரிவின் உத்தியோகத்தர்கள் அவ்வப்போது வேறு கணக்காய்வு கிளைகளுக்குத் தற்காலிகமாக மற்றும் நிரந்தர அடிப்படையில் இணைக்கப்படுதல் விசாரணைப் பிரிவின் கடமைப் பொறுப்புகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட தாக்கத்தினை ஏற்படுத்தி இருந்தது.

விசாரணைக் கணக்காய்விற்காக ஒப்பீட்டளவில் அதிக காலம் செலவிடப்படுதல் மற்றும் கணக்காய்வு அவதானிப்புகளுக்கான பதில்களை வழங்குவதற்கு நிறுவனங்களினால் பெருமளவு காலம் எடுக்கப்படுவதைப் போன்றே அந்தப் பதில்களை மீண்டும் மீண்டும் மீளாய்வு செய்வதற்கு நேரிடுதல் போன்ற விடயங்கள் ஒவ்வொன்றையும் வருடத்தினுள் மேற்கொள்ளப்படுகின்ற விசேட விசாரணைக் கணக்காய்வுகளின் அவதானிப்புகளை மேலே குறிப்பிடப்பட்ட அறிக்கைகளில் உள்ளடக்கப்படுதல் கணக்காய்வு மேற்கொள்ளப்படும் ஆண்டினுள் அல்லது பெரும்பாலும் அடுத்த வருடத்தில் மேற்கொள்ளப்படுகின்றது.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE